சார்தூதி அசுவமேகம்



பதிப்பாசிரியர்

முனைவர் த.கோ.பரமசிவம்

தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்

சாந்தாதி அசுவமகம்

நூலாசிரியர்

அமிர்தகவி

செய்யிதுமுகம்மது அண்ணாவியார்

பதிப்பாசிரியர்

முனைவர் த.கோ. பரமசிவம்

பேராசிரியர் - தலைவர்

ஓலைச்சுவடித்துறை

குறிப்பாசிரியர்

புலவர் ப.வெ. நாகராசன்

தமிழ்ப் பல்கலைக்கழகம்

தஞ்சாவூர் - 613 005

புதுதில்லி தேசிய ஆவணக் காப்பக நல்கை வெளியீடு

Published with the financial assistance from the
National Archieves of India

தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடு : 273

திருவள்ளுவராண்டு 2035, கார்த்திகை - திசம்பர் 2004

நூல்	:	சாந்தாதி அகவமகம்
பதிப்பாசிரியர்	:	முனைவர் த.கோ. பரமசிவம்
மொழி		தமிழ்
பொருள்	:	இலக்கியம்
பதிப்பு	:	முதற்பதிப்பு 2004
பக்கம்	:	8+80+892 = 980
தாள்	:	டி.என்.பி.எல்.மேப்லித்தோ 16 கிலோ
அளவு	:	டெம்மி 1/8
நூற்கட்டுமானம்	:	சாதாக்கட்டு
விலை	:	உ.ரூ. 240/-
படிகள்	:	1000 படிகள்
அச்சு	:	தமிழ்ப் பல்கலைக்கழக மறுதோன்றி அச்சகம், தஞ்சாவூர்

முனைவர் இ. சுந்தரமூர்த்தி

துணைவேந்தர்

அணிந்துரை

தமிழ்ப் பல்கலைக்கழக ஓலைச்சுவடித்துறை சுவடிகளைத் தேடித்தொகுத்துவைப்பதிலும் அவற்றை நன்கு ஆராய்ந்து பதிப்பிப்பதிலும் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றது. பதிப்பியல் அறிஞர் புலவர் மணி பேராசிரியர் மு. சண்முகம் பிள்ளை அவர்கள் இத்துறையின் தலைவராக விளங்கியவர். அவர்காலத்தில் துறையில் பாதுகாக்கப்பெற்ற அரிய சுவடிகளுள் ஒன்று 'சாந்தாதி அசுவமகம்' என்னும் சுவடியாகும். இச்சுவடி போன்று பல பழஞ்சுவடிகள் துறையில் தொகுத்துவைக்கப்பெற்றுள்ளன. இத்துறையில் 7000 தனிச் சுவடிகளும் ஆயிரத்திற்கு மேற்பட்ட ஆவணச் சுருணைகளும் தொகுத்துவைக்கப்பெற்றுள்ளன. இவற்றுள் தகுதியானவற்றை ஆராய்ந்து பதிப்பிக்கும் பணியில் துறையினர் தொடர்ந்து ஈடுபட்டு வருவது பெரிதும் மகிழ்ச்சிக்குரியது.

'சாந்தாதி அசுவமகம்' என்னும் இந்நூல் அமிர்தகவி செய்யிது அண்ணாவியார் என்னும் புலவர் பெருந்தகையால் பாடப் பெற்றதாகும். மகாபாரதக் கதையுள் ஒரு பகுதியாக விளங்கும் தருமர் நிகழ்த்திய அசுவமேதயாகத்தைப் பற்றி இந்நூல் விளக்குகிறது நான்காயிரத்திற்கும் மேற்பட்ட பாடல்களைக் கொண்ட ஒரு பெருங்காப்பியமாகவே இந்நூல் விளங்குகின்றது.

அமிர்தகவி செய்யிது முகம்மது அண்ணாவியார் அவர்கள் தமிழ்ப் புராணங்களிலும், வடமொழி நூல்களிலும் மிகுந்த புலமை பெற்றவர். யமகம், திரிபு அந்தாதி மாலைமாற்றி முதலான அரிய பாடல்களை விரைந்து பாடும் ஆற்றல் பெற்றவர்.

காலந்தோறும் பாரதக் கதை பல்வேறு வடிவங்களில் பதிவுசெய்யப் பெற்று வருகிறது. பாரதத்தில் உள்ள பல்வேறு கிளைக் கதைகள் தனிநூல்களாகவும் வெளிவந்துள்ளன. நாட்டுப் புறப்பாடல் வடிவங்களிலும் பாரதக்கதைகள் பலவாறு விளக்கப்பெற்றுள்ளன.

பாரதத்தின் ஒருபருவத்தை, ஒரு கூற்றை மட்டுமே மையமாகக் கொண்டு தமிழறிஞர் அண்ணாவியார் விரிவாக இந்நூலைப் படைத்திருப்பது அவர்தம் கவி ஆளுமையைக் காட்டும்.

சாந்தாதி அசுவமகம் இலக்கிய மரபுகளை அடியொற்றி எழுதப் பெற்றுள்ளமையைப் பதிப்பாசிரியர் தம் விரிவான ஆய்வுரையில் பல ஒப்புமைப் பாடல்களோடு பொருத்தி விளக்கியுள்ளமை கருதத்தக்கது. ஆற்றொழுக்கான இலக்கியச் செறிவுடன் விளங்கும் இந்நூலை குறிப்புரையுடன் பதிப்பித்துள்ளார்.

சாந்தாதி அசுவமகம் என்னும் இப்பதிப்புநூல் நூலாசிரியரின் மொழியமைப்பும் அவர்கண்ட யாப்பு வடிவும் சிதையாமலும் பதிப்பிக்கப்பெற்றுள்ளது. அனைவரும் எளிமையாகப் படித்துணரும் வண்ணம் பொருள்மாறாமல் தொடர்களை, சொற்களைப் பிரித்து அச்சிட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

ஏட்டில் காணப்பெற்ற எழுத்துப்பிழைகள், ஒலிப்பிழைகள் ஆகியவற்றைப் பொருள் பொருத்தமும் இலக்கியச் செம்மையும் தரமும் கருதிச் செப்பம் செய்து அச்சிடப்பெற்றுள்ளது எனப் பதிப்பாசிரியர் குறிப்பதும் கருதத்தக்கது.

பாரத காவியத்தில் ஒருகூறான 'சாந்தாதி அசுவமகம்' பல ஆண்டுகளுக்குப்பின் நூல்வடிவில் வெளிவருவது பெரும் மகிழ்ச்சியைத் தருகின்றது. பதிப்பாசிரியர் முனைவர் த.கோ. பரமசிவம் இதனை நல்ல முறையில் பதிப்பித்து வெளியிட்டுள்ளார். பதிப்பாசிரியருக்கும் அச்சுருவாக்கத்தை அழகிய முறையில் செய்துதவிய பல்கலைக்கழகப் பதிப்புத் துறையினருக்கும் இனிய பாராட்டுதல்கள்.

இ. சுந்தரமூர்த்தி

சாந்தாதி அசுவமகம்

உள்ளுறை

1.	பதிப்புரை	..	க - எஅ
2.	சாந்தாதி அசுவமகம் -பாயிரம்	..	1
3.	நாட்டுச் சருக்கம்	.	5
4.	நகரச் சருக்கம்	..	16
5.	தருமராசன் கீர்த்திச் சருக்கம்	..	23
6.	எமனாசுரன் போர்ச் சருக்கம்	..	27
7.	அனுசாளுவன் போர்ச் சருக்கம்	..	84
8.	வேள்வி ஆரம்பச் சருக்கம்	..	132
9	நீலத்துசன் போர்ச் சருக்கம்	..	152
10.	சண்டிகை சாப நிவாரணச் சருக்கம்	..	193
11.	சுதர்மத்துசன் போர்ச் சருக்கம்	..	210
12.	சுரதத்துசன் போர்ச் சருக்கம்	..	266
13.	வர்க்க தேசச் சருக்கம்	..	307
14.	புரவி பேதித்துச் சுயரூபமான சருக்கம்	..	344
15.	மதன மண்டலச் சருக்கம்	.	356
16.	மிருக வெகுமுக தேசச் சருக்கம்	..	378
17.	பப்பர வாகனன் போர்ச் சருக்கம்	..	381
18.	பரிசத்துசன் போர்ச் சருக்கம்	..	523
19.	வீரவர்மன் போர்ச் சருக்கம்	..	644
20.	சந்திரகாசன் போர்ச் சருக்கம்	..	687
21.	சமுத்திரச் சருக்கம்	..	754
22.	சபிந்தவ தேசச் சருக்கம்	..	783
23.	வேள்வி முற்றிய சருக்கம்	.	798
24.	செய்யுள் முதற்குறிப்பு அகராதி	.	835

(6442)

(6443)

(6444)

(6445)


(6446)


(2588)

(இரண்டாவது பாலின் மூன்றாவது பிரிவு முற்றும்)

(1)

(2)





பதிப்புரை

'சாந்தாதி அசுவமகம்' எனும் இந்நூல், அமிர்தகவி செய்யிது முகமது அண்ணாவியார் எனும் புலவர் பெருமானால் இயற்றப் பெற்ற தமிழ்க் காப்பியமாகும் இப்புலவர் பெருமான் அதிராம்பட்டினத்தில் பதினெட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்தவராவார் ஓலைச் சுவடியிலும் காகிதச் சுவடியிலும் காணப்பெற்ற இந்நூல், தமிழ்ப்பல்கலைக்கழக ஓலைச்சுவடித் துறைக்கு இவாதம் பேரர் செய்யிது முகமது அண்ணாவியார் அவர்களால் 1987 ஆம் ஆண்டு அன்பளிப்பாக வழங்கப் பெற்றதாகும் ஓலைச் சுவடியை அடிப்படையாகக் கொண்டு வெளிவரும் இந்நூல் ஒரு சுவடிப் பதிப்பாகும் சிறப்பினைக் கொண்டதாகும். வட மொழியில் வியாசர் அருளிய மகாபாரதக் கதையுள் ஒரு பகுதியை விரிவாகக் கூறுகின்ற தழுவல் நூலாகவும் இது விளங்குகிறது. அதாவது, மகாபாரதப்போருக்குப் பின், தருமர் மன அமைதி வேண்டி நிகழ்த்திய அசுவமேதயாகத்தை மிக விரிவாக 4100 செய்யுளுக்கும் மேற்பட்ட பெருங்காப்பியமாகவே விளக்கும் நூலாக இது அமைந்திருக்கிறது

ஓலைச் சுவடித்துறை

தமிழ்ப் பல்கலைக்கழகம் (1981) தோற்றுவிக்கப்பெற்ற நாள் முதலாக ஓலைச்சுவடிகளைத் தேடித் தொகுத்துப் பாதுகாப்பதிலும் அவற்றை முறையாக ஆய்வு செய்து செம்பதிப்புகளாக வெளியிடுவதிலும் முனைப்புடன் இயங்கி வருகிறது. ஓலைச் சுவடிகளுக்காகவே தனியாக ஒரு துறையை நிறுவிச் சிறப்பாக இயக்கி வருகிறது திருக்கோயில்கள், திருமடங்கள், சிவாச்சாரியர், நாட்டு வைத்தியர், கவிராயர், ஆசிரியர், சோதிடர் எனப் பலவகைப் பட்டோரிடமிருக்கும் சுவடிகளைத் தேடித் தொகுப்பதை இத்துறை முதன்மை நோக்கமாகக் கொண்டிருக்கிறது. அழிந்துவரும் சுவடிக்கலையைக் காக்கும் பொருட்டு நம்முன்னோரின் சுவடிகளை அன்பளிப்பாகப் பெற்றும் விலை மதிப்பிட்டு வாங்கியும் தொகுத்து வருகிறது. அறிவியல் முறைப்படியும் மரபுவழியாகவும் பாதுகாக்கப்பெறும் அவை அடுத்தடுத்த தலைமுறையினரை அடையும் பெருஞ்சிறப்புக்குரியனவாம்.

இம் முயற்சி தமிழ் வளத்தையும் நலத்தையும் ஒரு சேரக் காப்பதாகும் மிகப் பெரிய தேடுதல் வேட்டை நடத்தாமலேயே இத்துறையில் 7000 தனிச் சுவடிகளையும் 1000க்கும் மேற்பட்ட ஆவணச் சுருணைகளையும் கொண்ட சுவடிநூலகம் இப்போது அமைந்திருக்கிறது என்பது பெருமைக்குரிய செய்தியாகும்.

இவ்வாறு சுவடிகள் தேடுதல் முயற்சியில் ஈடுபட்டபோது அதிராம்பட்டினத்திலிருந்து இசுலாமியர் ஒருவர் தமது மூத்தவயதிலும் மிக ஆர்வமாக இத்துறைக்கு வருகை தந்தார் அவர் தம்முடன் கொண்டு வந்த ஓலைச்சுவடிகள் சிலவற்றை வெளிப்படுத்தினார். அவற்றைத் தம்முன்னோர் இயற்றிப் பாதுகாத்ததாகத் தெரிவித்ததுடன் தமிழ்ப் பல்கலைக்கழகத்திற்கு அவற்றை அன்பளிப்பாக வழங்குவதாகவும் மகிழ்வுடன் தெரிவித்தார். நாங்கள் அவர்தம் தமிழுணர்வையும் ஆர்வத்தையும் கண்டு வியந்தோம். அவர் அன்பளிப்பாக வழங்கிய சுவடிகள் வருமாறு:

1.	சாந்தாதி அசுவமகம்	-	387 ஏடுகள்
2.	மாந்திரீக நூல்	-	219 ஏடுகள்
3.	திருமணப் பவனி	-	93 ஏடுகள்
4.	குமாரசாமியம்	-	133 ஏடுகள்
5	நாவான் சாத்திரம்	-	133 ஏடுகள்
6.	மனையலங்கார சாத்திரம்	-	21 ஏடுகள்
7	சுப்பிரமணியர் பதியம்	-	2 ஏடுகள்
8	நூர் நாமா	-	30 ஏடுகள்
9.	பாட்சா ராவுத்தர் பவனி	-	40 ஏடுகள்
10	யானை விருத்தம்	-	4 ஏடுகள்
11.	வாள் விருத்தம்	-	2 ஏடுகள்
12.	பரி விருத்தம்	-	3 ஏடுகள்

இச் சுவடிகளை வழங்கிய அவர்கள் தம் பாட்டனார் அமிர்தகவி செய்யிது முகமது அண்ணாவியார் பற்றிய வரலாற்றை ஈடுபாட்டுடன் வெளிப்படுத்தினார்கள். அண்ணாவியார் குடுமபத்தினர் பரம்பரையாகவே தமிழ்மொழியையும் சமயத்தையும் பயிற்றுவிக்கும் அண்ணாவியாகளாகத்

திகழ்ந்து வருகின்றனர். சிறந்த தமிழ்ப் புலவர்களாகப் பல நூல்களைச் செய்துள்ளனர் குறிப்பிட்ட சமயத்தைச் சார்ந்தவராகத் திகழ்ந்த போதும் தமிழ்வளத்திற்காகவும் நலததிற்காகவும் பிற சமய நூல்களையும் இயற்றியுள்ளனர் சாந்தாதி அசுவமகம் எனனும் இந்நூல் பாரதக் கதையை விரிவாகக் கூறுகிறது என்பதே இதற்குச் சான்றாகும். எனவே அப்பெரியவருடன் கொண்ட தொடர்பு ஓலைச்சுவடித்துறைக்கும் தமிழ்ப் பல்கலைகழகத்துக்கும் பெருமை சேர்ப்பதாக அமைந்தது என்பதை ஈண்டு குறிப்பிடுவதில் மகிழ்கின்றேன்.

செய்யிது முகமது அண்ணாவியார்

செய்யிது முகமது அண்ணாவியார் அவர்கள் பாணடி நாட்டினர். பிறர்க்குப் பாடம் சொல்லிக் கொடுத்து அதன் வழி மொழியையும் சமயத்தையும் வளர்க்கும் அண்ணாவியார் எனும்குடும்பத்தினர். அண்ணாவி என்பது கிராமத்து ஆசிரியர்களைக் குறிக்கும் இது சங்க இலக்கியத்துள் காணப்படும் கணக்காயர் எனும் சொல்லுடன் ஒப்புமையுடையது மரியாதைச் சொல்லாகும். கவி பாடுவதிலும் பெரும் காப்பியங்கள் செய்வதிலும் இனிமையைக் கண்டவராதலின் இவரை மக்கள் 'அமிர்த கவி' எனச் சிறப்பாக அழைத்தனர். கல்வி கேள்விகளில் சிறந்த இவர்தம் கவித்துவத்தை இவர்தம் நூல்கள் பலவற்றிலும் பரக்கக் காணலாம். சமயப் பொறை கொண்ட இவர்தம் பட்டறிவு தமிழ்ப் புராணங்கள், வடமொழிப் புராணங்கள் சிலவற்றைக் காவியமாக்கியது பல தனிப் பாடல்களை, பதிகங்களை உருவாக்கியது இவர்தம் கவிதை, முருகனைக் காட்டிய வரலாற்றை இன்னும் அப்பகுதியினர் பெருமையாகப் பேசி வருகின்றனர். இவர் தம் கவிதைகள் பலரிடததும் பழகிய நிலையில் இருந்தன.

கலைமாமணி கவி கா.மு ஷெரீப் அவர்கள ஒரு நிகழ்ச்சியைக் குறிப்பிட்டு அண்ணாவியாரின் பெருமையை நினைவு கூர்ந்தார்கள் அதனை மேலோட்டமாக நோக்கினாலும் மேலே சொன்ன உண்மை புலபபடும்.

"நான் அரசியலில் இருந்த போது பேராவூரணிக்குக் கீழ்பால் உள்ள கொன்றைக்காடு எனும் ஊருக்குச் சென்றிருந்தேன். இரவு பொதுக்கூட்டத்தில் பேசிவிட்டு, ஒரு விவசாயி வீட்டின் முன் புறத்தில் படுத்திருந்தேன். எழுபது வயதுடைய ஒருவர் வந்தார். வணக்கம் கூறிவிட்டு அமர்ந்தார். தனக்குள்ள சாரீர வளம் கூட்டிப் பாடிடலானார். அவர் பாடியது மகாபாரதத்தில் உள்ள கர்ணனைப் பற்றிய நெடிய பாட்டு". "இது எந்த பாரதத்தில் உள்ளது எனக் கேட்டேன், அதிராம்பட்டினம் அண்ணாவியார் பாடியது என்றார்". "தனி நூலா" என்று கேட்டேன் ஆமாம் கர்ணபர்வம் என்ற பெயரில் இப்பொழுது நான் பாடிய அம்மானைப் பாடலை அவர்கள் தான் பாடியுள்ளார்கள் என்று பகர்ந்தார். அத்துடன் அவர் நிற்க வில்லை. எங்களின் (இந்துக்களின்) பதினெட்டுப் புராணங்களையும் அம்மானை அம்மானையாக அண்ணாவியார் எழுதியுள்ளார்களே. உங்களுக்குத் தெரியாதா? என்று கேட்டார். பாடியது இப்போதுள்ள அண்ணாவியார் அல்ல. இவருடைய பாட்டனார் (அவரும் இதே பெயருடையவர்தான்) எழுதியதாகும். இந்த அண்ணாவியாருர்க்கே வயது தொண்ணூறுக்கு மேல், இவருடைய பாட்டனார் காலம் நூறாண்டுகளையும் தாண்டியது. அவ்வாறிருந்தும் இன்றைக்கும் கிராமங்களில் அவர் பாடல் பாடப்படுகிறது. அந்த அண்ணாவியாரைத் தெய்வம் என்கிறார் அந்தக் கிராமவாசி முதியவர் இந்த அண்ணாவியார் குடும்பச் சிறப்பிற்கு இந்நிகழ்வோர் சான்று, (செய்யது முகம்மது அண்ணாவியார் நினைவுமலர் - இரங்கல் இன்னுரை - 1992)

பாண்டி நாட்டினராகிய அண்ணாவியார் அதிரை வந்து அருட்பணி புரிந்த வரலாற்றை, புலவர் அ. அஹ்மது பஷீர் அவர்களது சொற்களில் காண்பது பொருத்தமாகும் எனக் கருதுகிறேன்.

"அமிர்த கவிராயர் காலம் பதினெட்டாம் நூற்றாண்டின் தொடக்க காலம் சையிது முகம்மது அண்ணாவியார் பாண்டிய நாட்டினர். பாட்டானார் பெயர் நூருதீன் லெப்பை. தந்தை பெயர் செய்கு மீரான். அண்ணாவியார் முன்னோர் வழிவந்தவர்கள் இன்னமும் கீழ்க்கரையில் வாழ்ந்து வருவதாகக் கூறுவர்.

இளமையில் பெற்றோரை இழந்து வருந்திய அண்ணாவியார் தம் ஊரை விட்டு வெளியேறி மதுக்கூரை அடைந்து, மார்க்க அறிஞர் ஒருவரிடம் இறைமறை குர்ஆனையும் மார்க்க நூல்களையும் கற்றார் மூத்தாகுறிச்சி என்னும் சிற்றூரில், திண்ணைப்பள்ளியில் சேர்ந்து செந்தமிழ் இலக்கணங்களைக் கற்றுத் தேர்ச்சி பெற்றார்

யமகம், திரிபு, அந்தாதி, மாலைமாற்று முதலான அரிய பாடல்களை விரைந்து பாடும் ஆறறல் பெற்றார். இல் வாழ்வில் பற்றின்றி துறவிபோல வாழ்ந்த அவர், நாகூர் சென்று சிலகாலம் அருந்தமிழ் கற்பிக்கும் தொண்டு புரிந்தார் பிற்காலத்தில் ஐவ்வாது புலவர் என்று பாராட்டு பெற்ற மீர்ஜவ்வாது போன்ற மாணவர்கள் பலா அவரிடம் தமிழ் கற்றனர்.

சையிது முகம்மது அண்ணாவியார் நாகூரில் இருந்த போது ஷைகு வஹாபுதீன் எனும் ஆன்மீகப் பெரியாரின் நட்பு கிடைத்தது. அண்ணாவியாரின் அறிவுக் கூர்மையைக் கண்ணுற்ற அவர் அவருக்குத் தீட்சை அளித்தார். தன் சொந்த ஊராகிய வழுத்தூர் அழைத்துச் சென்றார். அருகிலிருக்கும் ஐயம்பேட்டையில் பள்ளி ஒன்று ஏற்படுத்தி, அதன் வாயிலாக மாணாக்கரின் அறிவுக் கண்களைத் திறந்து விட்டார்.

அதிரையில் திணணைப்பள்ளியொன்று இருந்தது. அதன் ஆசிரியர் கதிர்வேலு உபாத்தியாயர் என்பவர் தம்மிடமிருந்த மந்திரக்கலையைக் காட்டி மக்களை அச்சுறுத்தித் தமக்குப் பணிவுடையவராய்ப் பிறர் வாழ வேணடும் என்னும் போக்குடையவர். அதனால் மக்கள் அஞ்சினர். ஐயம்பேட்டையிலிருந்து அறிவுச்சுடர் பரப்பிய அண்ணாவியார் பற்றி மக்கள் அறியத் தொடங்கினர். மாந்திரீகக் கலையில் வல்லவர் அவர் அக்கலையை மக்களின் நன்மைக்காகவே பயன்படுத்தக் கூடியவர் என்பதையும் அறிந்து மகிழ்ச்சியடைந்தனர்

சையிது முகம்மது அண்ணாவியாரை அதிரை நகருக்கு அழைத்துவர வேண்டும் என விழைந்தவர்களுள் லெப்பைத்தம்பி மரக்காயர் எனும் பெருவள்ளலும் ஒருவர் அவரது வேண்டுகோள் ஓலையைத் தாங்கி மக்கள், அண்ணாவியாரை அணுகி, அல்லலைக் கூறி

அதிரைக்கு வருகை தருமாறு மக்கள் வினயமுடன் வேண்டி நின்றனர். அரசர்க்குரிய பெருமரியாதையோடு அதிரைமாநகருக்கு அண்ணாவியார் வருகை தந்தார். மக்கள் தைரியமாக வெளியில் நடமாடினர் 'அச்சமின்றி' நடமாடும் இம்மக்களின் புதிய போக்குக்குக் காரணம் அண்ணாவியார் வருகைதான் என்று கதிர்வேலுக்குப் புரிந்துவிட்டது.

பொறாமை ஒரு பக்கம், இயலாமை மறு பக்கம். இருப்பினும் வெளியே காட்டிக்கொள்ளாமல் அவர் நட்போடு பழகுவதுபோல் நடித்து வந்தார். முருகனுக்குக் காவடி எடுக்கப் பழனிக்குச் செல்கிறேன். விடைபெற்றுப் போக வந்தேன்' என்றார்.

'முருகனைக் காண பழனிக்கு ஏன் செல்ல வேண்டும்' சுப்பிரமணியா (அதிரை) நகருக்கு வந்து விட்டால் உங்கள் வேண்டுதலை எளிதில் முடித்துவிடலாம் அல்லவா? என்றார் அண்ணாவியார். அது எப்படி இயலும் என்றார் கதிர்வேலு' ஏன்? என்னால் இயலும்' என்றார் அண்ணாவியார்.

நாளும் இடமும் குறிக்கப்பட்டன. செழியன் குளத்தருகே பந்தல் போடப்பட்டது. மக்கள் வெள்ளம் கரைகட்டி நின்றது அண்ணாவியாரும் உபாத்தியாயரும் எதிரும் புதிருமாய் அமர்ந்தனர். சையிது முகம்மது அண்ணாவியார் முன்னரே தாம் பாடி வைத்திருந்த ஏட்டை எடுத்தார் கதிர்வேலு கையில் கொடுத்தார்.' ஏட்டிலிருக்கும் மந்திரக் கவிகளை உரக்கப் படியும், உமது வேதம் காட்சி நல்கும் என்றார். கதிர்வேலு படித்தார் பதினான்கு கவிதைகள் (சுப்பிரமணியா பிரசன்னபதிகம்) வரை உரக்கப் படித்தார். என்ன விந்தை! கதிர்வேலு தம் கந்தவேளைக் கண்ணாரக் கண்டு கொண்டார். அண்ணாவியாரின் ஆற்றலை அறிந்து கொண்டார். அண்ணாவியார் அவ்விடத்தில் காட்டியது 'தொலை உணர்தல்' (டெலிபதி) எனும் தொலைக் காட்சியாகும்.

சையிது முகம்மது அண்ணாவியார் பத்துப் புராணங்கள் இயற்றியுள்ளார் நூர்நாமா, அலிநாமா, சாந்தாதி அசுவமகம், பாரத அம்மானை ஆகியன குறிப்பிடத்தக்கவை

சையிது முகம்மது அண்ணாவியாரின் மூத்தமகன் சையிது மீரா லெப்பை. இளையமகன் நூர்முகம்மது. தந்தை சொற்படி நடக்கும் தனயராய் இளையமகன் இருக்க, மூத்தமகன் விளையாட்டுப் பிள்ளையாகவே வளர்ந்து வந்தார். அமிர்தகவி இவ் அவனியை விட்டுச் செல்லும் தருணமும் வந்துற்றது. இளையமகன் ஊரில் இல்லை மூத்தமகனை அழைத்தார் தந்தை அவரது வாய் மந்திரச் சொற்களை முணுமுணுக்கத் தொடங்கிற்று தம் உமிழ்நீரை அருமை மகனின் வாயிற் பொழிந்தார் ஆசி வழங்கினார். ஆவி பிரிந்தது.

அன்று முதல் சையிது மீரா லெப்பையின் வாழ்வில் பெரிய மாற்றம் நிகழ்ந்தது. தந்தையைப் போல் தலைசிறந்த புலவராய்த் திகழ்ந்தார். அமிர்த கவிராஜரின் மகன் ஜீவரத்தின கவிராயர் என்று அவரை மக்கள் போற்றினர் (செய்யது முகம்மது அண்ணாவியார் நினைவு மலர் - அருந்தமிழ் வளர்த்த அண்ணாவியார் 1992) . இவ்வாறு அண்ணாவியாரின் வரலாறு தமிழ்ப் புலவர் வரிசை வரலாறாகவே அமைந்திருத்தல் காணலாம்.

அண்ணாவியார் தமிழ் மொழியில் பல நூல்களைச் செய்தார். அவர் பாடிய அலிநாமா என்ற நூலை அரங்கேற்றியபோது லெப்பைதம்பி மரக்காயர் அவருக்குச் சரியாசனம் வழங்கிக் கனகமாரி சொரிந்து பாராட்டினார் என்பர். விருத்த யாப்பை மிகச் சிறப்பாகப் புனைவதில் அண்ணாவியார் தலை நின்றார் என்பதை அவர் தம் நூல்களுள் காணலாம் அண்ணாவியார் தமது 65ம் வயதிலேயே இறைவனடி சேர்ந்து விட்டார் என்பது தான் வியப்பும் இழப்பும் ஆகும். அவர் இன்னும் சில காலம் வாழ்ந்திருந்தால் இன்னும் சில நூல்கள் தமிழன்னையை அணி செய்திருக்கும் என்பதில் ஐயமில்லை. மகா பாரதத்தின் ஒரு சிறிய பருவத்தை 4100 பாடல்களில் பாடிய இப் புலவர் பாரதக் கதை முழுவதையும் பாடியிருந்தால் அது 1,00,000 கவிதைகளையும் தாண்டியிருக்கும். அதிராம்பட்டினத்தில் பள்ளிவாசலின் அருகே அவரது உடல் அடக்கம் செய்யப் பட்டிருக்கிறது என்பதும் இன்றும் அது மக்களால் போற்றப்படுகிறது என்பதும் அவரது அருட்திறமைக்கும் தமிழ் நலத்துக்கும் சான்றாகும்.

இத்தகு உயரிய புலவர் பெருமான் இயற்றிய நூலே, காவியமே, சாந்தாதி அசுவமகம் ஆகும்

சாந்தாதி அசுவமகம் - ஓலையும் காகிதமும்

அண்ணாவியார் குடும்பத்திலிருந்து இரண்டு அசுவமகச் சுவடிகள் ஓலைச்சுவடித்துறைக்கு வந்தன. ஒன்று ஓலைச்சுவடிக்கட்டு, மற்றொன்று நோட்டுப்புத்தகமாகிய காகிதச்சுவடி. இரண்டிலும் சாந்தாதி அசுவமக நூல் முழுமையாக எழுதப்பெற்றிருந்தது. ஓலைச்சுவடி, காகிதச் சுவடி இரண்டுமே படிச்சுவடிகள் தாம் நூலாசிரியரின் கையெழுத்துள்ள சுவடியாக இல்லை ஓலைச்சுவடியின் முற்குறிப்புகளும் பிற்குறிப்புகளும் இதனை உறுதி செய்கின்றன. ஓலைச் சுவடித்துறையின் சுவடி நூலகத்தில் இது 714 ஆம் எண் கொண்ட சுவடியாகவும் விளக்க அட்டவணையில் 914 ஆவது எண் கொண்ட சுவடியாகவும் காணப்படுகிறது. சாந்தாதி அசுவமக ஓலைச்சுவடி நல்ல நிலையில் படிக்க முடிந்த நிலையில், சிதைவுகள் குறைந்த நிலையில் காணப்பட்டது. 387 ஏடுகளைக் கொண்ட இச்சுவடி இரண்டு பக்கமும் எழுதப்பெற்ற நிலையில் அமைந்திருக்கிறது.

இச் சுவடியின் இருபுறமும் காப்புச் சட்டங்கள் இருத்தலின் சுவடி சிதையாமல் காக்கப்பெற்றதுபோலும் அவ்வப்போது மைப்பூச்சும் எண்ணெய்ப்பூச்சும் இதனைத் தெளிவாகப் படிக்கும் வண்ணம் செய்திருக்கிறது சுவடியின் நீளம் 39 செ.மீ. அகலம் 3 செ.மீ நல்ல நாட்டுப்பனை ஓலைகள், பாடம் செய்யப்பெற்று இருதுளையிடப் பெற்று முறையாக ஏட்டெண் வழங்கப் பெற்று எழுதப்பட்டுள்ளன. ஒவ்வொரு பக்கத்திலும் பாடல்கள் தெளிவாக எழுதப்பெற்று 9,10 வரிகளில் காட்சியளிக்கின்றன. ஓலை எழுத்துக்களுக்கேயுரிய வரிவடிவை அவை பெற்றுள்ளனன மெய்யெழுத்துக்குப் புள்ளியில்லை. பாடல்கள் தொடர்ந்து எழுதப்பட்டுள்ளன என்றாலும் ஒற்றைக் கொம்பு இரட்டைக் கொம்புகளுக்கு வேறுபாடுகாட்டப் பெற்றுள்ளன. ஒவ்வொரு சருக்கத்தின் இறுதியிலும் பாடலின் கூட்டுத் தொகை கொடுக்கப்பட்டுள்ளது. சுவடியின் தொடக்கக் குறிப்பு தலைப்பு ஏட்டில் காணப்படுகிறது. அந்த ஏடு சிதைந்திருந்த நிலையில் இருப்பினும் ஓரளவு படிக்க முடிந்த நிலையிலேயே காணப்படுதல் சிறப்பாகும்

'ஆதி துணை
அசுபமேதியாகம்' என முதல் ஏட்டின் ஓரம் எழுதப்

பெற்றிருக்கிறது. அடுத்து, கடவுள் வாழ்த்துப்பாடலான, பூமாது வுரம்பொருந்தவும் கலைமாது நாவிலுறும் என்ற பாடல் எழுப்பபட்டுள்ளது. இப்பாடலைத் தொடர்ந்து முற்குறிப்பு காணப்படுகிறது

> 'வியவருஷம் சித்திரை மாதம் 6 ம் தேதி வியாழக்கிழமை
> திருவோணநட்சேத்திரத்தில்..... . . . ..கலக்கனத்தில்
> நாலாவது பிரிதி துவற்கம் .. . .கிழமை சாந்தாதி
> அசுபமேதியாகஞ் துவற்கம், (துவக்கம், தொடக்கம்).

இக் குறிப்பைக் கொண்டு பார்க்கும் போது இது நான்காவதாகப் படியெடுக்கப்பெற்ற சுவடி என்பது விளங்கும். எஞ்சிய மூன்று சுவடிகள் பற்றிய வரலாறு அறியக் கூட வில்லை அவற்றுள் ஒன்று நூலாசிரியர் சுவடியாக இருத்தல் கூடும்.

இப்பாடல் முதலாக, ' தன்னுயிர் கதிகமாக நீடரண்' என்னும் இறுதிப்பாடல் வரை 4104 பாடல்கள் முழுமையாக எழுதப்பட்டுள்ளன. விருத்தங்களைக் கொண்டும் வெவ்வேறு யாப்பு வகைகளைக் கொண்டும் அமைந்துள்ள இக்காப்பியம் கிளைக்கதையைத் தனிக்கதையாகவே சிறப்பித்திருக்கிறது.

சுவடியின் இறுதியில் பிற்குறிப்பைத் தாங்கிய ஏடும் இணைப்பபட்டிருக்கிறது. அவ் ஏட்டில் காணப்படும் குறிப்பு வருமாறு.

"வேழ்வி முற்று தலையாகிய சருக்கம் முற்று. ஆக சருக்கம் 22க்கு கூடிய திருவிருத்தம் 4104 (குறியீட்டில் எழுதப்பட்டுள்ளது)" கலியுகாதி வருஷம் 4970 சாலிவாகன சகாப்தம் 1791க்கு சரியான விய வருஷம் கார்த்திகை மாதம் 14ஆம் தேதி சுக்கிர வாரம் அசுபதி நட்சத்திரங்கூடிய அமிர்தயோகத்தில் ராச - வேளையில் மேஷ லக்கினத்தில் எழுதி நிறைவேறியது. இந்த புராணம் படித்த அமிர்தகவி செய்யது முகம்மது அண்ணாவியார் அவர்கள் குமார சீவரத்தின அண்ணாவியாரவர்கள் பரிசோதித்து சுத்தப்படுத்தி எழுதியிருந்த ஏட்டைப் பார்த்து மேற்படியார் தம்பி நூர்முகம்மது அண்ணாவியார் குமாரர் நவரத்னக்கவி என்னும் காதர் முகையத்தீன் அண்ணாவியார் கை அச்சரம். முற்றிற்று'.

இக் குறிப்பையும் முற்குறிப்பையும் காணும்போது, இச்சுவடி படிச்சுவடியே என்பதும் 1869 ஆம் ஆண்டு எழுதப்பெற்ற சுவடி என்பதும் தெளிவாகும். பலசுவடிகள் கிடைக்காத நிலையில் இப்பாடல்களில் பாட வேறுபாடுகளைக் காண்பதும் பதிவு செய்வதும் இயலாமற் போயிற்று என்ற குறிப்பை மட்டும் ஈண்டு முன்வைத்து, இவ் ஒரு சுவடியை அடிப்படையாகக் கொண்டே இந்நூல் வெளியிடப் பெறுகிறது என்ற செய்தியைப் இப்பதிப்புரையில் பதிவு செய்கிறேன்.

இப் பதிப்பிற்காகக் கிடைத்த மற்றொரு சுவடி தாள் சுவடியாகும். தோலும் கனத்த அட்டையும் கொண்டு கட்டுமானம் செய்யப்பெற்ற கோடிட்ட தாள்களைக் கொண்ட நோட்டுப்புத்தகத்தில் எழுதப் பெற்றதே அச்சுவடி. அது ஓலைச்சுவடி அளவுக்குப் பழைமை கொண்டதல்ல. என்றாலும் மூலச்சுவடியோடு ஒத்துப்போகின்ற படியாக அது காணப்படுகிறது. கைபிசகால் ஏற்படும் சொற்பிழை எழுத்துப் பிழைகளைக் கொண்டதாகவும் அது விளங்குகிறது. எனவே அச்சுவடியை அடிப்படையாகக் கொள்ளாமல் ஓலையில் ஐயம் ஏற்பட்ட போது மட்டுமே, காகிதச்சுவடி பயன்படுத்தப்பெற்றது என்ற குறிப்பை மட்டும் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன் அச்சுவடியின் இறுதியில் காணப்படும் குறிப்பு அது மிக அண்மையில் எழுதப்பெற்ற வரலாற்றைப் புலப்படுத்தல் காணலாம். தொடக்கத்தில்,

ஸ்ரீ மதே ராமாநுஜாய நமா
இ°து
அதிவீர ராமன் பட்டணம்
செய்கு மீரா லெப்பை புத்திர சிகாமணி
மஹாவித்துவான் இயற்றமிழாசிரியராகிய
அமிர்தமதுர கவிராஜரென்னும்
செய்யிது முஹம்மது அண்ணாவியார்
அவர்களாலியற்றியது
(சாந்தாதி யசுவ மகம்)

என்ற குறிப்புடன் காப்பு எனத் தலைப்பிட்டு; பூமாது வுரம் பொருந்துங் கலைமாது நாவிலுறும்' எனும் முதற்பாட்டு காணப்படுகிறது. தொடர்ந்து பாடல்கள் 4 வரிகளில் பாட்டெண்ணுடன் எழுதப்பட்டுள்ளன. மெய் எழுத்துக்களில் புள்ளிகள் காணப்படுகின்றன.

நூல் முழுவதும் எழுதப்பட்ட நிலையில் இறுதியில் ஒரு குறிப்பு காணப்படுகிறது. அது வருமாறு

'வேழ்வி முற்றுதலையாகிய சருக்கம் முற்றிற்று
ஆகச் சருக்கம் 22க்கு கூடிய திருவிருத்தம் (4100)
இப்பாடல் ஏட்டுப் பிரதியிலிருந்து இதற்குமுன்
எழுதியிருந்த புத்தகத்தைப் பார்த்து இதில் எழுதியுள்ளன.
ஏட்டில் கவி 4104 குறிப்பிட்டுள்ளது. இதை
எழுதி முடித்தவர் அமிர்த மதுரகவியின் பவுத்திரரர் ஹபீபு
முஹம்மது அண்ணாவியாரின் புத்திரர் ஹாஜி க செ.
செய்யிது முஹம்மது அண்ணாவியார். 1975 மே மாதம்
22ந் தேதி வியாழக்கிழமை அட்டவணை 512 நீ பக்கம்

1975 . 5 .22
1974 . 6 16

எழுதி முடித்த நாள் **0. 11. 06**

இக் குறிப்புப் போலவே, முதல் அட்டையில், 1974 ஜூன் மாதம் 16ம் செய்தி ஞாயிறு காலை மணி 6க்கு எழுதத் துவற்கம்!. என்ற குறிப்பும் காணப்படுகிறது. எனவே, இது மிக அண்மைக் காலத்தைச் சார்ந்த சுவடி என்பது பெறப்படும். ஆனால்,ஏட்டில் உள்ளவாறே பாட்டெண், யாப்பு மாறும் போது ' வேறு ' என்ற குறிப்பு போன்றன எழுதப்பட்டுள்ளன.

ஓலைச் சுவடியில் விடுபட்ட தொடர்கள், வரிகள், பாடல்களைக் காகிதச் சுவடியின் இறுதியில் பட்டியலிட்டுக் காட்டியுள்ளனர்.

'ஏட்டில் சில கவிகள் கரையான் அரிச்சதையும் அரங்கேற்றுபவரின் பெயருக்கும் இடம் விடப்பட்டிருக்கும் பக்கங்களும் கவிதைகளும் என்ற தலைப்புடன் அப்பட்டியல் காணப்படுகிறது. அது வருமாறு

பக்	-	ஸி
2	-	
3	-	.
6	-	23
12	-	16
36	-	153
41	-	198
47	-	247
50	-	272
57	-	22
58	-	25
59	-	33
64	-	73
64	-	76

என அப்பட்டியல் தொடர்கிறது. என்றாலும் உள்ளே உள்ள கவிகளில் சில மாறுபட்டுள்ளன. அட்டவணையில் காணப்படாததாகக் குறிக்கப்பட்ட கவிகள் ஏட்டிலும், காகிதச் சுவடியிலும் காணப்படுகின்றன. அவை பின்னர் எழுதிச் சேர்க்கப் பெற்றனவா என்பது அறியக் கூட வில்லை. என்றாலும் காவிய அமைப்பிலும் சருக்க அமைப்பிலும் கவிகளின் தொடர்ச்சியிலும் பெருத்த மாறுபாட்டைக் காண முடியவில்லை என்ற குறிப்பை மட்டும் நினைவு படுத்தி மேலே செல்லலாம்.

ஓலைச் சுவடியின் குறிப்பும் தாள் சுவடியின் குறிப்பும் அமிர்த கவிராயரின் இப்பேரிலக்கியத்தைப் பலரும் படி எடுத்துப் படித்தும் பாடியும் பயின்றும் வந்திருக்கின்ற செய்தியை புலப்படுத்துகின்றன. அதிராம்பட்டினத்தின் பகுதிகளில் பலரின் மனப்பாடல்களாகவும் இவை அமைந்திருக்கின்றன படிப்பதற்கும் பழகுவதற்கும் இனியகாவியமாகத் திகழ்ந்து மக்களின் நல்லாதரவைப் பெற்ற காவியமாகவே இது விளங்கிற்று என்றால் அது மிகையாகாது.

பாரதக் கதைகளும் நூல்களும்

மகாபாரதக் கதை வாய்மொழியாகத் தோன்றிச் சொற்பொழிவுகளாலும் நாடகங்களாலும் வளர்ந்து எழுத்துரு பெற்று நிலைத்த பின்பு, வளர்ந்த நூல்களாகவும் தழுவல் நூல்களாகவும் தோன்றிய நூல்கள் பலவாகும் பாரதமெங்குமுள்ள பழகிய மொழிகளில் இயல் வடிவிலும், இசை வடிவிலும், நாடக வடிவிலும் இக்கதை நாடு முழுவதும் போற்றப் பரவியது. கடல் கடந்தும் மலை கடந்தும் நிலங்கடந்தும் கூட இக்கதை பரவியது. அனைத்து மக்களும் பயின்ற சிறப்பினைப் பெற்றது. காலங்காலமாகத் தொடர்ந்து வாழ்வதாயிற்று. செவ்விய இலக்கியங்களிலும் ஊடுருவியது. பிற வரலாறுகளுக்கும் கதைகளுக்கும் கிடைக்காத இச்சிறப்பு இந்திய இலங்கியங்களில் இராமாயணம் மகாபாரதம் ஆகிய இரண்டு காவியங்களுக்கே உரியதாகும்

பாரதக் கதை, வரலாற்றை முழுவதுமாகப் பல்வேறு இலக்கிய வடிவங்களில், பல்வேறு மொழிகளில் கூறிய நூல்களுக்கு இணையாக அதன் கிளைக் கதைகளும், தனி நிகழ்ச்சிகளும் தனித்தனி நூலாக மலர்ந்த வரலாறும் நம்மிடம் உண்டு தமிழில் ஐம் பெருங்காப்பியங்களைப் பட்டியலிடும் மரபு போலவே வடமொழியிலும் ஐம்பெருங் காப்பியங்களின் பட்டியில் மரபு காணப்படுகிறது. அந்த ஐம்பெருங் காப்பியங்களில் ஒன்றுதான் கிராதார் ஜுனியம் என்னும் காப்பியம். இது பாரதக் கதையில் வரும் ஒரு நிகழ்ச்சியை விவரித்தும் வருணித்தும் பாடிய காப்பியமாகும். ஆறாம் நூற்றாண்டைச் சார்ந்த பாரவி என்னும் புலவர் பாடிய இக்காவியம், சிவபெருமானை வேண்டி, அருச்சுனன் பாசுபதம் பெற்ற நிகழ்ச்சியைக் காட்டுவதாகும் இவ்வொரு நிகழ்ச்சியை வியாசரை விடவும் விளக்கமாக 18 காண்டங்களில் கூவைபடச் சித்திரிக்கிறது இத்தனிக் காப்பியம்

நம் மகாகவி பாரதியார், பாண்டவர் சூதாடித் தோற்ற வரலாற்று நிகழ்ச்சியை மட்டும் எடுத்துக் கொண்டு, பாஞ்சாலி சபதம், என்ற தனி நூலை எழுதினார் இதுவும் பாரவியின் நூலைப் போன்ற வருணனையும் விரிவும் கொண்டதாகும் தமிழில் இதற்கு முன்பும் பாரதக்கதையை அதன் துணைக் கதைகளை, கிளைக் கதைகளை, உள் நிகழ்ச்சிகளைத் தனித்

தனியாக விவரித்து எழுந்த நூல்கள் பலவாகும் பொதுவில் பாரத நூல்கள் செவ்விய நிலையில் அமைந்திருந்த போதும் பாரத அம்மானை போன்ற நாட்டுப்புற வடிவங்களிலும் முழு நூல்கள் தோன்றின செவ்விய இலக்கியங்களில் தனி நிகழ்ச்சிகள், தீர்த்தச் சருக்கம், கர்ணபர்வம், புராணங்கள் எனப் பல் நூல்கள் அமைந்தன. நாட்டுப்புற இலக்கிய வடிவங்களிலும், நாடக வடிவங்களிலும் பல நூல்கள் தனி நிகழ்ச்சிகளின் அடிப்படையில் மலர்ந்தன அருச்சுனன் தபசு, அர்ச்சுனன் வில் வளைப்பு, பவளக்கொடி, அல்லி அரசாணி மாலை, கிருஷ்ணன் தூது, இராஜ சூயம், அரக்குமாளிகை, பெரிய எழுத்து கர்ண மோட்சம், எனப்பலப்பல பாடல்கள் கதைப் பாடல்களாகவும் நாடகங்களாகவும் தோன்றின. சாந்தாதி அசுவ மகம் என்னும் இக்காவியமும் அந்த வகையில் தோன்றிய நூலே ஆகும் பேரிலக்கியம் ஒன்றின் நிகழ்ச்சி ஒன்றை விதந்து விளக்கமாகப் பாடி நிறைவடைவதே இதன் நோக்கம் அந்த அடிப்படையில் தருமர் செய்த அசுவ மேத யாகத்தை விரிவாக 22 சருக்கங்களில் 4104 பாடல்களில் வருணித்து மகிழ்கிறது இந்நூல்.

சாந்தாதி அசுவமகம்

அசுவம், அஸ்வ என்பன குதிரையைக் குறிக்கும் வட சொல்லாகும். மகம் என்பது பெரிய வேள்வியைக் குறிக்கும். குதிரையைக் கொண்டு செய்யப் பெறும் வேள்வி, பரிவேள்வி அசுவமேதம், அசுவயாகம், அசுவமகம் எனப் பெறும் தம்மிடமும் தம் நாட்டிடத்தும் உள்ள குற்றங்கள் குறைகள் நீங்குதற் பொருட்டுச் செய்யப்பெறும் வேள்விகளைச் சாந்தி ஹோமம், சாந்தியாகம் என்பர் அந்த வகையில் மகாபாரதப் போருக்குப் பின் பல்வேறு பழிகளால் கவலை கொண்டிருந்த தருமர் தம் பழியெல்லாம் நீங்கவும நாடு அமைதி பெறவும் செய்த பரிவேள்வியைக் குறிப்பதே சாந்தாதி அசுவமகம என்பதாகும.

பாரதத் திருநாடு பல்வேறு பரிவேள்விகளைக் கண்டதாகும் பல்வேறு நூல்களும் பரிவேள்வியின் தன்மைகளையும் பயன்களையும் சுட்டுகின்றன ஆதிகாவியமாகிய இராமாயணத்திலும் இப் பரிவேள்வி விதந்து பேசப்படுகிறது பரி வேள்விதான் இராமாயணம் இலக்கிய வடிவம் கொண்டதற்கு ஏதுவாக அமைந்தது எனறும் கூறுவர் இராமபிரான்

நடத்திய பரிவேள்வியின் போது, வேள்விக் குதிரையை அடக்கி நிறுத்திய லவ குசர்களுடன் அவர்கள் தந்தையாகிய இராமபிரானே போரிட்ட வரலாற்றை அவ்வேள்வி காட்டுகிறது.

பரிவேள்வி என்பது நிறை குணம் கொண்ட வெண் குதிரையை மந்திரம் ஓதி அழகுபடுத்தி யாக சாலையைச் சுற்றி நாட்டின் பல பாகங்கட்கும் சென்று வருமாறு அனுப்பி வைப்பர் அக்குதிரை தன்னிச்சையாகப் பல இடங்களுக்கும் செல்லும். அது செல்கின்ற நாடுகளில் அதற்கு வரவேற்பு வழங்குவார்கள் . வரவேற்போர் அதை விடுத்த மன்னரின் ஆட்சியை ஏற்றுக் கொண்டு திறை செலுத்தி அடங்குபவாகளாகக் கருதப்படுவர் மாறாக அதனை எதிர்த்தாலோ, குதிரையைப் பிடித்துக் கட்டி வைத்தாலோ அதை விடுத்த மன்னரை ஏற்காது மாறுபடுகின்றனர் எனக் கருதப் பெற்று போர் நிகழும்

பரிவேள்விக்காக அனுப்பப்பெறும் குதிரையைப் பாதுகாக்கும் பொருட்டுச் சிறந்த வீரர் ஒருவரைத் தலைவராகக் கொண்டு ஒரு படையும் அக்குதிரை செல்லுமிடமெல்லாம் சென்று திரும்பும் எனவே, குதிரையைத் தடுப்பவர்களிடம் போரிட்டுக் குதிரையை மீட்டுத் தம் ஆதிக்கத்தை நிலைநாட்டி அப்படை குதிரையுடன் திரும்பும் எல்லா இடத்துக்கும் சென்று திரும்பிய குதிரையை இறுதியில் வேள்வியில் சொரிந்து விடுவர். இதுவே அசுவமகத்தின் முடிவு. குற்றங்குறைகளைப் போக்கிக் கொள்வதற்காகச் செய்யப்பட்ட அசுவமகத்தை மன்னர்கள் தம் ஆதிக்கத்தை வெளிப்படுத்தவே பெரும்பாலும் பயன்படுத்திக் கொண்டனர் எனலாம்.

இராமாயணம், மகாபாரதம் போன்ற காவியங்களில் பேசப்பெறும் அசுவ மகத்தைப் போலவே பாரத்தின் பல மன்னர்களும் பல்வேறு காலங்களில் இதனைச் செய்திருக்கின்றனர் காசியில் கங்கைக் கரையில் பத்து அசுவமகங்கள் நடந்ததாக ஒரு துறைக்குப் பெயர் அமைந்திருக்கிறது அது ' தசு அசுவமேத காட் ' எனப் பெறும் அங்கே நீராடினால் பத்துப் பரிவேள்வி நடத்திய புண்ணியம் கிடைக்கும் என்பது பாரத மக்களின் நம்பிக்கை இந் நூலில் பேசப்பெறும் சாந்தாதி அசுவமகம் மகாபாரதத்தில் இடம்பெற்றபரி வேள்வியாகும் மகாபாரதப்போருக்குப் பின் சுற்றத்தாரையும், நண்பர், ஆசிரியர் எனப் பலரையும் இழந்த சூழலில்

அமைதியற்ற நிலையில் துவண்டிருந்த தருமரைத் தேற்றி அமைதி பெறுவதற்காக, நாடு, நிலைபெறுவதற்காகப் பரிவேள்வி செய்யுமாறு கண்ணபிரான் கூறுகிறார் அவர்தம் ஆணையை யேற்றுத் தருமர் செய்த பரிவேள்வியை விரிவாகக் கூறுவதே சாந்தாதி அசுவமகம்

வேள்விக் குதிரையுடன் வில்வீரன் விசயன் தலைமையில் ஒருபடை சென்று வருகிறது அப்போது அப்படை எதிர்கொண்டு வெற்றி பெற்ற நிகழ்ச்சிகளை விரிவாகக் கூறுவதே இதன் தன்மையாகும்.

வியாசரும் வில்லியும்

மகாபாரதத்தை இயற்றிய வியாச முனிவர் தம் நூலுள் இப்பரி வேள்வி குறித்தும் பாடியிருக்கிறார். பதினெட்டுப் பருவங்கள் கொண்ட மகாபாரதத்துள் சாந்தாதி அசுவமகம் எனும் இந்நிகழ்ச்சி அசுவமேத பருவம் என்ற தனிப் பிரிவாகவே பேசப்பட்டுள்ளது. என்றாலும், விரிவாகப் பேசப்படவில்லை. வடமொழி நூலை அடி ஒட்டிப் பாடிய வில்லி புத்தூரார் இப்பகுதியைப் பாட வில்லை. ஆயின், சங்க காலம் முதலாகவே பாரதக் கதை தமிழகமெங்கும் வழங்கியிருக்கிறது பல்வேறு காலங்களில் தோன்றிய புலவர் பெருமக்கள் இக்கதையைப் போற்றிப் பாடியிருக்கின்றனர். அவர்களுள் சங்க இலக்கியங்களுக்குக் கடவுள் வாழ்த்து பாடிய பாரதம் பாடிய பெருந்தேவனார் முதலாவதாக எண்ணத்தக்கவர் ஆவர். பாரத வெண்பா என்றொரு நூல் பாரதக் கதையை முழுதும் வெண்பா யாப்பினால் அமைந்ததாகக் கூறுவர். பல்லவர் காலத்தைச் சார்ந்த அந்நூலும் நமக்கு முழுமையாகக் கிடைக்கவில்லை. திருவாலங்காட்டுச் செப்பேடு அரும்பாக்கத்து அருணிலை விசாகன் பாடிய பாரத நூல் ஒன்றைக் குறிக்கிறது. அதுவும் இன்று கிடைக்கவில்லை. இப்படி அழிந்து போன பாரத நூல்கள் போலவே நமக்குச் சாந்தாதி அசுவமகம் பற்றிய விரிவான செய்திகளும் அழிந்து விட்டன எனலாம் வில்லி புத்தூர் ஆழ்வார் பாடாது விட்டமையால் 17 ஆம் நூற்றாண்டு வரை நமக்கு இப்பகுதி தெளிவில்லாமலே இருந்தது எனலாம். பின்னர் 18 ஆம் நூற்றாண்டில் தோன்றிய நல்லாப்பின்னை பாரதமும் அட்டாவதானம் அரங்கநாத கவிராயர் பாரதமும் சாந்தாதி அசுவமகம் பற்றிக் கூறுகின்றன. அந்த வகையில் ஏறத்தாழ அதே கால கட்டத்தைச் சார்ந்த அண்ணாவியாரே

சாந்தாதி அசுவமகத்தை விரிவாகத் தந்துள்ளார் எனலாம் வில்லிபுத்தூராரை அடியொற்றிப் பாடுவதாகக் குறிப்பிடும் அண்ணாவியார் பிற கவிஞர்களைக் குறிப்பிடவில்லை என்பதும் ஈண்டு நினைத்தற்குரியது.

நூற்பெயர்

இந் நூலின் ஏட்டுச் சுவடியிலும், கையெழுத்துக் காகிதச் சுவடியிலும் இந்நூலின் பெயராகக் காணப்படுவது சாந்தாதி அசுவமகம் என்பதே படி ஏடுகளில் சாந்தாதி யசுவமேதயாகம் எனவும் காணப்படுகிறது. நமக்குக் கிடைத்த 4வது படியாக விளங்கும் ஏட்டுச் சுவடியின் முற்குறிப்பில் இவ்வாறே காணப்படுகிறது . என்றாலும் நூலாசிரியர் என்ன பெயரிட்டிருப்பார் என்பதை அகச் சான்றுகளாக அவர் தம் கவிதைகளிலேயே காணலாம் காப்புப் பாட்டில்,

' சீமான் நீள் உபையநிதி அதிபதியும் திறையளக்கச் செகத்தை ஆண்ட கோமான் நேர் முரசுயர்த்தோன் **அசுவமகம்** தனை விரும்பிக் கூறுவோர்க்கே. ' அசுவமகம் - முரசுயர்த்தோன் - தருமர் அசுவமகம் என்றும்

' அமிர்த மதுரகவி செயிது முகம்மதுமன்
அருள்செய் தனன்முரச கேதனன்
கமழு மதிகபுகழ் திசைகள் செறுமி வெளி
கவியும மகமசுவ காவியம் ' - 1·8

எனும் பாட்டில் **மகமசுவ காவியம்** என்றும்,

திண்மையாந் திருமால் உரை செப்பிய படியே
வண்மையான சாந்தாதி யச்சுவமக முடித்தால்
உண்மையாய்க் கதிதரும் மனத்துன்பமும் வற்றும் - 4 34

எனும் பாட்டில் சாந்தாதி யசுவமகம் என்றும் குறித்துள்ளார். எனவே நூலாசிரியர் இந்நூலைச் சாந்தாதி அசுவமகம் என்றே பெயரிட்டமை புலப்படும்.

பாரதத்தின் ஒரு பருவத்தை, ஒரு கூற்றை மட்டுமே எடுத்துக்கொண்டு நான்காயிரத்திற்கும் மேற்பட்ட பாடல்களால் விரிவாக எழுதமுடியும் என்பதை இந்நூல் காட்டியிருக்கிறது. அந்த வகையில், மிக அதிகமான பாடல்களால் யுத்த காண்டத்தைப் பாடிய கம்பரைப் போன்று வருணனைத் திறத்தால் நம் அண்ணாவியாரும் சிறந்து விளங்குதல் காணலாம்.

பதிப்பு முறை

சுவடியிலுள்ள கதையை, வரலாற்றை அதன் தன்மை மாறாமல் நூலாசிரியரின் மொழியிலேயே புதுப்பித்து வெளியிடுவது தான் பதிப்பு அறமாகக் கருதப்பெறும். இச்சுவடிப்பதிப்பு நூலாசிரியரின் மொழி அமைப்பிலும் அவர் கண்ட யாப்பு வடிவம் சிதையாமலும் உள்ளது உள்ளவாறே பதித்து வெளியிடப் பெற்றது. என்றாலும் இன்றைய நடைமுறைத் தமிழை மனங்கொண்டு பொருள்மாறாமல் தொடர்களை, சொற்களை எளிமையாகப்பிரித்து அச்சிட்டு படித்து மகிழ்வதற்குத் துணை செய்திருக்கிறோம். இச்சொற்பிரிப்பின் நோக்கம் அதிகம் படிக்காதவர்களும் இந்நூலைப் படித்து மகிழ வேண்டும் என்பதையும் சொற்பிரிப்பு போலவே மொழிச்சிதைவுகள், கைபிசகால் ஏடு எழுதியோரால் ஏற்படுத்தப்பெற்ற சொற்பிழைகள் ஒலிப்பிழைகள் போன்றன களையப்பெற்றன. இது நூலாசிரியர்க்கு இழுக்காகாது. மாறாக உள்ளது உள்ளபடியே புதுப்பித்து வெளியிட்டால் நூலாசிரியர் தமிழ் நடையிலும் தமிழ் ஆளுமையிலும் ஐயம் ஏற்பட்டுவிடும். இத்துணிவிலேயே பாடல்களில் காணப்படும் பிழைகள் களையப் பெற்றன என்ற குறிப்பை உங்கள் முன் அறிமுகமாக்கி நிற்கிறேன். சந்தம், யாப்பு; நடை ஆகியவற்றில் எவ்வித மாற்றத்தையும் நாங்கள் மேற்கொள்ளவில்லை.

ஏட்டில் காணப்பெறும் முதற்பாட்டு,

பூமாதுவுரம் பொருந்துங் கலை மாது நாவிலுறும் பொற்புவீர
மாமாது புய முரையும் நினைத்த தெல்லாம் கைகூடு மகிமை யோங்கும்
சீமானீ முடைய நிதியதிபதியுங் திறையளக்கச் செகத்தையாண்ட
கோமானோர் முரசுயத் தோன் அசுபமகந்தனை விரும்பிக் கூறுவோற்கே.

என்று அடிவரையின்றித் தொடர்ந்து எழுதப்பட்டுள்ளது. இதனை, அச்சு வடிவில் பின்வருமாறு மாற்றியுள்ளோம்.

பூமாதும் உரம் பொருந்தும்; கலைமாதும்
நாவிலுரும்; பொற்பு வீர
மாமாதும் புய முறையும்; நினைத்த தெல்லாம்
கைகூடும்; மகிமை ஓங்கும்
சீமானீள் உபயநிதி யதிபதியும்
திறையளக்கச் செகத்தை ஆண்ட
கோமான் ஏர் முரசுயர்த்தோன் அசுவமகம்
தனைவிரும்பிக் கூறு வோர்க்கே

இதில், பூமாதுவுரம் என்பது பூமாதும் உரம் எனவும் பொருந்துங் என்பது பொருந்தும் எனவும், கை கூடு மகிமை என்பது கை கூடும் மகிமை எனப்பிரிந்தும் சீமானீ ழுபையநிதி என்பது சீமானீள் உபயநிதி என எழுத்து ஒலிமாற்றம் செய்தும், கோமானோர் என்பது கோமான் ஏர் எனப்பிரிந்தும், கூறுவோற்கே என்பது கூறுவோர்க்கே எனப் பன்மை பொருள் தந்தும் மாற்றப்பட்டுள்ளது. இது போன்றே பொருள் பொருத்தமுடைய மாற்றங்கள் மட்டுமே இப்பதிப்பில் மேற்கொள்ளப் பட்டுள்ளன. அடைப்புக் குறிக்குள் தரப்பெற்ற விளக்கங்கள், யாப்பு,சந்திப்பெயர்கள் ஏட்டில் காணப்பெறாதன. ஏட்டில் யாப்பு மாறும் செய்யுளகளுக்கு வேறு என்ற குறிப்பு மட்டுமே கொடுக்கப்பெற்றுள்ளன. விளக்கத் தெளிவு கருதியே அடைப்புக் குறிக்குள் அறுசீர் ஆசிரியவிருத்தம், கலிதுறை, கலி விருத்தம் எனப்பெயர் சுட்டப் பட்டுள்ளன. சிலவற்றுக்கு, தனனா தனனத் தனனத் தனனா எனச் சந்தக்குறிப்பு சேர்க்கப்பட்டது. மேலும் கவிகளில் விளக்கமும் பொருட்செறிவும் கருதி நிறுத்தக் குறியீடுகள் சேர்க்கப் பெற்றன. செய்யுள் எண்களும், சருக்க எண்ணிக்கைகளும் ஏட்டிலே கண்ட வண்ணமே அச்சிடப்பெற்றன.

ஏட்டில் பல்வேறு வகைப்பட்ட எழுத்துப் பிழைகள் ஒலிப்பிழைகள் காணப்படுகின்றன. அவற்றைப் பொருள் பொருத்தமும் இலக்கிய செம்மையும் தரமும் கருதிச் செப்பம் செய்தே அச்சிட்டுள்ளோம். இது தவிர்க்கமுடியாத தேவையான மாற்றமாகும்.

வேழ்வி என்பது வேள்வி எனவும், சுற்றப்படித்து என்பது சுத்தப்படுத்தி எனவும், மேழலக்கணம் என்பது மேஷ லக்கணம் எனவும், மாற்றப் பெற்றன இத்தகு சிறு மாற்றங்களே நூல் முழுவதும் மேற்கொள்ளப்பட்டன. இவ்வாறு மாற்றம் செய்த போது யாப்பு வடிவமோ சந்த குழிப்போ மாறாமல் கவனமுடன் கண்காணிக்கப்பெற்றது. எனவே, நூலாசிரியரின் கருத்துக்களையோ யாப்பு வடிவங்களையோ மாற்றாமல் முற்றிலுமாக சுவடிப்பதிப்பாகவே இந்நூல் வெளிவருகிறது என்பதை மகிழ்வுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

நூற் சிறப்பு

பாரதக் கதையை இசுலாமியப் புலவர் ஒருவர் விளக்கமாகப் பாடி இருக்கிறார் என்பதே இக்காப்பியத்திற்குச் சிறப்பான செய்திதான். இந் நூல் முழுமையாக இப்போதுதான் முதன்முறையாக வெளி வருகின்றது என்பது இரண்டாவது சிறப்புச் செய்தியாகும்.

இப்போது இந் நூல் மூலமும் குறிப்புரையுமாக மட்டுமே வெளி வருகின்றது. காலம், இடம், நல்கைப் பொருளை ஒட்டி மூலத்தை மட்டுமாவது வெளியிட்டு விடுவோம் என்ற வேட்கையில் இது வெளியிட்ப்படுகிறது. இந் நூல் மேலும் ஆய்வு செய்யப் பெற்று பொழிப்புரை, விளக்கவுரை பல்வேறு வகைக்பட்ட அகராதிகள் அட்டவணைகளுடன் விரிவாக வெளியிடப் பெற வேண்டும்.அம்முயற்சி இரண்டாங்கட்டமாக நடைபெற வேண்டிய பதிப்புப் பணியாகும். அவ்வாறு வெளிவந்த பின்பே ஆய்வு மாணவர்களும் பிறரும் மிகு பயன் பெற முடியும். அந்நூல் விரைவில் வருவதாக.

ஏற்கெனவே சாந்தாதி அசுவமகம் என்ற பெயரில் டாக்டர். உ.வே சாமிநாதையர் நூல் நிலைய வெளியீடாக ஒரு நூல் வந்திருக்கிறது. அது செய்யது முகம்மது அண்ணாவியாரின் ஏட்டுச் சுவடியினின்று வெளியிடப்பெற்றதாகும் 1989 ஆம் ஆண்டு சுதர்மத்துசன் போர்ச்சருக்கத்தில் 197ம் பாடலுடன் குறைச் சுவடியாகவே அது பதிப்பிக்கப் பெற்று வெளியிடப்பெற்றது மொத்தம் 1186 பாடல்களே அந்நூலில் இடம் பெற்றுள்ளன. என்றாலும் வெளியிட்ட வரை நல்ல முறையில் விரிவான குறிப்புரை , விளக்கம், செய்யுள் முதற்குறிப்பகராதி,

அபிதான சூசிகையகராதி, அரும்பதவகராதி முதலியன, சில அருந்தொடர்கள் எனப் பலவகை ஆய்வுக் குறிப்புகள் அடங்கிய நிலையில் வாசகர்க்குத் துணை செய்யும் வகையில் அந்நூல் காணப்படுகிறது. அந்நூலுள் காணப்பெறும் பாடல்கள் அனைத்தும் சிற்சில பாட வேறுபாடுகளுடன் பெரும்பாலும் இம் முழுச் சுவடியை ஒத்த நிலையில் காணப்படுதலின் பாடவேறுபாட்டுக் குறிப்பை இப்பதிப்பில் சேர்க்கவில்லை.

நூலாசிரியர், அருமையும் தரமும் வாய்ந்த காப்பியங்கள் தமிழ் மொழியில் எவ்வாறு அமைந்தனவோ அதே நிலையில் தம் காவியத்தையும் தமிழ்மணம் கமழும் விருத்தப்பாக்களால் இந்நூலைச் செய்து வளம் கூட்டியுள்ளார்.

அவர் எடுத்தாண்ட உவமைகளும் உருவகங்களும் எளிதில் புரிந்து கொள்ளும் நிலையின. இதன் ஆற்றொழுக்கான இலக்கியச் செறிவு இது ஒரு முதல் நூல் போன்ற சிறப்பைக் காட்டும் சீவக சிந்தாமணி, பெரியபுராணம், கம்பராமாயணம் போன்ற காப்பியங்களில் காணப்பெறும் இலக்கிய மரபுகளை முற்றிலும் அடியொற்றிய கவிகளை இந்நூலுள் காணலாம்

தடமெலாம் தரளக்கூட்டம் சலமெலாம் பதுமக்கூட்டம்
மடலெலாம் எகினக் கூட்டம் மடுவெலாம் பணிலக் கூட்டம்
கடமெலாம் மரவத்தோடு காழகிற் சந்தக் கூட்டம்
திடர்கள்போர் மலையின் கூட்டம் தேம்பொழிற் பக்கிக் கூட்டம்

காவெலாம் மலரின் கூட்டம் கனியெலாம் தேனின் கூட்டம்
பூவெலாம் மிஞிறின் கூட்டம் பொருப்பிபக் கோட்டின் கூட்டம்
மாவெலாம் குயிலின் கூட்டம் வரம்பெலாம் வாழைக் கூட்டம்
நாவெலாம் பாவின் கூட்டம் நாடெலாம் செல்வக் கூட்டம்

குருநாட்டின் வளத்தைக் காட்டும் இப்பாடல்கள் கம்பன் காட்டும் அயோத்தி வளத்தையும், சேக்கிழார் காட்டும் சோழ நாட்டு வளத்தையும் நமக்கு நினைவூட்டும் சிறப்பினவாம். நூலாசிரியர், அருமையும் தரமும்

வாய்ந்த காப்பியங்கள் தமிழ் மொழியில் எவ்வாறு அமைந்தனவோ அதே நிலையில் தம் காவியத்தையும் தமிழ்மணம் கமழும் விருத்தப்பாக்களால் இந்நூலைச் செய்து வளம் கூட்டியுள்ளார். காலச் சூழலுக்கேற்ப ஆங்காங்கே வடசொற்களைக் கலந்து பாடியிருப்பது இந்நூலாசிரியரின் வட மொழிப்புலமையைக் காட்டுவதாகும் சலம், பதுமம், பக்கி (பட்சி - பறவை), இபம், என வட சொற்களை இவ்விரண்டு கவிகளில் கூட நாம் காணலாம்.

காடெல்லாம் கழைக்கரும்பு காவெல்லாம் குழைக்கரும்பு
மாடெல்லாம் கருங்குவளை வயலெல்லாம் நெருங்குவளை
கோடெல்லாம் மட அன்னம் குளமெல்லாம் கடல் அன்ன
நாடெல்லாம் நீர் நாடு தனை ஒவ்வா நலமெல்லாம்
(பெரிய. நாட்டுச்சிறப்பு - 17)

வரம்பெலாம் முத்தம் தத்தும் மடையெலாம் பணிலம் மாநீர்க்
குரம்பெலாம் செம்பொன்மேதிக்குழி எலாம்கழுநீர்க்கொள்ளை
பரம்பெலாம் பவளம் சாலிப் பரப்பு எலாம் அன்னம் பாங்கர்க்
கரும்பெலாம் செந்தேன் சந்தக் காஎலாம் களிவண்டு ஈட்டம்
(கம்ப நாட்டுப்படலம் - 34)

இவ்வாறே போர்ச் செய்திகளைக் கூறுகின்ற இடங்களிலும் முந்தைய காப்பியங்களின் வருணனைகளை அடி யொற்றியே இந்நூலாசிரியரின் நடை அமைந்திருப்பதைக் காணலாம். இந்நூலின் பின்வரும் கவி,

அடட உனது வலமைசொல் வதைவிடு
அணு கெ னிடம்அனு சாளுவா
எடட சிலைகையில் விடட பகழியை
இதயமது பயமா கினால்
நடடா உயிர் கொடு வெனுமுன் னெயிறுறு
நறநறன விடுகோலை நீ
தடட வெனவறு கணைக ளுரமிசை
தழுவ விரைசொடும் ஏவினான் - அனுசாளுவன். 204.

இப்பாட்டு கம்பராமாயணத்தில் இந்திரசித்து அனுமன் வீர உரையினை ஒத்திருத்தல்காணலாம்

நில் அடா சிறிது நில் அடா உனை
நினைந்து வந்தேன் முனைக்கு நான்
வில் எடாமை நினது ஆண்மை பேசி உயி
ரோடு நின்று விளையாடினாய்
கல் அடா நெடு மரங்களோ வரு
கருத்தினேன் வலி கடப்பவோ
சொல் அடா என இயம்பினான் இகல்
அரக்கன் ஐயன் இவை சொல்லினான்

(கம்ப. யுத்த 2016)

இந் நூலாசிரியா தமிழ்மொழியுடன் உருது, இந்துஸ்தானி, அரபி போன்ற மொழிகளிலும் புலமை பெற்றவர் ஆதலின் வடமொழியின் சொல்லாட்சி தவிர்க்க முடியாத தாகிறது போலும். மேலும் இக்காப்பியத்தின் கதை நிகழ்விடம் வட பாரதமாகும். எனவே நிலத்துக்கேற்ற மொழியின் தாக்கம் இருக்கத்தானே வேண்டும்! என்றாலும் வடமொழிப் பெயர்களையும் சொற்களையும், இந்நூலாசிரியர் தமிழ் எழுத்துக்களாலும் உச்சரிப்புகளாலும் நிறைவு செய்துள்ளார் என்பதை ஆங்காங்கே காணலாம்.

வைசம்பாயன மாமுனி, முப்பிரதட்சிணம்வந்து, சனமே செயன், சிசுவதை , பசுவதை, குருத்துரோகம், சாலவே உபசாரம், மந்திரி, தந்திரி, பங்கயப் பதமே, ஆசீர்வதித்து, நராதிபன், அனந்தம், ச த் து ரு சங்காரம், பொறையன் தன் சரித்திரம், தூப தீப நைவேத்தியங்கள், வேத கோசங்கள், அருளெல்லாம் உருவான தயாபதி, சனனங் கதி சாருமோ, மந்திரிமார், பிரதானிகள், திக்கெலாம் விசயன், மணிகரணித்துறை, உததி, ககுபம், மசகம், நயனம், கஞ்சம், அசுவம், கன்கம், சயிலம், அ சு வ ம் , மகம், சாத்திரமீ, இரசதம், மர்க்கடம், ஆமலகம், கிஞ்சுகம், பயம், ரதம், நாரம், கரம், அனங்கன், குசேசயம், கேதனம், வனசம் எனத் தமிழ் எழுத்துக்களால் வடசொற்களைக் காட்டும் இவர், சில இடங்களில் வட எழுத்துகளையும் பயன்படுத்தியுள்ளார். ஸ்நான பானஞ் செய்யாதே, வஸ்திரங்கள் தோய்த்திடாதே நமஸ்தே, எழு ரிஷிகள், அதிகரிஷியோர்கள், கிருஷ்ணாசினம் (மான்தோல்) என்பன அருகிய வழக்காகவே காணப் பெறும். தமிழ் எழுத்துக்களையே பெரும்பாலும் பயன்படுத்தும் இந்நூலாசிரியர் கவனமாகவும் பொறுப்பாகவும் தமிழ்ப்படுத்தியுரைக்கும்

சூழல்களைக் காணும்போது ஏடு எழுதியோர் செய்த பிழைகளாலே இத்தகு ஷ, ஜ, ஸ, போன்ற எழுத்துகள் இடம் பெற்றிருக்கும் என எண்ணத் தோன்றுகிறது.

இந் நூலாசிரியரின் நல்ல தமிழ் வழக்குகளாகச் சிலவற்றை எடுத்துக்காட்டலாம்

தீமை உள்ளஞ் செயலினும் செய்திலாய்
வாய்மை யன்றி மறந்துமாயஞ் சொலாய்
காய்மை வஞ்சக முங்கனவிற் கொளாய்
தூய்மை நல்லற மூஞ்சுமை கொண்டுளாய்

எனத் தருமனைக் கண்ணன் தேற்றுகின்ற காட்சியைப் பாடுகின்றார்.

காலமூன்றும் உணர்ந்த கலைக்கடல்
வேலை வேத வியாசரைக் கண்டதே
ஞாலமுண்டவன் நன்கை வணங்கவே
சாலவே உப சாரம் இயம்பினான்.

எனக் கண்ணன் வியாசரை உபசரித்த காட்சியைக் காட்டுகிறார்

இங்கே தருமனை வாய்மையாளன் , தூய்மையாளன், தீமையிலான், வஞ்சகமிலான் எனக் குறிப்பதும், வியாச முனிவரைக் கலைக்கடல், வேத வியாசர், கால மூன்றும் உணர்ந்தோர் என்பதும் கண்ணனை - ஞாலம் உண்டவன் (ஞாலம் - உலகம் - மண்) என்பதும் பயின்று சுவைப்பதற்குரியனவாகும் இவ்வாறே வீமன், விசயன் எனத் தமிழ் எழுத்துக்களாற் புனைந்த சொற்களைக் கையாளுவதிலும் இந்நூலசிரியர் பெரு விருப்பர் எனத் தோன்றுகிறது. இத் தகு தமிழாக்கங்களில் முந்தைய கவிஞர்களை மதித்துப் போற்றுபவராகவும் இவர் திகழ்சிறார்.

இந் நூலாசிரியர் தம் வட்டாரச் சொற்கள், வழக்குச் சொற்கள் போன்ற அரிய சொற்களையும் நூல் முழுவதும் கையாண்டுள்ளார்.

சூடம் (பசு), முதை (காட்டை வெட்டிச் சுட்ட கொல்லை), தேசிகர் (வணிகர்), படினம் (பக்குவம்), காய்மை (பொறாமை), சதிர் (அரசவை),

மண்டிலம், (குதிரை), குத்திரம் (மலை), உத்தரி (குதிரை), பொங்கர் (மலை), ககனம் (படை), அரிதம் (திசை), விறுமை (பிரமை), ஈசு (மிக்சில்), குவ்வு (பூமி), தோணி (அம்பு), பரம் (கவசம்), அனுமானித்தல் (குதிரை கனைத்தல்), நிதானம் (படை), பந்தனை (மகள்), தத்து (கிரகவரிசை), வன்னியா (அந்தணா), வீகம் (மோதிரம்), சேதனம் (உயிர்), வாரம் (வில்), அதனம் (மந்தி), தரணி (சூரியன்), தாராதரம் (மேகம்), ஏணியதால் (வளைத்ததால்), அங்கிரி (கால்), பவழம் (கருப்பை), மொந்தி (உடல்), உறுவன் (முனிவன்), அயர்தி (மயக்கம்) இப்படிச் சில அரிய வழக்குகளையும் சொற்களையும் இந் நூலுள் காணலாம்

முன்னோர் மரபுகளையும் நூல்களையும் பின்பற்றும் இந்நூலாசிரியர், அவர்களின் சொற்களையும், தொடர்களையும், கருத்துக்களையும் தம் நூலுள் ஆங்காங்கே போற்றி இணைத்துப் பாராட்டியுள்ளார் தருமராசன் **திருவோலக்கக்** காட்சியைக் காட்டும் சூழலில்,

அருள்கொடு படை குடி கூழ்அமைச்சு நட்பு
அரண்வலி யுடையனாய் அவனி எங்கும் ஓர்
பெருமதிக் குடைநிழல் பெற்று வாழ்கவே -15.

என்று பாடுகின்றார். இது படைகுடி கூழமைச்சு நட்பரண் ஆறும் உடையான் அரசருள் ஏறு என்னும் குறளை (381) அடியொற்றியமைந்ததாகும். இவ்வாறே, சண்டிகை சாப நிவாரணச் சருக்கத்தில் வரும்,

தென்புலந் தெய்வம் விருந்து ஒக்கல் உன்னோடே சேர்ந்த
ஐவர்க்கும் உபகாரஞ் செலுத்தி வாழ்வாய்
இன்புவியைத் துறந்தார்க்கும் துவ்வா தார்க்கும்
இறந்தார்க்கும் துணையாக இருக்கலாகும்
நன்பதவி முத்தி மோட்சங்களுண்டு
நவில் இல்லறந் தனக்கொப்பாய் நலம் வேறில்லை.

எனும் பாட்டுள், திருக்குறளின் (42,43) சொல்லையும் கருத்தையும் அப்படியே எடுத்தாண்டுள்ளமை காணலாம்.

இவ்வாறே, கம்பராமாயணத்துக் காணப்பெறும் காப்புப் பாடலான,

அஞ்சிலே ஒன்று பெறறான் அஞ்சிலே ஒன்றைத் தாவி
அஞ்சிலே ஒன்று ஆறுஆக ஆர்உயிர் காக்க ஏகி
அஞ்சிலே ஒன்று பெற்ற அணங்கைக் கண்டு அயலார் ஊரில்
அஞ்சிலே ஒன்று வைத்தான் அவன் எம்மை அளித்துக் காப்பான்

என்னும் பாடலைப் போன்றே சாந்தாதி அசுவமகப் பாடல், ஒன்றும் காணப்படுகிறது

அனந்த ஞானி ஐயன் கருணாகரன்
அனந்தன் மீதில் அனந்தல் புரிந்தவன்
அனந்த லோகம் நிறைந்த பராபரன்
அனந்த நாமனை அஞ்சலி செய்குவாம்
(எமனாசுரன் போர்ச்சருக்கம் . 1)

இந் நூலாசிரியர் பயன்படுத்தும் உவமை முதலான அணிகள் பழகிய மொழியில் எவர்க்கும், எளிதில் புரியும் இயல்பினவாய்க் காணப்படுகின்றன

கருகுவான் சருகாய்க் கண் கலங்குவான்,
அருகுவான் மரையார் சலமாய்க் கடுப்
பருகுவான் கயல் போல் பதைத் தானரோ
(எமனாசுரன் 5)

தருமன் உள்ளமழிந்துபதைக்கின்ற சூழலைக் காய்ந்த சருகிலையைப் போல் கருகுவான் என்றும், அவன் உலகத்தோடு ஒட்டாதிருந்த தனிநிலையை மரையார் சலமாய் தாமரை இலைத் தண்ணீர் போல ஒட்டாதிருந்தான் என்றும், அவன் பதைத்த சூழலை, கடுப் பருகுவான் கயல் போல் (நஞ்சு உண்ட சுயல்மீன் போல் பதறித் துடித்தான்) பதைத்தான் என்றும் கூறுகிறார் அசுவமேத யாகம் செய்தால் எவ்விதப் பாவமும் கெடும் அது சூரியன் முன் பனி கெடுவது போல ஆகும் என்பதை,

துன்று மெப்பவ முஞ்சுடர் முன்பனி
யென்றி யம்பவும்' எய்தினான் மாமுனி. (எமனா. 13)

என்று அணியமைத்துப் பாடுகினறார் நம் அண்ணாவியார் இவ்வாறே, 'குற்றம் பார்த்திடிற் சுற்றமொன்றில்லை' (எமனா. 22) , குறும்பூழ் வன்தகர் குக்குடம் போர்கள்பால், அறும்புநீ கண்டு அயர்ந்து அஞ்சலாகுமோ (நீலத்துசன் 132) எறும்பு எறும்பியை (யானை) வெல்வதும் இல்லையோ

(நீலத்துசன். 132). முன்னர் அரக்கர் குலத்தை முடித்தவள் அன்ன சூர்ப்பணகையை ஒத்தாள் இவள் (நீலத்துசன். 150), சுசியைக் (நெருப்பு) கூளம் தொடர்வது போல, (நீலத்துசன். 156) தேசிகர் ஒத்தது எழில் நதி நீத்தம் (நாட்டுச் 8) வடம் (ஆல்) குரவரை மானும் (நாட்டுச் 27) புல்லைப் (புலி) பொருமோ பசு (எமனாசுரன். 59) ஈயோ கருடற்கு இணை என்பது (எமனாசுரன் . 60) குரைச்ச நாய்க்கு என்பு போல் (அனுசாளுவன். 138) புற்பனி கதிரைப் பொருதுமோ (அனுசாளுவன். 150) எனப் பலப்பல வடிவங்களில் சூழல்களில், உவமையும் பிற அணிகளும் இந்நூலுள் பயிலக் காணலாம் உவமை போன்ற அணிகளில் கூட முந்தையோர் பாடல்களையும் பாடற் கருத்துக்களையும் நம் அண்ணாவியார் தம் நூலுள் பரக்கப் பயன்படுத்தியுள்ளமையை நாம் காணலாம்.

சொல்லருஞ் சூற்பசும் பாம்பின் தோற்றம்போல்
மெல்லவே கருவிருந்து ஈன்று மேலலார்
செல்வமே போல் தலை நிறுவித் தேர்ந்த நூற்
கல்விசேர் மாந்தரின் இறைஞ்சிக் காய்த்தவே
(சிந்தாமணி. 1.53)

எனவரும் சிந்தாமணிப் பாடலைப் பின்வரும் சாந்தாதி அசுவமகப் பாடலில் நாம் காணலாம், உணரலாம்

முளையெனக் கிளைத்துத் தருவெனப் பணைத்து
முகடுற நிமிர்ந்து நிர்மூடர்
களைநிகர்த்து எழுந்த கதிர்முதிர்ந்து அறிஞர்
கல்விஞா னங்களிற் கனத்த
வளைவெனக் கவரி யெனவயப் புரவி
வாலெனப் பிடரிகுனி வாகி
விளைநிலத தடியிற் படிதரக் கடையர்
வெள்ளமுங் கோலினர் விரைந்தே (நாட்டு. 24)

இரண்டு பாடல்களிலும் கல்வியிலார் தலைநிமிர்ந்திருப்பதைப் போல பயிர்கள் நிமிர்ந்திருந்தன என்பதும் அவை கதிர் வைத்து மணிகள் முற்றிய நிலையில் கல்வியிற் சிறந்த கற்றோரின் பணிவைப் போல் வளைந்திருந்தன என்பதும் ஒருமித்த காட்சியாக அமைதல் காணலாம். இலக்கிய வழக்குடன் நாட்டு வழக்கையும் நாட்டுப்புற வழக்கையும் இணைத்தே இவை

பயன்படுத்தப் பெற்றுள்ளன. மொழியைக் கையாள்வதில் அண்ணாவியாரின் தனிச் சிறப்பாக இதனைக் கருத வேண்டும்

அண்ணாவியாரின் சமயப்பொறை வியப்புக்கும் பாராட்டுக்கும் உரிய நிலையில் காணப்படுகிறது ஒவ்வொரு சருக்கத்துக்கும் அவர் பாடியுள்ள கடவுள் வாழ்த்துப் பாடல்களும் நூலுள் ஆங்காங்கே வரும் வருணனைகளும் குறிப்புகளும் இதனை வலி செய்தல் காணலாம் எடுத்துக்கொண்ட கதை பாரதக் கதை, பாரதக் கதையின் மூலவோ் கண்ணன் எனவே கண்ணனை அவர் வாழ்த்திப்பாடுகின்ற பாடல்கள் ஆழ்வார் ஒருவர் பாடும் உருக்கத்துக்கு இணையானவை எனில் அது மிகையாகாது

சீராலே பெருகிவளர் ஒரு பொருளாய்ப்
பலவுருவாய்ச் சீவன் யாவாய்
பாராசை பல்லுலகாய்த் திரைவரைகால்
அந்தரந்தீ படைப்பு எல்லாமாய்
நேராக நிறைந்து படைத்து அளித்து அழிக்கும்
பரம்பரத்தை நிறம் ஈது என்ன
யாராலும் கூறரிய அழியாத
பெருவாழ்வை யாசிப் பாமே

என முதற் கடவுள் வாழ்த்திலும்,

உலகெங்கும் நிரந்தர மாய் உள்ளகம்
நிலைதங்கி நிறைந்த பராபரன் நல்
மலர் தங்கு மணங்கள தாய் நினையும்
பலர் சிந்தை அறிந்தபரன் துணையே (நீலத்துசன். 1)

எனவரும் கடவுள் வாழ்த்திலும் பரம்பொருளின் பொதுக் குணத்தை விதந்து பாடிய புலவர் பின்வரும் சருக்கங்களில் கண்ணன் துதியாகவே வெளிப்படையாகப் பாடி இருத்தல் காணலாம்

மலரிற் கமழ் வாச மெனப் பல்உயிர்
உலகங்க ள்அனைத்தும் நிறைந்து உணர்வீந்து
அலைவிற் றன்னிடத் திலடக் கவல்லோன்
நலமுற் றிடு நாமம் நிதம் புகல்வாம் - அனுசாளுவ சருக்கம்

இப்பாட்டில் திருமாலின் அந்தாயாமித் தத்துவம் விளக்கப்பட்டது.

முந்து நரசிங்கம் என வும்கனகன் அன்றையும்
முன்பெரிய கம்ப மதிலே
வந்துஉடல்பி ளந்த அரி வெங்கயம் நினைந்திடுமுன்
வன்திகிரி கொண்டுஉறு வன்மீன்
நந்திடஇ டந்த வன் அனந்த சயனன் கரியன்
நநதன் அரவிநத விழியான
இந்திரன் அயன் சிவன் இருஞ்சுடர் அடங்கலும்
இறைஞ்சிய பரன்ச ரணமே - சுதர்மத்துசன் -1

இப்பாட்டில் நரசிம்ம அவதாரம், கஜேந்திரனுக்கு அருளியது, அனந்த சயனம், கமலக்கண்ணனானது மூவராலும் தொழப்பெறும் நிலை ஆகியன பக்திப் பரவசத்துடன் சுட்டப் பெறுதல் காணலாம்.

கருதரிய பெரும்சலதிச் சலசவனப்
புதுமை சொல்லக் கடவர் யாரே?
அரவில் நடித்ததும் மருது சகடை உதைத்
ததும் சிலைபெண் ஆக்கி, கங்கை
விரவ அரன் முடிதரிக்க உதவுபதத்
தின்பெருமை விளாவப் பொன்னின
நிருதனைச் செற்று, அருமறையை வெளிக் கொணர்ந்த
பெரும் பொருளை நேசிப் போமே

(சயிந்தவ. 1)

இப்பாடலிலும் திருமாலின் அவதாரங்கள் அடுக்கப்பெற்று வாழ்த்தப் பெறுகின்றன. நிரல் நிறையில் அவதாரங்கள் பின்னிருந்து முன்னாகக் கூறப்பட்டுள்ளன திருமாலின் அவதாரங்களையும் லீலைகளையும் விதந்து போற்றும் வாழ்த்துப் பாடல்களும் புராணச் செய்திகளை இணைத்துப் பேசும் வாழ்த்துப் பாடல்களும் சில பலவாக இருத்தலை இந்நூலுள் காணலாம்

மிக்கதவம் புரிந்த பசு மாசுரற்கு
வேண்டு வரம் கொடுத்தவுடன் வெரிதிட்டோடும்
முக்கணனைப் புரந்தருள அதிக ரூப
மோகினிஆ னவனை அங்கிமூன்று கண்ணாள்
துர்க்கை ஐந்து கரன்ஆறு முகனும் மற்ற
சுரருடன் ஐமுகன் எதிர்ந்து தோல்வியாகி
மக்கிமெலி வுடன் ஓட வாணன் வாகு
மடியவிடும் நேமியனை வாழ்த்து வோமே.

(சமுத்திரச் சருக்கம். 1)

இது பசுமாசுரன் புராணத்தை நினைவூடடுவதாகும். திருவரங்கக் கலம்பத்தில் (39) இடம் பெறும் மோடி ஓட அங்கி வெப்புமங்கி ஓட, ஐங்கரன் மூடுகி ஓட முருகன் ஓட' என வரும் கவியை முற்றிலும் ஒத்த நிலையிலும் இது காணப்படுகிறது என்வே, 'வருணனையில் இலக்கிய மரபில், கவித்துவத்தில் பிற நூலாசிரியர்களை மதித்துப் போற்றுதல் போலவே கடவுள் வாழ்த்துப் பாடல்களிலும் இவர் முன்னோரைப் போற்றிப் பின்பற்றினார் எனலாம். இசுலாமியப் புலவர் பாடும் காப்பியத்திற்கு இவை கட்டாயம் அல்ல. எனினும் கதை நாயகனை ஒவ்வோரிடத்தும் நினைத்துப் போற்றுகின்ற இவர் தம் கதை ஒன்றிப்பும், பாத்திர ஒன்றிப்பும் நினைந்து நினைந்து பாராட்டுமாறு அமைந்துள்ளன என்றால் அது மிகையாகாது இனி, இந்நூலின் சருக்கங்களைச் சுருக்கமாகக் காண்போம்

சாந்தாந்தி அசுவமகக் கதைச் சுருக்கம்

1. நாட்டுச் சருக்கம்

எல்லா உலகங்களிலும் உளள அனைத்து நாடுகளிலும் குருநாடு மிகச் சிறப்புடையதாகும். நீர்வளத்தாலும் நிலவளத்தாலும் இணையற்ற அந்நாட்டில் ஐந்திணைச் செல்வங்களும் மலிந்து கிடந்தன. விவசாயம், கைத்தொழில்கள், கவின்கலைகள் ஆகிய அனைத்திலும் மேம்பட்டு விளங்கிய குருநாடு அனைத்து நாடுகளுக்கும் தலைமை வாய்ந்ததாக விளங்கியது

2. நகரச் சருக்கம்

குரு நாட்டின் தலைநகரம் அத்தினாபுரி. அந்நகரம் இந்திரனின் அமராவதியையும், குபேரனின் அளகாபுரியையும் , இராவணனின் இலங்கையையும் தன் வளத்தாலும் எழிலாலும் வென்று விளங்கியது அகழி, உயர்ந்த மதில்கள், மாடகூடங்கள், வானளாவியமாளிகைகள் , தோரண வாயில்கள் போன்ற எல்லாவற்றிலும் சிறப்புற்று அத்தினாபுரி பெருமையோடு விளங்கியது. நகர மக்கள், எழில், செல்வம், பண்பு, கல்வி ஆகியவற்றில் மிகச் சிறந்து விளங்கினர். தீமைகளே சற்றும் இல்லாத ஒரு சிறந்த தலை நகரமாக அவ்வூர் பொலிந்தது

3. தருமராசன் கீர்த்திச் சருக்கம்

அத்தினாபுரியைத் தலைநகராகக் கொண்டு குருநாட்டைப் பாண்டவர்களில் மூத்தவனாகிய தருமன் அரசாட்சி செய்து வந்தான் கருணை நிறைந்த அவனுக்குரிய மாலை குவளையும் கொடி முரசும் ஆகும் அறக்கடவுளின்மைந்தனாகிய அவன் போராற்றல் மிக்கவன்; வீமன், விசயன், நகுலன், சகதேவன் என்னும் ஒப்பற்ற இளையோர்களின் துணையை உடையவன்; காத்தற் கடவுளாகிய கண்ணபெருமானின் கடைக்கண் நோக்கிற்கு எப்போதுமே இலக்கானவன்; உலகத்து அரசர்கள் அனைவரும் பணிந்து திறை செலுத்தும்படி மூடி மன்னனாகச் சிறந்து வியங்கியவன்; படை, குடி, கூழ், அமைச்சு, நட்பு, அரண் ஆகிய எல்லாவற்றிலும் வலிமை வாய்ந்தவன், அ வன் செங்கோலாட்சியில் அறம் தழைத்ததால் வளம் பெருகியது

4. எமனாசுரன் போர்ச் சருக்கம்

பெருமைமிக்க தருமராசன் தன் நாட்டைச் சிறப்புடன் ஆண்டு வந்த போதிலும் அவன் உள்ளத்தைப் பெருங்கவலையொன்று வருத்திக் கொண்டிருந்தது மகாபாரதப்போர் பதினெட்டு நாள்களில் தன்படையால் அழிக்கப்பெற்ற பல்லாயிரக்கணக்கான உயிர்களை நினைந்து நினைந்து கழிவிரக்கம் கொண்டான். இம்மாபெரும் கொலைபாதகத்தால் தனக்கு எவ்வளவு பாவம் ஏற்படுமோ என அஞ்சினான். இத் தீவினைப்பயனை நீக்கிக்கொள்ள முடியுமோ என ஏங்கினான்.

தருமனின் கலக்கத்தை அறிந்த கண்ணன் பாரதப்பெரும்போர் இறைவனின் திருவுளப்படி நடைபெற்றது என்றும், அதில் தருமனுக்கு ஏதும் பொறுப்பில்லை என்றும் எவ்வளவோ விதமாகத் தேற்றியும் மன்னன் மனம் அமைதியடையவில்லை. எனவே தருமனின் மன அமைதிக்காக ஒரு அசுவமேத வேள்வி செய்தால் கொலைப்பாவம் முதலியன யாவும் முற்றிலும் நீங்கிவிடும் எனக் கூறினான். கண்ணபிரான் இவ்வாறு கூறிக் கொண்டிருக்கும் போதே அங்கு வியாச முனிவர் எழுந்தருளினார்.

வந்த முனிவரை இருவரும் முறைப்படி வரவேற்றனர் கண்ணபெருமான் தருமனின் துயரத்தையும், தான் ஒரு அசுவமேதம் செய்யுமாறு யோசனை கூறியதையும் தெரிவித்தார். அதனைக் கேட்ட வேதவியாசர் தருமனிடம், "அரசன் போரில் பகைவர்களைக் கொல்வதே முறை; உலக வழக்கமும் இதுவே; உனக்கு எந்தத் தீவினையும் நேராது; என்றாலும் புரவிவேள்வி இயற்றுதல் நல்லதே, புகழும் ஆம்" என்றார்.

இதனைக் கேட்ட தருமன் மனமகிழ்ச்சியடைந்து அவ்வேள்வியை எவ்வாறு செய்யவேண்டுமென்று கேட்டான். வியாசர், "அசுவமேதத்திற்கு ஒரு உயர்ந்த குதிரை வேண்டும். தக்க இலக்கணங்கள் நிரம்பிய அத்தகைய சிறந்த பரி கிடைப்பது அரிது '' என்றார் உடனே கண்ணபிரான் முனிவரைப் பார்த்து "தக்க குதிரை எங்கே உள்ளது என்பதைத் தாங்களே கூறவேண்டும் " என வேண்டினார்

"குரு நாட்டிற்கு வடக்கே பத்திரகிரி என்னும் நகரை ஆள்பவன் எமனாசுரன் என்னும் ஒரு பெருவீரன்" சுகலீலன் என்னும் பெயருடைய அவன் மைந்தனும் மாவீரனே; அவன் பெரும்படையை உடையவன், அவனிடம் புரவி வேள்விக்குரிய இலக்கணங்கள் முற்றிலும் நிறைந்துள்ள ஒரு குதிரை மிகப் பாதுகாப்புடன் பேணப்பட்டு வருகிறது. ஆறு மாதத்திற்கு ஒருமுறை தான் அப்புரவி வெளியே நீர் குடிப்பதற்காக வரும். அந்தக் குதிரை கிடைத்தால் பரிவேள்வி சிறப்பாக நிறைவேறும்; ஆனால் எப்படிக் கிடைக்கும்?' என்றார் வியாச முனிவர்

இதனைக் கேட்ட வீமன் தான் எப்படியும் அக்குதிரையைப் பற்றி வருவதாக வஞ்சினம் கூறினான். உடனே கண்ணபிரான் வீமனின் பேரனும் கடோர்க்கசனின் மகனுமாகிய மேகவண்ணனையும், கர்ணனின் மைந்தனாம் விடகீதனனையும் துணையாகச் சேர்ந்து, வெற்றியோடு வருமாறு ஆசி கூறி அனுப்பினார்.

மேகவண்ணன் தேரைச் செலுத்த, விடகீதனன் பின்னே நிற்க வீமன் பத்திரகிரியை நெருங்கினான். மூவரும் அவ்வூரை ஒட்டியிருந்த ஒரு

மலையின் உச்சியில் தங்கித் தக்க நேரத்திற்காகக் காத்திருந்தனர் நான்காவது நாள் குதிரை பெருத்த ஆடம்பரத்துடன் ஊர்வலமாக ஆற்றில் நீர் அருந்த வந்தது. மேகவண்ணன் வீமனின் அனுமதி பெற்று மந்திர வலிமையால் வான்வழிச் சென்று ஒரு பெரிய செயற்கை இருளைத் தோற்றுவித்து, கற்பனைக்கும் எட்டாத முழக்கங்களால் படைகளைத் திகைக்க வைத்துக் குதிரையைத் தூக்கிக் கொண்டு விட்டான் குதிரையைக் கைப்பற்றிய பிறகு செயற்கையிருள் அகன்று ஒளி பரவியது ஒரு பெரிய பாறையை எடுத்தெறிந்து குதிரைக்குக் காவலாக வந்தவர்கள் அனைவரையும் மேகவண்ணன் அழித்து விட்டு வீமனிடம் பரியை ஒப்புவித்தான். வீமன் மிகவும் உவகை கொண்டான்

ஒற்றரால் செய்தியறிந்த எமனாசுரன் மூன்றே மூன்று பேர் வந்து அதில் ஒருவனால் தன் குதிரை கைப்பற்றப்பட்டதை நினைந்து வியப்பெய்தினான். உடனேஅவர்கள் தங்கியிருந்த மலையை நோக்கிப் படையொடும் சென்றான் விடகீதனன் வீமனின் அனுமதி பெற்றுத் தனியாளாய் அப்படையை எதிர்த்தான். கடுமையான போர் நிகழ்ந்தது. எமனாசுரனின் அமைச்சனாகிய சுவேதன் மூர்ச்சித்து விழுந்தான். விடகீதனனுடன் போரிட்டு அவனால் இருமுறை கடுமையாகத் தாக்கப்பட்ட எமனாசுரன் மிக்க சினங்கொண்டு அவனை மூர்ச்சையுறச் செய்தான் இதனைக் கண்ட வீமன் கவலையோடும் சினத்தோடும் எமனாசுரனின் படைவீரர்களை அலைக்கழிக்கத் தொடங்கினான். அப்போது நினைவு தெளிந்த விடகீதனன் வீமனை அனுப்பிவிட்டுத் தனியே சமர்புரியத் தொடங்கினான் இதனால் பெருஞ்சினங் கொண்ட எமனாசுரன் விடகீதனனைப் பிரமாஸ்திரத்தால் வீழ்த்தி விட்டனன்.

இதனால் அளவு கடந்த கோபமுற்ற வீமன் எமனாசுரனின் படைகளை எல்லாம் கண்மண் தெரியாமல் அழிக்கத் தொடங்கினான் மனனன் மகனாகிய சுகலீலன் வீமனை எதிர்த்தான். வீமனும் சுகலீலனும் முதலில் கதைப் போரும் அடுத்து மற்போரும் இயற்றி இறுதியில் இருவருமே மூர்ச்சிதது விழுந்தனர்

இதற்கிடையில் மயக்கந்தெளிந்து எழுந்த விடகீதனன் மீண்டும் எமனாசுரனுடன் போரில் ஈடுபட்டான் விடகீதனனின் ஒரு கணை எமனாசுரனின் மார்பைத் துளைத்துச் சென்றது இதனைக் கண்ட அவன் படைவீரர்கள் அனைவரும் ஓடி விட்டனர். யாரும் உதவிக்கு இல்லாமல் குடல் சரிந்து துயரப்படும் எமனாசுரனுக்கு விடகீதனனே மனிதாபிமானத் தோடு முதலுதவி செய்து மூர்ச்சை தெளிவித்தான்

மயக்கந் தெளிநது எழுந்த மன்னன் விடகீதனன் தனக்குத் தக்க சமயத்தில் பகைமை பாராட்டாது செய்த உதவியால் மிகவும் உள்ளம் நெகிழ்ந்தான். பகைமையை முற்றும் மறந்து நட்புக் கொண்டான் தருமனுக்கு பெரும்படை தருவதுடன் தானே ஒருவருடம் குதிரையோடு உலகவலம் செய்து வேள்வியை முடித்துக் கொடுப்பதாகவும் ஒப்புக் கொண்டான். பிறகு இருவருமாக மயங்கிக் கிடந்த வீமனுக்கும், சுகலீலனுக்கும் சிகிச்சை செய்து அழைத்துக்கொண்டு மேகவண்ணனையும் சேர்த்துக் கொண்டு பத்திரகிரிக்குள் சென்றனர் அங்கு மகிழ்ச்சியாக ஐந்து நாள்கள் தங்கி இருந்தனர்.

5. அநுசாளுவன் போர்ச் சருக்கம்

ஐந்து நாள் கழிந்தபின் படைத்தலைவன் உக்ரதந்தனிடம் பத்திரகிரியின் பொறுப்பை ஒப்புவித்து விட்டு எமனாசுரன் தன் மனைவி மகன் சுகலீலன், அமைச்சன் சுவேதன், பெரும்படைகள் ஆகியவர்களுடனும் குதிரையோடும் வீமனுடன் அத்தினாபுரம் நோக்கிப் பயணப்பட்டான் ஐநூறு யோசனை கடந்து அத்தினாபுரிககு இரண்டு யோசனைத் தொலைவில் ஒரு சோலையை அடைந்தனர். தன்னுடன் வந்த அனைவரையும் அங்கு இருக்கச் செய்து விட்டு வீமன் மட்டும் தருமனிடத்தில் செய்தி அறிவிக்கத் தனியே சென்று நடைபெற்ற நிகழ்ச்சிகளைத் தெரிவித்தான்.

இதனால் மிக்க மகிழ்வுற்ற தருமன் விரைவில் கண்ணபெருமானை அழைத்துவருமாறு பணித்தான் உடனே தேரில் புறப்பட்டுத் துவாரகையை யடைந்து கணணனை அத்தினாபுரத்திற்கு அழைத்தான் கண்ணபிரானுடன் சாத்தகி, உத்துவாசாரி, அகுரூரன், பிரத்திமன், அனிருத்தன் ஆகியவர்களும்

புறப்பட்டனர் அவர்கள் விரைவாகப் பயணம் செய்து எமனாசுரனும் படைகளும் தங்கியுள்ள பாடியையடைந்தனர். கண்ணபிரான் வந்தடைந்த செய்தியறிந்த தருமனும் தன் தம்பியருடன் அவ்விடத்தை அடைந்தான். எல்லோரும் குதிரையைப் பார்த்து மிக மகிழ்ச்சியடைந்தனர். இதற்குள் பகற்பொழுது கழிந்துவிட்டதால் அனைவரும் அங்கேயே தங்கத் தீர்மானித்தனர். வேள்விப்பரியைச் சுற்றி அனைவரும் பாதுகாவலாக இருந்தனர்.

பாரதப் பெரும் போரில் மாய்ந்துவிட்ட சாளுவமன்னனின் மைந்தன் அநுசாளுவன் தன் தந்தையின் மரணத்திற்குப் பழிவாங்கக் காத்திருந்தான். தற்செயலாகக் கோட்டைக்கு வெளியே ஆற்றங்கரையில் பாண்டவர்கள் அனைவரும் இருத்தலைக் கண்டு மூன்று அக்ரோணி படைகளுடன் வந்தனன் ஆற்றின் தென்கரையில் தன் சேனையை நிறுத்தி விட்டு மாய வார்த்தையால் வேள்விப்பரியைக் கவர்ந்து தன் படைவீட்டில் சேர்த்தபிறகு காலையில் போருக்கு அறை கூவினான்

மிகக் கடுமையாகப் போர் நடந்தது. பல வீரர்களைத் தோற்கடித்த அநுசாளுவன் இறுதியில் விடீதனனிடம் சரணடைந்தான் அநுசாளுவனும் எமனாசுரனைப் போலவே தன் தளபதி ஒருவனிடம் நாட்டின் பொறுபபை ஒப்படைத்துவிட்டு ஓர் ஆண்டு அசுவமேதக் குதிரையின் பின் செல்லவும் முன்வந்தான். அசுவமேதக் குதிரையும் மன்னர்கள் அனைவரும் சேர்ந்து அத்தினாபுரியை வந்தடைந்தனர்.

6. வேள்வி ஆரம்பச் சருக்கம்

அத்தாணி மண்டபத்தில் கொலுவிருந்ததருமன் கண்ணபெருமானை நோக்கி அசுவமேதம் நடைபெறுவதற்கு ஆவன செய்யுமாறு வேண்ட, அவர் வேதவியாசரை மனதில் நினைத்தார். வியாச முனிவர் உடனே வந்தடைந்தார் வியாசர் வேள்விக்குத் தேவையானவை என்னென்ன என விவரமாக உரைத்தார் அவர் கூறிய செலவுத்தொகை தருமராலேயே செய்ய முடியுமா என்னும் ஐயத்தை விளைவித்தது.

இதனை உணர்ந்த வேதவியாசர் இமயமலையின் சாரலிலே முற்காலத்தில் மருத்து என்னும் மன்னன் செய்த வேள்வியில் அந்தணர்களுக்களித்த கொடையில் அவர்கள் எடுத்துச் செல்ல முடியாமல் விட்டுச் சென்ற பொருள்கள் எடுப்பாரின்றி ஏராளமாகக் கிடப்பதாகவும் தருமன் ஆள்களை அனுப்பி அவற்றை எடுத்து வரலாமென்றும் யோசனை கூறினார். கண்ணபிரானும் அதற்கு இணங்கவே தருமன் அருச்சுனனை ஐந்து அக்குரோணி படையுடன் இப்பொருள்களை வாரி வருமாறு அனுப்பினான்.

படையுடன் சென்ற அருச்சுனன் அந்த இடத்தையடைந்து இருதினங்கள் வாரிச் சேமித்துப் பெரும் பொருள்களுடன் தலைநகர் திரும்பினான்.

அடுத்து வேள்விக்குரிய ஆசானாகச் சவுமியர் அழைக்கப்பட்டார். அவரும் வேள்விக்குரிய சாதனங்கள் இன்னின்ன என ஓர் ஏட்டில் எழுதிக் கொடுத்தார். அவை முன்பு வியாச முனிவர் கூறியனவே யாதலின் எல்லாம் சித்தமாக உள்ளது என்றனர்

அடுத்து வேள்விச் சாலை கட்டஉரியசெயல்கள் தொடங்கப் பெற்றன. பொன், நவமணிகளாலான அணிகலன்களாலும் பொன்னாடைகளாலும் அலங்கரிக்கப்பெற்ற பல எருதுகளைக் கொண்டு பொன்னேர் பூட்டப்பெற்றது. நல்ல நேரத்தில் தருமன் கைகளால் ஒரு தேங்காய் வாங்கி உடைத்துப் பிள்ளையார் பூசையுடன் உழவு தொடங்கப்பெற்றது வேள்விக்குரிய நிலம் சமப்படுத்தப்பட்ட பிறகு புண்ணியாவாசனம் முதலிய தொடக்கச் சடங்குகள் முறையாக நிறைவேறின.

கும்பங்களை வைத்துப் பூசித்தற்குரிய மேடைகள், வேள்விக்குரிய குண்டங்கள் , யூபம் எனப்படும் வேள்வித்தூண் ஆகிய அனைத்தும் முறைப்படி அமைத்து வணங்கப்பட்டன வேள்வி செய்வதற்கு இருபத்தோராயிரம் கற்றுயர்ந்த அந்தணர்களும் , சிறந்த முனிவர் எழுவரும், பற்பல அரசர் சிற்றரசர்களும் வேள்விச்சாலையை அடைந்தனர்

(அநேகமாக) ஒரு ஐப்பசி மாதம் பௌர்ணமி அன்று, ஏழு கோள்கள் ஆட்சியோ, உச்சமோ உறவோ பெற்று வலிமையுடன் விளங்கும் நல்ல முகூர்த்த தினத்தில் தருமராசனும் திரௌபதியும் கங்கையாற்றில் புனிதநீராடி, மரஉரியும் மான்தோலும் உடையாக அணிந்து கொண்டு, வேள்விச்சாலையில் அத்திமரப்பலகையின் மேல் அமர்ந்து வேள்விக்குதிரையை முறைப்படி பூசித்தனர் வில்வ மரத்தாலான வேள்வித் தூணுக்கும் முறையான வழிபாடுகள் நிறைவேற்றிய பிறகு தருப்பைப்புல்லைத் திரித்துப் பின்னிய கயிற்றால் வேள்விக் குதிரை அத்தூணில் கட்டப்பட்டது.

மறையிற் கூறியவாறு புரவியைத் திக்குவிசயத்திற்கு அனுப்பும்முன் செய்ய வேண்டிய சடங்குகளையெல்லாம் முடித்தபின் கண்ணபிரானின் கட்டளைப்படி குதிரையின் பின் படையுடன் செல்ல அருச்சுனன் நியமிக்கப்பெற்றான். விடகீதனன், மேகவண்ணன், எமனாசுரன், சுகலீலன், சுவேதன், அநுசாளுவன், சாத்தகி, உத்துவாசாரி, அக்குரூரன், பிரத்திமன் ஆகிய தலைவர்களும் முப்பத்திரண்டு அக்குரோணிப்படையுடன் வேள்விப்பரியின் பின்னே புறப்பட்டனர்.

அருச்சுனன் தீக்கடவுளைத் தியானிக்க அவனுடைய வெள்ளைக் குதிரைகள் பூட்டப்பெற்ற வச்சிரத்தேர் அநுமக்கொடியுடன் தோன்றியது. அத்தேரில் காண்டீபம் என்னும் தெய்வீக வில், அம்புகளை எடுக்க எடுக்கக் குறையாத அம்பறாத்தூணி, பகைவர்தம் படைக்கலங்களைத் தடுக்கும் வச்சிர கம்பம் ஆகியன இருந்தன விசயன் இந்திரனை நினைத்த உடனே வைரத்தாலான கவச குண்டலங்கள், வச்சிரக்கிரீடம், முழங்குதற்குரிய சங்கு ஆகியன வந்தடைந்தன.

அத்தினாபுரத்தில் காவற் பொறுப்பை வீமன் ஏற்றுக் கொண்டான். அசுவமேதயாகக் குதிரையின் முகபடாத்தில் 'இது அத்தினாபுர மன்னன் தருமன் அசுவமேத யாகத்திற்காக விடப்பட்டுள்ள குதிரையாகும். இதனைப் பாதுகாக்க வருபவன் அருச்சுனனாவான். தருமனின் மேலாண்மையை ஏற்றுக் கொள்ள மறுப்பவர் இக்குதிரையைப் பிடித்து விசயனோடு போர் புரியலாம் அல்லது பார்த்தனிடம் காணிக்கை செலுத்திக் குதிரையை வழிபட்டு அமைதியாக வாழலாம், என எழுதப்பட்டது

தருமரும், திரௌபதியும் தூணிலிருந்து அவிழ்த்துவிட வேள்விக்குதிரை பெரும்படையுடனும், நிறைந்த அந்தணர் குழுவுடனும் வெகு ஆடம்பரமாகப் புறப்பட்டது கண்ணபிரான் அனைவருடனும் விடைபெற்றுக்கொண்டு துவாரகையை யடைந்தார். அத்தினாபுரத்தில் வியாச முனிவரின் மேற்பார்வையில் வீமனின் நிர்வாகத்தில் தருமன் சவுமியரை வேள்வியாசானாகக் கொண்டு வேள்விச்சடங்குகளைச் சற்றும் குறைவின்றி நிறைவேற்றி வந்தான்.

வேள்விக்கூடத்திலிருந்து புறப்பட்ட குதிரை முதலில் மேற்குத் திசையில் செல்லத் தொடங்கியது. இவ்வாறு இருபத்து மூன்று நாள் சென்ற பிறகு ஒரு பெரிய நகரம் காட்சியளித்தது. அருச்சுனன் எமனாசுரனை அது எந்த ஊர் எனக் கேட்க, அவன் அவ்வூர் மயிடாபுரி என்றும், அதன் அரசன் பெயர் நீலத்துசன் என்றும், அவன் மகன் பெயர் தாம்பிரத்துசன் என்றும், அக்கினிக் கடவுள் அவனுக்கு மாப்பிள்ளை என்றும், இவனுடன் போர் ஏற்பட்டால் வெல்வது பெரும் கடினம் என்றும் கூறினான்.

7. நீலத்துசன் போர்ச் சருக்கம்

குதிரை இருபத்து நான்காவது நாள் மயிடாபதி எல்லைக்குள் நுழைந்தது. அன்று நீலத்துசனின் மகன் தாம்பிரத்துசன் தன் மனைவி மதனமஞ்சரியுடன் புனல்விளையாட்டிற்காக நர்மதை நதிக்கு வந்திருந்தான். வந்தவன் தான் அதுவரை ஒரு பரிவேள்விக் குதிரையைப் பார்த்ததில்லை யென்னும் ஆர்வத்தால், கூட இருந்த மகளிர்களை அரண்மனைக்குத் திருப்பி அனுப்பி விட்டுக் குதிரையைக் கட்டிவிட்டான். செய்தியறிந்த அருச்சுனன் போர் தொடுத்தான்.

கடுமையான போர் நிகழ்ந்தது. முதலில் அருச்சுனனின் வீரர்கள் பலர் தோற்றனர். பின் விடகீதனனால் தாம்பிரத்துசன் சற்றுச் சோர்வடைந்தான். அச்சமயத்தில் நீலத்துசன் பெரும்படையுடன் வந்து தன் மகனுடன் சேர்ந்து கொண்டான். பிறகு அவன் மருமகனாகிய அக்கினியும் வந்து போரிடத் தொடங்கினான்

தீக்கடவுள் அருச்சுனன் பக்கத்தைச் சேர்ந்த வீரர்கள் அனைவரையும் வீழ்த்தி, அவன் படைகளில் பெரும்பகுதியை அழித்துவிட்டு நேருக்கு நேர் அருச்சுனனுடன் போரிட வந்தான் பெருஞ்சினங்கொண்ட விசயன் நாராயணாஸ்திரத்தை ஏவி அக்கினியைக் கொல்ல முடிவு செய்துவிட்டான் அப்போது இந்திரன் முதலிய தேவர்களும், ஏழு முனிவர்களும் தீக்கடவுளை மன்னித்து விட்டுவிடுமாறும் அவன் போரை நிறுத்திவிடுவதுடன் அவனால் கொல்லப்பட்ட படைகள் அனைத்தையும் எழுப்பிக் கொடுத்து விடுவான் என்றும் கேட்டுக் கொண்டனர். அருச்சுனன் இணங்கினான்

தன்னால் அழிக்கப் பெற்ற படைகளை மீட்டுக்கொடுத்த அக்கினிதான் தன் மாமனாரிடமும் தாம்பிரத்துசனிடமும் குதிரையைத் திருப்பித் தந்து பணியுமாறு கேட்டுக் கொள்வதாகக் கூறிவிட்டுச் சென்றான். அங்கு நீலத்துசனிடம் அருச்சுனனின் குதிரையைத் திருப்பித் தந்து விடுமாறும், போரில் அவனை வெல்ல இயலாதென்றும் அறிவுறுத்தினான். மன்னன் மனம் மாறி அதற்கிசையும் நேரத்தில் அரசி இவ்வாலோசனையைத் தடுத்துப் போர் புரிய வேண்டுமென்றனள். மனைவியின் சொற்கேட்டு மன்னன் மீண்டும் விசயன் மேல் போருக்கெழுந்தான்

எதிர்த்த நீலத்துசனும் தாம்பிரத்துசனும் தோற்கடிக்கப்பட்டு அவர்களின் பெரும்படை அழிக்கப் பெற்றன புறமுதுகு காட்டியோடிய அவர்கள் குதிரையைத் திருப்பிக் கொடுத்து அருச்சுனனோடு போர்நிறுத்தம் செய்துகொள்ள முனைந்த போது மீண்டும் அரசி தடுத்தாள். இம்முறை தன் மனைவி மீது சினம் கொண்ட மன்னன் அவளை ஏசினான். அதனால் அவள் கோபங்கொண்டு தன் சகோதரனுடைய வாகை நகரத்திற்குச் சென்றாள்.

தன் உடன்பிறந்தானை விசயனுடன் போர்புரிய அழைத்தாள். அவன் வேள்விப்பரிதன்நாட்டெல்லையை மிதிக்காதபோது தான்இப்போரில் தலையிடுதல் தகுதியாகாது என மறுத்து விட்டான். இங்கும் தன் எண்ணம் நிறைவேறாததால் கோபங்கொண்டஅரசி கங்கையை நினைத்து தண்டகாரணியத்தில் தவம் செய்யத் தொடங்கினாள்.

கங்கையின் மைந்தனாகிய வீடுமரை அருச்சுனன் பாரதப்போரில் கொன்றுவிட்டதைக் கூறி, கங்கைக்கு விசயன்மேல் சினம்பொங்கச் செய்து, அவளைக் கொண்டு பார்த்தனை அழிக்கலாமெனத் திட்டமிட்டாள்.

இக்கருத்தை நிறைவேற்ற கங்கைக் கரையிலே நின்று கொண்டு கங்கையைக் கண்டபடி திட்டினாள் அப்போது கங்கை அழகிய மங்கையாக எதிரில் வந்து தன்னைத் திட்டுகின்றது ஏன் என வினவினாள்.

அரசி உள்ளே மகிழ்ச்சியும் வெளியே சினமும் பொங்க, "நீ பெற்ற உடனே ஏழு குழந்தைகளைக் கொன்றனை; எட்டாவது வீடுமன் அவன் தந்தையின் கருணையால் உயிர் பிழைத்தான். நீ மன்னனைப் பிரிந்ததால் தான் அவன் மச்சகந்தியை மணக்க நேர்ந்தது அதனால்தான் வீடுமன் அரசையும், இல்லறச்சுகத்தையும் இழந்தான். அத்தகைய வீடுமன் பாரதப்போரில் அருச்சுனனால் அழிக்கப்பெற்றான். அதைக் கண்டும் உனக்குத் துயரமோ பழிவாங்கவேண்டுமென்ற சினமோ வரவில்லை, நீ பெண் தானா'' என மிக இழிவான சொற்களால் பழித்துரைத்தாள்.

இதனால் மனம்மாறிச் சினங்கொண்ட கங்கை இன்றிலிருந்து ஆறு மாதத்திற்குள் அருச்சுனனின் தலை அவன் மகனால் துண்டிக்கப்படட்டும் எனச் சபித்து விட்டாள். அச்சாவிற்குத் தானே கருவியாக விரும்பிய அரசி தீப்பாய்ந்து ஓர் அம்பாக மாற, அதனைக் கங்கை வாயுதேவனின் உதவியோடு பப்பரவாகனின் தூணியில் சேர்த்துவிட்டனள்.

மனைவி வெளியேறிய பிறகு நீலத்துசனும் தாம்பிரத்துசனும் தம் நாட்டை அமைச்சர்களின் பொறுப்பில் விட்டு விட்டுப் பெரும்படையுடனும் நிறைந்த திறைப் பொருள்களுடனும் அருச்சுனனைச் சரணடைந்தனர்.

8. சண்டிகை சாப நிவாரணச் சருக்கம்

இவர்களையும் இணைத்துக் கொண்டு வேள்விப்பரியுடன் புறப்பட்ட நாற்பத்து நான்காவது நாள் விந்தைகிரி என்னும் ஒரு மலையை வந்தடைந்தனர் குதிரை மலைமீது ஏறி ஒரு பாறையின் மீது கால் வைத்தவுடன் காலை எடுக்க முடியாமல் சிக்கிக் கொண்டது. எவ்வளவு முயன்றும் பரியைப் பாறையினின்று விடுவிக்க முடியவில்லை. இதன் காரணத்தை அறியலா மெனில் அருகில் யாருமே இல்லை

அங்கிருந்து வடகிழக்கே ஒரு யோசனை தூரத்தில் தௌபரி முனிவரின் ஆஸ்ரமம் இருப்பதாகத் தெரிய வந்தது. உடனே அருச்சுனன் தன் துணைவாகளுடன் அவரை அடைந்து, நடந்த நிகழ்ச்சியைக் கூறி இதன் காரணத்தைக் கேட்டான் தௌபரி முனிவா ஒரு வரலாற்றைக் கூறலானார்.

கந்தமாதன கிரியில் சவுண்டிலீகர் என்னும் ஒரு முனிவர் இருந்தார். உத்தரவாகன் என்னும் ஒரு பிரமசாரி அவருக்குப் பணிவிடை செய்துவந்தார் தன் ஆசிரியரின் கட்டளைக் கிணங்க உத்தரவாகனன் அங்கிருந்து வெளியேறி தருமபுரி என்னும் ஊரில் சண்டிகை என்னும் ஒரு பெண்ணை மணந்தான். அவள் எல்லாவற்றிலும் கணவனுக்கு ஏறுமாறாக நடந்து கொண்டாள்

ஒருநாள் தருமபுரிக்குவந்த சவுண்டலீகர் உத்தரவாகனனின் இல்லறக் குழப்பத்தை அறிந்தார். தான் எதிர்பார்ப்பதற்கு நேர் மாறாகத் தன் மனைவியிடம் கூறிப்பார்க்குமாறு அறிவுறுத்தினார். சீடன் அதனை அவ்வாறே கடைப் பிடித்தான். சில நாள்கள் குடும்பவாழ்க்கை சிறப்பாக நடைபெற்று வந்தது. உத்தரவாகனனின தந்தைக்கு ஒரு நாள் திதி வந்தது. அன்று பிண்டத்தைக் கங்கையில் கரைக்காதே என்று சொல்வதற்குப் பதில் கவனமில்லாமல் கரை என்று கூறிவிட்டான் உடனே சண்டிகை தன் இயல்பான பண்பிற்கேற்ப அப்பிண்டத்தை உடைத்துக் குப்பை மேட்டில் போட்டு விட்டாள். இதனால் பெரும் கோபங்கொண்ட உத்தரவாகனன் சண்டிகையை விந்தகிரியில் ஒரு பாறையாகக் கிடக்கும்படிச் சபித்துவிட்டான். சண்டிகை வருந்தித் தனக்கு உய்திக காலம் எப்போது என்ன, அசுவமேத வேள்விக் குதிரையோடு வரும் அருச்சுனனின் கால்களும் கைகளும் மேலே பட்டால் சாபம் நீங்கும் என உரைத்தான்.

இதனைக் கேட்ட விசயன் தௌபரி முனிவரிடம் விடைபெற்று மலையையடைந்து, குதிரை சிக்கியுள்ள பாறையையடுத்துக் குதிரையைத் தொட்டான். அருச்சுனன் கால்களால் மிதிபட்ட உடனே சண்டிகை சாப விமோசனம் பெற்று முன்னுருப் பெற்றாள் காண்டீபன் அவளுக்கு நல்லறிவு புகட்டி, பெரும்பொருள் அளித்துக் குதிரையுடன் தன் திக்குவிசயத்தைத் தொடர்ந்தான்

மேலும் சென்றபிறகு ஒரு பெரிய நகரம் தென்பட்டது அதன் பெயர் சாம்பநகரம் என்றும், அதன் அரசன் அமுதத்துசன் என்னும் பெயரினன் என்றும், அவனுக்குச் சுதர்மன், சுரதன் என இருமக்கள் உள்ளனர் என்றும் , பெருவீரர்களாகிய அவர்கள் பல பெரும்போராகளை விளையாட்டாக வென்றவர்கள் என்றும் எமனாசுரன் கூறினான் அதனைக் கேட்ட அருசசுனன் தன் குதிரை அவர்கள் நாட்டை மிதிகக வேண்டும் அவர்கள அப்புரவியைக கட்டிப்போர்மூளவேண்டும்என விழைந்தான் அப்போதே அககுதிரை சாம்ப நகரை நோக்கிப் போகத தொடங்கியது

9. சுதர்மத்துசன் போர்ச் சருக்கம்

தருமனின் வேளவிப்பரியும் அதனைத் தொடர்ந்து வரும் பெரும் சேனையும் செய்யும் ஆரவாரத்தைக் கேட்ட அமுதத்துசன், செயதியை என்னென அறிந்து கொண்டான் உடனே தன் நகரிலுள்ள வீரர்கள் அனைவரும் மதிலுக்கு வெளியேயுள்ள பாசறையில் உடனே கூடவேண்டுமென்றும், யார் தவறினாலும் அவர் கொதிக்கின்ற எண்ணெய்க் கொப்பறையில் தள்ளப்படுவர் எனவும் கடுமையாக தாளித்துப் பெரிய கொப்பறை ஒன்றில் எண்ணெய் கொதித்துக் கொண்டிருக்கும்படி ஏற்பாடு செய்தான்.

அமுதத்துசனின் மூத்தமைந்தன் சுதாமத்துசன் திருமால் வழிபாட்டில் ஈடுபட்டிருந்ததாலும், அடுத்துத் தன் மனைவியோடு பொழுது போக்க நேர்ந்ததாலும் அவனால் மாலை வரை பாசறைக்கு வர இயலவில்லை. மகன் எனவும் பாராமல் அவன் எண்ணெய்க் கொப்பறையில் தள்ளப்பட்டான். ஆனால் திருமாலின் திருவருளால் அவனுக்குத் தீங்கேதும்நேராததைக் கண்ட தந்தை மனமகிழ்ந்து அவனுக்கு உடனே முடி சூட்டினார் பிறகு அருச்சுனனை எதிர்த்துப் போர்புரியப் புறப்பட்டான் சுதர்மத்துசன் தன் தந்தையை விலக்கி, தானே போர்க்களம் புகுந்தான்

சுதர்மத்துசன் தன் படைகளை ஆயிரத்தெட்டிதழ்களுள்ள தாமரையைப போல பதுமவியூகமாக வகுத்தான். கைப்பற்றப் பெற்ற புரவி மலரின் மகரந்தப் பகுதியில் பாதுகாவலாக வைக்கப்பட்டது அதற்குள் இரவு வந்தது

மறுநாள் காலை கடும் போர் தொடங்கியது சுதர்மன் எதிரிப்படைத்தலைவர்கள் அனைவரையும் வீழ்த்திவிட்டு நேரே அருச்சுனனைப் போருக்கு அழைத்தான் இருவரும் சமநிலையில் நெடுநேரம் போராடினர். இறுதியில் சுதர்மன் மயங்கி வீழ்ந்தான். அப்போது அவன் தம்பி சுரதன் போரைத் தொடர்ந்தான் எனினும் சற்று நேரத்தில் சுதர்மன் உணர்வு பெற்றெழுந்தான். மிகக் கடுமையான போருக்குப் பிறகு அருச்சுனன் (கண்ணபெருமானின் உதவியால்) சுதர்மனைக் கொன்றுவிட்டான். அவன் சிறந்த கடவுட் காதலன் என்பதால் கண்ணன் அவன் ஆன்மாவை உண்ணத் தலை சிவபிரானின் என்புமாலையில் நாயகமாக அமைந்தது இத்துடன் அன்று சூரியன் மறைந்ததால் இருசாராரும் தத்தம் பாசறைகளுக்குச் சென்று விட்டனர்.

10. சுரதத்துசன் போர்ச் சருக்கம்

பாசறையில் அமிர்தத்துசன் அடுத்து நடைபெற வேண்டிய செயல்களைப் பற்றியாராய மந்திராலோசனைக் குழுவைக் கூட்டி அடுத்தநாள் தான் அருச்சுனனோடு போர்புரியப் போவதாகச் சொன்னான். அப்போது மன்னனின், இரண்டாம் மைந்தனாகிய சுரதத்துசன் தானே செய்ய அனுமதி வேண்டினான். தந்தை அதற்கு இசைந்தான்.

மறுநாள் மிகக் கடுமையாகப் போர் நடைபெற்றது முதலில் சுரதன் அருச்சுனனின் தலைவர்களையெல்லாம் ஒவ்வொருவராகத் தோற்கடித்தான். பிறகு விசயனையும் திணற அடித்தான். ஆனால் இறுதியில் கதிரவன் மறைவதற்கு முன் அருச்சுனனால் கொல்லப்பட்டான். சுரதனின் அறுபட்ட தலை கண்ணனின் காலில்விழுந்து பணிந்து போற்றியது. கண்ணன் கருடனை அழைத்துச் சுரதனின் தலையைக் கங்கையும் யமுனையும்கூடும் கூடுதுறையில் இடச் செய்தான். அப்போது சுரதனின் ஆன்மாவும் கண்ணனை அடைந்தது. சுரதனின் தலையைச் சிவபிரான் முருகனின் வழிப்பெற்றுத் தன் மாலையில் கோத்தணிந்தார்.

இருமக்களையும் இழந்த அமிர்தத்துசன் மிகக் கவலையும் சினமும்கொண்டு அருச்சுனனோடு போரிட விழைந்தான். மறுநாள் அவ்வாறே போருக்கெழுந்தான். இதனைக் கண்ட கண்ணபெருமான் அருச்சுனனுக்கும். அமிர்தத்துசனுக்கும் நட்புண்டாக்கிக் குதிரையை மீட்டுச் செல்ல வழிவகுத்தார்

அருச்சுனன் முதலியோர் ஐந்து நாள்கள் சாம்ப நகரில் தங்கினர் அதற்குப் பிறகு குதிரையையும் ஏராளமான திறைப்பொருள்களையும பெற்றுக்கொண்டு புறப்படத் தயாரானாள். கண்ணனின் அறிவுரைப்படி அமிர்ததசனும் ஒரு படையுடன் அருசசுனனுடன் கிளம்பினான். கண்ணன் தருமனைக் கண்டு வருவதாகக் கூறிவிட்டு அவர்களைப் பிரிந்தான்.

11. வர்க்க தேசச் சருக்கம்

வேள்விபபரி அஙகிருந்து சில நாளகள் தென்மேற்குத் திசையில் நடந்து வாக்க தேசத்தை அடைந்தது அங்கிருந்த மக்கள் உடையணியாதவாகள, மரங்களில் வௌவாலைப் போலத் தலைகீழாகத் தொஙகிக் கொண்டு இரவில் தூங்கும் இயல்புடையவர்கள் விலங்கைப் போன்றவாகள் இந்த நாட்டு மக்களைப் பார்த்து வியநத படை அடுத்து சிங்கதேசத்தை அடைந்தது

சிங்க நாட்டில் இருந்தவர்கள் பல கொம்புகளை உடைய மக்கள அவர்கள் இப்படையைக் கண்டு அஞ்சி ஓடினா. அந்நாட்டைக் கடந்ததும் ஒரு பெரிய காடு எதிர்ப்பட்டது வேள்விக் குதிரை அங்குப் படுத்துக்கொண்டு விடடது அவ்விடத்தில் தங்கி ஒரு நகரததை உண்டாக்கிய பிறகு பயணத்தைத் தொடர்ந்தனர்

தென் மேற்கே சென்ற குதிரை பகாசுரனின் மகனாகிய வீடணனின் இரத்தமண்டலம் என்னும் நிலப்பகுதியை நெருங்கியது. வீடணன் கொடுமை மிக்க அசுரர்களின் தலைவன், தீயன செய்ய அஞசாதவன்; அவன் படைவீரர்களோ கொடுமையும் வலிமையும் மிக்க அரக்கர்கள் தன் நாட்டை நோக்கி அசுவமேத வேளவிப்பரி வருவதை இராச புரோகிதர் பிரமராக்கதன் அறிந்தான் தருமனின் படையுடன் பொருது கொன்று அச்சடலங்களைப் பிரமராக்கதர்களுக்கு உணவாக அளிக்க வேண்டுமென வீடணனிடம் வேண்டினான்

இ஼து இவ்வாறிருக்கத்தம்நாட்டை நோக்கிப் படைவருவதை அறிந்த அரக்கியர்கள் விகுர்திபிங்களை என்பாளின் தலைமையில் கூடி அரக்கர்கள் போர்புரிநது பகைவர்களைக் கொன்று உண்பதன் முன் நாமே போரிட்டு அவாகளைத் தின்னலாம் என முடிவெடுத்தனர்

பெரும் அரக்கியர்படை தருமன்படையை நெருங்கியது. அருச்சுனனின் தேரிலிருந்த அநுமக் கொடியைக் கண்ட அரக்கியர் இராமாவதார காலத்து இயற்கை நிகழ்ச்சிகளை நினைந்து அஞ்சினர். எனினும் தலைமையால் ஊக்க மளிக்கப் பெற்று வேகமாகப் போரிட்டனர். அரக்கியருக்கு அஞ்சி அருச்சுனன் படை நிலை குலைந்த போது அநுமன் களத்தில் குதித்து அரக்கியரைச் சின்னா பின்னம் செய்தான். விகுர்திபிங்கலை ஊருக்குள் ஓடி முறையிட்டாள்.

உடனே வீடணனின் அரக்கப்படை பெருஞ்சினத்துடன் போருக்கெழுந்தது. இவர்களின் ஆற்றலைத் தாங்கமாட்டாத தருமனின் படைவீரர்கள் அருச்சுனனைச் சரணடைந்தனர். உடனே அவன் போருக்கெழுந்து அரக்கரைக் கொன்று குவித்தான். இதனால் அரக்கர்கள் அஞ்சியோடி வீடணனிடம் முறையிட்டனர். அவன் பெருங்கோபங்கொண்டு போருக்கெழுந்தான். விசயனின் படைத்தலைவர் பலர் வீடணனால் தோற்கடிக்கப்பட்ட பிறகு அருச்சுனனே நேராக எதிர்த்தான். கடும்போர் நிகழ்ந்தது. வீடணன் சற்றுத் திண்டாடும் போது சூரியன் மறைந்தான்.

இரவில் வீடணன் அரக்கமாயையால் போர்புரியலுற்றான். வீமனின் பேரனாகிய மேகவண்ணன் அதே மாயைப் போரிலீடுபட்டு எதிர்த்தான். கண்ணன் தன் சக்கரத்தைக் கொண்டு இருளை நீக்கியுதவினார். கோரமான மாயைப் போர் நடந்தது. மேகவண்ணன் வீடணனுக்குச் சரியாக ஈடுகொடுத்ததால் அவனைவெல்ல இயலவில்லை. எனவே வஞ்சத்தால் இப்படையை வெல்லக் கருதினான்.

அதற்கிணங்க இராவணன் ஒரு முனிவரைப் போல் உருமாறிச் சுவேதனிடம் வந்து தான் அத்தினாபுரியிலிருந்து வருவதாகவும், விக்கிராங்கதன் என்னும் ஒரு வலிய அரக்கன் யாகசாலைக்கு வந்து தனியாக இருந்த தருமனை அடித்துப் போட்டுவிட்டு, திரௌபதையைத் தூக்கிச் சென்று விட்டதாகவும், வேள்வி தடைப்பட்டு விட்டதாகவும் கூறினான். இச்செய்தியைக் கேட்டு முதலில் திகைத்த விசயன் பின்பு இது அரக்க மாயையாக இருக்கலாம் எனத் தெளிந்து, முனிவடிவிலிருந்தவன் அரக்கனே எனத் துணிந்து அவனைக் கொன்று விட்டான். பிறகு இரத்த தேசத்தின் செல்வங்களை எல்லாம் வாரிக்கொண்டு, குதிரையைச் செல்லவிட்டு முன்னேறினர்.

12. புரவிபேதித்துச் சுயரூபமான சருக்கம்

இரத்தமண்டலத்தை நீங்கி ஓர் அடாந்த காட்டினூடு போகும்போது வேள்விக் குதிரை ஒரு குளத்தில் நீர் அருந்தியது உடனே அந்த ஆண் குதிரை பெட்டையாக மாறிவிட்டது இதனையறிந்த விசயன் மிகக கவலையுற்றுத திகைத்தான். செயவதறியாது அக்குதிரையைப் பின்பற்றிக் கொண்டிருந்தான

சிறிது தூரம சென்றபிறகு எதிர்ப்பட்ட வேறொரு குளத்திலும் குதிரை நீர குடித்தது, உடனே அது ஒரு புலியாக உரு மாறிவிட்டது இதனால் முன்னினும் பெருங்கவலையுற்ற அருச்சுனன கண்ணனைத் தியானித்தான். உடனே மாதவன ஒரு பரதேசியின உருவில் வந்து தோன்றினார் அவரிடம் அருச்சுனன் தன் குறையைக் கூறினான். துறவி தன் கமண்டல நீரை புலியின் மீது தெளித்த உடன அது பண்டைய வேள்விக்குதிரையாகி தன் உருவத்தைப் பெற்றது அவர் குதிரை பெட்டையாக மாறியகாரணத்தை முதலில் கூறலுற்றார

முப்புரத்தாரின் கொடுமை தாங்காது அல்லலுற்ற தேவாகள் சிவபெருமானைச் சரணடைந்தனர சிவபிரான் திரிபுரத்தை அழிக்கச் சென்ற போது உமையம்மை இந்தக் காட்டில் ஒரு குளததின கரையில் இருந்து தவம்புரிந்தாள் அப்போது சம்பராசுரன் எனனும் அசுரன் நீர் பருக அக்குளத்திற்கு வந்தான் அவன் உமாதேவியைக் கண்டு மையல் கொண்டான் தகாதன பேசினான் அவனைச் சபித்தால் தன் தவ வலிமை குன்றிவிடும் என்னக் கருதிய தேவி அசுரனை அககுளதது நீரில் மூழகச் சொனனாள், அப்போது அக்குளத்தில் குளிப்பவர அனைவரும மகடூஉ ஆகக் கடவர் எனத தன் உள்ளத்தே நினைத்தாள் அவ்வாறே சம்பராசுரன் பெணணாகி விட்டான் அவன் உமையம்மைக்குச் சேடியாகப் பணிவிடை செய்து வநதான் தவம முடிந்து தேவி கயிலைக்குச் சென்ற போது அசசேடியும் உடன சென்றுவிடடாள் அக்குளததின் பால் மாறறும் தன்மை அப்படியே உளளது அககுளத்தில் நீர குடித்ததால் தான் வேள்விப்பரி பெட்டையாகி விட்டது என விளக்கினார்.

அடுத்துப் பரி புலியான காரணத்தைக கூறலுற்றார் முற்காலத்தில் கண்ணுவன் என்னும் முனிவர் ஒருவர் இருநதார் ஒரு நாள இக்குளத்தில்

நின்று கொண்டு செபம் செய்யும் போது ஒரு முதலை அவர் காலைப் பிடித்தது தான் சபித்துவிட்டால் தன் தவ ஆற்றல் குறைந்து விடும் எனக கருதிய கண்ணுவர் இக்குளத்தின் நீரைத் தொட்ட உயிர்களெல்லாம புலிகளாகக் கடவன என நினைத்தார் அகக்கணத்திலேயே அக்குளத்திலிருந்த உயிரினங்கள யாவும் புலிகளாக உருமாறிக் காடடுக்குள ஓடிவிட்டன முனிவரும் தனவழியே சென்று விடடார ஆனால இககுளததின் தன்மை இன்னமும் அப்படியே இருககிறது

இச்செய்திகளைக் கிழததுறவி வேடத்தில் வநதுணர்ததிய கண்ணன் திடீரென்று மறைந்துபோனார் பிறகு தொடர்ந்து படைகளுடன் குதிரையின் பின் சென்ற அருச்சுனன் பன்னிரண்டாவது நாள் மதனமண்டலம் என்னும் நாட்டை அடைந்தான்.

13. மதன மண்டலச் சருக்கம்

இம் மதன மண்டலத்தில் எந்த உயிரினத்திலும் ஆண்களே இல்லை. இந்நாட்டின் தலைவி சுகலீலை அவள் சிவனைக் குறித்துத் தவமபுரிந்து பகைவாகளின் அனைத்து அம்புகளையும் அழிக்கும் வெல்லற்கரிய பகழி ஒன்றைப் பெற்று விளஙகினாள சயன நாயகி என்பது அவளுடைய தளபதியின் பெயர்

வேள்விப்பரி அந்நாட்டில் நுழைந்த உடனே சயனநாயகி அதனைப் பிடித்துக் கட்டிவிட்டு, அதன் நெற்றியில் இருந்த படாததை அரசிக்குக் காட்டினாள் அதைக் கணட அரசி தான் விசயனை மணகக விரும்பி பாரத்தன் தன்னை மணந்து கொண்டால் குதிரையைத் திருப்பித் தருவதுடன் அவனுக்கு வாழ்நாள் முழுவதும அடிமையாக இருப்பதாகவும், அவன் மறுத்துவிட்டால் போரில் அவனைக் கொன்று தானும் மடிந்து விடுவதாகவும் வஞ்சினம் கூறினாள

குதிரை பிடிபட்டதை அறிந்த விசயன் போர் தொடங்கினான் கடுமையான போர் நிகழந்தது. போரின் உச்சக் கட்டத்தில் சுகலீலை தன் சிறப்புக் கணையைத் தொடுக்க நினைததாள் அருசசுனனோ பிரமாத்திரம் எய்யக் கருதினான். தேவர்களும மற்ற பெரியோரும் தோன்றி இருவரும் அவவக்கணைகளை எய்தாமல் தடுத்து விட்டனா அவாகள கேட்டுக

கொண்டதற்கிணங்க சுகலீலை பணிந்தாள். அருச்சுனனும் அவளை ஏற்றுக் கொண்டான். விசயனும் அவனது படைகளும் ஊருக்குள் சென்று விருந்தோம்பலை ஏற்று மகிழ்ந்தனர். ஐந்து நாள்கள் அங்குத் தங்கியபிறகு மதன மண்டலத்தை அமுதத்துசனுக்கு அளித்து விட்டு ஏராளமான செல்வங்களுடனும் பெரும்படையுடனும் சுகலீலை சயனநாயகியோடு அத்தினாபுரம் அடைந்தாள். அருச்சுனன் குதிரையைத் தொடர்ந்து ஏழு நாள் தென் மேற்குத் திசையில் சென்றான்

14. மிருக, வெகுமுக தேசச் சருக்கம்

மிருக நாட்டில் பல வகையான விசித்திர மனிதர்கள் இருந்தனர் இவர்கள் பல கால்களையும், பல வால்களையும் உடைத்தாயிருந்தனர். படையின் ஆரவாரத்தைக் கேட்டு இவர்கள் அஞ்சி, இவர்களைப் பார்த்துச் சேனை பயப்பட ஒரு வழியாக வேள்விப்பரி இப்பகுதியைக் கடந்து சென்றது

அங்கிருந்து இரண்டு யோசனை சென்ற பின் வெகுமுக தேசம் எதிர்ப்பட்டது. அங்கிருந்த மனிதர்கள் பலர் விலங்குகளின் முகத்தைப் பெற்றிருந்தனர் அயல்மொழியினராகிய இவ்வெகுமுக தேச மக்களை படையைக் கண்டு அஞ்சவும், படைவீரர்கள் இவர்களைக் கண்டு வியக்கவும் வேள்விப்பரி இந்நாட்டைக் கடந்து சென்றது.

15. பப்பரவாகனன் போர்ச் சருக்கம்

தொடாந்து தென்மேற்காகச்சென்ற குதிரை மணிநகர் எனும் நாட்டை அடைந்தது. " இந்நாட்டின் அரசன் பப்பரவாகனன் ஆவான். இவனுடைய அமைச்சன் சுபுத்தி. இவர்கள் பேராற்றல் படைத்தவர்கள். இங்குப் போர் மூளாதிருந்தால் நன்றாக இருக்கும்," என்ற அமிர்தத்துசனிடம் பப்பரவாகனனின் வரலாற்றை விசயன் கேடடான் அதற்கு அமிர்தத்துசன் பப்பரவாகனனின் செய்தியை விரிவாகக் கூறினான்

பாண்டியன் ஒருவன் மகப்பேறு வேண்டி வேள்வி செய்தான் வேள்வியில் அல்லி மலர் மீது ஒரு பெண் குழவி தோன்றியது அதனால் அது அல்லி அரசாணி என வழங்கப் பெற்றது அபபெண் மகவின் இயற்பெயர் சித்திராங்கதை அரசனுக்கு வேறு ஆண் மக்கள் இன்மையின் இவளே உரிய காலத்தில் பாண்டிய நாட்டுக்கு அரசியாக முடிசூட்டப்பெற்றாள.

பேராற்றல் படைத்து விளங்கிய அவள் மற்ற அரசர் எல்லோரிலும் மேம்பட்டு விளங்கினாள். தன் மகளின் விருப்பப்படி அவளை அருச்சுனனுக்கு திருமணம் செய்து கொடுத்தான் அப்போது அவள் வயிற்றில் பிறக்கும் மைந்தனைப் பாண்டியநாட்டிற்கு அரசனாகத் தரவேண்டும் என ஒரு வாக்குறுதியையும் பெற்றுக் கொண்டான். திருமணம் முடிந்து உரிய காலத்தில் பிறந்த மைந்தனே பப்பரவாகனன்.

அருச்சுனனின் மற்றோர் மனைவியாகிய உலூபியும் சித்திராங்கதையும் மனமொப்பி வாழ்ந்தனர். பாரதப் போரில் தன் மகன் அரவான் களப்பலி ஆக்கப்பட்டதால் தீப்புகக்கருதிய உலூப்பிக்குச் சித்திராங்கதை தன் மகனை வழங்கி விட்டாள். நாகலோக இளவரசியாகிய உலூபியின் தவத்தின் பயனாகப் பிரமன் இந்த மணி நகரத்தை மிகச் சிறப்புடையதாகச் சபித்தான். இத்தகைய பப்பரவாகனன் " உன் மைந்தனே" என அமிர்தத்துசன் கூறி முடித்தான்

இதற்குள் வேள்விப்பரி மணிமண்டபத்தின் எல்லையை அடைந்துவிட்டது. அதனை அமைச்சன் சுபுத்தி கைப்பற்றிப் பப்பரவாகனன்பால் கொண்டு சென்றான். குதிரையின் நெற்றியிலிருந்த பட்டயததைப் படித்த மன்னன் இது தன் தந்தை விடுத்த வேள்விப்பரி என அறிந்தான். மிக மகிழ்ந்தான். தந்தையைச் சிறப்பாக வரவேற்க ஊரை அலங்கரித்திடுக எனக் கட்டளையிட்டு அன்னையர்களுக்குச் செய்தி அறிவித்தான். அவர்களும் பேருவகைஎய்தினர். உடனே விசயனைச் சென்று காண விடை கேட்டனர். ஆனால் பப்பரவாகனன் பலபடைகளுக்கு நடுவே தாயரை அனுப்ப விரும்பவில்லை. மறுநாள் அரசனுக்குக்குரிய பெருஞ்சிறப்புடன் அருச்சுனனை அழைத்து வருவதாகவும், தான் மட்டும் தனியே சென்று, தந்தையைக் கண்டு , குதிரையை அமைச்சன் அறியாமல் பிடித்து விட்டதற்காக மன்னிப்புக் கேட்டுத் தந்தையைச் சமாதானப்படுத்துவதாவும் கூறிப் படுக்கச் சென்றுவிட்டான் மன்னனின் ஆணைப்படி அருச்சுனனை வரவேற்க நகர மக்கள் ஊரைச் சிறப்பாக அலங்கரித்ததனர்.

இங்கு இவ்வாறிருக்கக் குதிரை சுபுத்தியால் பிடிக்கப் பெற்றதை அறிந்த விசயன் பெருஞ்சினம் கொண்டான். இவ்வளவில் பகல் கழிந்தது

மறுநாள் காலை அருச்சுனன் போருக்கு ஆயத்தம் செய்து கொண்டிருந்த போது பப்பரவாகனன் வேள்விக்குதிரையுடனும், ஏராளமான பரிசுப் பொருள்களுடனும் வந்து தந்தையின் தாள் பணிந்தான் கங்கையின் சாபத்தால் விசயன் நல்லறிவு கெட்டு சினம் நீங்காதவனானான். குதிரையைப் பிடித்தது தவறு என வலுச் சண்டைக்கு அறைகூவல் விட்டதோடு பப்பரவாகனனின் பிறப்பையும் இழித்துரைத்தான்

பொறுக்க மாட்டாத பப்பரவாகனன் போரில் விசயனின் தலையை உருட்டுவதாக வெஞ்சினம் கூறினான். உடனே தன் அமைச்சனுக்குப் பரிசுப் பொருள்களைத் திரும்ப எடுத்துக் கொள்ளுமாறும், குதிரையைச் சிறைப்படுத்துமாறும், படையைக் கருடவியூகமாக வகுக்குமாறும் கட்டளையிட்டான். மன்னனின் ஆணை நிறைவேற்றப் பெற்றது.

கடும்போர் மூண்டது அருச்சுனன் பக்கத்துப் படைத்தலைவர் அனைவரும் வீழ்ந்துவிட்ட நிலையில் விசயன் போருக் கெழுந்தான். தந்தையும் தனயனும் பேரமர் புரிந்தனர். இறுதியில் பப்பரவாகனன் தன் வெஞ்சினக் கூற்றின்படியே அருச்சுனனின் தலையை அறுத்துத் தள்ளிவிட்டான். அப்போதும் தன் உள்ளத்தே தந்தைப் பாசம் தோன்றாமல் வெற்றி பெருமிதத்தோடு தலைநகரில் நுழைந்தான்.

அருச்சுனனின் மரணச் செய்தியைக் கேட்ட சித்திராங்கதையும் உலூபியும் மிகக துயருற்றனர் பப்பரவாகனனை அடைந்து சினமொழி கூறிப் போர்க்களத்திற்கு அழைத்துச் செல்லுமாறு வேண்டினர். அவ்வாறே நடைபெற்றது களத்தில் விசயனின் மனைவியர் இருவரும் அவன் சடலத்தைத் தழுவிப் புலமபினர். தந்தை, தாயர் அனைவராலும் பழிக்கப்படும் தன் இழிநிலையை எண்ணி எண்ணிப் பப்பரவாகனன் மனம் மிக மாழ்கினான். தன் தவறுக்குக் கழுவாயாகத் தீப்பாய்ந்து இறக்க முனைந்தான்.

அப்போது உலூபி தன் தந்தையாகிய ஆதிசேடனிடம் ஒரு சீவரத்தினச்சஞ்சீவி இருப்பதாகவும், அதனைப் பெற்று வந்து தலையை உடலில் பொருத்தி நீவினால் உயிர் மீளும் என்றும் தெரிவித்தாள். பிறகு அவள் தன் மங்கல அணிகளை எல்லாம் கழற்றி ஒரு பொற்றாம்பாளத்தில் வைத்துப் புண்டரிகன் என்னும் ஒரு தூதுவன் வழியே தன் தந்தைக்குக் கொடுத்தனுப்பி நிகழ்ந்த செய்திகளைக் கூறச் செய்தாள்.

ஆதிசேடன் கார்க்கோடன் வழியாக சீவரத்தினத்தை அனுப்ப முடிவு செய்தான். ஆனால் திருதராக்கதன் என்னும் மற்றோர் அமைச்சன் பலவாறு கூறித் தடுத்து விட்டான். புண்டரீகன் திரும்பிவந்து கூறிய செய்தியைக் கேட்ட பப்பரவாகனன் கோபங்கொண்டு நாகலோகத்தின்மேல் போருக்கெழுந்தான். போரிட்டுத் தோற்ற பின் சஞ்சீவியை ஆதிசேடன் அளிக்கப் பப்பரவாகனன் பெற்று ஊருக்குப் புறப்பட்டான். இதற்கிடையில் அருச்சுனன் உயிர்பெற்று எழுவதை விரும்பாத திருதராக்கதன் தன் மக்களாகிய துர்ப்புத்தி, துஷ்டகன் என்னும் இருவரின் வழியே விசயனின் தலையைக் கவர்ந்து பலத்தாப்யர் என்னும் முனிவரின் குகையில் ஒளித்து வைத்து விட ஏற்பாடு செய்தான். சஞ்சீவியின் களத்திற்குத்திரும்பிய பப்பரவாகனன்தன்தந்தையின் தலையைக் காணாமல் கவன்றான்.

இதே சம்யத்தில் தீக்கனாக கண்ட குந்தியின் சொற்படி கண்ணன்தன் கருடவாகனத்தில் தருமன், வீமன், குந்தி, தேவகி, யசோதை ஆகியோருடன் மணிநகரம் வந்தடைந்தான் இங்கு நிகழ்ந்தவைகள் அனைத்தையும் அறிந்து கொண்டனர். கண்ணன் ஒளித்து வைக்கப்பெற்ற தலையைத் தன் தெய்வீக ஆற்றலால் வரவழைத்தான் சீவரத்தினத்தால் அருச்சுனனோடு படைத் தலைவர்கள் யாவரும் எழுப்பப் பெற்றனர் இரண்டு படைகளைச் சேர்ந்த வீரர்கள் அனைவரும் எழுப்பப் பெற்றனர்

அனைவரும் தத்தமக்குரிய ஊர்திகளில் ஊர்வலமாக ஊருக்குள் நுழைந்தனர் அரண்மனை வந்தடைந்த பின்னும் விசயனின் சீற்றம் தணியவில்லை. கண்ணனும், வீமனும் பக்குவமாக எடுத்துச் சொல்லி விசயனின் மனத்தை மாற்றினர். அருச்சுனனும் கங்கையின் சாபத்தால் தன் மனநிலை மாறுபட்டதை உணர்ந்து மனம் மாறி மைந்தனை மகிழ்வோடு அரவணைத்தான். கண்ணனின் அமுத மொழிகளால் பப்பரவாகனனின் சிந்தைக் கலக்கமும் அகன்றது அனைவரும் மகிழ்வுடன் விருந்துண்டனர்.

ஐந்து நாள் அங்குத் தங்கிய பிறகு மணிநகரத்தின் பெருஞ் செல்வங்களை வீமனிடம் அளித்து, அவற்றையும் குந்தி, யசோதை, தேவகி, சித்திராங்கதை , உலூபி ஆகிய மகளிரையும் அத்தினாபுரிக்குக் கண்ணன்

அனுப்பி வைத்தான். ஆதிசேடனுக்கு நாகலோகத்திற்குச் செல்ல விடை கொடுத்தான். புண்டரிகனுக்கு மணிநகரத்தின் ஆட்சியை வழங்கி விட்டுப் பப்பரவாகனன் சுபத்தியுடன் அருச்சுனனைத் தொடர்ந்தான். அசுவமேதயாகக் குதிரை பெருஞ்சிறப்புடன் தென்திசை நோக்கிச் செல்லத் தொடங்கியது.

16. தாம்பிரத்துசன் போர்ச் சருக்கம்

மணி நகரை விட்டுத் தெற்கே புறப்பட்ட தருமராசனின் வேள்விப்பரி இருபத்தெட்டாவது நாளில் இரத்ன நகர் என்னும் ஊரை அடைந்தது. இதன் அரசன் பரிசத்துசன் என்னும் பெருவீரன். இவனுடைய மகன் தாம்பிரத்துசனும் வெல்லுதற்கரியவன். மன்னன் அதுவரை ஏழு முறை அசுவமேதம் நிறைவேற்றியிருந்தான் இப்போது எட்டாவது முறை பரிவேள்வி வேட்க நினைத்து குதிரையை அலங்கரித்து வலம் விட்டிருந்தான். குதிரையின் பின் தாம்பிரத்துசன் வந்து கொண்டிருந்தான்.

இரண்டு குதிரைகளும் ஒன்றையொன்று எதிர்கப்பட்டன. குதிரைகள் இரண்டும் ஒன்றையொன்று உதைத்துக் கொண்டு தம்முள் போரிட்டன. பரிசத்துசனின் குதிரை கீழே விழுந்ததும் தருமனின் பரி மேலும் தாக்கியது. இந்நிலையில் படைத்தலைவருள் ஒருவராகிய நகுலத்துசன் இரண்டு குதிரைகளையும் பிடித்துத் தாம்பிரத்துசன்பால் ஒப்படைத்து விட்டான். உடனே அவன் தன் படையைச் சக்கரவியூகமாக வகுத்து அதன் நடுவில் குதிரைகளை நிறுத்திவிட்டான்.

இச்செய்தியை அறிந்த அருச்சுனன் கடுங்கோபம்கொண்டான். தன் படையைக் கருட வியூகமாக வகுக்குமாறு பப்பரவாகனனுக்குக் கட்டளையிட்டான். கடும் போர் நிகழ்ந்தது தொடக்கத்தில் அருச்சுனனின் படைத்தலைவர்கள் பலரும் தாம்பிரத்துசனிடம் தோல்வி கண்டனர். பிறகு பப்பரவாகனன் வந்த போது மாற்றான் மனங்கலங்கினான்.

தாம்பிரத்துசன் சிறநத திருமாலடியானாதலின் கண்ணன் கழலிணையைத் தியானித்தான். கண்ணன் பப்பரவாகனனிடம்

தாம்பிரத்துசனைக் கொன்று விடாமல் போர்புரியுமாறு கேட்டுக் கொண்டான். இளைஞர் இருவரும் சளைக்காமல் போரிட்டனர் இறுதியில் பப்பரவாகனன் அயர்ந்து வீழ்ந்தான்.

அடுத்துக் கண்ணன் தடுத்தும் நிற்காமல் அருச்சுனன் போருக்கெழுந்தான். மீண்டும் பெரும்போர் நிகழ்ந்தது. அருச்சுனன் தாம்பிரத்துசனின் படைகள் அனைத்தையும் கொன்று குவித்து. அவனையும் நினைவிழக்கச செய்து விட்டான் இதற்கிடையில் கண்ணனின் சொற்படி சுபத்தி பப்பரவாகனனை வெளியே அழைத்துச்சென்று முதலுதவிகளைச் செய்து களைப்பாற்றினான் தன்னைப் போர்க்களத்தினின்றும் வெளியேற்றி விட்டதாற்காகச் சீற்றம்கொண்ட போது கண்ணன்நல்லவார்த்தைகளைக் கூறிச் சமாதானப் படுத்திவிட்டான்

இந்நிலையில் யாரும் அறியாவண்ணம் தன் அன்பனாகிய தாம்பிரத்துசன்பால் அணுகிய கண்ணன் போரைத் தவிர்த்திருக்க வேண்டும் எனவும், இனி இடுக்கண் வருவதைத் தடுக்க இயலாது எனவும் கூறினான். தாம்பிரத்துசன் நீயே எனக்குத்துணை எனச் சரணடைந்ததால் தெய்வீகமான அம்புகள் நிறைந்த ஒரு அம்பராத்தூணியை வழங்கி வாழ்த்தினான் போரில் அதன் பிறகு நடந்துகொள்ள வேண்டியவிதம் பற்றியும் ஆலோசனை வழங்கினான்.

கடுமையான போர் தொடர்ந்து ஏழு நாள் நடைபெற்றது. எட்டாம் நாள் ஒரு சமயம் அருச்சுனன் மயங்கி வீழ்ந்தான். அவ்வேளையில் அவனை விரைந்தெடுக்கத் தாம்பிரத்துசன் முடுகினான். ஆனால் அதற்குள் கண்ணனால் களைப்பு நீக்கப்பெற்றிருந்த விசயன் ஒரு வேலை எடுத்துத் தாம்பிரத்துசனின் நெற்றியில் பாய்ச்சிவிட்டான். தாம்பிரத்துசன் அயர்ந்து விழுந்தான். அதற்குள் கண்ணன் அருச்சுனனின் தேரையும் நல்ல நிலைக்குக் கொண்டு வந்து விட்டான்.

தாம்பிரத்துசன், தானும் கண்ணபெருமானின் அடியவனாக இருக்க அவர் நடுவுநிலை இன்றி பார்த்தனுக்குச் சாதகமாகச் செயல்படும் விதத்தைக் கண்டித்து கண்ணனையும் கொன்று விடுவதாக அறைகூவல் விட்டான். இது

முன்பே கண்ணன் சொல்லிக் கொடுத்திருந்த தந்திரம் ஆகும் ஆனால் அருச்சுனன் இந்நாடகத்தை மெய்யென நம்பிக் கொண்டிருந்தான் கண்ணன் விசயனைப் பார்த்து இனிமேல் மிகக் கவனமாகப் போர்புரிய வேண்டுமென அறிவுரை கூறினான்.

போர் தொடர்ந்தது. ஒரு நிலையில் கண்ணன் தேரிலிருந்து கீழே குதித்துத் தன் சக்கரத்தைத் தாம்பிரத்துசன் மேல் எய்வான் போல் சுழற்றினான். உடனே தாம்பிரத்துசனும் தன் தேரிலிருந்து குதித்துக் கண்ணனைக் கட்டித் தன் கக்கத்தில் இடுக்கிக் கசக்கினான் பின் அருச்சுனனையும் மற்றொரு கக்கத்தில் இடுக்கித் துன்புறுத்தத் தொடங்கினான் இருவரும் மயக்க மடைந்தனர். இதற்குள் பகற்பொழுது கழிந்துவிட்டதால் தாம்பிரத்துசன் இவர்களை இருந்தபடியே போட்டுவிட்டுத் தன் படையுடன் ஊருக்குள் சென்றுவிட்டான்.

தன் தந்தையாகிய பரிசத்துசன் பாற் சென்று நிகழ்ந்த செய்திகள் அனைத்தையும் நிகழ்ந்தவாறு விளக்கமாகக் கூறினான். இதனைக் கேட்ட தந்தை அருச்சுனனையும் கண்ணனையும் சிறைப்பிடித்து வராததற்காகக் கடிந்து கொண்டான். பிறகு மைந்தனை மட்டும் தனியே அழைத்து அவன் கண்ணனையும் அருச்சுனனையும் வென்றது உண்மையன்று; அது கண்ணன் சூழ்ச்சியே என்பதை நான் அறிவேன் என்றான்.

இங்கு இப்படியிருக்க, உண்மையாகவே கண்ணன் வலிமையிழந்து மயக்க முற்று விழுந்துவிட்டதாக நம்பிய விசயன் வேண்டிய முதலுதவிகள் செய்து தேற்றினான். தெளிந்த கண்ணன் பரிசத்துசன் இவனிலும் பெரிய வலிமையுடைவன் என்றும் இவனைப் போரில் வெல்வது கடினம் என்றும் கூறுகின்றான். அதற்குள்ள வழி எதுவோ என்று விசயன்கேட்க சமாதானம் ஒன்றே சிறந்தது என்கின்றான் மறுநாள் காலையில் வேதியன் வடிவில் கண்ணனும் சீடன் வடிவில் விசயனுமாகி நர்மதா நதிக்கரையிலுள்ள யாகசாலையிலிருந்து வருவதாக மன்னன் பரிசத்துசன் முன் செல்கின்றனர். தன் இருகைகளாலும் வேதியனாகிய கண்ணன் மன்னன் பரிசத்துசனை ஆசீர்வதிக்கின்றான். ‘ தானம் கொடுத்த பின்பே தாங்கள் என்னை ஆசீர்வதித்திருக்க வேண்டும் ஆனால் தாங்கள் என்னை அதற்கு முன்னமேயே ஆசீர்வதித்ததன் காரணம் என்ன என்கின்றார் மன்னன்.

சஞ்சலத்தில் மனம் இருந்தால் இவ்வாறு நிகழ்ந்தது என்கின்றார் வேதியர். சஞ்சலம் கூறின் தீர வழி செய்வேன் என்று பரிசத்துசன் சொல்ல, தீர்ப்பதாய் உறுதியளித்தால் கூறுகின்றேன் என்கின்றார் வேதியர். சந்திரசூரியர், தாரகை, வான், புவி, மந்திரதேவதை, வன்னி ஆகியோர் சாட்சியாக தங்களின் சஞ்சலத்தைத் தீர்ப்பதாக பரிசத்துசன் உறுதிமொழி அளிக்கின்றான்

என் பெயர் கிஷ்ணசர்மா, ஊர் தருமாபுரி. எனக்கு எண்ணிலடங்கா சீடர்கள் உண்டு. நீண்டநாள் தவமிருந்து சுதன் என்னும் மகனைப் பெற்றேன். அவனுக்குவயது பதின்மூன்று. அவனுக்குத்தங்களின் புரோகிதர் சஞ்சயனின் ஒன்பது வயது மகளை மணம் முடிக்க எண்ணித் தங்கள் நகருக்குள் வந்து கொண்டிருந்தேன். தங்கள் நகரின் வடகிழக்கு மூளையில் உள்ள வானுயர்ந்த மலையைக் கடக்கும் வேளையில் சிங்கம் ஒன்று என் மகனைப் பிடித்துக் கொண்டது எனனை எடுத்துக் கொண்டு என் மகனை விட்டுவிடு என்றேன். நீ எலும்பு எனக்கு வேண்டாம் என்றது. சீடனையும் ஏற்றுக் கொள்ள மறுத்தது. என் மகனைவிட்டுவிட வேறு யார் வேண்டும் என்றேன். புண்ணியம் செய்யும் மன்னர்தம் சரீரத்தில் பாதிவேண்டும் என்றது. அப்போது தங்கள் புகழைக் கேள்வியுற்று சரீரதானம் கேட்கவே தங்களை நாடி வந்தேன் ' என்கின்றார் வேதியராகிய கண்ணன்.

இதுகூறக் கேட்ட மன்னன் பரிசத்துசன், 'கிஷ்ணசர்மா அவர்களே! உங்களுக்கு உங்கள் மகனைமீட்டு அவனுக்குப் புரோகிதர் சஞ்சயன் மகளை மணம் முடித்து வைப்பேன சஞ்சலம் வேண்டாம்' என்கின்றான் மன்னன் பரிசத்துசன், தன்னுடைய வலப்பாக உடலைவேதியர்க்குத்தானமாக வகிர்ந்து கொடுக்க மனைவிக்கும் மகன் தாம்பிரத்துசனுக்கும் ஆணையிடுகின்றான். இவ்வாணையினைக் கேட்ட அங்குள்ளோர் அனைவரும் அழுகின்றனர். மன்னன் ஆணையினை நிறைவேற்றப் புகும்போது 'அரிஅரி' என்ன, இதைக் கேட்ட வேதியர், ஐயோ, இருமனதோடு செய்யும் காரியம் இது என்றுணர்ந்து அலறியடித்துக் கொண்டு ஓடுகின்றார். தாமதத்தை உணர்ந்த மன்னன் பரிசத்துசன் வேதியரை சமாதானப்படுத்தி அழைத்துவரச் செய்கின்றான் இருமனதோடு இக்காரியம் செய்யவில்லை. உடலின் வலப்பாகத்தைப் பிரிய இடப்பாகம் இசைகின்றது கவலைவேண்டாம் எனவே நிச்சயம் உன்மகன் கிடைப்பான் என்கின்றான்.

மனைவி தாங்க மகன் தாம்பிரத்துசன் வாள் கொண்டு தந்தை பரிசத்துசனின் கால் முதற்கொண்டு சரிபாகமாக வகிர்ந்து கழுத்துப் பகுதிக்கு வாள் வரும்போது வேதியராகிய கண்ணன் வாளைப் பறித்துத் தடுத்து வாமன அவதாரம் காட்டி மன்னனின் அகத்திருளைப் போக்குகின்றான். உண்மையை உணர்ந்த பரிசத்துசன் பரிவேள்விக்குத் தம்மால் நேர்ந்த இடருக்கு வருந்தி வேள்விப்பரியை விடுவிக்கின்றான். மாயனையும் அருச்சுனனையும் அரியாசனத்தில் அமரச் செய்து பணிவிடைகள் செய்கின்றான். சில நாட்கள் கழிந்தபின் பரிசத்துசன் மகன் தாம்பிரத்துசனுக்கு அரியாசனத்தைக் கொடுத்துவிட்டுப் படையுடனும் திறைப்பொருட்களுடனும் தன்னுடைய வேள்விப் பரியுடனும் பரிசத்துசன் பரிவேள்விப் பயணத்தில் இணைகின்றான்.

17. வீரவர்மன் போர்ச் சருக்கம்

இரத்தின நகரைவிட்டுத் தென்மேற்கு நோக்கிப் புறப்பட்ட தருமராசனின் வேள்விப்பரிகள் இருபத்திரண்டாவது நாளில் சரஸ்வதி நகரை அடைந்தன. இந்நகரின் அரசன் வீரவர்மன் என்றும்; அவனுக்குச் சுளவன், சுலோபன் ஆகிய இருபுதல்வர்களும், அங்கமலாணி என்ற ஒரு புதல்வியும் உண்டு என்றும்; அசுரகுல அங்கமலாணி தேவகுல எமதருமராசனை மணந்து சரஸ்வதி நகரில் வாழ்ந்து வருகின்றாள் என்றும் அருச்சுனனுக்கு முனிவர் வைசம்பாயனர் எடுத்துரைக்கின்றார்.

அருச்சுனன் அமிர்தனை நோக்கித் 'தேவகுல எமதருமராசன் அசுரர்குல அங்கமலாணியை மணந்தது எங்ஙனம்' என்று வினவுகின்றான். 'மன்னன் வீரவர்மன் மகள் அங்கமலாணிக்குத் தக்க சமயத்தில் சுயம்வரம் நிகழ்த்த நாள் குறித்தான். ஆனால் அங்கமலாணியோ தேவரில் எமதருமராசனுக்கு அன்றி நரர் எவர்களுக்கும் மன்றல் சூட்டமாட்டேன்' என்கின்றாள். தேவர்குல திலகன் எமதருமராசன் இதற்கு ஒருபோதும் இசையான் என்று வீரவர்மன் எடுத்துக்கூறியும் அங்கமலாணி கேட்பதாக இல்லை. விதிப்படி நடக்கட்டும் என்று வீரவர்மன் சுயம்வரம் நிகழ்ச்சியை நிறுத்திவிடுகின்றான் எமதருமராசனை மணக்க வேண்டி அங்கமலாணி கடுந்தவம் புரிகின்றாள் இவளின் தவமகிமையை உணர்ந்த எமதருமராசன் வீரவர்மனிடம் அங்கமலாணியை மணம் செய்து தர

வினவுகின்றான் 'என் மகளை மணக்க வேண்டுமாயின் மணம் புரிந்த பின் இங்கேயே இருக்க வேண்டும்' என்று வீரவர்மன் கட்டளை இடுகின்றான். இக்கட்டளையை ஏற்றுக் கொண்டு எமதருமராசன் சரஸ்வதி நகரிலேயே அங்கமலாணியுடன் வாழ்ந்து வருகின்றான் என்று அமிர்தன் கூறுகின்றான்.

இவ்வேளையில் சரஸ்வதி நகரின் வடக்கே அமைந்துள்ள தர்ம நதியினை அடுத்துள்ள காட்டில் வீரவர்மன் புதல்வாகளிருவரும் கான் வேட்டைக்கு வருகின்றனர். அவர்கள் தருமராசனின் வேள்விப்பரி தங்கள் நகருக்குள் வருவதைக் காண்கின்றனர். 'வேள்விப்பரியை நம்மண்ணில் நடக்கவிட்டவர் யார்? அதைப் பிடித்து வாருங்கள்' என்று அமைச்சருக்கு உத்தரவிடுகின்றனர். சுளவன், சுலோபன் ஆகியோரின் கட்டளைப்படி அமைச்சர் வேள்விப்பரியுடன் தொடர்ந்து வரும் படைகளையும் வீழ்த்தி வேள்விப்பரியைக் கைது செய்து வருகின்றனர். இதுவரை இல்லாத கான் வேட்டை இன்று நிகழ்ந்தது என்ற மகிழ்ச்சியில் வீரவர்மன் புதல்வர்கள் இருவரும் மன்னன் முன்பு வேள்விப்பரிகளுடன் நிற்கின்றனர்.

வேள்விப்பரிகளின் மீது எழுதப்பெற்ற வாசகங்களைக் கண்டு ஆவேசம் கொண்ட வீரவர்மன் படைத்தலைவரைப் பார்த்து போருக்கு ஆயத்தமாகச் சொல்கின்றான் மன்னன் ஆணை நிறைவேற்றும் படைத்தலைவர் தந்திராதிகர் ஆதிசேஷவியூகமாக போர்க்களம் அமைக்கின்றார். மன்னன் மைந்தர் இருவர் தலைமையில் படை புறப்படுகின்றது. அப்போது எமதருமராசன் குறுக்கிட்டு முன்னைப்போரில் தன் தந்தை இந்திரனுக்குரிய காண்டவ வனத்தை அழித்த அருச்சுனனைப் பழிவாங்க எனக்கொரு சந்தர்ப்பம் கொடு என்கின்றான். மன்னனின் இசைவும் கிடைத்து விடுகின்றது. எமதருமராசன் ஆவேசத்தோடு போர்க்களம் புகுகின்றான்.

அதே வேளையில் அருச்சுனன் புதல்வன் பப்பரவாகனன் படையைக் கருட வியூகமாக அமைகின்றான். போர்க்களத்தில்

பப்பரவாகனன் அசுரரை அழித்து இலங்கையைத் தீக்கிரையாக்கிய அனுமனை முன்னிலைப் படுத்தியதைப் பார்க்கின்றான். இக்கொடியவன் இங்கு வந்ததென்ன? இலங்கைப் போரில் இராமனிடத்தில் இருந்தவன், இங்குக் கண்ணனிடத்திலும் வந்தானோ என்று மனங்கலங்குகின்றான். அப்போது போர்க்களத்துள் அங்கமலாணி வந்து எமதருமராசனை அழைத்துச் சென்று விடுகின்றாள்.

எமதருமராசன் தென்திசை நோக்கிச் செல்வதைக் கண்ட அருச்சுனனின் படைகள் வெற்றிக்களிப்பில் ஆரவாரிக்கின்றன. அநுசாளுவன், அமிர்தன் , அநிருத்தன், பரிசத்துசன், பிரத்யும்நன், பப்பரவாகனன், விடகீதனன் மற்றும் அமைச்சர்கள் அனைவரும் போர் முடிந்துவிட்டதாகக் கருதி வில்லையும் கிரீடத்தையும் கீழே இறக்குகின்றனர்.

அவ்வேளையில் எமதருமராசன் போர்க்களத்திலிருந்து நடுங்கி, ஒதுங்கியதன் பின் வீரவர்மன் புதல்வர்களிருவரும் சினங் கொண்டு போர்க்களம் புகுந்து வில் மற்றும் கிரீடம் இறக்கி வைத்தோர் முன் நின்று ஆர்பரித்துப் போருக்கு அழைக்கின்றனர். அக்ரூரன், கிருதவர்மன், நீலத்துவசன், சுகலீலன், சுவேதன், அநுசாளுவன், அணிருத்ரன் , விடகீதனன் ஆகியோர் ஒருவர் பின் ஒருவராகச் சுளவன் மற்றும் சுலோபன் ஆகியோரின் தாக்குதலைச் சமாளிக்க முடியாமல் வீழ்கின்றனர்

.போர்க்களத்தின் நிகழ்வுகளைக் கண்ட பப்பரவாகனின் அமைச்சன் சுபுத்தி மிகச் சினங்கொண்டு சுளவன், சுலோபன் ஆகியோரை எதிர்க்கின்றான். அவனும் இறுதியில் வீழ்கின்றான். அப்போது, சுபுத்தி எதிரியைப் பார்த்து, 'வருடந்தோறும் திறை பெற்று வாழ்ந்து வந்த வாழ்வு இப்போருக்குப் பிறகு மாயமாகி பிச்சையெடுத்து வாழும் நிலைக்கு ஆளாகப் போகிறீர்கள்' என்று சாபம் கொடுக்கின்றான்.

போர்க்களம் சென்ற அசுரர்களும் அமைச்சர்களும் ஒருவர் பின் ஒருவர் வீழ்வதைக் கண்ட பப்பரவாகனன் அதிக ஆவேசத்துடன்

போர்க்களம் புகுந்து கடும்போர் புரிந்து வீரவர்மன் புதல்வர்களை வீழ்த்துகின்றான். அருச்சுனன் புதல்வன் பப்பரவாகனன் தன்னுடைய புதல்வாகளை வீழ்த்தினான் என்று கேள்வியுற்ற வீரவர்மன் போர்க்களம் புகுகின்றான். போர்க்களத்தில் பப்பரவாகனன் வீரவர்மனை எதிர்க்கின்றான். பப்பரவாகனன் சிறுபிள்ளை என்பதால் அவனுடன் போர்புரிய மனமில்லாமல் அருச்சுனனை அழைக்கின்றான். பப்பரவாகனன் வீரவர்மன் சொல்வதைக் கேட்காமல் வீரவர்மன் மீது கணைகளைத் தொடுக்கின்றான். ஆத்திரம் கொண்ட வீரவர்மன் சரமாரியாகக் கணைகள் தொடுத்து பப்பரவாகனனை வீழ்த்துகின்றான்.

அதன்பிறகு அருச்சுனன் போர்க்களம் புகுகின்றான். 'தனஞ்சயன் , விசயன், சவ்யசாகி, பற்குணன், காண்டீபன் என்று பல பெயர்களைப் பெற்ற அருச்சுனனோ நீ? உனக்குத் தயிரியமிருந்தால் என்னுடன் மோதிப்பார்' என்று வீரவர்மன் அறைகூவல் விடுகின்றான். நீண்ட நேரம் இருவரும் சமநிலையில் போர்புரிகின்றனர். விட்ட கணைகள் அனைத்தையும் அருச்சுனன் பொடிபொடியாக்குவதைக் கண்ட வீரவர்மன் மிகக் கோபமடைந்து பலநூறு கணைகளை ஒரு சேர எய்கின்றான். இக்கணைகள் அருச்சுனன் உடலைத் தாக்கி மயக்கமடையச் செய்தன. அப்போது கண்ணன் அருச்சுனன் மார்பைத் தட்டிப் புத்துணர்ச்சியடையச் செய்கின்றான். அதன்பிறகு அருச்சுனன் விட்ட கணைகள் வீரவர்மன் உடலைத் துளைத்து மயக்கமடையச் செய்தன. பின், மயக்கம் தெளிந்த வீரவர்மன் ஆவேசத்தோடு விட்ட கணைகள் அருச்சுனனை நிலைகுலைய வைத்தன. 'கண்ணா! இடர்ப்பாட்டில் இருக்கின்றேனே காப்பாற்று' என்று அழைக்கும் அருச்சுனனின் குரல் கேட்டு தூதுவனாகிய அனுமன் அருச்சுனன் மீது பாயவந்த கணைகளை ஏற்றுக் கொண்டு வீரவர்மனுடன் போர்புரிகின்றான். இருவரும் சமநிலையில் போர்புரிந்து இருவரும் மயக்கமுறுகின்றனர். ஒரு முகூர்த்த நேரம் கழித்து, மயக்கம் தெளிந்து இருவரும் எழும் போது வீரவர்மனைக் கண்ணன் காலால் உதைக்கின்றான்.

கண்ணன் கால்பட்டவுடன் வீரவர்மன் ஞானம் பெறுகின்றான். வீரவர்மன் கண்ணனை வணங்கி, 'எல்லா உயிரும் உனக்கு அடிமை; நான் உன்னை அடிமையாக்குவது எங்ஙனம்; உனக்கு விருப்பமானவர்கள் எனக்கும் விருப்பமானவர்களே' என்று கூறி போர் வெறி துறந்தவனாய் வீரவர்மன் கண்ணன் பின் வருகின்றான். இக்காட்சியைக் கண்ட அருச்சுனன் மகிழ்ச்சியடைகின்றான்.

கண்ணன் போரில் வீழ்ந்த உயிர்களை உயிர்ப்பிக்கின்றான். பப்பரவாகனன் வீரவர்மனிடமும்; சுளவன், சுலோபன் ஆகிய இருவரும் கண்ணன் மற்றும் அருச்சுனனிடமும் ஆசிர்வாதம் பெறுகின்றனர். வீரவர்மனின் வேண்டுகோளின்படி கண்ணன் மற்றும் அருச்சுனனைச் சார்ந்த அனைவரும் வீரவர்மன் அரண்மனைக்குச் செல்கின்றனர். வீரவர்மன் கண்ணனையும் அருச்சுனனையும் அரியாசனத்தில் அமர்த்தித் தக்க பணிவிடைகள் செய்து மகிழ்விக்கின்றான். இவ்வாறு அரண்மனையில் மூன்று நாட்கள் இருந்துவிட்டு மீண்டும் பரிவேள்விப் பயணம் குந்தளதேசம் நோக்கித் தொடர்கின்றது. இப்பயணத்தில் வீரவர்மன் தன்னுடைய படைகளுடனும் திறைப்பொருட்களுடனும் இணைகின்றான்.

18. சந்திரகாசன் போர்ச் சருக்கம்

பதினெட்டு நாள் பயணத்திற்குப் பிறகு சரஸ்வதி நகரைவிட்டுப் புறப்பட்ட வேள்விப்பரிகள் குந்தளதேசத்தை அடைந்தன. இந்நகரின் அரசன் சந்திரகாசன். இவனைப் பற்றிக் கூறுங்கள் என்று அருச்சுனன் வினவ, பரிசகேது, அமிர்தத்துசன், வீரவர்மன் ஆகியோர் 'இவனொரு பெருவீரன்; கண்ணன் அருள்பெற்றவன்; தருமங்கள் பல செய்யும் உத்தமன்; வம்புக்குச் செல்லான், வந்த வம்பை விடான் என்று கூறிக் கொண்டிருக்கும் போது, நாரதமுனிவர் அங்கு வருகின்றார்.

நாரத முனிவர் திருமாலை வணங்கிவிட்டு, 'எம்பெருமானே உன்னருள் பெற்ற சந்திரகாசனை உனக்குத் தெரியாததென்ன? இருப்பினும் விசயா! உனக்கு அறியவேண்டி அவனது பூர்வீக வரலாற்றை நானே கூறுகின்றேன், என்ன, மிக்க மகிழ்கின்றான் விசயன்.

'இவன் தந்தை கிரளீசன் குந்தளதேசத்தை ஆண்டவன். தரை முழுவதும் ஒருகுடைக்கீழ் ஆண்டவன் இவனுக்கு அழகிய மனைவி ஒருத்தி. இருவரும் மனமொத்து வாழ்ந்துவரும் வேளையில் விசயா! அரசி கருவுற்றாள் கருவுற்ற நிமித்தம் காண மன்னர் கிரளீசன் சோதிடரை வரவழைக்கின்றான். சோதிடர்கள் எல்லா பகைப் பொருத்தங்களையும் பார்த்துவிட்டு கருவுற்ற காலம் சரியில்லை, குழந்தை பிறக்கும் காலத்தில் மன்னா! உன் உயிர் பிரியும் என்றும், அதுகேட்ட உன் மனைவியும் உயிர் துறப்பள் என்றும், பகைவர் நின்நாடு, நகரம், கோட்டை அனைத்தையும் கைப்பற்றுவர் என்றும் ; அதன் பிறகு உன் குழந்தை மாலின் திருவருள் பெற்று இழந்த அனைத்தையும் பெற்று தரைமுழுதும் ஒருகுடைக்கீழ் ஆள்வன் என்றும்' கூறுகின்றனர்

இது கேட்ட கிரளீசன் வாழ்க்கையின் உண்மை நிலையை உணர்ந்து, உலக மக்களிடம் அன்பாக இருக்கின்றான். அன்னம், பசு, ஆடை போன்றவற்றைத் தானமாகக் கொடுத்து எல்லோரும் புகழும் மன்னனாகத் திகழ்ந்து வந்தான்.

பத்து மாதம் நிறைந்த வேளையில் அரசி அழகிய மகவு ஒன்றைப் பெற்றெடுக்கின்றாள். குழந்தை பிறந்த அதே வேளையில் மன்னர் கிரளீசனின் உயிர் பிரிகின்றது. இதுகேட்ட அரசி, குழந்தையைத் தாதியிடம் ஒப்படைத்துவிட்டுத் தானும் மடிகின்றாள் அரசனும் அரசியும் மடிந்ததைக் கேள்வியுற்ற சந்திரசேகரன் என்னும் குறுநில மன்னன் நாடு, நகர் கோட்டையைக் கைப்பற்றி ஆள்கின்றான்.

தாதியானவள் குழந்தை சந்திரகாசனை எடுத்துக் கொண்டு குந்தளதேச எல்லையைக் கடந்து சந்திரரேகை என்னும் நாட்டில் தாசியர்கள் வசிக்கும் பகுதிக்கு வருகின்றாள் இவன் என் மகன், தந்தையை இழந்தவன் என்று தாசியர்களிடம் கூறி அங்கேயே வளர்க்கலானாள். குழந்தையை அங்குள்ளோர் அனைவரும் அன்புடன் பாராட்டி வந்தனர்

குழந்தைக்கு ஆறு மாதம் ஆகும் வேளையில் தாதியனாவள் இறந்து விடுகின்றாள். ஆதரவற்ற குழந்தைக்குத் தாசியர்கள் ஆதரவு கொடுத்துத் தினமொருவர் முறைவைத்து வளர்ப்பதாக முடிவெடுக்கின்றனர்.

இவ்வாறாக, குழந்தை சந்திரகாசன் தினமொரு தாசியரின் அரவணைப்பில் வளர்ந்து ஐந்து வயது பாலகனாக உருப்பெற்றபோது, தன் வயது ஒத்த தாசியர் பிள்ளைகளுடன் விளையாடிக் கொண்டு, அவர்களைப் பிரிந்து, வெகு தொலைவில் அமைந்திருக்கும் வேதியர்கள் வாழும் பகுதிக்குள் சென்றுவிடுகின்றான்.

மன்னர்க்குரிய சாமுத்திரிகா லட்சணம் பொருந்திய குழந்தை சந்திரகாசன் நகரில் தனிமையில் அழுது கொண்டிருப்பதைக் கண்ட வேதியர்கள் அவனைத் தங்கள் குடிலுக்கு அழைத்து வருகின்றனர் அவ்வேளையில் குந்தளதேசத்து துட்டபுத்தி மந்திரியானவர் மன்னர்க்குரிய லட்சணங்கள் பொருந்திய குழந்தை அந்தணர்களிடம் இருப்பதைக் காண்கின்றான். இக்குழந்தை உங்களுக்கு ஏது? என்ற அந்தணர்களை வினவ, அவர்கள் 'இக்குழந்தை நகரில் தனியாக அழுது கொண்டிருந்தது. இக்குழந்தையின் அங்க லட்சணத்தைப் பார்க்கும் போது, இவன் தன்னுடைய பதின்மூன்றாம் வயதில் உலகையாளும் தன்மை பெற்றவனாக விளங்குவான்' என்று கூறுகின்றனர்.

இது கேட்ட மந்திரி அக்குழந்தையை என்னிடம் ஒப்படையுங்கள் என்கின்றார் மந்திரியின் குணமறிந்த அந்தணர்கள் மறுக்கின்றனர். பிறகு அந்தணர் ஒருவர் அக்குழந்தையை அவன் பெற்றோரிடம் ஒப்புவிக்க குழந்தை முன் செல்ல அந்தணர் பின் தொடர்கின்றார் துட்டபுத்தி மந்திரியானவர் இவ்விருவரையும் பின்தொடர ஏவலாளை அனுப்புகின்றான். அக்குழந்தையைக் கொல்லவும் ஏவலாளுக்குக் கட்டளை இடுகின்றான்

குழந்தை சந்திரகாசனைக் காணாது தாசிமார்கள் பல்வேறு இடங்களில் தேடி அலைந்து புலம்புகின்றனர். அந்தணர் அழைத்து வரும்

சந்திரகாசன் தாசியர் பகுதிக்கு வந்தும் பசுவைக் கண்ட கன்று துள்ளிவருவது போல் தாசியரைக் கண்டதும் குழந்தை சந்திரகாசன் துள்ளி ஓடி வருகின்றான். குழந்தை கிடைத்த மகிழ்ச்சியில் தாசியர்கள் வீடு செல்கின்றனர்.

அன்று குழந்தை வளர்க்கும் முறை தாசி தேவதத்தைக்கு இருந்தது. அவள் குழந்தையை அழைத்துக் கொண்டு குடில் சென்று அமுதூட்டி உறங்க வைத்துவிட்டு, அன்றைய மணமகனுடன் கூடிக்குலாவி உறக்கம் கொள்கின்றாள். இவ்வேளையில் , துட்டபுத்தி மந்திரி அனுப்பிய ஏவலாள் எல்லோரும் உறங்கிய பின் குழந்தை சந்திரகாசனைத் தூக்கிக் கொண்டு இருள் சூழ்ந்த வனத்திற்கு வருகின்றான். தூங்கிக் கொண்டிருந்த குழந்தை விழித்துப் பார்க்கின்றான். தன்நிலை உணர்ந்து, திருமாலின் திருநாமம் ஆயிரம் கூறி காப்பாற்று என்கின்றான்.

விசயா! சின்னஞ்சிறு பாலகன் திருமாலின் திருநாமம் ஆயிரம் கூறியதன் மர்மம் என்ன என்று யோசிக்கின்றாய். அவற்றையும் கூறுகின்றேன் கேள் இப்பாலகன் ஐந்து அகவையும் ஐந்து மாதமும் கடந்த பின்பு விந்தகிரியில் வாழும் சடபரிதர் என்னும் முனிவர் சாளக்கிராமம் என்னும் அனந்தகோபாலரைத் தினமும் பூசித்துப்பெட்டியில் வைத்து காத்துவரலானார் . ஒரு நாளிரவு சடபரிதரின் கனவில் அனந்தபோபாலர் தோன்றி 'தயிர் பால் நெய் விற்கும் ஆய்ச்சியரிடம் இருக்க விரும்புகின்றேன். என்னை அவர்களிடம் சேர்ப்பிப்பாயாக' என்று கூறி மறைகின்றார்.

சடபரிதர் அனந்த கோபாலர் கனவில் இட்ட கட்டளையை ஏற்று சாளக்கிராமத்தை ஆய்ச்சியர் ஒருவளிடம் கொடுத்துவிட்டுப் போகின்றார். அவளோ, தான் விற்கும் விலைப்பொருட்களுக்குள் வைத்து வியாபாரம் செய்து வருகின்றாள். ஒருநாள் குழந்தை சந்திரகாசனுக்கு பால்மொண்டு கொடுக்கும் வேளையில் சாளக்கிராமம் குழந்தையின் வாய்க்குள் சென்றுவிடுகின்றது. அப்போது குழந்தையின்

வாயில் உம்முடைய பஞ்சாயுதத்தை மக்கள் கண்டு வியப்படைந்தனர். அதுநாள் கொண்டு அக்குழந்தை உன்னுடைய திருவருள் பெற்றவனாக வளர்ந்து வருகின்றான்' என்கின்றார்.

குழந்தையின் நாக்கிலிருந்து திருமாலின் திருநாமங்கள் தடையின்றி வருவதைக் கண்ட கொலையாளி ஏவலாள் அக்குழந்தையை விடுவித்து விடுகின்றான். அப்போது குழந்தையின் பாதச் சிறுவிரலை அரிந்து எடுத்துக் கொண்டு வேரொருவரைக் கொன்றுவிட்டு குழந்தையைக் கொன்றதாக மந்திரிக்குப் போக்குக் காட்டுகின்றான்.

குழந்தை தனியாக வனத்தில் அழுது கொண்டிருந்ததை அந்நாட்டுக் குறுநில மன்னர் புலிந்தன் வனவேட்டைக்கு வந்தபோது காண்கின்றான் தனக்கு இதுவரை குழந்தைப் பேறு இல்லாமல் இருந்த அவனுக்கு இக்குழந்தை கிடைத்ததும் மகிழ்ச்சியடைந்து அரண்மனைக்கு எடுத்துச் செல்கின்றான். அரசியும் குழந்தை கிடைத்தது கண்டு மகிழ்ச்சியடைகின்றாள். இருவரும் குழந்தை மீது அன்பு பாராட்டி வாள் பயிற்சி. குதிரையேற்றம், யானையேற்றம், கல்வி போன்றவற்றை முறையாகக் கற்பிக்கின்றனர். அனைத்துப் பயிற்சியிலும் தேர்ச்சி பெற்று பன்னிரண்டு வயது வீரனாகச் சந்திரகாசன் வளர்ந்தான்.

இவ்வேளையில் மன்னர் புலிந்தன் சந்திரகாசனுக்கு இளவரசு பட்டம் சூட்டுகின்றான். வேடர்குலம் ஓங்க சந்திரகாசன் பலதேசத்து மன்னர்கள் மீது படையெடுத்துச் சென்று, அனைவரையும் வெற்றிகொள்கின்றான். பின்னர் திறைப்பொருள் பெற்றுக் கொண்டு மாபெரும் வீரனாகத் தன்னாடு திரும்புகின்றான். சந்திரகாசனின் வீரத்தைக் கண்டு புலிந்தன் மகிழ்வெய்துகின்றான்.

கிடைத்த திறைப்பொருள்களைப் பங்கிட்டுத் தான் திறைசெலுத்தும் குந்தளதேசத்துக்குப் புலிந்தன் அனுப்பிவைக்கின்றான். மிக்க திறைப்பொருள் வந்திருப்பதைக் கண்ட குந்தளதேச மன்னர் சந்திரசேகரர் 'இது எவ்வாறு சாத்தியம்' என்று மந்திரியை வினவுகின்றார். மந்திரி, சந்திரகாசன் என்னும்

அவன் மகன் பெருவீரனாகத் திகழ்கின்றான்: உலகிலுள்ள மன்னர்களையெல்லாம் வென்று, கொண்டு வந்த திறைப்பொருள்கள் இவை' என்கின்றான்.

இது கேட்ட மன்னர் சந்திரசேகரன் புலிந்தனைப் பாராட்டி வரச்சொல்லி துட்டபுத்தி மந்திரியைத் தூது அனுப்பிவைக்கின்றார். மந்திரியானவர் புலிந்தன் நாடான சந்திரரேகைக்கு வருகின்றான். மந்திரி வருவதை அறிந்த புலிந்தன் ஒருகாத தூரம் எதிர்கொண்டு அழைத்து வந்து, சந்திரகாசனை அறிமுகம் செய்து, உபசாரங்கள் பல செய்கின்றான்.

இரவெல்லாம் மந்திரிக்கு உறக்கம் வரவில்லை. அன்று அந்தணர்களிடையே கண்ட சிறுவனல்லவா இவன்! நாம் கொல்லச் சொன்ன பாலகனல்லவா இவன்! இவன் கால்விரல் ஒன்று இல்லாமையையும் கண்டேனே! அப்படியானால் இவன் இன்னும் உயிரோடுதான் இருக்கின்றானா? என்று எண்ணமிட்ட மந்திரி, இவனைக் கொல்ல மீண்டும் சதித்திட்டம் தீட்டுகின்றான்.

'இவ்வோலை கொண்டு வருபவனைக் கொன்றுவிடு' என மடலொன்று தன் தமையனுக்கு எழுதிச் சந்திரகாசன் மூலம் கொடுத்தப்புகின்றான் புலிந்தனின் கட்டளைப்படி மந்திரியின் மடலை குந்தளதேசத்தில் இருக்கும் மந்திரியின் மகனிடம் கொடுக்க சந்திரகாசன் சென்று கொண்டிருக்கும் வேளையில், களைப்பு மேலிட ஓர் வனத்தில் ஓய்வெடுத்துக் கொண்டிருக்கின்றான் அப்போது மந்திரிமகள் இவனைக் கண்டு காதல் கொள்கின்றாள். உறக்கத்தில் சந்திரகாசன் வைத்திருந்த ஓலை தவறி விழுவதைக் கண்ட மந்திரி மகள் சண்பகமாலை அதை எடுத்துப் பார்க்கின்றாள். தந்தையின் துட்டபுத்தியைக் கண்ட சண்பகமாலை ஓலைச்செய்தியை, 'இவ்வோலை கொண்டு வருபவனுக்கு தங்கையை மணம் முடிக்க', என்று மாற்றி எழுதி முத்திரையிட்டு இருந்த இடத்திலேயே வைத்துவிட்டு மனை புகுகின்றாள்.

உறக்கம் தெளிந்த சந்திரகாசன் குந்தளதேசத்திற்குள் மந்திரி மகனைக் கண்டு தான் கொண்டு வந்த ஓலையைத் தருகின்றான். தந்தையின் கட்டளை இதுவென ஏற்றவன் மன்னர் சந்திசேகரனிடம் அனுமதி பெற்று தங்கையை ச் சந்திரகாசனுக்கு மனம் முடிக்கின்றான்.

சந்திரகாசனை மன்னர் சந்திரசேகரன் அழைத்து விருந்தளிக்கின்றான் சந்திரகாசனின் பொலிவைக் கண்டவர் தன் மகள் விசயைக்கு மணமகனாக வர வேண்டியவன் மந்திரி மகளுக்கு ஆனானே என்று எண்ணுகின்றார்

சந்திரகாசன் மூலம் அனுப்பிய தம்முடைய கட்டளையைத் தன் மகன் இந்நேரம் நிறைவேற்றியிருப்பான் என்று எண்ணமிட்ட மந்திரி புலிந்தனை இழிவாகப் பேசிவிட்டு குந்தளதேசம் திரும்புகின்றான். அங்குச் சந்திரகாசன் தனக்கு மருமகனாக ஆகியிருப்பது கண்டு குழம்புகின்றான் மகனை அழைத்து உசாவுகின்றான். எங்கோ தவறு நிகழ்திருப்பதை உணர்ந்த மந்திரி மீண்டும் சதித்திட்டம் தீட்டுகின்றான். முன்னொருமுறை ஏவலாள் மூலம் போட்ட திட்டம் பாழாகியதை உணர்ந்த மந்திரி அவனைக் கொண்டே மீண்டும் ஒரு திட்டம்போடுகின்றான். காளி கோயில் பூஜையில் சந்திரகாசன் கொலைபடுவது நிச்சயம் என்று கூறுகின்றான் ஏவலாள்

இது இப்படி இருக்க, மன்னன் சந்திரசேகரன் நாடகம் பாத்துக்கொண்டிருக்கின்றான் அப்போது நாடக மாந்தர்கள் தலையற்ற பிணங்களாகக் காட்சி தருவதைக் கண்டவன், முதியோரை அழைத்து இந்நிமித்தத்தின் காரணத்தைக் கேட்கின்றான் அதற்கு அவர்கள், மன்னா! இன்னும் இரு மாதங்களுக்குள் உம் உயிர் பிரிய இது அறிகுறி, என்கின்றனர் இது கேட்ட மன்னன் சந்திரசேகரன் தன் மகள் விசயைக்கு மணம் முடிக்க எண்ணுகின்றான்.

மன்னன் எண்ணமிட்ட அவ்வேளையில் மந்திரி மகன் சந்திரகாசனை காளி கோயில் பூசைக்கு அழைத்து வருகின்றான் சந்திரகாசன் நினைவு மன்னர்க்கு வர'வே, இவனே தன் மகள் விசயைக்கு மணாளன் என்று கருதி மந்திரி மகனுடன் வரும சநதிரகாசனை அழைத்து மணாளனாக்கிப் பட்டாபிஷேகமும் செய்ய முடிவெடுகின்றான்

இச்செய்தியைத் தநதைக்குச் சொல்ல மந்திரி மகன் காளி கோயிலுக்கு வருகின்றான் வருபவன் சந்திரகாசன் என்று காளி கோயிலில் மறைந்திருக்கும் மந்திரியின் ஏவலாள் இவனைக் கொலை செய்துவிடுகினறான. இதனை அறிந்த மந்திரி தவறு உணர்ந்து தானும் அங்கேயே மாள்கின்றான்

பொழுது விடிந்ததும் இருவரும் காளி கோயிலில் பிணமாக இருப்பதை அனைவரும் அறிந்து அங்குச் செல்கின்றனர். மன்னர், மக்கள் விலகிய பின் திருமால் கிருபை பெற்ற சநதிரகாசன் காளி தேவியிடம் வேண்டி இவ்விருவரையும் உயிர்ப்பிக்கச் செய்கின்றான் உயிர்த்தெழுந்த மந்திரியும் மந்திரி மகனும் சந்திரகாசனிடம் மன்னிப்பு கோருகின்றனர். உங்களின ஊழ்வினை இப்படி நிகழ நேர்ந்தது என்று கூறி இருவரிடமும் சந்திரகாசன் நட்பு பாராட்டுகின்றான் பிறகு மந்திரியானவன் சந்திரகாசன் தந்தை புலிந்தனிடமும் சென்று மன்னிப்பு கேட்கின்றான்

இப்படியாக, எதிரியையும் மன்னிக்கும் குணம்படைத்த சந்திரகாசன் இத்தேசத்து மன்னனாக வீற்றிருக்கின்றான் என்கின்றார்

இவ்வாறு நாரத முனிவர் அருச்சுனனுக்குச் சந்திரகாசனின் பூர்வீக வரலாற்றைக் கூறி முடிக்கும் வேளையில், சந்திரகாசனின் இருமகன்கள் (சண்பகமாலையின் மகனும, விசயையின் மகனும்) இருவரும் கான் வேட்டைக்கு வருகின்றனர் வேள்விப்பரிகள் தங்கள் நாட்டிற்குள் வருவதைக் கண்டவர் அவற்றைப் பிடித்துக் கொண்டு தந்தை முன் நிறுத்துகின்றனர். வேள்விப்பரிகளின் மீது காணப்பெறும் வாசகங்களைக் கண்டு மன்னர் சந்திரகாசன் சினந்தெழுகின்றான் சந்திரகாசன் தன்னுடைய இரு மகன்களோடு போருக்கு ஆயத்தமாகின்றான்.

விசயனுக்கும் சந்திரகாசனுக்கும் போர் மூளப்போவதை உணர்ந்த நாரத முனிவர், போரைத் தடுக்கச் சந்திரகாசனிடம் சமாதானம் பேசுகின்றார் இருவல்லவர்கள் போரிடுவது நல்லதல்ல, விசயனின பெருமைகளைப பலவாறாக எடுத்தோதி அவனுக்குத் திருமால் சாரதியாகத் துணையாயிருக்கின்றார். எனவே, போர் வேண்டாம் என்கின்றார். எல்லாம் தெரிந்தே விசயனைப் போருக்கு அழைகின்றேன். சிவ பக்தனான விசயன் முன்னொருமுறை சிவபெருமானிடமே போரிட்டது போல் திருமால் பக்தனான நான் நல்லது நடக்க வேண்டி, திருமாலிடமே போரிடத் துணிந்துவிட்டேன் என்கின்றான் நாரதர் மனம் இருவரும் போர் செய்வதை முற்றிலும விரும்பவில்லை. எனவே, நாரதர் ஒரு யோசனை சொல்கிறார் நீங்கள் இருவரும் வலிமை மிக்கவாகள் ஆனால் இப்போரில் அதிகம்

மடியப்போவது வீரர்கள் தானே! அதனால் நீங்கள் இருவர் மட்டும் போரிடுங்கள் என்கின்றார். சந்திரகாசன் இவ்வேண்டுகோளை ஏற்று, 'ஆளுக்கொரு சரம் விடுவோம்: வெல்பவர் யார் தோற்பவர் யார் என்று பார்ப்போம்' என்கின்றான்.

போர் தொடங்குகின்றது. முதலில் அருச்சுனன் சரம் விடுகின்றான். அதன்பிறகு சந்திரகாசன் ஒரு சரம் விடுகின்றான். இரண்டு சரங்களும் எதிர்கொண்டு மடிகின்றன. இதனைக் கண்ட அருச்சுனன் சந்திரகாசனின் வில்லாற்றலைப் புகழ்கின்றான். சந்திரகாசன் தான் சொல்லிய சொல்படி போர்க்கள இரதத்திலிருந்து கீழே இறங்கி விசயனை நோக்கிச் செல்கின்றான். விசயனும் எதிர்கொண்டு வந்து சந்திரகாசனைத் தழுவி நட்பு கொள்கின்றான்.

சந்திரகாசன் திருமாலை அடிதொழுது, ஏனைய மன்னர்கள் மற்றும் அமைச்சர்களை வணங்கித் தன்மனைக்கு அழைத்துச் செல்கின்றான். ஐந்து நாட்கள் அவர்களுக்குத் தக்க பணிவிடைகள் செய்கின்றான். ஆறாம் நாள் காலையில் வேள்விப் பயணம் வடமேற்கு திசைநோக்கித் தொடர்கின்றது. இப்பயணத்தில் சந்திரகாசன் தன்னுடைய திறைப்பொருள்களுடனும் படைகளுடனும் இணைகின்றான்.

19. சமுத்திரச் சருக்கம்

சரஸ்வதி நகரை விட்டு வேள்விப்பரிகள் இரண்டும் இரு நாழிகை தூரம் சென்றன. குறுக்கே அகன்ற கடல் ஒன்று வருகின்றது. அக்கடலில் பரிகள் இரண்டும் தாவி குதித்து மாயமாய் மறைந்துவிடுகின்றன. இதைக் கண்டு அனைவரும் நடுங்குகின்றனர்.

செய்தியறிந்த விசயன் ஆவேசம் கொண்டு, 'இது எப்படி நடந்தது? இதைச்செய்தவன் யார்? எனத் திருமாலைக் கேட்கின்றான். நடந்ததை உணர்ந்த திருமால் கடலுக்குள் சென்று தேட வேண்டும் என்கின்றார். 'எப்படி கடலுக்குள் செல்ல முடியும்?' என்று விசயன் வினவ, சலதம்பன மந்திரம் தெரிந்தவர்கள் மட்டும் கடலுக்குள் செல்லலாம்' என்கின்றார். உடன் வரும் இருபத்தொரு அரசர்களும் தங்களுக்குச் 'சலதம்பன மந்திரம்' தெரியும் என்று கூறுகின்றனர்.

இருபத்தொரு அரசர்களும் ஆளுக்கொரு தேரில் ஏறி சலதம்பன மந்திரம் சொல்லி கடலுக்குள் திக்கெட்டும் சென்று வேள்விப்பரிகளைத் தேடுகின்றனர். ஏழு பெரிய கடல்களையும் ஆறு சிறிய கடல்களையும் தேடிய பின்னர் திருப்பாற்கடல் பகுதிக்குச் செல்கின்றனர். அங்கு வேள்விப் பரிகளின் தடையத்தைக் கண்டு மிக்க மகிழ்ச்சி அடைந்து, திருமாலை முன்னிருத்தித் தொடர்கின்றனர்.

அங்கு மூலவேர் இதுவெனத் தெரியாமல் இருபத்தெட்டு லட்சத்து எண்பதினாயிரம் விழுதுகள் படர்ந்த ஆதி ஆலமரம் ஒன்று இருப்பதைக் காண்கின்றனர். எழுபத்தையாயிரம் யோசனை உயரமுள்ள ஒரு விழுதின் பக்கமாக அனைவரும் செல்கின்றனர். அந்த விழுதின் வேர்ப்பகுதியில் முனிவர் ஒருவர் தவமிருப்பதையும் அவர்தம் குடிலில் வேள்விப்பரிகள் கட்டப்பெற்றிருப்பதையும் காண்கின்றனர்

சீடர்கள் எவருமின்றி தனிமையில் நடுக்கடலில் தவம் புரியும் முனிவரைப் பார்த்து அனைவரும் வியக்கின்றனர். முனிவர் தவநிலைகளையும் வரை காத்திருந்து, திருமால் உள்பட அனைவரும் வணங்கி நிற்கின்றனர் தான் வணங்கும் மாலே, தன்னை வணங்கி நிற்பதைக் கண்ட முனிவர் வியக்கின்றார். 'உலகமே உம்மை வணங்க நீர் என்னை வணங்குவது தகுமோ' என்று கூறிய முனிவர் திருமாலை வணங்குகின்றார்.

இவ்வேளையில் விசயன் முனிவரைப் பார்த்து ' தனிமையில் இங்குத் தவம் செய்வதேன்? எங்கள் நாட்டிற்கு வந்தால் தக்க ஏற்பாடுகளைச் செய்து தருவோமே ! ' என்கின்றான். அதற்கு முனிவர், பற்றற்ற இவ்வுலகில் ' நான் எங்குத் தவம் செய்தால் என்ன?' என்கின்றான். மேலும் விசயன், ' எவ்வளவு காலமாக நீங்கள் இங்கு இருக்கிறீர்கள்' என்கின்றார். அதற்கு முனிவர் 'ஆயிரம் சதுர் ஈர்யுகமாக நான் இங்குத் தவம் செய்து வருகின்றேன். அதாவது இப்பிறவியில் உன் மைத்துனராக இருக்கும் கிருஷ்ணன் ஆலிலைக் கண்ணனாக அவதரித்த நாள் முதல் நான் திருபாற்கடலில் தவம் செய்து வருகின்றேன். இதுவரை பல்வேறு அவதாரங்களில் 47 முறை கண்ணனைத் தரிசித்துவிட்டேன். என் பெயர் பகத்தாப்பியர். இன்று எனக்குக் கிடைத்திருப்பது 48 ஆவது தரிசனம் ' என்று கூறுகின்றார்.

திருமால் ஆலிலைக் கண்ணனாக அவதரித்த சிறப்பினை முனிவர் விசயனுக்குத் தெளிவுறுத்துகின்றார். பின்னர் இத்தனை யுகமாக நான் தவம்புரிந்தும் கண்ணனுக்குப் பணிவிடைசெய்யும் பாக்கியம் அற்றவனாகவே உள்ளேன். எனவே, மாலே! என்னுடைய பணிவிடைகளையும் உபசரிப்புகளையும் ஏற்றுக்கொள்ள வேண்டும்' என்கின்றார். முனிவரின் விருப்பப்படி மால் உணவருந்துகின்றார் உணவருந்திய பின் நாரத முனிவரோடு திருமாலும் குடிலுக்கருகிலுள்ள அழகிய பொய்கை ஒன்றைக் காண்கின்றனர். திருமாலின் கட்டளைப்படி நாரதமுனிவர் பொய்கையில் கால் வைத்தவுடன் முன் நிகழ்வுகள் நினைவுக்கு வந்தவராக மயக்கத்தில் சாய்கின்றார். அப்போது முனிவா, ஒரு காலத்தில் நாரதமுனிவா அழகிய பெண்ணாகியதையும் வேடனுக்கு மனைவியாகியதையும் இரண்டு பிள்ளைகளுக்குத் தாயாகியதையும் வறுமையில் கணவன் மற்றும் இருபிள்ளைகளைக் கொன்று தான் மட்டும் வாழ்வதைக் கண்ட முனிவர் ஒருவர் இடுப்புக்குமேல் ஆணும் பெண்ணும்கலந்த உருதாங்கிக்கிடப்பாயாக எனச் சாபமிட்டதையும் பின்னர் திருமாலின் அருளால் மீட்சி பெற்றதையும் கூறுகின்றார்

முக்காலமுணர்ந்த முனிவரை விசயன் வணங்கி நிற்க, முனிவர், விசயனை நோக்கி, ' தனஞ்சயா! முகுந்தன் உன் பக்கம் இருக்கும் வரை செயந்தானே! ஏன் கலங்குகின்றாய். நீர் நடத்திவரும் அசுவமேதயாகம் சிறப்புடன் அமைய வாழ்த்துகின்றேன்' என்கின்றார். மகிழ்ச்சியடையாத விசயன் 'திருமாலை ஆலிலையில் கண்டவர் நீங்கள், அவர் நினைவாகவே பல யுகங்கள் கண்டவர் நீங்கள்; எங்கள் யாகத்துக்கு உங்களுடைய வருகையும் வேண்டும் ' என்று வணங்கி நிற்கின்றான்.

விசயனின் வேண்டுகோளை முனிவர் ஏற்றுக்கொள்கின்றார். அதன் பிறகு முனிவரைத் தேரில் ஏற்றி, விசயன் வெண்சாமரை வீசவும் பார்த்தன் தேரோட்டவும் அத்தேரைத் தொடர்ந்து இருபத்தொரு அரசர்களும் தனித்தனித் தேர்களில் பின்தொடரவும் பார்த்தன்தேருக்குமுன் வேள்விப் பரிகள் செல்லவும் பயணிக்கின்றனர்.

இப்படியாக வேள்விப்பரிப்பயணம் சராசந்தனுடைய நாடு நோக்கிச்சென்றது. சராசந்தன் வேள்விப்பரிகள் வருவதைக் கேள்வியுற்று எதிர்கொண்டு அழைத்து வணங்கித்திறைப்பொருள் கொடுத்தனுப்புகின்றான்

இதேபோல் வழிநெடுக பல அரசர்கள் வேள்விப் பரிகளை வணங்கித் திறைப்பொருள்கள் கொடுத்து வழியனுப்புகின்றனர் இந்நிலையில் வேள்விப்பரிகள் சயிந்தவ தேசத்தை அடைகின்றன

20. சயிந்தவ தேசத் சருக்கம்

சமுத்திரத்திலிருந்து புறப்பட்டு பன்னிரண்டு யோசனை தூரம் சென்ற பரிவேள்விப் படைகள் சயிந்தவ தேசத்தை அடைந்தன. பரிவேள்விப்படை அருச்சுனனின் தலைமையிலும் திருமாலின் வழிகாட்டுதலிலும் வருவதைச் சயிந்தவன் மகன் பார்க்கின்றான்.

13ஆம் நாள் பாரப் பெரும்போரில் அருச்சுனன் மகன் அபிமன்யுவைத் தனது தந்தை சயிந்தவன் கொன்றதையும், மகன் மாண்டதறிந்த அருச்சுனன் மறுநாள் போரில் சயிந்தவன் தலையைக்கொய்து தவம் செய்து கொண்டிருந்த சயிந்தவன் தந்தை விருத்தக்ஷத்ரன் கைகளில் கொடுத்ததையும், விருத்தக்ஷத்ரனின் சாபத்தால் தன்தலையே வெடித்துச் சிதறியதையும் சயிந்தவன் மகன் நினைத்துப் பார்க்கின்றான்

கௌரவர்களின் ஒரே மகளான தனது தாய் துச்சளை கணவனையும், மாமனாரையும், சகோதரர்களையும் பாரதப்போரில் இழந்து தன்னந்தனியாளாய் ஆதரவின்றி நிற்பதற்குக் காரணமான அருச்சுனன் பரிவேள்விப் படையை நடத்தி வருகின்றான் என்றறிந்ததும் நடுக்கத்தில் மாண்டே விடுகின்றான்

அருச்சுனன் வருகை கண்டே தன் மகன் மாண்டான் என்ற செய்தியறிந்த துச்சளை அலறி அழுகின்றாள் அருச்சுனனோடு திருமாலும் வருவதை உணர்ந்த துச்சளை, திருமாலிடம் கணவனையும்

சகோதரர்களையும் பாரதப் பெரும் போரில் இழந்து தவித்த எனக்கு மகன் மட்டுமே ஆறுதலாக இருந்தான். அவனும் உங்கள் படை வருவதைக் கண்டு மாண்டுவிட்டான். இப்பொழுது நான் ஆதரவின்றி தனியாளாய் இருக்கின்றேன். அண்ணா! உன் சகோதரி இப்படி இருப்பது நியாயமோ? என் மகனை எனக்கு உயிர்ப்பித்துத் தாரும்; இல்லையேல் நான் உங்கள் முன் மாள்வது உறுதி ' என்கின்றாள்.

துச்சளையின் புலம்பலைக் கேட்ட திருமால்' அச்சம் நீங்கு சகோதரி' என்று ஆறுதல் கூறுகின்றார். 'நாடு முழுதும் சுற்றி வெற்றி பல பெற்றுச் சிறப்பாக நடந்துவரும் இவ்வேள்விப் பயணத்தில் இப்படியொரு தீச்செயல் நிகழ்ந்திருப்பது நல்லதல்ல' என்று திருமால் அருச்சுனனுக்குக் கூற, அருச்சுனன், அதற்கு நாம் பொறுப்பல்ல; அவன் பயத்தால் மாண்டான். அதற்கு நாம் என்ன செய்ய முடியும் என்கின்றான். ' அவன் பயத்தால் மாள்வதற்கு ஒருவகையில் நாமும் காரணமாகிவிட்டோம். எனவே, 'அவன் உயிரை மீளக் கொணர்வதும் நம் கடமை' என்று கூறிய திருமால் அவன் உடலை தேரில் ஏற்றச் சொல்ல, தேர், சிந்து தேசத்திலுள்ள சபா மண்டபத்தை அடைகின்றது. அவனது உடல் முழுக்கத் தன்னுடைய விரல்களால் அருச்சுனன் தடவ, அவன் உயிர்ப்பிக்கின்றான். உயிர்பித் தெழுந்தவன் திருமாலையும் அருச்சுனனையும் வணங்கி ஆசிபெறு கின்றான் உயிர் கொடுத்தோர்க்கு விருந்தளித்து வேள்விப் பயணத்தில் தன்னையும் இணைத்துக் கொள்கின்றான்

இவ்வேளையில், அருச்சுனன், திருமால், பகத்தாப்பியர் மற்றும் இருபத்தொரு அரசர்களும் பரிவேள்விப் பயணம் முடிந்து வருகின்றனர் என்றறிந்த வீமன், நகுலன், சகாதேவன் ஆகியோர் எதிர்கொண்டு வந்து வேள்விப்படையை வரவேற்கின்றனர். வீமன் உள்ளிட்டோர் எதிர்கொண்டு வரவேற்பதைக் கண்ட திருமால் உள்பட அனைவரும் மகிழ்கின்றனர். வேள்விப் பயணம் முடிவுக்கு வந்த நிலையில்,இச்செய்தியை அத்தினாபுரத்துக்கு தெரியப்படுத்த வேண்டும் என்ற வீமனின் கோரிக்கையைத் திருமால் ஏற்று, ஒற்றன் மூலம் இதுவரை நிகழ்ந்த வெற்றிகளை விவரமாகக் கூறி அத்தினாபுரம் அனுப்பி வைக்கின்றார்.

அடுத்து, வீமன், நகுலன் மற்றும் சகாதேவன் ஆகிய மூவருக்கும் வேள்விப் பயணத்தில் உடன் வந்து கொண்டிருக்கும் ஒவ்வொரு அரசரைப பற்றியும் முறையாகத் திருமால் அறிமுகம் செய்து வைக்கின்றார் இறுதியாக, பப்பரவாகனனை அறிமுகம் செய்யும் போது 'அருச்சுனன் மகன்' என்றதும் உள்ளம் குளிர்ந்த மூவரும் அவனைத் தழுவிக் கொண்டு பாரதப்போரில் இளம் பாண்டவாகள் இழந்த சோகத்தைத் தீர்க்க வந்தவன் என்ற உள்ளப்பூரிப்பால் பப்பரவாகனனைத் தழுவிக் கொண்டு மகிழ்கின்றனர். அதன்பிறகு அனைவருடனும் பரிவேள்விப் பயணம் அத்தினாபுரத்தில் அமைக்கப்பெற்றிருக்கும் வேள்விசாலை நோக்கி விரைவாகப் பயணித்தது.

21. வேள்வி முற்றிய சருக்கம்

வேள்விப் பயணம் முடிந்து அருச்சுனன் உள்ளிட்டோர் அத்தினாபுரத்தில் அமைக்கப்பெற்றிருக்கும் வேள்விச் சாலைக்குத் திரும்பிக் கொண்டிருப்பதை அறிந்த தருமன் அவர்களை அழைக்க எதிர்கொண்டு வருகின்றான். திருமாலைக் கண்டு தன்னுடைய பீதாம்பரத்தை இடையில் அணிந்து வணங்குகின்றான்

உடன்வரும் அரசர்களையெல்லாம் திருமால் தருமனுக்கு முறையாக அறிமுகம் செய்துவைக்கின்றார். ஒவ்வொருவரும் தங்களுடைய சின்னக்கொடியுடன் அருச்சுனனைப் பின்தொடர்ந் திருப்பதைக் கண்ட தருமன் மகிழ்ந்து வேள்விப்பரிகளை வேள்விச்சாலைக்கு நடத்துகின்றான். ஏழு கடல்களும் ஆர்பரித்து வருவது போல் அருச்சுனன் நடத்திய நால்வகைப் பரிவேள்விப்படைகளும் வேள்விச் சாலையை அடைகின்றன. பகத்தாப்பிய முனிவரை தக்க மரியாதையுடன் தருமன் வேள்விச் சாலைக்குள் அழைத்துச் செல்கின்றான். அங்கு வசிட்டர், காசிபர், மற்றும் திரௌபதி ஆகியோர் பகத்தாப்பிய முனிவரை வலம் வந்து ஆசி பெறுகின்றனர்.

அதன்பிறகு, யாகத்துக்குண்டான ஏற்பாடுகள் தொடர் கின்றன. உடன் வந்த பல்வேறு நாட்டு அரசர்களையும் உரிய மரியாதையுடன் சிறப்புமிக்க விடுதிகளில் தனித்தனியாக

தங்கவைக்கின்றனர். அத்தினாபுரக் காட்சியைக் கண்டு அனைத்து அரசர்களும் இதுபோல் ஒரு நகரக்காட்சியை யாங்களும் கண்டதில்லை என்று வியந்தார்கள். தருமன் இட்ட விருந்தில் களிப்படைகின்றனர்.

மறுநாள் காலையில் அனைத்து அரசர்களும் சந்திரகாசன் தலைமையில் அரண்மனைகளுள் வருகின்றனர் அவ்வவைக்குத் தலைவரான திரிதராட்டிரனுக்கு ஒவ்வொருவரின் சிறப்பும் முறையாக அறிமுகம் செய்யப்பெறுகின்றது பப்பரவாகனனை 'அருச்சுனன் குமாரன்' என்று அறிமுகப்படுத்தும் போது கண்ணற்ற திரிதராட்டிரர் அவனை மார்போடு அனைத்து மகிழ்கின்றார்

அடுத்து, வேள்விக்குத் தேவையான தீர்த்தம் கொண்டு வர தருமன் இருபத்தொருவரைத தேர்வு செய்கின்றான் திருமால், வசிட்டா, காசிபா, வாலமீகி, கவுதமர், மார்க்கண்டா, சவுமியர், சாபாலி, கவுசிகர், சமதக்கினி, பதஞ்சலி , வியாசர், சந்திரகாசன், வீரவாமன், பரிசன், அமிர்தன், நீலன், அநுமததுசன், இரத்தினத்துசன், எமனாசுரன், சாளுவன் ஆகிய இருபத்தொரு பேரும் தத்தம் பத்தினிமார்களுடன் சோந்து பொற்குடததில் வேள்வித தீர்த்தம் கொண்டு வருகின்றனர்.

திருமால் ருக்குமணியுடன் தீர்த்தம் கொண்டு வரச் செல்வதைக் கண்ட நாரதர் சத்தியபாமையிடம் சென்று கலகமூட்டுகின்றார். இதனை நம்பாத சத்தியபாமை தீர்த்த நதிக்கரைக்கு வருகின்றாள் திருமாலின் சித்து வேலையினால சத்தியபாமைக்கு ருகுமணி உடனிருப்பது தெரியவில்லை. ஆகத் திருமால் தன்னுடைய இரு பத்தினிமார்களுடனும் வேள்வித் தீர்த்தம் கொண்டுவருகின்றார்

இருபத்தொரு பொற்குடங்களில் யாகசாலைக்குக கொண்டுவந்த தீர்த்தங்களைத் தருமன் மற்றும் பாஞ்சாலி ஆகியோரின் தலையில் முறையாக யாக மந்திரங்களைக் கூறி பகததாப்பிய முனிவர் ஊற்றுகின்றார் அதன்பிறகு பகததாப்பியர்

தருமனையும் திரௌபதியையும் முனனிருத்தி ஓமம வளர்த்து வில்வ மரத்தாலான வேள்வித் தூணுக்கு அபிஷேகம் செய்கின்றார்

அத்திரி, ஆங்கீரசன், கவுதமர், சமதக்கினி, பரத்துவாசன், வசிட்டர், விசுவாமித்திரன போன்ற ஏழு முனிவர்களுடன் பகத்தாப்பிய முனிவரும் எழுந்துநினறு பரிகளுகுப் பூசை செய்து உடைவாளையும் மந்திரித்து வீமன் கையில் கொடுக்கின்றனர். வீமனோ! வேள்விப் பரிகள் இரண்டையும் உடைவாள் கொண்டு உடல்வேறு சிரம் வேறாக்குகின்றான் வேள்விப் பரிகளின் சிரங்கள விண்ணில்பந்துபோல் செல்வதைக் கண்ட முப்பத்து முக்கோடி தேவர்களும், நாற்பத்தெண்ணாயிரம் முனிவர்களும், எட்டு திக்குப் பாலர்களும், எட்டு வசுக்களும், ஒன்பது பிரமாகளும், கின்னரர்களும், ஒன்பது கிரகங்களும், சித்தர்களும், பதினொரு ருத்திரர்களும், பன்னிரு ஆதித்தர்களும் மற்றும் பலரும் வியந்து தருமனை வாழ்ததுகின்றனா. மேலும் பல பூசைகளைப் பகத்தாப்பியர் செய்து முழுமையான வேளவிப் பயனைத் தருமனுக்கு அளிக்கின்றார்.

அதன்பிறகு உடல்வேறு சிரம் வேறான பரிகளைப் பகத்தாப்பியர் தம்முடைய தவ வலிமையாலும் மந்திர சக்தியாலும் மீண்டும் முன்னிருந்தவாறே உயிர்ப்பிக்கின்றார். உயிர் பெற்ற புரவிகள் வேள்விச சாலையிலிருநது சென்றபின் தருமராசன் மக்களுக்குக் கோ தானம், வஸ்த்ரதானம், ரத்ன தானம், கன்னிகா தானம் எனப் பல தானங்கள் வழங்குகின்றான் அதுபோலவே, இவ்வேள்வி சிறக்க உதவிய பகத்தாப்பிய முனிவர் மற்றும சந்திரகாசன் உளளிட்ட இருபத்தொரு அரசர்களுக்கும் மனங்கோணாத வகையில் சிறப்புகள் பல செய்து மகிழ்விக்கின்றான்.

தானங்கள் வழங்கியதன் பின் தருமனும் திருமாலும் வேள்விச் சாலையில் அமைக்கப்பெற்றிருக்கும் அரியாசனத்தில் அமர்கின்றனர் சந்திரகாசன் முதல் இருபத்தொரு அரசர்களும் தருமனுக்குப் பரிசுப் பொருள் அளித்து வணஙகி நிற்க, திருமால் அவர்களின் வீரதீரச் செயல்களையெல்லாம் விரிவாகக் கூறுகின்றார். ஒவ்வொருவரின் அறிமுக நிகழ்ச்சி முடிந்தபின தருமன் மற்றும்

திருமாலைத் தொடர்ந்து வீமன், அருச்சுனன், நகுலன், சகாதேவன், சந்திரகாசன் உள்ளிட்ட இருபத்தொரு அரசர்களும் யாகசாலையை வலம் வருகின்றனர் பின்னர், ஒவ்வொருவரும் தங்கள் இரதங்களில் எறிக்கொண்டு பஞ்சவாத்திய முழக்கங்களோடு அத்தினாபுர அரண்மனைக்குள் சென்று தருமனை உரிய அரியாசனத்தில் அமர்த்துகின்றனர் தருமனின் உபசரிப்பில் சில நாள்கள் இருந்து ஒவ்வொரு அரசரும் விடை பெறுகின்றனர்.

ஓராண்டு கழிகின்றது. சந்திரகாசன் உள்ளிட்ட இருபத்தொரு அரசர்களும் தருமனுக்குத் திறைப்பொருள் மகிழ்வாக அனுப்பி வைக்கின்றனர் வளம்பல பெருகவும் மாதம் மும்மாரி பொழியவும் குறையேதுமின்றி திருமாலின் அருளாசியுடன் தருமராசன் நாட்டை ஒரு குடைக்கீழ் கொண்டு வந்து காத்து வந்தான்.

நன்றியுரை

இந்நூல் வெளிவருவதற்குத் துணைபுரிந்த மைய அரசின் நல்கைத் திட்டம் முதற்கண் எண்ணிப் பார்க்கும் சிறப்புக்குரியதாகும் புதுதில்லி தேசிய ஆவணக் காப்பகம் நல்கைகளை முறையாக வழங்கி ஊக்கப்படுத்தியதன் விளைவாகவே இந்நூல் பதிப்பிக்கப் பெற்று வெளிவருகிறது. ஆதலின் இந் நன்றியுரையின் முதற்பகுதி அவர்களுக்குரியதாகும்.

ஓலைச் சுவடித்துறையின் திட்டத்தை வரவேற்று ஊக்கப்படுத்திய தமிழ்ப் பல்கலைக்கழகத் துணை வேந்தர்கள், அலுவலர்கள் ஆகியோர்க்கு ஓலைச் சுவடித்துறை சிறப்புநிலையில் நன்றி பாராட்டி மகிழ்கின்றது.

இந் நூலினைப் பதிப்புக்கு எடுத்துக்கொண்ட நிலையில் ஓலைச் சுவடிகளையும், கையெழுத்துப் படியினையும் முறையாக ஒப்பு நோக்கிப் பாடங்களை உறுதி செய்வதில் இத்துறையின் தொழில் நுட்ப உதவியாளர் புலவர் ப.வெ.நாகராசன் அவர்கள் முன்னின்றார்கள் அவர்கள் இந்நூலை நுணுகி ஆய்ந்து ஆங்காங்கு குறிப்புகளை வரைந்து ஒழுங்குபடுத்தினார்கள் அவர்களுக்கு எவ்வளவு நன்றி பாராட்டினாலும் தகும். அவர்தம் ஆழ்ந்த புலமையும் பட்டறிவும் இக் குறிப்புரைகளில்

வெளிப்படுதல் காணலாம் அவரோடு இணைந்து படி எடுத்துதவிய கோவை கௌமாரமடத்தைச் சார்ந்த திரு கிருஷ்ணன் அவர்களுக்கும் நன்றி பாராட்டும் கடப்பாடுடையேன்

நூலச்சாகும் காலத்துத் தோன்றும் பிழைகளைத் திருத்தியும் கணினி வழி அவற்றைச் சரி செய்தும் பெரிதும் உழைத்துத் துணைபுரிந்தவர் இத்துறையின் ஆய்வு உதவியாளர் முனைவர் மோ.கோ. கோவைமணி அவர்களாவார். அவர் தம் ஈடுபாட்டிற்கும் உழைப்புக்கும் பெரிதும் நன்றி பாராட்டி வாழ்த்துகிறேன்

எல்லாவற்றுக்கும் மேலாக இந்நூற் சுவடியையும் கையெழுத்துப் படியையும் காத்து வைத்திருந்து அவற்றை ஓலைச் சுவடித் துறையில் ஒப்படைத்து, அவ்வப்போது அதன் வெளியீட்டு முயற்சியை உசாவி ஊக்கப்படுத்திய அண்ணாவியார் பேரன்களுக்கும் குடும்பத்தார் அனைவர்க்கும் நன்றி பாராட்டுவதைத் தமிழ்பல்கலைக் கழகம் பெரும் கடமையாகக் கருதி மகிழ்கின்றது. அதிராம் பட்டினத்தில் அருட்கவியாக வாழும் ஹாஜி முகமது தாஹா அவர்கள் நூல் வெளியீட்டுக்குப் பல்வகையிலும் துணை நின்றார்கள் அவாகளையும் நன்றியுடன் நினைத்துப் பார்ககின்றோம். தம் ஊர்க் கவிஞர்பெருமானின் நூல் ஒன்றினைத் தமிழ்ப் பல்கலைக் கழகம் வெளியிடுகிறது என்பதில் அவருக்கிருக்கும் மகிழ்ச்சிக்கும் பெருமைக்கும் அளவேயில்லை.

இத் துறையின் முன்னாள் பேராசிரியர் அமரர் புலவர் மணி மு. சண்முகம்பிள்ளை அவர்களின் காலத்தில் பெறப்பட்ட இச் சுவடியை, வெளியிடுதற்குரிய நூல்,என முத்திரையிட்டுப் பத்திரப்படுத்தினார்கள். அவர்களின் பொறுப்புணர்வையும் தமிழுணர்வையும் நினைந்து நினைந்து நன்றி பாராட்டுகின்றேன்.

இந் நூலின் அச்சுப் பணியில் ஊக்கத்தோடும் நன்முறையோடும் துணை புரிந்த சன்சைன் கணினி மையத்தார்க்கும் தமிழ்ப் பல்கலைக்கழக மறுதோன்றி அச்சகத்தார்க்கும் பெரிதும் நன்றி பாராட்டுகிறேன்

அனைத்து முயற்சிகளுக்கும் மூலகாரணமாக விளங்கும் இந்நூலாசிரியர் முகமது அண்ணாவியார் அவர்களை நெஞ்சார வாழ்த்தி

வணங்கி நீடு நினைந்து நன்றி பாராட்டுவதில் தமிழ்ப் பல்கலைக்கழகம் பெருமை கொள்கிறது என்றால் அது மிகையாகாது.

எல்லாவற்றுக்கும் மேலாக,இந்நூல் இனிது வெளிவருவதற்குத் தோன்றாத் துணையாக விளங்கித் திருவருள் பாலித்த இறையருளை வியந்து வாழ்த்தி வணங்கி அமைகிறேன்.

அடுத்தானை உரித்தானை அருச்சுனற்குப் பாசுபதம்
கொடுத்தானைக் குலவரையே சிலையாகக் கூரம்பு
தொடுத்தானைப் புரமெரியச் சுனைமல்கு கயிலாயம்
எடுத்தானைத் தடுத்தானை என்மனத்தே வைத்தேனே.

- திருநாவுக்கரசர்.

தமிழ்ப் பல்கலைக்கழகம்,
தஞ்சாவூர்.

சு. கோ. பரமசிவம்

சாந்தாதி அசுவமகம்

(நூற்பயன்)

(அறுசீர் ஆசிரிய விருத்தம்)

பூமாதும் உரம்பொருந்தும்; கலைமாதும்
நாவிலுறும்; பொற்பு வீர
மாமாதும் புயமுறையும்; நினைத்ததெல்லாம்
கைகூடும்; மகிமை ஓங்கும்;
சீமானீள் உபயநிதி யதிபதியும்
திறையளக்கச் செகத்தை ஆண்ட
கோமான்ஏர் முரசுயர்த்தோன் அசுவமகம்
தனைவிரும்பிக் கூறு வோர்க்கே. 1

கடவுள் வாழ்த்து

சீராலே பெருகிவளர் ஒருபொருளாய்ப்
பலவுருவாய்ச் சீவன் யாவாய்ப்
பாராசை பல்லுலகாய்த் திரைவரைகால்
அந்தரம்நீ படைப்பெல் லாமாய்
நேராக நிறைந்துபடைத்து அளித்தழிக்கும்
பரம்பரத்தை நிறம்ஈது என்ன
யாராலும் கூறரிய அழியாத
பெருவாழ்வை யாசிப் பாமே. 2

(அடைப்புக் குறிக்குள் உள்ளவை குறிப்புரையாசிரியரால் கொடுக்கப் பெற்றவை)

1. பூமாது - திருமகள்; உரம் - மார்பு, வீரமாமாது - கொற்றவை , உபயநிதி அதிபதி - சங்கநிதி பதுமநிதி ஆகிய இரண்டினையும் உடைய குபேரன்; திறை - கபபம்; ஏர் - அழகிய; முரசுயர்த் தோன் - முரசுக் கொடியை உடைய தருமன்; அசுவமகம் - அசுவமேத யாகம்.

2. சீவன் யாவாய் - யாவுமாய் எனற்பாலதுஉம்மை தொக்கது, பார் - நிலஉலகம் முதலிய, திரை - கடல, நீர், வரை - நிலம்; கால் -காற்று, அந்தரம் - ஆகாயம், அளித்து - பாதுகாத்து; பரம்பரத்தை - அனைத்தையும் சுடநது விளங்கும பரம்பொருளை.

அவையடக்கம்
(வேறு)

காருததி மீதிலுள கார்பலவும் உண்டிருள்க
றேரெனவி ருண்டுகுபம்
பேரிருவி சும்புறநெ ருங்கிமினி யேயொலிபி
றங்கிமழை பெய்வதெதிரே
வாரிதனை யேமசகம் வாரியுமு மிழ்ந்துநய
னந்தனைம லர்ந்திரைந்து
நீருதறல் போலினிய நாவலர்முன் யானடியன்
இந்நூல்நி கழ்த்தினனரோ. 3

மூவரடி யோர்களிமை யோர்கள்செவி யாலமிர்தம்
உன்னவுணர் வீயுமுதிய
பாவினில்வி யாசமுனி கூறியவி சாலமக
பாரதமுன் னீரதனிலே
மேவுதமி ழால்வலிய வில்லிகவி பாடியதில்
விட்டமுடி வாதிதொடர்பாய்
நாவில்விளை வாயுறந விற்றுவன்விண் இந்துதொட்
நாடியகை யின்சிறுவனே. 4

கஞ்சமல ரேகவச மாயணியும் வாவிதிகழ்
காமர்குரு நாடுதனையாள்
பஞ்சவர்கள் வீரவிச யம்புகழ்உ லாவுரச
பாகமிர்த காவியமதை
நெஞ்சின்வலி கொண்டவறி ஞோர்களடி யேனெனநி-
னைந்தறிவு நின்றபடியால்
செஞ்சொலென வேசெவிகொள் வார்பெரிய ரென்றுகவி
செப்பினன்ம திப்பினுடனே. 5

---

3. கார் உததி - கரிய கடல், கார் - மேகம்; சுகுபம்- திசைகள்; விசும்பு - ஆகாயம்; வாரிதனை - கடலை; மசகம் - கொசு; வாரியும் - (வாயால்) அள்ளியும்; நயனம் - கண்; மேகம், மின்னல், இடி, மழை முறையே கொசு, கண்ணொளி, இரைசசல், தண்ணீர் உதறுதல்.

4. மூவர் - பிரமன், திருமால், உருத்திரன், முதிய - பழமையான; முன்னீர் - கடல், பாரதம் கடல் போனறது; வில்லி - வில்லிபுத்தூராழ்வார், முடிவு ஆதி தொடாபாய் -முடிவிலிருந்து தொடாசசியாக; வினை இறது - ஆகாயத்தில் உள்ள சநதிரன்.

5. கஞ்சம் - தாமரை; காமா - அழகிய, ரச பாகு - சுவைமிகக தேன்பாகு போன்ற, அறிஞோர்கள் - முன்சொல்லபபட்ட வியாசா, வில்லி போன்றவர்களுககு, அடியேன் - இந்நூலாசிரியர் தன்னை வியாசர் முதலியோரின் அடியான் எனக சுருதுகிறார்; தான் முனனோாகளை அடியொறறிப் பாடுவதால் பெரியோர்தன் காவியததை ஏற்பர் என்பது சுருத்து.

(வேறு)

சீரேறு மரகதக் கிரிகூவ லிரதம்வச் சிரநாடு மாரவனமும்
போரேறு தவளமத குஞ்சரம் பச்சையம் புரவிக்கும் அதிபன்மர்வத்
தாரேறு மார்பகன் சருபந்து மோலிகே சரியேறு துசன்மதுரையான்
ஏரேறு கன்னல்நதி யானமித்த மதுரகவி இந்நூலி சைத்தனனரோ. 6

ஈரைந்து மூவெழுத் தீரசைகள் சீர்முப்பது
ஏழுதளை அடியைந்துபா
ஓரைந்து நாற்பத்து மூன்றுதொடை இனமூன்று
வண்ணமொரு நூறுபொருள்கோள்
ஆறொன்ப தறுவிகா ரம்வனப்பு இருநாலும்
அறிந்துபிர பந்தமெல்லாம்
சீரொன்று முத்தமிழ்க் கவிநாவ லோர்பிழைதி–
ருத்தலவர் கட்கழகிதே. 7

(சந்த விருத்தம்)
(தனன தனனதன தனன தனனதன தனன தனனதன தானனா)

கமலை விமலைகலை மகளை அகலமிரு
கனக புயசயிலம் நாவிலே
சுமைசெய் தவன்மதுரை அதிபன் வழுதிபடி
தொடவும் இவுளிமிசை ஏறினோன்
அமிர்த மதுரகவி செயிது மகமதுமன்
அருள்செய் தனன்முரச கேதனன்
கமழும் அதிகபுகழ் திசைகள் செறுமிவெளி
கவியும் அசுவமக காவியம். 8

(நூல் வரலாறு)
(அறுசீர் ஆசிரிய விருத்தம்)

அறன்மகன் கதையை வைசம் பாயன முனியை நோக்கி
விறல்சென மேச யன்தான் வினவலும் முனிவன் வாயால்
நறவுபாய் பொழில்சூழ் நாட்டு நகர்ச்சிறப்பு உரைத்த வாறும்
பொறையனோடு ஐவர் சீர்த்தி புயவலி உரைத்த வாறும் 9

---

9. அறன்மகன் - இயமனின மைந்தனாகிய தருமன், விறல் - வலிமை மிக்க, நறவு - தேன், பொறையன் - பொறுமையிற சிறந்த தருமன், ஐவர் - பாண்டவர்.

தருமனெஞ்சு இளைத்த வாறும் தாமனும் முனியு மாக
அருள்பதி ஆகம் தேற்றி அசுவமா மகம்செய் கென்னப்
பொருதபின் எமனா சூரன் பொற்பரி விட்ட வாறும்
பரவணு சாளு வன்தான் பல்லமர் புரிந்த வாறும் 10

வேள்வியா ரம்ப வாறும் வெம்பரி விட்ட வாறும்,
கேழ்மைநீ லத்து சன்போர்க் கிளர்ந்தசண் டிகையின்வாறும்
காழ்அமிர் தத்து சன்போர்க் கதைவர்க்க தேச வாறும்
வாழ்பரி யின்பே திப்பும் மதனமண் டலத்தின்வாறும் 11

பப்பர வாகன் வாறும் பரிசகே தனன்தன் வாறும்
துப்புறும் வீர வர்மன் சுந்தரச் சந்த்ர காசன்
தப்பிலாச் சமுத்ர வாறும் சயிந்தவன் தேச வாறும்
குப்ரதட் சணஞ்செய்து உந்தும் குரகத வேள்வி வாறும் 12

பாயிரப் படியே வைசம் பாயன முனிவன் கூறத்
தாயிறக் கமுதம் சேயுண் டெனச்சென மேச யன்தான்
ஏயிரு செவியால் உண்ண நிகழ்த்திய அமிர்தப் பாவை
வாயுறும் தமிழ்ப்பா வாலே வழுத்துதற்கு இசைந்திட் டேனே. 13

மன்னனை முனிவன் நோக்கி வளமைசேர் குருநன் னாட்டை
என்னென உரைப்பன் சேட னேசகத் திரநா வாலும்
பன்னியே உரைத்திட் டாலும் பற்றறக் கூற மாட்டான்
என்னினும் இயன்ற மட்டும் யான்சொலக் கேள்நீ என்றான். 14

பாயிரம் முற்றும்.

---

10. தாமன் - கண்ணன் வீட்டை அருளுபவர், பரந்தாமன் என்பதூஉமிதுவே; பொற்பரி - பொன்னாலாகிய குதிரை ; அமர் - பல போர்கள்.

11. பரி விட்டவாறு - வேள்விக் குதிரையை உலகம் சுற்ற விடுத்த வரலாறு.

12. குப்ரதடசணம - கு-பூமி பரதடசணம் - வலம்வருதல் ; குரசுதம் - குதிரை.

13. தாய் இறக்கு அமுதம் - தாய (தன் நதில்களின் வழி) பொழிகின்ற பால், முனிவன் கூறச் சனமேசயன் உண்ண நிகழ்த்திய பாவைத் தமிழ்ப பாவாலே வழுதுதற்கு இசைநதிட்டேன் என்பது முடிபு

14. சேடன் - ஆதிசேஷன், சகத்திரம் - ஆயிரம்; பற்று அற - மீதமின்றி, முழுவதுமாக.

1. நாட்டுச் சருக்கம்

(கலித்துறை)

தலங்கள் ஏழுக்கும் தேயமெண் ணேழுக்கும் தனதன்
துலங்கு நாட்டுக்கும் அமரர்பொன் நாட்டுக்கும் தூய
நிலங்கள் யாவுக்கும் சீர்வளம் சிறப்புமே நிரம்பி
நலங்கள் ஆர்குரு நாட்டினின் வளமையை நவில்வாம். 1

இரச தக்கிரி எனவெழுந்து இருவெளி படர்ந்து
திரைமு ழக்கிய உததியிற் செறிந்திரை மேய்ந்து
உரக னிற்றுயில் பவனென உமையென உயிர்செய்
மரக தக்கிரி எனத்தரு எனமழை மீண்ட. 2

அந்த ரம்திசை தனதுஉரு மயம்புரிந்து ஆர்ந்து
கந்த ரம்கம லக்கணன் மார்புஉறு கலன்போற்
சுந்த ரம்பெற மினிஅவன் வளைஎனத் தொனித்துஅன்பு
உந்தி பஞ்சவர்க்கு அருண்மழை பொழிந்தெனப் பொழிந்த 3

பற்கு ணண்கணை மாரியின் தொகையெனப் பார
விற்கு னித்துஅடுக் கலினிடை வீசிய வருடஞ்
. . . . . .
. 4

---

1. தலங்கள் ஏழு - பூலோகம், புவலோகம், சுவலோகம், மகாலோகம், சனலோகம், தவலோகம், சத்யலோகம் ; எண்ஏழு - ஐம்பத்தாறு; தனதன் - குபேரன், அவன் நாடு அளகாபுரி; பொன்நாடு - அமராவதி.

2. இரசதக்கிரி - வெள்ளிமலை; இருவெளி - பெரிய ஆகாயம்; திரை - அலை; உததி - கடல், உரகனில்துயில்பவன் - பாம்பணையில் பள்ளிகொள்ளும் திருமால், தரு - கற்பக மரம்; நிறத்திற்குத் திருமால உமையும் ஈசைக்குக் கற்பகமும் உவமைகள்.

3. சுந்தரம் - மேகம், சுமலக்கணன் - தாமரை போன்ற விழிகளை உடைய திருமால், சுவன் - ஆபரணம், இஃகு கௌஸ்துப மணி;மினி - மின்னி; வளை - சங்கு, பாஞ்சசான்னியம்; பஞ்சவர் - பஞ்சபாண்டவர்.

4. இப்பாடலின் பின்னிரண்டடிகள் சுவடியில் காணப்படவிலலை. பற்குணன் - அருச்சுனன்; கணை - அம்பு; குனித்து - வளைத்து; அடுக்கல் - மலை; வருடம் - மழை.

மைப்பு யல்சொரி யக்குளிர் மாருதம் சீறி
மொய்ப்ப மர்க்கடம் எண்குசெந் நாய்அறு குமுண்மா
கைப்ப கட்டினம் மான்மரை பரிகுடம் காரான்
எய்ப்புள டுத்துடல் நடுக்கமற் றுளவிலங் கினமும் 5

மகிழ்இ ருப்பைஆ மலகம்ஆல் அதிபுளி மரவம்
அகில்அ சோகுதேக்கு ஆசினி கோங்குசந் தனம்கிஞ்
சுகம்இ லந்தைஆர் அரசுநா வல்தொளை இலவாம்
சகல பற்பல தருக்கள்தூர் சிவையொடுஞ் சாய்ந்த. 6

வரையி னம்பல முழுகிடத் தழுவிமா திரத்தின்
திரவி யங்கவர்ந்து இரிதரு இனத்தையும் சேர்ந்துஅங்கு
உரிய தும்கவர்ந் துஉலவிய பொதுமகள் நிகர்ப்பப்
பரவி நானிலம் வெருக்கொளப் பரந்தது பயமே. 7

நாகக் கோடுநித் திலமும்பன் நாகரத் தினமும்
வாசின் கோட்டந்தக் கோலங்கா ரகில்கறி மரவம்
சேகி னாரமு மழைதரு மணிகொடு திரைமேல்
ஏகு தேசிகர் ஒத்தது எழில்நதி நீத்தம். 8

---

5. மை புயல் - கரிய மேகம்; மர்க்கடம் - குரங்கு , எண்கு - கரடி ; அறுகு - சிங்கம், புலி எனினுமாம், முள மா - முள்ளம் பன்றி; கைப்பகட்டு இனம் - யானைக்கூட்டம், மரை - ஒரு வகை மான். பரி - குதிரை, குடம் - பசு, காரான் - எருமை; எய்பபு - இளைப்பு.

6. பல மரங்கள் கூறபடுகின்றன. இருப்பை - இலுப்பை; ஆமலகம் - நெல்லி; அதி - அத்தி ; மரவம் - குங்கும மரம், ஆசினி - பலா; கிஞ்சுகம் - முள்முருக்கு, ஊர் - கொன்றை; தொளை - மூங்கில்; தூர், சிவை - வேர், ஒரு பொருடபன்மொழி, சகல என்பது அனைத்துவகை மரஙகளையும். பற்பல என்பது ஒவ்வொரு இனத்திலும் பல மரங்கள் என்பதையும சுட்டின.

7. விலைமகளுக்கும் வெள்ளத்திற்கும் சிலேடைவிலைமகள் பக்கலில - வரையினம் - நகில்கள் உவம ஆகுபெயர். பலம் - (ஆடவரின்) வடிவம், இங்கு உடலைச் சுட்டியது, முழுகிட - அழுந்த; மா திறதின் - மிக்க திறமையோடு ர ற சிலேடை நோக்கிய விகாரம், திரவியம - பொருள், இரிதரு இனம் (தன்னைக்கண்டு) நிலைகுலைகின்ற காமுகர் கூட்டம், அங்கு - அவரிடத்தில் வெள்ளத்தின் பக்கலில் - வரையினம் - பல மலைகள், மாதிரத்தின் - உலகத் தின், இரி - சாய்ந்துகிடக்கும்; தருஇனம் - மரக்கூட்டங்கள், வெருக்கொள - அஞ்சும்படி , பயம் - நீர்

8. வணிகருகும் வெள்ளத்திற்கும் ஒப்புமை, நாசகோடு - யானைத தந்தம், நித்திலம் - முத்து, கோட்டம், தக்கோலம், கா அகில், கறி, மரவம் - மணபபொருள்கள்; சேகின் ஆரம் - வயிரம் பாய்ந்த சந்தனமரம்; மணழதருமணி - மேகத்தில பிறக்கும் முத்து. தேசிகா - வணிகர்.

பஞ்ச வாசமும் நரந்தமும் மறுவியும் பசிய
அஞ்செய் கேகயத் தூவியங் கவரிகொண்டு அடர்ந்த
மஞ்சு லாவிய ஆரமும் மரவமும் வரையில்
மிஞ்ச வேயரைத்து அயம்விரை வாணரொத்து ஏகும். 9

ககப்பொன் வாசமும் தரித்தறு நாலுகால் நாக
விகற்ப வர்க்கமும் எண்கிரு வேங்கையி னாகத்
தொகைக்கு ழாங்கொடு சுழிகளிற் கரணமுற்று உலவி
மிகைத்த கூற்றுறு வித்துவர் போன்றன வெள்ளம். 10

ஒருகை நாகமீ துலவிய ரதமொடு பரிமா
வரையில் மாக்களின் நால்வகைத் தளத்தொடும் வாவி
இருநி லத்துறு பொருளையும் சூறைகொண்டு இகலாய்ப்
பரவை மேற்பொரப் பரந்தன பிரளயப் பரப்பே. 11

கொடியின் நுண்ணிடைக் கொடிச்சியர் தினைப்புனக் குடிலும்
படலும் தொண்டகப் பறையையும் வாரிஅப் பறம்பின்
கடையின் மோதிஅவ் வெல்லைவிட்டு எயிற்றியர் கலங்கக்
கடுகி யேவிறற் பாலையை நோக்கின கவந்தம். 12

அயில்வ டிக்கணை சிலைவலை துடிகணி அனைத்தும்
எயினர் உட்கிட எயிற்றியர் வயிறலைத்து ஏங்க
வயமி குத்துற வாரியே அயற்படை நிகர்ப்ப
நயமி குத்துள முல்லையை நோக்கிய நாரம். 13

---

9. பஞ்சவாசம - கிராம்பு, ஏலம், பச்சகருப்பூரம், சாதிக்காய், வாலமிளகு ஆகிய ஐவகை மணபபொருள்கள், நரந்தம் - மணமமிக்க ஒரு புல்; மறுவி - கஸ்தூரி; அம்செய் - அழகிய, கேகயத்தூவி - மயிலதோகை, கவரி - சாமரை; மஞ்சு - மேகம்; ஆரம் - சந்தனமரம்; மரவம் - குங்கும மரம்; வரை - மலை; அயம் - வெள்ளநீர், விரைவாணர் - மணப்பொருள்விற்போர்.

11 கை - துதிகை, நாகம் - யானை; பரிமா - குதிரை; மாக்கள் - காலாட் படையினர்; தளம் - சேனை; வாவி - தாவி, பரவை - சுடல், பிரளயம் - வெள்ளம்.

12. கொடிச்சியர் - குறிஞ்சி நிலமகளிர், குடில - குடிசை; பறம்பு - மலை; எயிற்றியர் - பாலை நிலப் பெணகள; கவந்தம - வெள்ளம்.

13. எயினர் - பாலை வாழ ஆடவர், அயில் - கூர்மை, கணை- அம்பு; சிலை - வில்; துடி - பாலை நிலத்திற்குரிய பறை, கணி - கண்ணி, பறைவையைப் பிடிக்கும கயிறு; நாரம் - வெள்ளம்.

சிக்க மட்கல சங்களும் அடுக்கையும் சிதறப்
புக்கு வெண்ணெய்துப்பு அளைஅனம் முதைகளில் புகுந்துண்டு
ஒக்க ஆய்ச்சியர் இடைத்துகில் உயர்தருத் தோறும்
சிக்க லால்நதி சீதரன் ஆடலிற் சிறந்த. 14

குடுக்கை கோறலைக் கொங்கணிக் குட்டியின் கூடும்
த்டுக்கும் ஈந்திலைக் கற்றையும் தர்ப்பையும் சம்பும்
எடுத்து வீசிஅவ் எல்லைவிட்டு உழத்தியர் உழவர்
திடுக்க முற்றிடச் சீவனம் அடைந்தது மருதம். 15

கரம்கண் ஆனனம் கமலநா பியம்பதம் கமலம்
பரந்த லர்ந்துள பரமனாய்ப் பாடியில் வளர்நாள்
நிரம்பு செல்வமுற் றாய்ச்சியர் நெடுந்தயிர் கடைந்த
வரம்பில் அத்தொனி கொடுத்தது விசையுறும் கவந்தம். 16

இரைந்துஒ லித்துஇரு கரைகளைச் சிதைதர இடறிப்
பரந்து பற்பல கயப்பயம் ஏரிபல் ஓடை
நிரம்பி டச்செய்து நெடியகங் கையின்நதி நீத்தம்
இரும்க டற்றிரை நிரவிமேற் பாயென எறிந்த 17

எறும்புஇ பங்கடை முதலொரெண் பத்துநான்கு இலக்கம்
உறும்பல் கோடியின் உடல்தொறும் உயிரென ஓம்பி
அறம்ப யின்றுஅளித் திடும்முதல் ஆதியாய்க் கங்கை
நிறம்ப யின்றபூ எங்கணும் சலமயம் நிறைத்த. 18

---

14. வெள்ளத்திற்கும் கண்ணனுக்கும் ஒப்புமை. சிக்க - உறியில் உள்ள; துப்பு - நெய; அளை - தயிர்; அனம் - அன்னம்; முதை - காட்டை வெடடிச் சுடட கொலலை, இடைத்துகில் - இடுப்புச் சேலை; தரு - மரம்.

15. முதலடி தெளிவாக விளங்குவிலலை. ஈந்திலை - ஈச்சமரத்தின் இலை; தர்ப்பை, சம்பு - புல்வகைகள்; சீவனம் - வெள்ளம், மருதம் - வயல் சார்ந்த நிலப்பகுதி.

16. ஆனனம் - முகம், நாபி - தொப்புள்; பதம் - பாதம்; பாடி - முல்லை நிலத்துஊர், ஆயர்பாடி.; வரம்புஇல் - எல்லையற்ற; தொனி - ஒலி; கவந்தம் - வெள்ளம்

17. கயப்பயம் - குளம், இருபெயரொட்டு, நீத்தம் - நீர்; இரும் -பெரிய; திரை - அலை; நிரவி - நிரபபி.

18. இபம் - யானை , அளித்திடும்- பாதுகாக்கும்; முதல் ஆதி - கடவுள்; பூ - நிலவுலகம்.

கோடி கோடிவாள் உழவர்கள் நிரைநிரை கூண்டு
நீடு பானல்கள் அனைத்தையும் நிரந்தரம் திருத்திக்
கோடி னங்களின் மணிகழை மணிகொழுங் கமலம்
நீடு நன்மணி யினங்களை நெடுவரம்பு இயற்றி 19

எண்ணி லாப்பகட் டினங்களை நுகங்களில் இணைத்து
மண்ண லந்தரு கழனியை வாய்ப்புடன் உழுது
விண்ணி னின்றுஉயர் பொன்மழை வீசிய இயல்பாய்ப்
புண்ணி யம்தரு சாலியை வீசினர் பொலிய. 20

செங்க னித்திரண் மலர்களில் ஒழுகிய தேனும்
கங்குல் மேதியின் கணம்முலை ஒழுகிய பாலும்
பொங்கி ஏகியப் புனங்களின் மணிவரம்பு உடைத்தே
எங்கும் ஆர்தலிற் பசிந்துநெல் முளைத்துஎழுந் ததுவே. 21

(எழுசீர் ஆசிரிய விருத்தம்)

பசிந்துஉருத் தலித்து வளர்ந்துஎழு நாற்றின் பதம்அறிந்து உழவர்கள் பறிப்ப
விசிந்துற முடிசேர்த்து உழத்தியர் சுமந்து விளைவுறும் கழனிகள் தோறும்
இசைந்திடப் பரப்பி நிரைநிரை ஒழுங்காய் இயல்புடன் குரவையிட்டு ஆர்த்து
வசங்கொளக் குனிந்தே சிறப்புற நிரையாய் மல்லல்அம் சேற்றிடை நடுவார். 22

பலன்தரும் பழனம் தொறும்நிரை நிரையாய்ப் பதித்துள கருத்தின்மா ணாக்கன்
நலந்தெரிந்து ஆசான் பதித்துள மறையின் நன்னிலை படர்ந்தென நன்காய்
நிலந்தனில் அறமும் இரக்கமும் பொறையும் நிரம்பிய ....
.... 23

---

19. வாள் - இங்கு விவசாயக் கருவிகளைக் குறிக்கிறது; கூண்டு - கூடி; பானல் - குவளை; கோடு இனங்களின் மணி - யானை , ஏனம் போன்றவற்றின் கொம்பில் பிறக்கும் முத்து; கழை - மூங்கில், உழவர்கள் முத்துகளால் வரப்பு அமைக்கின்றனர்

20. பகடு - எருது, சுமனி - வயல், சாலி - (விதை) நெல், நெல் வீசப்படுதல் பொன்மழைபோல் இருந்தது, இல்பொருளுவமை.

21. கங்குல்மேதி - இருளைப் போன்ற கரிய எருமை; கணம் - கூட்டம்.

22. உருத்தலித்து - முளைத்து; பதம் - பக்குவம், விசிந்து - சுடி, எதுகை நோக்கிய மெலித்தல்; மல்லல் அம் - வளப்பமாகிய அழகினை உடைய.

23. இப்பாடலின் ஈற்றுப்பகுதி சுவடியில் காணப்படவில்லை. பழனம் - வயல், மறையின் - வேதஉபதேசத்தைப் போல, பொறை - பொறுமை.

முளையெனக் கிளைத்துத் தருவெனப் பணைத்து முகடுற நிமிர்ந்துநிர் மூடர்
களைநிகர்த்து எழுந்த கதிர்முதிர்ந்து அறிஞர் கல்விஞா னங்களிற் கனத்த
வளைவெனக் கவரி யெனவயப் புரவி வால்எனப் பிடர்குனி வாகி
விளைநிலத் தடியில் படிதரக் கடையர் வெள்ளமும் கோலினர் விரைந்தே. 24

கோலிய அனந்தம் கோடிகம் பள்ளர் கொழுங்கரக் கூன்அரி வாளால்
சாலியின் காட்டை வளைத்து அறுத்து அரிகள் தமைச்சுமை செய்சிரசு ஏற்றிக்
காலுற நடந்து மேரென வானைக் கடப்பன போர்பல கோடி.
நீலமை முகிலும் தவழ்தர வேய்ந்து நிறுத்தினர் நிலமடங் கலுமே. 25

கருமுகிற் குலங்கள் இனமெனப் பகட்டின் கணங்களை இணைத்துமந் தரப்போர்
வரைகளைப் பிதிர்த்து மிதித்துவை நீத்து மலிந்திடும் செந்நெலைக் கூய்த்துத்
தெரிதரு சகடத் திரள்களில் ஏற்றிச் சேர்புகல் குலுக்கையில் நிறைத்தும்
இரவலர்க்கு அளித்தும் ஏன்றமட்டு ஒயாது எடுக்கவும் குறைவற இருக்கும். 26

(அறுசீர் ஆசிரிய விருத்தம்)

கடைசியர் குரவை ஆர்ப்பில் கயக்கயல் பயந்து தாவி
யிடலின்முக் கனியும் பூகம் இலாங்கலிக் குடும்பும் சிந்தித்
தடமல ரதனில் துஞ்சல் தாமன்மீன் வடிவின் மாமை
மடலுறு கமல மேற்கண் வளர்வன போன்ற தன்றே. 27

---

24. பணைத்து - பருந்து, வளைவு - குனிவு; பிடர் - சுழுத்து; கடையர் - பள்ளர்; வெள்ளம் - கூட்டம்; கோலினர் - சூழ்ந்தனர், (பயிர்) பிடர் குனிவாகிப் படிதரக் கடையர் வெள்ளமும் விரைந்தே கோலினர்.

25. கம்பள்ளர் - மருதநில மாக்கள்,கமபளர் என்பதன் விரித்தல், கூன் - வளைந்த, அரி - நெற்கதிர்; மேர் என - மேருமலையைப் போல.

26. பகடு - எருமை, மந்தரப் போர் - மந்தர மலையைப் போன்ற நெற்போர், வை - வைக்கோல; கூய்ந்து - குவிந்து, சகடம் - வண்டி., புகல், குலுகை - தானியக் குதிர், ஒருபொருட பன்மொழி; ஏன்ற மட்டு - இயன்ற அளவு

27. கயக்கயல - குளத்திலுள்ள மீன்கள், பூகம் - பாக்குக்காய், இலாங்கலி - தேங்காய், குடும்பு - கொத்து; துஞ்சல் - தூங்குதல; தாமன் - பரந்தாமன், திருமால்; மாமை - நிறம்; குளத்துமீன் தாமரைமலரில் இருந்தது மச்சாவதாரன் கமலத்தில் கணவளாதல் போன்றது.

(கலிவிருத்தம்)

கொழுநனை யகன்றில மலர்கள் கோதைகள்
வழியும்ஒண் சுதைமறா வயலும் மாடமும்
ஒழுகுதேன் சொரிவுஅறா வரையொண் பாளைவாய்
மழலைசொல் வனசிறு மதலை அஞ்சுகம். 28

(கலித்துறை)

சிற்றி டைப்பிடி நடைவிழிப் படைக்குடத் தியர்கள்
நற்ற திப்பெருஞ் சாடியில் கடைதறி நாட்டி
விற்றொ டிக்கரத் தால்கடைந் திடும்ஒலி விண்டு
கொற்ற வீரையைக் கடைந்திடும் ஒலியெனக் குமுறும். 29

கீர வாரியை நேரெனத் திசைதிசை கிளர்ந்து
பீரு லாவிய பெருமடி நிரைப்பிர ளயங்கள்
பாரெ லாம்படர் புற்கள்மேய் தரப்பல மணியின்
ஆர வாரம்விண் முகடுஉடைத் திடஅடர்ந் திடுமால். 30

தேயம் யாவுமன் திகிரியின் நடக்குமத் திறம்போன்று
ஆயர் ஊதிய குழலொலி நாதமுற் றறிந்து
மேய லாவதும் செல்வதும் மீள்வதும் ஏகித்
தோய மார்தலும் வருதலும் நிரையினத் தொகுதி. 31

விண்ண திர்ந்திடத் தொனித்துஇரு கால்கொடு விசைத்து
மண்ண திர்ந்திடச் சிதைத்தெறிந்து அந்தரம் மறைத்துத்
திண்ணி றைந்தபொன் மருப்பின்மண் கோதியே தேய்த்து
வண்ண வண்ணமாய் நிரையினம் செருவினை வளர்க்கும். 32

---

28. மலாகள கொழுநனை (மிக்க தேனையும) கோதைகள (மகளிர்) கொழுநலை (கணவனையும்) அகன்றில, ஒண்சுதை - (வயலில்) நல்ல நீர், மாடத்தில(ஒளிமிக்க சுணணாமபு), தேன் - (வரையில்) மலர்த்தேன், (பாளையில்)கள; மதலை - குழந்தை; அஞ்சுகம் - கிளி.

29. பிடி - பெண்யானை, குடத்தியா - ஆய்ச்சியர், நல் ததி- சிறந்த தயிர, விலதொடி - ஒளிவீசும் வளையல, விணடு - திருமால; வீரை - கடல, இங்கு பாற்கடலைக் குறித்தது.

30. கீரவாரி-பாற்கடல்; பீர் - முலைப்பால, நிரைப்பிரளயம்- பசுக்களின் பெருங்கூட்டம், மணி - பசுவின கழுத்தில் கடடப்படடவை, ,

31. மன் - அரசன்; திகிரி - ஆக்ஞாசக்கரம், தோயம் ஆர்தல் - நீர பருகுதல்.

32. இருகால் - பெரிய காலகள், விசைத்து - வேகமாக ஒடி; மறைத்து - புழுதியால் வானத்தை மறைதது; திண் நிறைந்த - வலிய ; பொன் - அழகிய, மருப்பு - கொமபு, செரு - போர்; இது காளைப்போ கூறியவாறு.

சுரபி ஓதையும் கன்றின ஓதையும் துள்ளல்
பறவை ஓதையும் பறழ்களின் ஓதையும் பாறல்
இரையும் ஓதையும் சைரிப ஓதையும் இசைந்தே
நிறைய ஓதையும் பெருகிடும் முல்லைமா நிலமே. 33

(அறுசீர் ஆசிரிய விருத்தம்)

அந்தரம் தன்னில் நாளும் அடர்ந்திடு புயலின் ஆர்ப்பு
சுந்தரப் பொழில்கள் தோறும் சுகம்குயில் அரியின் ஆர்ப்பு
விந்தர்கள் பாடி தோறும் விளங்குவாய்க் குழலின் ஆர்ப்பு
கொந்துறு தடங்கள் தோறும் குருகினம் ஆர்க்கும் மாதோ. 34

அரிவையர் பார ஓதி அமர்ந்திடும் வரிவண்டு ஓதை
வருடையின் தகர்கள் தாக்க மருவிடும் மருப்பின் ஓதை
திருவளர் மனைகள் தோறும் திகழ்மண முரசின் ஓதை
வரைவறக் கொடுப்போர் வாயில் வளர்கொடை முரசின் ஓதை 35

(கலித்துறை)

ஓடல் ஓய்ந்தில கனவிர தமும்இர தமும்;ஒண்
பாடல் ஓய்ந்தில மதுகரம் பாவலர்; பரதம்
ஆடல் ஓய்ந்தில மயில்மட வியர்;முலை யான
காடு நாடெனக் காட்சிகள் சிறந்தன கருதில் 36

நிழல்த ளிர்க்கையால், கனிந்துகண் ணீர்பொசிந் திடலால்,
அழல்அ வித்தலால், அடைந்தவர்க்கு இடங்கொடுத் திடலால்,
பழம்அ ளிக்கையால், பால்அடை ஈகையால் பதுமை
கொழுந னைச்சுமந் திடுவடம் குரவரை மானும். 37

---

33. சுரபி -பசு; ஒதை - ஒசை; துள்ளல் - ஆடு; பறவை - இங்குசேவல் (ஆடு, சேவல் போர்); பறழ் - விலங்குகளின் குட்டி.; பாறல - எருது; சைரிபம் - எருமை; முல்லை - காடும், அதைச்சார்ந்த நிலமும்.

34. புயல் - மேகம்; ஆபபு - ஒசை; சுகம் - கிளி; அரி - வண்டு; விந்தர் - ஆயர், கொந்து - பூங்கொத்து, இங்கு தாமரை, அல்வி போன்றவை.

35. பார ஒதி - நிறைந்த கூந்தல், அளக பாரம், வருடை - மலை ஆடு, தகர் - ஆடு; வரைவு அற - எல்லையில்லாமல்.

36 சுனவிரதம் - நீர், இரதம் - தேர்; மதுகரம் - வண்டு. மடவியர் - மகளிர்; முலை - முல்லைநிலம், இடைக்குறை.

சலம டக்கிமெய் மகிழ்ச்சியான் கைசரோ ருகப்பூ
விலகு செவ்விதழ் விரித்தலால் முகமலர்ச் சியினால்
துலங்க வீகையி னிதிமலர் சொரிதலால் தோன்றுட்
பலன்றெ ரிந்திடும் பலமுமிக் கவருமொப் பாமால். 38

(அறுசீர் ஆசிரிய விருத்தம்)

கயமதில் ஆடி ஓர்மின் கரையினில் குளிந்து நிற்பக்
குயமிரு கோடும் வாசக் குழல்இபக் கரமென் றெண்ணி
பயமுண வந்த தோல்மின் பணிக்களம் நிவற்றல் கண்டே
வயவரி வாயென் றஞ்சி வாரணம் ஓடிற் றம்மா. 39

அழகொழு கியதோர் மங்கை அணியித ழதனைக் கொவ்வைப்
பழமெனக் கருதிக் கீரம் பருகவென் றடுக்க உண்ணேர்
இழைசெறி களத்தைச் சுற்றி இருப்பது நாகம் என்றே
கழைமொழி நலமும் போக்கிக் கதறியே ஓடிற் றம்மா. 40

குளத்திரு கரையும் வள்ளைக் கொடிபடர் ஓர்மான் செவ்வி
வளப்படு முகத்தைச் சீத மதியென வந்த ராகு
களப்பணி மான்காற் றூக்கக் கார்குழல் சரியச் சூரைத்
தொளைத்தவே லவனைத் தாங்கும் தோகையென் றோடிற் றம்மா. 41

---

37. ஆலமரததிற்கும் பெறறோர்க்கும் ஒபபுமை. நிழல் - (பெறறோர்) ஆதரித்தல, கன்நீர், கணணீர, அமுல் - (ஆலமரம) வெயில், (பெற்றோர்)பசி, அடைநதவர்க்கு - (ஆல்) தன்பால் வநதவர்க்கு, (பெற்றோர்) தான அடைந்து (தேவைகளைச் சுருக்கிக் கொண்டு)அவர்க்கு (மக்களுக்கு); அடை - (ஆல்) இலை, (பெற்றோர) பலகாரம், பதுமை கொழுநன் - திருமகள் கேளவன, திருமால, வடம் - ஆலமரம்.

38. தாமரைக்கும் சான்றோர்க்கும ஒபபுமை - மலரின் பக்கல் - சலம் அடக்கி - நீரின் அளவிற்கு ஏறபத் தன் வளர்ச்சியை அடக்கி கொணடு, சரோருகம - தாமரை, சகையின் - கொடையைப் போல, நிதிமலர் - நிறைய பூகளை, சான்றோர பககல - சலம் அடக்கி - வஞ்சனையைத் தவிரத்து, சினத்தை எனினும் ஆம; மெய் - உண்மையான, தாமரை போனற கைகளை விரித்து வழகுதலும. இதழ்களை விரித்து இனிய மொழி பேசுதலும், மலாதிதி என மாறுக, வளாசின்ற செலவம்.

39. கயம - குளம், ஆடி - நீராடி விடடு, மின் - பெண, குயம் - நகில், கோடு - தநதம, இபக்கரம் - யானைத துதிக்கை, பயம் - நீர்; தோல் - யானை, மின் பணிக்களம - மினனுகின்ற அணிகலன் களை அணிந்த கழுத்து, நிவற்றல் - உயர்ததுதல்; வயவரி - புலி, வாரணம் - யானை.

40. இதழ் - உதடு, கீரம - கிவி, உணணோர் - ஏர உண், அமுகிய, இழை - அணிகலன்கள், கழைமொழி - கரும்பைப் போன்று இனிய சொல்.

41. குளம - நீரநிலை, நெற்றி, வளளைக் கொடி, காதிற்கு உவமை, மான் - மான்போன்ற பெண், சூர் - சூரபதுமன், தோகை - மயில்.

(கலித்துறை)

விண்ணி றைந்தகே தனம்பொழி சீர்த்தியும் விசும்பும்
பண்ணி றைந்தயாழ்ப் பாவலர் வாயுடன் சேரி
மண்ணி றைந்தது வளம்பல சாலிநன் மணியும்
கண்ணி றைந்ததுஊர்க் காட்சியும் நலமுடன் காவும் 42

(அறுசீர் ஆசிரிய விருத்தம்)

புள்ளக லாத ஏரி புனல்நிறம் அகலா வாவி
முள்ளக லாத்தேன் பாகல் முகிலக லாத சோலை
கள்ளக லாத பாளை கனிமலர் அகலாக் காவின்
உள்ளக லாத வண்டு விளைவொழி யாத பூமி. 43

அறிவக லாத சிந்தை அருளக லாத கண்கள்
பொறியக லாத நெஞ்சு புயமக லாத வீரம்
விறலக லாத வேற்கை விளைவக லாத புத்தி
நெறியக லாத நீதம் நிழலக லாத மாந்தர். 44

(கலித்துறை)

மரவம் மாலதி மல்லிகை மகிழ்புனா கங்கள்
கரைகள் எங்கணும் நிரைநிரை சொரிகமழ் மலர்மென்
முருகர் உந்திய பிரசமுற் றதற்குநேர் முதிர்பொன்
இரச தந்திகழ் மலர்கொள்சிற் றரணியொத் திருந்த. 45

(அறுசீர் ஆசிரிய விருத்தம்)

தடமெலாம் தரளக் கூட்டம் சலமெலாம் பதுமக் கூட்டம்
மடலெலாம் எகினக் கூட்டம் மடுவெலாம் பணிலக் கூட்டம்
கடமெலாம் மரவத் தோடு காழகிற் சந்தக் கூட்டம்
திடர்கள்போர் மலையின் கூட்டம் தேன்பொழில் பக்கிக் கூட்டம். 46

---

42. சேதனம் - கொடி.; விசுமபு - ஆகாயம், சாலி - நெல், கா- சோலை.

43. புள் - பறவை, வாவி - குளம, தேன் - தேன் நிரமபிய, பாகல் - பலா

44 பொறி - ஐம்பொறிகள், விறல- வலிமை, நிழல - செல்வம

45. மரவம - குங்குமமரம, மாலதி - முல்லை, புனாகம் - புன்னாகம், புனனை, முருகர் - நறுமலர், பிரசம் - தேன், இரசதம - வெள்ளி, சிறறரணி - சிறிய காடு.

46. தடம் - குளம, தரளம் - முதது, சலம் - நீர்நிலை, பதுமம் - தாமரை, எகினம் - அன்னம்; மடு - குளம, பள்ளம எனினுமாம், பணிலம - சஙகு, கடம் -சோலை, மரவம் - குங்குமம மரம், காழ - வயிரம பாயநத, சநதம - சநதனமரம், போர்த்திடாகள எவ மாறுக, நெற்போாகளாகிய மணற்குன்றுகள, பக்கி - படசி, பறவை

காவெலாம் மலரின் கூட்டம் கனியெலாம் தேனின் கூட்டம்
பூவெலாம் ஞிமிறின் கூட்டம் பொருப்பிபக் கோட்டின் கூட்டம்
மாவெலாம் குயிலின் கூட்டம் வரம்பெலாம் வாழைக் கூட்டம்
நாவெலாம் பாவின் கூட்டம் நாடெலாம் செல்வக் கூட்டம். 47

(கலித்துறை)

கமலம் செங்கழு நீர்அலால் கரும்பினைக் கறிக்கும்
கமல மல்லது காரல்பூ கனிநறாப் பொசிக்கும்
விமலப் பூமலர்த் தேன்ததும் பியபட்டம் விட்டால்
நிமிரச் சிந்துதே மாங்கனித் தேன்குண்டில் நீந்தும். 48

சந்த னங்கள்சண் பகம்அலாத் தருக்கள்குங் குமமாம்
மந்த ரங்கள்பொன் அல்லது மணிதிகழ் புளினம்
உந்து செங்கழு நீர்அலாது ஒடைதா மரையாம்
சந்த மாம்பயோ ததியல குழுநறாச் சமுத்ரம். 49

சீரு லாவிய தேயமெண் ணேழும்வாள் அளகை
ஊரும் வாசவன் உலகும்மற் றுள்ளதும் வந்துஇப்
பாரு லாவிய பல்வளம் பயின்றுஅடி பணிய
நாரு லாவிய நாடுநா யகக்குரு நாடே. 50

(அறுசீர் ஆசிரிய விருத்தம்)

நன்னாட்டில் நன்னாடு நாடுகட்குள் நாயகமாம் வளமை நாடு
பொன்னாட்டுக் கும்மியல்பாம் பொன்னாடு குருநாட்டின் பொற்பை எல்லாம்
தென்னாடு போகவதி ஆள்சேடன் உபயசகத் திரநா வாலும்
சொன்னாலும் அதிற்சிறிதும் சொல்லரிதாம் இனிநகரம் சொல்லு வாமே. 51

நாட்டுச் சருக்கம் முற்றிற்று
ஆகச் சருக்கம் 1க்குப் பாடல் 65

---

47 ஞிமிறு - வண்டு, பொருபபு - மலை, இபகோடு - யானைததந்தம.

48 கமலம் - முதலடி யில தாமரை, மறறதில நீர், காரல் - மீன, நறா-தேன், விமல - தூய, பட்டம் - குளம்; நிமிர - பாயந்தும செலலுமபடி., குணடு - குளம

49. தருக்கள் - மரஙகள், மநதரஙகள - பனிஙகுக் கற்கள், புளினம் - மணல் மேடுகள், சந்தமாம் - அழகிய, பய+உததி - பயோததி, பாறகடல், நறா - தேன்.

50 தேயம் எண்ஏழு - ஐம்பதாறு தேசங்கள், வாள் - ஒளிமிக்க, அளகையூர் - வடதிசைப் பாலனாகிய குபேரனின் தலைநகரம், வாசவன் உலகு - சீழ்திசைப் பாலலும் தேவாகவின் அரசனுமாகிய இந்திரனின தலைநகராகிய அமராவதி, நா - விருபபம, நாயக- தலைமையான.

51 பொறபு - அழகு, தென நாடு - அழகுவிரும்மி அடைந்துளள, போகவதி - நாகலோகம்; சேடன் - ஆதிசேஷன், உபயசகதிரம - இரணடாயிரம, ஆயிரம நாக்குகளும பிளவு பட்டனவாதலின் இரணடாயிரம என்றார்

2. நகரச் சருக்கம்

(கலித்துறை)

உலகெ லாமுளார் உததியர் தாவுவின் உயர்பொன்
உலகு ளோர்களிவ் வுலகுற உன்னுவர்; உறுமூ
உலகெ லாம்புகழ் அத்தின புரியையான் ஓர்ந்துஇவ்
உலக மானவர்க்கு உரைப்பன்ள னின்என்சொலாது உலகம். 1

நிறையில் வாடியே மிதந்தபொன் னுலகைமேல் நிறுத்தி
விறலி னால்அள காபுரி வடக்குற இலங்கை
அறலி னுட்புக விரட்டிநா கப்புவி அமுக்கிப்
பொறிநி ரம்பும்அத் தினபுரி வளம்சில புகல்வாம். 2

தவள நித்திலச் சுதைபிறங் கிய்தடப் புரிசை
திவந ரைச்சசி யினங்கள்பல் கோடிகள் திரண்டு
சுவர்எ ழும்பிமீ உலகெழுந் தாங்குமேல் தோற்றி
நவம்நி ரம்பியெவ் வுலகையும் நகுவதொத் ததுவே. 3

மதிஉ யர்ந்துள முதியவர் மனவிசா லமதாய்
அதிக நீர்வளம் உளதுஎலாம் தனதிடத்து அடக்கிப்
பதியெ லாம்அகட் டுள்கொடே அளிக்குமப் பரன்போல்
உததி ஓடைசூழ் காப்பெனும் பேருபெற்று ஓம்பும். 4

அரிநி றத்துஅரி ஏழ்பிணித் திடும்அரி அரணப்
புரிசை கீழுறச் செறிந்தசா ளரவழி புகுந்தே

---

1. உததியர் - கடலில் வாழ்பவர், உன்னுவா - சுருதுவா, ஓர்ந்து - உணர்ந்து, மானவர்க்கு - மனிதாகளுக்கு.
2. நிறை - சுனம், இங்கு தகுதி, பொன்னுலகு - அமராவதி, விறல - வலிமை, இங்கு செலவத்தால வந்த வலிமை, வடக்குற - வடதிசையில அமைய, தோற்று வடக்கிருக்க, சலலேகனை, அறல- நீர், இங்கு கடல; நாகப்புவி - நாகலோகம், பொறி - திருமகள் அருள.
3. தவள - வெண்மையான, நித்திலசுதை - முத்துபபோன்ற சுணணாம்பு; புரிசை - மதில், திவ - வானில் உளள, நரை - வெணமையான, சசி - சநதிரன், மீ உலகு - மேல உலகம், நவம - புதுமை, நகுவது- பரிகசித்தல.
4. பதி- (இங்கு) உலகம், அகடுள - வயிறறில், அளிக்கும - பாதுகாக்கும், பரன - (இங்கு) திருமால, உததி - கடல, ஓடை - அகழி, பேரு- பெயர்

விரைவின் ஏகுவன் விதுவுமே சாளர வழியில்
ஒருவி ஏகுவன் மதில்உயர்ந்து ஓங்கிய உயர்ப்பில். 5

வழிந்த தேன்நிரை மடிதரு பால்மடை ஆலை
இழிந்த பாகுஅயம் எற்றிய உவர்க்குரும் பையின்நீர்
முழங்க வேகடைந்து அலுத்துநீத் திடும்தயிர் முதுநெய்
கெழுங்கி டங்குசிந்து ஏழும்ஒன் றாம்எனக் கிளர்க்கும். 6

சத்த வாரிதி ஏழையும் பொருதவே சமைத்து
வைத்த தாம்எனப் பொருவிஆழ்ந் துளவளர் அகழில்
எய்த்தி டாவரை விடுத்திடில் உகம்பல இறந்து
நித்தம் எய்த்துஅற லாய்விடும் நிலம்பெறல் அரிதே 7

விரவும் ஓடையின் இடங்கரில் சிறியது விழுங்கும்
கரிகள் ஆயிரம்; அக்கரா ஆயிரம் கயல்ஒன்று
ஒருவி நுங்கும்அக் கயல்கள்ஆ யிரம்ஒரு சுறவு
பருகும்; ஆயிரம் சுறவையும் பருகும்ஓர் மகரம். 8

இரும்ச கத்திர இதழொடும் எண்ணில்பல் கோடி
அருங்கு சேசய மலர்க்கவ சம்புனை அகழைப்
பரந்த ஆயிரம் பங்கய விழியினால் பார்த்து
மருண்டு வாசவன் மயங்குவன் தினந்தினம் மாதோ. 9

நூறு மகஞ்செய ஆயிரம் கண்ணினால் நோக்கப்
பேறு பெற்றனம்; அலகிலா மகங்களைப் பேணி

---

5. அரிதிறுதது - பச்சை வண்ணத்து; அரி - குதிரை, அரி- சூரியன், அரணபபுரிசை - கோட்டைமதில்; சாளரம - ஜன்னல், விது- சந்திரன், ஒருவி- விலகி.

6 நிரை - பசுக்கூட்டம, மடை - வாயக்கால, ஆலை - சரும்பைப பிழியும் இயந்திரம; பாகு - சரும்புப்பால, அயம் - அரிவாள், எற்றிய - உடைதத, கெழும கிடங்கு - நிறைந்த அகழியில்.

7. சதத வாரிதி - ஏழுகடலகள், பொருவி - நிகர்த்து, எய்த்திடா - மெலியாத, பெரிய என்றவாறு, வரை- மலை; அறல - மணல.

8 இடங்கா - முதலை, சுரா - முதலை.

9. சகத்திரம் - ஆயிரம், குசேசயம் - தாமரை; வாசவனு - இந்திரன்.

ஏறல் செய்தன மில்லையிவ் வகழென எழிலாய்
வீறு பெற்றன மிலையென அரியும்வெய் துயிர்ப்பன். 10

வனச மாமலர் மணிகளும் பணிலவெண் மணியும்
நனிகொள் இப்பியின் மணிகளும் மலைமதம் நாவி
கனகம் ஆர்ந்துள கரைதொறும் நிரைநிரை கவினத்
தினம்ஒ துக்கலால் வெண்ணிலாக் கதிர்களே செறியும். 11

பூக நற்குலை முக்கனி பொன்தெனங் குரும்பை
ஊகம் தத்தியங்கு உகுதர ஒதிமம் பறக்கல்
ஆகம் மெய்நகைத்து அகன்றிடு மலர்க்கையால் அடர்ந்து
மாகம் அம்புவிக்கு எறிந்தபொற் பந்தினை மானும் 12

பரிதி மேவிய ரதகச துரகப தாதித்
திரள்வி மானம்வை யஞ்சக டங்களும் செருமி
மருவி ஆர்ந்திடும் எயிற்கடை மகரதோ ரணங்கள்
பரவு காவணம் பரவிய பற்பல வீதி 13

எண்ணி லாதபல் கோடிவீ திகள்மறுகு எவையும்
வெண்ணி லாவொளி விரிதர மாடமே நிவந்த;
அண்ணல் முக்கணன் கயிலைநேர் அலகிலா வரைகள்
நண்ணல் போன்றதால் சிவமயம் நிறைந்ததுஅந் நகரே. 14

உதய செங்கதிர்க்கு உயர்நிறம் தருபொனால் ஒளிரும்
பதியிற் பற்பல தெருத்தலை நிலைபடி கடிகை
கதவு மாமர கதச்சுடர் உலவிய காட்சி
அதிக செந்திரு மயமும்அச் சுதன்மயம் ஆர்ந்த 15

---

10. மகம் - வேளவி, இங்கு அசுவமேதமாகம, இவ்வகழென ஏறலசெய்தனம் இல்லை, எழிலாய் வீறு பெற்றனம இலை எனறு இடைநிலைத் தீபகம் ஆகுக, அரி - இந்திரன, வெய்துயர்பபன் - பெருமூச்செறிவான்

11 பணிலம்- சங்கு, இபபி - முத்துசசிப்பி, மலைமதம - கல்மதம், நாவி - கத்தூரி, கனகம - பொன்

12. பூகம் - பாக்குமரம், ஊகம் - குரங்கு, ஒதிமம - அன்னபபறவை, மாகம் - ஆகாயம்,

13 பரிதி - தோசுகில, உருள; பதாதி-காலாட்படை, வையம - பலலக்கு, சகடம் - வண்டி ; செருமி- நெருங்கி, எயிற்சுடை-கோடடைவாயில, காவணம் - பந்தல்

14. மறுகு - தெரு, நிவநத - உயர்நதன, நிவநத மாடமே வரைகள் நணணல போன்றதால அநநகா சிவமயம நிறைநதது என்க.

15 கடி.கை - தாழ்பபாள, செநதிரு - இலகுமி, அச்சுதன் - திருமால்

பசிய தோரண நித்யகல் யாணபாக் கியமும்
உசித லட்சுமி கரஅலங் காரசிங் கார
. . . . . .
சுசிக ரங்கள்போல் பெருகும்அம் மனைதொறுந் தோறும் 16

கொண்ட லாம்குழற்கு அரிவையர் இடுபுகை குழுமி
மண்டி மேகமண் டிலமென இருவெளி மறைக்கும்
அண்ட கோளகை அகடுஉரஞ் சியகுட மகுடம்
விண்ட யங்குமின் எனமண முரசுஇடி விளங்கும். 17

மாட கூடமேல் நிறுவிய மணித்துசம் வாகை-
யாடி வானுல கினைஅமர்க்கு அழைக்கவந் திலவால்
நீடி தாம்அகழ் அலர்விரிந் திடலும்மேல் நிவந்த
நாடும் வெண்சுதை மாடமும் நகுவதொத் ததுவே. 18

சேணு லாவிய அலகிலாக் கேதனத் திரள்கள்
மாணு லாவிய வான்நதி படிந்துகம் வாரிப்
பூண வீசுமிப் புரத்துஅரி வெம்மையே பொருந்தா;
சோண மால்பரி விசையுறுங் கழைஉரஞ் சுமத்தால் 19

மூவர் தேவர்கள் முனிவர்கள் செவிக்குஇசை அமிர்தம்
தூவு நாரதன் இந்நகர்க் குயிலுவத் தொழிலோர்
பாவின் யாழிசைக்கு அரண்டுவெய் துயிர்ப்பன்இப் பாரின்
மேவி லான்எகா டுங்கு ச்சமும் கலகமும் விளையான். 20

கடுவி சைக்ககக் குலங்களும் கோநிரை களும்நின்று
அடைவில் யாழ்இசைக்கு இணங்குஇரா கங்கள்கேட் பதலால்

---

16. இப்பாடலின் மூன்றாம்அடி சுவடியில காணப்பெறவிலலை. உசித - ஏற்புடைய, சுசிகரஙகள - மேனமைகள்.

17. கொண்டலாம் - மேகம் போன்ற இரு வெளி-பெரிய ஆகாயததை, அகடு-வயிறு, குடமகுடம் - கோபுர கலசம, விண்தயஙகும மின - வானததில் ஒளிரும் மின்னல்

18 மணிததுசம - அழகிய கொடி, வாகையாடி - வீரம் காட்டி, வந்திலவால் - வராததால், நீடிதாம் - பெரிய, அலர் - (இஙகு) தாமரை, நிவநத - உயர்ந்த

19 சேண் - ஆகாயம, சேதனமகொடி, மாண - பெருமை, வான்நதி - ஆகாய கங்கை, கம் - நீர், புரதது - ஊரில், அரி - சூரியன், சோணமால - செமமைநிறத்தினனாகிய சூரியன, கழை-மூங்கில, உரஞசும் அததால பரி விசையுறும் என்க

20. குயிலுவததொழிலோர் - நரமபுக கருவிகளை வாசிககும் இசைவாணர, அரணடு - அஞ்சி; குசசம் - புறஙகூறுதல்

குடில மீதுகந் திருவரும் தினந்தினம் குறித்துப்
படினம் வந்தில நமக்குளனப் பங்கமுற்று இரிவார் 21

வில்லு மிழ்பணி சுமக்கஆற் றாதுமின் னார்கள்
எல்லை இல்தெருத் தெருத்தொறும் எறிந்தமா ணிக்கக்
கல்லும் நித்திலங் களும்கதிர் மதிஒளி காட்ட
அல்லும் எல்லும்ஓர்ந் திடல்அரிது அணிநகர்ச் சிறப்பே 22

சீர்த தும்பும்இந் நகரியின் கிரணமே செருமித்
தார்த தும்புபொன் னுலகுஅள கையும்அகி தலமும்
நீர்த தும்புஇலங் கையும்பல வும்எழில் நிறைந்தால்
நார்த தும்பு(இதில்) உறைபவர் வளம்எவர் நவில்வார். 23

பொன்னும் மென்மலர்ப் புனலும்நல் நெல்லுமே பொருந்தும்
மன்னும் நால்வகை மங்குலும் சொரிந்திட வளம்சீர்
துன்னு மாகில்அத் தொல்புவி சீர்வளம் சுபிட்சம்
இன்ன வாறுஎன உரைத்திட முற்றுமோ எவர்க்கும் 24

கனம்த தும்பும்இந் நகர்வளர் தருபல் (காளையர்)
இனங்கள் மெய்க்கவி னுக்குஉடைந்து எய்த்ததால் தினமும்
மனம்ப யந்தவில் மதன்உரு எழிலையும் மறைத்தே
அனங்கன் ஆயதும் உலகம்எல் லாம்அறிந் திடுமே. 25

(அறுசீர் ஆசிரிய விருத்தம்)

நன்னகர்க் கரச தான நலஞ்செறி பதியை நோக்கிப்
பொன்னிமை யவரி னங்கண் பொருந்திலர்; பூவில் பாதம்

---

21. ககக் குலம - பறவைக்கூட்டம், கோ நிரை - ஆனினம், குடிலம - ஆகாயம், படினம - பக்குவம், இங்கு இசைதேர்ச்சி, பங்கமுற்று - நாணி; இரிவார் - ஒடுவர்.

22. வில் உமிழ - ஒளிவீசும்; பணி - அணிகலன, சுதிர் - சூரியன், மதி - சந்திரன், அல்-இரவு; எல் - பகல.

23. செருமி-நெருங்கி, அகிதலம - நாகலோகம, நார - விருபபம்.

24. மங்குல - மேகம், இவை சமவாததம், ஆவர்ததம, புடகலாவாத்தம், சங்காரித்தம், துரோணம், காளமுகி, நீலவாணம் என ஏழு வகைப்படும். இவை முறையே மணி, நீர், பொன், பூ, மண், சுல், நீ ஆகியவறறைப பொழியும். இவ்வேழில நன்மை தரும் முதல நாலவதை மேகஙகளே இங்கு கூறபபெற்றன.

25. கனம - பெருமை; மெயக்கவின் - உடல அழகு, மதன் - மன்மதன்; அனஙகள் - உடலற்றவன், மாரன்

இன்னம்வைத் திலர்கள்; மாதர் இணைக்கவான் அரம்பைக்கு அஞ்சி
மின்னுவான் அரம்பை மார்சித் திரம்என விழித்தல் மாதோ 26

அந்நகர் வாழும் மாதர் ஆனனம் நிகர்க்க நாடி
மன்னுமே ருவினைக் கோலி மருந்தொன்று தேடிக் காணாது
இன்னலோடு எயிலின் சாள ரத்தினில் கரந்து சென்று
துன்னும்எம் மனையும் தேடிச் சோமன்தேய்ந்து உதிப்பன் மாதோ 27

மங்கலம் எட்டும் பொங்கும் வளநகர் மனையின் மாக்கள்
தங்கள்தம் மனைகள் தோறும் தானம்ஏற் பவர்யார் என்ன
அங்கொடை முரசுஇ யற்றி அறுசுவை உண்டி ஈந்து
தங்கம்மின் மணிபூண் ஆடை சதுவரு ணருக்கும் ஈவர் 28

அரிவையர் தமிற்கற் பில்லார் அருந்ததி தனினும் மிக்கார்;
உருஎழில் இல்லார் மாவிற்கு உருவசி சசிக்கும் மிக்கார்;
அருள்இலார் உமைக்கு மிக்கார் அந்நகர் மின்னார் என்றால்
பெருமையிற் சிறந்த மாதர் பிரபலம் பேச லாமோ? 29

அரிச்சந்த்ர னுக்குஎய்த் தோர்இல் அருண்மெய்ம்மை இல்லா மாக்கள்;
உருச்சந்த மிலிகள் வேளுக்கு உடைந்தவர் இல்லை; வேலால்
பொரத்துங்க மிலார்செவ் வேளைப் பொருவிலார்; இலையீ யார்கை
தருப்பொங்கும் நிதிமால் ஆவில் தாழ்ந்ததும் இல்லை தானே. 30

சீரிலார் நிதிக்கோ னுக்கும் சிறந்தவர்; கேள்வி யில்லார்
பேருறும் சேட னாற்கும் பொடியவர்; பிறங்கும் கல்வி
ஆரிலார் கும்ப யோனிக்கு அறிவுள ராகில் அந்தப்
பாரினில் மிக்கோர் வண்மை பகர்வதற்கு உவமை உண்டோ. 31

---

26. பதி - ஊர், இணைக்கவான் - இரு தொடைகள்; அரமபை - வாழை மரம்; தேவர், அரம்பையர் விழி இமையாதிருத்தல், அவர்தம் காலகள் நிலம தோயாதிருத்தல் ஆகியவறறிற்கு வேறு காரணம் கற்பிக்கப்படுகிறது, தற்குறிப்பேற்ற அணி.

27. ஆனனம்-முகம், கோலி-வலம் வந்து; எயில் - மதில், சாளரம் - ஜன்னல்; கரந்து - ஒளிந்து; சோமன் - சந்திரன்.

28. மங்கலம் எட்டு - அட்டமங்கலம், அவையாவன, - சாமரம், நிறைகுடம, கண்ணாடி, தோட்டி, முரசு, விளக்கு, கொடி, இணைக்கயல் என்னும் எட்டு சுபப பொருள்கள், சதுவருணர் - நால்வகைச் சாதியர்.

29. அரிவையர் - மகளிர, மாவிற்கு - திருமகளுக்கு, சசி - இந்திராணி

30. உருச்சந்தம் இலிகள் - வடிவழகற்றவர்கள்; வேள் - காமன்; பொர - போரிட, துங்கம் - உயர்ச்சி; நரு - கற்பக மரம; நிதி - சங்க, பதும நிதிகள்; மால் ஆ - இந்திரனுக்குரிய பசுவாகிய காமதேனு; தரு, நிதி, ஆவில் கை தாழ்ந்ததும் இல்லை என்க.

(எழுசீர் ஆசிரிய விருத்தம்)

ஆய்வது பன்னூல்; அலைவன தருக்கொம்பு; அலைப்பன சாலியின் கதிர்கள்;
மாய்வன கலிகள்; மடிப்பது கலிங்கம்; வாடுதல் மாதர்கள் இடையே;
தேய்வது பாவம்; தேடுதல் கீர்த்தி; தெவிட்டில பண்பன்நூல் செவிக்கு;
சாய்வது நீழல்; பாய்வது தோயம்; சலிப்பது மணிகள்சல் லடையே.
32

அடிப்பது காற்றே; அலர்வன வீக்கள்; அரற்றுதல் நூபுரம்; யாரும்
படிப்பது வேதம்; மறக்கல்பொய் களவு படுகொலை பகரணிக் குறும்பு;
முடிப்பது மலர்கள் முருக்கலர் ஒருபூ முறைமுறை யநுதினம் மதுவைக்
குடிப்பது ஞிமிறு; கருப்பது மேகம் குணமெலாம் இந்நகர்க்கு உளவே
33

(கலித்துறை)

வெட்டு வெட்டெனச் சொல்வது வாவியை; மேலும்
கட்டு கட்டெனச் சொல்வர்சத் திரம்புனற் கரையைத்
தட்டு தட்டெனச் சொல்வது வட்டதா கியதைத்
திட்டு திட்டெனச் சொல்வர்பொன் மணித்திட ரினையே 34

மறியெ னச்சொல்வர் மானொடும் ஆவினக் கன்றை
பறியெ னச்சொல்வர் களமர்கள் கயல்படுப் பதனை
வெறியெ னச்சொல்வர் விளம்பிய வெள்ளையை மேலும்
சொறியெ னச்சொல்வர் பலவின்முட் புறச்சுளைக் கனியை. 35

குடத்தின் பாலினைப் பாற்கடற்கு இணைகுறித் ததுபோல்
மடத்தின் புன்மதி நாடிஅந் நகரையும் நவின்றேன்;
திடத்தின் மன்னுயிர் தன்னுயி ராமெனச் செங்கோல்
நடத்தும் மன்னவன் தருமபூ பதிகுணம் நவில்வாம். 36

நகரச்சருக்கம் முற்றிற்று
ஆக்ச் சருக்கம் 2க்குப் பாடல் 101

---

31. நிதிக்கோன - குபேரன், குமபயோனி - அகத்தியர், வணமை - சிறப்பு.
32. தரு - மரம், சாலி - நெல், கலி - ஏழ்மை, கலிங்கம் - ஆடை; தோயம் - நீர்.
33. வீக்கள் - மலாகள், நூபுரம் - சிலம்பு, ஞிமிறு - வண்டு
34. வட்டு - சூதாடு கருவி
35. மறி - இளங்கன்று, இறந்துபோ எனததிடடா, பறி - மீன் பிடிக்கும் கருவி, களமர் - மருத நிலத்தினா, பிறா பொருளைப் பறிக்கச் சொலலார், வெறி, வெள்ளை - ஆடு; கள் வெறிபற்றிய பேச்சு இருக்காது, சொறி - குடடநோய, ஊரில இவ்வியாதி இல்லை.
36. மடம் - அறியாமை, அநநகா - அத்தினாபுரம, பண்டறிசுட்டு, பூபதி - நிலததின் தலைவன், அரசன்

3. தருமராசன் கீர்த்திச் சருக்கம்

(கலிவிருத்தம்)

பொன்னகர்க்கு உயர்புகழ் அத்தி னாபுரி
நன்னகர்க்கு அரசன்மன் னவர்கள் தம்பிரான்
மன்னும்மா உறைதரு குவளை மார்பினான்
முன்னம்நற் கிருபையான் முரச கேதனன். 1

பொருப்பினம் மருப்பினால் பொருது குத்தியும்
உரற்பதத் தாக்கினால் எத்தி மும்மதப்
பெருக்கினிற் கரைத்துஎண்ம திரத்தின் பேர்இபம்
வெருக்கொளப் பகைமுடுக் கியவெவ் வாரணன். 2

மருத்தையும் பயிற்றியே மனத்தின் வேகமே
தரித்துஉர கச்சிரம் அலையத் தத்திமா-
திரத்தரை மீயெலாம் சினத்தில் கோவித்தெவ்-
வரைச்சிரத் திரளைப்பந் தடிக்கும் மாவினான் 3

ஈசன்கைச் சூலம்நேர் இசைந்த சத்தியான்
காசைவீப் புரனின்சக் கரம்போல் ஆழியான்
தேசுஅயன் தடியெனத் திறல்க தாயுதன்
வாசவன் படையைநேர் வச்சி ராயுதன் 4

காரெனக் கணைசொரி கார்மு கத்தினான்
போரணிக் கொருகுகன் போல்கை வேலினான்

---

1. மா - திருமகள், கிருபை - கருணை, கேதனன் - கொடியை உடையவன்.
2. பொருபபு - மலை, இங்கு எடடுக குலமலைகளைக் குறித்தது; மருப்பு - தந்தம; உரல்பதம் - (யானையின்) உரலைப் போன்ற கால; மாதிரம - திசை, இபம் - யானை, இங்கு எட்டுத் திசை யானைகள், வெருக்கொள - அஞ்ச, வாரணன் - யானைப படையை உடையவன்.
3 மருத்து - காற்று, உரசு சிர ம - (உலகைத தாங்குகின்ற) ஆதிசேடனின் தலை, மாதிரத் தரை - நிலம, ஒருபொருட்பன்மொழி, கோலி - வளைதது, தெவவர் - பகைவர்; மாவினான் - குதிரைப் படையை உடையவன்.
4. காசை வீ புரன் - காயாம்பூ போன்ற நீலமேனியனாகிய திருமால, தேசு - புகழ்மிச்ச, அயன் - பிரமன, வாசவன் - இந்திரன்.

நாரணி நாட்டநேர் அனைய நண்புளன்
தாரணி புரந்திடும் தரும ராசனே 5

உந்திபூத் தவனையும் உள்ள சேனையும்
சிந்துவில் ஒளித்திடச் செயங்கொண் டோனுடன்
அந்தமில் இடும்பன்கீ சகன்சு யோதனன்
மைந்தனை அழிக்குமா ருதிக்கு முன்னவன் 6

கடுவமர் களன்சிரம் கழல்மட் டோங்கியே
வடிவுற அடித்துநல் வரங்கள் வாங்கிவிண்
ணுடையவர் பகையறுத்து உம்பர் கோன்மணி
முடிபுனை குரிசிலின் முன்னான் ஆனவன். 7

ஐயனே வரம்எனக்கு அருள்என் றேஅனல்
கையினை ஏந்தவும் காப்பன் யான்என
உய்யவும் எரிவன உணவன்று ஈந்தவன்
துய்யபைந் துளவினான் தோழன் முன்னவன். 8

எண்ணரும் புரவியின் இதயம் ஓர்ந்துமுக்
கண்ணன்விண் ணவரும்மண் ணவரும் நாகரும்
எண்ணும்அற் புதமுற இவுளி தான்நடத்து
அண்ணல்மா நகுலன்முன் ஆன பூபதி 9

கருதும்எண் ணெண்கலை களும்நி மித்தமும்
சுருதிமுக் காலஞா னத்தொன் னூல்களும்

---

5. சார்முகம் - வில்; நாரணி நாடடம் - இலட்சுமி சுடாட்சம், தாரணி - உலகம்.
6. சிந்து - கடல்; மாருதி - வாயுவின் மகன், வீமன்.
7. கடு அமர் கனன் - விடமுண்ட கண்டன், சிவபிரான், உம்பர் கோன் - தேவேந்திரன், குரிசில் - இங்கு அருச்சுனன். இதுபற்றியே அவன் கிரீடி எனச் சிறப்பிக்கப்படுகின்றான்.
8. அனல் - தீக்கடவுள்; எரிவனம் - சாணடவ வனம்; துளவினான் துளசிமாலையை அணிந்துள்ள திருமால், ஈனடுக் கண்ணன், தோழன் - கண்ணனின் நண்பனாம் அருச்சுனன்
9. முக்கண்ணன் - சிவபெருமான், அற்புதமுற - வியக்கும்படி; புரவி, இவுளி - குதிரை, முன் - அண்ணன்.

தெரிதரத் தெளிந்துஅகத் திருக்கும் ஆதியை
முரணுறப் பிணித்தசா தேவன் முன்னவன் 10

தனதன்வீ டணன்முதல் தலத்துஇ ராசரும்
கனமணி இருநிதி கலன்பொற் றூசுகள்
தினமடி வருடியே திறைய ளித்திட
மனமகிழ் திகிரிமா மன்னர் மன்னனே 11

தேயமெண் ணேழுஉலகு ஏழும் திகாந்தமும்
காயமும் பல்லுயிர்க் கணங்கள் யாவையும்
தூயதன் ஆவிபோல் துன்புஅ கற்றிநல்
தாய்எனக் காத்திடும் தரும ராசனே 12

தெரிந்திடும் கவிகையால் சிவந்த பாணியால்
நரங்குநோய் மருந்துஎனப் பசந்த நாரினான்
பரந்தவன் கலியினைக் கறுத்த பார்வையான்
விரிந்தமீ திசையெலாம் வெளுத்த சீர்த்தியான். 13

எந்நிலத்து அரசரும் ஏவல் கேட்கவே
பொன்னிலத்து அமரர்கள் புகழ்ந்து பேற்றவே
பின்னவர் ஊழியம் பேணிச் செய்யவே
மன்னர்மன் னவன்மணித் தவிசில் வைகினான் 14

அருள்கொடு படைகுடி கூழ்அ மைச்சுநட்பு
அரண்வலி உடையனாய் அவனி ஓங்கும்ஓர்

---

10. எணணெண்கலைகள் - அறுபதது நான்கு கலைஞானங்கள், நிமித்தம் - சகுனம், சுருதி - வேதம், ஈண்டு அறிவியலைக் குறித்தது, தொன்னூல்கள் என்றது சோதிடப்பனுவலகளை; அகத்து இருக்கும் ஆதி - சர்வானமாக்களுக்கும் அந்தாயாமியாய விளங்கும் பரமபொருள்; முரணுறப பிணித்த - தியானத்தால வன்மையாகக கடடிவிடட, சகாதேவன் கணணனைப் பிணித்தது பாரத வரலாறு; முன்னவன் - தமையன்.

11. தனதன் - குபேரன், தூசு - ஆடைகள், திறை - கபபம்

12. எணணேழு - ஐமபத்தாறு, திகாந்தம - திசைகளின முடிவு, காயம் - ஆகாயம், முதற்குறை.

13. தெரிந்திடும - தெரித்திடும், பகுகிடுகின்ற, எதுகை நோக்கிய மெலித்தல் விகாரம, கவிகை - வழங்குவதறகாகக் கீழ்நோகி விரிந்திடும் கரஙகள், வினைத்தொகை, பாணி - கை; நரங்கு - கொஞ்சம் கொஞசமாகக கொல்கின்ற; நாரினான் - (குடி களிடததே) அன்புடையவன், கறுத்த - கினந்த, அடக்கிய என்பது குறிப்பு. புகழ் வெண்மையுடையது எனல் இலக்கிய மரபு.

14. பின்னவர் - தம்பிகள், தவிசு - சிஙகாதனம்.

பெருமதிக் குடைநிழல் பெற்று வாழவே
தருமந ராதிபன் தவிசில் வைகினான் 15

வன்னியும் பருந்தும்ஓர் குடம்பை வாழவே
பன்னகம் ப்லவங்கமும் வளையில் பாங்குறக்
கன்னிமான் வேங்கைஓர் கரையில் நீருண
மன்னர்கோ மான்உலகு ஆளும் வைகலில். 16

என்செய்தோம் பாதகம் இயற்றி னோம்என
நெஞ்சம்மாழ் கிடவிண்டு நேர்வி யாசரும்
சஞ்சலம் அகற்றமா வேள்வி தான்செயும்
வெஞ்சம ரங்களும் மேல்வி ளம்புவாம். 17

தருமராசன் கீர்த்திச் சருக்கம் முற்றிற்று

ஆகச் சருக்கம் 3க்குப் பாடல் 118

---

15. "படைகுடி கூழ்அமைச்சு நட்புஅரண ஆறும உடையான் அரசருள் ஏறு" என்பது தமிழ்மறை (381) கூழ் - செல்வம்; மதிக்குடை சந்திரனைப போன்று தணணிழல் தரும் குடை; நராதிபன் அரசன்.

16. வனனி-கிளி; குடம்பை-கூடு,பன்னகம்-பாம்பு,பலவங்கம்-எலி, வைகல்-நாள்

17. மாழ்கிட-வருநத,விண்டு-திருமால்,சஞ்சலம்-சுவலை,மா-குதிரை ;மா வேள்வி-அசுவமேத யாகம்,சமரம்-போர

4. எமனாசுரன் போர்ச்சருக்கம்

(கலிவிருத்தம்)

அனந்த ஞானி ஐயன்கரு ணாகரன்
அனந்தன் மீதில் அனந்தல் புரிந்தவன்
அனந்த லோகம் நிறைந்தப ராபரன்
அனந்த நாமனை அஞ்சலி செய்குவோம் 1

பொய்சொ லான்பொறை யான்றன் சரித்திரம்
செய்சந் தானம தாஞ்சென மேசெயன்
மெய்சொல் வேதிய னோடுவி னாவவே
வைசம் பாயன மாமுனி கூறுவான் 2

அருளெல் லாம்உரு வானத யாபதி
முரச கேதனன் மூவறு நாளினும்
செருவி னால்சிதைந் தோர்களைச் சிந்தைசெய்து
உருகி னான்அழல் உற்ற அரக்கனே. 3

நேரு மோநிக ரில்கொலை பாதகம்
ஆரு மோவென்று அழுங்கும்; கொடும்பவம்
தீருமோ தெய்வ மேசன னம்கதி
சாரு மோஎனச் சஞ்சல மாகினான். 4

உருகு வான்ஒரு வற்கும் உரைத்திலான்
கருகு வான்சரு காய்க்கண் கலங்குவான்
மறுகு வான்மரை ஆர்சல மாய்க்கடுப்
பருகு வான்கயல் போற்பதைத் தானரோ. 5

---

1 அனந்தன்-ஆதிசேடன், அனந்தல்-உறக்கம்

2 பொறையான்-பொறுமையை உடையவன்,சரித்திரம்-இங்குப் பாரதம், சந்தானம்-வம்சம்,

3. முரச கேதனன்-முரசுக கொடியை உடைய தருமன், மூவறு நாள - பாரத யுத்தம் நடந்த பதினெடடு தினங்கள்,செரு-போர

4 கொலைபாதகம நேருமோ, (அது) ஆருமோ என்று அழுங்கும்; பவம-பிறப்பு,சனனம்-பிறவி,சதி சாருமோ-மோடசம பெறுமோ

5 மறுகுவான்-வருந்துவான்,மரை ஆர் சலமாய-தாமரை நிறைந்த (குளத்தின) நீர எனநினைதது, கரு-விடத்தை, வான் கயல-பெரிய மீன

எந்த நாளில் பவங்கழன்று ஏகிடும்?
எந்த நாளில் பரகதி சேரலாம்?
எந்த நாட்கடைத் தேறுதல்? தேறுதல்
எந்த நாளில் எனக்குறும்? தெய்வமே! 6

என்ன வேகசிந்து எண்ணிஇ டைந்திடும்
உன்னம் ஓர்ந்துஉலகு உண்டவன் அண்டியே
மன்னவா நின்மனம் கண்க லங்குதல்
என்ன காரணம் என்றுஇனிது ஓதுவான். 7

ஆதி தன்செயல் அன்றிநின் றன்செயல்
ஏதும் ஒன்றிலை என்றுஅறி; போரிடை
வாது கொண்டு மடிந்தவர்க் காஉளம்
போத நோதல்என் போதம்மி குந்துளாய். 8

தீமை ஒன்று செயல்எதும் செய்திலாய்;
வாய்மை யன்றி மறந்தும்மா யஞ்சொலாய்;
காய்மை வஞ்ச கமும்கன விற்கொளாய்;
தூய்மை நல்லற மும்சுமை கொண்டுளாய். 9

ஒப்பி லாய்உன் உளக்கலக் கங்களை
இப்ப வேதுற;நின்இத யத்தினில்
தப்ப தாம்பவம் தான்செயும் என்றுஎனில்
ஒப்பி யாம்கொளு தும்ஒழி உன்றுயர். 10

உன்னு யிர்க்கும் உறுதிய தாய்ப்பல
மன்னு யிர்க்குஇரங் கும்மன மாட்சியாய்
என்னு யிர்க்குயி ரேஇக் கணத்திலே
நின்னு யிர்ப்பெறி யுந்துயர் நீக்குவாய். 11

---

6. தேறுதல்-உள்ளம் தெளிவு பெறுதல்.
7. இடைந்திடும்-வருந்தும,உன்னம்-எண்ணம;அண்டி-நெருங்கி.
8 போத-மிகுதியாக,போதம்-அறிவு
9. தீமை ஒன்று செயல-தீவினை, மாயம்-பொய்; காய்மை-பொறாமை,சுமை-பாரம். இங்கு மிகுதி.
10. துற-அகறறு; பவம் தான் செயும்-பாவத்தைத் தரும் அல்லது பிறவியைக் கொடுக்கும்.
11. உயிரப்பெறியும்-பெருமூச்சு விடும்

இம்மை யும்மறு மையுடன் அம்மையும்
மும்மை யும்நின் முசிப்பை அகற்றுவாய்
எம்மை யும்நினக்கு ஏதம்வ ராவிதம்
செம்மை யாய்உனைச் சேர்ந்திருப் பேன்நிதம். 12

அன்றி நீஓர்அ சுவமகம் செய்திடில்
கொன்ற வெங்கொலை யும்கொடும் பாவமும்
துன்றும் எப்பவ மும்சுடர் முன்பனி
என்றுஇ யம்பவும் எய்தினர் மாமுனி 13

காலம் மூன்றும்உ ணர்ந்த கலைக்கடல்
வேலி வேதவி யாசரைக் கண்டதே
ஞாலம் உண்டவன் நன்குவ ணங்கவே
சால வேஉப சாரம்இ யம்பினான் 14

அந்த மாமுனி யைத்தரு மாதிபன்
சிந்தையாய் முப்பிர தெட்சணம் வந்து
புந்தி கூர்தரப் போற்றியும் வாழ்த்தியும்
சந்த மாமலர்த் தாள்தொழு தானரோ. 15

பங்க யப்பத மேஇரு பங்கய
அங்கை பற்றி அணைத்துஇரு கண்களில்
பொங்கி ஓடும் புனலில் கழுவியே
சங்கை யான தருமன் அரற்றினான் 16

ஈசன் அன்னவி யாசம காமுனி
பாச மாய்மலர்ப் பாணியி னால்எடுத்து
ஆசி கூறிஅ ணைத்துஉப சாரமும்
பேசிப் பின்நின் பெருந்துயர் ஏதுஎன்றான் 17

---

12. இம்மை-இவ்வுலக வாழ்கை, மறுமை-(நரகம் அலலது) சுவாக்கத்தில் வாழ்தல்; அம்மை-வீட்டின்பம்; இவை மும்மை எனப்படும். முசிபபு - மெலிவு, ஏதம-துன்பம.

13 துன்றும்-(உன்னைப)பொருந்துகின்ற,சுடர் சூரியன்,மாமுனி-இங்கு வியாசர.

14. கலைக் கடல் வேலி-கலைகளாகிய சமுததிர வகளுகளு எல்லை போன்றவா,கலைகளின் கரை கண்டவர்;ஞாலம-உலகம.

15.பிரதெட்சண ம-வலம வருதல்;சந்த-அழகிய

16. சங்கையான-மதிபபிற்குரிய, அரற்றினான்-அழுதான்

17. பாணி-கை

மன்னர் யாரும்செ யாதம காபிழை
தன்னை நீயிழைத் துத்தவிப் பாய்நிதம்
என்ன வேவிதித் தானோஎன் ஐயனே
அன்ன வூர்திஅ மைந்தவன் அநாளிலே 18

என்றி யம்ப,வி யாசரை நோக்கியே
மன்ற லந்துள பத்திரு மால்சொல்வார்
வென்ற பாரத வெவ்வினைப் போரிலே
பொன்றி னோர்க்குப் பொருமினான் புண்ணியன் 19

தேறு மாமதி கூறவும் தேறிலன்;
ஆறு யான்பிணை என்னவும் ஆறிலன்;
கூறும் மாமகம் செய்எனக் கூறலும்
ஈறி லாமுனி யேஎய்தி னாய்எனா 20

நன்றி தென்றுந ராதிபன் மாமுகம்
நின்று நோக்கிநீ செய்த அரும்பிழை
இன்று கூறுஎனக்கு என்ற முனியையோர்
வென்றி யாந்தவிசு ஏற்றி விளம்புவான். 21

குற்றம் பார்த்திடில் சுற்றம்ஒன் றில்என
முற்றும் செய்த முழுதும் பெரும்பவம்
சுற்றம் மாமணற் சோற்றினை ஒத்ததால்
பிற்றைச் செய்கையைப் பேசுவன் கேட்கவே 22

---

15 பிரதெட்சணம-வலம் லருதல.சநத-அழகிய.

16. சங்கையான-மதிப்பிறகுரிய, அரற்றினான்-அழுதான்

17. பாஞ்சி-சை

18. அன்ன ஊர்தி அமைநதவன-பிரமன், அ நாளிலே-என்னைப படைதத அந்தத் தினத்திலே.

19 இயமப-சொன்னது தருமன், மன்றல அம துளபம-மணம் மிகக துளசி, பொன்றினோர்கு-இறநததவர்களுகு

20. ஆறு-ஆறுதலடைவாயாக, யான் பிணை - உனகுப பாவம் வநதால் நான் ஏறறுக கொள்கிறேன் எனபது சுருதது

22. செயத - செயத செயலகள, விளையாட்டில மணல சோறு என அழைகக்பட்டாலும அது உணணப பயனபடாதவாறு என் சுறறததா ஆயினா என்பது உவமை; பிறறை - பிறகு நடந்த

(எழுசீர் ஆசிரிய விருத்தம்)

அய்யன் ஐயனை யோசனைச் சேட்டனை
அனுசன்மைத் துனனைமா துலனை
மெய்யன்ஆவியின் துணைவனை மருகனைக்
குடும்பமாம் வேந்துசேர்ந் தவரை
நைய நால்வகைத் தளங்களும் களங்களில்
நறுக்கியும் நறுக்கிடக் கொடுத்தும்
வையம் ஆளுதற் பதவிதிண் புகழ்கொலோ
மாசுஇல தாம்ஒரு நெறியோ 23

இனமி ழந்துஅடுத் தோரையும் இழந்துஅரசு
இயற்கையா வையும்இழந்து எவர்க்கும்
கனமி ழந்துமன் னுயிர்க்குஉயிர்த் துணைவர்கா-
தலரையும் இழந்துஇரு சிறைகள்
தனையி ழந்திடும் ஈயல்ஒத்து இருநிலம்
தனைப்புரப் பதற்குநேர் உபய
தனமி ழந்தமின் னாள்தனை மணந்திடச்
சம்மதித் திடுவதுஒத் திடுமால் 24

தொல்வி னைப்பவத் துன்புஅறச் சீர்த்தியும்
தொடர்மன மகிழ்ச்சியும் பெருகச்
செல்வம் நாடுவிட்டு; ஊர்வன விலங்கினம்
செறிதரும் கானகம் சேர்ந்து
பல்வ னம்தரு சருகுஇலை மூலமும்
பருகியோ கிகள்பதம் பணிந்து
நல்வி னைத்தவம் இயற்றுதல் கருத்ததே
நன்றிநற் பதவியும் தருமால் 25

---

23. அயன்ஐயன் - பாட்டன, யோசனைச சேட்டன் - அறிவுரை வழங்குகின்ற பெரியவன். அனுசன் - தம்பி, மாதுலன் - மாமா, நைய - அழிய, நால்வகைத தளம - தேர, யானை, குதிரை, காலாட்படைகள்.

24. கனம - பெருமை, சிறை - இறகு, ஈயல - ஈசலபூசசி, உபயதனம் - இரு நதிகளகள்.

25 மூலம - கிழங்கு, வேர்.

(அறுசீர் ஆசிரிய விருத்தம்)

குலத்துளோர்செயாக் கொடுமைவன் கொலைபவம் கொண்டவன் கொடியேன்இந்
நிலத்தை ஆள்வதுஎவ் வழி?பெரும் பவக்கடல் நீந்தல்எவ் வழி?நீந்தி
நலத்த தோர்கதி பெறுவதுஎவ் வழி?கதிப் பேறுஉறும் அடியார்முன்
சலச்ச ரோருக முகம்கவி ழாதுசஞ் சரிப்பதுஎவ் வழிதானே? 26

(எழுசீர் ஆசிரிய விருத்தம்)

துய்ய னேமறை யோன்சுதன் சுதன்சுதன் (சுகந்தகந் திக்குஅருள்) சுதனே
அய்யர் அய்யனே ஐம்புலன் அடக்கியஅருந்தவர் (போற்றிடும்) அரசே
வெய்ய யான்செயும் பெரும்பவம் தொலைந்திட வீடுபெற் றிடும்வகை விரித்து
செய்யல் என்என உரைத்துவெய் துயிர்த்துமெய் திகைத்துஉளம் உருகியுற் றிருந்தான். 27

சடமி லாநடு நாவினன் அகமிலன் தயவுநற் குணம்அறம் பொறைவாய்
கடல னானிவை கழறமுக் காலமும் சுருதியாம் திரைகரை கண்டோன்
வடமி லாக்கொடு மரத்தினால் அரன்முடி மரைப்பத விரலள வாக
அடலி னாற்புடைத் தவன்முனோய் எனவிளித்து அறைவன்வாய் மறைகமழ் வாயான் 28

ஓதல் வேட்டல்ஈ தல்குடி யோம்புதல் பயிற்றல்ஒன் னார்களைத் தெறுதல்
ஈது இராசருக்கு உரியசெய் தொழிலென இனன்சசி உள்ளநாள் அளவும்
வேதன் ஓதிய நூலில்வந் துற்றதும் விபுலையின் நடக்கையும் இதுவே
ஆத லால்மனம் கலங்கல்ஏன் கலங்கிலாது அறம்எலாம் ஒருவடிவு எடுத்தோய். 29

மெய்ம்மை யால்அழ கியவுரு எடுத்தனை எடுத்தமெய்க்கு அழிவிலாது உயிரோடு
ஐமை ஆகிய கதியொடும் தானம்முற்று அடைதல்நீ யலதுமற் றவர்ஆர்

---

26. கதி - வீடடின்பம்; சலசரோருகம - நீரில் மலர்ந்துளள தாமரைமலா, பறிக்கபபடடதன்று என்பதற்காக அடைபுணார்த்தா.

27. மறையோன - பிரமன், அவன சுதன் வசிஷடா, அவா சுதன் சக்தி, அவா சுதன் பராசரர், அவா மனைவி பரிமளகுந்தி, சுகநதகுந்தி எனினுமாம், இவாதம மைநதா வியாசர், வெய்துயிர்த்து - பெருமூச்சு விடடு

28. சடம் - வஞ்சகம், அகம் - ஆணவம், பொறை - பொறுமை, லாய சுடல் - வினைத்தொகை, சுருதி - வேதம்; வடம இவாக கொடுமரம - நாணபூடடப பெறாதவில், மரை- தாமரை, முதற்குறை; அடல் - வலிமை, புடைத்தவன - அருச்சுனன், வாய மறை - உண்மையான வேதம, பணபுத்தொகை

29 வேடடல் - வேள்வி செய்தல், ஒன்னார் - பகைவர், இனன் - சூரியன், சசி - சநதிரன், வேதன் - பிரமன், நூல் - வேதம, விபுலை - உலகம்

துய்மை யார்முகில் ....
.... கேண்மோ 30

(கலித்துறை)

முனைந்து நீயொரு அசுவமே தியாகமே முடித்தால்
அனந்த மாதர்கள் வதைசிசு வதைபசு வதைநூல்
புனைந்த வேதியர் வதைகுருத் துரோகமும் போக்கும்
கனங்க ளானசர் வத்துரோ கங்களும் அகற்றும் 31

தாதை தாய்சுதன் துணைஇன சனங்களைச் சதித்த.
பாத கங்கள்எப் பவங்கள்மற் றுள்ளபா தகமும்
ஆத வன்றனைக் கண்டவெம் பனியென அகற்றும்
சாத மாகிய முத்திமோட் சங்களும் தருமே. 32

இம்மை யிற்பெரும் புகழ்கள்எக் காலமும் இயற்றும்
செம்மை யாகவும் மறுமையில் பரகதி சேர்க்கும்
எம்மை ஆளுடை யான்அருள் நின்னிடத்து இருத்தும்
சம்ம தித்தவப் புண்ணியம் முழுதுமே தருமே 33

திண்மை யாம்திரு மால்உரை செப்பிய படியே
வண்மை யானசாந் தாதியச் சுவமகம் முடித்தால்
உண்மை யாய்க்கதி தரும்மனது உரிமையுற்று உவந்து
மண்ம கீபதி செய்யிவை செய்கென வடித்தார். 34

தெளியும் இன்னமிர்து எனச்செவி சார்ந்திடத் தெளிந்து
அளவில் ஆனந்த ஆச்சரி யத்துடன் மகிழ்ந்து
புளகி தங்களாய் மெய்கள்பூ ரித்துஉடல் பொருமி
இளகும் வேதவி யாசரை நோக்கிமன் இசைப்பான். 35

---

30. ஐமை ஆகிய - பொருந்திய; சதி - மோட்சம்; தானம் - உலகம்; இப்பாடலின் பின்னிரண்டு அடிகள் முழுமையாக எழுதப்படவில்லை.
31. அனந்த - கணக்கற்ற; சிசு - குழந்தை; நூல் - பூணூல்; கனங்களான - பெரிய; சர்வ - அனைத்துவகையான.
32. ஆதவன் - சூரியன்; சாதம் - மலிழ்ச்சி இங்குப் பேரின்பம்.
33. சம்மதி தவப் புண்ணியம் - நல்ல அறிவினால் இயற்றப்பெறும் தவத்தால் ஏகும் நல்வினைப் பேறு.
34. மண்மகீபதி - நில உலகத்தின் அரசன்.
35. தெளியும் - தெளிவிக்கும் என்னும் பொருளில் ஆட்சி; புளகிதங்களாய் - மயிர்க்கூச்செறிந்து.

சஞ்ச லக்கடல் தன்னில்ஆழ்ந்து அழுந்தும்அத் தருணம்
அஞ்ச லற்றிட மரக்கலம் கரைதரு வதுபோல்
பஞ்சை யான்அழற் பதிபுகாது அருமதி பகர்ந்தீர்;
தஞ்ச மாகிய வேள்வியான் செயும்வகை சாற்றீர். 36

என்ற கால்முனி அவ்விலக் கணம்பல இயல்பும்
நன்றி யாகிய நிறஅலங் காரநற் புரவி
இன்று நும்மிடத்து இவுளியுள் கிடைக்கரிது என்றான்
பின்றை யான்செய்வது என்னெனத் திகைத்தனன் பெருமாள் 37

மறுவில் பற்பல இலட்சணம் உள்ளவான் புரவி
உறுதி யாய்அது இருக்கும்ஊர் உறைவிடம் தானும்
அறிதல் நீர்அலது அறியுவல் லவர்கள்இல் எனஅத்
திறவு கூறும்என்று எழுந்துமால் துவரையில் சேர்ந்தான் 38

அன்று மேற்றிசை அடைந்தனன் ஆதவன்; ஐஆறு
என்ற நாழிகை இருட்பொழுது ஏகிய பின்னர்
கன்றி டும்துயில் ஒழிந்துகா லைக்கடன் கழித்துச்
சென்ற ஐவரும் முனிவரும் சதிர்முகம் சேர்ந்தார் 39

மன்னர் வீரரும் மந்திரி தந்திரி மாரும்
முன்னி னங்களும் தளங்களும் முறைமுறை வணங்கித்
துன்னி எங்கணும் சூழ்ந்திருந் தனர்தொடு கடல்நேர்
பன்னு மாமணித் தவிசினில் பார்த்திபன் இருந்தான் 40

(கலிவிருத்தம்)

விரிவா னபெரும் சபைமீ துநடு
அரியா சனமீ தில்இருந் தபிரான்
தருமா திபன்மா முனிதாள் தொழுதே
பரிவேள் விசெயப் பரிஎங் குளதே. 41

---

36 பஞ்சை - யான் - எளியவனாகிய நான், அழற்பதி - நரகம்; தஞ்சம் - பற்றுக்கோடு.

37. என்றகால் - எனக் கேட்ட போது; முனி - வியாசர்; இவுளி-குதிரை; பெருமான் - தருமன்

38 திறவு - தீர்வு, துவரை - துவாரகை.

39. சதிர்முகம் - அரசவையின்கண். நாடடிய மேடையைக குறிக்கும் சொல். இஙகு அரசவையைக் குறித்தது.

40. தந்திரி - நூலோர், அறிஞர்; பார்த்திபன் - அரசன், தருமன்

41. பரிவேள்வி - அசுவமேதயாகம், பரி - குதிரை.

அய்யா உரையீர் எனஅந் தணனும்
மெய்யாம் மொழிகேள் எனவே பகர்வான்
தொய்யான் திரிமூர்த் திகள்சூழ் அமருக்கு
எய்யான் எமனா சுரன்என்று ஒருவன் 42

காலன் றனைவென் றகடுங் கணையான்
வேலன் றனில்மிஞ் சியவீ ரமுளான்
நீலன் குமுதன் கதிரின் சிறுவன்
மாலின் புதல்வன் தனைவவ் வுகையான். 43

இலங்கா புரிரா வணகும் பகர்ணன்
மலங்கா தஇரா வணிராக் கதர்கள்
விலங்கா திரண்டா யிரம்வெள் ளமுமே
கலங்கா தெதிர்வென் றகடுங் கணையான் 44

சீரா மர்அயோத் தியிற்சென் றுபதி-
னோரா யிரம்ஆண்டு அரசுற் றிடுநாள்
வீரா திபன்ஓர் பரிவேள் வி செயச்
சோரா தவன்விட் டனன்ஓர் துரகம். 45

உத்தர குருபூ மியிலே செலமாப்
பத்திர கிரிப்பண்பு எமனா சூரன்
அத்திரி பிடித்துஆக் கிரமத் துடனே
சத்துருக் களைச்சா டினன்ஓ டிடவே. 46

எழுபத் திருவா னரவெள் ளமும்எண்-
ணெழுபத் திரிராக் கதர்சே னைவெள்ளம்
எழுபத் திருஅக் குரோணித் தளமும்
முழுகக் கணைவிட் டனனே முனிவாய் 47

---

42. அந்தணன் - வியாசர்; தொய்யான் - தளராதவன், அமருக்குத் தொய்யான் என்க; எய்யான் - ஊறுபடாதவன்.

43. கணை - அம்பு; நீலன் - விந்திய நாட்டரசன், பாரதப் போரில் சகாதேவனால் கொல்லப்பட்டபெரு வீரன்; கதிர் - சூரியன்; கதிரின் சிறுவன் - சுன்னன்; வவ்வு - பற்றும.

44. மலங்காத - மனச்சோர்வடையாத; இராவணி - இந்திரசித்து; விலங்காது - (போர் முனையைவிட்டுச் சற்றும்) விலகாது.

45. சோராதவன் - தளராதவன், இராமன்; துரகம் - குதிரை.

46. உத்தர குரு - இமயத்திற்கு வடக்கே உள்ள நாடு; மா-குதிரை; ம செல எனஇயையும்; பத்திர கிரி - இரும்பு மலை; அத்திரி குதிரை; ஆக்கிரமம் - வரிர்ப்பு

47. அக்குரோணி - 21870 யானைகள், 65610 குதிரைகள், 21870 தேர்கள், 109350 வீரர்கள் அடங்கிய படைப்பிரிவு; முனிவாய் - சினத்துடன்.

அனுமன் றனைநீ லனைஅங் கதனைத்
தனுவன் பில்அச்சாம் புவன்வீ டணனைக்
கனவெஞ் சிறைகால் தளைகைத் தளையிட்-
டனன்மற் றவர்அஞ் சினர்ஓ டினரே. 48

இதுசே திஇரா மர்அறிந்து இவன்இங்கு
அதமாய் மடியான் எனவன்று உணர்வுற்று
இதமா கநயந் துபிடித் தபரி
விதமாய்த் தரவேள் விமுடித் தனரால். 49

கனவா கனன்விட் டுளகற் கியையும்
சினமோ டுபிடித்து அடர்தே வர்களை
மனராந் திசைபா லர்வசுக் களைமா
நினையா விதம்நீடு அமர்செய் தனனே. 50

பரிதிக்கு எதிரும் பனிபோல் அமரர்
ஒருதிக் குமுணர்ந் திலர்ஊ தையின்முன்
சருகொத்து அருகிக் கருகிக் குருதி
பெருகிச் சழியப் பெயர்ந்தோ டினரே. 51

அய்யர்க் கரசன் விழிஆ யிரமும்
பெய்யத் தழல்பெட்பு அயிரா வதமேல்
உய்யக் கொளயோ சனையா னதுகண்டு
அய்யத் துடன்அந் தணன்ஓ துவனே 52

பூசற் றொழிலோடு அவன்முன் புகிலோ
நாசப் படும்நம் படைமுற் றிலும்நீ
மோசப் படுவாய் எனமுன் குருசொல்
நேசித் தமரத் தைநிறுத் தினனே 53

---

48. தனுவன்பில் - வில் ஆற்றலால்;
49. அதமாய் - (போரில்) கொல்லப்பட்டு, இராமர் அறிந்து, உணர்வுற்று, நயந்து (எமனாகுரன்) பிடித்தபரிதர, வேள்வி முடித்தனர் என்பது முடிவு.
50. கனவாகனன் - மேகவண்ணன், இந்திரன்; சுற்றி-குதிரை; மனர் - மன்னர், இடைச்குறை; மா - குதிரை, வெற்றிச்செல்வி என இருபொருள்தர ஆட்சி.
51. பரிதி - சூரியன்; ஊதை-பெருங்காற்று; அருகி-வலிவிழந்து; சழிய - நிலை குலைந்து.
52. அய்யர்க்கு அரசன் - தேவராசன், இந்திரன்; தழல் பெய்ய என மாறுக; பெட்பு - விருப்பத்திற்குரிய, உய்யக்கொள - (குதிரையைப் போரிட்டு) மீட்டுக் கொள்ள; அந்தணன் - தேவகுருவாகிய வியாழன்.
53. குரு-வியாழன்; அமரத்தை - போரை.

இனிமேல் என்செய் வதுஎனக் கருதித்
தனியே கிநடந்து உபசா ரமுடன்
கனிவாய் மொழிசொற்கு அவன்கற் கிவிடப்
பினைவேள் விபெயர்ந் துநடத் தினனே 54

இகலால் வலியான் எமனா சூரன்;
சுகலீ லனவன் தனிலும் சூரன்
மகனாம் கதைவல் லமையுள் ளபிரான்
அகல்பத் ரகிரிப் பதியா திபனே. 55

அக்ரோ ணிஐநாற் பதுசே னையுளான்
சக்ரா கரமாம் எழுசுற்று அரணான்
மிக்கியோ சனையோர் எழுநூ றுவிரி
அக்ஞா னம்இலா ததுஅவன் நகரம். 56

கார்மண் டலமே கடந்தால் புரிசைக்கு
ஓர்மண் டலமொப்பு; அதனுட் படவே
பேர்மண் டபம்ஒன்று; அதிற்பெட்பு எழில்கள்
சேர்மண் டிலமே தினம்நிற் பதுவே. 57

அயனம் தனில்ஓர் தரம்அப் புரவி
பயம்உண் ணவரும் படையோ டுவெளி;
சுயம்அங்கு அதுசார்ந் திடும்அத் துரகம்;
அயமிங்கு அதுஅகப் படில்வேள் வியும்ஆம் 58

எந்தப் பரிநூ றுமகம் செயினும்
அந்தப் பரியால் மகம்ஒன்று அதிகம்;
எந்தப் படியும் கொணர்வார் உளரேல்
சிந்தித் தவையே செயமே செயமே. 59

---

54. அவன் - எமனாகரன், பெயர்ந்து - திரும்பி; பினை-பிறகு; பெயர்ந்து பினை வேள்வி நடத்தினன் என இயையும்.
55. சுகலீலன் - எமனாசுரனின் மகன், பத்திரகிரி - அவன் தலைநகர்.
56. ஐநாற்பது - இருநூறு; சக்ர ஆகரம் - உருளையின் வடிவம்; அக்ஞானம் - அறியாமை.
57. கார் - மேகம்; புரிசை - மதில்; மண்டிலம் - சூரியை.
58. அயனம் - ஆறுமாத காலம்; பயம் - நீர், அயம் - சூரியை; அயமது இங்கு அகப்படில் என மாறுக. 59. எந்தப்படியும் - எவ்வாறாவது.
60. அவை சிந்தித்து மன் சென்னி குனிந்தனன்; மன் - மன்னன், தருமன்; பந்தம் - ஆணவம்; வாயுகதன் - வீமன்.

அந்தப் பரிநின் வசமா கல்அரிது
எந்தப் படியோ சனைசொல் கெனவும்
சிந்தித் தவைசென் னிகுனிந் தனன்மன்
பந்தத் துடன்வா யுசுதன் பகர்வான். 60

இதுவோ சிலபா ரம்எனக்கு; இவுளி
அதுநான் கொடுஅடைந் திடுவேன் எனும்முன்
மதிவே தர்சொல்வார் அடவா யுசுதா
பொதுபோ தும்வாய்பொத் துகபொத் துகவே 61

சொல்லத் தகும்வாய் மதம்சொற் றதுபோல்
வெல்லத் தகுமோ சொல்உன்மெய் வலியால்
புல்லப் பொருமோ பசுபூட் கையினைக்
கொல்லத் தகுமோ மதகுஞ் சரமே. 62

நீயா வதுநின் சமரா வதுநின்
வாயா வதுவல் லமையா வதுவன்
தீயாம் அதனைச் சறுகல் சருகோ?
ஈயே கருடற்கு இணைஎன் பதுவோ? 63

துறவின் தவமா முனிசொன் னளவில்
அறன்மைந் தன்வீ மனைநோக் கிடவே
திறவின் புளகம் கொடுஎழுந் துசெய
விறல்கொண் டுபின்ஏ துவிளம் புவனே.

(அறுசீர் ஆசிரிய விருத்தம்)

பொன்பயில் பற்ப ராகப் புரவிகொண்டு எமனா சூரன்
மன்சுக லீலன் சேனை மன்னர்மந் திரிமார் சூழும்
வன்பரி வாரம் எல்லாம் வலிதுகொண்டு இலகேன் ஆகில்
என்பலன் என்ன வீமன் என்றபோர் என்ன என்றான். 65

தயிரியம் வீரம் என்கைத் தண்டம்என் சமர்என் நெஞ்ச
வயிரம்என் என்று வீமன் வஞ்சினம் சொற்ற போதே
இயல்முனி திகைத்து யான்முன் இயம்பியது எல்லாம் கேட்டும்
அயல்வலார் இருக்க நீசொன் னதுமதம் மதலை யோநான் 66

---

61. மதிவேதர் - வியாசர். 62. பூட்கை-யானை; குஞ்சரம் - யானை.
63. சமர் - போர்; சறுகல் - வலிவிழக்கச் செய்தல்; 64. அறன் மைந்தன் - தருமன்.
65. பரிவாரம் - சேனை. 66. தண்டம் - கதாயுதம்; மதலை - குழந்தை.

ஆய்ந்துணர்ந்து உனது சித்த மதனில்சீர் தூக்கிப் பாராது
ஓய்ந்திடாது அடல்நீ மென்மேல் உரைப்பதென் முரண்டு வெற்றி
வாய்ந்திட வருமோ மோசம் வந்தது வந்த தையா
தேய்ந்திடும் அவனைக் காணில் திறம்எலாம் உனக்கே என்றான் 67

அன்றுஉலகு உண்டான் தன்னை அகமதில் உன்னுங் காலை
மன்றலந் துளவ மார்பன் மதமலை முனம்வந் தாற்போல்
நின்றனன் தருமன் முன்னே; நிருபனை நமஸ்க ரித்தான்,
நன்றுஉப சாரம் செய்தான் முனியையும் நமஸ்க ரித்தான். 68

பராசரன் மைந்தன் மென்மேல் பஞ்சரித்து உபச ரித்தான்;
நராதிபன் வீமன் பார்த்தன் நகுலசா தேவர் மற்றும்
தராதிபர் யாரும் வந்து சரணடைந்து உபச ரித்தார்;
பராபர மூர்த்தி யானோன் பலருக்கும் உபச ரித்தான். 69

என்னிவண் நீகழ்ந்த வாறுஎன்று இயல்முனி தன்னைக் கேட்கத்
தன்னிகர் தானாம் வீமன் சபதம்ஓ தியது கூற
என்னடா வீமா நீயோ எதிர்எம னாரு ரர்க்கென்று
அன்னவன் உரைக்க மீண்டும் அவன்முனும் சபதம் சொன்னான். 70

இடும்பனைப் பகனைச் சூழ்ந்த இயக்கர்ராட் சதர்கள் தம்மை
அடுஞ்சரா சந்தன் மல்லன் கீசக னுடன்மற் றோரை
கொடுஞ்சமர்ச் சினத்தில் கொன்ற கொற்றமெய் மதங்கொண் டேநீ
பதிந்தாயர் அறிந்தி டாமல் பகர்ந்தனை சபதம் என்றான். 71

ஏதொரு சொற்கும் நான்என்று எழும்புவாய் துள்ளு வாய்உன்
வாதென மதந்தான் என்ன மறங்கள்வஞ் சினங்கள் என்ன?
போதும்பா ரதப்போர் மீதுஉன் புயவலி இளைஞோர் சேர்ந்த
காதலர் செருவும் யாம்தாம் கண்களால் கண்டி லோமோ? 72

---

67. அவனைக் காணில உனக்கே திறமஎலாம தேயநதிடும் என்றான்.

68. மதமலையானை, சுஜேநதிரன். இல்பொருளுவமவாகுபெயர். நிருபன் - மன்னன், தருமன்; முனி - வியாசர்.

69. பராசரன மைநதன் - வியாசர், பஞசரித்து - பணிவுடன், நராதிபர் - அரசர்கள். இங்கு தருமன் சபையிலிருநத சிற்றரசர்கள்.

70. அன்னவன், அவன் - சுணனன்.

71 கொற்ற மெய மதம் - வெற்றியால் விளைந்ததும் உடல்வலிமை பற்றியதுமாகிய செருக்கு.

பதினொரு அக்கு ரோணி படைபதி னெட்டு நாளில்
சதியுறப் பொருதீர் பட்ட தத்தளிப் பதுங்கா ணேமோ?
விதியிரு நூறக் ரோணி மிகுகடற் றளமும் வேந்தும்
சுதனையும் செயித்து மிக்க துரங்கமும் தரவல் லாயோ? 73

கிள்ளினாற் போலே கிள்ளுக் கீரைபோல் நினைந்து மெத்தத்
துள்ளினாய் எதற்கும் வீமா துணிவுடன் சபதம் மென்மேல்
விள்ளுறாய் அடநீ வேத வியாசனார் சொன்ன பேச்சும்
தள்ளுறாய் உன்ம தாந்தம் சபைமுரண் டோசொல் என்றான். 74

ஈயல்இம் மட்டோ இன்னமும் சொல்வையோ?
வாய்உனக்கு வலிக்கவும் இல்லையோ?
நீள னக்குநீங் காத்துணை ஆதலால்
ஏய்ள னக்கெதிர் எங்கேனும் உள்ளதோ? 75

சத்த ரெட்டிய தாம்உல கோர்களும்
சித்தி யாந்திரு மூர்த்திகள் ஆயினும்
வித்தி யாவினோ தத்துஇகல் மேவினும்
புத்தி யோடு பொருதுசெ யிப்பன்யான். 76

எந்த னுக்குஇய லாப்பகை வந்துறில்
நுந்த னைத்துதி செய்துநொ றுக்குவேன்
நிந்த னக்குளல வேலைநி ரந்தரம்
குந்திமக் கள்தன்பால் அன்றிக் கோவலா. 77

நீயி ருக்கநெ டுந்துணை கோபதி
சேயி ருக்கச் செயிக்கவல் லார்எவர்?
வேயி ருக்கும்இ சைக்குழல் வாயன்அன்-
பாயி ருக்கவும் பஞ்சவர்க்கு என்குறை. 78

---

74. மதாந்தம் - மத அந்தம், கொள்கையின் முடிவு; சபை முரண்டு - அவைக்கு மாறுபடுதல்.
75. ஈயல் - (உறுதி) தருதல், நீ என்பது கண்ணனை. இதிலிருந்து வீமன் கூற்று.
76. சத்த ரெட்டி அது ஆம் - ஏழிரண்டு பதினான்காகிய; வித்தியாவிநோதத்து - போர்க்கலையில் முழுவல்லமைபெற்று.
77. கோவலா - கோபாலனே.
78. கோபதி சேய் - இந்திரன் மகன், அருச்சுனன்; நெடுந்துணை என்பதை இடைநிலை விளக்காக நீ, சேய் என்னும் இரண்டுடனும் கூட்டுக. வேய் - மூங்கில்; பஞ்சவர் - பாண்டவர்.

முன்ப லம்தரு மன்தரு மம்;முயல்
என்பலம், எம்பி யின்கர விற்பலம்,
பின்பி ரண்டு பெயர்பலம்; தஞ்சம்நின்-
தன்ப லங்கொடு தான்சப தம்சொனேன் 79

அய்வர் தம்பலம் உன்பலம் அல்லவோ?
தெய்வம் என்றுனைச் சிந்தையுள் வைத்ததால்
பய்வ ரும்தலைப் பாரம் உனக்கு; அது
செய்வது அன்றிஎன் செய்ய இருக்கிறீர்? 80

என்றி யம்பிஇ றைஞ்சிய வீமனை
அன்று மெய்யுற அணைத்துஇரு கைகளால்
நன்று வெற்றி நணுகக் கடவதே
என்றுத் தாரம் அமுதினில் ஈந்தனன். 81

மேக வண்ணன்என் றேயொரு வீரன்நல்
வாகை மேவு கடோர்க்கசன் மைந்தனை
ஆக வீமனுக் காம்கவ சத்தைநேர்
தேகசம் ரட்சணை செய்திடு சன்றனன். 82

கன்னன் சேய்விற் கரன்விட கீதவன்
தன்னை வீமன் றனக்குஉயிர் காவலாய்
மின்னு சோதி விழிக்குஇமை போலநீ
உன்னிக் காஎன்று உரைத்துஉடன் கூட்டினான் 83

மூவ ரும்முகில் மேனியன் தாள்தொழ
ஆவ லாய்அரி கேசவன் அச்சுதன்
கோவி னம்புகக் குன்றெடுத் தோன்மகிழ்ந்து
ஏவியே வெற்றிநீர் எய்துவீர் என்றான் 84

சார்ந்து அறன்கும ரன்சர ணம்தொழப்
பேர்ந்து வெற்றிபெ றக்கட வீர்எனச்

---

79. எமபி - என் தம்பி, விசயன்; இரண்டு பெயா - நகுல சகாதேவர்.
80. பய்வரும் - பசுமைநிறமுடைய, பைவரும் உனக்கு தலைபாரம்.
81. அன்று - அப்போது, உத்தாரம - ஆணை
82. கடோர்க்கசன் - வீமனுக்கு இடும்பியிடம் பிறந்தவன், தேக சம்ரட்சணை - மெய்காவல்.
84. கோவினம் - பசுக்கூட்டம

சேர்ந்து மாமுனி செம்பதம் போற்றினார்
ஏந்தி வெற்றிஎய் திடுக என்றனன் 85

மற்று ளோர்களும் வாகை புனைந்ததன்
பிற்றைமீள் வீர்எனப் பேணி வாழ்த்தினார்
ஒற்றை யாழிபொற் றேர்க்கதிர் போல்கதை
வெற்றி வீமன்வில் தேர்மிசை மேவினான் 86

மேக வண்ணன் அருணனில் மிக்கதாய்
பாகி சைந்த பரிகளைப் பூட்டியே
தாக மாய்ரத சாரதி யாகினான்;
வேக னாம்விட கீதனன் பின்னுற்றான் 87

வீம சேனன்பின் னேவிட கீதனன்
சாம ரையால்அது ஆள்என வீசவே
வாம சாரதி யும்மன வேகமாய்
நேமித் தேரை நிரந்தரம் ஊர்ந்தனன் 88

ஐந்து நாள்இர வும்பக லாகவே
உந்துஐஞ் ஞூறுஉயர் யோசனை செல்லவே
பைந்து ழாயான் பதம்நெஞ் சிருத்தியே
மைந்துஉ லாவிய மாருதி ஏகினான் 89

(அறுசீர் ஆசிரிய விருத்தம்)

பத்திர கிரிஎன்று ஓதும் பதிக்குஅருகு அணித்தாய் ஆங்கோர்
சித்திர கிரிவான் மட்டும் சிகரமோடு இருக்கக் கண்டுஅக்
குத்திர மீதி லேறிக் கொண்டிருந்து உளவு கொள்வோம்;
இத்திகி ரியின்மேல் இத்தேர் எய்துமோ எனத்தி கைத்தான் 90

---

85. மாமுனி - வியாசர்

86. பிறைை-பிறகு, ஒறறை ஆழி - ஒரு சகசுரம், சுதிர்-சூரியன்; வில-ஒளிமிகக

87. அருணன் - சூரியனின் தேர்ப்பாசுன, பாகு இசைநத - தோ செலுததுவதற்குப் பொருத்தமான, தாகமாய் - ஆவலுடன், வேகன் - (போரில்) விரைவினை உடையவன.

88. சாமரை - கவரி, அது ஆள் - அதற்குரிய பணியாளன், வாமம - அழகு, இஙகு தேர்ப்பாசனுகுரிய தகுதிகளை உடைய என்பது சருத்து, நேமி - சக்கரம்.

89 மைந்து உலாவிய - வலிமையுளள, மாருதி - வீமன்.

90. சித்திர கிரி - அழகிய மலை, குத்திரம் - கூடடுமலை, இஙகு இயற்கையான மலையைக் குறிக்கிறது, திகிரி - மலை.

மாருதி தன்னை மேக வண்ணனும் பணிந்துஐ யாமுன்
சாருமங்கு எய்த மார்க்கம் உறில்சயம் தான்வந்து எய்தும்
பாருமென்று உரைக்கக் கன்னன் பாலகன் வீமன் கூட
சேருமுன் மேக வண்ணன் தேருடன் சென்றுற் றான்பின் 91

(கலித்துறை)

மேக வண்ணனை இருவரும் மகிழ்ந்துதேர் வெற்பில்
ஆக மெய்மகிழ் தரநடத் தியதுஅரிது என்றார்;
பூக மொய்த்துள பொழில்திகழ் பொருப்பின்உச் சியிலே
தேக வீரியர் மூவர்முச் சிகரமொத்து இருந்தார் 92

இருந்த பத்திர கிரிநகர் எயில்எழு சுற்றும்
திருந்து கோபுர சிகரமேற் றிசைகளுந் திகழ
விரிந்த யோசனை ஒருழு நாறுவில் நீர்ணம்
பொருந்தும் அந்நகர் பொன்னகர் போன்றிருந் ததுவே 93

தென்னி லங்கையோ அளகையோ தேவர்பொன் னுலகோ
பன்ன காபுர மோதிக ழும்பயோ ததியோ
பின்னை கேள்வன்வை குந்தமோ கயிலையோ பிரமன்
மன்னு மாநக ரம்கொலோ யாதுஎன மருண்டார் 94

அண்ட கோளகை அகடுஉறிஞ் சிய(பல்)கோ புரங்கள்
எண்டி சாமுகம் எங்கணும் எண்ணிலாது இலங்கச்
சண்ட மாருதம் தழுவிய கொடிகள்எண் அனந்தம்
கொண்ட கோட்டைகள் எங்கணும் மலையெனக் குலவும் 95

சரதம் ஆகிய ரதகச துரகப தாதி
விரவுஅ டுக்கலாய் நகர்எலாம் விரவிநிற் பதுவும்
வருதல் ஏகுத லாகஎத் திசைகளும் மலியப்
புரிஎ லாம்அலங் காரமாய்ப் பொற்புறப் பொலிந்த 96

---

91. கன்னன் பாலகன் - விடகீதனன்
92. பூகம் - சமுகு.
93. விஸ்தீர்ணம் - பரப்பு.
94. பன்னகாபுரம் - நாகலோகம்; பயோததி-பாற்கடல்; பின்னை-நப்பின்னைப்பிராட்டி.
95. அகடு-வயிறு; அனந்தம்-எல்லையற்ற
96. சரதம் - இங்கு நிலைப்படை என்னும் பொருளில் ஆட்சி; புரி-ஊர்.

நாலு திக்கும்நா னான்குகோ ணங்களும் நகரைக்
கோலி எங்கணும் குழுமிய தொடர்புமா றாமல்
ஆலம் உண்டிடச் செல்வதும் உண்டுமீள் வதுமாய்ச்
சால வேகடற் பெருகிய வெள்ளமொத் ததுவே 97

நரலை யாம்எனும் சேனையின் பெருக்கமும் நகரும்
தெரியும் வாறுஇரு திட்டியால் பார்த்துமெய் திகைத்துக்
கரிய மால்மறை முனிசொலுக்கு எண்மடங்கு அல்லால்
உரையில் எட்பகி ரும்குறை விலைஎன உழன்றான் 98

திகைப்பன் நெட்டுயிர்ப் பெறிவன்நெஞ்சு அடிக்கடி திடுக்கிட்டு
அகத்தில் எண்ணினன் வீமன்மா முனிமுன்யாம் சபதம்
நிகழ்த்தி னோம்அவன் சொல்செவி நுழைதராது இருந்தோம்
மிகைத்து மாயவன் உரைவிளை யாட்டுஎன இருந்தோம் 99

இந்த வெம்பெரும் படையைஎக் காலம்வென் றிடுவோம்
சிந்தை மன்னனை மகனைஎந் நாள்செயித் திடுவோம்
கந்து கம்கரத்து எய்துதல் தானும்எக் காலம்
நந்த கோபன்எப் படிவிறல் தருவனோ நமக்கு 100

சிக்கு மோபரி இக்கடற் சேனைமாய் வதன்முன்;
மிக்க வெம்பரி உறைவிடம் எவ்விடம்? இவண்என்
தக்கு மோவிறல் தான்?நிறை வேறுமோ சபதம்?
புக்கு மோபுனல் உண்ணஏற் றின்மதப் புரவி? 101

உதக மேபரு கிடும்பொழுது அன்றியிங்கு உன்னில்
இதமு டன்பிடித் திடல்அரிது என்றுஅகத்து எண்ணி
அதுவ ரும்கெடு ஆறைந்து நாலுமூன்று இரண்டோ
மதிய தோஇரு பதுபது பதினைந்தோ வைகல். 102

---

97. நானான்கு - பதினாறு; கோலி - சூழ்ந்து; ஆலம் - நீர்.

98. நரலை - கடல்; திட்டி-கண், எட்பகிர்-எட்பிளவு, எள்ளைப்பிளந்த ஒருபங்கு.

100. கந்துகம் - குதிரை; விறல்-வலிமை.

101. சேனை மாய்வதன்முன் பரி சிக்குமோ, இவண்என் விறல்தான் தக்குமோ, புரவிபுனல் உண்ணப் புக்குமோ என இயையும்.

102. உதகம் - நீர்; மதி- மாதம்; வைகல் - நாள்.

என்று தான்வரும் என்றுஇராப் பகலும்இவ் விரகாய்க்
குன்றில் மூவரும் யோசனை யோடும்அங்கு உறைந்தார்;
துன்று யானையும் புரவியும் தொடர்பொடு கவிஞ்சான்
என்றொர் மாநதிக்கு எய்தும்நீர்க்கு எந்தநே ரமுமே. 103

விடியும் முன்புஒரு சாமமே முதல்அஸ்த மித்தும்
அடியி ராஒரு சாமமாய் நகர்க்கும்அந் நதிக்கும்
இடம றப்பரந்து எய்தலும் ஏகலும் தவிராத்
தொடர்பு றும்மலைக்கு அருகுநா ழிகைவழித் தூரம் 104

ஈது கண்டும்அக் கிரியில்முத் தினம்இருந் திடஅப்
போது யானைகள் புரவிகள் போந்தில அதனில்
ஏது காரணம் என்றுஎணும் போதினி லேபொய்-
யாத பற்பரா கப்பரி தனைஅலங் கரித்தார் 105

ஆணி முத்துமா ணிக்கம்நீ லம்பற்ப ராகம்
பூணும் வச்சிரம் மரகதம் ரத்னபூ ஷணங்கள்
வேணு மட்டும்மின் வெயில்நிலவு எறித்திட வேய்ந்து
காண ரத்தின வீரகண் டாமணி கட்ட 106

நாலு காற்குஅணி வெண்டயம் சதங்கைநற் சரிபூண்டு
ஓல மிட்டிடக் கிண்கிணி பூட்டிஉத் தரியின்
மேலெ லாம்பசும் பொற்பணி பொற்படம் விசித்துச்
சால ரத்தினக் குச்சுகள் குசைமிசை தரித்து 107

தங்க வெங்கவி யந்தனை வாயினில் தரித்தே
அங்க மெங்கும்நன்கு அருணவெங் கிரணமே செறியத்
துங்க செங்கரப் பட்டமும் நெற்றியிற் சூட்டி
எங்கும் இரத்தினக் குஞ்சமே நிரைநிரை இணைத்து 108

---

103. விரகு - நினைவு.
104. அடி இரா - இரவின் தொடக்கம்.
105. வீமன் முதலிய மூவர் எனும்பொதினிலே, ஊரார் பரிதனை அலங்கரித்தார்.
106. ரத்னபூஷணங்கள் - மணிகள் இழைக்கப்பெற்ற அணிகலன்கள்.
107. வெண்டயம் - சிறுமணி, சரி-வளையல், உத்தரி-சூதினர; பொற்பணி - தங்கநகை; பொற்படம் - பொன்னாடை. குச்சு-குஞ்சலம், குசை-பிடரி.
108. கவியம் - கடிவாளம்; துங்க-உயர்ந்த, செங்கர-சிவந்த கிரணங்களை உடைய.

பாதை எங்கணும் மலர்களை மெத்தைபோற் பரப்பித்
தீதி லாப்பல விருதுகள் திசைதொறும் செறியக்
காதல் பஞ்சவாச் சியத்தொனி கடலெனக் கறங்கக்
கேத னங்கள்ரத் தினக்குடை யினம்பல கெழும 109

மகர தோரணம் கரும்புகள் வாழைகள் நிறைத்துப்
பகரும் வீதிகள் பந்தர்மே கம்தொடப் பரப்பி
நகரெ லாம்அலங் காரமாய் நவநலம் செய்து
புகலும் ஆலத்தி பூரண கும்பமும் பொருத்தி 110

சந்த னம்பனீர் நரந்தமும் சுவர்தரை மெழுகிக்
கந்தம் எங்கணும் கம்மெனக் கமழ்தரச் செய்து
கொந்து தூபதீ பப்புகை முகில்எனக் குலவச்
சந்த்ர சோதிமத் தாப்புதீ வட்டிதான் செலவே 111

விரைவில் நால்வகைச் சேனைகள் திரையென விரவ
இருபு றம்பல சவரிசா மரையிளம் இரட்டப்
புரவி யானது நடுச்செலக் கட்டியம் புகலத்
தெருவெ லாம்கடந்து அச்சுவம் நகர்வெளி சேர்ந்த 112

இந்தி ரன்தெரு வலம்வரு வதற்கும்எண் மடங்காய்க்
கந்து கந்தனைக் கண்டுமு வரும்கருத் துற்றார்
இந்த வீறுஅலங் காரம்என்? புதுமைஎன்? என்றே
உந்து வெம்பரி உருவதோ அலதுஎன்என் றுற்றார் 113

குறிப்பி னோடுகண் ணுற்றுஐயம் நீங்கிஇக் குந்தப்
புறத்தின் மந்திரி சுவேதனும் பொற்புற வரலால்
நிறத்துஅ வயவத்துள் ழிற்குளச் சுழிநிறைந் ததனால்
அறத்தின் மைந்தன்முன் முனிசொலும் பரியதும் இஃதே 114

---

109 பஞ்சவாச்சியம் - தோற்கருவி, தொளைக்கருவி, கஞ்சக்கருவி, நரம்புக்கருவி, மிடற்றுக் கருவி எனனும் ஐவகை இசைக்கருவிகள், கறங்க - முழங்க, கேதனம் - கொடி; கெழும - நெருங்க.

110. நவ நலம் - புதுமையான எழில.

111 நரந்தம் - கஸ்தூரி, சந்தம் - நறுமணம்

112. அச்சுவம் - குதிரை.

113 வீறு - மீறிய, பரியின் உரு அதோ அலது வேறு என் (னோ) என்றுற்றார்

114 குந்தம் - குதிரை; அறத்தின் மைந்தன் - தருமன், முனி - வியாசர்.

(எழுசீர் ஆசிரிய விருத்தம்)

வால சூரி யப்ர காச மாக மேனி பவளமாம்;
நாலு காலும் இந்து போல நடுவில் வெள்ளை நுதலினும்
நீல ரத்தி னக்க ருங்கண் இமைப சும்பொன் நிறம்உரம்
கோலம் பற்ப ராகம் வால்கு ரங்கள் பச்சை மரகதம். 115

முதுகு வச்ர ரத்தி னம்;பல் முத்து; மாணிக் கம்முகம்;
அதிக மான பத்ம ராகம் அகடு;அ ரம்பை மலர்மடல்
கதழ்வு காது; குசைப ளிங்கு; களம்உ யர்ந்த கோமியம்;
அதரம் நாவு பவளம்; எண்பத் தொன்று யர்ந்த அங்குலம். 116

என்ன வேத முனிஇ சைத்த இயல்பெ லாம்இ ருத்தலால்
அன்ன தித்து ரங்கம் ஆகும் அவய வங்கள் உளஎலாம்
வன்ன பேத மாக வொப்பி லாத வாசி இதைநிகர்
பொன்ன கர்க்கு ளும்கி டைத்தல் அரிதெ னப்பு கன்றனர் 117

தண்டை வீர வெண்ட யம்ச தங்கை கொஞ்ச வேநடை
கொண்டு திந்தி தித்தி தோவெ னக்கு ரங்கள் பந்தடித்து
எண்டி சாமு கம்கு லங்க இவுளி தத்தி வருவதைக்
கண்டு கொண்டு போகு மாறு கருதி நெஞ்சம் வெருவினான். 118

அஞ்சி நால்வ கைத்த ளங்கள் அதம தான பிறகுஅலால்
மிஞ்சு வேக முடைய வாசி விரவி நம்கை அடையுமோ
இஞ்சி போய்அ டைந்த பின்பு(அவ்) இடப வாகன் எதிரினும்
நெஞ்ச மான புரவி கொள்வது அரிதுள னத்த வித்தனன் 119

நீர ருந்தி ஏகும் முன்னம் நிகரி லாத சேனையைப்
போரில் நந்தி விழஅ டர்ந்து பொருது கொன்று புரவியை

---

115. இந்து - சந்திரன, உரம - மார்பு, குரம - காற்குளம்பு.

116. அகடு - வயிறு, அரம்பைமலர் - வாழைப்பூ; கதழ்வு - போன்றது, குசை பிடரி, களம் - சுழுத்து, கோமியம் கோமேதகம், அதரம் - உதடு, எனபதிதொன்று அங்குலம் உயர்ந்தது எனக.

117. அவயவம் - உறுப்பு, வன்னபேதம - நிற வேறுபாடுகள், வாசி - குதிரை

118. கொண்டுபோகுமாறு - பறறிச செல்லுமவழி, வெருவினான் - அஞ்சினான்.

119. அதம்அது-ஆன - அழிந்த; இஞ்சி - மதில, இங்கு கோடடையைக் குறித்தது, இடபவாகன் - சிவபெருமான், எதிரினும - எதிரதாலும்.

ஆரு கொண்டு வரவ லார்இவ் அனிகம் நாளில் அவியுமோ?
சாரு கின்ற இவைஅ லாத தளம்வ ராதது எவளவோ? 120

இவையெ லாம்அ றிந்தி டாதுள முந்த மான மாகவே
சவைம திக்க நாம்உ ரைத்த சபதம் நன்று நன்றெனா
செவைய றத்த ணிந்து வாயு சிறுவன் மெய்தி கைத்துஅய்ர்ந்து
எவையி னிச்செய் வோமெ னாஇ டைந்தி டைந்துஉ யிர்த்தனன். 121

(வேறு)

வீம சேனன்ஒரு கைக வுட்கிடைவி தித்து உயிர்ப்பொடுதி கைத்திடத்
தாம னைக்கருதி வாயு மைந்தன்இரு தாள்இ றைஞ்சிஉப சாரமாய்ப்
பூம தித்தபுய பலப ராக்கிரம என்று ரைத்துஇதோர் பொருட்டல
நீம திக்கவொரு நிமிஷம் இப்பரியை நினது கைவசம்நி றுத்துவேன்.
122

விடையெ னக்குதவு கெனஉ ரைத்ததிறல்
மேக வண்ணன்முகம் நோக்கியே
படையி னிற்சிறிய பாலன் நீபொருது
பரிகொ ணர்ந்திடுதல் நன்றுநன்று
அடைய லார்சமரில் உனைவி டுக்கமன-
மதுது ணிந்திடுவது இலைஐயா
புடைவ ளைந்தபடை வெல்வை யோபொருது
கொல்வை யோபுயப லத்தினால் 123

வெல்லு வேன்குருதி யாறு கொள்ளஉடல்
சேறு கொள்ளஇளை ஞோர்களைக்
கொல்லு வேன்பரிபி டித்து வந்துகைகொ-
டுப்பன் நின்குமரன் என்குரு

---

120. நந்திவிழ - அழிய; அடர்ந்து - தாக்கி. ஆரு - யார், பேச்சுவழக்கு; அனிகம் - படை.

121. மானமாக - பெருமையாக; சவை - சபை; செவைஅற - செருக்கு அழிய; வாயு சிறுவன் - வீமன்.

122. வுன் - கன்னம்; தாமஞ்-கண்ணன்; பூஉலகம்; மேகவண்ணன் விஷ்ணு இறைஞ்சிக் கூறுகிறான்.

123. அடையலார் - பகைவர்; புடை வளைந்த - அருகே சூழ்ந்த

சொல்லி வைத்தசர மாரி மாயையுறு
தொழில்ள னக்குவரும் மால்சுதா
ஒல்லை யிப்பொழுதில் எனது வல்லமைகண்-
ணுற்று நோக்குகென ஓதினான் 124

நன்று மாயனைஉ ளத்துஅ மைத்துஅரிகள்
நவிய வேபொருது வலிகொடே
வென்று மீள்தியென விடைகொ டுக்கசின
மேக வண்ணன்விசை யாயெழுந்து
அன்று மாயையுரு வாகி மேகமிசை
யாகி யாவிஅக் கரமறை
நின்று ருச்செய்து நிகழ்த்த வான்புவிகள்
எங்கு மேஇருள் நிறைந்ததே 125

சண்ட மாருதமு டன்பெ ரும்புயல்கள்
தாரை கொண்டதுக றேர்என
அண்ட மண்டலமும் எண்டி சாமுகமும்
அறிய வேஅரிய தாகியே
கொண்ட மாயையின்மு ழக்கி னான்நெடிய
கோடி கோடிஇடி கூடிவான்
விண்டி டிந்திடமு ழக்க மிட்டதென-
வேறி கர்த்ததுஇவன் வெடிகுரல் 126

சேடன் மாமுடிகள் சிதற வாசுகிகள்
எட்டும் நஞ்சுகள்கு மட்டவே
ஓடி அட்டகசம் மண்டி யிட்டுஅலறி
உளற அண்டமுகடு உடையவே
நீடும் எண்கிரிகள் உடைய மேருகிரி
நிலைக லங்கிஅடல் குறையவே
பீட ழிந்துதிசை மாறி டச்சுடர்கள்
பேத லித்துஉடுக்கள் உதிரவே 127

---

124. நின் குமரன் என்குரு - உனக்கு மகனும எனக்குததந்தையும் ஆசானுமாகிய சுடோகசன், சொல்விவைதத - சுற்பித்த, மால் - வாயுதேவன். மேகவண்ணன் ஓதினான்.

125. அரிகள் - பசைவர்; அன்று - அப்பொழுது, ஆவிஅக்கரமறை - பீஜாட்சரங்களோடு கூடிய மந்திரம்.

126. விண்டு - வெடித்து.

127. வாகனிகள் - இங்கு திசைப்பாம்புகள; அடடகசம் - எண்டிசை யானைகள், எண்கிரிகள் - எட்டுக் குலவரைகள், உடு - நட்சத்திரம்.

சீறி வீசுசுழல் சண்ட மாருதம்எ டுத்துஎ றிந்ததரு திசையெலாம்
மாறி லாதுசுழல் பம்ப ரங்கள்என மண்டி மீமிசைசு ழன்றிடத்
தாறு மாறுடன்அ லைந்து உலைந்துதடு மாறி யோட,வரு தளம்எலாம்
ஏறு இடித்தொனியி னால்ம யங்கிநிலம் எங்கு மேசிறிது பம்மவே 128

இடரில் நொந்துகொடு நாவு கெட்டுஉளறி
வாய்மெய் கால்கைதடு மாறியே
கிடுகி டென்றுடல்ந டுங்கி (அப்பொ) வெகு
கெர்ப்ப மானதுக லங்கவே
உட்ல்த ளர்ந்துஒருவ ரோடு மேயொருவர்
உரைகொ டாதுஉணர்வ ழிந்தனர்;
கடுவ ருந்துகயல் போற்பு லன்பொறிக-
லங்கி னார்விழி மலங்கினார். 129

வேர்கள் தூர்களற அறல்அ றைந்துஎழு(பல்)
விருக்கம் வாடைகொடு சாடவே
தாரை கொண்டதுளி நொங்கு தெங்குஇளநீர்
தான்ள னச்சிதறி வீழவே
ஊரி லுள்ளபல மாட கூடம்அடி-
யோடு உடைந்துபட மூடவே
வீர வீமன்வதி யும்பெ ரும்கிரியும்
வெடுவெ டென்றுஅலைய லுற்றதே. 130

முன்மு ழக்கமதில் எண்ம டங்குஎனமு-
ழக்கி னான்பிறகும் உக்ரமாய்;
தன்மு யற்சிகள்ஒ ழிந்து தீயிலிடு
சருகது ஆகினர்கள் தளம்எலாம்;
நன்ம னப்பரிந டுங்கி நின்றதுபின்
நான்ம டங்குஎனமு ழக்கினான்;
பன்மு கப்படையும் மாவும் வீழ்ந்துமெய்ப-
தைத்து உதைத்துஅதுகி டந்ததே. 131

---

128. தரு - மரம், மீமிசை - வானில்; இடி யேறு எனமாறுக; பம்மல் - இருள் கவிதல்.

129. கொடு - வளைந்த; விழி மலங்கினார் - சுண் கலங்கினார்.

130. அறல் - நீர்; விருக்கம் - மரம்; வாடை - காற்று

131. உக்ரமாய் - பயங்கரமாக, அது - குதிரை.

பரிஅ யர்ந்துவிழக் கண்டு புள்ளரசு
பாய்ந்துஇ றாஞ்சுசிறு குஞ்சுளைப்
புரவி கக்கமத னைக்கி டுக்கிவிசை
பொலிய ஓடுபுயல் வலிஎனக்
கருதி வீமன்இரு கண்க ளிக்கஎதிர்
காண மாவினொடு காயமேல்
விரவு நாள்இவைஅ றிந்த இந்திரனும்
வெய்து யிர்த்துறவி ளம்புவான். 132

அருகு நின்றதொரு கின்ன ரன்றனைஅ-
ழைத்து யாகமுயல் புரவியைப்
பரவு பத்ரகிரி நகரில் எய்திஅது
பற்ற மன்னனொடு யுத்தமே
பொருது கின்றதுஎவ னோஅ றிந்துவரு-
கென்ன ஏவல்புரி கின்றதால்
கருது பாக்கியம்இது என்று காயமிசை
கண்டுள தீர்ந்துமொழி நுவலுவான் 133

மாய்கை வித்தைய விநோத தத்துவ
மனோக ராஉனது நகர்எது?
ஈகை உற்றஉனது அரசன் அய்யன்எவன்
யார்கொல் நீ(மொழிதி என்னவே)
நீக ருத்தொடுஉனது ஊரும் பேரும்நினது
அரசு சொல்கெனநி கழ்த்துவான்.
தூய்கை வச்சிராயு தன்அ ஐப்புகந்தி-
ருவன்(சொல்) உம்பர்உலகு என்பதி 134

தெய்வ ராசன்எனை வினவி வம்மினெனத்
திடம்ள னாஇலகி னேன்எனாப்
பொய்வ ராததிறல் புண்ணி யன்புதல்வன்
புரவி யாகமது புரியவே

---

132. புள்ளரசு - கருடன்; இறாஞ்சுதல் - பருந்துபாய்ந்து பற்றுதல்; கக்கம் - அக்குள், இங்கு முன்காலின் மேற்பகுதி; காயம் - ஆகாயம், தலைக்குமேல்; விரவு நாள் - செல்லும் போது.

133. இந்திரன்கின்னரனை அறிந்து வருக என்ன (அவன்) பாக்கியம் இது என்று ஆகாயமிசை (மேகவண்ணனை)க் கண்டு எதிர்ந்து நுவலுவான்.

134. வித்தைய - வித்தையை உடையவனே; கின்னரன் நீமொழிதி என்னவே மேகவண்ணன் நிகழ்த்துவான் பிறகு வருவது கின்னரன் கூற்று. உம்பர் - தேவர்; பதி - ஊர்.

ஐவர் அரசர்தமில் வீம சேனன்இவண்
சேரல்; (வீர)மகன் மகன்யான்
தொய்வி லாதவிட கீத னன்றனொடு
தோன்றி னோம்இவண்ள னச்சொனான். 135

இந்த வாறுமுகில் ஊர்தி பாலில்இவன் ஏகி ஓதஇடர் தடைசெயில்
வெந்து நீறுபட மைந்தன் இந்த்ரபுரம் எங்கு மேயழிவு செய்வன்என்று
அந்த ரர்க்கதிபன் அஞ்சி னான்பிறகு வந்த கார்முகிலும் அகலவே
சிந்தும் மாருதமும் மழையும் மின்னிடிகள் சேர மாறிவெளி யானதே. 136

இருளொ ழிந்துகதி ரதுது லங்கியபின் எய்தும் மந்திரிசு வேதனும்
பரவி வந்தசது ரங்க சேனைகள்ப யம்த விர்ந்துசித றினரெலாம்
பொருவில் நம்பதும ராக வெம்புரவி போனது எங்கெனந டுங்கியே
கருதி எத்திசையும் ஓடி வாடினதிர் கண்டி டாதுமெலி வாகினார் 137

கருதி யேமனதில் மேக வண்ணன்அரி
கரவு கொண்டனன்ள னத்துனார்
மருள்செ யாதவிதம் அட்ட காசமுடன்
வட்ட மிட்டுஅடல்மு ழக்கமாய்
உரும்ள னக்குமுறி வீர கர்ச்சனைசெய்து
உலவி னான்அரிகள் கண்ணுற;
இருமை யார்கரிய மேகம் என்றுஇவனை
இவுளி யோடுஉலவல் கண்ட்னர். 138

கண்ட ருண்டும்இவன் ஆர்கொல் நீலகிரி
கால்கை யோடுலவு கின்றதோ
கொண்டல் ஓர்உருள டுத்த தோஇதென
கொடுமை யோளனஅ ழுங்கியே

---

135. திடம் எனா - நல்லது என்று. பொய் வராததிறல் புண்ணியன் - எப்பொதும் தவறாத வலிமையையும் நல்வினைகளையும் உடைய அறக்கடவுள்; சேரல் - வந்திருப்பது.

136. முகில்ஊர்தி - இந்திரன்; இவன் - கின்னரன்; இடர்தடை ஒரு பொருட்பன்மொழி; குதிரையைக் கவர்ந்து செல்லத் தடைசெயதால் என்பது கருத்து. மைந்தன் - மேகவண்ணன், அன்றி வலிமையை உடைய வீமன் எனினுமாம்; சிந்து - கடல்; சேர - அனைத்தும்; மாறி - மறைந்து.

137. கதிர் - வெயயில்

138. அரி - குதிரை; துனார் - துன்னார், பகைவர்; மருள்செயாதவிதம் - மயங்காதபடி.; உரும் - இடி. அரிகள் - பசைவர்; இருமை ஆர் - பெருமை பொருந்திய.

சண்ட மாருதவ ரக்கன் வந்துபரி
தானெ டுத்துலவு றான்விண்மேல்
மண்ட லாதிபதி யேள னச்சொலிம-
யங்கி யேவிழிக லங்கினார். 139

புரவி போனதுஉயிர் போன தாய்இதென
புதுமை மேகம்இருள் இடிமழை
மருள்ப ரந்தசம்ப ராரி மாயைஇது
அநில மைந்தன்மகன் அறிகுவான்
அரிய பாரதம்என் யுத்தம் மீதில்அவன்
அழிந்த தால்இதுபின் மற்றுளார்
தெரியொ ணாதுஇவனும் ஆர்கொல் கந்திருவ
தேவனோ வலிது போவனோ 140

இருமை இந்நகரி உள்ள நாள்முதல்இந்
நாள்வ ரைக்கும்இகல் வாரிலை;
அரிய ரன்பிரம னும்ப யந்துஅகல்வர்
அக்கம் நோக்கமனம் அஞ்சுவார்;
கரவ னும்பரியும் ஓர்க ணத்தினிடை
கைபி டித்துஇலகு வீர்என
மருவு கந்திருவர் நாலு லக்கமொடும்
ஆறுஅக் ரோணியும்அ னுப்பினான் 141

தீர்க்க மானபல்அ ரக்கர் கிள்ளாழ்சி-
னைந்து தாவியகல் லேரி
மார்க்க மோடுஎதிர்வ ளைந்து கோலிவெகு
வாய்ம தங்களும்வி ளம்பியே
ஏற்க வேகளவு கொண்ட ராட்சதநீ
எங்கு தப்புவது?எ மன்பதி
பார்க்க ஏகினும்வி டோம்உன் மெய்எரிப-
டுத்தி யேபுரவி பற்றுவோம். 142

---

139. அருண்டு - அஞ்சி, கொண்டல் - மேகம், அழுங்கி - வருந்தி.
140. சம்பராரி - இந்திரன்; அநிலமைந்தன்மகன் - வாயுகுமாரனாகிய வீமனின் மகனாம் கடோர்க்கஜன்; அவன் - கடோர்கசனை; இது - இந்த மாயவித்தை.
141. அக்கம் - கண்; சரவன் - திருடன்; இலகுவீர் - வெற்றியுடன் விளங்குவீர்;
142. கேசரிமார்க்கம் - வான்வழி.

என்று கைக்கதைகள் ஏதி குந்தம்எறி
ஈட்டி கண்டகொரடு ஆலிகோல்
துன்று வேல்பரசு பிண்டி பாலம்எறி
தோம ரம்கழுமுள் நேரிசம்
வென்றி நேமிகவண் அம்பு சூலம்வினை
செய்கு றுந்தடிகள் வச்சிரம்
மன்ற லங்கொழுவில் உண்டை வன்கைமுச
லம்கொ டேமழைபொ ழிந்தரோ 143

அங்கு ளோர்கள்விழி காணொ ணாதவித
மாக மாயைஉரு வாகியே
சிங்க நாதமொடு வீர கர்ச்சனைகள்
செய்து பூமியிடம் எய்தியே
தங்கும் ஓர்பெரிய பாறை வேரினொடு
தான்ற டுத்துமக மேருநேர்
பொங்கர் மீதுஅவர்க ளுக்கு உயர்ந்துபுரி-
வாக மந்திரஉ ருச்செய்தான் 144

செய்த வேளைஅவர் எய்த அம்புபடை
சேர வே(எ)திரி வாகுஅடல்
மெய்த யங்கஅவன் அங்கம் எங்கும்மிகு
வினைவி ளைத்துஉருவும் ஏல்வையின்
கைத யங்கஅவன் விட்ட பாறையது
ககனம் ஒன்றுவிழல் போலுமாய்
வெய்து கின்னரர்அ டங்க மூடிவினை
யோடுஅ முக்கிமணில் வீழ்ந்ததே. 145

அரிய கின்னரர்கள் நாலு லக்கமொடு
அரக்கர் சேனைகள் அடங்கலும்
விரவு மாறுவக் ரோணி சேனைகளும்
மெய்ச மஸ்தமும்ந சுங்கினார்

---

143. கைக் கதை - கையில் பற்றிப் போர்புரியும் தண்டு, ஏதி - வாள்; குந்தம் - வேல், ஆலிகோல் - நுனிபூசப்பெற்ற அம்பு; பரசு - கோடரி, பிண்டிபாலம் - ஓர் ஆயுதவிசேஷம்; தோமரம் - இரும்பு உலக்கை; கழுமுள் - சூலம்; நேரிசம் - ஒர்வகை அம்பு; நேமி - சக்கரம்; கொழு - மழு; முசலம் - இரும்புப்பலகை; பொழிந்து அரோ, அரோ சற்றசை.

144. பொங்கர்-மலை;புரிவாசு-விருப்பத்துடன்.

145. அவர்-எமனாகரன் படையினர்;அவன்-மேகவண்ணன். ஏல்வை-சமயம்; ககணம்-ஆகாயம்; வெய்து-விரைவாக;அவர் எய்த படை உருவும் ஏல்வையின் அவன்விட்ட பாறை வீழ்ந்தது என்பது முடிவு.

இரண பூமியத னிற்க லாபம்இவை
என்று வீமன்இரு தாளையே
பரவி னான்புரவி யோடுஇ ழிந்துஅடி
பணிந்து பூவிழிபொ திந்தனன். 146

வீம சேனன்இரு(ள்) மேக வண்ணனைவி-
ரும்பி யேஇருக ரங்கொடே
தாம மார்பினில் அணைத்து மெய்மகிழ்த-
ழைக்க உச்சியைமு கந்துபின்
ஏம மேவுபரி நீகொ ணர்ந்தவிதம்
எவர்வல் லார்கொணர விழியனாய்
நீம னோரதம்நி றுத்தி னாய்சபதம்
நீநி லைத்திடநி றுத்தினாய். 147

கையில் இப்புரவி வந்து சிக்கியது
கண்ணி லார்கள்விழி பெற்றதாம்
மெய்யி னிப்புவனி வேந்தர் போர்க்குறினும்
விண்ணு ளோர்அமரில் மேவினும்
தையல் பாகன்அயன் மால்அ டர்ந்துஇகல்செய்-
தாலும் வாகைபுனை வேன்அலால்
அய்ய னேபரிவி டேன்னனப்புளக
மாகி னான்சிகரி வாகினான் 148

அச்சு வத்தின்முகம் மெய்க லாம்தடவி
அரவ ணைத்துஉருவி மிகக்கால்
உச்சி தக்குவடி னில்த ரிப்புற
உரத்து வைத்திடநி றுத்தியே
வச்சி ரக்கதையி னான்ம கிழ்ச்சியுடன்
அவய வத்துஅழகு நோக்கியே
மெச்சி இந்தவித மான வெம்புரவி
மேதி னிக்குள்இலை என்றனன். 149

---

146. சமஸ்தமும்-முழுவதும்; இரணபூமி-போர்க்களம்; லாபம்-போர்.
147. தாம - மாலைகளை அணிந்த; ஏமம்மேவு - பாதுகாவல் மிக்க; மனோரதம் - விருப்பம்.
148. சிகரி வாகினான் - மலைகளைப் போன்ற தோள்களை உடைய வீமன்.
149. குவடினில் - குவட்டினில், மலையில்; தரிப்புற - நிலையாக நிற்கும்படி., உரத்து - வன்றி; வச்சிரக்கதையினான் - வீமன்; மேதினி - உலகம்.

மிகவ னத்துஇருபு யங்கள் விம்மிதவி-
தான மானபுள கங்களாய்ச்
சிகரி மீதுஇவர்கள் மூவ ரும்கனசெ-
ருக்கி னோடுஇனிது இருக்கவே
தகைமை மன்னன்எம னாசு ரன்றன்முக-
தாவில் ஒதினர்கள் சாரணர்
ககனம் உள்ளதும்அ ழித்துஅ ரக்கிஉயர்
கற்கி கொண்டன்என உட்கியே. 150

கருது கந்திருவர் எங்கண் என்னஇவர்
காய மீதுறவ ளைந்ததும்
செருமு னைந்துமழை மாரி பெய்தல்நிகர்
சீறி வெம்படைகள் சொரிதலும்
உருவு மந்தரமி ருக்கை மாயைசெய்து
ஒருநொ டிப்பொழுதில் உலகில்வந்து
அரிய மேருநிகர் பாறை ஒன்றினை
அகழ்ந்துள டுத்துஅவன்இ லாகினான் 151

உனது கந்திருவர் உணர்கி லாதவிதம்
உயர்ந்து மந்திரவு ருச்செய்து
சினமி குந்துறவி டுக்க மீவெளிசி-
றந்து மொய்த்துளகின் னரர்களும்
நினதுஅ ரக்கர்கன்அ டங்க லும்புவியில்
இன்ற சேனைகள்அ டங்கலும்
பனகம் மீதுஇடிவி ழுந்துஅ முக்கிஅரை
பட்ட தொத்ததுப டிக்குளே 152

வானி டித்துவிழல் போல வந்துவிழும்
வலிய பாறையில்உன் வன்தளம்
தானொ றுங்கியும்ந சுங்கி னார்இவுளி
தன்னை வவ்விமலை புக்கினான்

---

150. மூவர் - வீமன், மேகவண்ணன், வீடணனன், முகதாவில் - சமூகத்தில், முன்னிலையில்; ககனம் - படை; அரக்குதல் - அழித்தல், கற்கி - குதிரை, உட்கி - அஞ்சி, உட்கியே ஒதினர்கள் என்க.

151. செரு முனைந்து - போரில் சூடுபட்டு; இலாகினான் - தாண்டினான்.

152. பனகம் - பாம்பு; படி - நிலம்.

இன ருந்தியஅ ரக்க னோஅசுர-
னோவி னோர்களில்ஒ ருத்தனோ
ஏனி வன்புரவி கொண்ட தோஎவர்கள்
ஏவல் கொண்டுஇலகி னான்கொலோ? 153

(கலித்துறை)

எனவும் ஒற்றர்கள் இசைக்கவெங் கனல்விழி சொரிய
எனது நன்னக ரினில்மும்மூர்த் திகள்வரார் இகலார்
பினுமெ திர்ப்பர்ஆர் மாப்பிடித்து உயிர்பிழைப் பவர்ஆர்
பனக லோகமற் றுலகுபோ யினும்பரி கொணர்வேன் 154

என்று உரைத்துமைந் துடன்இரு நூறுவக் குரோணி
துன்றி யேகடற் பெருகியே தொடர்புற மன்னும்
கன்றி யேஇர தத்தில்ஏ றினஎ வினோர் கலங்க
மன்றல் மார்புறு மாலைதீய்ந் திடஎதிர் வந்தான். 155

திக்க திர்ந்தன; முகடுஉடைந் தன;செகம் நடுங்கச்
சக்க ரம்குமி ழிகளொடு குமுப்பச்சக் கிரவா-
ளக்க டுங்கிரி நடுங்க,மண் டலமும்விண் அலைய
உக்கி ரம்கொடு ககனம்ஏ கியதுச மருக்கே 156

சமர வெம்பறை துடிகள்துந் துமிதவில் தவண்டை
திமிலை வெண்கலம் முருகுசச் சரிதிரு திடென
குமுறு தாரைகொம் புடன்குழ வினம்நரம் பினமும்
விமல வெண்கல இனம்முழங் குதல்விணில் நிறைத்தே 157

அனும னித்துள பரிமுழக்கு யானையின் முழக்கும்
மனிதர் கர்ச்சனை இரதகர்ச் சனைவரு முழக்கும்
கனமு ழக்குஇடி யதுநிகர் தளமனும் மகனும்
வினைமு கத்துறு பூபனை விதியுற வணங்கி 158

---

154. இகலார்-போர்புரியார்; பனக லோகம்-நாகலோகம்.

155. மைந்து-வலிமை; மன்றல்-மணமிக்க, மார்புறு மன்றல் மாலை என இயையும்.

156. செகம் - உலகம்.

157. சமர வெம்பறை-போர்ப்பறை; இதில் பல இசைக் கருவிகள் கூறப்பட்டுள்ளன.

158. அனுமனித்தல் - அனுமானித்தல், கனைத்தல்; தளமன்-தளபதி; பூபன் - அரசன்.

மன்னர் மன்னவ னேமலை மீதுதே ருடனே
உன்னி கொண்டவன் இளஞ்சிறு வோன்வலத் தொடுவில்
வன்ன மேரென ஓர்கதை வவ்வும்மூ வருமே
ஒன்ன லார்எனப் பகர்ந்திட அதிசயித்து உரைப்பான். 159

(எழுசீர் ஆசிரிய விருத்தம்)

அதிச யித்துஎன புதுமை! மூவர்கள் அன்றி யேதளம் ஒன்றிலை;
கதழ்வு டன்பரி கொண்டு சென்றுக ரந்தி டாமல்இ ருந்தனன்;
பதறி வந்துஇகல் புரியில் நன்றுகை பார்ப்பம் என்றுஇனிது உற்றனர்;
மதியு றும்தயி ரியவி சாலவல் லாள ராவர்அவ் வீரரே. 160

நன்று நம்படை மாதி ரத்துஅயல் நணுக வேசெல்க என்றலும்
சென்று கம்மின வாரி நேர்இகல் செம்மல் தேர்கொடு பின்செல
அன்றுஅ ருங்கிரி வங்க மாயின ஆழி ஆயின சேனைகள்
வென்றி யாம்விட கீத னன்திறல் வீம சேனனொடு ஓதுவான். 161

மந்த ரக்கிரி அனைய திண்புய வலிய என்சிறு தந்தையே
அந்த ரத்தவர் துதிக்க வெம்படை யதனில் என்னைஅ னுப்பினால்
சிந்து ரத்திரள் மீது தாவிய சிங்கம் ஒத்துஅமர் செய்குவேன்
தந்த னுப்புக விடைய தென்றுஇரு தாள்இ றைஞ்சினன் மீளியே. 162

அடிப ணிந்துள சுதனை அன்புடன் அகல மீதினில் அணைத்துமெய்
முடியின் உச்சியை மோந்துஐ யாசிறு முகுள்நி போர்உறு முனைமுகப்
படையில் ஏவிலன் இரண மானது பார்த்து அறிந்திலை; பாதமேல்
விடலை நீஇரு வந்த சேனையை வென்று மீள்வன்எ னச்சொனான் 163

---

159. உன்னி-குதிரை, வலத்தொடு - வலிமையுடன்; மேரு என எனை விரிக்க; ஒன்னலார் - பகைவர்.
160. சுதழ்வு - வேகம்; சுரநதிடாமல் - ஒளிந்து கொள்ளாமல்.
161. மாதிரம் - மலை;கும்மின - மேல்விழுந்து மூடுதல், வங்கம் - மரக்கலம்; ஆழி - கடல்.
162. வீடணனன் கன்னன் மகன், கன்னனும் குந்தியின் மைந்தனாதலால் வீமனைச் சிறிய தந்தை என்கிறான்; சிந்துரம்-யானை; மீளி - வலிமையுடையவன்.
163. முகுள்-அரும்பு; நீ எனற்பாலது ஒசை நோக்கி நி எனக் குறுகியது. இரணம்-போர்; பாதம்-மலையின் மேட்டுப்பகுதி; சொன்னவன் - வீமன்.

எந்தை யேஇது வோஉ னக்குஇவர்
ஈட தோஇது கிஞ்சமாம்
சிந்து வாளியில் ஓர்க ணத்திடை
சிதற வென்றுஇனிது இலகுவேன்
கந்தன் நேர்பொரு வன்பொ ராவிடில்
கன்னன் மைந்தனும் யான்அலேன்
நந்த கோபன்அ ருட்கொ டும்தர்ம
நந்தர் தர்மந லம்கொடும் 164

உனது தாள்தொழும் வலிமை யாலும்உன்
தம்பி தாள்தொழும் வலிமையால்
எனது வில்வலி காணு நீஎனில்
இளைய மேகவண் ணன்செய்த
மனவல் லாண்மையின் மாயை வெஞ்சமர்
வலிது கண்டது போலுமே
நினது பின்னுடன் வந்தும் யான்பல-
வீன மாவது நேரதோ. 165

ஒல்லை இப்பொழு துக்குள் இத்தளம்
உளதெ லாம்அதம் ஆகுவே
கொல்லு வேன்இவண் இருபு யத்திடை
கொற்ற மாதைம ணங்கொள்வேன்
இல்லை யாம்எனில் தேவ ரீரும்இ-
ருக்க வேபின்இ ருக்கிறீர்
செல்லு வேன்விடை தருக என்றுஅடி
சிரசு கொண்டனன் உரசதாய். 166

நன்று நன்றென இருத யந்தனில்
நந்த கோபனை நம்பியே
இன்றுஇது உன்பரம் மைந்தன் என்றுஇத
யத்தில்எண்ணிஅ னுப்பினான்;

---

164. கிஞ்சம்-சிறுமை; சிந்து வாளி-பொழியும் கணை, வினைத் தொகை.
165. தம்பி-அருச்சுனன்; நேரதோ-சரியாகுமோ.
166. அதம்-அழிவு; கொற்றமாது - வெற்றித்திருமகள்; உரசு-நெஞ்சுரம்.

வென்றி வச்சிர கவச மானதை
மெய்யி லிட்டனன் எய்களை
ஒன்றுஅ னந்தம்ள னச்செய் தூணியும்
ஒண்பு யத்தினில் இறுக்கினான். 167

பார மேரென வில்லு நாலிரு பக்க வாகில்இ றுக்கினான்
வீர மாமழு வாளி ஈந்துள விற்பி டித்துஇடி போல்அதிர்ந்து
ஆர மார்பினன் வரையை விட்டுஅரி யாக மண்மகள் நெளியவே
வார சாரவல் லாண்மை மேவிய வயவன் வந்துகு தித்தனன். 168

தத்தி யேவரை யிற்கு தித்துஎதிர் தாவு சிங்கம தற்குநேர்
இத்த லத்திடை கர்ச்சி தத்தொடு இகற்கு நேருற வருதலைச்
சத்த சாகரம் ஒத்த சேனைகள் தத்த ளித்தல்அ ரசாளிகண்டு
எய்த்தி டைந்தஇ பத்தை நேர்அடல் இகல்ம றந்தனர் சகலரும். 169

கால னோதிரி சூல னோகதிர் வேல னோஅழற் கண்வரும்
கோல வீரிய பத்ர னோகும ரன்ற னோடுஎதிர் சூரனோ
பால னோஇவன் ஆர்கொல் என்னபயம் இன்றி யேபடை மீதிலே
ஆல காலம்ள னக்க னன்றுஅ (ஆசி) வில்லைவ ணக்கினான். 170

என்னை யும்கட லனைய சேனைகள் எவையு மேமதி யாமலே
முன்ன டர்ந்தனன் இவன்இ ளந்தையின் முளைஇது என்கொல்இ வன்றனை
உன்னி யேவதை யாது கைப்பிடி யோடு பற்றிடும் என்றனன்;
கன்னன் மைந்தனும் என்னில் வாளிகள் கைம றாதுசொ ரிந்தனன்
171

சண்ட மாருத மும்பொ ரும்புயல் தாரை கொண்டது நேர்என
அண்ட மண்டலம் எண்டி சாமுகம் அடைய அம்பில்அ டைத்தபின்

---

167. இது மைந்தன் இன்று உன்பரம் என இயையும், எய்கள் - அம்புகள்.
168. ஆரமார்பினன், வயவன் - விடசீதனன், அரியாக - சிங்கம் போல,
169. சத்த சாகரம் - எழுகடல்; அரசாளி - எமனா கரன், இபம் - யானை.
170 வீரிய பத்ரன - வீரபத்திரன், என்ன- என்றெலவாம் வியகும்படி; ஆசி - போர்; வணக்கினான் - வளைத்தான்
171. இளந்தை - குழந்தை; இவன் குழந்தையை விட இளையவன் என்ற கருத்தில் இளந்தையில் முளை என்றவன் எமனாகரன்.

கண்ட துண்டமெய் ரதக சந்துர கம்ப தாதிகள் கண்டனன்;
விண்டு விண்டென வேபி ரேதமு மேசெ றிந்தன தின்செயல்ஆம்
172

ஆறு கொண்டது குருதி எங்கணும்; அள்ளல் நேர்பலர் மூளைகள்
சேறு கொண்டன; வன்கொ டும்கணை சென்று உடைத்திட ரதம்எலாம்
நீறு கொண்டன; யானை சேனைகள் நிமிஷ நேரம தற்குளே
கூறு கொண்டன னே;இ ரண்டுஅக் குரோணி சேனைகு றைந்தவே
173

மண்டு வீரிய சண்ட மாருத மாக எய்திய வேககோ –
தண்ட வாளிபொ ழிந்து கைச்சர லாப மோடுஎதிர் தத்தினான்;
கண்ட பேர்கள்வெ ருண்டுஅ ருண்டிரு கார தாய்நடு வழிவிட
மிண்டி நன்னதி உப்பு நீர்கிழி வித்துஉள் எய்துவது ஒத்தனன்.
174

வாரி யைக்கிழி தரந டந்திடும் வங்க மாகம டங்கலாய்த்
தேரி னில்பொலி வாக நின்றுள செம்மல் மீதுஎதி ரேறவே
வார வித்தக னைத்த கைந்துஉனை வானி லேவிடு வேன்என
நாரி யுற்றுள வில்வ ளைத்தனன் நாத மந்திரி சுவேதனே.
175

நினது வல்லமை என்ன நின்பலம் என்ன நீயொரு வீரனோ
உனது கைஎன உனது மெய்என உனது வில்என உணர்விலோய்
கனலை வெல்வது சருக தோவரு காற்றை வெல்வது பஞ்சதோ
பனக மானது கருடன் மீதுஇகல் பாயு மோஉயிர் மாயுமே(ர).
176

ஏழை யானவ னோடுஎ திர்ந்துஇகல் செய்யில் என்தலை கொய்யில்என்
மோழை யானவன் நீஅ டர்ந்துஅமர் முன்செய் தால்அதன் பின்செய்வேன்.
வாழை யானது வாளின் மோதிட வாது கூறியது ஒக்கும்நீ
கோழை போகவொ ணாவி தம்சமர் குறுகி யேதொடு சரம்என்மேல்
177

---

172. விண்டு - மலை; பிரேதம் - சவங்கள்.

173. அள்ளல் - சேறு.

174. கோதண்டம் - வில்; சுரா - மேகம்; உப்புநீர்க் கடலுள் உண்ணீராறு புகுவது போல் விடகீதனன் பகைவர் படையில புகுந்தனன்.

175. வாரி - கடல்; வங்கம் - மரக்கலம்; மடங்கல் - சிங்கம்; செம்மல் - சுவேதன்; வார - வருகின்ற; தகைநது - தடுத்து.

176. பனகம் - பாம்பு.

177. மோழை - அறிவற்றவன்.

திப்ப மாகினும் நீசொல் வாய்;மொழி செப்பம்; நின்னுயிர் அற்பமாம்
இப்ப வேகொலு வேன்அ டாபய லேஇது ஓர்கணை யால்எனத்
துப்ப தாய்ஒரு வில்வ ளைத்துஎதிர் தோண ஓர்கணை தொட்டனன்
குப்ப லாய்எரி கொப்ப ளித்துஎதிர் குறுகி வந்தது சிறுவன்மேல் 178

சீறி மீறிஅ டர்ந்து மேல்வரு தீய வெங்கணை மாயவே
ஈறி லாவிசை வாளி ஒன்றினை யேவி டுத்திட வெய்துபோய்
நீறு கண்டது; ஆறு வாளிநெ ரித்த னன்பின்உ ருத்துஇவன்
பாறி யேவிழ ஓர்ச ரம்கொடு பதறி ஆறையும் உதறினான். 179

ஐந்தி ரண்டுச ரம்தொ டுத்திட அம்பது ஒன்றில்அ றுத்தனன்
நைந்து நூறுச ரம்தொ டுக்கந றுக்கி னான்ஒரு வாளியால்
மைந்து வாளிச கத்தி ரம்தொட வாளி ஒன்றில்அ றுத்தபின்
உய்ந்து பற்பல கோடி பாணம்உ டற்றி னார்இரு வோருமே. 180

வளைந்த வில்நிமி ராவி தம்பல வாளி மாமறை நேரதாய்
விளைந்த சங்கம்மொய் விந்தம் வெம்பது மம்ச முத்திரம் வெள்ளமாய்ச்
சளங்கொள் சோனைள னச்சொ ரிந்தன சமம தாய்ஒரு கடிகைபின்
பிளந்த னன்கொடி அச்சும் அச்சுருள் வலவ னும்பெரு மாவுமே. 181

மகுட பங்கம்உ றப்பி எந்துவச் ராங்கி பாரமும் நாணியும்
துகள்ப டுத்தினன் எண்ணி ரண்டுஅடர் தொடையி னால்ஒரு தொடைநுதல்
உகள விட்டுஅது பிடரி யூடுற உருவி ஏகின கடுகியே
மிகம யக்கமொடு உணர்வு அழிந்துஇர தத்தின் மீதுற வீழ்ந்தனன். 182

அயர்ந்து மந்திரி வீழ்ந்த பின்பல அக்கி னிக்கணை உக்ரமாய்
வியந்து மாரிசொ ரிந்த தாம்என வீசி னான்கன பூசலாய்
இயங்க வந்துள சேனை யானது இறந்தி றந்துகு றைந்ததால்
பயந்து மற்றுள சேனை ஓடிய பரிதி கண்டுள பனியைநேர் 183

---

178. திப்பம் - திட்பம், உண்மை; நீ உண்மையைக் கூறு, என் வார்த்தை சரியானது என்பது சுவேதன் கூற்று; தோண - தோன்ற; குப்ப - குவியல்.
179. உருத்து - சினந்து; பாறியே விழ - ஒடிச் சென்று வீழ்வாக.
180. மைந்து - வலிய; சகத்திரம் - ஆயிரம்.
181. வேதம் பொய்க்காததைப் போலவே அம்பும் தன் இலக்கினின்றும் தவறாது என்பார் மாமறை நேரதாய் வாளி என்றார்; சங்கம் - நூறு கோடாகோடி, 10^{16}, விந்தம் - பத்தாயிரம் கோடா கோடி, 10^{18}; பதுமம் - பத்துலட்சம் கோடாகோடி 10^{24}, சமுத்திரம் - கோடி கோடாகோடி, 10^{31}; வெள்ளம் - பத்தாயிர கோடி கோடாகோடி, 10^{36}, யுடகை நாழிகை.
182. மகுடபங்கம் - கிரீடம் சீழேவிழுதல்; வச்சிராங்கிபாரம் - வயிரச் சட்டையாகிய கவசம்; தொடை-அம்பு; உகளவிட்டு - பாயச் செய்து

என்ன வாறுஇவன் விடலை யாகஇ ருந்தும் வன்சமர் இவனைநேர்
பின்னை யார்செய வல்லர் என்றுஇது பெரிய தோர்அதி சயம்என
உன்னி மெத்தம கிழ்ந்து நின்றனன்; உக்ர தந்தன்எ னச்சொலும்
மன்ன னும்திரள் சேனை யோடுவ ளைந்து வன்சமர் செய்தனன். 184

வந்த டர்ந்துள சேனை பற்பல வாளி மேல்மழு வச்சிரம்
குந்தம் நேமிக தாயு தம்பல கொற்ற வெம்படை முற்றுமே
சிந்து மாரிநி கர்க்க வீசினர் சிறுவன் நெஞ்சுஇடை யாமலே
சந்த மாவலி தான திவ்விய சரம்அ னந்தம்வி டுத்தனன். 185

விட்ட வெங்கணை எண்தி சாமுகம் எங்கு மேயவர் விடுபடை
கெட்ட ழிந்திட வேய றுத்துஉருள் கேத னம்,பரி, சாரதி
தட்ட ழிந்தன; தவிடு பட்டது தந்தி வெம்பரி கால்தளம்;
பட்டு உருண்டன முண்ட மேருப ரப்பி னான்களம் முற்றுமே 186

கைகள் எத்தனை முண்டம் எத்தனை கண்டம் எத்தனை துண்டமாம்
மெய்கள் எத்தனை தேர்கள் எத்தனை வேழம் எத்தனை கூளமாய்
நைவது எத்தனை என்று கூறுதும் நடல மாய்விட கீதனன்
எய்த அக்கணை யால்அ ழிந்ததை எவர்க ணக்கிட வல்லரே. 187

மொய்த்த சேனைகள் முற்றும் மாளவும் முடுகி உக்கிர தந்தனும்
பைத்த ராதல மேந டுங்கஉ பாய மாய்ரதம் நடவியே
எய்த்தி டாதுஇரு டாள னச்சிலை யேவ ளைத்துஎய்து கணைகளால்
மைத்த ராதரம் மாரி ஒத்தது வான்ம றைந்தது திசையுமே 188

அந்த ரம்திசை தனைஅ டைந்துள ஆசு கங்களை ஏகமாய்
வெந்தெ ரிந்திடு பற்ப மாகிவி டத்தொ டுத்தனன் வெஞ்சரம்
பிந்த வெஞ்சின மாகி யேதழல் பெய்ய வேவிழி வெய்யதுஓர்
சுந்த ரக்கணை நெற்றி மார்புதொ ளைக்க ஐந்துதொ டுத்தனன். 189

---

184. விடலை - இளைஞன்.
185. இடைதல - பின்வாங்குதல், திவ்விய சரம - தெயவீகமான கணைகள்.
186. கேதனம் - கொடி; தந்தி-யானை, பட்டு உருண்டனவாகிய முண்டங்களை மேருவைப்போல் சனம் முற்றும் பரப்பினான் என்க.
187. நடலமாய் - செருக்குடன்.
188. பைத்து அரா தலம் - படங்களை உடைய பாம்புகளுக்குரிய நாகலோகம்.

விசிகம் ஐந்துபின் உருவி ஓடிட வெருளி யுற்றுஉணர்வு இன்றியே
பசுவ கன்றுபின் வந்தி டத்திகழ் பற்க டித்துஉர மாகவே
அசைவ றப்பதி னைந்து வாளிகள் அதட்டி விட்டனன் இரதமும்
துசமு டன்கவ சங்கை வில்பல துண்டு பட்டன க்ரீடமும். 190

மறுகி மற்றொரு தேரில் ஏறிவில் வாங்கி யேயது வைக்குமுன்
குறுகி ஐந்தும றக்கொ டுங்கணை கொடும ரம்குழைத்து எய்தனன்;
அருகி மார்புஇரு தோள்க ளம்குள மதுபி ளந்தது தடையற
இறுதி வந்தது எனஅ யர்ந்துஇர தத்தின் மீதுவி ழுந்தனன். 191

வீர் கர்ச்சனை செய்து வாளிகள் மின்னல் மாமழை மாரிபோல்
வார வித்தகன் ஏவி வானிகள் மறுக எய்துஅணி குறுகினான்
தீர முற்றவன் சேனை விக்ரமன் சினந்துஅ டர்(ந்திடத்) தேர்விடக்
காரெ னத்திரள் வானி யானது கம்மி மொய்த்துவ ளைந்ததே 192

கம்மி மொய்த்து வளைந்த சேனைகள் ககன மாரியை நிகரவே
சம்ம தித்துஉள படைள லாம்வில சாக ஏவின ரோசமாய்;
விம்மி அங்குஅவர் ஏவும் ஆயுதம் விறக தாய்இவன் விடுகணை
செம்மி ஏகிய வடவை போல்எதிர் சென்று தாக்கிள ரித்ததே. 193

ஆயு தங்கள்ள லாம்ள ரித்துஅடர் சேனை யாவும்ள ரித்தபின்
வாயு வேகமொ டேநெ ருங்கிய சேனை விக்கிர மன்னையும்
ஏயு கைக்கைஅ றப்பல் ஆசுகம் ஏவி மெய்தெரி யாமலே
பாயும் வெங்கணை யேஉ டற்சுமை பண்ணி அப்புறம் ஏகியே 194

சுதக ரன்றிரள் சேனை யேபடு சூர ணம்பட வேசெய்து
புதிய மன்னவன் மெய்க ளேசர பஞ்ச ரம்பட எய்துபின்
அதிய புட்கரன் மெய்யை அம்பிடு கூடது ஆக்கி அவன்தளம்
சிதில மாகஅ ழித்த னன்சினம் மேவி விடுத்தச ரத்தினால் 195

---

190. விசிகம் - அம்பு; வெருளியுறறு - மயஙகி, பசு-உயிர்; உயிர்போய் மீண்டது போல் என்க.
191. கொடுமரம் - வில், குழைத்து - வளைத்து, அருகி - (இலக்கை நோக்கிச்) சென்றடைந்து, குளம் - நெற்றி, அது பகுதிப் பொருள்விகுதி
192. வானி - படை; கம்முதல் - அதட்டுதல
193. ரோசமாய் - மான உணர்வுடன்; செம்முதல் - பொருமுதல், பகைவர் படைக்கலஙகள் விறகுக்கும விடதீனன் கணை வடவைத் தீக்கும் ஒப்பாயின.
194. ஏ உகைக்கை - அம்பு செலுத்துதல்
195. சூரணம் - பொடி, சர பஞ்சரம் - அமபுறாத்தூணி, பட என்றது நிகர்க்க என்னும் பொருளில்.

வீர வீரியர் மன்னர் நால்வரும் வெங்க ளத்தில்அ யர்ந்துபின்
ஆர வாரம டங்க லாகஅ டர்ந்து வண்டுசொ ரிந்ததால்
சேர வேதறி கெட்டு உடைந்தனர் சேவ கத்தொடுள திர்ந்துளோர்
பாரி லேமடி பட்டு வீழ்ந்தனர் பர்வை ஒத்தது குருதியே 196

விசைபொ ருந்திய சண்ட மாருத வேடை யோடுஎரி வடவைபோல்
இசைமி குந்திடக் கிடுகி டென்றுஎரி ஏறு கோடையில் இடியைநேர்
திசைஅ டங்கலு மேக விந்தது தீரன் ஏவிய அத்திரம்
பசைஅ றும்படி ரதக சம்துர கம்ப தாதிகள் பற்ற 197

இரதம் அற்றன கரிகள் அற்றன இவுளி யின்திரள் அற்றன
நரர்கள் அற்றனர் கழல்கள் அற்றன நடைகள் அற்றன (நடலமும்)
துரகம் அற்றன களமது அற்றன ஒண்சி ரங்களும் அற்றன
- - - -

நமது சேனைகள் ஓரி டத்தும்ந லிந்து வெந்திடக் கண்டிலேன்
எமனும் அஞ்சுற நின்ற நம்படை யாவு மேமுது கிட்டதென்
விமிதம் ஈதென வில்லை ஊன்றினன் வெய்து யிர்த்துற நின்றனன்
அமரின் மீதள வற்ற சேனைபின் அலைநி கர்க்கவ ளைந்ததே 202

எல்லை காணரி தாக வேதிசை ஈதுள னத்தெரி யாவகை
அல்லு வாரியை ஒத்து மொய்த்துளழில் ஆத வன்கதிர் மறையவே
வில்லின் வாளிப ரப்பி னார்இருள் மேகம் ஒத்துற மூடினார்
வல்லை வீரியன் ஒல்லை யிற்கணை மாரி மாமழை வீசினான். 203

அரிதம் எங்கும்வ ரும்சி லீமுகம் அளவி லாதது அடங்கலும்
ஒருச ராசன மதில்ள ழும்பிய உருமின் வாளியி னால்அறுத்து
அரிகள் ஒவ்வொரு வற்கு நூறுநூறு ஆகி ஓர்கணை உருவவே
விரைசு டன்கர சரவி லாசம்மி குந்தி டும்படி வீசினான். 204

யானை பத்துஇரும் புரவி ஐம்பதொடு ஆளும் நூறுதொ ளைத்தலால்
ஏனை அம்புசெல் விசைநி லாவிதம் எய்து பத்திரு யோசனை
சேனை யேபிண மாய்நி றைத்துஇருள் செருமு கம்அல்அறுத்து ஒளிர
வான ருக்கனை ஒத்து நின்றனன் வலிய வில்லிகன் னன்சுதன். 205

இனன்முன் ஆம்இமம் இந்து முன்புஇருள் எரிமு னம்சருகு என்னவே
வினவு சேனைள லாம்வெ ருக்கொடு வெந்கொ டுத்தது கண்டுதான்
மனம கிழ்ந்துஒரு சிறுவன் நீசெய்த வலிமை யேவலி நன்றுநீ
தனிமை யாயொரு வாக னம்மதும் தவிர நின்றனை தாள்கொடே. 206

ஆத லால்மனம் வருவ தில்லை உன்மேல் அருஞ்சமர் செய்யவே
பாத சாரிய னாக நின்றனை படைகள் ஊர்திஎவ் வளவுஉனக்கு
ஏது தேவைஅவ் வளவு நல்குவன் ஏற்று நீரதா ரூடனாய்ப்
போத வந்திடி லேக டுஞ்சமர் புரிகு வேன்என உரைசெய்தான் 207

---

202. வெந்திட - புறமுதுகிட, விமிதம் - விமமிதம், வியப்பு.
203. அலலு - அல், இருள; வாரி - கடல.
204. அரிதம - திசை; சிலீமுக - அமபு, சராசனம் - வில; உரு - ஒளிமிகக; கரசரவிலாசம் - கைகளில் அம்புகளை வைத்து விளையாடும் விளையாடடு, வித்போர்.
205. இரும் - பெரிய; செரு முகம் - போர்க்களம், அல் - இருள், வான் அருக்கன் - ஆகாயத்தில உள்ள சூரியன்
206. இனன் - சூரியன், இமம - பனி, இந்து - சநதிரன்; வெருக்கொடி - அஞ்சி, வெற கொடுததல் - புறமுதுகிடுதல்.
207. பாதசாரியன் - (வாகனம இல்லாமல) கால்களால நடபபவன், ரதாரூடன் - தேரில் ஏறி இருபபவன்.

சங்க மாகவும் மும்ம தம்பொழி தந்தி கூடிவ ளைத்திடில்
சிங்கம் ஒன்றுத னித்தி ருந்திடில் செய்ய லாம்வகை உள்ளதோ?
பங்க மாம்முயல் அரித னக்குஉறு பதவி பட்டமது உதவல்போல்
இங்கெ னக்குஉரை கூறி னாய்உனக்கு ஏது தேவைத ரச்சொலாய் 208

எந்தை கைளவர் கைக்கும் மேலுளது என்று நீயறி யாததாலை
இந்த வாறுசொ னாய்;பு ரந்தரன் ஏக நாயகன் மாயனும்
வந்தி ரந்திட வீசு கின்றவன் வள்ளல் எந்தை; பிதாமகன்
சொந்த மாய்உல கோர்நி தம்தொழு சோதி ஆதவன் ஆவனே 209

நினது தேவதை பேரில் ஆணைபின் நின்கு லப்பெயர் ஆணை;நீ
மனது வஞ்சனை இன்றி யேகர வலிமை யால்இயல் மட்டுமே
வினைசெய்; செத்தபின் னேபி ழைப்பதில் மெய்ச்ச காவுறு தேவதம்
தனைப்பி ரார்த்தனை செய்து வெய்தெனச் சமர்க்கு வாவர வல்லையேல்
210

கையி னால்இய லாத வன்சமர் கண்டி லாதவன் நின்னைநேர்
தொய்வ தானவ னுக்கு வாகனம்; சுத்த வீரர்க ளுக்குஅதுஏன்?
வெய்ய னேஅமர் செய்ய வா;பயம் மிஞ்சி னால்வில கிப்பிழை;
தெய்வ மாம்அதை நம்பி வேண்டுதல் செய்துஎன் முன்சம ருக்குவா
211

என்று உரைத்திட விழிநெ ருப்புக ளேசொ ரிந்திட ரோசமாய்
நன்று நீவலி சொன்ன நாவினை நறுக்கு றேன்என நறுநறுநறு
என்று பற்கள்க டித்து உதட்டைஅ துக்கி நின்றுஎதிர் உறுக்கியே
நின்று கர்ச்சனை செய்து மேரெனும் நெடிய வில்லைவ ணக்கினான்.
212

சிலைவ ணக்கிய ஒலிகு ணத்தொனி செய்த ஓதையில் வெய்துயிர்த்து
உலகில் உள்ளவர் உம்ப ரும்திகைப் புற்றுஉள் அஞ்சிம லைக்கவே
சலத ரம்சொரி மாரி நேர்சர மாரி வீசினன் ஓர்முறை
அலகு நூறுச கஸ்தி ரம்பதி னாயி ரம்பனூறு ஆயிரம். 213

---

208. சுவகம் - ஒரு போ எண். 10^{16}. தந்தி - யானை. பங்கம ஆம் - இழிந்த. அரி - சிங்கம்.
209. ஏக நாயகனாகிய மாயன் என்க; பிதாமகன் - பாடடன், தநதையின் தந்தை.
210 இயல் மட்டும் - முடிநதவரை. மெயச்சகா - உண்மையான துணைவன்; வெய்தென - விரைவில்.
211. தொய்வு அது ஆனவன - இளைத்தவன்.
212. உறுக்கி-அதட டி.
213. குணத்தொனி - நாணொலி. சலதரம் - மேகம்.

பத்து நூறுச கஸ்தி ரம்பல கோடி சங்கம தாதியீறு
அத்தி ரம்பல அற்பு தத்தொகை யாக வீசினன் அரசர்கோன்;
பத்தி யாகிய தொடர்புஅ றாதுப னித்தது ஐந்தரை நாழிகை
யுத்த வாளியில் ஒற்றை யீரெழு உலக மும்கல கம்செயும். 214

இருபு றம்கதிர் வாள்பொ ருந்துஇல்ல வேல்லை நேர்கழுகு இறகுபூண்டு
உரும்ள னும்படி குமுறி வந்திடும் உபய கூர்முனை ஏஎலாம்
கருகரு என்றுற அர்த்த சந்திரக் கணைகள் கொண்டுந றுக்கியே
வெருவில் கத்திரிப் பாணம் ஐந்துவி சைத்து விட்டுந கைத்தனன் 215

ஐந்து பாணம தைக்கு றித்துளம னாசு ரன்பல பகழியை
மைந்து மாரிள னச்சொ ரிந்திட அதைள லாம்உடன் பொடிசெய்து ஒன்று
உய்ந்து சாரதி தலைஅ றுத்தனன், ஒன்றில் வில்லைந றுக்கினன்;
முந்து தேர்துவ சத்தை மாமகு டத்தை முக்கணை சிந்தின. 216

தேர்பொ டிந்திட வேதி கைத்துஒரு தேரில் ஏறிவில் ஏந்தியே
போர்பொ ருந்திய வாளி நாணிடை பூட்டும் முன்பதி னாறுகோல்
மார்பு யங்களும் நெற்றி தைத்துஉரு வத்தொ டுத்துமு ழக்கினான்;
பார்பு ரந்தவன் நொந்த னன்இழி பரவு சோரி வழித்தனன். 217

பரவு சோரிவ ழித்துள நிந்துஉறு பற்க டித்துறும் உக்ரமாய்
விரவு கோபஅ ரக்க னாய்இரு விழிகள் அக்கினி சொரியவே
உரவு கர்ச்சனை செய்து சீறியுன் உயிர்இ னிப்பத னம்பிளாய்
அரிஅ ரன்பிர மன்த டுக்கினும் ஆவி கொள்வன்ள னச்சொனான்
218

சொல்லி வெங்கணை தொடர்புஅ றாவகை சோனை மாரிநி கர்க்கவே
வில்லில் மாரிசொ ரிந்த னன்முறை விரவும் மற்புதம் நிற்புதம்;
கல்லும் ஊடுரு விக்க ருங்கணை காலன் சூலம் நிகர்க்குமால்;
பல்ல வங்கள்அ தற்க தற்குஇயல் பான ஏவில்அ றுத்தனன். 219

---

214 சங்கம் அது . ஆதி - சங்கம முதலிய பேரெண்கள், அற்புதம ஒருபேரெண 10^{44}

215 உரும - இடி, உபய கூர் முனை - இரண்டு கூர்மையான முனைகளை உடைய, ஏ-அம்பு, அர்தத சந்திரகணை-பாதி மதியொதத பாணம, விசைதது-வேகமாக,

216. உய்ந்து-உய்ந்து எனறபாலது எதுகை நோக்கி மெலிந்தது.

217. பார் புரநதவன - அரசன், சோரி - இரததம்; இழி சோரி, பரவு சோரி என இருமுறை இயையும்.

218. பதனம் - பததிரம்

219. அற்புதம் - ஒரு பேரெண, 10^{44} . நிறபுதம் - ஒரு பேரெண், பல்லவம - பல்வம், அம்பு,

ஒருவ ருக்கொரு வோர்கள் மிக்கொடு உடற்றி அற்புத நிற்புதம்
எரிஅ னற்கணை விட்டு நாழிகை ஏழ ரைப்பொழுது இகலுற
வெருவ றச்சம முற்ற போரினில் வியந்து மன்பனி ரண்டுகோல்
உருவ விட்டனன் மார்பு டன்களம் ஒண்பு யங்களில் எங்குமே. 220

மெய்கள் எங்கும்வி ரிந்த செந்நதி வெயில வன்கிர ணங்கள்போல்
கையி கந்துஉளம் (மிகவும்) விம்மிய கதழ்வி னோடு கடுங்கணை
ஐயி ரண்டுச ரத்தில் வச்சிர ஆசுஅது (அறுத்துஉளில்) உருவமெய்
எய்யும் எண்கணை புயம்அ ழுத்திஓர் ஏழுஅ கத்தில்இ ருத்தினான். 221

ஆறு கோல்நுத லைத்து ளைத்திட ஆறு போல்ஒழு கச்செநீர்
வீறு போய்உணர் வற்ற மன்னவன் வில்லை விட்டனன் நழுவவே;
தேறி லாதஅ யர்ச்சி தன்னொடு தேரின் மீதுற வீழ்ந்தனன்;
ஈறி தோஎன வலவன் ஓடிஎ டுத்துஅ ணைத்தனன் இயல்பொடே. 222

சூதன் வந்துப னீர்தெ ளித்துஉயர் சோபம்ஆற்றிட வேதெளிந்து
ஆதி பன்செவை யாய்இ ருந்துவிண் ஆர்ந்த வில்என வில்வளைத்து
ஒது வான்அட பாலன் என்றுஉனை யேகொ லாதுகை தாழ்ந்தனன்;
போத மூர்ச்சையு றச்செய் தாய்;சிறு போதில் புல்லுயிர் நீக்குவேன். 223

என்னை நீமதி யாதுஎ திர்த்தனை; எவர்தி ராணிஎன் முன்செய்வார்?
உன்னை வெல்வது பார மோஎன விற்கு ணத்தொனி யும்செய்தான்
அன்ன போதுவி மான மீதினில் அமரர் அந்தரர் மொய்த்தனர்;
மன்னர் மன்னவன் கர்ச்சி தத்தொடு வளைந்து தேரைநெ ருக்கினான். 224

ஆம டாஎம னாசு ராஎது ஆண்மை நீஅறி யாமையால்
தீமை வீண்மொழி பேசி னாய்கதிர் சேய்க னன்தரு சேயன்என்
நாம மோவிட கீத னன்திரள் நஞ்ச தானச ரங்களை
ஏம மந்திர உருக்கள் கொண்டு(உடன்) அடக்க லால்எனக்கு இப்பெயர். 225

---

220. வெருவற - அச்சமற்ற; மன் - அரசன், களம் - சழுத்து.

221. ஆசு-சுவசம்;அகம்-மார்பு; இப்பாடல சுவடியில் மிக உருமாறி உள்ளது. இவ்வடிவம் குறிப்புரையாசிரியரால அமைத்துக் கொள்ளபபட்டதாகும்.

222. ஈறு இதோ-முடிவு இதுவோ. இறப்போ என்றபடி.

223. ஆதிபன் - அரசன்; செவை-செவ்வை, இடைக்குறை.

224. திராணி செய்தல் - வலிமை காட்டுதல்

225. கதிர்சேய் கனன் - சூரியன் மகனான கன்னன்; ஏம மந்திரம் - அத்திரங்களுக்குரிய காவல் தெய்வங்களின் மந்திரம்.

என்னி டத்தினில் நின்ப்ர திக்கினை யேசெ லாது;அட வீணிலே
துன்ன வைக்குள்உன் வாய்ள றிந்துஅவ தூறு கொள்ளுவது ஏன்எனக்
கன்னன் உத்தமப் புத்தி ரன்சொலக் காது நாண்குதை தழுவவே
பன்னி விட்டனன் எண்க டும்கணை பாரும் வானும்ந டுங்கவே. 226

(வேறு)

அட்டவெங் கணையும் இரைந்துஎதிர் அணுகும்
ஆசுகம் முன்பிவன் ஒருகோல்
தொட்டறுத் தனன்மற்று எண்ணிரு தொடைமன்
தொடுத்தனன்; விடுத்ததொல் கணையை
வட்டவெஞ் சிலையில் பூட்டிய விறல்சேர்
வாளிஒன் றினில்அறுத் திடநால்-
எட்டுவார் கணையை அவன்விட இவன்ஓர்
ஏவினால் அறுத்துஎறிந் தனனே. 227

ஆறுபத் துடன் நால் கூர்ங்கணை தன்னை
அவன்விட இவன்ஓர்அம்பு அதனால்
கூறுபட் டிடவும் அறுத்தனன்; நூறு
கோலினை அவன்தொடுத் திடவே
சீறியற்று இரைந்து வருவதை இவன்ஓர்
திண்சிலீ முகத்தினால் அழித்தான்,
ஈறுபட்டு இரண்டு நூறுகோல் விடுக்க
இவன்ஒர்அம் பால்தகைத் தனனே. 228

மீண்டஞ்ஞூ றுடன்ஆ யிரம்பன்னா யிரங்கள்
மிகுசத ஆயிரம் இலக்கம்
கூண்டஆ யிரத்துஆ யிரந்தொகை எண்ணாக்
கோடிகோ டிகள்கொடுங் கணையை
மூண்டுவீ சியதுஓர் கோல்எலாம் இவன்ஓர்
மூச்சினில் ஒச்சினன் கோலால்;
காண்டம்மல் கிடவே உப்புமா மலைகள்
கரைவதை ஒத்தது அழிவில். 229

226 ப்ரதிக்கினை-சபதம். துன் அவை - நெருங்கிய சபை. இங்கே போர்க்களம்; குதை-அம்பின் வால் பகுதி. புங்கம் எனப்படும: நாண குதை - உம்மைத்தொகை.
227. கணை, ஆகுகம், கோல், தொடை, வாளி, ஏ, சிலீமுகம் அனைத்தும் அம்பு எனப் பொருள்படும் பரியாயப் பெயர்கள்.
228. தகைத்தனன் - தடுத்தான்.
229. காண்டம் - நீர்.

சங்கம்விந் தமோடுஅற் புதம்தொகை தொகையாய்ச்
சரம்விடுத்து இருவர்கள் தாமும்
மங்குல்போல் ஒத்து விடாதுபெய் மழைகள்
வருடம்எண் திசைபுவி வானம்
எங்கும்வைக் கணையால் அடைத்துஇளை யாமல்
இகலது செய்யும்ஏல் வையிலே
சிங்கிகக் கியபா ணங்கள்ஐம் பதினைச்
சீறவிட் டனன்எதி ரியின்மேல். 230

பற்பமா கினநல் கவசம்வில் கிரீடம்
பரிதுசம் தேர்;உருள் பொடிந்த
உற்பனத் துடனே நடத்துசா ரதியும்
ஊறுபட்டு உடைந்துஅயர்ந் திடமன்
மற்புயம் களமும் நெற்றிமார் பகமும்
மறக்கணை ஊடுதாக் கிடவே
நிற்பதற்று அயர்ந்து தெளிந்தபின் வடவை
நிகர்எனச் சினமது கொண்டே 231

(வேறு)

அதிர்ந்து சீறிஉ றுக்கி உக்கிர மான செந்தழ லாய்மென்மேல்
உதிர்ந்து வீழ்தரு கண்கள் இரண்டும்உ ருட்டி யேவிழி சுழலவே
கதுங்கள் மிஞ்சுற நோக்கி முக்கணை கால ரூலம்நி கர்த்திடப்
பதங்கள் அஞ்சிட மார்பு தேர்குறி பண்ணி வீசினன் மன்னர்கோன். 232

முப்பு ரம்தக னித்தி டச்செய்த முரி வாளியும் இதுதனக்கு
ஒப்பது அல்என முச்ச கங்களும் உலைய வீரன்உ டற்றிய
வெப்பு வாளிகள் நீறு பட்டிட வேள ரித்துஎம சூலம்நேர்
தப்பில் மார்புஉரு வப்பி ளந்துஎழு தலமும் ஊடுரு வியதரோ. 233

மார்பு அகழ்ந்துஅடர் வாளி பின்செல மதிய ழிந்துஉணர் வின்றியே
சார்பு தன்கர வில்ல தாய்மகி தலம திற்பெற ஊன்றியே

---

230. வருடம் - பெருங்கண்டம். இங்கே பாரத வருஷம்; வை - கூர்மையான; சிங்கி - நஞ்சு.

231. பற்பம்-பொடி.; உருள்-சக்கரம்; உற்பனத்துடன் - மிகச் சிறந்த முறையில்.

232. கதுங்கள்-கோபம்; பதங்கள் - இடங்கள். இது ஆகுபெயராக இடங்களில் வாழ்வாரை உணர்த்திற்று.

233. மூரி-வலிமை மிக்க; வாளி-இங்கு சிவபெருமானின் நெற்றிக்கண்ணில் தோன்றிய தீ;

பார்ப யங்கொள இரண்டு நாழிகை யளவு பாய்மதகு உந்திநேர்
கார்ப னிப்பதுள னக்கை வில்வலி கண்ட வீரியன் நின்றனன். 234

வீர வீரியன் நின்று நொந்திட வீம சேனன்மி கத்திகைத்து
ஆர வாரம்உ றச்சி னந்துஎன்அ னத்தம் மோசம்எ னப்பரி
வாரம் இப்பரி பற்றி டாவிதம் அத்ரி மீதுஇரு பத்ரம்என்று
ஆர மார்புறு பேர னுக்குஇவை அருளி ஓர்நிமி ஷத்திலே 235

வச்சி ரக்கதை யைக்கு லுக்கிவ ரைப்புயத்தில்இ ருத்தியே
உச்சி தக்கிரி விட்டுஅ ரிக்குஇணை ஒத்து மட்குஇடை தத்தியே
கர்ச்சி தத்தொடு சண்ட மாருத கண்டன் ஆகிய தண்டினான்
பச்சி மத்திசை யில்பு கப்படை பதறி ஓடின கதறியே 236

சின்ன பின்னம தாக வேதறி கெட்டுஇ டைந்துற ஓடியே
மன்னர் மன்னவன் வெந்நி லும்அவன் மகன்வெ ரிந்புற மாகவும்
துன்னி நின்றுந டுங்கி னார்கதை தோளி ருந்ததை சுழல்நிகர்
என்ன வேசுழ லச்சு ழற்றிஇ டுக்கி னான்இகல் அனிகமேல் 237

அந்த ஏல்வையி லேஅ யர்ந்தவன் அறிவு வந்துதெ ளிந்து நின்று
எந்தை நீஇவண் வந்த காரியம் ஏதுள னத்துதி பரவியே
இந்த வீரம டந்தை என்மனை என்று உரைத்துஇகல் எய்தினேன்;
வந்த என்மனை நின்ற னக்குஉறு மருகி மேல்அலர் நீதியோ 238

எந்த னால்இய லாத போதுஇவண் எய்தல் காரியம் அதனிடை
உந்தி நீர்வரல் ஞாயம் அல்லஉ மக்குள னச்சொன போதிலே
நொந்து நாணொடு தலைகு னிந்துபின் நோக்கி ஓதுவன் மைந்தநீ
அந்த மாகிய மூர்ச்சை கொண்டது கண்டுஅ டைந்தனன் யான்ஐயா.
239

---

234. மகிதலம் - நிலம்; உந்தி-நீர், மதகுபாய உந்தி என மாறுக, கா-மேகம்.

235. அனத்தம் - அழிவு, பரிவாரம் - (எமனாசுரனின்) படைகள், அதரி - மலை.

236. வரைப்புயம் - மலையைபோன்ற தோள், அரி - சிங்கம், மடகு இடை - நிலத்தில்; சண்டன் - வீரன், தண்டினான் - சதாயுதத்தை உடையவன், பச்சிமதிசை - மேற்கு.

237. வெந்நில் - பின்புறம, வெரிந் - முதுகு; அனிகம் - படை.

238. மனை - மனைவி; மருகி - மருமகள், அலர் - பழிசொல், எனக்குச் சிடைக்க வேண்டிய வெற்றி அவமதிப்புக்குள்ளாகலாமா என்பது குறிப்பு.

239. அந்தம் ஆகிய - முடிவு போன்ற, ஆக்கச் சொல் உவமைப்பொருட்டு.

என்ன வேசயம் அபச யங்களும் இருவர் பாரிசம் அல்லவோ?
நென்னல் மாயவன் துவரை புக்கதுஓர் நிருத னுக்குஇய லாமலோ?
பன்னும் ஐவர்கள் காடு புக்கது பணித்து சற்கிய லாமலோ?
பின்னம் வீடுமர் ஆவி மாய்ந்ததும் பேடி கைக்குஇய லாமலோ. 240

இந்த நேர்எம னாசு ரன்கையில் யான்அ யர்ந்தது தேவரீர்
வந்த காரியம் நன்று; நின்றிடில் வலிய கைபத றாதுஇரும்;
சிந்தல் நம்புத லாகி இப்பொழுது ஏகி டும்சிக ரியில்என்மெய்
நொந்து அயர்ந்திடில் இங்கு உளோரைநொ றுக்கும் என்றுநு வன்றுபின். 241

நில்ல டாஎம னாசு ராஎனை நிலைய ழிப்பதும் நீயடா
கொல்லு றேன்என வேகு ணத்தொனி செய்து வெஞ்சமர் குறுகவே
வல்ல வீரியன் ஆர்கொ லோஅவன் மக்குஉ றாதுத கைத்துஇனம்
வெல்ல வந்தனன் வீரி யத்தொடு விடம்அ னான்விட கீதனன் 242

அவனி மீதுஇவ னைப்ப டுத்திடில் அன்றி வீறுஅமை யான்எனை
நவமு டன்சர கரவில் லாபந யத்தொ டும்பல்தி றத்தொடும்
தவர்மு கத்தினில் எண்ணில் வாளிகள் தாரை மேகம்எ னச்சொரிந்து
எவரும் அஞ்சிட இருவ ரும்சமர் இகலி னார்மிகு புகழினார். 243

ஒத்த போரினில் விரைவு டன்பல ஒண்க் வீமுகம் ஏவியே
கொற்ற வன்பதம் முடிமெ யும்சுமை கொள்ள எய்சர பஞ்சரம்
உற்றி டும்படி ரோம ரோமம்எ லாம்உ றக்கணை செருமவே
சற்று மேநிரு வாக மேசெயல் அற்று உடல்தடு மாறினான். 244

இவனை விஞ்சவி டப்ப டாதுஇனி என்று, நான்முகன் உதவிய
தவவ ரத்துறு பார்அ தக்கணை தன்னை மந்த்ரஉ ருச்செய்து
புவிம டித்திட வில்லில் வைத்துஅது பூட்டி விட்டனன் மார்பின்நேர்
சவியு றப்பளி ரென்று மின்னிஅச் சணம்நு ழைந்தது உரத்திலே 245

---

240. பாரிசம் - பக்கம், நென்னல - நேறறு, சில காலதிறகு முன என்றபடி,துவரை - துவாரகை, நிருதன - அசுரன, சராசநதன, பணித்துசர் - பாமபுக் கொடி யனாகிய துரியோதனன், பேடி - சிகண்டி.

241. பதறாது இரும் - போரில சுடுபட வேண்டாம எனறவாறு, சிந்தல் நமபுதலாகி - நான் எதிரியை அழிபபேன் என்ற நமபிக்கையுடன், சிகரி - மலை, நுவன்று - சொலலி

242 வலலவீரியன - எமனாசுரன, மக்குறாது - அழியாமல், நகைதது - தடுதது

243 அவனி - நிலம, வீறு - வீரம, அமையான - குன்றமாடடான, தவர் - வில

244 செருமுதல - நெருகுகுதல்

245 பார் அதக்கணை - உலகையே அழிக்கவலல அமபு, மடி த்திட - தகுந்த உபாயததால வெலல, சவியுற - வலினமயுடன், அசசணம - அகசுணம, உரம - மாரபு

அகலம் உற்றுஅப்பு றத்தில் ஏகிய அப்பி லேமதி தப்பியே
மகித லத்தினில் மெய்ம றந்துஉறு மரண மூர்ச்சைய தாகியே
முகம கி . . . வேவி ழுந்தனன்; முந்து சேனைய டங்கலும்
பகர்ம கிழ்ச்சியின் வீர கர்ச்சனை பண்ணி வவ்வுற நண்ணினார். 246

இன்று இழந்தனம் மகனை என்றுஇரு கண்க ளும்தழல் பொங்கவே
நின்று வெங்கதை யைக்கு லுக்கிநி றைந்த தேர்கரி புரவிஆள்
குன்ற வான்இடி வீழ மாய்ந்துள கோள ராவினம் ஒத்திட
அன்று நின்றஇ டங்கள் தோறும்அ டித்த டித்துநொ றுக்கினான். 247

யானை நூறுஇர தங்கள் நூறுஇரு நூறுஅ டற்பரி ஆயிரம்
சேனை ஓர்அடி யினில்ந சுங்கின; தேர்களோ தவி டாயின;
வானெ லாம்சுழல் சண்ட மாருதம் வந்து மொய்த்தது போலவே
தான டித்திடு கதையி (னா)ல்(வளி) தான்எ ழுந்தது திசையெலாம் 248

இடியின் மேல்இடி எண்ணில் பற்பல இடிகள் பூமியில் வீழ்தல்போல்
அடியின் மேல்அடி யாய்மென் மேலும்அ டித்த டித்துநொ றுக்கினான்;
படியி லேசது ரங்க சேனைகள் பலதி சாமுகம் எங்கணும்
உடல்ந சுங்கிய; தல்லம் போல்உளை கொண்டி ருந்ததுஅவ் வொண்களம்
249
விரவு சேனைகள் தட்ட ழிந்திட வேக தாயுதன் மொத்தலும்
கருது கண்கள்சி வந்து உறுத்தொரு கதையு டன்சுக லீலனும்
இரதம் விட்டுநி லத்தில் இழிந்துஇடி யேறு போலஎ திர்த்தனன்
கிரியு டன்கிரி கரியு டன்கரி கிளர்த ரும்சமர் ஒத்ததே. 250

தத்தி வாதுபி டித்தல் வல்இடி தான்எ னத்தடி தடியொடு
மொத்து வார்கள்பின் முன்பின் ஓடுவர் முடுகு வார்அமர் கடுகுவார்
சுற்று வார்கிறு கிறென எண்டிசை சூறை மாருதம் ஒக்கவே
அத்த மீதுறு தண்டுள றிந்துஅதை அந்த ரத்திடை பற்றுவார். 251

---

246. அகலம் - மார்பு, மகிதலம் - நிலம்,
247. கோளரா - (பகைவரை வெல்லும) வலிமை மிக்க பாம்பு;
248. சண்ட மாருதம் - புயல், வளி - காற்று
249. படி - நிலம, திசாமுகம - திக்குகள், தல்லம - நீர்கழுநீர்; உளை - சேறு.
250. சுதாயுதன் - வீமன், கிரி - மலை, கரி - யானை, சமர் - போர்,
251. வாது - சண்டை, தடி - சுதாயுதம், தண்டு, அத்தம் - கை.

மீறி மீறிஅ டிப்பர் அதட்டுவர் வீசு வார்வலி பேசுவார்
மாறி மாறிஅ டித்த டித்திடம் வலமும் வீசுவர் விலகுவார்
சீறு வார்உரும் ஏறு போல்எதிர் திக்கி லாதுபு டைப்பர்;கல்
நீறு பட்டிட வேஅ டிப்பர்கள் நெறுநெ றென்றுக டிப்பர்பல். 252

அண்ட கோளகை முகடு விண்டிட ஆர வாரம தாகவே
சண்ட மாருதம் மண்ட வச்சிர தண்ட மோடெதிர் தண்டமும்
கொண்டு தண்டஅ டிப்பர் கோலுவர் குறுகி வார்அமர் சறுகுவார்
மண்டை கண்டம்இ லக்கு வைத்துஅடி வைப்பர் தட்டுவர் கிட்டுவார்
253

அடியின் மேலடி வைப்பர் ஓர்முறை யதனில் ஆறடி ஏழடி
வெடிஅய நேர்பட மொத்து வார்கண் விழிப்பி னோடெதிர் அதட்டுவார்
தொடைக ளோடுஇடை, முடி,வி லா, அடி, தோள்,க ரங்களும் மத்தகம்
கடித டத்தினொடு உதரம் நெஞ்சுஇவை கதைஇ லக்குஎன அடிப்பரே.
254

அவையல் அப்பெயர் பகர்வர் மொத்துவர் அடிவி லக்குவர் தட்டுவார்
கவட முற்றுஇடை படும்இ லக்குஅடி கருதும் மத்தகம் இடமுறும்;
குவடுள னத்திகழ் புயஇ லக்குஅடி கொடுமு டித்தலை யதில்உறும்;
செவிஇ லக்குஉறும் அடிஅ கட்டிடை செறிய மொத்துவர் தத்துவார்.
255

ஒருவ ருக்கொரு வர்ச லித்திடாது உடன்ஏ றுரத்திய கதைஅடி
இருவர் மெய்த்தலம் அவய வத்திடம் எங்கு மேஅடி தங்கலால்
பொருது வித்தகர் எற்று மொந்தைகள் போல்நொ றுங்கின சாலம்எய்
துறஈ ரக்கதை விட்டு மல்பொரு துதல்க ருத்தொடுஇ ணங்கினார். 256

தங்கை வாகுவின் மொத்தி யேதொடை தட்டி மீசைதி ருத்தியே
செங்கை அங்குலி யைக்கு வித்துஇரு சிகர திண்புயம் மத்தகம்
அங்கம் நெஞ்சுசி ரம்க போலமொடு அகடு கந்தரம் உரன்விலா
எங்கும் வெங்குரு திகள்ப ரந்திட எற்றி னோடெதிர் குத்துவார் 257

252.உரும்ஏறு - இடி

253.மண்ட - நெருங்குக, வச்சிர தண்டம - ஊறுபடாத தண்டு, கண்டம - சுழுத்து.

254.கபுதடம் -ஆசனம, சகனம;கதை இலக்கு - கதாயுதத்தின் குறி

255 அவையல அப்பெயர் - அவையல் கிளவி, கெடவார்த்தைகள்; கவட முறறு - வஞ்சித்து, குவடு - மலை, அகடு - வயிறு.

256 உரத்திய - வலிமையோடு அடித்த, வித்தகர் பொருது எற்ற என இயையும்;மொந்தை - மண்பாததிரம, சாலம் எய்துற - விகற்பமாக, மாறறமாக, கரக்கதை - கைகளில பிடிக்கும் க்தாயுதம

257. அங்குலி-விரல்கள், சுபோலம் - கன்னம், அகடு-வயிறு, கந்தரம் - சுழுத்து, உரன் - மார்பு.

தகரை யொத்தெதிர் முட்டு வார்கழல் தத்துவார் மிக மொத்துவார்
முகடு முட்டள ழுந்து பூமகள் முதுகி னிற்குதி முயலுவார்
உகிர்இ கல்பெரு சொட்டை மெய்ப்புதை வுறஅ ழுத்திஉ றுக்குவார்
சிகர மத்தகம் நெரித ரக்கர சிரம மற்றொழில் புரிகுவார். 258

சலம துற்றுளழு கயலை ஒத்துயர் சலத ரத்திடம் அணுகுவார்
வலிய கற்புயம் மருமம் மத்தகம் அறஉ தைத்தமர் மருவுவார்
உலகு திக்கயம் மலைய, வெற்புகள் உடைய, அப்திகள் அளறெழக்
கலக முற்றுஇரு வரும்அ டிக்கடி கழலி னிற்குதி பயிலுவார். 259

கால்க ளோடிரு கால்பி ணைத்திரு கைக ளோடிரு கைத்தொடர்
போலு ரங்கொடு லாட சங்கிலி பூட்டை ஒத்தெகிர் பூட்டியே
மேலு ரங்கொடு பூமி மீதுவி ழுந்து வண்சக டங்களோர்
கால்ம கன்சுக லீலன் வன்பொடு கடக டென்றினிது உருளுவார் 260

திரண்டு உருண்டுஅடர் மலைஇ ரண்டுஅமர் சேர்ந்து இணங்கிய திறமெனப்
புரண்டு உருண்டனர் முன்புஇ றந்துறு பூவில் ஆர்பிண மலையின்மேல்
முரண்பி றங்கிய குழவி அம்மியில் மிளகுஅ ரைத்திடல் ஒத்தது;இவ்
இரண்டு பேர்களும் அந்நி லங்களில் (ஏர்செ லுத்தலும்) ஒத்தவே 261

இருவர் கைகளு மேஅ யர்ந்தன; இருவர் மெய்கள்த ளர்ந்தன;
இருவர் சென்னிக ளும்பி ளந்தன, இருவர் அங்கமும் முறிந்தன;
இருவர் என்புகள் பலமு றிந்தன, இருவர் குருதிக லந்தன ;
இருவர் கால்கரம் இட்ட பூட்டொடு மெய்ய யர்ந்துகி டந்தனர். 262

தங்கள் நன்னினைவு அற்று மூர்ச்சைய தாக வொண்கள மதிலுறத்
துங்க மன்விட கீத னன்கன சோப மானது தீர்ந்தபின்
எங்கு வீமன்ள னக்க ணால்உயர் எண்டி சாமுகம் நோக்கினான்
சிங்க கேதனன் எங்கும் இல்லைஇது என்கொல் என்றகம் எண்ணினான்
263

---

258. தகர் - ஆட்டுக்கடா, பூமகள் - நிலம, உகிர் - கை நகத்தையும், சொட்டை - சொட்டை எனனும படைக்கலனையும், சுரசிரம - கைகளால் பாடுபட்டுச செய்யக்கூடிய.

259. சலதரம - மேகம், மருமம - மார்பு, அப்தி - கடல், அளறு - சேறு.

260. காலமகன் - வாயு குமாரன், பீமன்

261 பூவில - நிலத்தில, இறந்தறு பிணமலை, பூவில ஆர பிணமலை என்க

265. பூட்டு - பிணைப்பு

263 துங்கமன் - உயர்ந்தவன, சோபம - மயக்கம, சிங்க கேதனன் - சிங்கக் கொடியை உடையவன், வீமன்

வரம னன்சுதன் இங்கு நின்றுள வனையு மேஎதிர் காண்கிலோம்
முரணு றுஞ்சம ரதனில் நாம்மிகு மூர்ச்சை யானது கண்டுதான்
இரண பூமியில் வந்து நால்வகை ஈண்ட சேனைநொ றுக்கநேர்
புரவ லன்மகன் வந்துஅ ருஞ்சமர் புரிந்துஅ யர்ந்தது போலுமாம்
264

எதுவும் இங்குஇவ னைச்செ குத்தபின் னேஅ றிந்திடு வோம்என
உதிரம் மெய்யுகு வதுது டைத்துஉலகு உண்ட நாதனை உன்னியே
சிதம்எ னச்சொரி விற்கு ணத்தொனி செய்து மால்மழு ராமன்முன்
உதவும் அச்சதுர் பார தச்சரம் ஒன்று மந்திர உருச்செய்தான். 265

உருமு டித்துவில் வைத்துஇ ழுத்துஉரம் உருவ விட்டனன், வடவைநேர்
எரிப ரப்பிஎ ழுந்து மின்னிஇ டித்து உரத்துஎதிர் ஏறியே
வருச ரத்தொனி செவிஅ டைத்திட மதிம யக்கம்உ டன்தெளிந்து
அரசன் வைக்கணை பற்பல் கோடிஅ தைத்த கர்த்திட விட்டனன். 266

விட்ட வெங்கணை யாவும் நீறெழ வேஎ ரித்துவெவ் வடவைவாய்
பட்ட கூளம்நி கர்க்க வெண்துகள் பற்ப மிட்டது பளீரென
அட்ட திக்கும்வெ ருக்கொ ளச்செலும் அத்தி ரத்துஒளி யால்விழி
கெட்டி யாகஇ றுக்கி மூடினன் கிருபை மன்னவன் விறுமையாய். 267

மூடு கண்ணைவி ழிக்கும் முன்உரத் துட்பு குந்துமு கிற்குழாம்
ஓடும் மண்டலம் மட்டும் ஏறஉ யர்த்தி மீளம லர்த்தியே
சாடி யேமுது கைப்பி எந்துஎழு தலமும் ஊடுரு விப்பினே
நீடும் வாரியில் மூழ்கி யேஅரை நிமிஷம் வந்தது தூணியில் 268

மன்னர் மன்னவன் வீழ நால்வகை வாரி யாகிய சேனைகள்
சின்ன பின்னம தாக வேதறி கெட்ட லைந்தன திசையெலாம்;
இன்னது இன்னது பாதை காடுஎன வேஅ றிந்திலர் ஒருவர்பின்
இன்னொ ருத்தர்உ றாது யோசனை பெரிது தூரம்அ கன்றனர் 269

(270 ஆம் பாடல் சுவடியில் எழுதப்படவில்லை)

---

264. வரமனன் சுதன் - சிறந்த அரச குமாரன், சுகலீயன், இரண பூமி - போர்க்களம், ஈண்ட - சேர்ந்த.

265. சிதம எனச் - விண்மீன்களைப் போன்று, குணதொனி - நாணஒலி, மழு ராமன் - பரசுராமன். 266. வை கணை - கூரிய அம்பு, அதை - பாரதச் சரத்தை

267. கூளம் - குப்பை, வெருக்கொள - அஞ்சுமாறு, விறுமை - பிரமை.

268 வாரி - கடல், கணை (267) தூணியில வந்தது என முடியும்.

உதவி சார்புஒரு வரும்இ லாதுஉயர் உலகு காவலன் அருகிலே
குதைவில் வீரியன் விரைவி னோடுஎதிர் குறுகி அங்குஅவன் இரதமேல்
சுதைப னீர்கொடு அரசு மெய்உகு சோரி போர்வைகொ டேதுடைத்து
இதம தாகிய குடர்பி துங்கிய தைவ யிற்றிடை தள்ளியே 271

என்பொ டிந்தவை யாவும் நேர்செய்து இயல்ம ருந்துப னீர்தெளித்து
அன்பின் நீடிய துகில்கொ டேஉடல் தைவந் திட்டபின் ஆடையால்
இன்ப மாய்மடி வைத்து வீசிமெய் எங்கும் நேயப னீரினைத்
துன்பொ ழிந்திட வேதெ ளித்துஅதி சோப தாபம்அ கற்றினான் 272

சோப தாபமும் மூர்ச்சை போய்மதி சுரணை வந்துதெ ளிந்தபின்
தாப ரத்துயிர் வந்தி லங்குதல் மான கணைவி ழித்தனன்
சாப மால்விட கீத னன்மடி தனில்இ ருந்தனம் யாம்எனப்
பூபன் அன்பொடு மார்பி னோடுஎதிர் புல்லி நன்மொழி சொல்லியே
273

மதலை நீதிறல் அன்பு சம்ப்ரமம் மதியின் மிக்குள பெருமையால்
துதிசெய் வேன்உனது அடிமை யான்ஒளிர் சுடர்த ருங்கும ரன்சுதா
கதழ்வுஅ கற்றுஎன உபச ரித்துஇரு கைகு வித்தனன்; இவனுமே
அதிக முற்றுள வயதன் என்றுஅலர் அனைய செங்கைகு வித்தனன்.
274

(கலித்துறை)

நன்னெறி மேவிய எமனா சூரா நரபாலா
மன்னவர் மன்னவன் நீமுதி யோன்நீ மதியோன்நீ
சின்னவன் நான்நீ எனைஉப சாரம் செயலாமோ
என்னையர் பால்ஆ ராதனை செய்குவது இயல்பாமே 275

அய்யா தருமா திபனாம் எனையாள் அதியோகன்
பொய்யா மொழியான் எய்யா விறலான் பொறையாளன்
துய்யான் நிதிசேர் கையான் எவரும் துதிபாதன்
வையார் அசியான் தொய்யா நெறிசேர் மனுநூலான். 276

---

271. சுதை - மருந்து . சோரி - உதிரம்

272. தைவந்திட்டபின் - தடவிய பிறகு. இங்கு துடைத்தலைச் சுட்டியது .

273 தாபரம - ஜடபபொருள். மான - போல, சாப மால - விலகிதிதையில திருமால (இராமர்) போன்றவன்

274. சுடர - தூரியன். குமரன் - நன்னன்; சுதன - விட நீதனன். கதழ்வு - பதைமை. வயதன் - வயதினன். அலர் - தாமரை

275 நரபாலன் - அரசன். மதியோன் - அறிவாளி; என்ஐயர் - என்னிலும் பெரியோர். ஆராதனை - உபசாரம். .

(அறுசீர் ஆசிரிய விருத்தம்)

அஞ்சலி செய்வது அந்த அறமகன் தனக்கே அல்லால்
பஞ்சகிஞ் சனுக்கோ தாழ்ச்சி பண்ணுவது? அண்ண லேநீ
நெஞ்சுஇளை யாத வீரன்; நினக்குஎதிர் யானோ? மாயன்
தஞ்சமாம் துணையும்; தருமன் தருமமும் செயித்தது அய்யா 277

என, "விறல் முருகன் அன்னாய்! இகலும்வில் வலிகா முற்றே
எனதுகை குவித்தது" என்ன, "யான்என என்வில் என்ன;
முனிவலி அதனால் இந்த மூவுலகு அனைத்தும் வென்ற
தனஞ்சயன் பாத தூளி தனக்குநான் ஒப்பா வேனோ 278

என்றலும் தரும ராசன் இருந்திடும் திசையை நோக்கி,
நின்றுகை குவித்து, "வீரா நினையலாது உறவுஆர் இப்போ?
கொன்றனை; மீண்டும் சீவன் கொடுத்தனை; எடுத்துத் தாங்கி
நன்றிநீ செய்தாய்; ஈதுஎந் நாளும்நான் மறப்பது உண்டோ 278

எப்பொருள் அனைத்தும் சேயும் இகல்படை அமைச்சும் வாழ்வும்
கைப்படை மற்றும் வந்த இடுக்கணில் காண்கி லேனே;
அப்பனே உனைப்போல் வந்த ஆபத்தில் காத்தார் உண்டோ?
செப்பல்என்? நீசெய் நன்றி சிந்தையில் மறந்தி டேனே. 289

இருபது சகத்தி ரம்தேர் இபமுமோர் இலட்சம் கொக்கு
ஒருபது லட்சம் அல்லால் ஒன்பதுஅக் குரோணி சேனை
தருகுவன் கொள்வாய் என்னத் தருமற்குஎன்று உதவும் என்றான்;
அரசனும் மகிழ்ந்துஅப் போதே அறன்மகன் தனக்குஎன்று ஈந்தான் 281

இருவரும் கரங்கள் கோத்து(ஆங்கு) ஏகலும் களத்தில் ஓர்பால்
பரிசனன் சுதனும் வல்ல பார்த்திபன் மகனு மாகப்
பொருசமர் புரிந்து கைகாற் பூட்டொடு மூர்ச்சித்து அங்கண்
இருவரை ஒன்றாய் ஒட்டி இருத்தல்போல் கிடத்தல் கண்டார் 282

---

276. எய்யா விறலான் - குறையாத வலிமையை உடையவன், பொறை - பொறுமை, துயயான் - தூயவன், வை ஆர் அசி - கூரிய படைக்கலம், தொயயா - தளராத.
277 அறமகன் - தருமன், பஞ்ச கிஞ்சன் - வறியவன் (பலசொல லொருபொருள்).
278 முனி வலி - விலலாணமை. 280. இடுக்கண - அபாயம
281. சகத்திரம் - ஆயிரம், இபம - யானை, தொகுகு - குதிரை.
285, பரிசனன் சுதன் - வாயு குமாரன், வீமன், பாரதிபன் - அரசன், எமனாகுரன், மகன் - சுகலீவன், இரு வரை - இரண்டு மலைகள்

கண்டலும் வீமன் தன்னைக் காவலன் மடிமேற் கொண்டான்;
மண்டல பதிசேய் தன்னை மற்றவன் மடிமேற் கொண்டான்;
தண்டவல் லமையோர் கட்குச் சயித்திய உபசா ரங்கள்
பண்டிதம் செய்து பன்னீர் பனித்துஅவர் மூர்ச்சை தீர்த்தார் 283

அயர்ச்சிதீர்ந்து உயிர்ப்பு வந்தே அவரவர் விழித்துப் பார்த்து
வியப்புடன் மதியால் ஓர்ந்து வினைஒழிந்து உறவுற் றார்என்று
அயிர்த்தெழும் வீமன் தன்னை அரசனை உபச ரித்துச்
'செயிர்த்திநான் அபசா ரங்கள் செய்தவை பொறுப்பாய்' என்றான் 284

பெரியன்நீ சிறியன் செய்த பிழையினைப் பொறுக்க வேண்டும்;
தருமன்ஓர் வேள்விக் கேற்ற சயிந்தவம் தேடுங் காலைப்
பரியதுஎவ் விடத்தும் இல்லை பார்த்திப உன்பா லன்றி
உரியதோர் புரவிக் காக உன்னிடத்து அடைந்தது என்றார் 285

நன்றுஒரு புரவிக் காக நடுங்குஅமர் விளைப்பது என்கொல்?
தொன்றுஅறன் மகன்பேர் சொன்ன அக்கணம் அருள்செய் வேனே;
இன்றுஎனது உலகும் வாழ்வும் எனதுஅரசு உரிமை யாவும்
மன்றல்அம் குவளைத் தாம மன்னனுக்கு அடிமை என்றான் 286

முன்னனுக்கு அடிமை என்ற முதல்வனை உபச ரித்தான்
மன்னவன் புதல்வன் வந்து மாருதி பாதம் போற்றத்
தன்னக லத்தில் சேர்த்துத் தயவுடன் உபச ரித்தான்;
கன்னன்மைந் தனையும் மார்பில் கட்டியே உபச ரித்தான். 287

ஒருவருக்கு ஒருவர் மென்மேல் உபசரித்து அதன்பின் னாலே
தெறுவரை அனைய வீம சேனனை அரசன் நோக்கிப்
"பொருவில்என் நகரி தன்னில் புரிந்துநீ வருக" என்றான்;
நரபதி வருந்திக் கூற நலதுஎன வீமன் சொன்னான் 288

---

283. மண்டலபதி - எமனாசுரன், தணடம - சுதாயுதம், பண்டிதம - மருதுதுவம, இங்கே முதலுதவி, பனித்து - தெளிதது.

284. உயிர்ப்பு - உணர்வு; வினை - இங்கே போர, செயிர்தத - கோபம்கொணட.

285. சயிந்தவம - குதிரை, பரி, புரவி.

286 தொன்று - பழமையான, மன்றல் - நறுமணம், அம்-அழகு; தாமம - மாலை; மன்னன் - தருமன்.

287. முன்னன் - தமையன், முதல்வன் - எமனாசுரன், அகலம் - மார்பு

288. தெறுவரை - நிலைதத மலை, வினைததொகை, புரிந்து-விரும்பி, நரபதி - எமனாசுரன்.

சூரனாம் எமனா சூர னுடன்கதா யுதனும் தோற்றா
ஈரமுற் றேநட் பிக்கும் ஏல்வையில் மேற்கில் பானு
தீரமாய் அஸ்த மானம் செய்தனன்; அனந்த கோடி
நேரிய பந்தம் கொண்டே நிலம்எலாம் விளங்கச் செய்தார். 289

ஒள்ளிய சந்த்ர சோதி பகல்வத்தி யொடுமத் தாப்பு
தெள்ளுதீ வட்டி எந்தத் திசைகளும் விளங்க லாலே
தள்ளியது இருளைச் சீறி; தலம்அவண் பகலை ஒத்த;
வெள்ளவெம் படைகள் எல்லாம் விரவியே பரவி மொய்த்தார் 290

மாருதி கிரிசார் மேக வண்ணனை வருக என்றான்,
தேரொடும் புரவி யோடும் திகிரிவிட்டு அவனும் வந்தான்;
வீரியன் தனக்குஓர் தேரும் வீமசே னனக்குஓர் தேரும்
வாரிநேர் மாயை மேக வண்ணற்குஓர் தேரும் ஈந்தான் 291

விரவிய வீம சேனன் விடகீதனன் மேக வண்ணன்
உரமுறும் எமனா சூரன் சுகலீலன் உக்ர தந்தன்
சுரதன்சே னாவிக் கிரமன் புட்கரன் சுவேதன் முன்பின்
இரதமீ தேறி யேபத் திரகிரி நகரில் எய்தார். 292

சேனைவா ரிதிகள் சூழத் திரைஎனப் பஞ்ச வாத்யம்
மானபே ரொலிமு ழங்க வாரிகள் தோறும் வான
மீனெனக் கும்பம் வைத்தே வியந்துதோ ரணங்கள் மல்கும்
தேனலர்ப் பந்தர் ஓங்கும் தெருவெலாம் கடந்து சென்றார். 293

நடனசங் கீதத் தோடும் நடந்துவெம் புரிசை சூழ்ந்த
திடவெளி நகரும் நீந்திச் சிகரகோ புரஞ்சார் இஞ்சி
அடைதரு வாயில் ஏழும் அடைந்துஅவை கடந்துஉள் ளேகி
வடிவின்ஆ சாரம் நீங்கி மணிக்கொலு மாடம் புக்கார். 294

அந்தநேர் எமனா சூரன் அரியைவிட்டு இழிந்து வீமன்
சுந்தரக் கரத்தைப் பற்றிச் சுடர்நவ ரத்தி னாதி

---

289 தோற்றா - தோன்றிய. ஈரம - அன்பு. ஏல்வை - வேளை; பானு - சூரியன்; பந்தம் - தீவடடி.
291. திகிரி - மலை.
293. திரை - கடல்; வாரி - வாயிற் கதவு. தேன் அலா - தேன் நிறைந்த மலர்.
294. புரிசை - மதில். இஞ்சி - மதில். ஆசாரம் - தலைவாசல.

உந்துசிங் காத னத்தில் உயரவைத் தனன்;கீ ழாக
வந்திடும் இருவர் தன்னை வலமிட மாக வைத்தான் 295

மன்னனும் மகனு மாக மாருதிக்கு உபச ரித்தே
உன்னிரு பாலும் நின்று உபயசா மரைகள் வீசி
என்னையோ தேவ ரீர்இங்கு எண்ணிய கருமம் என்றான்
பின்னிவர் வந்த சேதி சகலமும் பேசி விட்டார். 296

நன்றுநீர் வந்த சேதி நான்முனே அறிந்தே னாகில்
நின்றுபோர் இகலேன்; வந்த நிமிடமே புரவி ஈவேன்;
இன்றுஅறி யாமல் செய்த அபசாரம் இனிப்பொ றுத்துஉன்
முன்திருப் பதத்தில் என்னை முன்விட வேண்டும் அய்யா 297

கருணையங் கடலாம் காவற் கடவுளை நரனைக் கண்டு
தருமபூ பாலன் கஞ்சத் தாளையும் பணிந்துஓர் ஆண்டும்
புரவியின் பின்னே சென்று புண்ணியன் வேள்வி முற்றி
நரபதி அனுப்பும் பின்புஎன் நகரிவந் தடைவன் ஏன்றான் 298

மன்னவன் சொன்ன மாற்றம் மாருதிக்கு அமுத சாரம்
கன்னமீது உற்ற வாறாய்க் கணத்துஉளக் களிப்பும் பொங்கி,
"நின்னிகர் பெரியோர் உண்டோ? நிலமிசை நீர்தாம் வந்தால்
அன்னதோர் அசுவ மேத யாகமே முடிந்தது" என்றான். 299

இவ்விதம் வீமன் சொல்ல இதயமே குளிர்ச்சி பொங்கிச்
செவ்விய போச னங்கள் சிறக்கமு வருக்கும் ஈந்து
நவ்விமான் மதம்பீ தம்கொள் நற்கள பங்கள் பூசி
எவ்வம்இ லாதுஅ டைக்காய் இலைகருப் பூரம் ஈந்தான் 300

---

295. அந்தநேர் - அப்போது, அரி - தேர்.
296. உபய சாமரை - இரட்டைக் கவரி
297. உன் முன - உன்னுடைய தமையன்.
298 காவற் கடவுள் - திருமால், கண்ணன்; நரன் - அருச்சுனன், நரபதி - மன்னன், இங்கே தருமன்.
299. கன்னம் - காது.
300. நவ்வி - அழகிய; மான்மதம் - கத்தூரி; பீதம் - சந்தனம்; களபம் - வாசனைச் சாந்து; எவ்வம் - குறை, அடைக்காய - பாக்கு; கருப்பூரம் - பச்சைக் கர்பூரம்

ஆடையா பரணம் மிக்கா னவையெலாம் இனித ளித்து
வாடைமா மலர்பொன் ரத்னம் மாரிபோல் மூன்றும் முக்கால்
சோடபி ஷேக மாகச் சொரிந்துஉயர் திட்டி மாற்றிப்
பீடைதீர்ந் திடவே வாரிப் பிரம்புஎடுத்து எறிந்து வாழ்த்தி 301

மனமது மகிழ்ச்சி யாக வாரண மீதில் ஏற்றித்
தனதனின் நகரின் மிக்காய் தன்நகர் அலங்க ரித்து
வினவும்மூ வாற தான மேளவாச் சியங்க ளோடும்
கனநகர் வலமாய் வந்து கனமணி மாடம் சேர்ந்து 302

பஞ்சராத் திரியாய் அந்தப் பதியினில் சுகவை போகம்
மிஞ்சவே இருந்தார் மிக்க வியனகர் தனிலே" என்று
அஞ்சன மேசெ யற்கு வைசம்பா யனரும் ஓத
வஞ்சகம் இல்லா மன்னன் மனமகிழ்ந்து உவகை கூர்ந்தான். 303

எமனாசுரன் போர்ச் சருக்கம் முற்றும்

ஆகச்சருக்கம் 4க்கு விருத்தம் 421

---

301. வாடை - நறுமணம்; சோடம - மகிழ்ச்சி, திட்டி மாற்றி - சுண்ணோறு கழித்து,பீடை - திருட்டி தோடம், வாரிப் பிரம்பு - உட்டுளையுடைய பிரப்பங்கோல்.

302. வாரணம் - யானை, தனதன் - குபேரன், அவன் நகர் அளகாபுரி.

303. பஞ்ச ராத்திரி - ஐந்து இரவுகள்

5. அனுசாளுவன் போர்ச் சருக்கம்

(கலிவிருத்தம்)

மலரிற் கமழ்வா சம்எனப் பல்உயிர்
உலகங் கள்அனைத் துநிறைந்து உணர்வுஈந்து
அலைவில் தன்இடத் தில்அடக் கவலோன்
நலமுற் றிடுநா மம்நிதம் புகல்வாம் 1

"பரிகொண்டு எமனா சுரன்பால் உறவாய்
இரவுஐந்து இருந்த பின்என் வரலாறு
உரை"என் றுமகா முனியோடு உரவன்
விரைவின் வினாவ டவிளம் புவனே 2

வீமன் விடகீ தனன்மே கவணன்
மாமன் எமனா சுரமன் னவன்(நேர்)
நீமுன் புநிகழ்த் தியவாறு எமதூர்
பூமன் கண்நடப் பதுபுத் தியதே 3

எனவே பதினா யிரம்யா னையின்மேற்
புனைபூண் துகில்பொன் பலரத் தினமும்
நனிஈர் பதினா யிரவா ரணமும்
கனகோ டிகதித் தவயப் பரியும் 4

ஈர்ஐம் பதினா யிரம்ஏர் இரதம்
ஓர்ஐம் பதுஅக்ரோ ணியுறு தளமும்
சீர்அன் பொடுமுன்பு உரைசெப் பியபோல்
நாரின் தருமற்கு எனநல் கினனே 5

தளநா யகன்உக் கிரதந் தனையே
வளமா நகருக்கு உறுமன் னவனா

---

1. நிறைந்து - அநதர்யாமியாக நின்று. அலைவில் - ஏறறத்தாழ்வுகளறற பேரின்பமயமாகிய
2. முனி - வைசம்பாயனர். உரவோன் - சனமேசயன்.
3. மா மன் - பெரிய அரசனாகிய; பூமன்கண் - நிலத்தின் அரசரிடத்து. தருமன் பால்
4. வாரணம் - யானை; கழித்த - சிறந்த. வயப்பரி - வலிமைமிக்க குதிரை.
5. ஏர் - அழகிய. தளம் - படை. நற்குணி - அன்புடன்.

இளையார் தனநா யகர்மூ வ்ருடன்
உளமொத்து இருமென்று உணர்த்தி அதன்பின் 6

திறல்சேர் மகன்மந் திரிதன் தேவி
பிறபார் பதியும் பெருமா னுடனே
அறிவோடு ஏழுஅக் ரோணித் தளமும்
சறுகாது உயர்தக் கபெரும் பொருளும் 7

இதுதே வைஇதுஇல் லைஎனப் பகரா-
விதம்ஆ னதெலாம் மிகுசே கரமுற்று
அதுசேர் பொதியா னையின்வைத்து உடனே
பதிவிட் டெழுந்தான் பயணத் துடனே. 8

கருவித் திரள்தோல் தொளைகஞ் சம்நரம்பு
ஒருமித்து இரைவுற் றனபா டலுடன்;
திரைமிக்கு இடியின் திறம்மே வஒலி
அரசர்க்கு அரசுஅன் பின்;நடந் தனனே 9

முன்ஏ கினர்மூ வருடன் தளமும்
பின்ஏ கினமன் னர்பெருந் தளமும்
பொன்ஆர் புரிசைப் புகுவா யிலிருந்து
இன்ஆர் கலிபொங் கிஎழுந் ததுஎனா 10

கரிவீ றிடல்கற் கிகள்வீ றிடலும்
அரிஓ தைஉள்ஆர்ப் பரித்த தொனியும்
மருவும் கொடியா டையின்வன் தொனியும்
அரிதங் கள்எலாம் செவிடார்த் தனவே. 11

திக்குக் கிரியும் கயமும் செகமும்
உக்கிப் பின்நடுங் கஉழன், றுகடு

---

6. தன நாயகன் - சேனாபதி.
7. சறுகாது - வழுவாமல், மதிப்புக் குறையாமல்.
8. சேசுரமுற்று - தொகுத்து; பொதி - மூடடை
9. கருவித்திரள் - இசைக்கருவித் தொகுதி: சுஞ்சம் - வெண்கலம்; இரைவுற்றன - பேரொலி எழுப்பின; திரை - கடல், ஒலி திரை மிக்கு இடியின் திறம் மேவ என்க; அரசர்க்கு அரசு - பேரரசனாகிய எமனாகரன்.
10. மூவர் - வீமன், விடகீதனன், மேகவண்ணன், ஆர்கலி - கடல்.
11. கரி - யானை, சுற்கி - குதிரை; அரி - தேர்; ஓதை - ஒலி, அரிதம் - திசை.

கக்கத் திறல்கட் செவிமிக் குவிறல்
தக்கத் திகழ்தா னைகள்சென் றனவே. 12

(வேறு)

இத்தக வாகவே இறையும் வீமனும்
மத்தக மாமுதல் வாவு சேனையும்
மத்தியஞ் ஞாறுயோ சனையும் தான்கழித்து
அத்தின புரிநகர்க்கு அருக தாகினார். 13

இருமைஅத் தினபுரிக்கு இரண்டு யோசனை
மருவிடும் உத்தியா வனத்தின் வேள்வியின்
புரவியின் சுந்தரம் பொலிய வைத்துமே
பரவிஇங்கு இருந்திடும் பலரும் என்றனன் 14

கன்னன்மைந் தனைக்கடோர்க் கயன்கு மாரனை
உன்னியின் அருகில்அக் ரோணி ஒன்பதும்
மன்னிய சேனையும் கோலி வைத்ததின்
பின்அர சன்தளம் பேணிச் சூழவே. 15

இருமிவண் புண்ணிய னிடத்தில் எய்தியே
உரவிய வர்த்தமா னங்கள் ஓதியே
விரைவின்எய் துவன்என வீமன் ஏகியே
தருமபூ பதிதிருச் சபைஅ டைந்தனன். 16

செயமுடன் முப்பிர தட்ச ணஞ்செய்து
வயவன்,முன் னவன்பத மலரில் வீழ்ந்தெழுந்து
அயல்கரங் கூப்பியே அஞ்சி நின்றுள
புயபல வீமனைப் பூபன் அன்புடன் 17

---

15. **உச்சி** - அஞ்சி; திறல் கட்செவி கடு கக்க என இயையும்; கட்செவி - பாம்பு, இங்கே ஆதிசேடன்; கடு - நஞ்சு, தானை - படை.

13. **இறை** - எமனாசுரன்; மத்தக மா-யானை.

14. **இருமை** - பெருமை மிக்க, இனி இம்மை மறுமைப் பேறுகளைத் தரவல்ல எனினுமாம்; **உத்தியாவனம்** - பூஞ்சோலை.

15. **உன்னி** - குதிரை; அரசன் - எமனாசுரன்.

16. **புண்ணியன்** - தருமன்; வர்த்தமானம் - செய்தி.

17. **பிரதக்ஷணம்**-வலம் வருதம்; வயவன் - வலிமை உடையோன், வீமன்; முன்னவன் - தமையன்; பூபன் - அரசன், தருமன்.

வாரியே எடுத்தனன்; மார்பில் ஒற்றினன்;
சார்கிரு பைக்கணின் தரளம் சிந்தினன்;
காரியம் உரைஎன நடந்த காரணம்
வீரியன் தனக்குரைத்து இனும்வி ளம்புவான். 18

நின்றிருப் பதத்துஅருள் நின்க டாட்சமும்
மன்றல்அம் துளசியான் மகிழ்க டாட்சமும்
நன்றிய பலங்கொடு நாங்கள் மூவரும்
வென்றனம் செயம்உனக்கு எனவி ளம்பினான். 19

நானினைத் துளபடி நயம தாகவே
நீ நிறை வேற்றினை நிகரில் வீரனே
ஏனைய நமக்கெலாம் இட்ட தேவதம்
ஆனவர்க்கு இசைத்துஅழைத்து அணுகு வல்லனே. 20

ஒதுமுன் நமஸ்கரித்து ஒருபொற் றேரில்உற்று
ஆதவன் இரதம்ஒத்து அதிக வேகமாய்ப்
பாதைகள் கடந்துஅரைப் பகலில் எய்தினான்
மாதவன் உறைதரு துவரை மாநகர். 21

அந்நகர் எயில்கடந்து அரண்ம னைக்குளே
தன்னிக ரிலிசெலும் தருணம் மாயவன்
அன்னம்உண் பதற்குஇயல் பாகத் தோகையர்
பன்னனம் கறிபதார்த் தம்ப டைக்கவே 22

மின்னுருக் மணிநவில் சத்ய பாமையும்
பன்னிமற் றவர்களும் பரிந்து சூழ்ந்துற
உன்னுசோ டசஉப சாரம் செய்திட
அன்னம்உண் பதற்குஅடை வான போதிலே 23

---

18. கணின் தரளம் - கண்ணீர் முத்து.
19. மன்றல அம் துளசியான் - நறுமணத்தையும் அழகையும் உடைய திருத்துழாயை அணிந்துள்ள கண்ணன்
20. இட்ட தேவதம ஆனவர் - இஷ்ட தெய்வம், வழிபடு கடவுளாகிய கண்ணன்.
21. ஆதவன - சூரியன்; துவரை - துவாரகை.
22. எயில - மதில்; பன் அனம் - தேர்ந்தெடுக்கப்பட்ட (சிறந்த) சாதம்; பதார்த்தம் - உணவுப் பொருள்
23. புன்னி - மனைவி, சோடசஉபசாரம் - இறைவழிப்பாட்டில் செய்யப்பெறும் பதினாறு வகையான உபசரணைகள், இங்குப் பல உபசரிப்புகள்.

மாருதி வரவினை மாதர் கூறிய
நேரம்இங்கு அழைஎன, நெடியன் ஏவிய
காரிகை யார்அடை தடைவி டச்சொலத்
தேரிழிந்து அனிலன்கா தலனும் சென்றனன். 24

பஞ்சமா கியநமஸ் காரம் பண்ணியே
அஞ்சியே தோத்தரித்து அங்கை கூப்பியே
கெஞ்சிவாய் பொத்திய கிரீடி முன்னனை
மஞ்சன மேனியன் மகிழ்ந்து வாஎன 25

பூரணக் கிருபையாய்ப் புந்தி உன்னியே
நாரணன் வீமனை நதியிற் சந்திசெய்து
ஆரண முறைவிரைந்து அணுகு வாய்என
ஏருடன் போதம்உற்று இனிதுஇ யம்புவான். 26

ஆதிநா ராயணா ஆதி மூலமே
மாதவா வாமனா வாசு தேவனே
யாதவா கேசவா அநாத ரட்சகா
சீதரா முகுந்தகோ விந்த சீபதீ 27

மாயவா வைகுந்தா வனசை மார்பகா
தூயவா அச்சுதா சுவாமீ நேமியா
ஆயனே பன்னக சயனா அம்புவி
நாயகா அரிஹரி நமோந மோநம 28

பத்தக்ரு பாகரா பகவ னேயிரு
சித்திரச் சேவடி சிந்தை கொண்டநான்

---

24. நெடியன் - கணனன, அடைதடை - அடைக்கப்படடுள்ள தடுப்பு, வினைத்தொகை; அனிலன்காதலன் - வாயுகுமாரன், வீமன்

25. பஞ்சம் - பஞ்சாங்க நமஸ்காரம், இரண்டு முழங்கால்கள், இரு முழங்கைகள், தலை ஆகிய ஐந்து உறுபபுகளும நிலம் தோய வணங்குதல், கிரிடி - அருச்சுனன; மஞ்சுஅன - மேகத்தைப் போன்ற.

26. ஆரணமுறை நதியில் சந்தி செய்து விரைந்து அணுகுவாய என இயையும், சந்தி - இங்கு மாத்யான்னிகம், பகலிற் செய்யப்படுவது; ஆரண முறை - வேத விதிப்படி, போதம் உற்று - மெய்யறிவு பெற்று.

27. சீபதி - ஸ்ரீபதி, திருமகள் கேள்வன்

28. வனசை மாரபகன் - திருஉறைமார்பன்; நேமியா - சுதர்சன சக்கராயுதா, பன்னக சயனா - பாம்பணையில் அறிதுயில கொண்டோய்.

முத்திரைப் படிசந்தி முடித்திட் டேன்என
உத்தமக் கடவுள்கேட்டு உவகை கூர்ந்துபின் 29

போசனம் மாருதி புசிக்க வேறிடம்
ஆசனம் இடுகென ஆயன் ஓதிடக்
கேசவா நின்பிர சாதம் கிட்டுமோ
ஈசுடன் போடுகென்று இருகை ஏந்தினான். 30

கண்ணன்நன்று எனஒரு கவளம் உண்டபின்
உண்ணெனக் கவளம்ஒன்று உதவ உண்டனன்;
வெண்ணெய்உண் டவன்மறு கவளம் ஈந்திடத்
திண்ணியன் உண்ணும்முன் திருப்தி ஆனதே. 31

மறுத்தும்ஓர் கவளம்மா யவன்வ ழங்கிடத்
திறத்துடன் வாங்கியே சிரசில் சொண்டனன்
கருத்தமா மழைமுகில் காயன் றான்நகைத்து
ஒறுத்ததேன் வீமவென்று உரைக்கக் கூறுவான். 32

(இதற்கடுத்த பாட ல் சுவடியில் காணப்படவில்லை)

அவரவர் மனநிலை அறியும் மாயனே
கவளம்ஓர் இரண்டும்என் கண்டம் முட்டின
திவளும்ஓர் பிண்டம்என் சிரசில் ஏற்றினேன்
பவளவாய் இலக்குமி பயிலும் மார்பனே. 34

பண்டிரு பத்துநால் சகடப் பண்புஅனம்
உண்டநின் பெருவயிறு உடைய பிண்டமே
கொண்டதும் நிரம்பிற்றோ கூறு கென்றலும்
விண்டுவைப் புகழ்ந்துபின் வீமன் கூறுவான். 35

---

29. பத்தக்ருபாகரா - அடியார்மாட்டுக் கருணையனே. சித்திர - அழகிய; முத்திரைப்படி - செயவேண்டிய முறைப்படி; ஈசு சேஷம், மிச்சில.

31. திண்ணியன் - வலியவன். இங்கே பக்தியின் வலிமை கருதப்படுகிறது.

32. முகில்காயன் - மேகமொத்த மேனியன்; ஒறுத்தது ஏன்- (உண்ணாமல்) வெறுத்து ஒதுக்கியது எதற்காக; காயன் உரைக்க (வீமன் பதில்) கூறுவான் என்றபடி.

34. கண்டம் - கழுத்து.

35. பண்டு - பகாசுரனை வீமன் கொன்ற அக்காலத்தில்; சகடம் - வண்டி; பண்பு - அளவு; விண்டு - திருமால்.

அண்டமூ தண்டமும் அகண்ட மண்டலம்
உண்டநும் உதரம்இவ் உலகர் உண்அனம்
கொண்டதும் நிரம்பிய குணம்என் கூறுகென்று
அண்டர்நா யகன்றனை அஞ்சிக் கேட்டனன். 36

இவ்விதம் வெகுவிநோ தங்க ளின்மொழி
நவ்வியது உரைத்தபின் நகைத்து மெய்மகிழ்ந்து
எவ்வுல கத்துளது யாவும் உணர்ந்தமால்
எவ்வம்இல் வீமவந் ததுவென் என்றனன். 37

உற்றநல் துணையென ஒக்க வந்துநல்
கொற்றமும் வெற்றியும் கொடுத்த மாதவா!
நித்தனே நீயறி யாத தென்சொல்வேன்
பித்தனை இரப்பொழிப் பித்த மாயனே. 38

வினைக்கிட மாய்ப்பரி பிடிக்க, வெம்பரி
தனைக்குறித்து அமர்விளைத்து, அரசு சார்ந்தசொல்
எனக்குஉரைத்து, உபசரித்து, எய்தி யே,நமூர்
தனக்குஅயல் ஒருபொழில் தனில்இ ருந்தனன். 39

ஈதுகேட்டு அறன்மகன் இட்ட தெய்வம்நின்
காதினில் உரைத்துவா கடுக என்றனன்
நாதனே வென்றதும் நாங்கள் வந்ததும்
போதஉன் அருட்பரி பூர ணங்கொடே. 40

என்றடி இறைஞ்சிய இகல்வல் லாளனை
மன்றல்மார் பகத்தினில் அணைத்து மாயவன்
வென்றிகொள் மூவறு மேள வாத்தியம்
துன்றியே முழங்கிடச் சொற்றுள முந்தனன். 41

நளினநா பியன்மணி ரதத்தில் ஏறியே
மிளிர்ரதம் ஏறுஎன வீமற்கு ஓதியே

---

36. உதரம் - வயிறு; குணம - விதம்.
37. நவ்வியது - புதுமையானது, எவ்வம் - குற்றம்.
38. பித்தன் - சிவபெருமான், இரப்பு - யாசகம்.
39 வினைக்கு இடமாய - வேள்விக்குத் துணையாக; அரசு - எமனாசுரன்; சார்ந்த சொல் - அநுகூலமான மொழிகள்
40. போத - முற்றிலும்
41. இகல்வலலாளன் - போர்த்தொழில் வல்லுநன், சொற்று - ஆணையிட்டு.

தளபதி சாத்தகி தனைஅ ழைத்துஎழும்
உளபல சேனையோடு ஒக்க என்றனன் 42

தளபதி சாத்தகி உத்து வாசரி
அளியக்கு ரூரன்மால் அருள்பி ரத்திமன்
இளமையின் ருத்ரனும் இரதம் ஏறினார்
தெளிவின்மற் றவர்களும் தேரில் ஏறினார் 43

அரணிய சேனைஓர் அக்கு ரோணியும்
முரணுறச் சூழ்தர முகில்மு ழக்கமாய்க்
கருதிய பஞ்சவாச் சியம்க றங்கவே
தெரிவுறு துவரைமூது எயிலை நீங்கினார். 44

சரராசன மால்சது ரங்க சேனைகள்
இரேபலி எனும்இடைத் தெருவின் மார்க்கமாய்
முராரி இராசரா சாக்கள் மொய்த்திட
தராதலம் நடுங்கவே இரதம் கடத்தவே. 45

முகம்விழி கால்கரம் முலையும் தோன்றுதல்
நகும்எழில் காடென நளினம் பூத்தபோல்
சகலவெம் புவனரட் சகனை நோக்குற
மகிழ்வொடு முல்லையின் மாதர் மொய்த்தனர். 46

நோக்குகண் வாங்குறா நோக்கு வார்;மதன்
தாக்கலின் கணைகளால் தயங்கு வார்;வளை
நீக்குவர்; பசலைகள் பொறிக்க, நெட்டுயிர்த்து,
ஊக்கமற்று, உடைநெகிழ்ந்து உழல, வாடுவார். 47

மெய்மறந் தனர்சிலர்; மேவு வெற்றுடம்பு
எய்திநின் றனர்சிலர்; இருங்க லன்களைப்

---

43. நளின நாபியன் - பதம நாபன், உந்தித் தாமரையோன், எழும் - புறப்படுவீராக, ஒக்க - என்னுடன்.

44 அரணிய - காவல்புரிந்த, கறங்க - ஒலிக்க, மூது எயில் - பழமையான மதில்.

45. சராசனம் - வில், சாரங்கம், சேனைகளோடு முராரி, மொய்த்திட, நடுங்க, மார்க்கமாய் இரதம் கடத்த என்பது பொருண் முடிபு

46. மாதர் நோக்குற பூத்தபோல் மொய்த்தனர் என்க, புவனரடசகன் - உலகங்களைக் காப்பவன்.

47 பசலை - காதல் கொண்ட மகளிருக்குத் தலைவனின் பிரிவாற்றாமையால் நிகழும் நிறவேறுபாடு.

பெய்துநின் றனர்சிலர்; பெருக மோகமாய்
வைதுநின் றனர்சிலர்; வாழ்த்து வார்சிலர். 48

மெய்யிடு கலன்களைக் கையில் வீக்குவர்;
கையிடு கலன்களைக் களத்தில் வீக்குவர்;
எய்மதன் சேட்டையால் இடைந்து, மெய்மறந்து,
ஐயுறப் பிரக்கினை அற்று மாழ்குவார். 49

இவ்விதம் கோபியர் இடைந்து சோபமுற்று
அவ்விய முறுவதை அநிலன் சேயுணர்ந்து
எவ்வம்இல் பாக்கிய மேஉன் பாக்கியம்
தவ்வுமா யாவிநோ தாளன்று எண்ணினான். 50

விரவிய வீமனை விண்டு நோக்கிநீ
கருதுவது என்கொல்மற்று இடும்பி காதலா
ஒருவனும் ஒருத்தியும் உற்ற பான்மைபோல்
மருவுவன் அவரவர் மணவ ராகவே. 51

கான்கமழ் மாலையாய் கருதுஎன் மாயையைத்
தான்கடந் தார்உணர்ந் தார்கள் தான்எவர்
யான்கலந்து அவரவர்க்கு அவர தாகவே
தேன்கலந் தனையபால் எனவும் சேருவேன். 52

என்றுஇரே பலிஎனும் இடையர் பாடியை
அன்றுதான் கடந்துகா ளிந்தி அந்நதி
தென்றலார் நதிக்குஅரு காகச் சேனையை
ஒன்றிஅங்கு இழியஉத் தரவு நல்கினான். 53

தாமன்உத் தரவொடு சக்ர வியூகமாய்த்
தாமதி யாதுகூ டாரம் தான்அடித்து

---

48. கலன் - நகை.

49 வீகுவர் - சுட்டுவார், களம் - சுழுதது; சேட்டை - இயக்கம், இடைந்து - வருநதி; ஐயுற - இறந்துபடடனரோ எனச் சந்தேகிக்கும்படி, பிரக்கினை - நினைவு; மாழ்குவார- மயங்குவார்.

51. இடுமபி - இடும்பன் என்பானின சகோதரி, அரக்கி, வீமனின் மனைவியருள் ஒருத்தி; மணவர் - மணவாளன்

52. கான் - நறுமணம்.

ஏமமாய் நடுவதில் ரத்ன பீடமும்
காமன்அத் தனுக்குஅலங் கரித்துஇன் புற்றனர். 54

கட்டழகு எறித்திடக் கதிர்ப்ர காசமாய்
இட்டபீ டத்தில்மால் இருந்த பின்பதி-
னெட்டுமே ளக்குழாம் பஞ்ச வாச்சியம்
பட்டகுண் டலம்வெடி படமு ழக்கினார். 55

மருவியே உடன்வரும் அவர்எ லாம்அயல்
நிரைநிரை இருந்தபின் குறுநி லத்துறும்
அரசரும் மகுடவர்த் தனர்பட் டத்தரும்
இருநிதி பாதம்வைத்து இறைஞ்சி னாரரோ. 56

பரவிய பேரைஅன் பாக வாழ்த்தியே
அருகிருந் திட,விடை யருளும் ஏல்வையில்
விரவுநா ரதர்துரு வாசர் வான்மிகர்
அரியகா சிபர்வசிஷ் டர்வி பாண்டகர் 57

சராசரர் சாபலி கௌதமர் சதானந்தர்
பராசரர் வியாக்கிர மர்ப தஞ்சலி
இராசமா முனிவியா சர்உ லூகரும்
புராதன முனிகள்மற்று உளரும் போந்தனர். 58

வந்தவர்க்கு எழுந்துப சார வாய்மொழி-
யுந்துதி பரவஅங்கு உற்ற பேர்எலாம்
மந்திர ஆசிகள் மகிழ்ந்து கூறியே
அந்தரங் கத்துஇத யத்து இறைஞ்சினார். 59

அரசரும் முனிவரும் அம்பு ராசிநேர்
பரவிய சபையினில் பாடி ஆயர்கள்

---

54. தாமன் - பரந்தாமன், கண்ணன், காமன் அத்தன் - மன்மதனின் தந்தையாகிய கண்ணன், மன்மதன் உருக்குமணியின்பால பிரத்யும்நனாகப பிறந்தான்.

55. படம - ஒலி, குண்டலம் - ஆகாயம், பட்ட குண்டலம - ஒலிக்கு இடமான ஆகாயம்.

56. மகுடவர்த்தனா - முடிமன்னர், படடத்தார் - பல்வேறு படடங்களில் உள்ளவர், இரு நிதி - பெரிய செல்வம்.

57. ஏல்வை - நேரம். 58. புராதன - பழமையான

59. முனிவர்கள் கண்ணனுக்கு வெளிப்படையாக ஆசி கூறினர். ஆனால் உள்ளத்தில் அவனைப பரம்பொருளாகக் கருதி வணங்கினர்.

வருவதை அறிந்துமால் வளைந்து கோலிய
திரள்முனி அரசரை நோக்கிச் செப்புவான் 60

சிறுவய தினில்அரும் சிநேகர் ஆகிய
தொறுவர்இங்கு அணுகினர் தொந்த மாகியே
வெறுமொழி வரையறை யின்றிப் பேசுவர்
உறுதியன் புளர்கள்போம் ஒல்லை மட்டுமே. 61

வேறொரு கடையிருந்து இலகு வீரெனக்
கூறிய மொழிக்குஅகம் குளிர்ந்து மன்னரும்
தேறிய முனிவரும் சென்ற பின்கடை
கோல்தலை கொங்கணிக் கோன்கள் வந்தனர். 62

கோவலர் பால்நவ நீதம் கூர்ததிக்
காவடி வகைக்குப்பன் னருச கத்திரம்
ஆவலி னுடன்கொண்டு அணுகி மொய்த்தனர்;
மூவரில் முதல்வனை முன்இ றைஞ்சினார். 63

பரவியே புகழ்ந்துகோ பாலர் ஓதுவார்
அரிகரி உன்னைவந் தடைந்து கண்டதே
பிரசவா ரிதிமிசை பெட்பின் மூழ்கினோம்
தருமமோ குலநெறி தப்பி நிற்றல்நீ 64

கல்கரட் டுக்குக்கல் சிகரம் ஏன்?சிர-
சில்கன சுமைஉனக்கு ஏதுக்கு? ஓர்கொடி
வர்க்கம்நன்று எனக்கர மகுடம் தள்ளியே
அர்க்கநா ரின்கயறு அதனைக் கட்டுவார் 65

---

60. அம்புராசி - கடல, பாடி - இடையர் சேரி, கோலிய - வந்தடைந்துள்ள
61. தொறுவர் - இடையர்; தொந்தம் - தொடர்பு, வெறுமொழி - பயனற்ற சொற்கள், ஆயர்கள் தண்ணன்மாடடு திலையான பக்தியுடையவர்கள், போம் ஒல்லை - போகும் வரை.
62. கடை - வாயில்; கொங்கணி - கோரைபபுலலால செய்யப்பட்டுத் தலைமுதல் கால்வரை மறைக்கும் ஒர் சடடை, ஆயர் அணிவர்; கோன் - கோனார்.
63. கோவலர் - இடையா, நவநீதம் - வெணணெய், கூர் - மிகுதியான; ததி - தயிர்; பன்னரு - கூறற்கரிய, பல, சகத்திரம் - ஆயிரம், மூவர் - அயன், அரி, அரன்.
64 பிரச வாரிதி - தேன் கடல், பெடபின் - விருப்பததுடன்.
65 கலகரடு - ஏறறைக்கல்லாலான கிறு குன்று, கல் சிகரம் - மணிகள் இழைத்த கிரீடம், கர மகுடம - ஒளிக்கதிர்களை வீசுகின்ற முடி, அாக்க நார் - எருக்கஞ் செடியின் நாா

மார்பில்இத் தனைசுமை வைப்பது ஏன்எனச்
சார்பில்ரத் தினச்சரம் மாலை தள்ளியே
ஓர்பசும் குன்றியும் சங்கும் பாசியும்
நேர்புறு தாவடம் நெஞ்சில் பூட்டுவார் 66

போர்வைபீ தாம்பரம் புடவை வாங்கியே .
கார்மழை குளிர்வெயில் காற்றுத் தாங்குமென்று
ஓர்பெரும் கம்பளி உடலில் போர்த்துவார்
காரிய கம்பளக் கவுச னம்செய்வார். 67

எருமையை ஆட்சிசெய் திடில்எந் நேரமும்
பெருகுபால் வெண்ணெய்நெய்ப் பேறு கிட்டும்இக்
கரியையும் பரியையும் காட்டில் ஓட்டுவோம்;
உரவருக்கு அஞ்சியே ஒடுங்கி நின்றனம். 68

அடிஅடி என்றுஎமை அஞ்ச ஆர்க்கும்இக்
கொடியரை அருகுறக் கூட்டம் செய்வதேன்?
இடையர்கள் பயலைஉன் னிடத்துஇ ருத்திடில்
கடிதுஉனது ஏவலில் காலி மேய்ப்பரே. 69

எரிப்புறும் பரிகரி முதுகில் ஏறினால்
இருப்பிடம் சிரங்குறும்; இரதம் என்றுபன்
மரக்குல மீதுறில் வழுக்கும் அள்ளலில்
தரிப்பற வீழ்ந்திடில் தகரும் மெய்முகம் 70

என்கொலோ புயமருங் கினும்க ரத்தினும்
மின்கொலோ தரித்தனர் மிகுவி கற்பமாய்
நின்குழுப் பெருக்கமாய் நிறைந்து நிற்பதேன்
வன்கணர் நோக்கிடில் மனந டுங்குதே . 71

---

66. சார்பு இல் - இணையற்ற; குன்றி - குன்றிமணி; தாவடம் - மாலை.

67. காரிய - கருமை நிறம் பெற்ற. கவுசனம் - கோவணம்.

68. பேறு - செல்வம்; உரவர் - வீரர்

69 காலி - கால்நடை.

70. இருப்பிடம் - சகனம், யானை குதிரைகளமேல சவாரி செய்தால் எரிச்சலும் சிரங்கும் உண்டாகும், அள்ளல் - சேறு, தரிபபற - நிலையில திற்காமல; தகரும் - உடையும்; மெயயும முகமும், தேர் வழுக்கி விழுந்தால் கைகால முறியும்

துருத்தியும் நரம்பொடு துளையும் கஞ்சமும்
அரற்றுதல் செவிடுற அடைக்குது அள்எலாம்;
நிரைக்குல மணியினும் குழலின் ஏற்றமோ?
பரிப்பதற்கு எருமையில் பரிகள் நேர்த்தியோ? 72

தின்கவென்று இலையையும் சிறிய காயையும்
என்கொல்தந் தனைபசி இளைப்பை அகற்றுமோ?
முன்கொளுத் தம்பயறு அவரை மொச்சைக்கா-
யின்கட லைகள்துவ ரையும்இங்கு இல்லையோ? 73

இன்னணம் பலபரி யாச மேசெய்து
தின்னுநின் வாயினைத் திறவ டாவென
மன்னிய வெண்ணெயை வாரி வாரியே
உன்னியே ஒருத்தலித்து உறச்சொ ரிந்தபின் 74

தயிர்கள்வந் தவைஎலாம் தாம்சொ ரிந்தபின்
வியனில்முப் பாலையு மேசொ ரிந்தனர்;
உயர்வினோடு அவையெலாம் உண்டு தீர்ந்தபின்
இயல்முடி பணிதுகில் இலங்கச் சேர்த்தனர். 75

விந்தர்கள் நம்புகோ விந்த னேவிடை
தந்திடுஎன்று அடிதொழும் அவர்கள் மேல்தயவு
உந்துஇரை போலவே உளத்தில் பொங்கியே
அந்தரங் கத்துஅன்பர்க்கு அருள்சொ ரிந்தனன். 76

விடையது பெற்றபின் மிகம கிழ்ச்சியாய்
இடையர்கள் அகன்றபின் ஏக நாயகன்
படையெழு கென்றுஉரை பகர்ந்துஎ ழுந்தனன்
இடியெனப் பஞ்சவாச் சியம்க றங்கவே. 77

---

72. துருத்தி - ஊதும ஓர இசைக்கருவி, அள் - செவி, நிரைக்குல மணி - கால்நடைகளின் கழுத்தில் கட்டப்பட்டுளள மணி, குழல - புல்லாங் குழல, மணியினும் குழலினும் அரற்றுதல் ஏற்றமோ எனக, பரிப்பதற்கு - சுமைதாங்க

73. இலை - வெறறிலை, காய் - பாக்கு, கொளுததம - கொள்.

75. முப்பால - காய்ச்சுப்பால், திரட்டுப்பால், குழம்புப்பால என்னும் மூவகைப்பாலகள்.

76. விந்தர்கள - இடையர; உநது இரை - (ஊற்றில) எழும்புகின்ற நீர

தாமனும் உடன்வரும் தலைவர் யாவரும்
வீமனும் தேர்மிசை மேவி ஏகினார்
சேமமது ஆகிய சேனை சூழ்வர
நாமெம னாதீர்த் தத்தை நண்ணினார். 78

(வேறு)

எமனா தீர்த்தந திக்கரை எய்தலும்
எமனா சூரன்எ, ழிற்கதிர் சேய்சுதன்,
அமரர் கேசரி மேகவண் ணன்இவர்
விமலா என்றுவி ழுந்தனர் தாண்மிசை . 79

அஞ்சிஇ றைஞ்சிய மூவரை ஆயனும்
நெஞ்சில்ம கிழ்ந்துப சாரம்நி கழ்த்தினன்
வெஞ்சமர் மூவரும் வீமனை அர்ச்சனை-
யுஞ்செய வாரிஉ ரத்தில்அ ணைத்தனன். 80

கேசவன் வந்தது கேட்டுஅறன் மைந்தனும்
வாசவன் மைந்தனும் மற்றிரு வோர்களும்
பாசமு றும்படை யோடுஎதிர் பண்பொடு
தேசுறும் மால்அடி சென்றெதிர் கண்டார். 81

அறன்மகன் அச்சுத னுங்ககு வித்தார்
விரவினொ டிருவர்வி யந்துது தித்தார்
முறைமுறை யாகமு யங்கினர் மார்பில்
திறலொடு பார்த்தனும் சேர்ந்துப ணிந்தான். 82

மச்சின னைத்தய வாய்மணி மார்பில்
மெச்சிஅ ணைத்தபின் மீண்டுஇரு வோரும்

---

78. சேமம் - காவல், நாம் - அச்சத்தைத் தருமளவு வெள்ளம் நிறைந்த; எமனா தீர்த்தம் - யமுனையாறு.

79. சுதிர்சேய்சுதன் - சூரிய குமாரனாம் சுன்னனின் மகனாகிய விடசீதனன்; அமரரா கேசரி - பகைவர்களுக்குச் சிங்கம் போன்றவன்.

80. அர்ச்சனை செய்தல் - (இங்கு)வணங்குதல், உரம் - மார்பு.

81. வாசவன் மைநதன் - இந்திரன்மகன், அருச்சுனன், இருவோர்- நகுல, சகதேவர்; எதிர்பண்பு - எதிர்கொள்ளும்முறை.

அச்சுத னைப்பதம் அன்பின்வ ணங்கப்
பச்சையும் மார்பொடு பண்பில்அ ணைத்தான். 83

மூவரும் வீமனை முன்னி வணங்க
ஆவிய தாம்துணை வோரை அணைத்தான்
தூவுசு பத்திரை துரௌபதை யுந்தாள்
தாவிவ ணங்கவும் தாய்பதம் கண்டான் 84

அன்னைக வுந்தியும் அன்பொடு வீமன்-
தன்னையும் வாழ்த்தினள் தான்பரி ஈந்த
மன்னனும் மைந்தனும் மந்திரி யோடும்
பொன்னிதி வைத்தடி பூண்டனர் தாளில் 85

தாளில்வி ழுந்தவ ரைத்தரு மேந்த்ரன்
வேளலர் மார்பில்வி ரும்பிஅ ணைத்தே
மீளவு மேஉப சாரம்இ யம்பக்
காளைஅ ருச்சுனன் கால்மீசை வீழ்ந்தார். 86

மதியொடு பார்த்தனும் வாரிஅ ணைத்தே,
"முதியவ நீமுறை யோமுன்வ ணங்கல்
கதிசெய்மு ராரிபொற் கால்தொழு தீரேல்
அதுமிக அற்புதம் ஐவர்த மக்கும்" 87

என்றலும் அங்கவன் நீஎன வேறோ
ஒன்றுயிர் இரண்டுரு வானது கொண்டேன்
நன்றவிர் நீர்நர நாரணர் அன்றோ
என்றும்வ ணங்குவன் உம்மிரு தாளே. 88

விற்கையெ டுத்துள வீரரும் வேந்தும்
புற்கவி விற்கழல் போட்டுவ ணங்கும்
பற்குனன் நீ;விறல் பார்த்தனும் நீ;சேய்
சற்குணன் நீஎனச் சாற்றிய பின்னே 89

---

83. மச்சினன் - மைத்துனன், சுண்ணனின் தங்கை சுபத்திரையை மணந்த அருச்சுனன். பச்சை - திருமால்.

84. மூவர் - வீமனின் தம்பியர்; தாய் - குந்தி, கவுந்தி என்பார் இந்நூலாசிரியர்.

87 மதியொடு - அறிவோடு. 88. வேறோ - கண்ணனின் வேறானவனோ.

89. புற்கவி - (மண்டியிட்டு) வாயில் புல்லைக் கவ்விக்கொண்டு; வில் கழல் - ஒளிவீசுகின்ற வீரக்கழல்.

பின்னிரு வோரையும் பெட்பின் அணைத்தே
உன்னிய வர்க்கவ ரேஉப சாரம்
சொன்னபின் மாருதி சூன்அருள் சூனும்
கன்னன்ம கன்தரு மன்கழல் கண்டார். 90

கண்டுவ லஞ்செய்து காலில்வி ழுந்தே
கொண்டுபல் தோத்திரம் கூறவி ரும்பி
அண்டிள டுத்துஅக லத்தில்அ ணைத்தே
மண்டல மன்னன்ம தித்துரை சொல்வான். 91

விடலைய ராகிய நீர்இரு வீரும்
அடல்செய்த வீரமும் ஆண்மையும் நன்றாய்
மிடலுறு வீமன் விளம்பிய போதே
உடல்கள்கு ளிர்ந்துஉவ கைக்கடல் கொண்டேன். 92

இந்தவி தஞ்சம ரேபுரி யீரேல்
வந்திடு மோவசம் விர்த்தியி லேமா
எந்தன் மனத்துஅமுது என்றுகு றங்கில்
முந்தியி ருத்திநல் உச்சியை மோந்தான். 93

கண்கரு ணைத்தர ளங்களி னாலே
திண்சிர மீதுஅபி ஷேகமும் செய்தான்
தண்குண மாகிய சற்குண எந்தாய்
நுந்தன்அ றத்துஅருள் நோக்கிய வெற்றி 94

என்றிரு வோரும்இ றைஞ்சிள ழுந்தே
வென்றிகொள் வில்லியை வீழ்ந்துப ணிந்தார்
சென்றுஅம ரில்செயம் பெற்றதை வாழ்த்தி
மன்றலின் மார்பிடை மதித்தனன் அணைத்தான். 95

---

90. மாருதி சூன் - வீமன் மகனாகிய சுடோர்ககஜன்; அவன்மகன் - மேகவண்ணன்.

91. அசுலம - மார்பு; மண்டல மன்னன் - தருமன்.

93. மா விர்த்தியிலே வசம வந்திடுமோ என இயையும்; மா-குதிரை; விர்த்தி-லாபம்; குறங்கு-துடை.

94. கண் கருணைத் தரளம்-கருணையால் வழிந்த கண்ணீர் முத்து; யாம் நோக்கிய வெற்றி நுந்தன் அறத்து அருள் என்றவாறு.

95. வில்லி - அருச்சுனன், மன்றலின் - மணமிக்க.

அய்யஉன் பங்கய அடித்துகள் ஒவ்வேன்
வெய்யஎன் வல்லமை என்விறல் என்நின்
துய்யப தந்தொழுது உத்தரவு உற்றேன்
வய்யம்அ றிந்திட வந்தது வெற்றி. 96

என்றுப கர்ந்துஇளை யோர்இரு வோரைச்
சென்றுப ணிந்தனர் சேர்ந்திரு வோரும்
அன்றுஅக லத்தில்அ ணைத்தும கிழ்ந்தார்
பின்றையும் மற்றுள பேர்பதம் கண்டார். 97

பரிகரி தேர்பல பூண்அணி ரத்னத்
திரள்களும் ஒன்பதுஅக் குரோணிதிண் சேனை
முரசம்உ யர்த்தவன் முன்னர்அ ளித்தான்
விரவிய பத்திர கிரிப்பதி வேந்தன் 98

அங்கது கண்டுஅறன் மைந்தன்ம கிழ்ந்தே
தங்குமி டங்கள்த னித்தனி சொற்றான்
வெங்கயம் அன்றுவி ளிக்கும்முன் வந்தோய்
இங்கெனை ஆள்என வேயடி வீழ்ந்தான். 99

அடிமிசை ரத்தினா திகள்நிதி பொன்பூண்
மடிதுகில் பற்பல வைத்துவ ணங்கும்
கெடிஉயர் பத்ரகி ரிப்பதி யானை
வடிவுள மாயன் மகிழ்ந்துஅவை கொண்டான். 100

வந்துள குந்தியும் மன்மனை யாளும்
குந்திஉ டன்இரு கோதைய ருக்கும்
சிந்தையின் அஞ்சலி செய்தவ ரைத்தான்
உய்ந்துஉப சாரம்உ ரைத்தனர் மூவர். 101

அய்வரும், மற்றவ ரும்அருள் செய்யும்
தெய்வமும், மாலினைச் சேர்ந்துள பேரும்,

---

96. வய்யம் - வையம், உலகம்.
97. இளையோர இருவர் - நகுல சகதேவர்; பணிந்த இருவோர்- விடசீதனனும மேசுவண்ணனும்.
98. முரசம் உயர்த்தவன் - முரசக்கொடியோன, தருமன்; வேந்தன் - எமனாசுரன்.
99. கயம் - யானை, இங்கு சுசேந்திரன், வந்தவன் - சுசேந்திரவரதனான திருமால்.
100. கெடி - கோட்டை.
101 மன் மனையாள் - எமனாசுரன் மனைவி; உடன் குந்தி என மாறுக, ஒருங்கே அமர்ந்து.

மெய்வரு பத்திர கிரிப்பதி வேந்தும்
எய்வகல் வெம்பரி நோக்கிட ஏகா 102

(அறுசீர் ஆசிரிய விருத்தம்)

பொருவரும் பற்ப ராகப் புரவியைப் பார்த்துஎல் லோரும்
விரவுஇலக் கணங்கள் எல்லாம் மேவிய பரிஈது என்று
கரையில்ஆ னந்தர் ஆனார் கண்ணன்புண் ணியனை நோக்கிப்
பரியிது வந்த போதே பலித்தது வேள்வி அய்யா. 103

ஆகையால் பாக்ய சாலி யானவன் நீதான் என்று
வாகைமால் உரைக்க, "வேள்வி மாத்திரம் என்ன? எங்கட்கு
ஆகவேண் டியதற்கு எல்லாம் ஆர்துணை? உம்மை அல்லால்;
ஏகமாம் பாக்ய சாலி எங்கள்தா பரமும் நீரே" 104

எனஉரைத்து உபசா ரங்கள் அறன்மகன் இயம்பக் கேட்டு
மனமகிழ்ந்து இரவுஇங் கேயே வாம்பரி யதனைச் சூழ்ந்து
கனதிசாக் கிருதர் ஆகக் காத்துஇனிது இருப்போம் என்ன
அனைவரும் ஒத்துக் கோலி அரண்என வளைந்து சூழ்ந்தார். 105

சக்கர வ்யூக மாகத் தளம்நிரைத் திருக்குங் காலைச்
செக்கர்வான் மலரப் புக்கான் செங்கதிர்; அவ்வி ராவில்
தக்கபா ரதத்தில் மாய்ந்த சாளுவன் தனக்காம் மைந்தன்
புக்கனன் மூன்றுஅக் ரோணி பொற்பரி வாரம் கொண்டே. 106

வந்தனன் எமனா தீர்த்த வடகரை யதனில் உற்று
நந்தன வனத்தில் புக்கு நால்வகைத் தளமும் பார்த்துச்
சிந்தையின் வயிரம் இன்று தீரும்நாள் வந்தது என்று
உந்தியின் தென்பால் கிட்டி யூகமாய்த் தளத்தை வைத்து 107

---

102. எய்வுஅகல் - குற்றமற்ற.
103. பொருவரும் - இணையற்ற, கரைஇல் - எல்லையற்ற; புண்ணியன் - தருமன்.
104. வாகை - வெற்றியுள்ள; தாபரம் - தஞ்சம்.
105. கனதி சாக்கிருதர் - மிகுக எச்சரிக்கையுடையோர்; கோலி நெருங்கி.
106. பாரதம் - பாரதப்போர்
107. உந்தி - ஆறு, யமுனை; கிட்டி - நெருங்கி; யூகமாய் - விவேகம்.

கரந்துபா ளையத்தை நோக்கிக் கருதுகாற் தருவ மாயை
பொருந்திநள் ளிருளில் புக்குப் பொற்பரி தன்னை வவ்விப்
பரிந்துஅனு சாளு வன்தன் பாடியின் நடுவில் வைத்து
முரண்பெற இருந்து வெற்றி முரசினை முழக்கி னானே. 108

முரசொலி கேட்டு வீர முரசகே தனன்மற் றோரும்
புரவியைப் பார்த்துக் காணார் போதவே மதிம யங்கி
அரிதுஎன மாயை யோஎன்று அனைவரும் கலங்கும் நேரம்
சருவுகர்ச் சனைகள் ஆகச் சாளுவன் வீரர் ஆர்த்தார். 109

ஆர்த்துஎதிர் அடைந்த சேனை அனைத்தையும் நிறுத்தி வன்கட்
கூற்றுஎனக் கொதித்து வேகக் கொடுமுடித் தேரைப் பூட்டிப்
பார்த்தவர் திகைக்கத் தாவிப் பற்கடித்து உரத்துச் சீறிக்
கோத்தனன் நடுங்கத் திக்கும் கொடுமரம் குழைய வெங்கோல். 110

சரமொன்று பத்து நூறு சகத்திரம் தான்ஈ ரைந்துஆ-
யிரம்சதா யிரம்பன் னூறா யிரம்சத விலக்கம் சங்கம்
அரும்கடி மகரம் அற்பு தம்மன தாவென் றீறில்
வரும்புயல் மடங்க லொத்தே சொரிந்தனன் மடங்கல் அன்னான் 111

வயிரவர்க் கத்தி னோடும் வரும்அனு சாளு வன்தான்
செயிரொடு தொடுத்த கோல்கள் சேண்திசை எங்கும் மொய்த்தே
இயல்சது ரங்க சேனை இடையிடை புகுந்து தாக்கக்
கயிரவம் புரசம் பூத்த கவின்வனம் போன்ற தன்றே. 112

சிரம்குளம் களம்க போலம் செவிமுகம் புருவம் வாய்மொய்ம்பு
உரங்கரம் உதரம் உந்தி உறும்இடை தொடைமெய் எங்கும்

---

108. பாளையம் - பாசறை; வவ்வி - கவர்ந்து; பரிந்து - சென்று; பாடி - படைவீடு; முரண்பெற - பகை உணர்வுடன்.

109. முரசுகேதனன் - தருமன், சருவு கர்ச்சனை - போர்முழக்கம்.

110. அடுத்த பாடலில் வரும் மடங்கல் அன்னான் என்னும் தொடர் இப்பாடலின் எழுவாயாகும். அவன் - அனுசாளுவன். திக்கும் நடுங்கக் கொடுமரம் குழைய வெங்கோல் கோத்தனன் என இயையும்.

111 சதாயிரம் - நூறாயிரம், இலட்சம்; அரும்கடி - எண்ணமுடியாத வாறு மிகுதியான; சங்கம், மகரம், அற்புதம் என்பன பேரெண்கள்; புயல்மடங்கல் - மேகத்தில் தோன்றும் இடி; மடங்கல் அன்னான் - சிங்கம் போன்ற அனுசாளுவன்.

113. வயிரவர்க்கம் - பகைமையுள்ள கூட்டம்; செயிர் - கோபம்; கோல் - அம்பு; சேண் - ஆகாயம்; கயிரவம் - செவ்வாம்பல்; புரசம் - பலாசம்.

சரங்கள்ஊ டுருவிப் பாயச் சல்லடைக் கண்கள் போல
நிறைந்திடச் சோரி வெள்ளம் நிரந்தரம் பரந்தது அம்மா. 113

கண்டதுண் டங்கள் ஆகக் கருதுஅவ யவங்கள் எல்லாம்
எண்டிசை முழுதும் கூய எருவையங் குடிஞை ஓடச்
சண்டமா ருதமா வீசும் சரமழை மாரி யாலே.
மண்டிய மதமா வாசி மலைத்திரள் மலிந்தது எங்கும் 114

சேனைகள் முழுதும் அஞ்சிச் சிதறிடச் சரங்கள் வீசும்
மானசா ளுவன்றன் மீதில் வன்கடுங் கோபம் கொண்டு
தானமா நகுல னோடும் சகதேவன் தடந்தேர் உந்திச்
சோனைமே கங்கள் போலச் சொரிந்தனர் சரங்கள் மென்மேல் 115

இருவரும் சொரிந்த வாளி இயல்அவ யவங்கள் எல்லாம்
சொருகிஅங்கு அவன்மெய் எங்கும் சோரியாய் ஒழுகி ஓடக்
கருகிஇங்கு இவரோ என்மெய் கனல்பர விடச்செய் வார்என்று
உருமழை மாரி யாக உறுஞ்சரம் தொடுத்து விட்டான். 116

பரப்பிய சரங்கள் எல்லாம் பற்பமது ஆகப் பல்கோல்
உரத்துவிட்டு எரித்து மேலும் உடற்றிய கோல்க ளாலே
சிரத்துஉறு முடியும் வீழ்த்தித் தேர்துசம் பொடியது ஆக்கிக்
கரத்தினில் சிலையும் மாற்றிக் காயமும் காயம் செய்தார். 117

கலங்கிமெய் மயங்கி யேபல் கடித்துவில் வளைத்துச் சீறிச்
சலங்கொடு பகழி மாரி தான்சொரிந்து இருவர் தேரும்
பலங்கெடப் பொடித்து நூறு பருங்கணை உரத்தில் விட்டான்
மலங்கியே இருவர் எஞ்சி மயங்கியே நிலத்தில் வீழ்ந்தார். 118

---

113. குளம் - நெற்றி; சளம் - சுழுத்து; சபோலம் - கன்னம்; மொய்ம்பு - தோள்; உரம் - மார்பு; உதரம் - வயிறு, உந்தி - கொப்பூழ்; சோரி - இரத்தம்

114. கூய - குவிய; எருவை - சுழகு; குடிஞை - ஆந்தை; மத மா - மதயானை; வாசி - குதிரை.

115. மான - பெருமிதமுடைய; தானமா - மதயானை (போன்ற); சோனை - விடாத மழை.

116. இருவர் - நகுல சகதேவர்; அவன் - அனுசாளுவன்; உரு - மிகுதி.

117. பற்பம் - துகள்; உரத்து - மார்பில்; முடி - கிரீடம்; துசம் - கொடி; சிலை - வில்; காயம் - (முன்னது) உடல், (பின்னது) புண்.

118. சலம் - தீராத சினம்; பகழி - அம்பு; எஞ்சி - வலி குறைந்து.

இருவரும் வீழ்ந்த பின்,தேர் ஏறி,வில் வளைத்துச் சீறி
வருவதை வீமன் கண்டு வன்கடுங் கோபம் கொண்டு
அரிவிழி அழலே பெய்ய ஆர்த்துஇர தத்தைப் பூட்டிப்
பருவரைச் சாபம் கோட்டிப் பணித்தனன் பகழி மாரி. 119

மாருதி சரத்தைச் சாளு வன்சர மதனால் மாற்றி
கூரிய வொன்று நாலு குலவிரண்டு எட்டுக் கோலால்
சாரதி தலையைத் தூக்கித் தாவிடும் பரியை மாய்த்துப்
பூரிவில் துசம்தேர் பற்பம் போலுற எரித்து விட்டான். 120

தேர்உகை வில்லும் சின்னா பின்னமாய்ச் சிதைந்து வீழ
மாருதி வடவை சண்ட மாருதம் ஒன்றி னாற்போல்
நேரிய கதையைப் பற்றி நெடுஞ்சுழல் விசும்பு உலாவ
ஓர்அடி அடித்தான் தேரும் உடைந்தது பற்ப மாக. 121

இரதம்விட்டு இழிய மற்றோர் அடிஇடி எனவே வைத்தான்
அருவரை பொடிய தாகும் அடியையும் முடியில் ஏற்றோன்
இருசரம் உருவ லாடத்து இருத்தினன் அயர்ந்து வீழ்ந்தான்
பரியதோர் இரத மீதில் பாய்ந்தெதிர் கர்ச்சித் தானே. 122

சோர்ந்துமா ருதியும் வீழச் சுகலீல னோடு சுவேதன்
சார்ந்தசா ளுவன்தன் மீதில் சரமழை மாரி யாக
நேர்ந்தவன் மீதில் வீச நெய்த்தோர்(தம்) மேனி பொங்கக்
கூர்ந்திரு பகழி, யாலே கொடுமரம் இரண்டும் வீழ்த்தி 123

இருபது கணைக ளாலே இருவர்தம் தேரும் மாற்றி,
ஒருபது கணைகள் மார்பில் உருவவே உலுக்கி விட்டான்;
பருவரை இரண்டு சாய்ந்த பான்மைபோல் அயர்ந்து வீழ்ந்தார்;
பொருவிலா எமனா சூரன் பொங்கிய சினத்தோ டுற்றான். 124

---

119. அரிவிழி - வரிசுளை உடைய கண்கள்; பருவரைச் சாபம் - பெரிய மலையைப் போன்ற வில்; கோட்டி - வளைத்து.

120. சாரதி - தேரோட்டி; தூக்கி - அறுத்து; பூரிவில் - நாணை உடைய சிலை; துசம் - கொடி.

121. உகைவில் - அம்புகளைச் செலுத்துகின்ற வில்; தேரும் என உம்மை கூட்டுக; வடவையும் சண்ட மாருதமும் என்க; விசும்பு வானம்.

122. லாடம் - நெற்றி.

123. நெய்த்தோர் - இரத்தம்; கொடுமரம் - வில்.

உற்றுவில் வளைத்து மாரி ஒழிவறச் சொரிதல் போலக்
கொற்றவன் தொடுக்க மற்றோன் கொடுமரம் குழைத்துப் பாணம்
பற்றறச் சொரியும் மாரிப் பான்மைபோல் அவனும் வீச
உற்றிரு வோரும் ஒன்றிற்கு ஒன்றுயர் விலர்தாழ்ந் தில்லார். 125

உருமுடன் உருமு நேர்ந்தே ஊடும்உக் கிரங்கள் போல
இருவர்கைச் சரங்கள் காய எண்டிசை கடல்பா தாளம்
வெருவுறக் கலகஞ் செய்ய வேஒரு முகூர்த்தம் ஒத்தே
சருவுபோ ரினில்கை மிஞ்சிச் சாளுவன் நூறு கோலால் 126

மன்னெம னாசூ ரன்பொன் மார்பகம் உருவ எய்தான்;
தன்னினை வின்றித் தேரில் சாய்ந்தனன் மூர்ச்சை யாக;
அன்னது கண்டு தர்மன் அடைந்துஅவர்க்கு இடுக்கண் செய்த
துன்னலன் மீதில் தேரைத் தூண்டினன் சூறை போல்வான். 127

குருபதி குணக்குன்று அன்ன கொற்றவன் வெகுளி பொங்கி
இருதிசை உம்பர் இப்பார் யாவுமே நடுந டுங்கத்
துரிதமாய் நடத்தித் தேரைத் தொல்வரி வில்நாண் ஏற்றி
விரவுகோல் மாரி வீசி விசும்புகள் அடங்கத் தூர்த்தான். 128

தூர்த்தனன் விசும்பும் திக்கும் தொடர்அலை கடலும்; மென்மேல்
கோத்தனன் பகழி வெய்ய கொடுமரம் நிமிரா வண்ணம்;
சாற்றுசா ளுவன்றன் மெய்யைச் சரம்இடும் குடம்பை ஆக்கி
மாற்றினன் வில்லும் தேரும் வலவனும் துசமும் மாவும். 129

சிலைசயந் தனமும் சிந்தத் திகைத்தொரு தேரில் ஏறி,
வலியவெஞ் சிலையில் வாளி வைக்குமுன், பகழி மாரி
மெலிதர விடுத்துத் தேரும் வில்லையும் அழித்தான்; மீண்டும்
நிலையொரு தேரில் ஏற நிமிஷம்அங்கு அதையும் நீற்றான். 130

---

125. கொற்றவன் - எமனாசுரன்.

126. உரும் - இடி., ஊடும் - போர்புரியும்; உக்கிரம் - பயங்கரம்; காய - அழிக்க, முகூர்த்தம் - மூன்றே முக்கால் நாழிகை அல்லது ஒன்றரை மணிநேரம்.

127. அடைந்து - தானே வலியப் பாண்டவர்பால்வந்து, துன்னலன் - பகைவன்; சூறை - சுழற்காற்று.

128. குருபதி - குருகுலத்தின்தலைவன்.

129. கொடுமரம் - வில்; குடம்பை - கூடு; வலவன் - தேர்ப்பாகன்.

130. சயந்தனம் - தேர்.

மற்றும்ஓர் இரதம் ஏற, வன்னிஅத் திரங்க ளால்தேர்
பற்றியது எரித்து விட்டான்; பாய்வலி முகன்போற் றேரில்
தொற்றியே திரிந்தான்; நூற்றெண் துவசமும் தேரும் நிர்த்தூள்
உற்றுஅவை பொடியக் கண்டே உம்பர்பூ மாரி பெய்தார். 131

வல்லியம் அனைய சாளூ வன்கடும் கோபம் கொண்டே,
வில்லினில் இவனை மேரு வில்லியும் வெல்ல லாமோ?
செல்லுறு மாரி யெல்லாம் சிறிதுஎனப் பெரிது பெய்கோல்
வல்லவில் லானை வஞ்ச மாய்ச்செயிக் கவும்நெஞ் சுற்றான். 132

கரத்தில்ஓர் அயிலை ஏந்திக் காலொடு நிலத்தில் பாய்ந்து
சரத்தினில் கதிர்போல் செல்லச் சாளுவன் மார்பில் கோல்நாலு
உரத்துடன் பதிய விட்டான்; உணர்வழிந் தவனைப் போலப்
பரப்பிய கால்கை யோடு பாரில்வஞ் சனையாய் வீழ்ந்தான். 133

வீழ்ந்தனன் பாரில் என்று வில்இர தத்தில் வைத்துத்
தாழ்ந்தனன் சினமும் போரில்; தருணம்எச் சமயம் என்று
ஆழ்ந்தவன் கொடிய வேலை ஆக்ரகத்து எறிந்தான்; மார்பைப்
போழ்ந்தது; கண்ணா என்று பொற்றடந் தேரில் சாய்ந்தான். 134

பாதகன் இவனோ மூர்ச்சை பண்ணுவான் வேந்தை என்று
மாதவன் செயிர்த்துத் தேரை வலவனை நடத்து கென்னச்
சூதனும் இரதம் தூண்டச் சுவாமியென்று இறைஞ்சி நால்வர்
காதகன் தனையே சின்னங் காணஉத் தாரம் கேட்டார். 135

நன்றுஎன உரைக்க மாயன், நயந்தசாத் தகிஅக் ரூரன்
(ஒன்றிய) கிருத வர்மன் உத்துவா சாரி நால்வர்
வென்றியாய் இரதம் ஏறி வீரகர்ச் சனைகள் செய்து
நின்றசா ளுவனைச் சூழ்ந்து நெருங்கிவெஞ் சரங்கள் பெய்தார். 136

---

131. வன்னி அத்திரம் - தீக்கணை, ஆக்னேயாஸ்த்ரம்; வலிமுகன் - குரங்கு; நிர்த்தூள் உற்று - முற்றிலுமாக அழிந்து.

132. வல்லியம் - புலி, மேருவில்லி - சிவபெருமான்.

133. அயில் - வேல்.

134. ஆக்ரகம் -பெருஞ்சினம்

135. செயிர்த்து - கோபங்கொண்டு; சூதன் - வலவன், தேரோட்டி; காதகன் - கொலையாளி, அனுசாளுவன்; சின்னங்காண - சிறுமைப்படுத்த; உத்தாரம் - ஆனை.

திசைமுகன் எனவே நாலு திசைவரும் கணைகள் எல்லாம்
விசைவடிக் கணைமென் மேலும் விட்டுவிட்டு அறுத்துக் கூய்த்துப்
பசையறத் தேரும் வில்லும் பிளந்தனன்; பாகன் மாவும்
நசையற ஒருவர் போல நால்வரும் பாரி லானார். 137

சக்கரந் தனையே சுற்றி உத்துவர் சாரி வீச,
அக்ரூரன் நேரி சத்தை ஆர்ப்பரித்து எறியச் சூலம்
உக்கிரக் கிருத வர்மன் ஒச்ச,வெங் கதையைச் சுற்றித்
தக்கசாத் தகியும் வீசச் சதுர்ப்பாலும் மடங்கல் ஒத்தார். 138

இரைச்சலும் புகைச்ச லோடும் ஏறியே நாலு பாலும்
விரைச்சலாய் முழங்கிக் கோலும் ஏல்வையில் வெகுண்டு சீறிக்
குரைச்சநாய்க்கு என்பு போடல் எனக்கொடுங் கணைக ளாலே
நிரைத்தடந் தெரிந்து விட்டான் நீறுபட்டு அழிந்தது அன்றே. 139

ஒருவருக்கு ஐயைந்து ஏவல் உடற்றினன் சரநால் ஐந்து;
சருகுநால் வர்கள்தம் மார்பும் தடாரிக்க நாலு திக்கும்
வெருவுடன் அயர்ந்து வீழ்ந்தார் விண்டுகண்டு அதிச யிக்க
உரவணி ருத்தி ரன்றான் உத்திர வொடுந்தேர் விட்டான். 140

(வண்ண விருத்தம்)
(தனன தத்தன தனதன தனதன)

அணியு ருத்திரன் விரைவொடுஇ ரதம்விட
அவனும் மெய்த்திவன் அரிசுதன் முளையென
அணிள னக்குஎதிர் பொருதுதல் கருதினை
எனச மர்த்துநின் இகல்என சிலைஎன
மணிநி ரைக்குல மொடுதிரி பவன்மகன்
மகன்உ னைப்பொரு திடில்என பயன்வரும்?
துணிவை விட்டுநின் உயிர்கொடு செலு;கணை
சொரிவ தற்குமுன் இதுவரை துவரையாய். 141

---

137. திசை முகன் எனவே - பிரமனைப் போல; விசை - வேகமான; கூய்த்து - குவித்து
138. நேரிசம் - எறிபடை, அஸ்திரம்; சதுர்ப்பாலும் - நான்கு புறமும்; மடங்கல் - சிங்கம்.
140. தடாரிக்க - ஊடுருவ; விண்டு - கண்ணன்.
141. அரிசுதன் முளை - கண்ணனின் மகனுக்கு மகன்; நிரைக்குலம் - பசுக்கூட்டம்.

எனஉ ரைத்திட இருவிழி தழலெழ
எனஉ ரைத்தனை அடஉனது இருநகை
தனைஉ டைத்துஅடல் பொடிசெய்து எமனுழை
தனில்அ னுப்புவன் உயிர்நொடி தனில்என
முனிவ ளைத்ததில் எழும்ஒலி குணஒலி
முகில்இ டிக்குலம் வெருவிட மிடலொடு
கனமி கச்சொரி துளியினும் மிகுதொகை
கணிதம் அற்புதம் முறைமுறை சொரியவே. 142

அவன்மி குத்துஅழல் விழியொழு கிடஎயி-
றதுக டித்தனன் நெறுநெறு நெறென;வெய்
தவர்வ ளைத்துஒரு நிலைசர மழைமுகில்
தனைநி கர்த்தெய் இவன்விடு கணைமுனை
கவியெ டுத்துஅலை கடல்அகி செரிபுவி
ககனம் எத்திசை களும்அடல் கதுவின
பவனம் உக்கிர வடவைவல் இடியினை
பரவி ஒத்ததுஇவ் விருவர்தம் பகழியே. 143

பகழி யைப்பக ழிகள்பொடி செய,விறல்
பகழி யைப்பக ழிகள்பரு கிட,வரு
பகழி யைப்பக ழிகள்கறு விட,நடு
பகழி யைப்பக ழிகள்தலை திருகின;
பகழி யைப்பக ழிகள்துளை செய,தவர்
பகழி யைப்பக ழிகள்அது சுட,எதிர்
பகழி யைப்பக ழிகள் பலஎரி செய்தன;
பகழி யைப்பக ழிகள்கடை இடறின. 144

பகழி மொய்த்தன சிலசில முடிமிசை;
பகழி தைத்தன சிலசில நுதன்மிசை;
பகழி உற்றன சிலசில முகமிசை;
பகழி யுட்புகு வனசில களமிசை;
பகழி பட்டுஉரு வினசில புயமிசை;
பகழி தட்டுஉரு வினசில உரமிசை;
பகழி மெய்ப்பட இருவரும் முறைமுறை
பயில்ச மர்த்துடன் விடவிட முடுகியே. 145

---

142. இரு நகைதனை - பெரிய பற்களை, முனி - வில், குணம் - நாண்; கனம் - மேகம், துளி - மழைத்துளி.

143. தவர் - வில், அகிசெறிபுவி - நாகலோகம்; ககனம் - ஆகாயம்; பவனம் - காற்று.

அரண்உ டைத்தன கணைபல; இருவெளி
அறநி றைத்தன கணைபல; சுடர்திசை
விரவி மொய்த்திட நிரவின கணைபல;
விபுத ருக்கிடை விரைவன கணைபல;
வரைகள் தட்டுரு வியமுது கணைபல;
வலிய திக்கயம் அலறிட அகிமுடி
நெரித ரக்கடு உமிழ்தர முறைமுறை
நிகரில் வித்தகர் இகல்அமர் புரியவே. 146

உரசொடு உக்கிர வயிரமொடு இருவரும்
ஒருவ ருக்கொரு வர்கள்அதி சயமுற
அரிய விற்றொழில் நிகருற வருதலின்
அணியு ருத்திரன் மிகுகர விரைசொடு
இரதம் வில்துசம் அணுவுற வலவனும்
இவுளி உட்பட இருதலை உருள்தர
வரிகள் மெய்த்தல முழுவது மறைதர
வரிவ டிக்கணை உதையினன் மழைநிகர். 147

சறுகி மற்றொரு ரதமிசை விரைவொடு
தனுவ ளைத்துஉயர் சரமது தொடுமுனம்
உறுதி வைக்கணை ஒருபது தொடஅவை
உருள்உ டைத்துஅரி வலவனை இடறின;
மறுகி விற்கொடு மறுரத மிசைகொடு
வலியவிற்கணை இருபதுஎய்து இரதமும்
முறிப டச்சிலை பொடிபட அடல்செய்து
முரண்அ ழற்கணை உதையினன் ஒருபதே. 148

ஒருவ ரக்கணை சிரமதில் உருவின;
ஒருவயக்கணை குமிழ்மிசை உருவின;
ஒருக ரக்கணை நுதல்மிசை உருவின;
ஒருவ டிக்கணை கிரிவமது உருவின;

---

145. நுதல் - நெற்றி; களம் - சுழற்று, தட்டு ; பொருந்தி.

146. விபுதருக்கிடை - தேவர்களுக்கு நடுவே, வானுலகில் என்றபடி. அகி - பாம்பு, இவரு ஆதிசேடன்; கடு - நஞ்சு; இகல்அமர் - ஒருபொருட் பன்மொழி.

147. உரசொடு - (ஒருவரோடொருவர்) மோதிக்கொண்டு. உக்கிர - கடுமையாக; வயிரம் - பகைமை; நிகரும - இணையாக; அணுவுற -பொடிபட; இவுளி - குதிரை.

148. உருள் - சக்கரம்; அரி - குதிரை.

இருவி றற்கணை புயமதில் உருவின;
இருதி றற்கணை உரமதில் உருவின;
இருக னற்கணை கரமதில் உருவின;
எருவை கக்கியும் இவன்விழ நிலமிசை 149

மகன்உ ணர்ச்சியது அறநில மிசைவிழ,
வடவை ஒத்திடு விழிதழல் பொழிதற,
மிகுசினத்தொடுஎன் முளைஅயர் வுறமிடல்
வினைவி ளைத்ததுஎன் அதிசயம்? நலதுஇவன்
இகல்கெ டுத்துஉரம் மதிகதி கெடமுடி
இடறி லச்சைசெய்து எவர்களும் நகைசெயும்
வகைஅ மர்த்தொழில் புரிகுவன்; இலைஎனில்
மதிபி ரத்திமன் அலன்என உரைசெய்தே. 150

"அடசி சுக்கொலை பதகன்நி எவளவுஉன்
அடல்என்? விற்றொழில் எனஉயும் வகையது என்?
மடம தித்தன முடன்வரு கருவித
மதம்அ டக்குவன் நொடியினில்" எனஅட
முடிபொ றுத்துள குலம்அல; அரசுஅல;
முரண்உ னக்குஎன? எயில்இலை; நரர்இலை;
இடையன் அத்தன்உன் வலிரிஷி வனிதைய-
ரிடமும் அப்புறம் எவரிடம் இயையுமோ? 151

புலியி னுக்கிணை குடம்என வலிகொடு
புலிநி னைத்துஅமர் பொருவதில் விறலும்இல்;
எலிஎ திர்த்திடில் வருவது மெலிவதுஇல்;
இகலினுக்குஅரி இடைவதுஇல் எனஎன்முன்
வலிய உற்றிடும் உனைவிடு வதுஇலென
வலிய விற்குண ஒலிஎழ ஒருசரம்
நிலவ விட்டனன், இவன் ஒரு கணைகொடு
நிமிஷம் வெட்டினன் நிகரில் தனுஉற 152

---

149. கிரிவம் - சரீரம், சமூத்து; எருவை - உதிரம்; இவன் என்றது அணியருத்திரனை.

150. முளை - மகன், உரம் - வலிமையும்; மதி - அறிவு, இங்கு போர்ச்சுவை; கதிகெட - நிலைதவற; முடிஇடறி - கிரீடத்தை எட்டி உதைத்து, லச்சைசெய்து - பரிகசித்து.

151. பதகன் நீ எனற்பாலது சந்தம் நோக்கி நி என நின்றது, உயும்வகை-(என்னிடமிருந்து) தப்பிப் பிழைக்கும் வழி; நீ முடி மன்னனோ சிற்றரசனோ அல்லன்; உனக்கு முறையான போர்வீரர் இலர், உன் தந்தை ஒர் ஆயன் என்றவன் அனுசாளுவன், ரிஷிவனிதையர் - முனிவர் மனைவியர்.

எதிர்பி ரத்திமன் மிசையிரு சரம்அவன்
இகலி விட்டனன்; இவன்ஒரு கணைகொடு
உதிர வெட்டவும் உயர்சது ககம்அவன்
உருமின் விட்டனன்; ஒருகணை யினில்இவன்
அதிர வெட்டினன்; அவன்ஒரு பதுகணை-
யைவைதொ டுத்தனன்; அறஒரு கணைஇவன்
வதில்வி டுத்தனன்; இகல்கணை சதம்விட
மறுக வெட்டினன் இவனொரு கணைகொடே. 153

சதத சச்சரம் அவன்விட, ஒருகணை
தனில்அ றுத்தனன்; உயர்சத சதம்எனும்
முதுச ரத்தையும் அணுநிகர் பொடிபட
முடுகி வெட்டினன் ஒருகணை யினில்இவன்;
"மதபி ரத்திம! உனைநிகர் வலியர்இல்;
மனது மெச்சினம் உனை"என, "அரிஅரன்
விதியும் மிக்கரும் வெருவிய கணைநரன்
மிகவி யப்புறு வதும்அதி சயமதோ. 154

(அறுசீர் ஆசிரிய விருத்தம்)

என்னடா சாளு வாநீ என்கணைக்கு ஈடோ" என்று
மின்னிய கணைஓர் ஐந்து வில்லில்வைத்து இழுத்து விட்டு
உன்னுதேர் வலவன் சத்தி ஒளிர்மணி மகுடம் வீழ்த்தப்
பின்னிய கலக்கத் தோடும் பெயர்ந்துஒரு தேரில் உற்றான். 155

தேரினில் ஏறி வில்லைச் செங்கையில் வளைக்கும் முன்னம்
ஓரிரு கணைகள் ஏவி உடைத்தனன் தேரும் வில்லும்;
நேரின்மற் றொருதேர் ஏற நிமிஷம்அங்கு அதுவும் வீழ்த்தான்;
பாரின்மற் றொருதேர் ஏறப் பற்பமுற் றிடவே நீற்றான். 156

---

152. குடம் - பசு; விறல் - வலிமை; அரி - சிங்கம். இவன் என்றது பிரத்திமனை. ஈற்றடியின் பிற்பாதியில் ஒர் எழுத்து குறைகிறது.

153. சது ககம் - நான்கு அம்புகள்; உருமின்-இடியைப் போன்று; வதில-பதில்; சதம் - நூறு.

154. சத தசம் - ஆயிரம் 100 X10; சதசதம்-பத்தாயிரம். மத - இறுமாப்பு உடைய; நரன் - மனிதன்.

155. சத்தி - சத்தி, குடை.

156. நீற்றான் - நீறாக்கினான்.

இங்குஇவன் றன்னை விற்கொண்டு இகலுவது அரிதுஎன்று அஞ்சி
பங்கமுற்று இடைந்தே எட்டுப் பருமணி தூங்கும் சூலம்
அங்கையில் எடுத்தான் ஓர்பத் தாயிரம் துலைப்பா ரந்தான்
சங்கரன் கைச்சூ லத்தில் தரும்என ஆர்த்துச் சொல்வான். 157

யாதவன் குலத்தில் வந்த அடபிரத் திமஉன் சீவன்
ஈதுணைச் சூலம் என்னும் எமன்இதோ வருது கண்டாய்;
பேதமில் வீர னாகில் பேணுக உயிரை என்று
வேதமந் திரத்தோ டார்த்து வீசினன் விசைத்து வெய்யோன். 158

கோடிவல் இடிகள் ஒன்றாய்க் குமுறிய முழக்கம் போலும்
சாடிய வடவை யோடு சண்டமா ருதமூ டுற்ற
ஏடைபோல் புகையும் தீயும் இரைச்சலும் விரைச்ச லோடும்
நீடிய புவிவான் திக்கும் நெருப்பதாய் நிறைய மூடி 159

மண்தலம் நடுங்க மேக மண்டலம் நடுங்க நீண்ட
குண்டலம் நடுங்கத் திக்குக் குஞ்சரம் நடுங்கக் கோபச்
சண்டனும் நடுங்க, இந்தும் சண்டனும் திசைகள் மாற.
அண்டிய சூலம் சேர்ந்தோர் ஆவெனத் தொனிஆர்த்து அஞ்ச, 160

உம்பரும் கலங்கச் சூலம் உரத்துஉறும் எனும்முன் எய்த
அம்புபல் அனந்தம் கோடி அடர்ந்துஅடர்ந்து உடற்றும் ஏல்வை
கும்பலாய் எரிமேல் இட்ட கூளமாய் எரிந்து நீற்று
வெம்பரி, பாகன், தேர்,வில், எரித்துவேந் தனையும் வீழ்த்த 161

மாயவன் (பேரன் ஆங்கே) மயங்கியே மூர்ச்சை ஆனான்;
ஆயனும் கோப மாகி அடர்ந்துஅறு சாளு வாஉன்
காயம்நீற் றிடுவேன் ஈதுஓர் கணத்தில்என்று இரதம் தூண்ட,
"ஞாயமோ தேவ ரீர்நீர் நரன்என்மேல் வருதல்" ஈனம் 162

---

157. துலை-தூறுபலம, முந்நூறு தோலா; பாரம்-நிறை.

158. யாதவன்-யதுகுலத்தோன், இடையன் எனினுமாம்; ஈது-இப்போது, வெய்யோன்-கொடியவனான அனுசாளுவன்.

159. ஏடை-ஏட்டை என்பதன் இடைக்குறை. துன்பம்.

160. குண்டலம்-ஆகாயம்; இது மேகமண்டலத்திற்கும் மேலே உள்ள வெற்றிடப்பகுதி; சண்டன்-இயமன்; அடுத்தது சூரியன்; இந்து-சந்திரன்.

161. ஆயன் - கண்ணன்; காயம் - உடல்; ஈனம் - இது இழி செயலாகும்.

மானமும் முனையும் போகும்; மரியாதை யதுதக் காமல்
ஈனமது ஆகும்; மோசம் எய்தும்என்று உணராது இப்போது
ஏனிகல் எதிர்த்தீர்? உம்மை இனிவிடு வேனோ?" என்று
வானவில் நிகர்க்க வல்வில் வளைத்தனன் திகைக்க வானோர். 163

"வந்தனை என்முன்" நன்றாய் வாய்த்தனை வசதி யாகச்
சிந்தினை மாயை யாய்முன் செயித்தவீ ரியம்இன்று" என்று
நிந்தனை யாகப் பல்லை நெறுநெறுன் றுறக்க டித்தே
உந்தியே மண்டி போட்டாங்கு உரத்துவில் தொனித்தான் ஆர்த்தே. 164

கேசவன் தானும் ஆர்த்துக் கெர்ச்சனை யோடு சார்ங்கத்
தேசுறு சிலையைப் பற்றிக் குணத்தொனி செய்யுங் காலை
வாசவன் முனிவர் தேவர் வசுக்கள்ஆ தித்தர் ருத்ரர்
கேசரி மார்க்கம் மொய்த்தார் கெருடர்கந் திருவர் மற்றோர். 165

உலகெலாம் நடுங்க அண்டம் உடைபடச் சங்க நாதம்
நிலையுற முழக்கி நின்ற நெடியனைக் கொடியன் பார்த்து,
"பலிதஉன் இந்த மாயை பலிப்பதுஇல் என்னில்" என்று
அலகிலா வாளி மாரி சொரிந்துஅவ யவம்நி றைத்தான். 166

பற்றலன் சொரிந்த வெய்ய பகழிகள் ஆயன் மேனி
முற்றுமே தொளைத்துஇ ரத்தம் ஒழுகிடப் பழுதி லாத
மற்றுமோர் சூலம் ஏந்தி வலவன்மார் பகத்தில் வீசச்
சற்றுமெய் யுணர்வது இன்றிச் சாரதி மூர்ச்சை யானான். 167

பின்துவா ரகனாம் பாகன் பெருகிய மூர்ச்சை தீர்ந்து,
அன்றரி கேச வாஎன்று ஆயிரம் பேரும் கூறி,
வென்றியாய்ப் புகழ்ந்து,"உன் முன்னே,விழித்துஇமைத் திடும்முன் தெய்வம்
என்றவர் யாரும் மாந்தர் எவருமே நிற்பது உண்டோ? 168

---

163. முனை - போர்முனை, முனை போகும் எனறது தோல்வி யடைவாய் எனும்பொருட்டு.

164. வீரியம் இன்று சிந்தினை என இயையும்.

165. சார்ங்கம்-திருமாலின் வில்; கேசரி மார்க்கம்-வான் வழி.

166. பலித - வெம்மையானவனே, இங்கு சினமுடையோய்; என்னில் - எனதிடத்தில.

167. பற்றலன் - பகைவன்.

168. துவாரகன் - தேரோட்டியின் இயற்பெயர்; உன்முன்தேவரோ மனிதரோ கணமேனும் எதிர்த்து நிறகு இயலுமோ என்றபடி.

சாளுவன் இவன்எம் மாத்ரம் சற்றுமே அச்சம் இன்றி
வாளிநின் பேரில் விட்டு வடுவுசெய் திடவல் லானோ?
மாளஇங்கு இவனைக் கொல்ல மறுத்துப்பா ராட்டல் என்கொல்?
ஆளும்நா யகனே" என்ற அவனைமால் நோக்கிச் சொல்வான். 169

"இவனைஇப் போதுஎம் மாலே இகல்விறற் கொளவொ ணாது
துவாரகா! இவன்மேல் சீறித் தொடுத்திடும் பாணம் எல்லாம்
அவமுறும்; கோல்வீண் போச்சுஎன்று அவமரி யாதை எய்தும்;
செவையல இவன்மேற் போர்செய் திடல்என இருந்தேன்" என்றான்.
170

"அய்யனே! எவனை யோநீ ஆள்பண்ண இந்தக் கோலம்
செய்கிறாய்?" எனவும் பாகன் திகைத்துற நகைக்குங் காலை
வெய்யநா ணூறு கோலை வில்லில்வைத்து இழுத்து விட்டான்;
மையன மெய்யன் மெய்தேர் வலவன்மா இலக்கது ஆக 171

சதுசத கோலும் வெய்ய தழல்களைச் சொரிந்து கொண்டு
பதிபரி சரன்அச் சுக்ரீ பன்மேய புட்க ரத்தில்
புதைதரத் தைத்த போது பூமிசை மூர்ச்சை யுற்றான்;
உதைசரம் நூறால் தேரின் உருள்உறப் புதைந்த குவவில் 172

தொடைஒரு நூறி னாலே சூதனும் மூர்ச்சை யுற்றான்;
படியளந் தவனும் நூறு பகழியால் அணையில் சாய்ந்தான்
நடுநடு நடுங்கித் தேவர் நலிவறத் திகைத்து நின்றார்;
இடிகளும் திகைக்கக் கர்ச்சித்து எழுந்தனன் விசையன் என்போன்.
173

பற்கடித்து அதட்டி மீசை படபடென்று அடிக்க முன்கை-
யிற்கடித்து இரத்த மேகொப் பளித்துஇரு விழித்தீப் பெய்து
விற்பிடித்து அண்ட கூடம் வெடிக்கவிற் குணம்செய் திட்டான்;
நிற்கும்விண் ணவர்கள் அஞ்சி நிலைதளர்ந்து உலறிச் சோர்ந்தார். 174

---

169. வடுவு - தழும்பு, இங்கு காயம்.

170. இகல்விறல் - போர்வெற்றி; அவமுறும் - வீணாகிவிடும், கோல் - அம்பு, செவை - செவ்வை என்பதன் இடைக்குறை.

171. ஆள்பண்ண - ஏமாற்ற என்பதன் பேச்சு வழக்கு போலும்; மை அன மெய்யன் - மேகம் போன்ற மேனியன்.

172. பரிசரன் - படைத்தலைவன்; அ-நெஞ்சரிசுட்டு; மேய - (தன்னை) மூடிய; புட்கரம் - அம்பு, குவவு - நிலம்.

173. தொடை - அம்பு, சூதன் - தேர்ப்பாகன்; பகழி - பாணம்; படி அளந்தவன் - உலகளந்த பெருமான்; 174. வில்குணம் செய்தல் - சிலையில் நாண்ஏற்றுதல்.

"அய்யஉன் விற்கோல் ஒன்றற்கு அவன்அற்பன் பற்று வானோ?
நொய்யவன் இலக்காய் வில்லை நோக்கிநீ எடுத்தது என்கொல்?
பையல்யான் அவனைச் சின்னம் படுத்தவும் பற்றி லேனோ?
வெய்யவன் றனைவெல் லேனேல் விடகிதன் நானோ" என்றே, 175

"நீயொரு பொருட்டோ என்று நிகழ்த்திடாது அடியேன் றன்னை
சேயெனும் தயவி னாலே சிறிதருள் புரிவாய்" என்று
தூயபொற் சரணம் பற்றும் தோன்றலை வாரி, முத்தி
ஆயவன் மார்பில் சேர்த்து, "அய்ய!நீ சிறிய பாலன்; 176

முதியவில் லவரை எல்லாம் மூர்ச்சைசெய்து அடர்த்த துட்டப்
பதகனை ஒருகோ லாலே பங்கம்ஓர் நொடியில் செய்வேன்;
குதலைநீ நிற்றி" என்னக் "கோதண்ட ராமன் அன்னாய்!
பதியினீ அமரிற் செல்லப் பார்த்துயான் நிற்பது உண்டோ? 177

தந்தைசொல் மறுத்துப் பேசும் தனயன்என்று உரையாது ஐய
எந்தனை அனுப்பு வாய்"என்று இறைஞ்சிய மகனை "மெய்த்தே
கந்தன்ஒப் பாக வெற்றி பெறக்கட வாய்;ஒன் னாரைச்
சிந்து"எனச் சிந்து தோணி தேரும்ஈந்து அனுப்பி னானே. 178

அந்தநேர் மேக வண்ணன் அர்ச்சுனன் பாதம் போற்றி,
"எந்தனை மகிழ்ந்து போரில் ஏவு"கென்று இரந்து நிற்ப,
"முந்தஅங்கு அவனுக்கு ஈந்தேன்; முயன்றுபின் வந்தாய்; உந்தை
தந்திடும் விடைஉண் டாகில் சமர்க்குநீ ஏகு" கென்றான். 179

நன்றென விடகீ தன்றன் நளினபா தங்கள் போற்றி
இன்றெனக்கு அருள்உத் தாரம் இகற்குஎனக் கேட்குங் காலை
அன்றுஅவன் றன்னை மார்பில் அணைத்துநன்று ஏகு கென்னச்
சென்றனன் பகைவன் தேரில் சீயமொத்து எழுந்து பாய்ந்தான். 180

---

175. நொய்யவன் - வலியற்றவன், புற்றிலேனோ - போத மாட்டேனோ; விடகீதனன் கூற்று இது.
176. சேய் எனும் தயவு - சன்னன் அருச்சுனனுக்குத் தாய் வழியில தமையன், விடகீதனன் சன்னன் மகன், எனவே விஜயனுக்கும் சேய், முத்தி - முத்தமிட்டு; ஆயவன் மார்பு - திரண்டுவலிமைபெற்ற உரம்.
177. பங்கம் - சிறுமை; குதலை - இளையவன்.
178. சிந்து - அழிபபாய்; சிந்து தோணி - சொரியப்படும் அம்புகள், வினைத்தொகை.
179. உந்தை - உன்தந்தை என்றது விடகீதனனை; மேகவண்ணன் - வீமனின் பேரன், மேகவண்ணன் தந்தை கடோர்க்கசனும் சன்னன் மகனும் சகோதரர்கள், எனவே மேகவண்ணனுக்கு விடகீதனன் தந்தைமுறை
180. சென்றனன் - போனவனாகிய மேகவண்ணன், வினையாலணையும்பெயர்; சென்றனன் பாய்ந்தான் என்பது முடிபு.

பாய்ந்துள அதிர்ச்சி யாலே பரிகள்தேர் பாகும் தூளாய்த்
தேய்ந்தது;அங்கு அவன்றன் மார்பில் திக்கென உதைத்துச் சேணில்
பாய்ந்தனன் வெற்பி னோடும்; பதைத்துஅவன் திகைத்து வீழ்ந்து,
காய்ந்தவன் யாரோ என்று ககனிடை தெளிந்து நோக்கும். 181

நோக்கலும் பிடித்த வெற்பை நொறுக்கென அவன்மேல் விட்டுச்
சீக்கிரம் புவியிற் பாய்ந்து சிவையொடுஓர் தருவைப் பற்றி
மேக்குற எழுந்தான்; முன்னம் விட்டதோர் வெற்பை நீறாய்த்
தாக்கினன் சரத்தால்; மீண்டோர் தடியுடன் இவனும் பாய்ந்தான். 182

பற்கடித்து ஆர்த்து வீரம் பகர்ந்தமே கவண்ணன் முன்னம்
கற்கதை கொண்டு சென்று, கழறிய போலப் போரில்
நிற்கவல் லவனே யாகில் நில்லடா என்று நேர்ந்தான்;
மற்குவீ ரியர்வே கத்தில் மலைமலை எதிர்ந்தது ஒத்தார். 183

நாகமும் நாகம் போலும்; நரையுடன் நரையும் போலும்;
மேகமும் மேகம் போலும்; வெடியுடன் வெடியும் போலும்;
தேகமும் விசையும் ஆர்ப்பும் சிரமமும் சிரம்உ ரோசும்
வேகமும் ஒத்த போரில் மிஞ்சியே மேக வண்ணன் 184

தன்பராக் கிரமத் தோடும் தன்புய வலியி னோடும்
முன்புஉரோ சத்தின் இன்று முடுகுஅனு சாளு வன்றன்
என்பெலாம் நெரிய ஓங்கி இடியென அடித்தான் கொல்லர்
வன்புஅரா வியதூள் போல மரம்எலாம் பொடிந்து வீழ்ந்த 185

மறுத்துஅனு சாளு வன்றான் வன்புய வலியி னோடு
குறித்துஎதிர் அடித்தான் தண்டம்; கொடுமுடி மீதில் பட்டுத்
தெறித்தது பற்ப மாகச் சீறியே இரண்டு பேரும்
பொறுத்தனர் மற்போ ராகப் புரிதொழில் இயற்றி நின்றார். 186

---

181. காய்ந்தவன் - சினங்கொண்டவன், இங்கு போருக்குவந்தவன், சுகனிடை - வானில்.
182. சிவையொடு - வேருடன்; தரு - மரம்; மேக்குற - மேலே, தடி - கதை.
183. முன்னம் - எதிரில், நேர்ந்தவன் - அனுசாளுவன், மற்கு - மல்லுக்கு, போரில்.
184. நாகம் - யானை, நரை - காளை; சிரமம் - முயற்சி; உரோசு - உரைஞ்சுதல்.
185. முன்பு உரோசததின் இன்று முடுகு - முந்நாளில் பாரதப்போரில் தன் தந்தையைக் கொன்று விட்டார்களே எனும் கோபத்தால் இப்போது வலியப் போர் தொடுத்துள்ள, வன்பு - வலிமையுடன்; அராவிய - அரத்தால் தேய்த்த; தூள் - உலோகப்பொடி.

(எழுசீர் ஆசிரிய விருத்தம்)

கையொடு கையும், தலையொடு தலையும்,
காலொடு காலும்,மற் புயமும்,
மெய்யொடு மெய்யும், உரத்தினொடு உரமும்,
விரவிய இடியினொடு இடியும்,
தொய்வுற உதைக்கு உதை,அறை அறைக்குத்
தொடர்ந்துறு குத்துக்குக் குத்தும்,
எய்வுறாது இடமும் வலமுமாய், வலமும்
இடமுமாய் இகல்அமர் புரிந்தார். 187

ஒருவருக் கொருவர் மிக்கதாய்க் கட்டி
உறுக்கியே இறுக்கிஉக் கிரமாய்ச்
சருவுகை சேர்ந்து கட்டியே உருட்டித்
தடையற அந்தரத் திருந்து
துரவிசைச் சுழலாய்க் கிறுகிறு கிறெனச்
சுழன்றுஅனு சாளுவன் மேலும்
விரவிய மேக வண்ணனும் கீழாய்
விழுந்துஇரு வோரும்மூர்ச் சித்தார். 188

அயர்ந்துகீழ் வீழ்ந்தோன் எழுமுனம் மேல்வீழ்ந்-
தவன்களை தீர்ந்துஎழுந் திருந்து,
வியர்(ர்)ந்து"வில் விசயன் கலங்கியே தீர
வெருவியே ஒளித்தனன்; வீரன்
பயந்திடப் போமோ?" என்றுஉரைத் திடவே
பல்நெறு நெறுவெனக் கடித்தே
உயர்ந்துஒரு சவளத்து அளவெழுந் திருந்தே
உறுக்கிவற் புறுத்திஉக் கிரமாய். 189

முன்கையைக் கடித்துக் குருதிகொப் பளித்து
முப்புரம் எரித்தருத் திரனொத்து,
"என்கழ றினை?நீ யோஒரு வீரன்?
ஏவுவில் பிடிக்கவல் லவனோ?

---

188. சருவு கை - போர் புரியும் கை, வினைத்தொகை.

189. வியர்ந்து - சினங்கொண்டு, தீர - மிகவும்; சவளம் - வேல்.

உன்கடை வாயைக் கிழிப்பனிப் போது"என்று
உக்கிர வீரபத் திரன்போல்
தன்கதிர் விழியால் நெருப்பினைச் சொரிந்து
கோபதா பத்துஇராக் கதனாய் 190

"விற்பக ழிக்கே இராசரா சேந்த்ரன்
விசயன்என்று உலகெலாம் விளங்கும்
அர்ச்சுன வீரன், வீரமார்த் தாண்டன்,
ஆண்டவன் வீரர்கட்கு எல்லாம்
சர்ப்பம்நீ புள்ளுக் கரசினைத் தேடும்
தகைமையொத் தனையடா சாளுவா
புற்பனி கதிரைப் பொருதுமோ? கூளம்
பொங்கழ லினைப்பொரு திடுமோ? 191

விற்கரத்து எடுக்கும் விதமதே தெரியாய்
விசயன்முன் நிற்கவல் லவனோ?
துர்க்குணத்து இகலச் சந்தையேற் றைப்போல்
தோற்றினை உனைவிடு வேனோ?
பற்குன மகிபன் பாததூ ளிக்கும்
பற்றிலேன்; சமர்பயில்" என்று
விற்குணம் செய்யத் தொனியினால் திசைகள்
விண்டலம் மண்டலம் நடுங்க. 192

எண்கிரி சிதற எண்கரி கதற
இருசுடர் திசைதடு மாற
ஒண்கடல் சுவற உடுவினம் உதிர
ஊழிமா ருதவட வையைப்போல்
பண்பொடும் இரதம் நடத்தியே பாணம்
பரம்பரை யாய்வரு ஷித்து
மண்ணக னங்கள் எங்குமே அடைத்த
மருவலன் கணைபொடி படுத்தி 193

---

191. சர்ப்பம் - பாம்பு; புள்ளுக்கு அரசு - கருடன்; புற்பனி - ஒரு புல்லின் நுனியில் தங்கியுள்ள பனித்துளி. கூளம் - குப்பை.

192. சந்தையது - சந்தைகளில் திரியும்பன்றி.

193. எண்கிரி - எட்டுக்குல வரைகள், எண்கரி - எட்டுத் திசை யானைகள்; பரம்பரை - தொடர்ச்சி; சுகனம் - வானம்; மருவலன் - பகைவன்;

(வண்ண விருத்தம்)
(தனதான தனனதன தனதான தனனதன
தனதான தனனதன னா)

அனுசாளு வனும்நினைவு தடுமாறி உணர்வுஅழிய
அவன்நாவும் உலறிமெலிய
கனமாரி வெருவஇடி கணைமாரி பொழிசெய்துஎதிர்
கருதாது சரம்அரணதாய்
முனிவீரன் முனிவினொடு சரகூட மதுசெய்துகை
முறையோடும் இரதமுழுதும்
நனிவாளி செருமஉடல் மயிர்ரோமம் முழுதும்மிகு
நனிவாளி யவைசெருமவே. 194

இருவாளி முடிஇடற, இருவாளி நுதல்உருவ,
இருவாளி களம்உருவவே
இருவாளி புயம்உருவ, இருவாளி உரம்உருவ
இருவாளி சிலைஇடறவே,
ஒருவாளி விருதுபகர் உரவாயுள் உருவஉணர்வு
அறவாய்செந் நதியொழுகவே
விரிவான அயர்வினொடு அனுசாளு வன்விழவும்
விறலாக வினைஅமர்செய்தே. 195

(தனனா தனன தந்த தனனா தனன தந்த
தனனா தனன தந்தனா)

அனுசா ளுவன்அ யர்ந்து விழவே சினமி குந்து
அடர்வா கினிம யங்கவே
கனமா மழைபொ ழிந்த தெனவே சுரச ரங்கள்
கணிதா கணித மின்றியே

---

194. சரம்அரண் - அம்பினாலான மதில்; சர கூடம் - அம்பினால் அமைந்த தடுப்பு; செருமல் - நெருக்கமாகத் தினிதல்; மயிர் - ரோமம், ஒருபொருட் பன்மொழி.

195. விருதுபகர்உரம் - பெருமையைச் சொல்விக் கொள்ளும் ஊக்கம்மிக்க.

தனுவா னதுவ ளைந்தது அமரா (வித)ம்அ னந்த
சரமா னவைசொ ரிந்ததால்
முனையார் அவய வங்கள் புறமே னிகள்அ டங்க
முறையாய் மிகநி றைந்ததே . 196

ஒருகோ லதும்அ னந்த உடல்தோ றினும்நு ழைந்தது;
ஒருமே னியில்மி குந்தகோல்
விரிவார் சுமைநி றைந்த; இருதாள் தொடைகு றைந்த;
இடையே பலபொ டிந்த;வெங்
கரமே பலஅ றுந்த; முகமே பலபி ளந்த;
களமே சிலபி ளந்துஅகம்
சிரமே சிலத ரிந்த; உரமே சிலத ரிந்த;
சிலபேர் புயம றுந்தவே . 197

சிரமே பலகு விந்த; முடியே பலகு விந்த;
சிலையே! பலகு விந்த;வெங்
கரமே பலகு விந்த; தொடையே பலகு விந்த;
கழலே பலகு விந்த;வல்
உரமே பலகு விந்த; புரமே பலகு விந்த;
உருள்தேர் பலகு விந்த;சிந்-
துரமே பலகு விந்த; பரியே பலகு விந்த;
துசமே பலகு விந்தவே. 198

மலையே பலக வந்தம்; உகுசோ ரிகள்பி றங்கு
மறிசோ ரிகள்கு ளங்கள்;பூ
மலர்தா மரைமு கங்கள்; கொடியே குடரி னங்கள்;
மயிர்பா சிகள்;க ரங்கள்மீன்;
இலைஈ ரல்கள்;கு விந்த பிணமே கரை;ம ரங்கள்
எழிலா கியது சங்கள்;வெண்
தலைமூ ளைகள்நி ணங்கள் நுரை;ஆ மைகள்கு றங்கு
தருசா மரைஅ னங்களாம். 199

---

196. வாகினி - படை, சுரசரங்கள் - தெய்வீகக் கணைகள், கணிதா கணிதம் இன்றி - கணக்கற்று; அமராவிதம் - (சற்றும்) இடைவிடாமல், முனையார் - போர்முனையிலுள்ள வீரர்கள்.

197. இரண்டு, மூன்றாவதடிகளில் ஈற்றுச்சீர் தந்ததந் என பயின்றது.

198. புரம் - உடல், இங்கு தலையற்ற முண்டங்களைக் குறித்தது; சிந்துரம் - யானை; துசம் - கொடி; இப்பாடலிலும் மூன்றடிகளில் ஈற்றுச் சீர் குழிப்பு மாறி நின்றது.

உடலே பலஇ டங்கள்; கழுநீர் விழியி னங்கள்;
உறுதேர் அரிய வங்கமாய்
அடல்ஆ கவம்இ யைந்த வொருபா தியும்அ ழிந்த;
மறுபா தியில்ஒ ழிந்தபேர்
வடிவாய் விரவு கங்க மெனும்யூ கமும்உ டைந்து
வருகா லினில்எ ழும்புபஞ்சு
அடைவாய் எதிர்த்த ளங்கள் முதிர்வா கினது கண்டு
சமரா னதுது றந்தபின் 200

விடகீ தனன்ம கிழ்ந்து களையா றினன்இ ருந்து
விறலார் தொடைபு னைந்தகால்,
அடல்மீ தினில்அ யர்ந்த அனுசா ளுவன்எ ழுந்து
அணிமே வியத ளங்கள்போம்
இடம்ஈ தனஅ றிந்து கிலம்ஈ தனவெ ருண்டு
இருநால் திசைமு கங்களும்
நடமா டினக ணங்கள் நதிசோ ணிதமி குந்த
நவையா னவைகள் கண்டனன். 201

(தனதான தனனதன தனதான தனனதன
தனதான தனனதனனா)

அடடாஇது எனபுதுமை நொடிபோதில் நமதுபடை
அணியாவும் நிலையழியுமோ?
உடல்கூறு பட,அழியும் உடல்சேறு பட,எருவை
யுளதுஆரு பட,இரதமும்
இடிநீறு பட,மலைய மலைபோல இடமுமிக
எண்இலாத பிணம்மலிதலால்
விடகீத னனைவிடுவ திலைநானும் எனஇரத-
மிசையேறி வளைவிலுடனே 202

---

199. கவந்தம் - முண்டம்; உகுசோரி - பெயயும் மழை, பிறஙகு - போன்ற; மறிசோரி - மறிக்கப்பட்ட உதிரம், கவந்தங்களால் தடைசெய்யப பெற்ற இரத்த வெள்ளம்; மலர்தாமரை முகங்கள் பூ என்க, மலர்தாமரை - வினைத்தொகை, கொடி - நீர்த்தாவரக்கொடி; குறங்கு - துடை, சாமரை - வெண்கவரி. இது முற்றுருவகம். அடுத்தபாடல முதலடிவரை.

200. இடங்கர் - முதலை; வங்கம் - மரக்கலம், ஆகவம் - இயைந்த போரில் ஈடுபட்ட, கங்கம் எனும்-யூகம் - கருடவியூகம; வருகால் - வீசும் காற்று, பஞ்சு அடைவாய் - பருத்தியைப் போன்று, முதிர்வாகினது - சுருங்கியதை.

201. கிலம் - அழிவு, இரட்டுறமொழிதலாகச் சிறுமையையும் கொள்க, கணங்கள் - வீரர்கள்; நதி சோணிதம் - இரத்த ஆறு; நவை - குற்றம்.

202. எருவை - பருந்து; ஆருபட - பொருந்த, வந்தடைய; மலைய - கண்டோர் வியக்கும்படி.; வளைவில் - வினைத்தொகை.

(தனன தனதன தனன தனதன
தனன தனதன தானனா)

எனையும் அயர்வுற அனிகம் இழிதர இகலும் மடவிட கீதனா!
உனது சடலமும் ஒழிய உயிர்எம னுழையில் அருளுவன் நான்எனா
முனையின் உடன்வரு பவனை ரவிசுதன் முளையும், "எதிர்அனு சாளுவா!
நினது புயவலி அறிதும் அறிதும்;உன் இகலது என்முனம்அ டாதடா; 203

அடட உனதுவ லமைசொல் வதைவிடு; அணுகுள னிடம்;அனு சாளுவா!
எடட சிலைகையில்; விடட பகழியை; இதய மதுபய மாகினால்
நடட உயிர்கொடு" எனும்முன் எயிறுறு நறுந றென,"விடு கோலைநீ
தடட" எனஅறு கணைகள் உரமிசை தழுவ விரைசொடும் ஏவினான். 204

(தனன தனதன தனன தனதன
தனன தனதன தனதனா)

உருமது எனவரு கணையும் உரமிசை உருவி வெரிநிடை ஒழுகவே,
விரைவின் உயிர்உடல் விலகி மறுபடி ஓரவி வரில்என புருவமே
நெரிய, விழிஅழல் சொரிய, நெறுநெறு நெறென எயிறது கறுவியே
அரித மலைநிலை குலைய உலகமும் அலைய விலுகுண ஒலிசெய்தான் 205

வரிவில் ஒடிதர, மகுடம் உருள்தர, வரக வசம்அற, வலனும்மா
பரியும் அறுபட, இரத மொடுகொடி படியில் இடிதுக ளதுபட,
நெரிய ஒருபது கணைஎய்து அவன்உடல் நிறைய ரிகுகணை சொரியவே
முரணி னொடுபதில் இரதம் மருவியும் முனிலக கொடுசமர் முடுகவே 206

படல முகில்எழு பரவை யுளபுனல் பருகி இருதிசை பரவியே
மிடலி னொடுபொழி மழையை நிகர்வன விசிகம் முறைமுறை சொரியவே
முடலை யுடன்அவன் விடுபல் பகழிகள் முழுதும் அழிவுற ஒழிவுற
நடல முடன்இவன் அவனில் இருபடி நகுபல் பகழிகள் பொழியவே 207

---

203. அனிகம் - சேனை; ரவி - சூரியன்; ரவிசுதன் - கன்னன்; முளை விடகீதனன்.

204. விரைசொடும் - வேகமாக.

205. உரும் - இடி, வெரிந் - முதுகு, அரித மலை - திசை மலைகள் எட்டும்; விற்குணம் எனற்பாலது சந்தநோக்கி விலுகுணம் என நின்றது.

206. வர கவசம் - உயர்ந்த உலோகச் சட்டை; பதில் இரதம் - வேறு தேர்; முனி - வில்.

207. பரவை - கடல்; மிடல், முடலை - வலிமை; விசிகம் - அம்பு; நடலம் - செருக்கு. இங்குப் பெருமிதம்; இருபடி - இரண்டு மடங்கு.

இதனில் இவன்மடி வுறுவது இலைஎன இடல வயமுச லமதுஎடுத்து
அதிக தயிரிய புயவ லிமையொடு அநில விசையுடன் எறியவே
பதிபல் உலகுகள் அலைய முடுகிய படையை அறுபது பகழியால்
உதைசெய் திடஅது தவிடு பொடிஎன உவரி அறல்நிகர் உதிரவே
208

நெடிய வரைநிகர் கொடிய கதைகையில் நிறுவி விசையுடன் எறியவே
இடியது எனவரு தடித விடுபட இவன்எய் திடுகணை எரிசெய்தே
முடுகி ஒருகுலி சமதை விரைவொடு முனையின் எறியவும் அதனையும்
பொடிபொ டியதென உதிர மிகுகணை புரவ லனுமெய்து நகைசெய்தான்.
209

முனிவி னுடன்ஒரு திகிரி தனைவிட முறிய மிகுகணை இவன்எய்தான்;
சினம துடன்எறி படைகள் பலபல சிதற உதறினன்; விசிகம்எய்து
அனைய படைகளும் ஒழிய, வெயில்விரி அயிலை விசையுடன் எறியவே,
முனியில் விடுபடை பகழி மழைமுறை முறைஎய் திடஅதை முடுகியே
210

எரியில் இடுசரு கெனவும் எரிசெய்து இவனை முடுகுமுன் அசிகொடே
இரவி நிகரொளி பரிசை கொடுகரி எனவும் எதிருற எய்திநீடு
அரிய வசிகொடு முறிசெய் விறல்தனை அமர வலிமையொடு அணுகியே
பரவி அவன்விடு கணைக ளைஒருபொடி படவில் அசிகொடு சிதறியே
211

(எழுசீர் ஆசிரிய விருத்தம்)

தத்தியே வலவன் தலைதனை உருட்டிச்
சதுவயப் பரித்தலை நறுக்கி
எய்த்துஅடல் துசமும் கம்பமும் நறுக்கி
இரதம்அச்சு உருள்களும் உடைத்துப்

---

208. இடல - பெரிய; வய - வலிய; முசலம் - கதை, அதில விசை - வாயு வேகம்; படை - ஆயுதம்; உவரி அறல் - கடற்கரைமணல்.

209. தடி-கதை, குலிசம் - வச்சிரம்.

210. திகிரி - சக்கரம்; விசிகம் - அம்பு; அயில் - வேல்; முனி - வில்; எறிபடை, விடுபடை - அஸ்திரம்.

211. அசி - வாள்; பரிசை - கேடயம்; வசி - வாள்; வில்அசி - வில்லாகிய ஆயுதம், இருபெயரொட்டு.

பற்றிய சிலையும் துணித்துமெய் அணிந்த
பரம்அறுத்து உரமிசை உதைத்துத்
தொத்துஅணி தலையின் மயிர்இடக் கரத்தால்
சுற்றியே பிடித்துறத் தூக்கி 212

விசையுடன் எழும்பி நிலமிசை வீழ்த்தி
வெங்கடுஞ் சினத்துடன் உறுக்கி
வசிகரம் விசைய தாகவே ஓங்கி
அறுத்திட ஒருத்தலித் தளவில்
கசிவுடன் பயந்து நடுநடு நடுங்கிக்
கழல்இரண்டு இருகையால் பற்றிப்
பிசியன்வன் கொடியேன் செயும்அப சாரம்
பிழைபொறுத்து அருள்அடற் பெரியோய் 213

அய்யநின் தாதை இல்லெனாது யாரும்
அபேட்சையுற் றவைஎலாம் அருள்வோன்;
மெய்யநீ வதையாது எனதுயிர் உதவாய்;
வீரனே! வீரஉத் தண்டா!
துய்யநின் சரணம் கதிஎன அனந்தம்
தோத்திர மாய்மிகப் புகழ்ந்து
பையல்யான் உனது பரம்பரம் எனவே
பரிதவித்து இடைந்துபல் கெஞ்ச, 214

"நன்று;நீ மதியாது உன்மதாந் தத்தால்
நகரிவிட்டு, என்நகர் அடைந்து,
வென்றிவாம் பரியைக் கரவுசெய்து, அரிய
வீரவீ ரியர்கள்சோ பிக்க
நின்றமர் புரிந்தாய்; உனைவிடல் அன்று;
நீசர ணடைநிமித் தத்தால்
கொன்றிலன்; கழலை விடு"கென நட்டான்
கொற்றவன் உறையினில் வாள்தான் 215

---

212. கும்பம் - கொடிமரம்; சிலை - வில்; பரம் - சுவசம்; தொத்து - மலர்க் கொத்து.

213. வசிகரம் - வாளேந்திய கை, இரண்டன் உருபும் பயனும் உடன்தொக்க தொகை. ஒருத்தலித்தல் - முயலல்; ஒருத்தலித்த அளவில எனவிரிக்க; பிசியன் - பொய்யன்; அடற்பெரியோய் - வலிமையில் சிறந்தவனே.

214. அபேட்சையுற்றவை - விரும்பியவை; வீர உத்தண்டா - வீரரில் சிறந்தோய்; பரம் - தஞ்சம்;

215. மத + அந்தம் - மதாந்தம், செருக்கினால விளைந்த குருட்டுத்தனம்; சோபிக்க - துன்பமடைய; கொற்றவன் வாள் தான் உறையினில் நட்டான் என இயையும்.

"எந்தனது உயிருக்கு இறுதிகள் எய்தாது
இன்னுயிர் காத்திடக் கைநீர்
தந்திடில் விடுவேன்" எனவும்,"யான் உன்னைத்
தறிக்கிலேன் என்கையி னாலே;
சிந்ததி பதியாம் சயவிச யனைநீ
சிறுமைசொற் றனை;யதஃ தன்றி
எந்தையாம் தருமன் சிந்தையா தோ?இங்கு
இவர்பதத் தினில்உனைச் சேர்ப்பேன். 216

நின்னையான் வேண்டி, இவர்பதம் இறைஞ்சி,
நினக்குஉப காரமாய் நிற்பேன்;
முன்னிய விதியின் முடிவுஎதோ அறியேன்;
முசிப்பற எழு"கென அறைந்தான்.
அன்னசொல் வழியே அயர்ச்சிதீர்ந்து எழுந்தே
அர்ச்சுனன் பதமல ரடியில்
நன்னய மாக இருவரும் இறைஞ்ச
நளினவெங் கரத்தினால் எடுத்தே 217

மருமமீது அணைத்தே உச்சியை மோந்து
மலர்விழித் தரளம தாலே
சிரவபி ஷேகம் செய்துபின் மகனைச்
சிந்தைகூர்ந்து இருவிழி நோக்கிக்
கரதலம் இரண்டும் கண்ணினில் அணைத்துன்
கைவலி தனைகணாற் காண
உரியநற் றவஞ்செய் திருந்திலன் கொல்லோ
உந்தைஎன்று உருகினன் மன்னோ. 218

சிந்தைநொந்து உருகும் தந்தைதாள் இறைஞ்சித்
திருமலர்க் கண்களின் நீரால்
கந்தனை யனையான் இருபதம் கழுவிக்
கவலுவன்; "விதியையார் கடப்பார்?

---

216. கை தந்திடில் - சத்தியம செய்து கொடுத்தால், தறிக்கிலேன் - வெட்ட மாட்டேன்;
217. நின்னை வேண்டி - உன்உயிரைக் காக்கவேண்டும் எனப பிரார்த்தித்து; இவர் - தருமன், அருச்சுனன்; முசிப்பற - மெலிவடையாமல்; நளின - தாமரை போன்ற.
218. விழித்தரளம் - கண்ணீர்முத்து, உந்தை - உனது தந்தையாகிய கன்னன்.

தந்தையே ஒழிந்தும் ஐந்துபேர் எனக்குத்
தாதைய ராகவே இருக்க
எந்தனுக்கு இலைஓர் குறை;மனது இடைவது
என்கொல்?எந் தாய்"எனத் தேற்ற. 219

சொல்லிய குமரன் மொழிஇரு காதில்
சுரம்அமுது எனத்துயர் அகற்ற
வில்லிதன் மடியில் வீரனை ஏற்றி,
"விறல்கொள்ஐ வோர்க்கும்நீ அன்றி
நல்லகா தலன்ஆர்" என்றுஇனிது இருக்க
நரன்அடி சாளுவன் பணிந்து,
"புல்லன்யான் பகர்ந்த மொழிஅப சாரம்;
பொறுத்தருள் புரி"கெனப் புகல்வான். 220

"உம்பர்கள் தம்பி ரான்உந்தன் தமையன்
உலகினும் மிகுபொறை உடையான்;
நும்பெயர் விசயன்; நீகைவில் ஏற்றால்
நுவல்அரி அரன்அயன் நடுங்கும்;
இம்பர்உம் பருமே நடுநடு நடுங்க
இசைதிசை விசயமே செய்தோய்!
நம்பினேன் உனது பதமலர்; அடியேன்
நல்லுயிர் அளித்தருள் புரிவாய்." 221

எனப்புகழ்ந்து அடைந்தோன் மிகுந்ததோத் திரஞ்செய்-
திட,மகன் றனைமுகம் நோக்க,
மனக்கிரு பைகள்சேர் முகக்குறிப்பு ஓர்ந்து
மகன்அவன் றனக்குமன் றாடச்
சினத்துஇகல் வயிரம் ஒழிந்து,"நன்று; எழு"எனச்
"சீவனுக்கு இறுதிவா ராமல்
எனைப்புரப் பேன்என்று, அருள்செய்வீர்" என்றான்;
"என்கையால் இறுத்திலேன் எனினும் 222

---

219. ஐந்துபேர் - பாண்டவர்; இடைவது - வருந்துவது.
220. நரன் - அருச்சுனன்.
222. அடைந்தோன் - அனுசாளுவன், மகன் - விடசீதனன், அவன் - அனுசாளுவன்.

மானசம் பன்னன் தருமபூ பதிதன்
மனநிலை அறி"கென உரைக்கத்
தானமால் அருளால் மூர்ச்சையா னவர்கள்
சகலரும் எழுந்திருந்"ததனால்
தேனிமிர் தொடையல் ஆதவன் புதல்வன்
சேய்அறன் மகன்அடி இறைஞ்சத்
தானிரு கரத்தால் வாரியே மார்பில்
தழுவியே உச்சியை மோந்து 223

மாயவன் முதலாய் மற்றுள பேர்கள்
மலரடி இறைஞ்சமற் றவரும்
நேயமாய்த் தழுவி மிகும்உப சாரம்
நிகழ்த்திய புகழ்எலாம் பெற்று
வாயறன் மகன்முன் இருகரங் கட்டி
வந்துஎதிர் நின்றிடு மளவில்
தூயவன் சரணம் சாளுவன் பணிந்து
தோத்திரம் பலபல சொற்றே 224

"பூமியில் அதிகப் பொறையிரு தயனே!
புண்ணியன் புதல்வனே! புல்லென்
தீமைசெய் தனன்;யான் செயும்அப சாரம்
தீங்குஎலாம் பொறுத்தருள் கெ"ன்று
நேமியை நோக்கச் சேர்ந்தவர் யாரும்
நீதியா திபன்முகம் பார்த்துத்
"தாமதி யாமல் இவன்றனைக் கணத்தில்
தறிப்பதே தருமம்"என்று உரைப்பார். 225

"அரவினை அழலை அரிகளை விடத்தை
அங்கமீ துறும்வியா திகளைப்
பரிகரித் திடல்நன்று; இதிற்குறை விட்டால்
பற்பல இடுக்கண்வந் தெய்தும்;

---

223. மான சம்பன்னன் - நிறைந்த பெருமையை உடையவன்; தான - வள்ளன்மை மிக்க; தேன்நிமிர் - வண்டுகள் மொய்க்கின்ற; தொடையல் - மாலை; ஆதவன் புதல்வன் சேய் - விடசீதனன்; அறன்மகன் - தருமன்.

225. நேமி-பூமி;நேமியை நோக்க - தலை குனிய; நீதியாதிபன் - தருமராஜன்; தறிப்பதே - வெட்டிக்கொல்வதே.

முரணொடு கொடிகள் குடிஞையைச் சதித்தல்
முறைமையாம்" எனும்மறை மொழிய
விரதமாய் ஒருபோ தினும்இகல் நினையேன்;
வினயமே நினைவிலுற் றேனேல் 226

குரவரைக் குருவைத் தந்தைதாய் பிரம
குலத்தரைச் சதித்தவன் ஆவேன்;
தருமனே! உயிர்தந் திடலும்நன்று; அலது
சாற்றிய பேர்கள்சொற் படியே
பரிகரித் திடிலும் நன்று"என மொழியப்
பங்கயச் செங்கணீர் மல்கக்
கரியனை நோக்கி அடைந்தவீ டணனைக்
காத்தருள் ராமபத் திரர்முன் 227

"தருமமோ அடைந்த பேர்களைச் சதித்தல்?
தருமதே வதைக்குஇயைந் திடுமோ?
வருமமே இவன்மேற் செயினும்,என் குலமும்
மடியினும், நீதிமா றுகினும்,
கருமமாய்ச் சரணம் அடைந்தவர் தமையே
காதுத லேதகாது" என்றான்;
நிருமல் விமல நிமலநா யகனும்
நெஞ்சினில் தருமனை அணைத்தே 228

அய்யனே! தருமன் குமரனே! உனது
அங்கிச குணமடைந் தோரைத்
தொய்யவும் சதிப்ப திலை;அலாது இவனும்
சுத்தவீ ரியன்இவன் றனையே
அய்யமற்று அணைத்தால் அசுவமே தத்தில்
அசுவமோடு ஏகியும் வருவான்
மெய்யெனன் உரைத்த உடன்அழல் வளர்த்து
வெல்வசு முனம்விளம் பிடுவான் 229

---

226. அரிகள் - பகைவர்; பரிகரித்திடல் - முற்றிலும் நீக்குதல்; கொடி - காகம்; குடிஞை - ஆந்தை, மறை - இங்குக் கல்வியறிவு என்னும் பொருளில் பஞ்சதந்திரத்தை உணர்த்தியது, வினயம் - வஞ்சகம

227. குரவர் - மூத்தோர்; சதித்தவன் - வஞ்சித்தோன்; கரியன் - கண்ணன்,

228. வருமம் - பகைமை; காதுதல் தசாததே என ஏகாரத்தை மாற்றுக
கொல்லலாகாது என்று உறுதியாகக் கூறியபடி.

(அடுத்த பாடல் சுவடியில் காணப்படவில்லை)

"நம்பியர் நால்வர்; நீயொரு துணைவன்
நால்வரோடு ஐந்துஎன" நவில,
"எம்பிரான் நீ;நின் அடிமையான்" என்ன,
இறைஞ்சிய வீரனை எடுத்துத்
தும்பைமார் பகனை அணைத்தபின் கலக்கம்
தொலைந்தபின் மால்அடி தொழுதான்;
அம்பது மத்தாள் மாயவன் ஆசீர்-
வதித்துஅருட் கண்புரிந் தனனே. 231

வீமனை இளைஞோ ரையும்அடி வணங்க,
விரும்பியே உரமதில் அணைத்தார்;
தாமனைத் தருமன் றனைமிகப் புகழ்ந்து,
தான்முதல் பிடித்தவாம் பரியைச்
சேமமாய் வளைந்த தளம்தெரிந்து, அவரைச்
சேகரித்து, அணுகுவேன் என்றான்;
கோமனன் திருமால் உத்திரவு அருளக்
குறித்தனுப் பிக்கொடு நடந்தான். 232

தன்னகர் அடைந்து, நகர்க்குஅரசு எனவே
தளபகி ஒருத்தனை நிறுத்தி,
வன்னவாம் பற்ப ராகவெம் பரியை
வரிசையாய் மிகஅலங் கரித்து,
நன்னய மாக நடைநட சாலை
நடப்பிலித்து, இரண்டுஅக்கு ரோணி
உன்னிய நான்கு வகைத்தளம் சூழ,
உயர்ரண பேரிகை முழங்க, 233

---

229. தொயய - தெடுமாறு; வசு - தெருப்பு, வெலவசு - வினைத் தொகை.

231. தும்பை - வெற்றிமாலையை உடைய. அம் பதுமத்தாள் - அழகிய திருமகள் சேல்வனான, இனி அழகிய பாதபங்கயன் எனினும்ஆம.

232. தாமன் - கண்ணன், சேமமாய - பததிரமாக; பரியைச் சேமமாயச் சேகரித்து அணுகுவேன் என்க, கோமனன் - சகசுரவர்த்தி யாகிய தருமன்; கோமனன் திருமால் - உம்மைத்தொகை.

233. ரணபேரிகை - போர்முரசு.

பஞ்சவாச் சியங்கள் கடல்என முழங்கப்
பரவிய கொடிகுடை மல்க,
மிஞ்சிய விருது கட்டியம் கூற,
வியன்நவ ரத்தினக் குடைக்கீழ்,
அஞ்சுவெங் கதியி னுடன்பரி நடத்தி,
அடல்அனு சாளுவ ராசன்
பஞ்சவர் முதல்வன் மாயனை வணங்கிப்
பரியினை முன்நிறுத் தினனே. 234

பொற்புயர் பற்ப ராகவெம் பரியைப்
புண்ணியன் குமரனும் மாலும்
அற்புத முடன்பார்த்து அதிசயித்து உவந்து
அத்தினா புரிக்குஎழுந் தருள
முற்படை யஞ்சுஅக் ரோணிசா ளுவன்றன்
முரட்படை இரண்டுஅக்கு ரோணி
விற்பல எமனா சூரன்ஈந் துளதும்
வியன்படை ஒன்பதுஅக் ரோணி. 235

இயல்புறும் எமனா சூரனோ டுற்ற
ஏழ்அக்கு ரோணிசே னைகளும்
உயஇரு பத்து மூன்றக்கு ரோணி
முரணுறு சேனைகள் சூழ,
அயல்வரும் எமனா சூரனும், மகனும்,
அமைச்சனும், அரசனை ஈன்ற
பயனுறு குந்தி, மனைவியாம் பிரபா-
பதியுமே உடனழுந்து ஏக 236

துவரையின் தளமும் மாயன்மற் றோரும்
சுபிட்சம தாகமுன் ஏக,
நவமுடன் ஐவர் படைகள்மற் றோரும்
நடுவலங் காரமாய் ஏகத்

---

234. வியன் - பெருமை மிக்க; அஞ்சுவெங்கதி - சிறந்த குதிரைக்குரிய ஐவகை நடைகள், அவையாவன - மல்லகதி, மயூரகதி, வியாக்கிரகதி, வானரகதி, இடப கதி;
235. புண்ணியன் குமரன் - அறன்மகனாம் தருமன்; வில் பல - விற்போரில் வல்லமை மிக்க.
236. மகன் - சகலீவன், அரசன் - தருமன் ; மனைவி - எமனாசுரன் தேவி, பிரபாவதி.

தவமுறும் எமனா சூரனும் தளமும்
சார்ந்துபின் னாகவே நடந்தார்;
சிவம்அருள் கங்கா தீர்த்தம்உற் றடைந்து
செறிந்துஇறங் கினர்திரண்டு எவரும் 237

.கங்கையங் கரையில் அனைவரும் வதியக்
கதிரவன் குடதிசை அடைந்தான்;
பொங்கிய அறுநான் கானஅக் ரோணிப்
புண்ணியன் சேனைகள் அனைத்தும்
தங்கிய சக்ர வியூகமே வகுத்துத்
தாநடுப் புரவியை நிறுத்தி,
அங்கினிது உறைந்தார்; அரசனே! என்று
வைசம்பா யனமுனி அறைந்தார். 238

அனுசாளுவன் போர்ச் சருக்கம் முற்றும்

ஆகச்சருக்கம் 5க்கு விருத்தம் 659

---

237. துவரை - துவாரகை. சுபிட்சம - வளப்பம், இங்கு மிகுதி; சிவம் அருள் - பகீரதனுக்காகச் சிவபிரான் வழங்கிய; எவரும் - அனைவரும்.

238. குடதிசை - மேற்கு.

6. வேள்வி ஆரம்பச் சருக்கம்

(அறுசீர் ஆசிரிய விருத்தம்)

உருஅருவாய், உட்புறம்அப் புறமும்இலாது
ஒடுங்குதலாய், ஒன்றும் யாவாய்,
உருஅருவும் இல்லாதாய், ஒன்றுதலாய்,
ஒன்றாதாய், ஒன்றாய், எங்கும்
தெரிவதுவாய்த் தெரியாதாய்ச் செய்துஅளித்தே
அழித்தும்அதில் சேரா தாகி
ஒருபொருளாய்த் தனிற்பலவும் ஒடுக்குகின்ற
பெரும்பொருளை உன்னு வோமே. 1

மானசென மேசெயன்தான் வைசம்பா
யனமுனியை மகிழ்ந்து நோக்கித்
தானஅனு சாளுவன்போர் தான்உரைத்தீர்
கங்கையின்சார் தரித்த பின்னர்
ஆனவர லாறுஏது பகரும்என
முனி(வன்)மகிழ்ந்து அரசே அப்பால்
பானுஅடைந்து அல்ஒழிய வைகறையில்
யாவர்களும் பள்ளி நீத்தார். 2

எல்எழும்ப யாவர்களும் விழித்துஎழும்பச்
சந்திமுடித்து இராச ராசன்
வில்உயர்ந்த மணியணைமேல் வீற்றிருக்க
மாயவனும் வீமன் பார்த்தன்
வல்லபரி நகுலன்சகா தேவன்விட-
கீதனன்மா மேக வண்ணன்
சொல்லும்எம னாசூரன் அனுசாளு-
வன்சுகலீ லன்சு வேதன் 3

---

1. ஒன்றும் யாவாய - ஒருபொருளாகவும், எல்லாப்பொருள்களாகவும்; செயது - படைத்து; அளிததே - காத்து; அதில சேராதாகி - அவ்வாறு பசை ததவித்தழிக்கப்படும் உலகில் தொடர்புறாமல்.

2. சார் - கரை; தரித்தல - தங்குதல; பானு - சூரியன், அல் - இருள்.

3. எல் - சூரியன், சந்தி - காலைமாலைகளில செயயப்படும் வழிபாடு; விஸ் - ஒளி; பரிவலவ வ மாறுக. குதிரை நூலில் சிறப்புப் பயிற்சி பெறறுள்ள என்றவ ாறு.

மானசாத் தகிபிரத்தி மன்னன்அனி
ருத்திரன் குரூர னோடு
தானஉத் துவாசாரி சகலரும்கை
தொழுததன்பின் தரும ராசன்
மோனமொடு திருமாலைத் துதிபரவி
முகம்நோக்கி மொழிவான் "ஐயா
ஞானமொடு பரிவேள்வி நடத்துதற்கு
எத்தனமும் நடத்தும்' என்றான். 4

நன்றுமுனி தனைஅகத்தால் அழையும்என.
உன்னுமுனம் நண்ணி னார்;முன்
சென்றிலுறைஞ்சித் தவிசுஇருத்தித் திருமாலும்
நமஸ்கரித்தார்; சேர்ந்தோர் எல்லாம்
வென்றியுடன் தொழுததற்பின் வேதவியா-
சரைநோக்கி வேள்வி செய்வது
என்றதற்குச் செய்நேர்த்தி இயம்பும்என
மால்கேட்க இசைக்க லுற்றார். 5

புரவிஒன்று வந்ததனால் வேள்விநிறை-
வேறிடுமோ? புகலக் கேளீர்;
உரிமைமணம் முடித்தவராய்த் தந்தைதாய்
உடையவராய் உரிய வேதம்
உரையும்அவ தானியராய் ஞானியராய்
இருபான்மேல் முப்ட ஞள்ளாய்ப்
பருவவய தினராகச் சதகோடி
மந்திரங்கள் பாடத் தோராய் 6

இருபத்தோ ராயிரம்பேர் அறுதொழில்அந்-
தணர்வயதுஒத்து இசைந்தோர் வேணும்;
பருவத்தார் ஒருவருக்குத் தேர்ஒன்று,
யானைஒன்று, பரிஓர் ஐந்து,

---

4. எத்தனம் - முயற்சி.

5. உன்னும் முனம் - நினைபபதற்கு முன், தவிசு-இருக்கை; செய்நேர்த்தி -செய்யவேண்டிய முறைகளை.

6. உரையும்-உரைக்கும், அவதானி-திறமை உள்ளவன், சதகோடி-நூறுகோடி, பாடத்தோர்-மனப்பாடம் செய்தவர்.

மருவித்தா ராளமொடு பொன்நூறு
மணுப்பாரம், மணிஒன் பானும்
சுருபத்தோடு ஒருவகைக்குக் குறுணியதொன்-
பதுமரக்கால் தொகையாய் வேணும். 7

இவ்விதமாய்ச் சகலருக்கும் தட்சணைவைத்
திடவேணும்; ஈதுஅ லாது
குவ்வுலகில் ஓர்ஆண்டு பூமிவலம்
வருமளவும் குளப்ப டிக்கே
நவ்வோமம் எக்கியமும் நீர்விடில்நீர்க்
குளம்நந்த னவனம் வெற்றி
ஒவ்வுமிடம் அரிஅரருக்கு ஆலயஞ்செய்
தேநிலமும் பலமும் வேணும். 8

பரிமோந்த இடம்அகர முடன்குடும்பப்
பிரதிட்டை பண்ண வேணும்;
குரகதம்சென்று அவதரித்துப் படுத்தஇடம்
நகராக்கிக் கொள்ள வேணும்;
இருபிறப்பர் ஐம்பதினா யிரம்பேர்கள்
புரவியின்பின் ஏக வேணும்;
நிரவிநிலம் மெழுகுவதற்கு இலக்கம்பேர்
புர்வியின்பின் ஏக வேணும். 9

நீறு,கல்,செங் கல்சுமந்து சகடம்அள
வற்றதுஒக்க நேராய் வேணும்;
தேறுஇவுளி பின்னேகும் சேனைகள்மற்
றுள்ளவைக்குச் சகலத் திற்கும்
வீறுபல பொருள்வேணும்; வேள்வியில்வந்து
ஏற்பவர்க்கு வேண மட்டும்
பேறுடனே கேட்டதுஎலாம் பெறஓர்ஆண்
டளவுகொடை பெய்ய வேணும். 10

---

7. மணு-ஒரு நிறை; சுருபம் - சொரூபம், நிறைந்த இலக்கணம், எப்படி, இருக்கவேண்டுமோ அப்படி இருத்தல்; குறுணி,மரக்கால் -முகத்தலளவுகள்.

8. ஒவ்வுமிடம்-நல்லவேள்வி; ஓமம்,யாகம்,எக்கியம், வேள்வி, மகம் என்பன ஒரு பொருட்கினவிகள்; பலம்-பொன்.

9. மோந்த-(நிலத்தை)முகர்ந்த; அகரம்-அந்தணர் குடியிருப்பு; குடும்பப் பிரதிட்டை-குடியிருப்புகளை அமைத்தல்; குரகதம் - குதிரை; அவதரித்து-தங்கி, இருபிறப்பர்-பார்ப்பனர்; மெழுகுதல்-இங்கு நிலத்தைச் சமன்படுத்தல்.

ஒருநிறமாய் இளவயதாய் பொன்மணிபூண்டு
ஒளிபிறங்க ஒண்மை யுள்ள
நரைஇலக்கம்; ஐம்பதினா யிரம்கலப்பை
பொன்னால்நல் சோடிப்பு எல்லாம்
விரவுபத்து மணுப்பாரத்து அமைத்ததொடுப்-
பினிற்பூட்டி, வேள்வி செய்ய
உரமொடுநா லரைக்காதம் உழுது,அவற்றைத்
தானமிட்டு, யூபம் நட்டு, 11

மற்றுளதும் சேகரித்தே அசுவமகம்
செயவேணும்; மானு பாவா!
யத்தினம்ஈது எனமாலின் முகம்நோக்கி
முனிஉற. வேத மூர்த்தி
நற்றருமன் முகம்நோக்கத் தலைகவிழ்ந்து
பூமிதனை நாதன் நோக்கிக்
கொற்றவனும் மெய்மயங்கிப் பலஷிசா-
ரங்கள்குடி கொண்டு சோர்ந்தான். 12

மன்னர்கோ மான்இருக்கும் மனவிசா-
ரங்களைமா முனிவன் நோக்கி,
"என்னநீர் வாய்பேசா திருக்கலுற்றீர்?
இன்னமொன்றும் இயம்பக் கேளீர்;
உன்னிமகம் முடிப்பதற்கே உண்டான
திரவியம்ஓர் இடத்தில் உண்டாம்;
அன்னதுஎலாம் மனிதரைவிட்டு அழைப்புவித்து
அசுவமகம் முடியும்" என்றான். 13

அரசன்மனக் கவலைவிட்டுப் புளகதயி-
ரியமாய்அந் தணனை நோக்க,
"விரவும்இமோ பருப்பதச்சார் மருத்துமக-
ராசேந்த்ரன் வேள்வி செய்து,

---

10. நீறு - கண்ணாம்பு; சகடம் - வண்டி; தேறு இவுளி -வேள்விக்காக நிச்சயம் செய்யப்பட்ட குதிரை, வினைத்தொகை.

11. நரை- காளை; சோடிப்பு - ஒப்பனை; தொடுப்பு - கலப்பை; அவற்றை - காளைகளையும் தொடுப்புகளையும்; யூபம் -வேள்வித்தூண்.

12. மானுபாவா - மகாருபாவா. மகாத்துமாவே;யத்தனம் - முயற்சி; விசாரங்கள் - கவலைகள்.

13. திரவியம் - பொருள்; முடியும் - செய்து முடியுங்கள்.

திரவியம்ரத் தினந்தானம் செய்தஅவர்
எடுத்ததல்லால் திகிரிக் கூட்டம்
பரவலொத்தது; அவைஎடுத்து வருக"எனத்
திகைத்துஅரசன் பகர்வ தானான். 14

"அந்தணர்சொத்து அங்குளதாம்; அடியேன்எப்
படிக்கொணர்வது அய்யா" என்னச்
சிந்தையுடன், அந்தணர்சொம் இல்லாத
இடம்ஏது? செகங்கள் எங்கும்
சந்தநூ றாயிரம்பொன் தனக்கதிகம்
அரசர்பொருள் தானாம்; அன்றிச்
சொந்தநிதி நிட்சேபம் மன்னவர்க்குத்
தமதான சொத்தாம் ஐயா. 15

"அகளங்க மனத்தவனே! களங்கம்உளது
உனைக்கொணர்கென்று அறைகு வேனோ?
மகிழ்அனுசன் தனிலொருவன் தனைஏவிக்
கொணர்திவல்லை; மன்னா!" என்னத்
திகழ்முகுந்தன் முகம்நோக்க, "அருச்சுனனை
ஏவுகசீக் கிரத்தில்" என்றான்.
பகர்அஞ்சுஅக் ரோணிதளம் பார்த்தனுட-
னேகூட்டிப் பரிந்தே பின்னும், 16

"வன்புஇலக்கம் யானை,சத மடங்குசகடு,
எருதுஅசுவம், ஆளும் கூட்டிப்
பொன்,பணி,ரத் தினம்கொணர்தி என"த்தருமன்
மால்முனியைப் புரிந்து போற்றி
நன்பரிவா ரங்களொடு நரலைஎன
இரவுபகல் நாள்மூன்று ஏகிப்
பொன்பரவும் இமகிரியைச் சேர்ந்திருநாள்
இரவுபகல் பொதிசெய் தாரே. 17

---

14. இமோ பருப்பதச் சார் - இமயமலை அடிவாரத்தில்; அவர் - தானம் பெற்ற மறையோர்; திகிரி - மலை.

15. சொம் - சொத்து; நூறாயிரம் பொன்னிற்குமேல் ஒருவரிடமிருந்தால் அதிகப்படியானவை அரசனுக்குரியவை; நிட்சேபம் - புதையல்.

16. அகளங்க - குற்றமற்ற. அனுசன் - தம்பி; வலலை - விரைவில்.

17. வன்பு - வலிமை மிக்க; சகடு - வண்டி; புரிந்து - விரும்பி, போற்றியவன் - அருச்சுனன்; நரலை - கடல்; பொதி செய்தார் - கட்டினார்.

சென்றஇபம் சகடுஎருது பரிபரித்தது
அல்லதுஒக்கச் சேர்ந்தோர் எல்லாம்
அன்றுஎடுக்கக் கட்டளையிட்டு எடுத்ததல்லால்
மற்றதுஅவண் அமைத்து வைத்து,
வென்றியொடு செயமுரசம் மிகமுழங்க
அலும்பகலும் விரைவாய் ஏகிக்
கன்றல்அற நாள்மூன்றில் கங்கைநதிக்
கரைசேர்ந்தான் காண்டீ பத்தோன். 18

தருமன்மால் முனிவீமன் சரண்இறைஞ்சி-
யேநீங்கள் சாற்றும் வாறே
திருமறுமார் பகன்அருளால் சென்று,அடியே-
னொழியமற்றச் சேனை யாவும்
பொருள்பரித்துக் கொணர்ந்தனம்இப் பொருள் அலதுஅப்
பொருப்பில்அள விற்லாப் பொன்கள்
கிரியிலிருக் கிறதடைந்த பொருள்பாரும் 19
அக்கதனால் கிளர்ந்துஎல் லோரும்

(20, 21ஆம் பாடல்கள் சுவடியில் எழுதப்படவில்லை)

நன்றுபுரோ கிதராகும் சவுமியரை
அழையும்என்ன, நாதன் உன்ன,
அன்றுசவு மியர்அடைந்து வியாசருடன்
முகவணக்கம் ஆன பிற்றை,
வென்றியுறு தருமன்முதல் அரசர்எலாம்
பணிந்ததற்பின், வியாசன் மாலும்
அன்றுபுரோ கிதன்முகம்பார்த்து, "அசுவமகம்
செயத்தருமன் அபேட்சை உற்றே. 22

பிரயாச முடன்பரியும் திரவியமும்
சேகரித்தான்; பேணி வேள்வி
நிறைவேற நாள்முகூர்த்தம் நிமித்தம்உடன்
அருளும்"என நேமி யோனின்

---

18. பரித்தது - சுமந்தது. கன்றல் அற - இளைப்பின்றி.

19. அக்கு அதனால் - கண்களால்.

22. புரோகிதர் - வேள்வி ஆசான்; நாதன் - கண்ணன்; உன்ன - நினைக்க; பிற்றை - பிறகு

குறையாத கிருபையினால் முனிஆசீர்-
வாதத்தால் குதிரை யாகம்
திறமாக நிறைவேறும் சந்தேகம்
ஏது"எனவே செப்ப லுற்றான். 23

இன்னதுஇன்னது இன்னதுவே சேகரிக்க
வேணும்என்றோர் ஏட்டில் தீட்டி
மன்னர்மன்னன் கரங்கொடுக்க, முனிஉரைபோல்
எழுதியதை வாசித்து ஓர்ந்து,
நன்னயமாய் "இவையெல்லாம் அடைந்தது"என-
வேயுரைக்க நன்றுஎன் றேதான்
முன்னர்நில முழுதுஓம எக்கியங்கள்
பண்ணுவித்து முறைமை யாக 24

"தருமனே! பின்யாக சாலைகட்ட
வேணும்"எனத் தங்கக் குப்பி
எருதுகளின் மருப்புஅணிந்து, இத்தினவெண்-
டயஞ்சதங்கை இட்டுக் காலில்,
பருமணிப்பொன் பணிநிதிச்சங் கிலிகழுத்திட்டு,
ஆடகப்பொற் படங்கள் போர்த்த
நரையினத்தை யுங்காட்டிப் பொற்கலப்பைச்
சோடனையும் நாதன் காட்ட 25

பட்டம்நெற்றி யினில்தரித்த நரைப்பிடரில்
பொன்நுகம்பைங் கழையும் பாசம்
இட்டமுடன் அணைத்துஏர்க்கா லதொடுதொடுப்
பனபதினா யிரம்பொன் ஏரும்

---

23. பிரயாசம் - பெருமுயற்சி; நாள் - வேள்விகுரிய தினம்; முகூர்த்தம் - நல்ல நேரம்; நிமித்தம் - சகுனபலன்; உடன் - உடனடியாக; நேமியோன் - சக்ரதாரி, திருமால்; முனி - வியாசர்.

24. முனி - சவுமியர்; உரைபோல் - நேரில் கூறுவது போல் தெளிவாக, அன்றி வியாசர் முன் கூறியதைப் போலவே எனினுமாம், அடைந்தது - திண்ணமாகப்பெறப்படும் என்பதால் இறந்தகால வாய்பாடு.

25. குப்பி - கொம்புகளில் கொருகும்அணி; வெண்டயம் - சிறுமணிகளான சலங்கை; பொற்படம் - பொன்னாடை;

கட்டிநல்ல முகூர்த்தமதில் தருமன்அளித்-
தருளியதேங் காயை வாங்கிப்
பொட்டியும்மூ டியுமாகப் புடைத்துவிநா-
யகபூசை புரிந்துஅப் பூவில் 26

தருமபூ பதிமுதலோர் மேழிதொட்டுக்
கொடுத்ததற்பின் தக்க நான்காம்
வருணர்ஏர் தனைநடத்தி உழுதார்;நால்
அரைக்காத வழிநால் திக்கும்
சருவிஉழு தேமாடும் கலப்பைகளும்
தானமிட்டே ஓமம் எக்யம்
விரவுபுண்ய சாந்தியொடு சுத்திசெய்து
வேதிகையும் சவுக்கம் செய்து 27

சந்தவே திகைநடுவில் மந்திரதந்-
திரவேத சாஸ்த்ரத் தோடு
முந்துகம்ப பூசைபண்ணி வேதகோட்-
டத்துடனே யூப கம்பம்
அந்தமுற நாட்டியபின், அ ளவோரும்
நமஸ்கரித்து யாக ான்ல
சிந்தையுடன் கட்டியபின் வேதிகையோடு
ஓமகுண்டம் சிறக்கச் செய்தார். 28

அதவநெடும் பலகையொடும் சோமசூத்-
திரம்முதலாம் அநேக மான
விதமுறுசா மக்ரியைகள் எல்லாஞ்சே-
கரித்துஅதற்பின் வேத நூலோர்

---

26. நரைப்பிடர் - எருதின் சுழுத்து. கழை - மூங்கில்; பாசம் - கயறு; அணைத்து - சேர்த்துக்கூட்டி; தொடுப்பன - இணைப்பன; பொட்டி - சீழ்மூடி., பூவில் - நிலத்தில்.

27. மேழி - ஏர்; நான்காம் வருணர் - வேளாளர்; சருவி - பொருந்தி; புண்ய சாந்தி - இடம், பொருள், உடல் முதலியவற்றைத் தூயதாக்கும் புண்ணியாவாசனச்சடங்கு; வேதிகை- வழிபாட்டிற்குரிய மேடை; சவுக்கம் - சதுரம்.

28. சந்த - அழகிய; மந்திரம் - சடங்குகளுக்குரிய மந்திரங்கள்; தந்திரம் - சடங்குகளுக்குரிய செய்கைகள். வேதசாஸ்த்ரம் - பாராயணம்; கோட்டம் - ஆரவாரம்; யூபகம்பம் - வேள்வி விலங்கைக் கட்டும் தூண். அந்தமுற - அழகாக; ஓம குண்டம் - வேள்வித்தீ வளர்க்கும் குழி.

இதமொடுஇரு பத்தோரா யிரம்பேர்ஏழ்
இருடிகள்,மற் றுள்ளார் எல்லாம்,
அதிகரிஷி யோர்கள்,மன்னர் யாகசா-
லையினில்மொய்த்தார் ஆழி நேராய் 29

மதிமேடம் சுக்கிலபட் சம்பவுர-
ணையும்கூடும் மகிழ்ச்சி யான
அதிகசுப தினம்ஏழு கிரகமே
ஆட்சி,உச்சம், உறவ தான
கதியதனில் தருமனொடு திரௌபதியும்
புரவியதும் கங்கை ஆற்றில்
பதமாக நானமது பண்ணியபின்
எண்ணியது பலிக்க நாடி 30

உயர்யாக சாலையினில் ஓமகுண்டத்து
அருகதனில் உதும்ப ரப்பொற்பு
இயல்பான பலகையின்மேல் மரஉரி,க்ருஷ்-
ணாஜினமேல் இரண்டு பேரும்
தயவாகத் தரித்துஅசுவம் அலங்கரித்துப்
பூசைபண்ணித் தக்க வில்வத்து
ஓயிலான யூபத்துஉன் னியைத்தருப்பைக்
கயிற்றாலே உற்று வீக்கி 31

அய்யர்இரு பத்தோரா யிரம்பேர்கள்,
எழுரிஷிகள், மற்றுள் ளாரும்
செய்யஉப வாசமொடு மந்திரஅட்-
சதையால்நல் தீட்சை யிட்டுத்
துய்யர்களாய் உபகரணம் பஞ்சதிரவ்-
வியத்துஅக்னி சுத்தம் பண்ணி
வைஓம குண்டமதில் சமித்துகளோ-
டேவேத வசனம் கூற 32

---

29. அதவ நெடும் பலகை - பெரிய அத்திப்பலகை, சோமசுத்திரம் - வேள்விக்குரிய நூல், சாமக்ரியை - பயன்பாடுப்பொருள்கள், ஆழி - கடல்.

30. மதிமேடம் - மேட மதி, சித்திரை மாதம, சுக்கிலபட்சம் - வளர்பிறை, பவுரணை - பவுர்ணமி; கிரகம் - கோள்; ஆட்சி - சொந்த ராசி, ஸ்வகேஷத்ரம் என்பர், உறவு - நட்பு வீடு, மித்ரஸ்தானம்; கதி - கோளின் அமைப்பு, கிரககதி, நானம் - ஸ்னானம், நீராட்டு.

31. உதும்பரம் - அத்தி; பொற்பு இயல்பான - அழகிய, மரஉரி - மற்கலை; சுருஷ்ணாஜினம் - மான்தோல், தரித்து - அமர்ந்து; உன்னி - குதிரை.

தருமனொடு திரௌபதையும் சந்திமுடித்-
திருந்துமுனி தன்னை நோக்கி,
"ஒருவருடம் புரவிபின்போய்ச் செயமுடனே
வருவதற்குஆர் உரவோர்?" என்னக்
"கரியவனை வினவும்"எனக் கண்ணன்அது
கேட்டுஉரைப்பான் "கற்கி பின்போய்
வருவதற்குச் செயவிசயன் அல்லாது
வேறுளரோ வரிவில் லாரே?" 33

மால்உரைகேட்டு, "உன்பரிபூ ரணகடாட்-
சங்கள்உண்டேல் வருவான்" என்னச்
சாலமுனி புகழ்ந்துரைக்கத் தருமன்மகிழ்ந்து
அருச்சுனனைத் "தம்பி யேநீ
ஞாலமதில் புரவிபின்போய்த் திக்குவிச-
யஞ்செய்து நண்ணி னாயேல்
கோலும்இந்த வேள்விநிறை வேறும்"என்ன
விசயன்எனும் கோமான் தாழ்ந்தே 34

"அரசர்களின் சிகாமணியே! நின்அறமும்
மால்அருளும் அட்ட திக்கும்
பெருவிசயம் பண்ணிவரும்; யானும்அதன்
பின்பேணி வருவேன்" என்றான்;
தருமன்அது கேட்டுமகிழ்ந்து, "அய்யாஎன்
கண்ணுயிரே! தக்க உத்ர-
குருபூமி யதில்அரசர் ஒருவருக்கொ-
ருவர்மிகுந்த கொற்ற வீரர். 35

---

32. உபவாசம் - உண்ணாநோன்பு; மந்திர அட்சதை - தூய மஞ்சளரிசி, உபகரணம் - உரிய சுருவிகளாகிய; பஞ்சதிரவ்யம் - பசும்பால், பசுநெய், பசுதயிர், பசுநெய், கோசலம், கோமயம் என்னும் ஆன்ஐநது. பஞ்சகவ்வியம் என்பதும் இதுவே; வை - வைக்கப்பட்டுள்ள; சமித்து - வேள்விக்குரிய குச்சிகள்.

33. கற்கி - குதிரை, வரிவில்லார் - சுட்டப்பட்ட வித்போரில் வல்லவர்.

34. கோலும் - தொடருகின்ற.

35. அட்ட திக்கு - எணதிசை, உதர குரு - இமயமலைக்கு வடக்கே உள்ள தேசம், பாரத கண்டத்திற்கு வெளியே உள்ளது, போக பூமியாகக் கருதப்படுகிறது;

அவர்கள்திரி மூர்த்திகட்கும் அஞ்சாத
மன்னவராம்; அப்ப னேநீ
தவர்வலிஆ லோசனையால், தந்திர,மந்-
திர,தனுநூல் உபாயத் தாலே
குவலயம்எல் லாம்செயித்து வரவேணும்
வயவிசயா! கொற்ற வேந்தே!
நவமுடையாய்!" என,மாலை நரன்நோக்கக்
கண்காட்ட "நன்றே" என்றான். 36

அறன்மகன்மா யனைநோக்கி, "அருச்சுனனை
அனுப்புக"என்ன, "அறுநான்கு என்னும்
திறன்மருவுஅக் ரோணியிலே செம்பாதி
இங்குஏவல் செய்ய வேணும்;
விறல்மருவு சேனையுமே விசயனுட-
னேயனுப்பி மிக்க வீரன்
குறியான விடகீதன், மேகவண்ணன்
தன்னையுமே கூட்டிப் பின்னும் 37

அரசன்எம னாசூரன், சுகலீலன்,
சுவேதன்அனு சாளு வன்,போர்
பெருகுசாத் தகி,உத்து வாசாரி,
அக்ரூரன், பிரத்தி மன்,விற்
கரவன்னி யுருத்திரனும் செல்க"என
மால்உரைக்கக் கண்ணன் தன்னைத்
தருமபூ பதிநோக்கி, "நீர்ஏகும்;
அலதுஎன்உயிர் தரிக்காது" என்றான். 38

என்னுயிராம் தனஞ்சயனைப் பிரிந்திருப்ப-
னோயானும்? ஏதம் இல்லாய்!
மின்னனைய மாதர்களைத் துவரைநகர்-
தனிற்சேர்த்து விட்டு, யானும்

---

36. திரிமூர்த்திகள் - அயன், அரி, அரன், தவா - தவசிகளின்; தனு நூல் - விற்போர்முறைகளை விளக்கும்சாததிரம, குவலயம் - உலகம்; வய - வலிமைமிக்க; நவம் - சிறந்த நட்பு; நரன் - அருச்சுனன்.

37. அறுநான்கு - இருபத்தி நான்கு; செம்பாதி - பன்னிரண்டு.

பின்னுடனே தான்செலுவேன்; பெருமானே"
எனஉரைக்கப் பிரிச மானான்.
மன்னர்மன்னன் தருமனடி வலமாக
விசயன்வந்து வணங்கி னானே. 39

மேருகிரி அனையானும் நீலகிரி
எனவணங்கும் விசயன் தன்னை
வாரியெடுத்து அணைத்துஅருட்கண் மலர்த்தரளம்
மல்கவரும் வருத்தம் நீங்கிக்
"காரணமாம் அவன்அருளால் விசயமுடன்
இவண்வருகக் கடவாய்" என்றான்.
சீரியமால் அடிவணங்கச் "செயமுடனே
வருக"எனச் செப்பி னானே. 40

வேதவியா சரைவணங்க, "வெற்றியெல்லாம்
பெறக்கடவாய் விசயா" என்று,
"சீதரன்நண் பாபுரவிக் குளப்படியே
முதலாகச் செப்பும் வேதம்
ஒதுமுறை வழுவாமல் விதிப்படிசெய்-
வாய்"எனவே உறுதி கொண்டான்.
கோதைஅன்னை அடிவணங்கக் குந்தியுமே
வாழ்த்திவிடை கொடுத்தாள் அன்பாய். 41

வீமனடி தனைவணங்க, விரும்பிஎடுத்து
அணைத்து"உயிரே! விசயா! எம்பீ!
நீமுனையில் செலவும்யான் இருப்பேனோ
உனைப்பிரிந்தே நிமிட நேரம்?
ஏமமுற உன்னுடனே யானும்வரு -
வேனாகில் இகல்வெல் வேனே;
காமுறும்உத் தாரம்ஒன்று கிடையாத
படியாற்கண் கலங்கி னேனே. 42

---

39. ஏதம் - குற்றம்; பிரிசம் - பிரியம், இங்கு மகிழ்ச்சி.

40. மேருகிரி அனையான் - தருமன், அறத்தாலும் புகழாலும், நீலகிரி - அருச்சுனன், மேனி நிறத்தால்; காரணம் - பிரபஞ்சத்தின் மூலகாரணம் ஆகிய, அவன் - பரம்பொருள், திருமால் எனினுமாம்.

42. முனை - போர்க்களம்; ஏமம் - பாதுகாப்பு; காமுறும - விரும்புமாறு; உத்தாரம் - ஆணை.

நன்று;கா வற்கடவுள் அருளாலே
சயம்பெறுவாய் நாளும்" என்றான்.
பின்றையிரு வோர்இளையோர் அடியிறைஞ்சி,
"உன்னைவிட்டுப் பிரிந்து யாங்கள்
நின்றிவணில் ஒருவருடம் எவ்வாறு
கழிப்பம்?நிக ரில்முன் னோனே!
சென்றுதிரு மால்அருளால் திக்குவிச-
யஞ்செய்தே திரும்பு கெ"ன்றார். 43

துருபதன்அருள் திரௌபதியும், சுபத்திரை,மற்-
றோர்களும்கால் தொழுது போற்றித்
"திருமறுமார் பினன்அருளால் செயவிசயம்
பெறுக"என்றார் திறற்காந் தாரி,
பெரியதகப் பனை,விதுரப் பெருமானை
வணங்கி,விடை பெற்று, மீண்டு,
பரியாக சாலைதனை வலமாகி,
முனிவர்அடி பரவி னானே. 44

அனைவோரும் ஆசிர்வதித் தேசேஷ
அரிசிஇறைத்து ஆசி கூற,
மனதாலே பாவகனை நினைக்க,வச்ரப்
பெருந்தேரும், வெள்ளை மாவும்,
அனுமார்ஏ றியகொடியும், வச்ரகம்பம்
அட்சயதூ ணீரத் தோடும்,
தனுவான காண்டீபச் சிலையும்வெளி-
யானதுஅதி சயிப்ப யாரும். 45

இந்திரனை நினைக்கவும்,வச் சிரகவச
குண்டலம்,வச் சிரகி ரீடம்,
அந்தரதத்து உவமான தெய்வமணிச்
சங்கமும்வந்து அணுகப் பெற்றான்.

---

43. காவற்கடவுள் - திருமால். இளையோர் - நகுல சகதேவர்.
44. சாரதாரி - திருதராட்டிரன் மனைவி. பாண்டவருக்குப் பெரிய தாயார்.
45. சேஷ அரிசி - அறுகரிசி. அட்சதை; பாவகன் - அக்னிதேவன்; வெள்ளை மா - வெண்குதிரை; வச்ரகம்பம் - வயிரத்தூண. அட்சயதூணீரம - எடுக்க எடுக்க குறையாமல் அம்புகளைத் தருகின்ற கூடு. தனு. சிலை ஒரு பொருட் கிளவிகள்.
46. அந்தர தத்துவமான - ஆகாயத்திற்குரிய குணமாகிய ஒலியால சிறப்புப் பெற்று; உணர் - (இங்கு) சாபபாடு.

பிந்தவீ மனையழைத்து, "இன்றுமுதல்
தருமனுடன் பிராம ணோரும்
உந்தும்உப வாசமொடு பலகாரம்
அன்றிஉணவு உண்டி டாரால். 46

நீயிவர்கள் தமைப்பரா மரித்திநிதம்"
எனமுனிவன் நிகழ்த்தக் கேட்டு
நேயமுடன் நன்றுஎனவே அய்யர்கள்தட்-
சணையீந்துஅந் நிலையில் நின்றான்
மாயவனைப் புரவிமுக மணிப்படத்தில்
எழுதிடும்வக் கணைஏது என்னத்
"தேயமதில் அத்தினா புரமதுஎன
ஒருநகரம் திலதம் என்றும் 47

அந்நகரி ஆதிபதி, பாண்டுமக-
ராசேந்த்ரன் அளித்த பாலன்,
மன்னர்மன்னன், உயர்மன்னர் பரமேசு
வரன்,மன்ன வர்மார்த் தாண்டன்,
மன்னவர்கள் கம்பீரன், மன்னர்புகழ்
வளநாடன், மன்னர் கோமான்,
மன்னவர்கள் உத்தண்டன், மன்னர்சிரோ-
பணிதரும மகரா சேந்த்ரன், 48

தன்னுயிர்போல் மன்னுயிர்கள் சகலமுமே
புரந்தருள்தந்து ஆர்உ தாரன்,
பொன்அகலன், பிறதார புத்திரனாம்
சத்துருசங் கார மூர்த்தி
என்னும்மகி பாலன்எழிற் சாந்தாதி
அசுவமேத யாகம் செய்ய,
உன்னிசம்ரட் சணைபுரிய வருவான்ஆ-
ரோஎன்றே உணர வேண்டில் 49

---

47. பரமரித்தி - பார்த்துக கொள. முனிவன் - வியாசன், வகசனை - வர்ணனையோடு கூடிய அறிவிப்பு, மெய்க்கீர்த்தி போல.

48. ஆதிபதி - தலைவன், பரமேசுவரன் - பெருந்தலைவன், மார்த்தாண்டன் - சூரியன், உத்தண்டன் - பெருமை மிக்கவன்.

49. அருன்தந்து - காப்பாற்றி, ஆர் - மன நிறைவடை கின்ற; உதாரன் - கருணையன், மகிபாலன் - அரசன்; உன்னி - வேள்விக் குதிரை; சம்ரட்சணை - பாதுகாப்பு.

வீரசே கரவீரன், வீரமார்த்-
தாண்டன்,ரண வீர சூரன்,
வீரமத கேசரி,வில் வீரஉத்-
தண்டன்,வை வீர மிண்டன்,
வீரசிங் காரன்உயர் வீரசங்-
கீதன்,வீ ரப்ர தாபன்,
வீரர்கள்சி ரோமணியாம் விசயன்எனும்
பெயர்படைத்த வெண்கி ரீடி 50

பரமனுடன் அமர்புரிந்து வில்லினால்
புடைத்துவரம் பலவும் பெற்றோன்;
சுரர்களுக்கா அசுரர்களை நீறுகண்டு
தெய்வேந்த்ரன் சுடிகை பெற்றோன்;
கருதரும்எண் ணரியவிறல் செய்துவெற்றி
புனைந்தருளும் காண் டீபத்தோன்;
பரவுகின்ற சத்துருசங் காரன்;பா-
ரதயுத்தம் பண்ணி வென்றோன்; 51

தனுவேத மூர்த்திஎனும் சரராசன்;
அரிகள்குல தகனன் வாரான்;
முனைமான ரோசமுளோர், முடிதரித்தோர்,
சிலைபிடித்தோர், முகத்தில் மீசை-
யினையுடையோர் கரலாப சரலாப
வலியுடையோர் இருப்பா ராகில்
கனவீர முடன்பரியைக் கண்டவுட -
னேபிடித்துக் கட்ட லாமே. 52

இல்லையெனில் பரிப்பூசை பணித்தூப
தீபநெய்வே,த் தியங்கள் செய்து,
வல்லையினில் பல்குணற்குப் பாதகா-
ணிக்கைநல்கி, நல்ல வாய்மை

---

50. ரணம் - போர்; கிரீடி - அருச்சுனன்.

51. பரமன் - சிவபெருமான், சுடிகை - கிரீடம்; சத்துருசங்காரன் - பகைவர்களை அழிப்பவன்.

52. தனுவேதமூர்த்தி - வில்கலையே வடிவெடுத்து வந்தவன், சரராசன் - அம்புகளைத் தன் விருப்பம் போல இயங்கவைபபோன், அரி - பகைவர், தகனன் - எரிப்போன்; சரலாபம்- கைத்திறமை.

சொல்வி,அவன் மொழிக்குஒழுகி நடந்திடுவீர்"
எனஎழுதச் சொன்ன தாலே,
எல்லவரும் சம்மதியா, இவ்வண்ணம்
படந்தனிலே எழுதி னாரே. 53

வரைந்துபடந் தனைப்புரவி நெற்றியினி-
லேதரித்து மறைவ லாளர்
புரிந்தஐம்ப தாயிரரைப் புரவியின்பின்-
னாய்நிரைத்துப் பொலிந்த சோதி
விரிந்தரத்னக் குடைநிழலில் விறலெழுபத்து
ஆறுஎனும்யோ கங்க ளோடும்
தரந்தரமாய் இருந்தஎவில் தருமனைப்பார்த்-
தேமுனிவன் சாற்ற லுற்றான். 54

"பச்சையுரி உடையுடனே திரௌபதியும்
நீயும்அந்தப் பற்ப ராக
அச்சுவத்தைப் பூசைசெய்து அவிழ்த்துவிடு
கெ"னும்முனமே அந்த வாறே
உச்சிதமாய்ப் பூசைபண்ணி, யூபகம்பத்து
அடுத்திருந்த உன்னி தன்னை
அச்சம்இலா அறன்குமரன் அவிழ்த்துவிட
வயப்பரியும் அனுமா னித்தே, 55

முப்பிரதட் சணமாக யாகசா-
லையைக்கோலி முரண்மா வந்து
தப்பிதம்இ லாதபடிக் குடதிசையைத்
தான்நோக்கித் தாவி ஏகக்
குப்பலுடன் வேதியர்கள் குளப்படியில்
மொழிந்திடும்அக் கினிசெய்து ஏகச்
செப்பியகா மாட்டியர்கள் பரிமுன்னா
நிலங்கள்எலாம் திருத்தி ஏக 56

---

53. பணி - பண்ணி, செயது. வல்லையினில் - விரைவாக, சொன்னவர் - கண்ணன்.

54. பத்துஆறு - பதினாறு, யோகம் - உபசாரம, தருமனைப்பிறர் தெய்வம்போலவே போறறினர், எனவே பதினாறுஉபசாரம்; முனிவன் - சவுமியன்.

55. உச்சிதமாய் - உசிதமாய், தக்கவாறு, அடுத்திருந்த - கட்டப்பெற்றிருந்த; அனுமானித்தே - கனைத்து.

56. குடதிசை - மேற்கு; அக்கினி - அக்கினி காரியம், வேள்வி; காமாட்டியர் - மண்வெட்டுவோர்.

நீர்பெய்இடம் குளங்கள்நந்த வனஞ்செய்ய,
விருட்டித்த நிலங்கள் எல்லாம்
சார்மான மால்ஆல யங்கள்செய
எண்ணில்பல் சகடந் தன்னில்
ஆர்செங்கற் கள்நீறு வெல்லம்இவை
முகுர்த்தமதற்கு அடைவாய்க் கொண்டே
ஏர்கொள்அந்தந் தத்தலத்தி லேகல்நீறு
வாக்கிஇ சைக்கப் பண்ணி 57

மிஞ்சுகின்ற நீறுவெல்லம் கல்லும்இங்கே
வருகஎன்ற வியாசர் சொல்லில்
கிஞ்சின்முறை தப்பாமல் முறைமுறையே
செய்துசெலக் கிரீடி ராசன்
மஞ்சுஉலவு மணிமகுட கவசமும்குண்-
டலமணிந்து, வாகை விற்கொண்டு,
அஞ்சலிலாத் தொலையாத அட்சயதூ-
ணீரம்முது கதனில் கொண்டான். 58

பற்பலபூண் அணிதிருத்தி ஆயுதம்முப்-
பத்திரண்டும் பரித்துக் கொண்டே
அற்புதஞ்சேர் வில்வீரன் யாகசா-
லையைநோக்கி அங்கை கூப்பி
விற்பிரபை வெயில்நிலவும் எரிக்கும்மணிப்
பணிதிகழ வெய்யோ னைப்போல்
பொற்பிரத மிசைஆனான்; வேதகோ-
ஷங்கள்செயம் பொலிய ஆர்த்தார். 59

மிகுவிடகீ தனன்,மேக வண்ணன்,அனு
சாளுவன்,வேந்து எமனா சூரன்,
சுகசீலன், சுவேதன்அக்கு, ரூரன்,உத்து-
வாசாரி, துளசி யான்றன்

---

57. விருட்டித்தல் - மலங்கழித்தல்; முகுர்த்தம் - குளம், சோலை, கோயில் தொடங்கும் நலல நேரம்; வாபி, நந்தனவன, ஆலயப்பிரதிஷ்டா முகூர்த்தம். நீறு - சுண்ணாமபு; வாக்கி - சேர்த்தரைத்து, இசைக்கப்பண்ணி - பொருத்தி

58. கிஞ்சின் - ஒரு சிறிது, மஞ்சுஉலவு - அழகிய.

59. வில்பிரபை - பிரகாசம், ஒரு பொருடகிளவிகள்; பணி - அணிகலன்கள்; வெய்யோன் - சூரியன்.

மகன்பிரத்தி மன்,அனிருத் திரன்கிருத
வர்மன்,சாத் தகிம கீபன்
இகல்மகுட வர்த்தனராம் இசைந்தபட்ட
வர்த்தனர்கள் யாருங் கூட, 60

பஞ்சவாத் தியஒலிகள் இடிகடலைப்
போல்ஆர்க்கப் பகரும் வீரர்
அஞ்சலிசெய் தேஇரத மதில்ஏறிப்
பலர்சூழ, ஆழி போல
மிஞ்சுபெரும் தளஞ்சூழ, வெள்ளைவட்டக்
குடைநிழற்ற, விருது கூறத்
தஞ்சநெடு மால்எனவே தனஞ்சயனும்
வச்ரரதந் தனிற்சென் றானே. 61

வரைசிதறப் புவிநெளிய மாசுணமா
முடிபொடிய மகரம் மோதும்
திரைசுவறி அளறுகொளத் திக்கயங்கள்
உளறிடஎண் திகிரி அஞ்சி
நெரிநெரியக் கமடமது நெறுநெறென
நிலைகுலைய நெடிய மேரும்
நரன்இரதம் நடத்திடவின் அம்பரத்தின்
உம்பர்களும் நடுக்கம் கொண்டார். 62

இந்தவிதம் எண்ணில்பல் விதங்கோடி
புறஞ்சூழ, இவன்பின் ஏக,
முந்தவயப் பரிநடக்க, வேதியர்சொல்
முறைசடங்கு முடித்தே செல்லச்
சிந்தனைய தளங்கள்எலாம் திரண்டுசெலத்
தனஞ்சயனைச் சீத ரன்றான்
வந்துவழி விட்டுஇனிய மதிஉரைத்து
மீண்டுதரு மனைக்கண் டேபின் 63

---

60. மகுட வர்த்தனர் - முடிமன்னர்; பட்டவர்த்தனர் - படடத்தரசர்.

61. ஆழி - கடல், தளம் - படை

62. மாகணம் - பாம்பு, இங்கே ஆதிசேடன்; மகரம் - முதலை, திரை - கடல்; சுவறி - வற்றி; அளறு - சேறு; உளறிட - தடுமாற; எண்திகிரி - அட்டகுலாசலவகள்; கமடம் - (உலகைத்தாங்கும்) ஆதிகூர்மம், ஆமை.

63. சிந்து அனைய - கடல் போன்ற; வழிவிட்டு - விடை கொடுத்தனுப்பி.

"இங்குவந்த மகளிர்களைப் பதிசேர்த்திட்டு,
என்னுடைய முன்னோன் தன்னைச்
சங்கையுடன் பணிந்துவிடை தான்வாங்கி-
யேதிரும்பித் தனஞ்ச யன்றன்
பங்குறுவேன்" எனஉரைத்தே, "யாகசாலை-
யில்சற்றும் பங்கம் இன்றி
இங்குச்சா வதானமுடன் இருவீமா"
எனக்கூறி, எழுந்த மாயன் 64

மானவியா சரைநோக்கி, "வேள்வியினை
நிறைவேற்றும் அய்யா" என்று
தானும்மணித் தேர்ஏறிப் பெண்களையும்
வையமது தன்னில் ஏற்றிக்
கானமயில் குந்தியையும் நமஸ்கரித்து
நாற்பதினைங் காதம் நீங்கித்
தேனுலவும் பொழில்சூழும் துவரைநகர்
சேர்ந்திருந்தான் செங்கண் மாயன். 65

கண்ணன்நகர் அடைந்திருக்க அப்பால்வெம்
பரிப்பிறகே காண்டி பத்தோன்
எண்ணில்இர தம்சூழப் பஞ்சவாச்-
சியம்முழங்க, வெள்ளச் சேனை
மண்ணும்விண்ணும் நடுநடுங்க வழிநடந்தான்;
பரிஇரவும் பகலு மாகத்
திண்ணமுடன் நடந்த;சில தினமும்இரவு
தரித்த;சில தினமும் அம்மா 66

தரித்தஇடத்து இவர்தரித்து, நல்நகரி
உண்டாக்கித் தங்கி டாது
பெருத்தநடை கொண்டவுடன் பின்நடந்து,
செயும்சடங்கு பேணிச் செய்து,

---

64. முன்னோன் - அண்ணன், பலராமன்; சங்கை - மரியாதை; பங்கம் - குறைவு.
65. வையம் - பல்லக்கு; தேன் - வண்டுகள்.
66. தரித்த - தங்கியது; தினமும் - பகலிலும்.
67. துரந்து - தொடர்ந்து; நிரைத்த - வரிசையான; முகிற்படலம் மேகக்கூட்டம்.
68. அபிதானம் - பெயர்; இன்னன் - இவன்.

துரத்துஇருபன் மூன்றுதினம் நடந்தளவில்
(அரைக்கா)த தூரம் முன்னாய்
நிரைத்தபல கோபுரங்கள் முகிற்படலம்
தவழ்தரவே நிற்கக் கண்டார் 67

அந்நகரம் எந்நகரம்?" எனஎமனா
சூரனைஅர்ச் சுன்னும் கேட்க,
"மன்னர்மன்னா! வீரசிகா மணியே!அந்
நகர்மயிடா புரி;ஆள் மன்னன்
தன்னபிதா னம்நீலத் துசன்; குமரன்
பேர்தாம்ப்ரத் துசன்என்று ஆகும்;
இன்னன்மால் அரன்அயனும் எதிர்த்தாலும்
அடக்கவல்ல இகல்வல் லாளன்; 68

அக்கினியும் அவன்மகளைக் கொண்டமண
வாளன்;அங்கே அவனும் வாழ்வன்;
உக்கிரப ராக்கிரமன்; ரணவீர
பண்டிதனாம்; உரவன் சேயும்
சக்ரபதி அனையான்"என்று உரைத்தளவில்
தலையசைத்தான் எதிரித் துட்ட
நிக்கிரகன் தனஞ்சயனும்; நெடும்படையும்
வீரியரும் நெருங்கிச் சென்றார். 69

அரியபரி குளப்படிக்கும் சலசபரி-
சம்விருட்டித் தஇடம், வாசம்
விரவுமிடம், படுத்தவிடம் செயும்சடங்கு
விதிநடத்தி ஏகும் வேளை
புரவிமயி டாபதிநல் நகர்நோக்கி
நடந்ததுகாண் பூபா என்று
அருள்முனிவன் உரைக்களவில் அதிசயித்துஅப்-
படியோஎன்று ஆர்வம் கூர்ந்தான். 70

வேள்வி ஆரம்பச் சருக்கம் முற்றும்
ஆகச்சருக்கம் 6க்கு விருத்தம் 729

---

69. சக்ரபதி - சக்கிராயுதன், திருமால்; துட்ட நிக்கிரகன் - தீயவர்களை அழிப்பவன்.
70. சலசபரிசம் - சிறுநீர்சுழித்தல், ஜலஸ்பர்சம்; பூபா -மன்னனே; முனிவன் - வைசம்பாயனன்; அதிசயத்தவன் ஜனமேஜயன்.

7. நீலத்துசன் போர்ச் சருக்கம்

(கலிவிருத்தம்)

உலகுஎங் கும்நிரந் தரமாய் உள்அகம்
நிலைதங் கிநிறைந் தபரா பரன்,நல்
மலர்தங் குமணங் களதாய் நினையும்
பலர்சிந் தைஅறிந் தபரன் துணையே 1

பரிதான் இருபத் துடன்மூன் றுதினம்
சரிமேல் நடைகொண் டது;தான் மயிடா
புரிநேர் முகமா யதுபோந் தபினே,
"வருகா ரியம்ஏது" எனமன் வினவ 2

அரசே! அறுநாள் குதினந் தனிலே
விரைசாய் மயிடா புரிமேல் முகம்வைத்து
அரிதா விநடந் தது;அனீ கம்எனும்
திரைவா ரிதிபின் செருமிச் செலவே. 3

உருமும் கடலும் குமுறும் படியாய்
விரிபஞ் சமுழக் கமுமே விடவே
கிரணக் கவிகை கிளர்நீ ழலிலே
பரிபற் றிநடந் தபதந் தனிலே 4

(வேறு)

வலுத்த நீலத் துசன்தரு மாமகன்
சலத்தில் நின்று சலக்ரீ டைசெயப்

---

1. உள்ளே உள்ள ஆன்மாவிற்கும் அந்தர்யாமியாக விளங்கும் என்பதை வலியுறுத்த உள் அகம் என்றார். இங்கு அகம் கேவலம் ஏழன் உருபன்று, பூவின் மணம் போலப் பாகவதரின் உள்ளத்தே உள்ள பரம்பொருள்.
2. சரி - வழி.
3. அரி - குதிரை; அனீகம் - படை; செருமி - நெருங்கி
4. கிரண - மணிக்கதிர்களை உடைய; பதந் தனிலே - வேளையில்.

பலித்த தேவியும் பாங்கிபத் தாயிரர்
குலத்து டன்புறம் சூழ்வரக் கூடியே 5

நின்ம தாநதி நீர்விளை யாடவே
சொன்ன தாம்பிரத் துசனுடன் சேனைகள்
வன்ன மூன்றுஅக் ரோணிவ ளைந்திடத்
தன்ம தானஞ்செய் தேரதத் தாகினான். 6

வண்ண லக்கம்வை யம்சக டங்களும்
பெண்ணி னங்களும் பெட்புடன் சூழ்வரப்
பண்ணி னங்களும் பாடலும் ஆடலும்
கண்ணும் கன்னமும் காட்சிகொண்டு ஏகினான். 7

விருதி னங்களும் மிக்க பதாகையும்
துரம தாம்பல கவிகையும் சூழ்வர
விருது கட்டிய மேளம்மு ழங்கிடப்
பரவு சாமரை பாங்கி இரட்டவே. 8

(எழுசீர் ஆசிரிய விருத்தம்)

விதமி ருந்தநவ ரத்ன வையமிசை வேந்தர் வேந்தன்மகன் காந்தைதான்
மதன மஞ்சரியும் இந்தி ராணியென மாதர் வையநிரை சூழவே,
பதவி யானபல கவரி சாமரைகள் பாவை மார்பரவி வீசவே.
இதம தானபல மாதர் பாகிலைகள் ஈந்துஅ டைப்பையது கட்டவே 9

மன்னர் மன்னன்மகன் தாம்பி ரத்துசனும் மதன மஞ்சரியும் அயல்வரப்
பின்னும் முன்னும்மிக மகுட வர்த்தனர்கள் பின்பு பட்டவர்த்த னர்களும்
துன்னு சாகரம தான சேனையொடு சூரர் வீரர்பலர் சூழ்வர
நன்ன லங்களொடு புண்ய நர்மதைஎன் நல்ந திக்கருகு நண்ணினார். 10

கோல மானமயி டாப திக்குஅயல குணக்க தானநரு மதாநதிக்கு
ஏல வேஅருகில் எய்தி வைகிநதி யினில்இ றங்கிவிளை யாடியே.

---

5. வலுத்த - வலிமை மிக்க; குலத்துடன் - கூட்டத்துடன்

6. வன்ன-அழகுடன். போருக்கன்றிப புனல் விளையாட்டிற்குச் செல்வதால் வன்னப்படை எனப்பட்டது; தன்ம தானம்-இங்கு யாத்ராதானம்.

7. வன்னம் - காது; காட்சி கொண்டு என்றது கேள்வி கொண்டதற்கும் உபலட்சணம்.

8. பதாகை - கொடி, துரம்-சுணம்.

9. மகன் - தாம்பிரத்துசன்; காந்தை - மனைவி, பதவியான - ஒரே ஒழுங்காக இரட்ட ப்படுகின்ற; பாகிலை- பாக்கு, வெற்றிலை; அடப்பை - வெற்றிலை பாக்குப்பெடி..

வால மன்னன்மகன் மீண்டு வந்துஅயல்ம ருங்கில் ஓரிடம்இ ருந்தனன்;
சோலை வாய்அருகில் அரசுஇ ருந்தபினர் தோகை மார்இனிதுஎ ழுந்தனர்.
11

மருவுஅ லங்கிருத மதன மஞ்சரியும் வந்த பெண்களினொடு இணங்கியே.
பொருவுஇல் புண்ணியவி சால நல்நதிபு குந்து நீந்திவிளை யாடியே,
சருவி வாலவய தான மாதர்கள்ச லக்கி ரீடையது செய்யவே
விரவு பன்மலர்அ லைக்கஅ மிழ்ந்துவெளி கண்டுஅ மிழ்ந்துவரும் வேளையே 12

பங்க யங்கள்பல வும்ப யம்கொடுப யம்பு குந்தனப யோதரம்
மங்கை யம்பருவ மின்கள் தங்கள்முகம் அங்குஅ தற்குஇணைஒ வாதுஎன;
துங்க ஒண்குவளை யின்கு லங்களவை தொய்வது ஒண்கண்நிகர் இல்என;
கொங்கை யில்திரைஅ டித்தல் வாரிதிகு வட்டின் மீதுஅறைத ரங்கம்நேர்.
13

இந்த வாறுபல பெண்கள் அந்நதியி லேம கிழ்ந்துவிளை யாடும்நேர்
சுந்த ரம்கொள்நவ ரத்ன ஒண்குடைது லங்கு நீழல்கொள்து ரங்கமும்
சந்த மானநடை நடன சாலையுடன் சகல மானவிரு துகளொடே
வந்தி டும்;புரவி கண்டு மன்னன்மகன் வந்த மாதருடன் ஒதுவான்
14

"யாவ ருங்கரையில் எய்தி ஊர்புகுதும்;
அசுவ மேதியா கம்செயும்
மாவி தோவருது; யான்பி டித்துஅமர்ம-
லைக்க வேணும்"என, மனைசொல்வாள்
"தேவ ரீர்எனதுமனம கிழ்ச்சிசெய்தி-
டாதுஅ னுப்புவதும் என்கொலோ?
ஆவல் தீர்தரவும் முன்பின் ஒத்தவித-
மாய்அ ணைந்துஅணுகு வோம்நகர்.
15

---

11. கோலமான-அழகிய;அயல-அருகே,குணக்கதான-கிழக்கில்; ஏலவே-முன்பாக,வைகி-தங்கி,வால-இளமைப பருவ முடைய; அரச-இங்கு இளவரசன்.

12. இணங்கி-சேர்ந்து,வெளிகண்டு-நீருக்கு மேலே வந்து.

13. பயமகொடு - அஞ்சி; பயம் - நீருக்குள்; பயோதரம் - நகில்களும்; மின்கள் - மின்னல் போன்ற பெண்கள். பங்கயங்கள் பயோதரம் முகம் ஒவாது எனப் பயம் புகுந்தன என இயையும். துவக -சிறந்த. தொய்வது - தளர்வது; திரைதரங்கம் - அலை; குவடு - குன்று.

14. துரங்கம் - குதிரை. சந்தமான - அழகிய.

15 புகுதும் - புகுவீர்களாக;மனை - மனைவி; மனமகிழ்ச்சி - இங்கு காமத்தில்மனநிறைவைக் குறித்தது. முன்பின் - முந்தைய சமயங்களைப் போல; முன்பின் அணைந்து நகர் அணுகுவோம் என இயையும். எப்போதும் போல நாம் இருவரும் ஒன்றாக ஊருக்குப் போவோம் என்பது ஒரு வெளிப்படையான பொருள்

என்ற மாதினைமு னிந்து செல்கெனஇ-
சைத்துஎந் தன்வயதி னிற்குளாய்
வென்றி யாம்அவய வத்துஅ லங்கிருத
விசய சம்பிரம விருதுடன்
நன்றி யாய்வருப ரிக்கு நேர்விழிந-
யந்து கண்டதிலை யான்எனச்
சென்று பற்பரா கத்து ரங்கமது
சிக்கி யேபடம்ள டுத்தனன். 16

பரிபி டித்துமுக படத்தி டத்துஎழுது
பயன்உ ணர்ந்துமிகு பற்கடித்து
உரமி குந்தமிகு கோப தாபமொடும்
உறுக்க, உன்னியுடன் இலகினோர்
சிரம்மு கம்கவுளி னில்பு டைந்துவிருது
யாவு மேகறுவி யேபறி,்து
எரிவ ளர்த்திடுபி ராம ணாளைஅடி
யாமல் ஏகுஎனவி ளம்பியே. 17

அரசுஅ றிந்திடஉ ரைக்க ஒற்றரைஅ-
னுப்பி,மாதரைஅ னுப்பியே
கெருட வ்யூகமொடு படைநி றுத்திஒளிர்
கிளரும் வெம்பரியை நடுவில்வைத்து
அருண ஒண்கவசம் மகர குண்டலம்அ-
ரும்கி ரீடமும்அ ணிந்துபின்
விரவு தின்படைகள் பலஅ ணிந்து இரத
மீதில் மண்டிசெய்துஇ ருந்தபின். 18

பல்அ டிக்கடிக டித்து உறுக்கிவிசை
படப டத்துஇரண பண்டிதன்
வில்வ ளைத்துஉரிய சக்க ரத்தைநிகர்
விற்கு ணத்தொனிகள் செய்யவே,

---

16. முளிநது - சினந்து, பரிகரு - குதிரையை, உருபுமயக்கம், சிகை -பிடித்தது, சிக்கு வைத்து, படம - முகபடாத்தை

17. பயன் - வாசசத்தின் பொருள், உறுக்க - அதட்ட, சுவுள் -சுன்னம்.

18 அரசு - தந்தையாகிய நீலதுசன்;அருண - சூரியனைப் போல ஒளிர்கின்ற, படைகள் - ஆயுதவகள், மணடிசெயது - எதிரிகளுட ன் போரிட. ஆயத்தமாக முழுநதாளில் நிற்றல், வீராசனம் என்பது இதுவே மண்டியிடல வேறு,

வல்ல பற்பரா கப்ப ரிப்பிறகு
வந்த பேர் அபயம் அபயம்என்று
ஒல்லை யில்கிரிடி பக்கல் எய்திநிக
முற்ற வாறுகள்உ ணர்த்தினார். 19

நீல வேல்விழிசி வந்து பல்லைநெறு
நெறென வேகருவி, முன்கையைச்
சால வேகடித்து எருவை கக்கி, விழி
தழல்க ளேசொரிய, வில்வளைத்து
ஆல காலம்என வேகு ணத்தொனிசெய்து
அண்டம் மண்டலம்ந டுங்கவே.
"ஏல வேஇரதம் நடத்து க"என்றுஇரத
சார திக்குஉரைசெய் ஏல்வையில் 20

கன்னன் மைந்தன்அனு சாளு வன்திறல்க-
டோற்க யன்குமரன், சாத்தகி
மன்னர் மன்னன்எம னாசு ரன்குமரன்
மந்திரி, மால்குமரன் அவன்மகன்,
பின்னும் மூவர்களும் வந்து இவன்றனொடு
"பெருகு கோபமுறல் என்கொலோ?
கன்ன லுக்குள்அத மாக வேபொருது
கருதி வாகைபுனை வோம்ஐயா. 21

என்று உரைத்துவிடை பெற்று அடர்ந்திரத-
மேந டத்திஇவர் யாவரும்
சென்று கோலி வில்வ ளைத்துமிகு
சிமுதம் ஏழும்ஒரு முகம்உறத்
துன்றி வீசுமழை மாரி நேர்கணைகள்
சொரிய வேகடிகை யதனிலே
நின்ற நின்றவிட மேம டிந்தனநி-
தான மானவைஅ டங்கவே 22

---

19. விசை - மீசை; இரணபண்டிதன் - போர்வல்லுநன்; ஒல்லையில் - விரைவாக.

20. எருவை - உதிரம்.அண்டம் - ஆகாயம்.மண்டலம் - நிலவுலகம். ஏலவே - போருக்குப் பொருத்தமானபடி; ஏல்வை - நேரம்.

21. மால்குமரன் - பிரத்யும்னன்; அவன்மகன் - அநிருத்தன். மூவர் - உததுவாசாரி, அக்ரூரன், வன்னியருத்திரன்; கன்னல் - ஒரு நாழிகைப்போது. அதமாக - அழியும்படிக்கு;

22. கோலி - சூழ்ந்து; சிமுதம் - மேகம். சீமூதம் என்றபாலது செய்யுள் ஓசை நோக்கி விகாரமடைந்தது; ஏழுமேகங்களும் சேர்ந்து மழைபெய்தது போல. என்பது உவமை. கடிகை - ஒரு நாழிகை; நிதானம் - படை; அடங்கவே - முற்றிலும.

"சேனை யைப்பொருவது ஓர்வி சாலமிகு
சேவ கத்திறலின் வீரநீர்
மான முற்றசெயல் அன்று"எ னச்சிலைவ-
ளைத்து வாளிமழை வீசியே
தான முற்றஎம னாசுரன்சி லைத-
றித்துஅ ருங்கொடித தித்துவன்
பானல் தேர்,புரவி, சூத னைப்பொடிப-
டுத்தி மெய்துளைப்ப டுத்தியே 23

மகன தானசுக லீலன் வில்லும்அணு
வாக்கி யே,இரதம் நீறுசெய்து,
அகல மீதுகணை ஐந்துஅ ழுத்திவல
அமைச்சன் உந்துஇரதம் வில்அழித்து
உகளும் நாலுகணை நெற்றி தைத்துஉருவ
அக்கு ரூரன்வில்உ டைத்தபின்
பகரும் மாஇரதம் நீறு காணஇரு
பகழி தொண்டையில்அ முத்தியே 24

வலிய தேர்,வரிவில், கிருத வர்மனையும்
மாற்றி வாகுவினில் எண்கணை
உலைய ஊடுருவ எய்து தேர்வரிவில்
ஒழிய உத்துவா சாரிமெய்
மெலிய ஐந்துகணை நெற்றி யுட்புகுத
விடுத்து, ருத்ரன்வரி வில்துணித்து
அலைய வேஇரதம் நீறு செய்துகணை
ஆறு மார்பினில்இ ருத்தியே. 25

வலவன் மாமுடிஉ ருட்டி, வில்துசம்அ-
றுத்துஉ டைத்துஇரதம் நீறுசெய்து
உலவி ஊடுருவ வாயில்ஓர் கணையில்
உணர்வ ழிந்ததுபி ரத்திமன்;

---

23. வீரநீர் - வீரத்தின்பணபு, அர்த்தரதர், மகாரதா போன்ற நிலையிலுள்ள பெருவீரர்கள் சாமானியராகிய காலாட்படைகளைப பொருவது மானமன்று என்றபடி., தறிதது - துண்டித்து, பானல்தேர் - குதிரைகளால இழுக்கப்படுகிற தேர்; மூன்றன் உருபும் பயனும் உடன்தொக்க தொகை

24. அகலம் - மாபு; உகளும் - பாயந்து செல்லும்.

25. வாகு - புயம்; உலைய - வருந்துமாறு, இருத்தி - தைத்து நிற்கும்படி.

கலிஇது என்றஅனு சாளு வன்திகிரி
கற்கி சூதன்ஒழி யக்கொடி,
சிலைச யந்தனம்அ றுத்து நாலுகணை
திண்பு யத்துஉருவ எய்தனன். 26

நாலு கோலதுபு யம்தொ ளைக்கநர
சிங்கம் அன்னஅனு சாளுவன்
மேலும் மற்றொர்இர தத்தில் ஏறிவரி
வில்வ ளைத்து ஒருபது ஐந்துகோல்
கால சூலமென வேவி டுத்துஉரிய
கற்கி சூதன்முடி தத்திடச்
சால வில்துசம்அ றுத்துஉ டைத்துஇரத
மும்த கர்ந்திடநொ றுக்கியே . 27

நெற்றி தைத்துருவ நாலு கோல்விரைவின்
எய்த போதில்அயர்வு எய்தியே
பற்றி வெய்யதுஒரு சூலம் ஒன்றுஎதிரி
பாகு தேரின்மிசை ஏவியே
சற்று மேமனதுஇ ளைத்தி டாதுஒருச-
யந்த னத்தின்மிசை ஏறியே
கொற்ற மானவரி வில்வ ளைத்(துஏழு)
கோல்உ ரத்தின்மிசை ஏவினான் 28

விசுவன் மைத்துனன்வி டுத்த கோலும்மரு-
மத்தி ஞாடுருவ மற்றிவன்
அசைவ தற்றுஉணர்வு வந்து மற்றொர்இர-
தத்தில் ஏறிஅனு சாளுவன்
விசைமி குத்தவரி வில்வ ளைத்துஎதிரி
வில்அ றுந்துவெரிந் ஓடவே
விசிகம் எட்டுஉருவ விட்ட தேயுணர்வு
கெட்டு மெய்அயர்தி தொட்டதே 29

---

26. வல்வன் - பாகன்; ஓர்கணையில் பிரத்திமன் உணர்வழிநததென்க, திகிரி - சக்கராயுதம்; கற்கி - குதிரை, சூதன் - பாகன், சயநதனம - தேர்,

27. கோல் - அமபு, ஒருபதுஐநது - பதினைந்து, காால சூலம: இயமனின சூலப்படை

28 பாகு - தேர்பபாகன், உரம - மார்பு.

29. விசுவன் மைத்துனன் - அச்சினிதேவனின் மச்சினனாகிய தாமபிரத்துசன், வெரிந் ஓட - , மாரபில் புகுந்து முதுகில் வெளியேறுமபடி, விசிகம் - அம்பு, அயர்தி - அயர்ச்சி,

தேரின் மேல்அயர்தி யாக வேதிடுதி
டென்று சென்றுகர வாளினால்
வீர மோடுதலை வெட்ட வேகமொடும்
எய்தும் முன்னம்அவன் மெய்தெளிந்து
ஆர வாரமொடு நெற்றி மீதில்ஒரு
சத்தி கொண்டுஎதிரி குத்தினான்;
பாரி லேபதைப தைத்துஅ யர்ந்துவிழல்
பார்த்து நின்றுவிட கீதனன் 30

நெறுநெ றென்றுளயிறு கறுவி யே,புருவம்
நெரிய அங்கிவிழி சொரியவே
மறும றென்றதொனி பரவ வன்சிலைவ-
ளைத்துஐ யாறுகணை விட்டனன்;
முறிமு றிந்துஇரத மும்த கர்ந்துகர
முனிஅ ழிந்த;நுதல் மூன்றுகோல்
சறச றென்றுகறை ஒழுக நெற்றிமிசை
தைத்துஉள் ஊடுருவி விட்டதே 31

ஊறு கொண்டநுதல் குருதி ஆறொழுக
உணர்வுஅ ழிந்துதெளி வுற்றபின்
வேறு தேரின்மிசை ஏறி, வான்கவரி
வில்வ ளைத்துஉரம்இ லக்குவைத்து
ஆறு கோல், நுதலில் ஐந்து கோல்,புயம-
தற்கு நாலுகணை ஏவினான்;
சாறு சாறெனவு மேச ழிந்ததுச-
ரீர மீதுஎருவை பொங்கியே 32

மத்த கம்புயம்உ ரங்க ளும்குருதி
வழிய வே,மதிம யங்கி,வில்
வித்த கன்சினம்மி குந்து, தேர்சிலையும்
எரிய எண்கணைகள் ஏவியே,

---

30 கரவாள - கைக்கத்தி; சத்தி - சிறுவேல்.

31. அங்கி - தீ; ஐயாறு - மூப்பது. கரமுனி - கையில் உள்ள வில்; கறை - இரத்தம்.

32. ஊறு - காயம். சழிந்தது - சப்பையாயிற்று. இங்கு வலியிழந்தது; எருவை - இரத்தம்.

அத்த மும்புயமும் நெஞ்சு கண்டம்நுத-
லவைது ளைக்கஇரு பதுகணை
சத்து வம்கொடுவி டத்த ளர்ந்துதடு-
மாறி வேறுஇரதம் ஏறினான். 33

சர்ப மானதைவ ளைத்துஇ ரண்டுகணை
தாம்பி ரத்துசன்வி டுக்கவே
கோப மாய்ஒருச ரத்தினால்வைகு-
றைந்தி டப்பொடிப டுத்தினான்;
பூபன் நாலிருச ரந்தொ டத்தவிடு
பொடிப டுத்திடவெ குண்டுஅவன்
"நீப ராக்கிரமன்" எனவ ளைந்தசிலை
நிமிர்வ றப்பகழி வீசினான் 34

கற்பம் மாஅதுநி கர்ப்ப மோடுகடி
மகரம் தண்பனைகள் உற்பலம்
அற்பு தங்கள்பல நிற்பு தங்கள்பல்அ-
னந்தம் ஓர்முறைசொ ரிந்த கோல்
பற்ப மாய்அறஅ னந்த வாளிகள்ப-
ரப்பி ஒன்றறஅ றுத்தெறிந்து
உற்ப னத்தினொடுஐ யாறு வாளிகள்உ-
றுக்கு வீசியும்ந கைத்தனன் 35

பாகுஅ றுந்துஇவுளி அச்சும் அற்றுஉருள்ப-
தாகை அற்றுஉறுப ரம்தகர்ந்து
ஆகு மீதுபதி னெட்டு வாளிஉள்அ-
ழுந்த வேஉணர்வுஅ ழிந்துபின்
மோக சோபமொடு வீழ முன்புதளம்
மொகுமொ கென்னும்அலை கடலைநேர்
வாகி னோடும்ஒரு நூறுஅக் ரோணியுடன்
மன்னர் மன்னனும்வ ளைந்தனன் 36

---

33. மத்தகம் - தலை; அத்தம் - கை, சத்துவம் - வலிமை;

34. சாபம் - வில், அவன் - தாம்பிரத்துசன்.

35. கற்பம் - 10^{33}; மாஅதுஎன்றது மகாகற்பம் - 10^{34}, நிதிர்ப்பம் - 10^{35}, மகரம் - 10^{17} ; தண்பனை - 10^{19} தண்பனைகள் என்றதால் மகாதண்பனையும் (10^{40}) கொள்க ; உற்பலம் - 10^{41} · அற்புதங்கள் - 10^{43} மற்றும் 10^{44} , நிற்புதங்கள் - 10^{45} ; அனந்தம் - முடிவற்றவை உற்பனத்தினொடு - மிகுச்சிறபபாக.

36.உருள்பதாகை - சக்கரமும்கொடியும், உம்மைத்தொகை. பரம் - சுவசம்; வாகு - அழகு. இங்கு பெருமையாகிய பண்பு.

வளைந்த சேனைகள்ப ரந்தவெள்ளநிகர்
மாதி ரம்திசைகள் கானகம்
ஞனத்த டாகமதுஅ மிழ்ந்து மீறிவரு
கொங்கு வெள்ளம்நிகர் ஒத்ததால்
தனர்ந்தி ருந்ததளம் நிலைகு லைந்தது;த-
னஞ்ச யன்தொடுச ரங்களால்
பிளந்தி டும்பொழுதுஇ றந்தி றந்துஉயர்பி
ரேத மாமலைப ரந்ததே 37

அட்ட பாலகர்ச ரங்கள், சந்த்ரகணை,
ஆத வன்கணைபல் ஆசுகம்
தொட்ட போதுஉவரி வற்ற மொண்டுசொரி
சோனை மேகநிகர் ஒத்ததால்;
பட்டி றந்ததுப தாதி தேர்புரவி
பகடு இனம்தவிடு பொடியதாய்
மட்டி யம்பல்அரி தாக வேபிணம்ம-
லிந்த தேமலைகள் மலைகளாய் 38

தரந்த ரங்களொடும் அவயவம்பலத-
கர்ந்துஅ றுந்துஉதிரம் எங்கணும்
பரந்துள முந்துஅருவி ஒத்துஅ ருங்குறைகள்
பலஉ ருட்டிஎழு சுழலிலே
மரங்கள் பம்பாம்ள னச்சு ழன்றுதிரை
வாரி உள்கிழிய ஓடவே
நிரந்த ரம்குடிலம் எங்கு மேஉலவ
நின்ற பற்பலக வந்தமே. 39

யானை தேர்புரவி ஆயி ரம்பதின்ம-
டங்கு நூறெனும்ம டங்குகால்
சேனை கோடிபடில் ஓர்க வந்தமது
சேணில் நிர்த்தமது செய்யும்மிக்-

---

37 மாதிரம - மலை; பிரேதம - சவம்.

38. ஆசுகம் - அம்பு, உவரி - கடல்; பகடு - யானை; மடு இயம்பல - இத்துணைஎன்று அளவு கூறல்.

39. தரம் தரங்களொடும் - கூட்டமான தலைகளொடு. குறை - உடற்குறை, சுவந்தம், வாரி - கடல்; குடிலம் - ஆகாயம

கான தாம்பலக வந்தம் நிர்த்தமிடில்
அர்ச்சு னன்சிலையில் ஓர்மணி
தானொ லிப்பதுஒரு குரல்;ம றாதுஒலிசெய்-
திட்டது யாமம்அள வாகவே 40

மற்று ளோர்களும்வி டாத சோனைமழை
வருஷ காலம்நிக ராகவே
கொற்ற வாரமத னால்வி டுத்தகணை
குரைக டற்படையி லேபுகுந்து
உற்ற சேனைகள்நொ றுக்க லாய்விழிஉ-
ருட்டி நோக்கிமிக உக்ரமாய்
வெள்ளி வாகைவரி வில்வ ளைத்துஇரத-
மேந டத்திநீ லத்துசன் 41

....
வவ்வி வீரர்கள்அ டங்கலின்
.... த கர்ந்திடவில்
வில்பொ டிந்திடநொ றுக்கினான்;
கைப்பி டித்தசிலை தேர்இ ழந்தனர்கள்
கவலும் நாலுமுறை அறுமுறை
எய்ப்பி லாதபல வீரர் யாவரும்இ-
ளைக்க வேகணைசெ லுத்தினான் 42

தேரில் ஏறுமுனம் வில்பி டித்தகண
மேசி தைந்துஇரதம் விற்கள்போய்
யாரு மேஅமர்ம றந்த வேலைஅனு-
சாளு வன்சினம தாகவே
வீர சாரமொடு தேர்ந டத்திவரி
விற்கொ டுங்கணைதொ டுத்துவிட்டு
ஊரும் மாஇரதம் பாகும் நீறெழஉ-
டைத்து விற்பொடிப டுத்தினான். 43

---

40 கால்சேனை - காலாட்படை. மறாது - மாறாமல். தொடர்ச்சியாக; யாமம் - சாமம், மூன்றுமணிநேரம

41. வருஷகாலம் - மழைபபருவம. குரைகடல - ஒலிக்கின்ற சமுததிர ம.

42. எய்ப்பு - இளைப்பு

43. வேலை-வேளையில; மா-குதிரை

ஏறு தேரும்வரி வில்லு மேபொடிய
நெறுநெ றென்றுஎயிறு கறுவியே
சீறி மற்றொர்இர தத்தில் ஏறிஒரு
சிலைவ ளைத்துஎதிரி விடுகணை
கூறு செய்துபல கோடி கோடிகணை
கொன்ற வேகொடிகொள் தேர்சிலை;
நீறு செய்தபொழுது இவனும் மற்றொர்இர
தத்தில் ஏறியும் நெருக்கியே. 44

தனுவ ளைத்துஅவன்வி டும்பல் கோடிசரம்
நீறு கண்டுஇரத சாரதி
முனிஅ றுத்திடமு னிந்து மற்றும்ஒரு
முடுகு தேரின்மிசை ஏறியே
கனம்நி கர்த்தசிலை தனுவ ளைத்துஇவன்எய்
கணைக ளைப்பொடிப டுத்தியே.
குனிவி றல்தவரும் இரத மும்குலைகு-
லைந்தி டப்பொடிப டுத்தியே. 45

மெய்கள் எங்கும்மிகு குருதி யேபரவ
வெய்ய கோல்அவன்வி டுத்தலால்
கைக ளின்கடுமை அசதி கண்டுபிற-
காக நில்லும்என ஓதியே
வைகொ ளாம்கணைகள் சாப மீதில்உற
வைத்துஇ ழுத்துஉறவி டுத்துவிட்டு
எய்க டும்சிலையும் இரத மும்பொடிய-
வேக னன்குமரன் வீசினான் 46

தேர்இ ழந்துமறு தேரில் ஏறிஒரு
சிலைவ ளைக்கும்முனம் இவன்விடும்
கூர்உ றம்கணைக ளால்ஒ டிந்து,சிலை
குலைகு லைந்துஇரதம் உடைபட

---

44. எயிறு கறுவி-பற்கடித்து.

45. தனு-வில், முனி-வில, முனிந்து-சினந்து, முடுகு- வேகமாகச் செல்லும்; கனம்-மேகம், மழைபோல் அமபு மாரி பெய்வதால்- தொழிலுவமம், சிலைதனு-ஒலிக்கின்ற வில, வினைதொகை.

46. வை-கூர்மை, சாபம்-வில், கனன் குமரன்-கார்த்திகேயனின் மகன் விடசீதனன்

வாரம் ஒன்றினைவ ளைத்து மற்றொர்இர-
தத்தில் ஏறிஅவன் வருமுனம்
போரின் முந்துசிலை தேரு மேபொடிப-
டுத்தி னான்விடுச ரத்தினால். 47

மனம்மு னிந்துமறு தேரும் வில்லினொடு
வந்து வெங்கணைதொ டுக்கும்முன்
சினம்மி குந்துஇவன்வி டுத்த கோல்இவுளி
சிலைகள் தேர்தவிடு செய்திடப்
பினும்அ ழன்றுரதம் ஏறி விற்கொடுபெ-
யர்ந்துஅ டைந்திடவும் அங்குஅது
மினல்ப ரந்தசரம் விட்டுஅ றுத்திடவும்
மீண்டு மீண்டுஇரதம் ஏறினான். 48

இந்த வாறுஒருஅறு பத்து நாலுதரம்
இவுளி தேர்சிலைகள் அழியவே
சிந்தை புண்கொடும றுத்து மேபெரிய
தேரில் ஏறிஒரு சிலைவளைத்து
உந்துஐ யாறுகணை அவன்வி டுத்து,இரதம்
உடைத ரச்சிலைகள் பொடிதர
நொந்து மார்பு,புயம், மத்த கம்,களமும்
நுழைய வும்கணைகள் உதையவே 49

அலம லந்தவிட கீத னன்சமர்அ-
மர்த்தி யேயணியு ருத்திரன்
சலத ரம்சொரியும் நிகர்ம றாதுசர
மாரி யேசொரிய அவனுமே
சினிமு கங்கள்பல கோடி கோடிகள்செ-
லுத்த, நேரிடுவர் செங்கணை
உலகும் அம்பரமும் மந்த ரங்கள்திசை-
யூடு தாக்கிஉழல் கின்றவே. 50

---

47 வாரம்-வில்;

48. முனிந்து-கோபம்கொண்டு. கோல்-அம்பு; இவுளி-குதிரை; அமன்று-சினந்து. மினல் பரந்த - ஒளிமிக்க.

49. புண்கொடு-வருந்தி. மறுத்துமே-மீண்டும். ஐயாறு-முப்பது. யத்தகம்-தலை; களம்-கழுத்து.

50 சலதரம்-மேகம்; சிலிமுகம்-அம்பு; அம்பரம்-ஆகாயம்; மந்தரங்கள்-மலைகள்.

அம்புஅ ருஞ்சிறகை அம்பு கொய்திடவும்,
அம்பை அம்புவகிர் செய்யவும்
அம்பை அம்புமுனை கறுவி எண்டிசையும்
அலைய வும்புவிகள் உலையவும்,
அம்பு வன்பலகை அறஅ றுத்திடவும்
அம்பை அம்புபொடி செய்யவும்,
அம்பை அம்புகள்து ணிக்க வும்,கடலை
அம்பொடு அம்புஎதிர்க லக்கவும் 51

அந்த ரம்திசைகள் எண்தி சாமுகம்அ-
டங்க லும்கணைநி றைந்தபின்
விந்தை சேர்அணியு ருத்தி ரன்கைவிசை
விஞ்சி ஏவுவிசி கங்களால்
வந்து எதிர்ந்தஅர சன்ச ராசனமும்
வலிய தேர்இவுளி வலவனும்
வெந்துஅ ழிந்ததுஅவன் அங்கபூ எங்கணும்மி-
குந்துஅ ரும்சரம்நி றைந்ததே- 52

நிலைஅ ழிந்து உணர்வு மதிஅழிந்து சமர்
நினைவுஒ ழிந்துநில மிசைபிழத்
தலைவர் வந்துஅரசு தனைவி ரைந்து ஒருச-
யந்த னத்தின்மிசை வைத்து அகன்று
அலம லந்தபல சோபதாப மும்அ-
கற்றி னார்உணர்வு வந்தபின்
சலமி கும்தழல்மன் னவனை உன்னஒரு
சணம்அ டைந்துஇனிது பகருவான். 53

---

51. சிறகு-சுணையின் பின்புறம் சுட்டப்பெறும் இறகு; வகிர் செய்தல்-பிளத்தல்; கறுவி-கோபித்து; பலகை-கேடயம்.

52. கைவிசை-கைகளால் ஏவும் வேகம்; விசிகம்-பாணம்; சராசனம்-அம்புராத்தூணி.

53. தலைவர்-சிறிய படைத்தலைவர்கள்; சயந்தனம்-குதிரை; சலம்-தீராத சினம்; தழல் மன்னவன்-அக்னிதேவன்; சலமிகும் தழல்மன்னவன் எனச் சொல் முரண்படக் கூறியது. ஒரு நயம்; உன்ன-நினைக்க; சணம்-கணம்.

(வண்ண விருத்தம்)
(தனன தனதன தனன தனதன
தனன தனதன தந்தனா)

வலிய பகையுறில் எனையும் நினையும்என்
வலிமை மொழியும்ம றந்துநீர்
மெலியல்; இகல்செயும் அதியது எனவரும்
விசயன் வயவர்கள் தம்பிரான்
அலதுஒர் அரிஅரர் பிரமன் நிகர்அலர்
அவன்வி லதுதொடில்; அண்டர்கோன்
சலுகை மகன்அடர் அசுரர் குலமது
தகன மதுசெய்த தந்த்ரியாம். 54

அதிக தயிரிய புயவ லிமையுளன்
அமரர் பதிவனம் உண்கயான்
உதவு பொழுதுஎழு முகிலை விலகிய
உறுதி உடையச ரங்களால்
பதினொர் அரர்ஒரு பனிரு கதிர்,வசு,
பலவி புதர்கள்பு றங்கொடே
இதென புதுமையது எனவும் உடைதர
இகல்செய் திடுசெய சிங்கமாம் 55

அவன்வில் அழிவதில்; இரதம் அழிவதில்;
அசுவம் அழிவதில்; அங்கியான்
புவியில் உதவியது; இவனொடு ஒருவர்கள்
பொரவ லவர்இலை இன்றுநீ
நவமில் எனைஒரு கணையி னொடுவிடு
நரலை அனையத ளங்கள்தான்
சுவற எரிசெய்து வருவன் மடலொடு
தொடுதொ டெனமகிழ் மிஞ்சியே 56

---

54. என்-என்று கூறிய; மெலியல்-சுவலற்க;மதி - சந்திரன்; அண்டர்கோன்-இந்திரன்; தந்த்ரி-படைத்தலைவன்.

55. வனம்-காடு. காண்டவ வனம்: உண்க - உணண; வசு-அட்டவசுக்கள். விபுதர் - தேவர்; உடைதர - நேராக.

56. அங்கியான்-தீக்கடவுள்; நரலை-கடல்,சுவற-வற்ற.

அனலும் ஒருகணை யதனில் வதிதர
அதிக விசையின்உ ரம்கொடே
முனியில் அதைவிட எரிகள் கிடுகிடு
மொகுமொ கெனவும்இ ரைந்துதான்
நனிதி சைகள்புவி முகடு தடவிட
நடல முறவும்நெ ருங்கியே
வினைகொள் சதுவகை விகட மிடுபடை
விசயன் வளையம டங்கலாய் 57

(தனன தனதன தனன தனதன
தனன தனதன தனதனா)

நரர்கள் அலறிட இவுளி அலறிட
நடல மதகரி அலறிடப்
பரவி எரிதுகள் படவும் எரிசெய்து
பரிசை குடைகொடி இரதமும்
எருகது எனஅவை கருக எரிசெய்து
தடையது அறமுடு கியபின்நேர்
வெருவி வெரிநிடு மவரும் அவிதர
விரைவின் முடுகியும் எரிசெய்தாம் 58

கடின வடவையை நிகர அடையலர்
கடலை நிகர்படை மடியவே
மடம டெனஎரி பரவி எரிசெய
மருகன் வலிமையை மனஅறிந்து
உடைய படைகொடு மகனும் அரசனும்
உறுதி யுடன்நகர் அடையவே
தடையது அறவரு படைகள் பலபல
தகன மதுசெய்து முடுகினான் 59

---

57. வதிதர-வசிக்க, நிலைபெற்றிருக்க; நடலமுற - செருக்குடைய; விகடமிடு-(பகைவரை) வருத்துகின்ற.

58. நடலம் - செருக்குடைய; பரிசை-கேடயம்; வெரிநிடு-புறமுதுகு காட்டி ஓடும்; அவிதர - அழிய.

59. அடையலர்-பகைவர்; மனன்-மன்னன்.

(தனன தனதன தனன தனதன
தனன தனதன தந்தன)

வலவன் மகனவன் மகனும் முடியது-
வரையின் உரவர்அ டங்கலும்
இலக பரிதரும் அரசும் மதலையும்
இவுளி கொடுதரு துங்கனும்
இலக நிசிசரன் மருகன் மகனொடு
கதிர்உ தவுசுதன் மைந்தனும்
பலரும் ஒருமுக மொடுமு கில்நிகர்
பகழிமழைகள்கொ ரிந்தனர். 60

எரியில் இடுவிறகு எனவும் எரிசெய்து
எரியின் இறைவன்நெ ருங்கியே
பரவ விரதமெய் உடையில் உறும்அழல்
படவும் உடல்கள்பொ சுங்கியே
வெருவி அபயம்நின் அபயம் எனவிறல்
விசயன் வெரிநிட மண்டினார்
வரும னவரிடம் அபயம் அருள்செய்து
வலிய சிலைகுண முஞ்செய்தே 61

விசுவ உருவொடு வருணன் மருவிய
விசைய கணைவிட மண்டியே
பரவை யளபுனல் முழுதும் மணலொடு
பரவி விரைவின்உ றிஞ்சியே
இருமை யுளவெளி திசைகள் பலதையும்
இருள்கள் விரவலி முங்கியே
உரம தொடுபனை மரம தெனவலு
உடைய மழைமகள்பொ ழிந்ததே 62

---

60. வலவன்-திருமால், அவர்மகன் பிரத்திமன்; அவன் மகன் அநிருத் தன். துவரையின் உரவர், சாத்தகி,உததுவாசாரி முதலியோர்; பரிதரும் அரசு-எமனாசுரன்; மதலை-சுகவீலன்; துங்கன் - அநுசாரூவ ன்; கதிர் உதவுகதன் - சர்ணன்; மைந்தன் - விடகீதனன்.

61. எரியின் இறைவன்-அக்கினி தேவன். வெரி நிடம் - முதுகுக்குப்பின்

62. இருமை-பெருமை.

நிலமும் உரகமும் நெளிய விழும்மழை
நெடிய பிரளயம் விஞ்சவே
மலைகள் குவிதரு மழையை அவியென
வசுவும் விரைவின்அ ருந்தியே
குலிசன் அருளிய குமரன் முனம்எதிர்
குறுகி வருவது கண்டுதான்
வலிய தயிரிய விசயன் மனமது
மறுகி மிகவும்ம யங்கியே. 63

சரம்இது எது?எரி சரம்இது எனில்விடு
சலில பதிகணை கொன்றிடும்;
பிரம சரம்அல; அரிச ரமும்,இறை
பெரியன் அருள்சரம் அன்றுஇது;
உரம துடன்வரு சரம்இது எது?அறி-
குவம்இன்று எனஉ லகு உண்டவன்
சரண மதுதுதி செயவும் உறுதிகொடு
இதனை விழிகொடு உணர்ந்தனன். 64

(எழுசீர் ஆசிரிய விருத்தம்)

கரமும் ஏழு நாவும் ஏழு கலைகள் மூன்ற தாகவே
கிருடி காணும் அளவில் மேரு கிரிய தான சிலையைவைத்து
"எரியி ராச! சுசிக ராஎன் னளவில் ஏது கோபம்?நீர்
அருளி னோடும் உதவு தேர்வில் அலதுஎன் ஆண்மை உளதுஎனோ? 65

நினது சார்பு மகிமை ஆண்மை நிலைமை யான வலிமையால்
கனதி யான புரவி யோடு கருதி நானும் அணுகினேன்;
எனவு மேகை குவியி னோடுஅ நேக நேர மேதுதித்
தனதி னோடு புகழ நீடு தகனன் மேலும் எரிசெய்தான். 66

---

63. உரகம்-பாம்பு. இங்கு ஆதிசேடன்; குவிதரு-(ஒரிடத்தில்) குவிக்கின்ற; அவி-வேள்வியில் இடுபொருள்; வசு-அக்கினி; குலிசன்-இந்திரன் ; குமரன்-அருச்சனன்.

64. சலிலபதி-நீர்க்கடவுள், வருணன்; எரிசரம்-ஆக்னேயாத்திரம், அரிசரம்-நாராயணாத்திரம்; இறைபெரியன் அருள்சரம்-பாசுபதம்.

65. கிரிடி-மலையைப் போன்ற; சுசிகரா-(அனைத்தையும்) தூய்மைப்படுத்துபவரே.

66. கனதியான-பெருமையில்க; கருதி-வணக்கம்;

அக்குரோணி பன்னி ரண்டுஅ டங்க வந்துஒ டுங்கவே
உக்ர மாய்எ ரித்து மீறி உதக வன்சி னந்துற
மிக்க கோப தாப மோடு விசயன் நிந்தை மிகவுரைத்து
இக்க ணம்கொல் வேன்உன் ஆவி என்று பற்க டித்தனன். 67

முன்கை யைக்க டித்துஉ மிழ்ந்து முனிவி னோடும் முனிவளைத்து
இன்கு ணத்தொ னிக்குள் அண்டம் எண்தி சாமு கங்களும்
வன்கி ரிக்கு லங்கள் திக்க யங்கள் மாசு ணங்களும்
தன்கு றிப்புஉ ரம்த ளர்ந்து சகம்எ லாம்ந டுங்கவே 68

துர்க்கு ணத்தின் வன்னி நீது ரோக பாத காநினை
நிர்க்கி ரக்க மாய்அ ழிக்க நின்னது ஆவி உண்ணவே
வர்க்க மால்இ தோசி னந்து வருகி றார டாஎன
விற்கு வீரி யன்மு ராரி விசய வாளி தொடுமுனே 69

கைஅ யர்ந்து வாய்பு லர்ந்து கண்க லங்கி மங்கியே
மெய்அ யர்ந்துமிகஅ ருண்டு வெடுவெ டென்று சுன்றியே,
"அய்ய நீசெய் நன்றி கொன்ற அறிவி லேன்செய் பிழைபொறு;
செய்ய உன்ப தம்ப ரம்சி ரமசு மந்த சிறியன்யான். 70

எந்தை யேஎ னக்க தாக எண்ணி றந்த தேவரை
உந்தை யும்பு றங்கொ டுக்க உரிய வெஞ்செ ருச்செய்தாய்;
அந்த வாறுஅ றிந்தி ருந்தும் அவகு ணம்செய் தேன்பிழை
எந்த வாறும் நீபொ றுத்துஇ ரங்கி ஆவி ஈகென 71

தேரை முப்ர தட்ச ணஞ்செய் தேப யந்து தண்டனிட்டு,
"ஈர முற்றுஎன் அளவுஇ ரங்கி எளியன் நான்செய் பிழைபொறுஉன்
வாரம் வைத்த அச்சு தன்றன் வன்ச ரம்தொ டாது,கா;
நார ணற்கு நண்ப னான ராச ராச ராசனே" 72

---

67. உதகவன்-வருணன்.

68. முனிவு-சினம்; முனி-வில்; கிரிக்குலம்-மலைக்கூட்டம், இங்கு அட்ட குலவரைகள்; மாசுணங்கள் - நாகங்கள்.

69. வன்னி - அக்னி; முராரி விசய வாளி - நாராயணாஸ்திரம்.

71. உந்தை-உன் தந்தை, இந்திரன்; அவகுணம்-தீயசெயல்.

72. சரமுற்று-கருணை கொண்டு; வாரம் வைத்த-அன்புகொண்ட; வன்சரம்-இங்கு நாராயணாஸ்திரம்; கா-காப்பாற்று.

எனஇ டைந்துஅ ருண்டு கெஞ்சும் ஏல்வை கன்னன் மைந்தனும்,
வனம்அ ணிந்த வன்கு மாரன் மைந்தன் மாயன் நம்பியும்
பினும்இ சைந்த மூவர் மேக வண்ண னும்,பெ ரும்பரி-
தனைஉ வந்து தந்த வன்,சு தன்,சு வேதன், சாளுவன் 73

அனைத்து ளோர்க ளும்தி ரண்டுஅ ருச்சு னன்ப தம்பணிந்து.
"இனிச்சு மாவி டாது கொல்லும்; இவன்து ரோகி; பாதகன்;
கனத்த சேனை யாவை யும்க ருக்கி நீறு செய்தனன்;
தொனித்த எங்கள் மெய்எ லாம்சு ழற்றி யேபொ சுக்கினான்; 74

உற்ற வேளை கண்டு வந்து(இங்கு) உமைப்ப ணிந்து கெஞ்சுறான்;
மற்றும் யாங்கள் வேணு மோஇவ் வலிய பாவி வேணுமோ?
சற்றும் நெஞ்சுஇ ரங்கி டாது தகனன் ஆவி கொலும்ஐயா;
நத்தி உன்னி டத்தில் வந்து நாங்கள் ஆவி பெற்றனம். 75

உன்ப தத்து உறாதி ருப்பின் உயிர்க ளும்பி ழைப்பமோ
அன்பின் எங்க ளுக்க தாக ஆவி கொள்ளும் இவனைநீர்"
என்ப; வேக மேமி குந்து(இங்கு) இனிவி டேன்எ னச்சொலித்
துன்பு றாத மால்ச ரம்தொ டுத்த வில்லில் வைத்தனன். 76

அந்த வேளை குலிச பாணி அமர ரோடுஇ ருடிகளும்
வந்தி றங்கி, "அங்கி மாளில் வையம் ஏது? வானம்ஏது?
உந்து கின்ற வேள்வி ஏது?உ யிர்கள் ஏது? செயிர்ஒழி;
வெந்து இறந்த தளம்எ லாம்இ மைப்பி லேஎ ழுப்புவான்; 77

எந்த வேளை உன்னி னாலும் அந்த வேளை ஏவலே
வந்து செய்வன்; உந்தன் ஏவல் மாறி லான்எந் நாளும்;நீ
இந்த வேளை இவன்அ டங்கி டாது செய்த தீமையைச்
சிந்தை யிற்பொ றுத்துஇ ரங்கு செயவி லாச விசயனே! 78

---

73. இடைந்து-தோல்வியுற்று; வனம்-திருத்துமாய்; பரிதந்தவன்-எமனாசுரன்.
75. தகனன்-அக்கினி.
76.என்ப-என்று சொல்வார்கள்; துன்புறாத-இங்கு தோல்வி யடையாத.
77.குலிசபாணி-இந்திரன்; அங்கி-அக்கினி
78.உன்னினாலும்-நினைத்தாலும்;மாறிலான்-தட்டமாட்டான்; செய விலாசம்-வெற்றியால் விளைந்த புகழ்.

"நின்ச ரத்தில் இவனை வைத்து நினதுஒ னார்கள் மேல்விடில்
முன்சி ரித்து முப்பு ரத்தை முக்க ணான்எ ரித்தபோல்
பின்ச திப்பன் இவன்உ ரூபு பிறர்அ றிந்தி டாதரூ
பின்செய் விப்பம்" என்று தேவர் ரிஷிக ளுஞ்ச பித்தனர் 79

"வன்னி யேநின் மேல்வி காதம் அறையு கின்ற பேர்கள்பால்
நன்ன யங்க ளாய்ந யந்து நல்ல வாய்மை சொல்கெ"னாத்
துன்னி வந்த யாவ ரும்சு றுக்கி லேம றைந்தனர்;
அன்ன போது தகன ராசன் அஞ்ச வித்துஎ லோரையும் 80

பல்லெ லாம்வெ ளிக்கு றப்ப யந்து கெஞ்சும் அளவினில்
கொல்லு கென்று உரைத்த பேர்கு ழைந்து நெஞ்சம் உருகியே
வில்லி னால்வல் லானை வந்து மீண்டுஇ றைஞ்சி அஞ்சியே
"அல்ல லுற்றுஇ டைந்துஇ றைஞ்சு வானை ஆளு கெ"ன்றுமே 81

உம்பர் தம்பி ரானும் நுந்தை உரவர் தம்பி ரான்முனோன்
இம்பர் அம்பு வனமது ஒத்த இதயம் மிஞ்சு பொறுமையான்
தம்ப மேரில் வைத்த வீரர் தம்பி ரானும் நீயதால்
வம்பன் உன்ச ரண்பு குந்த மைக்குஇ ரங்கிடு அய்யனே 82

என்ற போதில் அநுசந் தான மேசெய்து அந்த வாளியை,
"நன்று; நீஎ ரித்த சேனை நல்கு கெ"ன்னும் அளவிலே
ஒன்றுஒ ழிந்தி டாது சேனை உளதுஎ லாம்எ ழுப்பினான்
குன்றி டாமல் அற்ப முங்கு றைந்தி டாதுஅ வாறதாய் 83

யானை மாப தாதி தேர்ப தாகை ஆடை சோடனை
சேனன் வீரர் ஏவு கூர சிலீமு கங்கள் கேடயம்
ஏனை யாவும் ஒன்றி லாம லேஎ ழுந்த பின்பதம்
தான்இ றைஞ்சி அஞ்சி வாய்மை தான்ந யந்து கூறுவான். 84

---

79. ஒனார் - பகைவர், சதிப்பன் - அழிப்பன், உரூபு - வடிவம், திசைச சொல், தெலுங்கு; ரூபின் - வடிவமாக.

80. வன்னி - அக்கினி, விசாதம் - பதகைமை; சுறுக்கிலே - விரைவாக; தகனராசன் - தீக்கடவுள்.

81. இறைஞ்சுவானை - பணிந்து வேண்டும் தீக்கடவுளை.

82. நுந்தை - உன் தந்தை; புவனம் - உலகம்; தம்ப மேரு - நிலையான மேருமலை; மேருவில் எனற்பாலது மேரில் என நின்றது.

83. வாளியை அநுசந்தானமே செய்து - நாராயணாத்திரத்தை ஏவுதல் பற்றி மறுபரிசீலனை செய்து.

84. மா - குதிரை; சோடனை - அலங்காரம், கூர - கூர்மையான; சிலீமுகம் - அம்பு.

"மாது லன்கண் யான்அ டைந்துஉன் வலிமை யாவும் ஒதியே
காத லன்கொள் வாசி யோடு ககன மோடு சரணடைந்து
ஓதும் ஏவ லேமு யன்றுஉன் னோடு கூட வருவதாய்ப்
போதம் ஒதி நல்லை இங்குப் போத உன்கண் அணுகுவேன் 85

அவன்இ ணங்கி வருவ தில்லை யாகில் உன்னொடு ஒதுவேன்;
புவனம் எங்கும் வென்ற வீர புருஷ மேரு விசயனே!
எவர்எ திர்ந்து பொரவ லார்கள்?" என்று கைகு வித்துடன்
நவம்மி குந்த பதிஅ டைந்து நாதன் முன்ப தாகினான். 86

"அன்று வெற்றி வில்இ ராமன் அரக்கர் வெஞ்ச ரங்களால்
பொன்றி அற்ற சேனை யைப்பொ ருந்த வேள ழுப்பினான்;
இன்றுஎ ரிக்குள் நந்து சேனை இவன்எ ழுப்பி வைத்ததால்
வென்றி பெற்ற விசயன் அந்த விஷ்ணு அம்சம் ஒக்குமே." 87

என்ன வில்லி தெய்வம் என்று யாரும் நெஞ்ச கம்குளிர்ந்து,
அன்ன வில்லி யைப்ப ணிந்துஅ கங்க ளிப்பு மீறியே,
துன்னு சம்ப்ர மங்க ளோடு துயர்அ கன்றி ருந்தனர்;
வன்னி மன்னன் அங்கு செல்ல மாமன் நெஞ்சில் எண்ணினான். 88

மருவ லார்கள் சேனை யாவும் அழிவு செய்து வந்ததுஎன்று;
எரியி ராசன் எய்து போதில், "இகல்வல் லாண்மை இன்றுகண்டு
உரிய சிந்தை மகிழ்வு கொண்டு(என்) ஊர்அ டைந்தது யானும்; நீர்
இரும்"வி ரைந்துஎ னப்பு கழ்ந்துஇ ருக்க என்றுஎ ழுந்தனன். 89

தலைக விழ்ந்து வதன பங்க யம்க ரிந்து தளர்வுடன்
நிலையில் நின்ற மரும கன்றன் நெடிய துன்பம் என்என
வலிய அங்கி தனைவி னாவ, "மனந டுக்கம் இன்றியான்
உலைய வந்த சேனை யாவும் ஒருநொ டிக்குள் எரிசெய்தே 90

---

85. மாதுலன் - மாமனார், நீலத்துசன், காதலன் - அவன் மகனாகிய தாம்பிரதுசன்; வாசி - குதிரை; ககனம் - படை; போதம் - நல்லறிவு, ஒல்லை - விரைவில்.

86. புருஷமேரு - ஆடவர்களுள் இமயம் அனைய, பதி - ஊர், மயிடாபுரி, நாதன் - அரசன், நீலத்துசன்.

87. பொன்றி அற்ற - வலிமை குறைந்து மடிந்த; நந்து - அழிந்த, நந்துசேனை - வினைத்தொகை.

88. என்ன - என்று நினைதது; சமப்ரமம் - மகிழ்ச்சி; வன்னி மன்னன் - அக்கினி; அங்கு - மயிடாபுரிக்கு.

89. வந்தது என்று என்னும் வினையெச்சம் முற்பாடலில் உள்ள எண்ணினான் என்னும் பயனிலை கொண்டு முடிந்தது

90. அங்கி - தீக்கடவுள.

மாது லாஉ னக்கு வெற்றி வாகை மாலை புனையயான்
ஏத மான பற்ப மாய்எ ரித்துள ரித்து விட்டபின்
நாத னே!அ வன்றன் முன்பு நணுகி யேள ரிக்கவும்
மேதை யானும் நீற வேமி குந்த கோப மாகியே 91

வருணன் வாளி ஏவ யான்அம் மழைள லாம்அ ருந்தினேன்;
பொருவில் கோப மாகி வெய்ய புங்கம் ஒன்றுள டுக்கவே,
"உரசில் என்னை விடுவிடு; அங்கி உயிர்அ ருந்தி மீள்வன்என்று
அரிச ரம்ப கர்ந்த போதுஎன் அங்கம் மங்கி உருகியே 92

நடுந டுங்கி நாவ றண்டு நான்இ றைஞ்சி அஞ்சியே
வெடுவெ டென்றுஅ ழன்றுஉ டன்ற வீர ரான போர்எலாம்
"தொடுதொடு அங்கி அழிய" என்று சொன்ன போது மன்னனும்
கடுக டென்ற கோப மோடு கணையை வில்வில் வைத்தனன். 93

இன்றுஒ ழிந்தது ஆவி என்றுஉள் எஞ்சி யேபால் கெஞ்சியே
நின்ற நின்ற போர்இ ரங்க நெடிது சென்று கெஞ்சினேன்;
அன்றுள லோரும் நெஞ்சிஇ ரங்கி அவனை வந்துஇ றைஞ்சலால்
வெஞ்சி னம்த ணிந்து நின்று விசயன் ஆவி தந்தனன். 94

(95 ஆம் பாடல் சுவடியில் எழுதப்படவில்லை)

பட்ட பாடு போதும் போதும் பரத வித்து வெருவியான்
கெட்ட கேட்டை என்ன சொல்ல? கிரீடி விற்பி டித்திடில்
நட்ட மாடு கின்ற நாத னாரும் ஈடு சோடலர்;
கட்டும் வாசி தன்னை இக்க ணத்தி லேகொடு ஏகியே 96

சேயும் நீரும் ஏகி யாங்கள் செய்த தீமை பொறுபொறுஎன்று
ஆய வன்ப தம்பு குந்துஓர் ஆண்டு வாசி யின்பினே
போய்அ வன்றன் வேள்வி கண்டுஉன் ஊர்புகு" என்னப் புகன்றுபின்
"நீஇ வண்பு ரத்தல் நன்று; நெடிது போர்தொ டங்கினால் 97

---

91 மாதுலா - மாமனே, அவன் - அருச்சுனன், நெஞ்சறி சுட்டு, மேதை - வல்லுநன்.

92 புங்கம் - அம்பு, உரசில் - போரில; அரிசரம் - நாராயணாஸ்திரம்,

93 அழனறு - தினறது; உடன்ற - போரிட்ட;

96 வெகுவி - அஞ்சி; நடடமாடுகின்ற நாதனார் - நடராசர், ஈடுசோடு - இணை, வாசி - குதிரை.

97. சேய் - தாமபிரதநுசன், ஆயவன் - அந்த அருச்சுனன், புரத்தல் - பாதுகாத்தல்.

ஒருக ணத்தில் உனது சேனை உளதுள லாம்நொ றுக்கிஇப்
புரம்எ ரித்து விடுவன், முப்பு ரத்தை முன்புள ரித்தபோல்;
சரதம்; மற்றுஉன் மனதுஎன்" என்று தகனன் ஓத, "உறுதிநீர்
வெருவி எய்த்து வருவ தால்பின் வெல்ல வல்லர் யாவரே? 98

என்றும் நீர்சொல் கின்ற வாறு நான்ந டந்து கொள்வன்"என்று
அன்று இராசன் ஒத்த போதுஇல் லவள்சு வாலை என்பவள்
மன்றல் மார்ப னைப்ப ணிந்துஉன் மருக னார்சொல் வழிமனம்
ஒன்றி னீரில் இது என்று ணிந்தது உறவு பூந கைக்கவே? 99

சுத்த வீர னோகி ரீடி? சூரன் நீயுன் றனில்மிக
உற்ற சேனை பன்னி ரண்டுஅக் ரோனி உள்ள துன்உதளம்
செற்ற தன்றி எழுபது அக்கு ரோணி; இத்தி றதத்தீ
நத்துஉன் மைந்தன் வல்தொ ழிற்கு நரன்வில் லாண்மை உள்ளனோ?
100

(வெண்டளைக் கலிப்பா)

நீமதித்துப் பார்த்தன் இருசரணம் நேர்ந்துபுகில்
பூமதிக்கு மோ?வீரர் பூபர் மதிப்பாரோ?
தாமதிக்காது இந்தச் சணம்தலைநீ கொண்டுவந்தால்
கோமதிக்கும் மற்றுமுள்ள கோவேந்தர் அஞ்சுவரே. 101

உற்ற இடத்தில் உயிர்வழங்கும் தன்மையைப்போல்
பற்றலரைக் கண்டு பனிவரோ பார்த்திபர்கள்?
கொற்றவனே! மானம் கொளக்கிடைக்கு மோ?மானம்
அற்றமன்னர் சீர்த்தி அபகீர்த்தி யாம்அலவோ? 102

ஆங்காரம் உள்ள அரசே!உன் போல்வார்கள்
தாங்காதுஒன் னாரைச் சரணடைதல் நீதிஅல;

---

98. இப்புரம் - இந்த ஊர், மயிடாபதி, சரதம் - திண்ணம

99. இராசன - நீலததுவசன், இலவலன் - அக்கினியின் மனைவி, மன்றல மாாபன் - மலையணிந்த மார்பை உடைய நீலத்துவசன், மன்றல் ஆகுபெயராய் மலரை உணர்த்தி இருமடியாக மாலையைச் சுடடிற்று, உறவு - உறவினர், பூ - உலகத்தினா

100.நத்து - விரும்புகின்ற; மைந்தன் - தாமபிரதுசன்; நரன் - அருச்சுனன

101 பூபர் - மனனா, சணம - கணம, கோ - பூமி, மக்களைக குறிததது

102.பார்த்திபா - அரசர், கொறறவன் - வெறறிமிக்கவன், இபபாடலில, "உற்ற இடத்தில் உயிர்வழங்கும தன்மையோர் பறறலரைக் கணடால பணிவரோ - கற்றாணை பிளந்து இறுவது அல்லால் பெரும்பாரம் தாங்கின தளாந்து வளையுமோ தான்" என்னும் வாக்குண்டாம் 6ஆம் பாடலின் முற்பகுதி அபபடியே எடுத்தாளப்படடுளளது.

நீங்காத மானம் நிலைநிறுத்த வேணும்"என்று
பூங்கோதை சொல்லப் புரவலன்மெய் என்றுகொண்டே 103

"மாதுசொன்ன ரோசம்முனை மானம்நமக்கு இல்லாமல்
ஏதுசெய நாடி இருந்தோம்" எனத்தேறிச்
சாதுரங்க மான தளங்கள் புடைசூழ
ஓதைகொண்ட தேரில்மக னோடே நடந்தனனே. 104

இங்கு நடந்தவைகள் எல்லாம்தென் கீழ்த்திசையோன்
துங்க விசயனுடன் சொற்றான்சொல் கேட்கும்முன்னே
கங்கி விழிசொரியக் காண்டீபம் தன்னைவளைத்து
எங்கும் நடுங்க இசைத்தான் குணத்தொனியே 105

(கலித்துறை)

நக்கி ஆர்ப்பொடு நறுநறென்று எயிற்றினைக் கடித்தே
ஒக்க முன்கையைக் கடிந்துஇரத் தங்களை உமிழ்ந்து
தக்க தேரினை நடத்துஎனச் சாரதிக்கு இயம்பத்
திக்கெ னப்பிரத் திமனொடு மகனுமே சென்று 106

"அய்ய னே!பகை யார்?இவண் நீகடுங் கோபம்
செய்ய வேண்டுவது என்கொல்?"என்று அடிதொழுது ஏத்த,
"வெய்ய வீரரே! அக்கினி உரைத்தசொல் மீறித்
தையல் சொற்கொடு தரணிபன் அமர்க்குஇசைந் தனனாம். 107

துப்ப தானநீ லத்துசன் தாம்பிரத் துசனும்
உப்பு நேர்பெரும் சேனையும் அமர்க்குஉறு தியதாய்
முப்பு ராரியை நிகர்வரல் கேட்டனம்; முன்னே
தப்ப விட்டதால் இன்னமும் சமர்செயச் சமைந்தான். 108

ஆத லால்அவன் கருவித மதங்களும் அடங்க
ஓத ஆர்கலிச் சேனையைக் கணத்துஅறுத்து உழக்கி

---

103 ஆஞ்சாரம் - இல்லும்; பெருமிதம். பூங்கோதை - மகளாகிய சுவாலை.
104 சாதுரங்கம் - நாலவகைபடப்பட்ட. ஓதை - ஒலி.
105. தென்கீழ்த்திசையோன் - தெனகிழகுகுத திக்குபபாலகனாகிய அக்கினி; கங்கி - தீ.
106 மகன் - அறிருத்தன்.
107. தரணிபன் - மன்னன். நீலத்துசன்.
108. துப்பு - பகை; உப்பு - கடல; முப்புர அரி - சிவபெருமான்.

ஏத முப்புரம் எரித்தல்போல் அவன்புரம் எரித்துக்
காது பொத்திடப் பங்கமே படுத்துவன் காண்மின். 109

அற்பன் இங்குஇவன் உனக்குஎதி ரோ?அவன் அணுகில்
பற்பம் ஆக்குவன் பார்"எனப் பிரத்திமன் பகர்ந்து
மற்பு ராந்தகன் அனையவன் கோபமும் மாற்றிக்
கற்ப காடவிக் கோன்மகன் பதம்நமஸ் கரித்து; 110

விடைஅ ளித்திடப் பெற்றுஇர தத்தின்மேல் ஏறிக்
கடைஉ கத்துஎழு சண்டமா ருதத்தினைக் கடுப்பக்
கொடும ரத்தினை வளைத்துவில் குணத்தொனி செய்து
தடையது அற்றுஅமர்ச் சிங்கம்ஒத் திருந்தஅத் தருணம். 111

அணியு ருத்திரன் அவனிலும் ஒருத்தலித்து அடரக்
கணித முற்றகன் னன்சுதன் அவனிலும் கடுக,
அணிய சாளுவன் மற்றவர் யாரினும் முடுகத்
தணிவில் சாத்தகி யாவரும் சமரினில் முனைய, 112

இந்த வாறுஇவர் யாவரும் இகல்முனைந் திருக்கும்
அந்த வேலையில் ஆர்கலிச் சேனைக ளுடனே
வந்து, தாம்பிரத் துசன்பிதா வைமுகம் பார்த்துச்
"சிந்தை யாய்அணி செயும்படை களை"எனச் செப்பி, 113

தாவு தேரினைத் தடையற நடத்திவில் தாங்கி;
ஏவு மாரியொத்து எங்கணும் அடைத்துஇகல் சரத்தால்,
கூவி யேபல சத்தமும் அடிக்கடி குறிக்கத்
தேவர் மெச்சிய பிரத்திமன் தோ்எதிர் செலுத்தி. 114

வளைந்த வில்நிமி ராவிதம் கணைமழை மாரி
தளர்ந்தி டாதுஎதிர் சொரிந்துஅவன் விடுசரம் அடங்கப்
பிளந்தெ றிந்தனன்; பின்னும்அற் புதமுறை முறையாய்
உளம்க லங்கிலான் விடுவதுஎல் லாம்அறுத்து உதறி. 115

---

109. சுருவித - செருக்குடைய, மதம் - திமிர்; ஏத - ஒலிமிக்க, ஆர்கலி - கடல்; ஏத - குற்றமுடைய.
110. பல்புர அந்தகன் - போரிட்ட (முப்) புரங்களை அழித்த சிவபிரான், கற்பக அடவிக்கோன் - இந்திரன்; மகன் - அருச்சுனன்.
111. கொடுமரம் - வில்.
112. கணித முற்ற - பகைமை கொண்ட; சுதன் - விடகீதனன்; அணிய - படை வகுப்புகளை உடைய.
113. சிந்தையாய் - சுவனத்துடன்.

சதுர்ப்ப ரித்தலை சாரதி முடித்தலை தத்த,
அதிகம் அச்சுஉருள் அச்சுஇர தம்துசம் பொடியக்
கதிர்ம னிக்கிரி டம்குவில் கடகடென்று உருள
உதையும் வில்பொடிந் திடப்பல சரங்கள்விட்டு உதறி 116

நாலு கோல்உரம் பிளந்திட, நால்இரு கோலால்
சால வெம்புயம் பிளந்திட, இருசரம் களத்தில்
மேலும் உட்புக, வாய்பிளந்து ஒருசரம் ஏகக்
கோல்இ ரண்டுமத் தகத்திடை புகுந்திடக் குறித்தான். 117

காயும் வெஞ்சினத் தொடுபிரத் திமன்விடு கணையால்
வாயி னில்பெரும் குருதிகொப் புளித்துஉடல் மயங்கி-
யேஅ யர்ந்துறக் கிடந்தனன்; அவனைவந்து எடுத்து
வாயு ஒத்ததுஓர் ரதத்தில்வைத்து ஒல்லையில் மறைந்தார். 118

பின்பி ரத்திமன் தளங்கள்மேல் சரமழை பெய்து,
துன்பு றப்பல் துண்டதுண் டங்களாய் நறுக்க,
வன்பு ருத்திர னவன்ஒரு பால்தளம் அடிக்க,
மின்ப யில்சரச் சாளுவன் ஒருபுறம் வீக்க, 119

உத்து வாசரி, கிருதவன் மன்அக்கு ரூரன்,
பற்ற லார்க்குஅரி சாத்தகி, பத்திர கிரியான்,
சத்த சாகரத் தலத்தில்எல் லோர்களும் சார்ந்து
அத்தி ரங்கள்விட்டு அறுத்தறுத்து அழித்தனர் அடர்ந்தே. 120

விரசுஉ யர்ந்தநீ லத்துச னுடன்விட கீதன்
சரம்நி ரந்தரம் சலதரம் நிகர்தரச் சொரிந்து
உரம்மி குந்துஒரு வருக்கொரு வரேஉரசு ஏறிக்
கரவல் லாண்மையி னுடன்கடும் சமர்புரிந் தனரே. 121

இருவ ரும்சம மாய்ஒரு முகூர்த்தம்நின்று இகலத்
தருமன் முன்னவன் சந்ததி தடக்கரம் மிஞ்சிச்

---

116. சதுர் - திறமை மிக்க; சாரதி - தேர்ப்பாகன்; குவில் - நிலத்தில்.
117. கோல் - அம்பு, களம் - சுழற்று, மத்தகம் - தலை.
119. வன்பு - வலிமை மிக்க; மின்பயில் - மின்னலைப் போன்ற.
120. பற்றலார்க்கு அரி - பகைவர்களுக்குச் சிங்கம் போன்றவன்; பத்திரகிரியான் - எமனாசுரன்; சத்த சாகரத் தலம் - ஏழு கடல்களால் சூழப்பட்ட உலகம்.
121. விரசு - (தண்பால்) நெருங்குகின்ற; சரம் - அம்பு; நிரந்தரம் - தொடர்ச்சியாக; சலதரம் - மேகம்; உரசு - பகைமை.

சொரியும் வெங்கணை யால்அரசு உட்ல்எலாம் துளைத்துப்
பரவு தேர்,கொடி, பாகன்,மா, உருள்பொடி படுத்தி. 122

கரச்ச ராசனம் அறுத்து,வில் கதிர்ஒளி பரப்பும்
சிரக்கி ரீடமும் உருட்டி,மன் தேகமும் சரத்தால்
மரச்சி வீமுகம் துளைத்தபோல் துளைத்தனன்; மாந்தி
பரக்க வேவிழித்து உணர்ச்சிகெட்டு அவனியில் படுத்தான். 123

மதிஅ ழிந்துஅயர்ந்து அவனியில் கிடந்தமன் னவனை
அதிப ரானவர் மந்திரி மார்கள்வந்து அடுத்து
உதவு தேரினில் ஏற்றிஎ கினர்சரம் உடற்றிக்
கதழ்வி னோடுஉறு சேனைகள் அழித்துஅலக் கழித்தான். 124

மான வீரியர் விசயனைச் சேர்ந்தவல் லாளர்
சோனை மாரியை நிகர்த்திடக் கணைமழை சொரிந்து
தானை யாவையும் துண்டமுண் டம்படத் தறித்தார்
சேனை மற்றுள படைஎலாம் தெறித்துவெந் நிட்டார். 125

அயர்ந்தமன் னனும்கு மரனுஞ் சோபமது அகன்று
பயந்துஅ டிக்கடி திடுக்கொடு பரவிநெட் டுயிர்த்து
வியந்த அக்கினி தேவன்ஓ தியதில்மிக் கதுஅலால்
பெயர்ந்தும் அற்பமும் பேதமே இலைஎனப் பேசி 126

"திசைகவ் செச்சிடச் சிறியர்இவ் விதம்செருப் புரிந்தார்;
விசையன் விற்பிடித் திடில்இவன் அழியும்இக் கணத்தில்
வசைவ ராமுனம் பரிவிடுத்து, இனியசொல் வழுத்தி,
நசையி னோடுஅவன் சரணடைந் திடுதல்நன்று" என்று 127

மகனும் மன்னனும் மந்திரி தந்திரி மாரும்
பகரும் யோசனை பண்ணியே பட்டினம் சேர்ந்து

---

122. ஒரு முகூர்த்தம் - மூன்றே முக்கால் நாழிகைப் போது. ஒன்றரைமணிநேரம்; தருமன் முன்னவன் சந்ததி - தருமராசனின் தமையனாகிய கன்னனின் மகன், விடகீதன்; அரசு - நீலத்துவசன்.

123. கரச்சராசனம் - கையில் உள்ள வில்; வில் கதிர் - ஒளிமிக்க சூரியனைப் போல; சிவீமுகம் - வண்டு; மரஞ்சிவீமுகம் என இருத்தற்பாலது எதுகை நோக்கி வலித்தல் விகாரம் பெற்றது, மாந்தி - இங்கு உடலில் ஏற்று; அவனி - நிலம்.

124. சரம் உடற்றி - அம்பு எய்து; கதழ்வு - சினம்; அலக்கழித்தான் - துன்புறுத்தினான்.

125. தானை - படை; வெந்நிட்டார் - புற முதுகிடும்படிச் செய்தார்.

126. பரவி - புகழ்ந்து; அற்பமும் - சற்றும்; பேதம் - வேறுபாடு.

127. செரு - போர், வசை - இகழ்ச்சி; நசை - விருப்பம்.

மகம தற்குஇசை வாகவாம் பரிஅலங் கரித்துப்
புகல்கி ரீடிதன் பூம்பதம் நாடும்அப் போதில் 128

(கலிவிருத்தம்)

காந்தை யானசு வாலையும் காந்தனாம்
வேந்தன் முன்புவி யப்புடன் ஓதுவாள்
"சேர்ந்த பற்குனன் சென்னிகொள் ளாமல்நீ
போந்தது என்?இது புதுமையிற் புதுமையே. 129

உன்னி பற்றிஒன் னார்சர ணம்புகில்
மன்னர் புன்துரும் பாய்மதிப் பார்களே;
என்னு யிர்த்துணை நாயக னே!பரி
தன்னை விட்டிடில் தாழ்வதில் தாழ்வதே. 130

வில்லி உந்தனை விடவலி சூரனோ?
கொல்அ வன்சிரம் கொள்வது பாரமோ?
புல்ல(ர்) (தம்அ)டிமை புரிதல்.குலத்துக்கோ?
செல்லும் சிலவிட்டி லுக்குத்தி கைக்குமோ? 131

வெறுக்கும் வீரரை வெங்களம் தன்னிலே
அறுத்து வாகையை அணிவது.அ லாவிடில்
நறுக்கு வோன்கையில் நல்லுயிர் ஈவதே
சறுக்குஇ லாவிறல் சத்ரிய தன்மமே. 132

சாடு போரினில் தலைகொடுத் தேஉடைந்து,
ஓடி வந்துஉன்னி கொண்டவன் காலில்வீழ்ந்து,
ஈட ழிந்து,பின் புவிக்குஒரு பாரமாய்ச்
சோடை மெய்யினைச் சுமக்கவும் வேணுமோ? 133

---

128. மகம் - அசுவமேத வேள்வி.

129. காந்தை - மனைவி, காந்தன் - கணவன்.

131. குலத்துக்கோ - உயர்குடிப்பிறந்தாருக்குத் தகுமோ என்றவாறு; செல் - இடி; விட்டில் - மின்மினி; பெரிய மின்னலகளோடு தொடர்புடைய இடி விட்டிற்பூச்சிக்கு மயங்காது என்றபடி.

132. சறுக்குஇலா - தவறாத.

133. சாடுபோர் - ஒருவரை ஒருவர் கொல்லும் யுத்தம், வினைத்தொகை; சோடை - பயனற்ற.

குறும்புள் வன்தகர் குக்குடப் போர்கள்பார்த்து
அரும்பு நீகண்ட கர்க்குஅஞ்ச லாகுமோ?
எறும்பு எறும்பியை வெல்வதும் இல்லையோ?
செறும்புஇ லாவிடில் செத்திடல் உத்தமம். 134

கட்டு கின்றுள கந்துகம் தன்னைநீ
விட்டி டாதுஇரு; விடில்அவ தூறதாய்க்
கெட்ட துஉன்பெருங் கீர்த்தியும்; சீர்த்தியும்;
பட்ட பாட்டினைப் படு;புரி போர்என்றான். 135

"மோடி! ஓடிமு னிந்துஅர னோடுவா
தாடி ஆடிய அவளனை யாயசீர்
கேடி! நீகுடி கேடி!கெ டும்பி!நீ
போடி! போடிநீ! அடிப்பொறுக் கேன்இனி; 136

சண்டி கைக்குஇணை தானும்பி டாரியைப்
பெண்டு வைத்த(வர்) பிழையெனத் தோன்றின
லண்டி சண்டிம டந்தை(யை) வெளியுறக்
கொண்டு தள்"எனக் கூறினன் சீறியே. 137

"சீறி மன்னவ னேதளத் தேவைஎன்?
கூறு முன்னமே குறிப்புடன் இச்சணம்
போறென் என்றுபு ழுங்கிஅ ழன்றவள்
வீறின் வாகைமா நகரதில் மேவினாள். 138

வாகை மாநகர் மன்னவன் தன்முனோன்
பேகன் என்னபி ரான்;பதம் போற்றிய
தோகை (யாள்)தனைத் துணைவனும் நோக்கி."இங்கு
ஏகி வந்தவை ஏது எனக்கேட்டனன். 139

---

134. குறும்புள் - காடை; தகர் - ஆட்டுக்கடா; குக்குடம் - சேவல்; அரும்பு - வளர்ந்த; கண்டகர் - பகைவர்; எறும்பி - யானை; செறும்பு - பழிவாங்குதல்

135. சுந்துகம் - குதிரை; சீர்த்தி - மிகுபுகழ்; உறுதி பற்றி கெட்டது என இறந்த கால வாய்ப்பாட்டால் கூறினாள்.

136. கெடும்பி - தொரிந்தே தீமை செய்பவள்.

137. பிழை - இங்கு தீவினையைக் குறித்தது. கணவனின் பாவமே வடிவெடுத்தது போன்றவன் என்பது கருத்து.

138. மன்னவனே! சீறித் தள என் தேவை என இயையும்; குறிப்புடன் - உள்ளக் கருத்தறிந்து; அழன்றவள் - சுவாலை, வினையாலணையும் பெயர்.

139. முனோன், துணைவன் - தமையன்.

வச்சி ரன்கும ரன்மகம் செய்யவே
அச்சு வம்விட அவன்வர என்மகன்
நச்சிப் பற்றிஎன் நாதனும் சேனையும்
மிச்ச மாகிய வெஞ்சம ரம்செய்தே 140

மயங்கும் வேளை(யில்) மருமகன் அக்கினி
வியந்த சேனைகள் வெந்திடத் தாக்கலும்
பயந்திடு அச்சரம் பற்குனன் எய்யும்முன்
நயந்து கெஞ்சிப்பின் நல்உயிர் பெற்றனன். 141

மாது லன்(றன்)கண் மருமகன் வந்து"ஐயா
போதும் போதுமி யான்பட்ட புன்மை"என்று
ஓதி "உன்னிவிட்டு ஒத்திரும் நீரும்"என்று
ஓத மற்றவன் ஒத்துநன்று என்றனன். 142

"நள்ள லார்க்குஅடி மைப்படல் நன்றுஅலது
கொள்அ வன்தலை கொய்து"எனக் கூறினேன்;
உள்ள சேனையு டன்சமர் செய்திடத்
துள்ளத் துள்ளிடச் சுடுசரம் தூவியே 143

மன்னன் (றன்)னொடு மகனும்அ யர்ந்திடக்
கொன்னு னிக்கணை கூற்றென வீசியே
துன்னு சேனைஎ லாம்துணித்து ஓட்டிட
வெந்த ளித்துஉடன் மீண்டனன் வேந்தனே. 144

"இன்னம் போர்செய்எ னச்சொலச் சீறியே
மன்னன் ஓட்டினன்; வந்தனன்" என்றனள்;
பன்னி வேட்ட(தன்) பதிமொழி மாறியே
சொன்ன தேஅது துர்க்குணம் உன்குணம். 145

காயி னும்,பினும் கட்டிஅ டிக்கினும்,
தீயில் இட்டு(உனை)ச் சினந்துசெ ருக்கினும்

---

140. வச்சிரன் குமரன் - இந்திரன் மகன், அருச்சுனன்; அவன் வர - விசயன் கூட வருகையில்.
142. ஒத்திரும் - நடபாசு இரும்.
143. நள்ளலார் - பகைவர்.
144. கொல்துனிக்கணை - பகைவரை மாயக்கின்ற கூரிய அம்பு; வெந் அளித்து - புறமுதுகு காட்டி.
145. பன்னி - மனைவி; வேட்ட - மணந்து கொண்ட; பதி - கணவன்.

சாயை ஒத்தவள் தாளைப் பிரிவதோ?
நீயிங் கேதனி எய்தல்நெ டும்பிழை. 146

புத்தி கெட்டனை; புன்மதி பெண்மதி
நத்தி வந்தனை நன்றுஒரு மூலையில்
அத்தி யோடுஇரு தானட என்றலும்
தொத்துஅ ணிந்துள தோகைஇ யம்புவாள் 147

"வந்தது உன்மனை யில்ஒரு மருங்கினில்
இந்த வேளைஇ டைந்திட அல்லவே!
உந்துஉ னைக்கொடு உயர்விச யன்தலை(ப்)
பந்து பெய்கொளப் பண்ணவந் தேன்ஐயா! 148

செல்ல வேணும்நின் சேனையும் நீயுமே
வெல்ல வேணு(ம்அவ்) விசயனை வீரரைக்
கொல்ல வேணும்(பின்) குணமுடன் வாகைநீ
புல்ல வேணும்(நல்) புகழ்உனக்கு" என்றனள் 149

"வலிய நான்அமர் மேற்செலல் வழக்குஅல.
அலதும் மானது அவனிமி தித்தில;
பொலிவின் மீண்டிடும் பொழுதில்என் புவிக்குறில்
மெலிய வெல்(லு)வன் விசயனை" என்றனன். 150

"அண்ண! உன்சர ணத்துஉறில் என்மனப்
புண்ணொ ழித்திடு வாய்எனப் போந்ததால்;
எண்ணி வேறுஇயம் பாதுஎழுந் தேசெயம்
பண்ண வேணும்(நீ) பருவம்சொ லாமலே." 151

என்ன மந்திரி மார்பிர தானிகள்
மன்னர் வீரர்கள் மற்றுள போ்எலாம்
"முன்ன ரக்கர்கு லத்தைமு டித்தவள்
அன்ன சூர்ப்பன கையைஒத் தாள்இவள். 152

---

146. காயினும் - வெறுத்தாலும், சாயை ஒத்தவள் - நிழல் போல் நீங்காது இருக்க வேண்டிய மனைவி, தாளை - கணவனின் திருவடிகளை.

147. தொகுது - மலர்க்கொத்து.

148. மருங்கினில் - பக்கத்தில்; இடைநிதட - வருந்திக்கொண்டிருக்க; உந்து - எழுச்சி மிக்க; பெய்கொளப்பண்ண - சொரிய. 149. புல்ல வேணும் - பொருந்த வேண்டும்.

151. பருவம் சொல்லாமல் - பிறகு இந்தச் சமயத்தில் செயலிறேன் என்னாமல்

திக்குள லாம்விச யம்பெறு சேவகம்
மிக்க வீரனை வெல்லுசெல் என்றனள்
நக்கு முப்புரம் நாசமு றச்செய்த
முக்க ணன்றன்முன் விற்றொழில் முற்றியே 153

வார வீரனை (நனி)மதி யாமலே
போரில் ஏகி(நீ) பொருளன ஓதினாள்;
வீர சாரன்வல் விற்சினந் தேதொடில்
பாரும் வானமும் பற்பமத் ஆகுமே; 154

ஏதை யாம்இவ ளோகுடி கேடிஇப்
பாத கிச்சொலும் பழுதினிற் பழுதுஅவை
காது கொள்ளுவ தல"எனக் காதலன்
தோத கத்தியைப் பார்த்துஉறச் சொல்லுவான் 155

"நங்கை யேநர னோமிகு சேவகன்;
சங்க பாணிச கர்;எந்த நேரமும்
மங்கை பாகன்பத் தன்;மக வான்மகன்;
சிங்க கேதன னுக்குஇளை யான்செயன் 156

சுசியைக் கூள(மு)ம் தொடர்வது போலயான்
விசயற் கேஇகல் மேவுதல் நேர்அல;
அசுவத் தோடும்என் அவனியின் பாதையாய்
வசியத் தோடுஅவன் வருவன்அப் போதிலே 157

அச்சு வத்தினைப் பிடித்துஅவன் அஞ்சநீ
மெச்ச விற்றொழில் செய்துற வெல்லுவேன்;
கிச்ள னாதுஇருஎன்று ஓதுதல் கேட்டதே
மிச்ச மான(வெவ்) வெகுளிகொண்டு ஓதுவாள் 158

---

153. சேவகம் - வீரம்; நக்கு - சிரித்து.

154 வார - வருகின்ற; வீர சாரன் - வீரர்களுக்குள் (சிறந்தவனாகத்) தெரிந்தெடுக்கப்பட்ட அருச்சுனன்.

155. ஏதை - அறிவற்றவள், தோதசுத்தி - வஞ்சகி

156. சங்கபாணி - திருமால், சகா - நண்பன்; மங்கை பாகன் - சிவபிரான்; மகவான் - இந்திரன்; சிங்கசேதனன் - சிங்கக்கொடியை உடைய தருமன்

157. சுசி - அக்கினி; அவனி - உலகம், இங்கு நாடு.

158. கிச் எனாது - ஒரு மறுப்பும் கூறாமல், சும்மா.

"இண்ட மாசுஉன் இல்வில்இ டும்பதம்
உண்டி ருக்கநெஞ்சு ஒத்துவந் தேன்அவன்;
தண்ட காரணி யம்தனில் தான்தவம்
கொண்டு மாய்வன்எ னக்கொதித்து ஏகினாள். 159

தகைந்த பேர்கள்த டைக்குள்நில் லாமலே
புதைந்து சென்றனள் சூடுண்ட பூனைபோல்;
தகுஞ்ச ரேசுரன் தன்னுயிர் கொள்ளவே
மிகுந்த யோசனை பண்ணிவெ தும்பினாள். 160

கங்கை சேய்எனும் காங்கயன் தன்னையே
மங்க அன்றுவ தைத்தனன் பற்குனன்;
இங்குஇ தைக்கொடுஇ கல்வினை மூட்டிநீர்
நங்கை யால்கொல நாடிந டந்தனள் 161

வனித முத்துஅணி மண்டபத் துக்குஎதிர்
மனிகர் னித்துறை யதனிடை வந்துகவள்
தனிவில் நீர்மிதி யாள்கரைச் சார்பிலே
எனிஉ லாவிநின் றேவைதுஇ ரைந்தனள் 162

வம்பி கானவி தன்னைவ ரைவறக்
கெம்பி யேவழி கெட்டவள் திட்டவே
கும்ப லாகவும் பட்சிக்கு லந்தறு
தும்பி மேல்மனைத் தூற்றிச்சொ ரிந்ததே. 163

மெய்யில் மண்மழை வீசவும் கூசிலள்;
வையும் சொல்லினை மறந்திலள் ஒல்லையும்;
தையல் கங்கைதி ரைச்சலம் தான்இறைத்து
உய்யும் ரூபிக ரித்துஉத யம்செய்தாள் 164

---

159. பதம் - உணவு
160. தகைந்த - தடுத்த; சரேசுரன் - அம்புகளுக்குத் தலைவன்.
161. காங்கயன் - பீஷ்மர்; அன்று - பாரதயுத்தத்தில். இகல் வினை - பகைச் செயல்.
162. வணித - செப்பமாக அமைந்துள்ள; தனிவு இல் - குறைவற்ற; வைது - வசை கூறி.
163. வம்பி - தீயவளாகிய சுவாலை; சானவி - சுங்கை; வரைவற - சண்டபடி; கெம்பி - ஆரவாரித்து; வழிகெட்டவள் - தீயவளாகிய சுவாலை; பட்சிக்குலம் - பறவைக் கூட்டம்; தறுதும்பி -தறுதலை ஆகிய சுவாலை, வம்பி திட்டவே பட்சிக்குலம் சொரிந்தது என்பது முடிபு.
164. ஒல்லையும் - சற்று நேரமும்; திரை - அலை; உய்யும் - பிறரை உய்விக்கும்; ரூபிகரித்து - வடிவம் எடுத்து; உதயம் செய்தாள் - தோன்றினாள்.

மோதி வீசும்மு ரல்புனல் முன்புறு
கோதை கால்(கள்)மெய் குளிரந னைக்கவே,
"பாத கத்திப தத்தினைத் தீண்டினாள்;
ஈது பாதகம் எப்படிப் போக்குவேன்? 165

துர்ச்ச னீ!பழி காரி!து ரோகி!மா-
தர்க்குள் வன்கொலை பாதகி! தோதகி!
குச்சி தச்சதி காரி!கொ டூரி!நீ
கெர்ச்சி தத்துஎனைத் தீண்டினை; கெட்டனன். 166

என்செய்து என்றுதொ லைப்பன்எங்கு இப்பவம்?
பஞ்ச பாதகி! பாவி!கெ டுத்தியே!
நஞ்ச னாய்!சிசுத் ரோகி!ந னைத்தியோ?
வஞ்சக் காரி;துன் மார்க்கி!"என் றேவைதாள். 167

ஈது சேதிப கீரதி கேட்டதே
"யாது பாவ(மும்) அழித்திடும் எந்தனைப்
பாத கீஎன வேபகர்ந் தாய்!செய்தது
ஏது பாவம்?எ னக்குஇயம்பு" என்றனள். 168

ஆடை ஆபர ணங்கள்இ லங்கவே
கோடி சூரிய காந்திகொள் மேனியாய்ச்
சாடை பேசிய தையல்முன் நிற்கவே
பீடை தீர்ந்ததுஎன்று எண்ணியே பேசுவாள் 169

என்ன டீஉன்ம தாந்தம்எற் றீண்டினாய்;
துன்னி என்விழி காணவும் தோன்றினாய்;
பின்எப் பாவஞ்செய் தேன்எனப் பேசுறாய்;
நின்ஒப் பாய்க்கொலை நேர்ந்தவர் யார்?சொலாய் 170

165.முரல் - ஒலிக்கின்ற, புனல் - நீர், கங்கை; முன்புறு கோதை - எதிரே உள்ள சுவாலை; புனல் கோதை குளிர நனைசுவே எனக் கூட்டுக, பின் இரண்டு அடிகள் சுவாலையின் கூற்று.

166.சுவாலையின் பேச்சு தொடர்கிறது. தோதகி - வஞ்சகி, குச்சித - இழிந்த; கெர்ச்சித்து - ஒலி எழுப்பிக்கொண்டு

167.பவம் - பாவம், சங்கை தன் கால்களைத் தீண்டியதால் வந்த பாவம்; சிசுத்துரோகி - அருச்சுனன் பீஷ்மரின் மரணத்திற்குக் காரணமானவன், தன் மகனாகிய பீஷ்மரைக் கொன்றவனைப் பழிவாங்காததால் கங்கையைச் சிசுத்துரோகி என்கிறான்.

168. சேதி - செய்தி; பகீரதி - கங்கை.

169. சாடை பேசிய - தன்னால் இகழப்பட்ட; தையல - கங்கை; பேசுபவள் - சுவாலை.

170. மதாந்தம் - செருக்கினால் விளைந்த அறியாமை; ஏற்றீண்டினாய் - என்னைத் தொட்டாய்.

பெற்ற பெற்றஅன்று ஏழ்சிறு பிள்ளையைச்
செத்தி டக்கொலை செய்தனை; அஞ்சியே
கொற்ற வன்அர சுக்குஒரு கோமகன்
மற்றுன் பாலினில் வரமது கேட்கவே. 171

வெறுத்து நீதுறந்து ஏகினை; வேந்தனும்
பொறுக்கி லான்மதன் பூங்கணைக்கு ஏங்கவே
வறுக்க இந்துபுன் மாருதம் பாயவே
நறைத்தண் மாமலர் தீய்ந்திட நைந்தனன். 172

பூவ ணையினில் புலம்பித்த விக்கவே
நீவஞ் சித்தநிட் டூரிகொ டூரிநீள்
காவல் மன்னன்உன் காதவி னால்மெலிந்து
ஆவி உண்டிலை என்றுஅயர்ந்து ஏங்கினான். 173

என்செய் வான்மய வால்மெலிந்து ஏங்கியே,
தன்ச ரீரம்த ரித்திட வேண்டியே,
புன்சொல் மீனதன் புலவுறும் பூவையை
நன்சொல் லோடுந யந்தவற் கேட்கவே 174

பரத வன்மறுத் தான்;மனப் பண்புஅறிந்து
உரிய நின்மகன் ஒப்பி,உன் நாதனுக்கு
அரிய நன்மணம் செய்தனன்; அங்குஅவள்
தருசு தன்புவி தாங்கியும் வாழ்ந்தனன் 175

நின்ம கன்புவி அரசையும் நீத்தனன்;
புன்ம டந்தையர் போகமும் நீத்தனன்;
பின்னை மீன்வலை ஞன்மகள் பிள்ளைகள்
எந்நி லங்களு மேபுரந்து ஆண்டனர். 176

171.கொற்றவன் - சந்தனு; கோமகன் - இளவரசன்.

172.வேந்தன் - சந்தனு; மதன் - மாரன்; இந்து - நிலவு; மாருதம் - தென்றல்; நரை - தேன் நிறைந்த.

173.பூ.அணை - மலர்பபடுக்கை; தவிக்கவே வஞ்சித்த நீ நிட்டூரி என்க.

174.தரித்திட - தாங்குவதற்காக; புன் சொல் - இங்குச் சோரிமொழி; மீனதன் புலவுறும பூவை - மச்ச கந்தி, அவற்கேட்க - மச்சகந்தியின் தந்தையான செம்படவனிடம் வேண்ட.

175.நாதன் - சந்தனு, அவள் - மச்ச கந்தியாகிய சத்தியவதி; சுதன் - விசித்திர வீரியன்; புவி தாங்கியும் - அரசாட்சி செய்தும்.

176.மடந்தையர் புன் போகம் என மாறுக, சிற்றின்பம என்பதனை நினைதது கூரியது; பிள்ளைகள் - சித்திராங்கதன், விசித்திரவீரியன்.

மண்ணும் பெண்ணையும் மறுத்தநின் மைந்தனை
வண்ண வில்விஇம் மாநிவத்து ஆசையால்
திண்ண மாய் உயிர் செகுத்ததும் நீஅறிந்து
எண்ணம் அற்றிருந் தனை:இது வேஅலால் 177

என்ன பாவம்இ ழைத்தனை யோ?அதுஎன்
கன்னம் மீதினில் கேட்டிலன்; கண்டிலன்;
என்ன வேயிது எலாம்மெய் என்றுதான்
வன்னி போலம கள்சினம் ஏறியே, 178

"வருணன் மைந்தன்வல் வீடுமன் தன்னையே
இரண கம்பத்து டன்கிடந்து ஏங்கியே,
மரணம் செய்திட வன்கணை ஏவியே
கிரண மாமுடி பெற்றகி ரீடிதான் 179

இத்தைக் கோர்அறு மதியில்இ வன்மகன்
அத்தி ரத்தில்அ றுந்துவன் சென்னிதான்
தத்த" வென்று சபித்திடக் கேட்டநீ-
லத்து சன்மனை யாள்எதிர் கூறுவாள் 180

"ஆறு மாதம்ஆம் அவதிவைத் தாய்அதை
வீரி நான்விழி காணவி ளம்பு"என,
"தேறு வெந்தழல் சேர்ந்துஉயிர் மாய்ந்தபின்
கோறு நீபிறைக் கோல்என ஏகு"என்றாள். 181

நன்றுஅது என்றுந திக்கரைச் சார்பிவே
துன்று காட்டம்சொ ரிந்துஅழல் மூட்டியே
மன்றல் சூடி மருகனைச் சேர்ந்துஉயிர்
பொன்றி யேபிறை கோல்கணை ஆகினாள் 182

177.வில்லி - அருச்சுனன்; எண்ணம் அற்று - சுவஎை இல்லாமல்.

178. கன்னம் - செவி; வன்னி - தீ.

179. வருணன் - சந்தனு. வருணனே ஒரு சாபத்தால் சந்தனுவாக மானிடப் பிறவி எடுத்துக் கங்கையை மணந்தான் என்பது வரலாறு; இரண கம்பம் - காயத்தால் ஏற்படும் நடுக்கம்; கிரீடி - அருச்சுனன்.

180. இத்தைக்கு - இற்றைக்கு; அறுமதி - ஆறுமாதம்; தத்த - பாய்க, இங்கு துடிக்கட்டும்.

181. அவதி - கெடு; வீரி - ஊக்கம் உள்ளவள்; விழிகாண - கண்ணால் பார்ப்பதற்கான வழியை; கோறு - கொல்லும்; நீ கோறு பிறைக்கோல் என என்று மாறுக; பிறைக்கோல் - அர்த்த சந்திராத்திரம்.

182. காட்டம் - விறகு; மன்றல் - மணமிக்க மலர்களை, மருகனைச் சேர்ந்து - தீப்பாய்ந்து. அக்கினிதேவன் இவளின் மருமகன் ஆதலில் இவ்வாறு கூறினார்; பொன்றி - அழிந்து.

தீயின் மாய்ந்தவள் சீவனைக் கங்கைஓர்
தூய வெண்பிறைத் தோணியது ஆக்கியே,
வாயு பப்பர வாகனன் தூனியி-
லேவு றைத்திட வேஇவள் சொற்றனள் 183

இந்த விதத்தினில் அவளைவி ரட்டியே
அந்த நீலத்து சன்அவன் மைந்தனைச்
சிந்தை கூர்ந்து(தன்) திருமுடி சூட்டியே
மந்திரி தந்திரி மாருடன் கூறுவான் 184

அக்கு ரோணியன் னாறுகொண்டு இந்நகர்
தக்க தாய்ச்சம ரட்சனை செய்மின்கள்;
அக்கு ரோணிஎன் ஆறுடன் அர்ச்சுனன்
பக்கல் யானு(ம்போய்) படைத்துணை செய்தபின் 185

தரும னைத்துதி செய்துஅவன் வேள்வியும்
தெரிச னித்துஅவன் சித்தம்இ ரங்கியே
வரவிட் டால்வரு வேன்"என ஓதியே,
கருதி யேயலங் காரித்து மாவையும் 186

பாத காணிக்கை பற்பல ரத்தினம்
போத வேமிகு பொன்பணி பூசணம்
தீதி லாதது கில்களும் சேகரித்து
ஓதென் னாறுஅக்கு ரோணியும் சூழவே 187

பற்ப ராகமாம் பரியினை நடத்தியே
நற்பெண் நாடக சாலைந டக்கவே
அற்பு தங்கள தானவி ருதுடனே
மற்ப யில்பஞ்ச வாத்தியம் ஆர்க்கவே 188

சென்றுஅ ருச்சுனன் செம்மலர்த் தாளிலே
அன்று காணிக்கை யாவையும் வைத்தபின்

---

183. தோணி - அம்பு; உறைத்திட - தங்குமாறு செய்ய, வைக்க, வாயு தூணியில் உறைத்திட இவள் சொற்றனள் எனக் கொண்டு கூட்டுக; இவள் - சுவாகை.

185. சமரடசனை - காத்தல்.

186. மா - குதிரை.

நின்று மாவைநி றுத்திநீ லத்துசன்
மன்றல் வில்லியை மாண்பொடுஇ றைஞ்சியே 189

"நாத னே!நர நாரண! பற்குணா!
சீத ரன்சில தா!சிறி யேன்செய்த
ஒத மாம்பிழை யாவையும் பொறுத்தருள்!
சாத மானத யாபர! சற்குணா! 190

என்ன வேபயந்து எஞ்சியும் கெஞ்சிய
மன்னர் மன்னனை வாரிஎ டுத்துஅணைத்து
"என்ன சேதி?(உன்) இருதயம் நாடிய
உன்னம் ஓதுக" என்றலும் ஓதுவான் 191

"பாதம் நித்தம்ப னிந்துஒரு வருடமும்
ஓதும் நின்மொழிக்கு ஒத்துஉடன் பட்டுயான்
காதல் வேள்வியின் காட்சிகண் டேமகிழ்ந்து
ஏதம் அற்றஎன் எழில்நகர் புக்குவேன் 192

என்று நாடிஇங்கு எய்தியது" என்றலும்
நன்று நன்றுஎன நன்கம்அ சைந்தனன்;
அன்றுஅக் குரோணிகள் அறுபதும் ஒன்றதாய்த்
துன்று வாரிதி ஒத்தன தொக்கதால் 193

நவம ணிக்கவி கைக்குள்ந லம்பெற
இவுளி செல்லஇ ராசரும் வீரரும்
தவறுஇல் வீரனைத் தான்வளைந்து ஏகவே
புவிநெ ளிந்திடப் போந்தது சேனையே. 194

மனம கிழ்ச்சிஉல் லாசமது ஆகவே
அனைய அஞ்சுவ கைத்தொனி ஆர்க்கவே

---

189. மன்றல் - வாசனை, ஆகுபெயராக மலரையும், இருமடியாக மாலையையும் உணர்த்தியது இங்கு வெற்றிமாலை.

190. சிலதா - நண்பனே; ஏதம் - குற்றம்; சாதம் - மேன்மை.

191. உன்னம் - எண்ணம்.

193. கும் - தலை; வாரிதி - கடல்.

194. வீரன் - அருசுனன்.

195. அஞ்சு வகைத்தொனி - பஞ்சவாத்தியம்.

நனிகொள் மாமயி டாபதி நன்னகர்
தனையும் விட்டுத்த ளங்கள்ந டந்தவே. 195

கன்ன பாகம்கு ளிர்தரக் காட்சியாய்ச்
சொன்ன தால்துயர் நீங்கினன் பாக்யனே;
வன்னி ராசன்அம் மனுமின்னை வேட்டவாறு
என்ன காரணம்? ஈதுசொல் வீர்ஐயா; 196

என்று மன்னன் இருடியைக் கேட்கவே
நன்று கேள்அர சேமயி டாபதி
நின்று தாங்கிடும் நிருபன்நீ லத்துசன்
மன்றல் பெற்றசு வாலைம டைந்தையே. 197

அவள்ப யந்ததுஓர் ஆண்பெண்அ வர்பெயர்
தவர்வித் தாரகன் தாம்பிரத் துசன்என்றும்
. . . . . மாம்சுவா காஎன்றும் விள்ளுவர்
புவியி லேபுரிந் தேவளர் நாளிலே 198

மின்வி ரும்பிய மன்னற்கு வேட்டவே
மன்வி ரும்புதல் மடந்தைஅ றிந்துஉவந்து,
"என்வி ருப்பமே வசு"என்று இசைக்கவே,
தன்வி ருப்பம்த விர்ந்தனன் மன்னவன். 199

எக்கி யன்றனை எண்ணித்தி யானமாய்
முக்கி யத்தொடு முயலும்த வத்தினால்
அக்னி வந்துஅழைத் ததுளள்(உரை) என்றலும்,
"மிக்குஇள எந்தனை வேட்டும்"எ னச்சொனாள் 200

---

196. கன்ன பாகம் - செவியாகிய உறுப்பு; பாக்யன் - நல்லூழ் உடைய நீலத்துசன்; வன்னிராசன் - தீக்கடவுள், மனுமின் - அரச குமாரி, நீலத்துசனின் மகள்.

197. மன்னன் - சனமேசயன், இருடி - வைசம்பாயனர்; மன்றல் பெற்ற மடந்தை சுவாலையே என மாறுக.

198. ஓர் என்பதைத் தனித்தனியே ஆண், பெண் இரண்டுடனும் கூட்டுக; தவர் வித்தாரகன் - வில் வித்தையில் வல்லவன்.

199. மின் - சுவாகா; மன் - நீலத்துசன், வசு - அக்கினி; தன் விருப்பம் - ஏதாவது அரசகுமாரர்களுக்கு மணம் முடித்துக் கொடுக்கலாம் என்னும் தனது ஆசை.

200. எக்கியன் - அக்கினி; வேட்டும் - மணந்துகொள்வீர்.

சந்தச் சுவாகாமின் சாற்றிய சொற்படி
அந்த நீலத்து சன்னிடம் அடைந்துநின்று.
"உந்தன் சுதையினை உன்னிள னக்குநீ
சிந்தை கூர்மணம் செய்தருள்" என்றனன். 201

காலும் மூன்றுஎழு நா,எழு கையுமாம்
கோலங் கண்டுகு றித்ததுஓர் படத்தினை
வாலை யானம கள்கணில் காட்டினார்;
சால வேமனம் சம்மதி·கூறினாள். 202

அந்த வாற்றையும் அரசன்அ றிந்தபின்
இந்த ஊரில்இ ருந்துற வாழில்நீர்
பந்த னைக்கும ணம்பண்ணு வேன்எனச்
சிந்தை யொத்தும ணஞ்செய்து சேர்ந்தனன் 203

அன்று தொட்டுஅந்த அக்கினி அந்நகர்
ஒன்றி நாளும்உ வந்துஇனிது இருந்தனன்
என்ற செய்தியை இருடிஉ ரைக்கவே
வென்றி ராசனும் மெய்என மகிழ்ந்தனன் 204

நீலத்துசன் போர்ச் சருக்கம் முற்றும்

ஆகச் சருக்கம் 7க்கு விருத்தம் 933

---

201. சந்த - அழகிய, சுதை - மகள்.

202. இப்பாடல் 199 ஆம் பாடலை அடுத்து இருந்தால் பொருத்தமாக இருக்கும். 200ஆவது பாடலில சுவாகா தீக்கடவுளை நேரிலேயே பார்த்து விடுதலின் அதற்குப்பிறகு சித்திரத்தைக் காட்டினர் எனில் சிறப்பன்று. வாலை - இளவயதினள், சாலவே - முற்றிலும்.

203. பந்தனை - மகள்

204. இருடி - வைசம்பாயனர்; ராசன் - சனமேசயன்.

8. சண்டிகை சாப நிவாரணச் சருக்கம்

(கலிவிருத்தம்)

ஒன்றாகி மூன்றாகி உலகுயிரும் ஆகி
நின்றாலும் அண்டரது நேரொடுநி றைந்த
குன்றாத சோதிஅருள் கொண்டுறஅ ணைக்கும்
ஒன்றான நன்றான உத்தமந மஸ்தே. 1

மன்னுசென மேசயன்ம காமுனியை நோக்கி,
"உன்னிஅதன் மேல்நடந்தது ஓதும்"எனக் கேட்க,
--------- பதுமரா கப்புரவி அப்பால்
மின்னும்மயி டாபதியை விட்டுவெளி சென்று 2

நடைநடன சாலையொடு நன்குநவ ரத்னக்
குடைநிழலி லேவிருது கோடிபுறம் சூழக்
கடிபரவு தூயதீ பம்கமக மென்னச்
சடிலமதற் கேகவரிச் சாமரைஇ ரட்ட 3

மாஅடியில் ஓமம்எக்கி யங்கள்மல்க நீர்க-
ளேவிடுத ஈம்பொழில்-- --------- ரஞ்செய்து,
ஆவலொடு மோந்தவிட மேஅகரம் ஆக்கி-
யேவிருட்டிக் கும்இடத்தில் ஆலயம்இ யற்றி, 4

தரித்தவிட மேநகரது ஆக்கி, முனி சொற்ற
உரைப்படியில் அற்பமும்ஓர் குறைவுவரா மல்செய்து,
அரற்றுகடல் ஒத்தபஞ்ச வாத்தியமும் ஆர்க்கத்
திரைப்பிரள யத்தைநிகர் சேனைபுடை சூழ, 5

பகற்பொழுதி லேபரிந டத்திஇரவி பட்டால்
மகப்புரவி தங்க,இனன் வந்தபின்ள ழும்பி,

---

1 ஒனறு - முதற்பரம்பொருள்; மூன்று-முதல் தேவர் மூவர், பிரமன் , திருமால், உருத்திரன்; அண்டர்-இடையர்; நேரொடு-ஒற்றுமையோடு, நமஸ்தே - வணக்கம்.
3. சுடி - நறுமணம்; சடிலம - குதிரை.
4. அசுரம்-அந்தணர் வாழிடம்; விருடடிக்கும் - மலங்கழிக்கும்.
5. தரித்த - தங்கிய; முனி-வியாசர்; திரைப்பிரளயம்- கடல நீர்ப் பெருக்கு.

மிகுத்தநடை கொள்ளும்மத வெம்பரியொடு ஒத்தே,
செகத்தில்விச யன்தலைமைச் சேனையும்ந டந்தே. 6

இந்தவிதம் நாற்பதுடன் மூன்றுதினம் ஏகி,
நந்தல்அற நாற்பதுடன் நாலினில்ந டந்து,
விந்தைகிரி என்றுஒருவி லங்கலைநெ ருங்கி,
அந்தமலை மேல்நடந்தது அச்சுவமும் அம்மா. 7

அம்மலையின் மத்தியினில் ஆனதொரு பாறை-
யும்முறைவது; அங்குஅதனில் உன்னியுறை வுற்ற
விம்முபரி அங்கதனை விட்டகல்வது இன்றிச்
செம்மியத்தி னில்புரவி சிக்கியதை ஒக்க 8

முன்பின்இட மும்வலமும் முந்துஇவுளி ஏகா
வன்பினொடு நின்றளவில் மற்றவர்கள் எல்லாம்
என்புதுமை எனவிரைவி னோடுஅதட்ட ஏகா
துன்பினொடு பற்குணர்செ விக்குஉறஉ ரைத்தார். 9

ஈதுஎனபெ ரும்புதுமை என்றுஇரதம் ஓட்டி
ஓதைபட யாவரும்ஒ லிக்கஅசை யாதால்
ஆதரவி னோடுகயி றால்அடுத்தும் ஈழ்த்தும்
பேதமொடு எட்கடைபெ யர்ந்ததிலை யம்மா. 10

பற்பலஉ பாயமது பண்ணநட வாதால்;
அற்புதம்இது என்இதைஅ றிந்திடுவம் என்றே,
விற்பனுவல் வல்லவிச யன்பலரை நோக்கிக்
கற்பொறையைச் சூழ்ந்திருக்கக் கட்டளைஇட் டேபின், 11

சாரணர்கள் கோடிபெயர் தங்களைவி ளித்தே
ஆரணியம் இக்கிரிஅ டங்கலும்இ ரிந்தே

---

6. இரவி பட்டால் - சூரியன் அத்தமித்தால். இனன வந்தபின் - பகலவன் உதித்தபிறகு
7. நந்தல் - குறை; விலங்கல் - மலை.
8. செம்மி - மூடப்படடு. (பாறை) அதனில் செம்மிப்புரவி சிக்கியதை ஒக்க உறைவுற்ற என இயையும்.
10. ஓதை - ஒசை; சுழ்ததும் - இழுத்தும், எட்கடை - எள்ளளவு.
11. விற்பனுவல் - வில்வித்தை, பனுவல் ஆகுபெயர், கற்பொறை- கல்லாலாகிய சிறுமனை.

சீரினொடு வாசம்இவண் செய்பவர்உண் டாகில்
சாரும்அவ ரைக்கடிதின் தம்மின்எனக் கொண்டே 12

சூழஒரு யோசனைதொ லைக்குள்எவ ரேனும்
பாழியுட னேதவசு பண்ணுமவர் உண்டேல்
வாழியுடன் என்திருமுன் வந்துஉரையும் என்றே
ஆழிஅரி மைத்துனன்ஒற்று ஆள்சிலரை விட்டான். 13

அம்மலையைச் சூழ்வரஅ டித்துளப டங்கில்
விம்மலுட னேபலரு மேயினிதுஉ றைந்தார்;
செம்மல்விச யன்றனொடு தீரர்பலர் சூழ்ந்து
சம்மதிஆ லோசனைகள் தான்இனிது செய்தார். 14

காடுசெடி யும்கிரிக ளும்சுனைகள் கங்கும்
மேடுபள மும். . . . . எங்கும்விசை கொண்டே
ஓடியும்அ லைந்தும்மலி வுற்றுஒருவ ரேனும்
தேடியஇ டங்கள்மிசை சிக்கவிலை அய்யா. 15

என்றுஇவர்இ யம்பியபி னேஒருக ணத்தில்
வென்றிவிசை யன்சரணம் வீழ்ந்துசில தூதர்
இன்றுசனி மூலையினி டத்தினில்உய் யானம்
துன்றும்ஒரு யோசனைதொ லைக்குள்உளது என்றார். 16

மருத்துவன்உய் யானம்நிதி மந்த்ரிவனம் சேத்ரம்
அரக்கர்மனன் இராவணன்அ சோகவனம் தானும்
சுருக்கமுடன் கண்டவனத் துக்குநிகர் ஆகா
மருக்கமழ்வ னத்தில்மிகு மாமறைவ லோர்கள் 17

எண்ணில்பல சீடர்அவர் ஏவுதொழில் செய்ய
அண்ணல்தவ பரிரிஷிஅ தில்தவம்இ யைந்தார்
வண்ணவரி விற்குவிறல் மான!அபி ராமா!
நண்ணில்அவர் பால்அருள்வர் நாடியதை என்றார் 18

---

12. சாரணர் - ஒற்றர், இரிந்து - ஓடி(ப்பார்த்து), கடிதின் - விரைவாக.
13. பாழி - முனிவா தங்கியிருக்கும் இடம், ஆழிஅரி - சக்ரபாணி.
14. படகு - கூடாரம், விம்மல் - வியப்புக் கலந்த மகிழ்ச்சி.
15. சுகு - தினை, ஆகுபெயராகத தினைப்புனத்தைக் குறிததது
16. சனி மூலை - வடகிழக்கு, உயயானம் - சோலை
17. மருத்துவன் உயயானம் - இநதிரனின் சுறபசச் சோலை, நிதிமந்த்ரி - குபேரன்; மரு - நறுமணம்
18. மான - பெருமை மிக்கவனே, அவர்பால் நண்ணில் நாடியதை அருள்வர் என இயைக்க.

(கலித்துறை)

என்னும் வாய்மையைக் கேட்கும்முன் எழுந்தனன் விசயன்
கன்னன் சேய்,அனு சாளுவன், கால்சுதன் பேரன்,
மன்னும் மாஎம னாசுரன், மகனும்,மந் திரியும்
முன்னு சாத்தகி, பிரத்திமன், அணியுருத் திரனும் 19

உத்து வாசரி, கிருதவர் மன்,அக்கு ரூரன்,
அதர வீரநீ லத்துசன் யாவரும் எழுந்து
சித்ர ரூபன்முன் திறல்கரங் கட்டிநின் றிடவே
புத்தி வீரியன் எழுந்துவா வாவெனப் போந்தான். 20

கூடி னோர்களும் விசையனும் கால்நடை கொண்டே
நாடி னார்வழி சாரணர் நெறிசொலி நடக்க;
ஊடும் ஆரணி யம்கடந் துஉத்தியா னப்பூங்
காடு கண்டனர் நறைகம கமெனவே கமழ. 21

இந்த்ரன் குபேரன்இ ராவணன் இவர்வனம் தனிலும்
கந்த மால்வனம் கண்டதே கண்களி கூர்ந்தார்;
சந்த மானபூங் காவனத் தலம்எலாம் மலர்கள்
சிந்தி யேமலர் மெத்தைபோற் செறிந்ததுஅச் செகமே. 22

நெய்தல், ஆம்பலின் விகற்பமும், செங்கழு நீரும்,
அய்த ரும்சய தாமரை, வெண்குசே சயமும்
மொய்த ரும்தடம் குளங்களும் ஓடையும் உலவும்
கைதை யின்விகற் பங்களும் அங்குஎலாம் கண்டார். 23

அன்னம், சாதகம், மயில்,புறா, குயில்கள்,தா ராக்கள்,
வன்னி, பூவை,கின் னரங்கள்,மற் றுள்ளபக் கிகளும்

---

19. கன்னன் சேய் - லிடகீதனன் - கால் சுதன் பேரன்- வாயுகுமாரனாகிய வீமனின் பேரன், மேகவண்ணன்; மகன்- எமனாசுரனின் மகன், சுகலீலன். மந்திரி - எமனாசுரனின் அமைச்சன்.

20. அதர வீர - படைக்கலங்களைச் செலுத்துவதில் வல்லவனான; சித்ரரூபன் - அருச்சுனன்; புத்தி வீரியன் - அருசுசுனன்.

21. நறை - வாசனை.

22. கந்த - மணமிக்க; மால் - பெரிய, சந்தமான - அழகிய.

23. ஐதரும் - அழகிய; சய - கூட்டமான, வெண் குசேசயம் - வெள்ளைத் தாமரை; தடம் - அகன்ற, கைதை - தாழை.

துன்னி அங்கெலாம் நிறைந்துகண் டங்களால் தொனிக்க
நன்ன வங்களாய் ராகமே பரந்தநந் தவனம் 24

அரிகள், மான்,மரை, யாளி,சார்த் தூலம்,எண்கு, அத்தி
பரிகள், காட்டெரு மைப்பசு, மான்மதம், கவரி,
விரியும் பற்பல விலங்குகள் பகையற விரவக்
குரிசில் இந்நலம் நுகர்ந்துஅவண் நடந்தனன் கூட 25

கிள்ளை பூவையும் .. .... டிகளுடன் கீரம்
தெள்ளு நான்மறைச் சாத்திரம் பதினெண்பு ராணம்
தள்ளி லாச்சத கோடிமந் திரங்களும் தம்மில்
உள்ள வாறுகண் டங்களால் தொனித்துஉறைந் தனவே. 26

வீரர் தங்களை நோக்கியே விளம்புவன் விசயன்
சாரம் இங்குள தவமுனி வோர்நிதம் சாற்றும்
ஆர ணங்களைக் காதினால் கேட்டுஉறக் கத்தே
சேர இங்கிவை செப்புவது எனச்சொனான் தெளிந்தோன். 27

ஒக்கும் என்றுற வர்கள்அதி சயித்துஉவந்து உறுவர்
முக்கி யத்தினன் ஆச்சிர மந்தனை முடுகித்
தொக்க பன்னக சாலையில் சீடர்கள் சூழத்
தக்க தவுபரி ரிஷிதவ யோகமுற் றிருந்தார். 28

அக்கம் மூடிசி வம்செயும் ரிஷிக்குஎதி ராக
நிற்கும் வேளையில் சிவம்செய்து நேத்திரம் திறந்தார்;
திக்கு டன்பிர தட்சிண மாய்வலம் வந்து,
தொக்க தாய்ப்பணிந்து எழுந்துதோள் தொடர்புடன் கட்டி, 29

நின்ற வீரனை, "நிருபதே வேந்திரன் குமரா!
இன்றுஇ வன்வரும் காரியம் ஏது"என வினவ,

---

24. சாதகம் - வானம்பாடி . வன்னி - கிளி, கின்னரம - ஒரு நீர்ப்பறவை, கிளி, ஆந்தை ஆகிய இரண்டும் கூட இபபெயரால் வழங்கப்படும்; பக்கி - பறவை; கணடம் - குரல்.

25. அரி - சிங்கம், மரை - மானில் ஓர் இனம், சார்ததூலம் - புலி; எண்கு - கரடி, அத்தி - யானை, மான்மதம் - கஸ்தூரி மான்;

26. பூவை - நாகணவாய்ப்புள்.

27. ஆரணம் - வேதம்.

28. பன்னகசாலை - புல்வேய்ந்த குடிசை.

29. அக்கம் - கணகள, சிவம் - தவம்; நேத்திரம - கணகள்.

"நன்றி யாகிய சமஸ்தமும் அறிந்தநா தாவே"
என்று தன்வர லாறுகள் யாவையும் இசைத்தான். 30

வார வல்லவன் உரைத்திட மவுனமாய் இருந்து,
"வீர! நீகுசை யாசனத்து இரு"என இருத்தி
சேர வேபணிந் தோர்எலாம் இருந்திடச் செப்பி,
நேர்இ ருந்தவர்க்கு ஓதுவான் நிகரிலாத் தவத்தோன். 31

"சவுண்டி லீகர்என்று ஒருமுனி கந்தமா தனக்கல்
உவந்துஇ ருந்தனன்; உத்தர வாகன்என்று ஒருவன்
சுவந்தி ரத்துடன் சிசுருஷை செய்திடத் துணிந்து
நவங்கொ ளும்படி சாலநாள் பணிவிடை நயந்தான். 32

இருடி சீடனை விளித்து,"நல் பிரமசா ரியனாய்
அரிது நீபணி விடைசெய்தாய் அன்புடன்; இனிமேல்
மருவி டுஞ்சமு சாரக்ருத் தியங்களில் மன்னிப்
பரிவி னோடுஇரு; செல்"என வாய்மொழி பகர்ந்தான். 33

"வன்னி விட்டிலேன்; மருவிலேன் க்ரகஸ்தா சிரமம்"
என்ன வும்மறுத்து, "ஏகுநீ" எனஅவர் இசைத்தார்.
பின்னும், "ஏகிலன், நின்பதம் பெரிது"எனப் பேச,
"மன்னும் நன்சமு சாரமே அதிகம்;வாழ்" என்றார். 34

"பங்கம் உற்றுஅலைந்து உலையவும், பாடுகள் படவும்
இங்குள னக்குஇய லாதுஎன ஏகுஎன இசைத்தீர்;
சங்கை யற்றநும் மொழிமறேன்" என்றுசம் மதித்துத்
துங்க செங்கம லப்பதம் தொழுதுஅவன் நடந்தான். 35

---

30. சமஸ்தமும் - அனைத்தும், நாதாவே - தாயவனே; என்று - என விளித்து.

31. வார வல்லவன் - அன்பும் ஆற்றலும் நிறைந்த அர்ச்சுனன், குசை யாசனம் - தருப்பைப்புல்லால முடையப்பெற்ற இருக்கை, தாபபாசனம.

32. சுந்தமாதனக்கல - சுந்தமாதன மலை, சுவந்திரம் - சுதந்திரம், தன் முழு மன விருப்புடன், சிசுருஷை - பணிவிடை; சால - பல.

33. சமுசார சுருத்யங்கள் - இல்லறததிற்குரிய செயல்கள்.

34. வன்னி - தீ, இங்கு பிரமசாரிகளின் வேள்வி; க்ரகஸ்தாசிரமம்- இல்லறநிலை.

35. பங்கம் உற்று - சிரமப்பட்டு; சங்கை - ஐயம், துங்க - உயர்ந்த

(எண்சீர் விருத்தம்)

தருமபுரி என்னுமோர் அகரம் சேர்ந்து
சத்திரத்தின் திருவாசல் தனில்இ ருந்தான்
அருமறையோர் பலபேர்கள் அங்கு வந்தோர்
அவர் "எவர்நீர்" எனவினவச் "சவுண்டி லீகர்
உரிமையுறும் பணிவிடையில் இருந்தேன்; என்பேர்
உத்தரவா கன்"என்றே உரைக்கக் கேட்டுச்
"சரதம்இது நான்அறிவேன்" என்றுஓர் பார்ப்பான்
சடுதிஉரைத்து "ஏதுவரல்" சாற்றும் என்றான். 36

வென்றியுறும் குருஉரைத்தார் "பிரம சர்ய
விரதம்ஒழித்து இல்லியற்கை விரும்பி நீஏல்,
என்றும்மிகு புண்ணியங்கள் மென்மேல் எய்தும்;
இகபரமும் பதவிதரும்; எளியோர் எய்தில்
நன்றிஉப காரவண்மை செய்ய லாகும்;
நயந்துபுனல் ஈந்திடலாம் தவித்தோர் நண்ணில்;
அன்றிஅவ தரித்தோர்க்குப் பயம்கட் டங்கள்
ஒருவிஇடம் கொடுத்திடலாம்; அனம்இட்டு உண்பாய்; 37

தென்புலம்தெய் வம்விருந்துஒக் கல்உன் னோடே
சேர்ந்தஐவர்க்கு உபகாரம் செலுத்தி வாழ்வாய்;
இன்புவியைத் துறந்தோர்க்கும் துவ்வா தோர்க்கும்
இறந்தார்க்கும் துணையாக இருக்க லாகும்;
நன்பதவி முத்திமோட் சங்கள் உண்டு;
நவில்இல்ல றத்துஒப்பாம் நலமே இல்லை;
என்பிரம சரியவிர தத்தில் பேறு?"என்று
எனைஅனுப்ப வந்தேன்நான் எனவும் சொன்னான். 38

"உற்றவர்உ ரைத்ததுஎலாம் மெய்தான்; என்றும்
உன்குருவின் பெயரும்நின்பேர் உலகம் எங்கும்
பெற்றியுடன் விளங்குவது மெய்தான்; அந்தப்
பிரமரிஷி யிடத்துஉனையும் விரும்பிக் கண்டேன்;

---

36. அசுரம் - அந்தணர் வாழிடம்; சரதம - உண்மை; சடுதி-சீக்கிரம்.
37. ஏல் - கைக்கொள்வாயாக, ஒருவி - நீக்கி.
38. தென்புலம - பிதுருககள்; ஒக்கல் - சுற்றத்தார்; இப்பாடலில திருக்குறள் 42.43.46.47 ஆகியனவற்றைக் காணலாம.

நற்றவத்தில் யான்ஒருபெண் பெற்றேன்; அந்த
நங்கையினைக் கன்னிகா தான மாக
மற்றுஉனக்கே தருவேன்"என்று உரைத்துக் கூட்டி,
மனையினில்வைத்து, அனம்நிதமும் வழங்கி னானே. 39

நன்னிமித்த முகூர்த்தமுடன் நாளும் பார்த்து
நங்கையினை அலங்கரித்தே நட்பி னோடு
கன்னிதனைக் கன்னிகா தான மாகக்
காதலியைக் காதலன்பால் ஈந்த பின்னர்,
சின்னவய தினள்அதனால் பிறந்த கத்தே
சேர்ந்திருந்தாள்; மனைக்குஒருநாள் தினங்கள் தோறும்
அந்நகரில் உண்டிருந்தான்; பருவ மாகி
அணங்குபிர விடையாகித் திரண்ட பின்னர் 40

அங்கவட்கு ருதுசாந்தி மணமும் செய்தே,
அந்தணன்றன் பங்குமனை யதனில் ஓர்பால்
தங்குநவ சிங்கார வளவும் கட்டிச்
சகலநவ தானியங்கள் சதுராய் வைத்து
வெங்கலப்பாத் திரம்அடும்பாத் திரவி கற்பம்
வேணமட்டும் ஆயிரத்தின் மேலும் ஈந்து,
துங்கமிகு பலபணிபூண் ஆடை வர்க்கம்
தொகைஅடங்கா விதமாகத் தொகுத்து வைத்து 41

தகைப்பொருள்கள் அனைத்தும்வைத்துக் கட்டில், மெத்தை,
தழுவணை,மேற் கட்டிகள்,பூச் சப்ர மஞ்சம்
மிகுத்தஅரி பிளவுஇலைகர்ப் பூரம் பஞ்ச-
விரை,களபம் சுகந்தகந்தம் வியந்து வைத்துப்
பகுத்தறிவு ளோர்வாழ்த்தி மனைக்குள் ளாகப்
பாவையுடன் நாயகனைப் பயில வைத்தே
அகத்தில்அவ ரவர்சேர்ந்தார் தனித்த வீட்டில்
அவன்அணங்கைக் கட்டிலிலே இணங்கக் கூவ, 42

---

40. நல நிமித்தம் - சுப சகுனம், அணங்கு - பெண், பிரவிடை - அறிவறியும் பருவம்; திரண்டபினனர் - பூபபடைநதபிறகு.

41. வளவு - வீடு, வெங்கலம - வெண்கலம்; அடும் - சமைபபதறகு வேண்டிய.

42. தழுவு அணை - படுக்கும்பொழுது பக்கத்தே போட்டுக் கொள்ளும் அணை; பூ சப்ரமஞ்சம் - அழகியதும, மேல விதானம் அமைந்ததுமாகிய கட்டில், அரி - மாலை, பிளவு இலை - வெற்றிலை பாக்கு; கர்ப்பூரம் - பச்ச கருப்பூரம். பஞ்சவிரை - ஐவகை மணப்பொருள், அவையாவன; ஜி ாம்பு, ஏலம், கருப்பூரம், சாதிக்காய், தக்கோலம், களபம் - சந்தனம்

"ஆமடா நீசொனது கேட்பே னோ"என்று
அடர்ந்தடர்ந்து கட்டிலிலே உதைக்க லுற்றாள்;
தீமைஇதுஏது எனத்திகைத்துத் தாம்பூ லாதி
தின்னுகென, அவைகளெலாம் சிதற வாறித்
தாமதியா தேகசக்கி எறிந்தாள்; மார்பில்
சந்தகந்தம் பூசுஎனஆ னனத்தில் துப்பித்
தேமலர்கள் களபம்எலாம் நிலத்தில் கொட்டித்
தேய்த்துஅளறாய்த் துவைத்துஉளறிச் சீற லுற்றாள். 43

செப்புமொழி அடங்கலுக்கும் மாறு பாடாய்ச்
செய்துதுன்மார்க் கத்தினொடு சீற லாலே,
இப்புதுமை நமதுதலை விதியென்று உக்கி
இடைந்திடைந்து வைகறையில் எழுந்து பாத்ரம்
துப்பொடுதேய்த்து உடல்மூழ்கிச் சோமன் தோய்க்கச்
சொன்னவுடன் பாத்திரத்தில் சாணி பூசித்
தப்பிதமாய்க் கரிபூழ்தி மெய்யில் பூசித்
தான்துணியைக் கிழித்துத்தோ ரணம்செய் தாளே 44

"சண்டிகையே! இவ்விதம்ஏன்?" என்று கேட்கத்
தாறுமா றாய்உரைத்துஅப் படிதான்" என்றாள்;
மிண்டிஇவள் மனம்இசையத் தக்க தாக
விருப்பும்நல்ல வாய்மையிலும் இணங்கேன் என்றாள்;
தெண்டனைவெள் சினந்தனக்கும் அடங்கி நில்லாள்;
சிறியோர்சொல் பெரியோர்சொல் சிறிதும் கேளாள்;
வண்டி ர சங்கள்செய்தால் விஷமம் செய்வாள்;
வாழ்த்தினால் வைதிடுவாள் மாறே செய்வாள். 45

நாட்குநாள் இவ்விதமே செய்வ தல்லால்,
நயந்திலாள்; பெரியோர்தாய் தந்தை சொல்லும்
கேட்கிலாள்; நடுநடுங்கி அனத்த மான
கேடுவந்து சம்பவித்தது எனக்கி லேசம்

---

43. ஆனனம் - முகம்; உளறி - பேரொலி எழுப்பி.

44 உக்கி - அஞ்சி; இடைந்திடைந்து - மிக மனம்தளர்ந்து; துப்பொடு - சுத்தமாக, சோமன் - வேட்டி.

45. மிண்டி - நெருங்கி; வண்டி - வண்டவாக, விளையாட்டாக.

தாட்கிலான் அலமலந்து, குருவை நொந்து,
தனதுஊழின் விதியைநொந்து, மதியை நொந்து,
வேட்கையுடன் மும்மதிதுப்பு அயலில் உண்டு,
வீணாக நாட்கழித்தான் உத்ர வாகன். 46

ஆசானும் தருமபுரந் தனிலே சென்றான்;
அவன்குணம்ஏது அறிவம்எனச் சவுண்டி லீகர்
கூசாமல் ஒருமறையோன் மனையில் புக்குக்
குமரர்களை வினவுதலும் குறித்து"உன் சீஷன்
ஈசாஇங்கு உளன்"எனவே அவனைக் கூட்டி
இருடிமுனே விடுத்திடலும் வலமாய் வந்து
தாசாதி தாசன்என வணங்கி விம்மித்
தவித்துஅழுகச் சலிப்புஏது சாற்று கென்றார். 47

வன்னிவிர தமும்நீத்துச் சமுசா ரத்தில்
வந்துஇதுவும் கிடையாமல் நொந்து மாழ்கி,
இன்னலுடன் பிடித்தகொம்பும் மிதித்த கொம்பும்
இழந்துஇருத லைக்கொளியின் எறும்போடு ஒத்தேன்;
கன்னிகா தானமதாய்ச் சருமன் பாலில்
கையேற்றேன் ஒருமான்சண் டிகையென் பாளை;
என்னையணு வாய்மதியாள், மருவக் கூவில்
என்மார்பில் எழுந்துஉதைப்பாள்; என்பால் வைத்தால் 48

துன்னிஎந்தன் முகத்துஉமிழ்ந்தே, கலன்கள் நீத்துத்
தோகைதன்முன் றானையிலே துயில்செய் கிற்பாள்;
மின்னுடலில் கரம்தீண்டில் சிகைதொட்டு ஈர்ப்பாள்;
மெய்யினிற்பன் னீர்களபம் எறிந்தே னாகில்,
என்னுடலில் சாணிசிறு நீரை வாரி
இறைப்பள்;கலை தீண்டிடில்எந் தனது சோமன்
தன்னைஎலாம் கிழித்துஎறிவள்; கந்தம் பூசில்
சாம்பல்எந்தன் மேனிஎங்கும் தடவு வாளே. 49

---

46. கிலேசம் - துன்பம்; தாட்கிலான் - தாழ்ந்திலான், குறையாதவனாக, மும்மதி - மூன்றுமாதங்கள்: துப்பு - உணவு.

47 தாசாதிதாசன் - அடியார்க்கடியான்.

48. வன்னி விரதம் - பிரமசரியம, சருமன் - அந்தணன், அணுவாய்- சிறிதேனும்

49. கலை - ஆடை, இங்கு புட வை,

இதுவரைக்கும் அவள்கைஅன்னம் போகம் ஏற்றே-
னிலை;வீடு வாயில்சுசி கரிப்ப தில்லை;
பதகிஇவள் ஸ்நானபா னங்கள் இல்லை;
பாத்திரங்கள் தேய்ப்பதில்லை; பஞ்சு தோயாள்;
குதறுபுழு தியும்கரியும் மெய்யில் கொள்வாள்;
குப்பைகள்ஓ டுகள்பரப்பிக் கொள்வாள் வீட்டில்;
சுதைஅறவே வஸ்திரங்கள் எல்லாம் கீறித்
தோரணமாய் வாயில்எங்கும் தொடுத்துக் கொள்வாள். 50

பாத்திரத்தில் சாணியினைப் பூசி வைப்பாள்;
பறித்தெறிவாள் தாலிமுதல் பணிகள் எல்லாம்;
தூத்திடுவாள் தலைமயிரை, தானை போட்டுச்
சுடும்அடுப்புச் சாம்பலிலே துயிலே செய்வாள்;
கோத்திரத்தில் சண்டாள சன்ம மோதான்?
குணம்அறியேன்" எனஉரைக்கக் குருவும் ஞான
சாத்திரத்தி னால்பிறவிக் குணம்என்று ஓர்ந்து,
"தனக்குஆவது ஆகாதாய்ச் சாற்றில் செய்வாள்" 51

என்றமொழி தனைக்கேட்டே அவள்முன்பு ஏகி,
"எனதுகுரு வருதலுற்றார்; அவற்குஎன்று உன்னி
நன்றிமனை சுத்தாங்கம் செய்தி டாதே;
நலமுடைய பாத்திரங்கள் தேய்த்தி டாதே;
சென்றுதான் நீஸ்நானம் செய்தி டாதே;
திருத்தியுடன் அவற்குஎனக்கும் அனம்இ டாதே;
வென்றியுறு வத்திரங்கள் தோய்த்தி டாதே;
மெய்இலங்கப் பூஷணங்கள் மிகஇ டாதே. 52

உறுதியாய்ச் சொன்னவற்றுள் எதுசெய் தாலும்
உடம்பின்தோல் உரிப்பன்"என உறுக்கிப் போட்டு
விறுவிறென வெளியில்வந்தான் "ஆம டாநீ
விளம்புமொழி கேட்பேனோ?" எனஒல் லைக்குள்

---

50. சுசிகரிப்பது - தூய்மைப்படுத்துவது; ஸ்நானம் - நீராடுதல், பானம - குடிக்கத்தக்கனவற்றை உரிய நேரத்தில் முறையாக அருந்துதல, பஞ்சு - சேலை, ஆகுபெயர், சுதை - வெண்மை.
51. தூத்திடுவாள் - தூற்றிடுவாள், தானை - சேலை.
52. உன்னி - நினைத்து, சுத்தாங்கம் - கலப்பற்ற தூய்மை, திருத்தி- மன நிறைவு.

விரைவின்மனை சுத்திசெய்து, பாத்ரம் தேய்த்து,
மெய்முழுகித் தானபா னங்கள் செய்தே,
அரையினில்சோ மன்தோய்த்துச் சலமும் கொண்டே
அகம்புகுந்தாள்; அனம்சமைத்துக் கறியும் செய்தே 53

வருந்தியும்வந்து இருவரையும் அழைத்து வந்து
மனையினுள்ஆ சனம்இட்டே இலையும் போட்டுப்
பரிந்துஅனமும் கருணையொடு பல்ப தார்த்தம்
படைத்துப்போ சனம்அவர்பண் ணினபிற் பாடு
பொருந்தியும்நீர் கைக்களித்து நறைசவ் வாது
புழுகுகஸ் தூரிகந்தப் பொடியும் ஈந்து
திருந்தியபொற் பிளவுஇலைகர்ப் பூரம் ஈந்து
சிறப்பாக நமஸ்கரித்தே அனுப்பி னாளே. 54

குருவுடனே சீடனுமாய் வெளியில் வந்து,
"குறித்துஇதனை அறியாமல் போனேன் அய்யா!
வருகுருவே! உமது,கடாட் சத்தி னாலே
வாய்த்ததுஐயா போசனம்இன்று அவள்கை யாலே;
விரவும்இது நல்லமதி" எனவும் "சீடா!
"மேலும்இது தொழில்உனக்கு"என்று அவர்போய் விட்டார்;
கருதியசா யங்காலம் அவளைப் பார்த்துக்
"கட்டில்மெத்தை போடாதே; சிறப்பி யாதே; 55

மேனிஅலங் கரிக்காதே; காய்தாம் பூலம்
விரையும்எனக்கு அளிக்காதே; மேல்தீண் டாதே;
தானமுடவு என்போகம் தான்வேண் டாதே;
தப்பினால் அடித்துஉரிப்பேன்" எனவே சாற்ற,
"நீதவின்ற படிகேளேன்" எனஅப் போதே
நிகரில்ரதி மதன்எனவை கறையாம் மட்டும்
கானமலர் அணைமிசையே மருவிச் சேர்ந்து,
கலவிமுறை கலந்திணங்கக் களிப்புற் றாரே. 56

---

53. உறுக்கி - மிரட்டி; ஒல்லை-சீக்கிரத்தில்; விரைவின் - வேகமாக; அரை - இடுப்பு; சலம் - நீர்.
54. ஆசனம் - இருக்கை, பதார்த்தம் - கறி முதலிய துணை உணவுப் பொருள்கள்.
55. கடாட்சம் - கடைக்கண் பார்வை.
56. வைகறை - காலை.

இந்தவிதம் சிலகாலம் பின்னிட்டு ஏக
இவன்பிதா வுக்குரிய திதிவந்து எய்த
அந்தம்உள சண்டிகையைக் கொண்டு நோக்கி,
"அய்யனுக்குத் திதிவீடு மெழுகி டாதே;
புந்தியுடன் பத்துப்பேர் மறையோ ருக்குப்
போசனமிட்டு உபசரணை பணப்போ காது"என்று
உந்துமொழி இவனுரைத்துச் செவத வம்செய்து
உறுதியுடன் இவன்நினைக்கும் முன்ன தாக 57

விரைந்துமனை வாயின்முன்றில் சுத்தி செய்து,
மேவியசுண் ணாம்பொடுசெம் பட்டை பூசிப்
பரிந்துஉறவில் தானபா னங்கள் பண்ணிப்
பாத்திரங்கள் தேய்த்துஅனமும் கறியும் பண்ணித்
திருந்தியதாம் அப்பவர்க்கம் பலவும் செய்து,
திகழ்மறையோர் ஒருபதுபேர் தனையும் சேர்த்து,
பொருந்துபெரி யோர்மூவர், ஆவு திக்குஏழ்
பூசுரரைச் சங்கற்பம் முடிக்கச் சொல்லி, 58

பிண்டப்ர தானம்எலாம் முடிக்கச் சொல்லிப்
பின்புபிரா மணர்க்குஅனம்இட்டு அவர்கள் எல்லாம்
கண்டப்ர மாணமதாய் உண்டு தீர்ந்து
கையலம்பிக் கந்தபுட்பம் காய்தாம் பூலம்
கொண்டதற்பின் நமஸ்கரித்தே அனுப்பி விட்டாள்.
கோதைபிண்டம் நலியாமல் கங்கை ஆற்றில்
உண்டையினைக் கரைக்காதே எனச்சொல் லாமல்
உறுதியுடன் கரைத்திடுஎன உரைத்திட் டானே. 59

வண்டியவள் குணத்தாலே குப்பை மீதில்
வாரியெடுத்து எறிந்துவிட்டாள்; மண்டி யேதீ
அண்டமுகட்டு அளவுஎழுந்து கொழுந்து பாய,
அக்கினியுட் பிதிர்களெல்லாம் அபயம் ஆர்த்தார்;

---

58. பரிந்து - அன்புடன், உறவில் - உரிய நேரத்தில்; அப்பவர்க்கம்- பணியாரங்கள்; மூவர் - பிராம்மணாத்தம் சாப்பிடவும், எழுவர் தீ வளர்த்து வேள்வி செய்யவுமாக மொத்தம் பதின்மர்; பூசுரர் - அந்தணர், சங்கற்பம - இன்ன இடத்தில் இன்ன நாளில், இன்னபயன் நாடி இந்தச் சடங்கைச செயகிறேன் எனத் தீர்மானித்துக் கொள்ளுதல்.

59. பிண்டப்ரதானம் - இறந்துவிடட பெரியோர்களை நினைநது உணவுப் பொருட்களாலாகிய உண்டையைச் சமர்ப்பித்தல்.

கண்டுகண்கள் நெருப்புஎரிய மிகவும் சீறிக்
கடுகடுத்துப் "பிடிசாபம் கடுக" என்று,
"சண்டிகையே! இன்றுமுதல் பாறை யாகத்
தான்கிடப்பாய் விந்தைகிரி தனிலே" என்றார். 60

கிடுகிடென்று நடுநடுங்கி, "அய்யா! சாமீ!
கெடுமதியால் அறியாமல் கெடும்பு செய்தேன்;
கடுகிஎனக்கு இடும்சாபம் நீங்கும் எந்தக்
காலம்எனக் கனிந்துகெஞ்சி அவளும் கேட்கக்
"கொடியவளே! வெகுகாலம் சென்ற பின்பு
குருகுலவங் கிசபதியாம் தரும ராசன்
விடுபரியை நீபிடிக்க, விசையன் கைகால்
விரவநிவா ரணமாகும் சாபம்" என்றே. 61

கெந்தமா தனகிரியில் குருவின் பாலில்
கிளர்ந்துபணி விடைகொண்டான் அவள்ம ணாளன்;
முந்தும்அக லிகைசாபம் இராம னாலே.
மோசனமுற் றதுபோல, நின்கால் கைகொண்டு
அந்தமுடன் விரவுதலும் சாபம் நீங்கி
அணங்குஆவள்; பரிநடக்கும்; அரியேறு அன்னாய்!
சந்த(ய)மோ? நீமாயன் அமிசை யாமே;
சரராச னே"எனஅம் முனிசொற் றாரே. 62

"அய்யனே! கந்தமாதன் பாரி (துன்பம்)
அகலிகைசா பம்போலே அகலும் என்றுஉன்
துய்யவாய் மையினாலே சொற்ற போதே,
தொலைந்துவிடும் சாபம்என்று துயரம் தீர்ந்தேன்;
மெய்யனே" எனஎழுந்து வலமாய் வந்து
விரைந்துஇறைஞ்ச வேந்தன்றனக்கு ஆசி கூறி
வெய்யகா தினிற்சிறிது கிரியை ஓதி
விடைகொடுக்கப் போற்றிசெய்து விசயன் போந்தான். 63

---

60. வண்டி. - துஷ்டை.

61. கெடும்பு - தவறு.

62. மோசனம - நிவாரணம்; சந்தயம் - ஐயம்.

63. கிரியை - (செய்ய வேண்டிய) செய்கை.

64. பிறங்கல் - மலை, வன்ன விகற்பங்கள் - இசைச்சொற் கடடுகளின் வேறுபாடுகள், வாரிதி - கடல்; சுறங்கிட - ஒலிக்க, உனனி-குதிரை.

பின்னுடனே வந்தவர்கள் சூழ்ந்தே செல்லப்
பெருநடைகொண் டேநடந்து பிறங்கல் சேர்ந்து,
துன்னிஅவண் உறைந்தோரை எழவே சொல்லித்
தொடர்ந்துரண பேரிகையை முழக்கச் சொல்ல,
வன்னவிகற் பங்கள்தாம் பஞ்ச வாத்யம்
வாரிதிபோற் கறங்கிடவே, வல்வில் லாளன்
உன்னிதனை அடுத்துஅருங்கல் மிதித்துக் கையால்
உருவிவிட்டான் காலாலும் பாறை ஒக்க. 64

பரிக்காலில் பாறையினில் விசயன் அங்கை
பட்டவுடன் கற்பாறை உருவம் நீங்கி
அரிக்காலை விட்டுஇளம்சூ ரியப்ர காச
மானதிரு மேனிஅலங் காரத் தோடு
திருப்போலப் பணிதிகழ வாலை யாகச்
செயவிசயன் திருமுன்னே நிற்க, நோக்கித்
"தருக்கான மாதாவே! என்று கூறத்
தையலுமே தனஞ்சயனை நோக்கிச் சொல்வாள். 65

(66ஆம் பாடல் சுவடியில் எழுதப்படவில்லை)

எனக்குஉரிய தந்தைஉனை இறைஞ்ச வேணும்
என்றால்உன் மனதுஇசையாது எனநின் றேன்;உன்
கனக்கரமும் காலும்எனைத் தீண்ட லாலே
கல்லுருப்போய் நல்லுருவம் காணப் பெற்றேன்
உனக்குமகள் யான்;உனது மருகன் இந்த
ஒல்லையினில் அணுகுவன்"என்று உள்ள யாவும்
மனக்கவடம் அறஉரைத்தாள் தன்வாறு எல்லாம்;
மகிழ்நனும்வந்து அக்கணம்ஆ சீர்வ தித்தான். 67

வில்லியுமே நமஸ்கரிக்க மறையோன், "புண்ய
மெய்யனே! உன்கரங்கால் விரவ லாலே
கல்லுருப்போய்ச் சண்டிகையும் பெண்ணாய் நின்றாள்;
கவுதமற்கு ராமன்அக லிகைஈந் தாற்போல்
மெல்லியல்இன்று எனக்களித்தாய்; விசயா! சாப
வினைதீர்த்த பலனுடனே கன்னி தானம்
நல்லகுணத் தோடுஅளித்த பயனும் மாயன்
அருளாலே உனக்குநன்றாய் லபித்தது" என்றான். 68

"என்னைஒரு பொருட்டாக எனக்கு மேன்மை
எய்துதற்கு நீர்அருள்செய் தீர்;மெய்" என்று
மின்னைஅந்த மறையனுக்கு வேட்டுஅ தற்பின்
வேணமட்டும் பலபொருளும் விரும்பி ஈந்தே,
உன்னும்இரு வோர்மனமும் திருத்தி பண்ணி,
"உங்கள்யதாஸ் தானம்அடை யுங்கள்" என்று
மன்னுபரி முன்விருது நடனம் பஞ்ச
வாச்சியங்கள் இசைந்துசெல மாவும் போந்த. 69

பரியின்அடிச் சுவட்டினிலே எக்கி யங்கள்
பயிலமற்று உளசடங்கும் பண்பாய்ச் செய்தே,
உரும்ஒலிக்கும் திரைஒலிக்கும் மிக்க தாக
உத்திநிதா னங்கள்ஒலி ஒலித்துச் செல்லச்
சரிமிகுந்து தொலைதூரம் தொலைத்து மாப்பின்
தான்தொடர்ந்து செலும்போது, தாரை நேராய்
அரியசொர்ண கோபுரங்கள் எண்ணில் லாதது
அண்டகடா கந்தடவி நிற்றல் கண்டார். 70

விசயன்அது தனைநோக்கி அருகாய் வந்த
மிக்கஎம னாசூரன் தன்னை நோக்கிச்
"சுசிகரமாய் முகடுதொட எண்ணி லாத
சொர்ணகோ புரம்துலங்கும் நகர்ஏது" என்ன,
"வசிகரமா தவசாம்ப நகர்அது ஆளும்
மன்அமுதத் துசன்அவனுக்கு உபயர் மக்கள்;
அசைவுஇல்தயி ரியச்சுதர்மன் சுரதன் என்போர்;
அரிஅரனைப் பிரமனையும் நடுக்கம் கொள்வார். 71

என்போல்வார் அவன்றனக்குஓர் மசகம் போலாம்;
இராமர்மகத்து அசுவமதை இவன்முன் பற்றி,
வன்பாக வெஞ்சமர்செய்து, அனுமன் றன்னை
வருந்தரெட்டை விலங்குதொட்டான்; மற்றுள் ளோரை
என்பாடு படுத்தறியான்? சுக்ரீ வன்கை
இருகாற்கும் தளையிசைத்தான்; இலங்கை வேந்தைத்
துன்பாகப் பாசமதால் விசித்தே வைத்துத்
துரத்தினான் சத்ருக்னன் வெருக்கொண்டு ஓட. 72

---

65. அரி - குதிரை, திரு - இலட்சுமி, வாலை - வாலிபபருவத்தாள், தருக்கான - செருக்குமிக்க.
67. இந்த ஒல்லையினில் - இப்போது விரைவில்; மனக்கவடம் வஞ்சனை; வாறு - வரவாறு; மசிழ்நன் - (சண்டிதையின) கணவன்.
68. லபிததது - கிடைத்தது.
69. திருத்தி - நிறைவு, யதாஸதானம் - நிலையான இருபபிடம்.
70. உரும் - இடி, உத்தி நிதானங்கள - செறிந்த படைகள்; சரி-வழி; தாரை நேராய் - குதிரையின் நடைக்கு எதிரே.

வானரச்சே னைகள்முழுதும் அரக்கர் யாரும்
மன்னன்அயோத் தித்தளமும் மறுகி ஓடத்
தான்இரண்டு சரம்தொடுத்தான்; ஒருவர் போன
தலம்ஒருவர் அறியாமல் தெறிததிட் டார்கள்;
தான்இதுஅறிந் தேநயந்தே புரவி கொண்டார்
தசரதரா மன்போல்வார் தாமே என்றால்,
ஏனைஇவன் தனக்குஎதிர்ஆர்? வீர வீரர்
எவர்களையும் மதியார்கள் இவர்கள் அய்யா 73

இந்திரன்தன் மகப்புரவி இவன்முன் பற்றி
ஈடழித்த பங்கமுமே இயம்பொ ணாது;
வந்துஅவனும் நயந்துகொண்டு வேள்வி செய்தான்
வனசரவல் லாண்மையுற்ற மக்கள்" என்றான்.
அந்தமொழி தனைக்கேட்டு வில்லி சென்னி
அசைத்துஅவன்ஊர் விலகாமல் அசுவம் போனால்
சிந்தையுடன் பரிபிடித்துக் கட்டு வானேல்
திறச்சரமும் வில்வலியும் தெரிவோம்" என்றான். 74

"என்முன்னோன் முரசுஉயர்த்தோன் தரும மூர்த்தி
இதயம்அருள் சுரந்துஇலங்கும் இறைவ னாகில்
நன்மனதின் படிப்புரவி அவன்ஊர் செல்க;
நரபதியோர் வலியர்எனில் இவுளி கட்ட;
விண்முனிவன் அருளால்யான் விசய னாகில்
வெற்றிகொளக் கடவன்"என விளம்பு மாற்றால்
பொன்பணிபூண் வாசிஅந்தப் புரத்தை நோக்கிப்
போனதுஎன மறையோன்பூ பதிக்குச் சொன்னான். 75

சண்டிகை சாப நிவாரணச் சருக்கம் முற்றும்
ஆகச்சருக்கம் 8க்கு விருத்தம் 1008

---

71 சுசிசுரமாய - மேன்மையாக, வசிசுர - சுவர்ச்சியுடையதும், மாதவ - பெருந்தவமுடையதும் ஆகிய, உபயர் - இருவர்.

72 மசகம் - தொகை, இலங்கை வேந்து - விபீஷணன், விசித்து-கட்டி, வெருக்கொண்டு - அஞ்சி.

74. வன - மிகுதியான; திறசசரம - சரதகிறம் என மாறுக, சுணை செலுததும் திறமை.

75. நரபதியோர - அரசர்கள்; இவுளி - குதிரை, விண்முனிவன்- மேல உலகததேவன், இந்திரன், (எதுதை நோக்கி வின் முனிவன எனப பாடம் கொணடு துரோணரின் எனல சிறபபு) வாசி - குதிரை, புரம் - ஊர், மறையோன் - வைசம்பாயனன், பூபதி - சனமேசயன்.

9. சுதர்மத்துசன் போர்ச் சருக்கம்

(வண்ண விருத்தம்)
(தந்ததன தந்ததன தந்ததனனா)

முந்துநர சிங்கம்என வும்கனகன் அன்றுஅறையும்
முன்பெரிய கம்பமதிலே
வந்துஉடல்பி ளந்தஅரி வெம்கயம்நி னைந்திடும்முன்
வன்திகிரி கொண்டுஉறுவன்மீன்
நந்திடஇ டந்தவன்அ னந்தசய னன்கரியன்
நந்தன்அர விந்தவிழியான்
இந்திரன்அ யன்சிவன்இ ருஞ்சுடர்அ டங்கலும்இ-
றைஞ்சியப ரன்சரணமே. 1

(தானதன தானதன ..... தானதனனா)

தானசென மேசெயன்ம காமுனியை யேபரிவ-
தாகஉப சாரமொழியால்
ஞானமுட னேதுதிசெய் தே"அமிர்த சாரமுடன்
நாவில்இயல் பாய்உரைசெய்தீர்;
ஏனைஅடி யேன்உபய காதுஉணர்வ தாக,உட-
லேபுளக மேஎறியவே,
மானமுது மாநடைசெய்து ஏகியது கூறும்"என
மாதவனு மேஉரைசெய்வான். 2

(தத்ததன தத்ததன - தத்ததனனா)

சத்யகுண வெற்றிதரும் அப்புரவ லற்குஇளைய
சற்குணன்நி னைத்தபடியே
அத்திரம கத்துவமி குத்தகர வெற்றிஅமிர்-
தத்துசன்ந கர்க்குநடுநேர்

---

1. கனகன் - இரணியன், கம்பம் - தூண், கயம் - யானை, கஜேந்திரன்; திகிரி - சக்கரம்; உறு - உற்ற, இங்கு காலைப்பிடித்த; வன்மீன் - முதலை, நந்திட - அழிய, இடந்தவன் - சிதித்து எறிந்தவன், அரவிந்த விழியான் - கமலக்கண்ணன்; பரன் - பரம்பொருள்.

2. மகாமுனி - வைசம்பாயனர், உபய காது - இரு செவிகள்; மான - பெருமை மிக்க, முது - பழமையான, மா - குதிரை.

தத்தியவ யப்புரவி நத்திவிமி தத்தொடுத-
டத்துஉறந டக்கும்அளவே
முத்துநவ ரத்னமுடி பெற்றமனர் சுற்றிவர
மொய்த்தனர்த ளத்திரளுமே. 3

(தந்ததன தந்ததன ... தந்ததனனா)

குண்டலமும் மண்டலமும் அண்டபகி ரண்டவட
குன்றமுடன் எண்கிரிகளும்
எண்டிசைக ளும்செவிடு கொண்டுஉடன்ந டுங்குறஇ-
ரும்பரவை யும்சுவறவே,
மண்டுசது ரங்கஒலி பஞ்சஒலி யும்குமுற
வண்துளபன் அன்பன்மகிழப்
பண்தொனிமி குந்திடுச யந்தனம்ந டந்ததுப-
ரந்துஅரச ரும்பரவவே. 4

(தானதன தந்ததன ... தானதன தந்ததனனா)

காவதமது ஒன்பதுஅள வாகவும்மு ழங்குதொனி
காணமுர சம்குமுறவே
வாவும்அமிர் தன்றுவசன், "யாதுகொல்அ றிந்துஇனிது
வாரும்"என வும்சிலரையே
ஏவுபொழுது ட:ங்குஅவரும் ஏகியும்அ றிந்துஅரச-
னோடுஇனிதுஇ யம்புவர்"ஐயா!
தாவுசது ரங்கதளம் வாரிதிப ரந்தநிகர்
சாருவது நம்புவியைநேர். 5

(தன்னதன தத்ததன .... தன்னதன தத்ததனனா)

மின்னல்மிகு தத்தைஒரு உன்னிஎன வைத்ததுஎன
மின்னுநவ ரத்னகவிகை-
யின்நிழலி னில்பொலிய உன்னதந றைப்புகைகள்
எண்ணில்முகி லைப்பொருவவே

---

3. புரவலன் - தருமன்; அத்திர வெற்றி மசத்துவம் மிகுந்த சுரம் என்க; மனர் - மனவர்

4. வடகுன்றம் - இமயமலை; இரும் பரவை - பெரிய கடல், சுவற- வறற, துளபன் - திருமால், அன்பன் - விசயன், சயந்தனம் - குதிரை.

5 காவதம் - காதம், சதுரங்க -தேர், யானைகுதிரை, காலாள் எனும் நான்கு உறுப்புகளை உடை ய.

பொன்நகரின் வச்சிரனும் இந்நிலைமை பெற்றிலைஓர்
பொன்இவுளி பெற்றபதமே
அன்னபரி யைக்குழுமி வன்னியர்கள் எக்யமுறை
அந்நிலைமை உற்றணுகினார். 6

(தத்ததன தத்ததன ..... தத்ததன தத்ததனனா)

ஒப்புவமை செப்பரும்வ யப்புரவி அப்பரியை
ஒத்ததுஉல கத்தில்இல்"எனச்
செப்பஅமிர் தத்துசன்,"ம கப்புரவி யொக்கும்அது
சித்தம்நல்நி லத்தைவிலகில்
தப்பவிடும்; இப்புவிமி திக்கில்அது பற்றும்இது
சத்தியம்"எ னப்புகலவே
துப்பொடுப டைத்தலைவன் அக்கணம்மி குத்தபடை
சுற்றஎதிர் உற்றணுகினான். 7

(தானான தனனதன ..... தானான தனனதனனா)

சேனாதி பதிஎழுபது ஈராயி ரவரில்ஒரு
சேனாதி பதிமுடுகியே
மானாபி அறமன்விடு மாவோடு விருதுகளும்
மாறாது சூறைகொடுதான்
ஞானாதி பதிதிருமு னேமாவை விடும்அளவில்
நாணாது படமதுகொடே
தானாடி வரசெகம்ள லாம்ஒத அகமகிழ்வு
தானாகி எதுமொழிகுவான் 8

(தந்ததன தனனதன .... தந்ததன தனனதனனா)

சந்த்ரகுல திலகன்விடு வெம்பரியை விரைவினொடு
தந்த்ரிநிந மதுபெரிய(துஆம்)
மந்த்ரமதில் விடு;தளம்அ டங்கலுடன் எயில்வெளியில்
வந்திடுஎன அறைபறைசெய்தே

---

6. தத்தை - (ஒனபான்) கோள்களின் கூட்டத்தை; நறை-நறுமணம், வச்சிரன் - இந்திரன்; பொன இவுளி - அழகிய குதிரை; வன்னியர்கள - தீயைக் கும்பிடும் பாரப்பார்; எக்ய முறை - வேள்விச் சடங்கு.

7. துப்பொடு - அறிவோடு.

8 மானாரி அறமன் - பெருமிதம் மிக்க தருமராசன்.

பிந்தவரு கெனஅரசன் நன்படையி னொடுவெளிஇ-
றங்கிடஉ ரனையும்அளவிலே
அந்தமுடன் முரசறைய வும்பலரும் விரைவினொடுஅ-
ருண்டுஅரசி னிடம்அணுகினார். 9

(கலிவிருத்தம்)

அன்றி ஏவல்க டந்தவர் யான்முதல்
மன்றல் நாரியர் மக்கள்மற் றோரையும்
சென்றுஎண் ணெய்க்கொப் பரையினில் தீய்த்திடும்
என்றுஉத் தாரம்இ யம்பினன் நீதிமான். 10

"நாட்கு நாள்எம்முன் நண்ணவும் சொல்லவும்
கேட்க வேண்டுவது இல்லெனக் கீறுசொற்
றாட்கு முன்கொப் பறையினில் தள்"என
வேட்கை மன்னன் விளம்பும்உத் தாரமே 11

ஆயு தம்கரம் ஏற்றவர் யாவரு -
மேயெ ழுந்துஎயி லுக்குவெ ளிக்குறா-
தாயி ருந்தவர் யாவர்தா மாயினும்
நேய கொப்பறை யில்தளல் நிச்சயம் 12

என்ற சொற்செவி சாரும்முன் சேனைகள்
ஒன்றி லாதுஅனை வோரும்ஒ ருத்தலித்து
அன்று யாரும் அரசனைச் சார்ந்தனர் -
துன்று வீரன் சுதர்மன் தவிரவே. 13

சுக்கி ரீபனில் மிக்குள துட்டர்கள்
நிக்கி ரேக மனுநெறி நீதியான்
சக்கிர காரமது ஒன்றரை நாழிகை
ஒக்கும் நீளம் அகலமோ(ர்) கொப்பறை. 14

---

9. தந்தரி - நூலறிவுடையவன்; நி - நீ எனற்பாலது சுந்தம் நோக்கிக் குறுகியது; மந்தரம் - மந்திரம், அரண்மனை.

10. முதல இரண்டடிகளின் பாடம் தெளிவாக இல்லை. உத்தாரம் - ஆணை

11. வேண்டுவது என்புழி எண்ணும்மை தொக்கது. 13. அன்று - அப்போது.

14. நிக்கிரேகம - நிச்சரேகம், பகைவரை அழித்தல்; சக்கிர காரம் - சக்ராகாரம், வட்டவடிவம்.

நன்ன கர்க்கு நடுஅந்தக் கொப்பரை
தன்னில் எண்முழந் தான்அளவு எண்ணெய்விட்டு,
உன்னு காமரம் ஒன்றுஅதில் ஏற்றியே,
மன்னும் எட்டெட்டு வாயில்உண் டாக்கியே, 15

வாயி லுக்குஇரு வோர்கிங்க ராள்எனும்
மேய தந்திர மந்திர வேதநூல்
ஆயும் வேதியர் அல்லதுஈர் எண்பெயர்
தீய கிங்கிலி யத்திறல் சேவகர் 16

அங்கி காட்டம்இ டும்தொழி லாளர்கள்
பொங்கு நால்எண் பொருவில் வயவர்கள்;
இங்கி தற்கிரு பங்கினில் காட்டமே
தங்கி டாது தடையற ஈகுவோர்; 17

எண்ணெய் குன்றின் இயம்புதல் நால்வர்கள்;
எண்ணெய் கொண்டுவந்து எய்துவர் எண்மர்கள்;
பண்ணும் நூற்றிரு பத்தறு பேர்களாங்கு
அண்ணு வாயினில் கைக்கரு மத்தினோர். 18

ஆணை ஆக்கினை தப்பிந டந்தவர்
வீணது ஆம்குற்ற மேஎவர் செய்கினும்
கோணல் தீரஅக் கொப்பரை எண்ணெயில்
ஆணைப் பெண்ணையும் அக்கணம் தள்ளுவார். 19

இந்த வாறுஎந்த நாளும் நடத்தியே
நிந்தை புன்குறும்பு அதர்(ர்)மம் நீக்கியே
முந்து கோன்முறை யேபிச காமலே
புந்தி யோடுஉலகு ஆள்வ்விறல் பூபதி 20

ஏனை ஏழ்பத் திரண்டு சகத்திரர்
சேனை காவல ரும்,திரள் சேனையும்,

---

15. காமரம் - அடுப்பு. 16. கிங்கராள் - பணியாளர்.
17. அங்கி - தீ, காட்டம் - விறகு.
19. ஆணை ஆக்கினை - ஒரு பொருட் பன்மொழி. ஆணை என்புழி எண்ணும்மை தொக்கது.
20. குறும்பு - சிறுமை.

தானை யாவும்மன் தன்னிடம் சார்ந்தனர்;
சோனை வில்லி சுரதனும் கிட்டவே, 21

"நின்னை அன்றிநின் சேனை நினக்கதாய்
உன்னி ஏகல் ஒழிந்து நடுங்கினார்;
மன்னன் ஆக்கினை ஏதும் வருவதன்
முன்ன மும்பும் சுதர்ம முகுந்தனே. 22

நேரம் தாமத மாக்குதல் நீதியோ?
ஒர வாரம்உண் டோஉந்தன் தந்தைபால்?
வாரும் வாரும்ஐ யா"என் மந்திரிமார்
சாரம் சொல்லச் சுதர்மனும் சாற்றுவான் - 23

"ஏக நாயகன் பூசை இயற்றியே
போக லாம்கணப் போதில்"என்று உரைத்து,
ஆகம் ஓர்மையுற்று அரனை முன்னினான்;
மாக மீது ரவிஉச்சம் ஆனதே. 24

ஆடை ஆபர ணம்தரித்து ஆயுதம்
கோடி கோடிகோ தண்டமும் தூணியும்
....அணிந் தேகுண்ட லங்களும்
மாடை ரத்தின மகுடமும் சூடியே 25

வெற்றி யானஉ ருத்திர வேஷமாய்க்
கொற்ற வெஞ்சமர்க் கோலம் புரிந்திட,
மற்ற மந்திரி தந்திரி மார்களும்
சுற்றி வந்து துதித்துஎதிர் கூறுவார் 26

"பறையின் ஒசை செவிப்படும் அக்கணம்
உறுதி யாய்உத யத்தினில் சேர்ந்தனர்;
இறுதி சாமம் இரண்டுபின் னிட்டபின்
அறுதி ஆக்கினை யாதோ?எம் ஐயனே! 27

---

21. சோனை வில்லி - மழைபோல அமபுகளை எய்யும் வில்லாற்றல் மிக்க.
23. ஒரவாரம் - நடுநிலைஇன்மை. ஒரவஞ்சனை; சாரம்- பயன்மிக்கமொழி.
24. மாகம் - வானம், ரவி - சூரியன்; உச்சம் - உச்சி; நடுப்பகல் ஆயிற்று என்றவாறு.
25. கோதண்டம் - வில்; மாடை - பொன்.
27. சாமம் - மூன்றுமணிநேரம் கொண்ட கால அளவு. அறுதி- முடிவான.

இன்னம் தாமத மேஅறச் சீக்கிரம்
மன்னர் மன்னிடம் வம்மின்" எனச்சொல
நன்னயத் தோடு"இதோ நண்ணு றேன்"எனத்
தன்ன கத்தில் சுதன்மனும் சார்ந்தனன். 28

பூத்த நாள்ஒரு மூன்றையும் போக்கியே
தீர்த்த மாடிச் சிறப்பித்து மெய்வழி
பார்த்தி ருந்திடும் பாரிபர்த் தாவையே
தோத்திரம் செய்து தோயும்அ பேட்சையால் 29

அங்கம் மெய்ப்புள கங்கள் அரும்பவே,
கொங்கைக் கோடு மருமம் குழைக்கவே,
செங்கை கொண்டுஅவள் சேர்த்து முயங்கலால்
மங்கை மையலைப் பார்த்து மறுக்கமாய், 30

"இவள்தன் ஆசை மறுத்துமீண்டு எய்துமுன்
குவளைக் கண்ணி கொளும்கொடு மையலால்
துவளும் நுண்ணிடைத் தோகை இறந்திடில்
பவள வாய்மின் பழிவந்து நேருமே. 31

தார மோகமும் தாபமும் சோபமும்
பாரம் இங்குஇது வோபழி பாதகம்
வீர மன்னவன் ஆணையை மீறினால்
கோர மான கொடிது கொடிதுஅதே. 32

தந்தை தாய்சுதன் தாரம்ஒன் னார்உற-
வுந்தொ டர்ந்தவர் உள்ளவர் இல்லவர்
எந்த வர்ணர்என் றாலும்ஓர் எட்பகிர்
நிந்த மேநினை யாநெறி நீதியான் 33

ஆத லால்அவன் ஆணையை மீறிய
ஏதம் நம்தலை ஏறின் சரதமாய்க்
காதல் சோபிதக் காரிகை மாயும்;இப்
பாத கம்பழி கொள்வதும் பண்புஅல 34

---

29. பூத்தநாள் - மாதவிடாய், தீர்த்தமாடி. - குளித்து; மெய் சிறப்பித்து - உடலை அலங்கரித்துக்கொண்டு; பாரி - மனைவி; பர்த்தா - கணவன்; தோயும் அபேட்சை - புணர்ச்சி விருப்பம்.

30. கோடு - கொம்பு; ருமம் - மார்பு; மறுக்கம்-மனக்குழப்பம்.

31. மின்பழி - பெண்பாவம்.

33. நிந்தம - சொந்தம.

மன்னன் ஆக்கினைக் குள்உயிர் மாயினும்
மின்னின் ஆற்றல் வெறுக்கிலன்; என்னவே
இன்னம் சாமம் இரண்டு கழித்துஇவள்
தன்ன பேட்சை தவிர்க்குதல் நன்று"என 35

பேரு யிர்ப்புறும் பெண்துயர் கண்டுஅவள்
ஆரு யிர்க்குஇரங் கும்தறு வாயில்மன்
ஏரு யிர்க்குஇரங் கும்தந் திரிகள்தம்
கூறு உரைப்படி மாதர்கள் கூறுவார். 36

தாதி மார்கள் அடிக்கடி சாற்றவும்,
"ஈதுஇ தோவந்திட் டேன்வந்திட் டேன்"எனப்
போது போம்அள வும்புகன் றிட்டுஅவள்
காதல் தீரக் கலவியின் மூண்டனன். 37

அனங்கன் நேர்அ பிலாஷையும் தீர்த்துஅவள்
மனம்சந் தோஷம தாகத் திருத்திசெய்து
அனந்த ஆச்சரி யத்துடன் அங்குஅவள்
தனம்,து றந்து தளங்களை நாடியே, 38

வந்த னன்கொலு மண்டப சாலையில்
சந்த்ர சோதிமத் தாப்பு பிலாலிகள்
பந்தம் எங்கணும் பரந்துஇ லங்கவே
இந்திரன் நேர்இர தத்தில் ஏறினான். 39

வீர கர்ச்சனை செய்துஇகல் வீரியன்
தேரி னைக்கதி ரோடு செலுத்திடப்
பேரி கைத்திரள் பேரொலி விம்மவே,
சூர வீரர்கள் சூழ்ந்து நெருங்கவே, 40

ஓதை மிஞ்சிய தோர்பஞ்ச வாச்சிய-
மேத ழங்கிட, மின்கள் நடஞ்செய,

---

36. பேருயிர்ப்பு - பெருமூசுக, ஏர உயிர் - இனிமையான உயிர

38. அனங்கன் தேர் - மன்மதனைப போல, தளங்கள் - சேனை

39. பிலாலிகள் - ஒருவகை வாண்லிசேஷம் போலும இதே சருக்கம் 93ஆம் பாடலிலும் இச்சொல் ஆளப்பட்டிருக்கிறது

நாதன் மைந்தன் நாராயண மூர்த்திதன்
பாத பங்கயம் சிந்தையில் பற்றியே 41

அரிஅ ரன்றனைச் சிந்தனை யாய்நினைந்து
இரத மேவிரைந்து ஏக நடத்தியே
துரித மாகச் சுதர்மனும் செல்லும்நேர்
அரசன் செய்கையை அடுத்துக் கூறுவாம். 42

பரவு சேனைப் பதிகளை நோக்கியே
அரசர் கோன்அமிர் தத்துசன் ஓதுவான்,
"விரவு பாடியில் மேவினர் அன்றியே
வருகி லார்எவர்?" என்று வழங்கினான். 43

"சமத்த மான தளங்களும் வந்தனர்;
உமக்கு மூத்த மகன்உயர் சேனையும்
இமைப்பில் இங்குவந்து எய்துவர்" என்னவே
அமர்த்தி யாக அனைவரும் ஓதினர். 44

"காலை யேவரச் சொல்லிய கட்டளை
மாலை நேரமும் வந்திலன் என்கொலோ?
சால வீரியன் ஆன மதாந்தமோ?
பால னால்முகம் பார்ப்பன்என்று எண்ணியோ? 45

சத்ய வாக்கினைத் தப்பியது என்?"என
"மத்தி யானம்மட் டானது பூசைதான்;
சுத்தி ....
வித்தை யால்மன மேதளர்ந் துற்றனன்; 46

இந்த நாழிகை யில்இவண் எய்துவன்;
வந்த னன்எயில் வாயில் கடந்து"என,
அந்த நேர்அமிர் தத்துசன் கண்களால்
சிந்து கின்றனன் செந்தழல் தீப்பொறி. 47

---

41. தழங்கிட - ஒலிக்க.

43 பாடி - சேனை தங்குமிடம்.

44. சமத்தமான - அனைத்தும்; மகன் என்பதுமி எண்ணும்மை விரிக்க; அமர்த்தியாக - பூடகமாக.

45. மதாந்தம் - செருக்கினால் விளைந்த அறியாமை, பாலனால்- மகன் என்பதால; முகம் பார்ப்பன் - கண்ணோட்டம செய்வேன.

தீக்கொ ழுந்துஇரு திட்டிகள் நீட்ட",நம்
ஆக்கி னைக்குஅடங் காதுஅவள் ஒதவேள்
பேய்க்கு இணங்கிய பித்தன்இங்கு எய்தல்ஏன்?
நாய்க்குத் தண்டனை நாட்டும்"என்று ஓதியே. 48

"பாத கன்முகம் பார்த்திலன்; தந்தைசொல்
பேத முற்றிடப் பிள்ளையும் செய்யுமோ?
நீதி மக்கள் நினைவை அழிக்கும்இப்
போத முற்றுள புத்திரன் சத்ருவே. 49

நந்த னோஅவன்? நான்ஐய னோ?அவன்
தந்தை ஆணையைத் தப்பிய போதிலே
பந்த மான பகையில் பகைஅவன்
வெந்தி டக்கொப் பரையினில் வீழ்த்து"என 50

ஆயி ரத்துஇரு நூறுவெங் கோபியர்
தாயிடத் தும்கை தாங்கல்இ லார்களைப்
"போய்இ ரக்கம்இல் லாதுபுன் மைப்பட-
வேஇ றுக்கி விசித்துமெய் நாணியால் 51

அடித்து இழுத்துஉதைத்து அங்குஅவன் றன்னையே
பிடித்துக் கொப்பரை பெய்திடும் வரைநீர்
குடித்தி டேன்;ஒரு கால்கொடு நிற்கிறேன்;
நடக்க" என்று நரபதி கூறவே 52

கால தூதர் கடுக்கும் கொடியர்கள்;
சாலக் கிண்கிணி தண்டை சதங்கைகள்
மேலு மேமுழந் தாளில் விசித்துளோர்;
கோல பக்கியிற் குறுங் கொன்றையோர்; 53

கோர மீசைக் கொடும்கனல் ஓரியோர்;
பார மானகுண் டந்தடி, பாசமும்

---

48. திட்டி - கண்; அவள் - சுதர்மனின் மனைவி; வேள்பேய் - காம மாகிய பேய்த்தனம். இனித்தன் மருமகளையே காமப்பேய் என்றான் எனினுமாம்.
49. போதம் உற்றுள - புத்திபடைத்த.
50. நந்தன் - மகன்.
51. கோபியர் - சினமுடையவர்கள்; மெய் நாணியால் விசித்து என இயையும்.
52. நடக்க - ஆணை நிறைவேறட்டும்; நரபதி - அம்ருததுஜன்.
53. கடுக்கும் - போன்ற.

வாரு மித்திகை பற்றிய வன்கையோர்;
காரி குண்டர் கருமலை மேனியோர்; 54

தெரிசித் தோர்குடல் ஈரலும் தீய்ந்துமெய்
கருகிப் போகும்வன் கணர்கள் தம்குடல்
உருகிப் போகத் திடுதிடென்று ஓடினர்-
வெருவிப் பார்த்தவர் மெய்கள் நடுங்கவே. 55

வீர கிங்கிலி யர்விரைந்து ஓடியே,
தேரும் நீயும் நில்"எனத் திகைத்தனன்;
"நேர மன்னன் நினைக்கொப் பரையிலே
ஈரம் இன்றியே வீழ்த்த விளம்பினான்" 56

என்று சத்தம் இடியெனக் கூறவே,
"நன்றுஇது" என்றுசு தர்மன் நவின்றனன்;
கன்றி மற்றவர் கைமெய் நடுங்கினார்;
பின்றை தண்டனைப் பேர்கள் இயம்புவார் - 57

"நற்கு ணத்தொடு தேர்விட்டு நற்புவி-
யிற்கு தித்திடு இழுப்பதன் முன்"என,
விற்கு வல்லன் விரைவில் குதித்தனன்;
வர்க்க வேல்கவ சம்முடி மாற்றினார் 58

"எந்தை எவ்விதம் ஓதினர் அவ்விதம்
சிந்தை யோடுசெய் வீர்;குறை செய்திடில்
பிந்த உங்களின் மேல்பிழை ஆக்கினை
வந்திடும்" என்ன மற்றவர் கூறுவார் - 59

"எய்தி னோர்கள் அடங்க இறக்கினும்
நொய்தும் உந்தனை நோவினை செய்திடோம்;
வெய்து மன்னன் ஒருபத மேல்நிலை
செய்திருப் பதனால் சினந்தோம்" என்றார் 60

---

54 ஒரி - (ஆடவர்) உரோமம்; காரி - சனியனைப போன்ற.

56. கிங்கிலியர் நில் எனச் சுதாமன் திகைத்தனன் என்க. கிங்கிலியர்- குற்றேவல் செய்வோர்.

57 கனறி - மனம வருந்தி, பின்றை - பிறகு, தண்டனைப் போகள்- தண்டனையை நிறைவேற்றுவோர்.

58. வேல்வர்க்கம என மாறுக, படைகுலை வகைகள.

60 உந்தனை நோ வினை நொய்தும செய்திடோம் என இயையும் நோ வினை - வருத்தும் செயல, வினைததொகை. நொயதும -சற்றும்.

"ஆத லால்அர சன்சொன வாய்மையில்
பேதம் ஓர்அணு வும்பிச காதுசெய்து
ஏதம் அற்றிட எய்துகொண்டு எய்தும்;நும்
தாதை மன்குரு தாயின்மெய் ஆணையே" 61

என்று உரைத்திட வேமுசுறு ஒப்பதாய்
வென்றி வீரனை மெய்யிற் புடைத்துஉதைத்து
ஒன்ற வேகை உறுக்கி இறுக்கியே
துன்று பாசம் துணுக்க விசித்தனர்; 62

மெய்சி வக்க வெருவைகள் ஓடவே
கைசி வக்கக் கசைகொடு மூட்டினர்;
வைசி றந்த வடிக்கணை வீரனைப்
பைசு மந்திடு பார்மிசை வீழ்த்தனர்; 63

அடிகள் குத்து அறையுதை தள்ளுதல்
கொடுந டத்திஅக் கொப்பரைக் கிங்கரா-
ளிடம்அ ளித்திட வே,சுதர் மத்துசன்
படும்இ டுக்கணைப் பார்த்துஅந்த வேதியர் 64

"எந்தை யே!உன் விதிவச மோ"என,
வந்த கிங்கி லியர்பதில் ஓதுவார்-
"கந்த மன்னன்ஓர் காலினில் நிற்பதால்
இந்தநா ழிகையில் தள்ளும்" என்னவே. 65

ஈது கண்டுசு தர்மன் இயம்புவான் -
"வேத னைப்பட வீக்கிய நாணினை-
யேத விழ்த்திடில், ஏணியில் ஏறி,நா-
னேத னித்துளரி எண்ணெயில் வீழ்குவேன். 66

அஞ்சி ஏகிடில் எப்படி யோஎன
நெஞ்சுஎண் ணாமல் விடுத்திடும் நீங்கள்தான்;
கிஞ்சம் நான்அப கீர்த்தி நினைப்பனேல்
பஞ்சை கிங்கி லியர்கைப் படுவனோ? 67

---

62. முசுறு - ஓர் வகை எறும்பு
63. வெருவை - வியாவை, வை - கூர்மை, பை - (ஆதிசேடனின்) படம்.
67 கிஞ்சம - கொஞ்சம, பஞ்சை - வலிமையற்ற

சரத்தி னால்முப் புவனமும் தான்அழல்
பரப்பும் நான்மனன் சொற்குப் பயந்தனோ?
கருத்தில் பாசம்மிக்கு ஆணைக்கு உடன்பட்டேன்;
பெருக்க வீக்கும் பிணிவிடும்;" என்றனன். 68

(கலித்துறை)

இந்த வாறுஅவண் சுதர்மன் ஈதுஇயம் பும்வேளை
அந்த ஊர்உறும் ஆண்பெண்ணி னோர்அடங் கலுமே
சிந்தை யும்குடல் ஈரலும் தீய்ந்து,மெய் கருகி
வெந்த போலவே வெதும்பஉள் நடுங்கினர் வியர்ப்ப 69

பெருகு மாநகர் பெண்களும் ஆண்களும் பிதற்றி
உருகு வார்;கணீர் ஊற்றுவார் ஊற்றினை நேராய்;
கருகு வார்முகம்; கைமெயும் நடுங்குவார்; கனிந்து
.... ஹரிஹரி அரனேயென்று அரற்றிநின்று உழல்வார். 70

"உயிர்எ லாம்புரந் துற்றிடும் கோமகன் தனக்கா
மயிருக்கு ஓர்உயிர் மற்றுளோம் வழங்குவோம் (மகிழ்ந்தே);
பயிரின் வேலிஅ னையவர் " பக்கலில் போய்அச்
செயிரை நீக்கியே திருத்துதல் இலை"எனத் திகைப்பார். 71

இந்த ஊரினில் இருப்பவர் யாவரு மேதான்
வெந்தி டக்கனற் கொப்பரை தன்னில்வீழ்ந் திடுவோம்
அந்தக் கோமகன் ஆருயிர் காப்பதற் காக
உந்து இராசன்முன் உரைக்கவல் ஆரியர் உற்றே 72

---

71. பயிரின் வேலி அனையவர் - அரச குடும்பதைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்புள்ள அமைச்சர், தளபதிகள் முதலியோர். பக்கலில் போய் - அரசனை அணுகி. செயிர - கோபம்.

72. இப்பாடலின் பின்னிரண்டு அடிகளும், அடுத்த பாடலின் முன்னிரண்டு அடிகளும் ஏடெழுதுமபோது விடுபட்டன போலும். எதுதை ஒற்றுமையால் நேர்ந்த மயக்கமாகலாம்.

வால சூரியன் மயங்கிய பிரபைமெய் உடையாய்!
ஆல காலமது உணும்கயல் போலஆ கினையோ?
கோல மேனியைக் கொப்பரைத் தீக்கென வோதான்
சால நீவளர்த் தாய்?தய வாள!சற் குணனே! 74

சாக ரத்தினில் சதமடங் காகவே ஒலிக-
ளேக றங்கியே இரைத்திட மானிடர் எல்லாம்,
மாகம் எங்கணும் பரந்துஉயர் வானவர் தாமும்
ஆகம் மங்கியும் இரங்கினர் அமரர்யா வருமே. 75

மண்இ ரங்கமண் ணுள்ளவர் இனிதுஇரங் கிட,மேல்
விண்இ ரங்க,விண் ணோர்களும் மிகவிரங் கிடவே,
கண்இ ரங்கியே யாவரும் கலங்கும்அக் காலை
எண்ணெய்க் கொப்பரைக் காவலர் மனதில்எண் ணினரே- 76

"எரிப்பன் முப்புவ னங்கள்ஓர் ஏஅத னாலே;
உரத்த மன்னன்சொற்கு ஒழுங்கியே ஒடுங்கினன்; இவன்றன்
கருத்து மாறுகொண் டால்,மச கத்தைநே ராகத்
திரித்துஇ ரித்திடு வான்திரள் சேனையா வையுமே. 77

ஈறு நம்உயிர்க்கு எய்தினும் நன்றுஇவன் உடலில்
பீற வீக்கிய பிணியினை மாற்றிடு வோம்;நாம்
மாறு சொல்வது மாண்புஅறன் அல்"என மதித்துத்
தேறி மன்னவன் சேயிடம் வந்துநின்று இசைப்பார் 78

"சொன்ன வாறுஅது மெய்"என சுதர்மன்றன் மெய்கை
பின்னி வீக்கும்அப் பிணிப்பினை மாற்றினர் பெட்பாய்;
பன்னும் நூற்றிரு பத்துடன் எண்படி மிதித்துஅங்கு
உன்னி ஏத்தியே உயர்ந்துறக் குதித்தனன் உற்றே. 79

---

74. மெய்ப்பிரபை என மாறுக, உடல்ஒளி,

75. சாகரம் - கடல்; சத மடங்கு - நூறு மடங்கு; மாகம் - ஆகாயம், ஆகம் - உடல.

77. ஏ - அமபு, மன்னன் உரத்த சொற்கு என இயையும, மசகம் கொசு, இரித்திடுவான் - அழித்திடுவான்.

79. பிணி - கட்டு;

(கலிவிருத்தம்)

சாக ரத்தின் மிசைசரக் கோட்டைசெய்-
தேகி ரீடி இசைத்தஅந் நாளினில்
வாகை ....குதிக் கின்றபோல்
ஓகை யோடு குதித்தனட் உத்தமன். 80

கண்ணல் செய்கரி முன்வரும் காசைவீ
வண்ணன் றன்னை மனதில் துதித்துளழுந்து
எண்ணெய்க் கொப்பரை யிற்குள் விழுந்திடத்
தண்ணம் தாமரைப் பொய்கையது ஆனதே. 81

திட்டெ னக்குதித் திட்டஅ திர்ச்சியால்
எட்ட யிலமி றைந்தது சூழ்வர;
கட்டை இட்டவர் கைக்கரு மத்தர்மெய்
பட்டு வெந்தது புட்டுப் பழத்தைநேர். 82

வண்ண லட்சம் வளைந்துள பேர்கள்மெய்
எண்ணெய் பட்டுஉடல் எங்கும்புண் ஆகினார்;
தண்ணஞ் சந்தனத் தண்பனி நீர்த்தடம்
பண்ணையாய்க் கொப்பரை எண்ணெய் போன்றதே. 83

சாந்த நீர்க்கயல் தானெனத் தாவியே
நீந்தி யேவிளை யாடினன் நீதிமான்;
நேர்(ர்)ந்த தெங்குஇள நீரொடு காயையும்
காந்தி காணக் கலந்துற வீசினார்; 84

சடச்ச டென்றசத் தம்செவி ஆர்த்திட
வெடித்துள ழும்பின; வேந்தன்முன் னாகவே
திடத்தின் இங்குஉள சேதிகள் ஓதப்பல்
கடித்தஅ டர்ந்து கடுகடுத்து ஓதுவான்- 85

---

80. கிரீடி - அருசுனன்

81. கணணல்செய - தியானிக்கின்ற, சரி - சசேந்திரன்; காசைவீ- காயாம்பூ; தண்அம் - குளிர்ச்சியும் அழகும் பொருந்திய.

82. எள்தயிலம - எள்நெய், கைக்குமத்தர் - தொழிலாளிகள்.

83. பண்ணையாய - விளையாட்டாக; கொப்பரை எண்ணெய்நீர்த்தடம் போன்றதே என இயையும்

84. நேர்ந்த - நேர்த்தியான, காந்தி - (எண்ணெயின்) வெபபநிலை.

"ஆர்த்தி டும்தயி லத்தில்விட் டீர்கள்;மா
நேர்த்தி காண்!நெருப் பும்முகம் பார்க்குமோ?"
"கூற்றை மூழ்த்துள கொப்பரை எண்ணெயில்
வீற்றி ருப்பது மெய்என்பது எண்ணிலீர்" 86

வெந்த பேர்கள் வெடித்துள காய்களும்
முந்த ராசன் முகத்தின் காட்டி"உன்
நந்தன் கொப்பரை நாற்றிசை எங்குமே
நிந்தன் கீர்த்தியின் நீந்தினன் இன்னமே; 87

கால காலம்எல் லாம்கனல் மூட்டினும்
பாலன் மெய்யில் பழுதுவ ராது"எனச்
சால யாவரும் தான்நிசம் கூறவே,
கோல மேனி புளகித்துக் கூறுவான். 89

தானை யாதிப ருக்குத் தலைவனை
மான மன்னன் வரவிளித்து ஒதுவான்-
"ஞான மைந்தனை நாடி அழைத்துநீர்த்
தானம் செய்து வருகெனச் சாற்றினான். 90

அந்த வாறுஅவன் கொப்பரை நீக்கியே,
உந்தி நீரில் உடல்முழுக் காட்டினான்;
கந்த சந்தம் களபம் திமிர்ந்துமெய்ப்
பொந்தி ஆடை புனைந்துஅணி பூண்டபின் 91

மகர குண்டலம் வச்சிர கவசமும்
சிகர கோபுர மோலியும் சேர்த்தபின்

---

87 இப்பாடலின் பின்னிரண்டு அடிகளும் அடுத்து இருக்க வேண்டிய பாடலின் முன்னிரண்டு அடிகளும் படி எடுக்கும் போது விடுபட்டன போலும்.

88. நந்தன் - மகன், கீர்த்தியின் - புகழைப்போல.

90. தானம - குளியல.

91. உந்தி - ஆறு; பொந்தி - உடல்

சகல ஆயுத வர்க்கவி தம்கொடு
இகல்ச யிந்தவம் மீதினில் ஏறினான். 92

விருது வாக்கிய மேமு ழங்கிட,
மருவுநன் பஞ்ச வாச்சியம் ஆர்த்திட,
எரிமத் தாப்புபி லாலிவி ளங்கவே,
கருது பற்பல கட்டியம் கூறவே, 93

பரத நாட்டியம் பாவையர் ஆடவே,
அரசர் யாரும் அதிசயித் தேவர,
பொருவில் சேனைப் புணரிகள் சூழவே,
அரணின் வாயில் அகன்றனன் ஏழுமே. 94

புரிசை நீங்கிப் புரவலன் பாசறை
அருக தாகி அவனியில் லாகியே,
தருமத் தந்தை தனைவல மாகியே,
பரவி 'னான்செழும் பங்கயப் பாதமே. 95

பாத மீதில் படிந்துஎழுந்து அன்புறும்
காதல் மைந்தனும் கைகட்டி வாய்புதைத்து
ஏதம் அற்றுஅவண் நிற்க, இருங்கையால்
ஆத ரித்துஅணைத்து, அன்புஅமிர் தத்துசன் 96

உச்சி மோந்துஉடல் முத்தியும் திட்டியின்
எச்சில் மாற்றி"என் கண்மணி மைந்தனே!
பச்சை மாயற்குப் பண்ணிய பூசைநீ
நிச்ச யத்துடன் இன்றுஅறிந் தேனியான். 97

சித்தம், மாயன் சரணைத்தி யானித்த
பத்தி, சித்தி,என் சொற்குப் பயந்துநீ
நித்திய நெறியில் நேரில்ந டந்த
சத்திய வாய்மையும் தான்அறிந் தேன்ஐயா! 98

---

93. மோலி - கிரீடம; சயிந்தவம் - குதிரை.

94. புணரி - கடல்; ஏழுவாயில்களும் அகனறனன் என்க.

95. புரிசை - மதில், அவனி - நிலம், லாகி - (குதிரையிலிருந்து)குதித்து

96. ஏதம் அற்று - குற்றம் இல்லாமல. அதாவது தந்தையின மீது கினமோ வெறுப்போ கொள்ளாமல.

சத்த லோகமும் தான்துதிக் கின்றசத்
புத்திரன் நீ;உனைப் பெற்றதே போதும்;யான்
சித்தமாய் முத்தி மோட்சமும் தீர்க்கமாய்
அத்தம்நான் பெற்றதுக் கும்சந் தேகமோ? 99

சகல பாக்கியச் சம்பனன் ஆகினேன்;
நிகரி லாய்!நினைப் பெற்றுள நீதியால்
புகழ்வ ளர்ந்திடப் புத்திவ ளர்ந்திட
இகப ரங்களும் பெற்றனன்" என்றபின் 100

அலகில் பற்பல தீர்த்தமும் கொண்டுவந்து,
இலகு மைந்தனை யேமுழுக் காட்டியே,
பலக லன்கள் பணிமணி மோலியும்
மலிக திர்க்கரம் மல்கவும் கட்டியே, 101

வேந்தர்யா வர்க்கும் மேலர சின்பதம்
ஏந்த .....சாம் ராச்சியப் பட்டமும்
மோந்த ளித்தனன் முத்திரை வீகமும்;
சேர்ந்துஎல் லோருமே செங்கை குவித்தனர். 102

அகில லோகமும் ஆணையி னுட்படச்
சகல வாழ்வும் தனயனுக்கு ஈந்துபின்
புகலுவாஞ். "உந்தன் போர்வலி யாலும்நான்
உகம்இ ரண்டுஉலகு ஆண்டதுஉன் சீர்த்தியால்; 103

ஈடு உனக்குஇணை இல்லை;என் றாலும்வன்
பீடு வில்விச யப்பெரும் பேரினான்
சாடு போர்க்குநீ தான்அன்றி நான்அலால்
ஊடு சிந்தைஅ றிந்துஊட வேண்டுமே. 104

என்னைப் போல்இரு; யான்எதிர்ந் தேவரும்
மன்னைத் தானும் மலைந்து,உறு வாகைஓர்

---

99. சத்தலோகம் - ஏழுஉலகம், சத்புத்திரன் - நல்ல மைந்தன், நான் அத்தம் பெற்றது - யான் என் கைகளிலேயே அடைந்து விட்டது, கைமேல பெற்றது என்றபடி.

100. சம்பனன் - நிறைவுள்ளவன்;

102. வீகம் - மோதிரம்

கன்னற் போதில் களத்துஅணிந்து எய்துவேன்.''
என்னத் தாதைக்கு இறைஞ்சி இயம்புவான் 105

''எந்தை யேஇவண் தான்ஒரு பாரமாய்த்
தந்தை ஊடத் தனையன் இருப்பதோ?
முந்து தேவரும் மூவரும் யாவரும்
வந்துஎன் போர்க்கு வகைசொல வல்லரோ? 106

எந்த னால்இய லாதுஎனில், தேவரீர்
அந்த வீரன்முன் ஆக்ரமம் செய்யலாம்;
தந்தை யேவிடை தான்அருள்'' கென்றலும்,
விந்தை மொய்ம்பனுக் கேவிடை ஈந்தனன். 107

அன்று மைந்தன்உத் தாரமும் வாங்கியே,
மன்றல் தும்பை மருமம் தனிற்புனைந்து
ஒன்று சேனை உயர்பத்ம வ்யூகமாய்
வென்றி வீரன் விதித்தனன் வில்வலான். 108

ஆயிரத்து எட்டுஇதழ் செய்துஇ தழ்க்குளல்லாம்
தேய மன்னர் பொருநரைச் சேனையை-
யேஉ ரம்பெற எங்கும் நிறுத்தியே
பாயும் நள்ளில் பரிமன்னை வைத்தனன். 109

அனிகம் மூன்றுஅக் ரோணி இதழ்க்குஇதழ்
உனத மாக உரத்து நிறுத்தியே
முனையும் யூக முகத்தினில் தானும்பின்
அனுசன் பேரணி யாகநி றுத்தியே, 110

யூக ரட்சணை செய்ய உபையர்கள்
வாகை வாகினி மன்னர்க்கு இயம்பியே,
நாகர் உம்பர் நடுங்க ரணப்படை-
யேக றங்க இரதத்தில் நின்றனன். 111

---

105 கன்னல் - நாழிகை, களம் - இரட்டுறமொழிதலாகப் போர்க்களம், கழுத்து ஆகிய இரண்டையும் கொள்க.
107. ஆக்ரமம் - படையெடுப்பு.
108. உத்தாரம் - ஆணை; மருமம - மாபு;
109. நள்ளில் - நடுவில், நள்ளில பாயும் பரிமன்னை என இயையும்
110. அனிகம் - படை.
111 யூகரட்சணை - (பத்ம) வியூகத்தைக் காப்பாற்றுதல்; உபையர் - இருவர்; வாகை வாகினி - வெற்றிப்படை.

(எழுசீர் ஆசிரிய விருத்தம்)

முனைமு கத்துஅணி நிறுத்தி யேஅமர்
முயற்சி யாய்அவர் இருந்தனர்.
நனிவி றல்புரவி பின்பு வந்தவர்
நடுங்கி ஓடிவிலி நன்முகம்
தனைய டுத்துஎதிர் நின்று, "வாழிதனு
ராச னே!"என வணங்கியே,
"வினைமி குத்தஅ மிர்தத் துசன்புவி
மிதித்த தேபரி பிடித்தனர். 112

பரிபி டித்துஎமைஅ டித்து வெற்றிவிரு-
தைப்ப ரித்தனர்ஒன் னார்"எனச்
சுருதி யில்புகுமுன் விழிகள் அக்கினிகள்
சொரித ரப்பலைஉ றுக்கியே
"புரவி பற்றினது நன்று நன்று!அரசு,
புத்ரன் ஆனஇரு வோரையும்
சிரசுஅ றுத்திடுவன்; இல்லை யேல்விசய
னோ?பி டித்தஇது சிலைகொலோ?" 113

என்று வஞ்சினம்இ யம்பி னான்;அமரர்
இந்தி ரன்பிரமன் இரசதக்
குன்று உறைந்தவனும் "இன்று வந்ததுகு-
றித்த வாறு"எனம கிழ்ச்சியாய்
அன்றி ருந்தனர்;இ னன்பு குந்தனன்நல்
அஸ்த வெங்கிரியி டத்திலே;
வென்றி தங்குவிச யன்த ளங்களொடு
மிஞ்சு பாளையம்இ றங்கினான். 114

முரச வர்க்கமொடு பஞ்ச வாச்சியம்மு-
ழங்க எண்டிசைந டுங்கவே,
அரச வர்க்கமொடு உறைந்த னன்பொழுதுஐ
ஆறுஅ கன்றபினர் ஆதவன்

---

112. முனை - போர்க்களம், அணி - படை; விலி - வில்லி, அருச்சுனன்; மிதித்ததே - மிதித்த உடனே.

113. ஒன்னார் - பகைவர், சுருதி - செவி, சிலை - வில.

114. இரசதக்குன்று உறைந்தவன் - வெள்ளிமலையாகிய கயிலாயத்தில் வாழும் சிவபெருமான்; இனன் - சூரியன்

கரம்அ னைத்தையும் விரித்துள ழுந்தநிலை
கண்டு, கைதொழுது, கருதலார்
வருவர் இக்கணம்ள னத்தி ரண்டுவிழி
வைத்தி ருந்தனர்த டத்தைநேர். 115

அன்று மேபகல்ஐ ஆறு நாழிகையும்
அரிகள் போரில்அணு காததால்
வென்றி மாலிகைவி சால மார்பகனும்
வீரர் சேனைகளு மேதரித்து-
ஒன்றுஇ ராப்பகலை யும்தொ லைத்துஉதய-
முற்ற னன்பரிதி பற்றலார்த்
துன்று யூகமுறை செய்ய மற்றிவர்க-
ளும்தொ குத்துஅணிசெய் கின்றனர். 116

சேனை அறுபது அக்கு ரோணியொடு
சென்று அத்திரயூ கம்செய்தே
தானொன் னார்கள்அணி நிற்றல் கண்டு,உரசு
தன்னொ டேசிரசு தனைஅசைத்து
ஏனை வேகமொடு நெறுநெ றென்றுஎயிறு
தமைக்க டித்துமிக உக்ரமாய்த்
தானும் வில்தொனிசெய்து அக்கி னிப்பொறிகள்
சரிய அக்கியைவி ழித்தனன் 117

"ஏன்ஐ யாஇவனி லேப ராக்கிரமம்?
இவன்எம் மாத்திரம்?இ மைப்பிலே
தான்நொ டிக்குள்அணி கெடநொ றுக்கி,நதி
தான்ள னக்குருதி ஆக்கியே,
சேனை யாதிபதி சுதர்ம னும்தறிகெ-
டப்பி ளந்திடுவன்" என்றும்முன்
மான வில்லிவிட கீத னன்பரவி,
வாயு ஒத்துஅரிந டத்தியே, 118

---

115. பொழுது ஐ ஆறு - (இரவுக்குரிய) முப்பது நாழிகை, சருதலார் - பகைவர்
116. அரிகள் - பகைவர், தரித்து - தங்கி இருந்து, அணிசெய்தல் - படைகளை வகுத்தல்.
117. உரசு - மாபு, அக்கி - கண்.
118 அரி - குதிரை.

விற்கு ணத்தொனியில் அண்டர் அண்டம்வெடி
கொண்டி டக்கடுகி வீரமாய்ப்
பற்கு ணத்துரைம தித்கும் ருதிரன்நிகர்
பகழி மாரிபயில் மினல்எழத்
தற்சை யோகசை வலம தானசர
கூட சரய்கைஎன வீசியே,
பற்ப யூகமது கிழிய வேகமொடு
பயில்ச யிந்தவம்ந டத்தியே, 119

வடவை அக்கினிசு வாலை ஒன்றுபட
வந்துஅ டர்ந்ததுஎன அங்குளோர்
கிடுகி டென்றுஉளறி நடுந டுங்கிமதி
கெதிக லங்கிவழி விடுதலால்
"அடம டாகரவு எவண டாசெய்தவன்?
ஆர டாசதர்மன் ஆரடா?
திடம டாதிருட விடம டாவிடுவ-
திலைய டா!இகலின் முடுகடா" 120

எனஇவ் வாறுஇவன்இ யம்ப வேசுதர்மன்
"என்இ வன்பயம்இ லாமலே
முனையி னோடுஅணிமு றித்துஅ டர்ந்துஎனது
முனமும் வந்துமறு மொழிசொல்
சினம்?மு ரண்டுபகர் சிறுவன் ஆர்கொல்?"என-
வேசெ யிர்த்திடுதல் அன்றியே,
"நினது பேர்கிரிடி யோ?அ லாதுயார்?
நில்ல டா;கடிது சொல்லடா; 121

பரிபி டித்தகள்வன் நான டா;சுதர்மன்
நான டா;சமர்ப யிற்றும்முன்
உரைய டாஉனது தந்தை பேர்"என"உ-
னக்குள னக்குளனள திர்க்கும்இச்

---

119. ருதிரன் - உருத்திரன், சிவபிரான், தத்சையோக (அம்புகளாகிய) அவற்றின் கூட்டம்; சைவலமது ஆன - பாசியைப் போன்ற, சரகூடம் - அம்புகளால் பின்னபபடும் பந்தல்; சாய்சை - ஓலை. குடிசை.

120. கரவு செய்தவன் எவணடா என இயையும். இகல் - போர்.

121. செயிர்த்திடுதல் - சினம் கொள்ளல்

செருவில் ஊர்பெயர்வி ளம்பல் ஏன்?சமர்செய்-
திடவ ரில்சமர்செய்" என்னவே
விரைய "நீசிறுவன்; ஆகை யால்வினவி-
னேன்;வி ளம்பு"எனவி ளம்புவான். 122

தாதை தாதைபெயர் ஆதவன்; வல்எம
தர்மன் என்பெரிய தந்தை;உன்
சேத னம்பருக இலகு வான்;அமரர்
செம்மல், கீரதன் இரந்திட
வாதிஇ லாதுஅருள்க ருணஉ தாரமக
ராசன் ஆகும்மகிழ் தந்தை;என்
போத நாமம்விட கீத னன்;விசய
பூபன் என்சிறிய தந்தையே. 123

அரன்இ டக்கண்வழி வந்த சந்த்ரகுலன்;
இந்தி ரன்குமரன்; மந்த்ரியோடு
அரித மன்னர்விக டக்கு ரோதமதம்
அடக்கி ஆசைவிச யஞ்செய்தோள்;
பரன்ந டுக்கண்அருள் தேர்வில் லாளி;சிவை
பாகன் மேல்அடிபு டைத்தவன்;
வரம்மி குத்தவர்கள் யாரை யும்பொருது
வாகை மாலையணி மார்பினான்; 124

பூத லங்கள்மிசை பாத லங்கள்மிசை
மீத லங்கள்மிசை பொருவிலான்;
சாத கங்கொள்சிலை யால்எ திர்ந்தவர்கள்
தங்கள் ஆர்உயிர்கள் மங்குவார்;
மாத வன்சிலதன்; விசயன் இங்குஉனது
வலிமை காண்எனவ ரச்சொனான்;
நீது ணிந்துசமர் போர்நி னைந்துவரு
நிலைமை என்சொலு;நின் வலிமைஎன்?" 125

---

123. தாதை தாதை - பாட்டன், சேதனம் - உயிர்; அமரா செமமல - இந்திரன், இங்கும் சீதரன் என்புழியும் எண்ணும்மைகள் தொக்கன

124. அரிதம் - திசைகள்; ஆசைவிசயம் - திக்குவிசயம்;பரன் நடுகண்- சிவபெருமானின் நெற்றிக்கண்ணாகிய அக்கினி.

125 சாதகம் - பயிற்சி, சிலதன் - தோழன்

"நினது பேர்சொல்எனில் அதுசொ லாதுவெகு
நீள மாகஉரை செய்தனை;
எனது நாமம்அமிர் தத்து சன்குமரன்
இன்சு தர்மன்"என ஒதியே,
கனக .... கண்டுஅ டர்பொருதல்
கடன்ள னத்தலைவர் தங்களை
வினைகள் செய்யவிழி காட்டி னான்;புணரி
வெள்ளம் மூடல்என மூட்டினார். 126

சாடு வீரசது ரங்க வெட்படைச-
முத்தி ரப்பிரள யத்தைநேர்
மூடி அம்பொருளரி அம்பு, தொட்டி,முள்-
அம்பு,எஃ கு,அரம்,முசலம் முட்கரம்,
பீடு வேல்,பரசு, நேரி சம்,சுரிகை,
பிண்டி பாலம்,எறி சக்கரம்,
ஊடு தண்டம்முரண் ஈட்டி, சூலம்,உடை-
வாள்,சு ழல்தடிகள், பட்டயம், 127

நவிய மோடு,வளை தடி,கு றுந்தடிகள்,
நல்க வண்,கல்லெறி, வச்சிரம்,
பவிசின் மற்றும்உள ஆயு தங்கள்பல
பதறி வீசஅவை சிதறவே,
உவமை யற்றபல கோடி பாணம்அவை
உதறி யாவையும்நொ றுக்கியே,
அவிய மற்றசது ரங்க சேனைகள்அ-
றுத்துஅ றுத்துஎதிர்ப ரப்பினான். 128

கண்ட கண்டமொடு துண்ட துண்டமொடு
முண்ட முண்டம்என வீழவே,
மண்ட லங்கண்மிசை பிரேத மேமலைகள்
மலைகள் எத்திசையும் அகலவே,
விண்டுஇ டங்கள்இழி அருவி போல்எருவை
வெள்ள மேபெருகி ஓடவே,
மண்டு வெஞ்சுழியி லேஅ ழுந்திஎழ
வன்பி ணங்கள்முதல் யாவுமே, 129

---

128. பவிசின் - பெருமையோடு; அவிய - அழிய, சேனைகள் அவிய எதிர்பரப்பினான் என்க

129. அகலல் - விசாலமாதல்..

இரதம் எத்தனைகள்? கரிகள் எத்தனைகள்?
இவுளி எத்தனைப தாதிகள்?
நெரிப டுத்தியஇ லக்கம் யாவர்கள்நி-
கழ்த்த வல்லவர்?க லக்கிய
கரச ரப்ரபல வலிமை வின்மைநிலை
கண்டு வீரசுதர் மத்துசன்,
"முரணில் இக்கனம்இ லாதுஎன் முன்பெருமை
மொழிவ னோ?மொழிதல் தகும்இவன்;" 130

என்ன உன்னி,வரி வில்வ ளைத்துஇகலில்
என்முன் நில்லுகென எய்தியே,
மின்னல் ஒத்தகணை ஐந்துஇ முத்துவிசை
யாக மார்பின்மிசை விட்டனன்;
கன்னன் மைந்தன்உர மும்பி ளந்துமுது-
கைப்பி ளந்துஉருவி யோடவே,
அன்ன போதில்இவன் ஆக்ர மத்தினொடும்
வீர கர்ச்சனை(கள்) செய்யவே, 131

தனுவின் மீதுபதி னாறு கோல்விசைய-
தாய்வி டுத்துமுடி தள்ளியே
உனிஅ றுத்துமணி வச்சி ரக்கவசம்
ஒழித ரப்பொடிப டுத்தியே
..... பாகன்முடி திருகி யேகொடிகள்
கம்ப மும்பொடிப டுத்தியே
மனக திப்புரவி தனைஅ றுத்துஇரதம்
மாற்றி னான்வலிய சீர்த்திமான் 132

சிலைப தாகைஇர தம்த கர்ந்துஉதிர-
வே,தி கைத்துமறு தேரிலுற்று,
அலைவி லாதமணி மகுட வச்சிரக-
வசம்த ரித்துஒருபது ஆறுகோல்
வலிய வாரமிசை வைத்துஇ ழுத்துவிட,
மற்றும் வாளிஇரு பத்துவிட்டு
உலவு வாளியைநொ றுக்கி, மார்புஉருவி
ஓட முக்கணைஉ டற்றினான் 133

---

130. நெரிபடுத்தல - நொறுசுகுதல்; கரசரம் - கைகளால் செலுத்தப்படும் சுணைகள்; வின்மை - விலவாணமை. 132. மனகதி - மனோவேகம்.

விற்பொ டிந்து,மரு மத்தி னூடுவிசி-
கம்பு குந்திட,மி கச்சினந்து,
அற்பு தத்ததுவ ளைத்து, வச்சிரவி-
சிகத்தில் ஒன்றையடர் விசையின்மார்-
பிற்பு குந்திடவி டுக்கும் முன்,பளிர-
தென்று மின்னிஇடி போல்இரைந்து,
உற்ப னத்தின்அக லத்தி னூடுருவி
ஓட வேஉணர்வுஅ ழிந்தனன். 134

கரமி ருந்தசிலை நழுவ விட்டுஎருவை
கக்கி யே,மரண மூர்ச்சையாய்
இரத மீதினில்வி ழப்பி ரத்திமன்முன்-
னேம றித்து,இரதம் மூட்டியே,
"விரகன் நீ!சிறுவன் மெய்அ யர்ந்துவிழ
விசிகம் விட்டசுதர் மத்துள்!
இருஇ தோவருகி றேன்உன் ஆவிகொள"
என்று விற்குணம்இ சைத்தனன். 135

"ஏத டா!அடபி ரத்தி மா!உனது
இகலது என்முன்அ டாதடா!;
போது அடாஉனது பாணம்; வில்கழை;பு-
டைக்கும் வண்டுஉனது நாணடா;
கோதை மார்கள்வெகு தொக்க டா;மயல்
கொளுத்து வாய்முனிவர் தேவரை;
ஈது அலாதுஎனையு மேஅ டக்கஇய-
லாத டாஅரிகு மாரகா! 136

அருஒ ழிந்துஉருவது ஆக மாயன்மகன்
ஆன தால்உனது இகற்குநான்
வெருவி லேன்;உனைவி டேன்;உன் ஆவிகொளு
வேன்இ மைப்பொழுதில் என்றதால்

---

134. விசிகம் - அம்பு; தநு - வில்; உற்பனத்தின் - சிறப்புமிக்க.

136. போது - மலர்; கழை - கரும்பு, புடைக்கும் - சிறகடிக்கும்; தொக்கு - கூட்டம், படை. பிரத்திமன் காமனின் அம்சம் என்பது பற்றி இவ்வாறு கூறப்பட்டது.

செருவு றாதுமுறை கூறி லேன்நிலைமை
செப்பு றாய்அரிஅ ரன்பிதா
மருள்பி டித்துஅயரில் மனிதன் நீஅவரில்
வலிய னோசமரில் வல்லனோ" 137

என்று கோபமொடு வாளி ஏழுசிலை-
யினில்இ ழுத்துவிட, ஏழையும்
பொன்றி யேவிழந றுக்கி நாறுகணை
பூபன் மைந்தன்விட, நீறுஉற
நின்று அறுத்துஒருச கத்தி ரம்பகழி
நெடியன் மைந்தன்விட, நீறுஎழ
அன்றுஅ றுத்துஅவண்ஓர் ஆயி ரம்பகழி
அவன்வி டப்பொடிசெய்து, இவனுமே 138

சதச கஸ்திரம்மின் வாளி ஏவ,அவை
தனைஅ றுத்து,ஐயிரு இலக்கமாம்
குதைஉ ரத்தகணை கோடி கோடிமுறை
கொண்டு விற்பனம்உ டற்றினார்;
விதம்மி குத்துஉபய மேக மாரிநிகர்
வீசி னார்இடம்வ லங்களும்;
உதைச யந்தனமும் விரைவி னோடுசுழல்
ஒத்து உலாவியது நித்தமாய் 139

சிரசு பாதமிடை அவய வங்கள்மிசை
செறிய வேகறைகள் பரவவே,
புரசு கிஞ்சுகம்ம லர்ந்த தாய்உபயர்
புரம்அ டங்கலும்நி கர்க்கவே,
சரம்நு ழைந்தவழி சல்ல டைக்கண்நிகர்
சாலம் ஆனதுஇவர் கோலமெய்
விரைசு மிக்குளபி ரத்தி மன்கைவிசை
மிஞ்சி ஏவிடுச ரங்களால் 140

---

137. பிதா - பிரமன்.

139. விற்பனம் உடற்றினார் - போர்க்கலைத்திறமையோடு போரிட்டனர்; உதை - செலுத்தப்படும்; சயந்தனம் - தேர்; உதை சயந்தனம் - வினைத்தொகை.

140. புரசு கிஞ்சுகம் - முள்முருக்கமரம், ஒரு பொருட்பன்மொழி; புரம் - உடல், சாலம் - மராமரம்

பாகு அறுந்துஇவுளி அச்சு அறுந்துஉருள்கள்
மச்சு அறுந்துகொடிக் கம்பமு-
மேகு லைந்துசிலை யேபொ டிந்துபுவி
மீதி லாகிமறு தேரின்மேல்
ஆகி வேறும்ஒரு சிலைவ ளைக்கும்முனம்
அரிம கன்தொடுச ரங்களால்
வேக மானஇர தங்க ளும்சிலையு-
மேபொ டிந்தனநொ றுங்கியே 141

வார மும்திகிரி யும்த கர்ந்து,மறு
தேரி லாகி,மன வைரமாய்,
ஆர வாரமுடன், உரக வாளிதனை
அகல மேகுறிசெய்து உதையவே,
வீர மாகியபி ரத்தி மன்கடுகி
விட்ட பாணமது அடங்கலும்
சேர நீறுபொடி செய்து மார்பினிடை
சென்றுஉள் ஊடுருவி ஓடவே, 142

உரக வாளிதனில் மதிஅ ழிந்துஉணர்வுஒ-
ழிந்து தான்மரண மூர்ச்சையாய்
இரத மீதுவிழல் கண்டு, சாளுவனு-
மேந டத்திஇர தத்தையே
வரிவி லானதைவ ளைத்து வெய்யசர
மாரி வீச,அவன் வாளியால்
எரிசெய் நீறுஎனஅ றுக்க, மற்றும்இவன்
எண்இ ரண்டுகணை ஏவியே 143

பரிப தாகைசிலை இரத மும்பொடிப-
டுக்க, மற்றும்ஒரு சிலைவளைத்து
இரதம் வேறதனில் ஏறி, ஏழுகணை
ஏவி யேசிலைப தாகையும்
புரவி சாரதிஅ ழித்து, வாகுஎருவை
பொழிய நாலுகணை ஏவினான்;
அரிய பாதநடை யாய்நி ராயுதனும்
ஆக நின்றனன் ஒடுங்கியே. 144

---

141. மச்சு - தேரின் மேற்பகுதி.
142. வாரம் - வில்; திகிரி - சக்கராயுதம், உரக வாளி - நாகாஸ திரம்.
144. பதாகை - கொடி. பாத நடையாய - வாகனம் இல்லாதவனாகவும்; நிராயுதன்-படைகலங்களற்றவன்.

கிருத வர்மன்அது கண்டு தேரினொடு
கிட்டி னான்;சுதர்மன் எட்டியே,
"வெறுமை யானநரி சந்தை ஏறினை;வி-
ருப்ப மாகினகு றிப்பில்நீ
உறுதி யானதொழில் காலி மேய்ப்பது;உர-
வோரை உற்றுஅமரில் உற்றதுஏன்?
சிறிதும் நீதயிரி யத்தி னன்அன்று;ஹரி
சிறிய தந்தைமகன் ஆதலால் 145

நலது வந்ததுவும்; நிலு;நில்" என்றுசிலை
நாணில் வைத்துவிடு வாளியால்
அலம லந்துஉலைய வேசெ நீர்உடல்அ-
டங்க லும்பரவ வும்துளைத்து,
இலகு தேர்சிலைது ணித்து, உறுக்கி,"உயிர்
ஈந்த தேஅரித னக்கதாய்
விலக டா"எனஉ ரைக்க வெஞ்சினமி-
குத்து உருத்திரனும் எய்தினான். 146

வீர வீரன்அணி ருத்தி ரன்சினமி-
குந்து விற்குணம்இ சைத்து,நீள்
வார சாரமுட னேம நாது,சர
மாரி வீசி,இடம் வலமதில்
தேர்அ டாதுகணை யால்அ டைத்து, வெகு
செஞ்ச ரத்துஅகல மும்பிளந்து,
ஆர வெம்கிரிவம் ஐந்து கோல்உருவ
அட்ட காசமது பண்ணினான். 147

பன்னி ரண்டுகணை தைத்த தும்பரவல்
பண்ணி டாதுசர கூடமும்
சின்ன பின்னம்உற வேஅ றுத்துமிகு
தீர மானசர லாபமாய்
உன்னும் மத்தகம தைப்பி ளந்துஉருவ
உரிய நாலுகணை சிலைஅறப்
பின்னும் ஓர்கணைவி டுத்தி டக்கடிய
பெரிய தோர்சிலைவ ளைத்துஇவன் 148

---

143. காலி - ஆடுமாடுகள்.
147. வாரசாரம் - விலவித்தையின் நுடபம்; அடாது - போரிட இயலாமல், சிரிவம் - கழுத்து
148. பரவல் - (தோல்லியேற்று) வணங்கல.

பரிப தாகைசிலை பாகு தேர்பொடிப-
டப்ப னாறுசரம் ஏவியே
கிரிடம் ஓர்கணைவி ழுத்த, நாலுகணை
கெழுமி மார்புஉருவி ஓடவே,
இரத மேல்மரண மூர்ச்சை யாகவிழ
எய்தி யேஅணியு ருத்திரன்
கரவி லாபசர லாப மோடும்மிகு
கடுமை யாகவிடு கணையினால் 149

அண்டம் எண்டிசையு மேக விந்துசொரி
அம்பு மாரியைநி கர்த்ததால்
கண்ட துண்டமொடு முண்ட முண்டமொடு
களம்ள லாம்மலைகள் போல்விழ
அண்டு செங்குருதி ஆறு பாயஒரு
அக்கு ரோணிஅத மாக்கினான்
விண்டு யூகம்நிலை குலைய ரெண்டுகனல்
வேளை யில்கரவில் ஆண்மையான். 150

சுதர்மன் அப்பொழுது உணர்ந்துள ழுந்துகன
சோப மானதுதொ லைந்தபின்
கதழ்வி னோடுமறு தேரில் ஏறிஒரு
கார்மு கந்தனைவ ளைத்தடர்ந்து
அதன கர்ச்சிதமொ டேஉ றுக்கி,"அணி
ருத்தி ரா!நிலுநில்; என்னடா
நிதம தாம்தளம்நொ றுக்கல் கைக்குளளிமை;
நேர்என் னோடு"எனநெ ருங்கியே 151

கந்த ரத்தினிடை ஆறு கோல்கடுமை-
யாய்வி டக்களம்உ றத்துளைத்து
உந்தி ஊடுருவ வே.ர தத்தின்மிசை
உணர்வுஅ ழிந்துஅயர்தி ஆகினான்.
சிந்தை கன்றிநீ லத்து சன்கடுகு
தேரை விட்டுறம றிக்கவே
சிந்துஅ ழிந்தகணை யொன்றின்; மற்றும்ஒரு
சிலைவ ளைத்தி டவெ குண்டுஅவன் 152

---

149. பனாறு - பதினாறு.
150. அதமாக்கினான் - அழிததான், களல வேளை - நாழிகைப் பொழுது
151. சுதழ்வு - சினம், கார்முகம் - வில்; அதன - மிகுதியான.
152. சுநதரம், களம் - கழுத்து; அயர்தி - மயக்கம், சிந்து - யானை.

வீசும் ஓர்கணையில் வில்பொ டிந்துவிழ,
ஏவது ஒன்றில்முடி வீழவே,
ஆசுஅ றுந்துஅழிய ஓர்ச ரத்தில்மனம்
அஞ்சி யேவிலகி ரகினான்;
பூசல் மிக்குஇதுஎன ஏகி நீடிஇழி
புன்மை என்றுநகை செய்தனன்;
தேசு பத்ரகிரி ஆதி பன்கணைசெ-
லுத்தி யேமுகில்நி கர்க்கவே 153

தேரும் வில்லும்உடை யத்த கர்த்துமுடி
சிந்தி யேஅவய வங்களில்
சோரி ஆறுஒழுக வேதொ ளைத்துமிகு
சுடுச ரங்கள்கொடு முழுகவே
ஆர வாரமுட னேசி னந்துசுதர்-
ம(ன்)ன ட(ர்)ந்துதொடு சரமதால்
வார மானதுபி ளந்து உடம்புஎருவை
வடிய மெய்கள்துளை பட்டதே 154

உடல்அ டங்கமிகு தொளைசெ றிந்துஒழுகும்
உதிர போர்வையொடு மறுசிலை
தொடுமு னம்பகழி ஐந்து வீறொடுது-
ளைக்க நெற்றியை,ம யக்கமாய்க்
கடுக வாயின்வழி யேசெ ழுங்குருதி
கக்கி மூர்ச்சையுடன் உக்கினான்;
முடிகி ளப்பும்முனம் அவன்ம கன்கிரண
மோலி கீழ்விழஉ டற்றினான். 155

தலையில் வந்ததுத டுப்பில் நின்றவகை
தானும் நன்றெனஒ டுங்கினான்;
மலைய வந்துளசு வேதன் மந்திரிதன்
மகுட மானதைஉ ருட்டவே
நிலைக லங்கிவெரு வுஞ்சு வேதனை,"நின்
நாணி விட்டுநட" என்றனன்.
வலிய நாணியைஇ றக்கி யேஇரதம்
மாறி ஓடினன்ம யங்கியே. 156

153. ஆசு - தவசம் 155. உக்கினான் - நொறுங்கினான்.
156. மலைய - போர் செய்ய; நாணி - ஆகுபெயராக வில்.

(அறுசீர் ஆசிரிய விருத்தம்)

அடல்வி சாலகவு சாலன்மால் அனுசன் நேர்ரதம்ந டத்தி,"என்-
னுடைய தேசிகவில் விசையனோடு ஊட உன்னைவிடு கிலன்"எனத்
தடைஇ லாதநர சிங்கநேர் தனுவ ளைக்கும்முனம் நால்அறு
கொடிய வாளிஅவன் விட,இவன் கூறு செய்தும்எதிர் குறுகியே 157

ஈறில் எண்இடுகொ டும்கணை இவன்வி டக்,கடுகி அவனுமே
மாறு கோல்கொடுபி ளந்துகூர் வாளி மூன்றுகணை மார்பினை
ஊறு செய்ய,விடு கணைகளை ஒருச ரத்தினில்அ றுத்தபின்
தூறும் வாளிமழை மாரிநேர் சுடுகொ டும்கணைசொ ரிந்தனன். 158

உபய வெம்புயல்கள் சொரிதல்நேர் ஒத்த புசலைநி கர்க்கவே
சபதம் உற்றுஇருவர் விடுகணை தழுவி மீவெளிஅ டைக்கவே
விபுதர் மொய்க்கஅமர் புரியும்நேர் மிஞ்சி மால்இளவல் விடுகணை
சபல முற்றகொடி தேர்பரி தனுவு மேபொடிப டுத்தியே. 159

மருமம் எண்கணைது ளைக்கவே மற்றுஓர் தேரில்அவன் ஏறி,வில்
சரம்ஈர் ஐந்துகளம் விட்டுஅரி தான்ந டத்தினன்மன் மகன்;மிகக்
கரிய வன்பினவன் மதிகதி கலங்கு சோபமொடுஅ யர்ந்தனன்;
விருது மன்னியப ணிந்திடும் விசய னேரதம்ந டத்தினான். 160

திக்கும் அஞ்ச ாகி ரண்டமும் செகம தெங்கணும்ந டுங்கவே
உக்ர மாகரதம் வருவதை உரவன் மைந்தனும்நெ ருங்கியே
சக்ரி தந்தமக னோ?அவன் தந்த தோசிரசு தங்கினாய்?
மிக்க சக்கிரிஉன் அன்பனோ? விசையன் வில்லி 161

கிரிடி பற்குணத னஞ்சயன் கிருஷ்ணன் என்பதுவும் நீகொலோ?
அருள்செ யும்அசுவ ரட்சணை யாக வந்தவனும் நீகொலோ?
குருகு லத்தில்வரு குரிசிலோ? கொடியில் ஆடிவரல் அநுமனோ?
தரணி திக்குவிச யம்செயும் சரவி னோதசம் பன்னனோ? 162

---

157. கவுசாலன் - கவுசலன், திறமை உடையவன், அனுசன் - தம்பி.
159. மீவெளி - ஆகாயம்; விபுதர் - தேவர்; சபலம் உற்ற - வெற்றி பெற்றது.
160. கரியவன்பினவன் - திருமாலின் தம்பி.
162. அசுவ ரட்சணை - குதிரையைப் பாதுகாத்தல்.

சரத்தி னால்மழைத டுத்து..... தயங்க வென்றுளரிவ னந்தனை
எரித்து உணச்செய்துஇர தம்வில்இவ் இவுளி பெற்றவனும் நீகொலோ?
திருத்து உமாபதியோடு அமர்செய்து சிலையி னால்அடித்த வன்நீயோ?
வரத்தி .... வாழ்வ ளித்தவனும் நீகொலோ? 163

சுழல்இ லக்குஎய்துஅனல் உற்றிடும் தோகை வேட்டவனும் நீகொலோ?
இழிவு பன்னோரக் ரோணிபத்து எட்டு நாள்களில் இழைத்தவன்
....
.... 164

....
....
புரவி வேள்விசெய நத்தினை புயப ராக்கிரம வலிஎலாம்
ஏருவ னைக்கொடுந டத்திநீ உற்ற பேர்வலிமை பெற்றதே 165

அரைநொ டிக்குஓர்அம்பா கப்பனோர் அக்கு ரோணியும்நொ றுக்கலாம்;
இரிய நீஇதுபன் னெட்டுநாள் இகலும் வீரியமி (குத்ததோ)?
சரம்இ ரண்டுகையி னால்சொரி தத்து வங்களும்இ ருக்குதாம்;
கருது சாபமறை வாரியும் கண்ட நீயதுமெய் உண்டதோ? 166

சங்க மீதில்உயர் பாஞ்சசன் னியமது ஆர்கலியில் நந்தினை;
அங்கை கொண்டுஉனது வாயில்வைத்து அடல்செ யித்தஇட மீதினில்
சிங்க நாதவொலி செய்வையாம் திக்குள லாம்செவிடு கொள்ளவே;
எங்கை யோஅது?எட டாகையில் இல்லை யோ?நீஓர் வில்லியோ? 167

விற்பி டிப்பதுஅறி யாய்;சரம் விரைச தாய்விடவும் அறிவையோ?
அற்பு தத்தின்முனி யேதொழில் அறிய வும்கைவிரசு அறியவும்
உற்ப னத்தினர்மும் மூர்த்தியும் உளம்ந டுங்குவர்என் ஊடலில்;
நிற்பை யோசிறிய போது?"என நிகழ்த்த, வெஞ்சினம்மி குத்துஇவன் 168
"சொல்வல் லாண்மையுள சுதர்மன்என் துரக தம்கரவு செய்ததை
மல்வல் லாண்மையுள பாசமால் வரைந்த ழற்குழியில் வீழ்ந்தனர்;
அல்வல் லாண்மைகதிர் முன்செலாது; அறுப்பன் ஓர்கணம தற்குள்;என்
வில்வல் லாண்மைநீ அறிவையோ? வீணன் நீ"எனவெ குண்டுபின் 169

---

164. தோகை - துரோபதை. இப்பாடலின் மூன்று, நான்காம் அடிகள் சுவடியில் எழுதப்படவிலலை.
165. இப்பாடலின் முதல் இரண்டு அடிகள் சுவடியில் எழுதப்படாமல விடுபட்டன.
166 சாப மறை வாரி - வில்வித்தையாகிய கடல்.

(எழுசீர்ஆசிரிய விருத்தம்)

வடவை யாம்எனஇ ரண்டு கண்கள்கனல் மாரி பெய்ய,மக மேருநேர்
நெடிய வாகைவரி வில்வ ளைத்து,நிக ரிலிகு ணத்தொனிசெய் நேரமே
கிடுகி டென்றுஉலகம் அண்ட ரண்டபகி ரண்டம் எண்டிசைஅ கண்டமும்
நடுந டுங்க,விபு தர்க லங்க,நகு சுடர்இ ரண்டுதடு மாறவே, 170

பரவை யும்சுவற, இடிகள் அஞ்ச,எதிர் படைக ளும்பதறி அலறியே
வெருவி யும்புவியில் அயர வே,சுதர்மன் விசய வீரியனை நோக்கியே,
"தெரியும் இந்தவிதம் ஓர்ப கட்டினொடு திரியு றாய்;நலத டா"எனத்
துரித மாகவரி விற்கு ணத்தொனிசெய்து ஊட நாடிஎதிர் ஏறியே, 171

சீறி மீறிவரு வில்வ ளைத்துவிடு சிமுதம் நேர்சிலிமு கம்சொரிந்து
ஈறி லாதுளரிஅ லித்த தேர்வலம்இ டம்பெ யர்ந்திடுவது இன்றியே
மாறி லாதுசர கூடம் மன்மகன்வ ரிக்க, அங்குஅதைநொ டிக்குளே
நீறு நீறுபட வேநொ றுக்கிநிக ரிலிமி குத்தசரம் ஏவியே, 172

எதிரி தேர்இடம்வ லம்பெ யர்ந்திடுவது இன்றி யேசரள யில்செய்தே
உதய மீவெளிதி சாமு கங்கள்ஒரு பொருவில் ஊசிநுழை யாவிதம்
அதிய கைவிரசி னோடுஅ டைத்தசரம் அதனை யேசுதர்மன் அக்கணம்
சிதைய வேபொடிப டத்து ரோணம்உறு சிலிமு கம்சிலசெ லுத்தினான். 173

இந்த வாறுஇகலி யேவ ளைந்தசிலை யேநி மிர்ந்திடுவ தின்றியே
சிந்து வாளிமழை ஒன்றொடு ஒன்றழல்செ றிந்தி டத்தழல்ள ழுந்ததால்,
உந்து அனற்ப டையும் வடவை யுஞ்சமர்உ டன்றது ஒத்தனஉ ரம்கொடே;
அந்த காலம்இது என்று புட்கரர்அ டங்க வேநடுந டுங்கினார். 174

அண்டர் அண்டபகி ரண்டம் எண்டிசைஅ டங்க வேநடுந டுங்கவே,
சண்டன் இந்தும்வெரு வுண்டு பாததைது மாற வே,மலைகள் நீறவே,
மண்ட லம்கிழிய, மாசு ணம்தலைம யங்கி மோலிகள்நொ றுங்கவே,
தொண்டு வெங்கடல்கு ழம்பு கும்பியொடு சுவற, எண்கரிகள் கதறவே, 175

---

169. பாசமால் - பாசத்தால் என இருக்க வேண்டியதில் அத்துச் சாரியை கெட்டது.
171. பரவை - கடல், சுவற - வற்ற.
172. சிமுதம் - நீருண்ட மேகம்; சிலிமுகம் - அமபு, எரி - அக்கினி தேவன்; மன்மகன் - சுதர்மன்; வரிக்க - கட்ட, திகரிவி - அருச்சுனன்.
173. சரளமில் - அம்புகளாலான மதில், துரோணம் - வில்.
174. அந்த காலம் - (உலகத்தின்) கடைசிகாலம்; புடசுரா - வானவர்.
175. சண்டன் - சூரியன்; மாசுணம் - ஆதிசேடன், இங்கு; தொண்டு - பழமையான; குழம்பு - நீராளமானது, இங்கு நீர், கும்பி - சேறு.

ஒத்த கைவிரசு; நத்த வெம்ப(க)ழி; ஒத்த வில்வலிமை; ஒத்ததேர்;
ஒத்த வெம்புரவி; ஒத்த பாகர்உரம் உற்று உகைத்தசா மர்த்தியம்;
ஒத்த பம்பரமது ஒத்த வெஞ்சுழலை ஒத்துஇ ரண்டுஅரிகள் சுற்றவே,
ஒத்த வெஞ்சமரில் யுத்த சம்பிரமம் ஒத்தி ருந்ததுஇரு பேர்க்குமே. 176

சாமம் ஒன்றுஉபய ரும்ச மானமொடு தறுகி டாதுசமர் புரியும்நேர்
கோம கன்கடுமை யாக வீசியகொ டுஞ்ச ரம்பதத னஞ்சயன்
மாமு கம்குளம்உ ரம்க ளம்புயம் அ றத்தொ ளைக்கவும்ம றுத்துஇவன்
தீமு கம்பரவு வாளி மாரிசிமு தத்தை மிக்குறஉ டற்றினான். 177

சீத ரன்சிலதன் விட்ட வெம்பகழி சிரசு பாதம்இடை அவயவம்
மோதி யேதொளைப டுத்த, மெய்முழுதும் ஒழுகு சோரிமிசை முழுகிட(ச்)
சோதி மோலிநில மீதில் வீழ,அடர் சூதன் மாஇரதம் அச்சுஉருள்
போதி லாதுகொடிக் கம்ப மும்தவிடு பொடிப டச்சுதர்மன் இடியைநேர் 178

"மகுட பங்கம்இவ னோசெய் வான்"எனம றித்தும் ஓர்இரதம் ஏறியே,
விகட மாகவரி வில்வ ளைத்துஅளவில் விசிக மானதுஇவன் வீசவே
துகள்ப டக்கணைதொ டுத்து வில்கொடிது ணித்து மாஇரதம் பாகையும்
புகைஉ லாவிடஎ ரிக்க மற்றும்ஒரு பொருவி லாஇரதம் ஏறியே, 179

கடுக வெஞ்சிலைவ ளைத்து வெம்பகழி கால மாரியைநி கர்க்கவே,
தொடுச ரம்பரவ, அவைக ணத்திடைது ணித்துஎ றித்துதுவ சம்சிலை
முடுகு தேர்இவுளி பாகும் அச்சுஉருள்மு றித்துஎ றிந்திடஅ றுத்தும்,ஓர்
வடிவு அதானஇர தத்தி லேறிவில்வ ளைத்து ஏவுமழை வீசினான். 180

வீசும் வாளிமழை யாவும் நீறெழஎ ரித்து வெய்யசரம் ஏவியே
ஆசு, மோலி,வல வன்,ப தாகை,இர தங்க ளும்பொடிப டுத்தினான்;
கூசி டாமல்அறு பத்து நால்இரத மும்கு லைந்திடநொ றுக்கியே,
ஆசு கங்கள்அறு பத்து நாலுசுதர் மன்ச ரீரமதில் ஏவினான். 181

மத்த கம்தொளைய உச்சி தைத்தகணை வாயி னும்பவன வாய்உறச்
சத்தி யாய்க்களம்உ தைத்த வெம்பகழி தடைய றப்பிடரி உருவிட,

---

176. அரிகள் - பதைவர்கள்
177. தறுகிடாது - இடைவிடாது; குளம் - நெற்றி
178. விகடமாசு - மிக அதிகமாக.
179 துவசம - கொடி
180. ஆசு - சுவசம்; ஆசுகம் - அம்பு.

வித்தை மார்புஅகடி னிற்பு தைந்தகணை வெரிநி னைத்துருவி ஓடவே
சித்தி ரர்க்குஇணையில் மரண மூர்ச்சையொடு செகத லத்திடைகி டந்தனன்.
182

சுதர்ம னானவன்அ யர்ந்து வீழஎதிர் சுரத னானவன்நெ ருங்கவே,
கதழ்வி னோடுசுழல் வாளி ஒன்றுஎதிரி கடிய தேரினில்உ டற்றினான்;
பதறி யேஇரத மதுக டித்துவிசை பம்ப ரம்சுழலை ஒத்திடக்
கெதிக லங்கிமதி அழிய வேகிறுகி றென்று தேரதுசு ழன்றதே. 183

விசைத விர்ந்திடுவ தன்றி யேவிறுவி றென்று தேரதுசு ழன்றதால்
கசிவின் அஞ்சிஇர தத்தில் உற்றஇரு கால்பி டித்துவிழி மூடினான்;
சுசியை நாடிஒரு வாளி யின்றலையி னில்தொ குத்துஉறநி றுத்தியே
அசைவி லாதவய வீரன் வில்விசைய தாய்இ ழுத்துஉறவி டுத்தனன்.
184

அண்ட கூடமுகடு எண்டி சாமுகம்அ டங்க வேளரிபி றங்கியே,
கொண்டு சேனைகளி லேக விந்துபல கோடி சேனையைள ரிக்கவே,
சண்ட மாருதச ரத்தை யேளரிச காய மாகவும்வி டுத்தனன்;
மண்டி வாகினிஅ டங்க வேமடம டென்றுள ரித்ததும டங்கல்நேர்.
185

பின்னும் எண்ணில்பல கோடி வாளிமழை பெயல்அது என்னஇவன் எய்ததால்
துன்னி எண்டிசையு மேக விந்து திர மான சேனைசது ரங்கமும்
சின்ன பின்னம்உற வேநொ றுக்கிமிகு சேறு நீறுளஎ ரிக்கலால்
இன்ன லாய்இருத லைக்கொ ளிக்குள்உழல்வு ஆம்ள றும்பைநிகர் ஒத்ததே
186

ஆயி ரம்பதி(ன்)ம டங்கு இபம்,திகிரி லக்கம்; ஐஇரும டங்குமா
ஏய்அ னீகம்அழி யில்க வந்தம்எழும் ஒன்று;அ நேகம்எழில் இவன்விலில்
ஆய்உ றைந்தமணி யேகி ணீரிடும்;ஐ ஆறு நாழிகைமு ழங்கலால்
வீயு கின்றதளம் அளவுஅ றிந்துஎவர்வி ரித்து உரைத்திடவல் லார்களே.
187

அக்கு ரோணிகள்ச கத்தி ரத்துஇருமுந் நூறின் மேல்அதிகம் நால்வகை
மிக்க சேனைகள்இ றந்து பற்பம்உற வேஅ ழிந்தகனல் ஏழினில்;
தக்க தானசுதர் மன்த னக்குரிய தாப சோபமதுஅ கன்றபின்
பக்க மீதுஅயன்அ ளித்த வச்சிரப ருப்ப தத்திகிரி வந்ததே. 188

---

182. தொளைய - தொளைபட, பவனவாய - குதம், வெரிநினை - முதுகை.
184. சுசி - தீக்கடவுள், இது ஆகனேயாஸ்த்தம
183. மடங்கல் - வடவை 186. உழல்வு ஆம் - உழலுகின்ற.
187. இபம - யானை, மா - குதிரை, திகிரி - தேர், அனீகம - படை; கவந்தம் - தலையற்ற உடல்.
188. கனல் - நாழிகை

தீர வீரவிச யப்ர தாபன்உயர் சிங்க நாதமது வாயில்வைத்து
ஆர வாரமுட னேமு ழங்குஒலியில் அண்ட ரண்டபகி ரண்டமும்
மேரும் எண்டிசையு மேந டுங்க,அலை வேலை ஓதைஇடி ஓதையில்
சார மானதொனி மேலி டச்செவிடு தாக்கி அஞ்சஉலகு எங்குமே (189)

வந்த தேரின்மிசை ஏறி யேசுதர்மன், "வாரி நேர்அணிவ குத்துள
தந்தி ரங்கள்பல வெந்துஅ ழிந்தவகை தான்இது என்னநவம்" என்றுபின்,
"எந்தை பின்னவன்இ ருக்க நம்படைஇ றந்த வாறுஎன்?இவன் ஒருவனும்
நந்த எம்படைஅ றுப்பது எந்தவிதம்? நாலில் ஒன்றும்இலை மிச்சமே!
190

எட்டு மூன்றதுஎனும் அக்கு ரோணிபதின் எட்டு நாளினில்ம லைந்தவன்
மட்டி லாஒருச கஸ்ர அஞ்சுச அக்கு ரோணிதளம் மடிதர
விட்ட வாளிவலி என்கொல்? திக்குவிச யம்செய் தோன்விசயன் என்பதும்,
கட்டும் ஆரமறை நாலின் வாரிகரை கண்டது என்பதும்மெய் காணுமே;
191

வனம்எ ரித்ததுவும், அரிஅ ரன்றனொடு வன்ச மர்த்தொழில்பு ரிந்ததும்,
தனிர·தத்தொடுஒரு சரம தால்சுரர் தகன முற்றிடஎ ரித்ததும்,
வினயம் உற்றுஉரிய பார தச்சமரும் வென்று வாகைபுனை கின்றதும்,
உனிநு தல்படம தில்பொ றித்ததுவும் ஒக்கும்;" என்றுமனது உன்னியே,
192

"நன்று நன்று!அட அர்ச்சு னா!படைந றுக்க வல்லநரன் ஆமடா!
இன்று நுந்தைதரு நந்தை வாயினிடை யேகு றித்ததுஎன வீறடா?
பொன்றுஉன் ஆவிஇய மன்கொ ளப்பழுது போற வாறைஅறி யாயொடா?
நின்றுஎன் னோடுசமர் ஊடு வாயெனில்நில்" என்று தேரினைநெ ருங்கினான்.
193

(வண்ண விருத்தம்)
(தான தத்ததன தந்ததன தந்ததன)

"வாய்ம தர்ப்புகள்ப கர்ந்திடுவ தன்றி,உர-
மாக விற்றொழில்பு ரிந்திடுதி றம்செய்திலை;
நீமு னைத்துஎடுபெ ரும்சிலை;ச ரங்கள்தொடு;
நேர்எ திர்க்கமனம் அஞ்சிடில்ஒ துங்கு"கென-

---

189. வேலை - கடல்; ஓதையில் - ஓசையைபபோல.
191. கட்டும் - (பகைவாகளை) அடக்கும், ஆரம் - அம்பு, ஆரமறை - வில்வித்தை, தனுர்வேதம்.
192. வினயம் - வில்நயம்; உனி - உன்னி, குதிரை.
193. நுந்தை - உன் ,நந்தை; நந்து - சங்கு; பொன்று - இறந்து; போறவாறை - போகுமாற்றை

வேம திப்புறஇ யம்பஇரு கண்தழல்மென்
மேல்இ றைக்க,விழ மென்றுளயிறு தின்று,சிலை
ஓய்வுஅ றத்திகிரி என்றுநிமிர் கின்றதற-
வேஉ டற்றினன்மி கும்சரம்அ வன்கதழ்வாய். 194

வார வித்தகனும் வெஞ்சரவி தம்சைவல
மாய்நெ ருக்கமதொ டும்தொடர்பொ டும்செல்வகை
நேர விற்கணை சொரிந்துஅவன்வி டும்கணையை
நீறு பட்டிடநொ றுங்குதக னங்கள்செய்து,
தேரி மொய்த்தவிர சங்கொள்பிர சங்கள்நிகர்
தேகம் மொய்த்துஅவய வங்கள்உரு 'கும்பொழுது
சாரு ணர்க்கையது அழிந்துஉறு சினம்கொடுச-
ராச னச்சரம்அ னந்தமன னும்தொடவே, 195

சேண்அ டைத்ததிசை எங்கணும்நி றைந்தவிலி
தேர்;அ டைத்தஉடல் எங்கும்முழு கும்பிநிகர்
காண வைத்த;உதி ரம்சரச றென்றுகவி
கானம் உற்றபுர சந்தரும லர்ந்தநிகர்
ஏணம் உற்றுஇருவ ரும்சமர்ச மன்களுட-
னேஎ திர்ந்துஇருவ ரும்பொழித ரும்கணைகள்
பூண ஒற்றுஉரம்அ டங்கலும்ம டங்கல்நிகர்
போர்உ யுத்தமுறல் என்றுஅமர்தொ டங்கியதே 196

வாளி யைக்கணைவ கிர்ந்துறஇ டந்திடவும்
வாய்ந டுக்கடைமு றிந்திடஅ டர்ந்தசில;
தூளி பட்டொழித ரும்படிமு னைந்தசில;
சோடுஇ கல்கொடுஅகி லங்களில்நு ழைந்தசில;
மீள எத்திசைக ளும்சமர்உ டன்றசில;
வேலை யைக்கொதிள ழும்பிடஅ டர்ந்தசில;
தாள நிர்த்தமொடும் அந்தரம்நி றைந்தசில;
தான முற்றுஇருவ ரும்தொடுகொ டுங்கணையே- 197

---

194. கதழ்வாய் - சினத்துடன்.
195. சைவலம் - நீர்ப்பாசி; பின்னிரு அடிகள் தெளிவாக விளங்கவில்லை.
196 கானம் உற்ற - காட்டில் உள்ள.
197. சோடு - ஒன்றற்கு ஒன்று சமமாக. நிர்த்தம் - நாட்டியம்.

கார்மு கத்துஇருவ ரும்சொரித ரும்கணைகள்
கானம் ஒல்திசைகள் அம்பரமும் அம்பரமும்
வார்ப னித்தஎழு கந்தரமும் அந்தரமு-
மாய்நெ ருக்கமுற எங்கணும்நி றைந்துஇசைய
ஆர்த ரித்தஇர தம்சுழல்கள் பம்பரம-
தாய்இ டத்தொடுவ லம்புரிஇ டம்புரிய
நேர்வி சைத்துஅரிசு ழன்றிடஉ ழன்றுமன
நேர்இ கற்சமர்பு ரிந்தனர்நி ரந்தரமே. 198

மார்பின் மொய்த்தசரம் என்புஉறநு ழைந்துஉருவ,
வாகு மொய்த்திடுச ரம்பலது றந்துஉருவ,
ஏர்க ளத்திடைபு குந்தவைபி ளந்துஉருவ-
வே,நு தல்சிரம்அ டங்கலும்இ டந்துஅடர,
வார்வ யப்பகழி வெஞ்சிலைவ ளைந்தநிமி-
ராது உரத்துஇருவ ரும்சரிதொ டங்கும்அமர்
பார்ம தித்தவர்அ யர்ந்தவர்தெ ளித்திடுவர்
பாசை செப்புவர்பி னும்சமர்மு னைந்திடுவார். 199

வாயி னில்குருதி சிந்துவர்;அ யர்ந்திடுவர்;
வாடி எய்த்தவர்தெ ளிந்துஇனிதுள முந்திடுவர்;
காய்சி னத்தொடுஇரு கண்கள்தழல் சிந்திடுவர்;
காது கைத்தசைஉ றுஞ்சுவர்;உ மிழ்ந்திடுவர்;
ஓய்வுஅ றக்கணைசொ ரிந்திடுவர்; வெந்துஅழிய
ஊரு வில்கணைபொ ழிந்துஅவைபி ளந்திடுவர்;
மாயை யொத்தமினல் என்றுஇரத மும்கடவு-
வார்;அ டிக்கடிப கர்ந்திடுவர் வன்சபதம். 200

தீர முற்றசுதர் மன்தொடுச ரம்திரள்கள்
சேர, அற்பமுற வும்தெரிச ரங்கள்கொடு
வார வெற்றிவிச யன்துகள்செய்து, ஐந்துகணை
மார்பில் விட்டு,இருச ரம்களம்று ழைந்துஉருவ,

---

198. கானம் - காடு, ஒல்திசை - திசைகளின் முடிவிடம், திகாந்தம என்பர்; அம்பரம் - ஆகாயம், சுடல்; கந்தரம் - மேகம்; அந்தரம் - இடம்; விசைத்து - வேகமாக.

200. ஊரு - தொடை.

வேரி மல்புயமது எண்கணைஇ டந்துஉருவ,
வீறு நெற்றிஉரு வும்படிஓர் ஐந்துகணை,
பார வில்சரமது ஒன்றுஇடற, ஒன்றுமுடி
பாரி னில்தள,வில் ஒண்கணைபொ ழிந்தனனே. 201

தாமன் மைத்துனன்வி டும்கணையில் நொந்துபரி
தாப முற்றுஅவன்ம யங்கியும்அ யர்ந்துவிழ,
வீம னுக்குஇளைய வன்சமர்து றந்துஅணையின்
மேல்இ ளைப்பறவி யர்ந்துஉடன்இ ருந்தளவில்,
ஏம முற்றுளத ளங்களொடும் மண்டலிகர்
ஏர்ப டைத்தலைவ ரும்தரணி யன்சுரதன்
மாம ணிக்கடல்ள னும்படைவ ளைந்தனர்கள்;
வாகை அர்ச்சுனன்ள முந்துஇகல்மு னைந்தனனே. 202

மாட விற்குணம்ள மும்தொனியில் எண்டிசையும்
மாவெ ருக்கொளவும், அண்டபகி ரண்டம்வெடி
யோடுஇ டத்தின்இட யின்குலம்அ னந்தம்ஒலி
ஓல மிட்டநிக ரும்தொனிமு ழங்கிஎழ,
வீடு சத்தமுகி லும்பொழித ரும்புனலை
மேவி டச்சிலையின் வெங்கணைசொ ரிந்து,கரி
நீடு பொற்பரிச யந்தனம்மி குந்ததளம்
நீறு பட்டுஅழித ரும்படிம லைந்தனனே. 203

"நேர்ள னக்குஎவர்கள்?" என்றுஉடன்நெ ருங்கிநெறி
நீதி வெற்றியர சன்சமர்மு னைந்திடுமுன்,
மாரி னிற்கணைஓர் ஐந்துநுதல் ஐந்துஉருவ,
வாரம் அற்பமுற வும்சரமது ஒன்றுஇடற
வீரன் விட்டு,இரத மும்சுழலது என்றுஉலைய-
வேசு ழற்சரமது ஒன்றுஉதைய வும்திகிரி
ஈரம் அற்றசுழல் பம்பரமது என்றுஅலைய-
வேக டித்தகணை யும்சுழல்செய் கின்றதுவே. 204

---

201. வேரி - மணமிக்க, வேரிப்புயம், மறபுயம் என்க, மாலைகளின் மணம புயத்தில்; சரமது ஒன்று பாரவில் இடற, பாரினில் முடிதள ஒன்று.

203 சயந்தனம் - தேர்.

204 .அற்பமுற - இழிவுப , ஒடிய, கடிதத - கூர்மையான

மாரு தச்சுழல்உ றும்சருகது என்றுஇரதம்
மாறு பட்டலையும் அங்கிரிஇ ரண்டுஇருகை
நாரில் பற்றி,"அரி நந்தனமு குந்த"என,
ஞான பத்தியில்நி னைந்தனன்;அ தன்பிறகு
தாரின் வில்சுரதன் நெஞ்சுபுயம் ஒண்களமது
ஆன மத்தகம்நு ழைந்திடமி குந்தகணை
மாரி விட்டு,அவன்ம யங்குதரு ணம்சுழலின்
வாளி தொட்டு,இரதம் ஒண்குறிசெய் கின்றனனே. 205

மாலி னுக்குஉரிய நண்பன்விடு வெம்பகழி
வாயு ஒத்துஇரத மும்கலிம டங்கல்என
மேலும் மிக்கவிசை கொண்டதுசு ழன்றளவில்
வீறு கெட்டுஇரத அங்கிரிக ரங்கொடுபின்
ஓல மிட்டகரி முன்புவரு கின்றவனை
ஊசி பற்றுமுயர் கந்தன்நிகர் சிந்தைசெய
வேலை யில்துயிலும் அந்தமுகில் வந்துசுழல்
வீறுஅ மர்த்திமதி யும்கொலிம றைந்தனனே. 206

தாதை விற்சுரத னும்துயர்அ கன்றுபர
தாப மற்றிடும்முன் இங்குஇவன்வ லம்புரியை
ஓதை யுற்றிடமு ழங்கினன்;மு ழங்குதொனி
ஓசை யில்குயின்மு கம்பெறுசெ ழும்பயிரை
யேதி றத்துஅயர்வுஒ ழிந்துஇனிதுஎ ழுந்தனர்க-
ளேஅ ருக்கன்மகன் மைந்தனும்அ டங்கலும்;மெய்
சேத முற்றுஅழித ளங்கள்அது கண்டுமதி
தேறி, அர்ச்சுனனை யுந்துதிசெய் கின்றனரே. 207

"வாரி யிற்பெருக வந்திடுத ளங்கள்அத-
மாய்அ ழித்ததுஇவன் எந்தவிதம்? மிஞ்சினவர்
நேரெ திர்த்தபுலி கண்டுமெலி கின்றஉழை
நேரது ஒத்தனர்கள்" என்றுஇவர்க ளும்கருதும்

---

205. அங்கிரி - தோக்கம்பம்; தாரின்வில் - வெற்றிமாலை சூடி யவில்லை உடைய;
206. கலி-ஆரவாரிக்கும், கரி - கசேந்திரன், வேலை - கடல்.
207. குயின் - மேகம்; அருககன் மகன்மைந்தன் - விடகீதனன்.
208 உழை - மான்; மேரை - மேருவை,செய்யுள விகாரம்,

ஓரி மைப்பில்உயிர் வந்ததுஎன வும்தெளிவி-
னோடுஉ ணர்ச்சியின்எ ழுந்துமுடி கொண்டுமக
மேரை ஒத்ததனு வும்கையிடை தங்க,மத-
வேள்நி கர்த்துஎதிர்வி ளம்புவன்வ ளம்பெறவே. 208

"நேர்ச மத்தன்என என்திருமுன் நின்று,முடி
நீக ழற்றினைஇ ரண்டுமுறை யும்;பன்முறை
தேர்து ணித்தனை;இ ரண்டுமுறை நொந்தபொழு-
தேள டுத்துஉனது சங்கினைமு ழங்கினை,தென்
மேர்நி கர்க்கஎன்முன் நின்றுளை;வி யந்துசமர்
வேறுஒ ருத்தரும்மு யன்றிலர்;ந யந்துஉரைசெய்து
ஊர்வ யப்பரிகொள் இன்று;அலது வென்றிமலர்
தோளி னில்பெறுவது என்றும்இலை" என்றனனே. 209

"ஆள்உ னக்குஅடிமை; இன்றுஉனது குந்தம்அறி-
யாது பற்றினன்;அ ரும்பிழைபொறு" என்றிடினும்
மீள விட்டிலன்;மெய்; என்கநகை கொண்டுவிழி
மேல்நெ ருப்புஎரிய வெஞ்சிலையில் ஒன்றுமுனை
வாளி வைத்துவிலகு என்றுவிசை கொண்டுகுறி
மார்பின் விட்டனன்இ ரைத்துஇடிற டுங்க;வர
நீள்ள ழிற்கணைஅ னந்தம்இவ னும்சொரிய
நீறு றத்தகன மும்செய்துநெ ருங்கியதே. 210

கூர்ப ளப்பளென வும்கதிர்அ னந்தம்ஒரு
கோல்ள னப்பல்உரு மும்குமுறி வந்துவிலி
மார்பி னுட்புக,வ ரைந்தபர மும்பறிய
மாம யக்கமொடுஅ யர்ந்துஉணர்வு அழிந்துஇரத
சார .....வி ழுந்தனன்இ ருந்தவர்கள்
தான்ந டுக்கமொடுஅ டங்கினர்ஒ டுங்கினர்கள்
ஓர்ப தைப்பும்அற வும்கடிகை ரெண்டுஅளவும்
ஊழ்வி திப்படிகி டந்துஅவன்எ ழுந்தனனே. 211

---

209. மேர் - மேருமலை, இன்று - இப்போது.

210. குந்தம் - குதிரை

211 வரைந்த - விரும்பி ஏற்றுக்கொண்ட; பரம் - கவசம்; பறிய - தொளைக்கப்பட

வீரர் மொய்க்கவிசை யன்தெளிவு வந்துமக
மேரை ஒத்தசிலை அங்கைகொடுள ழுந்தளவில்,
"வார வித்தகன்நீ; என்கணையது ஒன்றில்மிகு
வாளி விட்டும்அதை வென்றிலை;பி ளந்திடவும்
நேர்ள னைப்பொருதி; உன்பரியை யும்பெறுவை?
நீவ ழுத்து"கென வும்சுதர்ம னும்பகர,
நார ணர்க்குஉரிய நண்பன்வில வன்,"சுதர்ம!
நான்உ னைப்பொருது கொன்றிடுதல் இன்றுளிதே 212

(எழுசீர் ஆசிரிய விருத்தம்)

என்ன டாசுதர்மத் துவச நீசொலும்இ-
டும்பு?என் வன்கணைதொ டும்பிளாய்;
உன்னை நான்விடுவ தில்லை; துள்ளுவதை
ஒழிய டா"எனஉ றுக்கியே
பன்னி ரண்டுகணை ஏவி னான்;வில்இடு
பாணம் நாலினில்அ றுத்தபின்
உன்னி ஆறுகணை இவன்வி டப்பகழி
ஒருப தால்அவன்அ றுத்தனன். 213

ஆறு கோல்நுதலில் ஆறு கோல்அகலம்
ஆறு கோல்புயம்இ லக்குவைத்து
ஈறில் வீரன்இவ னேதொ டுக்கஅவன்
ஏவு முன்றதனி லேஅறுத்து
ஆறில் கோபமொடு அக்கி னிக்கணையை
அர்ச்சு னன்தொடுமுன் அங்குஅவன்
மாறி லாவருணன் வாளி தொட்டுஎரியை
மாற்றி யேமிகுதி சீற்றமாய் 214

வல்லி ருட்கணையை மற்ற வன்தொடஇவ்
வையம் எங்கும்இருள் மூடவே,
நல்ல சோடசஇ ராக்க திர்க்கணையி
னால்அ றுக்கநரன், மற்றவன்

---

212. எழுத்தளவில் - எழுந்தபோது.

213. இடும்பு - கருவமான சொல்.

வெல்லும் இந்துகணை தொடஇ வன்பரிதி
வெய்ய கோல்கொடுபி ளந்தனன்.
எல்லி வெங்கணையி னைத்தொ டுக்கஇவன்
இந்த்ர வாளிகொடுஅ றுத்தனன். 215

உரக வாளிதனை ஆல காலவிஷம்
ஒழுக வேஅவன்வி டுத்தனன்;
கெருட வாளிகொடுஅ றுத்துள றிந்துஉறுகி-
ரீடி கோல்கள்ஒரு அற்புதம்
கரவி லாசசர லாப மோடுஇருகை
கடுமை யோடுஇவன்உ டற்றவே
வெருவி லாதுஅவன்அ றுக்கு முன்கொடிய
வெஞ்சு ழற்கணையை வீசினான். 216

இரத மீதுஇவன்வி டுத்த கோல்அவண்இ-
சைந்துஅ றிந்ததுஇலை; அவனுமே
தெரிகொ ணாதுபிர மன்ச ரத்தைவிலி
தேரின் மீதுறவி டுத்தனன்;
கிரிடி கோல்எதிரி இரதம் மேவிஉறு
கிறுகி றென்றவிசை தவிரவற்
பரவு பம்பரமு டன்சு ழற்குநிகர்
பற்றி வண்மைகொடு சுற்றியே 217

வலிய வன்பிரம சரம்மி குந்தவிசை
வலிமை யோடுநரன் இரதமே
அலம லந்துஉலைய வேள டுத்துஉயர
அந்த ரத்திடைள ழுப்பியே
கெலிகொ ளக்கடுகு விரைவி னோடுசுழல்
கிறுகி றென்றதுசு ழன்றதால்
விலிச மர்த்தினொடுஇ ரதம்நி றுத்தஇய-
லாம லேஅலம லந்துபின் 218

---

215. சோடசம் - பதினாறு; இராக்கதிர் - சந்திரன்; நரன் - விசயன், எல்லி - சூரியன்.
216. அற்புதம் - ஒரு பேரெண். 10 ^{53}.

கரமி ரண்டுஇரத கால்பி டித்துஇரு
கண்கள் மூடி,"உப காரகா!
அரிஅ ரீ!உலக ரட்ச கா!"எனஅ-
னந்த நாமமும்நி னைந்தனன்
துரித மாய்அரசன் மகனும் மாயன்அடி
துதிசெய் தான்விசைய னுக்குமுன்
கரிவி ளிக்குமுனம் வந்த தாகஒரு
கணம தில்கரியன் முடுகினான் 219

(அடுத்தபாடல் சுவடியில் காணப்படவில்லை)

வந்த டைந்து,சுதர் மன்ச யந்தனம்அ
லைந்துஅ வன்சுழல மத்தியே
சிந்தும் மொய்ம்புஎதிரி நினைவுஅ றிந்து,"சமர்
செய்யும் வாறுநய நும்பியும்
முந்த உன்னும்முனம் வந்துஇ ருந்திகிரி
முன்சு ழன்றதைநி றுத்தினேன்
இந்த வாறுஅவன்அ றிந்தி டாவிதம்இ-
யம்பி டாதுஇரு"என ஓதியே. 221

"விசையன் ஈதுஉணர்கில் எனைவெ குண்டிடுவன்,
விள்ளொ ணாதது"என விரைந்துபோய்
இசையும் மீவெளியி னிற்சு ழன்றுஇரத
மேஎ ழும்பஅதில் எய்தியே
அசையொ ணாதவித மேபி டித்துஅவனி
மேல்நி றுத்தி,"அட அர்ச்சுனா!
சுசிச காயக!த னஞ்ச யா!கிருடி!
ஸ்வேத வாகன!து ரந்தரா! 222

சைவ சாரி!விசை யா!வில் வீரிய!ச-
யோக! பறிகுண!வில் பார்த்திபா!
தெய்வ ராஜகும ரா!எ னக்குஉரிய
சிலத னாகவரும் மைத்துனா!
கைவில் அரசிசர லாப காண்டிப!"எ-
னக்க ணன்புகல்மொ ழிக்குஎலாம்
தொய்வி லாதவிலி மதிஅ ழிந்து,ஒரு
சொல்லும் ஓதிலன்ம யங்கியே. 223

---

219. கரி - கசேந்திரன். 221. சயநதனம் - திகிரி, தேர்.

222. சுசி சகாயக - அக்கினிக்கு உதவியவனே, காண்டவவனம் எரிக்க.

மதிம யங்குமிகு சோப தாபமும்அ-
கற்றி, மார்பின்மிசை தட்டியே,
"உதவ வந்தனம்எ ழும்பு" கென்ன,அவன்
உபய கண்களும்வி ழித்துஎழுந்து,
"எதிரி கையில்எனை ஒப்பு வித்துஅகல்வது
இதுஉ மக்குமரி யாதையோ?
கதழ்வில் நின்பிறகுஇ தோஎய்து உற்றிடுவன்
என்று காட்டினில்ஒ ளிப்பதோ? 224

இன்ன வாறுசெயல் ஆகு மோ?"எனஇ-
யம்பும் நண்பனுடன் ஒதுவான்-
"உன்னும் மிக்கவி யம்செய் தாய்;அரனொடு
ஒத்து நீஅமர்உ டற்றினாய்;
கன்னல் ஏழரையி லேஅ டர்ந்துஅசுரர்
கால கேய(ர்)தக னம்செய்தாய்;
பொன்னி லங்கள்குடி ஏற்றி னாய்;வலிய
பொருவில் கைக்கடுமை வாய்ந்தநீ 225

வார வன்மைசர லாப மோடுகர
லாப மானதும றந்து.ஒனான்
தேரி லேபிரம பாணம் ஏவ,அதம்
செய்ய வும்பகழி இல்லையோ?
வீரன் நீஇரத மேஅ லைந்துஅலைய-
வேம யங்குவது புதுமை"என்று
ஏரின் மால்புவியி னிற்கு தித்துஇவுளி-
யின்னி டத்துறநெ ருங்கியே 226

தட்டி யேதடவி யுங்கொ டுத்துஇவுளி
தள்ளி டும்குடலை உள்தளி-
விட்டு வன்கயறு சிக்குள டுத்துநுக-
மேசெவ் வைப்படவி சித்துவில்
விட்ட கட்டழகன் விசையன் என்புநெரி-
வுற்ற தைச்செவைஇ ருத்தியே
முட்டி யேவெளிபி துங்கி டும்குடலை
முன்பு போலவும் நிறுத்தியே, 227

---

224 சுதழ்வில - விரைவில். 226. ஏரின் - அழகிய.

227. விகித்து - சுட்டி; நெரிவுற்றதை - உடைந்ததை, செவை - செவ்வையாக.

வச்சி ரக்கவச மும்செ வைப்படவ-
னைந்து, கச்சையதுஇ றுக்கியே
மிச்ச வெங்கதிர்ப ரப்பும் மாமகுட-
மேத ரித்து.ஒழுகு சோரியைப்
பச்ச மானபீ தாம்ப ரம்கொடுப-
ரிந்து மாற்றி,உடல் எங்ஙணும்
நச்ச ராவின்அணை யான்மி கத்தடவி,
நண்பின் அன்புமழை பொழியவே, 228

முன்னி ருந்தவலி தயிரி யத்தினிலும்
மும்ம டங்கின்அழல் மூச்செறிந்து,
"உன்னி யேஇரதம் நடத்தும் உம்முடைய
உதவி கொண்டுஅவன்மு டித்தலை
தன்னை யேவிழஅ றுப்பன்" என்றுளத-
னஞ்ச யன்றன்முகம் நோக்கியே
"என்நின் வல்லமை?பின் முன்ந டந்ததுஇலை;"
என்று தேர்விடவும் எண்ணினார். 229

தேர்வி டாதபடி மறுகி யோசனைசெய்-
தேஇ ருந்ததிரு மாலையே
கூர்வி லாசகுலி சாயு தன்சுரர்கள்
குரவன் நந்திமிசை சிவனுமாய்ச்
சார்வி அம்பினிடை யாய்,"அ னந்தசய-
னாஇ னித்தறுகல் தகுவதோ?
நீர்வி லங்கில்அவன் உமையு மேகவடு
நினைவி னால்வலிமை புரிகுவான்; 230

எனது வெண்கயிலை யொடுவை குந்தபிர-
மாண்ட மும்பொன்நகர் யாவுமே
தனது கொண்டிடுவேன்; யாம்இ ழந்துநிலை
தங்கி வைகும்இடம் எங்கணோ?
நினது நண்பன்அணி வாயில் வாளியைநி-
றுத்தி வெஞ்சினம்நி கழ்த்தவே
முனம்இ சைந்தனம்;அ வாறுஅ வன்றனைமு-
டித்தி நீ"எனமொ ழிந்தனர். 231

---

228 நச்சராவின் அணையான் - பாம்புப் படுக்கையனாகிய திருமால்.

230. குலிசாயுதன் - இந்திரன், சுரர்கள் குரவன் - வியாழன், விசும்பு - வான்; தறுகல் - தாமதித்தல், விலங்கில் - விலகினால்

சமயம் ஈதுசம யம்தி றம்கொடுஅமர்
சருகும்" என்றுஅரன்இ யம்பலால்
கமலை நண்பன்இர தம்க டாவுமுதல்
கடுகி யேரதம்ந டத்தியே
சுமுகம் ஈய,மனன் மகன்மு ராரியொடு
"சுவேத ஊர்தி!இர தத்தையே
அமடு உறாதுநிலை செய்கி லாதுஎன்ஒரு
அம்பி னால்அலம லப்பதோ? 232

நினது வன்பலனும் அனுமன் வன்பலனும்
நெடிய வன்பலனும் என்பலன்?
எனது வம்பதனில் இரத மும்பரியும்
ஏகி, அந்தரபி சாசுஅதாய்
நனிச யந்தனமொடு அலம லந்து,வெறி
ஞாளி ஒத்துவரல் நன்று;நீ
முனைவி ளங்குகணை யதுதெ ரிந்துசமர்
முடுக டா"எனமொ ழிந்தனன். 233

"நலத டாசுதர்ம ஏது துள்ளுறது
நாய்ந ரிச்சமரில் அயன்அரி
அலத ரன்பகழி தொடுவ தோ?கடவு
ளார்கள் கோபம்வரும் என்றுநான்
பலச ரம்தொடும்அ மர்க்கு நீஉடல்ப
யந்துஉ; "ன்சரம்வி டுத்துஅலோ
நிலைய ஆவியைநி றுத்தி னாய்?இனமும்
நிற்கு மோஉடலில் இன்னுயிர்?" 234

என்று முக்கணைத னைத்தெ ரிந்து,"இதனி-
லேஉன்" ஆவிகொள்வன்; இலையெனில்
வென்றி என்பெயரும் விசயன் அல்ல;இது
வில்லும் அல்;"எனவி ளம்பினான்.
நன்றுஇது என்றுநகை கொண்டு,"உன் முக்கணையை
நான்இம் முக்கணையி னால்அடர்ந்து,
ஒன்றுஇ ரண்டுஎனந றுக்கி லேன்எனில்இவ்
வுலக நாதன்அடி யேன்அலன்." 235

---

232. சுமுகம் ஈய - எதிரில் நிறுத்த. சுவேத ஊர்தி - அருச்சுனா; அமடுஉறாது - பதனழியாமல். இப்பாடலில் முராரியொடு என்பதறகுப் பதில் கிரீடியொடு என அருச்சுனைவிளிப்பதாக இருக்க வேண்டும்.

233 என்பலன் - என்ன வலிமை; ஞாளி - நாய்.

எனஇ ரண்டுபெயர் வஞ்சி னம்பகர-
வேமு ராரி,"அட அர்ச்சுனா!
சொனது எந்தவிதம்? எண்ணில் வாளிஇனி
தொடுத்தி டும்சமர்அ னைத்துமே
வினைய மோடுஅவன்அ றுத்துஎ றிந்துஇகலும்
வெற்றி யானதும்அ றிந்துநீ
மனது உரங்கொடுது ணிந்து முக்கணையில்
வலியன் ஆவிகொள வல்லையோ?" 236

"பார மோஇவனை வெல்லல் உந்தன்அருள்
பட்சம் என்னிடம்இ ருத்தலால்?
தீரன் வன்சிரசி னைப்ப றித்திடுவது
இல்லை யென்னில்இது என்னவில்?
சாரம் என்ன"என வில்லி நாணிமிசை
தன்னில் ஓர்சரம்இ ழுக்கும்முன்,
"வீர க்ருஷ்ணன்அவ தார வன்பலம்எ-
லாம்இவ் வாளிமிசை வைத்தனம்; 237

வீசு" கென்றுஅரிஉ ரைக்க, வில்விசையன்
விசிக மானதைவி டுத்தலும்,
ஆசு கம்தழல்ப ரப்பி அண்டபகி-
ரண்டம் எண்டிசைவெ டித்திட,
ஓசை வெண்டிரைகள் சுவறி வற்றஉல-
கங்க ளேநடுந டுங்கவே,
கூசி லாதுபல கோடி கோடிஇடி
கூடியே குமுறல் ஒத்ததே. 238

"தந்தை தாய்மொழித னக்குஇ ணங்கும்ஒரு
தனய னாகில்அவன் விடுசரம்
சிந்து" கென்றுஒருசி லீமு கத்தைஒரு
சிலையில் வைத்துறவி டுத்தனன்.
வந்த வாளிதனை அந்த ரத்திடைம-
றித்துஇ ரண்டுபட வெட்டியே
சுந்த ரச்சுதர்ம செயமென் (டே)றதொனிசெய்
தேய டங்கியது தூணியில். 239

---

238. ஆசுகம் - அம்பு

ஈது கண்டஇரு கண்கள் செந்தழல்இ-
றைக்க வேகமுடன் ஓர்கணை
கோதை தங்குசிலை நாணில் வைக்க,"மிகு
கொற்ற மாம்பரசு ராமனாய்ப்
பூத லங்களவை தானம் ஈந்தபலன்
போத வைத்துஎனைவிடு" என்றலும்
காது கைதழுவ வேமி குத்தவிசை
காண வேகடிது விட்டனன். 240

முற்க டுங்கணையில் எண்ம டங்குஎனமு-
ரண்கொடு ஏகியச ரத்தின்மேல்
விற்கை வல்லன்ஒரு கணைஎ டுத்து,"எனது
வேந்தன் எந்தைநெறி யான்எனில்
தற்க மாகஇரு சரம்அ றுத்துஉதவு;
தரணி தானபலம் வெறிதுஎன
வற்க மாலிடம்உ ரைத்து மீள்தி"என
வாளி ஒன்றுஅவன்வி டுத்தனன். 241

விடுவி டென்றுகடு விசைய தாகவரு
விசையன் வாளிதனை வழிமறித்து,
அடல்பு ரிந்து,நடு வைத்து ணித்து,இடது
அணிபு யத்தினில்அ றைந்து,"ஐயா!
புடவி தானபலன் ஈது போதும்அல"
என்று ஆலொடுபு கன்னுமீண் -
டிடவி தானசுதர் மன்றன் ஆவமிசை-
யேய டைந்ததுபு யங்கம்ந(ர்) 242

"ஏஇ ரண்டும்அவம் ஆகு மோ?"எனஇ-
டைந்துஅ யர்ந்துஎனசெய் வோம்எனக்
கோவ லன்றன்முகம் நோக்க, நாணியகு-
றிப்புஅ றிந்துஅரிமு குந்தனும்,
"நாவில் வந்தபடி சபதம் ஓதிநடு-
வாய்வி ழிக்கில்நயம் ஏதுசொல்?
நீவிடு ஓர்கணையுண்டு அதுவும் மோசமுறில்
நீயும் நானும்என செய்வதே? 243

---

241. வெறிது - பயனற்றது. 242. புடவி - பூமி, ஆவம் - அம்புறாத்தூணி; புயவகம் - பாம்பு.
243. ஏ-அம்பு; அவம் ஆகுமோ - பயனற்றுப போகுமோ

தயிரி யத்தைவிடல்; அன்று மேருவிலி
தன்னு டன்பொருவ தற்குநேர்
வயிர முற்றுநிலு கென்று ராமன்அவ-
தார மீதில்உள பலம்எலாம்
இயலும் வாளியினில் வைத்தேன் ஏவுகென-
வேஇ ராமசரம் ஒப்பதுஓர்
செயம்மி குத்தகணை தூப தீபமொடு
சிலையில் வைத்துஉறவி டுத்தனன் 244

கந்த ரக்குறிய தாய்வி டுத்தகணை
கடுகு கோடையிடி அற்புதம்
தொந்த மாகவொரு கணையும் ரூபம்ஒரு
கோடி கோடிஇடி தோற்றமாய்
உந்தி, உக்ரபிர சண்ட தண்டஉத்-
தண்ட அக்கினிம டங்கலாய்ச்
சந்த்ர சூரியர்ம யங்க வே,திசைகள்
தப்ப, உம்பர்கள்து ணுக்கவே, 245

அட்ட நாகமுடன் அட்ட பாலகரும்
அட்ட திக்கயமும் அலறவே,
தட்டுஇல் வாரிசுவ றிக்கு ழம்ப,நெடு
சக்ர வாளகிரி நெரியவே,
கிட்டி லாதமக மேரு வேரினொடு
கிடுகி டென்றுஉறந டுங்கவே,
தொட்ட வாளிசெல அவனும் மற்றும்ஒரு
தொடையி னோடுஇனிது சொல்லுவான். 246

"எனது தேவிபதி விரதை யாகில்,அடி-
யேனும் மால்அடியன் ஆம்எனில
தொனிக ளோடுவரு பாண மானதுஇரு
துண்ட தாய்விழந றுக்கியே,

---

244. விடல - விட்டுவிடாதே, வாளி - அம்பு.

245. உக்ர - பயங்கரமான, பிரசண்ட - வேகமான, தண்ட - தண்டனை அளிப்பதான; உத்தண்ட - வலிமை மிக்க, மடங்கல் - இடி.

246. தட்டுஇல் - குற்றமற்ற, கிட்டிலாத - எளிதில் நெருங்க முடியாத; தொடை - அம்பு.

அனக னானதொரு க்ருஷ்ண தேவன்வல
மான வாகுவினில் எழுதியே
கனம தாகவரு" கென்று வில்லின்மிசை
கடுமை யாகவும்வி டுத்தனன். 247

அமிர்த கேதன்மகன் விட்ட வெம்பகழி
அர்ச்சு னன்கணையை முடுகியே,
உமிழ்க திர்க்கிரிட சுதர்ம ராசனிடம்
உனைவி டேன்எனநெ ருங்கியே,
அமளி யாகஅட லதுதொ டங்கிநடு
அற்றம்ஆகி,அரி வலதுமொய்ம்-
பிடம்அ றைந்துஇகலின் வந்தது யான்எனவும்
எய்து தூணியில்அ டைந்ததே. 248

மதிம யங்கியகி ரீடி மார்பின்மிசை
மால்அ றைந்தும்அய ராமலே
துதிசெய் மந்திரம்எ னத்தெ ளிந்துமறை
துதிசெய் தான்;அலகு துண்டம்மூன்று
அதிர வேகமுட னேஎ ழுந்துகிரி-
வத்தை ஒன்றுஅற அறுத்தது;ஒன்று
அதிர வேஇருபு யம்து ணித்த;இடை
ஒன்று தான்அறமு றித்ததே. 249

ஈறில் விட்டகணை யேக ளம்திருகி-
யேஅ டைந்ததுஇவன் ஆவம்;முன்
சூர வேநடுவில் விட்ட வாளிஇரு
தோள்அ ரிந்துபுகும் தூணியில்;
மாறி லாஇடைது ணித்து முன்னம்விடு
வாளி தூணியில்அ டைந்திடத்
தேறி னார்அமரர்; அய்யன் அரன்குலிசன்
தெய்வ ராசனும்ம கிழ்ச்சியாய் 250

---

247. அனகன் - மாசற்றவன், வாகு - புயம்.
248. அற்றம் ஆகி - வலிமை குன்றி.
249. அலகு - இங்கு அம்பு; கிரிவம் - சுழுத்து.
250 சூரவே - அஞ்சும்படி.

மகர குண்டலகி ரீடம் நீறுஉருத்தி-
ராக்கம் வில்வமொடு துளசியும்
மிகஇ லங்க,அரி நாமம் ஆயிரமு-
மேபு கழ்ந்து,உயர வேஎழுந்து,
இகழ்வில்"நான்செய்அப சார மும்பொறும்;இ-
ரங்கும்; ரட்சியும்"எ னச்சொலித்
தகுதி மால்வலது துடையில் வைக்க,அரி
தாரை கொண்டதுஇரு கண்களே. 251

கிருபை யங்கடவு ளான மால்விழிகள்
கெழுமி யேசொரியும் மணிகளால்
அறம்உ வந்தசுதர் மன்சி ரத்தில்அபி-
ஷேக முஞ்செய்துக லங்கியே,
இரண மும்துகில்கொ டேது டைத்துஅருள்சி-
றந்துஅ டிக்கடியின் முத்தியே,
விறல்மு குந்தன்இரு விழியில் ஒற்றினன்வி
ரும்பி மேலும்மென் மேலுமே. 252

(கலிவிருத்தம்)

சீத ரன்சிர சைக்கரத் தேந்தியே
தாதை கைப்படத் தாணிஎ றிந்தனன்;
ஆத ரத்தினொடு அங்கையில் ஏந்தியே
பேத லித்துஅயர்ந் தான்பெரு மூச்சுடன். 253

அயர்ந்து பின்தெளிந் தான்;சிரம் நோக்கினான்;
"செயம்த ரும்திறல் சேவக னே!உனைப்
பயந்த யான்படும் பாடுஅறி யாய்கொலோ?
வியந்த வீட்டினை விரும்பிந டந்தையால். 254

உகம்இ ரண்டும்உன் ஆண்மையைக் கொண்டுஅலோ
புகழ்ப ரந்திடப் பூப்புரந் தேன்யான்?
திகழும் மூவரும் தேவரும் அஞ்சிய
இகல்வில் லாண்மைகொண்டு எய்தியது எங்கணோ? 255

252. கெழுமி - நிறை பு. 253. தாணி - வலிமை கொடுத்து.
254. கொண்டு அலோ - கொண்ட ல்லவோ, பு - உலகம்

நின்னி டத்தும்நெ ருங்கிஓர் ஆயுதம்
சென்னி கொள்ளத்தி றத்ததுஎங்கு உள்ளதோ?
என்ன வாறுஇறந் தாய்என ஓர்கிலேன்;
உன்னை விட்டுஉயிர் உய்வது யான்கொலோ? 256

மெய்யுன் வீரமும் வில்பிர தாபமும்
கைவில் ஆண்மைகள் தம்மையும் காண்பனோ?
தையல் பாகனைத் தாமனைப் பூசனை
செய்யும் மெய்யனைத் தீண்டிய கோல்எதோ? 257

நாணி ருக்க,நின் நம்பிஇ ருக்க,நீ
தானி றக்கத்த காதுத காது;ஐயா!
தேனி ருக்கு(ம்நல்) திருமலர் மார்பனே!
வானி ருக்கம கிழ்ந்தது;என் மைந்தனே!" 258

என்று மைந்தன்எ ழிற்பிர தாபமும்
வென்றி வின்மையும் மேன்மையும் ஆண்மையும்
ஒன்றி லாமல்உ ரைத்துஉரைத்து ஏங்கியே,
பின்றை யும்பெரு மூச்சொடுஅ யர்ந்தனன். 259

இந்த வாறுஅர சன்தவித்து ஏங்கினன்;
சந்த மானசு தர்மன்ச டத்துஎழும்
அந்த மானசு வாலைஅ டங்கலும்
உந்தி மாயன்ஒ ருத்தலித்து உண்டனன் 260

"ஈறில் இத்தவ மேஎவர் செய்தது?இப்
பேறு பெற்றவர் யார்?இவற் பெற்றதாய்
மாறி லாக்கதி வாழ்வுபெற் றாள்"எனத்
தேறு தேவரும் யாரும்தி கைத்தனர் 261

அந்த வேளையி லே அமிர் தத்துசன்
சந்த மானச கத்திர நாமமும்
சிந்தை கூர்த்தி யானம தாய்ப்புகழ்ந்து,
உந்தி பூத்தவ னேஎன ஓதுவான் 262

---

259. வினமை - வில்லாற்றல்.

260. சநதமாலை - அழகிய. சடம் - உடல்; அந்த - சுட்டுப்பொருள்; மான - பெருமைமிக்க.

"ஆவி யானசு வாலைஅ டங்கலும்
தேவ ரீர்புசித் தீர்;வெறும் சென்னியை
ஏவி னீர்எனக்கு; ஏன்?இதும் கைக்கொளும்;
ஆவ லாம்அடி யார்க்குளளிது ஆனவா!" 263

என்றுஉ ரைத்துஅவன் சென்னிள நிந்திட,
அன்று மாயவன் அங்கையில் ஏந்தியே,
குன்ற வில்லிகு நித்தம திப்புஅறிந்து,
ஒன்ற அந்தரத்து உற்றிட வீசினான் 264

வீசு சென்னியை மெத்தவி ரும்பியே,
கேச வன்கொடை ஈதுஎனக் கிட்டியே,
"பாச மாய்இவை பற்று"என நந்தியும்
ஆசு டன்பிடித்து ஐமுகற்கு ஈந்தனன். 265

மகர குண்டல மாமணி மோலியும்
திகழும் ஒண்கதிர் செய்திட வேசிரம்
புகலும் "முக்கட் புராரி! பசுபதி!
அகிஅ ணிந்தருள் சோதி(யின்) ஆகரா! 266

சங்க ராசிவ! சம்புச தாசிவா!
செங்க ராதிரி யம்பக! தோல்பிடிக்
கும்க ராக்கொல்லி உன்உரப் பூணிலே
தங்குஅ ராவொடு தானிஎன்று ஏவினான்" 267

தையல் பாகன்த னைப்புகழ் சென்னியைக்
கையில் ஏந்தி,முக் கண்களில் ஒற்றியே,
ஐயை பத்தன்அன் பாகவும் வந்ததால்
மையில் இச்சிரம் வைக்கஉண் டோதலம்? 268

"என்பு மாலிகைக் கேநடு நாயகம்
பொன்பு ரந்தரன் புத்திரன் ஈந்தது"என்று

---

264. குன்றவிலவி - சிவபெருமான்.
265 ஆசுடன் - விரைவில், ஐமுகன் - சிவபிரான்.
266. அகி - பாம்பு; ஆகரர் - வடிவுடையவர்.
267. தோல பிடிக்கும் கராக்கொல்வி - கசேந்திரனைப் பற்றிய முதலையைக் கொன்ற திருமால்; தானி - இடமாகக் கொள்
268. மை - மேகம் ஆகுபெயராக ஆகாயம், இருமடியாக வானுலகம்; அல்வது குற்றமற்ற சிரம் எனினும் அமையும்.

அன்பு நாரிக்குஅ தன்எழில் காட்டியே,
நன்ப ணிக்கு நடுவைத்து அணிந்தனர். 269

குல்லை வில்வமும் கொண்டருத் ராக்கமும்
வில்லெ றிக்கும் வெயில்மணி மோலியும்
புல்லு சென்னிபு ராரித ரித்தபின்
அல்லல் நீங்கி அகமகிழ் வாகியே, 270

சிவக ணங்களு டன்சிவ நாரியும்
கவினு றும்கயி லாசம்அ டைந்தனர்
நவம்இது என்றுஅணி நான்முகன் மெய்மகிழ்ந்து
அவமில் சத்திய லோகம்அ டைந்தனன் 271

(அடுத்தபாடல் சுவடியில் காணப்படவில்லை)

தேவர் பூமழை சிந்திய குப்பைகள்
தாவு தேர்கள்பு தைந்தன; தர்மமும்
மேவும் வில்லிதன் மெய்யும் நிமிர்ந்தன;
ஆவ லாய்மகிழ்ந்து உம்பரும் ஆர்த்தனர் 273

ஐயர் கூட்டமும், ஆயிரம் கண்ணனும்
மைஇ லாதம கிழ்ச்சிகள் தம்முடன்
தெய்வ லோகமும் சேர்ந்தனர்; கூர்ந்தனர்
ஐயம் நீங்கிக் கடவுளர் யாருமே 274

என்று மாமுனி கூற, இராசனும்
"நன்று நன்றுஇதுஉன் நாஅமிர் தம்செவி
இன்று கேட்டுஎன்இ தயம்குளிர்ந் தேன்யான்;
நன்றும் இக்கதைக்கு ஒப்புஇலை;" என்றனன் 275

சுதர்மத்துசன் போர்ச் சருக்கம் முற்றும்
ஆகச்சருக்கம் 9க்கு விருத்தம் 1283

---

269. நாரி - இங்குப் பார்வதி; பணி - இரட்டுற மொழிதலாகப் பாம்பு, ஆபரணம் ஆகிய இரண்டையும் சுட்டியது. 270 வில் - ஒளி. 271. நவம் - புதுமையானது.
274. மை இலாத - குறைமற்ற, குறைவற்ற நிறைவான
275. மாமுனி - வைசம்பாயனர்; இராசன்.

10. சுரதத்துசன் போர்ச் சருக்கம்

(கலிவிருத்தம்)

மச்சம்கம டம்திண்களிறு அரிவண்குறள் பரசின்
கைச்சுந்தரன் எனவும்சிலை கவின்அங்கையின் நலமும்
பச்சம்புரி பவனும்துணை பறிஇன்புறு பரனும்
அச்சம்தவிர் தரவந்தவன் அருள்பொங்குஅரி ஹரியே. 1

"சிவன்நான்முகன் மகவான்அம ரர்கள்சேரஅ கன்ற
நவமானதின் மேல்ஏது?உரை நவிலீர்;"என அரசன்
தவமாமுனி தனையேவின வியதால்,"உயர் தரணி
அவிர்வாருண திசைஏகினன்; மகிபா"என அருள்வான். 2

சிவன், அம்பிகை, மகன்ஐங்கரன், திரியம்பக முருக-
னவன்,நந்தி,பி ரமன்,இந்திரன், அருள்உம்பர்கள், கடவுள்
எவரும்தமது உழைதங்கினர்; என்றும்குட திசையில்
குவடின்கணில் மறைகின்றனன்; குவில்பொங்கினது இருளே. 3

செயதுந்துபி ரணதுந்துபி திகழ்அஞ்சுஒலி யுடனே
வயவன்செய விசயன்திரு மகனும்தள மனரும்
அயலின்புடை உறைகின்றனர்; அமிர்தன்சுர தனுமே
இயல்பின்படை யுடன்அங்குஒரு புடைநண்ணியி ருந்தார். 4

மதிமந்த்ரிக ளொடுதந்த்ரிகள் மகனும்செக பதியும்,
"விதியின்படி சுதர்மன்றனை விசயன்கணை வெலுமோ?
சுதர்மன்சமர் முனம்வெங்கணை தொடுகின்றவர் உளரோ?
உதயன்பொழுது அவியும்பதம் உடல்கின்றது;இவ் வொருவன் 5

---

1. மசசம் - மீன்; கமடம் - ஆமை, களிறு - பன்றி, அரி - சிங்கம், நரசிங்கம், குறள் - வாமனர், பரசின்கைச்சுந்தரன்-பரசுராமர்; சிலை - கோதண்டம்: பரி - கவர்ப்பை: பரி இன்புறு பரன்-பலராமர்.
2. தரணி - சூரியன், வாருண திசை - மேற்கு.
3. குடதிசை - மேற்கு, குவடின்கணில - குவட்டின்கண, மலையில், உருபுமேல உருபு, குவில் - உலகில.
4. அஞ்சுஒலி - பஞ்சவாததியம், தள மனர் - படையில் உள்ள அரசர்
5. உதயன் பொழுது - சூரியனுக்குரிய பகல.அவியும்பதம் - முடியும் நேரம், உடல்கின்றது - விளங்குகிறது.

திசைஎங்கணும் விசயம்புரி திறம்இன்றுஅறி குவதாய்
இசையும்சமர் புரிகின்றனன்; இகல்சிந்துவில் வலியன்
சசிவங்கிச நிபுணன்,தச ரதன்மைந்தனில் வலியாய்
விசிகங்கொடு தகனம்செயும் விதம்என்புது மையதே! 6

எனையன்றியும் இகல்கின்றவர் இலை;வென்றியின் நாளை
முனியின்சமர் பொருதுஅங்குஅவன் முடிகொண்டிடு வேன்;அலது
அனவன்கையில் மடிவன்பரி யதுமுன்புற வே;மெய்;
எனவும்சுர தனும்நன்றுஎன இறைவன்கழல் தொழுதே, 7

"இவனோஎதிர் நினது ஆண்மைமுன்? எளியேன்அமர் புரியின்
சிவனோநிகர்? அரியோநிகர்? திசைமாமுகன் எதிரோ?
அவனோடுஇக லுவன்நாளையில்; அவன்மாமுடி கொளுவேன்;
தவரால்அவன் வெலிலேபரி தனைநேர்விடு குவதே." 8

சுரதத்துசன் இவைசெப்பிய சொலைமெய்ப்பொடு உவந்தே
அரியைப்புகழ் அமிர்தத்துசன் அவனுக்குஉற விடைதந்து
உரமுற்றுஉளில் சயனித்தனன். உபயத்துஅனி கமுமே
இரவுத்துயில் ஒழியக்கதிர் இனிதாகஎ முந்தான். 9

(10 ஆம் பாடல் சுவடியில் எழுதப்பெறவில்லை)

சவரட்சணை செயும்வித்தகர் தளகர்த்தரில் நால்வர்
அவம்அற்றுஅணி முனையில்சுர தனும்நட்பட அரசும்,
நவமுற்றிட அவன்முற்பட நயவெற்றிமன் னவரும்,
துவசத்துஅணி நிரைவைத்தன(ர்) சுரதத்துவ சனுமே. 11

இடியும்கடல் ஒலிபுக்கிட இயம்அஞ்சும்மு ழங்க,
அடலின்சுர தனும்உற்றனன் அகல்உம்பர்ந டுங்க;
படைஅம்புஎன அணிவைத்துஇவன் பகவன்சுதன் நந்தன்
திடம்உந்துஅணி சம்ரட்சணை செயும்என்றுபு கன்றே, 12

---

6. சிந்து - கடல், சசி வங்கிசம் - சந்திர குலம், விசிகம் - அம்பு.
8. தவராவ் - வில்வினாவ.
9. அனிகம் - படை
11. சவரட்சணை - சம்ரட்சணை, பாதுகாத்தல
12. நந்தன் - மகன், இங்கு பிரதியுமனன் மகனாகிய அநிருத்தன்

அணியின்முனை விடகீதனன், அவன்பின்இரு வோர்கள்
உணர்சாத்தகி அநுசாளுவன் உறைவோர்;இவர் பின்னே
மணிமேனியன் விடுதேரினில் வருபற்குணன், இருபால்
குணபத்திர கிரியான்,மகன்; குதையில்துவ ரையுளோர். 13

நீலத்துச னையும்பேரணி நிற்கச்சது வர்க்க
வேலைப்படை தனைஅம்புஎன விரகாகநி றுத்தி
ஆலித்துற விடகீதனன் அணிவைத்துமுன் நிற்க
ஆலில்துயில் பவன்உற்றுஇரு அக்கம்களி கொண்டே? 14

"வில்லால்மிகு சுதர்மன்தனில் விரகன்சுர தனுமே;
பொல்லாதவன் இவனோடுஅடல் பொருவார்எவர் ஐயா?
அல்லாதுஅவன் ஒப்பாய்;அகம் அன்போடும்இ ரங்கா
நில்லாதுபின் ஏகிச்சமர் நேர்வோம்"என ஓத, 15

"எனவாறுஉரை செய்தீர்?அணி இயல்பானது உலைத்தே
பினில்ஏகுதல் முறையோ?அணி பேணும்சமர் வீரர்
முனைசெய்குவ ரோ?நம்தளம் முழுதும்பழு துறுமே?
வினையில்பிற கிட்டுஓடிடில் நமைவிட்டிடு வானோ? 16

நாம்பின்னிடி லேமுப்புவி நகைசெய்திடும்; நன்றோ?
ஓம்பும்தொழில் உடையாய்மனம் உலராதுஇரும்" என்றான்.
"வீம்புஒன்றுபி டித்தாய்!தளம் மெலியாதுஎதிர் நின்றால்
ஏம்பும்கணை ஒன்றால்நமது இருவோர்உயிர் கொள்வான் 17

மீண்டுஉன்படை எல்லாம்ஒரு விசிகத்தில்அ றுப்பான்
மாண்டுஅங்கம்இ ழந்தான்பழி வாங்கத்துணி வானான்
மூண்டும்சமர் வயிரம்கொடு முனைருத்திர வேடம்
பூண்டுஇங்குஉற லாலேபுறம் போனால்நலது" என்றான். 18

---

13 பதத்திர கிரியான் - எமனாசுரன்; மகன் - சுகலீலன்; குதை - அம்பின் பின்பகுதி. அத்திரவயுசுதின் பின்புறம

14. ஆலித்துற - மகிழ்சசியடைய.

16. அணி இயலபானது உலைத்தே - வியூசுத்தின் தன்மையை அழித்து

17. உவராது - வாட மால

18 மாண்டு - காவம் தாழ்த்தி. அகம் இழந்தான் மாணடு பழிவாங்க என இையையும்; வயிரம் - பகைமை.

"மதிசெப்பிய படிஒப்புவர் வணிகர்க்குஇது புத்தி;
முதுசத்திரி யர்கள்வித்தினில் முளைத்தான்இது கொள்ளான்;
கதிர்பெற்றவன் விடுகட்செவி களம்எட்டிடும் முனம்நீ
பதியத்தலை பணியச்சொன பயன்ஒத்ததுஇது; ஐயா! 19

அந்நாள்தலை பணியாதுஅவன் அம்பானது பிழையாய்ப்
பின்ஓடிய கணைமேல்முகம் பேராதுஒரு கணையால்
உன்னாமுனர் அறுத்தேஉர முற்றோன்அல வோயான்?
இந்நாளினில் அவன்அல்லது யான்வேறுடை யேனோ? 20

இன்றேபொழுது அவியும்முனம் இவன்ஆவிகொ ளேனேல்
வென்றுஆடல்கொள் வில்லோஇது? விசயன்பெயர் நானோ?
குன்றாதுஅவன் மேலாய்உயிர் கொன்றால்அது நன்றே;
ஒன்றாகிய பூஎங்கணும் ஊன்என்புஉறு மோதான்? 21

ஒருக்கால்இரு கால்உன்சொலில் ஒன்றாதும றுத்தேன்;
தருக்காய்இரு; கோபம்பொறு; தருமாதிபன் அறமே
செருக்காகிய செயமேதரும்: சீவன்அணு, இதனைப்
பெருக்காகவும் பேணேன்"எனப் பெருமான்முகம் நோக்கி, 22

"உயிர்பேணுக நீ,தேர்கொடு கைத்தூரம்உ கைத்தே
அயல்போ"என வே,செந்தழல் அக்கங்கள்உ குக்கச்
செயிரோடுஉல கத்தேஎதிர் திக்கென்றுகு தித்தான்;
இயல்பாகிய மாயன்இர தத்தைக்கொடு சென்றான். 23

வெருவிக்கொடு செல்வோரினும் மிக்காகந டத்தித்
துரிதத்துடன் நால்காதரை தூரத்தினில் நின்றான்;
இரதத்தினை மாசாத்தகி யேமுன்பில்நி றுத்தி,
"விருதுஉற்றம னோதேர்மிசை மேவு"என்றுப ணிந்தான். 24

நன்றுஎன்றுஅவன் அருள்தேர்மிசை நரநாமனும் வெய்தில்
சென்றுஉந்தினன் அறுமான்உறு தேர்போனது கண்டே,
"இன்றுஎன்சம ருக்குஅஞ்சிஇ டைந்துஓடுதல் காண்மின்
குன்றம்கைஎ டுத்தோன்வெல்கு ரங்குக்கொடி யோனும்" 25

---

19. கதிரபெற்றவன் - சூரியகுமாரன. கன்னன்; சுடசெவி- நாகாஸ்திரம்; களம் - கழுத்து.
23. தருகு - ஆண்மை. 23. செயிரோடு - கினத்துடன்; உலகத்தே - நிலத்தின் மீது.
24. வெருவிக்கொடு - பயந்துகொண்டு, நால்காதரை - நாலரைக்காதம்.
25. வெயதில் - விரைவில்; குன்றம் கை எடுததோன் - தோவாததன மலையை ஏந்திய கண்ணன்.
இங்கு எண்ணும்மை விரிக்க, குரங்குக கொடி உடையோன் - அருச்சுனன்.

எனவேவரு தளநாயக ருடனேசுர தன்தான்
முனையோடுஉரை செய்தே,"புவி மூன்றுஓடினும் இன்றே
தனுவாளியில் வெல்வேன்நொடி தனிலே;அட பாகா!
இனிவீறொடு விடடாரதம்" எனஓதினன் முனிவாய் 26

சரவேகம்அ நிலவேகம்இ ரவிவேகம்அ தனிலே
விரைவாய்இர தமுமேசெல விடுவேன்என விட்டான்.
"கரவாய்வர லாமோ?ஒரு கணநாழிகை எனினும்
செருவானது புரி,நீஒரு செயவீரியன் அலவோ?" 27

இவ்வாறுஉரை செய்தேமுடு கிடும்வேலையில் நெடுமால்
வெவ்வாசியை விடுபாகனும் மேலாம்விச யனுமாய்க்
குவ்வார்கலி யேதாவிய கொடிமீதுஅநு மனுமாய்ச்
செவ்வாய்மதம் மொழிவானுட திட்டிக்குஎதிர் கண்டே, 28

"நீயோமதி குலன்அர்ச்சுனன்? நீசககிரி மகனோ?
நீயோவனம் எரிசெய்தவன்? நீபற்குணன் நரனோ?
நீயோவிச யம்செய்தவன்? நீயோதனஞ் சயனும்?
நீயோதரு மன்பின்வன்? நீயோஅரி சிலதன்? 29

திறல்வெம்பரி சம்ரட்சணை செயவந்தவில் மகன்நீ
விறல்தங்கிய எதிராளியை வினைசெய்துவெ லாமல்
புறமும்செல லாமோ?மதி போமோ?கரவு ஆமோ?
உறுவன்பிற புரம்எய்தினும்; உனையான்விடு வேனோ? 30

கோள்அஞ்சிய மன்உத்தர குருபூமியில் இவுளி
வாளம்பெற விடுகின்றதுஎன்? மதிகெட்டவ னே!நீ
நீளம்பெற நின்வல்லமை நிலையாஎழு துவதேன்?
வேள்அம்புஅர னிடம்எய்திய விதம்ஒத்ததுஉன் மதமே. 31

பரிநெற்றியில் எழுதிக்கொடு படம்வைத்துள படிவீம்பு
உரம்உக்கிரம் எங்கே?முகம் உறும்மீசைஉ டைத்தாய்ச்
சிரம்வைத்துள முடியும்சிலை யதுபற்றிய கரமோடு
அரிபற்றிய எனைவென்று,உனது அரிபற்றிலை ஏனோ, 32

---

27. அநில வேகம் - வாயுவேகம.

28. வெவ்வாசி - வேகம மிக்க குதிரை; கு ஆகலி - பூமியையும் கடலையும், திட்டி - கண.

29 சக்கிரி - இந்திரன். சிலதன் - நண்பன். 30. பிற புரம் - வேறு உலகம்.

31. கோள் - இடையூறு; வாளம் பெற - வட்டமிடுமாறு; வேள் - மன்மதன்;

விசையா!தயி ரியவல்லமை விடவேண்டுவது என்நீ?
வசைதான்அகல் தருகூஷ்த்ரியன் மகன்நீஎனில் அமர்செய்து
இசைவாய்எனை வென்றேபரி யேகொண்டக லாமல்
நசைதீர்) ந்திட நீஓடுதல் நன்றோ?உளம் மருண்டோ? 33

மனம்அஞ்சிய உன்மேல்முதல் அமர்செய்கிலன்; வலிய
நனிமுன்கணை தொடு;பின்கணை நானும்தொட" என்றான்;
"குனிவெஞ்சிலை எடடா;மனர் குலன்நீஎனில்" எனவும்,
வினயம்கொடு ரத்மான்னதை விசைகொண்டுஎதிர் விட்டான். 34

கஇர்தேர்என வேசென்றது கதிர்மண்டலம் அளவும்;
குதிமாருதி நடனம்புரி கொடியாடையி னுடனே
எதிர்மாயன்உ கைத்துஊர்தரும் இயல்பானது கண்டே,
அதிரூபக சுரதன்சில அடைவாய்மொழி பகர்வான் 35

"அடாபற்குணன் எனின்முன்அணை, அரிகேசவன் உகையப்
படிசெற்றனை; உனில்அல்லது பயில்என்னிடம் இலையோ?
உடல்முற்றுஉளம் உயிர்முற்றுஉறை குவனேஉலகு உண்டோன்,
மிடல்வெற்றிஉன் விகடத்தையும் வெய்துஇங்குஅழி செய்வேன்" 36

எனவேவில்வ ளைத்தேவிச மேகக்கிய பாண
இனம்ஆயிரம் பதினாயிரம் நூறாயிரம் கோடி
அனதாய்இறு தியதாய்விடும் அளவற்றச ரத்தை
உனிமாதவ(ன்) விசயன்உரு வுடனேஎதிர் நின்றே.

தாராதர மதில்மிக்குஉள சரமாரிபொ ழிந்தே,
நேராய்எதிர் வருகோல்களை நிர்த்தூளிப டுத்திப்
போர்ஆசுகம் இருவெம்புயல் பொழிகின்றது போலே
சோராதுஇரு வோரும்கணை சொரிகின்றனர் மென்மேல். 38

திகைமூடின; வெளிமூடின, திரைமூடின; செகமும்
நகைமூடின; கணையும்கணை நலியும்சமர் உடலப்
புகை மூடின; எரிமூடின; புவனங்கள்அ னைத்தும்
தகையாதுமென் மேலும்கணை தறுகாதுசொ ரிந்தார் 39

---

35. அரி பற்றிய - பகைமை பாராட்டிய. அரிபறறிலை - குதிரை மீட்கவில்லை.
33. நசை - வீரனுக்குரிய ஒழுசுகம் 36. உனில் - உன்னிடத்தில், விகடம - பெருமை.
38. தாராதரம - மேகம், நிரந்தரளி படுதி - முறறிலுமாக அழித்து.
39. திகை - திசை, உடல - போரிட., தறுகாது - தடையின்றி, புவனங்கள் அனைத்தும் என்ற தொடர் இறுதி விளைகாத வலை ரு மனோடும இயையும்

சமம்ஒத்துஇரு வோரும்கணை தாழாதுஉய ராமல்
அமர்உற்றனர் இவ்வாற்றினில் அணிருத்திர னுடன்மால்
குமரப்புலி ஒன்னார்அணி குறுகித்தொடு கணையால்
அமர்தத்துசன் மகன்வைத்துள அணிகட்குஎதிர் பட்டார். 40

திறலோடுஅணி சம்ரட்சணை செயநின்றுள நால்வர்
கறுவித்தழல் விழிகக்கிடு கதழ்விற்சமர் முடுகி,
மறுவில்கணை மழைமாரிகள் வருஷித்துஅரி மகனை
குறுகிச்சிலை தேர்பாகுஅரி குலையச்சமர் பொருதார். 41

பரிபாகுஅரி சிலைதூள்பொடி படநூறிய படியால்,
அரிசேயனும் மறுதேர்மிசை ஆனான்; அநி ருத்தன்
விரிபோர்வலி அனுசாளுவன் விடகீதன னுட.னே
மருவார்என வருநால்வரை வர்மித்து,அடல் பொருதான். 42

அவர்நால்வரும் இவர்நால்வரும் அணுகிச்சமர் இகலித்
தவர்நேர்சிலை கொடிபாகுகள் தவிடாகநொ றுக்கித்
திவமாமணி மகுடத்தலை செகமீதினில் வீழ்த்தார்.
சவரட்சணை செயும்நால்வர்கள் சரம்நாலில்ம டிந்தார். 43

அக்காலையி லேபற்குணன் அசவாகனை உன்னி
தொக்காய்அவன் அணுகத்தொடு தொடையின்தலை வைத்தே
திக்காதுவி டுத்து,ஏகிய செந்தீக்குஉப காரம்
மிக்காகிய வாயுக்கணை வினயத்தொடு விட்டான். 44

வடவைத்தழல் உகமாருத மதுஉற்றது போலப்
படைமுற்றும்வ ளைந்தேபட படெனத்தொனி பரவ
இடிஒத்துமு ழங்கிக்கொடுள ரித்துஏணிய தாலே,
பொடிபற்பம தாயுற்றது புணரிப்படை அம்மா. 45

"உகமாறுத லோ?மாருத முடனேவட வையுமே
செகமீதுஉறு குடியானதுஇது எனகாரணம்?" எனவே
புகைதீஎரி பரவப்பொடி பொடியாகின படைகள்;
ககமாரிகள் மாறாதுகை விரசாகவி டுத்தான். 46

---

40. மால் குமரப்புலி - கண்ணனின் மகனும் புலி போன்றவனுமாகிய பிரதயும்நன்
42 அரி - குதிரை, வர்மித்து - பகை கொணடு.
43. சிலைநேர்தவர் எனமாறுக, மலைபோன்ற வில் திவ - ஒளிமிக்க
44 அசவாகன் - அசுவினி, தொடை - அமபு.
45 ஏணியதால - வளைத்ததால் 46 ககம் - அம்பு

விசையன்தொடு கணைமாரியின் மேவார்அணி வ்யூகப்
பசைஒன்றும்இ லாதேஎரி பட்டேஅணி கெட்டே
இசைமிஞ்சிட அலறித்தொனி யிட்டோடினர்; இதனால்
அசைவின்றிய சுரதன்செவி அடைவில்செவி டுற்ற. 47

"எனகாரணம்? நம்சேனைகள் இக்காலம்வ ரைக்கும்
தொனியோடுஅல றுதல்இரு செவியுற்றதும் இலையே!
அனிகத்திரள்வ்யூகங்கள்அ ழித்தோர்களும் இலையே!
வினைமாயைஇது என?"என்றுவி சாரத்துளன் ஆகி 48

என்கைக்கணை யால்அங்குள இகல்வீரியர் எல்லாம்
முன்கக்கிஷ மொடுமாயவர் முரணற்றவர் போலே
பின்கொற்றவில் விசயற்கொடு பின்னுற்றது பேணி,
"நன்குஇத்தனை பதம்என்னொடு நரனோஇகல் புரிவான்?" 49

எனமாயைவில் விசயன்தொடும் இகல்வாளிஅ னைத்தும்
பனிகாய்கதிர் எனவேபல பாணங்களில் நூறி,
முனைவாளியின் விசயன்சடம் முழுதும்தொளை செய்தே,
பினும்மால்உடல் முழுதும்கணை பேதித்திட எய்தான். 50

மாயைக்கிரி டியும்மாயனும் மாய்வுற்றவர் போலே
நோயுற்றுஅயர் வொடுவீழ்தர, நொடியில்சுர தனுமே
பாய்உத்தரி ரதமானது படையிற்கொடு தாவி,
காயத்திரள் மழைமாரிக டுப்பத்திரள் வீசி, 51

பரிதேர்கரி பாதாதிகள் பலவும்பொடி படவே,
சரபஞ்சர மாகச்சல தரம்நேர்சொரி தரலால்,
விரியும்குரு திகள்ஆறுகள் வெள்ளம்பிர ளயமாய்ப்
பெருகும்சுழி பரவப்பல பிணமும்சுழ லுறவே, 52

கண்டம்பல துண்டம்பல கைகால்இடை தொடைகள்
முண்டம்பல மலையாகமு றித்துஎங்கும்நி றைத்தான்.
மண்டும்சின முடன்மால்மகன் வலியுற்றும றித்துக்
கொண்டுஒண்கணை மழைமாரிகு றித்துஅங்கம்நி ரைத்தே, 53

---

47. வ்யூகபசை - குறிபபிட்ட அணிவகுபபாக ஒன்றியுள்ள அமைப்பு

49. கக்கிஷம் - வருத்தம்; பதம் - நேரம்.

50. மாயைவிலவிசயன் - மாயததால் அருசுனனாகக் காடசி தரும் கண்ணன்; சடம - உடல்.

51. உத்தரி - குதிரை. சாய - ஆகாயத்தில். திரள்வீசி - படைக்கலம் எறிந்து.

கிரணக்கணை ஒன்றால்உயர் கிரிடத்தைவி ழுத்தி,
முரணிக்கணை ஒன்றுஏவிமு றித்தான்அணி சிலையை
சுரதத்துசன் இருகண்சுழல் சுழலத்தழல் சொரியப்
பருவில்துக ளுறவோர்கணை விட்டுப்பல கணையால் 54

கொடிதேர்பரி உருள்பாகுகள் குறுநொய்பட நூறித்
தொடைமூவிரு நுதலூடுதொ ளைத்துஏகவி டுத்தான்.
உடனேஇவன் மறுதேரினில் உற்றேவில்வ ளைத்தே,
இடிநேர்கணை இருநாலினில் இரதம்துகள் செய்தான். 55

தேர்வில்பொடி செயவேமிகு சினமாய்வில்வ ளைத்தே
கூர்விற்கணை ஒன்றேநுதல் குறியாகவி டுத்தான்.
ஏர்வைக்கணை இவன்விட்டவை இருநூறும் எரித்தே
சோர்வற்றுஇடி நேர்நெற்றிதொ ளைத்துஓடியது அம்மா. 56

எமசூலம்நி கர்த்தேநுதல் இடறிப்பிடர் உருவச்
சமர்மீதுஉணர் வற்றேஇர தத்துஆகம்வி ழுந்தான்
அமராதகொ டும்கோபமொடு அநிருத்தனும் வளைவில்
நிமிராவிதம் மிகுவாளிநி றைத்தான்மழை யொத்தே. 57

இவன்விட்டுள பலவாளிள ரித்தேபல கணையால்
தவர்தத்திட ஒருகோல்,மகு டம்தத்திட ஒருகோல்,
துவசத்தினில் ஒருகோல்,துர கம்பாகினில் ஐங்கோல்,
கவசத்தினில் ஒருகோல்கொடு கண்டித்தனன் விட்டே. 58

வன்கோபம்மி குந்தேஇவன் மறுதேர்மிசை ஏறி,
மின்கோடிநி றைத்தாலென வெங்கோல்கள்வி டுத்தே,
தன்கால்அணி இரதம்துவ சம்பாகுஅரி சிலையும்
முன்கோலிஅ றுத்தே,சடம் முழுதும்தொளை செய்தான். 59

சரபஞ்சரம் எனமெய்தொளை தரநொந்துசி னந்துஓர்
இரதந்தனில் உற்றுஏறி,இ ருந்தேவில்வ ளைத்தே,

---

55. உருள் - சக்கரம்; மூவிருதொடை எனமாறுக.
56. ஏர்வை கணை - அழகும் கூர்மையும் கொண்ட அம்பு.
57. அமராத - குறைய ாத.
59. தன்கால் அணி - தன்னுடைய சக்கரத்தால் அழகுபெற்ற; அரி - குதிரை.

ஒருவெஞ்சரம் மருமம்,களம் ஒருகோல்,நுதல் ஒருகோல்,
வெருவும்படி உருவும்படி விட்டான்மதி கெட்டான். 60

வாயில்கறை யேகக்கிம யக்குற்றுவி ழுந்தான்;
தேயுக்குஇணை அனுசாளுவ னேசென்றுஎதிர் ஏறி,
மீஎத்திசை யும்கோல்மயம் எனமொய்க்கநி றைத்தே,
மாயப்பரி கொடிசாரதி வன்தேரைஅ ழித்தே, 61

கையில்சிலை ஒருகோல்கொடு கண்டித்து,இரு பதுகோல்
மெய்யில்தொளை செயவீசினன் மீண்டேரதம் மேற்கொண்டு
எய்யத்தவர் கைபுற்றிஓர் எழுகோல்உரம் விட்டான்.
ஐயத்துடன் நிலைகெட்டுஅவண் அயர்ந்தேவிழு கின்றான். 62

அனுசாளுவன் அயர்வாய்விழ அதிகோபம்மி குந்தே,
"வினையாய்இனி நிலடா"என வீடகீதன்அ டர்ந்தே
முனியால்விடு சரமாரிகள் முகில்மீவெளி எங்கும்
தனதாகஅ டைத்தேஉயர் சரகூடம்வ குத்தான். 63

சரகூடமும் இவன்ஏவிய சரமாரிஅ னைத்தும்
எரிவாய்படு சருகாகள ரித்துஎங்கும் நொறுக்கா,
"சுரதாநலது அட!"என்றது சம்தேர்பரி பாகும்
பொரிமாநிகர் செய்தேசிலை பொடிசெய்தனன் நொடியில். 64

தேர்வில்பொடி படமற்றொரு தேர்ஏறிநெ ருக்கி,
ஓர்வில்கைள டுத்தேசரம் ஒருநூறுவி டுத்தான்.
கூர்வில்கணை இவன்விட்டது கூறிட்டுயர் தேர்வில்
நேர்விட்டிடு கணைகொண்டுபின் நீறாகள ரித்தான். 65

எரிபட்டது தேர்வில்என இருகண்கள்சி வந்தே,
ஒருபொன்திகி ரியில்ஏறி,வில் ஒன்றுஅங்கைள டுத்தே,
முரணுற்றுஅரி தேர்பாகுவில் முறியத்துசம் எரியச்
சரம்எட்டுவி டுத்தேமுடி தத்தக்கணை தொட்டான். 66

---

60. மருமம் - மார்பு.

61. கறை - உதிரம்; தேயு - அக்கினி; மீ - ஆகாயத்தில்; பரி சாரதியாய கொப்பு தேரை ழுறிந்தே என்க.

63. முனி - வில். 65. தேர் வில் - தேர்ந்தெடுக்கப்பட்ட வில்.

அதுகண்டு,"அட சுரதா!நில டா"என்றுஒரு தேரில்
கொதிநெஞ்சொடுஇ ருந்தேசிலை கொண்டுஆயிரம் வாளி
உதையும்பொழுது, அதுவும்பொடி யுற,எய்துஅவன் உயர்கோல்
விதம்மிஞ்சிய பதினாயிரம் விட,எய்தனன் இவனும். 67

இலக்கம்பதி(ன்) லக்கம்சத லக்கம்பல்உ றழ்ந்த-
துலக்கம்கொடும் (முடியாதுஒரு) தொகையாய்இரு வர்களும்
கலக்கம்கொடு தொடுகோல்மழை கைசோர்வற வீசப்
பிலக்கும்சர தன்கைச்சிலை பெய்வான்முகில் ஒத்தான். 68

விடுவெஞ்சரம் முழுதும்பல விலகப்பினும் மென்மேல்
தொடுவெங்கணை மேலிட்டது சுரதன்கர விரசால்;
தடைகொண்டிட முடியாதுகை தடுமாறினன் இவன்எய்த்-
திடவும்திறல் சரகூடம்என் எயிலுக்குள்அ டைத்தே, 69

மருமத்தொரு பதுவெங்கணை மருவுற்றுஉரு விடஎய்து,
உரமூற்றிவன் அயர்வுற்றிட ஊடாடிந டந்தே,
கரியற்குஇணை யன்தேர்சிலை கண்டித்துஒரு பதுகோல்
உருவப்புயம் உரம்மத்தகம் உட்பூதவி டுத்தே, 70

கறைகக்கிஅ யர்ந்தேவிழ(க்) கண்டுஅப்புறம் எய்தி,
விறல்பத்திர கிரியான்உடல் மெலியக்கணை தொட்டே,
திறல்கெட்டுஅவன் அயரப்பல செயவீரியர் எல்லாம்
மறுகுற்றுஅயர் வொடுவீழ்தர வன்கோல்கள்பொ ழிந்தே, 71

"இனியார்?அடல் பொருவீரியர் இலையோ?உரம் இலையோ?
முனிகைஉளன் மேல்மீசைமு ளைத்தோன்முடி வைத்தோன்
உனும்மன்னவன் விந்தால்முளை உற்றோன்உள னாகில்
சினம்உள்ளவன் இகல்வாய்உயி ரொடுசெத்தவர் அகல்வீர்" 72

எனவேமனம் மதியாதுஎக தாளம்பக ருவதால்,
அனபோதுஇரு கண்பொங்கிய அனல்மாரிப ரப்பக்
கனகோபம தொடுமுன்கைக டித்தேஎதிர் கக்கி,
முனிகையில்ல டுத்தேகுண முஞ்செய்துஎதி ரேறி, 73

---

68 பிலக்கும் - வலிமை மிக்க. 70 பூத - புருத.
71. முஃவி - வில, செருதுவர் - பிணமாகக் கருதப்பட வேண்டிய தோழைகள்
73 மகாளம - மகுந்தாளம, பரிதாசமொழி.

அண்டம்பகி ரண்டங்கள்அ கண்டங்களும் அஞ்சச்
சண்டன்சசி விண்டின்திசை தடுமாறிஒ ளிக்கப்
பண்டங்கிய திண்டேர்ஒலி பரவக்கடல் சுவறக்
கொண்டண்டினன் மால்ஊர்தர அநுமக்கொடி குலவ. 74

திசைஎங்கணும் விசயம்புரி திறல்வீரிய விசயன்
இசையும்சிலை நிமிராவிதம்- ஏழ்மேகம்உ ததியின்
பசைஒன்றற மணலோடது பருகிச்சொரி மழைபோல்-
விசிகங்கள்பொ ழிந்தான்கர விரைசின்சர விசையாய். 75

சுரதன்கர விசையால்வரு தொடையாவும்அ றுக்க,
விரசின்சொரி கணைமாரிகள் மென்மேல்இவன் வீசச்
சரபஞ்சர சய்யோகசை வலமாய்வரு தொடையால்
கரமும்பதம் உதவாதுஅமர் கருதாதுக லங்கி, 76

இருகண்கள்மு கிழ்க்காதுஇமை மூடித்தவம் நாடி,
"கரிமுன்புறும் அரி!கேசவ! கண்ணா!முகில் வண்ணா!
நரசிங்கமு குந்தா!தச ரதநந்த!வை குந்தா!
உரம்உந்தும்அ னந்தா!உயர் உலகுளங்கும்அ ளந்தாய்! 77

நீஎங்கும்நி றைந்தாய்;அருள் நிலையோடுப ரந்தாய்;
வாய்என்தமை யன்போல்கதி மருவும்படி நல்கு"என்-
றேஅன்பொடுஉ வந்தே,பல எழில்நாமம்நி னைந்தான்.
போய்அங்குஅவன் நெஞ்சிற்கைபு டைத்துஓதுவன் மாயன் 78

"எனடாசுர தா!நீஇவ னுக்கோகைம றந்தாய்?
முனைமற்றை;வ ருக்கைக்கனி முட்குஒத்ததுஉன் மெய்தான்;
தனுவுக்குஅரசு அவன்அல்லது சகம்முற்றினும் உளரோ?
உனைமெத்தம தித்தே,உட லுறஏற்றிஉ ரைத்தாய்; 79

இனிமேல்உர சொடுவஞ்சினம் இயல்போடுஉரை யாமல்,
தனுவீரிய னுடன்ஒத்துஅமர் தறுகாதுஅமர் புரிவாய்"

---

74. சண்டன் - சூரியன்; சசி - சந்திரன்; விண்டு - ஆகாயம், பண்தங்கிய - செம்மையான.
75 உததி - கடல்; பசை - நீர், விசிகம் - அம்பு.
76. சய்யோகம் - கூட்டம்; சைவலம் - நீர்ப்பாசி; பதம் - அப்போது.
77. உரம் உந்தும் - மெய்ஞானததை வளர்க்கும், அனந்தா - திருமாலே.
78. தமையன் - சுதர்மத்துசன்
79. மற்றை முனை - இவ்லையெனில போர்புரி; வருக்கைக்கனி - பலாப்பழம்

எனவேஅவன் மெய்க்கோல்உளது எல்லாம்அகல் வித்தே,
நனிமெய்தொளை மெலிவுஏகிட நற்கைகொடு நீவி. 80

உடைபட்டுஎரி துகள்பட்டுள உறுதேரைஒ ழித்தே,
அடைவில்சமர் புரிகென்றுஓர்அ ணித்தேர்மிசை வைத்து,"உன்-
புடையுற்றதை அவனோடுஉரை புகலாதை,அ றிந்தால்
கடுகிச்சினம் உறுவான்;உடல் கண்டிப்பன்அம் பாலே." 81

என்றுஓதிம றைந்தான்அவன் எதிர்ஓர்வில்வ ளைத்தே
நின்றுஓதுவன் "நின்வில்தொழில் நிசவித்தைஅ றிந்தேன்;
நன்றேஅட விசயா!இனி நான்வீசிடு கணையைக்
குன்றாதுஎதிர் விலகு"என்றுகொ டுங்கோல்மழை பெய்தான். 82

மழைமாரிவி டாமல்சொரி வதுபோல்ஒரு சாமம்
விழைவாய்விடு சரமானதை விலகத்திறல் விசயன்,
எழிலாய்அவன் மென்மேல்இளை யாமல்பொழி வதனால்
தழைவாய்இரு கைகால்தடு மாறித்தளர் வானான். 83

தளர்வுற்றவன் மருமத்திடை தட்டிக்கர மதனால்,
"உளம்அச்சம்உ னக்குஎன்துணை உடன்நானும்இ ருக்க?
தெளிவுற்றுஎழில் வில்மாரிசெ லுத்து"என்றுஅரி செப்பக்
களியுற்றவன் கரவாளிகள் துப்பாகவி டுத்தே 84

பற்பம்பட வரும்ஒண்கணை பலவும்துக ளாக்கிக்
கற்பங்கள்நி கற்பம்கடி மகரம்தொகை அனதாய்,
அற்பம்தவ றாதே,சம மாய்,ஒத்துஇரு வோரும்
பொற்பின்தொடை மாறாதுபொ ழிந்தேவெளி தூர்த்தார். 85

செகம்முப்புவ னம்பாலகர் திசைஎண்கிரி கரியும்
மிகுசக்கிர கிரிமேருவொ டேசேடனும் நடுங்கத்
தகும்மித்திரன் மதியும்திசை தடுமாறிஒ ளிக்க,
விகடத்துடன் இருவீரரும் வெம்பூசல்வி ளைத்தார். 86

---

81. உன்புடைஉற்றதை - நான் உன்னிடம் வந்ததை. அவனோடு - அருச்சுனனோடு. புகலாதை - சொல்லாதே.

85. கற்பம் - ஒருபேரெண 10 [31], நிகற்பம - 10 [32]; மகரம - 10 [17]

86. கரி - அட்டதிகசயங்கள்; மித்திரன் - சூரியன்

(வேறு)

அம்புஅம் பும்எதிர்ந்து அகிலங் கள்எலாம்
அம்பம் பரம்என் றுசுழன் ற;விசி-
கம்பங் கம்உழன் றுசுழன் றன;எண்
கம்பம் பரமும் கனலும் சிதற 87

(வஞ்சிவிருத்தம்)

அம்புஅம் பரம்எங்கும் உழம்பின,
அம்புஅம் பரம்எங்கும் நிறைந்தன;
அம்புஇம் பரொடுஉம்பர் இடந்தன;
அம்புஎண் திசையும்திரி கின்றன; 88

அம்பின்தலை அம்பில் அறுந்தன;
அம்பின்சிறகு அம்பில் அறுந்தன;
அம்பின்குதை அம்பில் அறுந்தன;
அம்பின்சமன் அம்பில் அறுந்தன. 89

சிலஅம்பு சிரங்கள் புதைந்தன;
சிலஅம்பு குளங்கள் புதைந்தன;
சிலஅம்பு முகங்கள் புதைந்தன;
சிலஅம்பு உதரங்கள் புதைந்தன. 90

சிலஅம்பு களங்கள் புதைந்தன;
சிலஅம்பு புயங்கள் உறைந்தன;
சிலஅம்பு கலங்கள் துறந்தன,
சிலஅம்பு கரங்கள் துளைந்தன. 91

சிலஅம்பு துசங்கள் நிறைந்தன;
சிலஅம்பு இரதங்கள் புதைந்தன;

---

87. எணகம்பம் - எட்டுத்திசைவரைகள். இவை உலகத்தைத் தாங்குவதால் கம்பம் என்றார்; பரமும் - தம உடலையும.

88. உழம்பின - தலைதடுமாறின. இம்பர் - இவவுலகம். உமபர் - அவ்வுலகம்; இடந்தன - பிரித்தன

90 குளம் - நெறறி.

91. களம் - சுழுது. கலம் - படைக்கலம்

சிலஅம்பு உருள்எங்கும் உறைந்தன;
சிலஅம்பு உனிஅங்கம் நிறைந்தன. 92

(வண்ண விருத்தம்)
(தனதந்த தான தனன தனதன)

சுடர்பொங்கும் வாளி இருவர் முறைமுறை
சொரிகின்ற தால்,மன் உலகு திசைகிரி,
யொடும்அண்ட கூடம் முகடு கிழிபட,
உரகங்கள் மேவு பதியும் வெடிபட,
நடலங்கொடு ஊட, எரிகள் சொரிதர,
நதிகங்கை வேலை சுவறி அளறுஎழ,
அடல்கொண்ட நாக(ர்) மனிதர் அமரர்கள்
அபயங்க ளோடு வெருவி அலறவே, 93

வரைஅங்கம் நீறு பரவ, எரிவதில்
மனம்அஞ்ச, நாரி அரனும் வெருவுற;
கரசங்க பாணி வருணன் வெருவின(ர்)
கடல்கும்பி யாக அளறு படுவதில்;
பிரமன்சு ராதி மிகவும் வெருவின(ர்)
பெருகுஅண்ட கூட முகடு கிழிவதில்;
வரதுங்க வீரர் கணைகள் இகல்வதின்
மனம்அஞ்சி டாத பெயரும் உளர்கொலோ? 94

சுரதன்கை வாளி தனிலும் அளவறு
தொகைகொண்ட வாளி விசயன் விடுவதில்
இரதங்கள் நீறு படவும், வலவனும்
இயல்வெம்ப தாகை பரியும் அழிதர,
உரஒண்கி ரீடம் அழிய, ஒழியவில்,
உடல்எங்கும் வாளி மறைய முழுகின;
அரிகண்ட யானை எனவும் வெருவொடும்
அணிகொண்டு வேறு(ஓர்) இரதம் மருவியே, 95

---

92. உனி அங்கம் - குதிரையின் உடல்.

93. உரகங்கள் மேவு பதி - நாக்லோகம்; நடலம் - செருக்கு.

94. வரை - மலைகள்; மலைகள் எரிவதால் சிவபிரானும், கடல் வறறுவதால் திருமால் வருணன் இருவரும், ஆகாயம் கிழிபடுவதால பிரமன் மற்ற தேவர்கள் அனைவரும் அஞ்சினர்.

95. அரிகண்ட யானை - சிங்கத்தைப் பார்த்த கவிறு, சிம்ம சொப்பனம்.

ஒருசெங்கை மீது சிலையும், வடம்நடு
ஒருசெங்கை காது தழுவ, மிகுகணை
விரைசுஅங்குஅ றாது, வலவன் உடலமும்
விசையன்ச ரீரம் முழுதும் மறைதர,
உரஅங்க மேனி கறைகள் இழிதர
உதைகின்ற போது, கிரிடி தனைஅரி
"சரம்மிஞ்ச வீசி முடுகு" கெனஉரை
தரும்முன்,து ரோணம் நிமிர்வது ஒழியவே 96

மிகுதங்கள் வாளி பொழிசெய்து, எதிர்வரு
விசிகங்கள் நீறு படவும் எரிசெய்து,
சிகரம்ப தாகை வலவன் அரிபரி
சிலையும்கி ரீடம் முழுதும் அழிதர,
நகுதுங்க ஏவு(ஓர்) இருப துதையினன்
நரசிங்க மாயன் மகிழ விசயனும்.
இகல்கொண்ட தேர்வில் ஒழிய, மறுசிலை
இரதங்கொடு ஏறி அவனும் முடுகியே 97

சரம்ஐந்து நூறு சுரதன் விட,அதில்
சரம்ஐந்து நூறில் அதனை எரிசெய்து,
பரிவெம்ப தாகை ஒழிய, உரமிசை
பதினைந்து வாளி பதிய உதைசெய,
வரிவெஞ்ச ராச னமதொடு ஒருபெரு
வலிகொண்ட தேரில் அவனும் மருவியே,
விரைசின்கை வாளி தொடுமுன், இவன்விடு
விசிகங்கள் ஏழில் இரதம் ஒழியவே, 98

இரதம்பின் வேறில் மருவி, எரிதழல்
இருகண்க ளாலும் ஒழுக, ஒருசிலை
விரதங்கள் ஓதி, ஒருபது அறுசத
விசிகங்கள் ஏவ, இவனும் எதிர்தொடு

---

96. வடம் - வில்லின் நாண்; உர அங்க - வலிமையான உறுப்புகளைபபெற்ற; துரோணம் - வில்.
97. மிகுதங்கள் - மிகுதியாக; விசயனும் மாயன் மகிழ உதையினன் என்க.
98. சராசனம் - வில்.

கரவிஞ்சை வாளி யதனில் எரிசெய்து,
கதழ்வம்பு மாரி சொரியும் அளவினில்
அரிதங்கள் காயம் முழுதும் மறைதர,
அவனும்பல் ஆசு கமும்முன் உதைசெய்தே, 99

வினயங்க ளாலும், விரைசி னொடுவிடு
விசிகங்க ளாலும், விகட மிடுதொழில்
முனிமொய்ம்பி னாலும், இரதம் இடம்வலம்
உலவும்ச மான விரகின் முரணுறும்
தனுவின்றி யான மழையின் வலிநிலை
தனிலும்,ச மான முடன்இவ் இருவரும்
மனவன்பி னோடு பொருது புயபல
வலிகண்டு, தேவர் பலரும் மகிழவே, 100

நிசிதங்க ளோடு நிசிதம் இகல்தர,
நிசிதங்கள் ஏவின் இறகை அரிதர,
விசிகங்க ளோடும் விசிகம் இழைதர,
விகடங்கொடு ஊடி இடற வகிர்தர,
அசிதங்கு வாளி இருவர் முறைமுறை
அனகங்கள் வீசும் அடலின் முகமதின்
மசகங்கள் தேனில் உறைவது எனஇரு
மருமங்க ளூடு பகழி உழுகவே. 101

மருமங்கள் வாகு நுதல்கை இடைதொடை
வதனம்கி ரீபம் முழுகு பகழியில்
விரியும்செ நீர்கள் ஒழுக முழுகின
விகடம்கொடு ஊடும் இருவர் உடலமும்;
அருணன்செ வானம் அடையும் உருவுடன்
அமரும்ச மானம் நிகரில் இகலும்நேர்,
தருமன்கு மாரன் அநுசன் வலுவொடு
சரம்ஐந்தும் ஆறு தனுவில் உதையவே, 102

---

99. கதழ்வு - சினம். எய்பவனின் சீற்றம் அமபின் மேல் ஏற்றப்பட்டது, அரிதங்கள் - திசைகள், காயம் - ஆகாயம்.

100. முனிமொய்ம்பு - வில்லாற்றல்; பொருது - போரிடுகின்ற.

101. நிசிதம் - கூமை, ஆகுபெயராக அம்பு; வகிர்தர - பிளக்க, அசிதங்கு - கூமைபொருந்திய, மசகம் - கொசு, மருமம் - மார்பு.

102. தருமன குமாரன் - தருமபுத்திரனாகிய யுதிஷ்டிரன், அநுசன் - தம்பி, அருசுனன்

சுரதன்கி ரீடம் முனிக வசமொடு
துரகம்ப தாகை இரதம் வலவனும்
இரு,கண்கள் தீயின் ஒழுகி வழிதர,
இவன்அஞ்சும் வாறு பொருத நினைவொடு
பொருதும்பை மாலை புனைசெய்து உரமிசை
புகழ்கொண்ட தேரில் அவனும் மருவியே,
விரியும்து ரோணம் ஒருகை தழுவிய
விசயன்ற னோடும் ஒருசொல் அருளுவான்- 103

(எழுசீர் ஆசிரிய விருத்தம்)

"எந்தன் ஆயுசுவ ரைக்கும் நின்னைநிகர்
இகல்செய் வார்இலை;என் இரதம்வில்
சிந்தி னாய்பன்முறை; உன்னை யான்பழுது
செப்பு கின்றதும்மி கப்படம்;
பந்த மாகஇனி மேல்என் வில்பகழி
பழுது செய்;உன்வில் பார்க்க"என்று,
அந்த ரத்தின்மிசை நூறு கோல்விசைய-
தாய்இ முத்துறவி டுத்தனன். 104

தப்பி லாதுஅவன்வி டுத்த கோலதுத-
றித்து முன்கிரண அஸ்திரம்
துப்புஉ லாம்உயிர்அ தத்தை நேர்குறிசெய்து
ஒன்று கீழுறவி டுத்தனன்;
வெப்ப மோடுஇரத மீது கீழினுற
வெய்தின் எய்தி.அரி நடுவினில்
அப்பி யே,கிறுகிறு என்று வெய்யவிசை-
யாக வேசுழல்செய் கின்றதே. 105

(வண்ண விருத்தம்)
(தனன தந்தன தந்தன தந்தனா)

கிரண அம்புஅகி லங்கள்பி ளந்துஉளே
கிறுகி றென்றுசு ழன்றது; பம்பர
விரைசு டன்சுழ லுஞ்சுழ லின்திறல்
விறுவி றென்றுஉள் இடந்து,பு குந்து,அதி

---

103. முனி - வில். இற - அழிய. 104 பவம் - பாவம. 105 தறித்து - வெடடி.

துரிதம் மிஞ்சுச ரங்கள்நு ழைந்துஉருள்
துரக தங்கள்பு தைந்துஅ சைந்தன;
உரம்அ டங்கஅ கழ்ந்துஉள்அ டங்கின;
உலகுஅ ளந்தவன் நெஞ்சுக லங்கியே, 106

விரக தந்திர மந்திர விஞ்சையால்
விசைத விர்ந்திடல் அன்றிடல் அன்றிய
உரசு டன்கொடி தங்குஅநு மந்தன்வா-
லொடுபி ணைந்துஉதை தொண்டுபி டுங்கவே,
நெரிநெ ரிந்திட என்புநொ றுங்கவே,
நெறுநெ றென்றிட நின்றும யங்கியே,
முரண்ஒ ழிந்துது சம்தனில் ஒன்றினான்;
முழுகு கின்றர தம்தடை இன்றியே, 107

இறுதி என்றுந டுங்கிஒ டுங்கியே,
இருகை கொண்டுஇர தம்பதம் ஒன்றினால்,
விறல்த னஞ்சயன் மங்கிஇ ரும்கையால்,
விரவு மஞ்சுபி ணைந்தும யங்கினான்;
அறம்இ சைந்தவை குந்தமு குந்தனே
அமிர்தன் மைந்தன்ந டந்துசு ரங்கவாய்
உறநெ ருங்கிமி குந்தச ரங்கள்தான்
உதைசெய் கின்றனன் உம்பர்க லங்கவே. 108

சுரதன் அம்புசொ ரிந்ததுஅ டங்கவே
சுடர்ச யந்தனம் எங்கும்நி றைந்த;மால்
உரம்மு கம்புறம் எங்கும்நி றைந்ததால்
உபய கண்கள்தி றந்தனன் நண்பன்மேல்;
விரவி அங்கம்நி றைந்துஉழ, அங்குஅவன்
விழிதி றந்துமு கம்தெரி கின்றபோது,
இருவ ரும்கணு றும்தொழில் விஞ்சையால்
இவனும் ஐந்துச ரங்கள்உ தைத்தனன். 109

---

106. உரம் - அடங்க - மார்பு முழுவதும், வலிமை குன்றும்படி எனினுமாம்; அகழ்ந்து - தோண்டிக்கொண்டு.

108. மஞ்சு - தேரின் சிகரப்பகுதி, பிணைந்து - கூட்டிக்கொணடு.

109. உபய கண்கள் - இரு விழிகள். சுணுறும் - (தம்) கண்உறும, தம்பால்உள்ள.

உதைச ரங்கள்ஓர் ஐந்துஇர தங்களூடு
உறநு ழைந்துஅழல் பொங்கிள ரிந்ததால்;
எதிர்உ றும்சுர தன்புவி யின்கண்மேல்
இழிவில் நின்றுஇவ னும்புதை கின்றதால்
அதிக வெம்புயம் உந்தின உந்தலால்
அடல்மு னைந்துசெய் கின்றவர் எங்குளார்
வதில்இ வன்றனை அன்றிகல் இன்றுஎன
மனது கொண்டுகை கொண்டுபி டுங்கினான் 110

(எழுசீர் ஆசிரிய விருத்தம்)

சிகர கம்பமது பற்றி அங்கைகொடு
தெரிய வேவெளியில் வந்தபின்
மிகுதி யானவிசை கொடுசு ழற்றரதம்
விறுவி றென்றுசுழல் ஒத்ததே;
குகனை நேர்கிரிடி இறுக மூடிவிழி
குறிய காலதனை வவ்வினான்
பகரும் மாயன்விழி மூடி மிஞ்சுஇருகை
பற்றி னான்எதிரி சுற்றினான். 111

விசைம றாதுசுழ லச்சு ழற்றி,அடல்
இசைய உன்நகரில் வேள்வியில்
இசைய வேவிழஉ தைக்க வோ?துவரை
எயிலின் உட்புகஉ தைக்கவோ?
திசைய டங்கலின்உ தைக்க வோ?இரவி
திகிரி மேல்விழஉ தைக்கவோ?
அசல மீதினில்அ டிக்க வோ?பிரமன்
அண்ட கூடமதில் வைக்கவோ? 112

கடலின் உட்புகஉ தைக்க வோ?அமரர்
கங்கை மீதினில்உ தைக்கவோ?
நெடிய வன்கடலில் வைக்க வோ?புலவன்
நிகர்இல் பொற்பதியில் வைக்கவோ?
வடிவு உறுங்கயிலை வைக்க வோ?அரிதன்
மகிழ்வை குந்தமதில் வைக்கவோ?
முடுகு வெஞ்சமரில் இறுக வேவிழியை
மூடு கின்றதுஎன வெட்கமோ?" 113

---

112. துவரை - துவாரகை, எயில் - மதில், அசலம் - மலை.

எனஉ ரைத்தமொழி செவிதொ ளைக்கஇத-
யங்கள் எங்கும்அழல் பொங்கவே,
மனம்உ றுத்துவரி முகம்ம திர்க்கவிழி
வைக்க ஐவிரல்ப ரப்பினான்;
முனைவி றல்பகழி ஐந்துஇ ழுத்துஉரமுள்-
ளூடு உறக்குறிசெய்து ஏவினான்.
அனலி வெள்இடிஅ னந்தம் ஓர்உருவ-
மாய்வி ளங்கியும்மு ழக்கியே, 114

அண்ட கூடம்முதல் எண்டி சாமுகம்அ-
கண்ட மானஉல கங்களும்
விண்டு மேநடுந டுங்க, வேகமொடு
விசையின் மார்பினில் அறைந்துறக்
கொண்டுள முந்துறஉ யர்ந்தும், அண்டமுகடு
ஒன்ற வும்கொடும லர்த்தியே,
மண்ட லந்தனில்அ றைந்து, வெந்உருவி,
வையம் ஏழ்உருவி, மீண்டதே. 115

கணைஅ றைந்தஉடன் இரத கம்பமது
கையு மேநழுவ விட்டனன்;
விணில்உ யர்ந்துசரம் மணில்அ றைந்துஉருவ,
மிகஅ யர்ந்து,சம மரணமாய்,
உணர்வுஅ ழிந்து,மெய்உ சும்பல் ஒன்றுஅற,உ-
ரம்பி ளந்துஉடல்கி டக்கவே,
வணித வில்விசயன் முன்சு ழன்று,உளம்ம-
யக்க மேகிறுகி றுக்கவே, 116

தலைகி ளம்பவலி அற்று, மெல்அணைத-
னில்க ளைப்பொடுத கைப்புமாய்ச்
சிலைவி யப்புடைய தயிரி யக்கிரிடி
சிந்தை புண்கொடுதி யங்கினான்;

---

113. புலவன் - தேவன், இங்கு தேவேந்திரன்; பொற்பதி - அமராவதி

114. துவரி - தெளிவடைந்து;அனலி - தீ.

115. வெற் - முதுகு.

116. மெய உசும்பல் - உடலின் இயக்கம், ஒரு உசும்பலும் அற என்த, வணித - செம்மையான.

வலவன் அத்தருணம் விசைஉ றத்திகிரி
மனக திப்படந டத்தியே
விலித னைக்கடிகை சத்த அர்த்தவழி
வெய்தின் எய்தியும்நி றுத்தினான். 117

நிறுத்தி இங்குஇவர்இ ளைப்புஅ கன்றிடநி-
லைக்க வும்கடிகை ஏழரை,
மறக்கு றும்பின்அமிர் தத்து சன்சுதன்வ-
லுத்து,அ யர்ந்துளம யக்கம்அற்று,
அறச்சு தன்பின(வ) னோடுஅச் சுதன்தனையும்
அக்கில் கண்டிலன்இல் எங்கணும்;
குறித்து,அ வன்படைகு ணக்கில் நின்றுளகு-
றிப்புஅ றிந்துஉயிர் தத்திலாய் 118

தாவி ஏறி,ஒரு வீர சாபமது
தான்வ ளைத்து,மழை மாரிநேர்
ஏவு வீசினன்அ றாது! மேலும்இத-
னால்அ ணிந்ததளம் நாலுமே
பூவின் மீதுபல கண்ட துண்டமொடு
போர்கள் போர்நிகர்ம லிந்ததால்
மேவு செங்குருதி ஆறு கால்கள்பல-
வேச ரிந்தகளம் எங்குமே. 119

சின்ன பின்னமுற வேதி ரண்டபடை
செற்றுஅ ழிந்தது;பின் மற்றெலாம்
பின்ன டைந்திடவெ குண்டு மாலினொடு
பேசு வான்விசய ராசன்,"நீர்
என்ன காரியம்ஐ யாசெய் தீர்?இரதம்
இங்கு வந்ததுஎன? ஞாபகம்
உன்னி யேரதம்ந டத்தும்" என்னஉட-
னேச யந்தனம்ந டத்தினான். 120

---

117. தகைப்பு - இளைப்பு, திகிரி - தோ, சத்த அர்த்தம் - ஏழரை; சத்தவாத்தக கடிகை வழி என்றவாறு

118 அறச்சுதன் - தருமபுததிரன், அக்கில் - கண்களில், இல் - இடம், இங்கு போராக்களம், தத்து - ஆபத்து.

119. அறாது - இடைவிடாது; பூ - பூமி, சரிந்த - பாயநதன

விண்டுஇ னம்பொடிய, வேலை யும்சுவற,
மேக மும்சிதற, மேருவும்
மண்ட லம்கிழிய, வார ணம்கதற,
மாசு ணம்பதற, வாளமும்
குண்ட லம்கிழிய வே,மு ழங்குதொனி
கொண்ட பண்திகிரி கொண்டலில்
அண்டி டும்துசம்இ யங்க மாருதி
அடர்ந்து உறக்கொடுநெ ருங்கியே. 121

தாக மாகவரி வில்வ ளைத்துசர
கோப சாகைசர பஞ்சர-
மாக வேவிசய னும்பொ ழிந்தகணை
அவன்உ டல்திகிரி மொய்த்து,வில்
ஏக மாய்எரிசெய் போது, வேறுஇரதம்
ஏறி யே,சிலைவ ளைத்து,எதிர்ந்து,
ஆக மீதில்இரு நூறு வெம்பகழி-
யதனை யேகுறிசெய்து ஏவினான். 122

நூறு வெம்பகழி மாயன் மெய்யிடைநு-
ழைந்து சேறுசெய, நூறுகோல்
மாறி லாதகவ சங்கள் தன்னையும்ம-
தித்தி டாதுமரு மத்திலே
ஊறு செய்ய,உணர் வும்க லங்கி,இவன்
ஒழிவி லாதுசொரி புயலைநேர்
மீறி வெங்கணைகள் வீசி னான்;அவனும்
விழிஇ மைப்பளவில் மாற்றியே, 123

இடைவி டாதுசொரி சலத .ரத்தைநிகர்
இகலு றும்கைவிர சாகவே
தொடைகள் வீச,இவ னும்க டுப்பொடுது-
ணிக்க விம்மிதம தாகவே

---

121. விண்டு இனம் - மலைக்கூட்டங்கள்; வாரணம் - அட்டதிக்கயங்கள், மாசுணம் - ஆதிசேடன், அட்டநாகங்கள் எனினுமாம்; வாளம் - சக்ரவாள மலை; குண்டலம் - வட்டவடிவம்; கொண்டல் - மேகம்.

122. உடல் திகிரி - உடம்பையும் தேரையும், உம்மைத்தொகை.

கடுக மேலும்உறு கணைகள் கண்டுவில-
காது கைகள்தடு மாறலால்,
"தடையி லாதுசரம் இடைவி டாதுசொரி:
சமயம்" என்னஅரி சாற்றவே, 124

தயிரி யத்தின்எதிர் வருச ரத்திரள்கள்-
தமைஅ றுத்து,மிகு சரமழை
புயல்நி கர்க்கஎதிர் எதிர்தொ டுத்து,விடு
புங்கம் ஒன்றில்முடி தள்ளினான்;
அயம்உ ருள்,துவச கம்பம், அஞ்சுசிலை,
அச்சி னோடுஇரதம், பாகையும்
வயிர வாளிபல வால்அ றுத்து,மரு-
மத்தில் எண்கணைஅ முத்தினான். 125

பாகு தேர்இவுளி நீறு, வேறைஅரி
பாய்ந்து வில்கையில்எ டுக்குமுன்,
ஆக மீதுபதி னைந்து வாளிபதி-
னைந்தில் தேர்சிலைபி ளந்தனன்;
வாகை யோடுமறு தேரில் ஏறுமுனம்
மான தேர்சிலையும் மாற்றினான்;
நாக மாகும்மறு தேரில் ஏறவும்ந-
றுக்கி னான்சிலையும் ஒக்கவே. 126

பின்னும் வேறுஇரதம் ஏற எய்துஅதுபி-
ளந்த னன்தனுவும் ஒக்கவே;
என்ன வேறுஇரதம் வேறி லேறுமுன்இ-
மைக்கும் முன்புஅதும்நொ றுக்கினான்;
துன்னு தாருமிசை தத்து கோகிலமது
ஒத்துஉ லைந்துஅலைவ தாகவே,
இன்ன மாதிரிர தங்கள் நூற்றிருபது
எட்டு வெஞ்சிலையும் வீழ்த்தினான். 127

---

124. சலதரம் - மேகம், தொடை - அம்பு; விம்மிதம் - வியப்பு.
125. புங்கம் - அம்பு; அயம் - குதிரை; வயிர - கூர்மையான.
126. வேறை - மறறொன்றை, அரி - பகைவன்; நாகமாகும் - மலை போன்ற.
127. தாரு - மரம்; கோகிலம் - குயில்

சிலைப தாகைஇர தங்கள் நூற்றிருபது
எட்டு மேசிதைவு பட்டதால்,
"விலிஇ வாறுசெய்வது என்கொல்?" என்று,"இதுவும்
விண்டு மாயை"என எண்ணியே,
நலதுஇது என்றுஎயிறு நெறுநெ றென்றதொனி
நரன்இ ருஞ்செவிதொ ளைக்கவே,
வலிது றுக்கும்அள வில்பி னாகஅகல்
வான்மு கட்டுஇரதம் வந்ததே. 128

பிரமன் முன்சுரத னுக்குஅ ளித்ததொரு
பெரிய தேர்;பொன்நவ ரத்தினத்து
அரிது செய்த இர தம்;து சம்குடைகள்
அலகி லாதுஅசையும் ஒலிமணி
விருதுஅ னந்தம்அலை போல்அ நேகவித-
மான ஆயுதவி கற்பமும்
இருபு றங்களும்நி றைந்தி ருக்கும்இர-
தத்தில் ஏறினன்வல் உக்ரமாய். 129

"இனிஎ னக்குநிகர் விசய னோ?பிரமன்
ஏறில் ஏறுசிவன் மாயனோ?"
எனநி னைத்து,இரத மேநெ ருக்கி,வரி
வில்வ ளைத்து,வெகு வெங்கணை
கனம்எ னச்சொரிய, விசயன் ஏவுகணை
கார்ப னித்தல்நிகர் கார்முகம்
குனிநி மிர்த்துஅலற வீசி, மிக்கசர
கூட மானதுவ குத்தனன். 130

இவன்வ குத்தசர கூட மானதைஎ-
திர்த்த வீரியன்அ றுக்கவும்,
அவன்வ குத்தசர கூட மானதைஅ-
டர்ந்து தான்இவன்அ றுக்கவும்,

---

128. விலி, நரன் - அருச்சுனன், பினாக - பின்புறமாக; வான் முகட்டு - தெயவலோகத்தைச் சேர்ந்த.

130. ஏறில் ஏறு - காளை வாகனத்தை உடைய; கனம் - மேகம்; கார் - மேகம்; பனித்தல - பொழிதல்; கார்முகம் - வில்.

புவனம் எத்திசையும் இருவர் வாளிகள்பு-
ரிந்துஇ கல்கொடும லைக்கவும்,
துவசம் மேவுஉபயர் இரத மானவைசு-
ழன்றுஉ லாவுசுழல் ஒத்ததே. 131

அந்த ரம்திசைகள் புவன மும்சுழல்அது
ஆடு பம்பரம்நி கர்க்கவே,
உந்துஇ டங்கள்வலம் வலம்இ டங்கள்திரி
உபய தேர்கள்தமை உலகரும்
இந்தி ரன்பிரமன் அமர ரும்தெரிகி-
லாமல் ஐயமுற, வலவர்கள்
தந்தி ரம்கொடுக டாவு வல்லமையது
அளவ றுக்களவர் வல்லரே! 132

வில்லி னில்கைவிசை, சரவி லாபமறை
விளைவு, சாகிரதை, வலிமையும்
ஒல்ல லான்அம்ஒழு குவல்அ யத்தடியை
ஒத்தி ருந்தஉப யர்க்குள்,"இகல்
மல்லல் வில்விசய! கேள்,"எ னச்சுரதன்,
"வலவ! நின்திறமி யாவுமே
எல்லை யில்லைவகை யான்அ றிந்தனன்;என்
இகலும் நீயும்அறி கின்றதால் 133

என்னு யிர்க்குஇறுதி காணல் நீ;அலது
நின்உ யிர்க்குஇறுதி காணல்யான்;
உன்னுஇ ரண்டுவகை தன்னில் ஒன்றுஅலது
உறுதி வேறதுஇலை; ஆதலால்
பன்னு கற்பம்இகல் செயினும் வெற்றிகள்ப-
லிப்ப தில்லைஉப யர்க்குமே;
மன்னும் இத்தனைச ரத்தில் வெல்வன்எனும்
வஞ்சி னம்பகர்தி" என்றனன். 134

---

131. உபயர் - இருவர்.

132. வலவர் - தேர்ப்பாகர்.

133 சாகிரதை - எச்சரிக்கை; அம் ஒழுகு - அழகிய; அயத்தடி - இரும்பாவாகிய தண்டு; வலவ - வல்லவனே,விளி.

134. உன்னு - சருதப்படுகின்ற.

இருவ ரும்,சிலையில் வைத்தது இவ்வொர்சரம்
இன்றி யேஒருச ரத்திலே-
அரிப தத்தின்மிசை ஆணை - உன் சிரசுஅ-
றுத்துஉ யர்த்திடுவன்" என்றலும்,
கரிய வன்மதிம றந்து சென்று,சுர-
தன்க ருத்தையும்ம யக்கி,வாய்
உரைத ரும்சபதம் "அர்ச்சு னாஇகலும்
உபய ருக்கும்நடு வானமால்; 135

அவர்த மக்குரிய பத்தன் நான்;எனிடம்
அவர்இ ருப்பதுமெய் ஆகில்உன்
தவரில் இட்டஅழி யாத கிஞ்சினித-
றிப்பன்"என்றுஇனிதுஉ ரைத்தபின்
இவனி டத்துஇனிது வந்தும் ஓர்கணையில்
எந்த வாறுஅவனை வெல்லுவாய்?
திவிய அத்திரவி சால னானஉயர்
தீர னேஎனவி னாவினான். 136

"நானும் என்கணையில் வெல்ல லாம்எனந-
வின்ற தில்லை;உனை நம்பியே-
தான்இ யம்பியது; நாள்எ லாம்உனது
தஞ்சம் உண்டு;அதுஎன கொஞ்சமோ?
ஏனை என்இதய மதில்உ றும்துணைஇ-
ருக்க வேஇனிதுஇ ருக்கிறீர்;
மான மன்சுரத னைத்து ணித்திடுதல்
மசக சாந்திரமது ஆகுமே. 137

பயப்ப டாதுஇரு;உன்அ ருள்கொ டேவலிய
பகழி ஒன்றினில்அ றுக்கிறேன்.
இயக்கு ரோதசிக ரத்தின் மேவியஇ-
ரட்ச காஇனிய பட்சகா!

---

135. சுரியவன் - கிருட்டிணன் 136. கிஞ்சினி - அம்பு.

137. மசம் - கொசு, சசம் - யானை, மசகச அந்தரம் - கொசுவுக்கும் யானைக்கும் இடையே உள்ள அளவு பெரிய விதியாசம. உன் அருளால் நான யானை, சுரதன் கொசு என்பது பொருள் அசகசாந்திரம எனல மரபு இவர் மோனை நோக்கியும வித்தியாசத்தை மிகுதிப்படுத்தவும மசசுசாநதிரம் எனப் புதுமையாகக் கூறுகிறார்

கயத்தில் நாடியக யத்தின் ஆவிஅருள்
கமல நாபியுடை விமலனே!
இயற்பு ராரிதன்இ ரப்பை யேவிலகு-
வித்த வாகிருபை உத்தமா! 138

நீஇ ருக்களனை வெல்ல வல்லவர்கள்
நிகர்இல் மூவுலகில் உளர்கொலோ?
வேய்இ ருக்கும்மணி வாய னே!"எனவி-
ளம்ப மால்மனம்ம கிழ்ந்தபின்
சேயை ஒத்தசுர தன்கி ரீடிஇவர்
தேரை யேகுறிசெய்து ஏவினான்,
வாயு ஒத்துஅவன்வி டுத்தல் தந்திமுகம்;
மற்றுஇ வன்கணைம டங்கலே; 139

சுரதன் வெங்கணைப ளீர்ள னச்சுடர்செய்து
உம்பர் இம்பரும்ந டுங்கவே,
இரவி இந்துதடு மாறி அஞ்ச,இமை-
யோர்அ நேகஇடி ஒன்றுஎன
விரைவின் ஏக,அதில் இருத ளத்தவரும்
வெருவ வே,அமிர்தன் மகிழவே,
உரம்மி குந்துஇரத மீதுஅ றைந்துஅதனை
யோச னைத்தொலைவில் விட்டதே. 140

மற்றும் வில்விசயன் விட்ட வெம்பகழி
வலிய திற்பதின்ம டங்குஎனக்
கொற்ற வீரமுட னேமு ழங்கிஅடல்
கோடி கோடிஇடி ஒன்றுஎன,
நற்றி வில்சுரதன் இரதம் மற்றதும்ந-
டுங்க வேஇனிதுஅ றைந்துறப்
பற்றி யோசனையொர் ஐந்துஅ ரும்தொலைப-
ரத்தி விட்டதுஉ ரத்தினால். 141

138.இயக்குரோதம் - ஆலமரம்; ஆலின் சிகரம் என்பது ஆலிலையின் மேல் என்னுமளவில் நின்றது; கயத்தில - குளத்தில்; கயத்தின் - யானையின், புராரி - சிவபிரான்.

139. வேய் - புல்லாங்குழல், தந்தி - யானை, மடங்கல் - சிங்கம்.

141. நற்றி - நத்தி, விரும்புகின்ற.

மீண்டுஅ மிழ்ந்தரத மேருஇ ரண்டினையும்
விரக தாகஇரு வலவரும்
தாண்டி யும்சமரில் நேர்ந்தி றுத்தினர்கள்.
சுரத னானவனை மெய்த்துமால்,
"நீண்ட நின்பலம்அ னைத்தும் மிக்குஎன" நி-
கழ்த்த வே,கிரிடி "என்னையார்
வேண்டும்? மைந்துவலி யாக மெச்சுவது
விண்டு வே"எனவி ளம்பினான். 142

"தேர்இ ரண்டும்வலி ஒக்கும்; என்னொடுஅது
தன்னை யும்கொடுசெல் கின்றதால்,
வீரன் வாகுவலி தனைஉ ணர்ந்துஅவனை
மெச்சி னேன்"எனவி ளம்பி,நீ
ஓர்அ ருங்கணையில் இவனை வெல்வன்என
உரைசெய் தாய் அறியன் முடிவு"என
ஆர .வாரமுடன் வீர கர்ச்சனைசெய்து
அன்ப னோடுஇனிது கூறுவான்- 143

"பாரும்; இங்குஒருச ரத்தி லேமுடிப-
றக்க வேஉயிர்இ றக்கவே,
யாரும் நெஞ்சுகள்தி கைக்க ஒல்லையினில்
இன்றுஅ வன்பெயர்ஒ ளிக்கவே,
நேரில் கந்தரம்அ றுக்கி றேன்எனவும்
நெடிய வாகைவில்வ ணக்கியே,
ஆர ணன்கணைதொ டுத்த னன்குறிசெய்து
அவன்ம ணிக்களம்அ றுக்கவே. 144

விட்ட வெம்பகழி அண்டர் அண்டமும்வெ-
டிக்க உம்பர்கள்து ணுக்கவும்
நெட்டுஇ டிக்குலமு ழக்க மாய்உறநெ-
ருங்க வும்,சுரதன் ஓர்கணை

---

142. ரதமேரு - தேராகிய மலை, உருவகம்.
143. அறியன் - அறியேன்.
144. பாரும் - முதல்நிலைத் தீபகமாகப் பறக்கவே, இறக்கவே, ஒளிக்கவே, அறுக்கிறேன் என்னும் நான்குடனும் இயையும். கந்தரம் - கழுத்து. ஆரணன் கணை - பிரமாத்திரம்.

தொட்ட னன்குணம்அ றுக்க இக்கணைதொ-
னித்துள முந்து,ஒருமு ழக்கமாய்
ஒட்டி யே,இருவர் விட்ட கோலும்இடை-
யூடுஉ டன்றமிகு வேடையாய். 145

இடிக ளும்தவிடு பொடிப டக்கரட
விகட எண்கரிகள் கிரிகளும்
புடவி எண்திசையும் நடுந டுங்க,இடை
பொருவி லாவடவை பொங்கவே,
கிடுகி டென்றுஅமரர் உலகர் அஞ்சி,மதி
கெட்டுஒ ருங்கினர்கள்; வட்டவெம்
கடல்க லங்க,இரு சுடர்ம யங்க,அடல்
கடுகி நின்றஇரு சரமுமே. 146

"நமது பத்தர்இரு வோர்கள் சத்தியமும்
நழுவொ ணாது"எனவும் நணுகி,மால்
அமர்ள திர்த்தசரம் இகல்வி லக்கி",உரை
அறுதி சொற்றவிதம் அலது,இடை
சமர்செய் கிற்பநலது அல"எ னச்சொனது-
தனைஇ சைந்து,சுர தன்சரம்
நிமிஷம் வெற்றிவிச யன்சி லைத்திண்வடம்
நெறுநெ றுத்திடஅ றுத்ததே. 147

வடவை யோடுமுக சண்ட மாருதம-
டங்கல் அற்புதமும் ஒன்றதாய்க்
கிடுகி டென்றுசுர தத்து சாதிபதி
கிரீவ மானதைஅ றைந்துஅறுத்து,
உடுஇ னங்கள்உறு மண்ட லத்துஅளவு
உயர்த்தி விட்டு,நிமி ஷத்திலே
தொடுத னஞ்சயனி டத்தில் வாகையொடு
தோணி, தூணியில்அ டைந்ததே. 148

---

145. வேடை - வெப்பம.

146. கரடம் - யானைமதம்; கிரிகள் - அட்டக் குலவரைகள்; புடவி - உலகம்; இடை - இவற்றிற்கு நடுவே; அடல் - வலிமை, கடுகி - மிகுந்து

147. திண் வடம் - வலிய நாண்.

148. உடு இனம் - நட்சத்திரக்கூட்டம்; தோணி - தோன்றி, வந்தடைந்து.

மகர குண்டலகி ரீட சோதிவெயில்
மல்க அம்புயல்ஒ ளிக்கவே,
பகல வன்கிடுகி டென்றுஇ டைந்துகுட-
பால்அ டைந்த;இமை யோர்எலாம்
மிகஅ ருண்டுதடு மாறி ஓடவிசை-
யாய்எ ழுந்தசிரம் மீளவும்
சிகர கோபுரம்நி கர்க்க வேகிரிடி
சேக ரத்தினில்வி ழுந்துபின், 149

"மாத வா!விமல! கேச வா!கமலை
மார்ப கா!வலவ! வாமனா!
யாத வா!கரிய மாய வா!திரும-
ணாள னே!கருணை யாளனே!
சீத ரா!திகிரி கோடு வாள்சிலைகை
சேர்க தாயுதவி சாலகா!
தாதுஉ லாவுவன மாலி! நீதிசெறி
தாம னே!முருகன் மாமனே! 150

(கலிவிருத்தம்)

அரிஹரி! நாரணா! அச்சு தா!திரு
உரியவ! கரியவ! உமைச கோதரா!
பெரியவ! நரனையே பிரிகி லாதவா!
அரஹர சிவன்மகிழ் வான மைத்துனா! 151

என்னைஉன் அருட்கணால் இனிது நோக்கி,உன்
பொன்னடி பிரிவறப் புரிந்து காத்தருள்;
பின்னும்யான் செய்துள பிழைபொ றுத்தருள்"
என்னவே சிரம்இரு பதம்இ றைஞ்சியே, 152

இருவிழி இருபதத்து இசைய வைகிய
சுரதமன் னவன்அரும் சுடிகைச் சென்னியைக்
கரகம லத்துஎடுத்து, அணைத்துக் கண்ணிலே
சொரிகணின் மணிமென்மேற் சொரிந்துஇ ரங்கியே, 153

---

149. குடபால் - மேற்கில், சேகரம் - தலை.
150. கமலை - திருமகள், கோடு - சங்கு, பாஞ்சசன்னியம்; வனமாலீ - திருத்துழாய் அணிந்தவனே; தாமனே - பாம்பொருனே. 153. சுடிகை - கிரீடம்.

மடிமிசை தரித்தபின், வயின தேயனைக்
கடல்நிறக் கடவுள்தான் கருது முன்னம்ஓர்
நொடியில்வந்து இறைஞ்சினன்; "நொய்தில் சென்னியைக்
கொடுசங்க மத்தினில் இடு"எனக் கூறினான். 154

பன்னக வைரிமால் பகர்ந்த சொற்படி
சென்னியைக் கொடுபறந்து ஏகும் காலையில்,
உன்னதச் சுரதன்மெய் உயிர்மு ராரிபால்
மின்னல்அம் சோதிபோல் வெய்தின் எய்தலால், 155

மாயவன் இருகையால் வாரி உண்டனன்;
ஆயது கண்டவா னவரும் மாக்களும்
"ஏ!இதுஎன் நவம்!இவன் பெற்ற இன்பம்ஓர்
நேயரும் பெற்றிலார்" எனநி னைந்தனர். 156

"சருகுஇலை மூலசா கங்கள் வாயுவும்
பருகல்விட்டு ஒருநிலை பற்றி முற்றிய
விரதர்மேல் புற்றுஅரா இறுக்க மூடிட,
குருவிகள் குடம்பையில் கூடி வாழ்வுற, 157

விலங்கினம் பற்பல மேவி வாழ்வுற,
நலம்தவம் முயல்பவர் நன்மை தன்னிலும்
மலிந்துஅவன் கதிபத வாழ்வு பெற்றனன்
துலங்கிய சுரதனே" எனத்து தித்தனர். 158

தேவர்கள் மலர்மழை சிந்தி ஆர்த்தனர்;
மூவர்இந் திரனுடன் முசிவு தீர்ந்தனர்;
காவலன் மகன்சிரம் கலுழன் கொண்டுபோம்
மாவிசை தனைமகா தேவன் நோக்கியே' 159

தகுமல்குண் டோதரன் தன்னை விளித்து,"நீ
ககபதி கொடுசெலும் கவின்கொள் சென்னியை

---

154 வயினதேயன் - சுருடன்; நொய்தில - விரைவில்.

155. பன்னக வைரி - பாம்புப் பகை, கருடன். முராரி - திருமால்.

157. மூல - வேர், கிழங்கு. சாகங்கள் - மரக்கறி உணவு; வாயு - காற்று; குடம்பையில் - கூட்டைப் போன்று 159. முசிவு - மெலிவு; மகாதேவன் - சிவபெருமான்.

வகையுடன் தரச்சொலி வாங்கி மீள்"கெனப்
பகரும்முன் அவனுமே பதறி ஏகினான். 160

சென்றவன் வன்பெரும் சிறையி னால்எழும்
துன்றிய அனிலவெஞ் சுழலில் ஆகியே
குன்றுஇரும் சிறகது குறைந்து வீழ்ந்தபோல்
அன்றுகுண் டோதரன் அதிர்ந்து வீழ்ந்தனன். 161

வீழ்ந்தவன் அரன்அடி வெய்தின் எய்தியே,
"போழ்ந்திடத் திசைமலை, புணரி வற்றிடக்
காழ்ந்தவன் சிறைதரும் காற்று மோதிடத்
தாழ்ந்தது யான்"எனச் சம்பு நகையுடன் 162

பன்னிரு கரத்துஅறு முகவி சாகனைச்
"சென்னிகொண் டுறுக"எனச் சிகிந டத்தியே
பின்இவன் வருவிசை கண்டு? பேர்ந்துஇவன்
தன்னிலும் சதமடங் காகத் தாவியே, 163

ஈடுறு சரஸ்வதி யமுனை கங்கையும்
கூடிய சங்கம முகத்தில் கொண்டுபோய்
போடவும், மயில்விடு புரவி யாதிபன்
பீடுடன் கூவியே பின்வந்து எய்தினன். 164

எய்தினோன் கருடனை எதிரில் கண்டதே.
"வெய்துஉனைக் கூவியே விரைந்து பின்வரும்
செய்திகே ளாதுபோல், சீக்கி ரம்தலை
ஐதிகழ் சங்குதீர்த் தத்தில் ஆக்கினாய்;" 165

என்றலும், "எமையுடை யான்மொ ழிப்படி
அன்றியே வேறுசெய் வதுத காதுஎன

---

160. ககபதி - பறவைகளின் தலைவன், கருடன்.
161. சென்றவன் - போனவனாகிய குண்டோதரன், வினையாலணையும் பெயர்; சிறை - இறகு; துன்றிய - நெருங்கிய; அனிலம் - காற்று.
162. வெய்தின் - விரைவில்; காழ்ந்தவன் - வயிரம் பாய்ந்த உடலை உடையவன், கருடன்
163. சிகி - மயில். 164. சங்கமம் - கூடுதுறை
165. ஐதிகம் - தலைமையான

முன்றகும் சங்கம முகத்துஇட் டேன்"என
"நன்றுபோ" எனநதி மகன்இ ரங்கினான் 166

ககபதி அகல,வா கனத்தை நோக்கியே
குகன்அருள் வான்"தலை கொண்டு வா"என
சிகிநதி முகம்எலாம் சென்று தேடியே,
மகிழ்வுறக் கொடு,கையில் வந்துஅ ளித்ததே. 167

மயில்அருள் சிரத்தினை மடியில் வைத்தபின்,
வியனுறு கேகய மீதில் ஏறினான்;
புயல்எனச் சிகண்டியும் பொருக்கென்று எய்தபின்,
அயில்உறு கரன்அர னிடத்தில் ஈந்தனன். 168

தோகைவா கன்அருள் சுரதன் சென்னியைத்
தோகைபா கனும்திருத் தோளில் ஏந்தியே,
ஆகமே மகிழ்வுடன் அதனை முத்தியே,
ஆகமா லிகையில்வைத்து அணிந்து சூடினான். 169

சூடிய அரனுடன், உமையும் சூழ்வரக்
கூடிய பேர்களும் குழுமி ஏகியே,
ஈடுடன் அவரவர் இடத்துஉ றைந்தனர்
வாடிலாக் கிரிடியும் வாகை சூடியே' 170

(அடுத்த பாடல் சுவடியில் எழுதப்படவில்லை)

தெய்வசங்கு ஆகிய சிங்க நாதமே
தெய்வலோ கம்திசை செவிடு கொள்ளவே,
கைவர வாயில்வைத் தேக றங்கினான்;
நீநவுடன் மன்னனும் நடுந டுங்கியே, 172

"சுரதனும் மடிந்ததால் சுவேத வாகனன்
முரண்மணிச் சங்கமே முழக்க லுற்றனன்;

---

166. நதிமகன் - காங்கேயன், முருகன். 167. வாகனத்தை - தன் ஊர்தியாகிய மயிலை.
168. கேகயம், சிகண்டி - மயில்; அயில் - வேலாயுதம்.
169. தோகைவாகன் - மயில்வாகனன்; தோகை பாகன் - மாதொருபாகன், ஆகமாலிகை - மார்புமாலை.

இருகணின் மணிஎனும் இருவர் மாண்டபின்
அரசுஎன? வாழ்வுஎன? ஆவி பேணல்என்? 173

மந்திரி தந்திரி மார்க ளே!இவண்
அந்தமாய் இறந்தவர் அலது மிஞ்சிய
தந்திரம் கொடுபுவி தாங்கி வாழ்ந்திடும்;
இந்திரன் மகன்கையில் இறப்பன் யானுமே. 174

மக்கள்போல் அவன்கையில் மடிவன் யான்;அலால்
திக்குகள் மதித்திடச் செயித்து மீளுவேன்;
தக்கதாய் இரும்"எனச் சாற்றித் தேர்மிசைப்
புக்கனன் வடவைபோல் பொங்கு சீற்றமாய். 175

மன்னர்கோன் உரைத்தசொல் மந்த்ரி மார்கள்கேட்டு,
"இன்னவாறு உரைத்ததுஏன்? யாங்கள் வாழ்வது ஏன்?
உன்னிய உமக்குப்பின் உயிர்வைத்து யாங்கள்தான்
பின்உயிர் வாழ்வதும் பெரிய பாவமே; 176

ஆதரித்து எமைஎலாம் ஆளும் நாதன்நீர்;
பேதலித்து இவைசொனால் பின்பு யாங்கள்தாம்
ஏதம்அற்று இருப்பதோ? எந்த மூலைகாண்?
ஊதையில் பஞ்சுபோல் உலைவது உண்மையே. 177

உருத்துஉடன் உமதுகண் ணுக்கு முன்னமே
மரித்திடு வோம்யாம் வலிய பூசலில்;
சரத்தினில் அடங்கலும் தான்இ றந்தபின்
கருத்துஇயைந் திடும்படி காணும் மன்னனே." 178

"எட்டில்ஒன்று உள்ளதோ? இதுவும் இல்லையோ?
கட்டு(ட)ன் மடித்தனன் கணையில் பார்த்தனே;
மட்டறு தளம்எலாம் மடிந்துஒ ழிந்ததால்
நட்டம்உற்று அனைத்தையும் இழத்தல் ஞாயமோ? 179

---

173. கவேத வாகனன் - அருச்சுனன்.
177. ஏதம் - துன்பம்; ஊதை - பெருங்காற்று
178. உருத்து - சினங்கொண்டு, போரிட்டு என்ற பொருளில் ஆட்சி.
179. எட்டில் ஒன்று - மொத்தப் படைபலத்தில் அரைக்கால் பாகம்

ஒருவரும் எனதுடன் உற்றி டாதுஇவண்
இரும்அவன் றனைக்கொல்வன் அலதுஇ றப்பன்''என்று
அருவரை அனையதே ரதனில் ஏறியே,
வரமுறும் ஆயுத வர்க்க மும்கொடே, 180

ஒருகையில் சிலையுடன் ஒருகைக் கோலுமாய்,
அருவட வாமுகம் அனைய கோபமாய்,
இரதமும் இரவிதேர் எனந டத்தியே,
தரணியும் வெருக்கொளத் தாவி ஏகினான். 181

வீரவே ஷத்துடன் வேக மாகவே
ஆரவா ரத்துடன் அரசன் வாரதை,
காரைநேர் ஒத்தவன் காசை மேனியன்
சாரமாய் விசயனை நோக்கிச் சாற்றுவான்– 182

''மக்கள்வாஞ் சையின்மனம் வயிர வர்க்கமாய்ப்
புக்கினான்; இவனுடன் பொரவ லார்யார்;
திக்குஒரு கணையினில் தீர்ப்பன்; நம்மையும்
தக்கதோர் சரத்தினில் தறிக்க வல்லவன். 183

இவன்கணைக்கு எதிர்கணை யேமும் மூர்த்தியும்
நிவர்ந்துறக் கொடுத்துஎதிர் நிற்க அஞ்சுவார்;
அவன்றனை அடுத்துஉப சரிக்கை நன்று''எனச்
சிவன்றனை அடித்தவன் றனக்குச் செப்பினான். 184

சாற்றல்கேட்டு இருவிழி தழல்கள் சிந்தின;
பார்த்திபன் மீசைகள் படப டத்தன;
நாத்திறந் தேசப தங்கள் நாட்டும்முன்
வார்த்தைமா மாயவன் வாயை மூடியே 185

''அய்யனே! வாயைமூடு; அவனை அன்புடன்
செய்யநன் மொழிகொடு தேற்றி மீளுவேன்;

---

180. அருவரை - ஏறுதறகு அரிய மலை, வரமுறும் - சிறந்த.

183. வாரதை - வருவதை, காரை - மேகத்தை, காசை - காயாம்பூ

184. நிவர்ந்துற - வலிமையில் மிகுகதாக; அடுத்து - அணுகி; சிவன்றனை அடித்தவன் தனக்கு - சிவபெருமானை வில்லாலடித்த விசயனுக்கு, கருத்துடை அடைகொளி, சிவனையே அடித்தவன் இவனையா விடுவான் என்பது குறிப்பு.

வெய்யமன் என்னுடன் மீளும் போதினில்,
எய்யரும் தேரைவிட்டு இறங்கு நீயுமே;" 186

என்றுநன் மதிபகர்ந்து இறங்கி மால்செல
அன்றுஇவண் நிகழ்ந்தவை அனைத்தும் நோக்கியே
கன்றிய தைரியம் கழன்று இடைந்துமன்
சென்றமா யனுக்குஎதிர் சென்றுஇ றைஞ்சியே, 187

சகத்திர நாமனே! தரணி நண்பனே!
இகற்குநான் முனைந்துஉற எதிர்க்க வந்ததுஏன்?
சகத்தின்வாய் பொத்தல்என் தனஞ்ச யன்றனை?
சுகத்திரு நாதனே! சொல்லும்" என்றனன். 188

"கூறுவன் மொழிக்குஎலாம் கோபம் நீங்கி,நீர்
ஈறில்என் மொழிவழிக்கு இணங்கில்; அல்லது
தேறல்இல் கோபமே செயில்இப் போசெலும்
பாறியர்ன் எய்திடப் பார்த்தன் பாலிலே" 189

"நன்று;நீ இயம்பிடின் நானும் மாறிலேன்;
ஒன்றுஅற எனக்குஇனிது உரையும்" என்றனன்;
"வென்றிவில் விசயன்வீ ரியம்அ றிந்துநீர்
மன்றல்மா பிடித்ததே மதியின் ஈனமே. 190

நான்உட னேவரில் நரனை நின்னையும்-
தான்உற வாக்குவேன்; சபதம் சொன்னபின்
ஏனை;உன் மகன்நினைத் திடும்அப் போதிலே-
தான்எதிர் வந்துசஞ் சலத்தை நீக்கினேன். 191

இளையமைந் தனும்இரு முறைநி னைந்திட
வளையும்வெந் துயர்களை மாற்றி ஏகினேன்;

---

186. வெய்யமன் - கோபமிக்க அரசன்; எய்யரும் - பகைவர்களால் ஊறுபடுத்த முடியாத.
187. மன் - அரசன்.
188. சகத்தில் - பாதியில், பேசிக கொண்டிருக்கையில நடுவே, சுகததிரு - அடியார்களுகது இன்பத்தை வழங்கும் திருமகள்.
189. வன்மொழி - இங்கு மனதிறகுப் பிடிக்காத வாாதைகள், தேறல் இல் - தெளிவறற, யான் பாறி பார்த்தன் பாலிலே செலும் என இயையும், பாறி - ஓடி.
190. மன்றல் மா - வேள்விக்குரிய குதிரை. 191. ஏனை - மற்றதாகிய பகையே;

முளைஇரு வோர்களும் முருக்குண் டார்என
அளவறு கோபமோடு அடைதல் பார்த்து,யான் 192

நின்திறல் இயம்பிடில் நிகர்இல் வீரன்உன்
முன்புஅடை குவன்என மொழிந்த சொற்கு,அவன்
வன்சப தம்சொல வாய்ள டுத்ததால்
உன்றனை வேண்டிவாய் உறுதி பெற்றபின் 193

குறிப்பறிந் திடவலாய் குறிப்பது ஓதினேன்;
வெறுப்புறும் தொழில்செயில் வெல்வது இல்லை;நீர்
திறப்பட இரண்டில்ஒன்று இயம்பும் சீக்கிரப்;
கறுத்திடில் கொலும்;அவன் கறுப்ப தற்குமுன்." 194

"எவர்க்கும்நீர் பொதுமை;ஈது அன்றி வென்றியாம்
அவர்க்குநீர் அடிமையோ? அறையும்;" என்னவே
"தவத்தினர் பொதுமையான் சரதம்; இவ்வுகத்து
அவர்க்குயான் அடிமைஎன் பதுவும் திட்டமே. 195

அடிமைஎன் பதுநிசம்; ஆத லால்அவன்
இடுதொழில் இரதம்உந் திடுதல் காண்"என,
வடவையை நிகர்சினம் மழுங்கி மங்கியே
கடுவிழி மழைக்கணீர் கலுழ்ந்து கூறுவான்- 196

"சேயர்பால் நினதுஅருள் சிறிதுஉண் டாம்எனி-
லேஎவர் செயிப்பவர்?" என்ன மால்சொல்வான்-
"தாய்என யான்அயன் சேயும் சம்பும்நின்
சேயுடன் கூடினும் சிதைப்பன் பார்த்தனே. 197

உகம்இரண்டு இருந்துஉறு புத்தி உள்ளைநீ;
தகுதியின் மாக்களில் சாவுஇ லார்எவர்?
மகிழ்கதி சேர்ந்தனர் உனது மைந்தர்தாம்;
இகமதில் இரங்கல்என் இராச ராசனே? 198

---

192. வளையும் - சூழும்; முளை - மக்கள்.
194. கறுத்திடில் கொலும்; கறுப்பதற்கு முன் சீக்கிரம் இயம்பும் என்றவாறு
195. சேய் - முருகப்பெருமான்; சம்பு - சிவபிரான்.

"எனக்குஅவன் வலியன்என் றாய்;என் ஆண்டவன்
உனக்குஅவன் ஆண்டவன் எனவும் ஓதினும்,
முனிக்குஅர சன்பதி முடிசூ ளாள் வேன்"என
மனத்துணி கரமொடு மன்னன் ஏகினான். 199

மன்னர்மன் னவனுடன் மாலும் வாரதால்,
இன்னவில் இரதம்விட்டு இழிந்து பார்த்தனும்
முன்எதி ருற,மனன் முடுகி யே,எதிர்
தன்னிரு கரமலர் தான்கு வித்தனன். 200

குவித்தமன் னவனுடன் கூட வேகரம்
குவித்தனன்; வணங்கும்முன் கொற்ற வன்றனை
மவுத்துவ விசயனும் மார்பில் புல்லினான்;
கவுத்துவ மார்பனும் கருணை கூர்ந்தனன். 201

கேசவன் றன்னையும் கிரண மாமுடி
வாசவன் சுதனையும் வருந்தி, "என்மனைப்
போசனம்அருந்திஉம் புரவி யும்கொடு
தேசசஞ் சாரமே செயல்நன்று" என்றனன். 202

நன்றுஎன மூவரும் ரதத்தில் ஏறினார்;
வென்றிமன் னவர்களும் வீர வீரரும்
பின்தொடர்ந்து ஏகினர்; பிறங்கு சேனையும்
சென்றன எயிற்கடை சேர நீங்கியே; 203

அரண்மனை தனில்அடைந்து, ஐந்து நாள்இருந்து,
இரும்சபா மண்டபத் தினில்இ ருத்தியே,
கிரணவில் பணி,மணி கிளரும் பூந்துகில்
உரவனும் உபசரித்து உபயர்க்கு ஈந்து,பின் 204

மற்றும்மு காதிபர் மன்னர் வீரர்கள்
முற்றும்இவ் வரிசையின் முறைமை பெற்றனர்;
நற்றிரு மால்நரா திபனை நோக்கியே
உற்றுஒரு வாய்மையே உரைக்க லுற்றனன் - 205

---

201 கவுத்துவ மார்பன் - கண்ணன்.

202. வருந்தி - உபசரித்து அழைத்து, வருந்தி அழைத்தல் என்பது வழக்கு.

203. கிரணவில் பணி - சுதிர்களின் ஒளியை உடைய ஆபரணங்கள்.

"நின்நகர்க்கு ஒருவனை நிருப னாகவைத்து,
உன்னுடன் சிலதளம் ஒக்கக் கூட்டியே,
பின்னுடன் விசயனைப் பேணிக் காத்திடும்;
என்னையொத்து அவன்குணத்து இயல்புஅ றிந்துநீர் 206

தனஞ்சயன் தனக்குநீர் தான்ச காஅதாய்
இனம்செய லால்எனக்கு இலைக லக்கமே;
தினம்செய்வோன் மகன்மகன் சேனை காவலன்;
மனம்செயம் புரிமதி மந்த்ரி நீருமாய் 207

பரிப்பிறகு எய்தியே பகைத விர்த்திடும்;
கருத்தின்யான் யுதிட்டிரன் றனைக்கண் டே,அவன்
உரைப்படி வேள்விஊ ழியங்கள் செய்குவேன்;
திருத்தமுற்று எய்திடா விடில்சி னப்பனே." 208

"அஞ்சிஇத் தனைபரி தாபம் சொல்வதேன்?
பஞ்சவர்க்கு ஆண்மையோ? பகரும் நீர்"எனத்
"தஞ்சமாம் நிசமது தான்;சந் தேகமோ?
அஞ்சில்என்? மொழிக்குச்சா தகமும் வேண்டுமோ?" 209

அறன்மகன் சுருக்கினில் அகப்பட் டேன்ஐயா!
அறம்கொடே எனைக்குரங் காட்டு றான்ஐயா!
பொறையன்அன் றுஎனில்ஒரு போக்குஉண் டோஐயா?"
சறுகிநான் கரக்கவும் தலம்உண் டோஐயா?" 210

என்னமால் உரைத்திட வேஇ ராசர்கோன்
உன்னியே நகைத்து"நன்று! உனது மாயையின்
பின்னலைக் கடந்துள பேர்கள் இல்லையால்;
உன்உரைக்கு ஒழுகினேன்; உறுதி" என்றுபின் 211

நகர்க்குஅரசு ஒருவனை நாட்டி, நால்வகைத்
தொகைப்படை சூழ்தரத் துணிந்த காலையில்
மிகுத்துஅருச் சுனனுக்கும் விரகு கூறியே,
மகத்தினை ஓம்பவான் மாலும் ஏகினான். 212

---

205. முகாதிபர் - அணித்தலைவர், நராதிபன் - மன்னன்.

207. சகா - நண்பன், அது - பகுதிபொருள்விகுதி; தினஞ் செய்வோன் மகன் மகன் - சூரிய குமாரனான சனனனின் மகனாகிய விடீதனன்.

209. ஆண்மை - ஆளான தன்மை, அடிமைத்தனம்;

210. பொறையன் - பொறுமை மிக்க தருமன்; சறுகி - நழுவி, கரக்க - ஒளித்து கொள்ள.

212. விரகு - ஆலோசனை, மகத்தினை - வேள்வியை.

புட்பதி பரித்திடப் பொருந்தி வேள்விசெய்
மட்பதி சேர்ந்தனன் மாயன்; நேயனாம்
விட்பதி ரதனுடன் வீர வீரரும்
பெட்புறு சேனையும் பெயர்ந்துள முந்ததே. 213

மனகதிப் புரவியை மகிழ்ந்து அலங்கரித்து,
அனகனுக்கு அடியன்வீறு அமிர்த கேதனன்
தினகரப் பிரபைசெய் திடக்கி ரீடிதன்
முனம்விடுத் தனன்முசிப்பு அகல யாருமே 214

கன்நவ ரத்தினக் கவிகை நீழலில்
மன்கதிப் புரவியும் வாவி ஏகிட,
உனிகுளப் படிமுதல் ஓமம் எக்கியம்
முனிஉரைப் படிமுடித் தேமுன் விட்டனர். 215

சதுவகைச் சேனையின் சலதி சூழ்தர
அதிரத மீதுஅருச் சுனனும் ஏறினான்;
மதிஅமிர் தத்துச னுடன்மற் றோர்களும்
மிதமுறும் இரதமீது ஏறி ஏகினார். 216

சலப்பிர ளயப்பெரும் சலதி பொங்கலாய்
நிலத்துஉயிர் சாம்பநல் நகரை நீங்கியே
இலக்கணம் மிகுபரி இசைந்து சென்றது
பலிப்புஉள பஞ்சவாத் தியங்கள் ஆர்க்கவே. 217

வைசம்பா யனமுனி வழுத்தக் கேட்டதே,
"மெய்இது"என் றேசென மேயன் மெச்சியே
தொய்வுஅறு கதைக்குஎலாம் சுபட்சம் இக்கதை;
கைதவ முனிவனே குளிர்ந்த காதகம். 218

சுரதத்துசன் போர்ச் சருக்கம் முற்றும்
ஆகச்சருக்கம் 10க்கு விருத்தம் 1501

---

213. புட்பதி - பரவை வேந்தன், கருடன்,

214. அனகன் - குறைமற்ற இறைவன், இங்கு திருமால், முசிப்பு - மெலிவு, யாருமே முசுப்பு அகலப்புரவியை விடுததனன் என்க. 216 சலதி - கடல்.

218. கைதவ - தவ ஒழுக்கதில் சிறந்த, தவக்கை எனமாறுக, சுபட்சம - பொருள் உள்ளது; சாது அசும் குளிர்ந்த - செவிகளும் உள்ளமும் இனிமை உறறன, காதகம - உமமைத் தொகை. சற்றடியில வஞ்சத்தவசியே (கைதவ முனிவனே) இக்கதை குளிர்ச்சியாகச் செய்த கொலை ஆகும (குளிர்ந்த காதகம்) என்ற ஒரு விபரீதப பொருள் விளைவது ஒரு நயம்.

11. வர்க்க தேசச் சருக்கம்

(கலிவிருத்தம்)

மண்ணையும், மண்ணையின் உயிரும், பாலொடு
வெண்ணெயும் உண்டவன்; வேலை வாழ்பவன்;
எண்ணையும் அறிந்துவந்து இடுக்கண் தீர்த்தருள்
அண்ணலை அநுதினம் அகத்தில் உன்னுவாம். 1

வயசென மேசயன் வைசம் பாயனன்
செயமுனி பதம்தொழுது இசைந்து போற்றியே,
உயர்அமிர் தத்துச னுடன்கி ரீடியும்
அயமுடன் நடந்தபின் அதற்கு மேல்சொலும்" 2

என்னும்மன் னவன்முகம் இருடி நோக்கியே,
பின்நடந் தனவெலாம் பெயர்ந்து கூறுவான்-
"முன்இரு தினத்தினில் முடிந்த சேனைகள்
உன்னிய ஆறுஅக் ரோணி உண்டதே" 3

மற்றுள சேனையும், மன்னன் சேனையும்,
வில்திறல் விசயனும், வேந்தர் வீரரும்
முற்றிய பஞ்சவாச் சியம்மு ழங்கவே,
கொற்றவெங் கடல்எனக் குழுமிச் சென்றனர். 4

கார்ஒலி, இடிஒலி, கடலின் ஓதையில்
தேர்ஒலி முதலுறும் சேனை ஓதையும்
பேரொலி யாகவும் பிறங்கி, மாப்பினர்
வீரரும் தளங்களும் விரைந்து சென்றனர். 5

திண்கடற் பெருக்கொடு சேனை சூழ்ந்திட
விண்ணக னங்களும், மேரும் சூழ்மலை
எண்கிரி, கரிகள்,மற்று எவையும் அஞ்சிடப்
பண்கெழு மிடும்படிப் பார்த்தன் ஏகினான். 6

---

1. மண்ணையின் - பிசாசின், பூதனை, எண்ணை - அடியார்களின் கவலையை, வநது - தானே எழுந்தருளி.

5 மா பினர் - குதிரைக்குப் பின்னால். 6. விண்ணகனம் - ஒரு பொருட்பன்மொழி.

உன்னியின் குழப்படிக்கு ஓமம் எக்கியம்
பின்னும்மற் றவைஎலாம் பெட்பு டன்செய்தே,
கல்நவ ரத்தினக் கவிகை நீழலில்
நல்நவப் புரவியை நடத்தி ஏகினான். 7

தனஞ்சய னுடன்அமிர் தத்து சாதிபன்
கனன்செய மகனுடன் கவின்மற் றோர்களும்
தினம்சில நடந்தபின் .... நேர்என
இனம்செறி மாக்கள்வந்து எதிர்ந்து நோக்கினார். 8

வாயினைப் பிளந்துஎதிர் வந்து நோக்குவர்;
பேய்எனக் கலங்கியே பெயர்ந்தும் ஓடுவர்;
ஏஎதிர் தூரம்நின்று எதிர்ந்து பார்ப்பர்கள்;
பாய்அசக் குழுநிகர் பதறி ஓடுவர். 9

இரைந்துஅவ ரவர்க்குஎதிர் இசைத்தல் மாக்களும்
துரந்தரும் விலங்குகள் தொனியும் அல்எனக்
கரந்துநின்று இரைந்துறக் கலங்கி யேகலை
புரந்தரன் மகனுமே புதுமை ஆகினான். 10

அந்நிலந் தனைக்கடந்து அயலில் யோசனை
தன்னில்ஓர் பெருவனந் தனையும் நீங்கியே,
உன்னியும் நிருதியின் உலகை நோக்கியே
மன்நடை கொண்டது வர்க்க தேசமேல். 11

"பெண்ணுடன் ஆணுமே பிறந்த மேனியாய்
நண்ணுவர் நக்கியும் நக்கன் ஆகவே;
விண்அடர் தருக்களின் விரைந்தி டும்சினைக்
கண்ணினில் வாவலாய்க் கங்குல் தூங்குவார் 12

பகலினில் பொருந்துசஞ் சாரம் பண்ணுவார்;
இகல்இது தொழில்அவர்க்கு எந்த நாளும்"என்று

---

8. கனன் செய மகன் - கண்ணனின் வெற்றி மிகுக மகனாகிய வீடதீதனன்.
9. ஏ எதிர் - அம்பு செல்லும், அசகுழு - ஆட்டு மந்தை
11. நிருதியின் உலகு - தென்மேற்குத்திசை.
12. நக்கி - உடையணியாத பெண்; நக்கன் - உடையணியாத ஆண்; வாவல - வௌவால், கங்குல - இரவு.

அகம்இலி பின்னனுக்கு அமிர்தன் ஓதவே,
தகுதனஞ் சயன்தலை அசைத்தே ஏகினான். 13

"மன்னர்வீ ரியர்சிரோ மணி!வில் வீரனே!
சன்னையில் வர்க்கதே சங்கள் ஈது"எனப்
பன்அமிர் தத்துசன் பகர, வீரரும்
நன்னிலை விசயனும் "நலது"என்று ஏயபின், 14

வாவல்போல் தூங்கிய ஆணும் பெண்ணுமே
பாவிய தளங்களைப் பார்த்து நக்கவே;
காவினில் தூங்கிய கணங்கள் தம்மையும்
தாவிய தளத்திரள் தானும் நக்கவே. 15

அல்விலங்கு இனம்என ஆணும் பெண்ணுமாய்ப்
புல்குவர் நிரந்தரம் பொருந்தி அங்குஎலாம்;
எல்இவை நோக்கியே இலகும் மூரலாய்
வில்விச யன்புரிந் தேவெய்து ஏகினான். 16

தலத்துஇயல் புஎனத்தலை அசைத்துப் பார்த்தன்அந்
நிலத்தைவிட்டு அகன்றனன்; நெடிய சேனையும்
தொலைப்படப் போனபின் தோன்று கோபுரம்
மலைத்தலை நிகர்த்தன வானம் முட்டவே. 17

பெருகிய நொச்சியுள் பிறங்கு கோபுரம்
விரவிஅங்கு இருப்பதை விசயன் நோக்கியே,
"அரசனே! இவைஎவை அருளும்;" என்னவே,
கருதுஅமிர் தத்துசன் கழற லுற்றனன். 18

"தயிரிய! புயபல! தனுவில் வீரிய!
செய!எதிர் தெரிவது சிங்க தேசம்;அவ்
வயின்உறு பவர்மருப்பு உடைய மானவர்;
ஒய்இரு மூன்றுநால் உடைய கொம்பினர்." 19

---

13. அகம் இலி பின்னன் - ஆணவமற்ற தருமனின் தம்பியாகிய விசயன்
15.தூங்கிய - தொங்கிக்கொண்டிருந்த
18. நொச்சி - மதில்.

என்றலும் தளத்திரள் எண்ணில் யோசனை
துன்னிய பரவையின் தொடர்பின் மல்கியே
சென்றன சதுவகைச் சேனை ஓதைகள்
மன்றலின் பஞ்சவாத் தியங்கள் ஆர்க்கவே. 20

அந்நகர்க்கு அருகுற அசுவம் ஏகலால்,
துன்னிய கடற்படை தொடர்ந்து பின்சொலப்
பன்ஒலி கேட்டஅப் பதிஉ ளோர்எலாம்
முன்னினர் உவரியை முங்கு சங்கமாய். 21

தானைஇங்கு அதற்குஅது சதம டங்கதாய்ச்
சேனையைச் சூழ்தரச் செறிந்து மொய்த்தனர்;
மானவர் சிலர்க்குஒரு மருப்புஇ ரண்டுஉள;
ஏனைமுச் சிருங்கர்நாற் சிருங்கர் சிற்சிலர். 22

உலவையில் சிலகவர் உடைத்தும் ஒன்றுமாய்ப்
பலபல விகற்பமாய்ச் சிங்கப் பல்லுமாய்,
வலியுறு கோரவீ சைகளின் வண்மையாய்,
நிலமிசை அணியணி நிறைந்து சூழ்ந்தனர். 23

கரங்களை நிலமிசைக் கருதி ஊன்றியும்,
சிருங்கமது அடிக்கடி குலுக்கிச் சீறியும்,
தரங்கம தொடும்எதிர் தாவித் தத்தியும்,
நிரந்தர மினல்என நெருங்கி வாங்கியும், 24

பாய்தரு துணிவொடு பரந்து நிற்பதும்
காய்திரு விழிக்ளில் கனல்கள் கக்கியும்
வாய்தனைப் பிளந்துஇதழ் வவ்வித் தவ்வியும்,
கூயது வெடிஇடிக் குரல்மு ழக்கியும். 25

விற்குணத் தொனிக்கும்,ஐ விகற்ப ஓதைக்கும்,
நற்சது வகைத்தள நடைஒ லிக்குமே,
அர்ச்சுனன் குணத்தொனி யதற்கும் அஞ்சியே,
கெர்ச்சிதத் தொடுபிற கிட்டும், அண்டியும், 26

---

22. சிருங்கர் - கொம்பினை உடையவர்
23. உலவை - கொம்பு; சுவர் - கிளைவிடுதல், இரண்டாகப் பிரிதல.
24. தரங்கம் - அலை, இங்குக் கடல் போன்ற படை.
25. தவ்வி - ப ற்ந்து; கூயது - கூச்சலிட்டது.
26. ஐ விகற்ப ஓதை - பஞ்சவாத்தியங்களின் வேறுபட்ட ஒசை, கெர்ச்சிதம் - முழக்கம.

எல்லையில் படுமளவு எதிர்த்தும், ஓடியும்,
வல்லது நெருங்கியும், மனம்ந டுங்கியும்
புல்லலும் அகலலும் பொருந்தி, யாவுமே
செல்லற நெருங்கறத் திகைத்து நின்றதே. 27

அணியணி ஆகவே அகல நின்றுபார்த்து,
உணர்வுறு மருப்புமா னிடர்ஒ ழிந்தபின்
மணிவனன் இவைஎலாம் மகிழ்ந்து பார்த்து,உவந்து,
"எணிஅயன் இவ்விதம் படைத்தது என்னவோ?" 28

என்னநெஞ்சு உன்னிஇந் நாலு தேசமும்
உன்னியும் கடந்துற ஒக்க ஏகினார்,
அந்நிலந் தனில்பெரும் அடவி தோன்றிட
மன்னும்அவ் இடத்தினில் படுத்த மாவுமே. 29

தரித்தஅவ் இடத்தினில் தங்கி, யாவரும்
விரித்தநல் நகர்செய்து, வெள்ளச் சேனையோடு
அரிச்சுனன் எழுந்தனன்; அனலி தோற்றினார்.
பரிக்கும்மா நடந்தது; படைபின் சென்றன. 30

தோல்துளை நரம்புகள் தொனிக்கக் கஞ்சமும்,
கூறிய பாடலும் குமுற, நால்வகை
மூரிய சேனையும் முழங்கிப் பொங்கியே,
மீறிய பெருங்கடல் வெள்ளம் போன்றதே. 31

கடல்பெருக் கெடுத்திடக் கல்லும் கானமும்
மிடலுடன் அழுந்திய விதமது ஆகவே,
படையெனும் பிரளயம் பரந்த போதினில்
அடவிகள் திடல்களும் அமிழ்த லுற்றதே. 32

---

28. எணி - எண்ணி, இங்கு சுற்பனை செய்து.

30. விரித்த - விசாலமான; அனலி - சூரியன், (ஒருநாள்) பொழுதுவிடிந்த பரிக்கும் - பாதுகாக்கும் எனப்படும்.

31. தோல் - தோல் போர்த்த தாள வாத்தியங்கள்; துளை - தொளையிடப்பட்ட காற்று வாத்தியங்கள்; நரம்புகள் - நரம்புகளாலான மீட்டப்படும் இசைக்கருவிகள், கஞ்சம் - வெண்கலத்தாலான இசைக்கருவிகள்; பாடல் - வாய்ப்பாட்டு, இவையே பஞ்சவாத்தியம்.
மூரிய - பெரிய. 32. திடல் - மண்மேடுகள்.

மூவறு மேளவாச் சியம்மு ழங்கிட,
மேவிய நடனமும் விருதும் சென்றிடக்
காவும்ஒன் பதின்மணிக் கவிகை நீழலில்,
தாவிய வலப்பரி தரந டந்ததே. 33

ஓமம்எக் கியங்கள்,ஊ ருணி,உய் யானமும்,
வாமஆ லயம்,அக ராங்கள், சத்திரம்
கோமுனி உரைத்துள குறிப்பின் வண்ணமே
நேமக மேசெய்து, நெடிது சென்றனர். 34

கரிஒலி, மணிஒலி, கார்மு கத்தொனி,
பரிஒலி, கொடிஒலி, பஞ்ச வாத்தியத்
திரைஒலி, தேர்ஒலி யதனில் முச்சகம்
வெருவொடு நடுங்கஏ கியது வெள்ளமே. 35

நிரந்தரம் நடந்திட, நிருதி மூலையில்
விரிந்தஅம் பரம்தொட வெய்ய கானகம்
இருத்தவை தெரிந்திட வே,இ ராசனை
புரந்தர குமரனும் புரிந்துஉ சாவினான். 36

"அரணிய தண்டகா ரணியம் யாதுஎனில்,
இரணியற் செற்றவற்கு இனிய நண்பாகேள்;
கிரிசெறி ரகசக் கிரபு ரத்திலே
நரபலி அருந்தினோன் நந்தன் வாழ்பதி 37

(அறுசீர் ஆசிரிய விருத்தம்)

காட்டுஅரண் ஏழு நூறு யோசனை கடவு ளானோர்
நீட்டிலா விரலி னால்நி றைந்ததே சம்காண் ஈது;

---

33. காவும் - சுமக்கப்படும்; காவும் கவிகை.
34. ஊருணி - குளம்; உய்யானம் - சோலை; வாமம் - அழகிய; நேமகமே செய்து - நியமித்து.
35. கார்முகத்தொனி - வில்ஒலி;
36. நிரந்தரம் - தொடர்ச்சியாக; அம்பரம்தொட - வானளாவிய; புரந்தர குமாரன் - இந்திரன் மகன், அருச்சுனன்.
37. இரணியற்செற்றவன் - நரசிங்காவதாரமெடுத்த திருமால், கண்ணன்; ஏக சக்கரபுரம் - பாண்டவர்கள் மறைந்து வாழ்ந்திருந்த ஓர் ஊர். இங்கு வீமன் பகாசுரனை அழித்தான். நரபலி அருந்தினோன் இவ்வசுரனே.

கோட்டையுள் பகாசு ரன்றன் குமரன்வீ டணன்ஆம் கோமான்
தாட்டிகன் அவன்பேர் கேட்கில் சடைமுடித் தேவும் அஞ்சும் 38

பாதகம், கொலை,வி காதம், பகைப்பயிர் விளங்க வாழ்வன்;
ஆதரவு, இரக்கம், தர்மம், பொறைஅகத்து, அணுவும் இல்லான்;
மூதுஇருள் அரக்க வீரர் மூன்றரைக் கோடி பேர்கள்
தாதுஉகு மாலை மார்பர் தளபதி அவனுக்கு உண்டே. 39

கார்இருட் கடலும் அஞ்சக் கருத்ததே கத்தார், நீண்ட
பாரிய பிறையாம் சிங்கப் பல்லர்,செம் பட்டைச் செந்தீ
ஓரியர், கோர வீசை உடையவர் சேனை நாதர்;
ஈரம்இல் ஒருவற்கு ஐந்து லக்கமாம் அரக்கர் சேனை. 40

இருட்பிழம்பு அனைய மெய்யர்க்கு ஏறும்வா கனம்ஏது என்னில்
பொருப்பென உயர்ந்த சிங்கம், புலி,மத கரி,மா, பூட்கை,
கருத்தபம், கரடி, தேள்,நட் டுவக்காலி, கடுவாய், பாம்பு,
விரித்தவே சரிஈது எல்லாம்; வெற்பின்மிக் கதன்மேற் கொள்வார். 41

(கலித்துறை)

முகடு முட்டிய முடியினர்; திசைவெளி முகட்டின்
அகடு தட்டிய கரத்தினர்; வாவிய கிரியோர்;
சிகர கோபுர எயிற்றினர்; சிங்கவெண் பிறைப்பல்
விகட வெங்கட கதுப்பினுள் அடக்கிய வீரர். 42

விரல்கள் புல்வனம்; விழிமயிர் பூகவெங் ககனம்;
அரிய ஆல்விழுது அனையமெய் மயிர்;பெரும் தடத்தில்
பெரிய நாசியின் ரோமமும் மலைப்பெரும் பாந்தள்;
மருவும் ஏரியின் கரைஇதழ்; அறுமடை வாயார். 43

---

38. நீட்டிலா விரலினால் - (சுட்டவே அச்சம்கொண்டு) விரல்நீட்டாதபடி; தாட்டிகன் - வலிமை மிக்கவன்.
39. விகாதம் - அழிவுச்செயல்; பொறை - பொறுமை.
40. பாரிய - பெரிய; ஓரியர் - தலைமயிரை உடையவர்.
41. பூட்கை - யாளி; கருதபம் - கழுதை; கடுவாய - நாய; வேசரி - கோவேறு கழுதை; இவ்வுர்திகள் மலையினும்மாணப்பெரியவை என்றபடி.
42. அகடு - வயிறு, இங்கு பக்கமலை, விகட - பெரிய; வெம் - விருப்பமிக்க, கட - குடம்போன்ற, கதுபபு - கவுள்.
43. புல்வனம் - மூங்கிற்காடு; விழிமயிர் - கண் இரெப்பை, பூகவெம்ககனம் - விருப்பத்திற்குரிய பாக்குத் தோப்பு; தடத்தில் - மலைச்சாரலைப் போன்ற, நாசியில் உள்ள உரோமத்திற்கு மலைச் சாரலிலுள்ள மலைப்பாம்பு உவமை. மடை - மதகு.

அலையை நேர்உடற் சுருக்கினர்; அம்பர மகரம்
மெலிய வெங்கையில் பற்றியே, ரவியில்வே வித்து
வலிது நுங்குவர் ஈயலைக் கிராதர்நுங் குவதாய்;
சலத ரங்களை முறுக்கியே பிழிந்துசாப் பிடுவார். 44

திருக்கு தீத்தவழ்ந் திடும்;சிகை தீளனத் திவளும்;
சிரத்தர் ஒன்றரும், இரண்டரும், முச்சிரத் தவரும்,
தரத்த ஆயிரம் தலையரும் இறுதிய தாக
அரக்கர் எண்ணிறந் தவர்கள்இந் நிலத்துஉளர் ஐயா. 45

அரக்கி யின்குழு இவ்விதத் தவர்அக லத்தில்
உரத்த கனமுலை ஒன்றுஇரண்டு ஒருதிரி நால்ஐந்து
இருக்கும் பன்முலைச் சியரும்உண்டு; ஒன்றதன் நீட்டு
பெருத்த யோசனை மூன்றதிற் பெரியதும் உளதே. 46

நரர்இ னங்களும், விலங்குஇனம் முழுதையும் நாளும்
புருகு கின்றவர்; பதியில்எந் நேரமும் குருதி
பெருகு கின்றதால் இரத்தமண் டலம்எனும் பேராம்;
குருகு லாதிப விசயனே! எனமனன் குறித்தான். 47

நன்றுள னத்தலை அசைத்துஅவன் ஏகலும், நடன
வென்றி வெம்பரி அப்பதி நோக்கியே விரைந்த;
அன்று வீடணன் புரோகிதன், பிரமராக் கதன்,பேர்
ஒன்று மேதகன்; யோதையின் குணக்குவாய் உற்றான். 48

அக்க டைச்சனி திசையினில், ஒருதடா கத்தில்
தொக்கு டன்தினம் தனதுதுட் டிகள்முடித் திடுவான்.
மிக்கின் அவ்விதம் மேதகன் துட்டிகள் முடித்துப்
பொக்கெ னத்திரும் புதன்மனம் பொருந்தும்அப் பொழுது 49

---

44. அம்பரம் - கடல்; மகரம் - சுறாமீன், ரவியில் - வெய்யிலில், வேவித்து - வறுத்து. ஈயல் - ஈசல்பூச்சி; கிராதர் - குறவர்; நுங்குவதாய - விழுங்குவதைப்போல; சலதரம் - மேகம்.

45. திருக்கு - சுண்; சிகை - தலைமயிர்.

46. அகலம் - மார்பு, உரத்த - வலிமையான; கன - அளவால் பெரிய; திரி - மூன்று; ஒன்றுஅதன் - ஒரு நகிலின்; நீட்டு - நீளம்.

48. யோதை - பொருள்விளங்கவில்லை, குணக்கு - கிழக்கு

49. அக்கடை - அந்தப்பக்கம், சனிதிசை - வடகிழக்கு, துட்டி - நீராடல். சந்தியாவந்தனம் முதலிய சமயச்சடங்குகள் போலும், ஐயமற விளங்கவில்லை;

ஈசன் நற்றிசை யினில்,உலகு எங்குமே நடுங்கப்
பேசு பஞ்சவாத் தியங்களும் முழங்கிடப் பெருகும்
ஓசை மாக்கடற் றளத்திரள் வருதல்உற் றறிந்து,
பாசஐ வீடணன் பக்கலில் பதறிவந் தனனே. 50

எருவை நெற்றியில் சந்தனப் பட்டைஇட்டு இலங்கக்
குரைமு கப்பலின் அட்சதை நுதலினில் கொண்டு,
நரர்பொ சித்திட அபேட்சையாய் நாதனை நண்ணி,
அரிதின் நாய்ப்பல்அட் சதைகொடுத்து ஆசிர்வ தித்தான். 51

சென்ற மேதகன் றனைநமஸ் காரமும் செய்தே,
"இன்று தேவரீர் வந்தவாறு என்"என வினவத்
"துன்றி டும்புன்ற் றடத்தைநேர் தொடர்கடற் பரப்பாய்
வென்றி வெம்படை வருதையா; வேந்தர்கள் வேந்தே! 52

அமர ரைச்செயித்து, எமக்குநல் விருந்துஅளிப் பாய்என்று
உமது டன்சொல உற்றது;ஈது அல்லது,உம் பதியில்
நமரில் எண்ணிறந் தோர்உயர் பிரமராட் சதர்கள்
சமம்இ லார்;அதில் நாலுலட் சம்பெயர் தக்கோர் 53

சந்நி யாசிகள்; இலங்கையந் தீவுஅழிந் ததனால்
இந்நி லம்தனில் அடைந்தனர் கைம்மைராக் கதிகள்;
மன்னும் வீடணன் அமுதுஉரை மறுத்துவந் துற்றார்
அன்ன கைம்மையோர் மாத்திரம் போதும்அப் படைக்கே. 54

தவத்தி னிற்பெரி யோர்களாம் சந்நியா சியர்கள்
இவற்றில் ஆடிஆ வணிபுரட் டாசிஐப் பசிக்கும்
விவட்சை யாய்இளம் கைம்பெண்ஆ யிரர்களை விழுங்கித்
துவட்டு சோரிஎண் பதின்கலம், எழுபங்கு தொண்டி 55

---

50. ஈசன்நற்றிசை - வடகிழக்கு; பாசு ஐ - தைரியம் மிக்க தலைவனாகிய.

51. எருவை நெற்றி - யானையின் நெற்றியைப் போன்று மிக அகன்ற நுதல்; குரைமுகப்பல் - நாயின் பற்கள்; அட்சதை - வாழ்த்துதற்குரிய மங்கல அரிசி, அபேட்சை - விருப்பம்.

53. நமரில் - நம்மவரில்.

54. கைம்மை - ராக்கதிகள் - கணவரை இழந்த அரக்கியர்.

55. மழைமிக்க இந்த நான்கு மாதங்களும் துறவிகள் ஒரிடத்திலேயே இருந்து நோற்பர். இது சாதுர்மாஸ்யம் எனப்படும்; விவட்சை - விருப்பம்; துவட்டு - தொட்டுக்கொள்ள; சோரி - உதிரம்; தொண்டி - சுள்.

நிரவி யேகலந்து அருந்துவர் நிதமும்;ஓர் மதியின்
விரதம் ஆவணிக்கு ஈரைஞூறு இலிங்கதா ரிகளைப்
பருகு வார்;புரட் டாசியில் பண்பில்ஆ யிரம்பேர்
இரவில் நுங்குவர் பிரமசா ரியர்களை இசைந்தே; 56

அற்ப சிக்குஅவர் பசிகெட ஆயிரம் மாதர்
கெற்ப முற்றவர் தங்களை விழுங்குவர் கிளர்ந்தே;
அற்பு தத்தவர் விரதமே முடிவுஅடுத் ததனால்
பொற்ப வர்க்குஎலாம் பாரணை பொறுத்தல்புண் ணியமே. 57

அதற்கு நேர்வழி வந்ததுஇப் போது"எனும் அளவில்
மதத்த நால்வகைச் சேனைஆர்ப் பொடும்வரு வதனால்
விகற்ப மாகிய மிண்டையாம் அரக்கியர் வெள்ளம்
இதற்குள லாம்இறை மைஒரு விகுர்திபிங் களையே 58

அந்த ராக்கதி அரக்கியர் யாரையும் திரட்டி,
"இந்த ஊர்உள அரக்கர்கள் இகலிஉண் டிடும்முன்
நந்துஅ னீகம தால்அடித்து உண்ணல்நன்று" எனவே,
சிந்தை யோடுஒருத் தலித்து,எழுந்து, எதிர்த்தனர் திரண்டே 59

ஏக நேத்திரி, ஏககர் ணீ,திரி நேத்ரி,
மேக தேகி,சந் திரகலா தரி,மேக வாணி,
மேக முக்கி,அம் மேகவா கினி,கரி முக்கி,
சாக முக்கி,பஞ் சமுக்கி, மச்சமா முக்கி, 60

தீர்க்க லோசனி, வ்யாக்கிர முகி,தேனு முக்கி,
தீர்க்க தேகி,ம கோதரி, தீர்க்கசு வாசி,

---

56. நிரவி - சரிப்படுத்தி; மதி - மாதம், இலிங்கதாரி - வீரசைவர்.
57. பொற்பவர்க்கு - சிறப்புடையவர்க்கு; பாரணை - ஒரு விரதமாக உபவாசம் முடிந்தபிறகு சாப்பிடும் முதல் சாபபாடு.
58. மிண்டை - வலிமை மிக்கவள், மிண்டன் என்பதன் பெண்பால்; இறைமை - தலைவி.
59. ராக்கதி - விகுர்திபிங்களை; நந்து - நம்மால் விரும்பப்படுகின்ற; அனீகம் - படை.
60. ஏகநேத்திரி - ஒற்றைக் கண்ணி; ஏககர்ணீ - ஒற்றைச் செவியள்; திரிநேத்ரி - முக்கண்ணி; மேகதேகி - கார் நிறத்தாள்; சந்த்ர கலாதரி - பிறைசூடி, மேகவாணி - இடிக்குரலாள்; மேகமுக்கி - குயில் போன்ற முகத்தாள்; மேகவாகினி - முகிலை ஊர்பவள்; கரி முக்கி - யானை முகத்தாள்; சாக முக்கி - ஆட்டு முகத்தாள்; பஞ்சமுக்கி - ஐந்து முகத்தான்; மச்சமாமுக்கி - மீனின் முகத்தை உடையவள்.

தீர்க்க நாசியள், தீர்க்கநாக் கி,மயிட முக்கி,
தீர்க்க ஓதியள், கர்த்தப முகி,எம பட்சி. 61

சிகர குண்டலி, மேககர்ச் சனி,சிகர பண்டி,
மகர முகி,அட் டாவக்ரி ணி,வாயு பட்சி,
சிகர கண்டி,கோ புரகண்டி, பருவதா காரி,
பகடு முகி,திரி விதவக்ரி, சிகரோ பாரி, 62

வீர வேஷஆங் காரி,வீ ரப்பிர தாபி,
சூர வேஷஆங் காரிஇப வக்திர துஷ்டி,
பார உருத்திர பூஷணி, சிரோக பாலி,
ஆர சருப்ப பூஷணி, அறுகுசற் பமுகி, 63

உததி கம்பளி தரி,கஜ சர்மதரி யும்(பல்)
விதம நேகமா யரவிநோ தினிராக் கதிகள்
சதச தச்சத கோடியா கவந்துவந்து அடர்ந்து,
மதிகு லாதிபன் கொடிஅநு மந்தனைக் கண்டே, 64

"ஏத டீகுடி கேடுஉண்டு; இலங்கையை அழித்த
பாத கக்குரங்கு அப்பதா கையில்இருப் பதுபார்;
போதும் நாம்அமர் மானவர் கள்ஊனினைப் புசித்தல்;
தீது உறாமுனம் திரும்பல்நன்று" எனச்சிலர் திரித்தார். 65

"ஒக்கும் ஒக்கும்"என் றேநடு நடுங்கிமெய் உலறி
நிற்கும் மாதர்முன் விக்ருதி பிங்களை நிகழ்த்தும்,

---

61. தீர்கக லோசனி - நீள் விழியள்; வ்யாக்ர முகி - புலி முகத்தாள்; தேனு - பசு; தீர்க்க தேகி - பெரிய உடலை உடையவள், மகோதரி - பெரிய வயிறறினள்; சுவாசி - பெருமூச்சுவிடுபவள், மயிடம் - எருமை; ஓதி - கூந்தல்; கர்த்தபம் - கழுதை; எமபட்சி - எமனைச் சாப்பிட்டுவிடுபவள்.

62. சிகர குண்டலி - மலைகளைக் காதணியாக அணிந்தவன்; சிகர பண்டி - அலைகளைபோலப்பலமடிப்புள்ள வயிற்றினள், மகரம் - முதலை, அட்டாவக்ரி - உடலில் எட்டு கோணல்களை உடையவள்; வாயு பட்சி - காற்றைத் தின்பவள், பாம்பனையவள் எனறவாறு, சிகர கண்டி - காக்கைக் குரலினள்; கோபுர கண்டி - கோபுரங்களை ஆபரணமாக அணிந்தவள், பருவதாகாரி - மலைவடிவினள்; பகடு - எருது, திரிவித வக்ரி - மூன்றுவகையான கோணல்களை உடையவள்;

63. இப வக்த்ர துஷ்டி - யானை முகத்தையும் துஷ்டத்தனத்தையும் உடையவள்; பார உருத்திர பூஷணி - பெருஞ்சினத்தையே அழகாகப் பெற்றவள்; ஆர சருப்ப பூசணி - பாம்புகளை மாலைகளாகவும் பிற அணிகலனாகவும் உடையவன்; அறுகு - சிங்கம்.

64. கஜசர்மதரி - யானைத்தோலை அணிந்தவள்.

65. பதாகை - கொடி, அமர் - விரும்புகின்ற.

"புக்கு இராமனும் குரங்கும்அப் போதுஇறந் ததனால்
திக்குஇல் அக்குரங்கு ஒன்றுஅலாது இல்லையோ சகத்தில்? 66

நதம நாம்கவிந்து அடல்செய்துஊன் அருந்துவோம் நரரைச்
சதம தாய்த்துணிந் திடுங்கொல்?"என்று உரைத்தலும் தலைவி,
"இதுவ தேஅலால் வேறுஅல" எனஇராக் கதிகள்
மதிக லங்கினர், கிழித்துஅழித் திடும்என மறுகி; 67

"அதுஇது ஆகிலும் கிழக்குரங் காய்விடும்; அடலின்
மதம்ஒ டுங்கிடும்; இச்சணம் வதைக்குமே அதுவேல்;
இதுஅல" என்றுஇவள் சினத்திட, யாவரும் எதிர்த்துக்
கொதிகொள் நஞ்சுஎனத் தளத்தினில் கவிந்ததோ தையர்கள் 68

தனத்தி னால்,உரக் கரத்தினால், விரல்களால், தாளால்,
சினத்தி னால்அடித்து, ஆண்களொ டேதிகை தோறும்
தனக்க வெஞ்சமர் புரிந்தனர்; அருந்தினர்; கறையும்
இனித்த தேன்என இயம்புவர்; அடிக்கடி இகல்வார். 69

உரவர் சேனைகள் மொழிகணை அனைத்தையும் உதறிக்
கரவு றுங்கொசுக் கடிஎன மதிப்புஅறக் கடந்தே,
பெருகு போர்செய்து பிணங்களை நிணங்களைப் பருகி,
வெருவல் அற்றுஅமர் புரிந்தனள் விகுர்திபிங் களையே. 70

தேனில் ஈஎனச் சருக்கரைக்கு எறும்புஎனத் திரண்டு,
ஊன்அ ருந்தியே சேதபா தம்செய்துஆ டுதலால்,
தான்ள தீர்ந்துஅமர் செயஅரிது எனத்தளம் முறிந்தே
போன வாறுகண்டு, அறுமன்முன் புகன்றதும் கேட்டே, 71

கொடியில் வாழ்அறு மந்தமால் கொக்கரித்து, அரற்றும்
வடிவின் கிண்கிணி மணிநெடு வாலையும் அசைத்துக்
கடுகி, ஒண்களத் தினில்குதித்து, அரற்று,அரக் கியரை
நெடிய வாலினில் பிணித்துஎடுத்து, உதறியே நேர்ந்து, 72

---

66. தக்கு இல் - யாருக்கும கூடுபபடாத, அடங்காத.

67. நதம - வலியச்சென்று, சதமதாய் - அழியாமல் நிலைபேறுடையோராய் மறுகிச் சுதிகலங்கினர் என்க

68. அது - அதுமன். 69. கறை - உதிரம்.

71. சேதபாதம் - நடடம். 72. வடிவின் - அழகிய,

க்ழுத்து, மார்பு,இரு கை,இடை, தொடைகளைக் கட்டி
இழுத்து, வாலினால் எடுத்தெடுத்து எறிந்தெறிந் திடலால்,
கொழுத்த சண்டமா ருதச்சுழல் கொளும்சரு காக
அழுத்த மானவல் அரக்கியர் வெளிஎலாம் அடைத்தார். 73

சிலரை வாலினில் பிணித்துஉறு செகத்தினில் அடித்தும்,
சிலரை வாலினில் விசித்துஉயர் சிலைகளில் அடித்தும்,
சிலரை வால்கொடு கட்டியே சேணினில் எறிந்தும்,
சிலரை வால்கொடு சிக்கியே திரையினில் சேர்த்த. 74

காலில் சிற்சிலர் நசுங்கிடத் தேய்த்து,இரு கரத்தால்
சாலச் சிற்சிலர் அரைந்திடத் தேய்த்து,அலக் கழித்துக்
கோலப் புன்கிழக் குரங்குஎன உரைத்தவள் குன்றி
ஓல மிட்டிட, உரத்தினை நிலத்தினில் அறைந்து, 75

கடிய வனமுலை யிணையினைக் கால்கொடு கசக்கிக்
கொடிய நரஉடல் பிளந்துறக் கோட்டையில் விழவே
அடல்இ ராக்கதர் திகைத்திட எறிந்தனன் கிழித்து
விடமது ஒத்தசொல் விகுர்திபிங் களைஎனும் மின்னை. 76

அரக்கி யின்குலம் மடிந்ததும், அவர்களின் தலைவி
உருக்கு லைந்துஉயிர் ஒழிந்துஅர ணுட்புக விழவும்
திருக்குஇ ராக்கதர் சினந்துஉறு தளங்களைச் சேர
முருக்க நாடினர்; முனைந்தனர் நிசிசரர் முழுதும். 77

சேனை யாதிபர் மூன்றரைக் கோடிவெந் திறலோர்,
ஏனை யோர்உருக்கு அரக்கர்ஐந்து இலக்கர்இவ் விதமாய்த்
தானை யின்திரள் கருங்கடல் இருட்பொலி தரவே
வான கம்தொடப் பிறங்கியும் வளைந்ததுஒத் தனவால். 78

---

74. செகம் - நிலம்; சிலை - மலை; சேண் - ஆகாயம்; திரை - கடல்.

75. உரம் - மார்பு.

76. மின்னை - சுசக்தி கிழித்து உடல் பிளந்துற இராசகுதர் திகைத்திட கோட்டையில் விழவே எறிந்தனன் என்பது அன்வயம்.

77. திருக்கு - குற்றமுள்ள; உறு - தம்மை நாடி வந்துள்ள; முருக்க - அழிக்க.

78. உருக்கு - பகைவரை வாட்டுகின்ற;

ககன வட்டமும், எட்டிட முட்டுசி கரத்துஓர்
முகடும், எத்திசை முழுதையும் தடவிய கரத்தோர்;
பகடது எட்டையும், எட்டுஅரும் பொகுட்டையும் பசையாய்
நெகிழ்த ரக்கர விரல்கொடு நெருடுவார் நிருதர். 79

கடல்அ டைத்திடத் திசைவெளி அடைத்திடக் கம்மி
இடிஇ டித்தென, வெடிக்குரல் முழக்கி,எங் கெங்கும்
புடைவ ளைத்தெழும் புயல்எனப் பலபடை பொழிய,
வெடுவெ டுத்து,உடல் நடுங்கினர் சேனைவேந் தருமே. 80

அண்டம் முட்டிய சிரம்பல கரம்பல ஆக
எண்டி சைத்தல வெளிஅற அடைத்தமே னியரைக்
கண்டு, கால்கரம் தத்தளித்து, அகம்தடு மாறிக்
கொண்டு, நாவறள் கொடு,அலம லந்துஉலைந் தனரே. 81

வந்த ராக்கதர் அடங்கலும் வாகனம் ஏறிக்
கந்த ரம்சொரி வதுவெனக் கணைமுதற் படைகள்
சிந்தி, நால்வகைச் சேனையும் நொறுக்கினர்; செந்நீர்
உந்தி ஆக்கினர்; ஊன்கள்பன் மலைஎன உயர்த்தார். 82

வில்லி சேனைகள் பொழிதரு விசிகம்,மற் றவையும்
வல்அ ரக்கர்கள் பிடித்து,ஒடித் து,அறுத்தனர்; மற்றும்
கல்உ டல்களில் பட்டு,அவை நொறுங்க,வன் ககங்கள்
புல்லி, மெய்களில் புகுந்துசெந் நீர்களைப் போர்த்த. 83

ஊறு செய்குவ தன்றிவீழ்ந் திலஉறுப் பொன்று
மீறி வெஞ்செருப் புரிந்தனர் நிசிசரர்; மேலும்
சாறி லாதுஅடர் ரதகச துரகப தாதி
கூறு கூறெனக் குறைத்தனர் திசைதிசை குலவ. 84

நெரிநெ ரிந்துஅழிந்து ஒழிந்தவர் அன்றியே, நின்றோர்
குருகுஇ ரிந்தெனப் பறந்தனர் திசைதிசை குளறி;

---

79. பகடதுஎட்டு - எண்திசையானைகள்; பொகுடு - மலை.
80. கம்மி - அதடடி. 82. கந்தரம் - மேகம்; உந்தி - கடல்.
83. வில்லி - அருச்சுனன், விசிகம் - அம்பு; அவை - உடல்கள்; ககங்கள் - பறவைகள், போர்த்த - போர்த்துக்கொண்டன

மருவு பத்திர கிரிஎம னாசுரன், மகன்,மந்-
தரி,து வாரகை உளர்கள்,மற் றோர்கள்எல் லவரும், 85

இரவி சேய்சுதன், சாளுவன், நீலன்,மேக வண்ணன்
பொருவி லாஅமிர் தத்துசன், சேனையும் பொங்கிச்
செருமு னைந்து,வில் மாரிபோல் கணைமழை செலுத்தக்
கரிகள் மாமழை உதறலொத்து உதறினர் கரியோர். 86

பரியி னைப்பரி யினில்எடுத்து அறைந்து,பா தாதி
கரியி னைக்கரி யினில்எடுத்து அறைந்து,எதிர் கடவும்
அரியெ டுத்துஅரி யினில்அறை தரக்கரித்து, அதட்டி,
நிருதர் விம்மித மாய்,எதிர் உருக்கியே நெருக்க 87

வாயில் ஊதிய காற்றிலும், மூச்சின்மா ருதத்தும்
பாயும் நால்வகைப் படைகளும் பறந்திடு மாகில்,
காயும் வீரிய நிசிசரர் காவல்இப் படையைத்
தீய போரினை என்எனத் தெரிந்துசெப் புவதே? 88

அந்த ரங்களும் திசைகளும், "அர்ச்சுனா! அபயம்;
இந்த வல்வினை அகற்று"கென் றேதளம் இசைப்ப,
முந்து வீரியர் யாவரும் முனைகெட முறிந்து,
சிந்தி வீரியன் பின்னடைந்து அபயமே செப்ப, 89

(எழுசீர் ஆசிரிய விருத்தம்)

அபயம் என்றுவெரி நிடுமு காதிபர்கள்
அலறி டும்தொனிகள் செவியுற,
உபய கண்கள்தழல் சொரிய, மென்றுஎயிறு
உருக்கி யேநெருநெ ருக்கவே,

---

85. குருகு - பறவை.
86. கரியோர் - சினம மிகுகவர், யானைப்படையினர் எனினுமாம்.
87. அரி - ஆயுதம், கரிதது - சினந்து
88. மாருதம - காற்று, காயும் - கோபம கொள்ளும், இஙகு போரிடும். இக்காவல படை என மாறுக. தீய - தீய்த்த.
89. முனைகெட - துணிவு அழிய, சிந்தி - சிதறி, வீரியன் - அருச்சுனன்

சபல முன்கைஉறு தசைக ரித்துஎருவை
தக்க முக்கியமொ டுக்கியே,
விபர விற்பனன்விற் குணத்தொ னியில்வெளிதி-
டுக்கி டச்சிலை நெருக்கியே, 90

ஒன்று பத்துஎனவும் அளந்து அற்புதம்உ-
றக்க ரச்சரவி லாண்மையாய்
நின்று வீசுகணை யேவி டாமழைநி-
கர்க்க, விற்கடைநி மிர்ந்திடாது,
அன்றுஅ ருச்சுனன்மி கச்சொ ரிந்துஎதிர்அ-
ரக்கர் மெய்த்தலம்நி றைத்ததால்
ஒன்றுஇ ரண்டுபல துண்டு துண்டெனஉ-
டல்பி ளந்துஅவண்நி றைந்ததே. 91

கரம்அ றுந்த;சிலர் முகம்அ றுந்த;சிலர்
கவுள்அ றுந்த;சிலர் நகைசெவி
சிரம்அ றுந்த;சிலர் களம்அ றுந்த;சிலர்
சிகர திண்புயம்அ றுந்த;வல்
உரம்அ றுந்த;சிலர் இடைஅ றுந்த;சிலர்
உடல்பி ளந்த;சிலர் தொடையுடன்
சரண்அ றுந்த;சிலர் குடல்அ றுந்த;சிறு
தவிடு கொண்டசிலர் உடல்களே. 92

இரவி, சந்த்ரன்,இருள், அனல்ச தாகதி,மின்,
இடி,அ ராவு,கரு டன்,புனல்,
அரிஅ ரன்,பிரம சரம்அ டங்கநிசி
சரர்கள் தங்களிடை விடுதலால்
எரிம டங்கல்அடல் படநொ றுங்குசருகு
எனஅ ழிந்துபொழி படுதலால்,
குருதி பொங்கி,அது சுழிப ரந்து,விசை
கொடுந டந்ததிரை கிழியவே. 93

---

90. வெரிநிடு - புறமுதுகு சுடும. முகாதிபர்கள் - படைத்தலைவர்; எருவைதக்க - உதிரம் வெளிப்பட.

91. அற்புதம் - ஒரு பேரெண், 10^{43}

92. நகை - பறகள்; உரம் - மார்பு; சரண் - கால்கள்;

93. சதாகதி - காற்று, வாயுக்கணை; அராவு - பாம்பு, நாகாஸ்திரம்; எரிமடங்கல் - வடவைத்தீ; அடலபட - போரிட.

உடலி னங்கள்திசை திசைசு விந்து,எருவை
உலவ, எங்கும்மலை மலைகளாய்
அடல்இ டங்கள்உயர் வுடன்எ ழுந்துமுகடு
அகடு தண்டினது விகடமாய்;
குடிலம் எங்கும்இட மறநெ ருங்கி,மிகு
குதிக வந்தம்எதிர் நடமிட,
மடம டென்றுசிலை மணிமு ழங்கியது
மருவி அந்திபடும் அளவுமே. 94

சீறி மீறிஎதிர் ஏறும் மாதடியர்
தேக மேகடிகை யாகவே
கூறு கூறுபட, மூளை ஈளைசெறி
கோல மானநிலம் நேரதாய்ச்
சேறு சேறுபட, மாறி லாதுஒழுகு
சேய சோரிதிசை தோறுமே
ஆறு ஆறதென வேஉ லாவியதுஅ-
நேக மாய்அலகை ஆடவே. 95

செற்றுஇ றந்தவர்அ லாது குற்றுயிர்செ-
றிந்த பேர்உயிர்பி ரிந்தபோல்
உற்ற வெம்பிணம தித்க ரந்தனர்கள்;
ஓடி னார்சிறிது பேர்கள்தான்;
"கொற்ற வாட்டிழுபொறு" என்று கும்பிடுவர்;
கூண்டுஇ றைஞ்சுவர்கள் சிற்சிலர்;
மற்று மெய்குருதி மாரி வீசமுகம்
மாறி ஓடுவர்கள் சிற்சிலர். 96

ஏறு வாகனமொ டேஇ ராக்கதர்இ-
றந்துஅ ழிந்ததில்ஒ ழிந்தபேர்
மாறி ஓடுவது கண்டு, வீடணன்ம-
யங்கி, "ஓடுவதுஎன்? அஞ்சல்நீர்;

---

94. அடல்இடங்கள் - போர்க்களங்கள்; முகடுஅகடு - வானின் வயிறு, தண்டினது - தாண்டினது, விகடமாம் - பெருமளவில்; குடிலம் - ஆகாயம்; சிலைமணி - வில்லில் கடடப்பட்டுள்ளமணி.
95. மா தடியர் - மிகப்பருத்த அரக்கர்; கடிகை - துண்டு; அலகை - பேய்.
96. சுரந்தனர்கள் - ஒளிந்து கொண்டனர்; கூண்டு - ஒன்றாகச் சேர்ந்து.

தேறும் மானிடர்அ டங்க நான்ஒருதி-
னத்தி லேபொடிப டுத்துவேன்;
மாறில் பூசைகொள வம்மின்;" என்றுஇவன்வ-
ருந்தி ஓதவும்ம றுத்தனர். 97

"பாத கா!உனைஅ டைந்த பேர்கள்படும்
பாட்டை நீஅறிகி லாய்கொலோ?
ஏத டா?மலைப கைத்த தால்உளிஇ-
ளைக்கு மோ?நவிரம் வாய்ச்சியை
மோது மோ?தருஇ னங்கள் செந்தழலை
மொய்த்துஅ ழித்திடுதல் கூடுமோ?
போதும் எங்கள்தலை முறைத னக்கும்அடல்
பொருதும் வீரம்"என ஓதுவார். 98

"எந்தன் வல்லமையும், வந்த மானிடர்இ-
றந்துஅ ழிந்துஒழியும் வாறையும்
வந்து கண்கள்கொடு பாரும் நீங்கள்"என
வாவு கேசரிஓர் ஆயிரம்
பந்தி யாய்நிரைதொ டுத்த தேர்வலிய
பாக னேகடவ, ராவணன்
நந்தன் இங்குஇவன்வ லிக்குஒ வாதுஎனந-
டுங்கி, உம்பர்கள்த யங்கவே, 99

அண்ட ரண்டபகி ரண்ட மும்கிடுகி-
டென்றுஅ திர்ந்திடஅ டர்ந்து,நேர்
மண்ட லம்கிழிய வேந டத்தி,மிக
வற்பு றுத்தி,அனல் மாரியாம்
கொண்டல் என்றுவிரி அழல்இ றைக்கஒளிர்
கோஉ ருட்டி,விழி சுழல்தர
அண்டி, வெள்ளெயிறுஅ துக்கி, முன்கையதுஅ-
றக்க டித்து,எருவை கக்கியே, 100

---

97. பூசை - அன்னதானம், இங்குப் பகைவர் உடலை உண்ணல்.

98. நவிரம் - உரோமம், வாய்ச்சி - கோடரி; தரு - மரம்,

99. வாவு - பாய்ந்து செலலும்; கேசரி - குதிரை; ராவணன் நந்தன - இந்திரசித்தன்.

100. கோ - கண்கள்.

விற்கு ணத்தொனிஇ டிக்கும் மிக்குஒலிவி-
ளங்க, "எந்தைபக சூரனை
முற்க தைக்கரன்உ ரத்துள திர்த்துஉடல்மு-
ருக்கும் வன்பழிய தற்குஎதிர்
பற்கு ணப்பெயரி னன்த ளத்தொடுஉக
படைச மஸ்தமும்நொ றுக்கிஎன்
மற்கு றித்தவிறல் பெற்றி டேன்எனில்வ-
யத்திண் வீடணனும் அல்லன்யான். 101

விருதுஅ ரக்கர்குல சக்ர வர்த்திஎன
வேஅ றிந்தும்,என்ந கர்க்குநேர்
சறுகி வந்தவர்கள் தப்பி டாதுஎம
தர்மன் ஊர்புகஅ னுப்புவேன்;
ஒருவ ருக்குஒருவர் உதவி யற்றொழிய
உதிர மண்டலமது ஆக்குவேன்
அரைநொ டிப்பொழுதில்"என்று தேர்கடவி
ஆசு கம்பலஉ டற்றினான். 102

கைவ குத்தகணை மாரி மீவெளிகள்
ககுபம் எங்கும்நிரை பரவிட,
மைவ குத்தஉடல் வீட ணன்சொரியும்
வாண ராசியதுஅ டங்கலும்
மெய்வ குத்ததரு மன்கு மாரன்விடும்
வீரர் சேனைகள்மெய் எங்கணும்
பைவ குத்தவிட நாக பாசம்நிகர்
பதிய ஊடுருவு கின்றதே. 103

அவய வங்கள்சில துளைய வும்,சிகரி-
அனைய திண்புயமது அறுகவும்,
துவச மும்திகிரி தகர வும்,கருது
துரக தங்கள்உடல் கிழியவும்,

---

101. சுதைக்கரன் - சுதாயுதத்தை உடைய வீமன்; உரத்து - வலிமையுடன்; உசு -அழிய; வய - வெற்றிமிக்க, திண் - வலிமையுடைய.

102. சறுகி - தவறாக.

103. தருமன் குமாரன் விடும் - தருமராசனால் அனுப்பப்பெற்ற.

கவச மும்கிழிய உதரம் நெஞ்சினொடு
களம்அ றுந்தொழிய நகைஅறக்
குவடெ னும்கரிகள் அறவி டும்பகழி
குரக தங்கள்உடல் உருவவே. 104

சிகரம் முண்டம்இடை கண்ட துண்டமொடு
சிதற வும்,குருதி பெருகவும்,
சகரர் கிண்டுகடல் அளறுள ழுந்தபடி
சகதி கொண்டநரர் உடல்எலாம்
மகர மென்றுயிரின் மதக குஞ்சரம
வளறு கண்டுளறி யலறவே,
மிகுக ணங்கள்வெறி வெருவ வும்,பிசிதர்
மிகம கிழ்ந்துதசை நுகரவே, 105

அரக்கர் கோன்விடுச ரங்க ளாலும்,அவன்
அரிய பாகுஇசைகொள் அரியிலும்
மரித்துஇ றந்தவர்ஒ ழித்து நின்றசது
வகைய தானதளம் முழுதுமே
வெருக்கொடு, "இன்றுஅபயம் அப(ய)ம் வில்விசய
வீர" என்றுதடு மாறியே
குரக்கு வாதவலி கொடுந டுங்கினர்கள்
கொற்ற மானதளம் முற்றுமே. 106

உத்து வாசரி,பி ரத்தி மன்,(அ) ணிஉ-
ருத்தி ரன்,கிருத வர்மன்,மால்,
தத்து தேரின்எம னாசு ரன்,குமரன்,
தந்த்ரி மந்த்ரி,திறல் சாத்தகி,
சத்தி யானவிட கீதன், நீலன்,அநு-
சாளு வன்,அமிர்தன், அக்ரூரன்,
மத்த வீரரும்ர தத்தை யேமுடுகி
வலிய வாளிமழை வீசினார். 107

---

105. இவ்விருத்தத்தின் மூன்றாம்அடி விளங்கவில்லை.

106. அரி - குதிரை; வெருக்கொடு - அஞ்சி; குரக்குவாதவலி - குரங்குவலி எனப்படும் ஒரு நோய், இங்கு அது போன்ற துன்பம்.

107. மத்த - மற்ற, ஏதுமை. நோக்கிய விகாரம்.

வீசும் வாளிகளை வீட ணன்கடுகி
வெய்ய வாளிகளி னால்அறுத்து,
ஆசு கங்கள்பல வீசி. உத்துவா
சாரி ஆசுதுவ சம்பிளந்-
தே,ச யந்தனம்நொ றுக்கி, மாவலவன்
எற்றுஇ றந்திடந றுக்கியே
பூசல் வெஞ்சிலைஅ றுத்து, மார்பினிடை
புங்கம் நாலுஉருவ ஏவினான். 108

வாளி நாலினில்ம யங்கி உத்துவா
சாரி சோபமொடு வீழவே
கூளி ஏய்நிருத னும்கு ...வக்கு
ரூரன் முன்கொடுஅ கன்றனன்;
யாளி வீடணன்நெ ருங்கி யேகிருத
வர்மன் ஆசுதுவ சங்களும்
பூளை போல்அழிய, வில்பி ளந்துவரி
புதைய, வாளிமழை உதைசெய்தே, 109

நீலன் வெஞ்சிலையும் நிலைஅ ழிந்து,இரதம்
நீற வே,சமரும் மாறியே,
மேலி னும்குருதி சரச ரென்றுஒழுக,
வெரிந ளித்துஅகல வே,சுக-
லீலன் ஒண்கவச துவச மும்சிலையும்
இரத பாகுபரி யேஇழந்து,
ஆல காலமதுஅ ருந்து மீனம்என
அவனும் ஓடினன்ந டுங்கியே. 110

நிருதர் கோன்வெகுளி யால்அ டர்ந்துசொரி
நிகர்இ லாதசர மாரியால்
வருசு வேதன்நிலை சிலைஅ ழிந்துஇரதம்
வலவன் மாஉருள்கள் அச்சுஇழந்து,
அரிது கால்நடையில் ஓடி னான்;அசுவம்
அருளும் மன்னன்எம னாசுரன்
பொருவில் வாளிமழை புயலை நேர்மிகுதி
பொழிய மீவெளிபு தைந்ததே. 111

---

108. ஆசு - சுவசம்; சயந்தனம் - தேர்; புங்கம் - அம்பு.
109. பூளை - ஒரு பூடு. 110. வெரிநளித்து - புறமுதுகிட்டு.
111. நிருதர்கோன் - விபீஷணன்; அசுவம் அருளும் - வேள்விக்குரிய குதிரையைத் தந்த.

பொழிந்த வாளிகள்அ னைத்தை யும் பொடிப-
டப்பல் ஆசுகம்உ டற்றிவில்
அழிந்தி டக்கொடிஅ ழிந்தி டப்பரம்அ-
ழிந்தி டப்புயம்று ழைந்துஉரம்
கிழிந்தி டப்பகழி ஐந்துஉ தைத்தபிறகு,
இவனும் வேறுவில்வ ணக்கியே
அழுந்த மார்புசரம் ஐந்து வாகுவினில்
ஐந்துஅ ழுத்திவில்அ றுத்தனன். 112

மற்றும் ஓர்சிலைவ ணக்கி அங்கவனும்
வாளி நாலுஉரம்அ ழுத்தியே
கொற்ற வர்கைவில்அ றுக்க, வில்திகிரி
கொண்டு சாளுவன்நெ ருங்கும்முன்
வெற்றி வீடணனை ஆறு கோல்விரைவின்
விட்டுஅ றுத்து,இரத பாகையும்
அற்றுஅ ழிந்திடம றுத்து மெய்யினும்அ-
ழுத்தி னான்அலம லக்கவே. 113

கண்டு கன்னன்அரு ளும்கு மாரன்இகல்
கால காலன்நிக ராய்வெகுண்டு,
அண்டி, வெங்கடுஉ மிழ்ந்தி டும்பகழி
ஆயி ரங்களுடன் ஆயிரம்
மிண்டு நேர்இரத மீது, கேசரிகள்
மீது மெய்முழுதும் வீசலால்,
மண்டு கோபமொடு பல்க டித்துவல-
வ்னைவெ குண்டிடநெ ருக்கினான். 114

பாகன் வேகமொடு இரதம்ந டத்தஒலி
பயில்செய் தேஅரிகள் பாயவே,
நாகம் நேர்சிலைகு ணத்தின் ஓதையொடுஇ-
ராக்க தன்குரல்மு ழக்கவே,
வாகை யானவிட கீத னன்திகிரி
மாவெ ருக்கொடுதி ரும்பியே
போக வே,அமிர்தன் அணிஉ ருத்ரன்அரி
புதல்வ னும்புறம தோடவே, 115

---

112. பரம் - கேடயம்.

114. காலகாலன் - சிவபிரான்.

115. ஒலிபயில்செயதே - சுனைத்துக் கொண்டே; நாகம்நேர் - மலையைப போன்ற.

சேனை நாலுவகை யும்தெ றித்து,முது-
கிட்டு,உ டைந்து,தறி கெட்டு,வில்
மான வீரன்வெரி நிடம்அ டைந்து,"அபயம்
அபயம்" என்றுஅலறி உளறவே,
பானு சாரதியை நேர்க டாவிஅரி
பாகு நேருடன்ந டத்தலால்,
ஞான வாரமறை விசயன் வஞ்சினம்ந-
வின்று, வெஞ்சிலைவ ணக்கினான். 116

வஞ்சி னம்பகர, வீட ணன்கடுகி
வற்பு றுத்தி,"என்ஐ யன்பழிக்கு
அஞ்ச உன்றனைஅ றுத்து வாகைஅணி-
வேன்;அ லாதுஎனது வன்மைஎன்?
விஞ்சை வில்வலிமை காட்டு" கென்றுசிலை
வெய்ய வாளிமழை வீசினான்;
நஞ்ச மானகணை யாவும் நீறுநர
நாம னும்கணைசெ லுத்தினான். 117

இருவ ரும்சமர்மு னைந்து வீசுகணை ஏக மாதிஅள வற்றதாய்க்
கரவி லாபசர லாப மோடுகன மழி யோத்தசர மாரிதான்
பரவி, அண்டமுகடு எண்டி சாமுகப யோதம் வாரிபர தானம்ஊ-
டுருவி யே,சமர்உ டன்ற முப்புவியு ளோரு மேநடுந டுங்கவே. 118

(வண்ண விருத்தம்)
(தனன தனதன தனதன தனதன)

ககமு னைகள்கக முனையது கறுவின;
கணைகள் இருசிற கதுககம் இடறின;
பகழி நடுவிடை பகழிகள் இடறின;
பகழி குதைபல பகழிகள் திருகின;

---

116. பானுசாரதி - சூரியனின் தேர்ப்பாகனாகிய அருணன்; அரிபாகு - திருமாலாகிய சாரதி.
117. ஐயன் - தந்தை, பகாசுரன்.
118. ஏகமாதி - ஒன்றுமுதல்; பயோதம் - மேகம், வாரி - கடல், பரதானம் - உயர்ந்த தெய்வலோகம், சுவர்க்கத்திற்குமேற்பட்ட பிரமலோகம், வைகுண்டம் போல்வன.

சிகர கிரிபல தொளைபட உருவின;
திரைகள் அளறுகள் படமுடு கினசில;
நகுமின் ஒளிவிட வகிர்வன கணைசில;
நடல இடிநிகர் உடல்வன கணைசில. 119

உரக புவிமிசை உருவிய கணைசில;
உலகு திசைவெளி பரவிய கணைசில;
விரவு முகடுஅகடு உருவின கணைசில;
விபுதர் உலகிடை புகுவன கணைசில;
நிரவும் அகன்வெளி நிறைவன கணைசில;
நெடிய வடவரை இடையுறு கணைசில;
அரிதி கிரிகரி புதைவன கணைசில;
அவனும் இவன்அடல் புரிதரு கணைகளே. 120

இருவர் இரதமும் நிறைவன கணைசில;
இரதம் அசைவற எயில்செய்த கணைசில;
புரவி அரிஉடல் புதைவன கணைசில;
பொருவில் வலவர்மெய் புதைவன கணைசில;
உருள்கள் முழுதினும் உறைவன கணைசில;
உபய துவசமது உழுவன கணைசில;
நிருதர் நரர்உடல் நிறைவன கணைசில;
நிகரில் இருவர்கள் விடும்விடு கணைகளே. 121

ஒருவர் ஒருவரை வெலஅரிது என,அடல்
உரிய சரமழை முறைமுறை விடுதலில்,
அரித மதகரி அலறின; பரவையும்
அலற வருணனும் அலறினன்; அமரரும்
வெருவி அலறினர்; உரகமும் அலறின
விடமும் உமிழ்தர உடலமும் நெளிதர;
விரவி மதிவழி பிசகின; வரைகுகை
இடையில் அயர்வொடு மறைவன முகில்களே. 122

---

119. சுகம் - அம்பு; வகிர்வன - பிளப்பன; நடல - துன்பமான.
120. உரக புவி - நாகலோகம்; அரிதிகிரிகரி - குதிரை, தேர், யானை.
122. அரித மதகரி - திசையானைகள்.

கரிய மகபதி உதவிய மகன்அதி
கரவி ரசினொடு தொடுகணை அவன்விடு
சரம ழைகள்பல சிதறின சததச
சரதர் அறுகுடல் அறுமுடி திருகின;
இரத வலவனை முடிஇட றின;கொடி
இடறி, உருள்அரி இடறி,வில் இடறின;
நிருதன் உடலமும் நிறைதர முழுகின
நினைவு மறுகியும் நிலமிசை இழியவே. 123

மறுகி நிலமிசை இழிதரும் முனம்ஒரு
வலிய இரதமது உதவினர் நிருதர்கள்;
உறுதி யுடன்அதில் மருவி லதுகொடு
உரிய சரமது தொடும்முனம், இவன்விடு
மறுவில் ஒளிர்கணை மழையினில் அணிசிலை
வலவன் உருள்கொடி ரதம்ஒரு பதுசதம்
அறுகும் அழிதர, இருபுயம் நுதல்களம்
அகலம் உருவின அளவறு கணைகளே. 124

இரதம் அழிதலும் இதனிலும் வலிதுஒரு
இரதம் மருவி,வில் இடதுகை கொடு,மறு
கரமது உயர்செவி தழுவிட, அளவேறு
கணைகள் சொரிமழை நிகர்கவி னுறவிட,
விரவி அவன்விடு சரமழை அழிதர
விசயன் விசிகமது எழுபுயல் நிகர்பெய்து
அரிகள் ஒருபது சதம்,உருள், வலவனும்
அழகு திகிரியும் அழிதர இடறவே, 125

ஒருபது அறுசிலை இரதமும் அழிதர.
உதவி வரும்நிசி சரர்அயல் ஒழிதர,
விருது விலிசர வினைஅமர் பொருதலின்
விரவு மறுரதம் உதவியது அறுதலின்

---

123. மகபதி - இந்திரன்; மகன் - அருச்சுனன், சதம் - நூறு; தசம் - பத்து, நிருதன் - அரக்கன்.

124. மறுவில் - குற்றமற்ற, ஒருபது சதம் - ஆயிரம், அறுகு - யானை.

125. அரிகள் - குதிரைகள்.

மருவும் ஒருஅயில் இருகையின் விசைகொடு
வலிதின் எறிதலின், அதுபொடி பட,ஒரு
சரமது இவன்விட, அவனொரு திகிரிய-
ததனை விரைசுடன் முடுகிட எறியவே 126

பரிதி பொடிபொடி படவிச யனும்ஒரு
பகழி விட,ஒரு கதைஅவன் எறிதலின்
அரிய துகள்பட ஒருகணை இடறினன்,
அயிலின் வயிரமது அவன்எறி தரஒரு
சரமது இடறின, பரசுஎறி தரஅது
சரமது இடறின; பலபல படைஅவன்
விரைவின் விட,இவன் விடுகணை மழையினில்
விகட எரிபடு துகளுற விழுகவே. 127

இரவி மதிஅனல் விழிஎன உடையவன்
இலகு கரமரு வியபடை நிகர்வன
உரிய கழுமுளது உரனுடன் உரசுடன்
உதைய அதுதிரி உலகமும் அலைதர
எரிகள் புகைதிசை வெளிகளும் நிறைதர
இடிகள் அளவிலது ஒருவடிவு உடையன
நரர்கள் அசுரர்கள் உரகரும் வெருவுற
நடன வடவையை நிகர்எதிர் முடுகவே. 128

முடுகு படைமிசை அளவறு கணைசொரி
முகிலை நிகர்தர விடஅதை எரிசெய்து,
கடுகி வரஅரி சரம்இவன் விட,ஒரு
கணம தனில்அது பொடிஎன எரிசெய்து
மிடலி னொடுபடை உறையினில் உறைவுற,
விசயம் மிகுகணை அவன்உடல் அளறுற
அடலி னொடுதொட, இரவியும் வெருவுற
அரிய குடவரை யதனிடை மறையவே, 129

---

126. விவி - வில்வி, அருசுகனன், சரவினை - அம்புத்தொழில; அயில - வேல். திகிரி அது அதனை - பகுதிபபொருளவிகுதிமேலவிகுதி.

127. பரிதி - சக்சரப்படை, பரசு - மழு

128. விழிஎன உடையவன் - முக்கணனனாகிய சிவபிரான; கழுமுள் அது - சூலபபடை, அது பகுதிப்பொருள விகுதி, உரகர - நாகர

129. வர அரிசரம் - உயர்நத நாராயணாதிதிரம், படை உறை - அம்பறாத்தூணி, குடவரை - மேற்குமலை.

பரிதி படநிசி சரர்உடல் நிகர்இருள்
பரவ, 'இதுநல பதம்'என இதமொடு
இருள்கள் நிறைதரு கவசம்மெய் புனைதல்செய்து,
இசைய விசையொடு ககனம திடைஉற,
அரிதம் இருவெளி உலகுஇருள் நிறைதலின்
அயலில் உறைபவர் உடல்தெரி தரல்அற,
விரக விசயனும் அரசனும் இதுசது
வினைய நிகரமும் மெலிவுடன் வெருவவே, 130

(கலித்துறை)

"என்ன மாயைசெய் தான்!இனி என்னசெய் குவனோ?
இன்ன லேஇர வின்பொழுது ஆதலால்" என்றே
மன்னர் வீரரும் விசயனும் தளங்களும் மயங்கும்;
அன்ன போதினில் மாருதி சுதன்சுதன் அருள்வான். 131

"திக்கும் முச்சகம் மதிக்கும்வில் விசயசீ ரியனே!
முக்கண் நக்கனைப் புடைத்தும்ஏ வதுபெறும் உரனோய்!
மக்குஇ ராக்கதர் வினையமும் விரகும்மா யையுமே
தக்க தாய்அறி குவன்;ஐயா! உனதுஅருள் தன்னால்; 132

இன்றுஎ னக்குஅருள் விடைஅவன் உயிர்தொலைத் திடவே"
என்று தாள்பணிந்து, இறைஞ்சிய பேரனை நோக்கி,
"அன்று; நீசிறு வயதினன்; அவன்இரா வணன்சேய்
ஒன்று நேர்சவு ரியம்புய வலிநிலை உடையான்; 133

எந்த வாறுஅவ னுடன்பொரு துவை?"என, "இமைப்பில்
உந்தன் நல்லுத வியில்அவன் உயிர்தொலைத் திடுவேன்;
இந்த ஏல்வைஅங்கு அவனுடன் யான்எதிர்ந் திடேனேல்
நந்த நம்படை அடங்கலும் நொறுக்குவான்; அய்யா! 134

விரகு மாயைஇங்கு இதைவிலக் குவன்;வினைப் போரும்
பொழுது வெல்குவன்; போர்க்குயான் இளைத்திடும் போதில்,

---

130. பரிதிபட - சூரியன் மறைய; நிகரம் - முழுப்படை.
131. மாருதி - வீமன், சுதன் - கடோர்க்சன்; சுதன் - மேகவண்ணன்.
132. நக்கன் - சிவபிரான், ஏ- அம்பு, பாசுபதம்
133. அன்று - அல்ல; இராவணன் சேய் - இந்திரசித்து.
134. ஏலவை - நேரம், நந்த - அழியும்படி.

அரிச காயக தேவரீர் இருக்கிறீர்; அய்யா!
துரித மாய்விடை அருள்"கென அடிக்கடி தொழுதான் 135

தன்முன் சேய்சுதன் உரைத்திடச் சம்மதி யாகி
வின்மன், "மால்பரம்" எனவிடை ஈந்தனன் விசயன்
தன்மன் மாயனைக் குருவையும் மனதினில் தரித்து
நன்ம னோகர மொடுசமர் நாடிடும் அளவில், 136

முன்ன ழுந்துஅவன் கேசரி மார்க்கமாய் முகிலில்
உன்னி நின்றுஉறும் முழக்குளனக் கர்ச்சிதம் உற்றான்;
பன்னும் நால்வகைச் சேனையும் வீரரும் பயந்து,
மன்னு புல்அரி காண்பசு எனமதி மயங்கி, 137

பதைத்து, மெய்மறந்து, அடிக்கடி துணுக்கியே, பலரும்
உதைத்துக் கொண்டனர் மாறுஇலாக் கர்ச்சனை உறும்போல்;
முதிர்த்த வீடணன் வெடிகுரல் முகில்மிசை முழக்கி
மதித்த நால்வகைச் சேனையும் நொறுங்கிட மலைந்தான். 138

இந்த்ர சாலம்ஒத் திந்திர சித்துமுன் இகல்விட்டு,
அந்த ரப்புய லிடத்துஅம(ர்) ந்து, இலக்குவன் முதலாய்த்
தந்தி ராதிபர் வானரப் படைசமஸ் தமுமே
நந்த வெஞ்சமர் புரிந்ததுஒத்து இவன்சமர் அடர்ந்தான். 139

பரித னைப்பரி தனில்எடுத்து அறைந்து,பாகு அமைந்த
அரித னைத்திகி ரியில்எடுத்து அறைந்து,உடல் மதத்த
கரித னைக்கரி தனில்எடுத்து அறைந்து,கா லாட்கள்
நெரிநெ ரிந்திட அறைந்துஅறைந்து அழித்தனன் நிருதன். 140

"என்செய் வோம்?முகி லிடைதொனி அமர்ந்தில இவனின்;
வன்செ ருப்புரிந்து அழித்தனன் சேனைகள் மடிய;
மின்செய் வாளிவிட்டு அறுக்கவும் காண்கிலம்; இதற்குப்
பின்செய் யோசனை யாது"என வில்லிபே தலித்தான். 141

---

136. தன் முன் - தன் தமையன், வீமன், வில்மன் - விசயன்; மால்பரம் - திருமால்துணை.
137. கேசரி மார்க்கம் - வானவழி; புல் அரி - புலியாகிய பசை.
139. இகல்விட்டு - (இங்கு) போர்க்களத்தைவிட்டுநீங்கி.
140. அரி - குதிரை; திகிரி - தேர்.
141. இவனின் - மேகவன்னனின், இவனின் தொனி அமர்ந்தில என்க.

அந்த ஏல்வையில் கேசரி மார்க்கம தாக
உந்தி யேஎழுந்து; ஒளிர்கதிர் கவசம்இட்டு, உலவை
நந்தன் மைந்தன்நந் தன்கர சக்கர நலத்தால்
அந்த காரமது அடங்கலும் சிதைந்துஅழிந் ததுவே. 142

திமிர வெம்பட லம்சிதைந்து அழிந்து,திண் பகல்போல்
விமித வெண்கவ சக்கதிர் விளங்க,எண் திசையும்
அமரும் தந்திரம் திடுக்கமும் பயங்களும் அகன்று,
சமர்இ சைந்திடும் தளங்கள்ஆர்த் தனர்தயி ரியமாய். 143

அடர்ந்து மாருதி மகன்மகன், "வீடணா! அரக்கர்
தொடர்ந்து நீஎவண் காக்கினும் உனதுஉயிர் தொலைப்பேன்;
படர்ந்தி டும்துணங்கு அறல்கவ சத்தினால் படையை
விடங்க ளாய்அதம் பண்ணிய உனைவிடேன்" என்று, 144

சீறி மீறிய இடிஎனப் பாய்ந்திடத் தீய்ந்து
நீறி வெந்துஎரி பட்டது நெடும்இருள் கவசம்;
மாறி லாச்சுழல் கறங்குசக் கரவல யம்போல்
ஆறி லாவிசை யாய்க்கிறு கிறெனவே சுழன்றான். 145

விசையு றச்சுழன்று அவனியில் வி(ழுமுனம்) விரகுற்று
அசைவில் மோட்டுஉரு வாய்,வெளி அடைத்தபேர் இபமாய்,
இசையும் நால்மருப் பினில்எறி யீட்டி,வா யினிலே
பசிய சங்கிலி கையில்அயத் தடி. . . பாய்ந்தான். 146

கயிலை நேர்மத கரிஉருத்து அடர்ந்தஅக் கணமே,
வயிர மாமதக் கோளரி நேர்உரு வாகிப்
பயில்வின் ஏறுஎனப் பாய்ந்து,கும் பம்பிளந்து, அடர்ந்து,
தயிரி யத்துடன், மூளையை உறிஞ்சியது அம்மா. 147

கும்ப மத்தகம் பிளந்திடக் குஞ்சரம் அலறி
அம்ப ரத்துஇருந் ததுகிறு கிறெனவீழ்ந் ததற்பின்,

---

142. உலவை - முல்லை நிலத்திற்குரிய; நந்தன் - நந்தகோபன்; அடுத்தது சங்கை ஏந்தியவன், கண்ணன்; அந்தகாரம் - இருள்.

143. திமிரம் - இருட்டு.

144. துணங்கு - இருள்; அறல் - கடல், திமிர உததி என்பார் அருணகிரிநாதர்;

146. மோட்டுஉரு - பெரிய வடிவம்; வெளி - இடம்; இபம் - யானை, அயத்தடி - இருப்புலக்கை.

147. கோளரி - சிங்கம்; கும்பம் - மத்தகம்.

வெம்பி வீடணன் கோளரி உருஎன எதிர்க்க-
வும்பெ ரும்சர பப்புளாய் இவன்எதிர் உற்றே, 148

சிம்பு ளாய்இரு விழியையும் பிளந்துஉணச் சீயம்
அம்ப ரத்துஇருந்து அலறியே வீழ்ந்தபின், சகஸ்ர
வெம்ப டம்பெறும் சேடனாய் வீடணன் எதிர்க்க,
நம்பு பன்னக வைரியொத்து இவன்எதிர் நாடி, 149

முச்ச கங்களும் நடுங்கிட, மலைமுரண் ஒழிய,
நச்ச ராநடு நடுங்கிட, நடுத்தலை அலகால்
இச்சை முற்றுறக் கொத்தியே, படம்எலாம் இறகால்
வச்சி ராயுத உகிர்கொடு பிளந்தன வகிராய். 150

உலகும் வானமும் தடவும்வாய் யாளியின் உருவாய்க்
கலக மாய்,"இவன் றனைவிழுங் குவன்"எனக் கடுகச்
சலசை நாயகன் றனைஉனித் தம்பமீது எழுந்த
திலக மாநர சிங்கமாய் எதிர்ந்துஇவன் சினந்தே, 151

பாய்ந்து, வாய்இரு பகுப்புஎனப் பிளந்திடக் கிழித்துக்
காய்ந்து, கர்ச்சனை செய்தனன்; கலங்கிவீ டணன்பின்,
"ஆய்ந்த மாயையில் நம்மிலும் அதிகமாய் அடர்ந்தான்-
வாய்ந்த போதனை மந்திரம் வியாசர்பால் பெற்றே; 152

ஆத லால்இவ னிடத்துநம் மாயைஎ டாது"என்று,
"ஏது நாம்செய்வது?"என்றுஉனி நிசஉரு எடுத்தே
மோதும் வேலை,அங்கு இவனும்அவ் உருவுடன் முழங்கி
போத வெஞ்செருப் புரிந்தனன் முறைமுறை புழுங்கி. 153

பூத லத்தினும் பொருப்பினும் காண்புண ரியினும்
மீத லத்தினும் மேகமண் டலத்தும்எண் திசையும்
பாத லத்திலும் பறந்திருந்து, உத்தமே பயின்று,
தோத கத்துடன் வீரகர்ச் சனைகளே தொனித்து, 154

---

148. குஞ்சரம் - யானை, சரபபுள் - எண்காற்புள்.
149. சிம்புள் - சரபம், சகஸ்ர - ஆயிரம்; படம் - பாம்பின்தலை; பன்னக வைரி - பாம்புப்பகை, கருடன். 150. உகிர - நகம.
151. யாளி - துதிக்கைகொண்ட சிங்கம, யானியாணை என்பர்; சலசை நாயகன் - திருமகள் கேள்வன, உனி - தியானித்து, தமபம் - தூண்.
153. மோதும் வேலை - போரிடும் பொழுது;
154. புணரி - கடல், மீதலம - மேலுலகம், உத்தம் - யுத்தம்,போர்; தோதகத்துடன் - மரியாதை இல்லாமல.

பிறங்கல் நேர்க்கதை இருவரும் கையி(னி)ல் பிடித்து
மறங்க ளாய்மன வயிரம்உற்று அருஞ்சமர் மலைந்தார்;
கறங்கு போல்திசை திசைஎலாம் சுழன்றும்வக் கரித்தும்
உறங்கி லர்க்குஎதிர் உதயனும் விளங்கினன் உலகில். 155

இடம்வ லங்களும் சாரிசெய்து, இருவரும் இகல்உற்று,
அடர்செ றிந்து,அடித்து அடித்துஇரு கதைகளும் துகளாய்ப்
பொடிய, ஆர்த்து,உரம் புயம்குறங் கினும்கையால் புடைத்து,
நெடிய வீசையும் முறுக்கிமற் போரினில் நேர்ந்தார். 156

கட்டி யேபிணைந்து உரத்துடன் உரங்கள்ஒன் றிடவே,
முட்டி யேமுழங் கைஇடி முழந்துஇடி முழக்கி,
விட்டி டாதுவெஞ் சினத்துடன் கரம்விசித்து இறுக்கி,
ஒட்டி ஒட்டிவண் உறுக்கிஊ டினர்கள்முட் டியுத்தம். 157

சிரத்தி னும்,கவுள் தலத்தும்,மத் தகத்தினும், குளத்தும்,
உரத்தி னும்,செவிப் புறத்தினும், களம்ஒளிர் நகைஅ-
தரத்தி னும்,கிரிப் புயத்தினும், புறத்தினும், தாளால்
கரத்தி னால்உதை அறைஇடி குத்தினால் கலக்கி, 158

உகிர்பு தைந்திட, அவயவம் துறந்திட, (உ)திரம்
மிகஇ ழிந்திட, மெய்கறை யேற்றுவெங் கதழ்வில்,
சகத லத்தினில் புரண்டுஉருண்டு எழுந்து,சா தித்தே
அகில சாதனை தவிர்ந்து,வே தனைகளை அடைந்து, 159

முடுகும் ஓய,ம னோவயி ரமும்முனை மழுங்கி,
உடல்அ யர்ந்து,உழல் பிணம்எனக் கிடந்து,மூர்ச் சித்தார்;
அடலின் வீடணன் தெளிந்து,இவன் தெளிந்திடா தறிந்து,
படைநி ரந்தரம் கடல்எனப் பரவலும் பார்த்து, 160

---

155. பிறங்கல - மலை; உறங்கிலர்க்கு - தூங்காமல் போரிட்டுக் கொண்டிருந்தவர்களுக்கு; உதயன் - சூரியன.

156. குறங்கு - தொடை.

157. முழநது - முழங்கால்; வண் - மிகுதியாக; முட்டியுத்தம் - மற்போர.

158. குளம் - நெறறி; புறம் - முதுகு, தாளால் உதை, கரத்தினால் அறை, இடி, குத்து என நிரல்நிறை

159. கதழ்வில் - சினததால்; அகில சாதனை - சாதித்தவைகள் யாவும்.

160. முடுகு - வேகம், மனோவயிரம் - உள்ளத்திண்மை.

கிரணன் ஆதவன் விளங்கியது உணர்ந்து,பின் கெழுமி,
வருண மாயையின் கேசரி மார்க்கமே வாவி,
குருதி மன்னயில் அடைந்து,தன் குலத்தரை விளித்துக்
கரிய வீடணன் கடுகியே சினந்துறக் கனன்று, 161

"உங்க ளுக்குமா னிடர்கள்ஊன் நல்விருந்து உதவச்
சிங்கம் நேர்அடல் தொடங்கி,யான் செருக்கள முகத்தில்
தங்க, வெங்கடல் தளத்துடன் அரண்புகல் தகுமோ?
பொங்கி யாவரும் போர்க்குஎழுந் திடும்"எனப் புகன்றான். 162

"புரவ லா!உனை அடைந்துசே வகம்செய்தல் போதும்;
நரன்வில் வாளியின் அழல்படு சருகுஎன நமர்கள்
கருகி னார்ஒரு கணத்தினில்; காலினில் கால்பங்கு
எருவை வாயினில் கக்கிப்புல் லுயிரின்இங்கு இருந்தோம். 163

மிச்சம் வைத்திடல் அன்றுஎன எமரையும் விசயன்
கைச்ச ரத்தினுக்கு இரையிடக் கழறுதல் கடனோ?
பச்சம் வைத்துஎமை அளித்திடும் பார்த்திபன் நீயே
நச்சின் வேல்கொடு பினந்திடில் நலன்"என நவின்றார். 164

"எரியி னில்கொடி யவனிடத்து எய்திலோம்" என்றே
நிருதர் செப்பவும் "என்செய்வது" எனநெடிது உயிர்த்தே,
"அரிது போரிலும்; மாயையால் செயிக்கவும் அரிது;
விரைவி னில்கவ டாய்க்கொல்வோம்" என்றுவீ டணனும் 165

"நன்று; மானவன் விழிக்கெதிர் நாடுவது ஒழிந்து,
நின்று பார்த்திருங் கோள்;ஒரு நிமிஷநே ரத்தில்
இன்று வந்துள தளம்முழுவதும் இறும்வரை நாறக்
கொன்று நான்வரு குவன்;"எனக் கவடுஉருக் கொண்டே, 166

---

161. கிரணன் - கதிர்களை உடையவனாகிய, வீடணன் எழுவாய; உணர்ந்து முதலிய எச்சங்கள் அடுத்த பாடலில் உள்ள புகன்றான் என்பதைக் கொண்டு முடிகின்றன.

163. காலினில கால்பங்கு - (மொத்த அரக்கர்களில்) பதினாறில் ஒரு பங்கினர் மடடும்.

164. எமர் - எம்மவர், அரகர; பச்சம - பட்சம், அன்பு, பார்த்திபன் - அரசன், நச்சின் - விரும்பினால, அல்லது நஞ்சூட்டப்பெற்ற எனினுமாம்; நவின்றவர் வீடணனின படைவீரர்கள்.

166. மானவன் - நரன், அருச்சுனன்; இறும்வரை - முற்றிலும்; நாற - பதன்கெட; கவடுஉரு - வஞ்சகவடிவம், மாயாரூபம்.

அலகுஇ லாமலை இனங்களைத் தருக்களைப் பிடுங்கிச்
சலத ரம்சொரி மழைஎனச் சொரிந்தனன்; அதன்மேல்
வலிய வில்லியும் மனத்துஅதி சயத்து வா ளிகளால்
பலது கள்பட பற்பமாய் எரித்தனன் பலதும். 167

கனத்த பூதரக் குலங்களும் தருக்களும் கனம்நேர்
பனித்த; வீடணன் பயந்திடப் பகழிமா ரிகளாய்த்
தொனித்த வில்குணத் தோடுஉறச் சொரிந்து,அவை தூள்செய,
அனத்த முற்று,அல மலந்து,கை அசந்து,வல் அரக்கன், 168

"பகலில் வெஞ்சமர் யாம்செயில் பலிப்பதுஇல் இவன்முன்
இகலில் நேர்ந்து;அவன் றனைவதைத்து, இவனைஇவ் இரவில்
உகிரின் வன்படை கொடுபிளப் போம்"என உன்னி
மிகையின் மேகவண் ணன்றனை அடுத்து,வெவ் அரக்கன் 169

கால்இ ரண்டையும் வவ்வியே, ககனிடை எழும்பி,
மேலு மேவிசை யொடுவிறு விறெனவே சுழற்றக்
கால காலன்வல் இரப்புஅகற் றியகண்ணன் அருளால்
மாலை உன்னியே, நிகழ்ந்தவை உணர்ந்து,"நான் மதியால் 170

அயர்ந்த போதுஇவன் நமைஎடுத்து உயர்ந்துசுற் றியது"என்று
இயைந்த ஓர்பதம் பறித்து,இவன் எழும்பி,உச் சியினில்
உயர்ந்து, உ[illegible]த்தனன்; உதைத்தலும் உணர்வற மயங்கி
வியர்ந்து மூர்ச்சையுற கிறுகிறென்று அவனியில் வீழ்ந்தான். 171

அங்கு அவன்றனை இவன்இரு கரம்கொடுஅங் கிரியை-
யுங்க னம்கொடு பிடித்து,விண் ஒன்றியே சுழற்ற,
புங்க வன்களை தெளிந்து,அவன் இருபதம் புடுங்கித்
தங்க வேஇவன் றனைஉதைத்து, எழும்பியே தாவி, 172

"என்செய் வோம்"என எண்ணியே, இருங்கவடு உன்னி,
வன்செ ருச்செய்வது ஒழிந்து,ஒரு ரிஷிவடி வாகி,

---

168. பூதரக்குலம் - மலைக்கூட்டம்; கனம் - மேகம், பனித்த இடைவிடாது பெய்தன.
169. அவன் என்பது மேகவன்னனை, இவன் - அருச்சுனன.
170. வவ்வி - காலை வாரி; இரப்பு - பிசகை எடுத்தல், வீடணன் மேகவன்னனைச் சுழற்றப் பின்னவன் அருளால் உன்னியே உணர்ந்து எனப் பொருள் காண்க.
171. அங்கிரி - கால்; புங்கவன் - வலிமையால் உயர்ந்த இராவணன்.

முன்சு வேதனை அடுத்து,"ஐயா! வந்தது மோசம்;
என்சொல் வேன்?"என இருகண்நீர் பனித்திட இசைப்பான். 173

"தரும தேவதை நேர்நும்முன் யாகசா லையினில்
விரவு திங்கள்ஓர் ஐந்தும்ஈர் ஐந்துநாள் வேள்வி
இருடி யின்குலக் குழுவுடன் இயல்புடன் நடத்திக்
கருது காரியம் செயம்எனக் களிப்புறும் காலை, 174

விக்கி ராங்கதன் எனும்ஒரு கொடியவெவ் அரக்கன்,
சக்ர கேதுநண் பன்,கொலை மேவுசண் டாளன்,
மிக்க மாமக மேருவில் உறைகுவன், வினைப்போ-
ருக்கு வல்லசு யோதனன் அழிந்தவை உணரான், 175

நுந்தம் வேள்வியில் நும்முனோன் உதவிய கொடைக்கு
வந்த வேதிய ரிஷிகள்பல் தானமும் வாங்கி,
அந்த மேருவில் அடைந்தவர் மொழிகளால் அறிந்து,
வந்து கூடினன் வல்வினைக் கொடியவன் கண்ணன். 176

அந்த ஏல்வையில் கேசவன் துவரையில் அடைந்தார்;
சந்த அத்தின புரத்தினில் வீமனும் சார்ந்தான்;
நுந்தன் பின்னர்கள் இருவரும் நொய்தின்வேறு அகன்றார்;
"இந்த வேளைநன்று" என்றுஅரக் கனும்மனத்து எண்ணி, 177

முனைந்து, தர்மனை மூர்ச்சையாய் வீழ்ந்திட அடித்துக்
கனிந்த தொண்டையங் கனிஇதழ்த் துரோபதை கலங்கச்
சினந்து, கோதையைப் பற்றியே திண்புயத்து ஏந்திப்
புனைந்து, வாகையும் பூண்டு,அவன் ஏகினன் பொல்லான். 178

கனத்தில் அவ்விடம் விட்டுஅவன் ஓடினன் கரந்தே;
இணங்கும் வீமற்கும் மாயற்கும் ஆட்களை ஏவி,
வணக்கம் உள்ளபல் முனிவர்கள் உனக்குஉரை வழங்கக்
கணிப்பில் வீரிய! இவண்எனை விடுத்தனர் கடிதின். 179

அய்யர் வேள்வியின் வேதமந் திரம்மறந்து அயர்ந்தார்;
செய்யும் பல்சடங் கங்களும் செயல்களும் மறந்தார்;

---

173 சுவேதன் - சுவேதவாகனன், அருசுனன். 174 நும் முன் - உம் தமையன்.
176. வன்கணனன - பொறாமை உடையவன்.
177. ஏல்வை - நேரம், பின்னர்கள் - தம்பியர், நகுல சகாதேவர்.
178. தொண்டையங்கனி - வீழிக்கனி.

கையும் மெய்உணர் வும்மறந் தார்;விழி கலங்கித்
துய்ய நும்முனும் இனம்தெளிந் திலன்"எனச் சொன்னான். 180

பதறி யேகொடும் பாதகன் உரைத்தசொல் கேட்டுக்
கதறி யே,மதி கதிகளும் கலங்கினர் பலரும்;
"இதென அற்புதம்!" என்றுயோ சனையுடன் இடைந்தான்
சதம கன்தரு தனயன்வில் வீரரில் தக்கோன். 181

"என்ன காரியம்? என்னயோ சனைசெய்வது இவண்நீ?
முன்ன னும்பிழைத்து, அனல்பிறந் தாள்முசிப்பு அகன்றால்
உன்னி வேள்விஓர் சகத்திரம் முடித்ததற்கு ஒக்கும்;
பின்னும் வேண்டிய வேள்வியும் முடிக்கலாம் பேணி; 182

அசுவம் எத்திசை போகில்என்? யார்பிடித் திடில்என்?
நிசிச ரன்சமர் ஒழிகில்என்? அழியில்என்? நிகர
விசய வீரர்கள் இருக்கில்என்? இறக்கில்என்? மிக்க
விசையின் காரியம் யாது?எங்கு போகில்என் அய்யா?" 183

எனஉ ரைத்தலும், "அறன்மகன் றனைஅயன் அரன்மால்
முனைஎ திர்க்கினும் அபசயம் உறுவர்கள்; முகில்மெய்
அனகன், எவ்வுலகு உயிர்களும் நிறைந்தவன், அறியா
வினைகள் வந்துறில் அறிகிலா னலன்இபம் காத்தோன். 184

காலம் மூன்றுஉணர் முனிவரன் வரும்வினை கவல்வான்;
சால நாடுமுன் தருமன்முன் உறுவன்அந் தாமன்,
கோலி அந்தரத்து எழுமுனம் குறுகுவன் வீமன்
ஏல வல்இரா வணனையும் அறுப்பர்எம் இளையோர்; 185

அரக்க ராகினும் அசுரர்க ளாகினும் ஐந்து
சிரத்த னாயினும் செயிப்பனோ தருமனைச் செருவில்?
இரக்கம் அற்றஇ ராக்கதன் மாயையோ?" என்னப்
பரக்க வேவிழித்து, அயர்ந்து,நெட் டுயிர்ப்புடன் பதைத்தான். 186

"கடுக இக்கணம் எழுப்புக; நட;"எனக் கவல,
உடல்ந டுங்கியே, மனதுதத் தளித்து,உயிர்ப் பெறிந்து,

---

180. தெளிந்திலன் - சுயஉணர்வுடையவில்லை. 181. சதமகன் - இந்திரன்.
182 முன்னன் - தமையன், தருமன்; அனல்பிறந்தாள் - வேள்வியில் தோன்றிய திரௌபதை; முசிப்பு - இளைப்பு, துன்பம்; உன்னிவேள்வி - அசுவமேதம், சகத்திரம் - ஆயிரம்.
184. அறன்மகன் - தருமபுத்திரன்; அபசயம் - தோல்வி; இபம் - கஜேந்திரன்.
185 முனிவரன் - வியாசர், கவல்தல் - இங்கு செயயத்தக்கன செய்தல்; அந்தாமன் - கண்ணன்.

கொடிய ராக்கதன் வஞ்சனை உணர்ந்து,அகம் கொதித்து,(இவ்)
அடல்உ பாயம்நன்று எனத்திகைத்து, இளநகை யாகி, 187

சற்றும் அங்குஅவன் அறிகிலா விதம்,தனு வதனில்
கத்தரி ஏவினைத் தொடுத்தனன்; கறுக்கெனச் சிரசைத்
தத்தி மேல்எழத் தறித்தது; தலைமலை எழுப்பி
இத்த லத்தினில் அறைந்தது வாயில்மண் இட்டே. 188

(189ஆம் பாடல் சுவடியில் எழுதப்படவில்லை)

வாய்நி றைந்துள மண்ணுடன் தலைமலை கிடப்ப,
மீஇ டம்தட வியஉடல் அலறியே வீழக்
காயு றுஞ்சினத் தொடு,சிலை அணிபல கணையைத்
தீய ராக்கதர் திரளினில் விடுத்தனன் சினந்தே. 190

சருகில் ஊடிய தழல்என நிசிசரர் உடலம்
கருகி யேபொடி படஒரு கணத்தினில் எரித்தே,
ஒருவர் தப்பியே உயிர்பெறாது அழித்து,ஒரு நொடியில்
கிருடி சிங்கநா தம்செய்தான் பேரொலி கெழும. 191

தேவ தத்தத்து முழக்கொடும், இரத்ததே சத்தில்
மேவும் இஞ்சியில் வீரரும் வேந்தரும் தளமும்
தாவி யே,அளவு அறவுஇலாத் தனம்நிதி மணிகள்
மேவு பல்பொருள் அனைத்தையும் கவர்ந்தனர் விரும்பி. 192

வேள்வி செய்வதற்கு எடுத்திடும் பொருளினும் மிக்காய்த்
தாழ்வி லாப்பொருள் அனைத்தும்அத் தினநகர் தனக்கே
வாழ்வி சாலகன் அனுப்பி,அப் புரிசையும் அழித்து,
நீள்வி சாலம தாகவும் நிரவினர் நிமிஷம். 193

மனம கிழ்ச்சிஉற் சாகசம் பிரமமது ஆக,
தனும றைக்கடல் தெரிவிசா லகதனஞ் சயனும்
தினக ரன்சுதன் சுதனுடன், கடோற்கசன் சேயும்,
முனைகொள் சாத்தகி, அக்குரூ ரன்,கிருத வர்மன், 194

---

186. ஐந்து சிரத்தன் - சிவபெருமான்.

188. கத்தரி ஏ - அறுக்கும் அமபு.

193. தேவதத்தம் - அருச்சுனனுக்கு இந்திரனால் வழங்கப்பட்ட சங்கு; இஞ்சி - மதில்; அளவு அறவு - எண்ணிக்கையும் முடிவும், உம்மைத் தொகை, அல்லது அளவுக்கு முடிவு எனினுமாம்.

(எழுசீர் ஆசிரிய விருத்தம்)

அரிய பத்ரகிரி அரசுஅ வன்மகன்,அ
மைச்சன், வீரன்அனு சாளுவன்,
கரிய வன்குமரன், அவன்ம கன்,ககன
கர்த்தர், காவலர்கள், வீரரும்,
மருவும் நீலன்,அமிர் தத்து சன்றனொடு
மற்று ளோர்கள்படை முற்றுமே
விரவி மொய்க்க,நவ ரத்ன ஒண்கவிகை
நிழலில் வெம்பரிந டத்தினார். 195

இரத்தம் அந்நகரில் அச்ச தேசம்எனும்
எல்லை யில்பட,இ யம்பல
வரத்து பேர்ஒலிஇ டிக்கு மேலிட,அ-
நந்த ஆச்சரியம் மேலிட,
நிரைத்த பலவிருது செல்ல, மண்துகள்நெ-
ருங்கி எண்திசைவிண் மல்கவே,
உரைத்த வேதமுனி சொற்ப டிக்குமுறை
ஓமம் எக்கியம்ந டக்கவே, 196

தொடர்அ றாதநெடிது ஆன கானவழி
தூசி செல்ல,அத னைத்தொடர்ந்து
அடர்பெ ரும்படைகள் வீர கர்ச்சனைசெய்து
அற்பு தத்தின்ஏ கினர்எனத்
திடம்மி குந்தமுனி சொன்ன வாய்மைசன-
மேச யன்செவியி னால்உணர்ந்து,
"அடவி மீதினில்ந டந்த செய்திஅதி-
சயமது ஓதும்"என வினவினான். 197

வர்க்க தேசச் சருக்கம் முற்றும்
ஆகச்சருக்கம் 11 க்கு விருத்தம் 1698

---

193. விசாலகன் - பெருமை உடையவன், அருச்சுனன்; புரிசை - மதில்.

194. மகிழ்ச்சி, உற்சாகம், சம்பிரமம் - ஒருபொருட்கினவிகள், தினகரன் - சூரியன், இவன்பேரன் விடகீதனன்; கடோற்கசன்சேய் - மேகவன்னன்.

195. பத்ரகிரி அரசு - எமனாகரன்; அவன்மகன் - சுகலீலன்; கரியவன் குமரன் - பிரத்யும்நன்; அவன்மகன் - அநிருத்தன்; ககன கர்த்தர் - படைத்தலைவர்.

197. தூசி - குதிரை; முனி - வைசம்பாயனன்; அடவி - காடு.

12. புரவிபேதித்துச் சுயரூபமான சருக்கம்

(கலிவிருத்தம்)

நாந்தகம், கதை,சிலை, நந்து, சக்கரம்
ஏந்தினோன்; கடவுளர் இடுக்கண் தீர்த்தவன்;
காந்தமும் ஊசியும் கடுப்ப வில்லியைச்
சார்ந்தருள் புரிந்தசா ரதியைப் போற்றுவாம். 1

உத்துவா சாரி,அக் ரூரன், சாத்தகி,
மத்தகன், கிருதவர் மன்,பி ரத்திமன்,
புத்திரன், அணியுருத் திரன்,பொற் பாறைசூழ்
பத்திர கிரிஅரசு, அமைச்சன், பாலகன், 2

அங்கர்கோன் சுதன்,கடோர்க் கசன்கு மா(ர)ர்கள்,
சிங்கம்நேர் சாளுவன், திறல்நீ லத்துசன்,
துங்கமன் அமிர்தனும் தொடர்ந்த நால்வகைச்
சங்கவெம் படைவிலி தன்னைச் சூழ்வர, 3

ஐவகை இயங்களும் அனிக ராசியும்
கைவர, நவமணிக் கவிகை நீழலில்
உய்வரும் பரிசெல, ஓம எக்கியம்
தெய்வவே தியர்சடங்கு இயற்றிச் சேர்ந்துற, 4

மூவறு மேளவாச் சியம்மு ழங்கிடத்
தேவதுந் துமியொடு, செல்லில் மல்கிய
தாவிய நறைப்புகை சமர்செய் துற்றிட,
மேவுசிங் காரவெம் பரிவி ரைந்ததே. 5

---

1. நாந்தகம் - திருமாலின் வாள்; கதை - சுதாயுதம்; சிலை - சாரங்கம் என்னும்வில்; நந்து - பாஞ்சசன்னியம் என்னும் சங்கு; சக்கரம் - சுதர்சனம், இவை திருமாலின் ஐம்படைகள் ஆகும்; சாரதி - பார்த்தசாரதி.

2. புத்திரன் - பி"த்திமனின் மகன், அதிருத்தன்; பொற்பாறை - அழகிய மலை; அரசு - எமனாசுரன்,
பாலகன் - சுகலீலன்.

3 அங்கர்கோன் - கன்னன், சுதன் - விடகீதனன், விலி - வில்லி, விசயன்.

5. செல்வில் - மேகம் போல, மல்கிய - நிறைந்த, நறை வாசனை.

எருவையம் புரமதன் எல்கை நீங்கியே,
விரிகக னம்பல வெளியும் நீங்கியே,
திரள்தொலை கடந்தபின் சேனை முட்டியே,
மருவிய ஒருபெரு வனம்வந் துற்றதே. 6

பற்பல தருவினம் பரவி யேபணைத்து,
அற்புத முடன்அக அகடு உரஞ்சியே,
உற்பன உலவைஉய் யானம் மூடியே,
சிற்பர்கள் செயலரும் செய்கை உற்றதே. 7

சந்த்ரிகை ஆதபம் தான்உள் தோய்வுஅற,
இந்திரன் சேய்க்குஎதிர் இட்ட பந்தராய்க்
கந்தமென் பலமலர் களைப்ப ரப்பியே,
சுந்தரத் தேன்மழைச் சோனை சிந்தியே, 8

கனிமலர் பாளைகள் கவின, மேல்எலாம்
பனிநறை நீர்விடா மற்ப னித்திட,
இனமுருக் கங்கள்,சாந்து, ஆத்தி என்னவே
தனதுறு சிறைவளி தானும் வீசவே, 9

குக்கில்தா ளம்செயக் குயில்கள் அன்றில்மா
மிக்கரா கம்செய வே,ம யில்குலம்
தக்கதாய் நடம்செயத் தலைஅ சைத்துவன்
மர்க்கட கங்கள்தான் மகிழ்ந்து பார்த்திட, 10

கிள்ளையும் பூவையும் கெழுமிப் பேசிடப்
புள்ளினத் தொனிஒலி புணரி ஒத்திடக்
கள்ளறா மலர்,கழை மணிகள், காட்டினில்
உள்ளநல் திரவியம் உற்ற காணிக்கை 11

---

6. எருவையமபுரம் - இரதத மனடலம், விபீஷனின் ஊர்.
7. பணைத்து - செழித்து, அக அகடு - வானின் வயிறு, உரஞ்சி - தேய்த்து; உற்பன உலவை - உயர்ந்த நீர்நிலைகள், உய்யானம - சோலைகள்
8. சந்தரிகை - நிலவு, ஆதபம் - வெயயில்; சுந்தமலர், மென்மலர், பலமலாகள் என்க.
9. இன முருக்கங்கள் - எலுமிச்சை, நாரத்தை போன்ற இனத்தாவரஙகள்; சாந்து - சந்தனம்.
10. குக்கில் - செம்போத்து; மா - வண்டுகள், மர்க்கடகங்கள் - குரஙகுகள்.
11. கழைமணிகள் - மூங்கிலில் தோன்றிய முதது.

வைத்து,"அரி நண்பனே! வச்சி ரன்சுதா!
எய்த்தவர் அன்பனே! இகலர் காலனே!
உற்றுஎமை ஆள்"கென உறும்த ளிர்க்கையால்
பைத்தழை முடிகொடு பணிந்த கானகம். 12

கானகம் உதவிய கவிகை நீழலில்
தானவெம் பரியொடு தளமும் சென்றன;
மானமன் வில்லிஇவ் வளங்கள் நோக்கியே,
ஏனைமன் னவருடன் ஏகி னானரோ. 13

இவ்விதம் தளங்கள்இ ராசர் வீரரும்
மவ்வல்அம் பந்தரின் வண்மை நீழலில்,
தவ்விய புரவிபின் தான்தொ டர்ந்தனர்.
எவ்வமில் மகிழ்ச்சியோடு ஏகும் காலையில் 14

நண்பக லாயது; நளின வாவிஒன்று
ஒண்புது நறைகமழ்ந்து உலவக் கண்டதே;
பண்புறு புரவியும் பயத்தின் வேட்கையாய்த்
தண்புனல் வாவியில் தான்இ றங்கியே, 15

அப்புனல் பருகிட, அயலில் நீழலில்
ஒப்பிய கணம்எலாம் உறைந்து நின்றன;
துப்பின்ஒண் புரவிபெண் துரக மாகவே
தப்பித உருவொடு தானும் மீண்டதே. 16

பெட்டைய தாகவே பேதித்து அச்சுவம்
ஒட்டியும் வரஅயல் உற்று ளோர்எலாம்
மட்டமாம் புனல்உண அஞ்சி மாழ்கினார்
நட்டமார் பெண்களாய் நமைச்செய் யும்என, 17

அந்தணர் விருதுகொண்டு அடைந்த பேர்களும்
சிந்தைநொந்து, உருகியே, திகைத்து, வாடியே

---

12. வச்சிரன் - இந்திரன். 13. தான- வலிமையுள்ள
14. மவ்வல - முல்லைகுகொடி. 15. நளினவாவி - தாமரைக்குளம; பயம் - தண்ணீர்
16. அயலில் - அருகில்; கணம் - படைவீரர்கூட்டம். (புரவி) பருகிட அயலில் கணம்எலாம் நின்றனஎன்க, துப்பின் - வலிமைமிக்க,
17. மட்டமாம் - (ஆணைபபெண்ணாக மாற்றும்) இழிகுணமுள்ள; நட்டம் - நடனம்.

சுந்தர வில்லிசு வேத வாகனன்
இந்திரன் மகனிடம் எய்தி ஓதுவார். 18

ஐவர்கள் நடுவனே! அமரர் போற்றிய
தெய்வரா ஜன்திருச் சேய னே!அரி
மெய்வரும் துணைவனே! வில்வ லாளனே!
மொய்வனப் படுகரில் முடுகி நம்பரி 19

அறல்குடித்து ஆண்உரு அகன்று பெட்டையாய்
மறுஉருப் படைத்தெ"ன வழங்கு முன்னமே,
விறல்சய விசயனும் வெய்தின் எய்தியே,
நறைமலர்க் குளம்பரி நாடி நோக்கியே, 20

சிந்தனை பெருகியே, திகைத்து வாடியே,
உந்துஅழல் மெழுகுஎன உருகி, மெய்மறந்து,
"இந்தவல் வினைஎவர் செய்த தோ?"என
முந்துசஞ் சலத்திரை யதனில் முங்கியே, 21

மகம்தனக்கு உற்றவி காதம் வந்தெனத்
தகும்செயல் என்செய்வோம்" என்னச் ச(ர)ம்பியே
மிகுந்ததுன் பொடுதலை அசைத்து லீரனும்
புகும்பரி பின்புறப் புரிந்தும் ஏகினான். 22

ஏகிய நெறியிடை எதிர்க்க வேறுஒரு
வாகுஉறு தாமரை மடுவந் துற்றிடத்
தாகமுற்று அதனிலும் தாவி, வாம்பரி
ஆகம்மெய் குளிர்தர அறல்பு சித்ததே. 23

அறல்புசித் தே,கரை அடைந்து, வேங்கையாய்த்
திறல்உரு வுடன்எதிர் சீறிப் பாய்ந்து,உடன்று,
உறுகையால் ஓங்கி,வாய் பிளந்துற்று, அண்டமாய்
முறையொடு கர்ச்சித முழக்க மிட்டதே. 24

---

19. ஐவர்கள் நடுவன் - பஞ்சபாண்டவருள் மததியில் உள்ளவன், மொயவனம் - மொய்த்துள்ள அழகு, வினைத்தொகை; படுகர் - குளம்.

20. அறல் - தண்ணீர், குளம் பரி - குளத்தையும குதிரையையும்.

21. திரை - (ஆகுபெயராகக்)கடல், சஞ்சலத்திரை உருவகம்.

22. மகம் - வேள்வி; விகாதம் - இடையூறு; 23. நெறி - வழி, வாகுஉறு - அழகிய.

தத்தியே பாய்ந்திடச் சனங்கள் யாவரும்
சித்தம்மெய் கலங்கியும் தறிகெட்டு ஓடினார்;
இத்திறம் அறிந்துவேந் தர்கள் யாவரும்
சத்திய அருச்சுனன் தானும் நோக்கியே, 25

"என்னகா ரணம்இது? யார்செய் தீவினை?
உன்னிவேங் கைப்புலி உருஎற்று?" என்றுஎணி,
முன்னுறும் துன்பினில் மும்ம டங்குஎன
மன்னர்மன் னவன்மனம் மறுகிச் சோ(ர்)ந்தனன். 26

சோர்ந்து,எழுந் தே,உடன் துணுக்கி, "முன்னவன்
நேர்ந்திடும் வேள்வியை நிலைபெ றாவிதம்
சார்ந்துஎவர் செய்திடும் தவறுஇ தோ?"எனச்
சேர்ந்தவர் அடிக்கடிச் செப்பி உக்கியே, 27

"இந்தநாள் வரையும்ஓர் இடுக்கண் இன்றியே
நந்துணை முகுந்தனால் நாள்க ழித்தனம்;
குந்தவெவ் அரசரும், மூவர் கொள்ளினும்
சிந்தைகொ ளாவிதம் செயித்து மீட்பன்யான்; 28

இவ்விதம் மாயையாய் இயற்று வித்தவர்
தெவ்வரோ? தேவரோ? இருடி? தெய்வமோ?
அவ்விய இவ்வினை அறிகி லேன்"எனச்
செவ்வியன் மறுகியே சோபித்து ஏங்கினான். 29

"பூதலை யூகம்அற் றவர்கள் போல்மனம்
பேதலித் திடுவதுஏன்? பெட்பின் மாலைநீ
ஏதமது அகன்றிட எண்ணில், நண்ணுவர்;
வேதனை சிந்தும்"என்று அமிர்தன் விண்டனன். 30

அமிர்தன்மெய் மொழிசெவி அமிர்தம் கொண்டதே,
விமிதம துடன்,தெளி வெய்தி, வெய்தினில்
(க)மலைநண் பனைமனம் கருத, கண்எதிர்
சிமுதமே னியன்பர தேசி வேசமாய் 31

---

26. உன்னி - குதிரை, எற்று - எவ்வாறு. 28 குந்தம் - வேல்; மூவர் - மும்மூர்த்திகள்.
29. தெவ்வர் - பகைவர், அவ்விய - அழுந்திய, தவிர்க்கு முடியாமல் நேர்ந்த;
30 பூதலை - உலகில், செய்யுள விகாரம், எதுகை நோக்கியது; யூகம் - அறிவு; பெட்பின் - விருப்பததுடன், மாலை - கண்ணனை; ஏதம் - துன்பம்.

நரைத்தலை நடுக்கிட, நார மார்நுரை
பரப்புமெய்ம் மயிர்,விழி பஞ்சுஅ டைந்திட,
குரைத்திட இருமலும், கோழை வீழ்தர,
திரைப்புஉறு தேகமும் செவிஅ டைப்புமாய் 32

கால்தடு மாறிட, கையில் ஊன்றிய
கோல்துணை யாய்;பழங் குடைஓர் அங்கையாய்,
பீறிய துணிக்கலை பிறங்க வேபுனைந்து,
ஆறிய நடையொடும் அத்தி மெய்யுமாய் 33

கரியசெல் அரித்தபொஸ் தகமும் கையுமாய்ச்
சரிஎதிர் படுதவ முனியைக் கண்டதே,
விரைவினில் வில்லியு மேவ லம்செய்து,
பரவினன் அடிக்கடி பங்க யப்பதம். 34

பரவிய கிரீடியைப் பார்த்து, வேதிய
வரமுனி ஆசிரு வதித்து வாழ்த்தியே,
அரசன்விக் கினம்எலாம் அறையக் கேட்டதே,
அரிஉழு வையின்எதிர் வந்து கிட்டியே, 35

தாங்கிய கமண்டலச் சலத்தைக் கையினில்
வாங்கியே, எறிய,வல் லியத்தின் வல்லுரு
நீங்கியே, பண்டுபோல் நின்ற அச்சுவம்
பாங்குடன் அநுசரித் ததுபண் பாகவே. 36

(37 ஆம் பாடல் சுவடியில் எழுதப்படவில்லை)

"ஆம்இவன் லோகநா யகன்மு குந்தனே;
ஓம்"என வில்லிமற் றுளர்எல் லோர்களும்
சேமமாய் வலம்செய்து தெண்ட னிட்டு,"ஐயா!
சாமிமாப் பேதகம் சாற்றும்" என்றனர். 38

---

31. கமலை நண்பன் - திருமகள் கேள்வன்; சிமுத மேனியன் - மேகம்போன்ற நீல உடலினன், கண்ணன்.

32. நாரம்ஆர் - தணணீரிலுள்ள, உடலில் பரவியுளள வெள்ளிய உரோமங்களுக்கு நுரை -உவமை; திரைப்பு - தோறசுருக்கம்.

33. பீறிய - கிழிந்த, ஆறிய - மிக மெதுவான; அத்திமெய - எலும்புக் கூடாகிய உடல்.

35. உழுவை - புலி. 36. வல்லியம் - புலி. 38. மாப்பேதகம் - குதிரைக்கு ஏற்பட்ட மாற்றங்கள்.

"தனுவிசா லகிதயி ரியிகம் பீரகா!
உனதுநல் தருமமே உதவிற்று இன்றுஉனக்கு;
இனிமனம் மகிழ்;பரி யேபெண் ஆகிய
புனல்படு படுகரின் புதுமை கேள்;சொல்வேன். 39

திரிபுரா திகள்முந்நாள் திரண்டுஎப் பூமியும்
எரிபட அழிவுற இடுக்கண் செய்ததால்,
அரிஅயன் கடவுளர் யாரும் அஞ்சியே,
கரிஉரித் தோன்அடி கண்டுஇ றைஞ்சியே, 40

"தீர்த்தஅருள் திரிபுரா திகள்செய் தீமையைக்
காத்தருள் எமை"எனக் கவல, "நன்று"எனச்
சாற்றரும் மேருவில், சேடன் சாபநாண்,
பார்த்திப மாயவன் பகழி ஆகவே, 41

புரவிகள் வேதமாய், பூமி தேரதாய்,
குரவனும் வலவனாய்க் கொற்ற வீரியப்
பரமனும் அமரது பண்ண எண்ணும்நாள்
அரன்இடத் தவளும்இவ் அடவி வாவியில் 42

தனிமையாய்த் தடாகத்தின் கூலம் மே(வியே)
இனிதுறு தவசுசெய் தேஉ றைந்தனள்;
வனமிசை சம்பரா சுரன் வாழுவோன்
புனல்உண அப்பெரும் பொய்கை நண்ணினான். 43

கோடிசூ ரியப்பிர காச கோலமாய்ச்
சேடுஉறு பசும்பொனின் தேக நாரியை
நாடிநோக் கியஇரு நயனம் மங்கியே,
வாடினன் மதனலா கிரியின் மையலால். 44

சுடரினை மலர்எனத் தும்பி நாடல்ஒத்து
அடர்பவன் றன்னைஅம் பிகையும் நோக்கியே,

---

41. சேடன் - ஆதி சேஷன், சாபம் - வில், பாத்திப - மன்னனாகிய.
42. குரவன் - பாடகன், பிரமன்; இடதவள் - இடபபாதிகொண்ட உமையவள், அடவிவாவி - காட்டுக்குளம். 43. கூலம் - கரை.
44. சேடு - அழகு, நாரி - பெண், நயனம் - கண்கள்; மதன லாகிரி - காம மயக்கம்.

கொடியவன் வரும்மனக் குறிப்புஉ ணர்ந்து,"இவன்
கெடச்சபித் திடில்தவம் கெடும்"என்று உன்னியே, 45

"ஆரடா மடமதி அரக்க! நில்லடா;
தூரடா; ஊர்பெயர் சொல்ல டா;உனைக்
காரடா; வந்ததைக் கழற டா;என,
"சூரன்நேர் சம்பரா சூரன் என்பெயர்; 46

சூழமூன்று யோசனை தூரம் இவ்வனம்;
வாழ்வன்இக் காட்டினில் வாச மாகநான்;
ஏழ்மையாய்த் தனிமையாய்க் கேள்வன் இன்றிஇக்
கேழ்வனத்து உற்றநீ கிரிம டந்தையோ? 47

தெய்வகன் னிகைகொலோ? செகம டந்தையோ?
பைவிரி நாகலோ கத்தின் பாவையோ?
தையல்நீ யார்கொல்?"என்று அவன்உ சாவவே,
ஐயரி மைக்கணாள் அவனோடு ஒதுவாள் - 48

"ஏதடா கேட்பது? கேள்வி என்உனக்கு?
ஓதடா;"என,"எனக்கு உரிமை யாய்ஒரு
மாதும்இ லாததால் மைய லாய்உன்மேல்
போதுவந் தேன்"என்றான் புத்தி யீனனே. 49

தடையறக் கொடுமொழி தான்உ ரைக்கவே,
சடைவிடை யோன்இடம் உடைய தையலும்
திடமுடன் சபித்திலன் "சிசுரு டைக்குஎம-
திடம்இவன் ஏவல்செய் திடுவன்" என்றுஎணி. 50

"ஊன்புலவு உறும்முடை உடல்துர்க் கந்தமே
தான்கழன் றிடத்தடந் தன்னில் மூழ்கு"எனத்
தேன்கமழ் படுகரில் சென்று முங்கினன்;
மீன்கலங் கியவிழி மீள எண்ணினாள். 51

---

45. சுடா - தீபமிழம்பு; தும்பி - வண்டு
46. தூரடா - சற்று விலகியே இரு; சூரன் நேர் - சூரபதுமனுக்கிணையான
47. கேள்வன் - துணைவன்; கேழ்வனம் - ஒளிமிகக காடு. கிரிமடந்தை - வரையரமகள்.
48. உசாவ - கேட்க; ஐ - அழகிய; அரி - செவ்வரியோடிய. 49. போது - விரும்பி.
50. சிசுருடை - பணிவிடை; என்றுஎணிச் சபித்திலன் என முடிக்க.

"இக்கயம் மூழ்கிடில் எவரும் டெ ன்உரு
அக்கணம் பெறக்கட வது"என்று உன்னிலாள்;
பிக்கற அரக்கனும் பெண்மை யாகினன்
"திக்கறப் பணிவிடை செய்"என்று ஓதினாள். 52

கரையினில் ஏறியே, கவுரி தாள்தொழுது
உரிமையில் சுசுருஷை ஊழி யங்கள்தான்
ஒருதினம் போலவே உள்ள நாள்எலாம்
பரிவுடன் பணிவிடை பயந்து செய்தனள். 53

சிவைசெயும் தவமது சித்தி யானபின்,
நவமுறு கயிலையை நாடு காலையில்,
கவுரியை அரக்கனும் கன்னி யாய்த்தொழுது,
"எவைஎனக்கு உறுமதி?" என்று கெஞ்சவே, 54

சமஸ்தமும் ஈன்றருள் தாய்என் மீதுநீ
அமர்த்திஇல் மோகமுற்று அடைந்த தன்றியே,
திமிர்த்தவை என்முனும் செப்பும் உன்மதம்
இமைப்பொழு தினில்அழித் திடுவன்; ஈற்றில்நீ 55

பயந்துநல் சிசுருடை பண்ணி னாய்அதால்
பெயர்ந்துமுன் நீசெயும் பிழைபொ றுத்தனம்;
இயைந்துள வரம்கொடு இன்னம் பூவினில்
உயர்ந்திருந் திடு;அலதுஎன் னுடனே வந்திடாய்" 56

என்றுபுண் ணியபதி இயம்ப, நன்மதி
ஒன்றி,"உன் தாள்அலது உறுதி என்எனக்கு?
இன்றுபோல் என்றும்நின் பதம்கி டைத்திட
நன்றிசெய் தருள்"கென நமஸ்க ரித்ததால், 57

"நன்று;வா" எனஅருள் நயனம் ஈந்து,வெண்
குன்றினில் அவனையும் கூட்டி ஏகினள்;
வென்றியாய் நகைத்துமுப் புரம்எ ரித்தபின்
அன்றுஅர னாரும்அக் கயிலை எய்தினார். 58

---

52. கயம் - குளம், பிக்கற - தவறாமல, திக்கற - அச்சமில்லாமல்.
54. சிவை - உமைதேவியார, உறுமதி - உரிய உபதேசம்.
55. அமர்த்தி - அடக்கம்: திமிர்த்தவை - விறைப்பான சொற்களை.
57. நன்மதி ஒன்றி - நல்லறிவு பெற்று. 58. வெண குன்று - வெள்ளிமலை, கயிலாயம்.

வரைமகள் அரனும்வெண் மலையில் வாழ்ந்தனர்;
பரைமொழிப் படிசளப் படுவில் அன்றுதொட்டு
இரைபுனல் உணும்விலங் கினமி யாவதும்
விரைவில்ஆண் பெண்உரு விளங்கும் மெய்யனே. 59

அத்தடந் தனில்உனது அசுவம் எய்திஆண்
உற்றரி பெட்டையாய் உற்றது; "இப்புறம்
பத்திரி படுகர்நீர்ப் பரிசம் எய்திடச்
சித்திர காயமது ஆவது ஏது?எனில், 60

"உலகுஉயிர் அளிப்பவன் உயிர்அ னாய்!முனாள்
கலைபல தெரிதவன், கண்ணு மாமுனி
பலநதி சமஸ்தமும் படிந்து,இப் பொய்கையும்
நலனருள் சலமிதில் நண்ணி னான்அரோ. 61

தடத்தினில் இறங்கியே தானம் செய்து,பின்
திடத்தகா யத்திரி செபம்செய் காலையில்,
உடற்பெரு மலைக்கரா உருவன் தன்உடல்
பிடித்திட, "சினந்திடில் பிழை"என்று எண்ணியே, 62

"செய்தவம் பழுதுறும்; சினம்பொல் லாது"என
மெய்தவன் வெகுளியை வெறுத்து,"இப் பொய்கையில்
எய்தியே தோய்ந்துள விலங்கி னங்கள்தான்
நொய்தில்புஃ ஊப்பட" நொடிக்குள் எண்ணியே, 63

தம்பன மாகச்சு வாசம் அடக்கியே,
அம்புன லிடைஉடல் அடங்கி நின்றனன்;
தெம்பில்நீர் உறைதரு செந்துஅ டங்கலும்
வெம்புலி யாய்க்கரை மீதில் பாய்ந்தவே. 64

பற்றிய சிஞ்சுமா ரனும்அப் பற்றுவிட்டு,
உற்றமுச்சு அடங்கிடாது, உதகம் நீந்தியே,
வெற்றியின் வல்லிய வேட மாகியே,
சுற்றிய வனத்தினைத் தொடர்ந்து சென்றதே. 65

---

59. பரை - உமாதேவியார்; சளப்படு - வஞ்சிக்கின்ற குளம், முன்னறிவிப்பின்றி மாற்றுவதால் வஞ்சனை என்றார்
60. பத்திரி - குதிரை, சித்திரகாயம் - புலி. 61. அளிப்பவன் - காத்தற்கடவுளான திருமால்.
62. தானம் - நீராட்டு; கரா உருவன் - முதலை வடிவினன். 63. புல் - புலி.
64. தம்பனம் - கூடடி அடக்குதல். 65 சிஞ்சுமாரன் - முதலை; உதகம் - நீர், வல்லியம் - புலி

இடங்கரின் இடர்தவிர்ந் திடஅம் மாமுனி
தடந்தனில் உறுசெபம் தனைமு டித்தபின்,
தொடும்பல நதிகளும் தோய்ந்து சார(ர்)ந்துதம்
இடந்தனில் உறைந்தனர் இந்தி ரன்சுதா! 66

அந்தநாள் முதல்விலங்கு அதனில் தோய்ந்திடில்
வந்திடும் புலிவடிவு; உறுதி; இவ்வினை
வந்தஆ பத்தும காப்பொ லாது;ஐயா!
நுந்தரு மத்தினால் நொய்து நீங்கின. 67

நின்மனத்து ஓர்மையால், நின்மு னோன்செயும்
தன்மமும் குலத்தவர் தவத்தி னாலுமே
வன்மகா இடுக்கணும் மாய்ந்தது இன்று"எனப்
பன்முறை விசயனைப் பரிந்து வாழ்த்தவே. 68

"தக்கவர் மிக்கதாய்த் தமைச்சொல் வார்களோ?
மிக்கநீர் எமதுஇரு வினையும் நீக்கியும்
புக்கிய நரன்எனைப் போற்றி னீர்ஐயா;
இக்கனம் ஆர்கொலோ இயம்ப வேண்டுமே? 69

அரசனைச் சகலரும் அறிகு வார்;பல
நரரையும் அரசர்கள் நண்ணி ஓர்கிலர்;
கிரிடிநன்று; ஏகு"எனக் கிளத்தி ஓர்செடி
அருகில்நீர் கழிப்பபோ லாய்ம றைந்தனன். 70

அந்தர்த்தி யானமாய் அய்யன் ஏகலால்,
சுந்தரக் கிரிடியும் சூழ்ந்த பேர்களும்
கந்தநல் கானகம் முழுதும் காண்கிலாச்
சிந்தனை யாய்த்தெரு மந்து, வாடினார். 71

"மானவர் பயில்தரா வனத்தி லேஎதி-
ரானவர் பூசுரன் அலர்(நீ) நத்திடும்
கானமர் துளசிமால் காணும்" என்னவே
ஏனைமன் னவர்எலாம் எண்ணி ஓதினார். 72

ஆயிர நாமமும் அறைந்து,அ ருச்சுனன்
"நேயஉன் துணைதனை நெடிது நம்பியே
வாய்அசு வப்பின்யான் வந்தது அன்றியே
மேயஎன் வீரமும் விறலும் யாவும்என்? 73

---

66. இடங்கர் - முதலை; சுதா - மகனே!
69. புக்கிய - (சூழ்நிலையால் வந்து) புகுந்துள்ள; கனம - பெருமை.
71. அந்தர்த்தியானம் - மறைதல், தெருமந்து - சுற்றி.

என்றும்எந் நாளும்எப் போதும் எவ்வினை
ஒன்றிவந்து உறும்முனம் அகற்று வாய்"எனத்
துன்றிய மகிழ்ச்சியாய்ச் சுவேத வாகனும்,
மன்றல்மன் னவர்களும் மகிழ்ந்து சென்றனர். 74

சாகரப் பிரளயத் தளங்கள் சூழ்வர,
சேகர மனர்அயல் செறிந்து மொய்த்திட,
வாகுறும் புரவியும் கவிகை மன்றிழல்
ஏகினர் வேதவாக் கியம்க றங்கவே. 75

நீர்மலம் சிதறிய நிலம்,கு ளப்படி,
சார்புடன் மோந்துள தலம்,வை கும்மிடம்
சோர்வற முனிமுதல் சொற்ற சொற்படி
சேர்பொடு நடத்தியே செறிந்து சென்றனர். 76

கானகம் கடந்துநாள் கழிந்தது ஒன்பதின்
மேனடந்து ஒருபதாம் ஏல்வை தன்னிலே,
வானிடம் தழுவுநல் மணியின் கோபுரம்,
மீனிடம் பயில்எயில் விழிக்குத் தோற்றவே, 77

"எந்நகர் இந்நகர்? இதற்கு மன்னர்யார்?,
பொன்னகர் நிகர்த்ததுஇப் புரமி யாது?"என
மன்னமிர் தன்தனைக் கேட்க, மற்றவன்
தன்நிக ரிலிவிலி தனக்குச் சாற்றுவான் 78

"இந்நகர் கனில்மினார் இன்றி, ஆனினம்
துன்னுவ திலை,இது தோகை மார்புரம்;
மன்னும்இத் தேசமே மதன மண்டலம்;
இன்னர சேபெரு லீலை என்றபெண். 79

அரிஅரன் பிரமனும் அவள்தன் விற்குளதிர்
தரிபடு கிலர்;யார் தமையும் வெல்லுவாள்
கிரிடியே!" என்றலும், கிளர்ந்த கர்க்குளதிர்
பரிநடந் ததுமனா! என்ற னன்முனி. 80

புரவிபேதித்துச் சுயரூபமான சருக்கம் முற்றும்
ஆகச்சருக்கம் 12க்கு விருத்தம் 1778

---

73. வாய் - (வேள்விக்கு) வாயத்த 75 வாகுறும் - அழகிய

77. ஏல்வை - நாள், மீனிடம் பயில் - விண்மீன்களைத் தொடுகின்ற, எயில - மதில்.

79. மிவார் - மகளிர்.

80. தரி படுகிலர் - தாங்கமாட்டார்கள்; மனா - மன்னனே, விளிக்கப்படுபவன் சனமேசயன், முனி - வைசமபாயனன்

13. மதன மண்டலச் சருக்கம்

(கலி விருத்தம்)

அரன்அயன் கடவுளர் ஆரும் ஏவிய
கருமமது இயற்ற,மர்க் கடங்கள் ஆகியே
நிருதர்த்தம் குலங்களை நீறது ஆக்கிய
திருமறு மார்பனைச் சிந்தை செய்குவாம். 1

"மதனமண் டலம்எனும் வனிதை மார்புரம்
அதனையே நோக்கிஅச் சுவம்ந டந்தபின்
இதமுடன் வந்தவாறு இசைமின்" என்றுமன்
முதிர்வைசம் பாயன முனியைக் கேட்டனன். 2

"மன்னவா! அப்பரி மதன மண்டலம்
தன்னையே நோக்கியே தான்ந டந்திடத்
தென்எம னாசுரன், சேயன், மந்திரி
துன்அனு சாளுவன், துவசன் நீலனும், 3

அமிர்தன்,மால், பிரத்திமன், அணிஉ ருத்திரன்,
விமுவிஷ கீதனன், மேக வன்னன்,வெஞ்
சமர்உத்து வாசரி, கிருத வர்மனும்
அமர்விச யன்றனை யாரும் சூழவே, 4

திரைப்பிர ளயம்எனும் சேனை ஈட்டமும்,
தரைத்தலம் நெளிந்திடத் தான்ந டந்திட
விரித்தஐந்து இயங்களும் மிகமு ழங்கிடப்
பரிப்பிறகு இயல்புடன் பரிந்து சென்றனர். 5

நடந்தனர் பன்னிரு நாள்இவ் வாறதாய்;
தொடர்ந்துமேற்கு அடைந்தனன் சூரன்; அச்சுவம்
கடந்தனில் வதிந்திடக் கடல்த ளங்கள்அவ்
இடந்தனில் பாளையம் இறக்கி னார்களே . 6

---

1. திரு - இலக்குமியும்; மறு - ஸ்ரீவத்ஸமாகிய மசசமும் உள்ள; மார்பன் - மால்.
2. மன் - சனமேசயன். 3. சேயன் - மகன், சுகலீலன்; துவசன்நீலன் - நீலத்துவசன்,
4. பரிந்து - அன்புடன் 6. சூரன் - சூரியன், கடந்தனில் - வழியில், வதிந்திட - தங்க.

தீரர்அவ் விடம்நகர் செய்து, செஞ்சுடர்ச்
சூரியன் உதித்திடத் துரகம் செல்லவே,
நாரிநூற் றிருபத்து நால்அக் ரோணியின்
சாரியின் தளத்துடன் தாம்ந டந்தனர். 7

ஐந்துவாச் சியங்களும், அனிக ராசியின்
மைந்துறு முழக்கமும் மலிந்த ஓதையால்
நைந்தன பூமி;நா கங்கள் சோர்ந்தன;
தொய்ந்தனர் உலகரும், சுரரும், நாகரும். 8

நிருதியின் மூலையின் நேர்அ டல்பரி
துரிதமாய்ச் செலஅமிர் தத்து சன்சொல்வான்,
"கிரிடிகேள்; இப்பதி கேள்வர் இன்றியே
அரிவையர் இருப்பர்கள்; ஆண்கள் இல்லையால்; 9

விலங்கினம் வாகனம் எவையும் பெண்கள்;ஆண்
விலங்கினம் இவண்இலை; மீன்கண் நாயகி
இலங்கிழை அரன்றனை இதயம் உன்னியே,
பலன்தரும் மிகுதவம் பண்ணி னாள்ஐயா. 10

அருந்தவம் அறிந்து,அரன் அணுகி, ஆயிழை
பொருந்திய நலம்எலாம் போத நல்கியே,
அருங்கணை சர்வத அஸ்த்ர காதியும்
திருந்திழைக்கு அளித்தனன் செக்கர் வான்மெயான். 11

அக்கணை யேபடை அனைத்தும் மாய்த்திடும்;
எக்கணை யும்அதைச் செயித்தல் இல்லையாம்,
முக்கணன், அரி,அயன் முனிவர், தேவர்கள்,
மக்களில் செயித்தவர் இலைஅம் மாதையே." 12

"எந்தனுக்கு அக்கணை இசைந்த ஈசுரன்
தந்திலா தென்கொலோ?" எனத்த னஞ்சயன்,

---

7. நாரி - படை, சாரி - உலா வருகின்ற. 8. நாகங்கள் - எட்டுக் குலமலைகள்.
9. நிருதி மூலை - தென் மேற்கு. 10. மீன்கண் நாயகியாகிய இலங்கிழை என்க
11. சர்வத அஸ்த்ர காதி அருங்கணை - அனைத்து அம்புகளையும் அழிக்கும் வெல்லற்கரிய பகழி; செக்கர்வான் மெயான் - சிவபிரான்.

"இந்திரன் குமரனே! இவ்வ கத்தில்நீர்
சுந்தரி யாதியர் முகத்தின் தோகையே. 13

உகம்ஒரு மூன்றுமே உயிர்த்த ரித்தனன்;
சகமதில் நித்யகன் னிகையது ஆகினள்;
சுகமொழி யவள்பதி துரகம் செல்கையால்
மிகுமகம் முடியுமோ? வில்வ லாளனே! 14

அளவிடல் அரிதுபெண் அனிக ராசியும்;
தெளிவுடன் ஒருதரம் சேனை யாவையும்
களைகுவள் கணையினில்; காமன் மாமனே!
கிளிமொழி யார்வலி கிளத்த முற்றுமோ?" 15

என்றலும் அருக்கனன், "இளைப்ப தோ?ஐயா!
கன்றல்நீர்; இருதயம் கலங்கி டாதுஇரும்;
என்றனுக் கானபல் படையும் ஈந்தநாள்
அன்றொரு தூணியும் அளித்து,ஓர் மந்திரம் 16

போதனை செய்து,இதைப் போர்மு கத்தினில்
ஓதியே, தூணியில் உன்கை நீட்டினால்,
மோதும்எப் படையையும் முரண்அ ழித்திடக்
காதிய படைவரும் கைக்குள் என்றனர். 17

அம்மறை தனைஒரு அமர்க்கும் எண்ணிலேன்;
மும்மையும் புகழ,அம் முறையின் மந்திரம்
எம்இத யத்துஎனி, இணைஇ லாக்கணை
கொம்மைவெம் முலைச்சியர் குலைய, வீசுவேன்." 18

என்றலும் மகிழ்ந்துஇனிது ஏகும் காலையில்,
நன்றுபெண் படையுடன் சயன நாயகி
என்றுஅவள் தளபதி எண்ணில் மாதரோடு
அன்றுதான் வேட்டையா டிடஅ டைந்தனள். 19

---

13 இவ்விருத்தத்தில் பின்னிரண்டு அடிகள் தெளிவாக விளங்கவில்லை.
14. சுகமொழியவள் - கிளிமொழியாள், பதி - ஊர், மகம் - வேள்வி.
16. சுன்றல் - வருந்தாதீர்; 17. காதிய படை - எதிர்க்கின்ற ஆயுதம்
18. மறை - மந்திரம், கொம்மை - திரடசியான 19. சயன நாயகி - தளபதியின்பெயர்.

மின்னவின் குழுஎன மிகுந்த மாதரோடு,
அந்நிலை வேட்டைவந்து அடைந்த கானினில்
உன்னியும் தளத்தையும் உற்று நோக்கியே,
என்னென ஆய்ந்துபின் னேதெ ளிந்தனள். 20

"ஈதுவேள் விப்பரி" என்ன உன்னியே,
மாதரைப் "புரவியை விருதை வவ்வும்"என்று
ஓதும்முன், தளங்களை அடித்துஅ கற்றியே,
பேதையர் புரவியைப் பிடித்துக் கொண்டனர். 21

கந்துகம் விருதுடன் கவர்ந்து கொண்டு,உடன்
தந்திர நாயகி பெண்ப தாதியும்
உந்திய வெற்றிமா முரசுஅ றைந்து,தம்
அந்தமாம் உயர்நகர் அரண்அ டைந்தனர். 22

அரண்அடைந்து, இவுளியை அசுவ சாலையில்
முரணுடன் கட்டியே, முகத்தில் இட்டபொற்
கிரணவொண் படங்கொடு, கிளர்பெண் நாயகி
சரண்அடைந்து, உரைசெய்வள் சயன நாய்கி , (23)

"முதல்வியே! வேட்டம்செய் முதிரும் கானிடை
உததிவெம் படையுடன் வேள்வி உன்னியும்
சதிரினில் வர,அதைத் தகைந்து வந்,நனம்;
இதுமுகப் படம்"என ஏந்திக் காட்டினாள். 24

"நன்று"என வாசகம் நவிலக் கேட்டதே,
அன்றுஅகம் மகிழ்ந்து,பெண் அரசி நகையுடன்,
"இன்றுயான் செய்தவம் கிடைத்தது ஈசனால்;
பின்றையோர் சஞ்சலம் பிக்கும் இல்லையே; 25

இந்திரன் குமரன்,ஈ சுரர்க்குப் பத்தன்,நேர்
செந்திரு கேள்வர்க்குச் சிலதன், திக்குஎலாம்

---

21. புரவியை விருதை வவ்வும் என்று மாதரை ஒதுமுன் என்பது பொருள். மாதரை - மாதர்பால் வேற்றுமைமயக்கம்.

22 கந்துகம் - குதிரை.

24. சதிரினில் - (நம்) எல்லைக்குள்; தகைந்து - பிடித்து.

விந்தையால் வெல்லும்வில் விசய ராசனே
எந்தனக்கு அன்பன்என்று இயம்பி னார்அரன். 26

முன்எழில், பின்எழில், முடியின் பேர்எழில்,
மின்னிய சங்குசக் கரஇ ரேகை,மெய்
வன்னமாம் தம்னகம், மச்ச ரேகை,மற்று
இன்னம்மற் றுளபல ரேகை வீரனாம். 27

பல்எழில் கண்டபா வையர்கள் யாவரும்
நல்உணர்வு அழிவராம்; நரவில் வீரன்என்
வல்லவ னாய்வழி வசப்ப டான்எனில்
கொல்லுவேன்; அவனுடன் கூட மாய்குவேன். 28

என்மனம் குளிர்தர வேட்டு வான்எனில்,
மன்மனம் குளிர்தர மாவும் ஈந்து,அதன்
பின்அவன் அடிமையாய்ப் பேணி, ஏவிய
நன்மொழிப் படிநடப் பேன்எந் நாளுமே” 29

என்றலும் சயனநா யகிஇ யம்புவாள்-
“நன்றுஅணங்கு உனக்கு;கன் னல்வில் வேள்அலன்;
இன்றுஒரு நரனிடம் இந்த மோகம்நீ
துன்றியது என்?”எனத் தொழுது கேட்டனள். 30

“என்உயி ரேஅனாய்! இகழ்வது என்?அவன்
முன்உறில் அரம்பையர் முறைமை பார்ப்பரோ?
கன்னல்வேள் அவன்புறங் காற்குஒவ் வான்எனில்
பின்அவன் றனைநிகர் பேசல் யார்கொலோ? 31

இப்பொழுது இகழ்வதுஎன்? நாளை யேசமர்
துப்புடன் செயஎதிர் தோற்ற நோக்கிநீ

---

26. சிவதன் - தோழன்.
27. தமனகம் - மருக்கொழுந்து.
29. வேட்டுவான் - வேட்பான், மணப்பான், பேச்சுவழக்கு
30. அனங்கு - ஆசை, கன்னல் - கரும்பு; வேள் - மன்மதன்.
31. புறங்கால் - பின்னங்கால்.

அப்பொழுது உரை"என ஆசி கூறியே,
உப்பொலி, குயில்கள்மற்று ஓலிக்கும் வாடினாள். 32

தென்றல்அம் புலிசெருப் புரிந்து பாய்தர
மன்றல்அம் புலிஅழல் வருஷித் தேசுட,
பொன்தரும் பசலைமெய் போர்ப்ப, போர்மதன்
ஒன்றிய மலர்க்கணை உருவ வீசினான். 33

வீசிய மழைமலர் விசிகம் மெய்எலாம்
பூசல்உற்று, அகம்புறம் பிளந்து போம்புழை
வாசலில் வன்கடு மலையக் கால்பொர,
தூசுவெண் ணிலவுஅழல் சொரியச் சோர்ந்தனள். 36

கனமல ரணைமலர் கருகித் தீய்ந்தன;
புனைமணி நீறின; பொரிந்த சாந்தமும்;
இனவளை கழன்றன; எரிபன் னீர்சுடு
புனல்எனக் கொதித்த;வேள் போரின் காய்ச்சலால் - 35

விழித்திலள்; இமைத்திலள்; மெய்,கை, கால்களை
உழத்திலள்; தன்நினைவு ஒழிந்து,அ யர்ந்து,மெய்
அழல்கொல்என் றேசுட, "நெட்டு யிர்ப்பதால்
தழைத்துஉயிர் உளது"என மாதர் சாற்றுவார். 36

இறைஒரு யுகம்என இரவில் போதினை
அறஅவள் தொலைத்தபின், அரிவை மார்எலாம்
இறைவியைப் போற்றியே, எல்லி தோற்றலால்
திறமுறத் தேற்றியே, சிறந்தி ருந்தனர். 37

இவ்வித மேஇவண் நிகழ்ந்த ஏல்வையின்
மவ்வல்அம் குழலியர் வாசி பற்றியே,

---

32. உபபு ஒஒலி -கடலின்ஓசை; மற்று ஒலி - கோவலர்வாய்க்குழல், அன்றில், ஆனினங்களின் கழுத்துமணி முதலிய ஓசைகள், இவை பிரிவுத்துன்பத்தை மிகுவிப்பன.

33. தென்றல அம்புலி - மாருதமாகிய வேலகை; செரு - போர; மன்றல் - அழகிய; அம்புலி - சந்திரன், அழல் வருஷித்தே - (நிலவாகிய) தீயைப்பொழிந்தே; பொன்தரும் பசலை - பொன் . நிறம் பெறற பசபபு

34. மலர்விசிகம - பூங்கணை, புழை - துவாரம்; வன் - வலிமை மிக்க, கடு - வேகமான; மலையக்கால் - தென்றறகாற்று.

35. மணி - முதது; நீறின - சாம்பல் ஆன; எரி - மேலே தெளிக்கப்படுகின்ற

36. உழத்திலள் - புரளமாட்டாள். 37. இறை - கணம, எல்லி - சூரியன்.

செவ்விய விருதையும் பறித்த சேதியை
வவ்விய வில்லியை வணங்கிக் கூறுவார். 38

"சுசியினில் வலியனே! சுத்த வீரனே!
வசிகர மாதர்கள் வந்து கூடியே,
அசுவமும் பிடித்து,எமை அமரில் ஓட்டியே,
பசையுறு விருதையும் பறித்துப் போயினார்." 39

மதிப்பற விருதையும், மாவும் பற்றிய
கொதிப்புறு மொழிசெவி கொண்டு, மண்டுஅழல்
கதித்து,இரு விழி.... கக்க, வீசைகள்
அதித்தியாய்ப் படபடத்து அடிக்க, மேல்டுமே 40

நெறுநெறென்று அடிக்கடி நெடிது பற்கடித்து,
உறுதிமுன் கைகடித்து உதிரம் கொப்பளித்து,
எறுழ்மணி முடிஅசைத்து, இமைய வில்லியோடு
இறுதிவெஞ் செருச்செய்தான் உருமில் சீறினான். 41

அண்டரும், முனிவரும், அட்ட பாலரும்,
மிண்டுகளஞ் சுகியரும், உலகும், வேலைவே-
தண்டமும் நடுங்கின; தனஞ்ச யன்சினம்
கண்டுசெங் கதிர்அடைந் தான்க லங்கியே. 42

வில்லியும், சேனையும், வேந்தர், வீரரும்
அல்யுக மாய்த்தொலைத்து அலரி தோன்றவும்,
புல்லுகா லைக்கடன் போக்கி யே,சமர்
வெல்லவும் தளங்களை அணிவி தித்தனர். 43

அணிவகுத்து, அமர்முரசு அறையும் ஓதைகேட்டு,
அணியிழை மாதருக்கு அரசி நோக்கினள்;
மணிதிகழ் சயனநா யகிவ ணங்கியே
அணிமுலை மகளிரை அணிவ குத்தனள். 44

---

38. மவ்வல் - முல்லைமலர்,

41. இமைய வில்லி - பிநாகபாணி, சிவபிரான்; உரும் - இடி.

42. சுஞ்சுகியர் - மெய் காப்பளர், வேலை - கடல்,வேதண்டம் - மலை,

43. அல - இரவு; அலரி - சூரியன்

வகுத்துஅமர் முரசுஒலி வழங்கக் கேட்டதே,
மிகுத்தவில் வீரியன் விழிகள் அக்கினி
உகுத்திடச் சிலைவளைத்து, உருமும் உட்கியே
திகைத்திடக் குணத்தொனி செய்து, சீறினான். 45

(வேறு)

பார்த்தன் வெஞ்சினம் பார்த்துயர் வீரர்கள்
சீற்றம் பெண்களி டம்செய்வ தென்னைநீர்?
மாற்று வம்பெண் வலிமையும் நாட்டையும்
பார்த்தி ரும்எனப் பண்புடன் கூறியே 46

பற்கடித் துச்சினத் தூப்ப ராக்ரம
விற்பி டித்துஇர தம்விரைவு ஓட்டியே
மற்கு றித்த கணைமழை வீசினார்;
நற்க ழைமொழி யார்கள் நடுங்கவே 47

மின்ன லின்குழு என்னமின் பாளையம்:
மன்ற டைகொளல் மஞ்ஞைபோற் சேனைகள்
என்ன வே;சொற் கிளியிடை இன்சொன்போல்
துன்வி னார்புவி சூழ்கடல் போலவே. 48

தெரிவை நால்வகைச் சேனைகள் தம்மொடு
பரவி, விற்பிடித்து, ஆற்றுயர் பாணமே
சொரியும் சோனையில், சுத்தவெவ் வீரியர்
பரிக ரித்தேர் பதாதிகள் மூழ்கின. 49

விற்க ணைதொடு முன்விசி கம்சிலை
கற்கி தேர்கரி கண்டதுண் டங்களாய்,
நற்ப தாகை நறுக்கியும், மெய்ம்முழு-
திற்க ணைபொழிந் தார்இகல் மின்களே 50

தனஞ்ச யன்றன் தளத்தர் சகலரும்
மனஞ்செ யாவிதம் மான்தொடும் வாளியால்,

---

45. உட்கி - அஞ்சி 47. கழைமொழியார்கள் - கரும்படுசொல்லியர்.
48. பாளையம் - படை; மஞ்ஞை-மயில், 50. சுற்சி - குதிரை.

மினும்கல் மாமகு டம்,விலும், வாளும்,வேல்
இனங்கள் வீறழிந் தேமெய் நடுங்கினார் 51

காந்தை வீரமும், கைக்கடுப்பும், யாவையும்
சேர்ந்த வீரர் தியக்கமும் நோக்கியே,
வேந்த னாம்எம னாசுரன் வில்வளைத்து,
ஓய்ந்தி டாமழை போல்அம்பு உடற்றினான். 52

எரிம ழைஎன வேதிசை எங்கணும்
பரவி உற்றன பாணங்கள்; மாதர்கள்
புரம்அ கம்புற மும்புதைந்து, ஊர்திகள்
நெரிநெ ரிந்துஅழிந் தநிலம் எங்குமே. 53

அதனி லும்விசை யாய்அனு சாளுவன்
சிதறி னன்கணை; சீர்மைப் பிரத்திமன்,
உதயன், அனிருத் திரனும், சாத்தகி,
கதழ்கன் னன்சுதன், காவலர் யாருமே 54

மன்னு காதிகள் வாளி மழையினால்
மின்ன னார்இறந் தார்;வெள்ளச் சோரிகள்
துன்னி கண்சொரி யத்தழல் சீறியே
கன்னி சயன நாயகி காந்தையே 55

நிலம்க லங்கிடத் தேவை நெருக்கியே,
அலங்கக் . . . . . மின் அங்கைக் கடுமையாய்ச்
சிலம்புஊ டுருவிடும் செய்ய வெங்கணைக்
குலங்க ளைச்சொரிந் தாள்குயில் நேரவே 56

வல்எம னாசு ரன்விடும் வாளிகள்
பல்ல தும்வில் பரிகொடி தேர்உருள்
சில்லி யாய்த்துகள் செய்து,உயர் மோலியும்
மல்உ றத்தளி, வாளிமெய் போர்த்தனள். 57

---

51. கல் - மணிகள்.
52. காந்தை - பெண்.
56. சிலம்பு - மலை, உயர்வும்மை தொக்கது.
57. பல்லதும் - பலவற்றையும்; மோலி - கிரீடம், தளி - தள்

பிரத்தி மன்,அநு ருத்திரன், சாளுவன்,
திறத்துஅ மிர்தத் துசன்,கதிர் சேய்சுதன்,
விறல்சேய், மற்றும்மு காதிபர், வீரர்மேல்
கறுத்து,அ ரைக்கணத் தில்கணை வீசியே, 58

தேரு டன்கொடி சில்லியும் வில்லுமாய்க்
கூர்உ றும்பல் படையும் குறைத்துஉடல்
சேரஊ மத்தை முட்டுஇணை செய்தனள்,
தீரர்முன் பின்இ டம்திரும் பாவிதம். 59

(வேறு)

சித்திர வதைசெயும் திறமை போலவே,
சத்திர வீரரைச் சயன நாயகி
அத்திர வித்தையால் அடக்கி வைத்ததை
உத்தம தனஞ்சயன் உற்று நோக்கியே, 60

செங்கர விரல்குமிழ் சேர்த்தி யே,திகைத்து,
"இங்குஎன புதுமை!கைக் கடுமை என்ன!இம்
மங்கைசெய் சமர்க்குஇணை விசயை மாதரி-
யுங்கடுக் காது"என உறந கைத்தனன். 61

நகைத்தவெள் எயிற்றுஒளிப் பிரபை நாடியே,
பகைத்தமின் னார்பலர் களும்ம யங்கியே,
திகைத்துஅயர்ந்து அயர்ச்சியாய்ச் செகத்தில் வீழ்ந்தனர்;
தகைச்சுக லீலையின் செய்கை சாற்றுவாம். 62

எழில்மணித் தேர்நவ ரத்ன மஞ்சமேல்
செழுமலர் மெத்தைமெல் லணையில் தேனியாழ்
மொழிமினார் அடைப்பைமா முறைமை செய்திடத்
தழுவணை மீதினில் சாய்ந்தி ருந்தனள். 63

பற்குணன் நகையொளிப் பிரபை பார்த்து,அயர்ந்து,
"அற்புதம் இது"என அயர்ந்து மாழ்கியே,

---

58. சுறுதது - சினந்து. 61. விசயை - துர்க்கை; மாதரி - கூவி, கடுக்காது - நிகராகாது.
63. தேன்யாழ்மொழி - தேனையும் யாழிசையையும் நிகாத்த சொற்கள்

"விற்பன விசயனைச் சேரில் மெல்லியர்
பொற்பறு புருடரைப் புணர்தல் ஈனமே." 64

என்றனள் திகைத்துமெய் நெட்டு யிர்ப்புஎறிந்து,
ஒன்றிய மனத்தொடும் உருகிப் போற்றியே
கன்றி,"யான் செய்பிழை பொறு"எனக் கைகுவித்து
அன்றுஅருச் சுனன்முனம் அறைவ தாயினாள். 65

(அடுத்தபாடல் சுவடியில் எழுதப்படவில்லை)

"உலகநா யகன்உயிர்ச் சிலத னேஉமை
இலகுநா யகனையும் வென்ற வில்லி!என்
திலகநா யக!மணம் செய்க; என்றும்எட்டு
உலகுஎலாம் வென்றிடும் உக்ர வீரனே! 67

நீஅல;'குகன்,அயன், நெடியன், ஐங்கரன்,
தாஅல வான்சமர் தனக்கும் சாய்ந்திடேன்;
தீஎன நீசெருச் செயும்முன் கொன்று,விண்
நாயகி சேருமுன், நான்நிற் றோய்குவேன். 68

திடம்இது;என் படையினில் சிறிய கன்னிஉன்
படைமுகா திபர்களைப் பகைத்து, உயிர்கழு-
விடுதொழில் விறல்அறிந் திருக்கி றாய்;கணை
தொடுதொழில் விடு,சொனேன்; சுத்த வீரனே!" 69

என்றகன் னிகைமுகம் இறைவன் நோக்கியே,
"நன்று,இவள் எழில்நலம் நாக மாதரில்,
மன்றல்பூ மாதரில், வான மாதரில்
ஒன்றும்யாம் கண்டிலோம் ஒப்பு"என்று உன்னினான். 70

"கமலமும், கமடமும், கந்து கங்களும்,
அமைவரால், நண்டு,அரம் பை,மின், ஆல்,மகிழ்
இமையவெங் கிரிவரை, கமுகின் திரள்,கொவ்வை,
கமழ்மணி, சண்பகம், கணை,வில், மேகமே. 71

---

68. தா அலவான் - பாய்கின்ற கலபபையை ஆயுதமாக ஏந்திய பலராமன்.
70. பூமாதர் - நிலஉலக மகளிர்.

கண்எதிர் தோற்றிய காட்சி" என்றுஅகம்
எண்ணினன்; பரிமகத்து இயல்,து ரோபதி
புண்ணியன், குமரனும் பொருந்தும் வாறையும்
உள்நினைத்து இவன்மனம் ஒறுப்பது ஆகியே, 72

"நின்செருக்கு ஒல்கியோ நின்னை வேட்டுறல்?
என்செருக் காய்மதி யாதுஇ சைத்தனை!
நன்சமர் புரி"கென நயனம் தீஎழ,
முன்சிகி திடுக்கிட முனிந்து நோக்கியே 73

"நில்லடி" எனநெறு நெறெனப் பற்கடித்து,
"அல்லடி; நின்மதம் அடக்கு றேன்;கர
வில்லடி சிவனையும் வென்ற தாமடி"
புல்லடி பசுவினைப் போர்க்குஅஞ் சாதடி;" 74

என்றுஇடி யேறென வேமு ழங்கியே,
சென்றுவிற் குணத்தொனி செய்து உறுக்கினான்;
நன்றுமூ வுலகமும் நடுந டுங்கின;
துன்றுவிண் ணவர்களும் துணுக்கி அஞ்சினார் 75

திக்கயம் பாலரும் சேடன் அஞ்சினர்;
உக்கின உடுக்கணம் உதிர்ந்த; ஆதவன்
மக்கியே திசைதடு மாறி ஓடினன்;
மிக்கமின் னார்களும் வெருவிப் பம்மினர் 76

அஞ்சிலள்; இளைத்திலள்; அற்ப மாகினும்
நெஞ்சினில் அமர்த்திடாள்; நெட்டு யிர்த்திடாள்;
சஞ்சரி சயனநா யகியைப் போர்தவிர்த்து,
அஞ்சமென் நடைச்சிபுன் முறுவ லாகியே, 77

---

71. கமலம் - பாதம், கமடம் - ஆமை, புறவடி, கநதுகம் - பநது, குதிகால்; வரால் - கணைக்கால: நணடு - முழங்கால், அரம்பை - வாழைத்தணடு, துடை, மின் - இடை, ஆல ஆலினை, வயிறு, வரை - நகில, சுமுகின் திரள் - கழுதது; கொவ்வை - வீழி, இத்;; மணி - முத்து, பல, சண்பகம் - மூக்கு, கணை - விழி; வில் - புருவம், மேகம - கூந்தல், இது பாதாதி கேசம்
73 சிகி - மயில் போனற சுகலீவை. 74. புல் - புலி, நான்கடிகளிலும் அடி விளி.
76. உகின - பயபபட, பம்மினர் - (நாற்புறமும் ஓடிப) பரவினர்
77. அமர்த்திடாள - அடஙகுமாட்டாள், சஞசரி - போரில் அஙகுமிங்கும் திரிந்து கொண்டுள்ள, தன்னோடு பழகும் தோழியாகிய எனினுமாம, அஞ்சம - அன்னம்.

"குணத்தொனிப் பகட்டினில் குவல யத்துளோர்
வணக்கம்உற்று அடிதொழ அடக்கும் வாறுபோல்
எணிச்சமர் முனையில்நின்று ஏவு (வை)யோ?"என
மணிச்சுக லீலையும் வாய்ம லர்ந்தனள். 78

மொழிந்திடும் அவள்தன்வாய் மூடும் முன்னமே
பொழிந்தன கணைமழை; புரிந்துஅ மைக்கும்முன்
செழுங்கக னம்,புவி, திசையும், வாரியும்
ஒழுங்குற அடைத்தனன் ஒருமித்து ஒக்கவே. 79

வான்,புவி, திசை,கடல் மதித்துஅ டைத்து,பின்
தேன்திகழ் மாலையான் சேல்ம யங்கவே
மீன்திகழ் விழிச்சிதன் மீது வீசினான்;
கூன்சிலை அவளுமே கையில் கொண்டுபின், 80

ஒருசரம் கொடுதன்மேல் உற்ற வாளியின்
திரள்எலாம் அறுத்து,அறு செய்ய வாளியை
வருசரம் துணித்திட வழியில் வைத்தபின்,
விரவிய மலரணை மீது சாய்ந்தனள். 81

வெருக்கொளத் திசை,இரு வெளிஅ டைத்திடச்
செருக்கணை சொரிந்ததைச் சிறிது மேயொரு
பொருட்டென மதித்திலள்; புரிந்து, புன்னகைச்
செருக்கொடும் இருந்து,எதிர் செப்ப மேயினாள்; 82

"ஆச்சுதோ உன்றனால் ஆகும் வில்தொழில்?
போச்சுதோ உன்புஜ பலமும் போகுமே?
ஏய்ச்சுநீ திரிதொழில் என்முன் ஆகுமோ?
வாய்ச்சுதென்று எனைமணம் புரி;வல் லாளனே! 83

இச்சணம் சிலையின்நாண் இறக்கி லாவிடில்
பச்சணம் செயும்கரப் பாணம் உன்உயிர்;
அச்சுதன் சிலதனே! வதுவை யாற்றிடில்
நிச்சயம் அடிமையாய் நின்சொல் கேட்பன்யான். 84

---

78. குவலயம் - உலகம். 80. தேன் - வண்டு; கூன் சிலை - வளைந்த வில்.
84. கரப்பாணம் உன்உயிர பசசணம் செயும் என இயையும். என் கைக்கணை உன் உயிரைப பருகும் என்றவாறு

மன்னவா! எனக்குஉத வாத உன்உயிர்
என்னமாய் அழிந்துஉடல் இழக்கில் என்?ஐயா!
சின்னமே வருமுனம் செப்பும் என்மொழி
தன்னையே கேள்"எனத் தையல் ஒதினாள் 85

என்சிலை நாணையோ இறக்கு கென்றனை?
உன்சில தியர்உயிர் முழுதும் இறக்கும்முன்
நின்சினம் மழுக்குவேன்" என்று திவ்விய
வன்சரம் கொண்டுவில் வளைத்து வீசினான். 86

ஈதுகண்டு, "இனிச்சுமா இருப்பது அல்"என
வாதுடன் சருவத அஸ்த்ர காதியை
காதிலில் தூபதீ பங்கள் காட்டிய
போதிலே, அழற்கணை பொதிந்து வீசினான். 87

தனஞ்சயன் விடும்கணை சகம்விண் எங்கணும்
கனங்கொடு, புகைஎரி கதித்துக் காட்டியே,
வனம்கிரி நீறிட வடவை ஆம்என,
சினங்கொடு சென்றது சீறி மீறியே. 88

வன்னியா திபனொடு வடவை வேந்தனும்
துன்னியே படர்ந்தெனத் தொனித்துச் சென்றது;இக்
கன்னிகை [illegible]யினைக் கண்டுஒ டுங்கியே,
மின்னுதேர் வலங்கொடு தொழுது மீண்டதே. 89

மருத்துவெங் கணை,சல வருணன் வெங்கணை,
இருட்கணை, அகிக்கணை, இடிக்கொ டுங்கணை,
உரக்கரு டக்கணை, நந்தி ஒண்கணை,
முருக்குவச் சீரன்கணை முழுதும் விட்டனன். 90

விட்டஅக் கணைஎலாம் விண்ணும் மண்ணுமே
தட்டழிந் திடச்சென்று, தான்வ லம்செய்து

---

85. சின்னம் - சிறுமை

87. (சுகலீலை) கண்டு, அல்என, காட்டியபோதிலே (அருச்சுனன்) வீசினான் என்க இரண்டும் தோன்றா எழுவாயகள்.

89. வன்னியாதிபன் - அக்கினிதேவன். 90. அகிக்கணை - நாகாத்திரம்.

கட்டுடன் மீண்டிட, கனன்றுஅ ருச்சுனன்
தொட்டனன் நான்முகன் தொடையை வில்லிலே. 91

ஆங்கவள் சினம்கொடு அஸ்த்ர காதியைத்
தாங்கிய வில்லினில் தரித்த போதினில்
ஏங்கிஇந் திரன்,பல ரிடிகள், தேவர்கள்
பாங்கில்வந் துற்றனர் பாண்டும் ஒக்கவே. 92

"நான்முகன் கணை,அரி நாம வெங்கணை,
மான்மழு வாளிவை வாளி தானுமே
தேன்மொழி யாள்தனைச் செயிப்பது இல்லை;அம்
மான்மறக் கணைதனை மதிப்பது ஒன்றிலை. 93

அய்யனே! அரிஅரன் பிரமன் ஆகுமே
தையலைச் செயிப்பதுஇல்; தனஞ்ச யாதிபா!
மெய்யனே! அபசெயம் மேவும் முன்னமே,
பையநாண் இறக்கு"எனப் பரிவில் ஓதினார். 94

விரவிய சக்கர வர்த்தி ஆகிய
உரவர்கள் அறுவரும் உபச ரித்து,ஐய!
பொருதொழில் வலன்எலாம் போக்க வோஇவள்
அருகில்வில் எடுத்தனை? அமர்து றந்திடாய்;" 95

என்றனர் திகிரிமன் னவர்விண் ணோர்களும்
பின்றை,வச் ராயுதன் பெரிதுஇ ரங்கியே,
"இன்றுஒழி செரு"என எய்து பாண்டுவும்,
"நன்றுஅல செரு"என நடுங்கி ஓதினான். 96

"வானவர், மாதுரு, தந்தை வாக்கியம்
ஏனைநாம் மறுக்கரிது" என்றுஇ ணங்கியும்,
கான்எரி படர்ந்தெனக் கண்கள் செந்தழல்
சோனைபோல் பொழிந்து,அமர் துறந்தது இல்லையால். 97

---

91. கனன்று - சினங்கொண்டு, நான்முகன் தொடை - பிரமாத்திரம்.
92. பாண்டு - அருச்சுனன் தந்தை
93. அரி நாம வெங்கணை - நாராயணாத்திரம்; மான் மழுவாளி - சிவபிரான், வை வாளி - கூரிய அம்பு, இது பாசுபதம், மதிப்பது - நிகர்ப்பது.
95. சக்கரவர்த்திகள் அறுவர் - அரிச்சந்திரன், நளன், முசுகுந்தன், புருகுற்சன், புரூரவன், கார்த்தவீரியன். 97. மாதுரு - தாய்.

பூசல்கண் காட்டவும், பொருவி லாஇரு
மீசைகள் படபட படென வீசவும்;
வாசவன் முதலினோர் மாது பாலினில்
ஆசறு மொழிபல அறைவ தாகினார். 98

"கன்னிநீ; அவன்விறல் காளை போரினில்;
தன்னிலை தவறிடான் தானும் உன்னைநேர்;
அந்நிலை சருவத அஸ்த்ர காதியும்
மன்னிய தூணியில் வைகு; மான்அனாய்! 99

நீங்கரும் தவத்தினாய்! நினது கொங்கையில்
ஆங்குஅவன் புணர்விதி அழகது ஆதலால்
நாங்கள்அக் கணைஅவன் நயனம் காணறப்
பாங்குடன் மறைத்தனம்; பதுமை யேஅனாய்! 100

கிருடிஉன் ஆளனாய்க் கிடைக்க வேண்டி,நின்
தறுகண்நாண் இறக்கியே, தலத்தின் ஏகியே,
பரவிய மாலையைப் பார்த்தன் வாகுவில்
விரைவினில் புனை"கென வேவி ளம்பினார். 101

சொன்மொழி அமுதுஎனக் காதில் தோன்றும்முன்,
நன்மக வான்றனை நயந்துஇ றைஞ்சியே,
கன்மனம் உருக்கிய கனிந்த சொல்லினாள்
தன்மணிச் சிலையின்நாண் தான்இ றக்கியே, 102

பஞ்சரித்து உபசரிப் பான பன்மொழி
கொஞ்சிய கிளிஎனக் குழலி யாழ்எனக்
கெஞ்சியே இருகரம் குவித்து, "கேள்வ!'நின்
தஞ்சமது; உன்திருத் தாள்தந்து ஆள்;ஐயா! 103

வீரவீ ரியற்குஎலாம் வீரன் நின்னுடன்
போர்எதிர்த் திடும்பெரும் பிழைபொ றுத்திடு;உன்

---

98. மாது பாலினில் - சுசுவீலையிடம்.

99. உன்னைநேர் தானும் தன்னிலை தவறிடான் என்க. நின்னையொத்தே அவனும் உறுதியுடையான் என்றவாறு

100. அக்கணை என்றது சருவத அஸ்த்ர காதியை; நயனம் காணற - கண் காணாதபடி.

101. வாகு - புயம். 103. பஞ்சரித்து - மழலை மொழியால் கெஞ்சிக் கேட்டல்.

வாரமே வாரம்;நின் வலுவ தேவலு;
ஈரமோடு என்றனை இரங்கி ஆள்;ஐயா! 104

என்றனள்; இழிந்தனள்; எண்ணில் மாதர்கள்
பின்தொடர்ந்து அவளுடன் பேணிச் செல்லவே,
மன்றல்கொண்டு, எழுதரம் வலம தாகவந்து,
அன்றுஇரும் புயத்தினில் அலங்கல் சூட்டியே, 105

பொன்மலர், இரசதம், புட்ப மாரியாய்க்
கன்னியர் சொரிந்திடக் காலில் வீழ்ந்து,அவள்
தன்இரு கரம்கொடு தலைவன் கைப்பிடித்து,
"என்அரும் பிழைபொறு"என்று இரங்கிக் கூறினாள். 106

வான்அச ரீரியும், "மைந்த! அங்குஅவள்
தான்அவா தீர்த்திடு தயவோடு" என்றலும்
மானமன் னவன்மனம் மகிழ்ந்துஇ ணங்க,வான்
மீன்அனார் சோபனம் மேலும் கூறினார். 107

இரதம்விட்டு இறங்கிய இயல்வில் லாளனை
அரிவையர்க்கு அரசிமீண்டு அடிவ ணங்கியே,
கருதுமன் னவர்க்குஎலாம் கைமு கித்தபின்,
கிருடிபால் ரதமிசை கிட்டி ஏறியே; 108

அவரவர் ஊர்திமேல் யாரும் மேவியே,
உவகையாய் மதனமண் டலத்துக்கு ஒக்கவே,
"எவர்களும் வா"என இசைத்த அக்கணம்
பவிசுடன் அவரவர் பயணம் ஆகினார். 109

(வேறு)

பரி,கரி, தேர், வையம்,மாப் பாண்டிலின் மீதினிலும்
உரவரும் மாதரும்வந் துற்று,அரண் ஏக,விண்ணோர்

---

104. வாரம் - உரிமை, ஈரம் - அன்பு.
105. மன்றல் - தெரு. இங்கு நடந்துவந்து என நின்றது; அன்று - அப்போது என்பது கருத்து; அலங்கல - மாலை.
107. சோபனம் - மங்கல வாழ்த்து. 108. பவிசு - பெருமை.

விரவிய புட்பமழை மெய்ம்மை யுடன்சொரியத்
துரமுறும் ஒண்தேவ துந்துபி ஆர்த்தனரே. 110

பஞ்ச கருவிஒலி பண்புட னேஆர்க்க,
மஞ்சைத் தொடும்புரிசை வாயில்கள் புக்கதன்பின்,
அஞ்சொல் சுகலீலை யாள்உத் தரவுசெய்ய,
வஞ்சிய ருக்குஇசையும் மாப்பிள்ளை பற்றினரே. 111

பற்றியு மேஅவர்கள் பண்புடன் அஞ்சுஇரவு
நத்தியு மேசேர்ந்தார் நாரியு டன்நரரும்;
முற்றிய வள்ளியுடன் முருகன்என் (அத்)தரமே
சுற்றமு டன்கலவித் தொழிலில்மு யங்கினரே. 112

இரதியும் மதனும்நிகர் இரவுஐந் தாகஇருந்து
உரவனை யேநோக்கி, உரிமையு மேசொலுவாள்-
"அரசனே! இன்றுமுதல் ஆள்நீர் ஆகையில்நின்
உரைவழி யேகேட்பேன் உறுதியு டன்தானே. 113

வாரும்;என் நிலைமைபெறும் வாழ்வுறு பொக்கிஷம்நீர்
பாரும்;"எ னக்கனகப் பலஅறை எங்கணுமே
ஏருறு திரவியமும் இரத்தினா திகள்பலவும்
போர்என உற்றஅவை பூபனும் நோக்கினனே. 114

"இந்நகர், மணி,கனகம், யாவும்நி னக்குஅடிமை;"
என்ன,"இந் நவமான இரத்தினா திகளுடனே
உன்னையு மேஅத்தி னாபுரி கொண்டுறுவேன்;
இந்நக ருக்குஒருவன் இறைஎன வைத்திடுநீ" 115

"எண்ணிலா மாதர்களை இசைவுறும் வீரர்களுக்கு
அண்ணலே! வேட்டும்"என அருளினன் வீரியனும்
"திண்ணம்என் சயனநா யகியள்எத் தேசமுமே
அண்ணிஅ டக்குதிற லாள்விலாண் மையினால் 116

---

110. வையம் - சிவிகை, மாப்பாண்டில் - பெரிய வண்டி.

113. உரிமை - மனைவி, சுகலீலை, ஆள் - கணவன்.

114. பலகனக அறை என மாறுக, போர் என - வைக்கோற்போரைப் போல, பூபன் - மன்னன், அருச்சுனன்.

116. வில்லாண்மையினால் எத்தேசமுமே அண்ணி அடக்கு திறலாள் என இயையும்.

அன்னவள் தனைநம்மோடு அடைந்திடி லேமிகுதி;
சின்னம்நு மக்கும்அதால்; திறலுறும் வீரியனே!
எந்நகர் முழுதும்உமக்கு எய்திடும் வெற்றி;இனி
நின்நகர் உரிமையதாய் நிமிஷமது எய்துவளே! 117

(வேறு)

அருளுக விடை"என அவளும் தோழியும்
இருசரண் அடிதொழுது இரந்து வேண்டவே,
குரவனும் ஏழ்அக்கு ரோணி சேனையும்
தெரிவையர் திரளையும் சேர ஏவினான். 118

நல்நவ ரத்தின ராசி நால்வகைப்
பொன்னையும், மற்றுள பொருள்கள் யாவையும்
உன்னி,அத் திரி,இபம் உள்ள சேனையும்
துன்னிய சுமைகொடு சூழ்ந்து செல்லவே, 119

தருசுக லீலையும் சயன நாயகி
இருவர்கள் ஒழியமற்று எவரும், மாத்திரள்
திரவியச் சுமைகொடு செறிந்து சூழவே,
பொருவிலா அத்தின புரியை நண்ணினார். 120

நண்ணியே, கங்கைநல் நதியில் ஆடியே
புண்ணியன் குமரனைப் புகழ்ந்துஇ றைஞ்சியே,
வண்ணமா மகளை,வீ மன்னை, குந்தியைப்
பண்ணமர் மொழியினாள் பணிந்துஇ றைஞ்சியே, 121

அறன்மகன் திருமுனர் அமர்ந்து நின்றனள்;
பொறையன்முன் அவசர காரர் போற்றியே,
"இறைவ!இங்கு இவள்சமர்க்கு ஈடுஒன்று இல்"என
விறல்வர லாறுஎலாம் விரித்துக் கூறினார். 122

---

117. மிகுதி - சிறப்பு, சின்னம் - வெற்றிச் சின்னம், நுமக்கும் அது சின்னம், ஆல் - அசை, உரிமையதாய் - எனக்குத் தோழி என்னும் உரிமையுடன்.

118. அருளுக விடை எனினும் கூட வருவதற்கு அநுமதி தருக என்பதே பொருள்

119. நால்வகைப்பொன் - ஆடகம், கிளிச்சிறை, சாதரூபம், சாம்பூநதம் என்பன. அத்திரி - கோவேறு கழுதை. 120. மாத்திரள் - விலங்கினங்கள்.

121. புண்ணியன் குமரன் - தரும புத்திரன்; வண்ணமாமகள் - சுரந்துறை காலத்தில் சைரந்தரி என்னும் பெயரில் வண்ணமகளாக இருந்த திரௌபதி.

ஒற்றர்கள் உரைத்தவை உரவன் கேட்டு,உவந்து,
உத்தமன் பார்த்தனுக்கு உறுவது ஆகிய
தத்துஒழிந் ததுஅரி தருமம் என்று,எழில்
சித்திர மயிற்குஉறு திருட்டி நீக்கியே, 123

வன்சிறப் பாய்வெகு மதியும் ஈந்து,உறு
நன்சசி முகத்தியை நயந்து வாழ்த்தியே
மின்சிறப் பாகிய விடுதி ஈந்தபின்
தன்சரிப் போகவே தான்உ றைந்தனன். 124

தருமபூ பதிமகிழ்ந்து அருள்நி லத்தினில்
கருமுகிற் குழலியர்க்கு அரசி வைகியே,
அரமனை வருந்து,உறைந்து, அதனில் வாழ்ந்தனள்.
கிருடிதன் முயற்சியைக் கிளத்து வாம்அரோ. 125

மதனமண் டலம்எனும் வளமை மாநகர்
அதனையே அமிர்தனுக்கு அருளி னான்என
இதைமுனி அருள்செய, "இரைந்த ஆடவர்
சதுருடன் இன்றியே சனிப்பும் உண்டுகொல்? 126

எவ்விதம் மாதர்கள் சனித்தது?" என்றுமன்
செவ்வியன் வினவவும் முனிவன் செப்புவான்-
"மவ்வல்அங் குழலியர் மகிழ்ந்துஎத் திக்குமே
நவ்விய புருடர்கள் நணுகில் வவ்வியே. 127

எண்ணில்ஆ யிரவர்கள் குமரர் சேர்ந்தபின்
அண்ணல்ஆ யிரர்க்குப்பெண் ஆயி ரங்கள்தான்
மண்ணினில் பங்கொடு மருவி வாழ்குவர்
ஒண்ணுத லார்கள்ஒவ் வொருவர் ஆகவே. 128

தொடர்புஒழி யாவிதம், தோகை மாதர்கள்
அடுதொழில் புணர்ச்சியில் அமைவர் அங்குஅவன்
மடியும்அவ் வளவும்;அம் மாதர் கர்ப்பமும்
திடமுடன் எண்ணலால் செனிப்பது ஆண்இலை. 129

---

122. அமாந்து - அடங்கி, அமர்ந்து நின்றனள் அழகிய முரண்தொடை, பொறையன் - பொறுமை மிக்க தருமன்; 123. தத்து - அபாயம், திருட்டி நீக்கி - கணவோறு கழித்து.

124. சசிமுகத்தி - மதிமுகத்தாள், தன் சரி - தனக்குரிய வழியில், அந்தப்புரத்தின்பக்கம் என்க.

126. சதுருடன் - திறமையுடன், சிறப்புடன் என்க, சனிப்பு - பிறப்பு; "ஆடவரே இன்றிச் சனிப்பும் உண்டோ? மாதர்கள் மட்டும பிறந்தது எப்படி?" என்பது செனமேசயனின் வினா.

127. நவ்விய - புதிய.

129. தொடர்பு ஒழியா விதம் - விடாமல்; அவண்மடியும் அவ்வளவும் தொடர்பு ஒழியாவிதம் புணர்ச்சியில் அமைவர் என்க; ஆண் செனிப்பது இலை என இயையும்.

சினைப்படா மாதரைச் சேர அங்கவன்-
றனைச்சுடும் போதினில் தகனம் செய்குவார்;
தனித்தவர் மின்எனத் தனயை ஈனுவர்;
முனித்தொழில் பயிற்சியில் முயல்வர் நாளுமே. 130

என்றுஅரு முனிசொல இறைவன், "நன்றுஐயா!
வென்றிமேல் நடந்தவை விளம்பும்" என்றலும்,
"அன்றுஅந் நகர்துறந்து அனிக ராசியும்,
நன்றிய மன்னரும் நடந்த மன்னனே! 131

கனநவ ரத்தினக் கவிகை நீழலில்
மனகதப் பரிசெல, மதிப்புஇ லாவிருது
இனம்மிகும் அனந்தமே எங்கும் போதர,
அனிகம்வெம் புணரிபோல் ஆக ஏகின. 132

(வேறு)

மண்அ திர்ந்திட, மண்ணுலகு உள்ளதூள்
விண்நி றைந்திட, வெற்புநெ ரிந்திட,
நண்ணு வில்லியை நால்வகைச் சேனையும்
வண்ண வெங்கடல் போல்வளைந்து ஏகவே, 133

திக்க யங்கள்தி யங்கிந டுங்கிட,
தக்க எண்கிரி தானும்அ லைந்திட,
மிக்க நாகங்கள் மிஞ்சிய நஞ்சுகள்
கக்க, வாரிதிக் ககனங்கள் சென்றதே. 134

செகம்ந டுங்கின; திக்குந டுங்கின;
நகர்ந டுங்கின; நாகம்ந டுங்கின;
மகரம் உந்திய சிந்துவ றந்தன;
ககன வெங்கடல் சென்றக டுப்பினால் 135

வான்அ திர்ந்தன; வானவர் அஞ்சினர்;
மீன்உ திர்ந்தன; மேரும்அ திர்ந்தன;

---

130. சினைபபடா - கருப்பமுறாத; தனித்தவர் - கணவன் (புணர்ச்சியில்) இறந்துவிட்டதால் தனிமைப்பட்ட மகளிர், தனயை - மகள்; முனித்தொழில் - தவம்.
131. அருமுனி - வைசம்பாயனன். 132. மன சுத - மனோவேகமுள்ள.
134. வாரிதி - கடல்; ககனம் - படை; வாரிதிக்ககனம் - உவமைத்தொகை.
135. நாகம் - மலை, மகரம் - முதலை; சிந்து - கடல்; சுதனவெங்கடல் - உருவகம்; கடுப்பு - வேகம்.

கான கம்துகள் கொண்டு கழிந்தன;
சேனை யின்கடல் சென்றஅ திர்ச்சியால். 136

குடைக ளோடு குடைகள்நெ ருங்கின;
படைக ளோடு படைகள்நெ ருங்கின;
முடிக ளோடு முடிகள்நெ ருங்கின;
கொடியி னோடு கொடிகள்நெ ருங்கின; 137

கரிக ளோடு கரிகள் நெருங்கின;
பரிக ளோடு பரிகள் நெருங்கின;
அரிக ளோடு(ம்) அரிகள் நெருங்கின;
நரர்க ளோடு நரர்கள் நெருங்கின(ர்) . 138

சாக ரங்கள் தடம்புரள் கின்றன;
சேக ரங்கொடு சேனைதொ டர்ந்திட
வேகம் மிஞ்சிய வெம்பரி அம்புஎன
ஏகு கின்றதென் மேல்திசை யின்கணே. 139

வெற்றி வேத வியாசர் உரைப்படி,
சற்று மேஅதில் தாழ்ச்சிவ ராமலே,
கொற்ற மாவின் குளப்படி ஓமமும்,
மற்றுண் டான வகையும்,செய்து, ஏகினார். 140

வில்லி கூர்ந்திட, வேந்தரும் கூர்ந்திட,
செல்லும் சேனையும் சிந்தைம கிழ்ச்சியாய்க்
கல்லும் கானமும் கடந்துஅயல் ஏகினார்;
மல்லல் மாஅநு மானித்துச் சென்றதே. 141

வாழி! மன்னவ னேஇந்த வாறதாய்
ஏழு நாள்சென்றது" என்ன,ம காமுனி
ஆழி வாய்அமு தாய்ச்செவி ஆர்ந்தசீர்
சூழு மன்ன(ன்)து ரந்தரன் துதித்தனன். 142

மதனமண்டலச் சருக்கம் முற்றிற்று
ஆகச்சருக்கம் 13 க்கு விருத்தம் 1920

---

138 அரி - தேர்.

139. வெம்பரி சேனை தொடர்ந்திட தென்மேல் திசையின்கண் ஏகுகின்ற என்க.

142. மகாமுனி (வைசம்பாயனன்)"ஏழு நாள் சென்றது" என்ன அமுதாய்ச் செவியார்ந்த துரந்தரன் (சனமேசயன் முனிவனைத்) துதிதனன் என்பது பொருள் முடி பு.

14. மிருக,வெகுமுக தேசச் சருக்கம்

(கலிவிருத்தம்)

ஆயனை. நேயனை, அரிய பூங்குழல்
வாயனை, மாயனை, மலர்ந்த பூவையும்
காயனை, தூயனை கருணைத் தேவகி
சேயனை, தாயனைச் சிந்தை செய்குவாம். 1

மன்னர்கோன் வைசம் பாயன மாமுனி
தன்னையே தோத்திரம் தான்மி கச்செய்து.
"கன்னபா கம்குளிர் காட்சி யாம்கதை
இன்னம்மேற் சொலும்"என இசைந்து கேட்டனன். 2

"தெரிவுறு மதனமண் டலத்தின் செய்கையும்,
விரிவுறு சமரையும், வேட்ட வாற்றையும்,
சரியிடை ஏழுநாள் தான்ந டந்ததும்
உரைசெய்தோம்; கேள்;இனி மேல்உ ரைக்கவே. 3

ஏகியது இடைவிடாது ஏழு நாள்நெறி;
போகிய நிருதிஅம் புனிதம் ஆம்திசை;
வாகுஉறும் மிருகதே சத்தில் மாசெலச்
சேகரத் தளங்களும் செறிந்து சென்றவே. 4

திரைப்பெருக்கு எனத்தளம் செறிந்து பின்செல,
மருத்துஎன மிருகதே சத்தில் மாசெல,
கருதுஒரு கால்,எழு கால்,முக் கால்,ஐங்கால்
இருப்பவர் எய்தினார் வாலும் ஈதுபோல்; 5

ஓமஎக் கியங்களோடு உயர்சிங் காரமாய்
வாமவெம் பரிசெல, வாரி நேர்தளம்
சேமமாய்ச் சூழ்வர, செல்(ை)ல நேர்ஒலி
ஏமமாம் பஞ்சவாச் சியம்மு ழங்கவே, 6

அத்தலந் தனில்உளோர் இதனைக் காண்டலும்,
உற்றகை கால்களை விரைத்து,உ யிர்ப்பெறிந்து,

---

1. பூவை - காயாமலர்; காயனை - திருமேனியரை,
2. கன்னபாகம் - செவி, குளிர் -மகிழும, காடசி - இங்குக் கேள்வி, கேள்வியே தத்ரூபமான காட்சியாகத் தோற்றுகிறது என்பது குறிப்பு.
3. சரியிடை - வழியில், இனிமேல் உரைக்கக் கேள்; சுற்றேகாரம் அசை.
5. மாசெல ஒருகால் .... ஐங்கால், வாலும் ஈதுபோல் இருப்பவர் எய்தினா என்பது முடிவு.
6. செல்லை - மேகத்தை.

எற்றுஅடிக் கடிவெதிர்த்து, எதிர்ந்து பார்க்கையால்
மற்றவெஞ் சேனைகள் மருண்டு போகவே,

பெருந்தளத் தொனிகளால் பேதித்து, அங்குஅவண்
இருந்துள விகற்பமா மனுஷர் எஞ்சியே,
வருந்தியும் நடுங்கிட, மாவின் தேசம்விட்டு
அருந்திறல் பரியும்அப் பால்ந டந்ததே.

கந்துகம் இரண்டுயோ சனைக டுப்பொடு
முந்திட, வெகுமுக தேசம் ஒன்றுஎதிர்
வந்ததே; அதில்உள மனுஷர் மாமுகர்;
சிந்துர முகம்,முசு முகமும், சிற்சிலர்.

அரிமுகம்; புலிமுகம்; யாளி தன்முகம்;
பரிமுகம்; மான்முகம்; பன்றி மாமுகம்;
விரிமுத லையின்முகம்; வேங்கை மாமுகம்;
நரிமுகம்; கர்த்தபம் நாய்ஓ நாய்முகம்.

மற்றுள மிருகசா திகள்மு கங்களாய்ப்
பெற்றுள மானிடப் பிறப்பி னோர்கள்வந்து
உற்றுறப் பார்த்துஅதி சயித்து. யோசித்துப்
பற்றுகண் அடிக்கடி இமைத்துப் பார்த்தபின்,

விம்மிதத்து அடிக்கடி வெருளப் பார்ப்பதும்,
சம்மதித்து அடிக்கடி தலைஅ சைப்பதும்,
பம்மியே வெறிப்பதும், அதிர்ந்து பாய்வதும்,
செம்மையாய் விழுங்கல்போல் திரண்டுஎ திர்ப்பதும்,

சேல்என, மறிஎனத் திரண்டு பாய்வதும்
ஓலம்இட்டு உறமுழங் குவதும், பாசையால்
ஆலம்ஒத்து உவரிநேர் அடுத்து மூசலால்
சாலவும் பயந்தன தளங்கள் யாவுமே.

என்செய்வோம் எனமருண்டு, இதயம் தேறியே,
முன்செறி பஞ்சவாச் சியம்மு ழக்கலால்,
நன்சது ரங்கரா சியின்மு ழக்கினால்,
வென்செய்து மயலுற வெருண்டு நோக்குமே.

---

7. எற்று - உதைத்துக் கொணடு. வெதிர்த்து - நடுங்கி. 8. மாவின் தேசம் - மிருகதேசம்.
9. மா முகா - விலங்குகளின் முகத்தை உடையவா, சிந்துரம் - யானை, முசு - குரங்கு;
10. அரி - சிங்கம; கர்த்தபம் - கழுதை.
13. மறி - ஆட்டுக்குட்டி., உவரி நேர் ஆலம - சுடலில் தோன்றிய நஞ்சு.
14. வென்செய்து - புறமுதுகிடடு.

பற்குணன் பார்த்து,உயர் பார மேருவெனும்
விற்குணத் தொனிசெயும் வெம்மை ஓதையில்
தற்குண நிலைகளும் தயங்கி மங்கியே,
பற்சருகு எனத்திசை திசைப ரந்ததே. 15

சண்டமா ருதத்துஎதிர் தாவு பஞ்சுஎன
எண்டிசா முகங்களும் இரிந்துஅ லைந்தன;
அண்டர்கோன் மகன்துச அமிர்தன் தன்முகம்
தண்டியே நோக்கியே தான்உ சாவினான். 16

"என்னகா ரணம்இது?என் மிருகம்?" என்றலும்,
"மன்னர்கே சரிஎனும் மகிப னே!இது
தென்னுறு வெகுமுக தேசம்; இங்குளார்
மன்னிய விலங்குஅலர்; மாக்கள் ஆம்;ஐயா! 17

வதனபே தகம்அலால் மனிதர் ஆம்;உடல்
அதனம்ஆம்; பாசைவேறு அவர்க்குஎன்று ஓதினான்.
"இதுஎனஅற் புதம்!"என இவுளி பின்னுடன்
நிதனவெம் சேனையும் நெருங்கிச் சென்றதே. 18

அகம்மகிழ் விருதுஅலங் காரத் தோடு,முச்
சகமவை நடுங்கிடத் தானை சென்றிட,
தகுதனஞ் சயனுடன் சகல வேந்தரும்
நகுமுக மலர்ச்சியாய் நடந்து சென்றனர். 19

மன்னிய மதனமண் டலத்தின் வாற்றையும்
பொன்னுறு மிருகதே சத்தின் பொற்பையும்
தென்னுறு வெகுமுக தேச வாற்றையும்
சொன்னம்என் றேமுனி தொகுத்து. கோவுடன் 20

முக்கனி சீனிதேன் பாலும் ஒன்றுசெய்து
இக்கஉண் புதுஎனச் செவிக்குஇ சைத்திட,
தக்கதாய்ச் சொன்மொழிச் சாரம் கேட்டுஅவன்
மிக்கமா முனிவனால் மெய்கு ளிர்ந்தனன். 21

மிருக,வெகுமுக தேசச் சருக்கம் முற்றிற்று
ஆகச் சருக்கம் 14 க்கு விருத்தம் 1941

---

16. அண்டாகோன் மகன் - இந்திரன்மகன், அருச்சுனன்; துசஅமிர்தன் - அமிர்தத்துசன்.
18. வதன பேதகம் - முக மாற்றம்; அதனம் - மிகுதி இங்குப் பெரியவை; நிதனம் - பலைவருக்கு அழிவைத் தருகின்ற.
20. சொன்னம - பொன, முனி - வைசம்பாயனன், கோ - சனமேசயன்.
21 இக்க - குழைத்து

15. பப்பரவாகனன் போர்ச் சருக்கம்

(கலிவிருத்தம்)

கரம்,கண், நாபி,அம் கால்களும், மார்பமும்
பரம்செய் தாமரை பூத்தருள் பார்த்தவன்
தரங்கத்து ஆலினும் சர்ப்பமெய்க் கோலினும்
அரன்கரு தும்துயில் கொள்வோன் ஆள்கவே. 1

ஆதிபன் வைசம் பரயன மாமுனி
ஓதும் காதை உசாவி, உளம்குளிர்ந்து.
"ஏது மேற்கதை? என்செவி கூரவே
சாது வாம்பரி சேர்தலம் சாற்று"என்றான். 2

என்ன மாமுனி ஏந்தலை நோக்கியே,
"மன்ன வா!குரு வங்கிச வீர!கேள்;
மின்னல் என்ன வெகுமுக தேசம்நீத்து,
உன்னி ஏகியது ஊதையின் மிக்கதாய். 3

நிருதி மூலையை நேர்பட ஏகும்நேர்,
பரிதி வான்மதி பார்த்து,அருண் டே,அயல்
வெருவி ஓடும் வியன்மணிக் கோபுரத்
திரள்கள் நோக்கில் தெரிந்தது எவர்க்குமே. 4

"இந்த மாநகர் எந்நகர்? இந்நக-
ரம்தனக்கு அரசு யார்பெயர் யாது?"எனச்
சந்த மால்அமிர் தத்துவ சன்றனை
அந்த மாம்அநு மத்துசன் கேட்டனன். 5

---

1. பரம் செய் - மேன்மையான; தரங்கத்து - அலைகளில், கடலில், ஆல் - ஆலிலை; சர்ப்பமெய்க் கோல - பாம்பின் உடலாலாகிய தெப்பம், சேஷசயனம் பாற்கடலில் மிதப்பதால் தெப்பம் என்றார் அரன் கருதும் - சிவபெருமானால் போற்றப்படும்.
2. ஆதிபன - அரசன், சனமேசயன், சாதுவாம் என்பது இங்கு மேன்மையான என்றே பொருள்தரும், அடக்கமான என்பதன்று.
3. ஊதை - புயல். 4. நோக்கில் - கண்களில்.
5. அநுமத்துசன் - அருச்சுனன்.

(அறுசீர் வண்ண விருத்தம்)

(தனதன தனதன தனதனனா)

"கனமழை சொரிதுளி தனின்மிகவே
கணைமழை சொரிதடி மிடல்உடையாய்!
பனகம னவன்நகர், அளகை,விணோர்
பதி,நிசி சரர்பதி, பலநகரோ
தனிமணி விலைபெறல் அரிது;உயர்வாள்
தருகதிர் மணிபல விளைவதனால்,
இனியஇ நகர்மணி நகர்எனவே
இயல்புடன் எவர்களும் (புக)லுவரே. 6

வரகுக வலை,அரி தினைகடலை
வரைபய றதன்வகை முதிரைநம்ஊர்
அருகுற விளைகுவது என,நிலம்மேல்
அநுதினம் நவமணி விளைகுவதால்,
உறுமணி நகர்இது; மனைகள்எலாம்
உயர்மணி சுடர்என ஒளிவிடுமால்;
இரணியம் இரசத மயமதுவாய்,
எழுவிதம் வளைவுறும் எயில்ஒயிலாய். 7

(அறுசீர் விருத்தம்)

சண்டன்உ லவுகதிர் மண்டலமது
அளவும்அது எழுவிதம் வளைபுரிசை
விண்டல முகடுஅக டும்தடவும்;
இரணிய சிகரமது அளவில்வரம்;
குண்டலி மணிமுதல் ஒன்பதுவும்
குலவுசி கரிமிசை வெயில்விடும்;மூது
அண்டர்கள் புவிமிசை பதம்பரவார்
அவரும்இந் நகரினை வெருவியதால். 8

---

6. தடி -வில்; மிடல் - வலிமை; பனக மனவன் நகர - பாம்பரசனின் உலகம், நிசிசரர்பதி - அசுரர்களின் ஊர், சிறபபாக இலங்கையைக் குறிக்கும், தனிமணி - இவவூரிலுள்ள ஒற்றை மணி, வாள் - ஒளி.

7 கவலை - செநதினை; அரி - நெல்; வரை - துவரை என்பதன் முதறகுறை; முதிரை - அவரை, இரணியம் - பொன்; இரசதம் - வெள்ளி, ஏழுமதில்கள் என்பது கருத்து.

8. சண்டன் - சூரியன்; புரிசை - மதில், குண்டலிமணி - நாகமாணிக்கம்.

செங்கதிர் மதிநகர் இலகி,எம
திசைவட திசைவெளி படர்வதனால்
எங்கணும் நிழல்மறு குவதுகொலோ?
இமைக்கிலர் இமையவர் வெருவியதோ?
அங்கதன் எழில்விழி கவர்வதுவோ?
அழகினில் அமடுறும் சலதிகொலோ?
சங்கரன் அரிமலை கடல்புகுதும்
தவறும்அத் தனிநகர் தனைஒல்கியோ? 9

மஞ்சுஉறும் அரியினில் வெருவியதோ?
மதில்வழி விலகிய அயர்வுகொலோ
அஞ்சுபன் னிருகதிர் மதிகள்தொறும்
அவதியின் முறைமுறை சுரம்உறுதல்?
பிஞ்சுஇள மதிவளர் வொடுதளர்வே
பெறுகுவது அரிவையர் முகமதுஒவாது
எஞ்சிய வகைகொல்?இ எயில்சுதையால்
இலகிய நகையினில் மெலிதல்கொலோ? 10

வடவரை நிகரிய சிகரமும்நீள்
மதில்முழுது உலவிய கொடிகளினால்
அடிபடி மதிவடு வுறும்;நெடுவான்-
அகநதி அலைஒளிர் அநதியின்நீர்
புடவியி னிடைசொரி தருபுனல்ஆர்
புயல்சொரி மழைகளும் உணர்வரிதாய்
சடசட சடெனஅது அடிபடும்ஒ
தையும்உறும் ஒதையும் உணர்வரிதே. 11

(தத்தன தானன தத்ததனா)

சித்திர கூடம்,மு கப்புஅறை,ஆ-
தித்தன்அ டர்சிக ரத்திரள்,சார்
சத்திர சாலை,தெ ருக்கள், விசா-
லத்துஇ ராஜச வுக்கை,எலாம்

---

9. செங்கதிர் - சூரியன்; எமதிசை - தெறகு; அமடுறுதல் - மடிப்பு பெறுதல்; சலதி - கடல்; மலை, கடல - நிரல்நிரை.

10. மஞ்சு - மேகம்; அரி - ஒளி; பன்னிருகதிர் - துவாதச ஆதித்தர்; மதி - மாதம்; அவதி - முறை; சுரம் உறுதல் - வழிச்செல்லல்.

நித்யகல் யாணம்மு ழக்க,மகா
ரத்தின தோரண விர்த்தியுறும்
முத்தமிழ் வாணர்இ சைக்குரல்கா-
முற்றிடு மேகுயில் அற்புதமாய். 12

துப்பு,வி லாசம்,ம தப்புஉடையான்;
சுப்பிர தீபம தற்கும்வலான்;
இப்புவி ஆள்விமி தத்திருஓர்
எட்டையு மேயடி மைகொளுவோன்;
பப்பர வாகனன்; முப்பரமே
பற்பமது ஆகள ரித்தவன்;வாய்
தப்பதுஇ லாதசு பத்தி;மகா
சத்துவன் ஆனஅ மைச்சன்;ஐயா! 13

அத்திர வீரன்ம திக்கரிதாய்
அத்திசை யாவும்அ டக்குவனேல்
சத்துரு வாகள திர்க்கவலார்
சற்றிலை மூவுல கத்திலுமே;
இத்தகை வீரன்அ மத்திகனேல்
இத்தரை ஆள்பவ னுக்குஇணையார்?
தத்திய மாஇர தத்தின்மகா
சத்துவம் யாரும்வ குக்கரிதே. 14

(தனதன தனதன தனனதனா)

விடைநட மிடுசடை முடியுடையான்
மிடலொடு தொடுவிட மொடு,தடியோ?
கிடுகிடு கிடுகிடுஅது எனும்இடியோ?
கிளர்நெடு வடவைவவல் உலவைகொலோ?
உடுமயி டமும்நட மிடுதெய்வமோ?
உமையவள் பதிகரம் உறுபரசோ?
இடமொடு தொடுபடை தொடையதுதூ-
ணியினிடை அவனிடம் மருவுவதே - 15

---

12. சத்திரம் சாரா சாலை என்க; இராஜ சவுக்கை - இராசவீதிகள் கூடுமிடம், பெரிய சதுக்கம் எனினுமாம்.

13. துப்பு - அறிவு; விலாசம் - அழகு, மதபபு - பெருநதன்மை, சுப்பிரதீபம் - திசையானைகளுள் ஒன்று, வடகிழக்குத்திசைசுகு உரியது, விமித - வியப்பிற்குரிய, அட்டலசகுமிகள்.

14. அமத்திகன் - அமைச்சன்; மகா - பெருமைக்குரிய; சத்துவம - இயல்பு.

15. உடு - ஆடு; உடு நடமிடும தெய்வம - ஆடடுவாகனமுடைய அக்கினி, முருகபபெருமான் எனினுமாம்; மயிடம் - எருமை, இது யமனின் ஊர்தி.

அரிஅர பிரமரும் அவனிபர்ய்யா-
வரும்அரி எதிர்படு கரிநிகராய்
வெருவ,மெய் பதறிட, வெரிநிடவே
வெருளுவன்; வெரிந்அருள் கிலரைஎலாம்
எரிபடு சருகென இகல்புரிவீ-
ரியரண விகசித நரவரிஆம்
அரிகறை அயில்முனை அயலினில்ஊ-
சலில்அலை தரமுர ணதுகொளுமால். 16

குமரிஅ மரிஇரு புயமதிலே
குடிவதி தரநிலை கொளும்வலியான்;
விமலம் துறுகலை மகளவள்நா-
வினில்உற, மொழிபல செயமுறுவான்;
எமன்வரில் முரிகுவன் படைதனிலே;
இனிமையொடு உறைகுவர் ஒருபுலிமான்;
அமரரின் அரசுஉயர் கவிகையின்நீ-
ழலில்உறை தரமகிழ் குணிஇறையே! 17

செயிர்நகை யொடும்ஒரு கணைதொடில்,எத்
திரிபுவ னமும்எரி திரிபுரம்நேர்
இயல்புடன் அடலைசெய் திடும்;அரன்மூ
இலை,அரி திகிரி,சண் முகன்நெடுவேல்
அயில்,ஞ்ஞ ரிகைஅசி, சதுமுகன்நீள்
அணிஎறுழ் கதை,மக பதிகுலிச
வயிரமது இவைகளின் வலிபலவால்
வலியவன் அவன்நிகர் மனர்எவரே? 18

சவுரிய தயிரிய புயபலவான்;
சமர்அமர் இகலினும் உவமையிலான்;
சிவன்அயன் அரிருகன் நமனொடுசேர்ந்து
இகலினும் அவனைவெல் குவதரிதாம்;

---

16. அவனிபர் - மன்னர்; ரணவீரியவிகசித எனக்கூட்டுக, போர்வீரம் நிறைந்த; நரவரி - நரசிங்கப்பெருமான்;

17. அமரி - தூர்க்கை; விமலமதுஉறு - தூய; முரிகுவன் - தோற்பான்; குணி - வில்; குணி இறை - அருச்சுனன்

18. அட்லை செய்திடும் - சாம்பலாக்கிவிடும், மூவிலை - முத்தலைச் சூலம்; அசி - வான்; எறுழ்கதை - வலிய தண்டு; குலிச வயிரம் - வச்சிராயுதம், ஒருபொருட்பலசொல்.

கவனமது அறஅறு மதியினும்யாம்
கருதலர் தனையடர் குவதுமெயோ?
பவம்அற எவர்களும் உயிர்பெறலாம்
பரிவழி விலகுதல் பயன்மதியே; 19

தசரதன் மகன்நிகர் சரவிலியாம்;
சமரினில் அரன்விழி தருவலியான்;
திசைபுகழ் அரசுஇவன்; உனதுசொலாம்
திரையினும் மிகுதளம் உளபலவான்;
குசலவர் கதைஎன வரும்விசைஆம்
குரகதம் அவன்நகர் குறுகும்முன்நாம்
கசரத துரகத அனிகம்எலாம்
கவர்வழி விலகுதல் கருமமதே" 20

அயம்வழி விலகுக விலகுகென
அமிர்தன்இவ் விதம்மதி அருள்செயவே,
பயமிலி வரவிலி நகையுடனே,
பயிலுவன் "மகன்எனில் இவன்அனையார்?
இயல்புஉரை செயும்;மன கதிவயமா
இசைசரி விலகுதல் அடைவுஅலவே;
முயல்மகம் அவமுறும் முனிவர்கள்சொல்
மொழிதவ றிடில்"என மனன்மொழிவான். 21

"நலது;அவன் அணிநகர் குறுகும்முனே
நமதுஅயம் வழிநடை ஒழிசெய்து,போர்
வலியநின் மகன்இவண் வருகென,நார்
வசனர்கள் சொலும்முன்நின் வசம்அடைவான்;
மெலிவுஇலை; இருவரும் (உறவு) கொள்வீர்;
மிகஇது நயன்"என விபிபகர்வான்-
"கலிஇது; வலியநல் உறவுசெய்தோ
கனசப லமதுஉறு வதுமகமே? 22

---

19. கவனம் - வேகம், கவனமது அற என்பதறகுப் பபரவாகனன் குதிரையைக கடடிவிட்டால், அதன்நடை அற்று விட்டால் எனினுமாம்

20. கவர்வழி - பிரிந்து செலலும் பாதை, கருமம - செயயத்தகுசெயல

21. வர விலி - மேன்மையான வில்லையுடைய அருச்சுனன்

22. அயம் - குதிரை, நார்வசனர் - அன்புமொழி பேசுவோர், இஙகுச் சமாதானத்தூதர். கன - மேன்மையான; சபலம் - வெற்றி

வெருவிய மதியொடு பரிமகமே
விவிதம தொடும்உய்கி லன்முதலோன்;
பரிமுக படமதில் எழுதியசீர்
பயமுடன் எழுதியது அலமுதியோய்;
முரண்அம ரினைஒல்கி இவுளிபினால்
முடுகினன் அல;இவன் முறை,அனைபேர்,
வரும்முறை தெரிதர வரும்எனில்நீர்
மலருக" எனமகிழ் வொடுபுகல்வான். 23

(கலிவிருத்தம்)

"சித்ர மாதவன்ள னச்சவுரி யச்செழியன்நீள்
புத்ர யாகமதுஇ யற்றியபெ ருந்தவமதால்,
சித்ர மீதும்எழு தற்குஅரிய (சிற்பவ) ருவாய்ப்
புத்ரி யானகுமு தத்துஅலர்பொ குட்டினிடமாய் 24

வேரி அல்லிமிசை யாய்உதயம் மேவுதிருவால்,
ஆரும் அல்லியர சாணியபி தானம்எனவே
பாரில் உள்ளவர்கள் ஓதுவர்கள் பாவைதனையே.
வீரி ஐயைன வேபருவம் மேவினள்;ஐயா! 25

சத்தி யாம்கதை,வல் ஆயுதவி கற்பமதுளலாம்
அத்தம் ஒர்ந்ததிறல் ஆயிழையை, அத்தன்மகிழ்தாய்
சித்தி ராங்கதைய தாய்அவிர்அது இட்டபெயராய்,
வைத்த ஆதரவ தாய்,உறவ ளர்த்தனர்களே. 26

இவள்அ லாது,வழு திக்குஅரசி னுக்குஉரியதாய்ப்
புவியது ஆளஒரு புத்திரனும் அற்றபடியால்,
பவள வாய்முருகு பத்தினிமெய் உத்தமியையே
தவிசி லேமுடித ரித்துஅரசில் வைத்தனன்அரோ 27

---

23. விவிதமதொடு - பல வகையாக, முதலோன - மூத்தவன, தருமன், வரும் முறை - வரலாறு, மலருக - கூறுக

25. வேரி - மணம்மிக்க, அபிதானம் - பெயர், வீரிஐயை - துர்க்கை, ஒருபொருட்பன்மொழி.

26. அதத்தன் - தந்தை.

27. முருகு - இளமைமிக்க.

திகிரி ராஜர்நிக ராகஇவள் திக்குவிசயம்
தகுதி யோடுசெய்து வாகைகொள சமர்த்திசமரில்
மகிபர் யாரும்அசடு ஆகுவர்கள் மக்கிமெலிவாய்;
திகையி லாதிபரை யேதிரைகொள் செப்பம்உடையாள். 28

அரசி ஆனகும ரிக்குஅகம தில்சமதையா
உரவர் வேறுஇலர்;உ னக்குஅவள்வி ருப்பநசையால்
வரிசை ஆகவும்,நி னக்குவது வைத்தொழில்செய்நாள்
ஒருசொல் வாய்மையது பெற்றதுஉன்னி டத்துஉரவர்கோன். 29

"மருக னேமகள்வ யிற்றுஉறு,க ருச்சுதனைநீ
தருக; மாமுடித ரித்துஇவண்அ ளித்தருள்வதாய்
அருள்செய் நீ"என,அ தற்குஉன்மனம் ஒத்தபடியால்,
விரவு மாமணம்மு டித்தனன்வி ருப்பினுடனே. 30

செப்பு மாமுலைதி ளைப்பஅவளைப் புணரும்அந்நாள்
இப்பி ஆணிமணி யைக்கருஉ யிர்த்ததெனவே,
துப்பது ஆனசுத னைப்பெறுது ரைப்பெண்மகிழ்வாய்ப்
பப்ப ரவாகனன்ள னப்பெயர்ப ணித்தனன்ஐயா, 31

(அடுத்த பாடல் சுவடியில் எழுதப்படவில்லை)

கொடைகள் கற்று,நடை கற்று,உரிய கொற்றகலைவெம்
படைவி தத்தொழில்ப டித்து,இரதம் அத்திபரிஊர்
நடவு வித்தைகள்த னக்குஉவமை செப்பஅரிதாய்
அடைய லர்க்குஇடியது ஒத்ததுஅர சர்க்குஅரசனே 33

கல்வி யும்,கொடைக ளும்,புகழ்க ளும்,கருணையும்,
செல்வம், மைந்துநெறி, வென்றி,தெளி வும்,தவமும்என்
நல்வ ரம்,திருவும், நன்குஉணரும் நண்புலகமும்,
வல்வி தங்கள்ளும்வ ளர்ந்திட,வ ளர்ந்தனன்வல்லோன். 34

---

28. மகிபர் - மன்னர்; திகையிலாதிபர் - எண்டிசைப்பாலர்.
29. வதுவைத்தொழில் - திருமணம்; ஒருசொல்வாய்மை - சத்தியம், வாக்குறுதி; உரவர்கோன் - பாண்டியன்.
31. இப்பி - சிப்பி; ஆணிமணி - உயர்ந்த சாதி முத்து. ஆணி முத்து என்பர், துரைப்பெண் - அரசி. 33. கொறறகலை - அரசர்கள் பயில வேண்டிய வித்தைகள்
34. மைந்து நெறி - வலிமைக்குரிய வழிகள்.

அரசர் கேசரிநி கர்த்துஅரசு இருக்க,இவன்மேல்
உரக மாதுமகன் உற்றபலி யிற்றொ. . . . நாள்
முருக னானமக னுக்குஅனைமு சித்து,விமியே,
கருதி னாள்உயிர் அகற்றிடஅ கத்தினிடையே. 35

இகுளை ஆனகுமு தத்திருஇ தைக்குறியினால்
அகவி சால்அகியள் இற்றுஅடலை யில்தொலைவதுஎன்?
மகுட மாமரக தக்(கிரி)நி கர்க்கும்மகனுன் . . .
ஈகுமா ரகன்மெய்பொற் போடுகொளிப் பொறாதென்றாள் 36

சக்க ளத்திசர ணைத்தொழுது, தன்சுதனையே
தொக்கு ரித்தொடுவி டுத்தும்,அவள் துக்கம்அகல்வித்து,
இக்குஅ னைத்துஇனிய சொற்கொடுதெ ருட்டும்அளவில்,
ஒக்கும் மெய்ச்சுதன்எ னப்பரிவின் ஒத்தொழுகினாள். 37

மகிமை யுற்றுஉரக மங்கைமுய லும்தவமதால்,
நகும லர்க்கடவுள் இந்தநகர் நன்கொடுசெய்தான்;
முகுட ரத்னமகு டம்கொள்முரு கன்சுதனையே
தகும்இ தற்குஅரசுள னும்படிசெய்து அன்பின்உறுவாள். 38

இருவ ருக்குரிய மைந்தன்உலகு இந்த்ரன்என,ஐந்
தருஇ ருக்கும்நகர் அஞ்ச,வளம் மிஞ்சுதலம்என்று
இருஇ ருக்கும்மணி மண்டலமன்; எங்கள்இறையோன்;
ஒருவ ருக்கும்மனம் அஞ்சிலன்;மெய் உன்புதல்வனே." 39

எனவ ரம்கொள்அமிர் தன்சொல,இ சைந்தநகையாய்
முனிவ லன்சிரம்உ வந்து,அசைவு கொண்டுசெல,ஏ-

---

35. உரகமாது - நாக குமாரியாகிய உலூபி, அருச்சுனன் மனைவியருள் ஒருத்தி, அரவானின் தாய்; மகன் உறற பலி - அரவான் எதிர் உரோமம் உள்ளவனாதலின் பாரதப்போரில் முதல் களப்பலி ஆகிறான்

36. இகுளை - தோழி, இங்கு சக்களத்தியைக் குறித்தது; குமுதத்திரு - அல்லி; குறியினால் - குறிப்பினால், அகவி - அறிந்து?; அகியள் - நாக குமாரி, உலூபி, இற்று - இவ்வாறு; அடலையில் - சாம்பலாக. இப்பாடலின் பிற்பாதி தெளிவாக விளங்கவில்லை அல்லி தன் மகனை அளிக்கிறாள் போலும்.

37. சக்களத்தி - உலூபி, தொழுதவள் அலலி; சுதன் - பப்பரவாகனன், தெருட்டும் அளவில் - தெளிவித்த போது; பரிவின் - அன்பொடு.

38. மலர்க்கடவுள் - பிரமன்.

39. இருவர் - சித்திராங்கதை, உலூபி; உலகு இந்திரன் - பூஉலகிலுள்ள தேவேந்திரன், ஐந்தரு இருக்கும் நகர் - அமராவதி.

ரினில்இ சைந்தமணி மண்டலம்எ னும்பதியைநேர்
உனிந டந்தது;தொ டர்ந்தமன ருந்தளமுமே. 40

துடி,த வண்டை,பண வம்,திமிலை, துந்துமி,கையால்
அடிபெ றும்பறை,அ ருந்தவில்கள், பம்பை,பலதோ-
லொடு,ந ரம்புஇனமு டன்,துளைகள், கஞ்சம்இறுவாய்
இடும்இ யங்களும்மு ழங்கிடந டந்தபரிமா. 41

விருதொ டும்பரத விந்தையர்ந டம்செய்திடவே,
இருந்த றும்புகைகள் விண்படலம் என்றுஎழுகவே,
சரத மந்திரவி தம்பலச டங்கும்முறையே
வருண புங்கவர்கள் மங்கலமு டன்செய்துறவே. 42

கரிக ளும்கதற வும்,கிரிக ளும்சிதறவும்,
உரகர் அஞ்ச,உடு வும்பொலபொ லென்றுஉதிரவும்,
பரவை யும்சுவற வும்,பரிதி இந்துஉலையு,மா
சுரர்கள் அஞ்ச,உல கம்பலசு ழன்றுசெலும்நேர் 43

பரிந டந்திடுவ குந்தொடுதொ டர்ந்தபடைகள்
உரிய மந்திரமு ழங்கிடந டந்தளவிலே,
விரவும் இந்திரபு ரம்தனையும் வென்றநகர்ஆள்
உரவன் மந்திரிஉ ணர்ந்தனன்அ கம்தெருளினால். 44

வாள்தி றத்தன்மதி மந்திரிசு புத்திவனமா
வேட்டை யுற்று,விர வும்பெருவ னத்தின்எதிர்மா
நாட்ட முற்றுவர லும்,படைபின் நத்திவரலும்,
நீட்ட முற்றமதி யின்தெளிவி னில்தெளிவனே. 45

"ஈது மாமகம்இ யற்றுபரி யொக்கும்;இவனில்
வாதின் மாஅடிமி தித்திடம திப்பதுஅறவே

---

40. முனிவலன் - அருச்சுனன், ஏரினில் இசைந்த - அழகொடு பொருந்திய; உனி - குதிரை.
41. சுஞ்சம் - வெண்கலம், அனைத்து உலோகங்களுக்கும் உபலட்சணம்.
42. இரும் - இங்கு மிகுதியாக என்பது சுருத்து, எழுசுவே - எழவே; வருண புங்கவர்கள் - (நாலவகை) வர்ணததில உயர்ந்தவர்கள், அந்தணர.
43. உரகர் - நாகர், உடு - விண்மீன்; மா (குதிரை) உலகம் பல சுழனறு செலும் நேர் என்பது முடிபு இங்கு உலகம் என்பது நாடுகளை
44. வகுந்து - வழி.
45. வன மா - காட்டு விலங்குகள், மா - குதிரை, நாட்டமுறறு - தன் ஊரை நோக்கி, நீட்டமுற்ற - நீண்ட, இங்கு நிறைந்த

ஏதம் ஆம்;அதமது உற்றுளவன்வி டுத்தது?"எனவே,
ஒது தீவிழிஉ குத்தனன்உ ருத்திரன்எனவே. 46

"இந்தி ரன்,சிவன்,அ யன்,திரும கன்,சுரர்உறார்;
சந்தி ரன்,கதிர வன்திசைத யங்கிஅகல்வார்;
இந்த மண்டலவ னின்திறம்அ றிந்ததிலையாய்
குந்தம் இங்குவிடு கின்றதுஎவர் கொஞ்சமதியால்? 47

அவர்ம தம்,கருவி தம்,தளம்அ டங்கநொடியில்
தவர்நெ டும்சரவி தம்கொடும றம்செய்திட,யான்
கவரும் வெம்புரவி யும்,பலவி ருதும்கடுக"என்று,
உவரி யின்கனீன்அ ருத்திகையு றும்படிசொனான். 48

மகுடர், மந்திரிகள், தந்திரிகள் வன்தளமொடே
இகல்உ டன்று,விரு தின்திரள்க வர்ந்து,எறுழ்தரத்
தகிட திந்திஎன உந்துதுர கம்தனையுமே
வகையு டன்கொடு,து றந்தனர்வ ரும்தளம்எலாம். 49

வல்லி யம்சுரபி திக்குறவெ ருட்டுதலைநேர்
பல்லி யப்படைவெ ருக்கொடு,ப றக்கும்வகைசெய்து,
ஒல்லை யில்பரியொடு உற்றவிரு துத்திரள்கொடே,
வில்வி யொத்திடசு புத்திமுன்வி டுத்தனர்களே. 50

வசிக ரம்கொள்மதி மந்திரிம கிழ்ந்து,மதமாய்
விசய துந்துமிமு ழங்கிட,இ யங்கள்குமுற,
அசல திண்புயம்வ ளர்ந்திட,மு கங்கள்அலர்வாய்,
பசையு றும்பதிஅ டைந்தனர்ப டர்ந்துஎவருமே. 51

பதிய டைந்து,மதி மந்திரிப ணிந்து.இறைவனைத்
துதிசெய்து. இன்பொடு,து ரங்கமதை முன்புவிடவே,

---

46. இவணில் - இவ்விடத்தில்; வாதின் - போருக்கு உரிய; ஏதம் - குற்றம்.

47. திருமகன் - இலட்சுமிபதி, திருமால். அறிந்ததிலையாய் - அறியாமல்; குந்தம் - குதிரை; அறிந்ததிலையாயக் கொஞ்சமதியால் இங்குக் குந்தம் விடுகின்றது எவர் என்பது முடிபு.

48. மதம் - வலிமை; சுருவிதம் - இறுமாப்பு; தவா - வில; சுடுக - விரைவில, உவரியின் கனன் - கடலைப் போன்ற பெருமையை உடையவன். சுபுத்தி. 49. எறுழ்தர - வலிமையுடன்.

50. வல்லியம் - புலி; சுரபி - பசு, திக்குற - அஞ்சுமாறு. ஒல்லையில - விரைவில்.

51. மதம் - பெருமிதம்; அசல - மலைகளைப போன்ற, அலர்வாய் - மலர; பசையுறும் - விருப்பம் மிக்க.

நுதல்அ ணிந்திடுப டம்தரநு வன்றளவிலே,
கதழ்வு டன்,படம்உ வந்துகையில் ஈந்தருளினான். 52

படம தன்கண்எழு தும்பலப யன்கள்முழுதும்
அடைவின் அன்புடன்உ ணர்ந்து,அக லர்ந்து,உரைசெய்தான்-
"திடமி குந்தமதி மந்திரிஅ றிந்திடுதி;என்-
னுடைய தந்தைவிடு கற்குகம்இது; ஒன்படமுமே". 53

என்று மந்திரிஅ றிந்திடவி யந்துஉரைசெய்தே,
"மன்றல் வெம்பரிவ ரைந்திடு"என மந்த்ரமிசையே
வென்றி மன்சொனவி தம்கொடுவ ரைந்து,விருதும்
நின்றி டும்பெயரர் அங்குஇடைநி றைத்தனர்களே. 54

அருணன் உந்துகம லம்,பெறுகண் அந்தகனும்,மால்
விரவும் நண்பயிர்,வி ரும்புஅமிர்தம் உண்பசியன்,ஐந்
தருஅ டைந்தநசை யன்,புதைத னம்பெறும்இலன்,
குருளை அன்புஅனைமு கம்பெறுகு ணம்கொளுவன்மன். 55

(வேறு)

"உரிய தந்தை உருவம் எந்தன்
அரிய கண்க ளதுபொ திந்து,
சரணம் என்சி ரசதுஅ ணிந்து,
தெரிச னம்செய் தினமும் வந்த. 56

என்த வம்செய் ததுவென் அங்கம்?
என்த வம்செய் ததுஇந்நி லங்கள்?
என்கு லம்செய் திடுத வங்கள்?
எனது தந்தை வருதல் இங்கு. 57

இனிய (தாம்) என் பொறிகள், புலன்கள்;
புனிதன் அன்பு புனகி தம்கொள்

---

52. இறைவன் - அரசன், பப்பரவாகனன்; கதழ்வுடன் - விரைவில்.
53. பயன் - சொற்பொருள், ப்ரயோஜனம் என்பர் வடநூலார்.
54. மந்த்ரம் - மந்திரம்; குதிரைக் கொட்டகை.
55. அந்தகன் - குருடன்; மால் - மேகம், ஆகுபெயராக மழையை உணர்த்தியது; நசையன்- ஆசையுள்ளவன்; இலன் - ஏழை; குருளை- விலங்கின்குட்டி; மன் - அரசன், மன் அருணன் முதலியவற் றின் குணம் கொளுவன் என்பது முடிவு.

தினமும் வந்தது; இதுவும் எந்தன்
நவித வங்கள் நணுகல் இன்று. 58

(வஞ்சித்துறை)

தனிநான்முயல் தவமேதவம்
முனிவோர்அற முறையே;உயிர்
அனதாதைமன் அருளோடுஉறல்
எனகாரண்ம்? அறியேன்இனம்; 59

அயிராவத மதில்ஏறிய
செயவீரிய சிலையான்இவண்
இயல்பாய்வரல் இருதாயரும்
முயல்மாதவ முறையேஎன. 60

மதிமந்திரி! வளர்நம்பதி
விதம்மிஞ்சுற, விமிதம்பெற,
அதிகம்செய்து அருள்"கென்றுஅனை
வதியும்தலம் மனைசென்றனன் 61

இறையானவன் இருதாய்பதம்
முறையாய்நவ முடனேதொழுது,
அறைகூறினன் "அனைமீர்தவம்
நிறைவேறின நிசமேஎன. 62

என்தந்தைஇ சைந்தேஇவண்
வந்தான்என வந்தான்;இது
நந்துஆர்பழ னம்தேன்மழை
சிந்துஏர்செறி யும்சீர்நகர்." 63

---

59. அறமுறையே முயல் தவமே தவம் என்பது முடி.பு: அன - போன்ற: தாதைமன் - தந்தையாகிய அரசன், உறல் - இங்கு வருதல்.

60. சிலையான் - வில்லி,வீசயன்; இரு தாயர் - சித்திராங்கதை, உலூபி.

61. விதம் மிஞ்சுற - பல வகையாக; விமிதம் பெற - வியப்படையுமாறு; அதிகம் செய்து - இங்கு அலங்கரித்து; வதியும்தலம் - இருப்பிடம்; மனை - அரண்மனை.

62. அறை - சொல் இங்குச் செய்தி.

63. வந்தான் என - தென்றல் தேரை உடைய மன்மதனைப் போன்று; நந்து ஆர் - சங்குகள் உலவும்; பழனம் - வயல்.

இப்பூநக ரில்தாதைஉ-
வப்பாய்வர லுற்றான்எனும்
முப்பான்மொழி செப்பாமுன்அ-
சப்பாகினர்; சற்றோசொல? 64

வெற்பொத்தன வேமாமுலை;
பொற்புப்பொறி பூமேவின;
கற்புக்குஅழ காம்மாதர்கள்
நற்புத்தியி னால்மூடினர். 65

நாண்ஆம்அர ணுள்புக்கினர்
பூண்ஆர் (தரு) தனப்பொற்பினர்;
காணான்இவை கைக்கற்பக
மாண்ஆர்அரு மைப்புத்திரன். 66

"என்றும்கரு தார்போரினை
வென்றும்செய மேமேவுக!
இன்றுஎம்கண்மெய் யேகூர்மொழி
அன்பின்சொன தால்நீமிக- 67

எக்காலையு மேமாற்றல-
ருக்கேஅரி போல்ஊக்கமும்
மிக்கேபெறு"எ னாவேட்கையின்
முக்கான்முறை யேவாழ்த்தினர். 68

மாதாஇரு வரும்வாழ்த்தியே,
"ஆதாரமது அனவேள்தனை-
யேதாள்தொழ எதிர்சீக்கிர-
மே,தா"விடை எனநாட்டினர். 69

---

64. பூ - அழகிய, அசப்பாகினர் - பெருவியபபெய்தினர்; சற்றோசொல - உரைகடந்த பெருமையது.

65. பொற்புப்பொறி - அழகிய உறுப்பு, நகில், பூ மேவின - பொலிவு பெற்றன

66. பொற்பினர் புக்கினர் என்க, கற்பக மரத்தைப் போன்று வழங்கும் பெருமையை உடைய கையினன் ஆகிய பப்பரவாகனன். தாயரின் காமமெய்ப்பாடுகளைத் தனயன் காண இயலவிலலை.

67. இன்று எமகண் மெய்யேகூர்மொழி நீ மிக அன்பின் சொனதால் என்றும் கருதார் போரினை வெனறும் செயமே மேவுக என்பது அந்வயம. கருதார் - பகைவர்.

68. மாற்றலர் - பகைவர்.

69. வேள் - ஆடவன் என்ற அளவில் நின்றது, முருகனைப போனறவன் எனினும ஆம்.

(கலிவிருத்தம்)

எனஒ தஇரா சவிவே கம்உளரான்
அனையோடு உரையா டுவன்"நா டரிதாம்
முனிவீ ரியதா தை,முரா ரியனான்
தனியே வரிலே செலலே தகுமே. 70

மகவேள் விசெய்மா வொடும்வா கினியாம்
மகரா லயம்மா நிலமேல் நிலைசேர்
மகரா சர்களே வளைவா யுறவே
மகவான் மகவே இஅநீ கம் (முனால்) 71

எனகா ரணம்நீ விர்கள்ஏ குதல்?ஏழ்
புனல்ஆர் கலிபோல் அலைவயூடு உறிலே
மனமே முனிவான் மகவான் மகனே;
பினும்ஏ குதல்பே தைமையே; பிழையே. 72

உறைவீர் பொறையோடு ஒருபோது அளவாய்;
இறையோர் இறைபால் எய்திக் கொணர்வேன்;
நறைசேர் குழலீர்! இவன்நா ளைஉம்மாம்
முறையாய் அனையீர்! முகமே பெறுவீர். 73

ஈதுஅல் லதுஎந் தைஎனத் தெரியான்
மாதுல் லியன்மந்த் ரிவயப் பரியை-
யேதுள் ளில்இகழ்ந் து,பிடித் ததுஅனோன்
காதுள் உறும்முன் செயிர்கா ணும்;அதால் 74

அதுகோ பம்அகன் றிடுமாறு, அடியேன்
இதமா க,நயந்து, இனிதுஆம் மொழியால்
கதம்ஆ ற,மொழிந் து,கம்மீ துகொள்வேன்
பதமா மலர்;பங் கயமாது அனையீர்! 75

---

70. முராரியனான் - திருமாலைப் போன்றவன்.
71. வாகினி - படை, மகராலயம் - கடல்; அநீகம் - படை
72. புனல் ஆகுலி - கடல, பினும் - அருச்சுனன் சினமடைவான் என அறிந்த பிறகும்.
73. பொறை - பொறுமை, இறையோர் இறை - சக்கிரவர்த்தி, முகம் - சமுகம், சந்திப்பு.
74. துள்ளில் -இங்கு பெருமிதத்தால்; அனோன் - அவன், அருசுனன், செயிர் - சினம்.
75. கதம் - சினம், கம் - தலை. மொழிந்து பதமாமலர் கம் மீது கொள்வேன் என இயையும்.

இலகும் பட்டமீது எழுதும் பயனும்
பலஉண் டு;பரா முகம்ஒன்று அறவே
அலரின் திருவாம் இருஅன்பு அனையீர்!
உலவும் புகழ்கேண்ம்" எனவும் சொலுவான். 76

(வேறு)

"பரராசர்கள் உரவோன்,உயர் பரமேசுரன் எலுவோன்,
அரிவீரினன் முடிசேர்மணி அணிசேர்பணி கழலான்,
அருள்ஆள்பவன், வனநாடினன், அகராதிபன், மிடலான்,
முரசுஏறிய துசனாம்,மனர் முறைவேள்விசெய்து உயர்வோன். 77

கரஆழிமன் னரில்மேன்மைகொள் கருணாகர உளவான்,
தரைநேர்பொறை யினன்,வேள்றிகர் சமர்வீரியன், அறிவோன்,
நரகேசரி, மிகும்ஆதிபன் நல்வேள்விசெய் பரிஈது;
உரகாவலன் மகவான்மகன், உமையாள்பதி அடியான், 78

வீராதிபன், அடல்வீரியன்,வெயிலோன்இகல் சூரன்,
ஆரோ(பணத்) திறலோன்,விருது அழகான்,முடி மணியாய்
ஏரார்புகழ் (உறவே)விலை (எழு)வேகம தாலே
நேராகிய அமராடிடு நிலைஆர்வல னவனே. 79

திசைஎங்கணும் விசயம்புரி திறலன்,செய விசயன்,
கசிகொண்கனின் மருதன்பொழில் தகனம்செயும் தனுவான்,
வசுவும்கட வுளர்வென்றர .....
அசைவன்றிய நெடியன்,பொரும் அடலின்செய முறுவோன், 80

அரன்வெஞ்சிலை அடிகொண்டிட அடல்கின்றவன், அசுரர்
புரம்மங்கிட அமரம்செய்து(உயர்) புனிதன்பதம் உறுவோன்,
நிரைகொண்டுஅகல் தளம்வென்றவன், நிகழ்ஒன்பதின் இருநாள்
முரண்வெஞ்சமர் பொருதும்திறம் உடையன்,கவி பெறுவோன். 81

---

77. வனநாடினன் அகராதிபன் - காடுகள் சூழ்ந்த முல்லைப்பகுதி மருதநிலத்து ஊர்கள் ஆகியவற்றிற்குத் தலைவன், மனர் முறை வேள்வி - இராசசூயம்.
78. ஆழி - ஆட்சித்திகிரி, வேள் -முருகப்பெருமான்; நரகேசரி மக்களுள் சிங்கம் அனையான்; உர - வலிமையோடு; காவலன் - குதிரையைப் பாதுகாக்க உடன் வருபவன்; மகவான் - இந்திரன்.
79. வெயிலோன் - சூரிய குமாரனாகிய கன்னனைக் குறித்தது. ஆரோபணம் - வில்வளைத்தல்;
80. சசிகொண்கன் - இந்திரன்; மரு - நறுமணம்; பொழில் என்பது காண்டவவனத்தை.
81. நிரைகொண்டு அகல் தளம வென்றது விராடனின் மசச தேசத்தில் துரியோதனர்களை வென்றது - கரந்துறைந்த காலம்.

அடலின்பெயர் பனிரண்டுஉடை யவன்இன்புற வரலால்,
முடிகொண்டவர் படைகொண்டுபன் முரணின்திறம் உடையோர்
படியின்கணில் உறில்வெஞ்சமர் பயிலும்படி பரியைத்
தடைகொண்டிடும்; வலியொன்றுஇலர் சரணம்புகல் அடைவே" 82

எனவேஎழு தியவாசகம் இருதாய்செவி அமுதாய்க்
கனமீதுஎழில் மகனோதிய கனவாய்மைகள் உறவே,
தனமேபுள குற,மேனிப சலையாகின உழையே
. . . . . ரிடவேமயல் விளைவால்உழ லுவரே. 83

மகன்ஆசையை அறியாவிதம் மதியால்உயர் அனைமார்
தகையாய்மறை செயவே,மயல் தவிராதுஉயர் வதுதான்
மிகும்மாபுனல் சுரைஆழ்கினும் மிகமேல்எழும் விதமாய்
அகம்மேனிகள் மிகபோர்செய்கு வதனால்மறு குவரே. 84

அனையார்நினைவு அறியான்என, அருள்வான்மதி முதுவோன்-
"உனியேகவர் வதனால்உறு சினம்ஏறுவன் உரவன்;
அனகாலையில் நிவிர்ஏகுதல் அடைவேஅல; அடியேன்
முனிவுஆறிட, நனிவாய்மையின், முடியால்அடி தொழுவேன். 85

மகவான்அருள் மகவுஆனவன் மகன்நான்எனும் மகிழ்வால்
இகழாவிதம் இகல்மாறுவன்; இகலாரினும் இகலான்;
நகுவாள்ஒளி நகையால்,முகிழ் நகையார்நளி நசையார்
அகலாமயல் அகமேகொளும் அகமே 86

அரிபொங்குஅரி, அரிறுங்குஅரி, அரிதுஞ்சுஅரி, அரிகோ-
ளரிதங்கிய அரி,முண்டக அரிகண்துயில்அரி,சங்கு

---

82. பன்னிருபெயர்கள் - அருச்சுனன், பற்குனன், பார்த்தன், கிரீடி, சுவேதவாகனன், விபத்கு, விஜயன், கிருஷ்ணன், சவ்யசாசி, தனஞ்ஜ யன், நரன், பாரதன், சாவலனாக (78) உடையவன் இன்புற வரலால் என இயையும்.

83. கனம்மீது -கன்னம், செவியில்.

84. அனைமார் (தங்கள்) ஆசையை மகன் அறியாவிதம் என்க. காமத்தை மறைக்க முயன்றால் அதிகமாக வெளிப்படுகிறது. அகம்மேனிகள் - உள்ளமும் உடலும்.

85. மதி முதுவோன் - அறிவாலுயர்ந்தவன்; உனியே - குதிரையை; நிவிர் - நீவிர் என்பதன் செய்யுள் விகாரம்; முனிவு - (அருச்சுனனின்) சினம்.

86. முகிழ்நகையார் - முல்லை அரும்பைப் போன்ற பற்களை உடைய மகளிர்; நளி நசையார் - மிகுந்த விருப்பமுடையவராக.

அரிநண்பினன்; அரிதன்சுதன்; அரிதந்திடும் அரியான்;
அரிமைந்தனை அரிமைந்தரி அரிஎந்தைகொ ளரியே. 87

விசையன்தய வதுபொங்கிடு விதம்எந்தவி தமும்நான்
நசைஉங்கள்த மிடம்உந்திட நயனின்கொடு வருவேன்;
இசைநெஞ்சொடும் மனையின்கனில் இரும்"என்றுஅரி யனையான்
அசையும்சுடர் மணிமஞ்சமது அடைகின்றனன் அரசன். 88

வலியன்துயில் புரிகின்றனன்; மதிமந்திரி விடையால்,
"விலிநம்பதி வருவன்;கவின் விவிதம்செயும்" எனவே
சொலி,வெம்பரை யிடுகின்றனர் தொகையின்றிய பறையோர்;
"நலது"என்றுஅணி நகரின்பெயர் நவமஞ்சுஉற முயல்வார் 89

(வண்ண விருத்தம்)

(தந்ததன தானதன ..... தந்ததன தானதனனா)

பந்தர்இடு வார்;உயர்ப டங்குநிறை வார்;முகில்ப-
யின்றபல தோரணமுமே
சந்தம்உற வேநிறைவர்; தண்களப மேகொடுத-
லங்கள்சுவ ரேமெழுகுவார்;
கொந்துசெறி நால்வகைஅ ரும்புநிறை வார்;குலைகொ-
ழுந்துநிறை வார்;நிறைகுடம்
அந்தமுட னேகடைநி றைந்திடுவர்; பாளைகள்அ-
சைந்திடமி னார்நிறைவரே. 90

---

87. அரிபொங்கு அரி - எழில் நிறைந்த திருமால்; அரிதுங்கு -பகைவரை விழுங்குகின்ற, அழிக்கின்ற, அரிதுஞ்சு - (சுவரியனாகிய) பாம்பை வாட்டுகின்ற, (தன்வினை பிறவினையாக ஆட்சி); அரி கோளரி தங்கிய அரி - வலிமைமிக்க நரசிங்க வடிவத்தில் இருந்த திருமால்; முண்டக அரி கண் - தாமரையைப் போன்றதும் செவ்வரிகளைப் பெற்றதுமாகிய விழி, சங்கு அரி - பாஞ்ச சன்னியமாகிய சங்கினை உடைய திருமால்; அரிதன் சுதன் - இந்திரன் மகன், அரி தந்திடும் அரியான் - சிவபெருமானால் அருளப்பெற்ற கணையை (பாசுபதம்) உடையவன், ஈற்றடி தெளிவாக விளங்கவிலலை.

89. விடை - ஆணை, கவின் - ஒப்பனை; விவிதம் - பலவிதமாக; நகரின்பெயர் - மணிநகர் என்னும் தம் ஊர்ப்பெயர்; நவமஞ்சு உற - மேலும் புதிய அழகைப்பெற

90. படங்கு - பெரிய கொடி; களபம் - சந்தனம்; நால்வகையாவன - கொடிப்பூ, கோட்டுப்பூ, நீர்ப்பூ, புதற்பூ என்பன; குலை - வாழை, பாக்குக் குலைகள்; கொழுந்து - மருகுகொழுந்து; அந்தம் - அழகு, நிறைத்திடுவர் எனற்பாலது சந்தம் நோக்கி மெலிந்தது.

(தானதன தானதன ..... தானதன தானதனனா)

மாலைபுனை வார்கள்;மணி மாலைபுனை வார்;முலையில்
வார்அணிகு வார்;இடையினில்
சேலைபுனை வார்;தொடிக ளேகைஅணி வார்;நுதலி
லேதிலத மேசுடிகை;பொன்
ஓலைஅணி வார்குழையி லே;மையணி வார்விழியில்;
நூபுரமொ டேபல்பணிதன்
காலில்அணி வார்;களபம் மார்பின்அணி வார்;புகைகம்
ஆம்அளகம் மீதிடுவரே. 91

ஆபரண மேபலவி னோதமுளது ஆகமதில்
ஆதரவி னோடுஅணிகுவார்;
தீபமணி ஆழிவிரல் மீதுஅணிகு வார்;விசய
தீரன்எழில் காணும்நசையால்
தாபரம்எ லாம்இழைக ளேபுனைசெய் தே,அதிக
தாகமுடன், ஆசைதவிரா,
சோபனவி லாசமொடு, மாதர்மய லாகி,வழி
தோறும்விழி யாய்உழல்வரே. 92

சாயலில்அ நேகவித மாய்எழுது தூசு,நெடி
தாகஉயர் காவணம்எலா-
மேஎழில்உ லாவிடுவி தானம்,நவ மாமணிவி
நோதவித மானசரமே
ஆயமுட னேஅணிகு வார்;கதலி யேநடுவர்;
ஆடுபல கூடுஅணிகுவார்;
காய்இனமொ டே,கனிகள், பாளையின மோடுஒளிர்க-
ணாடியின மேஅணிகுவார். 93

தாவுவிசை யால்அணிசெய்து ஒடிவிளை யாடஉரி
தானகனி காய்அலர்எலாம்
மேவுபல பாவைஎழில் வீயுலவ ஓசனிசெய்
வேகமுடன் ஆடலுறவே,

---

91. சுடிகை - நெற்றிச்சுட்டி, குழை - காது; கம் ஆம் - மேகம் போன்ற.
92. தாபரம் - உடல்; இழைகள் - நகைகள்; சோபன விலாசம் - மகிழ்ச்சியின் மலர்ச்சி; மாதர் எனுஞ்சொல்லே இப்பாடலின் எழுவாய்.
93. சாயலில் - மஞ்சளால்; தூசு - சீலைகள்; காவணம் - பந்தல்; விதானம் - மேற்சுட்டி; ஆயமுடனே - திரளாக; கதலி - வாழை.

வாவுபல மீனமுட னேசுறவு சாடுவித-
மானதொழி லேயமைசெய்வார்;
காவினிடை யேகுமுறல் போல்இரையும் மீஞ்மிறு
காணும்இசை காவண்ம்எலாம். 94

(தத்ததன தானதன ..... தத்ததன தானதனனா)

பித்திகைள லாம்எழுது சித்திரவி நோதளழில்
பெட்பு;நில மானவையெலாம்
முத்தமதுள லாம்மிகுந றைக்கலவை கோலம்;நலம்
மொய்த்ததலை வாயில்கள்எலாம்
பத்தியுட னேநவம்றி றைத்தகுடம்; மேல்நிலைப-
தித்தகொடி தோரணமது ஆம்;
எத்தெருவு மேஎழும்ந றைப்புகைகள் மேகபட-
லத்துஇகலும் வாறதுஎனவே. 95

(தானதன தானதன ..... தானதன தானதனனா)

வார்சிகர கோபுரமும் மாமகர தோரணமும்
வாயில்எழி லேபொலியவே,
நார்மருஉ லாய்தளிர்கள், சீதளச வாதுநவ
நானமொடு, நேயபனிநீர்,
சேர்பரிம ளாதிதெரு வீதிமுழு தேகமழ்செய்-
தே,வளிகள் வீசும்நறைமீ
ஊர்நிருதன் ஊர்அளகை யூர்அகியர் ஊர்பலவும்
ஊதைஅரு ளால்மகிழ்வரே. 96

(தந்ததன தானதன் ..... தந்ததன தானதனனா)

கும்பம்என, மாஉறைஅ ரும்புஎன,வில் வேள்முடி,கு-
ரும்பைஎன, ஆடல்பதையர்ப்
பம்பரமொ டேகுமிழி, பந்து,சிமிழ், மாமதஇ-
பம்,பறவை நேமிஎனவே,

---

94. வீ - பறவை; ஒசனிசெய் - சிறகடித்துக் கொள்ளும்; மீ ஞிமிறு- உயிர்த்த சாதி வண்டு.

95. பித்திகை - சுவர்; பெட்பு - பெருமை, முத்தம் - முற்றம், எதுகை நோக்கிய விகாரம்; சந்நோக்கிக் கலவைக்கோலம் இயல்பாயிற்று.

96. நானம் - கத்தூரி; மீ ஊர் - மேல் உள்ள அமராவதி; நிருதன் ஊர் - இலங்கை, அகியர் ஊர் - நாகலோகம்; இவ்வூரின் நறுமணங்கள் காற்றால் எங்கும் பரவும் என்றபடி.

வம்புஅடறும் - ஆடல்உறும் - கொங்கைசெறி தேமல்இள
மங்கையர்கள் மாடமதுஎலாம்
செம்பொன்உறு மாமயில்அ ரம்பைமின லேநிகர்த்தி-
ரண்டுவிளை யாடல்புரிவார். 97

நஞ்சுஉலவு வேல்விழியர்; கொஞ்சுகிளி போல்மொழியர்;
நண்டுஅனைய சானுவினர்;கால்
பஞ்சுஅனையர் ஏர்;குதிகள் பந்துஅனையர்; வாழைஅன
பைந்தொடையர்; பாயும்அரிநூல்
வஞ்சிஇடை யார்;கமல அஞ்சநடை யார்;களப-
வண்டல்அணி வார்முலையினார்;
சஞ்சரிகள் மேவுகுழல் நங்கையர்கள் மாடமிசை
சந்ததமும் ஆடல்புரிவார். 98

இந்தவகை யேநலம்அ னந்தவித மாகநகர்
எங்கும்எழி லேபொலியலால்,
அந்தரரு மேஅதிச யம்கொடு,பை நாகரும்ம-
ருண்டிட,இ வாறுநகரே
சுந்தரம்மென் மேல்உறஅ லங்கிருதம் ஆம்இயல்தொ-
டர்ந்துதொழி லேபுரிசெய்நே-
ரம்தனில்அ நேகவிரு தும்பரியு மேநல்கி,அ-
யர்ந்து,அகல்அ னோர்செயல்சொல்வாம். 99

(அறுசீர் ஆசிரிய விருத்தம்)

வ ப்போத்துக்கு உடைந்துஇரியும் மதகரி,வல்-
லியப்போர்க்கு மயங்கும் மான்போல்
வெயர்ப்போடும் திசைமயங்கி, அரற்றி,விம்மி,
நெட்டுயிர்த்து, "வீரா" என்றே,

---

97. நகிலிற்குரிய உவமைகள் அடுக்கப்பட்டுள்ளன. இது பலபொருள் உவமையணி. மா உறை அரும்பு - திருமகள் வாழ்கின்ற தாமரையின் மொட்டு; வில்வேள் - சுரும்புவில்லான்; முடி - கிரீடம். இபம் - யானை, பறவை நேமி - நேமிப்பறவை என மாறுக. சக்ரவாகப்புள்; வம்பு - சுச்சு, வம்படறும் கொங்கை எனவும், ஆடலுறும் மங்கையர்கள் எனவும் இயையும்; செம்பொன் - திருமகள்.

98. சானு - முழங்கால்; அரி - சிங்கம், நூல் - கயறு; வஞ்சி - கொடி. மூன்றும் இடைக்குவமை; இதுவும் பலபொருள்உவமை; கமல அஞ்சம் - நீரில் உள்ள அன்னம், வண்டல் - சேறு, சஞ்சரிகள் - வண்டுகள்.

99. அலங்கிருதம் - அழகுசெய்யப்பட்டது; நல்கி - கொடுத்து, இங்கு இழந்து; அனோர் - அன்னவர்கள், பண்டறிசுட்டு

செயச்சூரன் வில்விசையன் திருமுன்னர்
உரைப்பார், "கேள்; தீரா" என்றே-
"அயத்தோடு விருதையும்இந் நகர்க்குஇறைவன்
..... : அக்கம் நோக்கான். 100

அடவிதனில் மான்வேட்டை ஆடுஉழையோன்
சுபுத்திநம்அச் சுவத்தைப் பற்றி,
மிடலின்மகப் புரவிஎன இதயமதில்
உணர்ந்து,அழல்கள் விழியால் தூறப்
படபடத்தது இருமீசை; வெடுவெடுத்த
முகம்;இரதப் பான்மைபோலத்
துடிதுடித்தது உடல்;எயிறு நெறுநெறுத்த;
பேர்உயிர்ப்பில் சுழற்கால் ஒத்தான்." 101

சாரணர்கள் உரைத்தமொழி தழல்கதிர்போல்
தனஞ்சயன்தன் செவியில் சார்முன்,
ஆரல்அழல் பனித்தெனமேன் மீசைஅடிக்
கடிதுடித்தது; அசனி நாண
வீரமுடன் கர்ச்சித்து, வெகுண்டு,கரம்
கடித்து,உமிழ்ந்து,"எம் வேள்வி மாவை
யாரும்நிவந் தேவிழியால் நோக்கரியார்;
பிடித்தனனோ அமைச்சன்?" என்றே 102

மீசையதன் படபடப்பும், வெடுவெடென
உடல்துடிப்பும், சுவேத நாறும்
தேசுமுகக் கடுகடுப்பும், செயிர்ப்பெழும்தீ
விழிபனிப்பும் திக்கி லாதால்
ஆசனித்து,"அம் கொடும்பூசற்கு அடித்தளம்ஈது"
எனஅரசர் யாரும் நோக்கி,
"நாசம்அணித் தோநமக்கும் தனஞ்சயற்கும்"
எனநவின்று, நடுங்கி னாரே. 103

---

100. வயப்போத்து - ஆண்சிங்கம, வல்லியம் - புலி; அயம் - குதிரை; அக்கம் நோக்கான் - கணணோட்டம் இல்லாமல்.

101. சுழற்கால் - சுழறகாற்று.

102. ஆரல் அழல் பனிதிதென - தீ வெபபததைப பொழிந்ததைப் போல; அசனி - இடி; நிவந்தே - தலைநிமிர்ந்து.

103. சுவேதம் - வியர்வை.

"அரிஅரனும் அயனும்நடு நடுங்குவர்கள்
பெயர்கேட்கில்; அசுவம் இவ்வூர்
விரவுமுனம் தகைதிர்;என விளம்பும்என்சொல்
முறைமாறி வீறாய் விட்டான்;
பரிபிடித்தா லேநயந்து திருப்பலாம்;
இவன்சீற்றம் பாவி கேட்கில்
ஒருவர்தப்ப விடஅறியான்;" என்றுஅமிர்தன்
உரவர்அஞ்ச உணர்த்து வானே. 104

விறல்அமிர்தத் துசன்மொழியால் வீரர்எலாம்
அஞ்சி,மனம் தேறி, "தர்மன்
அறமதனால் அசுவமகம் நிறைவேறும்"
எனக்கூறி, "ஆனால் மைந்தன்
திறல்மனதுஒத் தேதிரும்பி நயந்துஎய்தி-
டில்நன்று"என,ஓர் திகிரித் தேரோன்
உறைதருமேல் திசையடைந்தான்; செக்கர்வான்
களத்தியல்பை உறக்காண் பித்தான். 105

மார்த்தாண்டன் குடக்குஅடைய, மணிநகரம்
முக்காத வழியில் ஓர்பால்
மீத்தானர் துதிக்கவரும் வில்விசயன்
படைவீடு விதித்து, நாபி
பூத்தோனை மனம்நினைந்து,ஓர் படங்குஉறைந்து,எப்-
போவ்டியும் போதுஎன்று உற்றான்.
பேய்த்தானை எனத்திமிரம் பிறங்கியது;உண்டு
உறங்கினர்கள் பேணி யாரும். 106

நிசிப்போதுஐ யாறுஅகல நீங்கியபின்,
தூங்கியபேர் துஞ்சல் நீங்க,
சசிக்காகக் கதவுஅடைத்த தாமரைப்பூ
முகம்மலர, தரணி தோன்ற,

---

104. பாவிஎன்றது பப்பரவாகனனை அச்சம் காரணமாக ஏசியவாறு.

105. ஓர்திகிரித் தேரோன் - சூரியன், களத்தியலபை - போர்க்களம எவ்வாறு குருதிமயமாக வினங்கும் என்று, வானம் சிவந்தது என்றபடி.

106. மார்த்தாண்டன் - சூரியன், குடக்கு - மேறகு; மீத்தானர் - மேல் உலகினர், தேவர்கள்; படைவீடு - பாசறை; நாபி பூத்தோன் - பதுமநாபன்; படங்கு - கூடாரம்; பேய்த்தானை - பேய்களின் ஆடை, திமிரம் - இருள்.

பிசிக்காதான் பின்னவனும் "பெருந்தளத்தை
அணிசெய்"எனப் பேசும் வாறே
முசிக்காமல் கவிகைசெயும் மூர்த்திமகன்
உண்டைசெயும் முறையாய் நின்றான். 107

கதிர்உதயம் ஆனதன்பின் காண்டீபன்
சுதன்காலைக் கடனும் தீர்த்து,
பதிவிரதைத் தாய்இருவர் பதம்பணிந்து,
விடைபெற்று, பணிகள் ஆடை
நிதிகள்நவ ரத்தினங்கள் கோடிபொன்தட்-
டவைநிரப்பி, நீபி நீவி
மதுரவார்க்கக் கணிகள்கச்சா யம்,களபச்
சுமைபரித்தே மாக்கள் செல்ல, 108

பதின்மடங்காய்ப் பரியைமிக அலங்கரித்து,
முன்நடத்தி, பரிதி தேரில்
உதயம்என, மகரகுண் டலம்கிரீ-
டம்தரித்து,ஒண் பணிகள் பூண்டு,
புதுவெயிலும் இளநிலவும் பொலிய,ஆ
சுகவலையம் புயத்தில் மின்ன,
சதுவகைவெம் கடல்தானை தற்சூழ,
ரதம்நடத்தான் சரத்தான் மிக்கோன். 109

நாலுவகைத் தளத்துஓதை, பஞ்சவாத்-
தியஓதை, நாண்வில் ஓதை,
சாலமிகும் ஓதைகளும் தான்முழங்க,
மூவுலகும் தயங்கி ஏங்க,
வாலைமயில் அனையார்கள் மடல்ஏந்த,
வானின்எழு வாயில் நீங்கி,
கோலுவரி பெருக்கெடுத்தது எனப்பிறங்கி,
திசைகள்எலாம் கொண்ட சேனை 110

---

107. நிசிப்போது ஐயாறு - இரவு முப்பது நாழிகை, சசி - சந்திரன்; பிசிக்காதான் - பொய் சொல்லாதவனாகிய தருமன்; கவிகை - பணிதல் இங்கு பணிபுரிதல்; உண்டை - படைவகுப்பு

108. காண்டீபன சுதன் - பப்பரவாகனன்; கசசாயம் - பணியாரம், பரித்தே - சுமந்து; மாக்கள் - விலங்குகள்

109. பரிதி - சூரியன், ஆசுகவலையம் - அம்பறாத்தூணி

110. வானின்எழு - ஆகாயமளாவும்படி உயாந்துள்ள; கோலஉவரி - உலகத்தைச் சூழ்ந்துள்ள கடல்

பப்பரவா கனன்உததிப் படைத்திரைந-
டப்ப(வெருள்) பார்த்தன் சேனை
ஒப்பரவாய்த் திசைதெரியாது உளரிஅல-
மலந்துஇரிந்தே உழலும் வாறால்,
துப்பரவா னத்தூசு வீசி,"அஞ்சாது
இருங்கள்"என்று துரகம் தன்னை
உப்பனைய படைக்குமுனே விருதுஅலங்கா-
ரத்துடனே உரவன் விட்டான். 111

பொன்தட்டில் பொருள்,மூடும் போர்வைகளின்
பிரபைகளும் புரிந்து நோக்கி,
"வில்தொட்டு வினைவிளைப்பது இல்லை"என்று
மனம்தேறி, வெருவி நின்றார்
"சொல்தட்டில் படும்அவதி மிகுதிவில்வி"
எனமதித்தார்; சுத்த வீரர்
"கல்தொட்டு வில்வளைத்த கடவுள்அருள்
இது"எனவே கருணை கூர்ந்தார். 112

"பூமகன்கொல் வேலவன்கொல் பொற்பதற்கே!"
எனவீரர் பூபர் நோக்கி,
"பாமதுர வாணர்புகழ் பப்பரவா-
கனன்சிறப்பைப் பார்க்க வேண்டில்
ஆம்மலர்க்கண் ஆயிரற்கும், அனந்தலோ-
சனர்க்கும்அல்லார்க்கு அமையு மோ?"என்-
றேமகிழ்வுற்று, உவகையுற்றார்; களிப்புறா
தவர்இலைப்பா டியில்உற் றோரே. 113

இருபுறமும் வழிவிலகிச் சந்தடிஇல்-
லாமையினால், இரவி நாண
விரிகிரண மகுடமுடி மீதுஇலங்கும்
தந்தை யைமெய்த் தனயன் கண்டே,

---

111. உளரி - சுழன்று; துப்பர - சிறப்புடைய; வானத்தூசு - கொடி, இங்குச் சமாதானக்கொடி.; உப்பனைய - கடல்போன்ற, உரவன் - பப்பரவாகனன்.

112. பிரபை - ஒளி; வெருவிநின்றார் புரிந்து நோக்கி, மனம் தேறி, "சொல்தட்டில் வில்விபடும் அவதி மிகுதி" எனமதித்தார் என இயையும் கல்தொட்டு வில்வளைத்த கடவுள் - மேருவில்வான், சிவபிரான்.

113. பூமகன் - திருமகளின் மகனாகிய மாரவேள்; வேலவன் - செவ்வேள்; பொற்பு - அழகு; கண் ஆயிரன் - இந்திரன்; அனந்தலோசனர் - திருமால், எல்லா உயிர்களுக்குள்ளும் அந்தர்யாமியாய் இருத்தலின் கணக்கற்ற கண்களை உடையவர். எல்லா ஆன்மாக்களையும் தன் அட்ட மூர்த்தத்துள் ஒன்றாக உடைமையின் சிவபிரான் எனினுமாம்; பாடி - பாசறை.

கரியவன்கம் இருந்தமணிக் கிரிடம்என
அதிசயித்து, கடுகத் தேர்விட்டு
அரியபுவித் தலத்தினில்பா தாதியதாய்
நடந்துசென்றான் அரிஏறு அன்னான். 114

மணிநகரான் ஏவல்கொடு மந்திரிசென்று,
அடிஇறைஞ்சி, நிறுத்தி மாவை,
அணிபணிகள் நிதிகள்நவ ரத்தினங்கள்
(பொற்றுகில்கள் அனைத்தும்) வாங்கி,
கணிதமுடன் பரப்பிவைக்க அரையாம
நேரமது கழிந்தது அம்மா!
பணிவிடைசெய் திடத்தாதை பக்கல்அடைந்
தான்விசயப் பர்ர வாகன். 115

தெரிந்தநிதி மலர்கள்நவ ரத்தினங்கள்-
தனைவாரி, செய்ய தாளில்
சொரிந்து,அபிஷே கங்கள்செய்து, தோத்திரங்கள்
மென்மேலும் துதித்துப் போற்றி,
பரிந்து,பய பத்தியதாய், அருட்கணீர்த்
தரளம்இரு பார்வை மல்க,
விரைந்துபிர தட்சிணம்வந்து, அடிமிசையே
முடிசாய்த்தான் வீர வீரன். 116

திரிபதகை சாபம்நிறை சிரப்பாரம்
ஆனதனால் சிலைக்கி ரீடி
விரவுவிவே கங்கள்,மதி, நல்லறிவு,
குணம்மாறி, வெறிகொண் டான்போல்
பரிவுஅறுத்து,இன் சொல்குடிபோய், கடுகடுக்க,
முகம்மீசை படப டத்தே,
பெருநெருப்பு விழிசொரிய, நெட்டுயிர்ப்பிட்டு,
உரைபதறி, பேச லானான். 117

---

114. கம் - தலை; பாதாதியதாய் - கால்நடையாக; நடந்தவன் - பப்பரவாகனன்.

115. பணிவிடை செய்திட - வணங்க; விசயப்பப்ரவாகன் என்பதை வெற்றியை உடையவன் என்பதோடு விசயனின் மைந்தன் என்பதும் தொனிக்கிறது.

116. பரிந்து - அன்புகொண்டு; கணீர்த்தரளம் - கண்ணீர்த்துளியாகிய முத்து.

117. திரிபதகை - கங்கை; சிரப்பாரம் ஆனதனால் - தலைக்கேறி விட்டதால்; சிலைக்கிரீடி - வில்லாற்றல் மிச் விசயன்; பரிவு-அறுத்து - இரக்கமின்றி.

"அச்சுவம்கைப் பற்றியதுஎன்? வலியஎய்தி
இறைஞ்சுவதுஎன்? அசட நீசா!
சிச்சி!எழும் புதுதழலில் சினம்;எனது
புகழ்யாதும் தெரிகி லாயோ?
குச்சித!உன் உயிர்மருந்தோ? மானம்முனை
அற்றனையோ? கொடிய பாவி!
நச்சிலச்சை யுளன்ஆகில் முழுமூடா!
செயடாபோர்; நடடா;" என்றான். 118

அன்புஉரைக்க வன்புஉரைத்த அதனை,"மத
கருவம்நன்று"என்று அகத்தில் தாங்கிப்
பின்பு,"எளியேன் அறிந்துஅறியாது இழைத்தபிழை
பொறுத்தல்கடன் பெரியோய்! எண்ணின்
உன்பகைஞன் அலனேயான்? நின்சுதன்ஆம்;
ஆறுவது சினம்"என்று ஒத,
என்புஉருகக் கிடுகிடெனக் கடுகடுத்தே
வசைஉரைத்தான் இடியேறு அன்னான். 119

"அருள்சிரசால் வரும்திருவை அங்கிரியால்
உதைவதுஎன்ன, அறிவு மாறி,
மருள்பிதற்று மொழிபோல வசையுரைத்தான்;
அடுத்ததுவோ மரண காலம்?
இருள்தினைத்த தோகிரிடி இதயம்?மதி
தெரியாதது என்னோ?" என்று
தெருள்குணமன் னவர்யாரும் திகைத்திருப்பக்
கறுத்துஉருத்தான் சீறிச் சீறி, 120

கடகடென மகுடமுடி கழன்றோட,
உரவர்உயிர் கடம்விட்டு ஓட,
வடிவுஉடையான் முடிஅலைய, மனம்உலைய,
சினந்துஉதைத்தான் மலர்த்தா ளாலே;

---

118. தழவில் - தீயைப்போல, சினம் தழவில் எழும்புது என்க; குச்சிதன் - அருவருக்கத்தக்கவன்; மருந்தோ - அமுதமோ, இழக்கக் கூடாத ஒன்றோ என்பது கருத்து; முனை என்புழி இழிவு சிறப்பும்மை தொக்கது; லச்சை - வெட்கம், இங்கு மானம்.

119. எண்ணின் - ஆராயுமிடத்து.

120. அங்கிரி - கால்; கறுத்துஉருத்தான் - ஒருபொருட்பன்மொழி.

நடுநடுங்கி. எழுந்திருந்து, புகழ்ந்து,கரம்
கட்டிநின்று, நயந்து,"அய் யா!நின்
சடிலம்என அறியாமல் தகைந்தனன்மந்-
திரி;இதயந் தனில்கா ணாதே. 121

அடிஇறைஞ்ச உடன்வருவேன்; அல்பொழுது
தொலைத்துவந்தேன் அறிஞர் சொல்லால்;
திடம்;அடியேன் அபசாரம் செய்தீமை
பொறுப்பை"எனத் திகைக்கா நின்று,
"துடையின்மிசை மலம்இறுத்த சூனுவையும்
ஊருவையும் துணித்தல் இன்றே;
படியினில்நின் செயிர்அழற்குப் பற்றேன்மேல்
ஏன்சினம்பா ராட்டல்? அய்யா! 122

கடுகடுத்துக் காதிநித்தம் கனன்றாலும்,
அடித்தாலும், கட்டி வைத்தே
தடிதெறிக்கக் கசையாலே தாளாலே
கரத்தாலே தாக்கி னாலும்,
வடவைஅழல் குழியதனில் மடுத்தாலும்,
கருவியினால் வதைத்திட் டாலும்,
படியில்உனை விலகுவர்கள் யாவர்?உனக்
கோஅறிவு பயிற்று வேன்யான்? 123

ஒருதினமா கினும்சுதன்என்று அருள்புரிந்து(ம்),
அரவணைத்துஊ ழியங்கள் கொண்டும்,
பரிசனைதந் தும்எனைஆள் பார்அரசர்
முனம்வதன பங்கம் செய்யாது;

---

121. கடம் - உடல், அச்சத்தால் வீரர் இறந்தநிலை எய்தினர் என்க , வடிவு உடையான் - அழகன், பப்பரவாகனன்; சடிலம் - குதிரை, தகைந்தனன் - கட்டினான்; காணாதே - பெரும்பிழையாகக் கொள்ளாதே, கண்டுக்காதே.

122. உடனேவந்திருப்பேன், அறிஞர் கூற இரவைத்தவிர்த்துக் காலையில் வந்தேன் என்றவாறு; திடம் - உண்மை; சூனு - மகன், மகள் எனினும் ஆம்; ஊரு - துடை; படி - உலகம்; செயிர் அழல்- கோபத்தீ; பற்றேன் மேல் - ஆற்றாதவனாகிய என்மேல்.

123. காதி - கண்டதுண்டமாக்கி.

உரவர்எனை மதிக்கும்விதம் உவந்து,பின்புளந்-
தனைமனதுக்கு ஒத்த வாறாய்க்
கருதும்விதம் முடித்தி"என அவையர்மனது
உருகி,விம்மக் கழறு வானே. 124

"நார்க்குஉரிய நீபயந்த நாயன்எனை
நின்மனதில் நயந்தி லாயேல்,
ஊர்க்குஉரிய பெரியர்,உற வினர்,உரவர்,
மற்றுஎவர்க்கும் ஒல்லு வேனோ?"
பார்க்குஉரிய குற்றமது பார்க்கில்ஒரு
சுற்றம்உண்டோ? பரவை காந்தில்
நீர்க்கொதிப்ப தனைஆற்ற வேறுநளி
நீர்உண்டோ? நிகரில் லோனே! 125

புத்திரன்செய் பிழைஅனைத்தும் பொறுப்பதுநீ
அல்லதுஎவர் பொறுத்துக் காப்பார்?
சத்துருநான் எனவெறுத்தால் உத்தமனே
யார்எனக்கே தஞ்சம் ஆவார்?
சித்தம்உறும் சினம்மாறி அவைதுறந்தே
மனைஅடைந்துஉன் சிறார்தன் ஆற
சத்தியுடன் எனக்குஅறிவு தரவேசெய்
சிட்சைஎல்லாம் தான்செய்" கென்றான். 126

"பொருவில்தயி ரியவீரப் புயபலப-
ராக்கிரமப் புதல்வன் இவ்வாறு
அரிதுபொறுத் தது;இவனுக்கு எனநாச
காலம்?உயிர் அழிதற் கோதான்
விரகின்மது பானம்உண்டு வெறுத்தவரில்
கறுத்தவனாய் வெகுளுற் றான்?"என்று
உரவர்எலாம் நடுநடுங்கி வெருவிஓ-
வியம்போல உணர்வற் றாரால். 127

---

124. பரிசனை - உரிமையுள்ள பழக்கம்; வதனபங்கம் - மானநட்டம்; வதனபங்கம் செய்யாது எனை ஆள் என்க.

125. நார் - அன்பு; பரவை - கடல்; காந்தில் - கொதித்தால்; நளி - குளிர்ச்சி.

126. அவை - இங்கே பலபேர் முன்னிலையில் உள்ள வெளி; சிட்சை - தண்டனை.

127. பொருவில - இணையற்ற; புதலவன் இவ்வாறு பொறுத்தது அரிது என்க; உயிர் அழிதற்கோதான் வெகுளுறறான் என இயையும்.

"தனதுஉயிரும் ஒழியஅடைந் தவர்உயிரும்
தொலையவரத் தக்க தாகச்
சினவுதல்நன்று அல"எனமெய் திகைத்துஉயிர்ப்பச்
செயிர்உற்றுச் சீறி மீறித்
தனையன்முகந் தனில்உமிழ்ந்து பதத்தாலே
பதைத்துஉரத்தில் தாக்கி, "மூடா!
எனதுமுகத்து அவையில்நிலாது ஏகுகெ"னக்
கொதித்துஉரைத்தான் இடியேறு ஒத்தே. 128

எறும்பி,வல் லியம்,கிருட்டி, இடபம்,மயி-
டம்,தகர்,மற்று எகினப் போரும்,
குறும்புள்சி வல்,குக்கு டப்போர்க்கு-
றிப்பும்விழி நோக்கி லாயோ?
இரும்பினொடும் தவர்பிடித்துஏந் திழைபயிற்றும்
தொழில்களும்கண் டிலையோ? மற்றும்
உறும்படைகள் பயிற்சியொன்றும் உணர்ந்திலையோ?
யுத்தமதற்கு ஒல்காய்" என்றான். 129

"அடபதக! சண்டாளா! வண்டா!உன்
உயிர்மருந்தோ? அற்ப ஈனா!
மடமாண்புச் சத்திரியன் மகனோநீ?
உனக்குஉரசு மானம் போச்சோ?
திடமாகச் சத்திரியன் மகன்ஆகில்
மிகச்சவங்கித் தியங்கி நில்லாய்;
புடைசூழ்ந்தோர் நகைக்குமுன்உன் புல்லுயிரைப்
போக்கமனம் பொருந்தி லாயோ?" 130

"பூனையினும் சதமடங்கு பொறுத்தான்;இங்கு
இனிப்பொறுக்கான் பொருவி லான்"என்று
ஏனைமன்னர் சாத்தகியைக் கண்காட்ட,
"ஐயாஇன்று எனக்க தாய்அன்-

128.ஒழியத்தொலைய என இவ்வைத்து முற்றிலும் அழிய என்க; உரம் - மார்பு.

129. எறும்பி - யானை; வல்லியம - புலி; கிருட்டி - பன்றி, மயிடம் - எருமை; எகினம் - நாய்; சிவல் - சவுதாரி; குக்குடம் - சேவல்; இரும்பு - அரிவாள்; தவர் - பஞ்சடிக்கும்வில், இப்பொருள் ஏந்திழை பயிற்றும் தொழில எனலால் பெறப்பட்டது, ஒல்காய் - மனம்தளராதே.

130. சவங்கித் தியங்கி - மனம்கலங்கி, ஒருபொருட்பன்மொழி.

பானமகன் பிழைபொறு"என. மாணாக்கன்
எனக்குறியாது, அக்கு தீகள்
தான்ஒழுக, விழித்து,உருட்டி, எயிறுஅதுக்கி,
கடுகடுத்தான் தறுகண் ணாரனே. 131

அவன்அகல, பத்ரகிரி யான்உரைக்க,
மிகச்சினந்தான்; அமிர்த கேது
நவமுடன்முன் நயந்துஉரைக்க, பிறங்குஅறத்தை
உதறினன்;மால் நந்தன் ஒதச்
செவிமுகத்தில் அறைந்தான்;மார் பம்கையினால்
தள்ளினன்சா ளுவனை; சீறித்
தவரின்அணி யுருத்ரவிட கீதனரைச்
சினந்துஉதைத்தான் தாள்க ளாலே. 132

இத்தகையால் உரவர்எலாம் நடுநடுங்கித்
திகைத்துஉயிர்ப்ப எதிர்நின் றோனை,
"சத்திரியன் மகனோநீ? அல;வைஸ்யன்
விந்தில்அவ தரித்தோ னாம்;என்
புத்திரன்அன்று; ஆமாகில் வல்மதிபோ-
கான்;நீ(யே) போகாய் ஆகில்
சித்தமதாய்ப் புலையரைவிட்டு உந்தருள்வேன்."
என்றான்தீ திகழ்ந்த கண்ணான். 133

"விள்ளும்விதம் அறிந்திலை;சொல் வாய்க்குவந்த
படிஎறிந்தாய்; வீறாய் என்னைத்
தள்ளுவன்என் றாய்;நீயே தயிரியவான்
எனஉரைத்தாய்; தர்வித் தாவித்
துள்ளுகின்றாய்; நீஇனிமேல் ஏதுசொன்னாய்
அந்தவிதம் துணிந்து,உன் சென்னி
கொள்ளுகின்றேன்; தோஷம்இல்லை என்னஉன்வா-
யால்திருந்தக் கூறு" கென்றான். 134

---

131. குறியாது - சுருதாமல்; அக்கு - கண்கள்; தறுகண்ணான் - வீரன், இங்கு இரக்கம் அற்றவன் எனினுமாம்.

132. அவன்என்றது சாத்தகியை, பத்ரகிரியான் - எமனாசுரன்; மால்நந்தன் - திருமாலின் மகன், பிரத்யும்நன்

133. வைஸ்யன் - வணிகன், வல்மதி - வலிமைமிக்க அறிவு, போர்க்குணம் போகாய் ஆகில் - என் கண்ணைவிட்டு மறையாவிடடால்.

134. நீ சொன்னபடியே போரிட்டு உன்னைக் கொல்வேன் என்கிறான் பப்பரவாகனன் உன்மொழிப்படி செயல்படுவதால் குற்றம் வராது எனினும் உன் வாயால் நீயே சொல்லி விடு என்கிறான்.

"பவம்உறுவது இலைசமமாய்ப் படைக்கலங்கள்
எடுத்துஉரத்துப் பயிலும் போரில்;
நவிமடங்கல் தனைச்செயிப்பது எனநவின்றாய்;
நீயோஇந் நரனைக் கொல்வாய்?
தவர்பிடிக்கச் சமர்தொடுக்கப் பலபடைக்கும்
வைஸ்யன்மகன் சமர்த்தன் ஆமோ?
அவிகவிப்பப் பயலே!செல் லட; மூடா!
அசடா!வில் எடடா" என்றான். 135

கரைகாணாச் சினப்பெரும்தீக் கடல்மூட,
உடல்துடிக்க, கண்க ளாலே
எரிமாரி சொரிய,இரு மீசைபட-
படத்துஅடிக்க, இடியொத்து உற்று,
குருதிகள்முன் கைகடித்துக் கொப்பளித்து,
பற்கடித்து, கொதித்து வீரன்
ஒருதுரும்பாய் மதியாமல் கால்நீட்டித்
தாதையுடன் உருமில் சொல்வான். 136

"எனடாதுர்க் குணமுரடா! வறடா!அற்-
பா!பேடா! இயம்ப லுற்றாய்?
கனமாம்துர்க் கந்தமலம் கம்பரித்தோன்
நறைபரிக்கும் கடிவல் லானைத்
துனி,"பூதி நாறுது"என்று சொலல்போல
வைஸ்யன்என்று சொற்றாய்; நன்று!
இனிநான்உன் பிறப்புஇழுக்கம் இயம்புகிறேன்;
உயிர்கழுவில் இறுக்கக் கேளாய். 137

சந்த்ரகுலம் குருகுலம்இவ் விருகுலமும்
அல்லாது தவறி, யோகி
விந்தில்வந்தோன் விந்தில்வந்த கோளகராம்
நுந்தையர்கள்; மேலும் நீங்கள்

---

135. பவம் - பாவம்; போரில் பவம் உறுவது இலை என்றபடி; நவி - மான்; மடங்கல் - சிங்கம்; அவி - கெட்ட, கவிப்பன் - செட்டி.

136. எரிமாரி - தீ மழை; உருமில் - இடியைப் போல

137. வறடா - வீரியம் அற்றவனே; கம் பரித்தோன் - தலையில் சுமந்தவன்; நறை - வாசனைப்பொருள்; கடி வல்லான் - நறுமணங்களை நுகர்ந்துணரும் திறமைமிக்கவன்; துனி - நெருங்கி; பூதி - உடல்.

ஐந்துபேர் குண்டகராம்; அதற்குமுன்னோன்
காண்ஈனன்; அறிவி லாதோய்!
எந்தனைநீ வைஸ்யன்என்றாய்; மெய்யேஉன்
சிரசுஅறுக்காது இனிவிட் டேனேல். 138

'மானம்உரசு உனக்குஇலை'என்று அடிக்கடிசொற்-
றாய்நீ;எம் மதத்தால் என்கில்
ஆனசிறு தந்தைவிந்து அல்ல'என
ஐவரையும் அரவ கேது
ஈனம்உறக் கொடும்சுடுசொல் இயம்பி,மரம்
போல்அவையில் இருக்க, உங்கள்
மானம்உரசு அழியமின்னைத் துகில்உரிந்தான்;
உயிர்வாழ்ந்தீர்; வலிகண் டார்யார்? 139

'வில்நிலைமை வாள்நிலைமை அறியேன்'என்று
எனைஉரைத்தாய்; வீரன் நீயோ?
பன்னொருஅக் ரோணிஅதம் பண்ணார்ர்
ஒன்பதுநாள் பயின்றாய் வெம்போர்;
என்அமைச்சன் ஒருமுகுர்த்தத் தினில்அழிப்பன்
இருதளமும்; எறுழ்இல் பேடீ!
சொன்னவையில் பழுதுஉளதேல் சொல்லடா;
பலவீனத் துரும்பே! என்றான். 140

அரசர்களே அமரர்களே அம்புவியே
குண்டலமே அறத்தின் கோவே
இருசுடரே கரியாக எந்தன்மேல்
பவமும்இலை என்றாய்; பேடீ!

---

138. யோகி - வியாசர். வியாசருக்குப்பிறநதவர்கள் திருதராஷ்டிரனும் பாண்டுவும், விதுரரும்; கோளகர் - கைம்பெண்பெற்றமககள்; குண்டகர் - கணவனல்லாத மாற்றானுக்குப் பிறந்த மக்கள்; முன்னோன் - கன்னன்; ஈனன் - திருமணமாகாதவள பெற்ற பிள்ளை; உன்னைக் கொல்லாவிடில் நான் வணிகனே என வஞ்சினம் கூறுகிறான்.

139. சிறுதந்தை - சிற்றப்பன், பாணடு; அரவகேது - பாம்புக்கொடியை உடைய துரியோதனன்; மின்னை - திரௌபதியை.

140. ஒரு முகுர்த்தம் - மூன்றேமுககால் நாழிகை, ஒன்றரைமணி நேரம்; எறுழ் இல் - வலிமை இல்லாத.

141. ஏகாரஙகள் எண்ணுப்பொருளன. குண்டலம் - ஆகாயம்; கரி - சாடசி; வீகுவாய் - (போரிட்டு) மடிவாய், ஈற்றேகாரம் அசை.

உரசுமுனை மானம்உள குண்டகன்அ-
லாதுஉரவ னோ?மெய் ஆகில்
விரைவில்எனைச் செயித்து,அசுவம் கவர்ந்துகொள்வாய்;
குண்டகனேல் வீகு வாயே. 141

அரியகுருப் புத்திரன்நீ யாகில்,அல்லி
மலர்த்திருஎன் அன்னை நாய்கன்
விரவுவிந்தில் பயின்றதுஎன விளம்பாய்;வன்
மொழிக்குமென்மேல் வெறிக்க மாட்டாய்;
கரவில்வந்த குண்டகன்நீ ஆதலினால்
ஈனமதி காட்டி னாய்;உன்
சிரசுவேறு உடல்வேறாய்ப் பிரித்திலனேல்
வில்மகனோ? தீரன் யானோ? 142

அடாசுபுத்தீ! பேடியிடம் அமைத்தமுறை
வரிசைகவர்ந்து அகற்றி, வெய்தில்
சடிலமதை வலி;இலகு தளங்களைப்பன்-
னகவயிரி தனைப்போல் வ்யூகம்
மிடலினொடு வகுத்திடு"என்று ரதத்தின்மிசைப்
பாய்ந்தேறி வெகுண்டான்; அந்தக்
கடிகையில்அவ் விதம்முடித்துக் கைத்தலையில்
அமைச்சன்நின்றான் கனற்கோன் ஒத்தே. 143

மகரகுண் டலம்வயிர கவசம்அணிந்து,
எழில்மகுட முடியும் சூட்டி,
சிகரமேரு அனையபெரும் தேர்வதிந்து,
சிலைவளைத்து, சிறுநாண் ஓதை
மிகுதிஇடி முழக்கல்என முழங்கி,அவில்
குணத்தொனியால் வெள்ளச் சேனை
தகுதிகுலைந்து அலமலக்க வில்வளைத்தான்
இடிஎன்னத் தயங்க யாரும். 144

---

142 குருப்புத்திரன் - (உண்மையாக) குருவம்சத்தில் தோன்றியவன்; அல்லிமலர் - அசுவிதழைஉடைய தாமரை,"அல்லிமலர்ப் பண்ணவனும் ஆராய்ந் தறிகவிதை சொல்லும் இருவரிடைத் தோன்றியயான்" என்புழிக்காண்க, நாயகன் - வணிகன்.

143. வரிசை - காணிக்கைப் பொருள்களை; வெய்தில் - விரைவில்; வலி - சுட்டு, பன்னகவயிரி - பாம்பின்பகை, சுருடன், சுடிகை - கணம்; கைத்தலையில - அருகில்; கனற்கோன் - தீக்கடவுள்.

144. வதிந்து - (தேரின்கண்) இருந்து; அ - அந்த; சேனை அலமலக்க , யாரும் தயங்க, முழங்கி வில்வளைத்தான் என்பது முடிவு.

அசனியேற் றினுக்குஇடைந்த கேகயம்போல்
தளம்மயங்க அமிர்தன், நீலன்,
வசிகரசாத் தகி,கிருத வர்மன்,எம-
னாசூரன், சுவேதன், மந்த்ரி
சசிமேக வன்னன்,அணி ருத்ரன்,அநு
சாளுவன்,மால், சுகலீ லன்,வில்
விசகீத னன்,பிரத்தி மன்பலரும்
வெய்துயிர்த்தே வெருவிச் சொல்வார். 145

"அகோரர்ஆன வீரபத்ரப் பிரளயகா
லத்தின்வயி ரவனோ? வெய்ய
மகாருத்ர சங்கார வயிரவனோ
இவனாக விளங்கி வந்தான்?
தகாது;இவனோடு எதிர்நின்று;உத் தரவாத
நிர்வாகம் தான்செய் வார்யார்?
நகாவிசயன் செயிர்த்துநின்றான்; பதின்மடங்காய்
செயிர்த்துஉருத்தே நடந்தான் நந்தன்" 146

என்றுஉரவர் உகாதிபதி கள்எல்லாம்
நடுநடுங்கி இடைந்தே நிற்ப,
அன்றுதிரி புவனம்முற்றும் கிடுகிடென
நடுநடுங்கி, அஞ்சி, எஞ்ச
மன்றல்மலர்த் தும்பைபுனைந்து, அரிநடத்த
எதிர்ஒருவர் வாரா தாலே
வென்றிஇடி வாய்முழக்கின் விளித்து,உரைப்பன்
தாதைதன்னை வெகுண்டு வீரன். 147

"எனதுவயம் அறிந்துஒடுங்கு தேசாதி-
பதிகள் இகற்கு எய்தி லார்;நீ
உனதுமனக் கருவமதால், மதியாமல்
உரைத்து,இறுதி ஒளித்தல் நன்றே

---

145. அசனிஏறு - இடி.; கேகயம் - மயில்;

146. நகா-நக்கு, பரிகசித்து; நந்தன் - மகன், பப்பரவாகனன்.

147. உகம் - பூமி; உகாதிபதி - மன்னன்; எஞ்ச - குறுக; மன்றல் - மணம்; அரிநடத்த - தேர்செலுத்த, ஆயுதம்எடுத்துப் போர்புரிய எனினுமாம்; வாராதாலே வீரன் வெகுண்டு தாதை தன்னை விளித்து உரைப்பன் என்பது முடிவு.

நனிவிருத்தக் கவிப்பாநின் வலிஅறியச்
சிலைஎடுத்து நணுகாது; என்கோல்
உனைஅடைந்த பேர்கள்உயிர் ஒழிப்பதன்முன்
அழியமனம் ஒத்தி லாயோ? 148

ஆய்எனஇன் மொழிஉரைக்க, நாயதுஎனக்
குரைத்தனைஉன் அறிவீ னத்தால்;
நீஇனிவிற் கரம்தவிர்ந்து வாயினில்புல்
கறித்தாலும், நெடுமூச் சிட்டே,
காய,குண்ட னாய்இறங்கிக் காண்டீபம்
நாண்இறக்கிக் கசிந்தே புற்றி-
லாய்உறினும், எனக்குமக னாய்உறினும்,
உனக்குஇன்உயிர் அளியேன்" என்றான். 149

இனஎருச்சர்க் கரைபரப்பி, முக்கனிச்சேற்
றினில்,பிசித இளங்கால் ஊன்றி,
கனி,அமிர்தம், முப்பால்,தேன், கனம்சொரிய,
கழைஅருவிக் கால்பாய்ந் தாலும்,
முனிவர்சுரர் பொசித்தாலும் கைத்திடும்அப்
பயிர்முழுதும்; முளைத்த நீயும்
உனதுகுணம் காட்டிவிட்டாய்; வம்மின்இனிச்
சிலைஎடுத்து"என்று உருமில் சொன்னான். 150

இந்தவிதம் கழறிடும்சொல் இருஞ்சுருதி
தனில்பாய, எரிகள் நாட்டம்
சந்ததமும் சொரிந்திட,பல் கடித்து,இரதம்
தூண்டி,எதிர் சமருக்கு எய்தான்;
அந்தவிதம் அறிந்து,அரசர் வழிமறித்து,அர்ச்
சுனனிடத்தில் அன்பா கத்தான்
தந்த்ரமுடன் பேரணியில் நிறுத்தி,உரைத்-
திடுவர்தனித் தனியே மன்னர் - 151

---

148. வயம் - வலிமை; நனி விருத்தக் கவிப்பா - மிக்க கிழட்டுச் செட்டியே, உரைத்து நணுகாது இறுதி(யில்) ஒளித்தல் நன்றே என இயையும்.

149. ஆய் என - தாயைப்போல; காய - கண்டவாகள் வெறுக்கும்படி. , குண்டனாய் - அடிமையாக; இறங்கி - நிலையழிந்து.

150. பிசிதம் - வேம்பு, முப்பால் - காய்ச்சுப்பால், திரட்டுப்பால், குழம்புப் பால்; கனம் - மேகம்; சுழை - சுரும்பு, ஆகுபெயராகக் சுருப்பஞ்சாற்றை உணர்த்துகிறது, வம்மின் எனப்பன்மையில் அழைத்தது எதிரிப்படைத்தலைவர்கள் அனைவரையும்.

151. சுருதி - செவி, நாட்டம் -கண், எய்தான் - அருச்சுனன்.

"செருவில்வெரிந் அளிக்கில்,அயர்ந் திடில்,மடியில்
யாங்கள்எதிர் தேவ ரீர்போய்
முரணுறுதன் முறை;குருளை முளையைஒரு
பொருட்டாக முனைவது என்கொல்?
அரைநொடியில் அவன்உயிருக்கு இறுதிசெய்கு-
வோம்;சினம்தீர்; அய்யா!"என்றே
உரவர்கள்வெஞ் சினம்மொழிந்து, உததிநால்
வகைத்தளத்தோடு உறுபோர் செய்தார். 152

தனித்தனியாய் அவரவர்கள் தனுச்சரங்கள்
அற்புதங்கள் தறுகாது எய்தார்;
குனித்தசிலை நிமிர்வதற்குள் குயில்பணிப்ப-
தெனச்சொரிந்த கோல்க ளாலே,
அனித்தமுடன் நின்றநின்ற இடங்கள்எலாம்
மலைமலைக ளாகக் கூம்ப
முனிக்கரசன் மணிநகரான் தளங்கள்அழிந்து
அலமலக்க முனிந்தான் மன்னன். 153

(தான தானதன தத்ததன தத்ததன)

"சேனை மாள,விக டத்தொடைதொ டுத்து,இவர்கள்
சீறு போர்வலிமை யைக்கெடஅ ழிப்பன்"என,
யானை சாடும்அறுகு ஒக்கஇர தத்தைஎதி-
ராக வேகடவி, அத்திரம்ம திக்கரிய
சோனை மாரிநிக ரச்சொரிசெ யச்சமர்செய்-
தோர்கள்,தேர்,கொடிகள், அச்சு,உருள்கள், மச்சு,இவுளி
ஆன பாகு,சிலை யைப்பொடிப டுத்திஎதி-
ராளி மேனிகள்அ றத்தொளைப டுத்தினனே. 154

---

152. யாங்கள் வெரிந் அளிக்கில், அயர்ந்திடில், மடியில் தேவரீர் எதிர்போய் முரணுறுதல் முறை என இயையும்; குருளை முளை - இளமையான மகன்.

153. அற்புதம் - ஒரு பேரெண், 10^{43}; தறுகாது - (குறி) தவறாமல்; குயில் - மேகம்; அனித்தமுடன் - நிலையின்றி; கூம்ப - குவிய; முனி - வில், மணிநகரான் தளங்கள் கோல்களாலே அலமலக்க அழிந்து கூம்ப மன்னன் முனிந்தான் என்பது முடிவு.

154. அறுகு - சிங்கம்; சமர்செய்தோர்கள் - போர்வீரர், காலாட்படை; மச்சு - தேர்ச்சிகரம்; இவுளி - குதிரை, பாகு - தேர்ப்பாகன்; பப்பரவாகனன் தோன்றா எழுவாய்.

தேர்,ப தாகை,சிலை, அச்சு,உருள்கள், மச்சு,இவுளி
சேர வேஅழிவு றச்சிதறி, மற்றும்மறு
போர்வில், தேர்கொடுமு னைத்திடுவர்; மற்றும்அது
பூளை போல்அழிய எய்த்திடுவர்; பற்பன்முறை
சார்வு தேர்,சிலைத கர்த்திட,நி லைப்பதுஅரி-
தாக ஓடுவர்;அ டிக்கடித னுக்குஎதிர்வர்;
ஓர்வி லாளியும்அ ரைக்கணம்எ திர்த்துமுரண்
ஊடு வார்அற,மு ருக்கின்ன்உ ருத்திரன்என. 155

மாறி மாறிஎதிர் உற்று,முனி, கைப்படைகள்,
வாக னாதிபர்(கள்), மற்றும்அழி பட்டு,அரசர்,
காறு பாறுகள்,அ மைச்சர்,மகு டத்தினர்கள்,
காவ லோர்கள்,கவ னப்பதிகள் முற்றும்-இடி-
யேறு சீறுஅமரி னுக்குஉள்அறு சர்ப்பம்என-
வீறு மாருதம்எ திர்த்தசருகு ஒத்தனர்கள்;
ஆற தானகுரு திப்பிரள யத்திரள்கள்;
ஆக ஆகவம்மி குத்தனச டக்குவியல். 156

(தத்த தானதன தத்ததன தத்ததன)

உத்து வாசரி,பி ரத்திமன்,உ ருத்ரன்,வலு
உற்ற சாளுவன்,அ ரிக்குஇணையன், வெற்றிசெறி
பத்ர மாதிரன்,அ மைச்சன்,மகன், வில்கிருத-
பற்பன், நீலன்,அமிர் தத்துசன்,உ றப்பொருத
சித்ர வீரரும்இ ளைத்தனர்;அ டிக்கடிதி-
கைப்பர்; வாகனம்இ ழப்பர்;வில்இ ழப்பர்;அமர்
தத்து வாசி,இர தத்துடன்அ டுப்பர்;தவ
தற்பின் வேறும்இர தத்தினொடு தத்துவரே. 157

---

155. சார்வு - பற்றுக்கோடாக உள்ள; முரண்ஊடுவார் - போர்புரிபவர்.

156. காறுபாறு மேற்பார்வையாளர்; கவனபபதி - படைத்தலைவர்; திரள்கள் ஆறதுஆன, அது பகுதிப்பொருள்விகுதி. ஆகவம் ஆக - போர்க்களம் முழுவதும்.

157. அரிக்கு இணையன் - முகிலனையான், மேகவண்ணன்; பத்ர மாதிரன் - எமனாசுரன். அமைச்சன் - சுவேதன், மகன் - சுகுவீலன்; சித்ர - சிறந்த; தத்துவாசி - பாய்கின்ற குதிரை; தவ - அழிய; தற்பின் - அதற்குபபின், தத் வடமொழி; வேறும் என்பதன் உம்மையை பின்என்பதனோடு கூட்டுக.

விற்கு வீரியசு புத்தியும்ந கைத்து,வெகு-
ளுற்று, வீறுஅடல்உ ரைத்து,விசி கத்தில்ஒரு-
வற்கு நூறுமரு மத்தினில்அ ழுத்தி,மெய்ம-
யக்க மாகஉல கத்திடைகி டத்தியபின்,
நிற்கும் வாகினித னில்சலத ரத்துளிநி-
கர்க்க வீசினன்நெ ருக்கொடுமு னிப்பகழி
கற்கள் ஊடுருவ ....
.... .ஒத்தகவ னத்திரளே. 158

அக்னி ஈறுஅழல்தி ளைத்தெனவ ளைத்தபடை
அக்கு ரோணிஅவை எட்டும்முமு குர்த்தமதில்
மக்கி நேர்அழிவு பட்டதுசு புத்திவிடு
வச்ர வாளியினில்; மற்றுஇருமு குர்த்தமதில்
மிக்க மாமணிந கர்ப்பதிமு னைத்திடுவில்
வித்தை ஆசுகம்அறு அக்குரொணி பத்துஒழிய
உக்க; வீறொடுச தித்துளசு புத்திஒரு-
மித்து வேவுஅடல்ப யிற்றினன்வி யப்புடனே. 159

உத்து வாசரிநெ ருக்கி,எதி ருற்று,முனை
உற்று, மாமுகில்ப னிப்புஅவினை யொத்து,முனி
அத்ர மாரிசொரி யக்,கணைஅ னைத்தினையும்
அற்ப நீறுபடு பற்பமுற விற்பகழி
வித்தை ஆண்மையின்எ ரித்து,அரிஎ ரித்து,இவுளி
விற்ப தாகையும்அ றுத்து,விக டத்திண்மரு-
மத்துஇ லாடம்,முகம், உச்சி,களம் உட்பதிய,
வச்ர வாளிகள்உ டற்ற,உணர் வற்றனனே. 160

மிக்க சாளுவனும் ருத்திரனும் ..... இ
ளைத்து மேலும்அயர் வுற்றனர்;வில் மற்றவரும்
அக்கில் காணிலர்எ னத்திகைத ரத்திறல்அ-
மைச்சன் ஆகியசு புத்திஅமர் உற்று,அளவுஇல்

---

159. ஈறுஅழல் - முடிவைத்தருகின்ற தீ. வினைத்தொகை; மு முகூர்த்தம் - நாலரைமணிநேரம்; உக்க - அழித்தன; வேவு அடல் - (பகைவரை) வேகவைக்கும் போர், வினைத்தொகை.

160. அ வினை - அச்செயல்; அத்ரம் - அத்திரம், கணை, பற்பம் - பொடி; அரி - தேர்; விகட - விசாலமான; திண் - வலிய; மருமம் - மார்பு; இலாடம் - நெற்றி; களம் - கழுத்து.

உக்ர வீரரண பத்தி(ரன்றி) கர்க்கும்என
உக்கி னான்;அமிதன் அர்ச்சுனன்உ யிர்ப்பினொடு
நக்கி யே,வெகுளு றப்படப டத்து,உடல்ந-
டுக்க, வேர்வொடு,தி கைத்தனன்ந டுக்கம்இலான். 161

கொற்ற நீலன்இர தத்தைநட வச்,சிலைகு-
ழைத்து, ஆழிமழை யைக்குயில்ப னிப்பதென
ஒற்று மீ,திகைநெ ருக்குறஅ டைக்கும்உரன்;
ஒப்புஇல் வீரியசு புத்திவெகு ளுற்று,வயம்
உற்ற வாளியில்எ ரித்தஉடன் முற்றும்உறை
யப்பல் ஆசுகம்அ ... ...
மற்றும் ஆவிநிலை யற்றதுஎன உற்றயர்தி
வைப்ப தானஉல கத்திடைப டுத்தனனே. 162

(தான தானதன தத்தன தத்தன)

சூத னேரதம்ந டத்த,மிடல் உற்றசுக-
லீல னேஎனந டத்திஇர தத்தை,அமர்
மோத நாடி,வில்வ ளைத்து,எதிர்மு ளைத்து,அகில
மூடு மாரிநிக ரக்கணைப னிப்பளவில்,
வாதி னோடுஅறிசு புத்தியும்நெ ருக்கி,அரி
வாளி யாவும்அழ லைப்படஎ ரித்து,முனி
சூதன் மாஉருள்கள் அச்சுஅழிய, மிச்சமொடு
சூ .... மேவில்உட லைத்துளைப டுத்தினனே. 163

ஈளை சா ... ஒத்துஎருவை .... யென
ஈறில் வீரன்உல கத்திடைகி டப்ப,வய
மீளி ஆனஅமிர் தத்துவசன் அர்ச்சுனனை
மேவி, ஓர்உரைவி யப்புடன்உ ரைத்திடுவன்-
"ஆளு மால்எனது சொற்படிந டக்க;உமது
ஆவி பேண்அரண்நி கர்த்தஇரு வர்க்குஇறுதி
வேளை ஆயமுனம்உ ரைத்ததும தித்திலை;வி-
ரோத மாமதிபி டித்து,எமைவெ றுத்தனையால். 164

---

161. அக்கில் - கண்ணில், உக்கினான் - அழித்தான், அமிதன் எல்லையற்ற ஆற்றலை உடையவன் ஆகிய: நக்கி - வெகுளிச்சிரிப்பு இது. இப்போதும் விஜயன் அஞ்சவில்லை என்றவாறு.

162. இவ்வண்ண விருத்தத்தின் பொருளமைதி தெளிவாக விளங்கவில்லை

163. அறிசுபுத்தி - (போர்முறைகளை) நன்கு அறிந்தசுபுத்தி; அரி - படைக்கலங்கள்; மா - குதிரை.

சூரன் ஆதவம்எ திர்ப்படுப னிக்குநிகர்
சூழும் வீரியன்அ மைச்சன்அட லில்தொலைதல்;
நேரி னோடுஉளம்அ யிர்த்தனை;இ னிச்சொலிஎன்?
நேய மால்மொழிபி ழைக்கநினை வுற்றிலன்;நீ
வார வீரதள கர்த்தரைஅ மர்க்குஎன்உயிர்
மாய்மு னேவிடல்ஒ ழிந்திடு"கெ னச்சொனபின்,
ஊரு தேரினைந டத்தும்முன்,உ ருத்ரன்என
ஊடு வீரியபி ரத்திமனும் உய்த்தனனே. 165

ஈடு சாளுவன்உ ணர்ச்சிதெரு ளுற்று,அரி
ஏறு போலஇர தத்தைநட விப்,பகழி
ஆடல் வாரமிசை வைத்துஉதைசெய்து, அச்சுஇவுளி
ஆர்ப தாகைஇர தத்தைஅழி யச்,சிலைமெய்
ஊடு பாயஒரு முப்பதுவ டிக்கணையை
ஓர்மை வீரியன்உ ரத்துடன்வி டுத்தளவில்
வேடை மீறியசு புத்திகறைக க்கி,அதி
வீரன் வேறுஇரதம் உற்றுஎதிர்நெ ருக்கினனே. 166

வார மானதைவ ளைத்து,எதிரி தொட்டவடி
வாளி யாவையும்அ றுத்து,ஒருவ ரக்கணையில்
நாரி சாபம்இர தத்தையும்அ றுத்து,உருமு
நாக பாசம்நிகர் .... உரம தில்பதிய,
வீர மேஅற,வி டுக்க,நினைவு அற்று,உலகி-
லேமெ யானதுந டுக்கொடுப டுத்துஉணர்வு
சார வேறுஇரதம் உற்று,வில்வ ளைக்கும்முன-
தாக, ஆறுகணை தொட்டனன்அ மைச்சர்பிரான். 167

(அறுசீர் விருத்தம்)

தனுஅறுத்து, துசம்அறுத்து, சாரதிமா
உருள்தேரும் தவிட தாக்கி,
மினும்மகுடம் கீழ்உருட்டி, மெய்த்தசையை
அரிந்துஅரிந்து என்ப தாக்கி,

---

164. ஈளை - கோழை, வய மீளி - வலிமை மிக்க வீரன்; ஆளுமால் என்புழி ஆல் அசை; சுற்றிலும் அங்ஙனமே.
165. சூரன் - சூரியன், ஆதவம் - வெய்யில்; மால் - அரசன், தலைவன் என்ற அளவில் நின்றது; வார - உரிமையுள்ள, வில்லேந்திய எனினுமாம்
166. வாரம் - வில்; சிலைமெய் - கல்போன்ற உடல்; வேடை - வெப்பம்; கறை - உதிரம்.
167. வரக்கணை - தெய்வீகமான அம்பு, நாரி - நாண்; சாபம் - வில்; உருமு - இடி.; உலகிலே - நிலத்தில்; சார - திரும்ப.

பினும்உடலைச் சரக்கூடாய் அறம்புறமாய்க்
கணைசொருக, பெருக வீசி,
இனிஉடலில் கணைஏற இடம்இலதாய்,
குதைபதிய எய்தான் எங்கோன். 168

மெய்நிறைந்த கணையுடனே வேறும்ஒரு
தேர்எறி, வில்லும் கொண்டு,
கைநிறைந்த கணையுடனே கற்பம்நிகற்-
பம்சொரிந்தான்; கணைகள் யாவும்
வைசிறந்த வாளியினால் மாற்றி,ஐங்கோல்
மார்புகளம் வாய்இ லாடம்
எய்துஉருவச் செலுத்தி,மூடி இடறினான்
சுபுத்திஎனும் வீர வீரன். 169

கறைகள்தனை முறைமுறையாய்க் கக்கி,மயங்-
கியும்தேறி, கால சூலத்
திறம்உடைய கூர்வாளி ஒருநான்கு
தொடுத்து,உடலைச் சேற தாக்கி,
மறுமூன்று கணைஉரத்தில் (செலுத்)தினான்;
தேர்மீதில் மந்த்ரி சாய்ந்தான்;
உறுதிஅரு சாளுவன்மேல் பப்பரவா-
கனன்தேர்விட்டு இறங்கி வந்தான். 170

முரண்அமைச்சன் றனைநோக்கிப் பாராட்டி,
"செய்தனைபோர்; முனைநில்;" என்றே,
"இரணவீ ரியன்நீயே சத்திரியன்
மகன்ஆகில் எதிர்டா" என்றே,
ஒருசரத்தால் கொடிஅறுத்தான்; ஒருசரத்தால்
சிலைஅறுத்தான்; ஓர்ஏ வால்நால்
பரிஅறுத்தான்; பாகுஅறுத்தான்; பற்பமுறத்
தேர்அழித்தான் பலபா சத்தால். 171

---

168. தனு - வில். என்பு - எலும்பு, இங்கு வெறும் எலும்புக்கூடு; அறம்புறம் - உட்புறம்; பெருக - மிகுதியாக.

169. கற்பம் - 10^{33}; நிகற்பம் - 10^{33}; வை - கூர்மை.

170. கால சூலம் - இயமனுடைய சூலாயுதம்.

171. ஏ - அம்பு; பாசம் - கணை.

தேர்அழியத் திகைத்து,மறு தேர்ஏற,
அத்தேரும் சிதைத்தான்; எட்டுஎட்டு
ஏர்உறுதேர் ஏறும்முனம் துசம்,தேர்கள்,
கொடுமரங்கள் இமைப்பில் நீற்றான்;
வீரமுடன் ஒருவயிரத் தேர்ஏறி
அற்புதம்நிற் புதவெவ் வாளி
மாரியெனச் சொரிந்தான்;அக் கணைகள்எலாம்
எண்கணையால் மாற்றி னானே. 172

பின்னும்அதில் எண்மடங்காய்க் கணைமாரி
அவன்சொரிய, பீடால் வல்லோன்
முன்னம்விடும் எண்கணையும் வருவதுஎலாம்
நீறாக்கி, முடுகா நின்று,
"இன்னம்உண்டோ? விடுவதுஎலாம் விடடா;"என்று
அடர்ந்துஉரைக்க, எஞ்சி டாமல்
வன்னமணி ஆயிரம்கட் டியசூலந்-
தனைஎறிந்தான் வலிய வீரன். 173

இடிஅனந்தம் கோடிஎன விரைந்து,அடர்ந்து
வருவதைக்கோல் எட்டு சீறிப்
பொடிப்பொடியாய் நீறாக்கி, பொருவில்உரத்து
அறைந்தே,புட் கரத்தில் தூக்கிப்
படியில்விசைத் துடன்அடித்து, வெரிந்உருவிக்
கிழித்தே, பாத லத்துள்ஓடி,
கடல்முழுகி, தூணிதனில் மீண்டுஅடைந்தது;
அவன்தளத்தில் கவிழ்ந்தான் மன்னோ. 174

கவிழ்ந்துபல கணைகள்தனைக் ககனமிசைச்
சொரிய,இரு கடிகை தன்னில்
உவ(ர்)ந்துமூன்று அக்ரோணி தளங்கள்உயிர்
ஒழிந்துஅழிந்த;உதிர நீத்தம்

---

172. கொடுமரம் - வில்; நீற்றான் - நீற்றினான், அழித்தான்; அற்புதம் - 10 ^{43}; நிற்புதம் - 10 ^{48}.
174. வருவதை - வருகின்ற சூலாயுதத்தை; புட்கரம் - ஆகாயம்; படி - நிலம்; கவிழ்ந்தான் - இறந்தான்.

சிவந்தநதி பலஓட, செம்பிணங்கள்
மலைமலைபோல் செறிந்த எங்கும்;
கவந்தமது திரண்டுஆட, கணம்,கூளி,
நரி,நாய்கள், கங்கம் சூழ்ந்த. 175

மால்இளவல், மகன்,பேரன், உத்துவா
சரி,கிருத வர்மன், மற்றும்
கோலியவெம் கடல்சேனை கொடுவளைத்துத்
தேர்நடத்திக் குறுகி னார்போர்;
சாலவும்கண் சிவந்துஉருத்து, மணிநகரான்
சொரிந்தசர மாரி யாலே,
காலன்நகர் அடைந்தனர்அக் கடிகையினில்
தளங்கள்உயிர் கடங்கள் போட்டே. 176

ஓர்ஐந்து சரத்தாலே உரம்பிளந்து
கிருதவர்மன் உயிரை நீத்தான்;
ஈர்ஐந்து சரத்தால்அக் ரூரன்உத்து-
வாசாரி உமிழ்ந்தான் ஆவி;
சார்ஐந்து சரத்தாலே தடுமாறிச்
சாத்தகியும் தலத்தில் வீந்தான்;
கூர்ஐந்து கணையாலே பிரத்திமனும்
அலமலந்து குலைந்து வீழ்ந்தான். 177

வீழ்ந்தவனும் எழுந்திருந்து, வீந்துஉயிர்பெற்-
றவன்போல வெகுண்டு, சீறி,
"சூழ்ந்ததளம் அடங்கலையும் தொலைத்ததன்றி,
எனைச்சரத்தால் சோபம் செய்தாய்;
போழ்ந்துஉன்உயிர் போக்கடிப்பேன் பூங்கணையால்"
எனக்கூறி, பூசல் நேர்ந்து,
தாழ்ந்திடுவது இலைஎன,வெஞ் சரப்புயலால்
திசைவெளிதூர்த் தான்மால் மைந்தன். 178

---

175. சுவிழ்ந்து - குனிந்து; உவர்ந்து - வெறுத்து; சுவந்தம் - தலையற்ற உடல்; சுணம் - பேய்ச் கூட்டங்கள்; கூளி - பூதம்; கங்கம் - பருந்து.

176. மால்இளவல் - சாத்தகி; மகன் - பிரத்யும்நன்; பேரன் - அநிருத்தன்; உருத்து - சினந்து; கடிகை - நாழிகை; கடம் - உடல்.

177. வீந்தான் - இறந்தான்.

178. சோபம் - மயக்கம்; ப்ரத்யும்நன் மன்மதனின் அம்சமாதலின் பூங்கணையால் என்றார்; தாழ்ந்திடுவது - தாமதம் செய்வது.

ஒல்லையினில் திசைவானம் தூர்த்தகணைக்
குலத்தைஎலாம் ஒழிய நூறு
பல்லவத்தால் நீறாக்கி, பாகு,பரி,
தேர்,(கொடியு)ம் பற்பம் ஆகக்
கல்உருகும் ஒருபதுவெங் கணைதொடுத்தே,
ஒருகணையைக் களத்தில் விட்டான்;
நல்உணர்வு தடுமாறி, தெளிந்து,எழுந்து,ஓர்
தேர்ஏறி, நாண்வில் கொண்டே, 179

கடும்சினம் கொண்டு, ஒருபதுகோல் மணிநகர்ஆ-
திபன்நுதலில் கடுமை யாகத்
தொடும்போதில், உணர்வழிந்து, மூர்ச்சித்து,ஆ-
கம்தெளிந்து, நுதலில் தோய்ந்த
கொடும்கணையில் ஐந்துஈர்த்து, குறிபண்ணி-
னான்நுதலை; குகன்வேல் ஒத்தே
மடங்கல்எனப் பிளந்துஉருவ, மரணமாய்,
பதையாமல், மகியில் வீழ்ந்தான். 180

தாதைவிழுந் திடவெகுண்டு தனயன்இரு
விழிபொழியத் தழலின் மாரி,
"பாதகவன் பிதுர்த்துரோகி! நில்லடா!
விடுகிலன்நீ பறந்திட் டாலும்;
காதகா! உனைஎமன்ஊர்க்கு அனுப்புகிறேன்;"
எனத்தொடைகார் முகத்தில் வைத்து,ஈழ்த்து
ஊதைஅனல் மாரிஎனப் பலகோடி
பாணமதை உடற்றி னானே. 181

மருகன்விடு கணைஅனைத்தும் வாளியினால்
நீறுஆக்கி, மாமன் கூற்றாய்
இருமுனையும் கூரான கணைகள்ஓர்
அற்புதம்முன்பு எதிர்த்து வீச;
வருகணைஎ லாம்அறுத்து, சிலகணைவிட்டு,
இவுளிகொடி வலவன் தேரும்
பொரியரிநீ றால்சிலையும் பொடித்தான்;மற்-
றொருதேரில் புலிபோல் பாய்ந்தான். 182

---

179. ஒல்லையினில் - விரைவில்; ஒழிய - முற்றிலுமாக; பல்லவம் - அம்பு; களம் - சுழுத்து.
180. வீழ்ந்தவன் பரத்யும்நன்; மகி - நிலம்.
181. தனயன் - அறிருத்தன்; இருவிழிதழலின் மாரி பொழிய என இயையும்.

பாய்ந்து,சிலை வளைத்து,ஆறு பகழிஉரம்
பிளந்துவெரிந் பறிய ஓச்ச,
மாய்ந்தவன்போல் அயர்ந்து,உணர்வு வந்து,சிலை
வளைத்து,ஏழு வாளி ஓச்ச,
காய்ந்தகதிர் மணிநகரான் மார்புதடா-
ரித்துஏகக் கலங்கி வீழ்ந்தான்;
சாய்ந்தமன்னன் எழும்பும்முனம் தளத்திடைபூந்-
தான்மாயன் தனயன் சேயன். 183

கன்னல்ஒரு நான்கதற்குள் கரி,பரி,ப-
தாதி,இர தங்கள் யாவும்
சின்னபின்னம் உறவே .... அக்குரோணி
சேனைகளைச் சிதைய நீற்றான்;
அன்னபொழு தேமூர்ச்சை தெளிந்து,எழுந்தே
மணிநகரா திபனும் சீறி
உன்னி,பாகு, இரதமதுஒத்து உறுத்து,முடி
கழற்றி,வில்லும் ஒடித்தே, ஆர்த்தான். 184

மாயன்மகன் மகன்தேர்,வில், மா,பாகும்
அழிந்து,மணி மகுடம் போக்கி,
தேயுஎனச் சினந்து,மறு தேர்ஏறி,
சிலைவளைத்து, தீயின் மாரி
ஓயல்அறச் சொரிதல்என, அற்புதநிற்-
புதம்கணைகள் உடற்ற, வெந்தீப்
பாயும்அழற் கணைகள்எலாம் பதினறுகோ
லால்தாக்கிப் பகைத்துச், சென்றே, 185

"இன்னம்உன்னால் இயன்றமட்டும் கணைசெலுத்த-
ீடா"என,ஈர் எட்டுக் கோலும்
முன்னம்உரும் எனமுடுக, மும்மடங்கு
நான்மடங்காய் முனைகூர் வாளி

---

182. மருகன் - அநிருத்தன்; மாமன் - பபரவாகனன், கூற்றாய் - எமனைப் போல, அற்புதம் - ஒரு பேரெண்; இவுளி - குதிரை; பொரி அரிநீறு - பொரியச் செய்கின்ற தீயினால் எரிக்கப்பட்ட சாம்பல்; இவுளி .... தேரும், சிலையும் நீறாய்ப்பொடித்தான் என்க.

183. தடாரித்து - ஊடுருவி; மாயன் தனயன் சேயன் - கண்ணனின் பேரன், அநிருத்தன்; பூந்தான் - புகுந்தான்.

184. கன்னல் - நாழிகை; ஒத்து உறுதது - ஒன்றாகத் தாக்கி.

185. தேயு - தீ; அநிருததன் சினந்து, உடற்ற (அக்) கணைகளஎலாம் (பப்பரவாகனன்) தாக்கி, பகைத்து, சென்றே என முடிக்க.

பின்னும்முறை முறைஏவும் கணைகள்எலாம்
நீறாக்கி, பெரும்தேர் சாபந்-
தன்னையும்வெண் நீறாக்கி, தங்காதுஅங்கு
அவன்உரத்தில் தாக்கிற்று அம்மா. 186

உரம்பிளந்து சதுர்வாளி புறம் போந்த;
களம்பிளந்த ஒருநால் வாளி
வருந்துஎருத்தம் பிளந்துஓட, மத்தகத்தில்
ஒருநாலு வாளி ஓட,
சிரம்பிளந்து சதுர்வாளி பவன்உருவி
ஓட,நொந்து, செகத்தின் மீதே
பொருந்தும்உயிர் கழுஇருப்போன் போல்மரண
மூர்ச்சையுடன் புவியில் மாய்ந்தான். 187

செங்கண்மால் துவரைவரும் சேனைமன்னர்
யாவர்களும் சிதைந்து போதில்,
துங்கன்எம னாசுரன் பெருந்தளத்தோடு
எதிர்வளைந்து, தேரும் தூண்டி,
புங்கமுடன் கணைமாரி பொழிந்துஆர்த்தான்;
நகைத்தே,விற் போர்க்குஅஞ் சாதான்
அங்கவனை எதிர்நோக்கி அல்லிநா-
யகிபுதல்வன் அருள்செய் வானே. 188

"பத்ரகிரி ஆதிபன்நீ; முதியவன்நீ;
சிறியவன்நான்; படையி னாலும்
அத்திரவித் தையினாலும் செயிக்கறியீர்;
விலகிநிலும் அய்யா" என்றான்.
"சத்திரியன் மகன்நான்;நீ வைஸ்யன்;அகல்
நீஎன்னைச் சாற்ற லாமோ
புத்தி?எதற் காகவடா விலகுவது?
நீபுறம்போ பிழைக்க வேண்டில்; 189

---

186. சாபம் - வில்; உரம் - மார்பு.

187. சதுர்வாளி - நான்கு கணைகள்; எருத்தம் - பிடரி; மத்தகம் - நெற்றி. பவன் - காண்க 191 ஆம் பாடல் குறிப்புரை.

188. மால் - கண்ணனுக்குரிய; துவரை - துவாரகை; துங்கன் - உயர்ந்தவன்; அல்லி நாயகி புதல்வன் - பப்பரவாகனன். அஞ்சாதான் (ஆகிய) புதல்வன் அவனை எதிர்நோக்கி நகைத்தே அருள்செய்வானே என இயைக்க.

189. முதல் இரண்டடிகள் பப்பரவாகனன் கூற்று. பின்னிரண்டு அடிகளும் அடுத்த பாடலின் முதலடியும் எமனாசுரனின் கொடுஞ்சொற்கள்.

ஒல்லையினில் உனதுஉயிரை எமபுரத்திற்கு
அனுப்புவிப்பேன் உறுதி யாய்;''என்று
அல்லிஅர சாணிமகன் சிலைஅறுத்தான்
ஒருகணையால்; அம்புஒன் றாலே
வில்லின்மணி முடிபுவியில் விழத்தளினான்.
கிரிடிமகன் வெகுண்டு, செந்தீப்
பல்லவம்ஒன்று அவன்தேரைக் குறித்துவிட்டான்;
தேர்எரிந்து பற்பம் ஆக, 190

சிலைகொடிசேர் பரிபாகும் செந்தீயால்
எரிந்தொழிய, செகத்தில் பாய்முன்
வலுஉரைத்த வாயில்ஒரு வாளிதொட்டான்
பிடரியினால் மருவி ஓட;
தலையில்ஒரு கணைபவனில் உருவவிட்டான்;
ஒருகணைதைத் ததுவி லாடத்து;
இலகும்உரத்து ஒருவாளி வெரிந்உருவ-
வே,மூர்ச்சித்து, இறந்து, வீழ்ந்தான். 191

தந்தைநொந்துஅங்கு இறந்துவிழ, சுகலீலன்
பலகோடி சரங்கள் (ஏவி)
வந்துஎதிர்க்க, ஒருகணையால் பலகணையும்
நீறாக்கி, வாளி ஒன்றைக்
கந்தரத்தில் விடுத்து,முடி கறுத்துஅறுத்து
நிலத்தில்இட்டு, கணைஒன் றாலே
மந்திரிமார் பைப்பிளந்து, மரணமுறப்
புவியில்இட்டான் வலிய வீரன். 192

ஒருகடிகை தனில்கோலால் பத்ரகிரி-
யான்சேனை உளதுள லாம்கொன்று,
எரிசருகில் பரந்ததுஎன வந்தவந்த
சேனைஎல்லாம் இமைப்பில் கொன்றே,

---

190. என்று - எனக்கூறிக்கொணடே; மகனுடைய சிலையை அறுத்தான்; வில்லின் மணிமுடி - ஒளிவீசுகின்ற இரத்தினக்கிரீடம்.

191. சேர்பரிபாகு - தேரொடு சேர்ந்துள்ள குதிரைகளும் பாகனும்; பவன் - பொருள் விளங்கவில்லை - முன் 187 ஆம் பாடலிலும் இதே ஆட்சியைக் காணலாம். மூனை என்ற பொருளில் இச்சொல்லை ஆள்கிறார் போலும்.

192. தந்தை - எமனாசுரன்; கந்தரம் - கழுத்து; முடி - தலை; சுறுத்து - சினந்து; மந்திரி - சுவேதன்; வீரன் - பப்பரவாகனன்.

"செருஎதிர்க்க வருகிறவன் எவனடா?
விற்குஉரிய தீரன் வாடா;
கிரிடிஎனும் கிழவைஸ்யன் எங்கே?"என்று
இடிமயங்கக் கெர்ச்சித் தானே. 193

ஆரவா ரித்து,அதட்டி, ரணவீர
பத்ரன்என, அமர்க்குஅஞ் சாத
வீரசா ரப்பெருமான் சங்கார
ருத்ரன்என, மிதித்திட்டு ஏற,
காரைநேர் ஒத்து,அரிய கணைமாரி
செலுத்துஅமிர்தன் கனன்றே, "இந்த
தீரரு ரப்பதக னுடன்யாவர்
பொருவது"எனத் திகைத்து நோக்கா, 194

திகைத்து,நெடு மூச்செறிந்து, "யோசனைஏது
இனி?"எனவே சினந்து சீறி,
பகைத்து,வயத் தேர்நடத்தி, பப்பரவா-
கனைமறித்து, "பார்த்தன் மட்டும்
உகைத்துஊர்உன் தேர்நடத்த வொட்டேன்நில்-
லடநீ"என்று உரவோன் கிட்ட,
நகைத்து,"நன்று நன்று"எனவே சிரம்அசைத்து,
சிலசேதி நவில லுற்றான். 195

"நதிநீந்த நரிவால்பற் றிடல்போலப்
பேடிதுணை நயந்தே கொண்டு,
நிதிஆண்டு தொறும்திறைகள் தருவதனை
மறுப்பதற்கோ நினைந்து வந்தாய்?
அதனாலே உனைஇறைவாங் காதுவிடேன்;
எனைநயந்து ஆற்றாது என்றால்
முதியோனே எவ்வளவும் தள்ளிநீ
..... மொழிகு வேனே. 196

---

194. நேர்ஒத்து - நிகர்த்து; கனன்று - சினந்து; பதகன் - கீழ்மகன் தன் படையில் பலரைக் கொன்று விட்டான் என்ற சினத்தால் இவ்வாறு தவறாக நினைக்கிறான்; நோக்கா - நோக்கி.

195. உரவோன் (அமிதத்துவசன்) நெடு மூச்செறிந்து, சீறி, தேர் நடத்தி, மறித்து, 'நடததெவொட்டேன்; நில்லட நீ என்று கிட்ட, (பப்பரவாகனன்) நகைத்து, சிரம் அசைத்து, நவிலலுற்றான் என்பது பொருள் முடிபு.

196. திறைகள் - சுப்பம்; இறை - சுப்பம், இப்பாடலின் பிற்பகுதி தெளிவாக விளங்கவில்லை.

வயதுபுறம் சாய்ந்ததனால் மதிஅறிவும்
தடுமாறி மயங்கி னாயோ?
இயல்பு,என்வலி, நிலைஅறியா தேயோமுன்
கரம்ஈந்தாய்? இப்போர் தன்னில்
அயன்அரன்மால் எதிர்ந்தாலும் ஆற்றுவரோ?
உயிர்பேணி, அகல்நீ;" என்ன,
தயிரியவீ ரியன்உரைக்க, அமிர்தன்நா
அசைக்காமல் தனுநாண் கொண்டான். 197

கோடைஇடி எனஆர்க்கும் கோதண்டம்
கரம்ஏற்ற கோவை நோக்கி,
"பீடுநெறி நீதியுறும் பெருமானே!
என்போர்க்கும் பெலம்செய் வாயோ?
சாடையுடன் விடஅறியேன்; தனஞ்செயனை
வீட்டினல்லால் தவிரேன் கோபம்;
நீடும்எந்தன் முனைமுகத்தில் நில்லாதீர்;
பொல்லாதுஎன் நெடிய வாளி; 198

குணம்உடையோன் தனக்குஆவி கொடுத்தால்நன்று;
அறிவுஅழிதுர்க் குணத்தோ னுக்கா
இணைஇல்உயிர் உதவஒண்ணாது; உமக்குஅறிவோ
யான்உரைப்பேன்?" எனலும், சீறி,
"வணிகரில்பே ரறிவுடையான் மகன்போல
அமர்மாற மதிசொன் னாயோ?
கணமதில்உன் சிரசுஅறுத்துக் காண்டீபன்
கரத்துஅமைப்பேன்; கலங்காய்;" என்றான். 199

(வண்ண விருத்தம்)
(தனன தனதன தனதன தனதன)

எனவும் இருவிழி தழல்மழை சொரிதர,
எயிறு நெறுநெறு நெறெனவல் ஒலியோடு,
"சொனசொல் வழிசெய்வது இலைஎனில் வசியர்கள்
தொறுநி" என"அமர் துணி"என முடுகலும்,

---

197. வீரியன் - பப்பரவாகனன்.
198. கோ - அமிர்தத்துசன்; வீட்டினல்லால் - கொல்லாவிடில்.
199. எனலும் - என்றவன் பப்பரவாகனன்; சீறியுரைப்போன் - மாற்றான்; அமர் மாற - போரை விலக்க; கலங்காய் - ஐயப்படாதே.

மினலை நிகர்வன விசிகமது அளவுஇல
விரைவின் இருவெளி புதைதர விடுதலும்,
மனது மகிழ்வொடு மணிநகர் அதிபதி
வலிய கணைஉதை யினன்மழை முகில்ஏன. 200

அமிர்தன் விடுகணை பொடிபட, மணிநகர்
அதிபன் விடுகணை இடறின முனிவொடு;
சிமிதம் நிகர்பல சிலிமுக மவைகொடு
சிறியன் விடுகணை சிதறினன் முறைமுறை;
அமரர் வெருவினர்; அவனிபர் வெருவினர்;
அகில புவனமும் அழியுக முடிவுஎன,
விமல உரகரும் வெருவினர்; உருகின
விரவு திசைமலை; உறுகரி அலறின. 201

இருவர் முறைமுறை சொரிதரு கணைமழை
இவனொடு அவனிடம் மறஇகல் பரவின;
உரகர் உலகிடை உடல்வன சிலகணை;
உததி அளறுஎழ இடறின சிலகணை;
கரிகள் அலறிட முடுகின சிலகணை;
ககுப மலைகளை உருவின சிலகணை;
தரைகள் அழல்எழ முடுகின சிலகணை;
சலதி சுவறின; கருகின சிமிதமே. 202

உபயர் நிகர்அற முறைமுறை விடுகணை
உலகு, திசை,கடல், வெளிபர வின;புகை
சபல அனல்கெழு மின;முகடு அளவின;
தறுகி அமரரும் நரருடன் உரகரும்
அபயம் அபயம தெனஅல றினர்;மிகும்
அலகில் வரையினம் அழிவுடன் ஒழிவுற,
விபுதர் அதிசெயம் உறுசிலை வலியினர்
விகட முடன்,அமர் முடுகினர் கடுகியே. 203

---

200. சொல்வழிசெய்வது - சிரசு அறுத்துக் காண்டீபன் கரத்து அமைத்தல்; தொறு - அடிமை - நி- நீ. சந்தம் நோக்கிய குறுக்கல்; செய்வதிலை எனில் நீ வசியர்கள் தொறு என்கிறான் பப்பரவாகனன். அமர்துணி என்றவன் அம்முதன் அப்படியே செயகிறேன் என்பது குறிப்பு.

201. சிமிதம் - மேகம், ஜீமுதம் என்பதன் திரிபு; சிறியன் - பப்பரவாகனன், அவனிபர் - மன்னர்.

202. உடல்வன - ஒளிவீசுவன; அளறுஎழ - சேறுபட, கரிகள் - எட்டுத் திசையானைகள்; ககுப மலை - திசைகளிலுள்ள எட்டு மலைகள்; சலதி - கடல்.

203. உபயர் - இருவரும், முற்றுமமை தொக்கது; வெளி - ஆகாயம்; சபல - வலிமையோடு கூடிய. கெழுமின - நிறைந்தன; புகையும் அனலும் கெழுமி முகடு அளவின என்றவாறு; தறுகி - தடுமாற்றமடைந்து; வரையினம் - மலைக்கூட்டங்கள்; விபுதர் - (போர்க்கலை) அறிஞர்கள்.

அரிய மணிநகர் அதிபதி விடுகணை
அமிர்தன் இரதமும் உருள்,பரி, வலவனும்
உரிய கொடி,சிலை ஒழிதர மருமமும்
உருவி அடறின ஒருநொடி அளவையின்;
விரைவின் மறுரத மிசைகொடு, சிலைகொடு,
வெகுளி கொடு,பல விசிகமது உதையினன்
உரவன் இரதமும் உருள்களும் இவுளியும்
உலவு கொடி,சிலை உருவற ஒழியவே. 204

எரிகள் இருவிழி சொரிதர, அவன்ஒரு
இரத மதுகொடு, சிலைகொடு கணைபல
சொரிய, முதியவன் இரதமும் முனியொடு
சுடிகை அழிதர, முனிஇர தமதொடு
விரைவின் முடுகலும், அதனையும் இடறினன்;
விறல்இ விதம்இரு பதுசதுர் இரதமும்
அரியில் இடுசருகு எனஒழி தர,இவன்
அமர்செய் திட,அமிர் தனும்மிகு முனிவொடே, 205

(தான தந்த தந்ததன .... தான தந்த தந்ததனனா)

தாவு திண்ச யந்தனன்ள னா,ச ரம்தெ ரிந்து,அரிய
சாப மும்தெ ரிந்து,இளவல்மேல்
ஏவி னம்பொ ழிந்து,உடலம் மார்ப கம்பி ளந்து,இரதம்
ஈறு வெம்து ரங்கம்முதலாய்
மாவ ரம்பெ றும்சிலையு மேஅ ழிந்துஒ ழிந்துவிட,
வாகை யும்பு னைந்தபொழுதே,
பாவ கன்க லங்க,மறு தேரில்வந்து எதிர்ந்து,பல
பாண மும்சொ ரிந்துஅடரவே, 206

ஆத வன்க ரம்கொள்திசை, மீத லம்,ச கம்,பரவை
யாவி னும்ச ரம்செறும,மால்
காத லன்சு தன்கணைகள் நீற, அங்குஅ வன்தொடைகள்
கார்மு கங்க ளும்சொரியவே,

---

204. மருமம் - மார்பு; உரவன் - பப்பரவாகனன்.

205. முதியவன் - அமிர்தத்துவசன்; சுடிகை - கிரீடம்; இருபது சதுர் - இருபத்து நான்கு; அரி - தீ; முனிவொடு - சினத்துடன்.

206. சயந்தனன் எனா - தேரின் மேலுள்ளவனாகி; இளவல் - பப்பரவாகனன்; ஏ இனம் - அம்புக்கூட்டம்; பாவகன் - (போர்க்கலை) வல்லவன், அமிர்தத்துவசன்.

சூதர் பம்ப ரங்கள்நிகர் தேர்க றங்கி னும்கடுக
தூமி யங்க ளின்சுழலவே,
வேத மந்தி ரங்களொடு ஆசு கம்தெ ரிந்தஇரு
வீர ரும்சி னந்துஅமர்செய்தார். 207

வாய்,க ளங்கள், நெஞ்சு,முகம், வாகு, திண்சி ரம்,கண்,நுதல்
மாவி னம்,து சம், கவசம்ஆர்
காய கம்பு குந்து,உழுக வே,சி வந்து, இழிந்தகறை
காயம் எங்க ணும்பரவவே,
வீகம் என்றுஇ ரண்டுதிறல் வீர ரும்ச மன்சமர்செய்
வேலை, பங்கு னன்குமரனே
ஓய்கை இன்றி யுஞ்சொரியும் மேக மும்க லங்க,ஓழி-
யாது வண்டி னம்சிதறினான். 208

கேத னம்பு தைந்த;முதி யோன்மெ யும்பு தைந்த;உயர்
கீதம் உந்திடு அம்பதனினால்
சூத னும்பு தைந்த;பரி தேக மும்பு தைந்த;மயிர்
தோறும் அம்பி னம்சொருகவே
சாத கம்த விர்ந்து,நிலை ஆவி யும்ப றந்து,உயிர்கொள்
தாப ரம்பி ளந்து,அலரிநேர்
ஆதி பன்ச டம்புவியி லேவி ழுந்து, உறங்கியபின்,
ஆடல் கொண்ட னன்சிறுவனே. 209

போரில் அங்கு அவன்படைகள் யாவை யும்பி ளந்துபுயல்
போல வும்சொ ரிந்தகணையால்
ஆரும் அங்கு இறந்தனர்கள்; ஆரும் நெஞ்சுஅ ழிந்தனர்கள்;
ஆரும் நொந்து அயர்ந்தபொழுதே
வீர சங்கி னம்குமுற, வீறு சிங்கம் என்றுஅமரின்
மேல்ந டந்து, அடர்ந்து, விசை(த்)
தூரி யம்க றங்க,எதிர் சேனை யும்க லங்க,அதி
சூர னும்தொ டர்ந்துஅணுகியே. 210

---

207. ஆதவன் கரம் - சூரியனின் கதிர், மீதலம் - மேலுலகம், சகம் - நிலவுலகம்; பரவை - சுடல்; செரும - நெருக்கமாக நிறைய, மால்காதலன்சுதன் - கண்ணனின் நண்பனாம் அருச்சுனன் மகன், பப்பரவாகனன்; கறங்கு - காகிதப்பட்டம்; தூமியம் - புகை

208. வாகு - தோள், காயகம் - உடல்; கறை - இரத்தம்; வீகம் - காற்று; வலிமைக்கும் வேசுத்திற்கும் உவமை, வேலை - வேளையில்; பங்குனன் - அருசுனன், வண்டு இனம் - அம்புக்கூட்டம்.

209. கேதனம் - கொடி., கீதம் - மூங்கில், இங்கு வில்லிற்கு ஆகிவந்தது; சாதகம் - துணைக் காரணங்கள், கருவிகளும் ஆம், தாபரம் - உடல், அலரிநேர் ஆதிபன் - சூரியனைப போன்ற (புகழ்மிக்க) மன்னன், அமிருதத்துசன்; உறங்குதல் - இறத்தல்.

210. விசயத்தாரியம் - வெறறிமுரசு

சேனை யம்பெ ருங்கடலி லேஅ னந்த வெம்பகழி
சீறி யும்சொ ரிந்தளவிலே
மான்இ றந்து,அ ழிந்தபிண மாய்நி றைந்து,அவை எங்கும்மலை
தான்அ நந்தம் என்றுஉயரவே,
சோனை கொண்டு இழிந்தமலை ஆறது என்று எழுந்தபல
சோரி உந்தி ஒண்களம்எலாம்;
ஊன்று கர்ந்தி டும்கழுகு, சேன மும்,சு ணங்கன்;நரி
ஓரி யும்சி றந்தகளமேல். 211

மேலும் வெங்க ளம்பரவை மீறு கம்பி றங்கல்என-
வே,த னஞ்ச யன்படைகள்சேர்
நீலன் அண்ப ரம்படைகள் சால வும்சி றந்து,அமிர்தன்
நீடு திண்பெ ரும்படைகளோடு,
ஏல மந்த்ரி தந்திரிகள் யாவ ரும்சி னந்துஇரத
மே,ம தம்க யம்,புரவி,கா-
லால்அ டர்ந்து,உ றுந்தளம்எ லாம்அ டர்ந்துஅ டர்ந்து,அமர்செய்
தார்ச ரம்சொ ரிந்துஅமளியாய். 212

(தனன தந்ததன தான . . . . . தனன தந்ததன தானனா)

துடிகள் துந்துமிகள் பேரி தவில்கள் பம்பைகள்த டாரி
தொனித ரும்பறைகள் தோல்கள்பேர்
அடிமு ழங்கிட,வி சால துளையி னம்கதற, மீறி
இரைய வெங்கலமி யாவுமே,
நெடுந ரம்புஇசைகு லாவ, இரத வெந்தொனிகள் ஏற,
நிரைஇ பம்பரிகள் வானியே
கடுகி டும்தொனிக ளோடு கடல்கி ளர்ந்தனைய நீடு
ககன வெம்ப்ரளயம் மூடவே, 213

---

211. சொரிந்தளவிலே - சொரிந்த போது; மான் - குதிரை; சோனை - மழை; சோரி - உதிரம்; உந்தி - ஆறு , சேனம் பருந்து; சுணங்கன் - நாய்; நரிஓரி - ஒருபொருட்பன்மொழி.

212. மீறு - மிகுதியான, கம் - நீர்; பிறங்கல் - விளங்குதல; அண் - பொருந்திய; பரம் - பெரிய; மதகயம் எனற்பாலது சந்த நோக்கி மதங்கயம் என நின்றது.

213. துடிகள் முதல் பறைகள் வரையானவை தோற்கருவிகள், துளையினம் என்பது நாதசுரம் குழல் போன்ற காறறு வாத்தியங்கள்; வெண்கலம் - உலோசுத்தாலான தாளம் போன்ற இசைக்கருவிகள்; நரம்பு - யாழ் போன்ற நரம்புக் கருவிகள், இபம் - யானை; பரி - குதிரை, வானி - படை, இங்கு காலாட்படையைக் குறித்தது.

மகுட மந்திரிகள் வீர மகர குண்டலகி ரீட
மனர்க ளும்சபதம் ஒதியே,
விகட தந்திரம தோடு விசைய தந்திரிகள் பார
வெகுளி கொண்டுஅமரின் மேன்மையாய்,
இகல்ச ரம்சிமிதம்மாரி சொரிவது என்று,அளவி லாமல்
எவர்க ளும்பொழியும் ஏஎலாம்
மிகள ரிந்துஅடலை ஆன விசயன் மைந்தனும்வில் வாளி
விசையில் உந்துஉதைசெய் போதிலே. 214

எதிர்வ ரும்கணைகள் யாவும் இவன்வி டும்கணைகள் நீற
எரிசெய் தும்,பரவு தீயைநேர்
மதக யம்பரிப தாதி இரத மும்கருகி நீற,
மகுட மந்திரிகள் யாருமே
குதைந ரம்புஉரிய சாபம் முடிய வெந்தழிய, நாறி,
குடல்கள் வெந்து,அடல்கள் மாறியே,
உதைச ரம்சுமைகள் ஆகி, எரிப டும்சருகது ஆகி,
உயிர்து றந்துஅயர்வ தாகினார். 215

கரம்இ ழந்தவர்அ நேகர்;கவுள் அழிந்தவர்அ நேகர்;
கழல்இ ழந்தவர்அ நேகர்;தான்
உரம்அ ழிந்தவர்அ நேகர்; உடல்அ ழிந்தவர்அ நேகர்;
உயிர்அ ழிந்தவர்அ நேகர்;வாய்
சிரம்அ ழிந்தவர்அ நேகர்;முடிஅ ழிந்தவர்அ நேகர்;
சிலைஇ ழந்தவர்அ நேகர்;தேர்
பரிஅ ழிந்தவர்அ நேகர்; புயம்அ ழிந்தவர்அ நேகர்;
பணிஅ ழிந்தவர்அ நேகரே. 216

---

214. மனர் - மன்னர், அடலை - சாம்பர்; மனர்களும் சபதம் ஒதியே மேன்மையாய்ப் பொழியும் ஏ எலாம் விசயன் மைந்தனும் வாளி உதைசெய்போதிலே மிக எரிந்து அடலையான என்பது பொருண்முடி. பு.

215. யாவும் - அனைத்தையும், இவன் - பப்பரவாகனன், தீயை நேர் - நெருப்பில் எதிர்ப்படுகின்ற; குதை - விற்குறை; நரம்பு - நாண்; சாபம் - வில்; குதையும் நரம்பும் உள்ள சாபம் என்றவாறு; அடல் - வலிமை. பப்பரவாகனனின் சரங்களை மேனியில் தாங்குவதால் சுமை என்றார்.

216 கவுள் - கதுப்பு, பணி - நகை.

(தனதன தனந்த தான தனதன)

கரியவன் மகன்கு மாரன் விடுதொடை
கசரத வயம்ப தாதி முழுதையும்
இரிவுஅற வளைந்து, கோலி, அரண்என
இழையிடை புகுந்து,உள் ஓட இடம்அற,
முரண்அழல் கொழுந்து பாயும் மலைதிசா-
முகம்முழு தினும்ப ராவி நிறைவதால்,
இருதலை யும்அங்கி மேவு சமிதையுள்
இழையுறும் எறும்ப தானது அனிகமே. 217

செகதலம் அடங்க வாளி செருமின;
திசைமுகம் அடங்க வாளி செருமின;
ககனமது அடங்க வாளி செருமின;
கனைகடல் அடங்க வாளி செருமின;
பகைஞர்ச துரங்க வாரி சுவற,மொய்
பரவினது அனந்தம் வாளி பலமுறை
திகிரிகள் எரிந்து நீற இபம்உனி
சிதைவுடன் அறுந்து வீழ உனியுமே. 218

முறைமுறை திரண்ட வாளி விடஎழு
முகிலது பொழிந்த தாரை நிகர்வன;
கறையடி ரதங்கள் வாசி அனிகம்எய்
கணமதில் இறந்த மேலும் அளவற;
வரிநிகர் பரந்த சோரி; நிரைநிரை
வகைவகை குவிந்த நீடு பிணமலை;
அறுகுறை கவந்த மானது அளவில
அடல்வெளி இடங்கள் தோறும் விரவியே. 219

---

217. சுரியவன் - இந்திரன்; மகன் - விஜயன்; குமாரன் - பப்பரவாகனன்; வயம் - குதிரை; இரிவு அற - ஒடிவிட முடியாதபடி; இழை - கூட்டம்; பராவி - பரவி, சந்தம் நோக்கிய நீட்டல் விகாரம்; அங்கி - தீ; சமிதை - குச்சி; அனிகம் - படை.

218. செருமின - திணிந்தன; சதுரங்க வாரி - நால்வகைப் படையாகிய கடல்; சுவற - வற்ற; திகிரி - தேர்; உனி - முதலில் குதிரை. ஈற்றுச்சீரில் வில.

219. கறையடி - யானை, வாசி - குதிரை; எய் கணமதில் - அம்புஎய்த அக்கணத்திலேயே; வரி - கடல்; கவந்தம் - தலையில்லாத முண்டம்.

கறைஎன அறுந்த கால்கள் பலபல;
கரமவை சுருண்டு வீழ்தல் பலபல;
வறும்உடல் நகங்கள் சாய்தல் பலபல;
வடமதுஅ கழும்கி ரீப மொடுஅவிழ,
மறம்உடை யதந்த மானது உதிர்தர,
வலுவுஅவ யவங்கள் சேர உதிர்வுற,
எறுழ்கரி அறுந்து தூள்கள் எனவிழும்
இகல்உறும் (மகன்பல் வாளி) பொழியவே. 220

முடிகளில் அனந்தம் வாளி உருவின;
முகமதில் அனந்தம் வாளி உருவின;
கொடிறுஉழுது அனந்தம் வாளி உருவின;
குழைமிசை அனந்தம் வாளி முழுகின;
கடுநுதல் அனந்தம் வாளி உழுதன;
களம்அற அனந்தம் வாளி கடவின;
மிடல்புயம், உரங்கள் வாளி செருமின;
மெயின்அவ யவங்கள் தோறும் மறையவே - 221

மகுடமு டியொண்கி ரீப முடன்விழ,
அயில்படை இனங்க ளோடு மகிவிழ,
அகலமது அறுந்து பூணி னுடன்விழ,
அவயவம் அடங்க நீறு படவிழ,
இகலும்இ ரதம்ப தாகை உருள்பரி
இசைவல வன்கொடிஞ்சி யாவும் முரிவுற,
நகம்என இடங்கள் தோறும் நிரைநிரை
நயமொடு குவிந்த நீடு பிணமரோ. 222

(அறுசீர் விருத்தம்)

அனிகங்கள், பொருநர், வீரர், அமைச்சர்கள், மகுட மன்னர்-
வினதைசேய் போரில் மாய்ந்த விடத்துஅரவு இனம்போல்- மாய்ந்த;

---

220. கறை - உரல; கரம் - துதிக்கை; வறும - நெருபபினால்உலரும்; நகம் - மலை, உருவகம்; வடம் - கயிறு, கிரீபம் - கழுத்து; எறுழ் - வலிய, கரி - யானை; மகன் - பப்பரவாசுனன்.

221. கொடிறு - கதுபபு, குழை - காது; மிடல் - வலிய.

222. மகி - நிலம்; இசைவலவன் - தேருக்கேற்ற பாகன்; கொடிஞ்சி - தேரின் தாமரைமொட்டுப் போன்ற பகுதி; நகம் - மலை; இடங்கள் தோறும் நிரைநிரை நீடு பிணம் நயமொடு நகமெனக்குவிந்த என்பது அந்வயம்.

குனிசிலை விசயன் சேனைக் குழுஎலாம் மடிந்து, கொஞ்சம்
பினில்அடைந்து, அபயச் சத்தம் பிறங்கின தானை கிஞ்சம். 223

"எதிர்இல்வில் விசயா! எம்மை இற்றைநாள் வரைக்கும் காத்து,இப்
பதகன்மாட்டு இறப்ப வே,நீ பார்த்திருப் பதுஎன் ஐயா?
சதிவராது உதவுஉன் தஞ்சம்; தஞ்சம்;"என்று அரற்றி, "மாற்றான்
மதம்உளான்; மிகப்பொல் லாத வன்கணன்; மறலி ஒப்பான்; 224

பாலன்அன்று; இவன்பொல் லாத பாதகன்; காத கன்;தென்
காலனோ? கொடிய கால காலனோ? கனல்கோன் தானோ?
வேலனோ? முக்கட் சூல வீரபத் திரனோ? அந்தக்
காலன்மீது அடரும் சூலக் காரியோ? அறிகி லோமால். 225

நினைக்கும்முன் நெஞ்சைத் தீய்க்கும்; நிகழ்த்தும்முன் நாவைத் தீய்க்கும்;
கனைக்கும்முன் வாயைத் தீய்க்கும்; கறிக்கும்முன் இதழ்பல் தீய்க்கும்;
முனைக்கும்முன் மொய்ம்பைத் தீய்க்கும்; முடுக்கும்முன் பரித்தல் தீய்க்கும்;
சினைக்கும்முன் சமஸ்தம் தீய்க்கும்; சிறுவன்கைப் பகழி அய்யா - 226

உத்துவா சாரி, அக்கு ரூரன்,சாத் தகி,ஒண் நீலன்,
அத்தன்அன கிருத வர்மன், பிரத்திமன், அநிருத் தன்,பின்
தத்துதேர் எமனா சூரன், சுகலீலன் தான்,சு வேதன்,
தொத்துஅணி அமிர்தன், மற்றும் துஞ்சினர் அவன்கை அம்பால். 227

பரிவுஉறும் மகுட மன்னர், பட்டவர்த் தனர்கள், வீரர்,
தெரிவுறும் சேனை நாதர் தெரித்திடு திரைக்கு மிக்காய்
விரிசது ரங்க சேனை வெள்ளம்உளது எல்லாம் அன்னோன்
சரமதால் எரித்தான்; ஒல்லை தனில்இவண் உறுவான்" என்றே, 228

223.வினதைசேய் - வைநதேயன், கருடன்; கிஞ்சம் - சிறுமை, சத்தமும் கிஞ்சமும் பிறங்கின என்க.

224. சதி - அழிவு; மாற்றான் - பகைவன்; வன்கணன் - கொடியவன்; மறலி - இயமன்.

225. காதகன் - கொலைகாரன், தென்காலன் - தெற்குத் திசைக்கு உரிய இயமன்; காலகாலன் - காலசம்ஹாரனாகிய சிவபிரான்; கனல்கோன் - தீக்கடவுள்; சூலக்காரி - காளி.

226. மொய்ம்பு - வலிமை; பகழி - எழுவாய; தீய்க்கும் ஏழும் பயனிலைகள்.

227. அத்தன் - தந்தை; தொத்து - பூங்கொத்து, இங்குமலர்களை உணர்த்திறறு; துஞ்சினர் - இறநதனர்.

228. தெரித்திடு - மேல் எழுகின்ற, பொங்குகின்ற. ஒல்லைதனில - விரைவில், இவண் - இங்கு.

அடிக்கடி துணுக்கி; வேலை அலறல்ஒத்து அரற்றும் சத்தம்
மடற்செவி துளைக்க, பார்த்தன் வானியை அபயம் ஆற்றி,
இடத்துறு கன்னன் சேயை, "இளவல்!நீ வருக" என்ன,
திடத்தினில் சிற்சில் மாற்றம் செப்புவான் ஒப்பி லாதான் - 229

"வானியின் திரளி யாவும் மாய்ந்தன ஈயல் அன்ன;
நானும்நீ அலது மித்ரர், நராதிபர் அடங்க வீந்தார்;
சேனையில் கிஞ்சம் என்பால் திடுக்கொடு கோகோ என்று,
தான்அரற் றியநா ராசத் தழல்செவி துளைத்தது அய்யா. 230

புகழ்குரு அருளால், கன்னிப் போர்செய்தே, யாக சேனன்
தகைவுறப் பிணித்த வைகல் தான்முதல், இந்நாள் ஈறாய்,
இகல்அப செயம்என் பாலில் எய்திலை; இற்றைப் போரில்
பகையுறு தீராக் கோபம் பாடுஎன முற்றிற்று அய்யா. 231

கோஎனும் சத்தம் எந்தன் குழையினில் கேட்டி லேன்;இப்
பாவிவெஞ் சமரில் இந்தப் பாடுபட் டதுநம் சேனை;
தேவரும் மூவர் தானும் செயிக்கரிது இவனை வில்லால்;
ஆவியை அனையாய் நான்உண்டு அவன்உண்டுஅ மர்க்கு; நீபோய், 232

அத்தின புரத்தில் சேர்ந்தே அறன்மகன் முதல யார்க்கும்
இத்தகை உரை;யான் வென்றால் யாவரும் பொருந்தி வாழ்வோம்;
சத்தியாய் எதிரி வென்றால் சாவர்என் துணைவர் யாரும்;
புத்திரன் எமக்கே நீஅன் பொடுகடன் முறைசெய் அய்யா. 233

அலதுதுர்க் குறிக ளாய்என் அக்கியில் தோற்றுது; அய்யா!
சிலதுஅதில் கேள்;என் அங்கம் சிரசுஇன்றி ஒளிவட் டத்தில்
குலவிடல் நோக்கில் கண்டேன்; கூளிபேய் குருதி பூசிப்
பலகுடல் ஈரல் வாயில் பற்றிநின்று ஆடுது; இன்னும் 234

---

229. துணுக்கி - நடுங்கி; வானியை - படைக்கு, வேறறுமை மயக்கம், கன்னன்சேய் - வீடகீதனன்; ஒப்பிலாதான் - அருச்சுனன்.

230. ஈயல் - ஈசல்பூச்சி; மித்ரர் - நண்பர்; நராதிபர் - மன்னர்.

231.குரு - துரோணாசாரியார், யாகசேனன் - பாஞ்சால தேசத்து மன்னனாகிய துருபதன், திரௌபதியின் தந்தை; வைகல் - நாள். 232. குழை - காது

233.அறன் மகன் - தருமபுத்திரன்; இத்தகை - இங்கு நிகழ்ந்தவற்றை; எதிரி - பப்பரவாகனன், நான் இறந்தால் உயிர்வாழேன் என்பது கருத்து; கடன்முறை - ஈமச்சடங்குகள்.

234. துர்க்குறி - தீயசகுனம்; அக்கி - கண், அங்கம் - உடல், நோக்கு - கண்.

சகலதே வருமே வாயில் தடக்கரம் முகத்தில் மொத்தி,
அகலநின்று, அரற்றிக் கோஎன்று அபயமிட்டு, அலறக் கண்டேன்;
புகல்வதுஎன்? அலகுஇ லாத, புன்மை,அற் புத,வி காத,
மிகுதிதுர்க் குறிமென் மேலும் விழிக்குஎதிர் தோற்ற லாலே, 235

நமக்குஅப செயமது அன்றி நல்செயம் உறுவது இல்லை;
தமர்க்குஉறு கடன்நீ செய்யத் தப்பிஊர் அடைதல் நன்று;
அமர்க்களத்து அவிந்தால், உன்னை அக்கியின் நோக்கித் தாழ்க்கேன்;
சமர்த்தன்என்று இரங்கிச் சித்தம் சயித்துஉயிர் தரவும் மாட்டான்".
236

என்றலும் இருகண் நீரால் இருபதம் கழுவி, "எந்தாய்!
இன்றுநம் சொற்கு மாறு இசைப்பதுஎன் எனச்சீ றாதே;
உன்றனக்கு இறுதி சூழ்நாள், உனக்குஉத வாத ஆவி
பின்றையார்க்கு உதவு வேன்?என் பிராணனும் மருந்தோ அய்யா?
237

உன்னையான் களத்தில் விட்டு, உதிட்டிரன் முதலி னோருக்கு
என்னவாய் உரைப்பேன்? மற்றுஇங்கு இவன்ஒரு பொருட்டோ? வீறு
சொன்னவாய் குருதி கக்க, சுடிகையோடு அறுப்பேன் சென்னி
நின்அரு ளாலும் பூவை நிறத்தினான் அருளால் இன்னே. 238

விடைஅடி யேற்கு நல்கு வேறுசஞ் சலங்கள் இன்றி;
இடிஅனை யானை ஒல்லை யினில்எமன் ஊரில் சேர்ப்பேன்;
மிடலுட னேஎண் திக்கு விசயமே புரிந்த வில்லோய்!
வடவரை அனையாய்! சிந்தை மயங்கல்என்? மயங்கி லாதோய்! 239

(வேறு)

மலைவரினும் சுமப்பதுகம்; மனதுஇளைப்பது
அரசர்குல மரபுக்கு ஏலாது;
அலகுஇல்மலை கலங்குகினும் அகம்கலங்கா-
தாய்!விடைஈந் தருள்"கென்று ஏத்த,

---

235. மொத்தி - அடித்துக் கொண்டு; அலகிலாத - கணக்கற்ற, புன்மை - இழிந்த; அற்புத - இதற்கு முன் இலலாத; விகாத - பகைமையான.

236. அபசெயம் - தோல்வி; அவிந்தால் - இறந்தால்; தாழ்க்கேன் - சகித்துக் கொண்டிருக்கமாட்டேன்; சமித்து - வென்று; சயித்து சமர்த்தன் என்று சித்தம் இரங்கி உயிர் தரவும் மாட்டான் பபரவாசுனன் என்றபடி.

238. சுடிகை - முடி; பூவை நிறத்தினான் - காயாம்பூவண்ணன், நின் அருளாலும் நிறத்தினான் அருளால்(உம்) வாய் குருதி சுச்சு இனனே சென்னி அறுப்பேன் என இயையும்.

239 மிடல் - வலிமை, வடவரை - இமயம்.

"நலது," எனமார் பகத்துஅணைத்து, நல்தேர்வைக்
கணைசிலையும் நல்கி, நோக்கால்
பலபலென நீர்உகுத்து, விடைகொடுத்தான்
வடவரையைப் பழித்த தோளான். 240

பரிதிஎனத் தேர்மீதில் பாய்ந்துஏற,
அருணன்எனப் பாகன் ஊர,
அருணன்என மகுடமுடி அழகுவெயில்
எறிப்ப,அணி பணிகள் எல்லாம்
கிரணவெயில் எறிப்ப,விறல் கவசம்வெயில்
எறிப்ப .....
விரிமகர குண்டலமும் வெயில்எறிப்ப,
..... வீர வீரன். 241

சந்ததிபோம் திசைவழிநேர் விழிபரப்பி,
ஒழுகிடநீர், தாதை சோர,
பந்தமுடன் அடிக்கடிபார்த் தனைத்திருகிப்
பார்த்து,வெய்ய படைக்குப் போவோன்,
"எந்தைமனம் தேறமதி இயம்புதற்கு
யார்?" எனநேர்ந்து ஏங்கி, "வெய்தாய்
உந்திநெடும் தேர்தனைஉ கைத்துஊர்தி"
என,விரைவின் ஊர்ந்தான் பாகன். 242

திக்குஅதிரத் தேர்நடத்திக் கடிகைஇரண்டு
எனப்பார்த்தன் சிறுவன் தன்னைத்
தொக்கின்இடை யினில்மறித்து, "செல்வதுஎவன்?
உனதுஆவி சுரர்ஊர்க்கு இப்போ
புக்கஅனுப் புதற்குவந்தேன்; அருச்சுனன்தன்
முகம்காணப் போக மாட்டாய்;
நிற்கஇவண்;" எனஉரைக்க; நகைத்து,ஆர்த்து,
மணிநகரான் நிகழ்த்த லானான். 243

---

240. கம் - தலை; வை - கூர்மையான; நோக்கால் - கண்களில்.

241. பரிதி - சூரியன்; அருணன்-1. சூரியனின் தேர்ப்பாகன், 2. சூரியன்;

242. சந்ததி - மகன்; எந்தை என்பது சிற்றப்பனாகிய அருச்சுனனை; மதி இயம்புதல் - இங்கு ஆறுதல் சொல்லல்; வெய்தாய் - விரைவாக.

243. பார்த்தன் சிறுவன் - பப்பரவாகனன்; தொக்கு - துவக்கு, சண்டை இங்கு போர்க்களத்தை உணர்த்தியது போலும்.

"மால்இளவல், சுதன்,பேரன், சிறியதந்தை,
மகன்மகனும் வானி யாவும்,
மேலும்எம னாசூரன், மகன்,அமைச்சன்,
தளநீலன், வெய்ய சேனை,
கோல்அமிர்தத் துசனொடு,அவன் சந்ததி,நின்
தானைமற்றும் குறைந்து, மாய்ந்து
காலன்நகர் அடைந்தவிதம் கண்டிருந்தும்,
மிண்டுஉரைத்தாய் காலத்து ஈறால். 244

சமரில்இறந் திடும்வீரர் தங்களிலும்
நீவலிய சமர்த்த னோ?வில்
அமிர்தன்முதல் வீரர்எலாம் அழிந்துபடு
களம்தனைப்பார்; அதனம்பேசும்
துமுகன்முடி தறித்துஒழியச் செயிர்மாறேன்;
நீமழலைச் சுதன்;என் ஏவால்
விமிதவயப் புலிவாயில் மீண்டஉழை
நேர்தாய்க்கு மெய்யன் ஆவாய்." 245

என்றமொழி கேட்டு,இருகண் எரிசொரிய,
"பிதிர்த்துரோகி! எனடா சொன்னாய்?
இன்றுபிதா உனைச்சினந்தால் இகலார்போல்
வினைப்போருக்கு இடம்கொள் வாயோ?
நன்றுபரி பிடித்துஅவனின் பலம்அறியச்
சமர்காட்டி நல்கி னாயோ?
அன்றுஉடனே பரிகொணர்ந்து அடிதொழுதா-
யிலை;அதனால் சினந்தான் ஐயன். 246

பெற்றபிதா சினந்தால்என்? அடித்தால்என்?
வசைகள்பல பேசி னால்என்?
மற்றுஅவனோடு எதிர்ந்துவசை சொலலாமோ?
நீசபதம் வழுத்த லாமோ?

---

244. மால் இளவல் - சாத்தகி, சுதன் - பிரத்யும்நன்; பேரன் - அநிருத்தன்; சிறியதந்தை மகன் மகன் - வீமனின் பேரன், மேகவன்னன், சுன்னன் மகனுக்கு வீமன் சிறியதந்தை; மகன் - சுகலீலன்; அமைச்சன் - சுவேதன்; சந்ததி - மக்கள், சுதர்மத்துசன், சுரதத்துசன்; ஈற்றுக்காலத்தால் என மாறுக.

245.அதனம் பேசுதல் - அதிகப்பிரசங்கம், துமுகன் - அழகற்ற முகத்தை உடையவன், சினங்கொண்டவன், சுமுகன் என்பதற்கு எதிர்ப்பதம். அருச்சுனன்; உழை - மான்; தாய்க்கு மெய்யன் - உன் அன்னைக்கு நிலைத்துள்ள மகன்.

பற்றலர்போல் எதிர்த்துயுத்தம் பணலாமோ?
உனைச்சினக்கப் பற்றுஇல் லானோ?
குற்றமது பார்க்கில்ஒரு சுற்றம்உண்டோ?
(இ)ந்தவிதம் கூறக் கேளாய். 247

குருசபதம் நிறைவேற்றி, கொடும்சுழல்எய்-
தேவேட்டு, குரவர் ஓடச்
செருவிளைத்து, வனம்எரித்து, தேவர்அடங்-
கலைவிரட்டி, திசைஎ லாம்வென்று,
அரியையும்வென்று, அரனைஅடித்து, அசுரரைவென்று,
அமரர்பதி குடியது ஏற்றி,
பொருது,பா ரதம்முடித்தோன் மனம்இளைத்தான்
புதல்வன்எனப் புகைந்தான் உன்னை. 248

அந்தவிதம் அறிந்து ஒதுங்கி, ஆய்ந்தோரால்
செயிர்ஆற்றி, அவனைப் போற்றில்
நந்தன்எனும் கிருபைகொடு நற்குணம்கொண்டு
அனுசரிப்பான் நரன்;"என்று ஓத
இந்தவிதம் செவிக்குஏறாது, இருகண்அழல்
பொறிபரக்க, எண்ணா தே,வாய்
வந்தபடி உரைத்தோனை நினித்தலைஅய
அறுத்தேனேல் மதிப்பார் யாரும். 249

நீயும்அறிந் திடவேண்டி, அவன்தலையை
அறுத்து,நிலத்து இட்ட போது,
ஆயநர னுடன்பொருதோன் அவன்றனக்கும்
மிகஅதிகன் ஆம்என்று ஓர்ந்து,
காய்யுத்தம் செய்;அலது கருதிஊர்க்கு
ஏகு;உனது கருத்துக்கு ஏற்ற
தேஎதுவோ அவ்வாறு செய்;எதிர்த்தால்
யாரேனும் செகத்தில் மாய்ப்பேன். 250

---

247. பற்றலர் - பகைவர்; பற்று - பாசம்.

248. குரு சபதம நிறைவேற்றியது - துருபதனைத் தேர்க்காலில் கட்டித் துரோணர்முன் நிறுத்தியது; சுழல் - மச்சயந்திரம், செருவிளைத்தது - மாடுபிடி சண்டை, விராட பருவததில்; வனம் - காண்டவ வனம்; இங்குப் புகைதல் என்றது சினமும் பாசத்தால தண்டிக்க முடியாத ஆற்றாமையும் சமமாகக் கலந்த மனநிலையை.

249. செயிர்ஆற்றி - சினம் தணிவித்து, நந்தன் - மகன்.

250. காய்யுத்தம் - சினந்துசெய்யும்போர், வினைத்தொகை;

அனல்கடைந்த கழைஅவன்;யான் அதில்பிறந்த
தீ;மகவான் அயமது ஈன்ற
கனத்தஉருக்கு அவன்;அளித்த கதித்தஅனல்
யான்;இதனைக் காண்"என்று ஓதி,
"முனைத்தமுது வைஸ்யனைநின் முதுகினில்வைத்து,
அவன்சுமைஉன் முடியில் ஏற்றும்
எனைத்தகைந்தாய்; விலகுதியோ? எதிர்க்குதியோ?"
எனக்கொதித்தே இரதம் விட்டான். 251

இருவர்களும் சினம்மூண்டு, இருவர்களும்
சிலைவணக்கி, இருவர் தேரும்
பொருவுகயல் சேல்கறங்கு பொற்புறுபம்
பரமதுஎனப் புரிந்து உலாவ,
சரமழைமா றாதுசொரி சலதரம்போல்,
திசைவெளிகள் சரமாய் மொய்க்க,
கரவிரசு தவிராமல் வளைந்ததடி
நிமிராது கணைபெய் தாரே. 252

அவன்உருவும் இவன்உருவும், அவன்தேரும்
இவன்தேரும் அமரர் தாமும்
தவர்சரமும் மதிப்பறியார்; சாகோப-
சாகையதாய்ச் சரம்மென் மேலும்
உவமைஅறச் சொரிய,இடம் அறச்செருமி
வெளியடைத்த உலகம் யாவும்;
திவளும்இரு சுடர்மயங்கி, திசைமாறி
இரிய,உம்பர் திடுக்கிட்டு ஏகா, 253

திசைஅலைய, கரிஅலைய, திக்கயங்கள்
அலற,அலை சுவறித் தீய,
பசையதுஅற, புயல்கருக, பலபலென
உடுஉதிரப் பகழி மாரி

---

251. கழை - தீக்கடைகோல்; இந்திரனாகிய இரும்பில் தோன்றிய எஃகு அருச்சுனன் என்றால் நான் அதனையும் உருக்கும் நெருப்பு ஆவேன் என்றவாறு; முனைத்த - சுருவங்கொண்ட; ஏற்றும்எனை - ஏற்றப்போகிற என்னை; தகைந்தாய் - வழிமறித்தாய்.

252. கறங்கு - காற்றாடி; சலதரம் - மேகம்; கர விரசு - கை வேகம்; தடி - வில்.

253. தவர்சரம் - வில் அம்பு; சாகோபசாகை - புங்கானுபுங்கம்; துவளும் - மெலிகின்ற.

அசலம்உருக் கின;மேரு வதனைஉருக்-
கின;நேமி அடுக்கல் வான
மிசையும்உருக் கின;அதல விதலம்எழு
பூமியினும் மிடைந்த பாணம். 254

சரமதனைச் சரம்பிளந்தும், சிறகுஅரிந்தும்,
முனைகறித்தும், தறித்தும், நேர்ந்தும்,
அரியகுதை அறுத்தும்,நடு அறுத்தும்,அலகு
அறுத்தும்,அலை கடலில் பாய்ந்தும்,
கிரிகளிடை நுழைந்தும்,அடி கிளைந்தும்,அதைப்
பிளந்துஉயரக் கிளர்ந்து காய்ந்தும்,
உரகபுவி இடந்தும்,அமர் உடன்றுவிசை
தொடர்ந்துநின்றது உபயர் வாளி. 255

(தனன தந்ததன தந்ததன தந்ததன)

இருச யந்தனம்உ றும்சரம்அ னந்தம்;அடல்
இவுளி அங்கமதுஉ றும்சரம்அ னந்தம்;உயர்
முரண்நெ டும்கொடிஅ டும்சரம்அ னந்தம்;ஒளிர்
முடிபி ளந்துமுடு கும்சரம்அ னந்தம்;எதிர்
அரண்இ சைந்துசெறி யும்சரம்அ னந்தம்;மிகும்
அரண்அ ழிந்திடஅ டும்சரம்அ னந்தம்;வெளி
விரவு பந்தர்கள்இ டும்சரம்அ னந்தம்;மற
இகல்உ டன்றுஇட றிடும்சரம்அ னந்தம்அரோ. 256

உரம்அ டங்கஉழு கும்சரம்அ னந்தம்; அலை
(உதி)ரம் எங்கும்முழு கும்சரம்அ னந்தம்;உயர்
சிரம்அ டங்க உழு கும்சரம்அ னந்தம்;மிகு
செவிகள் எங்கும்நிறை யும்சரம்அ னந்தம்;இரு
கரமது எங்கும்நிறை யும்சரம்அ னந்தம்;இரு
கவுளது எங்கும்நிறை யும்சரம்அ னந்தம்;நுதல்
முரண்மு கம்களம்உ றும்சரம்அ னந்தம்;இரு
முருக ருஞ்சமர்மு னைந்து,சொரி யும் கணையே. 257

---

254. கரி - நஞ்சு. ஆகுபெயராக எட்டுப்பாம்புகளை உணர்த்தியது; அலை - கடல். ஆகுபெயர்; உடு - நடசத்திரம்; அசலம் - மலை; நேமி அடுக்கல் - சக்ரவாளகிரி; அதலம், விதலம் - கீழ்உலகங்கள். ஏழனுள் முதல் இரண்டு, மற்றவை சுதலம், தராதலம், மகாதலம், இரசாதலம், பாதாளம்.

255. நேர்ந்தும் - எதிர்த்தும், உரகபுவி - நாகலோகம்; உபயர் - இருவர்.

256. சயந்தனம் - தேர், அரோ - ஈற்றசை. 257. முருகர் - இளையோர், முருகு - இளமை.

இருவர் வெஞ்சிலைஅ ழிந்த;பல வெங்கணைகள்
இடற,வெம்பரிஒ ழிந்த;பல வொண்கொடிகள்
உருள்அ ழிந்த;பல . . . கொடைச யந்தனமும்
உறஅ ழிந்த;பல ஒண்குழைஅ றுந்த;பல
கிரண அம்பொன்முடி யும்சிதறு கின்ற;பல
கிளர்மெ யின்பரம்அ ழிந்த;தெருள் கின்றஇரு
உரவ ரும்பன்முறை அங்கமதுஅ யர்ந்து,பினும்
உணர்வு டன்,சமர்உ டன்றனர்ம டங்கல்எனா. 258

தரணி தந்தமகன் மைந்தனுடன் உம்பர்பணி
தலைவன் இந்த்ரன்அருள் சந்ததித ரும்சுதனும்
இரவது ஐந்துபகல் ஐந்துஅமர்உ டன்று,இனி(யும்)
இவனை மிஞ்சவிடல் அன்றுஎனநி னைந்து,அநில
சரமது ஒன்றுஎதிரி தன்திகிரி உந்திஇடை-
தனில்உ தைந்தனன்;அ றைந்துமன்ள ழும்பரதம்
முரண்உ றும்சுழலது என்றுவிசை கொண்டுஉயர
முகடது அண்டமும்உ றைந்துஇலகு கின்றதுவே. 259

கிரிகி ளர்ந்துஎழுவது என்று,முகடு அண்டி,அரி
கிறுகிறு என்றுசுழல் பம்பரமது என்று,இவணில்
விரவி, முன்,புவிவி ழுந்திடு . . . . . .
மெலவி ழுந்தனன்ள ழும்பரிதி மைந்தன்மகன்;
இரத மும்பரிக ளும்பழுது கொண்டுவிழ,
இளவல் ஐங்கடிகை நொந்துஉணர்வ ழிந்து,பிறகு
அரிது டன்தெளிவு வந்து,பரி, தும்பி,அரி
அலது வெங்கழல்கொடு இம்பரிடை நின்றனனே. 260

இவன்ள ழும்புமுனம், வெம்படைஅ டங்கலையும்
.எரிச ரங்கள்கொடு,அ டர்ந்து,தக னம்செய்து,எதிர்
பவன மைந்தன்மகன் மைந்தன்எரி யும்கிரிகள்
பலதும் வெம்பொடிசெய்து, அங்கம்அசைவு ஒன்றற,எய்

---

258. மெ(ய)யின்பரம் - உடற்சுவசம். உரவர் - வீரர்; அங்கமது அயர்ந்து - உடல் சோர்ந்து; மடங்கல் - சிங்கம்.

259. தரணி - சூரியன்; தந்தமகன் - கன்னன், மைந்தன் - விடதீதனன்; சந்ததி - அருச்சுனன்; சுதன் - பப்பரவாகனன், திகிரிஉந்தி - தேர்உருளை; முகடது அண்டம் - அண்டமுசுடு என மாறுக, வானத்து உச்சி, உறைந்து - சஞ்சரித்து.

260. அரி - தேர், பரிதி - சூரியன்; விழுந்தவன் - வீடகீதனன்; அலது - இல்லாமல்; சுழல் - சுரல்; இம்பர் - நிலம்.

தவர்நெ டும்கணைசொ ரிந்தனன்;அ யர்ந்துஉணர்வு
தனைஅ ழிந்து,அவன்ம டிந்தனன் நெடுங்கிரியின்
உவமை கொண்டு;பின்எ முந்தகனன் மைந்தனொடு
உறுதி கொண்டுவிச யன்குமர னும்புகல்வன் 261

"உரிய எம்பிஎன, அன்பினொடுஇ ரங்கி,உனது
உயிர்அ ழிந்தொழிய வும்சரம்உ தைந்ததுஇலை;
எரியின் மண்டபம்நண் மஞ்சும்மெழு கும்பெறுவது
இலை;வி லங்கு"கென வும்,சினமி குந்து,அவனும்,
"அரிதின் உந்தன்உயிர் கொன்றபின்அ கன்றிடுவன்;
அலதுஅ கன்றிடுவது இன்று"எனஇ யம்ப"நலது;
இரத மும்தருவன்; நின்றுஅமர்செய்" கென்றளவில்
இளையவன் சினமி குந்துஎதிர்மொ ழிந்திடுவான் 262

"புயல்ம கிழ்ந்துபுவி யின்புனல்வ ழங்கும்;மிகு
புவிவ ழங்குபொருள் கொண்டதுஇலை அம்புயல்கள்;
அயல்இ ரந்தவர்க ளும்கலிஒ ழிந்திட,என்
அயன்வ ழங்குவன்;இ ரந்திலன்மெய்; உந்தைஅயன்
வயமு குந்தன்இரு அங்கையின் உயர்ந்திடுகை
வலியன் எந்தை;அவன் மைந்தன்எனை நிந்தைசொன
வியன்அ கந்தைகிரு பங்கள்என? உன்கைகொள
வினவு கின்றபொருள் தந்திடுவன்" என்றனனே. 263

நகைபு ரிந்து,எயிறு மென்று,"நலது" என்று,எரிகள்
நயன மும்சொரிய, நின்றளவில் வந்ததுஅரி;
பகல வன்குமரன் மைந்தன்விரை வின்பெரிய
பரிதி அம்திகிரி தங்கி,வில்உ றும்கணைகள்
மிகவி ரைந்துபொழி யும்பொழுது,அ டர்ந்து,அவனும்
மிகுச ரம்கொடுபி ளந்து,வல வன்திகிரி
மகுட மும்சிதற வும்,கவச மும்பொடிய,
வரிவி லும்புரவி யும்கொடிபி ளந்தனனே. 264

---

261. பவனமைந்தன் - வாயு குமாரன், வீமன், மகன் - கடோர்க்கசன் ; மைந்தன் - மேகவண்ணன்; தவர் - வில்; அவன் நெடுங்கிரியின் உவமை கொண்டு மடிந்தனன் என இயையும்.

262. எம்பி - என்தம்பி, நண் - அடைகின்ற; மஞ்ச - பனி, விலங்கு - வழிவிட்டு விலகு; அவன் என்றது விடசீதனனை.

263. அயன் - ஐயன், தந்தை, சுன்னன்; உந்தை அயன் - உன் தந்தையாகிய அருச்சுனனின் தந்தை, இந்திரன், இவன் சுன்னனிடம் இரந்தது கவச குண்டலங்களை; வய முகுந்தன் - வெற்றிமிக்க சுண்ணன்; இவன் யாசித்தது சுன்னனின் அறப்பயன் முழுவதையும்; கிருபங்கள் - கருணை; எனை - என்னை,

இரத மும்சிலைது ணிந்திட,வி ரைந்து,மறு
இரத மும்தனுவொடு உந்த,அது வும்பொடிய,
உரமி குந்தசிலை யும்திகிரி கொண்டுறுமுன்,
ஒருக ணந்தனில்அ ழி(ந்திட),சி னந்து,மறு
பொருவுஇல் திண்சிலைச யந்தனமொடு உந்த,அது
பொடிபொ டிந்திடஇ வன்கணைசொ ரிந்தனன்;வில்
ஒருபெ ரும்திகிரி தங்க,அது வும்பொடிய,
உதவி னன்சரம்மி குந்துஉரசு டன்கதழ்வாய். 265

கவிம ரம்சினைதொ றும்குறிகொள் கின்றநிகர்,
கனன்ம கன்பலகொ டுஞ்சிமிசை கன்றலொடு
தவிஅ லைந்துஉலைய, எண்பதுடன் ஒன்பது,அரி
தறுஅ ழிந்திடவெ குண்டு,வயி ரங்கள்தனில்
நிவர்ச யந்தனமது ஒன்றுவர, அங்குஅதனில்
நிலைசெ றிந்து,அதிலி ருந்துஉற,எ திர்ந்து(அ)அரி
சிவன்எ திர்ந்திடினும் வென்றிடுவன் என்று,உரிய
சிலைவ ளைந்திடமி குந்தகணை சிந்தினனே. 266

இரவி மைந்தன்மகன் வெங்கணைஅ டர்ந்து,வரும்
எதிரி வெஞ்சரம்அ டங்கலையும் வென்று,இரதம்
உருள்த கர்ந்திட,வி லும்கொடிக ளும்பரியும்
ஒழித ரும்படிஉ தைந்திட,வெ குண்டுமறு
இரதம் உந்துமுன்அ ழிந்தது .. ..;
இயல்பின் ஐந்தினொடும் ஐம்பதுஇர தம்சிதற,
விரைவின் வந்தவயி ரம்செறிகொ டுஞ்சியதன்
மிசைஇ ருந்து,உறவி ளங்கினன்ம டங்கல்என 267

கரிய வன்குமரன் மைந்தன்எதிர் நின்றதுஒரு
கதிர வன்குமரன் மைந்தனைம கிழ்ந்து,"நல
செருஉ டன்றனை;ம டிந்திடும்முன் அஞ்சமர்கள்
செயில்இ னம்செய்"கென வும்,சிலிமு கங்கள்பல

---

264. அரி - தேர்; பரிதி - சக்கரம்; திகிரி - தேர்; அவன் என்றது பப்பரவாகனனை.

265. கதழ்வாய் - வேகத்தோடு.

266. கவி - குரங்கு; கொடுஞ்சி - தேர், ஆகுபெயர்; கன்றல் - வருத்தம்; தவி - நிலைகெட்டு; தறு - வில்; நிவர் - உயர்ந்த; அ - அந்த, நெஞ்சறிசுட்டு.

சொரித ரும்பொழுதில், அங்கர்பதி மைந்தன்எதிர்
சுடுச ரம்பலபொ ழிந்துஇடறி, அங்குஎதிரி
இரதம் நன்குறிசெய்து, ஒண்சரமது ஒன்றுவிட,
இகலு டன்சரம்று ழைந்தத்துஇர தம்தனிலே. 268

சரம்று ழைந்துஇரத மும்கொடுஎழ வும்,சுழல்கொள்
சருகது என்றுஅதுஉ யர்ந்து,முக டும்தடவி,
விரிக றங்குஎனவி ழுந்ததுசெ கம்குலைய;
விழ,இ ரண்டுகனல் மங்கி,உயிர் வந்து,இனிது
தரையில் நின்று,செயிர் கொண்டு,இளவல் அஞ்சஒரு
சரம்மு ரண்சிலையில் மந்திரமொடுஉ தைந்திடும்முன்,
"உரமொடு உந்தன்உயிர் உண்கவரு கின்றதுஇது;
ஒருமை கொண்டு,உணர்மு குந்தன்அடி சிந்தையிலே," 269

எனஅ றைந்து,வி டும்கணைஅ னந்தம்இடி
எனவி ரைந்துஉற,மு ழங்கிவரும் அம்பின்மிசை
கனம்மி குந்துசொரி கின்றதென வும்,சிலையில்
கணிதம் இன்றிஅவ னும்கணைசொ ரிந்தளவில்,
அனல்ப டும்சருகது என்று .... கொண்டசர-
மதனி லும்பதி(ன்) ம டங்குசொரி கின்றதையும்
முனிவு கொண்டுதக னம்செய்து,இர தந்தனையும்
முகடு தண்டவும்அ றைந்துஉகம றைந்ததுவே. 270

முகடு தண்டவும்அ றைந்து,கிரி வம்துருவி
முறிய, முண்டம்ஐஇ ரண்டுதுணி கண்டு,உடலம்
உகைச யந்தனமொடு ஒன்றிவிழ வும்,புவியில்
உலகம் உண்டஒரு வன்பெயர்அ டங்கலையும்
மகிழ்வு டன்துதிசெய்து, "உன்சரணம் அண்டியஎன்
மனது சஞ்சலம்ஒ ழிந்தனன்;மெய்; எந்தைஎனும்
இகல்த னஞ்சயன்உன் நண்பனைஉ வந்துஅருள்செய்;
இகப ரங்களிலும் உன்கழல்ப ரம்;பரமே" 271

---

268. கரியவன் - இந்திரன்; சிவிமுகங்கள் - கணைகள்; அங்கர்பதி- கன்னன்.

269. செகம் குலைய - உலகம் அஞ்ச; க(ன்)னல் - நாழிகை; ஒருமைகொண்டு - ஐம்புலன்களை ஒடுக்கி; உணர் - தியானம்செய. ஒருமை கொண்டு முருந்தன் அடி சிந்தையிலே உணர்என இயையும்.

270. கனம் - மேகம், சிலை - வில்; சொரிந்தளவில் - பொழிந்தபோது; முனிவு - சினம்.

271. கிரிவம் - சுழுத்து, துருவி - துளைத்து; துணி - துண்டுகள்; பரம் - அடைக்கலம்.

எனமொ ழிந்து,சிரம் அந்தரம்இ ருந்துஇளகி,
இயல்த னஞ்செயன்ர தந்தனைவ லஞ்செய்து,பின்
முனம்இ ரும்சரண்இ றைஞ்சியது; கண்டவுடன்
முகம்ம ழுங்கி,இத யங்கள்அழல் பொங்கி,விழி
புனல்சொ ரிந்து,அலறி, அம்புவிவி ழுந்து,அழுது,
புலன்அ ழிந்து,உடல் நடுங்கினன்;உ ருண்டு,மதி
மனம்அ ழிந்து,உண(ர்) வு மங்கியும்அ யர்ந்து,பினும்
மதிதெ ளிந்து,பின்ம ருண்டு,உடல்பு ரண்டனனே. 272

(அறுசீர் விருத்தம்)

சஞ்சலத் திரையில் தாழ்வன்; தவிப்பன்நெட் டுயிர்ப்பன்; ஏங்கி,
அஞ்சன மேனி யான்தன் ஆயிரம் நாமம் சொல்வன்;
துஞ்சிட அறுத்த சேவல்த் துடிப்பொடு துடிப்பன்; சோர்வன்;
நஞ்சுஅருந் தியசேல் ஒத்தே நடுநடு நடுங்கி வீழ்வன். 273

அடிக்கடி சோபித்து ஏங்கி, அலமலந்து அயர்ந்து வீழ்வன்;
முடித்தலை அதனைக் கண்ணில் முகத்தினில் கவுளில் மார்பில்
திடத்தினில் அணைப்பன்; கூவித் தியங்குவன்; ஐயா என்பன்;
புடைப்பன்ஆ னனத்தில் கையால்; புலம்புவன் பொருவி லானே.
274

"இப்படி வரும்என் றேமுன் இயம்பினேன்; என்சொல் கேளாது
அப்பநீ பிதாத்து ரோகி அம்பினால் உயிர்விட் டாயே?
தப்பிஊர்க்கு ஏகாது, என்னைத் தனித்துவிட்டு ஏக லாமோ?
ஒப்பிநின் தாய்க்கும் எந்தன் உறுதுணை வோர்க்குஎன் சொல்வேன்?
275

என்னையும் நிறுத்தி, புத்தி இயம்பி,என் பாரம் தாங்கி,
அன்னம்ஆ காரம் இன்றி ஐந்துஇராப் பகலும் வெம்போர்
உன்னைநேர் செய்தார் உண்டே? உன்னுடன் அழைத்துஏ காமல்
என்னைவிட்டு ஏக லாமோ? இன்னம்என் உயிர்வைத் தேனே 276

---

272. இளகி - இங்குக் கீழே இறங்கி, கண்டவன் அருச்சுனன். மழுங்கி - பொலிவிழந்து; புலன் அழிந்து - இந்திரியங்களின் அறியும் தன்மை கெடடு.

273. சஞ்சலத்திரை - கவலைக்கடல், உருவகம்.

274. தியங்குவன் - மனச்சோர்வடைவான்; ஆனனம் - முகம்.

276. பாரம் - கடமைப்பொறுப்பு.

முன்னவன் என்றே பன்னாள் முன்அறி யாத தாலே,
நின்ஐயன் தனைநான் கொன்றேன்; நினைஇவன் அறிந்தும் கொன்றான்;
மன்னவர் மாக்கள் நின்னை மகன்கையால் கொல்வித் தான்என்று
என்னைஎவ் வண்ணம் தூற்றார்? என்செய்வேன்" என்று வீழ்ந்தான். 277

வீழ்ந்துஅயர்ந் திடுவன்; தேறி, விழித்துஎழுந் திருந்து, மீண்டும்
மாய்ந்தவன் போலச் சோர்வன்; மறுத்துஎழுந் திருந்து, விம்மி,
சாய்ந்தவில் சிரசைப் பார்ப்பன்; சலித்துஇவ்வாறு அலறும் சத்தம்
காய்ந்தவாள் படையான் கேட்டு, கடவித்தேர் முடுகி வந்தே, 278

"என்னைநீ பிதுர்த்து ரோகி என்பதுஎன்? சிசுத்து ரோகி!
சென்னிஈந் தனைஓர் சேயை; செயம்அவா மற்றுஓர் சேயை
ஒன்னலர் உயிரைக் கோற உதவினை; ஒழிந்தோர் கர்ப்பம்
தன்னையும் அசுவத் தாமன் சரத்தினுக்கு இரையது ஈந்தாய்; 279

அறிவழிந் தவனே! பேடி! அர்ச்சுனா! அதனைப் பேசும்
உறுதியும் வீரம் மான உரசும்மற்று உகுத்திட் டாயோ?
அறுசுதன் தலைமுன் போட்டு அரிவைநேர் புலம்ப லுற்றாய்;
.... கிருடிநீ விருத்த நாய்கன். 280

விருத்தன்கண் புகைச்ச லாலே முடிவினை மதிக்கி லாய்;என்
வருத்தம்யான் மதிக்கச் .... முன்நாள்
நிருத்தன்பால் தபசு பண்ணி நிகர்இல்ஓர் கணைபெற் றாயே
சிரத்தைவிற்று, இனம்ஓர் பாணம் சிவனிடம் பெற்றுஇங்கு எய்தாய்; 281

அனல்கடை ஞெலிகோல் மாய அதன்வய வயிரத் தாலே
கனல்பிறந்து அதனை வாட்டும் காதைஒத்து அறுப்பேன் நின்னை;

---

277. முன்னவன் - தமையன்; நின் ஐயன் என்றது கன்னனை; இவன் - பப்பரவாகனன்; அறிந்தும் - பெரிய தந்தையின்மகன் எனத் தெரிந்திருந்தும்.

278. படையான் - பப்பரவாகனன்.

279. சென்னி ஈந்தது - விடகீதனன், தன்னிடம், மற்றோர் சேய் என்றது அபிமன்யுவை; ஒழிந்தோர் - உபபாண்டவர்கள். இவர்கள் தாயர் கருவிலிருக்கும் பொழுதே அசுவத்தாமனால் கொல்லப்பட்டனர்

280. அரிவை - பெண்.

281. நிருத்தன் - நடராசர் பெற்றது பாசுபதம்; சிரத்தை- விடகீதனின் தலையை எனச்சுருதுகிறான் போலும்; எய்தாய் - எய்துவாய், வா.

மனக்கிரு பத்தால் என்தாய் வணிகனுக்கு உனைப்பெற் றாள்என்று
எனைச்சொன மதத்தோடு ஆயி இறுப்பன்இக் கணத்தில் காணாய்.
282

துர்க்குணம் உடையாய்! உன்னைத் தொடர்ந்தவர் யாரும் மாய்ந்து,
நல்கடம் கிடத்தல் நோக்காய்; மர்க்கடம் அனைய நாய்கா!
புற்குணத் தாலே வீறும் புகழும்வந்து அடைவது உண்டோ?
விற்குண வீர னோநீ? விடமொழிக் கொடிய பாவி! 283

நின்பலம் தனையும் எந்தன் மிடலையும் நிறுத்து நோக்காய்;
வன்பிழை உரைத்து, வேட்ட மன்னரைத் தளத்தை எல்லாம்
துன்புற மடிவித்து எய்த தோஷமும் பரித்தாய்; நீயும்
பின்புஇறந் திடுவது அன்றிப் பிழைப்பதற்கு உறுதி உண்டோ? 284

நின்மகன் என்ற என்னை நிந்தனை சொன்ன வாயால்,
'உன்மகன் யான்அப் பாஎன் உயிர்தரு கெ'னச்சொற் றாலும்
என்மனம் இரங்கி லேன்இன்று இந்திரன் இரந்திட் டாலும்;
வின்மக னாகிப் போர்க்கு விரைந்துஎழுந் திருடா" என்றான். 285

சொன்னசொல் அழல்ச லாகை செவியினில் சொருகல் ஒத்தே,
நல்நினைவு ஒழிந்து, செந்தீ நயனங்கள் சொரிய நோக்கி,
சென்னியைத் தேரில் போட்டு, திண்சிலை கரத்தில் ஏந்தி,
வன்னியும் நடுங்கக் காய்வோன் வன்குணத் தொனிசெய் தானே.
286

சிஞ்சினி ஓதை யால்எண் திக்கயம் கிரிகள் பாலர்
அஞ்சினர் அலம லந்தே; அவனிகோ நடுங்க, தேவர்
எஞ்சிட, திசைகள் மாறி இருசுடர் வெருவி ஓட,
மஞ்சினம் கலங்கி ஏங்கி வரைக்குகை பதுங்கி மல்க, 287

வரைக்குலம் பொடிய, மிக்க வடகிரி உலைய, ஆழ்ந்த
திரைக்கடல் சுவற, வான்மீன் சிதறியே உதிர, தேரை

---

282. ஞெலிகோல அதன்வயிரத்தாலே கனல்பிறந்து அதனை மாயவாட்டும் காதை என இயையும்; கிருபம் - சுருவம் என ஆட்சி போலும்.

283. கடம் - உடல்கள்; மர்க்கடம - குரங்கு, புற்குணம் - இழிந்த பண்பு

284. மிடல் - வலிமை; வேட்ட - நின்னை விரும்பியடைந்த; பரித்தாய் - சுமந்தனை.

285. நிந்தனை சொன்ன வாயால்(நீ) உயிர தருக எனச் சொற்றாலும், இந்திரன் இரந்திட்டாலும் இன்று என்மனம் இரங்கிலேன் என இயையும்; வில் மகன் - வில்லேந்திய ஆண்மகன்.

286. அழல்சலாகை - சுடுகின்ற ஈட்டி, வினைத்தொகை; சென்னி - விடகீதனின் தலை; வன்னி - தீக்கடவுள்.

287. சிஞ்சினி - வில்லின் நாண்; பாலர் - எண்திசைப்பாலகர்; அவனி தேர - உலகமும் வானும், உம்மைத்தொகை; மஞ்சுஇனம் - மேகக்கூட்டம், வரை - மலை.

நெருக்கியே கடவி வந்த நிருபனை நோக்கி, மைந்தன்
உரைத்தனன்- "இதற்குள லாம்யான் ஒல்கிலேன்; யுத்தம் செய்மின்.
288

பஞ்சுவெட் டுவதுஏன் ஏழைப் பாவையர் போல? பாணம்
மஞ்சுஎனச் சொரியும் அந்த வலுவும்கை விரசுஉண்டு என்பார்;
விஞ்சைவில் தொழிலைப் பார்க்க விடுகணை விரசின்; அல்லால்
அஞ்சன மேனி யானை அழைக்கினும் பிழைக்க வொட்டேன்." 289

என,கடு கடுத்து, கண்கள் எரிசொரி தர,வில் ஏவு
பனித்தனன் கனத்தை நேர; பரப்பி,எத் திசையும் தூர்த்து,
கனைக்கும்மைக் கடலும் தூர்த்து, கதிர்க்கிர ணங்கள் மாற்றி,
தனித்தவேட்கு இடம்கொ டாமல் தகைத்தனன் தனையன் தேரும்
290

அசைவுஅறப் பகழி யால்தேர் அரணம்செய்து, தகைந்தான்; ஒல்லை
விசையன்வில் தொழிலைப் பார்த்து மெய்யனும் நகைத்து,"இம் மட்டோ?
இசைஇகல் இனமும் உண்டோ? இனிச்சாவ தான மாகச்
சசிகுலா திபன்என் றால்(நீ) சரமழை பொழிக" என்றே, 291

அந்தரம் திசையும் தூர்த்து, அரண்செய்த பகழி முற்றும்
சிந்துவில் சரத்தி னாலே திரித்து,இமைப் பதற்கு முன்னே,
தந்தையும் மயங்க, தேரைச் சாற்றுஅரண் செய்து கட்டி,
உந்திய திசைவான் திக்கும் ஒழுங்குற அடைத்திட் டானே. 292

வீரனும் மகனும் இந்த விதம்முறை முறைய தாகப்
பேர்அமர் தொடங்கிப் பாணம் பெய்தனர் கைம றாமல்;
வாரிதி சுவற, பார வருணனும் அலற, தேவர்
நாரதர் முதலி னோரும் நடுநடு நடுங்கி னாரே. 293

---

288. நிருபன் - மன்னன், அருச்சுனன்; மைந்தன் - பப்பரவாகனன்.

289. பெண்கள் பருத்தியைத் தூய்மை செய்ய வில் எனும் கருவியால் அடிப்பர்; நீ ஏன் அப்படி வீணே நாண்ஒலி செய்கின்றனை என்கிறான். அஞ்சனமேனியான் - கண்ணன்.

290. என - என்று பப்பரவாகனன் சொல்ல; கடுகடுத்து அம்பு எய்தவன் அருச்சுனன்; வேள் - இளைஞன், இங்கு பப்பரவாகனன்.

291. சசிகுலாதிபன் - சந்திரவம்சத்துஅரசன்.

292. சிந்துவில்சரம் - வில்சிந்து சரம் என மாறுக. வில்வால் சிந்தப் படுகின்ற சரம் என விரியும். பிறவினைப் பொருளில் வந்த வினைத்தொகை. 293. வாரிதி - கடல்.

(வண்ண விருத்தம்)
(தனதன தந்தன தந்த தானன)

இருவரும் நின்றுஅம ரம்செய் போதினில்
எரிகள்ப ரந்தன; அண்ட கோளம்மெய்
கிரிகள்ந டுங்க,வ ரங்கள் ஆர்கரி
கிடுகிடது என்றுஉலை கின்ற; வானவர்
உரகரும் மைந்தரும் நின்று வாடினர்;
உயர்புயல் என்றுஇரு வெம்ச ராசனம்
முரண்வளை வின்கணை சிந்தி, லோகமும்
முழுகிநி ரம்பிட, நின்று வீசினர். 294

சிலகணை அந்தரம் நின்று உலாவின;
சிலகணை மந்தரம் நின்று உலாவின;
சிலகணை எண்திசை சென்று உலாவின;
சிலகணை மண்டலம் விண்டுஉள் ஓடின;
சிலகணை அம்புயல் ஒன்றி ஓடின;
சிலகணை வெண்திரை கும்பல் நீடின;
சிலகணை எண்கயம் அஞ்ச ஊடின;
சிலைகணை எங்கணும் நின்று மோதின. 295

கணைசிறகு அந்திட நின்று சீறின;
கணைமுனை துண்டுசெய்து இங்கு உலாவின;
கணைநடு விண்டுபின் நின்று சாடின;
கணைஅலகு ஒன்று,அற வென்று மீறின;
கணைகணை நின்றுஅம ரம்செய்து ஆடின;
கணையிடை சென்றுபி ளந்துஉள் ஊறின;
கணைதனை நின்றுளரி கொண்டு மாழ்கின;
கணைகள்பி ணைந்துஎதி ரும்ச மானமே. 296

இருவர்சி ரங்கள்பு தைந்த வாளிகள்;
இருவர்கள் அங்கம்நி றைந்த வாளிகள்;
இருவர்பு யங்கள்று ழைந்த வாளிகள்;
இருவர்மு கங்கள்உ றைந்த வாளிகள்;

---

294. வரங்கள் - சிறப்புகள்; கரி - யானை, திக்குக்கயம்; மைந்தர் - மண்உலகினர்; சராசனம் - வில். 295. மந்தரம் - மந்தரமலை. 296. விண்டு - முறிந்து; மாழ்கின - அழிந்தன.

இருவர்கு ளங்கள்நி மிர்ந்த வாளிகள்;
இருவர்க ரங்கள்செ றிந்த வாளிகள்;
இருவர்வ யின்கண்உ றைந்த வாளிகள்;
இருவர்கள் அங்கம்நி றைந்த வாளியே. 297

உரசுமி குந்துஅம ரம்செய் போதினில்
உயர்விச யன்கைமி குந்து, கோல்மழை
சொரிபொழுது, அங்குஅவன் உந்து தேர்சிலை
துவசமு டன்பரி யும்கி ரீடமும்
எரிதுகள் கொண்டிட, நின்று, வேறுஒரு
இரதமது உந்தி,வி லும்சி லீமுகம்
விரசொடுஅ டர்ந்துசொ ரிந்த போது,இவன்
விலகிமி கும்சரம் நின்று வீசினன். 298

இரதமு டன்பரி யும்ப தாகையும்
இடதுகை யின்தனு வும்பல் தூள்பட,
நரன்மகன் அங்கொர்கொ டுஞ்சி ஏறவும்,
நரன்அதை யும்பொடி கண்ட போது,அவன்
வரும்ரதம் அங்குஅதில் உந்தி ஏறவும்,
மழைநிகர் அம்புசொ ரிந்து நீறுசெய்து
உரமொடு நின்றிட, மைந்தன் வேறுஒரு
உயர்ரதம் வந்ததில் ஒன்றி ஏறினன். 299

அதனையும் வென்றிட வுமசி லீமுகம்
அளவில்சொ ரிந்திட, இந்த வாறுஇரு
சதமதொடு ஒன்பது சிந்தி, தேர்பரி
தகர்தர வென்றபின் நந்தன் வாடி,மெய்
மதிசொல்ம யங்கி,உ ணர்ந்து, வேறுஒரு
வயிரர தம்தனில் உந்தி ஏறிட,
முதிர்சிலை கொண்டு,சி னந்து, நீள்கணை
முகில்என நின்றுசொ ரிந்த போது,அவன் 300

---

297. வயின் - வயிறு; முதலடி., சற்றடி இரண்டி லும் பிற்பாதி ஒன்றாகவே இருத்தலால் சற்றடி யின் பிற்பாதியை, "இருவர்கள் பொங்கி உடன்ற போதிலே" என இறுதி விளக்காக்கின் சிறப்பாக இருக்கும்.

298. அவன் - பப்பரவாகனன்; சிலீமுகம் - கணை; இவன் -அருச்சுனன்.

299. நரன் - அருச்சுனன். 300. நந்தன் - மகன், பபரவாகனன்; அவன் - அருச்சுனன்.

(தனதன தனதன தனதன தனனா)

மணிநகர் அதிபதி விடுதொடை அவைதாம்
வரிசிலை விசயன்மெய் தொறும்நுழை தரவே,
அணையின்மெய் அயர்வொடு விழ,இவன் எதிர்சூழ்
அரிகரி பரிநரர் அரசர்தம் இடையே
கணைமழை பொழிசெய்து, மலைமலை எனவே
கரம்இடை தொடைமுகம் விழிசெவி களுமே
துணிபட, ரதமொடு துவசமும் அறவே,
துரகதம் முடிஅடி இடைதுகள் பட்டவே, 301

எதிர்உறு படைஞர்கள் விடுபல படையே
எதிர்செய, மணிநகர் அதிபதி விடுகோல்
சதுபடை ஞர்கள்அவ யவம்அற, நொடிபோ-
தளவினில் எதிர்தளம் அறஎய்த கணமே,
மதிகுல விசயனும் அயர்வது தெளிவாய்,
வளைவுறு படைஞர்கள் மடிவதை விழியால்
எதிர்கொடு தரிசனை செய்து,விழி தழலே
இறைதர, முனிவளை வதுதவிர்வு அறவே, 302

எழுகடல் உளபுனல் முழுதையும் அளியே
எழுமுகில் சொரிவது நிகர்விச யனுமே
பொழிதர, அவன்மிகு கரவிர சுடனே
பொருகணை விலகிட இருசரம் எயவே,
அழிபட இவன்எய அவன்வில கியுமே,
அவன்எய இவன்வில கியும்இரு வருமே,
இழுதனு நிமிர்வுஅற விடுவதில் உலகோர்
எவர்பயம் இலர்அவர் இகல்சரம் அதனால்? 303

தனையனும் அயனும்இ விதம்முறை முறையே
சரமெய்து விலகிடு தருணம்,வி லியுமே
முனிதனில் மிகுசர விரசொடு விடுகோல்
முடுகி,ம தலையின்மெய் முழுகிய கணையால்

---

301. இவன் - பப்பரவாகணன், அரி - தேர்; துரகதம் - குதிரை.

302. சதுபடைஞர்கள் - நால்வகைப்படையினர்; நொடி போதளவினில் - கண்ணிமைக்கும் நேரத்திற்குள்; மதிகுல - சந்திரவம்சத்தில் தோன்றிய; முனி - வில்.

303. அளியே - அள்ளியே; தனு - வில்.

தனுவயி ரமில்அமை இரதமும் உருள்மா
தவிடுபொ டியதென உதிர,மெய் அதுஎலாம்
வினம்உற நுழைவது சலடையது எனவே,
விரவின துளையதில் அயர்வுடன் விழவே, 304

உடல்அசைவு அறஅயர் வுடன்அவன் விழவே,
உததியின் நிகர்வரு படைதனில் மிகுகோல்
மிடலொடு தொட;இடி அனல்அநி லமுமே
விரைவுடன் எயமிகு கணைபல விடவே,
படிதனில் மலைமலை நிகர்பிணம் விழவே
பருகின; சருகிடை வடவரை நிகரே
தடைஅற எரிசெய்து, கிடுகிடுள னவுமே,
சடசடெ னவும்இடி தழலுடன் விழவே, 305

கசரத துரகத அனிகம்மெய் அதுவே
கருகிமொய் அறஉடன் மடிதர இடைகால்,
குசைபரி முடிவிழி முகம்நுத லுடனே
குறைஅறு பட,மத கயமுடி மலைபோல்
விசிறிமு றமதுஎன இருசெவி விழவே,
மிகும்உரல் எனஅடி தறிபட, உயர்தூண்
இசைவன கரம்விழ, ரதமஸ்து பொடியாய்
எரிபட, நரர்அவ பவம்இட நிகவே. 306

முனைமுகம் உறுபல படைஅழி தரவே
முரிவுசெய் திட,எழு கடிகைவில் மணியே
தொனிசெயில் மடிவதுள வளவுஎன அறிவீர்;
சுதன்எழு கடிகையில் உணர்வது தெளிவாய்,
"அனிகமது அழிவதுஇது எனபுது மையதாம்!
அறிகிலன்" எனமனம் அயர்வுடன் இவன்ஓர்
குனிசிலை யுடன்இர தமும்வர, அதிலே
குறுகிவில் நிமிர்வுஅற, இருவரும் எயவே, 307

---

304. அயன் - தந்தை, அருச்சுனன்; விலி - வில்லி, அருச்சுனன்; மதலை - மகன், பப்பரவாகனன்; வயிரமில் - வயிரத்தில், அத்துச்சாரியை கெட்டது, வினம் - பின்னம், வடமொழியில் பகரவகரங்கள் மாறி வழங்கப்படும் நெறிபற்றிய வழக்குப்போலும். சலடை - சல்லடை

305. மிகுகோல் மிடலொடு தொட(அவை) பிணம் விழவே பருகின, தழலுடன் விழவே பருகின என்க. பருகின இடைநிலைவிளக்கு.

306 மொய் அற - (தம்) வலிவிழந்து; இடைகால் - துன்புறும் போது; குசை - கடிவாளம்; குசைபபரி எனற்பாலது சந்தம் நோக்கிப் பகரமெய்கெட்டு நின்றது; கயமுடி - யானைத்தலை; இசைவன - நிகர்வன; நரர் - காலாட்படையினர்.

307. எழுகடிகை - ஏழு நாழிகை.

(தனதானன தந்தன தந்ததனா)

அதிவீரது ரந்தர மந்தரம்நேர்
அழகார்இர தங்கள்இ ரண்டையுமே
கதியாகவ லங்கள்இ டங்களுமே-
கடலூடுசு ழன்றபெ ரும்கிரிபோல்,
விதமேவுக றங்கொடு பம்பரமாய்-
விசையோடுசு ழன்றுதி ரிந்தனவால்;
இதுதாதைஇது ஒண்சுதன் என்றுஉணராது
இமையோரும்ம யங்கிஒ டுங்கினரே. 308

மினல்மாறிவி ளங்குவது என்றுஇருதேர்
விசையோடுஉலகு எங்கும்இ யங்கிடவே,
கனம்மாரிபொ ழிந்திடல் என்றுஇருவோர்
கணைமாரிநி ரந்தர மும்சொரியா,
முனைமாமுனை ஒன்றினை ஒன்றுகவி
முதுமூஉலகு எங்கும்உ டன்றிடவும்,
நனிசேர்அல கும்சிற கும்கொயவும்,
நடுவூடுபி ளந்துவி ளங்கிடவும், 309

சிலவாளிசி ரங்கள்பு தைந்திடவும்,
சிலவாளிமு கங்கள்பு தைந்திடவும்,
சிலவாளிகு ளங்கள்பு தைந்திடவும்,
சிலவாளிக ளங்கள்பு தைந்திடவும்,
சிலவாளிபு யங்கள்அ ழுந்திடவும்,
சிலவாளிஉ ரங்கள்பி ளந்திடவும்,
சிலகோல்உத ரங்கள்று ழைந்திடவும்,
சிலஆசுகம் உந்திபு குந்தனவே 310

சிலகோல்துவ சங்கள்றி றைந்திடவும்,
சிலகோல்கவ சங்கள்றி றைந்திடவும்,
சிலகோல்இர தங்கள்றி றைந்திடவும்,
சிலகோல்துர கங்கள்றி றைந்திடவும்,

---

* இதனை எட்டுப்புளிமாச் சீர்களானியன்ற ஆசிரிய விருத்தம் எனினும் ஆம்.

308. துரந்தர - வலிமை மிக்க; கதி - செலவு. 309. சொரியா - சொரிந்து; கவி - கவ்வி.

310. உதரம் - வயிறு, ஆசுகம் - அம்பு; உந்தி - கொப்பூழ்

சிலகோல்உருள் எங்கம்நி றைந்திடவும்,
சிலகோல்சிக ரங்கள்நி றைந்திடவும்,
சிலகோல்வல வன்கம்உ றைந்திடவும்,
சிலகோல்இன மஞ்சில்உ றைந்திடவும் 311

சிலகோல்திசை எங்கும்நி றைந்திடவும்,
சிலகோல்திரை எங்கும்நி றைந்திடவும்,
சிலகோல்கக னங்கள்நி றைந்திடவும்,
சிலகோல்புவி எங்கும்நி றைந்திடவும்,
சிலகோல்கரி அங்கம்ம றைந்திடவும்,
சிலகோல்கிரி எங்கும்உ றைந்திடவும்,
சிலகோல்வெயில் அங்கம்ம றைந்திடவும்,
சிலகோல்புயல் எங்கும்உ றைந்திடவும், 312

எழுநாள்இர வும்பக லும்தொடர்பாய்
இருவீரரும் வெஞ்சம ரம்செயலால்,
அழலானது பொங்கியது இம்பர்எலாம்;
அடல்கால்மலை வெந்துபொ டிந்திடலால்
மழுவாளிவி ரிஞ்சனும் அஞ்சினரே;
மகவானொடு சுந்தரி அஞ்சினரே;
குழுவானர்ம யங்கிந டுங்கினரே;
குலநாகரும் எஞ்சிந டுங்கினரே. 313

சலராசிப டிந்து,நெ டும்புயல்கள்
சலமானது,அ டங்கமு கந்து,உரமாய்
நிலமாதுகு ழிந்திட விண்டிடவே,
நெடுமேருபி ளந்துகி ழிந்திடவே,
விலகாது,சொ ரிந்திடல் என்று இருவோர்
விலின்வாளிசொ ரிந்தனர் சந்ததமே
உலவாது;உல கங்கள்அ டங்கலுமே
யுகம்மாறல்இது என்றுந டுங்கினவே. 314

---

311. வலவன் சும் - தேர்ப்பாகனின் தலை; இணமஞ்சு - மஞ்சுஇனம் என மாறுக, மேகக்கூட்டம்.

312. கரி - திசையானை; அங்கம் - உடல், வெயில் - சூரியன்.

313. மழுவாளி - சிவபெருமான்; விரிஞ்சன் - பிரமன்; மகவான் - இந்திரன்; சுந்தரி - சசிதேவி போலும்; வானர் - வானுலகத்தார்.

314. சலராசி - கடல்; சொரிந்திடல் என்று - பொழிவதைப் போல; உலவாது - குறையாமல்; இருவோர் சந்ததம் உலவாது சொரிந்திடல் என்று வாளி சொரிந்தனர் என இயையும்.

"அடக்ரீடி!உன் விஞ்சைஅ டங்கலுமே
அறிவேன்;இள விஞ்சைஅ டங்கலும்நீ
திடமாய்அறி கின்றனை" என்றுஉரையே
செயும்நேர்அரி யின்சப தங்களதால்
அடல்யாவும்ம றந்து,மு குந்தனையே
அழகாகமி குந்துபு கழ்ந்திடவே,
மிடல்ஆகம்உ ணர்ந்துதெ ளிந்திடவே,
மெயன்வாய்மைவி ளம்புவன் வன்புடனே- 315

"அடல்மீதும டிந்திடும் உன்திறம்மெய்;
அமர்ஏது?மி குந்துசெய்; அண்டர்கள்தன்-
னிடமீதுவ ரங்களில் வந்தகணை
எழிலாகவிடு" என்றுப கர்ந்தனன்;வான்
இடிநேர்தொனி கொண்டுமு ழங்கிடவே,
எழிலார்விச யன்சினம் மிஞ்சியுமே,
நெடிதுஆனஅ ரும்சிலை தங்கியுமே
நிமிராவிதம் அம்புசொ ரிந்தனனே. 316

எனவேவிச யன்சர பஞ்சரமாய்
இகல்வாளிபொ ழிந்தஅ னந்தமகா
வினையோடுசொ ரிந்திட, நந்தனுமே
வினைவாளிபொ ழிந்துஎய்து வென்றிடவே,
அனபோதுஅழல் வெங்கணை சிந்தினவால்;
அயிராவதன் மைந்தன்அ ரும்சரமே
கனலாய்உல கங்கள்அ டங்கலுமே
கரியாகள ரிந்துப ரந்ததுவே. 317

வரைகானகம் அந்தர மும்புவியும்
அழலாகள ரிந்துப ரந்திடவே,
உரமாய்வரு ணன்கணை மைந்தனுமே
உதையாமுனம், முன்சொரி யும்புனலால்
எரியானதுஅ விந்தும டிந்திட,மேல்
இருள்ஆசுகம் ஒன்றுஎய்து நின்றளவே,
திரையாய்இருள் பொங்கியது; இம்பருடன்
திசையாவும்வி ழுங்கிநி மிர்ந்ததுவே. 318

---

315. அரி - பகைவன், இங்குப் பப்பரவாகனன். 316. அண்டர்கள் - தேவர்கள்.
317. நந்தன் - மகன், பப்பரவாகனன்; சிந்தினவால என்புழி ஆல்அசை; அயிராவதன் - இந்திரன்.
318. வரை - மலை; இருள் ஆசுகம் - இருட்டை உண்டாக்கும் பகழி.

(தனதந்தன தந்தன தந்தனனா)

இருள்அம்புவி எங்கும்நி றைந்ததனால்,
இருவெண்கலை தங்கிய ஒண்கணையே
விரைவின்தொடு முன்பு,வி ழுங்கிட,மெய்
விசயன்தொடு கின்றனன் அங்கவன்மேல்
அரவின்சரம்; இங்குஇவ னும்தொடவே
அலகின்றிஅ னந்தம்மி குந்தஅரா
கருநஞ்சுசொ ரிந்துப ணங்கள்கொடே
ககனம்புவி எங்கும்நி றைந்தனவே. 319

திகைஅந்தர மும்சக மும்கடலும்
செருமும்தழல் நஞ்சுஉமி ழும்பணிமேல்
ககமன்கரு டன்கணை பின்தொடவும்,
கதழ்வின்கலு ழன்குலம் எங்குமதாய்த்
தகுசொண்டுந கம்சிற கும்படவும்
தகரும்படி கொன்றுபி ளந்திட,மேல்
தொகுதந்திமு கம்செறி யும்சரமும்
தொடுகின்றனன் நின்றத னஞ்சயன்மேல். 320

முசலம்தடி சங்கிலி கொண்டு,மதம்
ஒழுகும்பல குஞ்சரம் வெஞ்சினமாய்-
அசலங்கள்ப ரந்துநெ ருங்கல்என-
அடல்கின்றது,அ றிந்து,த னஞ்சயனும்
விசையின்கணை மங்கிட நுங்குகென,
மிகுசிங்கமு கம்கொள்ச ரம்தொடவே,
நசியும்படி சென்று,பி ளந்து,இடிநேர்
நடலம்கொடு உண்டுதி ரும்பியதே. 321

---

319. இரு - பெரிய, வெண் - வெண்மையான; கலை - சந்திரன்; அரவின் சரம் - நாகாத்திரம்; அரர - பாம்பு; பணங்கள் - பாம்பின் படங்கள்.

320. செருமும் - திறைகின்ற; பணி - பாம்புகள்; ககமன் - பறவைகளின் அரசன்; கலுழன் - சுருடன்; சொண்டு - பறவையின் அலகு; தந்தி - யானை.

321. முசலம் - உலக்கை; குஞ்சரம் - யானை; அசலம் - மலை; நுங்கு கென - விழுங்குவாய் என்று; நசியும் படி - (யானை முகக்கணை) அழியுமாறு; நடலம் - செருக்கு.

(தனதானன தந்தன தந்தனனா)

மகவான்மகன் வெந்தரு வின்கணையை
மறமாய்விட, எங்கும்ம ரங்களதாய்,
மிகும்ஏறிடி என்றுஅல றும்தொனியாய்,
விழ,நாடி,வி றுங்கிரைந்து,நெ ருங்கிடவே
அகல்வாள்நவி யம்தரு வின்பகையம்பு,
அனல்ஆசுக மும்சொரி கின்றனனால்;
மிகையோடுபி ளந்தும் றிந்திடலால்
மிகவேபொடி கண்டது பன்துகளாய். 322

விழிஆயிரன் நந்தன்முன் ஒண்கிரியின்
விசைஆசுகம் ஒன்றுளய்து நின்றிடவே,
குழுவாய்இற கும்கொடு குன்றினமே
குறுகாமுனம், அம்குலி சன்கணையோடு
அழல்ஏறுஇடி யின்கணை யும்தொடவே,
அதுநீறுப டும்படி வென்றிட,மேல்
மழைவாருண ஒண்கணை தந்தைவிட,
மகன்மாருத அம்பினில் வென்று,பினே, 323

மதிஆசுகம் ஒன்றுஉயர் நந்தன்விட,
வயன்ஆதவன் அம்பினில் வென்றபினே,
கதைஆசுக மும்தொட, இந்திரனார்
கணையால்அதை வென்றனன் மைந்தனும்,மேல்
சிதைமாருத அம்புதொ டும்பொழுதே,
திகழ்சேடன்அ ரும்கணை நுங்கிட,மேல்
அதிவாசவன் நன்கணை தந்தைவிட,
அயன்ஆசுகம் வென்றுதி ரும்பியதே. 324

---

322. தரு - மரம்; மறமாய் - வீரத்தோடு; ஏறிடி. - இடியேறு என மாறுக; அகல் - வாயகன்ற, வாள் - கூர்மையான; நவியம் - கோடரி; அனல் ஆசுகம் - தீக்கணை; நவியமும் என உம்மை கூட்டுக; மறிந்திடலால் - திரும்பியதால.

323. விழிஆயிரன் நந்தன் - இந்திரன் மகன், குழுவாய் - கூட்டமாக; குலிசன் - இந்திரன்; ஏறுஇடி - இடியேறு, வாருண ஒன்கணை - நீர்க்கணை; மாருத அம்பு - காற்றுக்கணை.

324. மதி ஆசுகம் - சந்திரன் கணை; நந்தன் - மகன், வயன் - வலிமை உள்ளவன், அருச்சுனன்; அயன் ஆசுகம் - பிரமாத்திரம்.

முறையாய்இவி தம்பல அம்பைஎலாம்
முனையாய்விடு கின்றனர் வென்றனர்;பின்
ஒருசானவி யின்சப தங்களினால்
உணர்வானதுஅ யர்ந்து,த னஞ்சயனே
குறிவீரியன் நெஞ்சம்ம யங்கி,அரி
குரவோன்அரன் அம்பினை யும்பிழையாய்
மறைபேதமு டன்தொட, அங்குஅதுஎலாம்
வலுமாறிம ருண்டுதி ரும்பியதே. 325

"அடபாதக! குண்டக! பங்குன!நீ
அறிவாய்மதி யும்கதி யும்குடிபோய்
மடநாகம்ம யங்கிய .....
மடிநாளது வந்தது கண்டனையாய்;
கொடியாய்!வசி யன்திரி என்றனையே
குலமான்எனும் மங்கைஅ ணங்கினையே?
விடமாயப வங்கள்தொ டர்ந்தஉனை
விடுமோஉயிர் உண்டலது?" என்றனனே 326

"உரவோன்வசி யன்தொடும் அம்பதனால்
உயிர்போகுதல் நன்றுஅல; நின்றுஉணர்வாய்
மருள்மாறிஉ றும்சம ரம்செய்"கென
மகவான்மக னும்பல அம்பினமே
வெருவாதுசொ ரிந்தனன்; அங்குஅதுஎலாம்
விரைவோடுபி ளந்துமி குந்திடுகோல்
பரிபாகுது சம்கவ சங்களிலே
படவீசிமு ழங்கினன் வன்கண்மையான். 327

பரிமேல்தவ ளம்பவ ளம்பெறவே
பலகாயம்நி றைந்தது;அ யர்ந்துஅணிநாண்
உரபாசம்அ ழிந்துவி ழுந்திடவே,
உருள்பூவில்உ றைந்துபு தைந்திடவே,

---

325. சானவி - கங்கை; சபதம் - சாபம்; அம்பு என்பதை அரி முதலிய மூன்றுடனும் இயைக்க, அவை முறையே நாராயணாத்திரம், பிரமாத்திரம், பாசுபதாத்திரம் என்பனவாம்; மறைபேதமுடன் - உரிய மந்திர உச்சாடனை இன்றி வேறு மந்திரங்களுடன்.

326. வசியன் - வைசியன்; திரி - ஸ்த்ரீ, மனைவி; பவம் - பாவம்; உனைத் தொடர்ந்த விடமாயபவங்கள் உயிர் உண்டு அலது விடுமோ என இயையும்.

327. உரவோன் - இங்கு க்ஷத்திரியன்; உணாவாய - நல்லறிவுடன், மருள்மாறி - மயக்கம் நீங்கி; உறும் - சரியாகச் செய்யப்படும்.

வரமேவுகு றங்குந டுங்கியும்நீள்
வயவானிம ரம்தனில் ஒன்றினவே;
சரமேஇடு பஞ்சரம் என்றுஉணர்வே
தடுமாறிஅ யர்ந்தனன் பங்குனனே. 328

பரிபாகுபி ரிந்தது;அ யர்ந்தனநீள்
படர்தேர்உருள் வண்டில்அ மிழ்ந்திடவே,
தெரிவீரிய சங்கம்மு ழங்கினனே;
திகைதேறிஎ ழுந்தத னஞ்சயன்நீள்
தரைமீதினில் நின்று,வெ குண்டு,(உடனே)
சரமாரிபொ ழிந்தது கண்டு,இவனும்
விரைவோடும் இழிந்தும் இறங்கியுமே
விறலோடுஎதிர் நின்றுவி லங்கினனே. 329

அரிபாரியம் அம்புவி என்றுபினே
அரியோன்மகன் முன்புநெ ருங்கி," அடா
உரவாளிஉ டன்று,உயிர் உண்கஇதோ
உனைநாடுது; கண்டுகொள்" என்று,கையே
விரிஆவம்இ டும்பொழுது உந்தியதே
விறல்நீலன்ம ணந்தவ ளும்பிறைவாய்
அரிகோல்என வந்தது;உ றும்சிலையால்
அடலோடும்உ தைந்தனன் வெஞ்சினமாய். 330

---

328. பரிமேல்தவளம் - குதிரையின் மேலிருந்த வெண்மை நிறம்; பவளம் பெறவே - பவளத்தைப் போல்செம்மை ஆகும்படி.; நாண் உரபாசம் - நாணாகிய வலிமை மிக்க கயறு; உருள் - தேர்ச்சக்கரம்; பூ - நிலம்; குறங்கு - தொடை; வானிமரம் - கொடிமரம்.

329. வண்டில் - அம்பினால், வேற்றுமைமயக்கம்; இவன் - பப்பரவாசுனன்; இழிந்தும் இறங்கியும் தேர்த்தட்டிலிருந்து கீழே நிலத்தில இறங்கிவந்து; விலங்கினன் - விளங்கினான்

330. அரி - தேர்த்தட்டு; பாரியம் - தேர்உருள்; தட்டிலிருந்து சக்கரத்தின் மேல் குதித்து நிலத்தில் இறங்கி வந்தான் என்றபடி.; அரியோன் - இந்திரன்; விரிஆவம் - விரிந்த அம்பறாத்தூணி; நீலன் மணந்தவள் - நீலத்துவசனின் மனைவி, சுவாலை. பிறைவாய்அரி(ஆகிய) சோல் - அர்த்தசந்திராத்திரம்.

இடிகோடிதி ரண்டுஇரை கின்றதுநேர்,
எரிமாரிசொ ரிந்து,வி ரைத்துறவே,
தொடைகோடிஅ னந்தம்மி குந்திடுகோல்-
தொகையோடுஎதிர் நின்று,சொ ரிந்ததுஎலாம்
அடலோடுஅவி உண்டுபி றங்குஎரிபோல்-
அயிராணிசு தன்றனை அண்டியதால்;
வெடிகாண்அரவு என்றுந டுங்கியுமே
விழிகாணரிது என்றுமு கிழ்ந்தனனே. 331

விழிமூடுத னஞ்சய மன்களம்மேல்
விசையாகஅ றைந்து,க ளைந்திடவே,
எழிலாய்முகடு அண்டின முண்டம்;அதால்
இனன்ஓடிம றைந்தனன் ஒண்கிரிமேல்;
"அழகானவை குந்தமு குந்த"எனா
அபிதானம்அ டங்கமொ ழிந்து,இளகா,
வழுவாதுஉட லம்செறி யும்தலமேல்
மலைபோலும்வி ழுந்தது மந்த்ரமொடே. 332

வனநீறும்வில் வம்திக ழும்தலைமால்
மறைநாமம்மொ ழிந்திட, அண்டையிலே
இனன்மாமகன் மைந்தன்அ ரும்சிரமே
இயல்பாகவி ழுந்துபு லம்பியதே;
அனபோதும்ம னங்கள்க லங்கிலனாய்,
அடல்மேவும்அ சஞ்சல நெஞ்சினனாய்,
சினம்யாவும்ஒ ழிந்தும கிழ்ந்தவனாய்,
திறல்வாகைபு னைந்துசி றந்தனனே. 333

---

331. இரைகின்றது - ஒலிக்கின்றது; அவி - வேள்வியில் இடப்படும் பொருள்; கோல் எரிபோல் அண்டியது என இயையும்; ஆல் - அசை; பாம்புக்குக் கூட்செவி எனும் பெயருண்மைபற்றி வெடிகாண் அரவு என்றார்; முகிழ்ந்தனன் - கண்களை மூடிக்கொண்டான்.

332. களம் - கழுத்து; இனன் - சூரியன்; கிரி - அஸ்தமனமலை; அபிதானம் - (திருமாலின்) பெயர், இளகா - இளகி, தணிந்து. மந்த்ரம - இங்குப்பிரணவம்; உடலம் வழுவாது மந்த்ரமொடே அபிதானம் அடங்கமொழிந்து. இளகா, தலமேல் விழுந்தது என்க.

333. வனநீறு - அழகிய திருநீறு; வில்வம் - சிவநிர்மாலியமாகிய வில்வம், அருச்சுனன் பெரிய சிவனடியான் ஆவன்; மால்நாமமறை என்க - வேதத்திற்கு இணையான விஷ்ணு சஹஸ்ரநாமம்; அண்டையிலே - அருகே; இனன்மாமகன் - கர்ணன்; மைந்தன் - விடசேனன்.

(அறுசீர் விருத்தம்)

தனஞ்சயன் முதலாய்ச் சூழ்ந்த தளங்களும் மன்னர் யாரும்
அனந்தல்செய் வார்கள் போல (அழிந்)துயிர்ஒ ழிந்த தாலே,
மனம்தயி ரியங்கள் ஆகி, மடங்கல்போல் ஆர்த்து, வாயால்
முனைந்தவெம் சிங்க நாதம் முழங்கினார் முனிவ ளாளர். 334

வெற்றிஅம் பறையும் சங்கும் வேலைபோல் முழங்க, மிக்க
மற்றுள விசய பஞ்ச வாத்தியம் முழங்கி ஆர்க்க,
கொற்றமாம் சந்த்ர வட்டக் குடைநிழற் றிட,கு மாரன்
உற்றநல் தேரில் ஏறி உயர்களம் அடங்க நோக்கா, 335

செங்கள மதனில் மாய்ந்த சேனையும், மன்னர் யாரும்
மங்கிய தலமும் பார்த்து, மணிநகர் தன்னை நோக்கிப்
பொங்கிய சேனை வெள்ளம் புடைபரந்து அருகு சூழ,
சிங்கஏ்று அனைய செம்மல் சென்றனன் மகிழ்ச்சி யோடே. 336

சுடரின விகற்பம் கோடி சூழ்தர, பஞ்ச வாத்யம்
கடல்ஒலி அதனின் மிஞ்ச, ககனஒ தைகள்மேல் ஆட,
அடலுடன் வரத்தை நோக்கி, அணிநகர் சிறப்புச் செய்து,
மடநலார் கதலி நட்டு, மகரதோ ரணங்கள் கட்டி, 337

நிலம்கள பச்சேறு இட்டு, நிகர்இலாக் கோலம் செய்து,
கலன்பல அணிந்து, ரத்னக் கதிர்மணித் தீபம் ஏற்றி,
பொலிந்தலட் சுமிநின்று ஆட, பொன்னகர் மயங்கி வாட,
நலம்திகழ் இரத்னா லத்தி நல்முன்றில் நிரைத்து வைத்தே, 338

பொற்குட்ம் நிறைத்து,வண்ணப் பூந்துகில் நிரைத்து வைத்து,
நற்கிடாய்த் தகரும் வைத்து, நவமணி புட்பம் பொற்பூ
வர்க்கஅட் சதைபொன் தட்டில் வைத்து,இறைத்து, இறையை வாழ்த்தி,
தக்கசோ பனங்கள் பாடி, தனஞ்சயன் நோக்கை நோக்க, 339

---

334. அனந்தல் - தூங்குதல் 335. நோக்கா - பாராத்து.

337. சுடரின விகற்பம் - பல வகையான விளக்குகள், முன்னிரவின் நிகழ்ச்சி இது; ககன ஒதைகள் - படையின் ஒலிகள்; வரத்தை - வருதலை; கதலி - வாழைக்கம்பம்.

338. களபம் - சந்தனக்குழம்பு; கோலம் - அழகு.

339. பொற்குடம் நிறைத்து - பூரண கும்பம் வைத்து; நிரைத்து - வரிசையாக, சோபனம் மங்கல வாழ்த்து; நோக்கை - அழகினை; நோக்க - பார்ப்பதற்காக.

மிக்கமேன் மாடம் ஏறி, மின்அனார் மகிழ்ச்சி பொங்கி,
நிக்கமான நகர மாதர் நிருபனுக்கு அன்னை யானோர்
அக்கணம் சிறப்புச் செய்தார் ஆயிர மடங்கது ஆக;
தக்ககண் வழிமேல் வைத்துச் சகலரும் இருந்த போதில், 340

ஆடல்மன் னனையும் சூழ்ந்த ஆர்கலித் தளமும் நோக்கி,
"பீடுஉடை யான்எங்கு?" என்று பெண்கள்அத் தளத்தைக் கேட்க,
"கேடுஉடை யானை வென்ற கேசரி ராசன் தன்னை
நாடியே மகிழ்ந்து நோக்கி நயனங்கள் குளிர லாமே; 341

பங்குனன் எனும்கார் மாவைப் படுகளம் தன்னில் மாய்த்த
சிங்கஏறு அனையான் இந்தத் திருநகர் அதிபன் தன்னைச்
செங்கணால் குளிர நோக்கும் தெரிவையர் அனைத்தும்" என்று
மங்கையர்க்கு உரைத்துச் சேனை வழிக்கொண்ட மகிழ்ச்சி யோடே. 342

"இந்திரன் குமரன் மாய்ந்தான்" எனும்மொழி கேட்டு, மாதர்
தந்தமது ஆவி போன தாகவே மயங்கி, ஏங்கா,
இந்தவாறு அரசன் தாய்மார் இருவரும் கேட்டு, வாடி,
நொந்துஇடைந்து, அலறி, வீழ்ந்து, நொய்து,சோர்ந்து, அயர்ந்து, நைந்தார். 343

அயருவர்; தெளிவர்; விம்மி அலறுவர்; அயர்வர் மீண்டும்;
மயிர்மெயும் புழுதி தோய மருண்டுஉருண்டு இடைவ தாலே
வியனுலு தொழும்ப தான மின்களும் அரற்றும் ஓதை
தயிரிய வீரன் காதில் சலதிஒ தையினில் தாக்க 344

முகில்திரை ஊதை ஏற்றின் முழக்குஎன முழங்கும் ஓதை
சகபதி குழையில் கேட்டு தான்மருண்டு, ஐய மாக
மகரதோ ரணசிங் கார மணிநகர்த் தெருக்கள் நீங்கி,
சிகரகோ புரவி சாலச் சித்திரக் கூடம் சேர்ந்தான். 345

கொலுமனிக் கூடம் சேர்ந்து, கொடுஞ்சிவிட்டு இறங்கி, வெற்றி
மலிமனர் கைலாகு ஏற்க, மனையிடம் அடைந்த காலை,
தலைகலை குலையப் பூழ்தி தான்உடல் மல்க வீழ்ந்து
அலறிய தாயைக் கண்டே, அஞ்சிமண் டியினில் வீழ்ந்தே, 346

---

340. நிக்கமான என்பதன் பொருள் விளங்கவில்லை. 341. ஆர்கலி - கடல்; கேசரி - சிங்கம்.
342. கார்மா - யானை, நோக்கும - பாருங்கள்; தெரிவையர் விளி ,
344. தொழும்பதான மின்கள் - பணிப்பெண்கள்; சலதி - கடல்.
345. ஊதை - புயல், சகபதி - அரசன், பப்பரவாகனன்.
346. கொடுஞ்சி - தேர், ஆகுபெயர்; பூழ்தி - பழுதி.

"தயிரிய வீரத் தோடும் தளரண வேட்டை யாடி,
வியன்அணி வாகை சூடி வெற்றியுற்று, அடைந்தால், மெய்யாய்
நயமனம் மகிழ்ந்துஇ ராமல் நடுங்கியே விம்மல் என்கொல்?
வயங்கிய பணிகள் சிந்தி மயங்கல்என் கலங்கி" (என்றான்) 347

"பேரறிவு அற்ற பித்தப் பிள்ளையைப் பெற்றேன்; கெட்டேன்;
சீர்இனி ஏன்?பூண் செல்வச் சிறப்பையும் பறித்த பாவி!
வீரியம் என்கொல்? எந்தன் விழியைவிட்டு அகலப் போடா;
ஆர்உனக்கு ஒப்பார்?நீசா! அத்தனைக் கொல்வார் உண்டோ? 348

பாதகா! காரு கா!வில் பரன்எனும் பெற்ற தாதை
காதகா! ஆவி அன்ன கணவனைக் கொன்ற தீய
தோதகா! துட்ட! சாமத் துரோகி!சண் டாளா! புத்தி
பேதகா! சத்ரு ஆன பிள்ளையாய் உனைப்பெற் றேனே! 349

இப்பிஞெண்டு அரம்பை வேய்ஒத்து எமதுஉயிர் பறிக்கும் முன்னே,
துப்புஐயன் தன்னைச் செற்றாய்; துர்க்குணத் தறுக ணாளா!
பப்பர வாகா! கூர்மை பார்த்தியோ தீட்டுக் கோலில்?
எப்படை யால்கொன் றாய்இங்கு எம்மைஅப் படையால் கொல்வாய்; 350

இந்துஇனன் உள்ள காலம் ஈதுஅப கீர்த்தி போமோ?
வந்தநா யகனைக் கண்டு வணங்கொணாய்! மாறு கூறி,
எந்தன்வல் லவனைக் கொன்றாய்; இருந்துஎமக்கு ஏது பேறு?"என்று
உந்தியே எழுந்தாள் நானும் ஒக்கவே மடிவேன் என்றே. 351

நறைவிரி அல்லி மாது நாககன் னிகையள் ஆன
உருவசி ஒக்க மாய்ந்த உறுகளம் நோக்கி, மாய்வது
அறுதிசொற்று, எழுந்தார்; தாசி அரிவையர் பலரும் சூழ்ந்தார்;
மறுகியே பயந்தாள் கூறும் வசைமொழி மன்னன் கேட்டே, 352

---

349. காருகன், காதகன் - கொலையாளி, வில் பரன் வில்லாற்றலில மேம்பட்டவன், தோதகன் - வஞ்சகன்; சாமத்துரோகி - மிகக்கொடியவன், ஒருசொல்; பேதகன் - மாறாட்டம் உடையோன்.

350. இப்பி - சங்கு; ஞெண்டு - நண்டு; அரம்பை - வாழை; வேய் - மூங்கில்; இவை தாம் பிறக்கும் போதே தாயைக்கொல்வன என்பர்; துப்பு - சிறப்புடைய, ஐயன் - தந்தை; தறுகணாளன் - வன்னெஞ்சன்; படை - ஆயுதம்.

351. இந்து - சந்திரன், இனன் - சூரியன்; அபகீர்த்தி - பழி; மாறு - பகைமையான சொற்கள்; வல்லவன் - கணவன்.

352. அல்லிமாது - சித்திராங்கதை; ஒக்க - ஒன்றாக, பயந்தாள் - பெற்றவள், அன்னை.

"தந்தைக்கும் தாய்க்கும் ஊர்க்கும் தவத்தர்மற் றுளர்க்கும் ஆகா
நந்தனாய் விதித்திட் டானோ நான்முகன்?" என்ன நைந்து,
சிந்தனை தெளியாது, இம்மை மறுமையும் தெரிகி லானாய்,
பந்தனை வெறுமை ஆகி, பதைபதைத்து, அலறி, வீழ்ந்தான். 353

மகரகுண் டலம்கி ரீடம் மணிபணி தெறித்து வீழ,
செகமதில் புரண்டு, மூர்ச்சை செய்து,பின் தேறி, சோபித்து,
அகம்மதி கலங்கி, மீண்டும் அறிவுவந்து, அலறு வோன்மேல்
மிகுமண் மாரி பெய்து,ஆய் வெகுண்டு,மன் னவனைச் சொல்வாள் 354

"அடகுல பதகா! எங்கள் ஆவிநா யகனார் மாய்ந்த
படுகளம் காட்டாய் யாங்கள் பார்த்துஉயிர் விடவே;" என்று
கொடுமொழி கூறி, மாதா கோலிமண் மாரி பெய்ய,
அடல்வலான் ஒன்றும் பேசாது அரற்றிவீழ்ந்து அழுது சென்றான். 355

அரசரும் தந்த்ரி மாரும் அமைச்சரும் மற்று ளோரும்
நரபரி கலக்கம் பார்த்து, நரலைபோல் இரைந்து செல்ல,
பிரசமா மலர்ப்பூங் கோதைப் பெண்கள்ஆர் கலிபின் செல்ல,
புரமதில் உள்ள மாதர் புழுதியைத் தூற்றி ஏச, 356

அந்நகர் வீதி நீங்கி, அரண்எழு வாயில் நீங்கி,
செந்நதி பலவும் நீந்தி, திரள்பிண மலைஅ னந்தம்
முன்னிடப் பலதும் மீறி, மூளைகள் ஈளை அள்ளல்
துன்னிய நிலங்கள் எல்லாம் தொலைந்திட நடக்கும் நேரம் 357

கங்கம்வெம் சகுந்தம் கரகம் கடியஊன் அருந்தும் புட்கள்,
சங்கவன் சுணங்கன் சம்பு சயிலவே தாளம் பூதம்
பொங்கிய களத்தை நோக்கி, பூமகள் சித்தி ராங்கி
செங்கண்நீர் ஒழுக, வந்த சேனைகா வலர்க்குச் சொல்வாள் - 358

---

353. நந்தன் - மகன்; பந்தனை - மனத்திட்பம.

354. ஆய் மன்னவனை வெகுண்டு அலறுவோன் மேல் மண்மாரி பெய்து சொல்வாள் என இயையும்.

356. நரலை - கடல்; பிரசம் - தேன்றிறைந்த; புரமதில் - ஊரில். அரண்மனை அந்தப்புரத்தில் எனினுமாம்.

357. மீறி - தாண்டி. கடந்து. சளை - கோழை; அள்ளல் - சேறு.

358. கங்கம் - பருந்து; சகுந்தம் - கழுகு. சஙக - கூட்டமான; சுணங்கன் - நாய். சம்பு - நரி; சயில - மலையைப்போன்று பெரிய உருவத்தை உடைய. பொஙகிய - மிகுந்துள்ள.

"புண்ணியப் புருஷ மேரைப் புள்விலங் கினங்கள் ஈனம்
பண்ணும்முன் காவல் காக்கப் படையைமுன் அனுப்பீர்" என்ன,
திண்ணியர் சொன்ன வாறு சேனைகள் அனுப்பிக் காத்தார்;
தண்அளி பாடும் கூந்தல் தையல்கால் நோவச் சென்றாள். 359

பற்பல தீபம் பந்தம் பகல்வத்தி யொடுமத் தாப்பு
பொற்புடன் பிரகா சித்துப் போர்க்களம் விளக்கம் செய்ய,
அற்புத மாகக் கோடி ஆதவன் உதயம் போல
விற்பன விசயன் மோலி வில்எரித் திடுதல் கண்டாள். 360

பார்த்ததே அரற்றி, வீழ்ந்து, பரதவித்து, இரைந்து, விம்மி,
ஆற்றொணாத் துன்பத் தோடும் அருவிபோல் கண்ணீர் ஊற்றி,
தோற்றமே நோக்கி, வெய்தாய்த் தோகைசென்று, அன்பன் தாளில்
"மூர்த்தியே!" என்ன வீழ்ந்து, மூர்ச்சித்துக் கிடந்திட் டாளே. 361

அயர்ந்து,பின் எழுந்து, மெய்யில் அணைப்பள்;அம் முடியை மார்பில்
வியர்ந்துறச் சேர்ப்பள்; மென்மேல் விம்முவள்; "நாதா! என்னை
முயங்கிமூ வாறுஆண்டு உந்தன் முகந்தனைக் காண்கி லேனே!
தியங்கியே களைஅ பாரம் தெரிசிக்க வோயான் வந்தேன்? 362

என்உயிர்க்கு உயிரே! எந்தன் இன்பநா யகனே!பஞ்சம்
உன்னிய சயனா! ரோமம் உறுத்திய புயச்சிங் காரா!
கல்நிலம் துயில்உற் றீரோ? கண்களால் பார்க்கி லீரோ?
பின்என்மேல் குறைகள் உண்டேல் பிழைபொறுத்து அருள்;என் கொன்கா!
363

அறிதுயில் உணர்ந்தோன் நண்பா! ஐந்துயில் உணர்ந்த கண்டா!
உறுகனல் துயரம் தீர்த்தோய்! உலகுஎலாம் விசயம் செய்தோய்!

---

359. மேரை - மேருவை எனற்பாலது யாப்பு நோக்கி மேரை என நின்றது; மேருவைப் போன்றவன் என்பது கருத்து; சனம் - பூதஉடலுக்கு மரியாதைக்குறைவு; திண்ணியர் - சேனைகாவலர், அல்லி என்னத் திண்ணியர் (அவள்) சொன்னவாறு காத்தார் என்றபடி., அளி - வண்டு.

360. பகல்வத்தி - பகலைப்போல் ஒளிதரும் ஒரு மத்தாப்பு விசேடம்; விவரித்திடுதல் - ஒளிவீசுதல்.

361. பார்த்ததே - கண்டமாத்திரத்திலேயே; வெய்தாய - விரைவாக; மூர்த்தி - தலைவன்.

362. களை அபாரம் - பெருங்குற்றமாகிய தீமையை, கொலையை என்பது கருத்து.

363. பஞ்சம் உன்னிய சயனா - ஐந்துவிதமான உள்ளீடுகளால் ஆன மெத்தையில் கண்துயில்வோனே, அன்னத்தூவி, இலவம்பஞ்சு, செம்பஞ்சு, மயில்தூவி, வெண்பஞ்சு ஆகியன பஞ்சசயனம் ஆம்.

விறல்குருக் கேத்தி ரத்தாய்! விண்டுவை வென்ற காந்தா!
கறைமிடற் றோனை வில்லால் கடிந்துமல் போர்செய் பத்தா! 364

அமரரைக் குடியது ஏற்றி அசுரரை நீறு கண்டோய்!
சமரபா ரதப்போர் வென்ற தனுசரம் பிடித்த செங்கைக்
கமலம்ஈ தோ"என் றேபூங் கண்ணினில் அணைத்துக் கொள்வாள்;
"நமன்உனை அணுகு வானோ? நரநரா யணன்நீ அன்றோ? 365

திகைஎலாம் வென்ற கோலால் சினந்துஇவன் றனைக்கொ லாமல்,
மகன்என இரங்கி னீரோ?" என்று,மா மகனை நோக்கி,
"இகல்பத காத்து ரோகி! எங்களைக் காந்த னோடே
தகனம்இச் சணம்செய்"கென்ற தாயுடன் குமரன் சொல்வான் 366

"இத்தனை கோபம் என்மேல் ஏது?யான் உதித்த அன்றுஓர்
உத்தரம், 'இவன்பி தாகா தகன்'என உமக்கும் யார்க்கும்
சத்தியாய் அசரீ ரிச்சொல் சாற்றியது அறிந்தும், கொல்லாது,
இத்தனை நாளும் வைத்தீர்; எனைக்குறை சொல்ல லுற்றீர். 367

துக்கம்ஏன்? சலிப்புஏன்? மென்மேல் சோபம்ஏன்? கோபம் ஏன்?முன்
திக்கென உடனே கொன்று சிந்தைகூர்ந்து இருந்தீ ராகில்;
மக்கிலாது இன்னம் சீவன் வைத்திருந் தேனே யாகில்,
தொக்குடன் என்ன பாவம் சுமப்பனோ?"என்று வீழ்ந்தான். 368

(கலிவிருத்தம்)

வீழ்ந்து உருண்டுற விம்மிஅ ரற்றுவான்;
சூழ்ந்த பேர்சொல்சு டச்செவி சோருவான்;
ஆழ்ந்த சஞ்சலத்து ஆர்கலி மூழ்குவான்;
போழ்ந்த நெஞ்சுபு ழுங்கிஅ ழுங்குவான். 369

---

364. அறிதுயில் உணர்ந்தோன் - திருமால்; ஐந்துயில் - பஞ்ச சயனத்தில் கண் வளர்தல்; கண்டன் - தலைவன்; கனல் - அக்கினி, காண்டவ வன வரலாற்றை நினைந்து கூறியது. குருக்கேத்திரத்தாய் - குருக்ஷேத்திரப் போரின் நாயகனே; கறைமிடற்றோன் - சிவபிரான், பத்தன் - சிவனடியான்.

365. சமர - பெரும் போராகிய; தனுசரம் - வில்லும், அம்பும், உம்மைத்தொகை நரன் - அருச்சுனன் தன் முற்பிறப்பில் நரன் என்னும் ஒரு முனிவனாக இருந்தான். அப்போது திருமாலும் நாராயணன் எனும் முனிவராகி இவனுடன் இணைபிரியாது இருந்தார். இது பாகவதத்தில் விரிவாக உள்ளது. 366. காந்தன் - கணவன்;

367. பிதா காதகன் - தந்தையைக் கொலவோன்.

அய்யன் காலில்அ றைந்துஅறைந் தேவிழுந்து,
எய்ய கையைமு கத்தினில் எற்றுவன்;
நையும் துன்பம் நலியத் துணுக்குவன்;
வையம் மீதில்அ யர்ந்துஉடல் மங்குவன். 370

அயர்ந்து, மெய்நினைவு அற்று,அவிந் தான்என,
உயர்ந்த பூவில் கிடப்பதுஉ ணர்ந்தபின்,
மயங்கி, மீண்டும் மருண்டு,அயர்ந்து. உக்குவன்;
கயம்ப யம்பட லாகக்க லங்குவன். 371

இந்த வாறு அயர்ந் தான்எண்ணி லாமுறை;
பிந்த வேஉயிர் விட்டபி ரேதமாய்,
அந்த மன்அயர்ந் தான்நெடு நேரமாய்;
பந்த மாய்இரங் காள்பயந் தாள்கண்டும். 372

அல்லி நாயகி ஆளன்தன் சென்னியைப்
புல்லி மோந்து புலம்பி அரற்றியே,
வல்லி நாக மடந்தை கரத்துஅளித்து,
எல்லி சேய்சுதன் சென்னியை ஏந்தினாள். 373

ஏந்தி, மோந்து,இரு கண்ணில்அ ணைத்தும்,"என்
காந்த னுக்குஅரண் ஆகிய காதலா!
ஏந்தல் உந்தையை என்உயிர் நண்பனார்
சார்ந்துஅ றுத்தனர் தாம்அறி யாததால்; 374

காது வன்பழி காரன்என் பாதகன்
மோதி வீட்டினன் முன்னும்அ றிந்துஉனை;

---

368. சிந்தை கூர்ந்திருந்தீராகில் துக்கம் ஏன் . . . . கோபம் ஏன் என இயையும்; மக்கிலாது - அழியாமல்; தொக்கு - அவமானம்.

370. எற்றுவன் - அடித்துக்கொள்வான்.

371. பூவில் - நிலததில; உக்குவன் - இற்றுப்போகுமளவு மெலிவான்; கயம் - யானை; பயம்படலாக - குளத்தில் விழுந்ததைப போல.

372. பிரேதம் - பிணம்; பந்தமாய் - பாசத்துடன்; பயந்தாள்- பெற்றதாய்.

373. ஆளன் - கணவன், அருச்சுனன்; எல்வி சேய சுதன் - சூரிய குமாரனாம் கன்னன் மகன், விடகீதவன.

374. காதலன் - மகன்; ஏந்தல - மக்களில் உயர்ந்தவன்; நண்பனார் - சுணவர், நண்பனார் உந்தையைத் தாம் அறியாததால் சார்ந்து அறுத்தனர் என இயையும்.

நீது ணிந்ததை நின்அனை, பஞ்சவர்
காது கேட்கில் கடந்துஉயிர் தங்குமோ?'' 375

என்றுஉ றுப்புக்கு இசைஉப மானமா
ஒன்று பல்பொருள் ஒப்புஎடுத்து ஓதியே,
மன்றல் அங்குழல் மண்கள் பிறங்கிட,
கன்றி, விம்மி, கதறி, நடுங்கினாள். 376

இவள்அ ரும்துயர்க்கு எண்மடங்கு ஆகமற்-
றவளும் மங்கிஅ ரற்றினள்; விம்மி,நல்
உவரி ஒத்துஅங்கு உற்றம டந்தையர்
எவரும் கண்ககிந்து, ஏங்கி, அரற்றினார். 377

முன்அ யர்ந்தமன் மூர்ச்சைதெ ளிந்தபின்,
அன்னை மாரும்மின் னாரும்அ ரற்றியே
சொன்ன சொல்செவி சுட்டிடக் கேட்டு,''நாம்
என்ன பாதகம் செய்தது''என்று ஏங்கியே, 378

''ஆரு மேசெவி மூடும் அரும்பவம்
நாரு ளோர்கள் நடுங்க வி◌ளைந்தனம்;
தீரும் அவாறுநம் சீவனைப் போக்கினால்;
சோரும் சோபம் தொலையும்''என்று உன்னினான். 379

(அறுசீர் விருத்தம்)

''இனிஉயிர் விரும்பி வேண்டேன்'' என்றுதந் தையைச் செற் றோனை
மனுமுறை வழியே செய்யும் மாரணம் முடித்தும் என்று,
நனிஅமைச் சனைமுன் நோக்கி, ''நகர்உறும் உயர்ந்தோர் தம்மை
வினவியே கொடுவா'' என்ன, இசைந்துமுன் கொணர்ந்து விட்டான். 380

---

375. மோதி - போரிட்டு. வீட்டினன் - கொன்றான்; பாதகன் முன்னும் உனை அறிந்து மோதி வீட்டினன் என்க. துணிநததை வெட்டுப்பட்டதை; கடத்து - உடலில்.

377. இவள் - அல்லி. மற்றவள் - உருவசி. உவரி - கடல்.

379 செவி மூடும் - கேட்டாலே காதைப்பொத்திக் கொள்ளும். நாஉளோர் - அன்புடையவர்; நம் சீவனைப் போக்கினால் அவாறு தீரும்என்க; உன்னினான் - சூருதினான்.

380. மனுமுறைவழி - அரசநீதிபபடி. மாரணம் - சாவு. மரணதண்டனை

வந்துள உயர்ந்தோர் தம்மை மன்னனும் வணங்கி, ஏத்தி,
"தந்தையைச் செற்றோன் என்னைத் தான்செயும் முறைஏது?" என்றான்.
"நந்தஎள் தயிலம் தன்னில் நனைந்து,மெய் நானம் பண்ணி,
செந்தழல் வளர்த்து, மெய்யைச் சீவியே, தீயில் இட்டு, 381

ஊன்தசை பருக்கை போலே ஓமவெம் தழலில் வீழ்த்தி,
தேன்திகழ் அலங்கல் சென்னிச் செறுத்து,அறுத்து, அழல்ம டுத்து,
ஏன்றஎன்பு உடலும் ஒக்க எரிக்குஇரை கொடுத்து, வீந்தால்,
தோன்றுஐயன் தன்னைக் கொன்ற தோஷம்விட்டு ஓடும்" என்றார். 382

"நன்று!இது செய்வேன்" என்று நயந்துஅமைச் சனைக்கண் காட்ட,
குன்றுஎன உயர்ந்த பாரக் கொப்பரைக்கு எண்ணெய் விட்டு,
துன்றுஅழல் வளர்த்தி, மன்னைச் சுபு,த்திவந்து இறைஞ்சி நின்றான்;
அன்றுஅ(வண்) தயிலம் மூழ்கி, அக்கினி வலம்வந் தானே. 383

தீவலம் கோலி நின்று, தேகத்தில் பிசிதம் பற்றி,
காய்நிசி தக்கூர் வாளால், கறுத்து,அறுத் திடும்அக் காலை,
தாய்உரு வசிகேட்டு, எய்தித் தனையனைத் தழுவிப் பற்றி,
வாய்வழங் காமல் விம்மி, மறுகி,மீண்டு உரைக்க லுற்றாள். 384

"என்னையா! தந்தை யோடுஎம் இருவரைத் தகனம் செய்து,
பின்னைஇவ் உலகை ஆண்டு, பிரியமாய் வாழ்ந்தி ராமல்
அன்னையாய்ச் செயிர்த்த தால்உன் அங்கபங் கங்கள் செய்து,என்
முன்னைநீ இறக்கில், பார்க்க முடியுமோ? முரண்கொள் வேலோய்! 385

உந்தைஉன் தம்பி பின்மா துலன்மரு கோன்மற் றுள்ளோர்
நந்திய துயரால் எங்கள் நல்அகம் குடர்கள் ஈரல்
வெந்தனம்; உனது தேகம் வெந்திடச் சகித்தி டோமால்;
சுந்தர மடங்கல் ஏறே! துஞ்சலைத் தவிர்த்தி" என்றாள். 386

---

381 எள் தயிலம் - நல்லெண்ணெய்; நானம்பண்ணி - நீராடி,

382. ஓமம் - வேள்வி, தேன்திகழ் - வண்டுகள் மொய்க்கின்ற; ஏன்ற - பொருநதியுள்ள, வீந்தால் - இறநதால்.

383 அன்று - அப்போது; அவண் - அங்கு.

384. பிசிதம் - தசை, காய் - வெடடுகின்ற, நிசித - இரும்பினாலான, கறுத்து - சினந்து.

385. அன்னையாய் - தாய் எனனும் உரிமையினால்; செயிர்த்தால் - உன்னைக் கோபித்துக்கொண்டால்; அங்கபங்கம் - உடலைச் சிதைத்துக் கொள்ளுதல்.

386. மாதுலன் - மாமன், நந்திய - அழிநத; துஞசலை - இறத்தலை.

"தந்தையைச் செற்ற தோஷம் தவிரயான் இறப்பேன்; அம்மா!
இந்தநாள் இருந்தேன்; ஈறு இறப்புஅன்றி இருப்பது உண்டோ?
பிந்தவும் அதளை யாம்இப் பிரேதத்தைப் பேணேன்; ஒல்லை
அந்தணர் சொற்ற வாறே அவிவது சரதம்" என்றான். 387

என்றமைந் தனைக்கை யாற ஏங்கியே கதறிக் கட்டி,
"பொன்றிலன்; அந்தோ! இந்தப் புன்கண்ண ராவி நோக்க
என்தலை விதித்திட் டானோ எண்கணன் வண்க ணான்?" என்று,
அன்றுசூன் கையைப் பற்றி அந்தரங் கம்சொல் கின்றாள். 388

"எந்தையாம் ஆதி சேடற்கு இரசதக் கிரியான் அன்பாய்த்
தந்ததுஓர் சீவ ரத்னச் சஞ்சீவி யதனை இங்கே
வந்திட அழைப்பேன்; தேகம் மணித்தலை பொருத்தி நீவில்
உந்தைபின் பண்டு போல உயிர்சிறந்து எழுவது உண்மை." 389

என்றுதே றுதல்சொற் றே,சேய் இறந்திடாது இருக்க வைத்தே,
அன்றுமங் கலியப் பூண்கள் அவிழ்த்துஒரு தட்டில் ஏற்றி,
நின்றபுண் டரிகன் தன்னை, "நீஇவை தந்தை பாலில்
சென்றுவைத்து இறைஞ்சி எந்தன் சிறுமையும் பகர்தி" என்றாள். 390

ஆங்குஅவன் இறைஞ்சி, தாம்பா ளத்தினைக் கண்கள் ஒற்றி,
நீங்கி,ஏழ் உலகும் தத்தி, நிகர்இல்போ கவதி என்னும்
பாங்குஉறு நகரில் எய்தி பணிக்குஅரசு அவையில் புக்கு,
தாங்குபொற் கமலம் வைத்தே, சரண்பணிந்து அரற்ற லுற்றான். 391

ஆயிரம் சிரசி னான்ஈர் ஆயிரம் கண்க ளாலு-
மேஇறங் கியகண் ணீர்கள் விரவிய அருவி பாய,
ஆயிரம் வாயி னாலும் அடைந்தவன் வதனம் நோக்கி
"ஆயிரம் கிரணப் பூண்ஏது? அனத்தம்என்? அறைதி;" என்றான். 392

---

387. அதளை - குடிசை, உடல் உயிர் இருப்பதற்கான ஒரு இருப்பிடமே என்பது சுருத்து, மானம் போன பிறகு உயிவாழ்பவன் நடைபிணமே ஆதலின் பிரேதம் என்றான், சரதம் - உறுதி.

388. எண்கணன் - நான்முகன்; வன்கணான் - கொடியவன், எண்கணனாம் வன்கணான் என்க; அன்று - அப்போது. சூன் - மகன்; அந்தரங்கம் - இரகசியம.

389. இரசதக்கிரியான் - வெள்ளிவெற்பன், சிவபிரான், நீவில் - தடவினால்.

390. சிறுமை - கணவனை இழந்த நிலை.

391. தத்தி - தாண்டி, பணிக்கு அரசு - நாகராஜன், அவை - கொலு, கமலம் - (மங்கலியப்பூண்கள் உளள) தடடம், தாமரை போல உள்ளதால் உவம ஆகுபெயர்.

தனஞ்சயன் அசுவ வேள்வி தனைச்செயப் பரியின் பின்னே
மனஞ்செய்து வந்த வாறும், மந்திரி அறிகி லாமல்
முனைந்துஅவண் பற்றும் வாறும், முதல்வன்சென்று இறைஞ்சும் வாறும்,
சினந்துஅவன் உதைந்த வாறும், செருவதன் விளைவும் கூறி,
393

"விசயனும் தளமும் சூழ்ந்த வேந்தும்நும் பேரன் கையின்
அசியினால் அவிந்தார்; புத்ரி யார்சுப (சவு)மங் கல்யம்
இசையும்சஞ் சீவி சீவ இரத்தினம் இங்குஈந் தாலே;
வசிகரப் பார்த்தன் உய்வன்; மன்னநும் மகளும் வாழ்வாள்." 394

என்று,"நீர் அளித்த பூண்கள் இவைஅடை யாளம்" என்ன,
அன்று,அவன் அளித்த ரத்ன அணிஎலாம் விரித்து நோக்கி,
"நன்றுநாம் அளித்த தாம்இந் நற்பணி அனைத்தும்" என்ன,
மன்றல்மார் பகனும் கன்றி வன்னியின் மெழுகை ஒத்தே, 395

"பாதலத்து எனது புத்ரி பாகசா தனன்சேய் வேட்டு,அப்
பூதலத்து இருந்தாள் ரத்னப் பூண்இழந்து இருக்க வோ?"என்று
ஆதரத்து இரங்கி, விம்மி, அலறி,நெஞ்சு அயர்ந்து,எ ழுந்து,
போதவும் இதயத்து ஆய்ந்து, புண்டரி கனுக்குச் சொல்வான் 396

"இசையும்முப் புவியில் உள்ளோர் இடுக்கண்நீக்கு எதிர்இ லாதோன்;
திசையடங்க மலையும் வென்றோன்; சிவனுடன் பொருது நின்றோன்;
நசையுறு விசய மூர்த்தி நரநரா யணனோ மாய்வான்?
நிசம்இதோ? விடலைப் பாலன் நிக்கிர கம்செய் வானோ? 397

எனமனது ஐயம் உற்ற இறைவனைத் தொழுது போற்றி,
"உனதுஅவை முகத்தில் நின்று முறைபழுது இயம்பு வேனோ?
அனதுஅலால் எனக்கும் உன்போல் ஆயிரம் சிரசும் உண்டோ?
கனைகடல் நீந்தி னோன்புன் காலினில் அமிழ்ந்தது ஒத்தான். 398

---

39. வதனம் - முகம்; அனததம - நடக்கக கூடாதசெயல; அறைதி - சொல்வாயாக, சிரசினான் அருவி பாய, வதனம் நோக்கி வாயினாலும் அறைதி என்றான் எனப் பொருள் முடிபு காண்க.

393. முதல்வன் - பபரவராகனன்; அவன் - அருச்சுனன்; செரு - போர், அது பகுதிப்பொருள் விகுதி; விளைவு - ஏற்பட்டமை

394. அசி - படைக்கலம், மன்ன! ஈந்தாலே பார்த்தன் உய்வன்; மங்கல்யம் இசையும்; மகளும் வாழ்வாள் என முடிக்க.

395. மன்றல் மார்பகன் - ஆதிசேடன், கன்றி - வருந்தி, வன்னி - தீ.

396. பாகசாதனன் - இந்திரன்; ஆதரத்து - அன்பினால்.

397. விடலைப்பாலன் - மிக இளையவன், பப்பரவாகனன், நிக்கிரகம் - அழித்தல்.

398. புன்கால -சிறிய வாய்க்கால்.

கிரிடியைச் சொல்வது என்நீர்? கிரீசனே (பசும னுக்கு)
வெருவியே மறைந்தான் ஓடி; விறகுகம் பரித்தான்; வேடன்
அருளும்உச் சிட்டம் உண்டான்; அங்கையில் கபாலம் பற்ற
இரவுஉகந் தான்;நிர் வாணி எனத்திரிந்து அலைந்தி லானோ? 399

வனத்தில்இல் லவளைத் தோற்று வாடிமால் அலைந்தி லானே?
அனத்துஅயன் சிவன்சா பத்தால் ஆலயம் இழந்தி லானோ?
கனத்துஅயி ராவ தத்தான் கழைஎன ஒளித்தி லானோ?
சினத்துஇராக் கதன்கு மாரன் செயிர்த்துறப் பிணித்தி லானோ? 400

வாலிநின் றன்னைப் பற்றி, வரையினில் கிடத்தி, வெந்நில்
கோலிஏழ் மாம ராவைக் குறிப்புற நிறுத்தி லானோ?
சூரனைச் சூரன் மைந்தன் துணிக்கவே கறுக்கி லானோ?
சீர்இல்இந்து ஓர்சா பத்தால் தேய்ந்தொழிந்து உதித்தி லானோ? 401

அருள்அரிச் சந்த்ர ராசன் அரசுஇழந்து, அடிமை யாக
உரிமையைச் சேயை விற்று, உரவனும் புலையன் ஆளாய்
எரிநிகழ் ஈமம் காத்தான்; இயம்பொணா இடுக்கண் தாங்கான்,
புருவவா இருகை காலும் போக்கியே புலம்பல் உற்றான். 402

விதிஎவர் விலக்க வல்லார்? விசயனும் இதுபோல்" என்றான்.
"இதுவும்மெய்" என்று சேடன் இடைந்து,கார்க் கோடன் தன்னை

---

399. கிரீசன் - சிவபெருமான்; பசுமன் - பஸ்மாசுரன் சுவடியில் இவ்விரு சீர்களும் "அத்திருடி கூட" என உள்ளது. யாப்பு பொருள் கருதி புதிய பாடம படைத்துக கொள்ளப்பட்டது, விறகு சுமந்தது மதுரைத் திருவிளையாடல்; வேடன் - கண்ணப்பநாயனார். உச்சிட்டம் - எச்சில்; கையில் மணடையோடு ஒட்டிக் கொண்டது பிரமனின் ஐந்தாவது தலையைக் கிள்ளிய போது; இரவு உகந்தது - பிச்சை ஏற்றது, இதுவும் நிர்வாணி ஆனதும தாருகாவனத்தில்.

400. இல்லவள் - சீதாபிராட்டி, அனத்து அயன் - அன்ன வாகனத்தை உடையபிரமன்; அயிராவத்ததான் - இந்திரன், இவன மூங்கிலாக ஒளிந்திருந்தது கீகாழியில், சூரபதுமனுக்கு அஞ்சி; இராக்கதன் - இராவணன், குமாரன் - மேகநாதன், இவனே இந்திரனைவென்று கட்டியதால் இந்திரசிததன் எனப்பட்டான்.

401. வரை - கிட்கிந்தைக்கருகிலிருந்த மலை, வெந் - முதுகு, குறிப்புற - அடையாளத்திற்காக; சூரனை - பெரிய வீரனாகிய இரணியனை, மைந்தன் - பிரகலாதன், இந்து - சுந்திரன், சாபம் - மனைவியாகிய உரோஹிணியால் வந்த தட்சனின் சாபம்.

402. உரிமை - மனைவி, சந்திரமதி, சேய - மகன், லோகிதாசன், ஈமம் - சுடுகாடு, இயம்பொணா - சொல்லமுடியாத, இடுக்கண் - துன்பங்களை, தாங்கான் - தாங்காதவனாகிய, வினையாலணையும பெயர், புருவ - இவன் புதனின் மகன், ஊர்வசிமேல் காதல்கொண்டு பிரிவாற்றாமையால் பித்தம பிடித்துத திரிந்தான், கைகாலும் போக்கி - பயனுள்ள செயல்கள் செயயாமல, இபபொருள் தரும் காலோடி கையோடி என்னும் உலக வழக்கே காலாடி எனவும் வழங்குகிறது

சதுரினில் அழைத்து, "ரத்ன சஞ்சீவி தன்னைக் கொண்டு
குதிசிலை விசயற்கு ஆவி கொடுத்துஇவண் எய்து" கென்றான். 403

மற்திரி அட்ட நாக மானவை இசைய, மற்றோர்
தந்திரி திரித ராக்க தன்எனும் கொடிய பாவி,
"செந்திரு நண்பன் அன்ன சேடரா சேந்த்ரா! செய்த
சுந்தரத் தவத்தால் பெற்றாய் சுடர்மணி விடையோன் பாலில்; 404

பன்னக வயிரி ஆன பறவைவேந் தனுக்குஅஞ் சாமல்,
இந்நகர் உற்றோம் அந்த இரத்தினப் பலத்தி னாலே;
மன்இது தெய்வ பூமி; மாநிலம் அதர்ம பூமி;
அந்நிலந் தன்னில் இந்த அவிழ்தமும் பலிப்பு றாதே. 405

பலித்திடும் எனிலும் நம்மைப் பகைத்திடும் பறவை வேந்து
களித்துஇது கொள்வான்; கொண்டால் கட்செவிக் குலங்கள் எல்லாம்
சலிப்புஎனும் கடலுள் ஆழ்ந்து, சருவமும் ஏங்கி மாயும்;
விலிக்குஉப கார மாயன் விரைந்துஉயிர் அளித்துக் காப்பான். 406

அல்லது வில்லி தேரில் அநுமனும் இருக்கை யாலே,
கொல்லுமுன் னே,சஞ் சீவி கொண்டுவந்து எழுப்பு விப்பான்;
இல்லையேல் தெய்வ ராசன் இவன்பிதா அமிர்தம் ஈந்து,
புல்லியே எழுப்பு விப்பான்; புனிதமால் அருளும் உண்டே. 407

ஆதலை அற்றோன் அல்லன் அருச்சுன ராச னேபொன்
பூதலத்து இதற்கு முன்இப் பூமியின் சீவ ரத்ன
ஏதுவாய்ப் போய்அங்கு ஆவி எழுந்துஉயிர் பெற்றார் உண்டோ?
போதவும் மிகுந்த கேள்விப் புண்ணியா! திண்ணி யோனே! 408

தெய்வசம் மதிஎவ் வாறோ? தெரிந்து,சீர் தூக்கிப் பாராது,
அய்வகை யாம்சஞ் சீவி அமுதம்நாம் அளிப்பது அன்று;

---

403. சதுரினில் - விரைவாக, குதிசிலை - வெல்லுகின்ற வில், வினைத் தொகை.

404. செந்திரு நண்பன் - திருமகள் கேள்வன்; சேட ஆதிசேஷனாகிய, ராசேந்த்ரா - மன்னர்களின் தலைவனே; விடையோன் - சிவபெருமான்.

405. பன்னக வயிரி - பாம்பின் பகை, கருடன்; இது என்றது நாகலோகத்தை,

406. கட்செவிக்குலங்கள் - பாம்புக் கூட்டங்கள், வில்லி - வில்லி, விசயன்; உபகார மாயன் - உதவிசெயும் இயல்புடைய திருமால். 407. தெய்வ ராசன் - தேவேந்திரன்; புல்லி - தழுவி.

408. ஆதலை - உதவி செய்வோர்; பொன்தலத்து, பூதலத்து என்க; இப்பூமியின் என்றது நாகலோகத்திற்கே உரிய என்ற கருத்தில்; பொன்பூதலத்து அங்கு ஆவிபோய், சீவரத்ன ஏதுவாய் எழுந்து உயிர்பெற்றார் இதற்கு முன் உண்டோ என்பது அந்வயம்;

மெய்வகை மனதை விட்டு விளைந்திடா இதயத் தால்நாம்
உய்வகை உணரும்;" என்று உணர்த்தி,நெஞ்சு இறுக்கி னானே. 409

வல்அனல் அரக்கை ஒத்த மனத்தினைக் கலைத்த தாலே
கல்அயம் உருக்கை ஒத்த கடுமனம் வயிரம் ஆகி,
சொல்இரக் கங்கள் அற்று, "சொற்றபுண் டரிகா! மீண்டு
செல்;இலை மணி;"என்று ஓதுஅச் செணம்செருக் களத்தில் வந்தான். 410

வந்து,உரு வசிதாள் போற்றி, வர்த்தமா னங்கள் எல்லாம்
பந்தமுற்று உரைத்த தீச்சொல் பப்பர வாகன் கேட்டு
"செந்தழற்கு இரையாய் அந்தச் சேடன்ஊர் முழுதும் தீய்த்தே,
அந்தரத் தினமும் கொண்டு (இங்கு) அவனையும் கொணர்வேன்;" என்றே, 411

மகரகுண் டலம்கி ரீடம் அணிந்து,வெம் தேரில் ஏறி,
பகரரும் அரவம் தாந்தி, பலபல படையும் ஏந்தி,
திகிழ்சது ரங்க சேனைத் திரைபுடை பரந்து போத,
புகழ்பெரும் பாதை காட்டிப் புண்டரீ கன்முன் போந்தான். 412

மகாவா ரிதிபோல் சேனை மல்கிட பஞ்ச வாச்யம்
முகில்இடி திரைபோல் ஆர்த்து முழங்க,முப் புவியும் அஞ்ச,
சிகரகோ புரப்பொற் றிண்தேர் தினகரன் தேர்போல் செல்ல,
ககவலான் சத்த லோகம் கடந்துபோ கவதி சேர்ந்தான். 413

சேர்ந்தபின் அஞ்ச லான்ஆம் சேடன்மாட்டு அடைந்து, கேண்மின்!
சாந்தக மாகச் சீவ சஞ்சீவி தருதல் நன்றோ?
பாந்தள்அம் புடவி நீறப் பற்பமாய் எரித்து, நின்னில்
பூந்து,கொண்டு எய்தல் நன்றோ? பொருத்தம்யாது" (என்று) அறிந்து வம்மின். 414

---

409. அய்வகையாம் சஞ்சீவி - சிறந்த தெய்வீக மணிகள் ஐந்து என்பர், சிந்தாமணி, சூடாமணி, சூளாமணி, சமந்தகமணி, கௌததுபமணி என்னும் அவற்றிற்கு இணையானது இச்சஞ்சீவி மணி என்கிறான் போலும்; நெஞ்சு இறுக்கினான் - உதவ வேண்டும் என இளசி இருந்த உள்ளத்தை சுயநல உணர்வுட்டிக் குடினமாக்கினான்.

410. அயம் - இரும்பு; உருக்கு - எஃகு, ஆதிசேடன் ஒது அச்செணம் புண்டரீகன் செருக்களத்தில் வந்தான். 411. வர்த்தமானம் - செய்தி; பந்தமுற்று - கோவையாக.

413. மகாவாரிதி - பெருங்கடல்; தினகரன் - சூரியன்; சுகவலான் - அம்பு செலுத்துதலில் வல்லவன்; சத்தலோகம் - கீழ்ஏழ் உலகங்கள்.

414. அஞ்சலான் - பகைவன்; சாந்தகம் - சாந்தம்; பாந்தளம்புடவி - நாகலோகம், பூந்து - புகுந்து; கொண்டெய்தல் - (வலியக்) கொணடுபோதல்.

என்னஒற் றர்களைச் சேட னிடத்தினில் அனுப்பி, அங்கண்
துன்னிய பாடி செய்து துணுக்குறப் புவனம் மூன்றும்-
மின்இடி அனந்தம் கோடி மிகமுழக் கிடுவது என்ன,
நன்னய விசய வீர ரணமுரசு ஒலிக்கச் சொன்னான். 415

முரசொலி முழக்கி னால்முப் புவிநடு நடுங்க, எஞ்சி
அரவநல் நகரில் உள்ளோர் அலமலந்து, அரசைக் கண்டு,
"குரிசிலே! உந்தன் மான குமாரிசேய் கோரம் கொண்டு,
பரவைநேர் தளங்க ளோடும் பகைத்துவந்து இறுத்தான்; ஐயா! 416

நயந்துகேட் டதற்குஈ யாமல், நமதுஉலகு அழிந்த பின்பு,
பயந்துமீண்டு உதவத் தக்க பாதையாய் முடிந்தது; ஐயா!
தியங்குசா மத்து ரோகி திரிதராட் சதன்சொல் லாலே
வியன்கள்ஆ கியஅ னத்தம் விளைந்தது; வேந்தே!" என்றார். 417

அக்கண மேஒற் றாட்கள் ஆதிசே டன்தாள் போற்றி,
"சக்கிரிக்கு அரசே! எங்கள் தலபதி சொன்ன சேதி
தக்கபுண் டரிகன் கையில் தான்மணி இன்னு மாவது
இக்கணம் தரில்நன்று; அல்லால் எரிப்பன்இப் புவியை என்றான்; 418

தருவையோ சீவ ரத்னம்?ள தருகிலாது அமர்க்குஇப் போது
வருவையோ? என்று கேட்டான்; வயணம்ஏது? உரையாய்;" என்ன,
திருதராட் சதனை ஆதி சேடனும் சினந்து நோக்கி,
"விரவிமுன் உதவ நின்றேன் விலக்கினாய் வினைவந் துற்ற; 419

தேவரும் மூவர் தானும் திடுக்குவர் அவன்பேர் கேட்கில்;
பாவகன் போலக் கோபம் பண்ணிவந்து, இரண வீரம்
மேவிய முரச வாச்ய மேசெவி தொளைக்க லுற்ற
ஏஇவண் உற்றோர் மெய்கள் எங்கணும் தொளைப்பது ஒத்தே. 420

---

415. பாடிசெய்து - படைவீடமைத்து, ரணமுரசு - போர்முரசு.

416. அரவ நல் நகர் - நாகலோகம், மான - பெருமைக்குரிய, கோரம் - சினம்; இறுத்தான் - சூழ்ந்துகொண்டான்

417. சாமத்துரோகி - பெரும்பாதகன், ஒருசொல், வியன்களாகிய - பெரிய.

418. சக்கிரி - பாம்பு; தலபதி - நாட்டு மன்னன்.

419. வயணம் - நிலைமை

420. பாவகன் - தீக்கடவுள், ஏ - அம்பு.

புற்குணம் விட்டு,இப் போதே புரந்தரன் பேரன் தாளில்
நற்குணத் தோடும் போற்றி, நயந்து,அவன் தாதை யான
பற்குணன் உய்யச் செய்து, பணமணி கொண்டு மீள்வீர்;
விற்குணம் செய்யும் முன்னம் விரைந்துசென்று இறைஞ்சும்;" என்றான்.
421

"துய்யனே! பயப்ப டாமல் சுகத்துடன் இரும்சும் மாநீர்;
அய்யனைக் கொன்றோன் பாலில் அடைந்து,அவற்கு இயையச் சொல்லி,
வெய்யவெம் தளங்க ளோடும் விரைந்துஅனுப் பிடுவன்; வீறாய்
எய்யவெம் சமர்செய் வானேல் இக்கணம் அதம்பண் ணேனோ? 422

எனக்குஅருள் செயும்உத் தாரம்;" எனப்பணிந்து எதிர்நின் றோனை,
"உனக்குஇசைந் ததுபார்; போ;"என்று உரகரா சேந்த்ரன் சொல்ல,
மனக்கவடு உடையான் சேர்ந்த மந்திரி மார்க ளோடும்
சினக்கனல் அனையான் முன்னே சென்றனன் சேனை யோடும்.
423

சென்றுஎதிர் இறைஞ்சி, "ஐயா தேவரீர் இந்த ஊர்க்(கண்)
இன்றுவந் ததும்ஏது?" என்ன, "என்பிதா இறந்த தாலே
வென்றியான் அமிர்த சஞ்சீ விக்குடம் கொணர்க என்றேன்;
குன்றவே பகடி பண்ணும் குணம்கொண்டீர்; அதுவும் நன்றே;
424

கேடது வரும்முன் புத்தி கெட்டிடும் அதனால் உங்கள்
பீட ... ... கள்துர்ப் புத்தி பெருமதம் அழித்து நீற்ற
நாடிவந் தனம்"என்று ஓத, "நன்றுநீர் செய்தீர்; அல்லால்
ஈடுஉமக்கு எவர்தான்? தந்தை இறந்தனன் ஒப்பி லாதான்; 425

பஞ்சவர் தன்னில் உந்தை பகர்பராக் கிரம வீரன்;
துஞ்சினான் அலவர் மற்றுஉன் தொடைஒன்றில் அழிந்து போவார்;
மிஞ்சுவெண் குடைக்கீழ் நீஇம் மேதினி ஆள்வ தாகச்
சஞ்சீவி கொடுத்தோம் இல்லை; அன்றிஓர் தடையும் உண்டோ? 426

---

421. புற்குணம் - இழிகுணம, புரநதரன் - இந்திரன்; பணமணி - நாகமாணிக்கம், இங்குச் சீவசஞ்சீவி; விற்குணம் - விலவின்நாண். 422. அதம் பண்ணுதல் - அழித்தல்.

423. உத்தாரம் அருள் செயும் - விடை கொடும்; உரகராசேந்த்ரன் - பாம்புகளின் தலைவர்களுக்குத் தலைவன், ஆதிசேடன்.

424. குடம் - திரட்சி, அம்ருதசஞ்சீவி திரண்டு மணி ஆகியதால் குடம் எனப்பட்டது; பகடி - விளையாட்டு, இங்கு பொறுப்பற்ற செயல்.

426. அலவர் - அருச்சுனன் அலலாத மற்ற நால்வர்; மேதினி - உலகம்.

பத்திர கிரியும், நீலன் பதிசாம்ப நகரும், நீண்ட
அத்திசூழ் துவரை, மிக்க அத்தின புரமும், சாள்வம்,
சித்தியது ஆம்எண் ஏழு தேசம்ஆள் தந்தை உய்யச்
சத்தியாய் எழுப்பி னாயேல், சத்துரு உனக்குஆம் ஐயா, 427

பகைக்குஉயிர் கொடுக்க வேண்டாம்; பணிநகர் விட்டு நீங்கி
சகத்திர யங்கட்கு ஏகச் சக்கர வர்த்தி யாகச்
சுகத்துடன் இருந்து செங்கோல் சுபிட்சமாய்ச் செலுத்தும்" என்ன,
மிகுத்துஇரு கண்கள் பொங்கி, வெங்கனற் கொழுந்து பாய்ந்தே, 428

"அடபத காரிசண் டாளா! அற்பதுர்ப் புத்தி ஈனா!
விடதரப் பிறவி யாலே விடத்தினும் கொடும்சொல் சொன்னாய்;
கொடியநின் போலப் பாம்புக் கொடியனைப் பயந்தோன் இந்தப்
படிவிக டங்கள் மூட்டிப் பாலகன் நாசம் ஆனான். 429

அவன்என நீயும் சேடன் அவைஉறைந்து, அரவுக்கு எல்லாம்
பவபழிக் காரன் ஆக, பாலகன் நாசம் ஆக,
விவிதமாய் விகடம் உற்று விலக்கினாய் ஈகை" என்று
செவியினில் கேட்க, வந்தது எனஅவன் நழுவிச் சென்றான். 430

சென்றுஅரவு அரசைப் போற்றி, "சேடரா சேந்த்ர தீரா!
இன்றுநும் பேரன் தந்தை யினைச்செயித் ததுபோல், எங்கும்
வென்று,மூ உலகும் ஆள விரும்பினன்; இவனைச் சும்மா
இன்றுவிட் டோமே ஆகில் எண்இலார் மேலும் மன்னர் 431

இகலுறும்; மெய்ய தாக எமபடாள் குடிகொண் டுற்றார்;
மகிழ்அனல் கடவுள் தீய வடவையும் நாசி உற்ற;
திகழ்களம் களத்தில் பொங்கச் சிவன்அடை, யாளம் உற்ற
அகியினம் பகைக்கின் மாந்த ரால்செய்வது ஏதுஉண்டு? ஐயா! 432

---

427. அத்தி - கடல; துவரை - துவாரகை; எண்ஏழு - ஐம்பத்தாறு.

428. பணிநகர் - நாகலோகம்; சகத்திரயம் - மூன்று உலகங்கள்; சுபிட்சம் - வளமைமிக்க வாழ்வு.

429. விட தர - நஞ்சினைத தாங்கியுள்ள; பாம்புக்கொடியன் - துரியோதனன், பயந்தோன் - திருதராடடிரன், இந்தப்படி - இவ்வாறு , விகடங்கள் - வேறுபாடுகள், இங்கு மித்ரபேதம்; பாலகன் - துரியோதனன்.

430. அவன் - திருதராட்டிரன்; பாலகன் - இங்குப் பேரனாகிய பபரவாகனனைக் குறித்தது; விவிதமாய - பல்வேறு வகையாய; சென்றவன் - திருதராட்சதன்

432. அனல் கடவுள் - அக்கினி, பாம்பின் மூச்சுக்காற்று நெருப்பையும் தீயவைக்கும் வடவையைப் போன்றது என்றபடி, களம் - 1. நஞ்சு 2. சுழுத்து, பாம்புகளும் சிவபிரானைப் போலவே தம் சுழுத்தில விடத்தைப் பெற்றுள்ளன, அகி - பாம்பு, நம் உடல்பில் எமபடர்களும், நாசியில் வடவையும், சுழுத்தில விடமும் இருப்பதால் மானிடர்களால் நம்மை என்ன செய்துவிட முடியும் என்பது கருத்து.

மதத்து,உனை மதித்தி டாமல் வந்தமன் னனையும், சூழ்ந்த
கதழ்ப்படை அனைத்தும் இந்தக் கணந்தனில் எரித்து, நீத்தே,
அதத்துடன் அவிப்பேன்(நான்)"என்று, அண்ணல்தன் விடையும் பெற்று,
கொதித்தவெங் கோபத் தோடும் கோள்அராக் கூட்டம் செய்தான். 433

செயரண முரசம் ஆர்த்துச் சேனையைக் கூட்டம் செய்தான்;
வியன்மிகு வண்ண மான வியாளங்கள் திரண்டு மொய்த்த;
இயல்முடி ஒன்று,இ ரண்டு, ஈர்இரண்டு, ஐந்து,ஆறு, ஏழுஎட்டு,
உயர்நலம்பத்து, இருபான், முப்பான், நாற்பான்,ஐம் பான்,அறு பானும், 434

ஓர்எழு பான்,எண் பான்,தொண் ணூறு,இரு நூறு, முந்நூறு,
ஆரும்நா னூறு,ஐ நூறே, ஆறுநூறு, எழுநூறு, எண்நூறு,
ஓர்தொளா யிரம்,ச கத்ரம் மீறிதாய்ச் சென்னி யுள்ள
பாரமா நாகர் எல்லாம் பரவைபோல் பரவி மொய்த்தே, 435

படங்களை விரித்தே மேக படலமாய், மகமேரு ஒத்த
கடங்களின் நகர்ந்தே, ஊழிக் காற்றுடன் எரிகள் வீசி,
விடங்களைச் சொரிந்து, நஞ்சின் வெம்அடல் கனல்எ ழுப்பி,
ஒடுங்கிடச் சேனை தன்னை உறுக்கியே எரித்தது எங்கும். 436

நஞ்சுஎரி சிலரைத் தீய்க்க, நாக்குஎரி சிலரைத் தீய்க்க,
மிஞ்சிய தூளிக் காற்று விசும்பினில் சுழன்று தீய்க்க,
அஞ்சுநாட் டிகமாம் சேனை அலற,மா சுணங்கள் (பொ)ங்கப்
பஞ்சினுள் படர்ந்த தீப்போல் பரவின படையில் செந்தீ. 437

பருத்தியில் படர்ந்த தீநேர் பாந்தள்சே னைகளில் பாய்ந்து,
துரத்தியே வளைத்து, மண்டி, சுட்டுறப் பொசுக்க லாலே,
அரற்றியே அலறி, "ஆற்றோம்; அபயம்!நின் அபயம்!" என்றே
உரைத்ததால், மன்னர் சீயம் உருத்திர வேஷம் கொண்டே, 438

---

433. மதத்து - ஆணவத்தோடு; சுதழ்ப்படை - சினங்கொண்டசேனை. அதம் - அழிவு; அண்ணல்தன் - ஆதிசேடனின்; கூட்டம் செயதான் - கூட்டினான்.

434. வியாளம் - பாம்பு. இப்பாடலின் யாப்பமைதி சிறப்பாக இல்லை.

435. சகத்ரம் - ஆயிரம், பரவை - கடல். 436. கடம் - உடல்.

437. அஞ்சு - பயப்படுகின்ற; பொங்க - மிகுதியாக.

438. பாந்தன் - பாம்பு; மன்னர்சீயம - ராஜசிம்மம், பப்பரவாகனன்; உருத்திர வேஷக்கொண்டே - மிகச்சினந்து என்பது குறிப்பு.

இதழ்மடித்து, எயிறு கவ்வி, இடியின்விற் குணங்கள் காட்டி,
அதம்உறக் கருடாழ் வார்தன் அத்திரம் தொடுத்த பின்னர்,
சதிபுரி நகுல அஸ்த்ரம், சகுந்தஅத் திரம்,கங்கு அஸ்த்ரம்,
மதம்உறும் வராக அஸ்த்ரம், வயிரமாய்த் தொடுத்து, பின்னும், 439

சகடஅத் திரம்,செந் நாய்க்கோல், தளமயில் கணை,விண் ஏற்றின்
விகடஅத் திரம்,வெம் காகம் கூகைவெம் கணையும் விட்டான்;
இகல்உறு கருடன் கோலில் இத்தனை கோடி என்று
தொகைஇலா வயின தேயன் தொத்தியே பரந்த எங்கும். 440

சிறகுஅடி கொண்டு, சீறி, தீர்க்கமாய்க் கிருஷ்ணா என்ற
மறைமொழிச் சந்தத் தோடும், வச்சிர நகத்தி னாலே
முறைமுறை படத்தைக் கீறி, முளையும் நிணமும் உண்டு,
கறைகளைப் பருகி, நீண்ட கடங்களைச் சேறது ஆக்கி, 441

குடர்களை மூக்கி னாலே கொத்தியே பற்றி ஈர்த்து,
உடல்கிழித் தே,சொண் டால்சேற்று உழவுசெய்து, அளறது ஆக்கி,
அடிகள்வைத்து அழுத்திக் கொத்தி, அடிக்கடி சிறையால் மொத்தி,
புடைபுடைத்து எங்கும் பொங்கி, பொசித்தது அமுதாய் நஞ்சை. 442

பிஞ்சுபிஞ்சு உடல்கள் எல்லாம் பிளந்து,அழிந்து அழிந்து, மங்கி,
நஞ்சு,நஞ்சு எஞ்சி, அஞ்சி, நெஞ்சுஅனல் மெழுகது ஆக,
துஞ்சிட, உரக மெய்யைச் சொண்டினால் வாரி நுங்கல்
அஞ்சன மெய்யன் வெண்ணெய் அளைநெய்உண் டதனை ஒத்த
443

பன்னக வைரி யான பறவைவேந்து இந்த வாறாய்த்
துன்அரா இனங்கள் மாய்த்துச் சொண்டுகொண்டு உண்டுஉண்டு ஆர்க்க,
மின்னுகாத் திரக்கோல் தன்னில் விளைந்தது தீர்வைக் கூட்டம்;
வன்னவன் னங்க ளாக வல்பதக் கீரி மொய்த்தே, 444

---

439. கருடாழ்வார்தன் அத்திரம் - கருடாத்திரம்; நகுலம் - கீரி; சகுந்தம் - சுழுகு; கங்கு - பருந்து, மதம் - செருக்கு; வராகம் - பன்றி.

440. சகடம் - சக்கரம். இது உருண்டு பாம்புகளை அழிக்கும்; விகடம் - பெரியது. வயினதேயன் - கருடன்.

441. வச்சிர நகம் - வயிரம் போல் வலிமைவாய்ந்த. கறை - உதிரம்; கடம் - உடல்.

442. சொண்டு - (பறவையின்) அலகு. அளறு -சேறு; நஞ்சு ஆகுபெயராய் பாம்பை உணர்த்திற்று. அமுதாய் நஞ்சைப் பொசித்தது நலல முரண்தொடை.

443. நஞ்சு - நைத்து; நஞ்சு - பாம்பு; எஞ்சி - சுருங்கி, உரகம் - பாம்பு; நுங்கல் - விழுங்குதல்; அஞ்சன மெய்யன் - கண்ணன்; அளை - தயிர்.

444. ஆர்க்க - ஒலிக்க; காத்திரம், தீர்வை - கீரி; வல்பதம் - வன்மை மிக்க கால்களை உடைய;

துத்திப்பைத் தலையைக் கவ்வி, துண்டுறப் பிளந்து, மெய்யைப்
பற்றியே கண்ட துண்டம் பண்ணி,மண் எங்கும் பாரக்
குத்திரம் அனந்தம் என்னக் குவித்திடத் திசைகள் எல்லாம்,
சத்திகெட்டு, அரவம் அஞ்சி, தந்திதேர் பரியில் ஓடும். 445

ஓடினும் துரத்திக் கூடி, உருள்களில் நுழைந்திட் டாலும்
பாடுறும் புரவி யானை பண்பகடு ஒளிந்திட் டாலும்
ஆடல்உற்று, அடர்ந்து, சீறி, அணுஉறத் துணிகள் ஆக்கி,
கோடிமா மலைகள் ஆகக் குவித்தன அரவைக் கொன்றே. 446

கைகள்வாய் சலித்தி டாமல் கண்டதுண் டங்கள் ஆகக்
கொய்துகொய்து அரவைக் கொன்று, குறைத்துஅமர் மாறுஇல் லாமல்
வெய்துவெய்து எட்டுத் திக்கும் வென்றுகீ ரிகள்நின்று ஆர்க்க,
நெய்திகழ் சகுந்த வாளி நின்றுஎழும் கழுகுஅ னந்தம். 447

பாரிய சிறகி னாலும், பரும்பரும் சொண்டி னாலும்,
கூரிய உகிரி னாலும், கூறுகொள் சேறது ஆக்கி
வாரிமென் மேலும் உண்டு, வன்பசி ஒழிந்தி டாமல்,
வேரிய அரவை எல்லாம் விரட்டிஉண்டு அரற்றி நிற்கும். 448

பருந்தினம் பற்பல கோடி பாந்தளங் குலத்தைச் சீறி
அருந்திநின்று ஆர்க்க, தந்தி யாம்என எண்இல் கோடி
கரும்பெரும் கேழல் சூழ்ந்து கட்செவி இனங்கள் எல்லாம்
வருந்திடக் கடைவாய் தன்னில் ஸவத்துவைத்து இழுத்துஉண்டு ஆர்க்கும். 449

சகடங்கள் எண்ணில் கோடி தாவியே சர்ப்ப வர்க்கம்
விகடங்கள் அற்று மாய விசைத்துஉருண்டு அரைத்து நைக்கும்;
புகலரும் கோடி செந்தாய் போகியின் குலங்கள் மாய்க்கும்;
சிகியினம் எண்இல் கோடி தீஅரா இனம்உண்டு ஆர்க்கும். 450

---

445. துத்தி - பாமபின் படத்தில் உள்ள குறி; பை - பாம்பின் படம், குத்திரம் - மலை, சத்தி - வலிமை, தந்தி - யானை 446. பகடு - (இங்கு) தேர்; துணிகள் - துண்டுகள்.

448. பாரிய - பெரிய, வேரிய - மணமிக்க, நலல பாம்பு இருக்குமிடத்தில நறுமணம் வீசும என்பர் அனந்தம் கழுகு (447) அரற்றி நிற்கும் என்க

449 பாந்தன் - பாம்பு; தந்தியாம் என - யானையைப் போன்ற, கேழல் - பன்றி.

450 சர்ப்ப வர்க்கம் - பாம்புக் கூட்டங்கள, விகடம் - பெருமை, நைக்கும் - துன்புறுத்தும், போகி - பாமபு, சிகி - மயில்.

கொடியினம் எண்ணில் கோடி கூகையும் எண்ணில் கோடி
படஅரவு இனங்கள் தன்னைப் பற்றியே கொத்தி உண்ண,
இடிகள்பல் அனந்தம் கோடி இடைவிடாது இரைந்துஇ டித்து,
கிடுகிடு கிடுகிடு என்றே கெர்ச்சித்து வீழ்த்த லாலே, 451

விடப்பட அரவக் கூட்டம் மீதுஇடி விழப்பார் எல்லாம்
பொடிப்பொடி யாக நீறிப் பொடிந்திட இதற்கும் மிஞ்சிக்
கடத்துடன் இருக்கும் (மற்ற) கட்செவி இனத்தில் வேந்தன்
தொடுத்திட நினைந்து, தேனின் தொடைதொட்டுச் சினந்திட் டானே.
452

பிரசவெம் பகழி தேனின் பெருங்கடல் வற்ற வாரி,
உரகவெம் புவிகள் எங்கும் ஒருத்தலித்து, இருண்டு, மின்னி,
தரையினில் தாரை கொண்டு நிறைத்ததா லத்தை நேராய்
நிரைநிரை சொரிந்த வெள்ளம் நெடும்பணிக் குலத்தின் மீதே. 453

சக்கிரிக் குலங்கள் மெய்யில் தடையறச் சொரிந்த தேன்கார்;
தொக்கசுள் அஸ்த்ரம் தன்னைத் தோன்றல்பின் விரைந்து விட்டான்;
மிக்ககட் டெறும்பு, சூகை, மிகுந்தசிற் றெறும்பு வர்க்கம்
ஒக்கமண் மாரி பெய்வது ஒத்துறச் சொரிந்தது அன்றே. 454

வீசுபீ லிகைமென் மேலும் விடாமழை பொழிவ தாலே,
ஆசுடன் அரவச் சேனை அடங்கலும் புதைந்து, வாயும்
நாசியும் கண்ணும் மூடி, நண்மரத் தும்பி ஒத்தே,
பாசிபன் னாடை போலே பாம்புஎலாம் துளைந்தது அம்மா ள455

பதக்குமுக் குறுணி தூணி பதக்குநாற் கலம்அஞ்சு ஆறோடு
இதப்பதின் கலமே நாற்ப தின்கலம் ஆறு பத்து
சதக்கலம் நாநூறு ஐநூறு சகத்திர கலமும் ஒன்றுக்கு
உதைத்திடத் துடித்து சோர்ந்தே உட(ல்) துடி துடித்தது எல்லாம். 456

கண்ணினில் துளைத்த சூகை கபாலத்தை முதுகைப் பீறும்;
வண்ணவாய்ப் புகுந்த எல்லாம் வயினிடம் துளைத்தும் பீறும்;

---

451. கொடியினம் - காக்கைக கூட்டம்; கூகை - ஆந்தை.

452. விடப்பட அரவம் - நஞ்சையும பணத்தையும் உடைய பாமபு, கடம - உடல்; வேத்தன் - பப்பரவாசுகன், சினந்திட்டுத தொடுத்திடடானே என மாறுக

453. பிரசம் - தேன்; ஒருத்தலிதது - ஒன்றாகச் சேர்ந்து, தாலம - தேன், பணி - பாமபு.

454. தாரா - மழை, சுள் - எறும்பு, சூகை - எறுமபின ஒரு வகை

திண்ணநா சியினில் பூந்த தேகங்கள் அனைத்தும் பீறும்;
புண்உற உடல்கள் எல்லாம் போதவே அரித்தது அம்மா. 457

சேனையா திபனாம் துட்டத் திரிதராட் டிதனாம் பாவி
மேனியைத் தான்பன் னாடை விகற்பமாய் அரித்து மொய்த்;
தேன்எறும்பு அதனால் நொந்து, தேர்ச்சியர் எட்டுப் பேர்அன்பு
ஆனதோர் சேடன் பாலில் அடைந்து,அழுது, அபயம் ஆர்த்தார். 458

(அடுத்த பாடல் சுவடியில் எழுதப்படவில்லை)

"துர்க்குணன்; வெகுச னத்(துத்) துரோகி;சா மாதத் ரோகி;
நற்குணத் துடன்நீர் ஈயும் நற்பொருள் இக்கால் மாற்றிடப்
பற்குணன் குமரன் நம்மைப் பகைக்கவே வினைசெய் திட்டான்;
சற்குண னேயாம் பட்ட சங்கடம் சொலவாய் உண்டோ? 460

காவியம் புராணம் பாடும் கவிஞருக்கு அருள்அன் பாகத்
தேவையின் பொருள்கள் ஈவோர் திருமனம் கலைத்தே, ஈகை
நாவினால் தடுக்கின் றோன்தன் நற்கிளை கெடும்கே டேபோல்,
பாவிநம் சேனை நாதன் படுதுயர் பகர லாமோ? 461

கருடனோ அனந்தம் கோடி; கங்கமோ அனந்தம் கோடி;
கிருடிகள் அனந்தம் கோடி; கீரிகள் அனந்தம் கோடி;
விரிகழுகு அனந்தம் கோடி; வெம்செநாய் அனந்தம் கோடி;
பருகுபிங் கலைபல் கோடி; படர்கவு சிகம்பல் கோடி; 462

சகடங்கள் அனந்தம் கோடி தான்;மயில் அனந்தம் கோடி;
விகடவெம் கொடிபல் கோடி; வீறுஇடி அனந்தம் கோடி;
ககமதில் எழும்பி எல்லாம் கட்செவிக் குலத்தை மாய்த்த;
இகல்இதுள லாம்போ தாமல் இன்னம்ஓர் தடையும் செய்தான். 463

---

455. பீலிகை - எறுமபு, பிபீலிகை என்பதன் முதறகுறை. ஆசு - குறறம். துளைநதது - தொளையுண்டது.

456. பதக்கு - இருகுறுணி, பதினாறு படி, தூணி - முப்பத்திரணடு படி, சதக்கலம - நூறுகலம்;

457. கபாலம் - மணடை, இவகு தலை, வயின் - வயிறு, பூநத - புகுந்த என்பதன மருஉ

458. தேர்ச்சியர் - அமைசசர்.

460. சாமாதா - மாப்பிள்ளை. அருசசுனன ஆதிசேடனுக்கு மருமகன். அவனை எழுப்பத் தடைசெய்ததால் மாப்பிள்ளைக்குத் துரோகம செயயவைத்தவன் ஆனான்; இக்கால் - இப்போது. 461. சேனை நாதன் - திருதராட்டிதன்.

462. கிருடி - பன்றி, பிஙகலை - ஆநதை. கவுசிகம - கூகை 463 சுகம - அம்பு.

சோனையாய்ப் பிரச மாரி சோரியஓர் கணையும் தொட்டு,
ஏனையோர் சூகை மாரி ஈண்டஓர் கணையும் தொட்டான்;
தேன்அளை வான மெய்யில் செருமியே எறும்பு மொய்த்தே,
ஊன்எலாம் அரித்துத் தின்று,எம் உயிரையும் குறைத்தது; அய்யா! 464

ஒன்றுக்குத் தப்பி னால்பின் ஒன்றுவந்து உயிரை வாங்கப்
பொன்றியது; உரக ராசிப் புணரியும் சுவறிற்று ஐயா!
அன்றிஇவ் வினைகட்கு எல்லாம் தப்பிடில் எறும்புக் கூட்டம்
கொன்றதை விரித்து நாவால் கூறஓர் யுகம்போ தாதே. 465

இவ்விதப் படைகள் எல்லாம் எமர்உயிர் குறைக்க என்றே
செவ்விய வீர சூரன் சேர்த்துவைத் தனனோ? அய்யா!
எவ்வம்இல் லானுக்கு உன்பால் எய்துதல் பாரம் அல்ல;
அவ்வியன் சொல்கே ளாமல் அவனைநேர் பண்ணும் ஐயா! 466

கருப்பைதான் பொருந்தி வாழும் கந்தைசேர் குடம்பை யுள்ளே
நெருப்புறு திரியைக் கவ்வி நீறுஎழச் சுட்டு, சார்ந்த
இருப்பையும் கெடுத்து, சேர்ந்த இனத்தையும் கெடுத்து, தானும்
எரிப்படு மாறு கெட்ட இயல்பில்தீங்கு இழைத்தான் ஐயா! 467

இறந்தது போக மற்றோர் இருந்திட இரங்கு வீரேல்,
அறம்திகழ் பேரன் கோபம் ஆற்றிடும் சிலரை ஏவி;
மறம்திகழ் கொடியன் பேச்சை மறந்து,உயிர் தரும்சஞ் சீவி
சிறந்தமா ணிக்கம் கொண்டே, சென்று,மீண்டு எய்தும் ஐயா!" 468

என்னவே அமைச்சர் எண்மர் இயம்பிய மொழி"நன்று" என்று,
மன்னவன் ஆதி சேடன் மகள்மகன் கோபம் மாற்ற
முன்னதாய்ச் சிலரை ஏவி, மொய்ம்பனும் அமைச்ச ரோடு
பின்நயந்து, அவன்பால் சென்றான்; பேரனும் வரவு கண்டான். 469

---

464. அளைவான - கலந்த, ஈண்டு மேலே பூசப்பட்ட, செருமி - நெருங்கி.

465. உரகராசிபொன்றியது, உரகராசிப்புணரியும் சுவறிறறு என இரண்டுடனும் இயையும்.

466. எமா - எம இனத்தார், எவவம - குறறம, அவ்வியன் - பொறாமை உடையவன்; நேர்பணணும் - நேராகச் சந்தியுங்கள் என்றும் அவன் சினத்தை மாற்றிப் பழையபடி செயயுங்கள் என்றும் இரட்டுற மொழிதலாகக் கொளக.

467. சுருப்பை - எலி, குடம்பை - எலிவளை, இச்சொல் பெரும்பாலும் பறவைகளின் கூடடைக் குறிதேத பயிலும், இங்கு எலிவளையும் அச்சொல்லால குறிக்கபபெற்றது.

469. மொய்ம்பன் - வலிமை உள்ளவன், ஆதிசேடன், அவனபால - பப்பரவாகனனிடம்.

பன்னக பதிவெய் தாகப் பதநடை வருதல் கண்டு,
தென்னவன் குமரி சேயன் தேரைவிட்டு இறங்கிப் பேர்ந்து,
அன்னவன் வலமாய் வந்து, அடிமிசை மகுடம் சாய்த்தான்;
பொன்அணி மார்பன் தன்னைப் புயங்கர்கோன் தழுவி, தாங்கி, 470

உச்சியை மோந்து, கண்ணில் ஒழுகிய தரளத் தாலே
அச்சுதை மகன்தன் சென்னிக்கு அவன்அபி ஷேகம் செய்து,
இச்சையாம் உரியோ ரைக்கண்டு இதயமே குளிர்வ தாக,
பச்சமாய் அமிர்த வாய்மை பண்செவிக்கு இசையச் சொல்லி, 471

சேடனும் உபசா ரங்கள் செப்பி,ஆ யிரம்வா யாலும்,
"ஆடல்மன் னவ!நீ முன்னம் அனுப்பின உடனே நானும்
நீடுபேர் அறிஞ னாகில் நின்மனம் மகிழ்வ தாகத்
தேடிய அமிர்த மாம்சஞ் சீவிரத் தினம்ஈ யேனோ? 472

மதியிலேன் நினக்கும் எந்தன் மகளுக்கும் மனது கன்றச்
சதிர்வரும் புண்ட ரீகன் தனைச்சுமா வரவிட் டேன்;பின்
பதியில்நீ அடைந்த பின்னும்; பரிந்து,உனது இதயம் கூர,
இதமுடன் திருந்தி செய்தேன் இலை;என்மேல் பிழைஈது எல்லாம். 473

அய்யனே! அறியேன் செய்த அபசாரம் பொறுத்திடு" என்று
கையினைப் பிடித்துக் கூட்டிக் கால்நடை யாகப் போந்து,
அய்யம்இ லாம லேகொண்டு அரண்மனை அதனில் எய்தி,
தையல்அரா மணிசேர் சிங்கா சனத்தினில் சேடன் ஏற்றி, 474

மந்திரி மார்எண் பேரை மன்னவன் தாளில் போட்டே,
"எந்தைநீ யான்செய் ஏதம் யாவையும் பொறுத்திடு" என்று,
"சந்தமாய் உயிர்கள் ஈயும் சஞ்சீவி ரத்தி னத்தை
அந்தமாய்க் கொடுவா" என்றான் "அமிர்தகும் பத்தி னோடும்" 475

---

470. பன்னகபதி - நாகராசன், வெய்தாக - வேகமாக, பதநடை - கால்நடையாக; தென்னவன் - பாண்டியன், குமரி - அலலி; புயங்கர்கோன் - அரவினந்தரசன்.

471. தரளம் - முத்து, இங்கு கண்ணீர்த்துளி; சுதை மகன் - மகளுடைய மகன், உரியோர் - உரிமை உடையவர், இங்குப பேரன்; பச்சம் - பட்சம், பிரியம்.

473. மதியிலேன் - அறிவற்றவனாகிய நான்; கன்ற - சினம் உண்டாக ; சதிர் - அவை; திருத்தி - திருப்தி.

474. தையல் - அழகிய, அராமணி சோ - நாகமாணிக்கங்கள் இழைக்கப்பெற்ற.

475 "ரத்தினததைக் கும்பத்தினோடும் கொடுவா" எனறான் என இயையும்.

கூறும்முன் வெய்து போய்க்கார்க் கோடகன் கடாரத் தோடும்
தேறிமுன் கொணர்ந்து வைத்துச் சினம்இவன் தனக்கு மாற்றி,
"ஆறுநீ கோபம் ஐயா; அனுப்பும்முன் இருக்கால் என்னைச்
சீறியே விலக்கி நின்றான் திரிதராட் டிதன்சண் டாளன். 476

மன்னவா! நினக்குக் கோபம் வரும்படி செய்தான் வன்பன்;
அன்னவை இனிமேல் கூறி ஆவதுஎன்? அவனும் நின்தாள்
தன்னில்வந்து இறைஞ்சு வான்;நீ தான்பிழை பொறு"எனச் சொன்னான்
இன்னது கேட்ட போதே இந்திரன் பேரன் சொல்வான். 477

"அன்னவன் உமது வாயிற்கு ஆனவன்; ஈனன்; என்கண்-
முன்அவன் வரவொண் ணாது; முதியன்நீ என்சொன் னாலும்
பின்எதும் கேட்பேன்" என்றான். பேரனை உவந்து போற்றி,
பன்னக புரத்து வேந்தும் பயணமுஸ்த் தீபது ஆனான். 478

மந்திரி மார்எண் பேரும், மன்னனும், தளமும், தீய
தந்திரி தனையும் கூடத் தரைக்குஎழுந் தருள்கென்று ஓத
இந்திரன் பேர னோடும் எண்ணரும் தளமும் கூடப்
பந்தம துடன்எல் லோரும் பயணமுற்று எழுந்தார் அன்றே. 479

முரசுடன் பஞ்ச வாச்ய முழக்கொடும் பயண மாகி
இரதமேல் பப்ர வாக னுடன்இகல் கார்க்கோ டன்தான்
அருகுற்றான் . . . . . கைக்கொண்டு;அவன்ஒழிந்து அமைச்சர் ஏழ்வர்
விரவும்ஏழ் தேரில் போத வேந்தனும் தேரில் போந்தான். 480

நால்வகைச் சேனை யோடு நவமணி நகரி னோனும்,
மால்வயச் சேடன் சேனை மந்திரி மாரும் போத,
சால்வினைத் திருத ராட்டி தன்மனத் துக்கத் தோடு,
"மேல்விதி யாதோ?" என்று வெந்துயர் உழப்ப நொந்தான். 481

தந்தைநொந்து இருப்பப் பெற்ற தனயர்துர்ப் புத்தி என்றும்
கந்திரு வனைநேர் துஷ்ட கன்எனும் இருவர் வந்து,
"சிந்தனை பலவி சாரம் செய்வதுஏது?" என்றுஉ சாவும்
மைந்தரை நோக்கிச் சொல்வான் வன்கணன் கொடிய பாவி 482

---

476. கடாரம் - குடம்.
478. வாயில் - இங்கு அரண்மனையையும், அவையையும் உணர்த்திற்று. முஸ்த்தீபு - ஏற்பாடு. உருதுச்சொல், அது - பகுதிப் பொருள் விகுதி. 479. தரை - நிலவுலகம்.
481. நவமணி நகரினோன - பப்பரவாகனன்

"என்சொல்வேன்? மக்காள்! நான்ஒன் றேசெயில் தான்வேறு ஒன்றாய்
மன்செய்தான்; எண்மர் ஆன மந்திரி மார்மற் றோரைப்
புன்செய்கை மனிதன் காலில் போட்டனன்; தெய்வம் மாக்கள்
தன்சரண் அடைய லாச்சு; தான்இனி இதற்கு மேல்என்? 483

ஈதுஅலால் விகட மாய்யான் இசைத்ததுஉண்டு எதிரி பாலில்;
ஆதுஎலாம் உரைப்பான்; வில்லி ஆவிபெற்று எழுந்தா னாகில்
சீதரன் தனக்கும் சொல்வான்; சினந்துபின் எனைஎன் செய்யான்?
போதவும் இதற்கா நெஞ்சம் புழுங்கினேன் அழுங்கி;" என்றான். 484

"ஈதுஒரு பார மாக இடைவதுஏன்? இமைப்பில் யாங்கள்
காதுசெங் களத்தில் புக்கு, காண்டீபன் சென்னி கொண்டு
ஊதைபோல் யாரும் காணாது ஒளிப்பம்"என்று உரைத்த போது,
பாதகன் கேட்டு மக்கள் பாலினில் ஒருசொல் சொல்வான். 485

"கரந்துஎங்கு மறைந்திட் டாலும் கருடனைக் கொண்டு தேடிச்
சிரந்தனைக் கொள்வர்" என்னச் சேயர்கள் மறுத்துச் சொல்வார்
"திருந்துஒரு ரிஷிசா பத்தால் சேர்கிலா வரைஒன்று உண்டு;
அரும்தவன் அருளால் யாங்கள் அடைந்துஅவண் கரப்போம்" என்றார்.
486

"இந்தவாறு என்னைக் காக்க வேசெயில் தாதைக்கு ஆனந்-
தம்தரும்; உங்கள் போல்ஆர் சந்தமுப் புவனத்து?" என்ன,
தந்தையைப் பணிந்து போற்றி, தனயர்கள் இரண்டு பேரும்
அந்தமாய் ரூபம் கொண்டே அடைந்தனர் களத்தில் வெய்தின். 487

மனக்கதி யாகப் போந்து, மருத்துவன் குமரன் சென்னி
தனைபலத் தாப்யர் வைகும் தடவரைக் குகையுள் வைத்து,
வினைஞர்கள் வாயில் காத்து, வீறுடன் இருந்தார் இப்பால்
தனதுடன் திரித ராட்டி தன்தளத் துடனே போந்தான். 488

---

483. மன் - பாம்புகளின் அரசன். 484 எதிரி - பபரவாகனன், ஆது - (நான்செய்த) குற்றம.
485. இடைவது - வருந்துதல், காது - (ஒருவரையொருவர்) கொலகின்ற, ஊதை - காறறு.
486. கரந்து - ஒளிந்து , ரிஷி - பலதாப்பியர், சாப வரலாறு இதே சருகசம் 539.540 ஆம் பாடல்களில் கூறப்பட்டுள்ளது 487. சந்த - அழகிய.
488. மனக்கதி -மனோவேகம், மருத்துவன் குமரன் - இந்திரனின் மகனாகிய அருச்சுனன்.

மணிநகர் அதிபன் சேனை வாரியும், வேடன் தானை,
திணியவன் கொடிய பாவி திரிதராட் டிதனும் சேர்ந்து,
பணிகளும் நரரு மாக, படுகளம் வந்து புக்கே
அணிதிகழ் விசயன் மெய்கண்டு அவன்முடி தேட லுற்றார். 489

பகிரதன் அன்ன வீரப் பப்பர வாகன் சிந்தை
சிகிஉறு மெழுகு போலத் தியங்கி,அங்கு எங்கும் தேட,
அகியரும் நரரும் மற்றும் அமைச்சரும் கலங்கத் தேட,
தகையுடன் காண்கி லாமல் சஞ்சலக் கடலுள் தாழ்ந்தார். 490

"சிரம்மணி மகுடத் தோடு சேர்ந்துஎன்ன மாயை யாகத்
தரையைவிட்டு எவர்கொண் டாரோ? தறுகணர்; கொடுஞ்சண் டாளர்;
நரகுஎரிக்கு இரையது ஆவோர்; நாசமாய் அழிந்து போவோர்;
பரகதி அணுகார்' என்று பப்பர வாகன் சோர்ந்தான். 491

மன்னவன் அயர்ந்த போது மற்றுள பேர்கள் எல்லாம்
தன்உணர்வு அழிந்தே ஏங்கித் தழல்படு கிருமி போன்றார்;
இன்னவாறு இவர்கள் ஏங்கி இடைந்தனர்; இப்பால் மிக்க
பொன்நகர்க்கு எழில்சேர் அத்திப் புரியினில் நிகழ்தல் சொல்வாம். 492

குந்திநள் இருளில் பள்ளி கொள்ளுவாள் கனவு கண்டு,
தன்தலை தனில்கை ஏந்திச் சத்தமிட்டு அலறிக் கொண்டு,
இந்துஅன முகத்தாள் சாலை யிடத்தினில், தருமன் முன்னே,
நொந்து,விம் முதலை நோக்கி, நொய்தில்,"ஏன்?" என்று கேட்டான். 493

"என்உயிர்க்கு உயிரே! தர்மா! உன்உயிர்த் தம்பி பார்த்தன்
சென்னியில் தயில கும்பம் செறிய,மெய் கோம யங்கள்
தன்னையும் துன்னப் பூசி, தழல்நிகர் கரவீ ரப்பூ
வன்னமா லிகையும் கடி, வண்டியில் கரங்கள் பூட்டி, 494

அன்னதில் ஏறித் தெற்காய் அவன்செலக் கண்டே யானும்
வன்இடி தன்னைக் கண்ட மஞ்ஞைபோல் மயங்கி யேதான்

---

489. தானையுடன் உம்மை கூட்டுக; திணியவன் - பலசொல்லொரு பொருள்; முடி - தலை.
490. சிகி - நெருப்பு; அகியர் - நாகர். 491. பொன்நகர் - அமராவதி, அத்திபபுரி - அத்தினாபுரி.
493. இநது அன - சந்திரனைப் போன்ற, சாலையிடதினில் - அரணமனையில்.
494. தயில குமபம - எண்ணெய்க்குடம, கோமயம் - பசுஞ்சாணம்; கரவீரப்பூ - அலரி மலர், கரங்கள - கழுதைகள.

நின்னுடன் பகர வந்தேன்;" என்றுஅவள் பொருமி ஏங்கிச்
சொன்னதால் மன்னர் கோனும் துயர்க்கடல் தன்னில் தாழ்ந்தான்.
495

ஆயிழை உரைக்கக் கேட்டே, அகம்நடு நடுங்கி, மங்கி,
வேய்இசை பயில்வோன் தன்னை விரும்பியே அகத்தில் உன்னி,
"தூயனே!" என்றுஈ சானத் தொல்திசை நோக்கும் முன்னம்,
சேயவெம் கலுழன் ஏறிச் செனத்தினில் வந்து கண்டே, 496

(அடுத்த பாடல் சுவடியில் எழுதப்படவில்லை)

"உன்னியது என்?"என் றேமால் உதிட்டிரன் தன்னைக் கேட்க,
அன்னையை நோக்க, வாய்விட்டு அலறியே, கனவைக் கூறத்
தன்அனை இருவர், குந்தி, தடிக்கர வீம னோடும்
பன்னக வைரி மீதில் பகவனும் ஏறிக் கொண்டே, 498

தருமனை அனுப்பிக் கொண்டு, "சனத்தினில் வில்லி பாலில்"
கருடனைக் "கொடுபோ" என்ன, கனமன வேகத் தோடு
தருமணி நகரில் சேர்ந்து, சமர்க்களத்து இறுத்த பின்பு
திருமணி மார்ப னோடும் சென்றவர் இறங்கி னாரே. 499

குந்திதே வகிய சோதை குணவில்லி உடலைக் கண்டே,
"அந்தகோ! மகனே!" என்று அவனியில் அடித்து வீழ்ந்து,
"எந்தையே! உனக்குஒப் பாய்வில் எடுத்துஎதிர் நிற்பார் உண்டோ?
நந்தனோ வல்லான் கொல்ல? நமன்உனை முடுகி னானோ?" 500

முன்உள்ள கீர்த்தி எல்லாம் முறைமுறை புலம்பிச் சோர்ந்து,
சென்னியில் அகட்டில் வாயில் திருமுகத்து அறைந்து, குன்றி,
மின்அணி கூந்தல் பூழ்த்தி விரவிடக் கதற லுற்றார்;
மன்னிய வீமன் பின்கா(ல்) மாட்டினில் அறைந்து வீழ்ந்தான். 501

கடகடென்று உருண்டு, மெய்யைக் கண்ணினில் அணைத்து, முத்தி,
"வடவரை அனையாய்! சீவன் வைத்திருந் தேனே இன்னம்

---

495. மஞ்ஞை - மயில்.
496. வேய - புல்லாங்குழல், பயிலவோன் - சுனனன, சானம் - வடதிழகசு; சேய - செம்மையான.
498. தன் அனை - சுனனனின் தாயர், இருவா - பெற்ற தாய் தேவசி, வளர்தத தாய் யசோதை; தடிக்சர - தனடேநதிய சைகளை உடையவனாகிய.
499. சருடனை, "சனததினில வில்லிபாவில் கொடுபோ" என்ன என இயையும்.
500. நநதன் - மசன, பபரவாசனன். 501 அகடடில - வயிறறில், பின் - பிறகு

கொடியன்?''என்று உரைப்பன்: வாயில் கொள்ளுவன் பூழ்தி அள்ளி;
முடிமுகம் வாயில் கையால் மோதுவான் முறைய தாக. 502

அன்னையார் அத்தை வீமன் அலறிய பரதா பங்கள்,
துன்னிய சோப தாப துக்கமும் நோக்கி, மாயன்,
"இன்னவர் கலக்கம் நம்மால் இயலுமோ தவிர்க்க?" என்று
தன்உணர்வு அழிந்து விம்மித் தரையினில் அடித்து வீழ்ந்தான். 503

கண்புனல் அருவி ஓடக் கடகடென்று உருண்டு, காசைப்
பண்புஉருக் குலைய, மெய்கள் பதறியே துடித்து,''என் ஆவி
நண்பனே! உன்னைத் தோற்று நான்உயிர் தரித்தி லேன்;நீ
விண்புகு வதற்கு முன்நான் வீவன்''என்று அலறி வீழ்வா(ன்). 504

வீழ்ந்துவீழ்ந்து எழுவான்; மென்மேல் விழிகள்ஆறு ஒழுகத் தேம்பி,
தாழ்ந்து,உரம் மோந்து, முத்தி, தன்கையால் வாரிப் புல்லி,
போந்தகா யங்கள் நோக்கி, பொறுக்கொணாது அலறிச் சோர்வான்;
ஆழ்ந்தவாய் விரித்துக் கூவி அடிக்கடி அலறி ஆர்ப்பான். 505

"தங்கைபொற் பாம்சு பத்ரை, தையல்பாஞ் சாலி, தர்மன்,
இங்குஉனக்கு இளையோர், (என்னை) "எங்குஉன்பால் வந்தோன்?" என்றால்
அங்குஅவர்க்கு ஏது சொல்வேன்? அன்பரே மாய்வ ரோ?நீ
மங்கியது அறிந்தால் சீவன் வைத்திலார்; அதற்குஎன் செய்வேன்?
506

ஒப்பிலா விசய! வின்மைக்கு ஒருவனே! நீவில் ஆற்றால்
நிற்பரோ மூவர் தேவர் நிருபர்கள் ஆரும்? ஐயா!
உப்புஒரு கையால் நீந்தி ஒருகுளப் படியில் ஆழ்ந்தாய்;
அப்புஉரு கங்கை சாபத் தால்மதி மயங்கி மாய்ந்தாய். 507

இடுக்கண்வந் துற்ற போதில் எனைநினை யாதது என்கொல்?
தொடுத்துன்னோடு இங்குஉறாமை தொட்டுஎன்மேல் குறைகொண் டாயோ?

---

502. முத்தி - முத்தமிட்டு, வடவரை - இமயமலை.
503. அத்தை - குந்தி, பரதாபம - பரிதாபம், இரக்கம.
504 காசைப்பண்பு - காயாம்புவண்ணம, வீவன - இறப்பேன்
505. உரம் - மார்பு, மோந்து - முகாந்து; போந்த - ஏற்பட்டுள்ள
506 பாஞ்சாலி - துரோபதை, இளையோர் - தமபிகள், நகுல சகதேவா
507. வின்மை - வில்லாண்மை, உப்பு - கடல், குளபபடி - கால்நடைகளின் கால்குளமபு பதிந்த குழியில் தங்கும் தண்ணீர, அப்பு - நீர்.

அடுத்துஉன்னோடு ஒத்து உறாத தால்பழி பரித்துக் கொண்டேன்;
மிடற்குஉனைப் போல்ஆர்? என்னை விட்டுநீ பிரிய லாமோ?" 508

என்றுஉரு குவன்;சோ பிப்பன்; எழுவன்;நெட் டுயிர்ப்பன்; விம்மிக்
குன்றியே, பரிவட் டத்தைக் கொடுதுடைப் பன்செந் நீரை;
வென்றிவீ ரியங்கள் எல்லாம் விளம்பியே அலறல் கண்டு,
அன்றுதே வகிய சோதை அத்தையும் தேற்றுத் தேறான். 509

முரண்வய வீமன் தன்னை மூவரும் நோக்கி, "மாயன்
பரிவினில் ஆவி தன்னைப் பரிதவித்து இழக்கும் முன்னம்,
விரைவினில் தேற்று" கென்ன வெந்துயர் சோபம் ஆறித்
திருமறு மார்பன் தன்னைச் செங்கரத்து அணைத்து வாரி, 510

மெய்உறும் சோரி மாற்றி வெம்கணீர் அருவி எல்லாம்
கையினில் கலையி னாலும் கவர்ந்து,"என்க லக்கம் தன்னில்
ஐயிரு மடங்கது ஆக அரற்றில்என் அறிவேன்?" என்று
துய்யனைச் சகத்ர நாமம் சொல்லியே புகழ்ந்து போற்றி, 511

"சமஸ்தமும் உதரம் தன்னில் தான்அடக் குதல்நீர் தாமே?
உமக்குஅறி யாதது உண்டோ? உம்மைவிட்டு எங்கும் போகான்
எமக்குஉறு துணைவன்; ஐயா! எங்குபோ னாய்போ னாய்என்று
அமர்த்தியாய்ப் புகல வேண்டாம்; அடியவர்க்கு எளியாய்!" என்றான்.
512

மாருதி தேற்றத் தேறி, மாயனும் சோபம் நீங்கி,
தார்அணி குலைந்த வாகில் சார்ந்துஒரு புடையில் வைகா,
வீரியப் பப்ர வாகன் விம்மிய கலக்கத் தோடு
மாரியை வரையில் தாங்கும் மால்அடி பணிந்து வீழ்ந்தான். 513

சக்கிரி சரண்கண் ஒற்றி, சகத்திர நாமம் போற்றி,
"மிக்கனே! உன்பொற் பாதம் விழிக்குஇலக்கு ஆன தாலே,
முக்கிய பிதிர்த்து ரோகம் முன்செய்த பாவம் நீங்க,
சக்கரத் தால்இப் போதே சங்கரித் தருளும்; ஐயா! 514

---

508 இடுக்கண - துன்பம், தொடடு - அதன் காரணமாக, மிடறகு - வலிமைக்கு.
509. பரிவட்டம் - ஆடை.. 510 வாரியவன் - வீமன்
512. சமஸ்தமும் - அனைதது, உதரம் - வயிறு, அமர்த்தியாய் - ஒன்றும் தெரியாதவனைப் போல, அபபாவித்தனமாக என்னும பொருளில் ஆடசி
513. தார் அணி - மாலைகளின் வரிசை, அழகு எனினுமாம், மாரியை - இநதிரன் சினந்து பெய்வித்த பெருமழையை, வரையில - கோவாத்தன கிரியைக குடையாகக கொண்டு.
514. சக்கிரி - சுதர்சனத்தை உடைய திருமால.

தீயசண் டாளன் என்றே தீண்டிலா தோநின் நேமி?
ஏயவே(ார்) முகுர்த்தந் தன்னி லேஇவண் உதித்தேன்; பாவி
மாயவும் துணிந்தேன்; எந்தன் வன்பவம் தகைந்த தாலே
பேய்என இன்னம் நின்று பிதற்றுதுஎன் ஆவி; ஐயா!" 515

என்று,அவன் உற்றோர் கண்கள் இரண்டிலும் அருவி பாய்ந்து
நின்றுஉரு கிடவே, தன்னை நிந்தித்து நெடிது கூற,
மன்றல்அம் துளப மார்பன் மருகனை இருகை யாலே
அன்று,எடுத்து, அணைத்து மார்பில், அன்புடன் மடிமேல் ஏற்றி, 516

கண்கம லத்து நீரைக் கைக்கம லத்தால் மாற்றி,
புள்பதி ஊர்தி உச்சி போதவே மோந்து, முத்தி,
"எட்குள்எண் ணெய்போல் எங்கும் இருப்பம்யாம்; ஓராது இல்லை;
உட்குறு துயரம் நீங்கு;உன் மேல்ஒரு தவறும் உண்டோ? 517

வில்லிஉன் கரத்தால் மாய்ந்தான் விண்நதி சாபத் தாலே;
அல்லது வெல்லல் ஆமோ அரிஅரன் பிரம னாலும்?
தொல்லையின் விதியை யாரும் தொடைத்திட முற்றாது; ஐயா!
அல்லல்உன் கலக்கம் நீங்காய்; அருட்பகீ ரதனை அன்னாய்!" 518

என்றுவிண் ணவருக்கு ஈந்த விண்அமிழ் தினும்மிக் கான
மன்றுநல் அமிர்த இன்சொல் வண்குழை அதனில் பெய்ய,
மன்றல்(தோள்) மருமான் தேறும் அளவினில் வீமன் கேட்டு,
"இன்றுஇவன் தானோ எந்தன் இளவலை மாய்த்தோன்?" என்றே, 519

கதையினில் பாணி வைத்தல் கண்டுகண் ணால்மால் சொல்வார்
"உதைகணை ஒன்றற் கேநீ ஒத்துநின்று ஆற்று வாயோ?
பதைபதைப்பு ஒழிதி" என்று பப்பர வாக னுக்கு
விதமுடன் சைகை செய்ய, வீமன்பூ அடியில் வீழ்ந்தே, 520

---

515 நேமி - சக்கரபபடை; ஏயவோர - (தந்தையைக கொலவதற்குப்) பொருத்தமான, தகைந்ததாலே - கட்டளையிடுவதாலே, வினைகளின் பயனாக நடைபெறுதலின் அவதறின் ஆணை என்கிறான். 516. அன்று - அப்போது.

517 புள்பதி - பறவை வேந்து, ஊர்தி - (கருட) வாகனன, ஓராது இல்லை - அறியாமல் இல்லை, நடந்தவற்றை யாம் அறிவோம், உட்குறு - அஞ்சுகினற.

518. விண்நதி - ஆகாயததிலிருந்து வநத ஆறாகிய கங்கை, பகீரதன்தன் முன்னோர்களை ஈடேறற அரும்பாடு பட்டவன். அவனோடு பபரவாகனனை உவமித்தது இவன் தந்தையைக் கொன்ற பாதகனாகக் கருதப்பட மாட்டான் என்பதற்காக.

519 மனறு - (தன் அன்பை) வெளிப்படையாகக் காடடுகின்ற.

520. பாணி - கை, உதைகணை - செலுத்தப்படும அம்பு, வினைத தொகை

இருபதம் இருகை யாலே இறுகவே பூண்டு கொண்டு,
பெரியதந் தையின்வல் லாண்மை பிரபலம் அனைத்தும் ஓதி,
விரிவுடன் அனந்தம் கோடி விதமுடன் கோத்ரம் பண்ணி,
"தரியலன்; பிதிர்த்து ரோகி; சண்டாளன் யான்;"என்று ஓதி, 521

"என்னைநீர் சுதன்என் றேநெஞ்சு இரங்கிடாது, உரம்கொள் தண்டால்
சென்னிமெய் அடலை ஆகச் சினத்தொடு நொறுக்கும் ஐயா"
என்ன,வல் நெஞ்சு (திண்)கல் இரும்புஉருக்கு ஆன சிந்தை
வன்னியின் மெழுகை ஒத்து, மழைநதி விழியில் ஊற்றும். 522

"புத்திரர் அடங்கத் தோற்றுப் புரிஒரு மருந்தாய் மிஞ்சும்
உத்தம னே!உன் பேரில் ஒருகுறை குற்றம் உண்டோ?
சத்தியாம் கங்கை சாபம் தலைச்சுமை ஆன தாலே,
வித்தகன் கொடும்சொல் கூறி விதியினால் மரணம் ஆனான்" 523

என்றுதாள் பூட்டும் கையை இருகையால் பறித்து வாரி,
அன்றவன் மடியில் ஏற்றி, அழுதகண் ணீரும் மாற்றி,
மன்றல்மார் பகனைத் தேற்றி, மகன்தலை மோந்து, முத்தி,
வென்றிஆ னனமும் மெய்யும் நோக்கினான் வீம சேனன். 524

காசைஅம் புரமும், சோதி கவின்முகம் மலர்ந்த கண்ணில்
தேசுறு வரியும், ஆரத் திருநகைப் பவள வாயும்,
நாசியொண் ழையும், வீரி நாயகி மருவும் மொய்ம்பும்,
ஆசுஅகல் சித்ரம் ஆன ஆழசேர் நெடிய கையும், 525

திருநடம் பயிலும் மார்பும், திரண்டுஅழ கெரிக்கும் மெய்யும்,
உருஎழில் விசய னேயாய் உபயகண் குளிர நோக்கும்
மருளுறு வீமன் கேட்க வானிமேவு அநும னோடு
"பெரியரே! நிகழ்ந்த வண்மை பேசும்"என்று ஆயன் கேட்க, 526

---

521 பிரபலம் - புகழ், தரியலன் - பகைவன்.

522. தணடு - கதை, சென்னிமெய - தலையையும உடலையும், உமமைத்தொகை, அடலை - தூள், என்ன - என்று சொல்ல, வனனி - தீ.

523 தோற்று - (போரில்) இழந்து; புரிமருந்து, ஒரு மருந்து எனத் தவித்தனி இயையும், விரும்புதற்குரிய ஒபபறற அமுதம். 524 ஆனனம் - முகம்

525. காசை அம புரம - காயாமபூவின எழிலைப பெறற உடல, ஆர - முத்துப போன்ற, வீரி நாயகி - வெளளததிரு, சற்றடியில ஆசசல சிதரம என்புழி ஆசுகவி, அசலக்கவி (விததாரம), சிதரகவி எனபதன் பெயர்கள தொனிவகையால ஒலிகின்றன

526 திரு - இலகுமி, வானி - படை, இஙகு அருச்சுனனின் தேர்க்கொடி

மகன்அடி பணிந்த வாறும், அவன்மொழி உரைத்த வாறும்,
இகல்இவன் விளைந்த வாறும், இராசர்வா கினிஓர் நாளில்
பகையுடன் மடிந்த வாறும், பகலவன் மகன்சேய் ஐந்து
பகலினில் மடிந்த வாறும், பற்குணன் எதிர்ந்த வாறும், 527

இடைவிடாது ஏழு நாள்போர் இகலுடன் பொருத வாறும்,
வடிவின்அர்ச் சுனன்தன் ஆவி மடிவர லாறும், பின்னால்
படையுடன் நகர்போம் வாறும், பாவையர் இருதாய் மாரும்
அடர்களம் வந்துஇ ரங்கி அரற்றிய வாறும் கூறி, 528

"அரவகன் னிகைதன் சொல்லால் ஆவியை நிறுத்தி, நாக-
புரமதில் யுத்தம் பண்ணி, போந்தசஞ் சீவி கொண்டு,
சிரமதைத் தேட லுற்றால் சென்னியை யாரோ கொண்டார்;
விரைவிலே நீங்கள் இந்த வெங்களத்து உற்றீர்;" என்றான். 529

என்றுஉரை செய்,"உன் மீதில் ஏதம்ஒன்றுஇல்;" என்ன யாரும்
நின்றவர் கசிந்தார்; பின்பு, நிகர்இலா வீம சேனன்
மன்றல்மார் பகத்தில் புல்லி, "மைந்தனே மடங்கல் அன்னாய்!
துன்றுஅகம் போழ்ப்பது ஆகச் சொல்அத்தைத் தவிர்த்தி ஐயா! 530

எனதுஉயிர்க்கு உயிரே! எந்தன் இருகணின் மணியே! சீயம்
அனையவன் தவமே! ஐவர்க்கு அருந்தவப் பேறே! எந்தாய்!
உனதுவெம் கலக்கம் நீங்காய் உயுத்தம்மேல் சாய்ப்பும் உண்டோ?
முனம்வரை விதியின் வண்ணம் முடிந்ததற்கு அழுந்தும் வாறுஏன்? 531

கன்றினுக்கு இரங்கி நீவிக் கதறிய கபிலை யேபோல்
அன்றுஅவன் மெய்கை நாவால் அன்புறத் தடவி, விம்மி
சென்று,அவன் அன்னை காலில் சிறுவனைப் போட்டு, நின்றான்;
அன்றுஅவள் துயரம் நீங்கா அர்ச்சுனன் தனைக்கண் டாள்போல், 532

---

527. வாகினி - படை, பகலவன் மகன் சேய் - விடதீதனன்

529. அரவ கன்னிகை - ஆதிசேடனின் மகள, உருவசி.

530. அகம் போழப்பது - நெஞ்சைத் தொளைபபது, சொல அத்தை - சொலலாகிய அதனை, பகுதிப்பொருள்விகுதியோடு அன் சாரியை கெட்டுத் திரிந்தது, சொல் + அது + அன் + ஐ

531. சீயம - சிங்கம், இஙகு அருச்சுனனுக்கு உவமை, சாயபபு - தாழவு, போரில் யாரைச் கொன்றா லும் குற்றமாகாது எனபது கருத்து.

532 கபிலை - பசு, நீங்கா - நீஙகி.

குந்தியும் தாங்கி, வாழ்த்தி, குளிரவே மோந்த தன்பின்,
வந்து,தே வகிபொன் தாளை வழுத்த,அங்கு அவளும் வாழ்த்த,
பந்தமாய் யசோதை தாளைப் பணிந்தபின் அவளும் வாழ்த்த,
பிந்தவே மாயன் பாலில் பேணியே இருந்தான் மன்னன். 533

உந்தியே அல்லி மாதும் உருவசி மாதும் சென்று,
குந்தியைப் பணிந்து போற்ற, குமரன்தன் மனைவி என்று
செந்திரு மார்பன் கூறி, தெரிதர விவரம் சொன்னான்;
பிந்தியே குந்தி ஓர்ந்து பெயர்ந்தினி வாழ்த்தி விட்டாள். 534

சீதரன் அன்னை மாரைச் சேவடி இறைஞ்சு கின்ற
மாதுஇரு வோர்கள் தம்மை மாதுஇரு வோரும் வாழ்த்த,
பாதலம் தன்னை ஆளும் பணிக்குஅரசு ஆதி சேடன்
மாதவன் தன்னைப் போற்றி வழுத்தினான் சகஸ்ர நாமம். 535

ஆயிரம் வாயி னாலும் ஆயிர நாமம் போற்றி,
ஆயிரம் கண்ணன் மைந்தன் மடிந்ததும், அதன்பின் முற்றும்
பாயிர வசனம் யாவும் பயன்உற விரித்துக் கூறி,
"நீஇரங் குவதுஉண்டு ஆகில் நினைத்தது முடியும்" என்றே, 536

"மகள்மகன் நினைத்த வண்ணம் வள்ளலே! முடிவ தற்குள்
தகுதனஞ் சயன்தன் சென்னி தான்கரந்து எவரோ கொண்டார்;
மகிழ்வுற அந்தச் சென்னி வரவழைத்து, உடலில் ஏற்றி,
இகழ்வுஇல்சஞ் ச்வி யாலே எழுப்பி,ரட் சியும்நீர்; ஐயா!" 537

என்றலும் கருடன் தன்னை "எங்குஇருந் தாலும் நண்பன்
தன்தலை கொணர்தி" என்ன, சணத்தினில் எங்கும் தேடி,
கன்றி,வந்து, "எந்தன் நோக்கில் காண்கிலேன்" என்று சொன்னான்;
அன்றுவை குந்த நாதன் அகக்கணால் உணர்ந்து கண்டான். 538

அகக்கணால் கண்டு, பக்கிக்கு அரசனை நோக்கி யே,"நீ
மகப்பலத் தாப்யர் வைகும் வரைஅடைந் தனையோ?" என்ன,

---

534. குமரன் - மகன.

535. அன்னைமார் - தேவகி,யசோதை. இறைஞ்சுகின்ற மாது இருவோர் - சிததிராங்கதை, உருவசி. வாழததும இருவர - அன்னையர. பணிக்குஅரசு - நாகராசன.

536 ஆயிரம் கணணன் - இநதிரன. மைந்தன - விசயன்

537 மகள்மகன் - பபரவாகனன 538 கனறி - வருந்தி

திகைத்துஅவன், "அந்தக் குன்றில் செல்கிலேன்; அந்த யோகி
மகிழ்ச்சியாய் ஓர்த டாக மச்சவே டிக்கை காண்பான்; 539

அங்குஅதை அறியாது, எந்தன் அகடுஉறும் பசியி னாலே,
தங்கிய மச்சம் எல்லாம் சாப்பிட்டேன்; இருடி நோக்கி,
இங்குஇனி மேல்நீ வந்தால் இரும்சிரம் பொடிஆம் என்று
புங்கவன் சபித்தான் இன்று புக்கிலேன் அதனால்;" என்றான்.
540

"நன்று;கம் எடுக்கச் சொன்னோன் நாகரில் ஒருவன்; இங்கே
இன்றுவந்து இருக்க லுற்றான்; எடுத்தவர் இருவர்; அந்தக்
குன்றினில் கரந்து காத்துக் கொண்டனர்; கொடும்சா பத்தால்
பொன்றிடச் செய்வேன்; பொன்றில் பிழைப்பதுஓர் போதும் இல்லை;
541

ஆதலால் கரிநீ; என்மேல் ஆயதுஓர் தோஷம் இல்லை;
கோதுஅறச் சணத்தில் சென்னி கொடுவரச் சொல்லு" கென்ன,
காதினில் கேளான் போலக் கல்என இருந்தான் அந்தப்
பாதகன்; அதனால் கோபம் பரந்தது மாலுக்கு அப்போ. 542

அக்கினி நடுங்கக் கோப மாகியே, "வில்லி என்பால்
மிக்கதுஓர் பத்த னாகில், விரும்பும்என் சிலத னாகில்,
திக்குஅறச் சென்னி கொண்டோர் சிரங்கள்ஆ யிரம்சுக் காக,
இக்கணம் என்கை எய்த" என்றுமால் இருகை ஏற்றார். 543

(அடுத்த பாடல் சுவடியில் எழுதப்படவில்லை.)

சொல்லும்அக் கணமே அந்தத் துரோகர்ஆ யிரம்சுக் காகப்
புல்லுறச் சென்னி நீத்தார்; பொற்புஉறும் சகஸ்ர நாமம்
வில்லிதன் சென்னி கூறி, விரிகதிர் மகுடத் தோடும்
ஒல்லையில் யாரும் காண ஊற்றது முகுந்தன் கையில். 545

---

539 பகடி - பட்சி, பறவை, மச்சம் - மீன்கள்.

540. அகடு - வயிறு, புங்கவன - உயாந்தவன், மகப்பலத்தாப்ய முனிவர்

541. கம் - (அருச்சுனனின்) தலை, பொன்றிட - இறக்குமாறு.

542. கரி - சாடசி, கொடுவரச் சொல்லு என்றது திருதராஷ்டிதனை ஏவுக என்றபடி; பாதகன் - திருதராட்டிதன்.

543. சிலதன் - தோழன

(கலிவிருத்தம்)

செங்கை தங்கும் சிரகம லத்தையே
அங்கை ஏந்தி, அணைத்துற முத்தியே,
பொங்கு கண்கள் பொழிதரு முத்தினால்
எங்கள் மால்அபி ஷேகமும் செய்தனர். 546

அந்த ஏல்வையி லேஅர வாதிபன்
உந்தி பூத்த ஒருவனைப் போற்றியே,
"நுந்தன் அன்பினில் நொய்துஉயிர் ஈதல்விட்டு,
எந்தன் நன்மணி கொண்டுஎழுப்பு; ஏந்தலே! 547

மகள்ம னம்மகிழ் சேய்மனம் கூரவும்,
தகைவில் வந்தஎந் தன்மனம் கூரவும்;
மகிழ்சஞ் சீவி மணிஅமிர் தத்தினால்
புகழ்மனன் ஆவி பொறுத்து;"எனப் போற்றியே, 548

செய்ய தானசஞ் சீவி ரத்தினம்
அய்யன் கையில் அரவமன் ஈந்தனன்;
எய்யவீ மனைஏன் எழுப்பில் லைஎன்று
உய்யும் வில்லிஉற் றேவெறுப் பான்எனும் 549

வருந்து பப்பர வாகனுக் காகவும்,
திருந்த வேண்டிய சேடனுக் காகவும்,
கரந்த பாதகர் காய்ப்புகட் காகவும்
இருந்த நன்மணி யால்உயிர் ஈவதாய், 550

இன்ப வில்லி உடலை இருக்கவைத்து,
அன்பன் சென்னி அதனில் பொருத்தியே,
வன்பது அன்றி மணிக்கொடு நீவவே,
முன்பு போல்எழுந் தான்முரண் வில்லியே. 551

ஆவி பெற்றுஅ(டல்) அர்ச்சுனன் உய்ந்தபின்,
தூவு கைக்கனன் சூன்,சுக லீலனை,

---

547 ஏல்வை - நேரம், அரவாதிபன் - ஆதிசேடன். 548. மனன் - மன்னன், அருச்சுனன்.
549 பின்னிரண்டடிகளின் கருத்து தெளிவாக விளங்கவில்லை.

ஏவில் சென்னிகள் ஈந்தவர் யாரையும்
மேவும் இவ்வித மேஉயி ராக்கினார் 552

"மற்றும் இங்கு மடிந்தவர் யாவரும்
முற்று உயிர்ப்புஉற ஓதுஉபா யம்;"என
வெற்றி மாயன் வினவலும், சேடனும்
சற்று மேசறு காது,எதிர் சாற்றுவான். 553

(எழுசீர் விருத்தம்)

"சல்லிய கரணி சந்தான கரணி
சருவத்தின் கரணியும் மகள்தன்
இல்லில்உண்டு; அதனால் காயமும் பிரிந்த
இயல்அவ யவங்களும் பொருத்தி,
ஒல்லையில் அமிர்த சஞ்சீவி ரத்னம்
உறைதசும் பினில்உறும் அமிர்தம்
புல்லிய உடலில் தெளித்திடும் முனமே
போம்உயிர் பெறுவர்;"என்று இசைத்தான். 554

அவ்விதம் செயவே இருதளத் தினிலும்
ஆவியற்று இறந்தோர் யாரும்
செவ்விதாய் உயிர்பெற்று எழுந்தனர்; அமிர்தன்,
திறல்உறும் பத்திர கிரியான்,
வெவ்விய நீலத் துசன்,பிரத் திமன்,சேய்,
வீறுசாத் தகி,பின்யா தவரும்,
வவ்வுஅநு சாளு வன்னும்,மற் றோரும்
மறுஅற எழுந்தனர் அன்றே. 555

ஆயனை நோக்கி ஆவிபெற்று எழுந்த
அர்ச்சுனன் பேருயிர்ப் பெறிய,
மாயவன் சைகை யால்அரா வேந்தன்
மகள்மகன் தனைவில்லி பதத்தி-

---

552. தூவு கை - அமபுகளைச் சொரிகின்ற கரம்; கனன் சூன் - கன்னனின் மகன், விடகீதனன்
553 உபாயம் - வழி; சறுகாது, தயக்கமின்றி.
554. சல்லியகரணி - படைக்கலத்தால் ஏற்பட்ட புண்களைப் போக்கும் மருந்து; சந்தான கரணி - முரிந்து பிளவுபட்ட உறுபபுகளைச் சேர்க்கும் மருந்து; சருவதத்தின் - அனைத்து வகையான (நோய்களுகும் உரிய); கரணி - சஞ்சீவி, தசும்பு - குடம.
555. அன்று ஏ - ஈற்றசைகள் அல்லது அப்பொழுதே எனினும் இவர் சொல்லாட்சிப்படி அமையும்

லேஉற விழுமாறு இசைத்தனன்; அவ்வா-
றேமணி நகர்அதி பதியும்
போய்அடி வணங்க, புரந்தரன் குமரன்
புதல்வனை விழிகொடும் நோக்கான். 556

மரித்தவர் எல்லாம் எழும்பும்அவ் வளவும்
மகன்அடி வணங்கியே கிடப்ப,
அருச்சுனன் நோக்காது அழுந்திய சிலைஒத்து
அவனியை நோக்கியுற் றிருந்தான்;
எரிக்கொழுந்து எழவல் இடிகடை காட்டும்
எழில்மரு மகன்உளக் குறிப்பின்
கருத்தினை ஓர்ந்து, கரியமால் வெற்றிக்
கைகளால் வாரிமார்பு அணைத்தே. 557

"கண்இரு மணிநின் உயிர்க்குஉயி ரான
காதலன் சேவடி இறைஞ்சில்
பண்ணிய பூசா பலன்பலித் ததுஎனப்
பரிந்துஅணைத்து உடல்குளி ராமல்,
பெண்ணன்என்று இதயத்து எண்ணிய படிக்குஉன்
பீடுற ஆண்மைசெய் தனையோ?
திண்ணியன் திறம்நீ அறிகிலை;" எனவே
திட்டியால் சைகைசெய்து, இதன்பின் 558

தென்னவன் குமரி செய்தனை நோக்கி
"செயவிச யேந்திர னானால்
உன்னைநோக் காமல் உபரிக் காமல்
உற்றனன்; மனக்கலக் கங்கள்
நின்னகத் தினிலே நினைத்திடாய்;" என்று
நிகழ்த்தினன் விழிகொடு; நீண்ட
கன்னன்மெய்ப் புதல்வன் கண்சிவந்து எழுந்து
கையினில் கடுஞ்சிலை வளைத்தான். 559

---

556. பேருயிர்ப்பெறிய - பெருமூச்சுவாங்க; அராவேந்தன் மகள் - ஆதிசேடனின் மகள் உருவசி; மகன் - (அவள்) மகனாகிய பப்பரவாகனன்; புரந்தரன் குமரன் - இந்திரனின் மகன்;

557. கடை - கடைக்கண்கள், மருமகன் - கண்ணனின் தங்கையாகிய சுபதத்திரையின் கணவன் ஆதலின் வீட்டுமாப்பிள்ள என்னும் உலக வழக்கு நோக்கிக் கூறினார்.

558. பெண்ணன் - ஆண்மையற்றவன்; திண்ணியன் - வலியோனாகிய பப்பரவாகனன், திட்டி - கண்கள்; சைகைசெய்து - சாடைகாட்டி.

559. தென்னவன் குமரி - பாணடியன் மகள், அல்லி, சிலை - வில்.

"ஏதடா எனது சமர்துறந்து இவண்நீ
எய்தினாய்? சிலைகரத்து எடுத்து
வாதுபோர் புரிக வரு"கென விளிக்க
மால்அவன் முகத்தினை நோக்கி,
"போதும்;நின் திறமும், வில்லிதன் திறமும்
பொன்றிய பின்சமர் பொரல்ஏன்?
தாதையாம் வில்லி தனக்கும்நின் றனக்கும்
தானவன் பொருட்டின்உய்ந் தமையால்" 560

என்றுஇவை அனைத்தும் கண்களால் உரைத்தே,
இறந்ததும் பிறந்ததும் விரித்து
வென்றிமால் உரைக்க, இருவரும் கேட்டு,
வெட்கமுற்று இருந்தனர்; இதன்மேல்
கன்றினால் விளவை எறிந்தவன் ஆங்கே,
"கனகதண் டிகைகயின்மின் னாரும்
நின்றமன் னவர்கள் தேர்கரி பரிமேல்
நிமிஷம்ஏ றுக;"என, நேர்ந்தார். 561

மால்உரைப் படியே அவரவர்க்கு உரிய
வாகன மீதினில் தரித்தார்;
மேல்வரும் வீமன் விசயனும் தேரின்
மீதினி லாகிய பின்னர்,
சாலவும் தேவர் நாகரும் துதித்தே
சலசைமார் பகன்றனைக் கலுழன்
மேல்எழுந் தருள வேண்டினர்; இசைந்தார்;
விண்ணவர் மலர்மழை பொழிந்தார். 562

மத்தியா னத்தில் மாயனும் கருட
வாகன மீதுஎழுந் தருள,
சுற்றியே மன்னர் சதுரங்க சேனைத்
தொடர்கடல் எங்கணும் பரவ,

---

560. சமர் - போர்; விளிக்க - அழைக்க; பொன்றியபின் - அழிந்த பிறகு.

561. கின்னரம், தம்பூர், உருத்திரவீணை, சரமண்டலம், ராவண அஸ்தம் இவையாவும் நரம்பானியன்ற இசைக்கருவிகள், சீதம் பாடல், சங்கீதம் - வாச்சியங்களுடன் பாடுதல்.

561. இருவர் - அருச்சுனன், விடசீதனன்; கனகதண்டிகை - பொற்பல்லக்கு; நேர்ந்தார் - உடன்பட்டனர், தத்தம் ஊர்திகளில ஏறினர்.

562. சலசை - திருமகள்

அத்தின புரம்பொன் நகர்அகிப் புவிசீர்
அளகையில் அதிகசிங் காரச்
சித்திரம் பிறங்கு மணிநகர்ப் புரிசை
திகழ்எழு வாயிலும் கடந்தார். 563

பேரிகை, முருடு, சச்சரி, திமலை,
பீலி,கோடு, இணைஇயம், அகளம்,
தூரியம், முழவு, பதலை,திண் டிமமும்,
துந்துமி, தக்கை,பம் பைகளும்,
கோரம்ஆர் முரசு, மத்தளம், சின்னம்,
குடப்பறை, சிறுபறை, மோந்தை,
பாரிய தகுணி, தண்கிணை, தடாரி,
பலபறை, துடிகளும் கறங்க, 564

பூரிகை, தாளம், செகண்டிகள் அசங்க,
பொன்மணி, வீரசங் கங்கள்,
வீரிய இரலை, கண்டிகை, காளம்,
மேளம்,பேய்க் காளம்,எக் காளம்,
தாரை,நா கசினம், துளையினம் முழுதும்,
தழங்குகஞ் சங்களின் திரளும்,
வாரிகார் இடியின் முழக்கெனை முழங்க,
வாகினி திரண்டுஅடர்ந் ததுவே. 565

கின்னரம், தம்பூர், உருத்திர வீணை,
கிளர்சர மண்டலம், கீதம்,
மன்னுசங் கீதம், ராவண அஸ்தம்,
மற்றுள நரம்பினம் முழங்க,
கன்னியர் மத்த ளத்தொனிக்கு இசையக்
கலபமா மயில்என நடிக்க,
துன்னிய நாலு வகைதளக் கடலும்
தொனியுடன் முழங்கியே நடந்த. 566

---

563. பொன்நகர் - அமராவதி: அகிபபுவி - நாகலோகம்: அளகை - குபேரனின் அளகாபுரி: புரிசை - மதில்.

564, 565. இவறறுள் இடம் பெறறவை யாவும் இசைக்கருவிகள். அகளம் - பத்தர் ஆகுபெயராக வீணையை உணர்த்திற்று. அசுவக - ஒலிக்க: துளையினம் - காற்றுவாத்தியங்கள்; தழங்கு - ஒலிககும். கஞ்சகங்கள் - வெண்கலத்தாலான தாளக் கருவிகள். வாரி - கடல்: வாகினி - படை.

566. கின்னரம், தம்பூர், உருத்தி வீணை, சரமண்டலம், ராவண அஸதம் இவையாவும் நரமபானியன்ற இசைக்கருவிகள். கீதம் - பாடல், சஙகீதம் - வாசியங்களுடன் பாடுதல்.

மகிபதி அரண்ஏழ் வாயிலும் கடந்து,
மகரதோ ரணவிதா னம்சேர்
சிகரகோ புரங்க ளுடன்மக மேருத்
தேர்செறி காவண நிழலில்
நகரிசீர் வீதி மகரவா ரிதிபோல்
நால்வகைத் தளங்களும் பிறங்க,
அகரவீ தியினில் மகபதி குமரன்
அழகுஒழு கிடநடந் தனனே. 567

வீதிமேன் மாடம் வில்ஒளி பரப்பும்
வியன்மணி விளக்கமே நோக்கும்
சோதிமா மகுடம் விளங்கிய வில்லி
தோற்றமே பார்த்து,மின் னார்கள்
போதினும் வெள்ளி பொன்மலர் மழைகள்
பொழிந்து,சோ பனம்சொலிப் புகழ்ந்தார்;
மாதர்க்ட் கயல்கள் வில்லிபேர் அழகு
வாரியில் ஓடிஆ டியதே. 568

தெருஎலாம் விளங்கச் சிறப்புஅலங் காரம்
செய்தவை பார்த்துஅதி சயித்து,
கிரிடியும் தளமும் ஒருதெரு விடாமல்
கிளர்பல தெருஎலாம் கோலி,
வரும்அலங் காரம் தன்னிலும் அனந்த
மடங்குஎனக் கருடவா கனமேல்
மருமலர்த் துளபத் திருமறு மார்பன்
வான்எலாம் விளங்கவே போந்தான். 569

சுரருடன் நாகர் நரர்களும் முகுந்தன்
தோற்றமே பார்த்து,மெய் மகிழ்ந்து,
"அரிஅரி! வாசு தேவ!கோ விந்தா!
அச்சுதா! தேவகி நந்தா!

---

567. மகிபதி - அரசன், பப்பரவாகனன், காவணம - பததல், அசுர வீதி - முதன்மையான தெரு இராஜவீதி, அந்தணா தெரு அன்று, மகபதி - இந்திரன்.

568 விளக்கமே நோகும் வில்லி தோற்றமே பார்த்து மின்னார்கள் பொழிந்து. புகழ்ந்தார் என்பது முடிபு.

569. கோலி - நிறைத்து, திருமறுமார்பன் - திருமகளையும் ஸ்ரீவத்ஸம் என்னும் மச்சதையும் உடைய மார்பினனாகிய திருமால்.

மருவுவை குந்தா!ஆ னந்தா!
வளர்ந்துஉலகு அளந்தபா தம்தா
அருள்சுரந்து; அனந்தன் மிசைதுயில் வளர்ந்த
அண்ணலே!" எனத்துதி புரிந்தார். 570

இந்தவாறு அனந்த நாமமும் புகழ்ந்து
யாவரும் துதித்துஇனிது ஏத்த,
சுந்தரக் காசை நிறத்தொடும் உபய
சுடர்இரு மருங்கினும் துலங்க,
சிந்துகோ தண்டம் திண்கதை இலங்க,
தேவதுந் துமிகளும் முழங்கி
அந்தரர் புட்ப மாரிகள் சொரிய,
ஆழியான் மகிழ்வுடன் போந்தான். 571

கண்ணன்,மால், கமலக் கண்ணன்,அம் பூவை
வண்ணன்ஒண் கருடன்மேல் விளங்கி,
விண்அதர் ஆகத் தெருஎலாம் வட்ட-
மிட்டுஉல வியும்இசைந்து ஏக,
நண்ணிய அரசர் நரன்றனைச் சூழ,
ரதகஜ துரகப தாதி
வண்ணமாம் கடலும் தெருஎலாம் தொலைத்து,
மன்அரண் மனைகுறு கினரே. 572

அரண்மனை அருகில் விளங்கிய கொலுஆ-
சாரமண் டபந்தனை அடுத்து,
நரன்முத லாக அரசர்கள் யாரும்
நற்கொலு மண்டப முன்றில்
இரதவா கனம்விட்டு இறங்கியே நிற்க,
எம்பிரான் கலுழன்விட்டு இழிய,
கரியனை வணங்கி, மன்னவர் உயர்சிங்-
காசனத் தினில்இருத் தினரே. 573

---

570. அருள்சுரந்து பாதம் தா என இயையும்; அனந்தன - ஆதிசேடன்

571. உபயசுடர் - சூரிய சந்திரராகிய இரண்டு ஒளிக்கோள்கள், சிந்து கோதண்டம் - பகைவர்களின் உயிரை அழிக்கின்றவில், வினைத்தொகை, ஆழியான் - சுதர்ஸன சக்கரத்தை உடைய திருமால்

572. விண அதர் ஆக - வான்வழியாக; நரன் - அருச்சுனன்.

573. கரியன் - கண்ணன்

அருகுற விசயன் வீமனுக்கு அமைத்த
ஆழிஆ சனத்தில்வைத்து, அதற்பின்
உரகமன் னவனை, அமிர்தனை, மற்றும்
உரவரை நிரைநிரை இருத்தி,
பரிவுடன் யாரும் இருந்தபின், வீரப்
பப்பர வாகனன் பார்த்தன்
திருமுனம் பயந்தே இருகரம் கட்டிச்
சேவித்து நின்றனன் திறலோன். 574

அன்புடன் உளத்தில் பயபக்தி ஆக
அருகில்முன் நின்றபா லகனை
வன்புஅக வயிரம் அண்நரன் பாரான்,
மலர்விழி மாறிவைத் திருந்தான்;
பொன்பயில் மார்பன், சேடவன் ஒக்கப்
புரந்தரன் குமரனை அடுத்து,
இன்புஅமிர்து ஒழுக ஆயிர நாவால்
இயல்மரு கனைத்துதித்து இசைப்பான். 575

"ஏதுஐயா கிரிடீ! இந்திர குமரா!
எதிர்த்திடில் யாரைநீர் விட்டீர்?
தாதையோடு அட்ட பாலர்வெந் கொடுக்கத்
தகனன்ஒத்து அமர்செய்கி லீரோ?
மாதவ னுடன்நீர் அடைந்தவர்க் காக்க
வன்சமர் முன்செய்கி லீரோ?
சோதிஈஸ் வரனோடு ஊடிவில் கழுந்தால்
தோய்ந்திட அடித்துஅமர் புரிந்தீர் 576

திக்குஎலாம் செயித்தீர்; அசுரரை முறுக்கி,
தேவலோ கம்குடி நிறுத்தி,
மிக்கமு தாதை தன்னையும் மறுத்தீர்;
விற்குரு வுடன்அமர் மலைந்தீர்;

---

574. உரக மன்னவன் - பாம்பரசன்; பார்த்தன் - அருச்சுனன்.

575. அக வயிரம் அண் - உள்ளத்தில் பகைமை பொருந்தியுள்ள; நரன் - அருச்சுனன், பாரான் - நோக்காதவனாக, பொன் - திருமகள்; சேடவன் - ஆதிசேடன்.

576. தாதை - இந்திரன், அட்ட பாலா - எட்டுத் திசைப்பாலகர், வெற் கொடுத்தல் - புறமுதுகிடுதல், தகனன் - தீக்கடவுள்; இப்போர் காண்டவவனத்தை எரித்தபோது நடந்தது; சுழுத்து - வில்லின் மரப்பகுதி, நாண்பூட்டப்படும கொடுமரம்.

தக்கமா தாமன் தனைச்சமர் முகத்தில்
சடம்அறப் பன்முறை சினந்தீர்;
தொக்கசிந்து அரசைச் சிரம்அறுத்து எறிந்தீர்;
தொகைஅறா மன்னரைக் கொன்றீர்; 577

"என்னவில் இதுஉன்வில்?" என்றசொல் பொறுக்காது
இகல்சரம் சிலையில்வைத்து ஈழ்த்து
முன்னனை அறுக்க முடுகினீர்; சினந்து
முறுக்கினீர் அருக்கன்மைந் தனையும்;
மன்ன!நின் விந்தால் வந்தவன் கொடுஞ்சொல்
வடுஉரை சகிக்கவல் லவனோ?
உன்னைநே ராக உரசுமா னங்கள்
உரம்அலால் குறைச்சலும் உண்டோ? 578

வீரியம் உரசு மானம்இல் லாதுஉன்
விந்தினில் முளைத்தகால் உண்டோ?
சேரநும் புதல்வர் சமஸ்தமும் இழந்தீர்;
சீவனோடு இவன்அரு மருந்தாய்,
பாரிய வீர மன்னர்சீ யமதாய்,
பார்த்திபர்க்கு ஓர்சிரோ மணியாய்,
நேரிய நினது தவப்பெரும் பொருட்டாய்
நின்சூன் இவன்அலால் உளரோ? 579

முன்னமே சீவன் வீந்திடத் துணிந்தான்;
முரண்விலோய்! தயவுசெய் யீரேல்
பின்உயிர் தரியான்; புதல்வனை இழப்பீர்;
பெற்றவர்க்கு ஏற்கிலாப் பிள்ளை
மன்நிலத்து யார்க்கும் ஏற்குமோ? ஐயா!
மகவின்மேல் அருள்ஒழிந் தீரோ?
என்னகுற் றங்கள் இருப்பினும் அரிக்கும்
எனக்குமாய் இரங்கியே பொறுப்பீர்; 580

---

577. மூதாதை - பீஷ்மரை நினைநது கூறியது. விற்குரு - துரோணர், மாதாமன் - மாதாமகன். தாயவழிப்பாட்டன். சிந்து அரசு - சிந்து நாடடரசனாகிய செயத்திரதன்.

578. முன்னன் - மூத்தவனாகிய தருமன், அருக்கன் மைந்தன் - சூரியன் மகன், கன்னன், வடு உரை - தீய சொல. இங்குவசை.

579. கால - சனததி, சீயம் - சிங்கம் போன்றவன்; பார்த்திபர் - மன்னர், சூன் - மகன்.

580. வீந்திட - அழிந்திட.

அரக்கரைச் சிதைத்த மால்இரா கவனை
அவனுடன் பிறந்தமூ வரையும்
செருக்கள முகத்தில் சினந்துஉறு த்துஉபய
சேயர்கள் குசலவாள் என்போர்
மரித்தரா கவனும் பிழைத்தபின் வீர
மகவின்மேல் அன்புஒழிந் தனனோ?
பரித்தமும் மூர்த்தி களில்,பெரி யோரில்
பருவரல் எய்திலார் இலையோ? 581

ஈதுஅலால் ஒன்றும் தோற்றிலை; உமக்கே
எம்பிரான் சகாஇருப் பதனால்
தீதுஇலாது இதற்கு மேல்உள அரசர்
திறங்களைத் தொகுக்கரிது; ஐயா!
ஆதலால் உதவிக்கு அனந்தகோ பால
அச்சுதன் கூடவே வேணும்;
சாதம்,ஈது" எனவும், கேவசன் ஒருசொல்
தானுமே வீமனோடு உரைப்பான். 582

"மாருதி! நீகேள்; வருத்தமாய்க் குமரன்
மடிவதாய் மனதுஒருத் தலித்தான்;
பாரமாம் இமய கிரிபரு வதத்தின்
பக்கமாம் துங்கபத் திரிநன்
நீர்உறும் நதியின் கரையினில், ஓம
நெருப்பினில், தசைஎலாம் அரிந்துஇட்டு,
ஏர்உறு சிரசும் அரிந்து,எறிந்து, உடலும்
எரிக்குஇரை கொடுக்க"என்று இசைந்தான்; 583

"தாதையோடு எதிர்த்துஉத் தரம்சொனோம்; நெருங்கிச்
சதிசெய்தோம்; இப்பவம் கொடிய
பாதகம் தீர வேணும்"என்று இந்தப்
படிஅவன் நினைந்திருப் பதனால்
சாதமாய் இறப்பன்; சுதன்இழந் தே,தான்
தவிப்பதற்கு இடமதாய் நினைந்தான்;
ஆதலால் ஐவர்க்கு அருமருந்து ஆன
அருமைசேர் புதல்வனை இழப்பீர்; 584

---

581 மூவா - இலக்குவன், பரதன், சத்துருகனின், உறுத்து - வருத்தமுறச் செயது, பரித்த - பெரிய, பருவரல் - துன்பம். 582. சகா - நண்பன, சாதம் - உறுதி.

584. உத்தரம் - பதில், இங்கு வஞ்சினம்

கங்கைதன் சாபத் தால்நிகழ்ந் ததுஇக்
காரணம்; பணிந்தகா தலனை
அங்கையில் ஏற்காது அருச்சுனன் சிலைபோ-
லாகவும் இருந்ததுர்க் குணத்தால்
இங்குஇவன் இறப்பன்; மகன்இழப் பீர்;"என்று
இயம்பவும், இயங்கியே வீமன்
அங்கியின் மெழுகுஒத்து உருகியே, மகனை
அஞ்சல்என்று அனைத்து,உரம் தழுவி. 585

"எந்தையே! மகனே! இருகணின் மணியே!
எங்கள்ஆர் உயிர்க்குயிர் அமுதே!
உந்தனை ஒழிந்த புதல்வர்யா வரையும்
ஒருத்தலித்து இழந்தனம்; உரியாய்!
அந்தகோ! ஐயா! என்நினைந் தனை?நின்
அய்யனோடு யாங்கள்ஐ வருமே
உந்தனை இழந்தால் உய்கிலோம்; எங்கள்
உயிர்சிதைத் திடத்துணி குவதே? 586

அய்யனே! நாங்கள் ஐவர்,மால் ஆணை;
அரிகரி யாய்இயம் புகிறேன்;
மெய்யனே இறப்பது ஒழி; உனைப் பயந்தோன்
விரும்பிஆ தரித்துஉவந் திலனேல்,
உய்யும்வாறு எனயான் உயிரைமுன் இழப்பேன்;
உய்வர்பின் நால்வரும் ஒத்தே;
செய்யதீக் கடன்,நீர்க் கடன்முறை யாவும்
செய்து,உலகு ஆண்டருள்; அய்யா!" 587

ஒதுசொல் கேட்டே அறுத்ததுக் குடம்போல்
உடல்எலாம் படபடத்து, உதறி,
"பாதகன் யான்சென் மித்தநாள் கொடிய
பாதக நாள்எதோ? அறியேன்;
ஏதுசெய் வேன்?"என்று அரற்றினான்; வீமன்
இரங்கியே கண்ணின்நீர் மாற்றி,
சீதரன் சிலதன் அடிமிசை போட்டான்
செங்கண்நீர் அருவிபாய் தரவே; 588

---

585 காதலன் - மகன, சிலை - கல், அங்கி - தீ. உரம் - மார்பு.
586. உரியாய் - எவகள அன்பிற்கும், உரிமைக்கும் உரியவனே, துணிகுவதே - துணியலாமா?
587. கரியாய் - சாடசியாக, உயயும்வாறு - அபபழியிலிருந்து ஈடேறுவதன் பொருட்டு

சேடன்வாய் மையினும், சீதரன் சொலினும்,
திருத்துணை மாருதி சொலினும்,
வாடியே தவிக்கும் மகன்சொல்வாய் மையினும்
வன்மனம் மெழுகுஎன உருகி,
"விடும்என் ஆவி தரும்அரு மருந்தே!
விசய!என் தந்தையே! ஐயா!
பாடுபா தகன்என் சேய்என உதித்துப்
பட்டபாடு எவ்விதம் பகர்வேன்?" 589

என்றனன்; அலறி எழுந்தனன்; கரத்தால்
எடுத்தனன்; துடித்தனன்; பதறி
மன்றல்மார் பகனை அணைத்தனன்; கண்ணீர்
மாற்றினன்; தேற்றினன்; உரத்தில்
ஒன்றவே புல்லி, உச்சியை மோந்து,
உடம்புஎலாம் முத்தியே உருகி,
கன்றிய மகன்றன் முகந்தனை நோக்கி,
கலங்குகண் ணீரொடும் புகல்வான். 590

பண்டுயான் செய்த தவம்,எமர்
பலர்செய்த தவங்கள் பாக்கியமும்
முண்டக ரசனை கேள்வனின் க்ருபையும்
மொய்த்து,ஒரு உருஎன முளைத்த
கண்டனே! எனது கண்ஒளி மணியே!
கலங்கல்என்? நலம்கவின் வேலோய்!
மண்டல ாணியே! அமர்க்குஅரி ஏறே!
வசிகரம் மேவும்என் மகனே! 591

கங்கைசா பத்தால் நன்மதி இழந்தேன்;
கருத்தில்நின் மேல்உருத்து ஒழிந்தேன்;
பொங்கிய கொடூர வசனமே உரைத்தேன்;
புன்மையால் மணிமுடி உதைத்தேன்;
மங்கஉன் முகத்தில் காறியே உமிழ்ந்தேன்;
மார்பில்அங் கிரியினால் உதைத்தேன்;
இங்குஇவை எல்லாம் செய்தவை மனதில்
எண்ணிடாது என்இயம் புவனே? 592

---

588. அரற்றியவன் பபரவாகனன், குக்குடம் - கோழி; செண்மித்த - பிறந்து; சிலதன் - நண்பன்.
589. வீடும் - நீங்குகின்ற; விசய - வெற்றிவீரனே;
591 முண்டக ரசனை - தாமரை மலரை விரும்பி உறையும் திருமகள்; கணடன் - வீரன்.
592. உருத்து - கோபம் கொண்டு, அடிசரி - கால்.

அந்தவெம் கொடும்சொல் பொறுத்தனன் என்றாய்;
அடாதுயான் செய்தவை அனைத்தும்
எந்தையே பொறுத்தேன் என்றுஇனிது இசைத்தாய்;
எதிர்த்துஉனோடு உரைத்தவா யினையும்,
உந்தன்மேல் இகல்செய் திடுகரம் இரண்டும்,
ஊனையும் உண்திருப் பதத்தில்
சிந்தவே அறுத்துத் தூவுவேன்; விடைதந்-
திடு"கெனச் சேவடி பூண்டான். 593

"புத்திஒன்று இலையோ? விடுகஎனச் சேடன்
பூட்டிய கரத்தினை விடுத்து,
சத்திய வீமன் கரத்தினில் கொடுத்து,த்
தாமனை நோக்கி?"என் தவத்தின்
புத்திரி மகனை இழந்ததால் புலம்பிப்
பொன்றிடத் துணிந்ததைத் தடுத்தாள்;
'சித்திராங் கதன்றன் சிறுவிசித் ராங்கிச்
சிறுவன்ஈண்டு உளன்'எனத் தேற்றி 594

இந்தநாள் கணவன் றனைமகன் ஆவித்தான்
எனஅழுது இடைந்திடும் இருவர்
சிந்தையின் துயரை மாற்றியே, தேற்றத்
தேவரீர் எழும்;"எனச் செப்ப,
உந்திமால் எழுந்தார்; வீமன்,வில் விசயன்,
உற்றசத ராங்கிதன் சேயன்,
கந்தன்நேர் கன்னன் மகன்,அகி வேந்தன்
கவலும்இம் மூஇரு பேரும் 595

மந்திர மாம்அந் தப்புரம் புகுந்து,
வனிதையர் இருவர்கள் தமது
சிந்தையைத் தேற்றி, திரும்பி,முன் இருந்த
செம்மணி ஆசனத்து இருந்தார்;

---

593. அந்தவெம் கொடுஞ்சொல் - நாய்சுன்மகன் என்றது, பண்டறிசுடு. ஊனை - உடலை; அருச்சுனன் பபரவாகனின் கால்களில விழுந்தான்.

594. தாமன் - கண்ணன், சித்திராங்கதன் - அல்லியின் தநதை; சிறுவி - மகள், சித்திராங்கி எனப்படும அலலி, சிறுவன் - மகன், பப்பரவாகனன்.

595. இருவர் - சித்திராஙகி, உருவசி, மாலஉந்தி எழுந்தார் என்க; உந்தி - வேகமாக; கன்னன் மகன் - விடகீதனன்; அகிவேந்தன - அரவரசு, மூஇருவர் - கணணனுளளிடட ஆறுபேர்.

அந்தநேர் அல்லி சுதன்முகம் குவிந்து
அலர்ந்திடாது இருந்ததை வீமன்
புந்தியால் அறிந்து, புதல்வனைத் தழுவி,
போதமாம் மொழிசில புகல்வான். 596

(வெண்டளைக்கலிப்பா)

"சீர்செய்த செல்வத் திருமகனே! இப்புவிக்குக்
கார்செய் உதவிக்கு அதிகம் அருள்புரிந்தாய்;
பேர்செய்த வில்லிதவப் பேறே!ஐ வர்க்குயிரே!
யார்செய்தார் நின்போல ஆவிதரும் பேருதவி? 597

ஆவிக் கருமருந்தே! ஐவர்உயிர் ஒன்றான
மாவித் தகவீர! வாசாம கோசரமாய்ச்
சேவித்து நின்று,துதி செய்து,இதயம் புண்ணாகப்
பாவித்த கண்கலக்கம் பற்றாதோ உத்தமனே? 598

இன்னம் கலக்கம்உனக் கேது?பிதா வோடுஎதிர்த்துச்
சொன்னதையும், சென்னி துணித்ததையும் எண்ணுவதென்?
கன்னனைஉன் தந்தைகொன்றான்; காந்தாரி மக்களெலாம்
சின்னமுறக் கொன்றதுயான் சீதரனார் பட்சமதால்; 599

மற்றெங்கள் கையில் மடிந்தோர் மகாகோடி;
அற்றநாற்பத்து ஓராயி ரத்துஅறுநூறு அக்குரோணி;
பற்றுஉந்தன் நெஞ்சில் பயமிருந்த தாமாகில்
நத்தும்கோ விந்தன்அடி நண்ணிப் புகழ்ந்தருள்வாய்.
600

மேரொத்த பஞ்சினிடை வில்தோற்று தீப்புகுந்தே
பாரித்த கார்ப்பாசம் பற்பமுறும் வாறேபோல்;

---

596 மந்திரம ஆம் - அரண்மனையின் ஒரு பகுதியாகிய, அரசியலுக்குரிய கொலுமண்டபமன்றி அரசாகளின் வசிபபிடமாகிய பகுதி என்பதனைக் காடட மந்திரம என்றார்; போதமாம மொழி - அறிவுரை

598. வாசாமகோசரம் - வாத்தைகளால விளக்கிக்கூறமுடியாதது.

599. காந்தாரி மக்கள் - துரியோதனன் முதலிய கவுரவர் நூற்றுவர், சீதரனார் பட்சமதால் யானகொன்றது என இயையும்.

600. மகாகோடி - கோடிகோடி., 10^{11}; அற்ற - அழிந்தன

வாரிக் கடல்துயிலும் மால்அடியில் வீழ்ந்து,அவரின்
பேரைத் துதித்தால்போம் பேசாது பாவமெலாம்.” 601

என்றுபெருந் தந்தைசொல்ல வேமகிழ்ந்து,புத்திரனும்
அன்றுபல புட்பவர்க்கம் ஆடகப்பூ ரத்தினமும்
குன்றதுஎன வேஉயரக் கோவிந்தன் தாள்மலரில்
அன்றுஅபிஷே கங்கள்செய்து அர்ச்சித்து, அடிபணிந்தே. 602

“நெஞ்சம் கருதும் நினைவுஉணர்ந்தோ னே!விமலா!
தஞ்சம் உனதுதிருத் தாள்அன்றி வேறுஉளதோ?
குஞ்சம்என ஈரடியில் கொண்டோய்ஈர் ஏழுலகும்!
கஞ்சம்அன நின்கிருபைக் கண்பார் எளியேன்மேல். 603

மாபா தகங்கள்என்மேல் வாராது காத்தருள்செய்;
பூபாரம் தீர்க்கவந்த பூபாலா! கோபாலா!
ஆ!பா தகன்நான்; அநியாயம் செய்ததெல்லா-
மேபோக, நிந்தன் இனியபதம் தந்தருள்வாய். 604

அன்றுஅறைந்த தூணில்எழுந்து ஆடகனைக் காய்ந்துஉயிரைக்
கொன்றதுபோல் எந்தன் கொடும்பவத்தைத் தீர்த்தருள்வாய்;
நின்றுஅழுத தோற்காக, நின்கோலத் தோடுஎதிர்நின்று,
அன்று,கரா வைத்தடிந்த ஆதிமூ லப்பொருளே!” 605

நன்னாமம் ஆயிரமும் நாவால் முறைமுறையாய்
முன்னாய்ப் புகழ்ந்து முறையிட்டு அழுதுஅரற்றும்
மின்னாரும் பல்பூண் விளங்குகின்ற மார்பகனைப்
பொன்னாரும் நெஞ்சின்மிசைப் புல்லி சுருள்சுரந்தே, 606

கன்று கலங்கக் கனிந்துரங்கும் கற்றாநேர்
அன்றுகிரு பைக்கண் அலர்மாரி தான்சொரிந்து,

---

601. மேரொத்த - மேருமலையளவு நிறைநதுள்ள, வில் - ஒளி; பாரித்த - மிகுதியாக உள்ள; காப்பாசம் - பஞ்சு; வீழ்ந்து துதித்தால் பாவம்எலாம பற்பமுறுமவாறே போல் பேசாது போம் என்பது முடிபு 602. புட்பவர்க்கம் - மலரினங்கள், ஆடகபபூ - பொன்மலர்.

603. குஞ்சம் - குறள்வடிவு, வாமனன், கஞ்சம் - தாமரை

605 அறைந்த - (இரணியனால்) அறையப்பட்ட, ஆடகன் - இரணியன், தோல் - யானை, கசேந்திரன்; கரா - முதலை.

606 பொன் ஆரும் - திருமகள் விளங்குகின்ற, புல்லி - அணைகது.

நின்ற குரிசில் நெடுமுடியும் மெய்தோய,
வென்றிஅபி ஷேகமுமே செய்து"அஞ்சல்" என்றான். 607

"அஞ்சல்,அஞ்சல்; ஓர்போதும் அஞ்சாதே; கெஞ்சாதே;
சஞ்சலங்கள் யாவும் தவிர்த்திடுநீ இக்கணமே;
கஞ்சவான் பொய்கைக் கராவின்வாய்ப் பட்டு,இடைந்த
குஞ்சரத்தைக் காக்கின்ற கொள்கைஉனைக் காப்பன்நான். 608

ஆலம்போல லக்கொதிகொண்டு ஆடகன்முன் அன்றுஅறைந்த
கோலமணித் தூணில்நர கோளரியாய்க் கொன்று,அவன்றன்
பாலகனைக் காத்த பரிவாய் இருமையினும்
சால உனைக்காப்பேன் தப்பாது" எனஉரைத்தான். 609

இந்தவாறு ஆயன் இயம்பஇத யக்கலக்கம்
சிந்தையைவிட்டு ஓடிஅது சித்திரபா னுக்கதிர்முன்
அத்தகா ரம்போல் அகல, முகம்மலர்ந்து,
மந்தகா சம்புரிந்தான்; மற்றோரும் மெய்மகிழ்ந்தார். 610

"அண்டரண்டம் யாவும் அகடதற்கும் பற்றாதாய்
உண்டிகொண்ட மாலே! உயர்பாற் கடல்கடைந்தே
பண்டுஅமுதம் உம்பருக்குப் பாலித் திடும்பரனே!
விண்டுஇன்று பொம்மல் விருந்துண்ண வேணும்"என்றான். 611

காதல்மரு கோன்மொழியக் காசாம்பூ மேனிவண்ணன்
ஆதரவாய்ச் சூழ்ந்த அரசரையும் யாவரையும்
சீதரன்மால் நோக்கி,"அனம் தின்றுபசி தீர்வதற்கு
மூதறிவீர் துஷ்டி முடித்திடுவீர்" என்றுரைத்தார். 612

அந்தப் படியே அனைவோரும் துட்டிமுடித்து
உந்தினார்; பார்த்த னுடன்மால்வெந் நீர்மூழ்கி,

---

607 சுற்றா - இளங்சுன்றினை உடையபசு, சுண அலா - சுணணீர.

608 சுஞ்ச - தாமரை நிறைந்த, வான் - சிறந்த, இடைந்த - துயருறற, குஞ்சரம் - யானை, சுசேந்திரன்.

609 ஆலம - நஞ்சு, நரகோளரி - நரசிவகம், பாலகன் - பிரகலாதன், பரிவாய் - சுருணையைப்போல், இருமை - இம்மை மறுமை.

610 அது என்றது இதயக்கலக்சுததை, சித்திரபானு - சூரியன, அநதசுகாரம் - இருள், மந்தகாசம் - புனமுறுவல்

611. அகடு - வயிறு; விண்டு - (அகம்) மலர்நது, பொம்மல - சோறு, என்றவன் பப்பரவாகனன்.

612. துஷ்டி - அனுஷ்டானம.

முந்திய பூசை முடித்தபின்பு, யாவரையும்
பந்தி வகுத்துநின்றான் பப்பரவா கப்பெருமான். 613

மிக்க மணிநகரி வேந்தனையே மால்நோக்கி,
"ஒக்கஅனம் உண்ண ஒருபாரி சத்துஇரு"எனத்
"தக்கவினின் சொல்லமிர்தம் தான்செவியில் முன்பாய்ந்த
அக்கணமே தீர்ந்தபசி . . . . . " 614

என்றவனைப் பின்னும் இருக்கமால் தானுரைக்க,
நின்றமன்னன் தானும் நிருமலமால் சொற்படியே
நன்றுஎன்று அவண்இருந்தான்; நாட்டமுடன் யாவர்களும்
அன்றுஉண்டி கொண்டே அனைவோரும் மெய்ம்மகிழ்ந்தார். 615

மெய்ம்மகிழ்ச்சி கொண்டே விரும்பிவில்லி ஐந்துதினம்
தெய்வகன்னி மாரனைய தேவிஇரு வோர்களுடன்
கைகலந்து சேர்ந்து களிப்புற் றிருந்ததற்பின்
வைதிகழும் வேலான் மணியா சனத்திருந்தான். 616

ஐந்துநாள் சென்றதற்பின் ஆறாம்நாள் மாயனுடன்
மைந்துசேர் வில்லி மணியா சனத்திருப்ப,
தொய்ந்திலா வில்லிகன்னன் சூன்கள் இருபேரும்
பைந்துழாய் மாயன்இரு பக்கத்து அமர்ந்துநின்றே, 617

வெற்றிசெறி வெண்சா மரைஇரட்ட, மேகவன்னன்
உற்றுஅடப்பம் கட்டிநிற்சு, ஓசரிக்க மற்றோரும்,
பற்றியுடன் வைகியபின் பப்பரவா கனன்றனையே
கொற்றமால் சைகைசெய்ய, கூர்ந்தறிந்தே மால்மருகன் 618

சீராரும் வில்லிஅடி சென்றுஇறைஞ்சி நின்று,"நர
நாரா யணாஉகுந்தர் நண்பா! துரந்தரிகா!
கோரேறே! இந்திரன்றன் புத்திரனே! ஐயாஎன்
நேராரும் பொக்கிஷவீ டேபார்க்க வேணும்;அல்லால் 619

---

616. வைதிகழும் - கூரமையான

617 வில்லி கன்னன் சூன்கள் - பப்பரவாதனன், விடகீதனன், அமர்ந்து நின்று - அமைதியாக நினறுகொண்டு.

618. அடப்பம் - வெறறிலைப்பாக்குப பெட்டி, ஒசரிக்க - உபசரிக்க என்றபொருளில் ஆளுகிறாபோலும. 619. துரநதரிகா - வலலவனே.

சிந்தைக்கு இசைந்த திரவியங்கள் ரத்தினங்கள்
சந்தப் பொருள் அனைத்தும் தானெடுத்துஉம் ஊர்க்குஅனுப்பி,
இந்தப் பதிக்கே இசைந்தோர்க்கு அரசுஅளிப்பீர்;
நுந்தம்அடிக் கீழ்யான் நுவல்ஊ ழியம்புரிவேன். 620

கோதில் எனைஅடிமை கொண்டுபரி பூரணமாய்
ஆதரித்துக் கொள்ளும்"என அர்ச்சித்த புத்திரனைக்
காதலுற வே,கிருபைக் கண்கொண்டு நோக்கி,நைந்து,
ஏதமற மெய்மகிழ்ச்சி எய்திக் குளிர்ந்திருந்தான். 621

அக்கணமே மாலும் அருச்சுனனும் வீமனுடன்
பொக்கிஷங்கள் நோக்கப் புரிந்துஏகும் வேலையிலே,
மக்குஇல் மணிநகரான் மந்திரிசு பத்தியுடன்
மிக்கவிட கீதனனும், மேகவன்ன னும்எழுந்தான். 622

மன்சாத் தகி,பிரத்தி மன்,அணிஉ ருத்திரனும்,
பின்சீர்த்தி அக்ரூரன், பேகன்,உத்து வாசாரி,
நன்சீர்ப் பிரத்திமனும், நாதன்எம னாசூரன்,
தன்சேயன், மந்த்ரி,அநு சாளுவன்,நீ லன்,அமிர்தன், 623

மற்றுள்ள வீரியரும் மன்னவரும் சூழ்ந்துஏக,
பற்றியுள்ள பொக்கிஷங்கள் பண்டாரம் உள்ளதுஎல்லாம்
வெற்றிமன்னன் தான்திறந்து விட்டிட்டான்; யாவர்களும்
நத்தியே நோக்கி, நவமாய் அதிசயித்தார். 624

நாலுவகைப் பொன்நிறைந்த நாலா யிரம்அறையும்,
மேலும் இருநிதியும் மிக்கநவ ரத்தினமும்
சால நிறைந்த சகத்திரப்பத்து ஆம்அறையும்,
கோலும் அணிபணிகள் கோசிகப்பட்டு ஆறுஅறையும், 625

எல்லாம் இருவிழியால் ஏந்தல்கள்எல் லாம்நோக்கி,
"வல்லாளன் செல்வம்இதே மட்டில்லாச் செல்வம்"என்றும்,
"கல்லானது ஒன்றின்விலை காணாதுஊர் ஏழுஉலகும்;
மல்லாரும் இவ்வுலகின் வண்மைசொலல் வாய்க்குஎளிதோ? 626

---

623. மக்குஇல் - அறிவுகுறை இலலாத, அறிவுள்ளவனாகிய

624 பண்டாரம் - சேமிபபகம், நததி - விருமபி.

625 நாலுவகைபபொன - ஆடகம், கினிச்சிறை, சாதரூபம், சாம்பூநதம்; சகத்திரபபத்து - பத்தாயிரம்; கோசிகபபட்டு - படடுககோசிகம் என மாறுக, பட்டுசசீலை.

626. மல்லாரும் - வளமை மிகுநத, இவ்வுலகு என்றது மணிநகரை.

உம்பர்உலகு, அத்தினபு ரீ,போ கவதிநகர்,
அம்பொன் அளகைஇவை ஆகவே ஓர்நாலும்
சொம்பின்மணி ஒன்றினுக்குச் சோர்வில்லை பற்றாதால்;
சம்பிரமம் ஆனதுஇவன் றன்வாழ்வு" எனத்திகைப்பார். 627

(அடுத்த பாடல் சுவடியில் எழுதப்படவில்லை)

கையில் உவந்துஎடுப்பார்; கண்கமலத் தில்பொதிவார்;
மெய்யில் அணைத்தே விரிகதிரை நோக்கிடுவார்;
"அய்யனுட வாழ்விதனை ஆயிரநா வேஉடைய
பையணிந்த சேடன் பகரயுகம் போதாதே!" 629

என்பார்; திகைப்பார்;இது என்னநவம் என்றுஇசைப்பார்;
அன்பாய்ப் பெருமூச்சு அறைவார்; துணுக்கெறிவார்;
"மின்பாயுது" என்பார்; வெயில்என்பார்; "தீஇது"என்பார்;
"பொன்பாயும் நிலவுஇது" என்பார்; பூஞ்சோலைப் பொய்கை என்பார். 630

கட்டுவர்க்கம், சேகரங்கள், கண்டிகை,பல் பூண்இனங்கள்,
பட்டுவர்க்கம், நால்வகைப்பொற் பாண்டங்கள், ரத்தினங்கள்,
இட்டுவைத்த பொக்கிஷங்கள், ஏற்கறிதிப் பொக்கிஷங்கள்,
கட்டுமட்டுஎல் லாம்பார்த்துக் கண்டுகளி கூர்ந்தனரே. 631

பற்பல சோகம் பகடுசக டங்களிலே
அற்புதம தாய்ச்சுமப்பது ஆகப் பொதிந்தபொதி
விற்பனமால் தான்நோக்கி, வில்லியுடன் ஏதுசொல்வார்
"பொற்புஉடையாய்! இப்பொருள்கள் போகமதி ஆறுசெல்லும்; 632

ஆதலால் தர்மன் அயர்ந்தகலக் கம்தர்க்க,
சேதிசொல வே,கணத்தில் செல்லவகை சொல்;"எனவே,
மாதவனை நோக்கி, மருண்டு,வில்லி நிற்பளவில்,
காதலொடு மாயன் கருடன் தனைநினைத்தான். 633

---

627. உம்பர்உலகு - அமராவதி; போகவதீ - நாகருலகம், சம்பிரமம் - முழு நிறைவு.
630 துணுக்கெறிவார் - அசசம்கொள்வார்
631. கட்டுவர்க்கம - ஆடை இனங்கள், சேகரங்கள் - கிரீடங்கள், கண்டிகை - பதக்கம்.
632. சோகம் - ஒட்டகம்; பகடு - எருது, சகடம - வண்டி, பொதி - மூட்டை, மதி - மாதம்.

அந்தக் கணத்தில் அணுக, அவன்வெரிந்மேல்
குந்தி, உருவசியை, கோலஅல்லி நாயகியை,
சிந்தை யசோதையொடு, தேவகியை, வீமனையும்,
சந்தப் பொருள்கள் தமைஎல்லாம் ஏற்றிவைத்தே, 634

"இன்னம்மதி ஆறில் இவுளியின்பின் யானும்ஒக்க
உன்னியே செல்கிலனேல் உற்றமகம் முற்றாது;
பன்னும்நிர் வாகமது பண்ணறியான் வில்லி;அதால்
நன்னகரி நீசேர்ந்து, நாதனுக்குச் சேதிசொல்லி, 635

குந்தியிடத்து ஒக்கவரும் கோதைஒரு நால்வரையும்
சந்தமுட னேஅமர்த்தி, தக்கபொருள் இத்தனையும்
புந்தியுடன் பொக்கிஷத்தில் போட்டு,யா கம்தாழ்ச்சி
வந்துவிடாது அங்குநிரு வாக மதுபுரிவாய்." 636

என்றுமொழிந் தே,கருடற்கு ஏகவிடை ஈந்து,அதற்பின்
அன்றுஓர் கணம்தனிலே அத்தினபு ரம்சேர்ந்து,
நன்றாய் நடந்த நடப்பைஎலாம் தர்மனுக்கு
நின்றோதி, வீமன் நிதிபொருளும் பேணிவைத்தே, 637

நால்வரையும் குந்திதிரு நன்மனையி லேஅமர்த்தி,
மால்வழுத்தும் சொல்லில் வழுவுதல்வா ராதபடி,
கால்வழியான் மற்றும்உள்ளோர் காட்சியுட னேஇருந்தார்;
மேல்விளைந்தது எல்லாம் இனிதுகேள்; மன்னவனே! 638

நல்விசயன் றன்னை ரணபே ரிகைமுழக்கச்
சொல்லி, அவனுடைய தோன்றல்தனை மால்நோக்கி,
"செல்வம்உளாய்! நக்கஉந்தன் சேனையுடன் எய்து"கென்று,
கல்விஉள சேடனை,"உன் கட்செவியூர்க்கு ஏகு"என்றான் 639

மாலுடனே வில்லி மணிநகரி யான்றனையும்
சாலப் புகழ்ந்து,அவனும் தன்நகரி போய்ச்சேர்ந்தான்;

---

634. அணுகியவன் - சுருடன். சந்த - அழகிய. 635. நாதன் - தருமன்.

638. நால்வர் - உருவசி, அல்லி, தேவசி, யசோதை; வழுத்தும - கூறிய; கால் வழியான் - வாயுவின் மகன், வீமன், மன்னவனே - சொனமே செயனே, கூறுவது வைசம்பாயனர்.

639. ரணபேரிகை - போமுரசு; தோன்றல் - மகன, பப்பரவாகனன், கட்செவி ஊர் - நாகலோகம்.

"சேல்விழியின் ஊர்வசிதன் - - - - புண்டரிகா!
ஞாலம்இதை ஆளு"கென்று நாடுஅவன்பால் ஒப்புவித்தே, 640

மற்றுள்ள சேனையையும் மந்திரிசு பத்தியையும்
வெற்றி மணிநகரி வேந்தனையு மேகூட்டி,
பற்றிவிச யன்தேரில் பாகனாய்த் தான்அமர்ந்து,
கொற்றமுள்ள மன்னர்தளம் கோலிவர ஏகினரே 641

திண்மைப் பெருங்கடலிற் சேனைபுறம் சூழ்ந்துவர,
வண்மைக்கு இசைந்தபஞ்ச வாச்சியங்கள் தான்முழங்க,
பண்மைக்கு இசைந்த பரியை அலங்கரித்தே,
ஒண்மை மணிக்குடைக்கீழ் உற்றுமுன்னம் செல்லவிட்டார். 642

சடிலத் துடன்விருது தாம்அனந்தம் தற்சூழ.
நடைநா டகசாலை நாட்டியத்தோ டேநடத்தி,
புடைசூழ்ந்த தானைவெள்ளம் பொற்புஇவுளி பின்போக,
திடமா வயப்புரவி தென்திசையை நோக்கியதே. 643

பத்ரகிரி யான்முதலாய்ப் பப்பரவா கனன்ஈறாய்ச்
சத்திரியர் எல்லாம் தனுவிசய லனச்சூழ,
நத்து வளைக்கையாள் நரன்தேர் தனைநடத்த,
சித்திரவில் வீரன் செயவிசயன் ஏகினனே. 644

வேத வியாசரிஷி மேல்நாள் உரைத்தபடி
தாது குளப்புஅடியே தான்முதலாய்ச் செய்சடங்கு
போத நடத்தி, புனிதத் தளத்துடனே,
மேதையொடு சிங்கார வித்தார மாய்நடந்தார். 645

கண்இடம்கொள் ளாதபெரும் காட்சியுடன் மாபோத,
மண்இடங்கள் உள்ளதுஎல்லாம் மன்தூசி யாய்எழும்பி
விண்இடங்கள் எல்லாம் விரவி மிகச்சேர,
பன்இடங்க ளேமுழங்கப் பாளையங்கள் ஏகியவே. 646

6-40. அவன் - ஆதிசேடன். 6-42 பணமைக்கு இசைந்த - தகுதிவாயந்த.
6-43. சடிலம - குதிரை, பொற்பு இவுளி - அழகிய குதிரை.
6-44 நத்து - பாஞ்ச சன்னியம் என்னும் சங்கு, வளை - சுதர்சன சகசுரம்; நரன் - அருச்சுனன்.
6-46. மா - குதிரை; பாளையம - படை.

"பாய்புரவி தென்திசையைப் பார்த்தே நடந்தேக,
சேய்பரவும் நாலுவகைச் சேனை தொடர்ந்துஏக,
வாய்விசையது என்ன மகிழ்ந்துசென்றான் மன்ன" என,
ஆய்பரிவில் வல்இருடி அன்பாய் உரைத்தனரே. 647

"பாரம்உறும் எக்கதைக்கும் பப்பரவா கன்கதைதான்
சேர அமிர்தாய்த் திகட்டாது இருந்தது" எனச்
சாரம்எல்லாம் கன்னமிசைத் தான்கேட்டு, அகம்மகிழ்ந்து,
வீரசன மேசயன்தான் மெய்கூர்ந்தான் மென்மேலும். 648

பப்பரவாகனன் போர்ச் சருக்கம் முற்றிற்று

ஆகச்சருக்கம் 15க்கு விருத்தம் 2589

---

647. சேய்பரவும் - நீண்டதூரம் பரவியுள்ள; வாய்விசை - வார்த்தைகளைப் போன்ற வேகம், சொல்லொக்கும் சுடு சரம் என்றார் கம்பநாடாரும்; ஆய்பரிவு - தாயன்பு; இருடி - வைசம்பாயனன்.

648. கன்னமிசை - செவிகளில்.

16. பரிசத்துசன் போர்ச் சருக்கம்

(எழுசீர்விருத்தம்)

வானம் ஏழுஉலகம் ஏழின் மிக்குறவ-
ளர்ந்த வன்; உலகுஅ ளந்தவன்,
ஊனம் ஆனபுவி அண்ட ரண்டம்முழுது
உண்ட வன்;கருணை கொண்டவன்;
யானை ஓலமிட வெங்க ராவினைஅ-
டர்ந்த வன்;புவிஇ டந்தவன்;
கானம் மேவுவன மாலி வேலிநிகர்
காக்க வேகிருபை நோக்கவே. 1

மதுர சாரஅமுது ஒழுகுஉன் வாய்மைவச-
னிக்க, என்செவிரு சிக்கலால்
அதனின் மேல்அறையும்; என்ப வம்துயர்அ
ழிக்க, என்குழைபொ சிக்க,நீ
"கதைசொல்" என்றஅர சன்னுஉ வந்துமுனி,
"கற்ப தாருஅன விற்பனா"
இதமி குந்தகதை கேள்;"எ னாமுனிவன்
இன்பு றச்சொலுவன் முன்பிலே. 2

சீர்உ லாவும்வசி கரவி சித்ரமுறு
திருஉ லாவும்மணி நகரிவிட்டு,
ஏர்உ லாவுபரி இதய வேகமொடு
ஏம தென்றிசையை நேரதாய்,
சார மானநவ ரத்தினக்கவிகை
தன்னில் ஏகியது மின்என;
வீர சாரவிருது இனம்,மூ வாறுவகை
மேள தாளமுடன் விரவவே. 3

---

1. சுரா - முதலை; கானம் மேவு - முல்லை நிலத்திற்குரிய, வனமாலி - திருததுழாய்மாலைஅணிந்தவன்.
2. குழை பொசிசுக - செவிகள் துய்க்க; முனி - (தொடர்ந்து சொல்லக) கருதி, சுற்பகதாரு - சுற்பகமரம்.
3. வசிசுர - சுவர்ச்சிமிக்க, இதயவேகம் - மனோவேகம், ஏம - எமனுக்கு உரிய. பாதுகாப்புமிக்க எனினும் ஆம்

உரிய தானஎழு பத்தி ரண்டுவினை
யூக மோடுசல ராசிநேர்
பரவும் நாலுவகை தந்தி ரங்களொடு
பஞ்ச வாத்தியமு ழக்குடன்
விரவி யே பரிபின் னேதொடர்ந்து இலக-
வே,கு ளப்படியில் ஓமமும்
கருது மற்றும்மொழி முறைமை யோடுகரு
மம்செய்து ஏகினர்கள் மிஞ்சவே. 4

அரசின் யக்கதுஒரு பப்ர வாகனன்அ-
மைச்சன் ஆகியசு பத்தியும்,
தருமம் மேவுஅமிர்தன், நீலன், வீரன்அநு-
சாளு வன்,துவரை யூர்உளோர்,
கருது பத்ரகிரி யான்,அ மைச்சன்,அதி-
காய சேயன்,விட கீதனன்,
விரவும் மேகவரு ணன்,பல் வீரர்களும்
விசய ராசனுடன் ஏகினார். 5

அண்ட கோளகைஅ தற்கு மேலும்உள
அண்ட ரண்டபகி ரண்டமும்,
எண்டி சாமுகமும், அஷ்ட பாலகரும்,
எண்க யம்,கிரிகள், நாகம்வே-
தண்டம் மேருகிரி, மண்கள் ஏழு .....
தங்கள் ஊர்களும் நடுங்கவே,
சண்ட மாருதமும் அஞ்ச, வேலைநிகர்
தண்ட மானதுந டந்ததே. 6

இந்த வாறில்இரு பத்தொடு ஏழுதினம்
இவுளி தானையுடன் ஏகியே,
அந்த மானஎழு நால தானதினம்
ஆன போதில்எதி ராகவே,

---

4. வினை- போர; யூகம் -படை வகுப்பு; சலராசி- கடல்; தநதிரம் - படை, இது தேர், யானை, குதிரை, காலாள் என நான்கு வகைப்படும.

5 துவரையூர் - துவாரகை, விசயராசன் - அருச்சுனன.

6. எண் என்பதனை கயம், கிரிகள் நாகம் ஆகிய மூன்றினொடும் கூட்டுக; எட்டுத திசையானைகள், மலைகள், அஷ்டநாகங்கள்; வேதணடம் - மலை, வேதணடமாகிய மேருகிரி என்க, தண்டம் - சேனை

சந்த மானபதி யொன்று ரத்னநகர்
தான்ள திர்ந்தது;அதை ஆளுவோன்
நந்த னானபரி சத்து சாதிபதி
நவிலு தற்கரிய வீரனே. 7

இவுளி மாமகம்ஓ ரேழு செய்தும்இரு
நால தாமகம்இ யற்றவே
அவமி லாததுஒரு நரும தாநதியின்
அருகு வேள்வியிடம் அரசனும்
கவின் உலாவுமனை யாளும் முற்றியொரு
....
தவசின் நான்மறையர் யாக சாலைமிசை
தங்கி வேள்விமுறை செய்யவே, 8

அசுவ மானதைஅ லங்க ரித்து,நுதல்
அதனி லேபடம்வ ரைந்துவைத்து,
இசைய வேபரிஅ விழ்த்து விட்டு,மகன்
இணையில் தாம்ரதுச னொடுவய
நசைய தானதள நாதன் வீரநகு-
லத்து சன்தனொடு சேனையும்
வசைஇ லாதபடி விட்ட னுப்பினன்ம-
கத்வ ரத்னநகர் மன்னனே. 9

கரித்து சன்,மதுக ரத்து சன்வசிக
ரத்து சன்,இருடி (தத்)துசன்,
பரித்து சன்,தமனி யத்து சன்,(வெல்)சர-
பத்து சன்,ஒண்பது மத்துசன்,
வரத்து சன்,உடுவி னத்து சன்நவம
ணித்து சன்,கதிர்ம தித்துசன்,
கிரித்து சன்,இரச தத்து சன்,பன்மதி
கிளரும் மந்த்ரிகளும் ஏகினார்... 10

---

7. அந்தமான- சுடைசியான , எழுநால் அது-ஆன - இருபத்தெட்டாவது, சந்தமான - அழகிய, பதி-நகரம்

8. இரு நால் அதாம - எட்டாவது , கவினஉலாவு- அழகிய.

9. வய நசையதான -வீரததிலே விருபபமுள்ள, அல்லது வயதளநாதன் நசையதான தளநாதன் எனத் தனித்தனிக் கூடடிஇும் அமையும். தள நாதன் - படைத்தலைவன்.

(கலிவிருத்தம்)

மந்த்ரி மார்அறு பத்து நால்வரும்
தந்த்ரி இங்குஅதில் சதும டங்கதாய்
நந்தன் (வீரந) குலத்து சன்றனைச்
சுந்த ரங்களாய்ச் சூழ்ந்து சென்றனர். 11

தூசி பால்நகு லத்து சன்செல,
மாசி லாமனன் மகன்பின் னேசெல,
தேசு லாவிய சேனை வெள்ளமும்
பாச வெங்கடற் ..... வேசெல. 12

கடலது ஏழ்பறைக் கடலும் ஒன்றுஎன
மிடலின் நால்வகைச் சேனை வெள்ளமும்
புடைப ரந்திட, புவிஅ திர்ந்திட,
படைதொ டர்ந்திட, பரிந டந்ததே. 13

விருதுஅ னந்தமே மிகவி ளங்கவே,
பெருகு ரத்தினப் பிச்ச நீழலில்
துரக மேசெலத் துவச தாம்பிர
நரப திக்குமுன் நகுலன் எய்தினான். 14

தரும பூபதி தக்க பாடலம்
வரிசை யாய்ச்செலும் வகுந்தினுக் குஎதிர்
பரிச கேதன்வெம் பரியும் எய்தினது
உரிய ஒன்றினுக்கு ஒன்று மிக்கென. 15

கதியி னாலும்,வெங் கதழ்வி னாலும்,அற்
புதம தாம்எழிற் பொலிவி னாலும்,மா
மதுகை யாலும்வா வுதலி னாலுமே
இதுஅது என்றுஎவர் அறிந்து மதிப்பரே? 16

---

11 சதுமடங்கு - நான்குமடங்கு,

12. தூசிபால் - குதிரையின் அருகே,

13. மிடலின் - வலிமையுள்ள, புடை - பக்கத்தே

14. பிசசம - குடை, நரபதி- மனனன்.

15. பாடலம்- குதிரை, வகுநதினுக்கு - வழிகசு, பரிசகேதன் - பரிசததுசன்.

16. கதி- செலவு , கதழ்வு- வேகம, மதுகை - வலிமை.

உபய மின்னல்ஒத்து உபய வாசியும்
சபல மாய்எதிர் தரநெ ருங்க,ஓர்
(அ)பய கந்துகம் அனும னித்துஉடன்
சபத முற்றெனத் தான்ந டித்ததே. 17

சுழல்க றங்குஎன, சுலவு பம்பரத்து
எழில்சி றந்ததொத்து இடம்வ லங்களாய்
அழகுஇ யங்க,அற் புதம்இது என்றிட,
வழுவி லாச்சுழல் வண்டை ஒத்ததே. 18

தண்டை கிண்கிணி வெண்டை யங்கள்தான்
கொண்ட லின்கணில் குறும டங்கலாய்
மண்ட லங்களும் மிகஅ திர்ந்திட
மண்டி லங்களாய் மாந டம்செய்தே, 19

தகுர்த திந்திமி தாதி தோஎன
மிகுந டம்செய்தே, விசயன் வெம்பரி
மகிபன் மண்டில வலவி லாவிலே
உகும்ம டங்கல்நேர் உதைசெய் கின்றதே. 20

பரிசன் வெம்பரி கிரிடி பாடலத்து
எரிசி னம்கொடே இடவி லாவிலே
அரிதுஉ தைத்தபின், அடல்பு ரிந்தன
பொருவில் குக்குடப் போரின் மிக்கதாய். 21

உன்னி யின்கழுத்து உன்னி பின்னியும்,
தன்எ யிற்றுஉறத் தவ்வி வவ்வியும்,
பின்னும் முன்னுறப் பெயர்ந்துஉ லாவியும்,
துன்க ரங்களாய்க் கால்கள் தூக்கியும். 22

---

17. அபய- அச்சமற்ற, கந்துகம் - குதிரை, அனுமனித்து - அனுமானித்து, கனைத்து.
18. கறங்கு- காற்றாடி; சுலவு - சுழல்கின்ற
19. தணடை, கிண்கிணி, வெணடையம - காலில அணியபபெறும நகைகள, கொணடலின கணில் - மேகத்தில தோன்றுகின்ற, விகுதிமேல் விகுதி: குறு மடஙகல - சிறிய இடி, மணடிலம் - வட்டமிட்டு ஆடும நடனம.
20. மகிபன் - பரிசததுசன், மண்டிலம - குதிரை, உகும் - வீழ்கின்ற
21. பாடலதது - குதிரையை, குக்குடப்போர - கோழிசசணடை, பரி உதைத்தபின (இரணடும) மிக்கதாய அடல்புரிநதன என்பது முடிபு.
22. உனனி - குதிரை, தவ்வி - பாய்நது, துன்- ஒனறையொன்று நெருஙகுகின்ற, கரஙகளாய - கைகளைப போன்று, கால்கள் - முன்னஙகாலகளன, கால்கள எபபோதும தனித்தனியாக இயங்கும் கைகள்பெருபாலும் ஒன்றையொனறு நெருஙகிபபணிபுரியும, எனவே துன்கரம என்றார்.

(அடுத்த பாடல் சுவடியில் இல்லை)

அரசன் மாவினைத் தலம்ம லாந்திடத்,
தருமன் மாமிகத் தாக்க லுற்றதால்,
துரித மாய்நகு லத்து சாதிபன்
பரிஇ ரண்டையும் பாய்ந்து பற்றியே, 24

ஆடல் வெம்பரி அயலில் வந்துள
பீடின் வீரரைப் பெருக வேபுடைத்து,
ஆடி யே,விருது உளதெ லாம்பறித்து,
ஈடு செய்து,இளை யாத சிந்தையாய். 25

நகுலன் எஞ்சிலான் நரன்அ டற்பரி
மிகையின் வவ்வினான்; விருதும் ஒக்கவே;
பகரும் வெற்றியம் பறைமு ழக்கியே,
மகிபன் மைந்தன்முன் வந்துஅ ளித்தனன். 26

கண்டு, தாம்பிரன் கதழ்வ தாகவே
மண்டி, மாமுகத்து அணிப டம்கொடே,
கொண்ட வாசகக் கொள்கை தான்உணர்ந்து,
இண்டை மாமுகன் எயிறு அதுக்கியே 27

"இன்ன வாறுஇவன் என்ன புத்தியாய்ப்
பொன்னின் நற்படந் தன்னில் பொறித்து,
உன்னி நெற்றியில் முன்அ மைத்துவைத்து,
இந்த கர்க்குநேர் உன்னி விட்டதே? 28

மத்த கத்திலும், மற்றுஅ கத்திலும்,
சித்த மாய்க்கணும், சிருங்கம் மேவினும்
தத்தும் மாவிடார் இத்த லத்திலே
புத்தி வீரராம் பூபர் யாருமே. 29

---

24. அரசன் - பரிசததுசன, மலாந்திட - மலலாநதிட, தலைசீழாக விழுமாறு

25 பீடின்- பெருமை மிக்க, ஆடி - போராடி; ஈடுசெயது - தன் குதிரை சீறேவிழுந்த தாழ்ச்சிக்கு ஈடு கூடடி.

26. எஞ்சிலான் - (சினததில்) குறையாதவனாய; மகிபன மைநதன் - தாம்பிரத்துசன்.

27 மண்டி- நெருங்கிவநது; இணடை- தாமரைமலர் போன்ற, எயிறு அதுக்கி - பல் கடித்து

28 உன்னி - 1 குதிரை 2. (எதை) நினைத்து.

29. மத்தகம்- தலை, அகம -மார்பு, சிருங்கம் - கொம்பு, பூபர - அரசர்

விசையன் வின்மையும் விகட வீரமும்
நசிய வேஉடல் நடுந டுங்கவே
பசைஅ றச்சமர் பண்ணி வெல்லயான்
அசுவம் நீதகைந்து அணிநி றுத்து"என, 30

துரித மாய்நகு லத்து சாதிபன்
சரிஇல் சேனையைச் சக்ர யூகமாய்ப்
பரவி, நல்படப் பரிஇ ரண்டையும்
மருவ வைத்தனன் மனையும் ஒக்கவே. 31

இரண பேரிகை இனம்மு ழங்கவே,
முரண தாய்அணி முனையில் நின்றனன்;
கிரண மோலிசேர் கிரிடி தோல்இனக்
கருவி ஓதையில் கதிக்க ஆர்த்ததே. 32

பரிதி யூகமாய்ப் படைவ குத்திடும்
உரம்அ றிந்து,மெய்த் தாம்பி ரத்துசன்
"அரிந ரன்சினந்து அணிகு லைப்பதைக்
கருதி என்கணால் காண்பன்" என்றனன்.
33

(வேறு)

இவ்வாறு இவன்இங்கு இனிதுஉற் றிடவே.
பவ்வஆர் கலிஇன் படையும் பலரும்
வெவ்வீ ரியவில் லியைமே விவர,
செவ்வே எதிர்தோற் றியதுஇன் சிகரம். 34

மாகந் தொடுமா மணியின் சிகரம்
மேகந் தரும்மண் டலமேல் உறலால்
"ஆகம் குளிர்அந் நகர்என்?" எனவி-
வேகம் பெறவில் லிவினா வினனே 35

---

30. வின்மை - வில்லாற்றல், விகட- பெரிய, நசிய- கெடுமாறு, பசை அற - கண்ணோட்ட மில்லாமல், யான் வெல்ல நீ அசுவம தகைநது அணி நிறுத்து என இயையும.

31 சரி இல - இணையற்ற, யூகம்- வியூகம, படைவகுப்பு.

32 பிற்பாதியில் அமைநதுள்ள உவமையின் பயன் விளங்குவில்லை

33 பரிதியூகம- சகரவ்யூகம், உரம் - இங்கு போாகுகலை அறிவு.

34 பவ்வ ஆாகலி - கடல், ஒரு பொருடபனமொழி, தொகுதல விகாரம, செல்வே - நனறாக; இன் -அழகிய. 35. மாகம் - ஆகாயம, விவேகம பெற- அறிய

சமருக்கு இளையான் எதிர்தான் வினவ,
அமிர்தத் துசன்அங்கு அவனுக்கு அருள்வான்-
"இமயப் புரம்மிக் கதுஇரத் னநகர்;
விமலப் பரிசத் துசவேந்து உடையான்; 36

அரிஐக் கிரியான், அயன்வா சவனை
விரிமுப் புவனம் வெருவப் பொருவான்;
பரிசத் துசபூ பதிபண் புடையான்;
அருள்புத் திரனாம் அடல்தாம் பரனே. 37

அரன்மால் அயன்அஞ் சிடும்ஆண் மைஉளான்;
வரம்மே வுவடுத் துசன்மைந் தன்;இவ்உலகு
உரவோர் களைஓர் அணுவாய் மதியான்
தரமா கியதாம் பரகே தனனே. 38

நன்று!அங்கு அவன்நம் பரிபற் றுவனேல்
வென்று அன் புடன்மீள் வதுயார் கொல்?ஐயா!
இன்றுஇங்கு அரியின் செயல்எப் படியோ?
ஒன்றும் தெரியாது" எனஓ தினனே. 39

விறலான் அமிர்தன் சொல,வில் லியுமே
திறலோடு உயர்சென் னிஅசைத் தவனாய்,
நெறியே இரதந் தனை,நேர் விடவே,
முறையோடு எதிர்முன் னினர்சிற் சிலபேர். 40

"விரவார் இடிஏறு எனும்வீ ரியனே!
உரவோன் அருள்கே தனதாம் பரன்மந்-
திரிமா நகுலத் துசன்சேர்ந்து அதரில்
பரிவேள் விசெய்வான் எதிர்பட் டனரால். 41

---

36. இரத்ன நகா மிக்கது, உடையான் பரிசத்துச வேந்து எனக,

37. ஐக்கிரியான் - தலைமையான மலையாகிய கயிலாயத்தை உடைய சிவபிரான், அடல் - வலிமை மிகக

39 வடு - தாம்பிரம், எனவே வடுத்துசன் என்றார், மைநதன் - வலியவன்

40. சென்னி - தலை, முனனினர் - எதிர்ப்பட்டனர்.

41. உரவோன - பரிசத்துசன், கேதன தரம்பரன் - தரம்பரகேதனன்; அதரில- வழியில்; பரிவேள்வி செயவார் (ஆகிய)தாம்பரன், நகுலத்துசன் சேர்ந்து அதரில் எதிர்பபட்டனர் என்பது முடிபு; ஆல் - சற்றசை

இகல்நம் பரியும் இகலார் பரியும்
முகம்ஒன்றின; மோந் தன;சேர்ந் து,கனைத்து,
உகளும் சமர்ஊ டின;சா டின;கால்
அகடின் கண்உதைத்து, அடல்பற் றினவே . 42

உதைத்து,ஒன் றினைஒன் றுகடித்து உரசாய்ப்
பகைத்து,ஒண் களமும் களமும் படவே,
மிதித்தும் பிணைத்தும் பரிவா வியும்,மேல்
கதத்தோடு இருகால் கள்உயர்த் தினவே. 43

ஒற்றொற்று இகலுற் றதில்நம் புரவி
கொற்றத் தில்உயர்ந் தது;ஒனார் கொயுளை
இற்றொற்று அலவற்கு எதிர்எய்து எலிபோல்
மற்றத் திஇளைத் துமயங் கினதே. 44

அதன்மேல் நகுலன் நம்அடல் பரியும்
கதழ்வோ டுபிடித்து, அடித்தே எமையும்,
விதமாய் விருதும் கொடு,வேந் தன்மகன்
பதமீ து இறைஞ்சி பகர்ந்திட் டனனே. 45

"மணிமா நகரா திபன்மா விடிலும்
நணிநா ளும்நமக்கு இறைதந் திடுவோன்;
அணுகான்; நமதுஉத் தரவுஅன் றிவிடான்;
துணிவாள், எவன்?'என் றுதுரா கதமாய், 46

பரிநெற் றியில்இட் டபடத்து எழுதும்
வரிமுற் றும்உணர்ந்து, உறுவஞ் சினமாய்ப்
பரித்த் திறமாய் அணிபண் ணினன்வெண்
திரைஉற் றுளசே னைகள்யா வையுமே. 47

---

42. இகல் - போருக்குஉரிய, இகலார் - பகைவர்; உகளும- பாயும, அகடின்கண் - அகடடில், வயிற்றில, தொகுததல் விகாரம, அடல - போர்.

43. உரசாய்- வேகமாக, சளம் - சுழுத்து, வாவி - தாண்டி.; கதம் -சினம.

44. ஒற்றுஒற்று - ஒற்றைக்குஒறறை; கொறறம் - வெற்றி ; ஒனார் - பகைவர்; கொயுளை - வெட்டப்பட பிடரி மயிர, ஆகுபெயராகக் குதிரை, இலதொற்று - வீட்டிலே இடம் பிடித்துவாழும்; அலவறகு - பூனைக்கு; மல தத்தி - போரில் பாயந்து.

46. மணிமா நகராதிபன் - பப்பரவாகனன்; குதிரை அந்தப பசுத்திலிருந்து வருவதால் அவன் மேல ஐயம் ஏற்படுகிறது; நணி - (நம் மோடு) பொருந்தி; இறை- சுபபம்; துராகதம் - வலியச் சண்டைக்கு வருதல், பலாத்காரம்.

47 பரித்த் திறமாய அணி- சகசுரவியூகம், வெணதிரை- கடல், அடையடுதத ஆகு பெயர்.

நஞ்சே னையையே,'"நரநா ரணனார்
எஞ்சா தவர்;என் செயுவார் அறிவோம்;
பஞ்சா னதுவும் சருகும் பரவி
அஞ்சே வகமும் செயுமோ அழல்முன்? 48

வலிதான் அறிவோம்;" எனமன் னன்மகன்
புலிநேர் உரைஓ தஉரைத் தது" என,
விரிகோ அழல்மா ரிகள்வீ சிடவே,
சொலமீ சைதுடித் ததுஅடிக் கடியே. 49

உரமுன் கைகடித்து, உதிரங் களையே
துரிதம் கொடுதுப் பினன்;அப் பொழுதே
அரியும் புகல்வார் - "அரியேறு அனையாய்!
பெருகும் சினமே செயல்பே தமையே. 50

வான்எல் லையதுஆள் மகவான், அயன், நீ
தான்அல் லதுசத் துவன்நின் தனையன்,
நான்அல் ல,உமா பதிநண் ணிலும்எய்ப்
போன்அல் லவிப்பூ பதிபூ பதியே. 51

பிடிபட் டதுவோ பரிபெட் புடையாய்!
குடிகெட் டது,கெட் டது;கொற் றம்எலாம்
தடைபட் டது;தத் துநமக்கு இது;ஐயா!
கடிதுஉத் தமதில் கொளல்கந் துகமே." 52

வெதிரன் செவியில் குறிவெள் வளைபோல்,
இதுஒன் றும்இருஞ் செவிகொண் டிலனாய்,
முதிரும் சினம்வஞ் சினம்முந் துறும்முன்
கதும்என்று அவன்வாய் கையடைத் தனனே. 53

---

48. பரவி- பணிந்து. அம சேவகம்- அழகிய (பணிவான) தொணடு.

49. வலி- வலிமையை. விரி கோ- அகன்ற கணகள்.

51. மகவான்- இநதிரன், சத்துவன்- வலிமை உள்ளவன் ஆகிய, தனையன் - மகன், பப்பரவாகனன், பூபதி- நிலதின் தலைவனாகிய, பூபதியே - அரசனாம் பரிசத்துவசனே, ஏகாரம தேற்றம.

52 தத்து - ஆபத்து, கடிது - அரியது, உத்தம் - யுத்தம்.

53. வெதிரன்- செவிடன், வளை- சஙகு, கதும என்று - விரைவாக, அவன்- அருசுனன், அடைத்தவன் கணணன வஞ்சினம் கூறுமுன் பேசவிடாமல வாயைத் தன்கையால் அடைத்து விட்டான்

"வெல்லும் திறம்உண்டு எனில்வெல் வதுஅலால்
சொல்லும் சபதங் கள்தொகுக்க அரிது;
வில்லுண்டு; உரவோர் மிகஉண்டு; அவனைக்
கொல்"என்று உரைகூ றினன்மா யவனே. 54

"எனைநீ எதுசெய்க எனஏ வுமுனே
தனதா யதுதா னும்முயன் றிடுவேன்;
வினையா இதுவெவ் வினை;யா வர்களும்
முனைவீர்; முயல்வீர்; நினைவாய் முயல்வீர். 55

நின்சார் பொடுநின் மகன்,நின் இனம்,யான்,
என்சேய் இருவோர், அமிர்தன், இயல்பன்
மன்சே னையுமாற் றலன்ஆ னபரி
சன்சேய் படைதந்த் ரிகள்வெல் குவரோ?" 56

என்றோ தியஇந்த் ரகுமா ரனுடன்
அன்றோ துவனே, "அரன்மால் அயனை
நன்றாய் இதயத் தினில்நள் அகலாது,
ஒன்றாய் உறைவுற் றிடவைத் தனனால். 57

அவன்அன்பு எனும்நெஞ் சின்அரும் தளையுள்
இவரும் சிறைசிக் கினர்மூ வருமே;
எவர்அங்கு அவனோடு இகல்செய் துவெல்வார்?
கவின்மெய்த் தவருக்கு ஒருகா வலனே! 58

சினமே செயமும் திறமும் தருமோ?
தனுவும் தனுவும் தவமும் பலனும்
முனையும் மனமும் முயல்கை தருமால்;
வனமும் கமழ்மைந்து உறும்வெஞ் சிலையோய்! 59

---

55. தனது ஆயது- என்னால் இயன்றதை, வினை - இகுகு போர்.

56. சார்பு -துணை, தின்மகன்- பிரதயுமநன், இனம- துவாரகையின் வீராகள், சேய இருவர்- பப்பரவாகனன, விடதேனன், மாற்றலன்- பகைவன், பரிசன சேய் - தாம்பரத்துசன்.

57 நள் - நடுவே.

58 கவின் மெய் - அழகிய உ டலை உடைய, தவருக்கு - வில் வித்தைககு.

59. தனு - 1. உடல 2. வில, பலன் - வலிமை, முனையும் -ஒருமைப பாட்டுடன் ஈடுபடும்; முயல்கை - பெற முயலும் வெறறியை, மைந்து - வலிமை, சிலையோய் - வில்லை உடையவனே.

என்றுஇன்பு உரைநண் பன்இயம் பிடவே,
நன்றுஎன் றுஇருமைந் தரை,நண் புடன்நீர்
இன்றுஒன் றிலர் உண் டைசெய்கின் றதனைக்
கொன்றுஉண் டிடநின்று அணிகோல் எனவே. 60

ஐயன் சொலவே, அனுசன் தமையன்
செய்ஒண் பதமும் சிரசில் தொழுதே,
"மொய்யும் தளம்உண் டைசெய்ஏ வுதொழில்
செய்யும் பணிசெய் திடுவேன் சிறியேன்; 61

ஒன்னார் திகிரித் திறல்யூ கம்உடைந்து
உன்னார் அதுசோர்வு உறயூ கமுறை
என்னோ செய்வதென்று இளையோன் வினவ
முன்னோன் முயலும் திறமே மொழிவான். 62

(எழுசீர் ஆசிரிய விருத்தம்)

கருட யூகமுறை செய்திடு என்ன,மிகு
கசர தம்பரிப தாதியை
உருவம் நேர்படநி றுத்தி, வாய்தலையில்
உபய கண்சிறகு கால்களில்
தறுகண் சாளுவனும் மாலும் மால்சுதனும்
தானும் பத்ரகிரி சாம்பனூர்
அரசு மால்இளவல் கிருத வர்மனையும்
அணிசி றந்திடநி றுத்தியே, 63

அனிக வீரரையும் நீல கேதுவொடு
அக்கு ரூரன்உது வாசரி
தனையும் வாலினில்நி றுத்தி யூகசவ
ரட்ச ணைக்குஇருஅ மைச்சரும்

---

60. ஒன்றிலர்-பகைவர்; உண்டை-வியூகம்,கொன்றுஉண்டிட-அழித்துவிட, அணிகோல் - வியூகம் வகுபபீராக, பகைவர்கள் (சிற்றுண்டியாகிய) உண்டை பிடிதுள்ளனர். நீங்கள் அதை உண்ண வரிசையாகுங்கள் என ஒரு தொனிப்பொருள் காணுக. (கொன்று என்பது ஒலிமாத்திரத்தால் கொண்டு என்பதுபோல் தோன்றுகிறது).

61. மொய்யும் - மொயக்கும என்ற பொருவில ஆட்சி. \

62. திறல் திகிரி யூகம் என மாறுக, வலிமை மிகுக சக்கரவியூகம்; இளையோன் - பப்பரவாகனன்; முன்னோன்- விடதீதனன்;

63 உருவம் - பருந்தின் வடிவம்; தறுகண- வீரம் மிக்க, தான்- பப்பரவாகனன்;பத்ரகிரி அரசு - எமனாசுரன்; சாம்பனூர அரசு - அம்ருதத்துசன், மால் இளவல் - சாத்தகி

வினைய மானசுக லீலன் மேகவனன்
விண்டு பேரனைநி றுத்தியே,
"முனைஇ தற்குள்இனி தேவ ரீர்கடுக
முன்னம் மேவும்"என ஓதியே, 64

தந்தை யானசவு சன்வ சீகரவி
சால கோலஅநு கூல (ன்) மால்
இந்தி ராணிமகன் விசைய வீரியனை
இனிய சீதரனை ஒப்பதாய்
அந்த மாய்வெரிந்அ மர்த்தி னான்;அமரர்
அரன்,அ யன்குமரன் வாசவன்
சிந்தை கூரமகிழ் வாகி மெச்சினர்கள்
செகத லத்துஅரசர் எவருமே. 65

விகங்க ராசனின்வி யூகம் வைத்தநிலை
வீர வீரியன்வ டுத்துசன்
மகிழ்ந்து, மெய்த்துமணி முடிஅ சைத்து,நெடு
மால்வி லோடுஇரதம் உற்றதும்
அகண்டி தைஸ்வரிய மணிந கர்க்குஇறைவன்
அர்ச்சு னன்தனொடும் மற்றுளோர்
மிகுந்த ராசர்சது ரங்க சேனையையும்
விழிப ரப்பிஎதிர் ஓதுவான் 66

"மாய! நீஉலக நாதன்; இல்லைனாருவன்
வாரம் உற்றதுவும் நன்றுநன்று!
ஆய னேஇரும்ஐ யா;ம ணிப்பதிம
னா!கொ டுத்தகரம் மாறவோ

---

64. அனிகம் - படை, உதுவாசரி - உதுதுவாசரி, யூக சவரடசனை - படை வகுப்பைப் பாதுகாத்தல், இரு அமைச்சர் - எமனாசுரனின் அமைச்சன் சுவேதனும், பப்பரவாகனனின் அமைச்சன் சுபத்தி; தேவரீர் என அழைத்தது விடசீதனனை

65. சவுசன் - தூயவன்; வசீகர - அனைவரையும் சுவர்கின்ற; விசால - நிறைந்த, கோல - அழகினை உடைய, அநுகூலன் - (அடைந்தார்க்கு) நன்மையைச் செய்பவன், அருச்சுனன், மால் - இந்திரன், திருமால் சுருடனின் முதுகில இவ்வதுபோல அருச்சுனன் சருடவியூகத்தின் முதுகுப்புறம் இலகுகிறான் என்பது உவமை; குமரன - முருகப்பெருமான்.

66. விகங்கராசன் - பறவை அரசன், சருடன், வடுத்துசன் - தாமபரத்துவசன், அகண்டித ஐஸ்வரியம் - குறைவுபடாத செல்வம், இறைவன் - பபபரவாகனன்.

67. வாரம் - பணிபுரியும் கடமை; மனா - மன்னனே; கொடுத்த - திறைஅளந்த, திருபரே - வேநதர்களே, எனா - என்று சொல்லி.

நீயும் மாலினுடன் எய்தி னாய்?நலது;
நிருப ரே!எமது செய்திகள்
ஏய அறிந்திலிர்க ளோ?ம டிந்துஅழிய
எய்து கின்றதுவும் நன்று;எனா, 67

"நில்லும் நில்லும்;நிலை மாறி லாமல்;"என,
நெறுநெ றுக்கநகை கறுவியே,
செல்லு வில்லைநிகர் வில்வ ளைத்துஉரிய
சிறிய நாண்ஒலிசெய் ஒலியில்எண்
கல்அ சைந்துகரி நடுந டுங்கஉல-
கங்கள் விண்களும்ந டுங்கிட,
மல்லல் முப்புரம்எ ரித்த முக்கண்மழு-
வாளி ருத்ரன்என நின்றனன் 68

முனையில் நின்றநகு லத்துசன் சமர்மு-
னைந்து வெம்பறைமு ழக்கியே,
தனுவ ளைத்துஅழலின் மாரி வீசுசல-
தரம்நி கர்க்கவிடு கணைகளால்
அனல்மு கத்தில் இடுசருகை ஒத்ததுஅனி
கங்க ளானசது ரங்கமும்;
நனிஉ டல்கள்பல துண்டு துண்டுபட
நகந கங்கள்நிகர் குவியவே, 69

சிரசு பாதம்இடை அவய வங்கள்பல
சிதற வும்குருதி பெருகவும்
தருக மானதுநி மிர்த்தி டாதுசர-
மாரி ஓய்வதற வீசலால்
நெரிநெ ரித்துஅணிகள் நிலைகு லைந்துஅலையும்
நேரில் அங்கிவிழி சொரியவே
விரைவில் மந்திரிசு பத்தி தேர்கடவி
வெய்ய வில்கணைகள் வீசினான். 70

---

68. நகை - பற்கள்; செலலு வில - மேகத்தில் தோன்றும் வானவில்; எணகல - எட்டுக் குலவரைகள், கரி - திசையானைகள்.

69 சலதரம - மேகம்; அனிகம் - படை, நகநகங்கள்நிகர் - மலை மலையாக.

70. தருகம் - வில் என்ற பொருளில் ஆளகிறார் போலும், ஆனது - பகுதிப்பொருள் விகுதி; நேரில் - போதில், விழிஅங்கி சொரிய என்க.

வில்லி மாரிஒழி யாமல் மேலும்விசி
கங்க ளானதுசொ ரிந்ததால்
கல்லின் மாரிதடை கண்ட மாலும்இது
கண்டு, மெய்கள்புள கம்கொள,
ஒல்லி லார்கள்சது ரங்க சேனைஉத-
திகளின் ஊடுருவி ஏகலால்
மல்லல் ஆனஅவ யவம்அ றுந்துபிண
மலைநி றைந்தபடு களம்எலாம். 71

கண்ட கண்டமொடு முண்ட முண்டமொடு
கால்கள், சங்கம்இடை, துடை,குடர்
பண்டி, உந்தி,அப ரம்பு றங்கை,விரல்,
பகர்மு ழங்கை,புய வரை,உரம்,
கண்டம் முண்டம்நுதல், வாய்,க போலம்,நகை,
காது, துண்டம்அற வேபிளந்து
எண்தி சாமுகமு மேகு விந்தபிணம்
எண்இ லாமலைகள் மண்எலாம். 72

இரத மேசிதறி எண்இ லாஅலைகள்
இடம்எ லாம்மலிய, வெருள்இ
திரள்இ னங்கள்அழி பட்டது எண்இல்மலை;
தேக மெய்சிதறி நாசம்ஆம்
புரவி எண்இல்மலை; வெம்ப தாதிபொடி
பட்டுஇ றந்தமலை புகல்வதுஆர்?
சிரம்அ னந்தம்மலை புரம்அ னந்தம்மலை
திகழ்க ரங்கள்பல மலைகளே. 73

கூறு கூறுபட வேஅ ழிந்தசில
குஞ்ச ரம்பரிகள் கால்தளம்;
சேறு சேறுநிகர் ஈளை கொண்டபல
சென்னி மூளைகள்நி ணங்களே;

---

71. விசிகங்கள் - அம்புகள். கல - மலை. கோவர்த்தனகிரி; ஒல்லிலா - பகைவர், உததி - கடல், மல்லல் - வளமை. இங்கு வலிமை.

72. சங்கம் - கணைக்கால், குடர்பண்டி - குடலுக்கு இடமாகிய வயிறு, அபரம் - முதுகு, கண்டம் - கழுத்து, முண்டம் - தலை; கபோலம் - கன்னம், நகை - பற்கள், துண்டம - நாசி.

73. பொருள - அஞ்சும், இபதுரக - யானைகூட்டம்.

ஆறு ஆறுநிகர் சோரி யேபெருக,
அக்க ளங்கள்தொறும் மிக்கதாய்
நீறு நீறுபொடி யான தேர்கள்பல
நேய பற்பம்நிகர் கூயவே. 74

இந்த வாறுமு அக்கு ரோணிதள-
மேஅ ழிந்ததுஇவன் வாளியால்;
அந்த நேரில்நகு லத்து சன்கணையில்
அரிகள் பாகுசிலை தேர்இழந்து
உந்தி மெய்கள்துளை பட்ட காயமுடன்
ஓடி மேகவனன் உக்ரமாய்
வந்து தேர்கடவி அம்பு மாரிவரு-
ஷிக்க மற்றவன்உ றுக்கியே 75

இவன்வி டுங்கணைஅ னைத்து மேமுளரி
, எரியில் இட்டதுஎன எரிசெய்தே,
அவன்மி குந்தகணை பொழிய, அங்குஅதைஅ-
றுத்துஅ றுத்துமிகு ஆசுகம்
பவனன் மைந்தன்மகன் மைந்த னுங்கணைப-
ரப்பி னான்மூகில்ப னித்தல்நேர்;
புவன மும்,திசையும், அம்ப ரம்,புணரி
யும்பு தைந்தசர புங்கமாய். 76

எங்கும் மொய்த்தகணை யாவும் நீறுஎழள-
ரித்த பின்இருமுந் நால்எறுழ்க்
கங்கை பத்திரம்வி டுத்து,உ ருள்துவச
கம்ப மும்,புரவி பாகு,தேர்,
அங்கை பற்றுசிலை யும்துணித்துமரு-
மத்தில் எண்கணைஉ டற்றினான்;
சிங்கம் ஒத்துஅலம லந்தி டாதுகதை
செங்கை பற்றிஎதிர் தத்தியே, 77

---

74. காலதளம் - காலாட்படையினர், சோரி - உதிரம், நேய பற்பம் - விரும்பப்படும் திருநீறு, கூயவே - குவிந்தன

75. அந்த நேரில் - அபபோது, அரி - குதிரை; உக்ரமாய - சினதுடன், வருஷிக்க - பொழிய

76. முளரி - தாமரைபபூ, ஆசுகம் - அம்பு, பவனன் மைந்தன் - வாயு குமாரன், வீமன்; மகன் மைந்தன் - (வீமனின்) மைந்தனாகிய கடோாக்கசனின்மகன்,மேகவன்னன்; பனித்தல் - பொழிதல்; புவனம் - உலகம், அம்பரம் - வானம், புணரி - கடல், சரபுங்கம் - அம்புக்குவியல்.

77. எறுழ் - வலிய; பத்திரம் - அம்பு; உருள் - சக்கரம்; துவசகம்பம் - கொடிக்கம்பம்; மருமம் - மார்பு, அலமலந்திடாது சிங்கம் ஒத்து எதிர் தத்தியே என இயையும.

அண்ட கூடமுக டளவு தாவிஉயர்
அகல்வி சும்பினிடம் அணுகியே,
தண்ட மானதுஅதி ரச்சு ழற்றியுக
சண்ட மாருதம்நி கர்க்கவே,
மண்டு சூறைஉலகு எங்கு மேபரவ
மாரில் ஓர்அடிஅ டித்தனன்,
நண்டல் பிண்டம்என வேர தம்,துவசம்
நாசம் ஆனபரி பாகுமே 78

அசல மீதில்உறும் இடிநி கர்த்ததடி
அடிவி ழுந்திடும்அ திர்ச்சியால்;
நசிய மாமுடிபொ டிந்தி டச்சடம்ந-
சுங்கி யேஉணர்வ ழிந்தனன்;
கசர தம்,பரி,ப தாதி மீதுகதை
கொண்டு சாடினன்ம டங்கலாய்;
புசப லங்களொடும் அடியின் மேல்அடிபு-
டைத்து நின்றனன்இ டிக்குநேர். 79

இகல்வி சாலசுக லீல னும்கதைகொடு
இடியின் மேலிடிமு ழங்கலாய்,
பகைஞர் வீரசது ரங்க சேனைபல
பற்பம் ஆகவும்நொ றுக்கினான்;
சிகர கோபுரகி ரீட மோலிகள்தெ-
றிக்க வாசிகள்வெ றிக்கவே,
நகஉ வாமதக கும்பம் மஞ்சுஉடல்ந-
சுங்கி எங்கணும்நொ றுங்கவே, 80

தேர்கள் நூறு,கரி நூறு,ஐ நூறுபரி,
சேனை ஆயிரம்ஓர் அடியிலே
பார்கள் எங்கும்அளறு ஆக ஊழிவரு
பவன மாருதம்நி கர்க்கவே,

---

78. யுசசண்டமாருதம் - ஊழிபபெருங்காறறு, சூறை - சுழல்காறறு, மாரில் - மார்பில், பேச்சுவழக்கு, நண்டல் - பொங்கல், பிண்டம - சுவளம்

79. அசலம் - மலை, தடி அடி - கதைததாகுதல், நசியமா - மூக்குப் பொடி போல.

80. சிகர - உயாநத, கிரீட மோலி - ஒருபொருட்பன்மொழி, வாசி - குதிரை, நக - மலையைப் போன்ற; உவா - யானை, மதக-மத்தகமாகிய, இடைக்குறை; கும்பம் - குடம், மஞசுஉடல மேகம் போன்ற சுரியமேனி.

சோர்வி லாதுசுக லீலன் மேகன்உயர்
தூண்ட ழுந்தநர சிங்கம்நேர்
போர்வி சாலமுடன்அடியின் மேல்அடிபு-
டைத்துஅ டற்படநொ றுக்கினான். 81

சிகரம், மத்தகம்மு கம்,கு மிழ்ச்செவி,செவ்-
வாய்கள், அம்புயம்,வி லா,உரம்,
அகடு,தொந்தி,அப ரம்,க போலம்நகை,
அதிதம், அங்கை,விரல் உத்தமத்,
தகைசி றந்தஇடை, துடை,மு ழந்து,திரள்
சங்கம், ஒண்கரடு, பரடு,கால்,
நகுபு ரங்கள்,அவ யவம்அ டங்கஅடி-
யால்ந சுங்கினர்கள் யாருமே. 82

மேக வண்ணன்ஒரு பால்விண் ணேறுஅனைய
வெங்க தாயுதம டங்கலால்
நாக மாஇரத மும்ப தாதியும்ந-
சுங்க வீறுடன்அ டிக்கவே,
தாக மானசுக லீலன் மாருதித-
னக்கு நேர்அடித கர்க்கவே,
வாகை மேவும்மதி மந்த்ரி யும்(சிலையின்)
வாளி மாரியின்ஒ றுக்கவே, 83

வலிய வச்ரரத மதனில் ஏறிமதி
மந்த்ரி யாகியசு வேதனும்
சிலைவ ளைத்து,அவண்நல் மால்ப னித்தல்நிகர்
செஞ்சி லீமுகம்உ தைத்தலால்
மலைம லைக்குநிக ராக வெம்பிணம்ம-
லிந்தது; எங்கும்அநு சாளுவன்
கொலும்அ ழல்கணைபொ ழிந்து சேனைகள்கு-
றைத்து நின்றனன்ம றத்தினான். 84

---

81. அளறு - சேறு; பவனமாருதம் - காற்று, ஒருபொருட்பன்மொழி, மேகன் - முகில்வண்ணன், திருமால.

82. சிகரம - தலை, மத்தகம - நெற்றி; அபரம் - முதுகு, முழந்து - முழங்கால, சங்கம்- கணைக்கால்; கரடு, பரடு, சங்கம யாவும ஒருபொருட்கிளவிகள், நகு - விளங்குகின்ற; புரங்கள் - உடல்கள்.

83. நாக - மலையைபபோன்ற; தாகமான - வெறறி விருபபம மிக்க.

84. மால் - மேகம்; பனித்தல் - சொரிதல்.

சங்க வாரிசது ரங்க சேனைதடு-
மாறி யேஅலறும் ஓதையால்
அங்கி மாரிவிழி சொரிய வெள்ளயிறு
அதுக்கி யேரதம்நெ ருக்கியே
சிங்கம் நேர்வலியன் வீர கர்ச்சனைகள்
செய்துஉ றுக்கி"அட! சிறுவன்நீ!
எங்கு போவது?நில்; ஏமன் ஊர்புகினும்
என்கை வாளிவிடு மோஅடா? 85

நின்ற னக்குஎளிது சேனை யோ?திருகி
நில்ல டாஇகலில் நில்லடா"
என்றுஉ ரைக்கமிகு கோப மோடுஉயர
மேக வண்ணனும்எ ழும்பியே,
கன்றி வான்இடிகள் ஒப்ப ஓர்அடிக-
றுத்துஅ டிக்கமகு டத்திலே,
அன்று பற்பம்உற மோலி நீறஅர-
சன்கு மாரன்மனம் அஞ்சிலான் . 86

"சிறியன் என்று,பத சாரி என்றுசெயிர்
செய்தி லேன்;கணைகள் எய்திலேன்;
உறுதி ஊர்தியுட னேமு னைந்துஅமர்செய்;
அன்றி, உன்கதைகொடு ஊடு;அலால்
சறுகி ஒடு"கென வேசி னந்து,எதிரத்-
தத்தி, மொய்ம்பில்அடி வைத்தனன்;
அறிக என்றுதடி பற்ற வேநடுவில்
அத்தம் ஒன்றியக தாயுதம் 87

அத்தம் உற்றமுறி கதையை மன்மகன்அ-
டர்ந்து மெல்லெனஉ தைக்கவே
மொத்த மானஇடி போல்இ ரைந்துஉறும்முன்
முடுகி நின்றுமுறி கதையினால்

---

85 சங்கவாரி - சங்குகள நிறைந்த கடல; அங்கி - தீ, எயிறு அதுக்கி - பற்கடித்து, ஏமன் - எமன், நீட்டல் விகாரம

86. திருகி - (படைகளை விட்டு என்பால) திரும்பி, கறுத்து - சினந்து; அன்று - அபபோது, மோலி - கிரீடம், நீற - பொடியாக, மேகவண்ணனும் எழுமபியே மகுடத்திலே பற்பம்உற அடிக்க, மோலி;நீற அரசன்குமாரன் அஞ்சிலான என்பது முடிபு.

87 பதசாரி - கால்நடையனாச இருப்பவன, ஊர்தி இல்லாதவன, ஊடு - போர்புரி; அத்தம் - கை.

சத்து வத்தினொடு தாங்க வும்தவிட-
தாய்நொ றுங்கியதுஇ ரண்டுமே;
"மத்த கேசரிஎ னச்சி னந்தமர்செய்-
வம்பன்" என்றனன்மன் விம்மிதன். 88

ஆயுதம்பழுது போய்,நி ராயுதனும்
ஆகி, ஓர்தருவை வேரொடும்
ஓயில் வெஞ்சினமொ டேபி டுங்கி,எதிர்
ஓச்ச, ஓர்கணையில் நீற்றினன்;
சாயல் இன்றிஉய ரும்பெ ரும்கிரித-
னைப்பி டுங்கிஎதிர் ஓச்சினான்;
தேயு முன்புஉலவு பஞ்ச தென்னஒரு
செஞ்ச ரத்துஅடலை ஆக்கினான். 89

கறுவி அந்தரம தாய்எ ழும்பி,அக-
லத்தில் அங்கிரிஉ தைத்தனன்;
சறுகி லாதுஇருப தத்தை யும்கைகொடு,
தான . . . . . விசை யாகவே,
கிறுகிறு என்றுசுழ லச்சு ழற்றி,இகல்
கிட்டி நின்றசுக லீலன்மேல்
உறுதி மைந்தினொடு தைக்க வேஉணர்வுஅ-
ழிந்துஅ யர்ந்தனர்கள் உபயரும். 90

மதக யத்திரளி லேஅ டர்ந்துவரும்
வலிய கேசரியை நிகரதாய்,
கதிவ யப்புரவி ரதம்ந டத்தி,மிகு
கதழ்வி னோடும்ஒரு கணைதொடுத்து,
அதிசு வேதன்முடி தள்ளி,ஓர்கணையில்
அணிவி றல்துவசம் நறுக்கியே,
முதிய பாகனொடு துரக தத்தலைமு-
ரித்த னன்சரம்அது ஐந்தினால். 91

---

88. முறி - சிறந்த வெண்கலம்; உதைசுக - செலுத்த, மத்த - களிப்புமிகுக; கேசரி - சிங்கம்.
89. தரு - மரம், ஒய்இல் - நீராத, ஒய்தல என்பதன் சுடைக்குறை; தேயு - தீ, அடலை - சாம்பல.
90. அகலம் - மார்பு; அங்கிரி - கால், சிறுகிலாது - நழுவவிடாமல்.
91. முதிய பாகன என்றது தேரோட்டும் கலையில் முதிர்ச்சிபெற்ற என்ற பொருளில.

"தறுக ணான்இனிஇ ருக்கி லாதுஒருச-
ரத்தி னால்முடித நிப்பன்"என்று
உரைசெ யாமுனம்இ றக்கினான்;கடுக
வுஞ்ச யந்தனம்ந டத்தினான்;
கருது முன்பில்அநு சாளு வன்தனது
ககன மானசது ரங்கமும்
செறுவு கொண்டு,அழிவு செய்து,அ றுத்து,இடறு
செங்க ளத்தியல்பு கண்டனன். 92

காலன் சூலன்நிக ரான வாளிகனல்
மாரி யாகவரு ஷித்ததால்
சால வேகசர தம்ப தாதிதுர-
கங்கள் துண்டமுண் டங்களாய்
மேலு மேமலைகள் மலைக ளான;கறை
வெள்ள மாய்அருவி ஓடலால்
கோல மானசுழி யூடுஎ ழுந்துமனு,
குஞ்ச ரம்,புரவி கூடவே, 93

அக்கு ரோணிஒரு மூன்றுஅ ழிந்தஅநு
சாளு வன்கணையில் அக்கணம்;
தக்க போர்வலிமை கண்டு, "நில்லு;அநு
சாளு வாஉனது வாய்கறை
கக்க வே,உடல்பி ளப்பன்" என்றுபதி-
னாறு காய்கணைஉ டற்றினான்;
மக்க அக்கணைத தித்து விட்டு,ஐஇரு
வாளி தொட்டவய மீளியே 94

சரமது ஒன்றுமுடி தள்ள, மற்றும்ஒரு
சரம்அ றுத்தசிலை; பாகனைச்
சிரம்அ றுத்ததுஒரு வாளி; வெம்புரவி
சிரம்அ றுத்ததுஇரு வாளிதாம்;

---

92. தறுகணான் - எதற்கும் அஞ்சாதவன்; சயந்தனம - தேர், ககனம - ஆகாயம், படையின் விரிவிறகு உவமை; செறுவு - கொலைவெறி.

93. வருஷித்தல - பொழிதல, கறை - இரத்தம், மனு - மனித (உடல்கள்) ; குஞ்சரம் - யானை(யின் உடல்கள்)

94. வயமீளி - வலிமை மிக்க அரசன், அநுசாளுவன்.

பிரம ணத்துசம்அ றுத்தது ஒன்று;இரத
பீடம் அறுத்ததுஇரு ஆசுகம்;
உரமது உற்றுஅறைய வாளி ரெண்டு,வெகு
ளுற்று வேறுஇரதம் ஏறினான். 95

இரதம் ஏறி,வில்வ ணக்கும் முன்பதுஇவன்
இருபது ஆசுகம்உ டற்றியே,
புரவி பாகுஇரதம் துவசம் விற்கவச-
மும்பி ளந்து,அரிபி ளந்து;மொய்ம்பு
உரம்மு கம்,களம்று தல்பி ளந்துறஉ-
றுக்கி னான்;உடல்து ணிக்கவே,
பொருவி லான்மதிம யங்கி, அங்கிவிழி
பொழிய வேறுஇரதம் ஏறியே, 96

குனிவில் நாணில்அறு நான்கு வாளிகுழை
தழுவ வே,கைவிசை கொண்டுஉக
அனில வேகமொடுஉ தைக்க வாளிஅறு-
சாளு வன்சொரியும் ஏவுஎலாம்
கனலின் மேவுசரு காய்எ ரித்த;துச
கம்பம், வெம்புரவி, பாகு,தேர்
முனிஅ றுத்துமரு மம்,பு யம்,குளமும்
உருவி ஓடியது கடுகியே. 97

கைஅ யர்ந்துஒழுகு சோரி வெள்ளமது
கடம்ம றைக்கஉணர்வு இன்றியே
மெய்அ யர்ந்து.பினு மேதெ ளிந்து,வரி
வில்கொடு ஓர்இரதம் ஏறியே,
பைஇ சைந்தபட நாக ஏர்மணிப-
ரித்த பூமகள்நெ ளிக்கவே
செய்ய வெங்கணைப னித்த னன்பு(வி)தி-
கைக்க உம்பர்கள் நகைக்கவே. 98

---

95 பிரமணை - சுழல்கினற (காற்றில்பறக்கும்) , துசம - கொடி, வெகுளூற்று- சினந்து.

96. அரி - சக்கரம, மொய்ம்பு - தோள், உரம - மாபு

97. குனிவில - வளைநத வில், வினைத்தொகை, குழை - செவி, உசு அனிலம - ஊழிக்காறறு; முனி - வில

98. கடம - உடல், பரிதத - சுமந்த; பூமகள - நிலம், புவி - உலகில் வாழும மக்கள்

அம்ப ரம்புலிகள் அம்ப ரம்திசையும்
அம்ப தால்இவன் அடைக்கவே,
செம்பின் வெத்துவச வன்சி னந்து,பல
செஞ்ச ரங்கள்மழை வீசியே,
வெம்பஅ ரும்சருகில் எரிப ரந்ததுஎன-
வேஅ றுக்கமிக வாளியே
கம்பு யற்குஇணைப னித்துஅ வையொருக-
ணத்தி லேஇவன்நொ றுக்கினான். 99

உபய மேகம்நிகர் உபய ரும்சரம்உ
டற்றி னார்ஒருமு குர்த்தமே;
சபல மானஅநு சாளு வன்விரச-
தாய்ஐ ஆறுகணை மிஞ்சவிட்டு,
அபயன் ஆனஅர சன்கு மாரன்இர-
தங்கள் பாகுபரி துவசமும்
சொபித மார்புபுயம் நுதல்பி ளந்துகன
சோபம் உற்றுஉறநொ றுக்கினான். 100

மதிஅ ழிந்து,புவி மிசைவி ழுந்து,உயிரும்
மாறி, மீண்டுபசு வந்துஎழுந்து,
அதிக கோபவிழி சுழல்ள றிந்து,இருகண்
அங்கி பெய்ய,வய சிங்கம்நேர்
முதிய தேர்அதனில் ஏறி, வாகைவரி
முனிவ ளைத்து,நுதல் மொய்ம்புஉரம்
பதிய, ஐந்துகணை கண்ட மீதுகுதி
பண்ணி னான்அழல்செய் கண்ணினான். 101

சரமது ஐந்துஉருவ, நிலைய ழிந்து,தடு
மாறி யே,உணர்வு மாறியே,
இரத மெல்அணையி லேவி ழுந்தளவில்
இரதம் மாதவன்ந டத்தியே,

---

99. அமபரம் - 1. ஆகாயம் 2. சுடல், செமபின வெந துவசவன் - தாம்பிரதுவசன், வெம்பு - வாடியுள்ள, சுமபுயல - நீரால் நிறைந்த மேகம், மூன்றன் தொகை, நீருண்டமேகம் எனினுமாம்.

100. முகூர்த்தம் - மூன்றே முக்கால நாழிகைபொழுது, தொண்ணூறு நிமிடங்கள்; அபயன் - அசசம இலலாதவன், சொபித - சோபித, அழகிய, குறுக்கல் விகாரம் எதுகை நோகுகியது. 101 பசு-உயிர், கண்டம் - சுழுத்து.

மருவு வில்குணம்இ சைக்கும் முன்பனிரு
வாளி வீசி,நுதல் மார்புமே.
உருவி ஓட,மதி உணர்வு மங்கிட,உ-
றுக்கி னான்துவச உதும்பரன். 102

மத்த கங்கள்மரு மத்தில் வாளிசெலும்
வழிசெந் நீர்ஒழுக அருவிநேர்,
சத்தி கெட்டு,உணர்வுஅ ழிந்து, மொய்ம்புநிலை
தற்ப லம்,குறைய நின்றதால்,
புத்தி ..... எந்த னுக்குமிடை
பொதுவா தாகஇரு பொதுவனே
அத்தி ரம்கையில்ஏ டுக்கில் அப்பொழுதுஅ-
றிந்து பார்எனஅ துக்கியே, 103

உள்ள ரூபம்எனது உள்ள மீதுதளை-
யுண்டி ருந்து,ஒருவன் வாரமாம்
கள்ள ரூபமதுஒ ழித்திடு; அல்லதுக-
ணத்தில் இவ்வுருஒ ழிப்பன்யான்;
புள்ளு ரூபம்மிசை வரினும் வாள்கதைவில்
பொற்புஇ ருஞ்சுடர்எ டுக்கினும்
அள்ளின் முப்பெயர்கள் அமர்எ திர்த்திடினும்
அஞ்ச வென்றிடுவன் மிஞ்சியே” 104

என்றுஉ ரைத்துஉயர்ர தத்தை யேகடவி
இடிவெ டிக்குரல்மு ழக்கியே
நின்ற வீரியன்மு னேச யந்தனம்நெ-
ருக்கி யேஅமிர்தன்” நெடியன்மெய்
இன்றுஅ லக்கண்உற வேசெய் தாய்கொடியை”
என்று, வில்லினைவ ணக்கியே,
கன்றி, நாலுபனி ரெண்டு வாளிகன-
லேசொ ரிந்திடவி டுத்தனன். 105

---

102. வில்குணம இசைததல் - நாண் ஒலி செயதல்; பனிரு - பன்னிரண்டு; துவசஉதும்பரன் -தாமபிரததுவசன், உதும்பரம - செம்பு.

103. அருவிநேர செந்நீர் ஒழுக என இயையும், தற்பலம் - தன்னுடைய வலிமை, பொதுவன் - ஆயர் குலத்தவன், சனனன்.

104. ஒருவன் வாரம் - ஒருதலைப்படசம்; இருஞுடராவன- சூரியன் போனற சுதர்ஸன சகரமும், சந்திரனைப் போன்ற சஙகும், பாஞ்சசந்தியம், அள்ளின் - நெருஙகியுள்ள, முபபெயா - அயன், அரி, அரன். 105 சயந்தனம் - தேர், கன்றி - சினஙகொண்டு

ஒன்று மாமுடிஉ ருட்ட, ஒன்றுவில்ஒ-
டிக்க, ஒன்றுகொடி தள்ளவே,
ஒன்று பாகன்முடி தள்ள, நாலுகணை
உன்னி யின்தலைஅ றுக்கவே,
ஒன்று வாகினைஒ ழிக்க, ஒன்றுமரு-
மத்தின் ஊடுருவ, ஒண்களம்
ஒன்று பாய,நுதல் ஒன்று பாய,ரதம்
உடைய நாலுகணை உடற்றினான். 106

முடிஅ ழிந்து,இவுளி முடிஅ ழிந்து,கரம்
முனிஅ ழிந்து,உருள்கள் இரதமும்
கொடிஅ ழிந்து,நுதல் களம்உ ரங்களிடை
கோல்நு ழைந்துஉருவி ஓடலால்
அடல்கு லைந்தும்மதி கதிஅ ழிந்தும்மனம்
அஞ்சி டாது,சினம் மிஞ்சியே,
கடுகி மற்றோர்இர தத்தி லேறி,ஒரு
கடிய வெஞ்சிலைவ ணக்கினான். 107

சிலைவ ணக்கும்முனம் இவன்வெ குண்டுஐஇரு
செஞ்சி லீமுகம்உ டற்றியே,
மலைநி கர்த்தஇர தம்ப தாகைகொடு-
மரம்உ ரப்பரியும் வலவனும்
நிலைகு லைந்தளவில், விழிசி வந்து,எயிறு
நெறுநெ றென்றுஉற அதுக்கியே,
உலைவில் மற்றொர்இர தத்தில் ஏறியும்உ-
றுக்கி யேதனுவ ணக்கியே. 108

நால்இ ரண்டுகணை யால்உ ருள்துசம்ந-
றுக்கி வெஞ்சிலைந றுக்கியே,
மேலு மேமுடிஇ றக்கி மாவலவன்
மிக்க சென்னியும் உ ருட்டினான்

---

106. உன்னி - குதிரை, வாகு - கை

107. இவுளி - குதிரை, கோல - அம்பு, அடல - வலிமை; மதிகதி - அறிவும் இயக்கமும், உம்மைத்தொகை.

108. சிலீமுகம - அம்பு, பதாகை - கொடி, கொடுமரம - வில், உர - வலிமை மிக்க; தனு - வில்; அரி - பகைவன்

ஆல காலம்என வேவெ ருண்டு,அமிர்தன்
அடலின் வேறுஇரதம் ஏறி,வில்
கோலும் நாலும்இரு நாலும் உடற்றிஅரி
கொடும ரங்களும்மு றித்தனன். 109

பாகு தேர்சிலைஇ ழந்து, உதும்பரன்ப
தாகை மாவையும்இ ழந்து,ஒரு
நாகம் அன்னஇர தத்தில் ஏறி,முனி
நன்க ரந்தனில்ல டுக்கும்முன்,
வேக மோடுஒருபது ஆசு கத்துஇரதம்
வில்ப தாகையும்ந றுக்கினான்;
வாகில் இந்தவித மாஇ ஆறுஇரதம்
அவன்கொ டும்சிலையில் மாற்றினான். 110

கண்சி வந்து,இதழ்அ துக்கி, வேகமொடு
கடிய தோர்இரதம் ஏறியே,
பண்சி றந்தசிலை யேவ ணக்கி,எழு
பாணம் அங்குஅவன் உடற்றினான்;
திண்சி றந்தஉரம் வாகு கந்தநுதல்
சென்னி வெஞ்சிலைஇ லக்கதாய்,
விண்பி ளந்துவரும் இடிமு ழக்கினில்,வி-
ரைந்துஇ ரைந்துஅணுகும் மேலின்மேல். 111

வீர சூரன்அமிர் தன்சினந்துகழை
வில்லின் மாரிபொழி செல்லைநேர்
ஆர வாரமுட னேவி டுத்தகணை
யாவும் நீறுஎழஎ ரித்துஅடர்ந்து
ஓர வாரம்உடை யான்உ ரம்புயமும்
ஒண்க ளம்குளமு டன்சிரம்
பூரி வாகம்முறி யப்பி ளந்தது;உயர்
பூபன் மெல்லணையில் வீழ்ந்தனன். 112

---

110. உதுமபரன - தாம்பிரத்துசன்; நாகம - மலை; ஆசுகதது - அம்புகளால்.

112. களம் - கழுத்து; குளம் - நெறறி. பூரி வாகம் - உயர்ந்துஎழுந்த தோள்கள், வினைத்தொகை. பூபன் - அம்ருதத்துசன்.

நீதி யாதிபதி யேஅ யர்ந்துவிழ
நிகரில் பத்ரகிரி யாதிபன்
பூத நாதன்நிகர் ஆக வேகமொடு
புங்க மாரிபல சங்கமாய்ச்
சீத மாரிநிகர் ஆக வீசிஉல-
கம்தி சாமுகம்வின் எங்கணும்
போத வாளியில்அ டைத்து .....புரி-
சைக்குள் உட்புகஅ டைத்தனன். 113

தாவு தேர்இடம்வ லங்கள் போவதுஅரி-
தாய்அ டைத்தசர ஓதையுள்
மேவி லாதபரி சத்து சன்குமரன்
வெகுளி யாகிஒரு நிமிஷமே
தாவு வாளிமழை யால்எ ரித்துஅவைகள்
தூள்ப டுத்திஒரு நூறுகோல்
வாவி வீசஒரு நூறு கோவில்இவன்
மாற்ற ஆசுகம்முந் நாலினால், 114

தத்து தேர்கொடிவில் பாகும் அச்சும்உருள்
சயிந்த வங்கள்பொடி ஆக்கியே,
அத்ரம் ஆறுமரு மத்திலேயுறஅ-
ழுத்தி னான்;அயர்தி உற்றுஅவன்
புத்தி வந்து,சது வாளி நெஞ்சிடைபு
கத்தொ டுத்தனன்;மி குத்துஇவன்
சத்தி யானகணை மாரி வீசஅது
தான்எ ரிந்துறம றைந்ததே. 115

மரும மீதில்உர வாளி பட்டுருவ
வாயி னில்கறைகள் கக்கியே,
இரத மீதுஉணர்வ ழிந்து வீழ்ந்தனள்;இ-
வாறு போர்இவண்நி கழ்ந்திட

---

113 பதரகிரியாதிபன் - எமனாசுரன். பூதநாதன் - சிவபிரான்; புங்கம் - அம்பு; சங்கம்- கூட்டம்; புரிசை - மதில், கோட்டை.

114. பரிசத்துசன் குமரன் - தாம்பிரத்துசன்.

115. சயிந்தவம் - குதிரை; அதரம் - அஸ்த்ரம். அம்பு

துரமு லாவுதிறல் மந்த்ரி யாகியசு-
பத்தி வீசுதொடை மாரியால்
பரிப தாதிகரி அரிகள் நீறுபொடி
பட்ட தேஅணிகள் கெட்டதே. 116

அணிகு லைந்துஉடைய வேசி னந்துகன-
கத்து சன்கடவி அரிகொடே,
மணிவ ளம்பதிம னவன்அ மைச்சன்எதிர்
வந்து, வெஞ்சிலைவ ணக்கியே,
கணித மின்றிவிசை யாக வீசுகணை
மாரி மிக்க ... .த்துஅடல்
துணிவின் நின்றளவில், இவன்வெ குண்டு,தொடை
தூவி, யாவையும்அ றுத்தனன். 117

தனது தேர்துகள்ப டச்சி னந்துஒருபது
ஆறு கோல்அவன்உ டற்றியே,
முனிது சம்புரவி அச்சும் அச்சுருள்மு-
றித்து, வில்முடிக ழற்றியே,
வினைய வச்ரகவ சம்பி ளந்துஉரமு-
மேபி ளந்தனன்வெ குண்டுஇவன்
கனம காஇரத மீதில் ஏறி,ஒரு
கார்மு கந்தனைவ ணக்கியே, 118

தத்தும் மாவின்முடி தத்த, வல்லஇர
தத்தி னோடுதுவ சத்தையே
பத்து வாளியில்அ றுத்து, வச்சிரப-
ரத்தை ஓர்கணையில் எற்றியே,
மத்த கத்துஇருபு யத்தில் உற்றமரு-
மத்தில் வாய்குமிழ்சி ரத்திலும்
அத்தி ரங்கள்இரு பத்தி நாலினைஅ
தம்பு றம்சொருக வீசினான். 119

---

116. துரம்உலாவு - பொறுப்புணர்ச்சி மிக்க; தொடை - அம்பு, அரி - தேர்.

117. கனகத்துசன் - அமைச்சர்களுள் ஒருவனாகிய தமனியத்துசன். அரிகொடேகடவி என இயையும்; நூவி - செலுத்தி.

118. வில்முடி - ஒளிவீசுகின்ற கிரீடம், வினைத்தொகை; வினைய - தொழில் நுடபம் மிக்க, கார்முகம - வில

119. பரம் - கேடயம்; குமிழ் - நாசி.

இடியை நேர்கொடிய வாளி ஊடுருவ
இரணி யத்துசன்இ றந்ததால்,
படிநல் நூல்தெரிஅ மைச்ச ரானஅறு
பத்து நால்வரும்நெ ருங்கியே,
கடுகி வெஞ்சிலைவ ணக்கி யேபகழி
காள மேகம்நிகர் வீசினார்;
திடம தாய்இவன்கை தனு(வில்) மிக்கவர
திவ்வி யக்கணைகள் ஏவியே, 120

வரைவி லாதுஅவர்தொ டுத்த வெம்பகழி
மாரி யாவையும்அ றுத்தறுத்து,
இரத பாகுதுர கம்ப தாகைசிலை
இடறி யே,அரிகள் மெய்எலாம்
சரம்இ சைந்தசர பஞ்ச ரங்கள்நிகர்
தான்நி றைக்கமத மத்தைமுள்
பொருவ அம்புகள்அ கம்பு றம்செறிஉ-
ரம்ப டைத்தனர் யாருமே. 121

மதிஅ மைச்சர்அறு பத்து நால்வரும்ம
யங்கி யேமிகஅ யர்ந்ததால்,
சதுவ கைப்பிரள யத்த ளங்கள்அவ
சத்த மோடுதறி கெட்டதால்;
இதுஅ றிந்துபரி சத்து சன்குமரன்
இரதம் விட்டுஇவனை எய்தியே
கொதிகொ தித்து,"நில்அ டா!"எ னக்கொடுமை-
ரம்கு ழைத்துஉறநெ ருங்கினான். 122

---

120. இரணியத்துசன் - தமனியத்துசன், திவ்விய வரக் கணைகள் என மாறுக, அன்றி வர பலத்தாற்பெற்ற திவ்வியக் கணைகள் எனினுமாம்.

121. பகழி - அம்பு; அரிகள் - பகைவர், சரபஞ்சரம் - அம்புகூடு; மத மத்தை - மயக்கத்தை உண்டாக்குகின்ற ஊமத்தை, இரண்டன் உருபுமபயனும் உடன்தொக்கதொகை, தலைக்குறை, உரம் - மார்பு, அம்புகள் ஊடுருவிச செறிந்துள்ளமார்புக்கு முன் நிறைந்த ஊமத்தங்காய் உவமையாயிறறு.

122. பிரளயம் - வெள்ளம், ஒருபேர்எண, 10 [55]; தறிகெட்டதால் என்பழி ஆல் அசைநிலை; இவனை என்றது சுபத்தியை.

"மதிஇ லாதமகி பாஅ மைச்சன்முனம்
வந்தது எந்தமதி? மந்த்ரிமார்
அதிக மாகஇன மேஇ ருந்திடில்அ-
னுப்பி டாது,என்முனம் அணுகினாய்;
விதம தாகஎனை வெலின்உ மக்குஅதொரு
வீறும் அல்ல;உனை நான்வெலில்
அதுஉ னக்கு(ஒர்)அப கீர்த்தி; நாளும்ஒழி-
யாது; நன்று;உனைவி டேன்நிசம்." 123

(தனன தனனதந்த தனன தனனதந்த
தனன தனன தந்தனா)

எனவும் இவன்இயம்பும் மொழிசெ வியில்நுழைந்தது
எதிர்கொள் கதிர்நு ழைந்ததாய்;
மனதுள் அழல்பரந்த;விழிகள் அழல்சொரிந்த;
வளைவி லதுவ ளைந்தகோடு
அனவும் நிமிர்தல்இன்றி அடைம ழைகள்சொரிந்த;
அலகில் தொகைமி குந்தகோல்
வினய முடன்உதைந்த பொழுதில் இவன்வெகுண்டு,
விலகி, மிகுச ரங்களால் 124

அவனில் எழுமடங்கு சரம்அ டவின்உதைந்து,
அவனி திசைகள் அண்டமே
குவடு திரைஅடங்க இடம தறமிடைந்து
கொளவும் மிகநி றைந்துதேர்
இவுளி வலவன்மஞ்சு உருள்இ ரதம்அடங்க
இடறி எறுழ்ச ரங்களால்
துவச மதுபிளந்து, கவச மதுபிளந்து,
தொடைகள் உடல்நி றைந்ததே. 125

---

123. மதி - அறிவு; மகிபா - மன்னா; வீறு - பெருமை, அபகீர்த்தி - வசை.

124. கதிர் - நாராசம்; விலது - வில்+அது, பகுதிப்பொருள்விகுதி.

125. அடவின் - வலிமையோடு; அவனி - நிலஉலகம், அண்டம் - வானம்; குவடு - மலைகள், திரை -கடல்கள், எறுழ் - வலிமைமிக்க.

இரத மதுநொறுங்க மெயினில் உறுசரங்க-
ளினில்(நன்) மதிக லங்கியே,
தரையில் மிகஅயர்ந்து, சதுக டிகைபின்நொந்த
தளர்வு தெளிவு வந்துவேறு
இரத மதனில்உந்தி, ஒருகை சிலைதெரிந்து,
இலகும் அறுபது அம்புதான்
உரம்நு தலும்முகங்கள் பதிய விடவும்,மந்த்ரி
உணர்வது அறம யங்கினான். 126

மணிந கரின்மன்மந்த்ரி அயர்தி யொடுவிழுந்த
அளவில், மனது வெஞ்சமே
கணித மதில்மிகுந்து, கதிர்ம தலைசுதன்செல்
கனவி சைகள்மி குந்துதேர்
துணிவி னுடன்நெருங்கி, நெடிய சிலைவளைந்து,
சொரிசெய் திருச ரங்களால்
மணிம குடம்நொறுங்கி, விறல்க வசம்அழிந்து,
வலுவுஇ ரதம்அ ழிந்ததே. 127

இரத மதுபிளந்த பொழுதில் மறுகொடிஞ்சி-
யினில்இ சையஇ ருந்துபூ
தரமது அனையசிந்து வளைமுன் இவன்உதைந்த
சரம்இ டற,அ ழிந்ததேர்
உரிய சிலைதுசங்கள்; ஒழிய, மறுகிநெஞ்சம்
உலைய, மறுகொ டிஞ்சிமேல்
வருமுன் அதும்அழிந்த மருவு கனன்அருஞ்சொல்
வலிதின் விடுச ரங்களால். 128

மறுகி மறுகொடிஞ்சி வருமுன் இவன்வெகுண்டு
வளைவில் உதைச ரங்களால்
முறிய இரதம்அஞ்சு சிலையும் ஒழிய,நொந்து,
முடுக மறுர தம்கொடே,

---

126. சதுசுடிசை - நான்கு நாழிகை. மந்தரி - சுபததி.

127. கதிர்மதலைசுதன் - கன்னன் மகன். விடகீதனன்.

128. கொடிஞ்சி - தேர், பூதரம் - மலை, அது - பகுதிப்பொருள் விகுதி. சிந்து - வில, சிந்துவாரம் என்பதன் குறை, சொல் - புகழ், இங்குப் புகழுக்குக் காரணனான விடகீதனனை உணர்ததிறறு, இவன்ததை எனநோற்றான் கொல் எனும் சொல் என்னும் பொய்யாமொழியை நினைநது கூறியது.

கறுவி வருமுன்,ஐந்து கணையில் அரிபிளந்து
களைய மிகுக தங்களாய்
இறைவன் அறுபதஞ்சு இரதம் முனிஇழந்து
இருகண் அழல்சொ ரிந்துமேல், 129

ஒருகை சிலைதெரிந்து, ஒருஇ ரதமதுஉந்தி,
ஒருப திருப தைந்துகோல்
கரவி ரசின்உதைந்த உடன்,அது; அழல்சொரிந்து,
ககன இடிமு கங்கள்நேர்
உரம துடன்நெருங்க, இவனும் மிகுசரங்கள்
உதைசெய்து, அதுஅ டங்கவே,
விரைவின் அதுபிளந்து, வரும்வ லமையறிந்து,
விரகின் மதிதெ ளிந்துமேல் 130

பிரம சரம்இசைந்த மறையின் முறைபகர்ந்து,
பெருக இசைமிகுந்த துஓர்
தருக அதில்உதைந்து விடவும், அதுவெகுண்டு
சரம்மு ழுதும்இ டந்துதேர்
உருளின் இடைபுகுந்து உகஇ றுதிமடங்கல்
உரம தனில்மி குந்ததாய்
அரிகொ டதுஎழுந்து முகட ளவும்உயர்ந்த
அவதி யொடுது றந்ததே. 131

ககன முகடுஅதுங்க, விகட முடன்அறைந்து,
கடிது சுழல்க றங்குநேர்,
மிகவும் அவிர்விரென்று விரைவி னொடுசுழன்று,
விபுதர் நடுந டுங்கவே,
முகில்க 'ளதுபயந்து குகைகள் தொறும்மயங்க,
முதிரும் விசைத விர்ந்திடாது,
அகியின் முடிசுமந்த உலகு நிலைகலங்க,
அவனி மிசைவி ழுந்ததே. 132

---

129. அஞ்சு - ஐந்து, பேசுவழக்கு, அரி - தேர்; சுதம் - சினம்; அறுபது அஞ்சு - அறுபதும் அஞ்சும், உம்மைத்தொகை; முனி -வில்

131. பிரமசரம் - பிரமாத்திரம்; மறை - மந்திரம், தருகம் - வில் என்ற பொருளில் ஆள்கிறார் போலும், மடங்கல் - ஊழித்தீ, உரம் - வேகம்; அரி - தேர், அவதி -எல்லை.

132. அதுங்க - குழிவிழுமாறு, விபுதர் - தேவர், அகி - பாம்பு, அவனிமிசை - நிலத்தில்.

இரதம் நொறுநொறுங்கி வலவ னொடுதுரங்கம்
எவையும் நசுந சுங்கவே
உரவன் மதிமயங்கி உடலில் கனல்கலந்து
உணர்வது அறஅ யர்ந்ததால்
விரகன் இதயதந்த்ரி வினையை அமர்ஒழிந்து
விலக எதிர்த ளங்கள்தான்
ஒருவர் எதிர்வதன்றி மிகவும் அலமலந்து
உடல்கள் நடுந டுங்கினார். 133

விசைய மகிபன்உண்டை அதனில் உறுதளங்கள்
விருதி னுடன்மு ழங்கினார்;
துசம துரியசெம்பி னுரவன் நிலைஅயர்ந்த
துயர்க ளதுவி லங்கவே
நிசியின் இரவில்ஐந்து கடிகை யதுகழிந்து
நிருபன் மதிஉ ணர்ந்துமேல்
விசிக மதுதெரிந்து சிலைக ளவைதெரிந்து
வெகுளி யொடுமு ழங்கியே, 134

அலகில் மிகுரதங்கள் அடர்ந்து உறநெருங்க;
அவனும் ஒருகொ டிஞ்சிமேல்
கலக முடன்அடைந்து, சமர்வ லமைபகர்ந்து,
கடுகி உறநெ ருங்கவே,
உலக முழுதளந்த வலவன் மகன்முனைந்து,
"உனைவி டுவதுஇல்" என்றுதேர்
வலவன் விட,மடங்கல் உரசி னொடுசரங்கள்
மழையை நிகர்பொ ழிந்ததால் 135

அளவ தறுசரங்கள் அவனும் விடஇரண்டு(என்)
அதிபர் விடுக கங்கள்தான்
வளமை உறுசரங்கள் முழுதும் அடல்மலைத்த;
மலைகள் நிலைகு லைந்ததால்;

---

133. துரங்கம் - குதிரை; விரகின் - சாமார்த்தியமுள்ள, தந்த்ரி - அமைச்சன்.
134. உண்டை - படை வகுப்பு, துசமது உரிய செம்பின் உரவன் - தாம்பிரததுசனாகிய வீரன்; கடிகை - நாழிகை.
135. அபரம் - பின்பகுதி, உலக முழுதளந்த வலவன் - கண்ணன்,மகன் - பிரத்யும்நன்

உளதும் எரிபரந்த; திசைகள் எரிபரந்த;
உததி அளறுஎ ழுந்த;கீழ்
களப னகபுரங்கள் உழுது சிலதிரிந்த;
ககன மதிம யங்கவே. 136

எரிகள் புகைபரந்த; திரிபு வனம்அடங்க
எவரும் நடுந டுங்கவே,
அரவம் முடிநெரிந்து வயிறது அளைவுகொண்ட;
அரிது விடம்உ மிழ்ந்தவே;
கரிகள் அலறிநின்ற; கிரிகள் அலமலந்த;
ககன முகடு விண்டவே;
சரம தொடுசரங்கள் முனைக ளொடுபிணைந்து
சமர்செய் திடுவி தங்களால். 137

சிலது சிறகரிந்த; சிலது முனைபிளந்த;
சிலது நடுஇ டந்த;கூர்
அலகு சிலபிளந்த; குறைகள் சிலபிளந்த;
அடிகள் சிலபி ளந்த;கோல்
வலிகள் சிலபிளந்த; மதுகை யுடன்மலைந்த
வலிய கயலி னங்கள்நேர்
மெலிவில் தகர்குறும்புள் குருகு நரையினங்கள்
விரவும் அமர்சி றந்ததே 138

இருவர் சிரம்நிறைந்தது; இருவர் நுதல்நிறைந்தது;
இருவர் முகம்நி றைந்தவால்;
இருவர் களம்நிறைந்தது; இருவர் புயம்நிறைந்தது;
இருவர் கரம்நி றைந்த;மேல்

---

136. ககம் - அம்பு; நிலைகுலைநததால் என்புழி ஆல் அசைநிலை;களை - இடமாகிய; பனகபுரம் - நாகலோகம், கீழ்க்களப் பனகபுரங்கள் என இருத்தறபாலது சந்தநோக்கி ஈரிடங்களில் வலலினமெய கெடடு நினறது.

137. திரிபுவனம் - மூவுலகம், அரவம் - பாம்பு, ஆதிசேஷன்; அளைவு- கலக்கம; கரி - (திசை) யானை; கிரி - (எடடுக்குல) மலைகள், சமர்செயதிடு விதஙகளால் பரந்த; அளைவுகொண்ட; உமிழ்ந்த, நின்ற; அலமலந்த, விண்ட என்பது முடி பு.

138. மதுகை - வீரம், மலைந்த - போரிடட, தகர் - ஆட்டுக்கடா;குறும்புள் - காடை; குருகு - சேவல, நரை - எருது.

இருவர் உரம்நிறைந்தது; இருவர் வயின்நிறைந்த;
இருவர் தலைநி றைந்த;கீழ்
இருவர் அவயவங்கள் உழுது சுமைநிறைந்தது
இருவர் விடுச ரங்களே. 139

இருவர் பரிஅழிந்தது, இருவர் துசம்அழிந்தது;
இருவ லவர்அ ழிந்தவாறு
இருவர் உருள்அழிந்தது; இருவர் ரதம்அழிந்தது;
இ(கலில்) உணர்வுஅ ழிந்துபார்
இருவர் களும்விழுந்தும் இருவர் களும்அயர்ந்தும்
இருவர் தெளிவு வந்துதேர்
இருவர் களும்இருந்து இகல்இ விதம்முயன்றது
எண்இரு முறைஅ யர்ந்ததே . 140

இறுதி முறைஅயர்ந்த பொழுதில் அரிசுதன்பின்
எழுக வலிகு றைந்ததால்,
மறலி எனஅதிர்ந்து தொனிசெய்து அடிமயங்க
அமர்செய் திடஅ டர்ந்ததால்,
எறுழின் வலிமுகுந்தன் உதவும் மதலைமைந்தன்
இருவி ழிகள்சி வந்துதேர்
உறுதி கொடுஉதைந்து சமரின் முடுகல்கண்டு
உரவன் மகன்இ யம்புவான் 141

"குதலை மொழிதிருந்தில் மதலை அமரில்வென்றி
கொளவும் நினைவு கொண்டதேன்?
அதவு கருவிதங்கள் மதமும் எனதுமுன்பில்
அடுவ திலை;அ றிந்துநீ
சிதைவின் உயிர்அழிந்து விடுமுன் விலகிடு;உந்தை
செருவில் உயிர்து றந்ததால்
உதையன் முனம்இமங்கள் பகைசெய்து எனபலன்கள்
உணர்தி" எனஇ யம்பினான். 142

---

139 நிறைநதவால் - ஆல் அசை; வயின் - வயிறு; விடுசரஙகளே என்னும் எழுவாய் தனித்தனியே நிறைநத்து என்பனவற்றைப் பயனிலையாகக் கொண்டு முடிநதது. சரஙகள்நிறைந்தது - சாதியொருமையாதலின் எணவழுவமைதி. கடைநிலைத்தீபக அணி;அளைமறிபாபபுப பொருள்கோள்

141. அரிசுதன் - பிரத்யும்நன், மறலி - இயமன், மைநதன் - பிரதயும்நன் மகனாகிய அநிருத்தன்; உரவன் மகன் - பரிசத்துசனின் மைந்தனாகிய தாமபிரத்துசன்.

142. அதவு - சொல்லப்படுகின்ற. உதையன் - சூரியன், இமம் - பனி.

(எழுசீர் ஆசிரிய விருத்தம்)

"எனைம திக்கில் ஆலம் வித்துஇ டித்துஉ டைக்கும் ஆலயம்;
உனையும் அத்தி றத்துஒ ழிப்பன் ஒழியும் நாள்உ னக்குஅதால்;
தனைம தித்துஇ சைத்த கல்ல தைத்த றிப்பது உளிகள்;பஞ்
சினைஅ ழித்தல் பொறிநெ ருப்புஎ னத்தெ ரிந்தி டாயொநீ? 143

சிமிலி யன்கை யதனில் உன்சி கழிகை இன்று குலைதல்காண்;
மமதை செம்புத் துவசம் வந்த வழிஉ னக்குஅது ஏது"என
விமித அம்புஓர் ஐந்துஎ டுத்து வில்லில் வைத்துஉ டற்றினான்;
குமுறி அங்கி சொரிய விண்இ டிக்கு லங்கள் ஒத்ததே. 144

வான்இ டிக்கு லங்கள் ஒத்த வாளி மீதில் வாளிவிட்டு
ஏன னுக்கு முன்பு மத்த கத்துஇ ருத்தி, ஏவுமூன்று
ஊன்அ டுக்கி டச்சி னந்து உறுக்கி வீர கர்ச்சனை
தான்இ சைத்து கணையில் வில்த றித்து மோலி தள்ளியே 145

வலவன் வாசி தலைஉ ருட்டி, வச்ர கம்ப துவசமும்
நிலைஅ ழித்து, ரதம்அ ழித்து, நெடிய தேகம் முழுதுமே
அலகி லாது கணைசொ ரிந்து அவய வம்தொ ளைத்தனன்;
மலைவில் மற்றுஓர் இரத மீது வாவி மேவி வைகியே, 146

கொடும ரம்கு ழைத்து வீசு கோல்கள் யாவும் மாற்றி,மூன்று
அடல்ச ரம்தொ டுத்து,மத்த கத்துஇ ருத்தி, ஆர்த்தனன்;
வடுஉ டைக்கொ டிக்கு ராசன் வாளி தைக்க மற்றுஇவன்
நெடிய சிந்து பொடிய மீதில் நிகரில் வாளி ஓச்சினான். 147

செங்கை வில்த கர்ந்து தாம்பி ரத்து சன்சி னந்து ஓர்வில்
அங்கை பற்றும் முன்பு,இ ராறு ஆசு கங்கள் வீசினான்;
துங்க மோலி, சிலை,ப தாகை, துரக தங்கள், இரதமும்
பங்க மாக நீறு நீறு பட்ட; பாகன் ஒக்கவே. 148

---

143. ஆலம் வித்து - ஆலவிதை 144. சிமிலி, சிகழிகை - குடுமி.
145. ஏனன் - ஏனையவன், மற்றவன்
147. வடுஉடைக் கொடிக்குராசன - தாம்பிரத்துசன்; வடு - செம்பு; சிந்து - வில், சிந்துவாரம் என்பதன் கடைகுறை.
148. இராறு - ஈராறு எனற்பாலது யாப்பு நோக்கிக் குறுகுகல் விகாரம் பெற்றது; பங்கமாக - பழுதடைய.

சினம்மி குந்துஓர் இரத மீது செம்பி னம்ப தாகையான்
முனிகு ழைத்து நான்கு வண்டு மொய்ம்பி னூடுஇ ருத்தினான்;
கனம்நி கர்த்துஇ வன்பின் வாளி கார்மு கத்தின் வீசியே,
தனுவில் மோலி தேர்ப தாகை தவிட தாய்நொ றுக்கியே 149

அரண மும்பி ளந்து, மெய்கள் அவய வம்து ரந்திட,
கிரண அம்புஇ னங்கள் மேனி கிளரும் மத்தை நிகரவே,
சரம யம்கொடு, உள்த ளர்ந்து, தான்அ யர்ந்து,ஒ டுங்கினான்;
இரண பண்டி தன்ப தாதி இனம்நொ றுங்க வீசினான். 150

அச்சு தன்கு மாரன் மைந்தன் அம்பு மாரி வீச லால்,
மச்சு உருள்கள் தேர்கள் பாகு மதக யங்கள் துரகதம்
மிச்ச மாம்ப தாதி யாவும், வெங்க ளங்கள் எங்கணும்,
பச்சி யாக வேப டிந்து,இ றந்து, அழிந்த பார்எலாம். 151

கண்ட கண்ட முண்ட மான கரிய தாதி துரகதம்
விண்டு விண்ட தெனஉ யர்ந்த வெம்பி ரேதம் இழிசெநீர்
மண்டும் உந்தி சுழிப ரந்த வாரி வெள்ளம் நீர்எனக்
கொண்டு மூளை நுரைய தாய்க்கொ ழுப்பு வண்டல் கொண்டதே. 152

ககனம் மூன்று(என்) அக்கு ரோணி கன்னல் மூன்றில் ஒழியவே,
தகைய தான தாம்பி ரத்து சன்தெ ளிந்து, தகனன்நேர்
இகலில் மாய்ந்த சேனை கண்டுள யிற்றை மென்று உறுக்கியே
புகல்வன், "நில்ல டா;த ளங்கள் பொருத வல்ல னாம்அடா! 153

ஆயன் மைந்தன் மைந்தன் என்று அறிகு வேன்;நீ சிறியன்என்று
ஏய்என் அங்கை தாழ்ந்தி ருந்த தேஅ றிந்தி டாமல்,வெய்-
தாய்,அ டர்ந்துஅ யர்ச்சி செய்து,என் அனிகம் மாள்வி னைசெய்தாய்;
தீய போர்ஏ னோடுஅ டர்ந்து செய்;தி ரும்பு" கென்றனன். 154

---

149. வண்டு - அம்பு; கனம் - மேகம்; கார் முகம் - வில்; தனுவில் - ஒரு பொருட் பன்மொழி.
150. அரணம் - கவசம், மத்தை - ஊமத்தங்காயை, இரணபண்டிதன் - போர்க்கலை வல்லுநன்; பதாதி - காவாட்படையினர்
152 விண்டு - முறிபட்டு, விண்டதுஎன - மலை போல, அதுபகுதிபபொருள் விகுதி; செநீர் - உதிரம்; உந்தி - பரந்த இடம்.
153. சுகனம் - படை; சுன்னல் - நாழிகை, தகனன் - அனைத்தையும்எரிபபவன், அதிருத்தன்.
154 ஆயன் - சுண்ணன்; அனிகம் - படை

"என்ன டாநீ அறியும் வாறு என்னை? உன்கை தாழ்வதுஏன்?
மன்னி உந்த னால்இ யன்ற மட்டு மேசெய் வன்சமர்;
பின்னை நீம டிந்தி டில்பி ழைக்க மார்க்கம் உள்ளதோ?"
என்ன வேவெ குண்டு தேரை இவன்ந டத்தி முடுகினான். 155

அவனும் மற்றுஓர் இரதம் ஏறி, அங்கை வில்கு னித்து,முன்
தவர்அ றுத்துஓர் கணையின், மோலி தத்த ஓர்ச ரம்தொடுத்து,
இவுளி பாகு தேர்ப தாகை இடறி எட்டு வாளியால்,
துவர்நி றத்த வாளி மூன்று தொண்டை மீதுஇ ருத்தினான். 156

வாய்இ ரத்த மேஉ மிழ்ந்து, மற்றுஓர் தேரில் ஏறியே,
காயும் யுத்த மேமு னைந்து, கடிய வில்வ ணக்கியே,
ஆயி ரம்ப னாயி ரம்ச தாயி ரம்பன் முறையதாய்,
மேய அற்பு தங்க ளாக, வீசி னான்மென் மேல்சரம். 157

கணிதம் இன்றுஅ வன்வி டுங்க ணைக்கு லங்கள் நீறவே,
இணையில் மாரி வாளி யால்ள ரித்து முச்ச கங்களும்,
தணிவி லாது நடுந டுங்கி டச்ச ரங்க ளால்அடைத்து,
அணி(கொள்) தாம்ப ரத்து சன்றன் அரியும் முற்றுஅ டைத்தனன். 158

(வண்ண விருத்தம்)
(தனனா தனனத் தனதந் தனனா
தனனா தனனத் தனதந் தனனா)

சரகூ டமதுட் படுஉதும் பரனார்
தறுகா மல்,உதட் டினைமென் றவனாய்,
விரகாய், ஒர்இமைப் பில்விடும் கணையால்
விறலோ டும்அறுத் துமுனைந் திடவே,
உரமாய் ஒருபத் துநெடுங் கணையால்
உரவோன் முடிதத் த,முரண் சிலையே
பொரிமா வைநிகர்க் க,ரதம் துசமே
பொடியா க,நறுக் கி,எறிந் தபினே, 159

---

155. மன்னி - (போரிலே) நிலைபெற்று நின்று
156. துவர்நிறத்த - சிவந்த
157. பனாயிரம் - பதினாயிரம், சதாயிரம - நூறு ஆயிரம்இலட்சம்.
158. முச்சகம் - மூவுலகம், அரி - பகைவன், அறிருத்தன்.
159. உதும்பரனார் - தாமபிரதுசன், தறுகாமல் - (முயற்சியில்) தடைபபடாமல்.

உரமீது உருவக் கணைஒன் பதினால்
உரமா கவிடுக் கமயங் கியும்ஓர்
அரிமீ துதரித் து,ஒருவெஞ் சிலையே
அடலோ டுவளைத் திடும்முன் இவனே
ஒரு கோல் விட,அச் சிலைதுண் டிடவே,
உரவோன் மகன்முப் பதிரண் டெனும்ஆர்
தருகூர் படைமுற் றும்எறிந் திடவே
தடைதான் அறவெட் டிஎறிந் தபினே, 160

பரிபா கு,முடித் தலைஅம் துசம்,ஆர்
பகர்தேர் ,உருள்,மச் சும்அறுந் திடவே
ஒருகோ லில்அறுத் து,முகங் களம்வாய்
உறநா லுவடிக் கணையும் தொடவே,
தரைமீ துகுதித் து,நடுங் கியுமே,
தடுமா றி,அலக் கண்மிகுந்து அவனே
விரைதேர் கள்வரத் தும்ஒழிந் ததனால்
மிடல்பா ணியினில் கதைகொண் டனனே. 161

பதசா ரியன்நிற் பதுஅறிந்து உறுபோர்
பணொணாது எனஇப் புவியின் கணிலே
மதசீ யம்எனக் குதிகொண்டு அசியே
வலியாய் பரிசைக் குள்ஒடுங் கும்மெய்யாய்
விதமார் கரடிச் சிரவிஞ் சையினால்
விரகால மதிஉத் திகொடுஅந் தரமாய்
அதிசூ ரர்கள்மிக் கநவங் களதாய்
அடலா கநடத் தினர்அம் களமேல். 162

அரியோடுஅரிஉற் றஅரும் சமர்போல்,
அலையோடு அலை,வெற் பொடுஅடும் கிரிநேர்,
கரிநீள் கரிஒத் த,மடங் கலொடே
கனவான் இடிஒத் த,கடுஞ் சமரால்

---

160 அரி - தோ; துணடிட - துண்டுபட.

161. முடிததலை அம் துசம் ஆர - தன் உச்சியில அழகிய கொடியைப்பொருந்தியுள்ள. துசமார் தோ. பகர் தேர் எனத் தனிததனி இயையும். அலக்கண் - துனபம். மிடல் - வலிமை மிக்க. பாணி - கை. கதை - தண்டு.

162. புவி - தரை. சீயம் - சிஙகம். அசி - போர்க்கருவி. வாள்,பரிசை - கேடயம்; மெயாய் - மெயயாய். உடலினராக,கரடிச்சிரவிஞ்சை - சிரக்கரடிவிஞ்சை என மாறுக. தலைமையானபோாக கருவிப் பயிற்சி

நிரைவா னவர்மொய்த் தனர்அந் தரமே;
நிலர்நா கர்நடுக் கம்மிகுந் தனரே;
உரவோன் மகன்மொத் தில்இவன் திறமாய்
ஒளிர்வா ளில்விலக் குவன்விஞ் சையினால். 163

உயர்ஏ தியில்வெட் டில்,அவன் கதையால்
உலவா துதடுத் துமுழங் கியும்,மெய்
அயரா து,இவிதத் தின்முயன் றிடுவார்
அதிவீ ரம்மிகுத் ததுரந் தரரே;
கயல்பா யல்எனக் குதிகொண் டிடுவார்
கறுவோ டுஇகலுற் றகுறும் புளதாய்
வெயர்வோடு உதிரப் ரளயங் களதாய்
மெய்எலாம் ஒழுகச் சமரங் கள்செய்வார் 164

கறைவாய் கொடுகக் கிமயங் கிடுவார்;
கரமே யடலுற் றுதளர்ந் திடுவார்;
முறைகால் கள்ஒதுக் கிநடஞ் செயலால்
முரண்வீ றுமுயற் சிஒழிந் திடுவார்;
உறுபூ வினிடத் தில்உருண் டிடுவார்;
உரவா கின்உணர்க் கைஅழிந் திடுவார்
விறலா தெளிவுற்று அமரம் புரிவார்
விதமாய் இருபத்து ஓர்தரம் தெளிவார் 165

முடிவாய் இருபத்து இரதந்த னிலே
முரண்மே வுதெருட் சிதெளிந் திலராய்,
அடல்மா றிஉணர்க் கைஅழிந் தவராய்,
அரிதா ரமிடத் துமயங் கினரே;
மிடலா னஇருட் பொழுதும் தொலைவாய்
விடிவா கிஉதித் தசெழுங் கதிரே;
படிஆள் பரிசத் துவசன் சுதனே
பரிவா கஅயர்ச் சிதெளிந் தனனே. 166

---

163 அரி - சிங்கம், அலை - சுடல், சுரி - யானை, மடங்கல் - இடி; அந்தரம் - வானம்; நிலர் - பூவுலகத்தினர்; மொத்தில் - (கதையினால) அடித்தால், விஞ்சை - போர்க்கலை அறிவு.

164. ஏதி - வாள், துரந்தரரே முயன்றிடுவார் என இயையும்,பாயல் - பாய்தல், சுறு - சினம், குறுமபுள் - காடை, அது பகுதிப் பொருள்விகுதி; ப்ரளயம் - வெள்ளம்.

165. பூ - நிலம், அமரம் புரிவா - போரிடுவர்

தெளியாது இவன்யுத் தகளந் தனிலே
திகையோ டுகிடப் பதுகண்டு அயல்போய்
ஒளிமோ லிதரித் துஅரணஞ் சிலையோடு
ஒருதே ரில்உதித் தபதங் கனைநேர்
களியோ டுமுழக் கிநடந் திடவே
கனமா னநடுக் கம்மிகுந் தனர்மால்
தளமா னதுஅருக் கன்மகன் சுதனே
தறுகாது இரதத் தொடுளதிர்ந் தனனே. 167

விடகீ தனன்உக் ரமடங் கலதாய்,
விலிநா ணிகுணத் தொனிகொண் டளவே,
கெடுநா டுகெடப் பரிசன் றளமே
கிளரா துநடுக் கமிகுந் தளவே,
"அடல்வீ ரபிரத் திமன்அன் பனைநீ
அடல்மோ திஅயர்ச் சிசெய்கின் றதனால்,
உடல்சோ ரஉயிர்ப் பதுஒழிந் திடவே
உனதா விசரப் பலிகொண்டி டுவேன்; 168

(தனனா தனனத் தனனத் தனனா
தனனா தனனத் தனனத் தனனா)

நிலடா" எனஅற் புதநிற் புதமாய்
நெடுவா ளிஉடற் றினன்;முச் சகமே
செலின்மா ரிநிகர்க் கஅடைத்து உருள்தேர்
தெரியா துமறைத் தும்உறுக் கினனால்;
மலையா மல்இமைப் பில்மிகுத் திடுகோல்
மழைமா ரிதிகைக் கஇயற்பு உறவே
விலகா முன்அழற் சினம்உற்று இருகோல்
விலும்மோ லிதெறித் திடவிட் டனனே. 169

மறுசா பம்வளைத் தவன்முக் கணையே
மறமா கஇருத் தினன்நெற் றியிலே
அறுகோல் அவன்நெற் றிதுளைத் திடவே,
அடல்ஆ ரம்அ றுத்து ஒருவைக் கணையால்

---

166. அரிதாரம் - திருமாலின் மனைவியாகிய நிலமகள், தரை; படி - உலகம.
167. அருக்கன் - சூரியன், மகன் - கனனன, சுதன் - விடகீதனன்.
168. அன்பன - மகன், அதிருததன், சரப்பலி - அமபிற்குப பலி.
169. செலின் - மேகத்தின், உறுக்கினனால் என்பதில ஆல அசை, விலும் - ஒளிவீசும், மோலி - கிரீடம்.

திறல்ஆ சுகம்அழிக் க,மதத் துடனே
சிலைவே றுகரத் தில்வளைத் திடவே,
மறமாய் எழுஅத் ரம்விடுத்து, உருள்தேர்
மடிவா க,மறுத்து, இரதத் தினில்மேல் 170

அதிசா பம்அதில் கணைவைக் குமுனே,
அடல்தேர் பரிஅச்சு உருள்கைச் சிலைஆசு
உதிர்தூ ளைநிகர்க் கஅறுத் திட,வேறு
ஒருதேர் கொடுவில் கைஎடுக் குமுனே,
பிதிர்நீ றுபடுத் தினன்;மற் றொருதேர்
பினும்ஏ றநொறுக் கினன்;மிக் கொருதேர்
அதில்ஏ றஅறுத் தனன்;எட்டு உறழ்தேர்
அணுவா கமுறித் தனன்விற் களுமே. 171

அரிதாம் இவன்வில் தொழில்;மெய்த் தவன்ஓர்
அசையா வயிரத் தில்அமைத் திடுதேர்
உரிதா கஉறச் சினம்உற்று அதன்மேல்
ஒருசா பம்வளைத் து,மிகச் சரமே
சொரிமா ரிநிகர்க் க,விடுத் திடவே,
தொடர்பா னசரப் ரளயத் தினையே
திரிமா லைநிகர்க் கஅறுத்து இருகோல்
சிரம்மோ லிதெறிக் கஉடற் றினனே. 172

இருகோல் மருமத் தில்இருத் தினன்;வேறு
இருகோல் கள்புயத் தில்இருத் தினன்;வேறு
ஒருகோல் கிரிபத் தில்அழுத் தினன்;வாய்
ஒருகோல் உருவக் கவுள்நெற் றியில்நால்
அரிகோல் உருவக் கணைதொட் டளவே,
அயர்வாய் இரதத் தில்விழக் கறைவாய்
சொரிவோடு இழியக் கிடையுற் றளவே
துரமோடு உயர்கர்ச் சனைஇட்டு இவனே. 173

---

170. சாபம் - வில், ஆரம - அம்பு, வை - கூர்மையான, ஆசு - கவசம்; சிலை - வில், அத்ரம் - அஸ்த்ரம, அம்பு.

171 உறழ்தேர் - போரிடுகின்ற இரதம், வினைத்தொகை, உபசாரவழக்கு, உறழ்தேர் விறகளுமே முறிததனன என இயையும், ஏகாரம எணணுப்பொருளில் வந்தது.

172. சரபரளயம் - அம்பாகிய வெள்ளம; திரிமால் - சுற்றுகின்ற சாறறு, வினைத்தொகை.

173. கிரிபம - கழுதது; கவுள் - கன்னம், அரி - கூர்மையான, கிடையுற்றளவே - படுத்த உடனே.

விடவா ளிகள்அற் புதநிற் புதமாய்
விடகீ தனன்விட்டு, அநிகத் திரளே
படிமீ தில்அறுத் துஉதறச் சிலைநேர்
பலர்மே னிபரப் பினன்அக் களமேல்;
அடல்வீ ரவடுத் துசன்அப் பொழுதே
அயர்வா னதுஅறத் தெளிவுற் றபினே
கொடும்வா ரம்வளைத் துஉயர்அத் திரமே
குயின்மா ரிநிகர்ப் பவிடுத் தனனே. 174

வியனா கவிடப் படும்அத் ரமெலாம்
விடகீ தன்நொறுக் கி,உறுக் கி,மகா
வயஆ சுகவர்க் கம்ஓர்அற் புதமே.
வலியோடு இரதத் தில்விடச் சிதையாது,
இயல்போடு உரம்உற்று அதுஇருப் பதனால்,
இருகூர் முனைஉற் றசரத் திரளே
புயல்நேர் சொரியப் புரம்மொய்த் திடவே,
பொருவோ னைஅதட் டி,வல்உக் கிரமாய், 175

விடகீ தன்விடப் படும்அத் ரம்எலாம்
விடவே லின்அறுத் துநொறுக் கியும்,ஓர்
தொடையால் மகுடத் தைஉருட் டியும்,ஓர்
தொடைசா பம்அறுக் கவிடுத் தபினே,
சடம்மீது அறுபத் திருபத் திரமே
சமன்சூ லம்நிகர்க் கவிடுத் ததனால்,
நெடுமார் புகழுத் துறுதல் புயம்வாய்
நெறியூடு உறவைத் துநெருக் கினனே. 176

பதினா றுதொளைத்து உருவச் சரம்,மேல்
பதையாது, இரதத்து உதிரத் தினைவாய்
அதிசோர் வொடுகக் கு,மயக் கொடுமா
அயர்வா னகிடைக் கையின்உற் றிடவே

---

174. அநிகம் - படை, படி - உலகம்; வடுத்துசன் - தாம்பிரத்துசன்; வாரம் - வில், குயின் - மேகம்.
175 வய - வெற்றியைத் தரவல்ல. புரம் - உடல்.
176. சடம் - உடல், பத்திரம் - அம்பு; சமன் - இயமன்.

அதிகு ரவடுத் துசன்வில் குணமோடு
அடல்வாய் கொடுகர்ச் சிதமுற் றுறவே
சதுவா னவிகற் பதளத் திரளே
தடுமா றிநடுக் கம்மிகுத் தனவே. 177

(எழுசீர் ஆசிரிய விருத்தம்)

தத்துதேர் முடுக்கி வில்குணம் முழக்கி
தாம்பிரத் துவசன்ஆர்த் துறவே
உத்துவா சரிதேர் உதைத்து,எதிர் அடர்ந்து,
ஒண்சரா சனத்துஒரு பதுகூர்
அத்திரம் தொடுத்தான்; ஐஇரு கணையும்
ஆசுகம் ஒன்றினால் அறுத்து,
ஒத்தைஆ சுகத்தால் மோலியை உருட்டி,
ஒருசரத் தால்சிலை அறுத்தான். 178

மறுத்துஒரு சிலையை வளைக்க,அத் தனுவும்
மாற்றி,முக் கணைஉரத்து அழுத்த,
வெறுத்தவன் இரத மீதுமூர்ச் சித்தான்;
மீண்டுதேர் கடவி,அக் ரூரன்
செறுத்து,ஒரு கணையால் சிலைஅறுத்து, எழுகோல்
திண்புயம் உரத்தினில் எறிந்தான்;
கறுத்துமீண்டு ஒருவில் வளைத்து,இரு கணையால்
களைந்தனன் அவிலும்மோ லியுமே. 179

சிந்துவேறு எடுத்து, ஐந்துவெஞ் சரத்தைத்
திண்புயம் உரம்களம் குளத்தை
உந்திஊடுருவ விடுத்திட, அயர்ந்தே,
ஒண்சயந் தனத்தினில் வீழ்ந்தான்;
அந்தநேர் கிருத வர்மன்உக் கரித்து,
அடர்ந்து,தேர் நடத்தி,வில் வளைத்து,
சந்தவில் பகழி முப்பதால் உரம்கை
தலைகளம் குளத்தினில் இருத்தி, 180

---

177. சதுவான - நான்காகிய. 178. சராசனம - வில
179. தனு - வில; செலுத்து - நெருகி; கறுத்து - சினம்கொண்டு; அ - அந்த.
180. சிந்து - வில், குளம் - நெற்றி; சயந்தனம - தேர், உக்கரித்து - ஹுங்காரம் செய்து, போரொலி எழுப்பி.

தனுவொரு சரத்தில் தறித்து,ஒரு கணையால்
தள்ளினன் மோலியை; தடங்கண்
கனல்எழ விழித்து, பிளந்தனன் இருநால்
கங்கபத் திரத்தினால் கரம்வாய்
முனிறுதல் கிரிபம் உரம்புயம்; அயர்ந்து
மூர்ச்சைஉற் றனன்சயந் தனத்தில்;
கனிவுற நீலத் துசன்தனு வளைத்துக்
கடுகதேர் கடவிவந்து எதிர்த்தே, 181

சிந்துவொரு கணையால் சிதைத்து,ஒரு கோலால்
செம்மணி மோலியை வீழ்த்தி,
உந்திமேடு அகலம் உரம்புயம் களம்வாய்
உற்றமத் தகத்தில்ஒன் பதுகோல்
முந்துற உடற்றி நின்றிட, இருகண்
முழிகரும் புருவமேல் ஏற்றி,
அந்தரர் திகைக்க, தாம்பிரத் துவசன்
அடர்ந்து,தேர் நடத்தி,ஆக் ரகித்தே, 182

வரிசிலை வளைத்து, இருகணை தொடுத்து,
வாரமும் மோலியும் மாற்றி,
ஒருசரம் அகலம் ஒருசரம் கிரிபம்
ஒருசரம் நுதலில் ஊடுருவ
விரசுடன் விடுத்தான்; கறைஉமிழ்ந்து அயர்ந்து
வீழ்ந்தனன் தேர்மிசை மெலிந்தே;
துரிதமாய் இரதம் நடத்தியே தாம்ரத்-
துசன்இடி யேறுஎன முழங்கி, 183

சொர்க்கம்மத் தியபா தாளமும் நடுங்கத்
தொனிரண பேரிகை முழங்க,
வில்குண ஒலியால் திக்கயம் கதற,
விறல்இரு சுடர்திசை மாற,

---

181. கங்க பத்திரம் - அம்பு.

182. மேடு - வயிறு; முழி - கருவிழி, உலகியலாட்சி, ஆக்ரகித்து - உக்கரித்து, பேரொலியெழுப்பி

நற்கர சரவி லாபவீ ரியன்தேர்
நடத்திமேல் வருவதை நோக்கி,
சற்குண நெடுமால் இளவல்சாத் தகிதேர்
சரவிசை யாய்நடத் தினனே. 184

"அள்ளல்வாய்க் கமல மடுக்கயல் மதத்தால்
அளம்உறும் செழுமலர்ப் பொய்கை
நள்ளில்உற் றிருந்து, இனத்துடன் பொருந்தி,
நயந்துறா தே,நடுத் துறந்து,
துள்ளியே பாய்ந்து, கரையினில் காய்ந்து,
சுடுகரு வாடதுஆம் படிநீ
எள்ளிகல் புரிந்து மடிந்திடத் துணிந்தாய்"
என்றுதாம் பிரன்உடன் எதிர்த்தே. 185

வரிசிலை வளைத்து, தொடர்புறச் சொரிமா
மழையினும் தொகைஅறா வாளி
பரிவறச் சொரிந்து, ரதகச துரக
பதாதியை வீந்துறப் பரப்பி,
அருகுசூழ் இரத வேந்தரைத் தேரை
அற்பமாம் பற்பமே ஆக்கி,
துரம்உறுந் தாம்ரத் துசன்விடுங் கணிப்புஇல்
தொடைகளைப் பொடிபட நறுக்கி 186

வச்சிரத் தேரைப் பற்பமாய் அழித்து,
மாவினைப் பாகனை அழித்து,
கைச்சிலை நொறுக்கி மணிமுடி வீழ்த்தி,
கவசமும் துவசமும் நறுக்கி,
நச்சுஅழல் ஒழுகும் கணைகள்மெய் மறைய
நடுநடு நடுங்கிடத் துணித்தான்;
மிச்சமாய் இரண மூர்ச்சையாய்த், தளர்ந்து,
வீழ்ந்தனன் போழ்ந்தவா யுடனே. 187

---

184. மத்திய - நடுவில் உள்ள நிலவுலகு; ரணபேரிசை - போர் முரசு; இளவல் - தம்பி.

185. அள்ளல் - சேறு; மடு - பொய்கை; கமல் நயந்துறாதே, துறநது, பாய்ந்து, காய்ந்து சுருவாடது ஆம்படி. என இயையும், எள்இகல் - இகழ்ச்சிக்குரிய போர், தோல்வியாகிய இழிவைத் தரும் போர். 186. வீந்துற - அழியுமாறு.

அயர்ந்தவன் எழும்முன் கரசர லாப-
மாய்விடாது, அடைமழை நிகர்ப்பச்
சயந்தனம் நெருக்கித் தொடுத்தகோல் களினால்,
சதுவகைத் தளங்கள் செத்துஇறந்த;
உயர்ந்தமூன்று அக்கு ரோணிகள் பிணமாய்
உயர்மலை மலையெனக் குவிந்த;
இயங்குசெங் குருதி பலநதி பிறங்க
இகல்செய்தான் இருகடி கையிலே. 188

இருகடி கையினிற் தாம்பிரத் துவசன்
இன்னலாம் அயர்ச்சி தீர்ந்துஎழுந்து,
தரைமிசை அழிந்த தளம்கணால் நோக்கி,
தழல்இரு விழிமழை பொழிய,
கரமதைக் கடித்துக் கறைகளை உமிழ்ந்து,
கறுவொடும் எயிற்றினைக் கடித்து,
ஒருபெருந் தேரில் ஏறி,வில் வளைத்து,
உடற்றினன் சரமழை உறுக்கி. 189

வடுத்துசன் விடுத்த கணைகளைம் இவன்றன்
வன்கணை மாரியால் நொறுக்கி,
பிடித்தகைச் சிலையும் மகுடமும் தறித்து,
பெருந்துசம் கவசமும் பிளந்து,
அடல்பரி வலவன் இரதமும் துணித்து,
அவன்அவ யவம்எலாம் துளைத்து,
கடுத்துஅவன் மறுத்துஓர் இரதம்மேற் கொளும்முன்
கறுத்துஅறுத் தனன்சிலை தேரும். 190

பின்னவன் ஒருதேர் ஏறும்முன் வரிவில்
பிளந்தனன்; பெயர்ந்துஒரு தேர்மேல்
துன்னும்முன் தேரும் சாபமும் அறுத்தான்;
உற்றனன் மற்றொரு தேர்மேல்;

---

188. கடிகை - நாழிகை.

190. கடுத்து - விரைவில் . கன்னல் - நாழிகை

அன்னதும் அறுத்தான்; மீண்டுதேர் ஏற
அதனையும் அறுத்தனன்; இதுபோல்
கன்னல்ஏழ் அதனில் அறுபது தேர்வில்
கனன்றுகண் டித்தனன் கணையால். 191

"அறுபது தேர்வில் யாதவன் இவனோ
அறுப்பன்?"என்று ஒருபெருந் தேர்மேல்
கறுவொடும் இருந்து, சிலைதனை வளைத்து,
கண்களால் அழற்பொறி சிதறி,
விறல்ஒரு கணையால் மோலியை இடறி,
வில்ஒரு சரத்தினால் பிளந்து,
திறல்எழு கோலில் கவசமும் துவசம்
தேர்பரி பாகையும் பிளந்தே, 192

உரம்அவ யவங்கள் பிளந்துஉள்ஊடு உருவ
உடற்றினான் கணைபதி னாறு;
கரியவன் அனுசன் கறைகள்வாய் ஒழுகக்
கவலையுற் றயர்ந்துகீழ் வீழ்ந்தான்;
இரணவீ ரியபண் டிதன்வடுத் துவசன்
இடியெனக் கர்ச்சனை முழங்கி,
முரசினம் கறங்க முப்புவி நடுங்க
முனிக்குணம் காட்டிமுன் நெருங்க, 193

ஆரவா ரித்தே அடர்ந்துஅவன் நெருங்க,
அர்ச்சுனன் தளம்நடு நடுங்க,
வீரசா ரத்தின் விசையஉத் தண்ட
வீரமார்த் தாண்டகம் பீரன்
சூரசங் காரவிருதுஅலங் கார
சுமுகசிங் காரன்இந் திரன்றன்
பேரன்,மால் மருகன்,பற்குணன் குமரன்
பெருவரைத் தேரின்மேற் கொண்டே, 194

---

192 யாதவன் - யது வம்சத்தில் தோன்றியவன், சாத்தகி.

193. அனுசன் - தம்பி; முனிக்குணம் - வில் நாண்ஒலி

194. பற்குணன் - அருச்சுனன்; குமரன் - பப்பரவாகனன்

மகரகுண் டலம்கி ரீடம்வச் ராங்கி
மாசுண வலையமும் தாங்கி,
பகரரும் முப்பத் திரண்டுஆ யுதமும்
பாங்குற அணிந்துவில் ஏந்தி,
குகன்என அனந்தம் கோடிசூ ரியன்ஓர்
கோலமாம் உருவெடுத் ததுபோல்,
முகவசி கரமெய்க் கதிர்எழத் தேரை
முடுக்கினன் திடுக்கிட ஒன்னார். 195

"காலனோ? ஆல காலமது அடக்கும்
கண்டனோ? உகாந்தகா லத்தின்
சூலனோ? தக்கன் வேள்விமுன் அழித்த
சூரனாம் வீரனோ? அப்பால்
வேலனோ? இவன்ஆர்?" எனநடு நடுங்கி
வெருவியே சேனைகள் இரியச்
சாலவே தாம்ரத் துசனும்மூச் செறிந்து
தந்திரி மார்களோடு உரைப்பான் 196

"இங்குஇவன் றனைவில் லால்செயிக் கரிது;
இகலில்மும் மூர்த்தியும் நடுங்கும்;
புங்கமைந் துஉடையான் இவன்வரல் அறிந்தால்
புரவியை நகுலனும் பிடியான்;
நங்குல தெய்வம் முகுந்தன்எவ் விதமாய்
நடத்துவிப் பான்என அறியேன்;
சிங்கஏ றுஅனையான் உடன்அமர் மலைக்கத்
தேர்திரள் வேணும்ஆ தலினால் 197

நிரைநிரை யாக இவன்விசை யறுக்கின்
நிறுத்தும்என் புறத்து"என நிகழ்த்தி,
"அரிகரி முகுந்த! அச்சுதா னந்தா!
அனந்தன்மீ மிசைத்துயில் வளர்ந்தோய்!

---

195. வச்ராங்கி - வயிரக்கவசம்; குகன் - முருகப்பெருமான், அனந்தம் - கணக்கற்ற; ஒன்னார் திடுக்கிடத் தேரை முடுக்கினன் என்க

196. கண்டன் - கழுத்தை உடையவன், சூலன் - உருத்திரன்; வீரன் - வீரபத்திரன்; வேலன் - முருகப்பெருமான்; இரிய - அஞ்சி ஓட. 197. புங்க - உயர்வான, மைந்து - வலிமை.

உரியகோ விந்த! தேவகி நந்தா!
உதவும்இப் போது"என உரைத்தே,
தெரிதரும் சகத்ர நாமமும் துதித்தே,
சிந்தையால் உவந்துஇனிது அழைத்தான். 198

உன்னிய பத்தன் முனம்உல குண்டோன்
உற்றுவந்து, "அஞ்சல்நீ; ஐயா!
என்னகா ரியம்செய் தனை!அவன் பரியை-
யேபிடித் ததுமதி யீனம்;
தன்நிகர் இல்லா வில்லிமுன் சபதம்
சாற்றிடா விதம்முதல் தகைந்தேன்;
பின்னமிர் தனுக்கும், எனதுசேய், பேரன்,
பின்னவன் தனக்குமே காத்தேன்; 199

கன்னன்மைந் தனுக்கும் காத்தனன் உனை;இக்
காலன்முன் நேர்ந்தனை; கவல்வது
என்இனி? இவன்முன் எப்படி முனிகொண்டு
இகல்செய்வாய்? அஞ்சிலான் எதற்கும்;
மன்னும்மல் இகலின் உன்னுடன் சார்வேன்;
வன்சமர் சரிவரும் அதிலே;
பின்அருச் சுனனை வெல்லரிது" என்று
பிரிந்தனன் இடங்கரை அரிந்தோன். 200

மாதவன் உரையால் மருண்டவன் தேறி
வடுத்துசன் நிற்குமவ் வளவில்,
சீதரன் மருகன் திருமுனம் அணுகிச்
செப்புவான், "சினந்துஇவன் றனையே
நீதறித் திடிலோ பெரும்பகை; பரிசன்
நிகரிலா வீரியன்; நினக்கு
ஓதவேண் டுவதுஎன்? அவன்பலம் அறிந்தே
உவந்துகப் பங்கள்ஈந் தனையால். 201

---

199. தகைந்தேன் - தடுத்தேன், எனது என்பதைச் சேய, பேரன், பின்னவன் ஆகிய மூன்றுடனும் தனிதனிக் கூட்டுக.

200 முனி - வில், இடங்கர் - முதலை; அரிந்தோன் - வெட்டியவன், கண்ணன்.

201. சுப்பம் - திறை.

ஆதலால் அசுவ மகம்முடி வதற்குஅது
ஆகும்மார்க் கம்கொடு முடிப்பேன்;
சாதுவாய் அவன்றன் உயிர்க்குஇறு திஉறா-
தாகநீ பொரு"கெனச் சாற்றிப்
போதமால் அகன்றான்; இந்திரன் குமரன்
புதல்வனும் (புவி)மகள் நெளிக்க
நாதனாம் பரிசத் துசன்மகன் முனம்தேர்
நடத்தினான் திடத்தின்ஆக் கரித்தே. 202

கிடுகிடு கிடெனத் தளம்நடு நடுங்க,
கர்ச்சிதக் குணத்தொனி யுடனே,
நடனசிங் கார வயிரவி விசையை
நாடியே இருபுயத் தமைய,
அடல்புய பலப ராக்ரம மாக,
அடர்ந்தவன் முகத்தினை நோக்கி,
நெடுமுடித் தேரை நெருக்கியே சிலசொல்
நிகழ்த்துவான் தாம்பிரத் துவசன். 203

"அறிகிலா யோஎன் அடல்வலி? அறிந்தே
ஆண்டுகள் தொறும்திறை அளித்தாய்;
திறைஇனிக் கொடுப்பது இலைஎன, தாதை
செகதலத் தரசர்சே னைகளை
முறையுடன் திரட்டி, சமர்செய விடுத்தே,
முடித்திடத் துணிந்தனை; கொடியோய்!
கறைகள்வாய் ஒழுக உனைஅடைந் தோர்கள்
களத்திடை படுத்திடல் நோக்காய்; 204

எந்தைபால் நீவந்து எவளவும் திறையி-
லேதணித் திடும்என நயந்தே
வந்துகேட் டதற்கு மாறுஉரைத் தனரோ?
மற்றதோர் நாளுமே கப்பம்

---

202. போத மால் - ஞானமே வடிவாகிய திருமால்.

203. விசையை - வெற்றிச் செல்வி.

205. தணித்திடும் - (கப்பததைக்) குறைததுக் கொள்ளுங்கள்; சுந்தனைப் பயந்தோன் - குமரன் தநதை, சிவபிரான், சுமலன் - பிரமன்.

தந்திடா திருக்க நினைந்தனை; நினது
தரமல இறைதரா தொழிக்க
கந்தனைப் பயந்தோன் உந்திபூத் தோனும்
கமலனும் கடவுளோர் வரினும். 205

தரும்திறை வாங்காது உனைவிடேன் தப்புஆ-
லோசனை நினைந்தனை காண்;என்
பெரும்பகை வாங்கி எத்தலத்து இருந்து
பிழைத்தல்நீ?" என,விழி சிவந்து
முருந்துஎயி றதனைக் கடித்து,"நான் நடக்கும்
முறைமறா தேஇறை அளித்தேன்;
திருந்தும்நின் வலிக்கோ மருண்டுஅளித் தேன்ஓர்
சிறுபொழுது ஈடுசெய் குவையோ? 206

பொருந்தும்நின் தாதை தானும்நீ தான்ஓர்
பொருட்டுஅல எனதுபோர் முகத்தில்;
அரன்தனோடு ஊடும் எந்தைவெம் பரியை
அழியும்நாள் அடுத்ததால் பிடித்தாய்;
விரைந்துநான் அறியாது இழைத்தவெம் பிழையை
வீரனே பொறுஎன வேண்டி,
துரங்கம்முன் விடுத்தால் புரப்பன்நல் தருமன்
துணைவனாம் சூரசங் காரன். 207

வீரன்வில் விசையன் திக்கெலாம் நடுங்க
வென்றவன் எந்தனைப் பயந்தோன்
பாரமாம் காண்டா வனம்எரித் திடும்நாள்
பன்னொரு சிவன்பனீர் கதிர்கள்
தீரமாம் அட்ட பாலகர் தேவர்
தெறித்திடச் சிலையில்வெந் கண்டோன்
கோரம்நீ பிடித்தாய் இறுதிநாள் அடுத்த
கொள்கையால் உனதுபுன் மதியால். 208

---

206. என - என்று தாமிரதுசன் கூற, விழிசிவந்து பதில் கூறுபவன் பபரவாகனன்.
207 துரங்கம் - குதிரை.
208. பன்னொரு சிவன் - ஏகாதச ருத்திரா; பனீர்கதிர்கள் - துவாதச ஆதித்தர்கள், வெந் - முதுகு; கோரம் - குதிரை.

குட்டிநாய் குரைத்துப் பெரியநாய் தலையில்
கொடுவினை சுமத்திய படிநீ
பட்டினாய் பரியை; விட்டிடா யாகில்
படும்துயர் சிறிதுஅல, பெரிதால்;
கெட்டியாய் மனதில் ஆய்ந்துபார் ஆவி
கெடுமுன்நீ" எனச்சினம் கிளர்ந்து,
வட்டமாய்ச் சிலையை வளைத்துஇரு வாளி
மார்பினைக் குறிசெய்து விடுத்தான். 209

உடற்றும்ஈர் கணையும் ஓர்கணை யதனால்
உறுக்கிநின் றறுத்தனன்; நாலு
வடிக்கணை விடுத்தான்; ஒருசர மதனால்
மாற்றினன்; நால்இரு வாளி
தொடுத்தனன்; இருகோல் கொடுதுணித் தெறிந்தான்;
தொடைபதி னாறுஎய, அதனை
அடுத்துமுக் கோலால் அறுக்க,எண் நான்கு(ஆம்)
அம்பைஐங் கணையினால் அறுத்தான். 210

சினந்துஅறு பதினால் கோல்அவன் தொடுக்க,
சிதைத்தனன் எண்கணை அதனால்;
முனிந்தொரு நூறு இருசதம் இந்த
முறைஒரா யிரத்துஅறு நூறு
கனன்றவெஞ் சரங்கள் சொரியவும் அறுத்தான்
ககமதோர் சதமதால்; சகத்ர
உனுங்கணை தனையும் அறுத்தனன்; பின்பும்
உடற்றினன் அறுத்தனன் இவனே. 211

"என்இனி இவன்மேல் கரந்தொடுப் பது?"என
இளைத்தசிந் தையினொடும் இடைந்தான்;
அன்னதை அகக்கட் குறிப்பினால் அறிந்து,
"அடாமத லையின்மதாந் தத்தால்

---

209. பட்டினாய் - பிடித்தாய், திசைமொழி; ஆவிகெடும் முன் நீ ஆய்ந்து பார் என இயையும்.

211.ககம் - அம்பு, அது பகுதிப்பொருள் விகுதி.

உள்ளியைப் பிடித்து, யூகமும் நிறுத்தி,
உரைத்தவீறு உறுதியை மறந்து,
பின்இனி விழித்தால் விடுகிலேன்; உயிரைப்
பேணிநீ அமர்புரிக" என்றான். 212

(தனனா தனனா தனனா தனனா
தனனா தனனா தனனா தனனா)

"எனடா முரடா வலிபே சுகிறாய்?
எனைநீ வெல்வையோ பரிமீள் குவையோ?
சொனவாய் துளையா ததினால் மதமே
சொலுறாய்; தொடுமோ சருகுஆ ரலையே?
பனியோ கதிரோடு அமரா டுவதே?
பரியோ அரியோடு இகலா டுவதே?
முனைநீ;" எனவே சிலையே வளையா
முனமே, கணைவீ சினன்மா முகில்நேர். 213

மகிமா திரம்ஆ சினியா னதுகோல்
மயமாய் நிரையார் தர;ஏ றியதேர்
அகமே தெரியா விதம்ஏ வுகொடே
அவன்நீள் சரகூ டமதே செய்ததால்
நகையோடு இமையா முனமே இவனோ
நகுகூர் சரமா ரியில்நீ றுசெய்தே
செகம்மீ வெளிமா திரம்ஈது எனவே
தெரியா விதமே சரம்ஏ வினனே. 214

திகைமூ டின;வா னகம்மூ டின;கோல்
செகம்மூ டின;ஆர் கலிமூ டின;பா-
லகர்மூ டின;யா னைகள்மூ டின;வார்
அகிமூ டின;யா வையுமூ டின;பேர்

---

212. மதாந்தம் - செருக்கினால் தோன்றிய அறியாமை.

213. ஆரல் - தீ, சுதிர் - சூரியன், பரி - பஞ்சு; அரி - நெருப்பு.

214 மகி, மாதிரம் - உலகம், ஒரு பொருட் பன்மொழி, ஆகினி - பலா; ஏவு - அம்பு.

உகமூ டினபோல் அழல்மூ டின;மால்
உருமாழ் கிடவே புகைமூ டினதால்,
மகவான் இமையோர் நரர்நா கருமே
மதியே தடுமா றினர்வா டினரே. 215

மணிமா நகரா திபன்ஏவு அதனால்
வரும்ஏ வலன்ஏ றியதேர் பரிபாகு
அணிகே தனமே துகள்ஆ கிய;ஆ
ரமுமே துகள்ஆ கிய;மோ லியுமே
அணுவா னது,வா சவன்மே னிஎலாம்
அடல்ஆ சுகமே அதிபா ரமதாய்
உணர்கோல் இடுகூடு எனமே வியதால்,
உயிர்போ னவன்நேர் அயர்வா கினனே. 216

அவன்மே தினிமீது அயர்வாய் விழவே
அணிமீது இடியேறு எனஏ தைகொடே
இவன்ஆ சுகமா ரிவிடா மழையாய்
இகல்சே னையில்வீ சினின்ஓய்வு அறவே;
வவும்ஓர் கணையே பதினா யிரமேல்
மறுகா, கதழ்வோடு உறஏ கிடவே,
சவியார் பதினா யிரமே லொருவோர்
சடமீதுறவே தமரா டியதே 217

சிரமா மலையே திரள்கூய் வுறவே,
திரள்கால் மலையே பலகூய் தரவே,
கரமா மலையே பலகூய் வுறவே,
கடமா மலையே பலகூய் வுறவே,
உரமா மலையே பலகூய் வுறவே,
உருள்தேர் மலையே பலகூய் தரவே,
பரிமா மலையே பலகூய் தரவே,
பகடேர் பலமா மலைகூய் தரவே, 218

---

215. திசை - திசை. ஆர்கலி - கடல். பாலகர் - எண்டிசைபபாலர். யானை - திசைக்கரி; அகி - பாம்பு. எண்டிசை நாகங்கள். தடுமாறினர் - முறறுவாய்பாடடால வந்த எசசம்.

216. வரும் ஏ - (தன்னை எதிரதது) வருகின்ற கணை. வலன் ஏறிய - வலிமை மிக்க.

217. மறுகா - கழன்று.

218. கூய்வுறல. கூயதரல என்பனவறறைக் குவிதல என்ற பொருளில் ஆள்கிறார் போலும், கடமா - மதயானை. பரிமா - குதிரை. இருபெயரொடடு.

(தான தானதன தத்ததன தத்ததன
தான தானதன தத்ததன தத்ததன)

கோடி கோடிஇர தத்திரள்இ பத்திரள்கள்
கோடி கோடிபுர வித்திரள்ம னுத்திரள்கள்
கோடி கோடிமடி யக்கடிகை யிற்குள்உறு
கூறு கூறெனந றுக்கினன்உ றுக்கிமிக
வாடி வாடிமறு கிச்சதுவ கைத்தளமும்
மாள மாளவும்வ டிக்கணைதொ டுத்துவிட
ஓடி ஓடியும்இ ளைத்தனர்கள் சிற்சிலர்கள்
ஓடி லாதவர்பி ணத்தினில்நு ழைத்தனரே. 219

நீற தானஇர தத்திரள்கொ டித்திரள்கள்
நீடு மோலிகவி கைத்திரள்ப டைத்திரள்கள்;
கூற தாகினப ரித்திரள்க ரித்திரள்கள்;
கோல மாகியம னுத்திரள்கள் மிக்கினொடு
சேறு மூளைகள்கொ ழுப்புகள்கு டர்க்கொடிகள்;
சேய மாமலர்கள் ஒத்தகைமு கத்திரள்கள்;
ஆற தானஉதி ரப்பிரள யத்திரள்கள்;
ஆடல் மேவியசெ ருக்களமு கத்தினிலே 220

வார வீரியன்அ றுத்தனன்ஒரு அக்குரொணி
மாள வே;ஒருமு குர்த்தமத னிற்றுணிசெய்து
ஆர வாரமுடன் நிற்கவும்,அ யர்ச்சிதெளி-
வாகி,நேயபரி சத்துசன்வ ரக்குமரன்
ஊரும் மேரின்இர தத்துஉதய முற்றுஒருவில்
ஓதை ஏறவும்வ ளைத்துஎழுவ ரக்கணையில்.
ஏர தான்இப தத்தைமுனி யைக்குறிசெய்து
ஈற நீறுஎழள ரித்துஎதிர்மு ழக்கினனே. 221

---

219 இபம் - யானை, சுடிகை - நாழிகை, நுழைத்தனர்- நுழைந்தார், சததம் நோக்கிய வலிததல் விகாரம்

220. சேய - சிவந்த, மலர - தாமரை, கை முகம - கரங்களும் வதனங்களும், உமமைத் தொகை,

221. வரக்குமரன - தவபபுதலவன், மேரின - மேருவைப போன்ற, வரக்கணை - சிறந்த அமபு, ஏரதான - அழகிய, அது பகுதிப்பொருள் விகுதி, முனி - வில்.

தேரும் வாரம்அழி யச்சினம்மி குத்துமறு
தேரில் ஏறிஒரு வில்தனைவ ளைத்துஎதிரி
வார மோடுஅவ்இர தத்தையும்அ ழிக்கமறு
வார மோடுஇரத முற்றுஅவன்எ திர்த்தும்இவன்
ஊரு தேர்சிலைஅ றக்கணைதொ டுக்கஅட-
லோடு வேறுஇரத முற்றுவில்வ ளைப்பதன்முன்
ஆரின் மால்இரதம் வில்துகள்ப டுத்தினனை
ஆறு தேர்இவிதம் வில்களும்அ றுத்தனனே. 222

"நீஎன் னோடடவில் முப்பதுஇர தத்திரளை
நீற வாரமும்அ ழித்தனை;இ னிப்பதன-
மாய்என் னோடுஅமர்ந டத்து"எனம ணிப்பதியன்
வாகை யானவயி ரத்தின்இர தத்தின்மிசை
ஆயும் ஓர்சிலைவ ளைத்துஅழல்மு கக்கணைகள்
ஆட லோடுதைய அற்றதுஅவன் வில்திகிரி
மேய வேறுஇரதம் உற்றுவில்எ டுக்கும்முனம்
வீரன் ஏவினன்நொ றுக்கினன்வி றல்சிலைதேர் 223

மீள வேறுஇரதம் உற்று,வில்எ டுப்பளவில்
வீசு கோல்கொடுஅதுஅ றுத்தனன்;ம றுத்தும்ஒரு
நீளமானஇர தத்துடன்எ திர்க்கும்முனம்,
நீற தாய்விடஅ ழித்தனன்வ ரக்கணையில்;
யாளி ஏறுஅனையன் மற்றொர்இர தத்தில்உற,
ஆடல் வீரன்அத னைக்கணையி னில்தழல்கொள்
கூள மாகவும்எ ரிக்கவும், மறுத்தும்ஒரு
கோல மானஇர தத்துஉறஅ றுத்தனனே. 224

யூக மானதுஉல வைக்குஉலவை தொத்தல்என
ஓடி யோடிஇர தத்தின்மிசை தத்திடும்முன்,
ஏக வேபொடிப டுத்தினன்அ ழற்கணையின்;
ஈறுஇல் நூறும்இரு பத்துசது வில்திகிரி

---

222. ஊரு - செலுத்தும், ஆரின் - சக்கரத்தை உடைய, மால் - பெரிய.

223. ஆடல - வீரம், உதைய - ஏவ; திகிரி - தோ 224 யாளி ஏறு - ஆண் சிங்கம்

225. யூகம் - குரங்கு ; உலவை - மரகதினை, நூறும் இருபத்து சது நூற்றிருபத்து நான்கு; திவிய - கடவுள் தன்மை பெற்ற

. . . . . வச்ரஇர தத்தின்மிசை
ஏவி யே,திவிய அத்ரம்ஒரு பத்துவிட,
வாகை மார்பகன்அ தற்குஅதுப தில்கணையில்
மாற வேபொடிப டப்படஅ றுத்தனனே. 225

தாதை மாமனும்ம தித்துமகி ழச்சுரர்கள்
தானு மேபிரிய முற்றுஅவர்து திக்கவும்,மு-
தாதை வேதன்அரன் மிக்குளர்தி கைக்க,அடல்
தானு மேமிகுவி யப்புடன்ம ணிப்பதியின்
நீதி யாதிபதி வெற்றியுற, மற்றும்அவன்
நேய கூர்கணைநி ரைத்தனன்ம ழைக்குநிகர்;
வாதி னோடுஅவன்வி டுத்தகணை அத்தனையும்
மாள வேபொடிப டுத்தினன்இ மைக்குமுனே; 226

ஆசை மீவெளிஅ டைத்தன;பு தைத்தகடல்;
யாவும் மூடின;உ டற்றுஉபயர் விட்டகணை
பூச லாடின;எ திர்த்துஇறகி னைக்கொய்தன;
பூண வேமுனைக நித்தன;மு றித்தநடு;
மூசி யேஎதிர்பி ளப்பன;இ ளைப்பதுஅற
மூணு லோகமும்ந டிப்பன;ந டுக்கமுற-
வேச ராசனவ ளைப்புநிமிர்வு அற்றொழிய-
வேமென் மேலும்விசை யிற்கணைசெ லுத்தினரே. 227

(தனனா தனனத் தனனத் தனனா
தனனா தனனத் தனனத் தனனா)

இருவோர் களும்ஒத்து அமர்உற் றிடும்நே-
ரினிலே விரைசுற் றுமிகுத் துஇவனே
சரமா ரிநிரைக் கஅடிக் கடியே
தறுகா துமறுக் கமறுக் கமென்மேல்
உரமா கவிடுக் கும்மிடுக் கதனால்
உதவா துகைமெத் தமயக் கமொடே
விரசா னகடுப் புமறுக் கரிதாய்
விழிமூ டிநடுக் கம்மிகுத் தனனே. 228

---

226. தாதை - பபரவாகனின் தநதை, அருச்சுனன்; மாமன் - திருமால், முதாதை - மூதாதை, பாடடன், பிரமனைப பிதாமகன என்பா.

227. சராசனம் - வில் 228. மிடுக்கு - வலிமை, கை உதவாது என மாறுக.

சிரமீ தில்அழுத் தும்அயில் கணையே
திறல்கூர் பவனிற் பதிய,க் களம்வாய்
விரிலா டம்அழுத் தும்விறல் கணையே
விறலா னளருத் தமதில் செலவே,
உரமூ டுபதித் ததிறல் கணையே
உலவா துபுறத்து உருவிச் செலவே,
புரமே மதமத் தைமுள்ஒத் தனவே
பொருகோல் கள்நிரைத் தநெருக் கதனால். 229

அறவே புரம்மொய்த் துநிறைத் திடுகோல்
அதனால் உயிர்அற் றுஅயர்வுற்று அரிமேல்
உறவீழ் தர,மற்று இவன்எய்த் ததுஎனா,
உயர்தே ரைநடத் தி,வல்உக் ரமொடே,
கறுவாய் வில்வளைத்து இகல்பப் பரவா-
கனன்ஏ வுதொடுத்து அணிகெட் டிடவே,
எறுழ்மா ரிபனித் தல்நிகர்ப் பவிடாது
இவன்மே லும்உ றுக்கி,உ டற்றினனே. 230

கணைமா ரிஅடிக் கடிபப் பரவா-
கனன்மீ றிஉடற் றும்அழல் சரமே
அணிநா லுவகைத் தளம்முற் றும் . . . . .
. . . . . மொய்த்து உருவிச் செலலால்,
தணியா உடலைச் சலடைக் கணைநேர்
சமரா டிநொறுக் கிமுருக் கவுமே
பிணமா மலைபற் பலபற் பலவே
பெயர்ஆகவம் முற்றும்மிகுத் ததுவே. 231

கனமே வுகிரித் தலைஒப் பெனவே
கரிமா குதிரைத் திரள்தத் திடவே
இனமா னதுதிக் கைகள்சக் கரம்தேர்
எறுழ்மே வுசுருட் டொடுதத் திடவே

---

229. லாடம் - நெற்றி. எருததம் - பிடர்; மத மத்தை - மயக்கத்தை உணடாக்கும் ஊமத்தங்காய்.
230. அறவே - முறறிலுமாக, புரம - உடல; அரி - தேர்; கறுவாய - சினத்துடன்.
231. சலடைக்கணை - சல்லடையின்கண்களை, சமராடி - போரிட்டு, பெயர் - பெரிய என்ற பொருளில ஆனகிறார் போலும. ஆகவம் - போர், ஆகுபெயராகக் களத்தை உணர்ததியது.

பினின்வால் கள்கறைப் பதம்அற் றிடவே
பெரிதா னஉடல் கள்துணிப் படவே
முனிகார் பிடிகற் கரிவர்க் கம்எலாம்
முனிவா ளிஅறுத் துமுருக் கினவே. 232

பரிபாகு இரதத் திரள்அச்சு உருள்ஆர்
படர்வா னிகள்நொய்ப் பொடியுற் றிடவே,
நரர்வா சிகள்அற் பதுகள் படவே;
நதிஆ றுநிகர்த் தகறைக் குலமே;
விரசோ டுஅழிக் குள்உடல் திரளே
மிகவே வெளியுற்று அமிழ்வுற் றுறவே,
தெரிமீ வெளிமுற் றும்உடற் குறையே
திரளா கநடித் துமறைத் தனவே. 233

எதிர்சே னையின்அக் ரொணிஎட் டுடன்நால்
இவன்ஏழ் கடிகைக் குள்அறுத் திடலால்
முதுயூ பம்நெளித் துமுறித்து இரிவாய்
முனையோ சனைபிற் படநிற் பளவே
அதன்மேல் அயர்வுற் றதுஉணர்ச் சியதாய்
அகமே தெளிவுற்று இரதத் தினதாய்
விதமாய் அழிபட் டதுஅனைத் தையும்மேவு
இருபார் வைகொடுற் றுமதித் தனனே. 234

"எனகா ரணம்?இப் படைமுற் றும்இவன்
எழுநா ழிகையிற் குள்அழித்து அணியே
முனைபேர அடித்தனன்;மற் றுஇவனோ
முனிஆண் மையில்ஒப் பிலன்;மெய்ப் பலவான்;
நனிவீ ரியபத் ரஉருத் திரனே
நரனா கஉதித் தனன்ஒக் கும்"எனா
மனமே சினம்உற்று இரதத் துடனே,
வரிவா ரம்வளைத்து அடல்உற் றனனே. 235

---

232. கரிமா - யானை, இருபெயரொட்டு, எறும் - வலிமை; . துணிபடவே எனற்பாலது சந்தநோக்கித் துணிப்படவே என விரித்தல்விகாரம் பெற்றது, ஈற்றடியின் முறபகுதி விளங்கவில்லை

233. வாசி - படை, நொய்ப்பொடி - அரிசிநொய்யைப போன்ற துகள்; வாசி - குதிரை; விரசோடு - விரைவாக.

234. யூபம் - படை வகுப்பு; இரிவாய் - இரிந்து, அஞ்சி; முனை போர்நிகழுமிடம்; யோசனை - ஒருயோசனை தூரம்.

235. முனைபேர - போர்முனையிலிருந்து பெயராது செலுமாறு; வரிவாரம - (நன்றாகக்) கடடப்பட்டவில.

ஒருகோ லின்முறித் தனன்வில் தனையே;
ஒருகோல் முடியைத் தளிவிட் டபினே,
இருகோல் மருமத் தில்அழுத் தினன்;மூ
இருகோல் புயம்நெற் றிகளத் தினிலே
துருமே வுடற் றினன்அப் பொழுதே;
சுழலா டஉருட் டிவிழித்து உடனே
வரிசா பம்வளைத் துஇருவைக் கணையால்
மணிமோ லிஉருட் டிவில்எற் றினனே. 236

அதிவீ ரன்வடுத் துசன்அப் பொழுதுஓர்
அணிசா பம்வளைத்து அடல்முப் பதுகோல்.
கதழ்வாய் விட,வெற் றிகொள்பப் பரவா-
கனன்ஏ வில்அறுத்து (அது)உறுக் கிடவே,
முதிர்ஆ சுகம்அற் புதம்நிற் புதமாய்
முகில்நேர் வனமிக் கின்உடற் றியதால்,
அதுயா வும்அறுத் துதிரச் சினமே.
அடல்வா ளிமிகுத்து இவன்விட் டனனே. 237

சரமா ரிகணக்கு அறவுற்று இருவோர்
தறுகா துகரக் கதழ்வில் கனமாய்
விரசா கமிகுத் தும்அடிக் கடியே
விரகோ டும்விடுத்து அமர்உற் றிடவே,
கரமா ருதவைக் கணைபப் பரவா-
கனன்ஏ வினன்ஒற் றைரதத் தினிலே;
அரிகீழ் அவன்விட் டசுழல் கணையே
அடலா களமுப் பினதுப் புடனே. 238

சுழல்நேர் சுழலச் சுழலச் சுழலத்
துரிசா களடுத்து இருதத் துவர்தேர்
ஒழியா விசைஉற்று இரதத் தினையே
உகமா ருதம்ஒத்து எதிர்சுற் றுகையால்

---

236. மருமம் - மார்பு, சாபம் - வில், வை - கூரிய, மோலி - கிரீ டம்.

237. ஆசுகம் - அமபு; அற்புதம், நிற்புதம் - பேரெண்கள்.

238. விரகோடுமம - திறமையுடன், கர - நளசு போன்ற, மாருதக் கணை - சுாற்றம்பு, வாயவ்யாஸ்த்ரம, கரகணை, வைக்கணை எனத்தனிதத்வனிக் கூட்டுக, அரி - தேர்.

எழிலார் பரிசத் துசன்நற் சுதனே
இருகால் வவிஅக் கிமுகிழ்த் தனனால்
விழிமூ டிஅருச் சுனன்மெய்ச் சுதனே
விறல்கால் வலியுற் றனன்உத் தமனே - 239

முகில்ஏ ழும்நடுக் கிஒளித் திடவே,
முதிர்வா னர்திகைத் துவெருக் கொளவே,
பகலோன் வழிதப் பிடபுட் கரமே
படமோ திநெளிக் கஅடித் தபினே
சகமீ துசுழற் றிவிடுத் திடவே
தலைகீ ழுறஉற் றதுபொற் சுழல்நேர்
அகமீது அரியைப் புகழ்வுற்று இருவோர்
அடுதேர் மிசையுற் றனர்அச் சுதரே. 240

செவையா கரதத் தைவிடுத் தளவே
செகமீ துவிழப் பலசுக் கதுவாய்
நவநீ றுநிகர்த் த;வடுத் துசனே
நலியாது அயர்வில் கிடையுற் றனனே;
கவின்மே வியதுப் புறுபப் பரவா-
கனன்நீள் புவியிற் குள்அயர்ச் சியதாய்
இவன்நா ழிகைஎட் டில்விழித் திடவே,
எதிர்வீ ரன்அயர்ச் சிகொடுற் றதனால், 241

உவர்ஆ ழியைஒத் தபடைத் திரள்மேல்
உரமாய் இவன்விட் டகணைக் குலமால்
குவிமா மலைஒத் தனபற் பலவே
குறிவா னம்அடைத் ததுஉடற் குறையே;
இவன்ஏ வினில்அற் றதுமிக் குடன்ஏழ்
இருநீ டிடும்அக் ரொணி;இப் பொழுதே
அவன்நா ழிகைஎட் டுடன்எட் டினிலே
அரிமா யன்எழுப் பிஉரைத் திடுவான் 242

---

239. தத்துவர் - தலைவர், வவி - வவ்வி, அக்கி - கண, முகிழ்த்தனன் - மூடினான, ஆவ - அசை
240. வானர் - வானவர; புடகரம் - அம்பு, அகம் - உள்ளம், அரி திருமால், சுதா - (அருச்சுனன் மற்றும் பரித்துசனின்) மகசள்.
241. ஆழி - கடல, கணைக்குலமால் - அம்புக்கூட்டங்களால், அததுச சாரியை சநதம நோக்கித் தொக்கது.

"எனவீ ரன்?நினைப்பு அறிவுற் றிலைநீ;
எனபோர் செய்துஇளைத் தனை?பத் தியினால்
உனையா னும்அடுத்து உதவுஇச் செயல்சார்பு
உரையாது இரு"எனச் சொல,மற் றவனே
கனமால் இரதத் தினில்உற் றபினே
கையில்வா ரம்வளைத் துமிகுத் திடும்ஏ-
வினைஏ விநெருக் கிநகைத்து இவன்நேர்
எதிர்கோல் கள்அனைத் தும்அறுத் தஃனே. 243

எமசூ லநிகர்க் கவடிக் கணையே
எழில்மா ரிநிகர்த்து அவன்விட் டதுஎலாம்
அமர்மீ தில்அறுத் துநகைத் தருள்வான்-
" . . . . . அசடுற் றிடுபுத் தியிலோய்!
சுமுடா இம்மிடல் தொழில்உத் திகொடோ
தொடுவாய்? என்அடற் பரியைச் சிலையை
நிமிரா துபிடிப் பதும்எப் படிநீ?
நினதாண் மைஅவத் தம்அவத் தம்இதே; 244

உரவோ டுசிலைத் தொழில்முற் றுவனேல்
ஒருநா ழிகைநிற் பரிதுஒப் புடஓநீ;
அரிதா கவரத் தொடுபெற் றிடுகோல்
அதுஏ துமிருக் கில்உடற்று; இலையேல்
மரியா தைகிடைக் க,அடற் பரியை
மகவான் மகனைத் தொழுதுற்று அருள்வாய்;
தருமா திபன்நல் துணைஉத் தமனே;
தயவோ டுபுரப் பதுநிச் சயமே." 245

எனஓ தமிகுத் தசினத் துடனே
இடியேறு எனஒத்து எதிர்செப் பிடுவோன்
"நனிசீ யம்இளைத் தும்உரல் கரிகால்
நயவாது; உழுவைக் குஉணவுற் றபுலால்

---

244. மிடல்- வலிமை; மிடற்றொழில - போர், உத்தி - அறிவு, தொடுவாய் - தீண்டுவாய், அவத்தம் - பயனற்றது.

244 மிடல்- வலிமை. மிடற்றொழில் - போர், உததி - அறிவு; தொடுவாய் - தீண்டுவாய்; அவத்தம் - பயனறறது.

245. உரவோடு - (என் முழு) வலிமையுடன், துணை -தம்பி.

உனியார் கிரகித் தனன்பத் தியமா?
ஒருபோ தும்உனக்கு அதுகிட் டுமதோ?
முனியால் மிகுதுப் பும்உனக்கு உளதோ?
முனைகா ணஉடற் றுகவிற் சரமே; 246

ஒருகா லும்வழக் கமதற் றமுடம்
உடையான் இனனைத் தகையத் துணிநேர்
சரியா கஉரைத் தனை;விற் றொழில்நீ
தறுகா(மல்) உடற்று எனமைப் புயல்நேர்
விரகா கவிடுத் து,அடைத் தனன்மீ
வெளி,ஆ சை,எதிர்த் தரதத் தையுமே;
முரண்ஓர் நொடியில் சரம்அத் தனையும்
முனைவீ ரன்அறுத் துநொறுக் கியுமே, 247

சிலைதேர் பரிபொற் கொடிஅற் றிடவே,
சிலகோ லில்அறுத் துநொறுக் கிடவே,
மலைபோல் ஒருடொற்பு இரதத்து உறவே,
வருதேர் சிலைமுற் றும்அறுத் தனனே;
மெலிவா கிமறுத்து இரதத்து உறவே,
விடுகோ லில்அறுத் தனன்வில் கொடிதேர்;
உலைவான் எழுபத் துடன்எட்டு உயர்தே-
ரொடுவா ரமும்ஒக் கநொறுக் கினனே. 248

"இனியார் இவன்விற்கு எதிர்நிற் பது"எனா,
இயல்வேறு இரதத் தினில்உற்று அவனே
முனிதே வர்வரத் தினில்உற் றிடுகோல்
முறையா கவிடுக் கஅனைத் தையுமே
கனமா க்வதுக்கு அதுபப் பரவா-
கனன்ஏ வில்அறுத் துநொறுக் கியதால்
மனமே முறிவுற்று ஒருமற் கதையே
வவிவீ சநொறுக் கினன்வைக் கணையால் 249

---

246. சீயம் - சிங்கம்; சிங்கம்யானையின் காலைத் தின்னாது போலும்; உழுவை - புலி, உனி - துணித்து; முனியால் - வில் வித்தையில், உருபு மயக்கம்.

247. வழக்கமதறற - வழங்காத, சுவாதீனமற்ற, இனன் - சூரியன், ஆசை - திசைகள்

248. உலைவான் - அழிவதற்காக. 249. மற்கதை - போருக்கு உரிய சுதாயுதம்.

(எழுசீர் ஆசிரிய விருத்தம்)

இரவிஒத்து ஒளிரும் பரிசைவாள் ஏந்தி
இறங்கியும் தேரைவிட்டு இழிந்தே,
"துரிதமாய் நீயும் பரிசைவா ளேந்தித்
துணிவுடன் அமர்புரி வதற்கு
வருக"என்று அழைக்க, நகைத்துஇவன், வாளில்
வாகைநீ புனைவையோ? என்ன
உரசுடன் உரைத்து, விழித்தழல் சொரிய,
உவணியை எடுத்தனன் உயர்வாய். 250

பரிதிஒத்து ஒளிரும் வயிரவாள் பரிசை
பற்றியே அரிஎனப் பாய்ந்து,
துரிதப் பரவா கனனுடன் தாம்ரத்
துசனுமே பரிசையுள் ஒடுங்கி,
கருவிகள் உபய மினல்எனப் பிறங்கக்
கரவிசை கண்களால் மதித்து
விரைசுடன் உவணி வித்தியா வினோத
விஞ்சைகள் பயின்ஞர் மிக்கோர். 251

நரன்பல மனரும் முகுந்தனும் மதிக்க,
நரர்களும் நாகரும் நடுங்க,
அரன்அயன் மகவான் அமரரும் திகைக்க,
அஷ்டபா லகர்மதி மயங்க,
இருசுடர் ஒடுங்கித் திசைதடு மாற,
இகலில்மூ உலகமும் கலங்க,
தரம்தரம் நிகர்க்கச் சாரிகை உலவி,
தாரைவாள் உடற்றினர் தக்கோர். 252

தாக்குவர்; உறுக்கி நோக்குவர்; கிடுகில்
தாங்குவர்; ஒங்குவர் தடுப்பர்;
ஆக்கரித் திடுவர்; தட்டுவர்; குதிப்பர்;
அமட்டுவர்; பகட்டொடுந் திரிவர்;

---

250. பரிசை - கேடயம், உவணி - வாள்

251. கரவிசை - கைகளின் வேகம், விஞ்சை - வித்தை, இங்கு போர்க்கலை.

252. மனர் - மன்னர், இருசுடர் - சுதிரமதி; இகலில் - போரின் காரணமாக, சாரிகை - வட்டமாக மாறிமாறி ஒடுதல், இடசாரி, வலசாரி; தாரை - கூர்மையான

ஊக்கமுற் றுஉரத்து ஓட்டுவர்; கிட்டி
ஊடுவர்; கண்களை உருட்டி
நோக்குவர்; திரம்நூல் முறைதவ றார்;நேர்
அடியினில் திசைஎலாம் சுழல, 253

கயல்எனப் பாய்வர்; மறுகுவர்; பிரிவர்;
கடுப்பொடும் மினல்எனத் திரிவர்;
பயம்அறத் திகிரி கறங்குபம் பரம்போல்,
பரம்சுழல் தண்டுஎனச் சுழல்வர்;
இயல்இவன் அவன்என்று இமையரும் நரரும்
அவர்களும் மதிக்கரி தாக,
வயவர்கள் புயவல் லமையொடும் கிரண
வயிரவாள் சமர்புரிந் தனரே. 254

உடுவினம் எரிந்து வீழலாய், சேனை
ஊதையாய், ஞெகிழிவட் டமதாய்,
இடியதாய், புயலாய், சிங்கமாய், புலியாய்
எதிர்த்தெதிர்த்து இருவரும் பாய்வார்;
படிஎனும் திசையும் கோணமும் கோணமூப்பு
அண்டமும் பவனமண் டலத்தும்
வடிவுறும் மின்இந்து எனக்கிடுகு ஒளிர
வாள்அமர் உடற்றினர் வலியோர். 255

திக்குஎலாம் இவராய்த் திரிகுவார்; பூமான்
திகைத்துவெந் நெளித்திடக் குதிப்பார்;
பக்கியாய்ச் சிமித படலமேல் திரிவார்;
பவனமண் டலத்தும்ஊ டிடுவார்;
வக்கிரம் இல்இந்து உடுவின்மண் டலத்தும்
வன்மைநாட்டு அரும்சமர் முயல்வார்;
தொக்கமா ருதத்தின் சுழலொடுஞ் சுழலாய்ச்
சுழலுவர்; சுழலினும் சோரார். 256

---

253. கிடுகு - கேடயம், அமடடுவா - உருடடுவர், திரம் - (தத்தம) நிலையையும், நூல்முறை - வாட்போர்ககலைமரபு

254. கடுப்பு - வேகம்; கறங்கு - சுற்றாடி, பரம் - உடல, சிரண - ஒளிவீசும், வயிர - கூர்மை மிக்க.

255. உடுவினம - விண்மீன் கூடடங்கள, ஞெகிழி - தீ, கோணம - தெனகிழக்கு முதலிய நான்கு மூலைகள், கோண மூபபு - மிக அதிகமான தூரததை உடைய, மூப்பு மிகுதியைச் சுடடியது; பவனமண்டலம் - காறறுமண்டலம், இந்து - சந்திரன்

மினலொடு மினல்சேர்ந்து இழைகுவது எனலாய்
வெய்யவாள் வாளொடும் தாங்கிக்
கனமழை உகுப்ப, வெட்டியும் தடுத்தும்
கைப்பரி சைகளின்வாய் உகுத்து,
மனவலி உடையார் இருவர்கைப் பரிசை
வாளுமே துகள்எனப் பொடிந்த;
"இனிஎன இவனோடு ஊடும்ஆ யுதமே?"
எனத்திகைத் தே,அகம் தேறி, 257

அசிஇழந் தவன்அங் கையில்கதை ஏற்று
அர்ச்சுனன் குமரனை விளித்து,
"வசியின்வல் லமையை மதித்தனன் யானும்;
வண்மையின் அமர்புரி வதற்கே
அசலம்நே ரான தடிகரம் பற்றி
அடல்பொரு" கென,அவண் நகைத்து,
விசயவச் சிரதண் டாயுதம் அதனை
வில்லிசேய் கையினில் ஏற்றான். 258

(வண்ண விருத்தம்)
(தனதன தானா தனத்த தானன)

இடைஉடை சோராது இறுக்கி யே,கதிர்
எரிமணி பூணே திருத்தி, வாய்மொழி
வெடியிடி போலே முழக்கி மேருஅன
விகசித மோடே விமிப்பு யாசலம்
அடல்உற, ஊடா டிடக்க தாயுத-
மதைஇரு தோளால் வவித்தி சாமுகம்
நெடுவெளி மீதே சுழற்றி ஆடிட,
நிகரில் வாதாய் எதிர்த்து வீசினர். 259

---

256. பூ மான் - நிலமடநதை, வெற் - முதுகு, பக்கி - பறவை, சிமிதம - மேகம், வக்கிரம் - தலைகீழாக, இடம் புரியாக செல்லும சோளின் இயககம், சூரிய சந்திரர்களுக்கு வக்ர கதி கிடையாது.

258. சுதை, தடி, தண்டாயுதம் ஒருபொருட்சொற்கள், அசி,வசி - வாள், அசலம் - மலை; அவண் - அபபோது, விசய - வெறறியைத் தரவல்ல, வச்சிர - இடியைப்போல் தாக்கவல்ல.

259. கதிர்எரி - ஒளிவீசுகின்ற, விகசிதம் - மலாதல், அதுசசாரியை கெட்டது; விமி - விம்மி; வவி - வவ்வி, வாதாய் - போராக.

கரிகரி யோடே எதிர்த்த லாய்,அணி
கழல்அணி தானே ஒதுக்கி, நீடிய
கிரிகிரி நேராம் முழக்க மோடுஇரு
கெடிஇடி யேறே நிகர்க்க, வாவிய
வரிஅரி போலே எதிர்ப்பர்; சாடுவர்;
வரும்அடி ஊடே தடுப்பர்; ஊடுவர்;
சரிசரி யாயே புடைப்பர்; மோதுவர்;
தடிதடி யோடே தடுப்பர் ஆடலின் 260

இடிஇடி ஊடிடு இடித்தல் நேர்தடி
இடிஅடி மென்மேல் அடிப்பர்; மாறுவர்;
அடிஅடி மேலே புடைப்பர்; தாளிணை
அடிஅடி சோடாய் நடிப்பர்; தாவுவர்;
முடியிடை வாய்வாகு உரத்தை நேர்பட
முறிபடல் ஈடாய் உறுக்கி மோதுவர்;
திடமொடும் ஈடோர் தடுப்பர்; மாதரி
சிவனொடும் ஆடுஏர் திறத்தை நேர்பட. 261

இடை,துடை, - - - - - - - - - - - - - -
இருபுய மே,வாய், நுதல்க போலம்மின்
முடி,கை, விலாமீது அடிப்பர்; பூமகள்
முதுகுற வேதாள் குதிப்பர்; வான்அகடு
உடைபட வீடா இடிப்பர்; மீமிசை
உலவுவர்; கோதீ உகுக்க மோதுவர்;
கடையுகம் ஆம்ஈது எனச்சு ரோர்மதி
கதிதெரி யாதே திகைத்து வாடுவர். 262

---

260. அணிகழல் - அணிகலனாகிய வீரக்கழல், இருபெயரொட்டு; அணிதாள் - அணிந்துள்ள கால, வினைதொகை, கெடி - அச்சுறுத்தும்; சரிசரியாயே - தண்டாயுதப போராமுறைப்படி, தவறில்லாமல்;

261 ஈடோர் - இணையான இருவர், மாதரி - காளி; ஆடு - நடனமாடிய, சிவனும் காளியும ஆடியது ஏர்தந்திறம் (அழகு), இவாகளுடையது போர்த்திறம், இணையான இருவர் என்ற அளவில் உவமை.

262. சுபோலம் - கன்னம்; மின் - ஒளிவீசும், வீடா - விடடு, செயயா என்னும வாய்பாடு; கோ - கண, கடையுகம் - யுகக்கடை என மாறுக, சுரோர - தேவர்கள்.

கடல்அள றாயே கொதித்த; மீஉல-
கமும்மலை வாலே உதிர்த்த தாரகை;
அடியுடன் மாமேரு அலைச்ச லாகிய;
அடல்அகி அரசோ சகஸ்ர மாமுடி
உடைபட, வாயால் உகுக்கு மேகடு;
உமைஅரன் மால்வே தனுக்கு அயாஉற,
வடிவுஇனன் மேல்பால் ஒளிக்க, வீரிய
வயவர்க ளேபோர் மலைக்கு மோதையில் 263

அடிஅடி மேலே அடித்து உபாயம-
ததனுட னேமோ துபப்ர வாகனன்
இடியென மோதா விறல்க தாயுதம்
இடிபொடி போலாய் நொறுக்க வேஇரு
தடிஒழி போதே எதிர்த்தும் ஒர்உரை
தனைஅருள் வான்நேர் வடுத்து சாதிபன்,
வடிசி லைவாள் வேல் கதைக்கு மேபுய,
வலுஉடை யாய்வா; மலுக்கு நீ"என, 264

எனமொழி போதே முறித்த சிலைதடி
அவனும்அ வாறே விடுத்து மேசிறு
நனிநகை யோடே திறத்து மேகலை
நழுவல்இ லாதே இறுக்கி யேஇகல்
முனைஉறு போதே திடுக்க மாய்அவன்,
"முகில்நிற மாலே! எனக்கு வா"என
நினையும்மு னேமால் அகத்து மேவினன்;
நெடிதுஅமர் மேலே முயற்சி ஆகினன். 265

(எழுசீர் ஆசிரிய விருத்தம்)

உருவ மாயவன் அருப மாய்அவன் உள்ள மேஅறி யும்படி
மருவி னான்;வடி வரையை நேர்புயம் வளர விம்மினன்; ஆதலால்
நிருப னாகிய பப்ர வாகனன் நினைவில் கண்டுஅவன் நிலையினைக்
கருதி னான்;அவன் அறிய வந்துக லந்த னன்கம லக்கணன். 266

---

263. அளறு - சேறு; மீஉலகு - மேல்உலகம், தாரகை - விண்மீன்கள், அகி - பாம்பு; சகஸ்ரம - ஆயிரம், கடு- நஞ்சு, அயா - வருத்தம், வடிவு இனன் - அழகிய சூரியன், அயாஉற, ஒளிக்க மலைக்கும் ஓதையில் கொதித்த, தாரகை உதிரத்த, அலைச்சலாகிய, கடு உகுக்கும் எனபது பொருள்முடி பு.

264. உபாயமததனுடனே - உபாயம் அது அதனுடனே, அது - பகுதிபபொருள் விகுதி, மலுக்கு - மற்போருக்கு. 265. மேகலை - இடைக்கட்டு

266. உருவ மாயவன் - திருவுருவத்துடன் அங்கே விளங்குகின்ற கண்ணன்; வடவரை - இமயம்.

அங்கும் அங்குஎன இங்கும் இங்குஎன அதிர தத்தினும் உருவுடன்
எங்கு மாகிய செங்கண் மாயவ னேயி ருந்தனன்; இமையரும்
மங்கை பாகனும் அயனும் இந்த்ரனும் மற்ற வானவர் யாவரும்
சிங்க ஏறெனும் இருவர் தொந்துவ தீர வீரம்ம தித்தனர். 267

நரர்ம தித்துடல் புளக முற்றனர்; நவிலும் நாகர்ம தித்தனர்;
விரவு கொற்றவர் வீரர் மெச்சினர் மெய்ம கிழ்ந்துது தித்தனர்;
பரிச னத்துசன் விடுத எத்திரள் பண்ப தாகமு ழக்கினர்;
அரனை விற்றொழில் கண்ட வன்படை ஆர்ப ரித்ததுஅ டிக்கடி. 268

பொருவி லாத்தயி ரியப ராக்ரம புயப லத்தினர் இருவரும்
தரம்இ சைந்துள கையை மெரய்ம்பிடை தட்டி னார்;துடை தட்டினார்;
திருகும் மீசைதி ருத்தி னார்;இரு செங்கை அங்குலி யைக்குவித்து,
உரம்வி லாநுதல் மொய்ம்பின் என்புகள் ஒடிய ஒற்றினர் குத்தினார். 269

தத்து வார்அவ யவம்மி குங்கறை சழிய, வாய்கவுள் நெரியவே,
அத்த வல்லமை கொண்டு வன்சமர் ஆடி யாடி,அ டிக்கடி
மொத்தி, வாதுபி தற்றி, எற்றிவிண் முகடு தட்டஎ ழும்பியே,
இத்த லங்கள்கு ழிந்தி டக்கிரி என்ன வந்துகு திப்பரே. 270

எட்டி யேஎதிர் கிட்டி முட்டிஅ தட்டி வவ்விய தட்டையே
குட்டி வால்உகிர் சொட்டை வாளுறை விட்டுஅ முத்திஉ டல்களே
மட்டில் நெட்டரு விச்செந் நீர்உடல் விட்டி டக்கடம் மறைதர
ஒட்டி யொட்டியும் முட்டி யுத்தம்உ டற்றி னார்விக டத்தினால். 271

விகட வீரியர் மற்பு யாசலர் வித்தி யாவினோ தத்தில்வான்
அகட தாகிய முகடு முட்டஅ டர்ந்துள முந்துஅக லத்திலே
ககன மீதில்அ டர்ந்து உதைப்பர்கள்; கார்இ ரண்டுஎன மொத்துவார்;
நகைமு கம்கவுள் மத்த கம்புயம் நைய மொத்துவர் கையினால். 272

---

267. தொந்துவம் - ஒற்றைக் கொற்றையான போர்.

268. மெச்சினர் - மெச்சி, துதித்தனர் என முடிந்தது.

269. அங்குலி - விரல்; உரம் - மார்பு, மொய்மபு - தோள்; என்பு - எலும்பு.

270. கறை சழிய - உதிரம் வடிய, அத்தம் - கைகள்; எற்றி - உதைத்து.

271 சொட்டை - ஒரு படைக்கலம்; கடம் - உடல்; முட்டி யுத்தம் குத்துச் சண்டை; விகடம் - திறமை, போர்ப்பயிற்சி.

கரமு டன்கர மதுபி ணைத்து,இரு கழலுடன்கழல் பின்னியே,
பொருவி லாளர்கள் விரவு சங்கிலி பூட்டை ஒத்துஎதிர் பூட்டியே,
தரணி யில்கட கடென மிக்கொடு சகடம் ஒத்துரு ளுவர்கள் (நீள்
செருப்பு ரிந்தனர் இரவி னில்பொழு தேதொ லைந்திடும் அளவுமே. 273

இருவ ருஞ்சம இகல்பு ரிந்தனர்; இருவர் மெய்யும்அ யர்ந்தனர்;
இருவ ரும்பிண மாக வே,நினை வேஅ கன்றிடும் அளவுமே
இருவ ருஞ்சமர் இகலி யே,நினை வேயி ழந்துபி தற்றியே;
இருவ ருஞ்சம முற்று உயிர்ப்புஅற வேகி டந்தனர் களமதில். 274

(கலி விருத்தம்)

இந்த வாறுகண்டு எய்த்துஉர வோன்உயர்
தந்தி ரங்கள் தயங்கிந டுங்கின;
விந்தை யம்புய வீரரும் வேந்தரும்
சிந்தை நொந்து திடுக்கமுற் றார்களே. 275

செயம்ப டைத்துள திண்திறல் சேயன்மெய்
அயர்ந்த தும்,மற்று அரசர் கலக்கமும்,
வியந்த சேனையின் வெள்ளம்முன் நிற்பதும்
உயர்ந்து பார்த்தனன் உற்றவில் வீரனே. 276

பரந்த சேனையைப் பற்குனன் நோக்கியே,
"நிரந்த ரம்தெரி நிர்மல மாயனே!
சிரங்கொள் வேன்மனன் சேயனை; மாதவா!
திருந்தத் தேரை நடத்து"எனச் செப்பினான். 277

"நண்ப! நீசெயித் தாலும்என்? அள்இலான்
பண்பி னாற்செயித் தாலும்என்? பாய்பரி
தெண்பின் மாமகம் செய்கில்என்? போகில்என்?
புண்ப டுத்தினன் போதவும் பாதகன். 278

---

272. அகலம் - மார்பு; கவுள் - கனனம்.
273. சுழல - கால்; பொருவிலாளர்கள் - இணையற்றவர்கள்; சகடம் - சக்கரம்.
274. உயிர்ப்பு அற - மூச்சின்றி, களம் - போர்க்களம். 275. தந்திரங்கள் - படைகள்.
276. வில்வீரன் - அருச்சுனன்; சேயன் மெய் அயர்ந்ததும்; கலக்கமும், நிற்பதும் வில்வீரன் உயர்ந்து பார்த்தனன் என்பது முடிபு.
277. மனன் - மன்னன், பரிசத்துசன், சேயன் - மகன், தாம்பிரத்துசன்.
278. அள்இலான் - நெருக்கமில்லாதவன், தாம்பிரத்துசன்; இதுமுதல் நான்கு பாடல்கள் கண்ணபிரான் கூற்று.

பாவி அம்புஎன் மெய்பட்ட போதுதொட்டு
ஆவி இன்னம்வந்து ஆகமுட் பூந்திலது;
ஆவி என்தலை தாள்கிளப் பத்தகாது;
ஓவி யத்தினை ஒத்ததுஎன் அங்கமே. 279

இவனைப் போல்அல வேஇவன் தந்தைதான்;
சிவனைப் போல்பவன் சீறில் மசகமாம்;
கவனப் பாய்பரி கட்டிய அக்கணம்
சவமொத் தோம்வரு வோர்கள்ச மஸ்தமும். 280

அன்று சொன்னதுஅ றிந்திலை; யாரையும்
கொன்றி டும்படி கோபம்மி குத்தனை;
இன்றுஎன் கையினில் யாதும்செய் யேன்;எனக்கு
ஒன்று மேதெரி யாது"என ஓதுவான். 281

"மன்னில் மிக்கஉன் மாமகன் பட்டது
இன்னம் உன்மன துக்கிசைந் தில்லையோ?
துன்னு வெஞ்சமர் செய்யத்து டங்கினை;
உன்னும் உன்மன துற்றது செய்"என்றான். 282

சீத ரன்சொல் செவிநு ழைந்ததும்
போத வும்கண் பொழிந்தது தீமழை;
கோதை முன்கை கடித்தனன்; கொள்செநீர்
ஓதம் என்ன உமிழ்ந்தனன்; சீறினான். 283

வில்பி டித்தனன்; வீசைது டித்திடப்
பல்க டித்தனன்; பாகனுந் தேர்விடக்
கல்கு ழைத்தகங் கா(ள)னை ஒத்தனன்;
உற்கை யொத்த கணைமழை ஓச்சினான். 284

---

279 ஆகமுள் - உடலில், அத்துசசாரியை தொக்கது, பூந்திலது - புகவில்லை, பேச்சுவழக்கு.

280. சீறில் சிவனைப போல்பவன்; சீறில் சமஸ்தமும மசகமாம்; வருவோராகள் சமஸ்தமும் பரிசுட்டிய அக்கணம் சவம் ஒத்தோம் என்பது முடிபு; மசகம் - கொசு.

283. கோதை - முன்கையில் சுட்டிக்கொள்ளும் தோல்பட்டை, செநீர் - செந்நீர், உதிரம்.

284. கல் குழைத்த - (மேரு) மலையை (விலலாக) வளைத்த, கங்காளன் - சிவபிரான்; உற்கை - வானிலிருந்து விழும் விண்கொள்ளி.

மின்னல் மாமழை ஒத்தவெங் கோல்கள்விட்டு,
அன்ன சேனைஅ றுத்தறுத்து அக்கணம்
வன்னிதன் னைமனது உன்ன, வந்ததால்;
அன்ன வன்றனை அம்பினில் ஏற்றியே, 285

தீப தூப மறையில்தி யானத்தே,
கோப மோடு குதித்ததை விட்டபின்,
சாப மேற்சண்ட மாருதப் புங்கமும்
பூபன் ஏவினன் பொற்கரி ஏறுஅனான் 286

மடங்க லோடும டங்கலும் மூண்டபின்,
மடங்க லம்பும் மடங்கலின் அம்பையும்
மடங்க லன்னவன் வாதுடன் விட்டதே,
மடங்க லாகவும் மாய்ந்தது தானையே. 287

வடவை நேர்அச வாகனன் கோல்,வளித்
தொடை,எ மன்தொடை, துன்இடிக் கோலுமே
படைய டங்கலும் பற்றிம டிக்குநேர்
இடையி லுட்பட்டு இறந்தது தானையே. 288

சடச டென்றுஉக மாருதம் தாக்கவும்,
மடம டென்றுஎரி மன்னவன் தீய்க்கவும்,
கிடுகி டென்றுஇடி கிட்டி நொறுக்கவும்,
அடல்எ மன்கணை ஆவி அழித்தன. 289

அருக்கன் தோற்றி அடையும் வரைக்குமே
செருக்கின் பல்குனன் திண்சிலை யின்மணி
தருக்கின் ஆர்த்தது சாமமும் நாலுஎனில்
முருக்குகின் றோரை மொழிவது ஆர்கொலோ? 290

---

285. வன்னி - தீக்கடவுள், வந்ததால் என்புழி ஆல் அசைநிலை.

286. தீப தூப மறை - பஞ்சோபசார மந்திரம், இரண்டைக் கூறியது மற்ற மூன்றற்கும் உபலட்சணம்; சாபம் - வில்; புங்கம் அம்பு.

287.மடங்கல் - 1. வடவைத் தீ 2 சண்ட மாருதம் 3. இயமன். 4. இடி. 5 சிங்கம். 6. நோயவாய்ப்பட்டதைப போல. சொலபின்வரு நிலையணி. மூண்டபின் - இணைந்தபிறகு.

288. அசவாகனன் - ஆட்டு ஊர்தியன், தீக்கடவுள். மடி - நோய். இப்பாடல் முதல்பாடலின் உரையாக அமைந்துள்ளது.

290. அருக்கன் - சூரியன்; அடையும் வரை - மறையும் வரை; முருக்குகின்றோர் - போபுரிபவர்.

அக்கு ரோணிஇ ரண்டரை ஆயிரத்-
துக்கு மேலும் ஒழிந்துஇறந்து ஒய்ந்தன;
துக்க மாமிஞ்சும் சூரரும் சேனையும்
மிக்க தான விசயற்கு இறைஞ்சலால், 291

(அடுத்தபாடல் சுவடியில் எழுதப்பெறவில்லை)

வாளி நான்கையும் மந்திர விஞ்சையால்
யாளி ஏறுஅனை யானும் அமர்த்தினான்;
சூளி கையின் சுபத்தியை நோக்கியே,
"மீளி யே!"என விண்டு,எதிர் கூறுவான் 293

"வச்ரத் தேரில்நின் மன்றனை ஏற்றியே,
இச்சணம் கொண்டுஇங்கு எய்தி மருந்தினால்
அச்ச மின்றி அயர்ச்சியைத் தீர்"எனப்
பச்சை கூற, பணிந்துஅவன் எய்தியே, 294

தீர வீரனைத் தேரினில் ஏற்றியே,
வார வாள்கதை மற்றவை யேகொடு
ஈர மாக எடுத்துவந் தே,நறும்
சார மான அவிழ்தமும் தந்தனன். 295

பண்டிதம் செய்து பன்னீர் தெளித்ததே,
மண்ட லாதிபன் ஓர்வடு வின்றி,உத்-
தண்ட மாகவும் தான்எழுந்து ஒதினான்
"மண்டு தேர்இங்கு வந்ததுஎன்?" என்னவே. 296

அன்ன போதில் அமைச்சன் நடுங்கியே,
பின்னை கேள்வனைப் பேணித் துதித்ததால்,
மன்னும் மாயன் மருகனை நோக்கியே,
கன்ன லாம்மொழி காதினிற் கூறுவான் 297

---

291. விசையறகு - அருச்சுனனிடம், வேற்றுமை மயக்கம்.
293. அமர்த்தினான் - செயலிழக்கச் செய்தான்; சூளிகை - அரண்மனை;
294. பச்சை - திருமால்.
295. வார - (அவனுக்கு) உரிய; மற்றவை - வில், அம்பறாத்தூணி முதலியன; ஈரமாக - அன்புடன்.
296. பணடிதம் - சிகிச்சை, வடுவின்றி - தழும்பு கூட இல்லாமல்; உத்தண்டமாக - வேகமாக
297. அமைச்சன் - சுபத்தி; பின்னை கேள்வன் - நப்பின்னை மணாளன், கண்ணபிரான்.

" அவனும் நீயும் அயர்ந்துவி ழுந்தபின்,
சிவனொடு ஊடிய திண்சிலை யாதிபன்
கவண மீது கடுஞ்சமர் மூண்டனன்
புவனம் மூன்றுஎரித் தோன்றனைப் போலவே 298

இன்னம் நின்பகை யோனுந் தெளிந்திலன்;
அன்ன வன்றெளிந் தால்ஐயன் போர்செய்வான்;
கன்னல் வேள்அனை யாய்நினைக் காமுற்றே
உன்னை இங்குகொண்டு ஓடோடிவந் தோம்அலால் 299

ஐயன் போர்தவிர்த்து இங்குஉறல் நேர்அல;
வெய்ய கோபி விசயன் உரசினன்;
நையுஞ் சிந்தையன் நான்அறி வேன்குணம்;
வெய்ய யாரினும் மிக்கவல் லாண்மையான். 300

யாமம் ஒன்றில் அழிந்த தளத்தைநீ
ஏம மாய்இரு கண்களின் நோக்கு;அலால்;
சேம மாகநம் சேனையைக் காப்பதுஆர்
ஏமன் அன்ன பரிசன்அங்கு எய்தினால் 301

அஞ்சி னார்இங் குளர்கள்எல் லாருமே;
தஞ்ச மாஇவர் தங்களுக் கேதுணை-
யும்செய்; ஆதர வாய்இரு" என்று ஓத,மால்
இன்சொல் நன்றுஎன்று இயற்களம் நோக்கினான். 302

மஞ்சின் ஏழ்கடல் வாரிப் பெருந்தளம்
வெஞ்ச ரந்தனில் வீழ்ந்ததும், கூய்ந்ததும்,
கிஞ்சம் மிஞ்சிக் கிலேசித்து நிற்பதும்,
வஞ்ச வீரன்மற் றோரும்தி கைத்தனர். 303

---

* இக்குறியிட்ட நான்கு பாடல்களும் ஓலைசுவடியில் காணப்பெறவில்லை. ஆனால் 1963இல் படியெடுக்கப் பெற்ற காகிதச் சுவடியில் எழுதப்பெற்றுள்ளன.

298. அவன் என்றது தாம்பிரத்துசனை, சிவனொடுஊடியவன் அருச்சுனன், கவணம் - படை; புவனம் மூன்று எரித்தோன் - திரிபுரம் எரித்த சிவபெருமான்.

301. ஏமமாய் - காவலாக, ஏமன் - இயமன், பரிசன் - பரிசத்துசன்.

303. மஞ்சின் - வலிமை மிக்க; கூய்ந்ததும் - குவிந்ததும், கிஞ்சம் - சிறு பகுதியினர்; கிலேசித்து - வருந்தி.

சாது பற்குனன் வில்தொழில்; தக்கது;
பேதை வில்தொழி லேநம் பிரபல
சாதம் என்று தமைச்சின்ன மாய்நினைந்து
ஏதம் அற்றவர் இன்புற்று நின்றனர். 304

தந்தையை மண்பொதுத் தந்தை தந்தையை
சிந்தை யுள்துதி செய்துஇ றைஞ்சினன்;
கந்தன் அன்ன கனிஷ்டனை நோக்கியே,
"முந்தை யூக முறைமைசெய்" என்றனன். 305

அந்த வண்ணம் அவன்அணி செய்தபின்,
உந்து கண்ணன் உருஇங்கு நின்றிட,
மந்த ரத்தின் வடுத்துசன் தன்னைஏ
யுந்த ளர்ச்சி ஒழித்துஉடன் ஓதுவான் 306

இந்த ம்ட்டும் நிகழ்ந்தது யாவையும்
அந்த ரங்கத்து அவனுக்கு இயம்பியே,
"உந்தை உத்தரவு அன்றிஇவ் உன்னியை
மந்திரி பற்றிடல் வன்பிழை; ஐயா! 307

பப்பர வாகனன் பண்புட னேஅமர்
துப்ப தாய்இகல் செய்யத் தொடங்கினால்
அப்பிற் றேன்ஒத்து அழியும்நின் சேனையும்;
நிற்ப தோமுனம் நீயும்உன் தந்தையும்? 308

இனிப்பி தற்றிடில் என்பலன்? உன்பலந்-
தனிற்செ யித்தனை யோஅவன் றன்னைநீ?
நனிப ராக்ரமம் நாளும் அறிந்தவன்-
றனைப்ப கைத்தனை; நான்இனிச் செய்வதுஎன்? 309

---

304. சாது - சிறப்புடையது; சாதம் - முயற்சி, சின்னமாய - சிறுமையாய்; நம் பிரபல சாதம பேதை விற்றொழிலே என்று, தமைச் சின்னமாய் நினைந்து, ஏதமற்றவா இன்புற்று நின்றனர் என இயையும்.

305. மண்பொதுத்தந்தை தந்தை - உலகத்தைப் படைத்த (தந்தையாகிய) பிரமனின் தகப்பனை, திருமாலை; கனிஷ்டன் - தம்பி, சாத்தகி, இறைஞ்சியவன பப்பரவாகனன; படைவகுக்கச் சொன்னவர் கண்ணபிரான.

306. அணிசெயதல - படை வகுத்தல், வடுததுசன் - தாமபிரததுசன; ஏயும் - எயதுகின்ற.

307. உறதை என்றது பரித்துசனை, உன்னி - குதிரை.

நந்தன் வின்மையின் நற்பலன் கண்டனை;
தந்தை வின்மையில் தான்இறந் தோர்களை
நுந்தன் கண்கொடு நோக்கு"எனக் கூறலும்,
உந்தி நோக்கி, உருகிக் கலங்கினான். 310

உருகி னான்தழ லுற்ற மெழுகைநேர்;
கருகி னான்மெய்; கலங்கினன் நன்மதி;
அருகி னான்"என யான்செயும் வாறு"எனப்
பெருகு மாமனம் பேதலித் தானரோ. 311

இந்த வீரனை என்என வெல்லுவேன்?
நந்தன் வில்தொழில் மிக்குஎன நண்ணினேன்;
தந்தை வின்மை சகஸ்த்ரம்மே லாகினால்,
எந்த ஆயுதத் தால்செயிப் பேனியான்? 312

கலங்கி, நொந்து,"எக் கணையில்இச் சேனையை
அலங்கல் வேலினன் ஆர்த்துஅழித் தான்?"என
மலங்கு தாம்பிர மன்னனை நோக்கியே,
இலங்கு செந்திரு மார்பன் இயம்புவான் 313

"மூவர் வாளி முனைந்துஅவன் தொட்டிலன்;
தேவர் வாளியில் சிந்தினன்; மற்றுளார்
ஆவி பெற்றனர் அஞ்சலி செய்ததால்,
ஏவி ராசன் இகல்தவிர்ந் தான்"என்றான். 314

மால்இவ் வாறு வடிக்க, மறுக்கமாய்
மூல மான முகுந்தனை நோக்கியே,
"மேல்எவ் வாறு செய்வன்?வி சயன்திருப்
பால்எவ் வண்ணம் பகைத்துவெல் வேன்?ஐயா! 315

---

310. நந்தன் - மகன், பப்பரவாசனன். வின்மை - வில்லாற்றல்; தந்தை - அருச்சுனன்; உந்தி நோக்கி - எட்டிப் பார்த்து.

311. அருகினான் - குறுகினான். 312. சகஸ்ததிரம் - ஆயிரம் மடங்கு.

313. மலங்கு - கலங்குகின்ற.

314. மூவர் - பிரமன், மால், உருத்திரன், ஏ இராசன் - அம்பெயவதில் தலைமை பெற்றவன்.

315. மறுக்கமாய் - மனக்குழப்பத்துடன், விசயன் திருப்பால் - அருச்சுனனை, திருமரியாதை அடை, திருமுன்புக்கு என்பது போல. பால் என் உருபு இரண்டன் பொருளில் வந்தது.

நின்னை நம்பி நினக்குஅடி யான்எனும்
உன்னரும் பலம்கொண்டு உன்னி பற்றினேன்;
பின்இ ளைத்துஉரம் பீடுஅழிந் தேன்எனில்
சின்னம் நின்னது; எனக்குஅல; சீதரா! 316

எந்த வாறும் எனக்குஉர மானம்நீ
தந்துஅ ளித்தருள்; தஞ்சம்நீ அலதார்?
எந்த னுக்குத் துணைசெய்" என்று ஏத்தினன்
அந்த வீரன்முன் அச்சுதன் கூறுவான் 317

"இவனை வெல்பவர் யாவரும் இல்லையால்;
கவன முற்றுஇனிக் காரியம் ஏதுஉள?
சிவனொடு ஊடிய திண்கணை வீரனோடு
எவர்எ திர்த்துஇகல் வென்றவர்?" என்றனன். 318

உன்னு யிர்க்கு(ஒரு) உறுதுணை ஆகவே
பின்னில் வந்துனைப் பேணியும் காப்பன்யான்;
அன்னவன்ஓர் அம்பால் ஐய நின்னையும்
வின்னம தேசெயும் வீரனே ஆவனால். 319

"ஆத லால்இனிச் செய்வது யாது"எனச்
சீத ரன்வரத் திவ்விய அஸ்திரம்
ஏது வாம்படை ஈந்துஒரு தூணியும்
போத வேஅளித் தான்புயல் வண்ணனே. 320

இன்று தான்முதல் எழுதி னம்சமர்
நின்று செய்யும் நிலவரம் கூறியே,
"பின்றை ஆழி பெயர்ந்துகை ஏற்பன்யான்;
அன்று நீபத சாரிய னாகியே, 321

---

316. சின்னம் - சிறுமை, 317. உரம் - வலிமை, 318. கவனமுற்று - மனங்கலங்கி.
319. வின்னம் - பின்னம், பிளத்தல்.
320. வர - உயர்ந்த; திவ்விய - தெய்வீகமான, ஏதுவாம் - (வெற்றிக்குக்) காரணமான.
321. ஆழி - சக்கரப்படை, பத சாரியன் - ஊர்தியற்றவன்.

என்னை நாடில்என் றன்பலம் யாவுமே
உன்னில் வந்துஉள் உறையும்;அப் போதினில்
முன்நெ ருங்கி, முடுகி,என் ஆழியை
உன்னி யேபரித் தே,உர மாகவே 322

பரிதி பற்றிஅப் பார்த்தனை என்னையும்
கரம தால்ஓர் கணத்தில் நெரித்துவிட்டு,
உரவன்நீ பரியோடு அணுகிடு உந்தைபால்;
திருகி நீஅமர் செய்யஎண் ணாமலே. 323

தந்தை மூர்ச்சை தனயர் அறிந்திடில்
உந்தை தன்னையும் உன்னைஓர் அம்பினால்
சிந்து வார்பின்; செருவினை மாற்றியே
வந்தது உன்னிடம்; ஆதலி னால்இனி 324

இகல்ஒ ருத்தரோ டேஎதிர்க் காமல்நீ
அகல்தி" என்றுஅறி வானது கூறியே,
தகுத னஞ்சயன் தன்னுடன் போரிட,
முகில்நி றத்தன் மொழிந்து;அகன் றானரோ. 325

உன்னும் முன்உறும் உத்தமன் சொற்படி,
இன்னல் இன்றி இரதத்தில் ஏறியே,
வன்ன மோலிவச் ராங்கி புனைந்து,வில்
தன்னை ஏந்தி, சயந்தனம் ஓட்டியே, 326

வெய்து தேர்செல, வீரிய கர்ச்சனை
செய்து, வில்லியைச் சீறிஉ றுக்கியே,
"எய்து கொன்றனை யோஎன் தளங்களை?
வைது கொன்றனை யோ?மக வான்சுதா! 327

---

322. உன்னியே - தியானித்து; உரமாகவே - வலிமையுடன்.

323. பரிதி - சக்கரப்படை.

326. வன்ன மோலி - நிறம்மிக்க கிரீடம்; வச்ராங்கி - வைரச்சட்டை.

327. மகவான் சுதா - இந்திரன் மகனே.

தாட்டி யாகத் தளத்தை முருக்கிய
மேட்டி யும்சிலை வித்தையும், உத்தியும்
பூட்டு கோலின் புயவலி என்முனம்
காட்டிடாய் உந்தன் கைவிசை காண்பன்யான். 328

வின்முன் நீவிச யன்எனும் வீரியம்
என்முன் காட்டுவது இன்றி,என் சேனையை
உன்ம தாந்தத் தினால்ஒழித் தாய்;பசுப்
புன்முன் காய்வதொத் தாய்என்முன் போரிலே. 329

நீஎம் மாத்திரம்? நின்வின்மை ஆண்மைஎன்?
பேயின் ஆடிய பித்தனும் மாயனும்
ஆயி ரந்தலை யான்,அயன் நின்னுட-
னேஇயைந் திடினும் என்னை வெல்வையோ? 330

வனம்எ ரித்ததும், மாதிரம் வென்றதும்,
அனக னாம்அர னோடுஅமர் செய்ததும்,
வினைநி சாசரர் வீந்திட வென்றதும்,
புனித மாமணிப் பொன்முடி பெற்றதும், 331

பார தச்சமர் பண்ணிய வீரமும்,
ஆரல் அற்புதத் தேர்வில் அடல்களும்,
பார முற்ற பலமதம் மீறியோ
தீர மாமகம் செய்யத் தொடங்கினாய்? 332

அசுவ மாவது? யாகம தாவது?
விசய னாவது? வேங்கையின் வாய்ப்படும்
பிசிதம் எய்தினும், பீடில் பிடித்தமா
வசம்உ னக்கு வராதொருக் காலுமே. 333

---

328. மேட்டி - இறுமாப்பு.

329. மதாந்தம் - இறுமாப்பினால நேர்ந்த குருட்டுத்தனம்.

330. பேயின் - பேயைப் போல; ஆயிரந்தலையான் - ஆதிசேடன்.

331. வனம் - காண்டவ வனம், அனகனாம் - இயல்பாகவே மலங்களினின்றும் நீங்கியவராகிய, நிசாசரர் - அரக்கர்; வீந்திட - அழிய, பொன்முடி - இங்கு இந்திரனின் கிரீடம்.

332. ஆரல் - அக்கினிதேவனால் அளிக்கப்பட்ட; அடல் - வெற்றி.

வெறுமை யாகிய வீம்பும்ம தாந்தமும்
கருவம் மாய்க்கஉன் கிள்ளையைப் பற்றினேன்;
உறுதி யாய்அடைந் தோர்கள் அழிந்ததும்
அறிகி லாய்கொல்? உனக்குமொர் ஆண்மைஏன்? 334

சந்தத மும்ச காஉனக் காய்உடன்
வந்த மாலும்என் வாளியில் நொந்தனன்;
புந்தி யோடுஅப் பொதுவனை யுங்கொடு,
வந்த பாதையில் இன்றுசெல் மாளும்முன். 335

அன்றி வின்மை அடாது எந்தன்முன்
ஒன்றும்" என்ன உரைத்திடக் கன்கள்தீ
நின்று எரிந்திட நெஞ்சுஅழல் பொங்கிட,
துன்று வீசை துடிக்க அடிக்கடி 336

ஆயும் நுண்ணறி வாளர்கள், வீரர்கள்
பேய தென்னவும் பீடுரை யார்;குரை
நாய றத்தில் நரர்குரை யார்;தடி
காய ஓங்கிடில் கதறி ஓடுமால். 337

சேயன் என்னஎன் சேய்தனைக் காத்திலாய்;
பாயும் கீசகம் போல்பல தேரினில்
நீய லைந்துலைந் தாய்;நினைந் தாயிலை;
வாய்உனக்கு ஏனோ? மடையா மூடனே! 338

மதம்உ ரைத்தநின் வாய்கிழிப் பேன்"எனக்
கொதிகொ தித்து குணத்தொனி செய்தனன்;
முதிய பல்லுயிர் முப்புவ னங்களும்
பதைப தைத்துப் பயந்துந டுங்கின. 339

---

333 பிசிதம் - ஊன்; பீடில் - பெருமையோடு.

334. கிள்ளை - குதிரை

335. சகா - தோழன்; பொதுவன் - இடையன், கண்ணன்.

337. நாய்அறம் - நாயின் இயலபான குணம்.

338. சேயன் - இளவயதினன், கீசகம் - குரங்கு.

ஒன்று பத்துநூறு ஆயிரம் நூறுநூறு
என்று ழந்தவை ஈறுஇல தாவதாய்
நின்று கோல்மழை நீப்பற வீசியே
அன்று முப்புவி யாவும் அடைத்தனன். 340

புவனம் மூன்றும் பொழிகணை யால்அடைத்து
அவன்ந டாத்துஅணித் தேர்அசைவு அற்றிடச்
சிவனொடு ஊடிய திண்சிலை யாதிபன்
சவியி னோடுஅடைத் தான்சர மாரியால் 341

(எழுசீர் ஆசிரிய விருத்தம்)

தனஞ்சயன் விடுத்த சரம்தனைச் சரத்தால்
தாம்பிரத் துவசனும் அறுக்கக்
கனஞ்சொரி முகிலின் கடுப்பினில் கடுப்பாய்க்
கார்முகத் தினிற்கர விரைசாய்
மனஞ்செய்து பொழிய அவன்தனால் இயலும்
மட்டும்மென் மேலுமே தடுக்க,
அனந்தம்மே விடகை, மனம்தடு மாறி,
அலமலந்து அயர்ந்துஉணர்வு அழிந்தே, 342

அக்கமது இறுக மூடிவில் நீத்தே
அரவணை யனைமனது உனினான்;
சக்கிரி குமரன் தொடும்கணை மழையால்
சரமிடு குடம்பைஒத் தவன்முன்
புக்கினன் முகுந்தன்; தேர்துசம் இழந்து
பூமியில் அயர்ந்தவன் தன்னை
மிக்கபங் கயப்பூங் கரத்தினில் எடுத்தான்
மெய்கணை பொதிந்தவீ ரியனை. 343

---

340. உழந்தவை - பழகியவை; நீப்பற - இடைவிடாமல்.

342. கடுப்பு - வேகம்; கார்முகம் - வில்;

343. அக்கம் - கண்; அரவணையன் - பாம்புப்படுக்கையை உடைய திருமால்; சக்கிரி - இந்திரன்; சரமிடு குடம்பை - அம்பறத்தூணி.

வருக்கைமுட் புறம்போல் கணைபொதி காயம்
மன்னவன் குமரன்மெய்க் கோலத்
திருக்கையால் நீத்து, அயர்ந்திடுஞ் சோபம்
தீர்த்து,நன் மொழிகொடு தேற்றி
"தருக்கையான் தனக்கே உரசுறக் கொடுஞ்சொல்
சாற்றினாய்; சலஞ்செய்வ னாகில்
இருக்கைஏது அமரர் மக்கள்நா கருக்கும்?
ஈடுஅவன் தனக்குஎதிர் ஆரே? 344

தன்பலம் அறியாது அம்பலஞ் செலுத்தத்
தக்கதாய் வாய்சொல்ம தம்போல்,
முன்பல முடன்ஒத்து இகல்புரி யாமல்
முரண்அழிந் தேவிழிப் பதும்ஏன்?
நின்பலம் ஊக்கம் நிலைவிட லாமோ?
நினைவுஅறிந்து அமர்பொரு" எனவே
அன்பின்வேறு இரதத்து அவனைவைத்து "அறையாதி
யான்வரல்;" எனச்சொலி அகன்றான். 345

கேசவன் அகன்ற போதுஇவன் வீர
கர்ச்சனை செய்து,இடம் தேறி,
வாசவன் குமரன் தனைமதி யாமல்,
வாளிமா மழைஎனப் பொழிந்தான்;
தேசவன் சினந்து விடுசரம் அனைத்தும்
சின்னபின் னஞ்செய்துஇ ரதத்தில்
மூசவன் கணைகள் பற்பல சொரிந்து
முடுக்கினன் திடுக்கிட எவரும். 346

---

344. வருக்கை - பலாப்பழம், தருக்கையான் - செருக்குடையவன்.

345. அறையாதி - சொல்லாதே.

346. வாசவன் குமரன - இந்திரன் மகன், அருச்சுனன், தேசவன் - புகழ் மிக்கவன், அருச்சுனன், மூச - மொய்க்கும்படி. சுவடியில பாடலஎண் *346* இருமுறை எழுதப்பட்டுள்ளது. இப்பதிப்பில் தொடர் எண் திருத்தப்படடுள்ளது.

(வண்ண விருத்தம்)
(தனனந் தனனந் தனனந் தனனா
தனனந் தனனந் தனனந் தனனா)

இகல்கொண் டவர்வம் புடன்அம் புகளால்
எரிகொண் டனஎண் டிசை;அண் டம்எலாம்
புகைகொண் டனஎங் கும்; நிரந் தரமே
பொழிகின் றதுஒழிந் திலார்;சந் ததமே
உகள்கின் றதுஅண் டம்அகண் டமுமே;
உடலும் சமர்மண் டியதுஎங் கணுமே;
அகழ்கின் றமண்அஞ் சும்இரண் டினுமே;
அடல்கின் றதைஎங் கும்மறந் திலவே. 347

சரமும் சரமும் சமரம் செயவே,
தனுவும் தனுவும் கம்நிமிர்ந் திலவே;
கரமும் கரமும் கைமறந் திலவே;
கதழ்வும் கதழ்வும் கணம்நின் றிலவே;
எரியும் புகைஎங் கும்அமர்ந் திலவே;
இதையம் சினம்மிஞ் சுதல்நின் றிலவே;
திரியும் சுழல்,பம் பரம்வண்டு எனவே
திறல்கொண் டஇரண் டுகொடிஞ் சியுமே. 348

இரதங் கள்இடம் சுழல்வண்டு எனவும்
திசைஎங் கும்இயைந் துவலம் .....
பரியும் கிரியும் சரியும் படியும்
பயிலும் கயலும் புயலுஞ் .....
சரியன்று எனவும் பயமும் கொளவும்
சலமண் டலமும் கிழியும் படநஞ்சு
அரவின் கிரிடம் சிதறும் கதறுண்டு;
அழல்நஞ்சு உமிழும் பையுடன் புரளும். 349

---

347. உகள்கின்றது - குதிக்கிறது, இங்கு தடுமாறுகிறது, இரண்டு - இருவரின் .அம்புகள், கணைகள் போர்புரிய மறநதில என்க.

348. சமரம் - போர், கம - தலை, கதழ்வு - கினம், கொடிஞ்சி - தேர், ஆகுபெயா, இரண்டு கொடிஞ்சியுமே திரியும் என்பது முடி பு

349. சலமண்டலம் - கடல்; அரவு - இங்கு ஆதிசேடன்

சிலஅம்பு அகிலம் திசையும் திரியும்;
சிலஅம்பு அரவின் தலமும் செருமும்;
சிலஅம்பு அரவும் கடலும் பருகும்;
சிலஅம்பு எழுஅண் டம்இடந்து உருவும்;
சிலஅம்பு உருவும் குலஎண் கிரியும்;
சிலஅம்பு உருவும் கிரியும் ககனும்;
சிலஅம்பு இருவெங் களமும் செருமும்;
சிலஅம்பு இரதங் களினும் செருமும். 350

சிவசங் கரசம்பு உமை,அம் பிகைநேர்ந்து
இதயம் பயம்மிஞ் சிநடுங் கினர்;மண்
குவடுஅங் கம்அழிந் துசிதைந் திடஒண்
குலிசன் பிரமன் சுரர்அஞ் சினர்;திண்
கவின்அண் டம்அடர்ந் துபிளந் திடவன்
கரிஅம் புயல்மன் பின்ஒடுங் கின;அம்
பவமும் சுவறுண் டதுகண் டுமனம்
பயம்இன் றிஇருந் தவர்உண் டுகொலோ? 351

இகல்கின் றனர்இந் தவிதம் தறுகாது;
எவரும் பயம்மிஞ் சினர்;அம் புவி,நஞ்சு
அகியின் புரம்,அம் பரமும் சுழல்கொண்டு
அலைகின் றன;எண் கிரியும், கரியும்,
தகும்மஞ்சு இனமும் குகைதங் கிடவும்,
சலஅம் பரமும் தழல்பொங் கிடவும்,
குகனும் தவன்மைந் தனும்முன் பொருதும்
குணம்இங்கு இவரும் பொருவும் திறமே. 352

---

350. அரவின் தலம் - நாகலோகம், அரவும் - ஒலிக்கும்.

351. குலிசன் - வச்சிராயுதன், இந்திரன், சுரி - திசையானைகள், புயல்மன் - மேகங்களின் மன்னன், இந்திரன், பவம் - கடல்.

352. அகி - பாம்பு, மஞ்சு இனம் - மேகக் கூட்டம்,சல அமபரம் - நீர் நிறைந்த கூடல், தவன் - சூசிபர்; தவன்மைந்தன் - சூரபதுமன்

உரமும் களமும் குமிழும் குளம்என்பு
உடலும் குடலும் சிரமும் புயமும்
கரமும் செவியும் கவுளும் பல்களும்
கழல்சங் கம்உழந் துபெருந் துடையும்
பரமும் புறமும் குழையும்; துசமும்
பரிஉந்து இரதங் களுடன் சிலையும்
பொருகின் ற;துரந் தரர்மஞ்சு எனவும்
பொழியும் சரமும் சரமும் செலவே 353

(தனதன தந்தா தனதன தந்தா
தனதன தந்தா தனதானா)

இருவர்க ளும்சீர் சரிசமன் (வெ)ம் போர்
இகலஇ வன்கோல் விசையாய்மேல்
சொரிதர வும்,கோ பரிசன்ம கன்தேர்
துசம்அரி யும்தூள் பட,மேலில்
உருவின்உ ணர்ந்தே, மதிகன்த ளர்ந்தே,
உணர்வது அழிந்தே, புவிமீதில்
அரசன்அ ருஞ்சேய் விழவும்,அ றிந்தே
அரிஅவன் முன்பா கினன்நேராய். 354

உடலில்வி ழுங்கோல் அதனைஇ டந்தே,
உடல்பெரு கும்கா யமும்மேவத்
தடவ,அ யர்ந்தோன் உணர்வு தெளிந்தே,
சரணம்வி ழுந்தே, புகழ்வேளை
கடவுள்க ளிந்தே உரைசெய்வன், "உன்போர்
கரம்மெய்ம றந்தாய்; இனிமேலாய்
அடல்செய்மு னைந்தே; நினைவது டன்கோல்
அமர்கள்தொ டங்காய்;" எனவேதான். 355

---

353. குமிழ் - மூக்கு, புறம் - முதுகு; குழையும் - வாட்டமடையும்

354. இவன் என்றது அருச்சுனனை; கோ பரிசன் - பரிசத்துசனாகிய அரசன்.

355. கடவுள், "மறந்தாய், அடல்செய், தொடங்காய்" எனவே தான் சுனிந்தே உரைசெய்வன் என இயையும்.

திருமன வன்போ மளவில்வ ருந்தேர்
திகழஇ ருந்தே நெடிதான
துருணமது ஒன்றே கையினில்இ சைந்தே
சுடுசரம் நின்றுஏ வினன்;மால்நேர்
தருமன்ம கன்சோ தரனும்வெ குண்டே
சரம்எய, நின்றார் இருவோரும்
வருகணை வென்றே அடைமழை என்றே
வயவர்மு னைந்தார் அமர்தானே. 356

தடவரை யும்பூ வொடுகக னம்பா-
தலம்முழு தும்கோல் மயமாக
விடும்சரம் நின்றே இகலுடன் வென்றே
விடவும்அ டர்ந்தே பலவாளி
இடையினில் நின்றே குதையைஅ ரிந்தே
இறகதுஒ டிந்தே இருகூறாய்
நடுவுள்இ டந்தே சிலதுபி ளந்தே
நகநகம் என்றே விழும்வாளி 357

பரவைகு ழம்பா கினகணை நின்றே
பயில்அமர் கொண்டா டியதாலே;
வரைகள்த கர்ந்தே துகள்பட வும்கோல்
மயம்அதில்; விண்பூ விடைவாளி
உருகின; ணண்ணோர் அமரர்ம னந்தான்
உலரினர்; கண்டோர் பயமாக
இருவர்வி டும்கோல் திசைகள்நி றைந்தே
எரிகள்ப ரந்தே இகலூடே. 358

துரகதம் ஐந்தார் கதிகள்பு ரிந்தே,
சுழல்நிகர் கொண்டே, நடமாடச்
சரிசரி என்றே, தனுவிசை யொன்றா,
சரம்எய்து நின்றார் இருவோர்கள்;

---

356. திருமனவன் - திருமகள் கேள்வன, துருணம் - வில், மால் நேர் - அருச்சுனன் திருமாலுக்கு இணை; தருமன் மகன் - இயமனின் மகனாகிய யுதிஷ்டிரன், சகோதரன் - தம்பி, அருச்சுனன், நினறார வயவர் இருவோரும அடைமழை என்றே வருகணை வென்றே அமர்தான் முனைநதார் என்பது அந்வயம்.

357. பூவொடு - நிலவுலகம், ககனம - மேல் உலகு, நகம்நகம் என்றே - துனடுதுண்டாக.

358. ணணணோர - நிலவுலகினர, உலரினர் - வாடினர்.

துரகம்நி றைந்தே, கவசம்நி றைந்தே,
துவசம்நி றைந்தே, பலவாளி
கரமும்நி றைந்தே, சிரமும்நி றைந்தே,
கழலும்நி றைந்துஓ டினகோல்கள். 359

கிரிகிரி என்றே, கரிகரி என்றே,
கிளர்அரி என்றே, எதிராகச்
சரிஅமர் நின்றார் தனுவளை வும்சீர்;
சரவிசை யும்சீர்; இருவோர்கள்
இரதந டம்சீர்; வலவர்க ளும்சீர்;
இவுளிந டம்சீர்; திறல்மேவு
பரிசன்ம கன்கோல் விசயன்வி டும்கோல்
பகையம ரும்சீர்; பயில்சாரி 360

கரவிரை சும்சீர்; விசயன்வி டுங்கோல்
கனம்நிகர் கொண்டே பொழிபோதில்,
பரிசன்அ ரும்சேய் இரதம்உ டைந்தே
பரியும்அ ழிந்துஓர் உயர்தேர்மேல்
விரைவின்இ ருந்தே, சரமெய்து நின்றான்;
விசயனும் வெங்கோல்சொரி போரை
அரசர்பு கழ்ந்தார்; அரவர்உ வந்தார்;
அமரர்ம கிழ்ந்தார் அடுபோரை. 361

(தனன தனன தந்த தனன தனன தந்த
தனன தனன தந்தனா)

விசயன் விடுச ரங்கள் அவனி முழுதும் அண்ட
வெளிதி சைகள்அ டங்கவே
இசைய, மிகநி றைந்த திரைபு விகள்பு தைந்தது
எழுக னமது எங்குமே;

---

359. துரகதம் - குதிரை, ஐந்து சுதிகளாவன - மயூரசுதி, மல்லசுதி, வானரசுதி, விடப சுதி, வியாக்ர சுதி, ஒனறா - ஒன்றி.

360. சிரிகிரி என்றே - மலையும் மலையும மோதுவது போலும, அரி - சிங்கம், சீர் - திகரானவை

361. கனம் - மேகம், அரவா - நாகர்.

நிசித ககஇ னங்கள் செறிய, எழுத லங்கள்
நிறைய, உகளு கின்றநேர்;
அசைவி லவனும் அம்பு மழைசொ ரியஇ ரண்டும்
அதிக இகல்மு னைந்ததே. 362

முனையை முனைபி ளந்து, முனையை முனைஅ ரிந்து
முனையை முறிய வென்று,மேல்
அனிலம் அனிலம் என்றும், அனலும் அனலும் என்றும்,
யமனும் யமனும் என்றும்,வான்
மினலும் மினலும் என்றும், வெடியும் வெடியும் என்றும்,
விசிகம் விசிகம் என்றும்,போர்
எனைய சிறகுஅ ரிந்தும் இடைக ரைகள்பி ளந்தும்
இகல்வ லிமைபு ரிந்தவே. 363

திரிபு வனம்அ டங்க வடவை எரிப ரந்த;
திரைகள் அறவ றண்ட;மேல்
உறுபு கைகள் நிறைந்த; யுகம்இ றுதிஇது என்ற
உணர்வில் நிலைக லங்கியே,
எறுழ்கி ரிகள்ந டுங்க, இமயம் அலறு கின்ற;
இமையர் அலறு கின்ற;நீர்
உறுமன் அலறு கின்ற; உலகர் அலறு கின்ற;
உலகி னர்கள்அ டங்கவே. 364

அரவ நிலம்ந டுங்க, அவனி நடுந டுங்க,
அமரர் தலம்ந டுங்கவே,
கிரிதி கிரிந டுங்க, இமய பருவ தங்கள்
கிடுகி டெனந டுங்கவே,
பரிதி மதிந டுங்க, வழிதி சைகள்பெ யர்ந்த
பரவும் உடுவி னங்களே;
தரணி மிசைஉ யர்ந்த சடிலம் மருவு கங்கை-
தனிலும் அழல்ப ரந்ததே. 365

---

362 நிசித - கூர்மையான, ககம - அம்பு, அசைவிலவன் - தன் நிலையில் உறுதியானவன்

363 அனிலம - காற்று, விசிகம - அம்பு

364. திரிபுவனம - மூவுலகம, எறுழ - வலிமை மிக்க, நீர்உறுமன் வருணன், உரகா - நாகர.

365. கிரிதிகிரி - சக்ரவாளமலை, பரவும - பல்கியுள்ள, உடுவினம் - விண்மீன் கூட்டங்கள், சடிலம் - சடை (சிவபிரான் சடை)

இவிதம் இருவ ரும்கை விரைசி னொடுச ரங்கள்
எழிலி சொரிவது என்றுமேல்
விவித மொடுசொ ரிந்து, நிகர எழுதி னங்கள்
விரவும் இரவும் உடன்றபோர்;
அவன்மெய் இவன்மெய் எங்கும் மல்கி மிகுச ரங்கள்
அளறு படஉ கன்றவே;
உவள லுடன்அ யர்ந்தும், அளவில் முறைதெ ளிந்தும்,
உபயர் அமர்தொ டங்குவார். 366

இரவு பகலும் இந்த விதம் அடல்பு ரிந்த
எழுதி னமதுஅ கன்றமேல்,
கரவி ரைசுமி குந்து, கவிம ருவுது சன்பெய்
கணைகள் மிகஅ றைந்ததால்
அரபொ டியைநி கர்ந்த சிலைஇ ரதம்அ டங்க;
அவனும் மதிகலங்கி வேறு
இரதம் மருவும் முன்பு . . . . . எனவ ழிந்தது
இவன்வில் உதைச ரங்களால். 367

கடுகி இரதம் ஒன்றில் உதயம் உற,உ தைந்த
கணையில் அதும்அ ழிந்ததால்
இடியது எனஅ திர்ந்துஓர் இரதம் உறஅ ழிந்தது
இகலின் விடுச ரங்களால்;
முடுக மறுர தம்கொடு அதுவும் அழிய இந்த
முறைஐ நூறுஉ யர்ந்ததேர்
பொடியும் அளவில் நைந்து வயிர மதனில் அமைந்த
பொருவில் ரதம்அ டைந்ததே. 368

அதனின் மிசைஇ ருந்து(ஓர்) அறுபது எழுபது அம்பை
அடல்த னுவில்உ தைந்ததால்
மதவில் விசயன் அம்பு மழைக ளதுசொ ரிந்து
வருக ணைகள்பி ளந்துதேர்

---

366 எழிலி - மேகம், விவிதமொடு - பலவகையாக; நிகர - மொத்தம், உகன்ற - சிந்தின; உவளலுடன் - துவண்டு, உபயர் - இருவரும்.

367. கவி மருவு துசன் - அநுமக் கொடியை உடைய அருச்சுனன். அரபொடி - அரத்தில் அராவும் போது உதிர்ந்த இரும்புத்தூள். அரப்பொடி என இருக்க வேண்டியது சந்தநோக்கி விகாரம் பெற்றது.

368 மூன்றாமடியில் நூறுயர்ந்ததேர் எனபது சந்தக் குழிபமில் பிழைபடடது தனன தந்தனா என வரவேண்டிய இடத்தே தான தந்தனா வந்தது. மைந்த - வலிமைமிக்க.

புதைச ரமதுஅ டங்க முனைகள் சுனைஅ ழிந்த
பொழுதில் இவன்வெ குண்டுகூர்
முதிய பலச ரங்கள் பலதும் விடஅ. ழிந்து
முடுகு ரதம்ஒ ழிந்ததே. 369

வலிய ரதம்ஒ ழிந்த பொழுதில் மனம்வெ குண்டு
வயிர மதில்இ சைந்ததேர்
குலிச மதும ழுங்க அடலின் வலிமை கொண்ட
குவடின் உறஇ ருந்ததால்
விலியும் நகுச ரங்கள் விடவும் அதுஅ ழிந்துஇ-
விதம்இ ரதம்அது எண்பது
எழில்இ ரதம்அ ழிந்தது அவன்மி கவும்மு னைந்துஓர்
அரியின் அரியில் உந்தியே, 370

வடவை என,ம டங்கல் எனவெ, இருபது அம்பு
மதுகை யுடன்உ தைந்ததால்,
அடலி னுடன்நி றைந்து, புடவி நடுந டுங்க
அணுக, இவன்வெ குண்டு,
தொடைகள் கொடுபி ளந்து, சுழல்செய் பகழி ஒன்று
தொடவெ குளி,ஓர் அம்புதான்
விடவும், அவன்இ ரண்டு சரமும் இருர தங்கள்-
மிசைவன் மையின்அ றைந்ததே. 371

அதிக விசைமி குந்த சுழல்வி சிகம்அ வன்றன்
அரியின் வலிதுஅ றைந்ததே
விதம தொடுசு ழன்று, கிறுகி றெனமி குந்து,
விரைசின் உறுக றங்குநேர்
பதறி அரிதி ரிந்த பொழுது மதிஅ ழிந்த
பரிசன் மகன்இ ரும்கைகால்
அதுவ லியும்மெ லிந்த; அரியை மனம்நி னைந்த
அளவில் அவன்நெ ருங்கியே. 372

---

369. சுனை - கூர்மை, கூர் முதிய - கூர்மை மிக்க; பல - வலிமையான.

370. குலிசமது மழுங்க - வச்சிராயுதமும் பின்னடையும்படி, அரியின் - சிங்கத்தைப் போல; அரியில் - தேரில்

371. மதுகை - வலிமை; புடவி - உலகம், தொடை - அம்பு; வெகுளி - கோபித்து.

372. விசிகம் - அம்பு; அறைறதே - மோதியவுடன், இரும் - பெரிய, இங்கு வலிமை மிக்க.

இரத மதுசு ழன்றும் அலையும் விசைத கைந்து,
இளையும் அயர்தெ ளிந்தமேல்,
உரைசி லதுபு கன்றும் உறுதி மொழிந வின்றும்
உவண துசன்அ கன்றன்;வா-
னரது வசன்இ ருந்த இரத மதுசு ழன்று
நகுக கனமது ஒன்றவே,
தரம துடன்அ றைந்து திருக, அதுபு ரண்டு
தரையை முடுக வந்ததே. 373

உருள்உ யரநி வந்த; தலைகு புறவி ழுந்தது;
உறுதி மதிக லங்கியே
அரியை இவன்நி னைந்த அளவில் உருவில் நின்று
அறிய அலைவ தன்றியே
விரைவி னொடுத கைந்து புவியில் மெலஅ மர்ந்து
விசய மகிபன் நெஞ்சிலே
கரம தொடுவ னைந்து, "வெருவல் ஒழிதி" என்று
கழற அயர்வுஅ கன்றதே. 374

(எழுசீர் ஆசிரிய விருத்தம்)

அயர்ந்தனன் எனவே தாம்பிரத் துவசன்
அர்ச்சுனன் தனைவிரைந் தெடுக்க
வியர்ந்துவந் திடவே, ஒருகதிர் வேலை
வீசினன் ஆங்கவன் நுதலில்;
பயந்துஅயர்ந் திடவே நெற்றியைப் பிளந்து
பாய்ந்திடச் சோர்ந்துஅவன் வீழ்ந்தான்;
சயந்தனப் பரியைச் செவையுற மாயன்
தான்இயல் பாம்படி செய்தான். 375

அந்தநேர் அயர்ந்த தாம்பிரத் துவசன்
அயர்ச்சிதீர்ந்து எழுந்துஒரு வேலை
உந்தியே விசயன் மார்பகம் குறிசெய்து
ஒச்சினன்; அதனைஓர் அசியால்

---

373. இளையும - சோவுறும், உவணதுசன் - சுருடக்கொடியை உடைய திருமால், வானரதுவசன் - அநுமக்கொடியோன்

374. உருள் - சக்கரங்கள்; நிவந்த - மேலேறின, தகைநது - (கீழே வீழ்வதைத்) தடுத்து நிறுதநி. வெருவல - அச்சத்தை. 375. சயநதனப்பரி - தேர்க்குதிரை.

சிந்தியே, பாய்ந்து, சிரசினை அறுக்கச்
சீறலும், சிலதனை நிறுத்தி,
சுந்தர மாயன் அவன்உரம் குழிந்து
சுழன்றிட உதைத்தலும் சோர்ந்தான். 376

உலகுஅளந் தவன்தாள் உதையினால் மயங்கி
உணர்வழிந்து அவன்அயர்ந் ததன்பின்,
சிலைவலான் மாயன் திருமுகம் நோக்கி,
"தேவரீர் தான்ஒரு தேரும்
விலகியான் ஒருதேர் மீதிலும் இருந்தால்
வெல்வதுஎவ் வழிவில காதுஎன்
இலகிய ரதத்தை நடத்தும்"என்று இசைத்தான்;
ஈண்டமார் பகனும்மெய் மகிழ்ந்தே, 377

பரிதனைக் கரத்தால் நீவியே, மெலியும்
பற்பல காயமும் மாற்றி,
அரிதனில் பிணித்து, வில்லியைத் தேற்றி,
அதிரத மீதினில் ஏற்றி,
துரிதமாய்த் தார்க்கோல் தகையுடன் இரதம்
தூண்டுதற்கு இயைந்தஅப் போதில்,
பரிசகே தனன்சேய் பல்கடித்து எழுந்து
பகவனை உறுத்தியே பகர்வான் 378

"உனக்குஇது அடைவோ? எவர்க்கும்நண் பொதுநீ
ஒதுங்கியே, ஒருவன்வா ரமதாய்,
முனைத்தலை யினில்மேல் கால்தலை கீழாய்
முடுக்கிய ரதத்தைநேர் செய்தாய்;
எனைச்சினந்து உதைந்தாய்; எனதுமே வலன்பால்
இழிதொழில் செய்திடத் துணிந்தாய்;
மனத்துள்நீ இருக்க, இவனுடன் அயல்இவ்-
வாறும்வந் தால்என செயலாம்? 379

---

376. அசி - வாள், சிலதன் - தோழன், அருச்சுனன், அவன் என்றது தாம்பிரத்துவசனை.

377. சிலைவலான் - அருசுசுனன், ஈண்ட - திண்ணிய.

378. அரிதனில் - தேரில்.

379. அடைவோ - பொருத்தமாகுமா, வாரமதாய் - பட்சமாய்; மேவலன் - பகைவன், இழிதொழில் என்றது தேரோட்டுவதை.

எனதுவல் லாண்மை நீஅறிந்து இருந்தும்
இவ்விதம் செய்ததேன்? நன்றுஉன்
முனையையும் விசயன் முனையையும் இருவர்
மொய்ம்பையும் களைகுவன்" என்றே
வினையமால் பயிற்றும் முறைசொலி, ஒருதேர்
மீதிலுற்று எதிர்த்து,வில் வளைத்தான்;
அனதுகண்டு, "இனிமேல் அர்ச்சுனா! பதன-
மாய்அடல் தொடங்கு"என அறைந்தான். 380

சீதரன் மாயை அறிகிலன் சிலதன்
திருவுரன் தனதுசார்பு என்றே,
"நாதனே! இரதம் நடவும்;ஈடு இவனோ
நரன்றனக்கு" எனச்சிலை வளைத்து,
கோதுவிற் கணைகள் குயில்எனப் பணித்தான்
குழைந்தவில் நிமிர்வற மென்மேல்;
ஆதவன் நடுங்கித் திசைதடு மாற,
அவனி,வான் திசைபுவி புதைந்த. 381

இருவரும் சமான மாகஓர் கடிகை
இகல்தொடங் கினர்;அவன் விடுகோல்
சருகதாய் இவன்ஓர் தழல்என எரிக்கத்
தாம்பிரத் துவசன்மெய் ஒடுங்கித்,
குருதிமெய் ஒழுக நடுங்கியே மூர்ச்சை
கொண்டவ னிடம்திரு மால்போய்,
மருமமீது அறைந்து அயர்ச்சிதீர்ந் திடவே
மலர்க்கையி னால்உடல் நீவி, 382

மெய்புதைந் திடுவெங் கோல்களைப் பிடுங்கி
விட்டு,"இனி நினைவொடு சமர்செய்;
கைம்மறந் தனையோ வந்துநான் காத்தல்
கருதிடாது?" எனஅகன் றனன்;மால்

---

380. முனை - செயல், மொய்ம்பு - வலிமை.

381. அறிகிலனாகிய சிவதன் என்க; திருஉரன் - மாமகள் வதியும் மார்பன்; கோது - துளைக்கின்ற; குயில் - மேகம்.

தொய்வுஅறத் தெளிந்துஓர் வச்சிரத் தேரில்
தொற்றியே, கையிற்சிலை எடுத்து,
வைசிறந் திடுகோல் மழைஎன வீச,
மாற்றினன் சினத்தில் வில் விசயன். 383

"என்னடா? தாம்பி ரத்துசா! முனம்சொல்
இகலின்வல் லாண்மைகள் எங்கே?
சொன்னசொற் போல நீஅமர் செய்கிலாது
ஓய்வதுஏன்? தவத்தினால் பெற்ற
உன்னரும் சரம்உண் டாகில்இப் போது
உடற்றுக" என்றலும் நகைத்து,
"நின்னைவெல் வதுவோ பாரம்?"என் றேசொல்
நிகழ்த்தி,அக் கினிக்கணை விடுத்தான். 384

வடுத்துசன் விடுத்த கணைகள்மீ வெளியும்
வன்தழல் பரப்ப,அக் கணைமேல்
விடுத்தநல் சலில பதிகணை அதனால்
வென்றனன்; அவன்இருட் கணையைத்
தொடுத்தனன்; மதியின் கலையொடு பிளந்தான்;
சூரியன் கணைஅவர் தெரிசே,
தடுத்தனன் இவன்தன் தந்தையின் சரத்தால்;
தாம்பிரத் துசனும்ஆர்ப் பரித்தே, 385

விட்டனன் பிரம சரத்தினை; அவனும்
விசையுடன் வருவதன் மேலே
தொட்டனன் வலவன் கணையினை; இந்தத்
தொடர்பொடும் அவன்விடும் சரங்கள்
தட்டழிந் திடவென் றனன்;வரக் கணைகள்
தன்எலாம் விட்டனன்; பலவும்
வெட்டியே, விசயன் எதிர்ந்தனன்; மென்மேல்
விசாரவா ரிதியின்மூழ் கினனே. 386

---

383. கைம்மறத்தல் - நன்றாகத் தெரிந்த ஒன்றை உரிய நேரத்தில் மறத்தல், மால் தொய்வு - மயக்கமும் சோர்வும், உம்மைத்தொகை, வை - கூர்மை.

384. உன்னரும் - நினைத்தற்கரிய (வலிமை வாய்ந்த).

385. சலிபதிகணை - வருணாத்திரம், தந்தையின் சரம் என்றது இந்திரன் கணையை.

386. வலவன் - திருமால்; வரக்கணை - தெய்வீகமான அம்பு, விசாரவாரிதி - கவலைக்கடல்.

(வஞ்சித்துறை)

வயவ டுத்துசன் அயஉ லக்கையைக்
கையில்உ கைத்தனன் மெயைஇ லக்கதாய். 387

உரும்அ னந்தம்ஓர் உருவு கொண்டதாய்
வரும்முன் வெனறனன் சரமது ஒன்றினால். 388

கழுமுள் ஒன்றினை முழும றத்தொடு
கெழுமி வீசினான் விழும மார்பின்நேர். 389

கால காலனார் சூலம் நேர்வரக்
கோலது ஒன்றினால் சால வென்றனன். 390

அண்டர் மெச்சிய பிண்டி பாலம்ஒன்று
அண்டி வீசினான் மிண்டன் வீரமாய். 391

ஆலித் தேவரும் பீலித் தண்டும்ஓர்
கோலில் புன்துகள் போலப் பொன்றின. 392

குந்தம் ஒன்றுஅவன் தொந்த மாகவே
உந்தி வீசினான்; வந்த சீறியே. 393

சீறு குந்தம்ஓர் கீறும் அம்பினால்
கூறு கொண்டு,பின் நீறு கண்டனன். 394

கொல்லு கென்றொரு வல்ல யந்தனை
மல்லல் அம்புயன் சொல்லி வீசினான். 395

எறிந்த தோமரம் நொறுங்கு நொய்என
முறிந்து வீழ்ந்தகோல் சிறந்தது ஒன்றினால். 396

---

387. வய - வலிமைமிக்க, அய - இரும்பாலான; மெயை - மெய்யை, உடலை.
388. உரும் - இடி. 389. கழுமுள் - சூலம்.
391. பிண்டி பாலம் - எறிபடை. 392. ஆலித்தே - களிப்போடு, பீலித்தண்டு - பிண்டி பாலம்.
393. குநதம் - கைவேல. 394. சீறும் - பிளக்கும; கூறுகொண்டு - துண்டாக்கி.
395. வல்லயம் - வல்லையம், எறியீட்டி, மல்லல் - வலிமை மிகக.
396. தோமரம் - எறியீட்டி.

குலிசம் ஒன்றினைப் பலிகொள் என்றுதான்
ஒலிமி குந்திட வலிது உதைந்தனன். 397

உதைந்த வச்சிரம் சிதைந்துஅ ழிந்திட
முதிர்ந்த அம்பதுஒன்று அதம்செய் கின்றதே. 398

பரசது ஒன்றினை உரசது ஆகவே
விரைசின் வீசினான் பரிசன் நந்தனே. 399

எரிம ழுப்படை பொரிஅ ரைத்தபோல்
சரிநொ றுக்கினான் ஒருச ரத்தினால். 400

திக்குஅ திர்ந்திடச் சக்க ரந்தனைத்
தொக்குள நிந்தனன் மிக்கு உதும்பரன். 401

பரிதி போல்இரைந்து உருமது என்றுறச்
சரமது ஒன்றினால் நெரிநெ ரிந்ததே. 402

அணிகொள் வச்சிரக் குளில்ள டுத்துறத்
திணியன் உக்ரமுற்று எணிஉ கைததவன். 403

விடுகு றுந்தடி இடியது என்றுறத்
தொடுவை அம்பினில் பொடிபொ டிந்ததே. 404

வயிர வேலைமன், "வயிர மாகவே
உயிரை உண்"எனச் செயிரின் வீசினான். 405

சத்த ரெட்டிலோ கத்தர் அஞ்சுஅயில்
சத்தி நீறின அத்ரம் ஒன்றினால். 406

---

397. குலிசம் - வச்சிரப்படை 398. அதம் - அழிவு.
399. பரசு - கோடரி; பரிசன் நந்தன் பரிசத்துசனின் மகன்.
401. உதும்பரன் - தாம்பிரத்துசன்.
403 குணில - குறுந்தடி, திணியன் - வலியவன், உக்ரம் - சினம்.
404. தொடு அம்பு, வைஅமபு எனத் தனித்தனி இயையும்.
405. வயிரமாகவே - உட்பகையோடு, செயிரின் - கோபத்துடன்.
406. சத்த ரெட்டி - ஏழு இரணடு, பதினான்கு, லோசுத்தர் - உலகினரும், முற்றும்மை தொக்சுது; சத்தி - வலிமை, அத்ரம் - அம்பு

அத்ரம் வேல்கள்முப் பத்தி ரண்டுமன்
புத்ரன் வீசினான் சித்ர மாகவே. 407

கருவி யாவையும் வருமு னாகவே
திரிய நீற்றினன் உரிய கோல்களால் 408

பல்லக் கங்கள்நீற்று அல்லல் கண்டபின்,
பல்லம் முன்புஎய்தான் வில்லின் அங்கையால் 409

அம்ப ரங்களும், அம்ப ரங்களும்,
அம்ப ரங்களும் அம்பின் மூடின. 410

எங்கும் மூடிய புங்கம் நீறெழத்
துங்கன் ஏவினால் மங்க வென்றனன். 411

சொரிந்த அம்புஎலாம் எரிந்து நீறெழ
அரிந்துஎ றிந்தனன் தெரிந்த கோல்களால். 412

துரக தங்கள்,பாகு, இரதம், ஒண்கொடி
நெரிநெ ரிந்தபின், சொரிச ரங்களால் 413

தேர்ஒ ழிந்தபின், நேர்உ தும்பரன்
கூரின் வச்சிரத் தேரில் ஏறியே, 414

தனுவ ளைத்தெய்தான் கனம்நி கர்க்கவே;
உனும்முன் வெட்டினான் தனுவ ரத்தினான். 415

வந்த கோல்களைச் சிந்தி யேமிகச்
சொந்த வெங்கணை உந்தி வீசினான். 416

---

407. அத்ரம் வேல்கள் - விடுபடையாகிய வேல்கள்; சித்ரமாக - அழகாக, போர்க்கலைக்கேற்ப.
408. திரிய - (தன் ஆற்றல்) கெடும்படி.
409. பல அக்கங்கள் - பல தேர்கள்; பல்லம் - அம்பு.
410. அம்பரம் - 1. திசை 2. கடல். 3 வானம்.
411. புங்கம் - அம்பு; துங்கன் - பெருமைஉடையவன், ஏவினால் - பாணத்தால்.
412. தெரிந்த - தேர்ந்தெடுக்கப்பெற்ற. 413. சொரிசரம் - வினைத்தொகை.
415. உனும் முன் - எண்ணிப் பார்க்கும்முன்; தனு வரத்தினான் - வில்வாண்மை மிக்கவன், அருச்சுனன்.

(எழுசீர் ஆசிரிய விருத்தம்)

பூதரம், திசைகள் அடைத்தவெங் கணையைப்
பூபதி குமரனும் சரத்தால்
மோதியே அறுக்க, பன்னிரு சரத்தால்
முரண்சிலை இரதமும் உடைத்தான்;
தீதற மறுதேர் ஏறிவில் வளைக்கச்
சிதைத்தனன் தேரொடு சிலையும்;
ஆதலால் மறுதேர் ஏறிவில் வளைக்க,
அழித்தனன் தேரொடு தனுவும். 417

வச்சிரத் தேர்கள் அழிவதோ என்ன
மறுத்துஒரு தேரினில் ஏறி,
கைச்சிலை வளைத்து முகில்எனச் சொரிந்த
கணைகளைக் கணைகளால் அறுத்து,
அச்சுஉருள் துவச கம்பமும் அறுத்து,
அடற்சிலை மகுடமும் அறுத்தான்;
பச்சிரா சனைக்காண் பாம்புஎன நடுங்கிப்
பாய்ந்து,ஒரு இரதமேல் உற்றான். 418

ஏறுதேர் சிலையும் முறித்தனன்; இவ்வாறு
எட்டுஉறழ் எறுழ்வச்சி ரத்தேர்
நீறுறப் பொடித்தான்; நெட்டுயிர்ப் பெறிந்து
நிருபதி தாம்பிரத் துவசன்
மாறில்மும் மதம்பாய் மருப்புநால் உடைய
வாரணந் தனில்விரைந்து ஏறி,
தேறிய கணைஒன் றினில்விவி சிலையின்
சிஞ்சினி அறுத்துவீழ்த் தியபின், 419

பன்னக சயன வலவன்மெய் முழுதும்
பதிந்திடப் பகழிகள் தெறித்து,
துன்னிய சினத்தில் பல்குனன் புரத்தைத்
துளைத்தனன் வரத்தின்வெங் கணையால்;

---

417. பூதரம் - மலைகள்

418. துவசகம்பம் - கொடிமரம்; பச்சிராசன் - பறவைகளின் மன்னன், கருடன்.

419. உறழ் - பெரிய; எறுழ் - வலிமைமிக்க, நிருபதி - அரசன், மருப்பு - தந்தம்; வாரணம் - யானை; சிஞ்சினி - நாண்.

அந்நிலை அறிந்து மற்றொரு சிலையை
அர்ச்சுனன் கரத்துஎடுத் திடும்முன்
மன்னிய விசயன் செருத்தனை நிறுத்தி
மால்உருத்து அவனியில் குதித்தே, 420

துரந்தரத் தாம்ரத் துசனைவைப் புறுத்திச்
சூரியன் அந்தமொன் றாகக்
கரந்தரும் ஆழி தனைக்கரத்து எடுத்துக்
கடுவிசை யுறச்சுழற் றிடவே,
விரைந்துறப் படைகள் அனைத்தையும் துறந்து
வேழம்நீத்து அவனியில் குதித்து
வரந்தரும் முகுந்தன் தனைமனம் புகழ்ந்து
வல்லியம் நிகர்த்திடப் பாய்ந்தே, 421

என்னில்வந்து எய்துஎன்று உன்னும்முன் கலந்தான்
இகல்வலி யுடன்எதிர் ஏறி,
உன்னிஉன் படைகள் என்செயும் படையது
ஒழிந்தஎன் றனைஎன உறுக்கி,
முன்இரு கரமும் பிடித்துறத் திருகி,
முரணுறும் ஆழியைப் பதித்துத்
தென்னுறும் ஒளிவட் டந்தனை மடியில்
சேர்த்தபின் சீற்றமிக் கொண்டே, 422

இடதுகக் கத்தில் இடுக்கிமா யவனை,
எறுழ்தனஞ் சயன்றனை வலது
புடையினில் அணைத்தே, இருவர்கள் தமையும்
புயவலி யுடன்கசக் கினதால்
மிடலின்என்பு இனங்கள் நெறுநெறு நெறென
மிகவுமே நொறுநொறுங் கினவே;
அடர்பணி குழைத்த இரைஎனச் சோர்ந்தார்
அன்றுஇரு வரும்மதி அழிந்தே. 423

---

420. பன்னக சயன வலவன் - அராவணையில் துயில் கொள்வோனாகிய பாகன், உருத்து - சினங்கொண்டு

421 துரந்தர - வலிமை மிக்க; வைப்பு உறுத்தி - பொய்யாகச் செய்கிறேன் என்பதை உணர்த்தி; ஆழி - சக்கரம், வல்லியம் - புலி மனம் புகழ்ந்து என்றது மனதினுட் போற்றியும் அதனை வெளிப்படக் காட்டாத நிலையை.

423. பணி - பாம்பு.

"ஈங்குஇவர் பஞ்சை ஆவிஇவ் வளவோ?"
என்றுஎணி, நிலத்தினில் இட்டு,
ஓங்கலின் புயத்தான் வீரகர்ச் சனைசெய்து,
உரவிய சிங்கநா தத்தைத்
தாங்கலின் முழக்கி, ரணமுரசு இனங்கள்
தழங்கிட, மடிந்திடாது அயலில்
பாங்குற இருந்த படைபுடை சூழப்
படப்பரி களும்கொடு நடந்தான். 424

மந்திரி நகுலத் துசனுடன் தளமும்,
மற்றுள அமைச்சர்மன் னவரும்,
இந்திரன் சுதனை மாயவன் அருளால்
இகல்செயித் திடும்வடுத் துசனும்,
சிந்தைகூர்ந்து உபய பரியைமுன் நடத்திச்
சென்றனர் இரத்தின நகரில்;
அந்தரர் தவித்தார் அரிநரன் அயர்ந்த-
தால்அரு ணனும்குடக்கு அடைந்தான். 425

ஆதவன் அடைய, நிரைநிரை சுடர்பந்-
தங்களின் விகற்பமே விளங்க
மாதவன் விசயன் தனைச்சயித் தவன்போல்
மகத்துஅயல் குமுர்த்தியி னுடனே,
தாதையாம் பரிசத் துசனுமே நரும-
தாநதிச் சார்பினில் வேள்வி
வேதகோ ஷங்கள் முழக்கியே மறையோர்
விதிமுறை செயும்இடம் சேர்ந்தான். 426

சேர்ந்துஇரு பரியும் நிறுத்தியே படத்தைச்
செங்கையில் தரித்துமன் னவனைச்
சாந்தமாய் வலம்வந்து, அடியிணை இறைஞ்சி,
தாங்கிய படத்தினை உதவி,

---

424. ஓங்கலின் - மலையைப் போன்ற, சிங்கநாதம் - ஒரு தொளைக் சுருவி, ரணமுரசு - போர் முரசு; தழங்கிட - ஒலிக்க, படப்பரி - (நெற்றியில்) விருதுகளைத் தாங்கிய (யாகக்)குதிரை
425. வடுத்துசன் - தாமபிரத்துசன, அரி நரன் - கணணனும அருசுனனும், உம்மைத்தொகை, அருணன் - சூரியன்; குடக்கு - மேறகு.

வேந்தன்முன் இரும்தோள் கட்டியே குனிந்து,
மெய்யன்றின் றிடும்நிலை நோக்கிக்
கூந்தன்மா முகத்தின் படத்தின்வா சகத்தைக்
குறித்துவா சித்துஅகம் குளிர்ந்தே, 427

"நன்று!வாய் வசனம் நவில்"கெனப் பரிப்பின்
நகுலன்ஏ கியதும்,வில் நரன்மா
ஒன்றுஎதிர்ந் ததுவும், பரியுடன் பரியும்
ஊடிஅங்கு அவர்பரி உரக்க,
கன்றியே நகுலன் இருபுர வியையும்
கவர்ந்துஎயில் அணிஇவண் வகுக்க,
அன்றுஅவன் கலுழ யூகம்வைத் ததுவும்,
மாநகு லனும்முனைந் ததுவும் 428

வீரமே கவனன் தனைச்சுக லீலன்
மெய்யினில் உதைக்கவிட் டெறிந்து,
சாரமாய் அனுசா ளுவன்அமர் கடந்து,
சரத்தினால் மால்உடல் பிளந்து,
வாரவல் அமிர்தன் பத்திர கிரியான்
மயங்கிட வாளிகள் செலுத்தி,
பேரமர் சுபத்தி ரனைஅயர் விக்கப்
பின்அவன் தனைஅயர் வித்தே, 429

ஒருபகல் முழுதும் ரவிசுதன் சேயன்
உரத்துஎனை அயர்ச்சிசெய்து ஏகான்;
இரவில்யான் பிரத்தி மன்னுடன் பொருதே
எண்ணிரு முறைகளத்து அயர்ந்தோம்;
விரைவில்யான் எழுந்தேன்; அவன்மகன் பொருது
விடியும்நே ரந்தனில் அயர்ந்தான்;
தரணிதந் தருளும் மகன்மகன் பலதேர்
தான்நொறுக் கியும்அயர்ந் தனன்;பின், 430

---

427. கூந்தலமா - குதிரை.

428, 429 ஆம பாடல்கள் சுவிக்கூற்றைப் போல்அமைந்து முற்றுப்பெறாமல் 430க்குமேல் தாம்பிரதத்துசனின் தன்மை நவிற்சியாக நடந்து 435இல் முற்றுப்பெறுகிறது. பொதுவாகச் சாப்பியங்களில் இவ்வாறு அமைதல் இல்லை

430. ரவிசுதன் - சூரியன் மகன், கன்னன்; அவன் மகன் என்றது பிரத்திமனின் குமாரன் அநிருத்தனை, தரணி தந்தருளும் மகன் - ரவிசுதன்; அவன்மகன் விடசேதனன்.

உத்துவா சரிஅக் ரூரன்நீ லன்தன்-
னொடு,க்ருத வர்மனும் அயர்ந்தான்;
வித்தகன் சாத்த கியும்அறு பதுதேர்
வென்று,பின் அயர்ந்தபின், விசயன்
புத்திரன் இருநாள் இரவு போதாகப்
புரிந்துஅமர் பல்படை களினால்
தத்துதேர் அழிக்க, மல்யுத்தம் அதனில்
தயங்கினம் உபயரும் தானே. 431

வில்இராப் பகல்ஏழ் தினம்சமர் பொருது,
வில்சயந் தனம்பல நொறுக்கா,
அல்லிநா யகன்வில் பூட்டறுத்து, ஆயன்
அங்கமேல் சரம்சொரிந்து அளவில்
மல்லலின் பரிதி தனைஅரி ஏந்த
மல்லினில் பறித்துஇரு வரையும்
ஒல்லையில் நெரிக்க, அயர்ந்தனர் எறிந்துஇங்கு
உற்றது யான்"என உரைத்தான். 432

"தூதரும் நீயும் உரைத்தது சரி;போர்
தொடங்கிய இருவர்கள் தமையும்
ஏதுவின் உடன்கொண்டு அடைந்திலாய் கொல்நீ?
என்னவீ ரியன்?பரி ஆழி
சாதமாய்க் கொளைர்ந்தாய் கேசரி புலியைத்
தள்ளிஒண் கூடுகொண் டதுபோல்;
போதும்நின் வலிமை" என்றுஅவ ரவரை,
புக்கும்இல் லகத்தினுக்கு என்றான். 433

என்றலும் தாம்ரத் துசன்அலா தவர்கள்
ஏகினர்; அதற்குமேல் மகனை
அன்றுஅருகு அழைத்து, "நரனும்நா ரணனும்
அசுவரட் சணைசெய்துளங் கெங்கும்

---

432. அல்வி நாயகன - அருச்சுனன், மல்லல - வலிமை, பரிதி - சக்கராயுதம், மல் - மற்போர்.

433. சாதம - உணமை, இங்குச சாடசி; கேசரி - சிங்கம; கிங்கும் புலியைக் கொன்று அதன் எலும்புக் கூடைச் சாட்சியாகக் கொண்டுவந்தது போல என்னும் பொருளுடன், சிங்கம் புலியை விட்டுவிட்டு ஒரு பறவைக் கூட்டைச் கொணர்ந்தது போல என்னும் இழிபொருளும் தொனிக்கிறது.

மன்றலம் பரிப்பின் வருவதை அறிந்தும்,
மதத்தினால் பிடித்தனை பரியை;
நன்றுநீ செயித்து வந்தது நிசமோ?
நவிலு"கென் றலும்நடு நடுங்க, 434

"வனம்அணி மோலி எனக்குஅறி வித்த
வசனசா ரங்களும் உண்டு;
நனிஅவன் அருளால் பிழைத்துவந் தனைநீ;
நரனைநீ செயிக்கவல் லவனோ?
இனிவிலி நமையும் விடுவனோ சும்மா,
ஈதுஅலால் அவன்மகன் இகலால்
உனையும்எந் தனையும் ஒருசரத் தால்வென்று
ஒட்டிடும் தாட்டிமை உடையான் 435

அன்றிஅங்கு அவன்றன் மந்திரி உனையே
அயர்ந்திடச் செய்திடு சிறுமை
என்றசொல் ஏற்றாய்; நன்றுநீ மனைசெல்;"
என்றுஅரி முகுந்தனைத் துதித்து,
மன்றல்மார் பகமன் வேள்விசெய் முறையின்
மருவினன்; இதற்குமேல் களத்தில்
துன்றிய அயர்ச்சி தெளிந்துஎழுந் திருந்தான்
சுரர்பதி குடிநிறுத்து ஒருவன். 436

மாயவன் சாலம் அறிந்திடாது அன்பன்
மயங்கியே அயர்ந்தது என்று உன்னி
ஆயனை மடியில் ஏற்றியே, சோபம்
ஆற்றினன் செயும்முறைப் படியே;
தூயனும் அயர்ந்தோர் தெளிந்தபோல் விழித்துச்
சுரர்பதி குமரனை நோக்கி,
"காயவன் பலத்தைக் கண்டனை யோயாம்
கருதிமேல் செய்வதுஏது? ஐயா! 437

---

434. அசுவ ரட்சணை - பரிப்பாதுகாப்பு.

435. வனம் - துளசி; அவன் மகன் - பப்பரவாகனன்; தாட்டிமை - வலிமை.

436. மந்திரி - சுபததி; மன் - அரசன், பரிசத்துசன்; ஒருவன் - அருச்சுனன்.

437. சுரர்பதி - இந்திரன்; காய - உடலின், இனிக் காய் அவன எனபபிரித்துச் சினம் கொள்ளும் அவன் என வினைத்தொகை ஆக்கினுமமையும்.

மகளினும் சகஸ்ர மடங்கினும் பலவான்
மற்றவன் தந்தைஆ தலினால்,
இகவில்நின் குமரன் திறைஇவர்க்கு அளிப்பன்;
இருவர்கள் தமையுமே கசக்கி
அகலுகின் றனன்நம் புரவியோடு ஆழி
அவன்வசம் ஆகிய படியால்
தகும்உபா யத்தால் கொள்ளுவது அன்றி,
சமரினால் கொள்ளமுற் றாதால். 438

வீரநீ என்சொற்கு இணங்கியே கேட்க
வேண்டும்"என் றிடமுகம் மாறி,
"சாரநீர் வெளியே சொல்லும்;இங்கு அவன்றன்
தாள்தொழு தோபரி கொளுதல்?
போரில்என் உயிரோடு அனைவரின் உயிரும்
புரவியும் போகினும் பொருந்தேன்;
தீரமாம் வேறு யோசனை உளதேல்,
செப்பில்,யான் ஒப்புவேன்;" என்றான். 439

"என்உயிர் அனையாய்! அவனைஉன் காலில்
இயற்றுவது அலதுஉனை அவன்கால்
தன்னில்வீழ்த் துவனோ?" என்றலும் இயைந்த
தனஞ்சயன் தனைஇவண் நிறுத்தி,
மன்னிய [illegible]பர்கள்சே னைகளை
வந்துஇரு கண்களால் நோக்கி,
முன்னிய யூகம் முறைஅமர்ந் திருக்க
மொழிந்து,பற் குனனிடம் அடைந்தான். 440

அடைந்து,நன் மொழிகள் அறைந்து,இராப் போதை
அகற்றியே, இருவரும் முனியாய்
நடந்தனர்; முதிய வேதியன் மாலும்
நரன்ஒரு சீஷனும் ஆகித்

---

439. சார - ஏற்றுக் கொள்வதற்கு சார்புகொள்ள; பொருந்தேன் - (பணிய) ஒருப்படேன்.

தடம்தொலை தொலைத்து நர்மதா நதியின்
சார்பினில் யாகசா லையினில்
இடங்கரைத் தடிந்தோ னுடன்வில்ஆ திபனும்
ஏகினர் அரசிடத் தினிலே. 441

(கலி விருத்தம்)

ஆசீர் வாதம் இருகையி னாலுமே
பூசுரன் செய்த போதுந டுங்கி,மன்
"ஏசி னாலும்நன்று ஈர்கினும் நன்று;ஐயா!
ஆசி னோடுசெய் ஆசிர்வா தத்தினும்." 442

என்றுள தித்துஇரு வோர்பதம் போற்றியே,
மன்றல் மன்னன் மருங்கில் இருத்தியே,
நின்று தான்கரங் கட்டி, நிருபனும்
வென்றி வேதிய ரோடுவி ளம்புவான் 443

"வந்த சிந்தை மகிழ்ந்திடத் தானம்யான்
தந்துஇ றைஞ்சிய பின்தய வோடும்நீர்
அந்த ஆசிரு வாதஞ்செய் யாமலே
முந்தச் செய்த முறைமைஏ தது?" என்றனன். 444

(இதனை அடுத்து ஒருபாடல் இருந்திருக்க வேண்டும். ஏடு
எடுத்தெழுதும் போது விடுபட்டது போலும்)

"சஞ்ச லத்திரை தன்னில் அமிழ்ந்தினேன்;
அஞ்சும் நெஞ்சில் அறிவு கலங்கினேன்;
கிஞ்சம் அல்ல கிலேசும்; கலங்கி,முன்
மஞ்சின் ஆசிரு வாதம் வழங்கினேன்" 445

---

441. முனி - தவசி; தடம - வழி; தொலை - தூரம; தொலைத்து - இல்லாமற் செய்து, கடந்து என்பது பொருள், இடங்கரைத் தடிந்தோன் - (கஜேந்திரன் பொருட்டு) முதலையை அழித்த திருமால்; அரசு - பரிசத்துசன்

442. பூசுரன் - அந்தணன், மன் - பரிசத்துசன்; ஈர்கினும் (வாளால்) பிளந்தாலும்; ஆசினோடு செய - ஆசிர்வாதத்தினும் ஏசினாலும் ஈர்கினும் நன்று என இயையும்.

443. மருங்கில் - பக்கத்தில.

445. கிஞ்சம் - கொஞ்சம், கிலேசம் - துன்பம், மஞ்சின் - வலிமை மிக்க, நிச்சயம் பலிக்கக் கூடிய என்பது பொருள்.

என்று தன்தலை மெய்யும்ந டுங்கிட,
குன்றி, நாவும் குழறக் கலங்கியே,
நின்ற ஐயனை நீதிமன் நோக்கியே,
"இன்று உமக்குஉறும் சஞ்சலம் ஏது"என்றான். 446

"கூறும்" என்று குரிசில் வினாவவே,
"மாறி லாதுஒரு வாக்குஅளிப் பாய்எனில்,
தேறி நான்அவை செப்புவன்" என்றலும்,
ஆறி மன்சொல் அறுதியும் கூறினான். 447

அறுதி சொன்ன அரசுஉரைக் கே"கரி
உறுதி அக்கினி யோடுஇழை யோர்கள்பின்
இறுதி மாறில்வி டேன்;"என்று இயம்பவும்,
சறுகிலேன் என்று தராபதி கூறினான். 448

(அடுத்த பாடல் சுவடியில் எழுதப்படவில்லை)

"அரச! நீசொல் அறுதி பகர்ந்ததே,
பரிதி முன்பனி போல்என் பருவரல்
அருகி மாய்ந்தது சத்தியன் ஆதலால்;
புரவி வேள்விதொ டங்கினை புண்ணிய! 450

இன்னம் என்மன மேதிட மாகநீ
உன்னி என்னைக தொடு"என ஒதினான்;
"வன்னி யின்குல மாதவ! உனகரம்
தன்னை யான்தகு மோதொட?" என்றனன். 451

"அலது சீஷன் அருங்கரம் தீண்டு"கென்று
இலகு வேதிய னேஎதிர் ஓதவே,
"உலைவில் சீஷனை யுந்தொடேன்" என்றுகால்
மலரைத் தீண்டினன் மாமுடி மன்னனே. 452

---

447. சொல் அறுதி - உறுதிமொழி.
448. கரி - சாட்சி; இறுதி மாறில் - சொல் முடிவிலிருந்து மாறுபட்டால், வார்த்தை மாறினால்; சறுகிலேன் - (என் உறுதியிலிருந்து) வழுவமாட்டேன்; தராபதி - அரசன் பரிசந்துரன்.
450. பருவரல் - துன்பம்; நீ சத்தியன் ஆதலால் அறுதி பகர்ந்ததே பருவரல் மாய்ந்தது என இயையும்.
451. உன்னி - நினைத்து; வன்னியின் குல -தீயைத்தொழுவதற்குரிய மரபினனாகிய, அக்கினியின் மரபினராகக்கூறப்படுபவர் அரசர் ஆதலின் உரை வலிந்து கூறப்பட்டது.
452. எதிர் - மறுமொழி.

"வந்த துன்பம் அகற்றுவன்" என்றுகா-
லுந்தொட்டு உண்மை உரைத்தனன் மன்னர்கோன்-
"சந்த்ர சூரியர், தாரகை, வான்,புவி
மந்த்ர தேவதை, வன்னியும் சாட்சியே" 453

"இனிக்க லக்கம் இலை;சொலக் கேளும்;எந்-
தனக்குப் பேர்கிஷ்ண சர்மன்என்று ஓதுவார்;
கனக்கும் ஊர்தரு மாபுரி; காண்டியேல்
எனக்குச் சீஷர்உண்டு எண்அடங் காதபேர். 454

சகல விதகலை யும்,சது வேதமும்,
பகரும் மூவிரு சாத்ரமும் பாடம்காண்;
புகலும் புத்திர வாஞ்சையில் போதயான்
திகழும் மெய்த்தவம் செய்ததும் சித்தியாய், 455

முதிய தான வயதில் முளைத்ததுஓர்
சுதன்எ னக்கு;அவன் தோன்றியும் ஆண்டது
பதின்மூன்று ஆனது; பலகலை வேதமும்
மதியி னோடு வருத்துவித் தேன்;ஐயா! 456

என்னைப் போல்திறன் ஆனவன் சேயனும்;
மின்னப் பூணூல் விதியும் இயற்றியே,
பொன்னைப் போல்ஒரு பூவையை வேட்கவே
உன்னைத் தான்சத மாய்நம்பி உற்றனம். 457

---

453. உண்மை - சத்தியப்பிரமாணம்; தாரகை - விண்மீன்கள்; மந்த்ர தேவதை - மந்திரங்களுக்கு அதிதேவதைகளாக விளங்குகின்ற கடவுளர்.

455. மூவிருசாத்திரம் - வேதாந்தம், வைசேஷிகம், பாட்டம், பிரபாகரம், பூர்வமீமாம்சை, உத்தரமீமாம்சை என்னும் அறிவு நூல்கள் ஆறு; சித்தியாய் - (தவம்) பயனளித்ததால்.

456. வருத்துவித்தேன் - வரப்பண்ணினேன்;

457. பொன் - திருமகள்; பூசை - நாகணவாய்ப்புள் நிகர்த்தபெண், உவம ஆகுபெயர்; வேட்கவே - மணம் செய்ய; சதமாய் உறுதியாய்.

புரவ லாஉன் புரோகிதன் சஞ்சயன்
ஒருகு மாரிபெற் றான்;வயது ஒன்பதாம்;
கருதி நீஅவட் கன்னிகா தானமாய்த்
தருகு வாய்எனத் தான்அடைந் தோம்;ஐயா! 458

அந்த வேட்கையி னாலு மவாவொடு
எந்தன் சீஷன்முன் ஆயிடை சேயனும்
பிந்த யானும் பெலன்தடி யாகவும்
நுந்தன் நன்னகர் நோக்கி நெருங்கினோம் 459

இந்த கரத்துஈ சானிய பாகமாய்
வன்ன மாமலை வான்தொடும்; ஆங்குஅது
தன்னி லேஇருந் தே,சர வேகமாய்
முன்னில் வந்தது மூசிடும் கேசரி. 460

எனையும் சீஷனை யும்விட்டு இடைவரும்
தனைய னைக்கொடு தாவிஅது ஏக,யான்
மனம்ந டுங்கி மயங்கியும் சீஷனோடு
அனம லைக்குகை வாயில்அ டைந்தனம். 461

"கனமது ஆகுகண் டீரவ ராசனே!
தனய னைக்கொடு தான்வரல் ஏன்?ஐயா!
வினைசெய் யாதவன் வேதியன் நான்;ஐயா!
மனது இரங்கி வழங்கு"என வாழ்த்தினேன். 462

"என்ப சிப்படி யாகவந்து எய்தலால்,
புன்பொ சிப்புஇது போதும்என்று எய்தினேன்;
வன்ப சிக்கு வழங்கிஎன் செய்குவேன்?
துன்பு இசித்திடத் துஞ்சுவ னோ?சொலாய். 463

---

459. பெலன் - வலிமை. இங்கு துணை.
460. ஈசாவியம் - வடகிழக்கு; சரவேகம் - வில்லிலிருந்து விடுபட்ட அம்பின் வேகம்; முன்னில் - எதிரில்.
461. அன - அந்த.
462. கனமது - பெருமை, அது பகுதிப்பொருள் விகுதி. கண்டீரவம் - சிங்கம்; வினை - பாவம்
463. பசிப்படி - பசியைத் தீர்த்துக் கொள்வதற்காகக் குறிப்பிட்ட விகிதத்தில் வழங்கப்படும் ஊதியம்; புன்பொசிப்பு - (என் பசியைத் தீர்க்கப் போதாத) சிறுமை வாய்ந்த உணவு; (இவனை) வழங்கி பசிக்கு என் செய்குவேன்? என இயையும்; இசித்திட - இழுத்துப்போட்டு வருத்த; துஞ்சுவனோ - இறப்பேனோ.

மறையன் ஆகில்என்? மற்றவன் ஆகில்என்?
பறைஇ டங்கரும் பார்த்து விழுங்குமோ?
விறலின் வன்புலி வாய்த்தசை மீளுமோ?
உறுதி யாகநீ ஏகு"என்று உரைத்ததே. 464

"சேயை விட்டுளனைத் தின்னு"மென்று ஓதினேன்;
"நீள லும்பு"என நீக்கவும், "சீஷனை-
யேஉண்"என்ன இசைந்திலது; ஏன்எனில்,
தாயும் தந்தையும் தான்கசி வார்என. 465

"என்செய் வேன்"என்று இரங்கி அரற்றினேன்;
வன்சீயம் என்னை,"வம்மின்"என் றேவிளித்து,
"இன்சொல்மன் னரிலே புண்ணியம் செய்வோர்
தன்சரீ ரத்தில் தாஅரை" என்றதே. 466

"பாதி யேவலப் பாகம் பொருத்தியே
ஆதி பன்தரில், யான்தரு வேன்சுதன்;
போது மோ"எனக் கொடுவயப் போத்துஇசைந்து
ஓதி யேதிகி ரிக்குகை உற்றதே. 467

"இதற்குஎன் செய்வது? இயைவது யார்?"என
விதிர்ப்புற் றேன்,உனை மிக்குடன் யாவரும்
துதிப்புற் றார்;அது தொட்டுஉனைக் கிட்டி.னேன்;
இதத்தினில் நீஎனக்கு உண்மை கூறினாய். 468

எற்று நூல்இட்டு இடப்புறம் தள்ளியே
பற்றி யேவலப் பாகம் அளித்தியேல்,
அற்றது என்துயர்; ஆபத்து நீங்குமே
சுற்ற மாகச் சுதனும் கிடைப்பனே. 469

---

464. பறை இடங்கர் - பறை நாகம், பறைப்பருந்து போல் முதுகுப்புறத்தில் ஒருவகை போலும்.

467. கொடு வயப்போத்து - கொடுமையையும் வலிமையையும் பெற்றுள்ள ஆண் சிங்கம்; திகிரிக்குகை - மலை முழைஞ்சு.

468. விதிர்ப்புற்றேன் - அஞ்சினேன்; அதுதொட்டு - அக்கா ரணம் பற்றி.

என்று வேதிய னேஇரு கண்கள்நீர்
துன்றி ஓடத் துடித்துப் பறத்தலால்,
"ஒன்றி னுக்கும்அஞ் சாதுஇரும்; உன்சுதன்
என்றும் உள்ளவன்; ஈகுவன் நோவதுஏன்? 470

தரும மாநக ரோதலம்? கிருஷ்ண
சரும ரோபெயர்? சஞ்சயன் வீட்டினில்
ஒருகு மாரிவயது ஒன்பது உள்ளது;ஆம்;
உருவ கன்னிகை யோக்கியத் தானமே. 471

தேடி நீர்க்கடன் தீக்கடன் செய்யவே
நாடு கின்றனை; நன்முதி யோய்!மெயாய்
வாடி டாமல் வகிர்ந்துஎனை ஈர்ந்துகொண்டு
ஓடும் சேயன் உமக்குக் கிடைக்கவே." 472

என்ன வே,கிழ வேதியன், "ஏழையான்
நின்னை எவ்வணம் கீறுவேன்? ஓதாய்;
பின்னை யாவர் பிளக்கினும் ஏற்குமோ?
பன்னி யும்சுத னும்பகிர்ந் தால்கொளும். 473

அந்த மாமிரு காதிபன் சொற்படி
தந்திடு"என்றலும் சம்மதி யாகியே,
மந்திர வாள்உறை வாங்கி மகிழ்ச்சியாய்ப்
பந்த அத்திப் பலகையில் வைகியே, 474

உதும்ப ரத்துச னோடுகு முர்த்தியை
உதும்ப ரத்துஉர வோன்அழைத்து ஓதுவான்
"ததும்பி டாதுஒரு தாரைய தாய்வகிர்ந்து
இதங்க ளாய்க்களித்து ஈர்ந்திடும்;" என்றபின், 475

---

471. யோக்கியத்தானம் - (அவளை மணஞ்செய்து கொடுப்பது) தகுதிவாய்ந்த (கன்யா) தானமாகும். 473. பன்னி - மனைவி.

474. மிருகாதிபன் - விலங்கரசன், சிங்கம்; பந்த - அழகிய.

475. குமுர்த்தி - மன்னனின் மனைவி; உதும்பரத்து - அத்திப் பலகையில் அமர்ந்துள்ளவனாகிய; இருவர் - மனைவியும் மகனும்; ஏதி - வாள்.

அரசன் மந்திரி மார்கள்மற் றோர்களும்
வரிசை யாக வணங்க மகன்றனைப்
பெருகு பட்டாபி ஷேகம்செய் தேபினர்
இருவர் கையினும் ஏதியை ஈந்தனன். 476

(வேறு)

ஏதிஈந்து, "எனையே ஈரும்"என் றிடுசொல்
சேதிகேட் டலுமே திடுக்கினர் பலரும்
மோதிஅங் கைமுகம் முற்றுஅறைந்து "இனிஎன்?
ஆதி"என்று அழுதார் அங்குளோர் கள்எலாம் 477

அந்தநே ரம்,அர சாதிபா! பலரும்
இந்தவாறு அழுதால் ஏற்குமோ? - - - -
சிந்தைகூர் தரநீ தியாகம்செய் திலையேல்
எந்தரா சரிடத்து எய்தி,வாங் குவனே?" 478

என்னவே மறையோன் இந்தவாய் மைசொல,
உன்னிவிம் மியபேர் தமைஉறுக் கியுமே,
தன்இலா ளையும்சேய் தன்னைநோக் கவுமே,
சென்னிஈர்ந் திடவே திருமுன்ஆ கினரே. 479

மன்னர்மன் னவனை வந்துஇறைஞ் சியுமே
"என்னைஈ வன்"என வேமகன் மொழிய,
பன்னி,"ஈ வன்உடல் பண்பின்முற் றும்"என
"உன்னம்சம் மதியேல் உதவு"கென் றனனே. 480

"அய்யனே! எனதுஅன் பாளர்க்கா கவுமே
செய்யும்வாறு எனைஈர் செய்துஅரிக்கு உதவாய்;
தையல்உன் உடலம் தான்கொளாது அரியே;
வெய்யவேந் தர்வலப் பாகம்வேண் டும்அதே. 481

---

476. ஆதி - இறைவனே.

478. உறுக்கி - சினந்து.

479. உன்னம் - மனம்; என்றவன் வேதியன்.

480. அரி - சிங்கம்; வேண்டும் - விரும்பும்.

(வேறு)

"உன்னைச் சீயமனன் உண்டி டாது;"எனவே
பின்னைப் போயினள்;பின் பீடு சேயனும்வந்து,
"என்னைச் சீயமதற்கு இரைஇடு" என்றலுமே
அன்ன போதுஉரத்துஆர்த்து அறைந்தனன் சினமாய்

"தந்தை சொல்கொடையைத் தானும் எள்ளுதியோ?
உந்தன் புத்திமிக உசத்தி ஆகவும்நீ
வந்தது என்கொல்?அற மன்னன் கீர்த்தியினை
நந்தல் செய்திடநீ நாடல் நன்றுஅலவே.

தன்னைப் பேண்அறம்நல் தன்ம மேசெய்திடும்
மன்னன் புண்ணியவான் மாம்சம் அல்லது,உனைத்
தின்னத் தீண்டுமதோ செய்ய கேசரிதான்?
சின்னப் புத்தியினால் செய்தது ஆமிஷம்நீ."

என்று மன்னிடம் எய்தி வேதியனும்,
"இன்று நீசொல்;பொழுது ஏது? முன்தரில்நன்று;
அன்றி யேஇலைஎன் றாலும் நன்று;மதி
ஒன்று இலாதவன்நேர் உற்றது இன்றையிலே.

(வேறு)

பேதை சொல்சிறு பிள்ளைசொல் கேட்டு,நீ
ஏத மாம்அப கீர்த்திக்குஇ டம்கொண்டாய்;
போதும் போதும்!நின் புண்ணியம் பாழ்த்தது;"என்று
ஓதி யேஅழுது ஓடினன் வேதியன்.

அழுது சென்றிடும் அந்தணன் சீஷனைத்
தொழுது, தாம்பிரத் துசனும்கு முர்த்தியும்,
"பழுது உறாதுஉமக்கு ஈந்துள பாதியும்
பொழுது போம்முனம் போழ்ந்துஅளிப் போம்"எனா,

483, 484 ஆம் பாடல்கள் வேதியன் கூற்று

483. நந்தல் செய்திட - அழிக்க.

484. ஆமிஷம் - மதிப்பீடு, சின்னப்புத்தியினால் நீ ஆமிஷம் செய்தது (ஆகும்) என்பது முடிபு.

485. பொழுது ஏது - நேரம் இல்லையே; முன் - விரைவில். 486. பாழ்த்தது - வீணாயிற்று.

மன்னன் கோபஅ ழல்கொடு மாய்ப்பன்என்று
உன்னிப் போற்றியே உபசரித் தே,பெறும்
அன்னை சேயைஅ ழைத்துஅங்குஇ ருத்தியே
வின்ன மற்றுள வேந்தன்முன் நின்றதால் 488

நின்ற பேர்களை நிருபனும் நோக்கியே,
"ஒன்றும் நன்மதி யோடுஒரு வேதியற்
குன்றி டாதுஅனுப் பீர்"எனக் கூறியே,
வென்றி மன்னவன் விரைவுடன் ஈந்தனன். 489

(வேறு)

ஈயும் நாட்டம் இருவரும் ஏந்தியே
சாய்வு றாது தலைமுடி தான்வகிர்ந்து
ஆய! நேய! அரிஅரி" என்றுஅசி-
யேஇ ருத்தியும் ஈர்ந்தனர் செவ்வுற 490

முன்கு முர்த்தி முளையும்பின் னாகவே
நன்கு இருத்தினர் நாந்தகம்; நாசிநே-
ரின்ச ரிப்பட ஈர்ந்திடும் நேரிலே,
புன்க ணீர்இடம் போந்துஉக லுற்றதே . 491

"அந்த கோ!கெடுத் தான்;கெடுத் தான்"என
வந்த சீஷனை மாட்டினன் தண்டினால்;
பிந்த நின்றுள பேர்களைச் சீறினான்;
நொந்து அரற்றினன்; நொய்துஅழுது ஓடினான். 492

கண்ட பேர்கள் கலங்கித் திகைத்துநொந்து,
அண்டி "என்குறை? ஐ"என்று இறைஞ்சலும்,
மிண்டி யேஉதைத்து ஏகினன் வெஞ்சினம்
கொண்டு, காரணம் கூறினன் கோவையே 493

---

488. வின்னமற்றுள - பிளவுபடுவதற்குத் தடையில்லாமல் (ஆயத்தமாக) உள்ள.
489. வேதியற் குன்றிடாது - அந்தணனை மனச்சோர்வில்லாமல்.
490. நாட்டம், அசி - வாள்; ஆய - ஆயர் குலத்தில் தோன்றிய பெருமானே; நேய - அடியார்கள் பக்கலில் பெருங்கருணை கொண்டவனே.
491. முளை - மகன்; நாந்தகம் - வாள்; நாசிநேரின் - மூக்கினருகே; நேரிலே - போது.
492. இப்பாடலுக்கு வேதியன் தோன்றா எழுவாய்.
493. அண்டி - நெருங்கி; ஐ-தலைமையானவரே; ஏகிவன் - வினையாலணையும் பெயர்; ஏகினன் சினங்கொண்டு கோவையே காரணம் கூறினன் என இயையும்; கோ - அரசன், பரிசுத்துசன்.

"இரும னத்தோடு அழுதுஇவன் ஈந்தபங்கு
ஒருமைச் சீயமது ஒப்புக் கொளாது;ஐயோ;
பரிதிபுக் களவும் பருவம் செய்தான்;
அரிஅரி! என்செய் வேன்"என்று அலறினான். 494

அந்த நேரில், "அரிந்திடத் தாமதம்
வந்தது என்"என மன்னன் உரைக்கவே,
"சந்த வீரியன் தாரைநீர் நோக்கியே,
உந்தியே வெறுத்து ஓடினன்" என்றனர். 495

"விரைந்து கொண்டுவம்" மென்றுவிள ம்பவே,
பரிந்து பூசுரர் பாதம் வணங்கியே,
அருந்தவ மன்னன் அழைத்தது என்றேகொடு
பொருந்த விட்டனர் பூபதி முன்பிலே. 496

"கவட நாடக னேகன மாயையே
இவிடம் ஈதுசெய் கின்றனை" என்றுஎணும்
குவடின் வில்லியைக் கோச்சைகை செய்யவே
"சிவசி வா"எனச் சீஷனும் செப்புவான் - 497

"அடிப்ப தேன்எனை? அஞ்சச் சினப்பதேன்
தொடுத்து நீர்சொன சொல்மறுத் தேன்கொலோ?
கடித்துஉண என்றுஅக்கண் டீரவத் துக்கே
கொடுப்பன் தேகம் எனக்கொதித்து ஓடினான். 498

ஓசன் தன்னைவிட்டு ஓடும்மா ணாக்கனைத்
தாச னாகச் சகலரும் தாள்தொழுது
ஆசி னோடுஅந் தணனிடம் சேர்த்தனர்;
பூசு ரன்தனைப் பூபதி நோக்கியே, 499

---

494. இருமனம - உலக வாழ்வில் ஒராசையும், கொடைப்புகழில் ஒராசையும் ஆக இருமனம்; பரிதி புக்களவும் - குரியமண்டலம் வரை; பருவம் - வாக்குறுதி.

495. சந்தவீரியன் - இசையோடு கூறப்படும் மறைகளில் வல்ல அந்தணன்.

496. பூசுரர் - வேதியர், பூபதி - அரசன்.

497. குவடின் வில்லி - மலையைப போன்ற காண்டீவத்தை உடைய அருச்சுனன்; கோச்சைகை - கண்ஜாடை.

498. உணஎன்று - சாப்பிடுவதற்காக. 499. ஓசன் - ஆசிரியன், ஆசினோடு - விரைவில்.

"ஏது நீவெறுத்து ஏகியது" என்றலும்,
"போதை வீணினில் போக்கினை; புன்கணீர்
ஏத மாய்உகுத் தாய்;பிளந்து ஈந்திடும்
பாகி தனைப்பஞ் சானனம் கொள்ளுமோ? 500

சீக்கி ரம்உத வாதுஎனச் செப்பினால்
பார்க்கிற இடம்பார்த்து அல்லல் நீங்குவேன்;
ஏக்கம் உற்றிட வேகெடுத் தாய்எனை;
போக்கி னாய்வீண் பொழுது;அவம் ஆக்கினாய். 501

ஏது செய்வது? இனிஎன் சுதன்தனை
மோதி உண்டிடும் மொய்ம்பனுக்கு" என்றுஅழும்
வேதி யன்தனை வேந்தன்அ மர்த்தியே,
"ஏத மாய்அழு கின்றது இடப்புறம்; 502

ஒன்று பட்டிருந் தோம்;ஒரு பாதிதான்
இன்று அறத்துக்கு இயைந்ததுஎன்று ஏங்கியே;
நின்ற பாதியும் நேரிழை ஆதலால்
பின்றை விம்மிப் பிரிதற்கு இரங்கின. 503

முற்றும் கேட்டிலை யோ? ....
உற்று இரங்கல் உமக்குஅத னால்என்கொல்
சற்றும் நீர்மயங் காதுதன் பாதியும்
பெற்று அளித்துநின் பிள்ளையை மீள்"என்றான். 504

உண்மை என்றுஅரு குற்று நிகழ்இடம்
வண்மை யாக வகிர்ந்தனர் பின்னுமே;
திண்மை வாள்கிரி பத்திடம் சென்றிட
ஒண்மை மாமுனி யோடுகி ளத்துவான். 505

---

500. பஞ்சானனம் - சிங்கம்.

502. அமர்த்தியே - அமைதிப்படுத்தி; ஏதமாய் - துன்பத்தால்.

505. கிரிபம் - சுழுத்து; ஒண்மை - அறிவு;

தாம்பி ரத்துசன் "தாங்குவது யார்?" என,
ஓம்புஉயிர்க்கு உரித்தாய் உடையாய் நீயும்,
ஆம்பின் பாதிக்கு உடையறின் அன்னையும்
ஏம்பி வீழ்வறத் தாங்குவதுஎன்றனன். 506

இடது கைகொடு வீழ்வற ஏந்தினர்;
சுடர்மின் வாள்வலத் தோள்கொடு இருத்தினர்;
கடுகி மாயன் கருவி பறித்தெறிந்து
அடியர்க்கு அன்பன்ஒன்று ஆகப் பொருத்தியே, 507

(எழுசீர் ஆசிரிய விருத்தம்)

சங்குசக் கரம்கோ தண்டம்வாள் கதையும்
தாங்குகை, ஓங்குகார் வடிவும்,
புங்கவெம் கருடப் புரவிமேல் அமர்ந்த
பொற்பும்,மார்பு இசைந்தபூந் திருவோடு,
அங்கைகால் முகம்நா பிஅம்கம லங்கள்
அலர்ந்தசிங் காரமோடு, அரசன்
துங்கஅம் பகம்கூர்ந் திட,எதிர் தோற்றும்
சுருதிநா யகனைமன் கண்டே, 508

"அரிஅரி முகுந்தா! அச்சுதா னந்தா!
அனந்தன்மீ மிசைதுயில் வளர்ந்த
கரியகோ விந்த! தேவகி நந்த!
கந்தம துலவுஅர விந்தத்
திருமகிழ் அந்த! சுகந்தமண் அளந்த
சிவந்தபா தம்தர அடைந்தோய்!
மருதினை இடந்து சகடுற உதைந்த
வைகுந்த!" எனமனன் பணிந்தான். 509

---

506. ஏம்பி - உவகையுடன்.

507. கடுகி - விரைந்து; கருவி - வான்.

508. புங்க - உயர்ந்த; பொற்பு - அழகு; துங்க - தூய, புனிதமான; அம்பகம் - கண்; சுருதி நாயகன் - வேதங்களால் கூறப்பட்ட தலைவன்.

509. கந்தமது - நறுமணம், அது பகுதிப்பொருள்விகுதி; அரவிந்தம் - தாமரை; திரு - இலக்குமி; அந்த - அழகனே; சுகந்த - மணத்தை உடைய.

பணிந்தவன் எழுந்து கட்டியே இருதோள்,
பங்கயச் செங்கனால் நோக்கி,
"துணிந்துஅருள் சுரந்த சோதியே! என்னைத்
தொண்டுகொண்டு ஆளுதற்கு எண்ணி
அணிந்துள சமஸ்த உலகுஉயிர் அனைத்தும்
அலர்மரு எனஅமர்ந் தோய்மா
மணந்தமார் பகனே! எளியனைச் சாக்காய்
வந்தனை தந்தனை பதமே 510

இருமையின் அலக்கண் யாவையும் துறந்தேன்;
என்றும்கூர்ந்து ஆயிரம் பேரும்
பொருந்தவே புகழ்ந்து புன்மையேன் துதிக்கப்
போதிலேன்; மூலமே என்றே
வருந்தும்மா வினையைக் களைந்தருள் புரிந்தோய்!
மற்றும்உன் பெருமையை மட்டிட்டு
அருந்தவத் தோர்கள் யாவரும் புகழ்தற்கு
அடங்கிடாய்! மடங்கல்ஆ னவனே. 511

கருணையங் கடலே! விசுவசொ ரூபம்
காண்குதற்கு இச்சையான் மிகுந்தேன்;
அருள்புரிந் தருள்என்று உபசரித் தவனை
அருட்கணால் நோக்கியே இசைந்து,
திருஒளிர் தெய்வத் திட்டியும் அளித்துத்
திகழ்சது புயமுடன் சிறந்தே,
பெருந்தவத்து அரசன் மனம்களி கூரப்
பீடுஉருக் காட்டினன் பெரியோன். 512

(அடுத்த பாடல் சுவடியில் எழுதப்படவில்லை)

அனந்தசூ ரியப்ர காசரூ பமதாய்,
அரியபல் உலகுஉயிர் அனைத்தும்
இனம்பெற அடக்கும் வாயினைக் காட்டா,
இறைகளி கூர்ந்துற நோக்கா,

---

510. அலர்மரு என - மலரின் மணம் போல; மா - திருமகள்; சாக்காய் - வியாஜமாகக் கொண்டு.
511. இருமை - இம்மை, மறுமை. அலக்கண் - துன்பம்; மா - யானை, கசேந்திரன்; மட்டிட்டு - வரையறை செய்து, மடங்கல் - சிங்கம், நரசிங்கம்.
512. உபசரித்தவன் - வினையாவணையும் பெயர், பரிசத்துசன்; திட்டி - பார்வை; சதுபுயம் - நான்கு திருக்கரங்கள்.

மனம்குளிர்ந்த தற்பின் தெய்வதிட் டியையும்
மாற்றிஅவ் உருவையும் மறைத்தே
முனைந்ததார்க் கோலும் கையுமாய்ப் பழைய
முறைஉரு வொடும்எதிர் நின்றான். 514

அருகுற மகர குண்டலம் கிரீடம்
அணிபணி வச்சிர கவசம்
பரிதிஒண் கிரணம் விரிந்திடக் காண்டீ-
பத்துடன் தூணியும் சுமந்த
கிரிடியும் நிற்கக் கண்டு,உடன் எழுந்தே,
கேசவன் பதம்தொழுது ஏத்தி,
நரனையும் வணங்கி, மார்பினில் அணைத்து,
நல்உப சாரமும் பகர்ந்தே, 515

மாயனை மணியா சனத்தினில் இருத்தி
மற்றவ னையும்அருகு இருத்தி,
"தூயனே! உனையான் கண்டதே ஞானம்
தோய்ந்தனன்; அகத்துஇருள் தொலைந்தே
காயமே கதிபெற் றேன்;செயும் வேள்விக்
கனதவம் கைக்குவந் தது"எனச்
சேயனை நோக்கிப் "பரிகொணர்"கென,அச்
செனத்தினில் பரிகொடு விடுத்தே, 516

பரிஇரண் டனையும் முன்கொடு விடுத்தே
பறித்துள பருதியும் கொடுத்தே,
அரியடி தொழுது, "மதியிலேன் அபசா-
ரங்கள்செய் தவைபொறுத் தருள்"என்று
உரைசெய்துஅர்ச் சுனனை உபசரித்து இறைஞ்சி,
"உன்திற லேதிறல்; எனக்குக்
கரியவன் கொடுத்த தாம்இவை அலதுஉன்
கணைக்குயான் ஒருபொருட்டு அன்றே" 517

---

514. அனந்த - கணக்கற்ற, காடடா - காட்டி, நோக்கா - நோக்கி; தார்க்கோல் - குதிரையோட்டும் சாட்டை, பழைய முறை என்றது கண்ணன் திருவடிவை.

515. பரிதி - சூரியனின், ஒண் - ஒளிமிக்க; கிரணம் - கதிர்.

516 அசுத்து இருள் - அறியாமை. ஆணவம் எனினுமாம், காயம் - உடல்; சேயன் - மகன், செணம் - நொடிப்பொழுது.

என்றலும் வீரன் எழுந்து,அவன் தனையே
இருகையால் மார்பினில் அணைத்தே,
"உன்றனைப் போல உரவரும் உளரோ?
உறுதியாய்!" என்றலும் குமரன்
அன்றுஅருச் சுனனை ஆசனத்து இருத்தி,
அரும்கரம் கட்டியே நின்றான்;
மன்றலங் குழலாள் குமுர்த்திமால் அடியை
வணங்கியே வாழ்த்திஅ கன்றாள். 518

அன்றுஅரசு எழுந்து(அங்கு) ஆயனை வணங்கி,
"அருள்உனது உருவுகண் டதுவே
வென்றியாய்ச் சகஸ்ர வேள்விசெய் ததற்கு
மேல்அரும் பதவியான் பெற்றேன்;
நின்றமா இரண்டும் தர்மரா சேந்த்ரன்
நேயமா மகம்செயும் நீர்"என்று
ஒன்றிய கருத்தாய் உரைசெய்தே அளவில்
உறுபொருள் நிதிமணி உதவி, 519

"அறன்மகன் தனக்கே அளித்திடும் திறைஈது"
என்றுஅக மலர்ச்சியி னுடனே
இறையவன் அளித்து(அவ்) அத்தின புரத்துக்கு
எண்ணில்அத் திரி,சகடு எருதில்
திறலுடன் ஏற்றி அனுப்பி,அக் கினிக்குத்
திருத்திஆ குதிஅடை வித்து,
விறலுறும் இரணபேரிகை முழக்கி
விசயனோடு அரசனும் ஒத்தான். 520

அரசர்மந் திரிமார் தளம்புடை சூழ
அருள்பரித் துசன்எழுந் திருந்தே
திருமகன் அரசாய், நகுலனை ஏவு
செய்தொழில் முடித்திட நிறுத்தி,

---

518. குமரன் - தாம்பிரத்துசன்; மன்றல்அம் - நறுமணமும் அழகும் பொருந்திய; குழலாள் - கூந்தலை உடையவளாகிய.

519. நீர் - நீர்மைக்குரியது ஆகும்.

520. அறன்மகன் - இயமனின் மைந்தன், தருமன்; திறை - கப்பம்; அத்திரி - கோவேறு கழுதை; சகடு - வண்டி; எருது - பொதிமாடு; திருத்தி ஆகுதி - பூர்ணாஹுதி; இரணபேரிகை - போர்முரசு.

நரநரா யணனும் மகிழ்தரக் கூடி
நரலைபோற் பஞ்சவாச் சியங்கள்
உரும்என முழங்க மூவரும் பலரும்
யுத்தவெங் களத்தினில் உற்றார். 521

ஒத்தசிந் தையராய் விசயனும் மாலும்
உயர்பரி சத்துசா திபனும்,
வெற்றிசேர் பப்ர வாகனன், அமிர்தன்,
விரவுஎம னாசுரன், நீலன்,
கொற்றமால் இளவல், பிரத்திமன், குமரன்,
குரிசிலா கியவிட கீதன்,
உத்துவா சாரி, கிருதன்,அக் ரூரன்,
உரவர்கள் மற்றும்உள் ளோரும், 522

மந்திரி மார்கள் தந்திரா திபர்கள்
வாகன மீதினில் செல்லத்
தந்திரப் புணரி ரதகச துரக
பதாதிதற் சூழ்தர எழுந்து,
கந்திலாது எழுபத் திருவினை யோகம்
கறங்குவாச் சியங்கள்ஐந் தோடும்,
செந்திரு மார்பன் சயந்தனம் நடத்தச்
செயவிச யேந்திரன் சென்றான். 523

உயர்நவ [illegible]ண் கவிகையின் நிழற்கீழ்
உபயவாம் பரிநடந் தேக,
வியன்எழு கடல்போல் தளம்தொடர்ந்து ஏக,
வீரியர் அரசர்கள் சூழ,
செயபதி விசயன் மகிழ்வுறப் பரிப்பின்
சென்றனன் வென்றியி னுடனே
வயமுறு சனமே சயமனா என்ன
வைசம்பா யனமுனி உரைத்தான். 524

பரிசத்துசன் போர்ச் சருக்கம் முற்றும்.
ஆகச்சருக்கம் 16க்கு விருத்தம் 3113

---

521. திருமகன் - தாம்பிரத்துசன்; அரசாய் - மன்னனாகவும்; நரலை - கடல்; உரும் - இடி; மூவர் - கண்ணன், விசயன்,பரிசத்துசன்.

17. வீரவர்மன் போர்ச் சருக்கம்

(கலித்துறை)

தனக்குப் பொன்,இமை யவர்க்குஅமுது உயர்தரு முதலாய்க்
கனக்கும் வாழ்வுபொன் னர்க்கு,மூ தேவிகஞ் சனுக்கும்
சினக்கும் சிங்கிசங் கரற்குமுன் சீர்ப்பயோ ததியை
மனத்து உபாயமாய்க் கடைந்துபங்கு அளித்தமால்வாழி. 1

மன்ன னாம்சன மேசயன் வைசம்பா யனரை,
"கன்ன மேகுளிர் தரப்பரி மகக்கதை கருத்தாய்
நின்னை நேர்ஒன்றுக்கு ஒன்றுவி சித்ரமாய் நிரைத்துச்
சொன்ன பேர்இலை;சொன்ம்"எனக் கேள்வியில் தொடர்ந்தான். 2

"பரிச னத்துசன் இரத்தின நகரினிற் படையோடு
அரசன் வெஞ்சிலை விசயனைச் சார்ந்தமை அறைந்தோம்
திரைஉ லாவுஎழு கடல்எனத் திரண்டுஇரு தளமும்
முரண்இ சைந்தன கேள்;மனா!" எனச்சொல்வன் முனிவன். 3

கடல்கி ளர்ந்துஅடல் புடவியைத் தடவுதல் கடுப்பப்
புடைப ரந்திட, படிக்குவ டுகள்வட பொகுட்டு
கிடுகி டென்றுஅசைந் திட,விடச் சக்கிரி மகுடம்
நடுந டுங்கிட நடந்தது நால்வகைத் தளமும். 4

நடன வெம்பரி உபயமும் நவமணிக் கவிகை
படியின் நீழலில் நடித்திட, குளப்படி ஓம-
மொடுதொ டங்கிய யக்கியம் உளமுறை ஒழுங்காய்த்
திடமு டன்செய்து,வேதியர் குழுமியே செல்ல, 5

---

1. பொன் - திருமகள், உயர்தரு - கற்பக மரம்; பொன்னகர் - தேவலோகம் ; சிங்கி - நஞ்சு. ஆலகாலம், பயோததி - பாற்கடல்.

2. கன்னம் - செவி; பரிமகம் - அசுவமேதயாகம்; நிரைத்து - வரிசையாய்.

4. புடவி - நிலம்; படிக்குவடுகள் - உலகிலுள்ள மலைகள்; வடபொகுட்டு - இமய மலை, சிறப்புக் கருதித் தனியே கூறப்பட்டது;விடச்சக்கிரி - நச்சுப் பாம்பு, இங்கு ஆதிசேடன்.

வடிந றைப்புகைப் படலம்மா முகில்என மாகம்
இடன்அ றப்பர விடப்புய லொடும்அட இகலிச்
சுடரை மூடிடத் தோகையர் நடமிடக் கடல்நேர்
முடலை யாதிய பஞ்சவாத் தியங்களும் முழங்க 6

சபல ரத்தின நகர்எல்லை முழுதையும் தணந்தே,
உபய வெம்புர வியும்மினல் இரண்டுஎன ஒத்தே,
விபர மானதென் மேற்றிசை நோக்கியே விரைந்த;
சுபம தாம்பெரும் படைக்கடல் கிள்ளைபின் தொடர்ந்த. 7

திகழும் மூவெழு தினம்நிரு தியின்திசை நோக்கி
மிகைய தாகிய வெம்பரி நடந்ததின் மறுநாள்
நகுவி சாலக சொன்னகோ புரங்கள்விண் ணகடு
முகடு தட்டிட நின்றது மேருஎன முன்னம். 8

"சிகர கோபுரம் தெரிநகர் யாது?இவ்ர்ச் செம்மல்
மகிழும் நாமம்என்? நவிலும்"என்று அமிர்தனை வலிய
ககவி லாதிபன் கேட்கலும் "காண்டீபா! கேள்;"என்று
இகழ்வில் சாம்பநன் னகர்க்குஇறை அ'மிர்தனும் இசைப்பான். 9

நலம்உ லாவும்இப் புரமதே சரஸ்வதி நகரம்;
வலிய வீரவர் மன்இவ்வூர் ஆதிபன்; மாலைக்
குலவும் உள்ளகங் குடிகொளத் துதிசெயும் கோமான்;
பலதி சாமுகத்து அரசரும் துதிசெயும் பாதன். 10

கொற்ற மாம்பரி சத்துசன் திறைதரக கொள்வோன்;
பெற்ற சேய்சுள வன்சுலோ பன்எனும் பேரோர்;
உற்ற புத்திரி அங்கம லாணியென்று ஒருபெண்;
மற்றும் அங்குஅவள் மணமகன் மடங்கலாம் எமனே. 11

---

6 மாகம் - ஆகாயம், சுடர் - கதிர், மதி, முடலை - முருடு என்னும்பறை.

7 கிள்ளை - குதிரை

8. நிருதியின் திசை - தென்மேற்கு, சொன்ன - சொர்ண,பொன்னாலாகிய

9. செமமல் - தலைவன், அரசன், ககம் - அம்பு, ககவில் - உம்மைத்தொகை.

அனந்தர் தன்னிலும் முகுந்தனை மறந்திலான்; வன்போர்
முனைந்த போதினில் மூவரும் யாவரும் முடுகார்;
சினந்த மைந்தர்கள் இருவரும் வேளினில் திறலோர்;
புனைந்த வாகைஅம் புயத்தினர் போர்ரண சூரர். 12

வீர வீரியன் வீரவர் மன்புரம் மேவில்,
கோரம் இலங்குஅவன் பற்றுவான்; பற்றினால் கொடுக்கான்.
போர்செய் தால்இமைப் போதினும் பொரவலர் உளரோ,
ஆரும் நேர்அலர் அவன்வலிக்கு அர்ச்சுனா!" என்றான். 13

"நன்று! நன்று!எமன் நரன்மினை நயந்துவேட் டுளதுஎன்?"
என்று கேட்கவும் இகல்அமிர் தனும்எடுத்து இசைப்பான்
"வென்றி வில்லி!கேள்; இருவரில் இளையதோர் மின்னை
மன்றல் செய்திடச் சுயம்வரம் நாட்டினன் மன்னன். 14

ஈது சேதியை அங்கம லாணிகேட்டு இடைந்து
தாதை தாள்தொழுது உன்னம்உ சாவினள்; "தய்யால்!
மேதை யானதே சாதிபர் தம்மில்நீ விரும்பும்
நர்த னுக்குஉனைத் திருமணம் முடித்திட நயந்தேன்." 15

என்ற தந்தையை இறைஞ்சியே, "நரர்எவர் களுக்கும்
மன்றல் சூட்டிலேன்; தேவரில் எமதரு மனுக்கே
அன்றி, யான்மணம் பொருந்திலேன்; அந்தவாறு இலையேல்,
வென்றி யாம்தவம் விரும்புவேன்; மெய்;"என இசைத்தாள். 16

"அட்ட பாலரில் தென்திசை ஆதிபன்; அகக்கண்
திட்ட மானவன்; தீண்டுவ னோசக மாதை?
பட்ட பாட்டைநீ படு"கெனப் பகர்ந்து,தார் சூட்டும்
இட்ட நாளையும், முகுர்த்தமும் தவிர்த்துஇனிது இருந்தான் 17

---

12. அனந்தர் - தூக்கம்; வேளினில் - முருகனைப் போன்ற. 13. புரம் - ஊர், கோரம் - குதிரை.
14. இடைந்து - வருந்தி; உன்னம் - உள்ளக்கருத்து. 16. மன்றல - மணமாலை.
17. அகக்கண் - வானில், திட்டமானவன் - நிலைபெற்றவன்; சகமாது - நிலவுலக மடந்தை;
இட்ட - விரும்பத்தக்க.

அருந்த வத்தரும் திகைத்திட அருந்தவம் இயற்றி,
முருந்துஐ வால்நகை ஒருமையின் விரதமே முயன்று,
இருந்த வாறுகண்டு எமன்தனை நாரதன் எய்தி,
திருந்து செய்திகள் அனைத்தையும் எடுத்துஉரை செய்தான். 18

முனிஉ ரைத்தசொல் கேட்டதே முறுவலித்து எழுந்து,
கனி,ம துக்குழற் கழை,நல்யாழ், கண்டு,பால் குயிலின்
இனிய சொல்தையல் இருக்கும்அக் கண்ணில்வந்து எய்தி,
"மினல்உ ருப்படும் மெல்லியோ?" என்றுவெய் துயிர்த்தான். 19

மால்ம கன்கணை தொளைத்திட மாலினில் மயங்கி,
சேல்ம யங்கிய விழிச்சியைப் பயந்தவன் திருமுன்
பால்ம கிழ்ந்துஇவன் நின்றிடப் பயந்துஅவன் நடுங்கி
நூல்மு யன்றகோன் ஆதவன் மகன்தனை நோக்கி 20

"வந்தது என்?"என முன்புநின்று ஆசிர்வ தித்த
அந்த கன்றனை உபசரித்து அண்ணலும் வினவ,
"உந்தன் நல்கதை மணஞ்செய்து எனக்குரி மையதாய்த்
தந்திடு" என்றலும் உவகைஉற்று அவன்அதி சயித்தே, 21

"மருக னாகநீர் வந்ததுஎம் மாலையான் வணங்கும்
பெரிய மாதவ மோ?குலப் பெரியர்முன் வணங்கும்
உரிய மாதவ மோ?எனது உலகுசெய் தவமோ?
கரிய மால்அரு ளோ?இளம் கன்னிசெய் தவமோ? 22

எனக்கு நீர்ஒரு வரம்தரில் பயந்தஎன் சுதையை
உனக்கே ஒல்லையின் மணம்முடிப் பேன்"என உரைக்க,
"கனக்கும் மேல்வரம் கூறு"என, "கன்னியை வேட்டால்
மனத்துஅ வாவொடுஇங்கு இருந்துற வாழ்குவது" என்றான். 23

---

18. முருந்துஐ - மயிலிறகின் குருத்தின் அழகு, வெண்மையையும் அழகையும் எனினுமாம்; வால்நகை - ஒளிவீசும் பற்களை உடையஅங்கமலாணி.

19. குழற்கழை - மூங்கிலால் ஆன புல்லாங் குழல், முன்பின்னாகத்தொக்க மூன்றன்தொகை; மதுக்குமுல் என்புழி போப்பு நோக்கிக் கசுரமெய் தோன்றியது; கண்டு - கல்கண்டு; சொல்வின்இனிமைக்கு ஏழு உவமை கூறியதால் இது பலபொருள்உவமையணிஆகும்; அக்கண்ணில் - அவ்விடத்தில்;

20. மால்மகன் - மன்மதன், மாலினில் - ஆசையில்; பயந்தவன் - பெற்ற தந்தை; இவன் - இயமன்; அவன் - வீரவர்மன்; நூல் முயன்றகோன் - அறநூல்களில் விதித்தவாறே ஆட்சிபுரிந்த மன்னன்; ஆதவன்மகன் - சூரிய குமாரன், இயமன்.

21. அந்தகன் - இயமன், சுதை - மகள். 22 உலகு - இங்கு அவ்னால் ஆளப்படும் நாடு.

23. ஒல்லையின் - விரைவில், கனக்கும் - பெருமை மிக்க

நடுவன் அங்குஅதற்கு இசைந்திட, நன்மணம் முடித்தான்;
வடிவின் அங்கம லாணியும் மயிடவா கனனும்
குடிய தாகஅந் நகரினில் வாழ்குவர் குலவி
மிடல தாகளந் நாளும்;"என்று உரைத்தனன் வேந்தன். 24

அந்த வாறுகேட்டு அர்ச்சுனன் தலைஅசைத் தவனாய்
மந்த காசமுற்று ஏகினன்; வாம்பரி இரண்டும்
முந்த ஏகின அந்நகர் தன்னையே முன்னி;
அந்த ஊர்வடக் காம்தர்ம நதியினை அடுத்த 25

அடுத்த போதினில் ஆதிபன் சேய்இரு வோரும்
நடத்தும் நால்வகைத் தளத்தொடும் நயந்துகான் வேட்டை
திடத்தி னோடுசெய் திடநதி தர்மதீ ரத்தி-
னிடத்தில் நிற்பவர் கண்டனர் இருகணில் பரியை 26

என்று சொன்னமா முனிவனை இறையவன் நோக்கி,
"என்று மேதரு மநன்னதி என்றபேர் ஏது"என்று
அன்று கேட்கவும், "அந்நகர் ஆதிபன் நிதமும்
வென்றி யாகிய தர்மமே செயம்என விரும்பி 27

(அடுத்த பாடல் சுவடியில் எழுதப்படவில்லை)

கன்னி,கோ,புவி, அன்னம்,வஸ் திரம்,அணி பணிகள்,
சொன்ன தானமும், மற்றுள தானமும் சொரிவான்;
பன்னு சந்ததம் இடுதொழில் பயில்பவன் கரத்தில்
உன்னும் நற்புனல் ஏற்பதால் ஒழுகும்நீர் பெருகி, 29

ஆற தாய்ப்புவி அகழ்ந்தஆர் கலிஎன நிதமும்
ஊறு நீர்கசிந்து ஓடுதல் அமர்ந்திலா ததினால்
பேறது ஆகிய தர்மநன் னதிஎனும் பெயர்"என்று
ஏறு மாமறை முனிசொல மன்னவன் இசைந்தே, 30

---

24. நடுவன் - இயமன், வடிவின் - அழகிய; மயிடவாகனன் - எருமையை ஊர்தியாக உடைய இயமன்.

25. மநதகாசம் - புன்முறுவல், முன்னி - சுருதி, தர்ம நதி - ஆறறின் பெயர்.

26. நிற்பவர் - நிறபவராகிய அரச குமாராகள

27. முனிவன் - வைசம்பாயனன், இறையவன் - சனமேசயன்.

29. கோ - பசு; சொன்ன தானம் என்பதிலுள்ள தானத்தைக் கன்னிமுதலிய ஆறுடனும் கூட்டுக. அணிபணி - வினைத்தொகை

30. ஆர்கலி - கடல; ஆறு - ஒழுகும் நீரின் செலவிற்கும், கடல அதன்மிகுதிக்கும் உவமையாயின.

"அதற்கு மேல்கதை நிகழ்ந்தவை அறைந்திடும்" எனவே,
இதத்தின் மன்னவன் வினவலும் இருபுர வியையும்
உதித்த எண்நவ மாம்வினை யோகம துடனே
மதர்த்து வருவதை மன்சுதர் இருவருங் கண்டே, 31

"ஈது வேள்விசெய் திடுபரி" என்மனது எண்ணி,
"வாதி னால்மதி யாதுநம் மண்ணைமா மிதிக்கப்
போத விட்டவர் யார்"என நெஞ்சகம் புழுங்கி,
"யாதும் காண்குதும்; பிடி,"என அமைச்சனுக்கு அறைந்தார். 32

இயம்பும் வாசகம் பிற்பட, முற்பட எழுந்தே
அயங்கள் இரண்டையும் பிடித்தனர்; அடித்தனர் அருகாய்
இயங்கு பேரையும்; துரத்தினர்; விருதுகள் யாவும்
வியர்ந்து பற்றியும் பறித்தும்வேந் தர்முனம் விட்டார். 33

"தேட்ட மாகிய வேட்டைஇன்று எய்திய திறம்போல்
வேட்டம் எத்தினங் களும்கிடைத்தில"என எண்ணி,
நாட்டம் கூர்தர நகரினில் புரவியை நடத்தி,
பூட்டு திண்சிலை அரசர்கோன் திருமுனம் (போந்தார்). 34

வலம தாய்,இரு மைந்தரும் வந்துதாள் இறைஞ்சி,
இலகு பொற்படத் தினைஇரு கரத்தினில் ஏந்தி,
உலக நாதனுக்கு அளித்திட, வாசகம் உணர்ந்து,
"கலகம் நன்று"எனக் களிப்புடன் சிறுநகை காட்டி, 35

"சத்ய வாசகன் தருமபூ பதிபரி;"என்றும்,
"அத்ர வீரியன் தனஞ்சயன் அசுவரட் சகன் ஆம்;
இத்த லத்துஉள வீரியர் பிடித்திட;" என்றும்;
"தத்து தேர்ப்பரிச் சாரதி சீதரன்;" என்றும், 36

---

31. எண்நவமாம வினையோகம் - சென்ற சருக்கத்தில் 523 ஆம் பாடலிலும் எழுபத்திரு வினையோகம் என்றார், இது விளங்கவில்லை, மதர்த்து - செம்மாந்து.

33. வாசகம பிறபட முற்பட எழுதல் - சொல்லிமுடி பபதற்கு முன்பே செய்யத் தொடங்குதல, அயங்கள் - குதிரைகள், வியர்ந்து - சினங்கொண்டு.

34. தேட்டம - வருவாய

35. உலகநாதன் - அரசன், வீரவர்மன்.

எழுதும் வாசகம் பிரபலம் யாவையும் எண்ணி,
"பழுத தாய்என பயித்தியம் பிடித்தது?இப் பரியை
விழும மாகஇந் நிலத்தினை மிதிக்கவும் விடுத்தான்!
கொழுமை யாம்குரு குலபதி கொற்றமே நன்றே! 37

அருச்சு னன்பலத்து அன்றுஅவன் அன்பன்நர் ரணன்றன்
முரம்ப லத்தினில் முயன்றது வாம்அமர் முரசம்
உரத்த விண்இடி கடல்ஒலி முழக்கினில் ஒலிக்க
பெருத்த நம்படை நடத்து"எனப் பொருநரைப் புகன்றான். 38

அந்த வாசகம் கேட்கும்முன்பு ஐஅமை நகரும்
தந்தி ராதிகர், மந்திரி மார்களும், தளமும்
சிந்தை கூர்ந்துஅரண் வாயிலை நோக்கியே சென்று,
முந்து யோசனை மூன்றுசென்று அணிமுனை முயன்றார். 39

வச்ர மாசுண யூகமாய் வாகினி நிறுத்தி,
நச்சுஅ ராநடுத் தலையில்மன் மைந்தரை நாட்டி,
பைச்சி ரங்கள்ஆ யிரத்தினும் வீரர்பற் பலரும்
உச்சி தங்களாய் உடல்கள்வால் உரவரை நிறுத்தி, 40

நிரந்த ரம்சது வகைத்தளங் களையும்நேர் நிறுத்தி,
முரண்க ளாய்ரண முரசவர்க் கங்களும் முழக்கி,
இருந்த போதினில் சரஸ்வதி நகர்க்குஇ றையவனும்
விரிந்த காப்புஉறு கொத்தள மீதினில் மேவா, 41

மேவி மைந்தர்கள் அணிசெயும் விதத்தையும் மெச்சி,
தாவி ஏழ்பெரும் சலதிஒத்து அர்ச்சுனன் தளங்கள்
கூவி ஆர்ப்பொடு வருவதும் கோவினால் நோக்கி,
பூவில் வீரியன் புகைந்தனன் சீற்றமே பொலிய. 42

---

37. பிரபலம் - புகழ்; பழுததாய் - வீணாக, விழுமமாக - (தனக்கு) துன்பம் நேருமாறு; கொழுமை - கொழுப்பு; குருகுலபதி - தருமன்

38. அமர் முரசம் - போர் முரசு; பொருநர் - படைத்தலைவர்.

39. ஐஅமை - அழகு பொருந்திய; தந்திராதிகர் - படைத்தலைவர்; அணிமுனை - போர்க்களம்.

40. வச்ரமாசுணயூகம் - ஆதிசேஷவ்யூகம், வாகினி - படை, பைச்சிரம் - நச்சுப்பையை உடையதலை, இரண்டன் உருபும் பயனும் உடன்றொக்கது, உச்சிதங்களாய் - பொருத்தமாக.

41. ரணமுரசம் - போர்முரசு; விரிந்த காபபு உறு - விரிவான பாதுகாப்பு ஏற்பாடுகளைப் பெற்றுள்ள, கொத்தளம் - மதில்;மேவா - மேவி.

42. சலதி - கடல்; கோவினால் - கண்களால்.

ஆக்க ரித்துள வீரவர் மன்தனை அடுத்து,
"தாக்குஅ ருச்சுனன் தன்னைஓர் பொருட்டுஎன தக்கோய்!-
நோக்கம் இத்தனை கோபம்ஏன்? நொறுக்குவேன் அடியேன்
ஊக்க மாய்எனக்கு உத்தரவு அருள்"கென உரைத்தான். 43

"வன்ப லத்துடன் வரும்அருச் சுனன்தளம் அடங்கத்
தென்பு லத்திடு வேன்"எனச் செப்புஎமன் சொல்கேட்டு
என்ப லத்தினுக்கு இரைஇலை; எனிலும்நன்று ஏகி
உன்ப லத்தினால் அழித்திடு"என்று உத்தரவு உரைத்தான். 44

இந்த வாறுஇவண் நிகழ்ந்திட, தனஞ்சய னிடத்தில்
குந்த மோடுபல் விருதையும் பறிகொடுத் தோர்கள்
அந்த ஏல்வையில் நடந்தவை அறைந்தனர்; அதுகேட்டு,
"உந்தி யேபரி பிடித்தன னோ?"என உறுக்கி, 45

பற்க டித்தனன்; வீசைகள் துடித்திடப் பரங்கை-
யிற்க டித்தனன்; உமிழ்ந்தனன் இரத்தம்;விம் மிதமாய்,
சொற்க டுத்தமாய் உரைத்திடத் துணிந்ததோ ழனைப்பார்த்து
அர்க்கன் வெட்கிய ஆழியான் எதிர்மொழி அறைவான். 46

"ஐய னேஇனம் அடக்குக; உனில்அடங் குவனோ?
வெய்ய வீரியன் எனதுபஞ் சாயுதம் விடின்ஓர்
கையில் பற்றுவன்; அரன்படை, குகன்கைவேல் அவனைச்
செய்ய லாவதுஇல்; எனில்அவன் றன்னையார் செயிப்பார்? 47

வாயில் வந்தசொல் எறிந்துஅப செயங்கள்தான் வரும்முன்
நீய றிந்துவாய் பேணுக; நின்னுடன் யானு-
மேய டைந்தும்உந் தனுக்குறு தீங்கவை எனக்காம்;
ஆய தற்கியல் பாய்நடந் திடுதல்நீ அழகே." 48

---

43 நோக்கம் - சுண்களில், உரைத்தவன் இயமன்.

44. இரை - தீனி.

45. குந்தம் - குதிரை; ஏல்வையில் - நேரத்தில்; உந்தி - வலியவந்து, உறுக்கி - சினங்கொணடு.

46. பரங்கையில் - முண்கையில்; சுடுத்தமாய் - மிக அழுத்தமாக; சொல் என்றது வெஞ்சினத்தை அர்க்கன் - சூரியன்.

47. அரன்படை - சிவபெருமானின் முத்தலைச்சூலம்.

48. அபசெயம் - தோல்வி.

என்று உரைக்கவும் எயிறுஅடிக் கடிகடித் தவனாய்,
ஒன்று முன்நினைவு ஒழிந்துசெந் தழல்விழி ஒழுக,
மென்று மென்றுஇதழ் கறிப்பவன் தன்னுடன் மீண்டும்
அன்று மாயவன் அருளுவன் தெருள்தர ஆய்ந்தே 49

"தக்க வான்புவி சமஸ்தமும் அடக்கிய மாலைச்
சிக்க வேஇரு தயத்துஅடக் கியசெய வீரன்;
நக்கன் நாரணன் நான்முகன் நடுங்கிடப் பொருவான்;
தொக்க மூவரும் ஒன்றுஎனத் தொடுத்தசிந் தையினான்." 50

எனஉ ரைத்து,இர தம்செலுத் திடஎதி ராக
அனிகம் மேவலர் அணிவகுத் திடும்விதம் நோக்கி,
முனிவல் லாண்மையான் முளைஇரு வரையும்முன் அழைத்தே,
"வினைஞர் உண்டையா விளங்குஅணி செய்"கென இசைத்தான்.
51

பப்ர வாகனன் றன்னையே இளையவன் பணிந்து,
"அப்பன் ஓதிய மொழிவழி யாதுசெய் குவம்?"என்று
ஒப்பி யேவின விடப்பணிப் பகைஉவ ணனைப்போல்
இப்ப வேஅணி செய்தி;ஈண்டு எனமுனோன் இசைத்தான். 52

(வேறு)

தலையினி லேபரி சத்துசன்; மற்றுளர் தமையேமுன்
நிலையினில் வைத்துஅமர் முரசம்மு ழக்கியும் எதிர்நின்றார்;
மலையவும் நாடிய மன்னவ னிருசுதர் வருவோரை
விலகியு மேஎமன் மயிடமது ஏறிவெ குண்டானே. 53

வெஞ்சின முடன்எமன் இகலது செய்திட வெகுளுற்றான்;
அஞ்சிமன் னவர்அணி நிலைகுலை வதின்முன மாகத்தான்
நஞ்சுஅரி மெய்த்தலை யேபிள வுண்டிட, நகுதண்டால்
பஞ்சுஎன மோதி,அவ் ஆவியை வீக்கினன் பாசத்தால். 54

---

50. சமஸ்தமும் - அனைத்தும், நக்கன் - சிவபெருமான்

51. அனிகம் - படை; மேவலர் - பகைவர், முனி-வில், முளை - மைந்தர்.

52 பணிப்பகை - பாம்புகளின் விரோதி; உவணன - கருடன், கருடவ்யூகம் அமைக்கப்பட்டது.

53. தலையினிலே - கருடவியூகத்தின் தலைப்பகுதியில்.

54. நஞ்சு - ஆகுபெயராகப் பாம்பை உணர்த்திற்று, அரி - பகைவன்; நஞ்சுஅரி - கருடன், இங்கு வ்யூகம்; தண்டு - கதாயுதம்.

நின்றவ ரைப்பினர் கண்டிலர் பார்த்திட நேராதால்;
அன்றுஉள்அ ருட்டிமி கச்சொல்அ ரற்றினர் அபயத்தை;
கன்றலி னால்,எம னோ,"என விசயன்க வல்போது,
நன்றியின் மாயவன் "ஆம்"!என, வெஞ்சின நகைகொண்டே, 55

"முந்தஎன் தந்தைவ னம்தக னித்திட முனைபோரில்
வந்துப டும்துயர் அகன்றுஇனும் விஞ்சும தத்தால்இங்கு
உந்தினன்; நான்இவ னைக்கொலு வேன்;"என உரசுற்றே
கந்தனை நேர்விலி சிந்துவ ளைத்துஅரன் கணைவைத்தான் 56

நானும்இ ருக்க,என் வில்லொடு நீயும்ந லத்தோடு
தானும்இ ருக்கந டுங்கிலன் இன்னவன் தான்அஞ்ச
நீநினை வுற்றனு மன்தனை முன்புநி றுத்தென்னத்
தான்நினை வுற்றிட . . . . . தயவோனே 57

சகமும்வி ணும்திசை தழுவிய ஓர்உரு தானாக
. . . . . கிண்கிணி வாலைஅ டித்து . . .
மிகுகக னம்புவி தடவிய வாயைவி ரித்தேசொற்
பகர்உயர் கர்ச்சனை பண்ணினன்; யாவர்ப யந்துஓடார்? 58

இடிகள்ந டுங்கிடும் வெடியின்மு ழக்கமும் இவன்மெய்யின்
வடிவினை எமன்கண் டேவாய் குளறியும் மனம்நொந்தும்
"நெடியஇ -லங்கையி னைச்சுட்டு அசுரரை யேநீற்ற
கொடியவன் இங்குற வந்ததுஎன்?" என்றுகு லைவுற்றே. 59

"வில்அரி ராகவன் ஏவல்செய் தூதுவ னாம்;ஈண்டும்
மல்லலி னாகிய க்ருஷ்ணனி டத்திலும் வந்தானோ?
பல்லவம் ஏவிய ழிப்பான்; மால்உயிர் பாரான்"என்று
எல்லையி லேமயி டம்செலு மாறு,"பின் ஏகு"என்றான். 60

---

55. உள் - மனதில்; அருட்டி - அசசம், மிக - அதிகரிக்க;கன்றவினால் - (தன்பெரும்படை இவ்வாறு) நைநது போவதால

56. தந்தைவனம - இந்திரனுக்குரிய காண்டவவனம், தகனித்திட - எரிக்க, விஞ்ச - மிகுதியான; உந்தினன் - வலியவந்தனன்.

59. நீற்ற - நீறாக்கிய, கொடியவன் - இயகு வளைந்த உடலை உடையவன் எனக்கொள்க, பகைவன் என்ற கண்ணோட்டத்தில் தீயவன் என்றான் என்றோ, கொடிக்கண் இருப்பவன் என்றோகூறினுமுமையும்.

60. மல்லலின்ஆகிய - வலிமையால் பெருமை பொருந்திய; பல்லவம்- மரக்கினை; மால் - பெரிய.

மனகதி நேர்மயி டம்செல, மனைவிமுன் வந்துற்றே,
முனையின்ம முக்கம தாய்வெரிந் மீதுற முன்வைத்தே,
நனிகொடு தென்திசை நோக்கிந டந்தனன் நைவாகப்
புனையும்வல் எமபுரத் தில்மனம் தளர்வொடு போந்தானே. 61

மக்கிந டுங்கினர் அனுமனி னால்பலர்; மருவார்கள்
உக்கினர்; கிடுகிடு எனத்தொனி முரசம்உ ரத்துஆர்க்கத்
திக்குஅதி ரப்புவி சேண்உலை யச்செய செயம்என்றே
மிக்கம கிழ்ச்சிஅ டைந்தனர் விசயன்வி றல்தானை. 62

அனபொழு தேஅறு சாளுவன் அமிர்தனும் அநிருத்தன்
மனுபரி சத்துசன், அக்குரன், மாயவன், மகன்,மற்றும்
வினையுறும் எமனா சூரனு டன்திறல் விசயன்சேய்,
கனன்மக னும்,பல வீரரும் ஆங்கே கணைபெய்தார். 63

(வேறு)

ஆயி ரம்பதி னாயிரம் இலக்கமாய்ப் பதின்நூறு
ஆயி ரம்பதின் மடங்குறு கோடியின் அளவாய்
காய்அ ரும்சரம் ஒவ்வொரு வீரரும் கடுத்தே,
தீயின் மாரிஒத் தேசொரிந் தனர்சிலை யதனால். 64

கண்ட கண்டமாய் முண்டமுண் டங்களாய்க் கறையின்
மண்ட லங்களாய்க் களம்சிறந் தது;மரு வார் (தம்)
தண்டம் நால்வகைத் தளங்கள்பன் மலைமலை மலையாய்
எண்டி சாமுகம் எங்கணும் மாய்ந்துகூய்ந் ததுவே. 65

பற்பல் ஆறுஎனப் பரந்தது குருதியம் பரவை;
அற்பு தங்களாய்க் கவந்தம்மீ வெளிமுழுது அடைத்த;
விற்பல் நூல்விறல் வீரியர் விடும்சர மழையால்
தற்ப முற்றமந் திரிகள்தந் திரிகள்நொந்து அழிந்தார். 66

---

61. மனசுதி - மனோவேகம், இரண்டாம் அடி தெளிவாக விளங்கவில்லை.

62. மக்கி - அஞ்சி; சேண் - ஆகாயம்.

63. அக்குரன் - அக்ரூரன்; மகன் - திருமாலின் மைதன், பிரத்யும்நன், விசயன் சேய் - பப்ரவாகனன்; கனன்மகன் - கர்ணனின் புதல்வன், விடசீதனன்.

64. காயசரம், அருமசரம்எனத தனித்தனி இயையும. எய்பவனின் சினம் அம்பின்மேல் ஏற்றபபடடது; கடுத்தே - வேகமாக;

65. கூய்ந்தது - குவிந்தது, ஏகாரம் ஈற்றசை.

66. கவந்தம் - உடற்குறை, தற்பமுற்ற - சுருவங்கொணட.

நெரிநெ ரிந்துஅணி நிலைகுலைந்து அழிந்திட, நிருபன்
அரிய மைந்தர்கள் இருவரும் சினம்கொடுஆக் கரித்தே,
இரத மானதை நடத்தியே விற்குணம் இசைக்க,
நரன்அ ருந்தளர் நடுநடு நடுங்கினர் நடுங்கார். 67

"நடுங்கல் என்?சமர் ஒழிந்தவர், நாண்இறக் கியபேர்,
இடுங்கி ரீடமது இறக்கினோர், புத்தில்ஏ றினவர்,
தொடும்புல் கவ்வினோர் தம்மிடம் யான்சரம் தொடுக்கேன்;
அடுங்கை வில்லுடன் எதிர்ந்தபே ரிடத்துஅமர் புரிவேன்" 68

என்று கூறியே வன்சரா சனத்தினில் இருகோல்
அன்றுஇ ழுத்துவிட்டு அக்குரூ ரன்முடி கழற்றி,
பின்றை வன்சயந் தனத்தையும் பிளந்து"ஒரு பிறைக்கோல்
இன்றுஉன் சென்னியை இறக்கும்முன் இறக்குஉன்நாண்" என்றான். 69

தருச நாண்இவன் இறக்கவும், உத்துவா சரிமேல்
இருச ரம்தொடுத்து இடறியே மோலியும் தேரும்
ஒருச ரம்பினும் தொடுக்கும்முன் நாணிவிட்டு ஒடுங்கா,
கிருத வர்மனும் சிலையின்நாண் கிளந்தவாறு இறக்கா 70

நீல னும்சுக லீலனும் அமைச்சன்நெஞ்சு இளைத்தே,
ஏல வெஞ்சிலை நாணிவிட்டு இளைத்துநின் றதற்பின்,
ஆல காலம்ஒத்து அடர்ந்துஅனு சாளுவன் ஆற்றற்
கோல்அ னந்தம்மேல் வீசினன் எதிரியைக் குறுகி. 71

சொரிந்த கோல்களைத் துகள்படப் பலகணை சொரிந்து,
தெரிந்த கோல்கள்எண் இரண்டுவன் சுவனும் செலுத்த,
அரிந்துஎ றிந்துஐ இருகணை அடர்ந்துஇவன் விடுத்தே,
நெரிந்துஅ ழிந்திடத் தேர்,சிலை, கொடியையும் நீற்றான். 72

---

67. விற்குணம் - வில்லின் நாண்; நடுங்கார் ஆகிய அருந்தளர் நடுங்கினர் என்க.

68. புத்தில் ஏறினவர் - புத் என்னும் நரகத்தில் தள்ளப்பட உள்ளவர்கள், அதாவது மக்களைப் பெறாதவர்கள், நரகடைதல் உறுதி என்பது பற்றி இறந்தகால வாய்பாட்டால் கூறினான்.

69. வன் - வலிய; சராசனம் - வில், அன்று - அப்போது, பின்றை - பிறகு, பிறைக்கோல் - அர்த்தசந்திராஸ்த்ரம்.

70. தருசம் - பெருமை, மோலி - கிரீடம், கிளந்தவாறு - முன்கூறியபடி, அல்லது மன்னன் மக்கள் சொல்லியபடி எனினுமாம்.

71. அமைச்சன் - சுவேதன்; ஆற்றற் கோல் - வலிமை வாய்ந்த சரங்கள்.

72. தெரிந்த - தேர்ந்தெடுக்கப்பட்ட

தேர்,வில் நீறிடத் திகைத்துஒரு தேர்மிசை யாகி
வார்வில் ஏந்தியே வடிக்கணை எட்டில்மா, வலவன்
சார்ப தாகையும், தேரையும், சிலையையும் தறித்தான்;
ஓர்வில் ஏந்திமற் றொருசயந் தனத்தினில் உற்றே, 73

பன்னி ரண்டுவெம் பகழியால் தேர்,சிலை, பாகும்
உன்னி நாலையும், கொடியையும் முடியையும் உருட்டி,
பின்னும் எண்கணை மருமமீது இருத்தினன்; பெருவாய்
தன்னி லேகனல் கக்கிவேறு ஒருரதத்து ஆகி, 74

வலிய வெஞ்சிலை வளைத்துஒரு நாலுகோல் மார்பும்,
மெலிவில் அம்புய மீதினில் நாலுவெங் கணையும்,
ஒலியி னோடுவன் களம்குளத்து உபயஆ சுகமும்
பலுகுஅ ணிப்பட உருவிட வீசினன் பதகன். 75

தைத்த கோல்ஒரு பத்தினால் சயந்தனம் மிசையே
எய்த்துஅ யர்ந்தபின் னே,எம னாசுரன் எதிர்த்தே,
வைத்தி கழ்கணை மாரியால் திசைவெளி மறைத்தே,
மொய்த்தி டச்சயந் தனத்தையும் மூடினன் முடுகி. 76

ஓரி மைப்பினில் பற்பல பகழிகள் உடற்றி,
சாரு வைக்கணை தறித்திடப் பத்திர கிரியான்
கூரி கற்கணை ஒன்றின்மோ லியைக்குவில் வீழ்த்தே
வாரம் அற்றிட அறுத்தனன் ஒருவடிக் கணையால் 77

மற்றும் ஓர்சிலை வளைக்கும்முன் பத்துவா ளியினை
நெற்றி, தோள்,களம், நெஞ்சினில் நெரித்திட, நெடுமூச்-
சுற்று, வாய்கறை கக்கி,மற் றொன்பது கணையைக்
கொற்ற மத்தகம், நெஞ்சு,மொய்ம்பு உருவிடக் குறித்தான். 78

---

73. மா - குதிரை; பதாகை - கொடி.

74. உன்னி - குதிரை; முடி - மௌலி, மருமம் - மார்பு.

75. களம் - கழுத்து; குளம - நெற்றி, உபய - இரண்டு; ஆசுகம் - அம்பு, பலுகு - பெருகி, மிகவும்; அணிப்பட - அழகுபடுத்தி,போர்முறை தவறாமல், இனிவரிசையாக எனினுமாம்.

76. வை - கூர்மை, வைத்திசழ என்புழி எதுகை நோக்கிமெய் மிகுந்தது.

77. கூரிகற்கணை - கூர்ங்கணை, இகற்கணை எனத் தனிததனிஇயையும், மோலி - கிரீடம், கு - நிலம்; குவில் - நிலத்தில்.

சுளவன் விட்டிடும் சுடுகணை ஒன்பதால் சோர்ந்த
அளவி லே,அமிர் தத்துசன் ஆக்கரித்து ஆர்த்து,
வளைவி லாஇரதத்தினை நடத்தி,வில் வளைத்து,
தளர்வி லாஅடை மழைஎனச் சொரிந்தனன் சரங்கள். 79

அவனும் வேகம்உற் றேவிடா மழைஎன அழல்கோல்
நவம தாகமென் மேலுமே சொரிந்திட, நகையா,
இவனு மேஉர சோடுகை விரசினால் ஏழு
புவனம் முற்றினும் அடைத்திடப் பொழிந்தனன் புங்கம் 80

அம்பும் அம்பமே பிணைந்தன; அயில்அயில் கோர்த்தே
இம்பர் அம்பரம் எங்கணும் உலவின; இடந்த;
வெம்பு அருந்தலை இடைகடை முறித்தன; இறகை-
யும்பி ளந்தன, ஊடின; சரஞ்சரம் ஒத்தே. 81

இருவர் மெய்அவ யவங்களும் பிளந்தன வேலால்;
இருவர் தேர்பரி பாகரும் புதைந்தன சரத்தால்;
இருவ ரும்கறை போர்த்தனர் சாற்றரும் துயராய்;
இருவ ரும்சயந் தனத்தினில் அயர்ந்தனர் எய்த்தே. 82

துரித மாய்அரைக் கடிகையில் தெளிந்தனன் சுளவன்
கரிய வன்கும ரன்சினந் தேரதங் கடவி,
விரைவில் வந்து,வில் வளைத்து,வெங் கணைபல விடுத்தான்
தரமது ஒத்துஇரு வரும்சரம் சொரிந்தனர் சரியாய். 83

ககுபம் மூடின; கனமலை மூடின; கடல்வா-
னகமும் மூடின; அழல்புகை மூடின; அஷ்ட
நகமும் மூடின, நாகமும் மூடின; நாகர்
மகியும் மூடின; வலிதுஇரு வரும்விடும் சரங்கள். 84

---

80. நகையா - நகைத்து. புங்கம - அம்பு.

81. இடந்த - கிழித்தன, வெம்பு - கினக்கின்ற, தலை, இடை, கடை எனறது கணையின பகுதிகளை.

84 ககுபம் - திசை, அஷட நகம் - எண்பெரும் மலைகள், முதலிற் கூறியது பிற மலைகளை, நாகம் - யானை, அஷ்ட நாகம் எனக்கூட்டுக, மகி - உலகம்

முனைஅ ரிந்தன; முரண்அல குஅரிந்தன; முதிர்நள்-
ளினைஅ ரிந்தன; இருசிறகு அரிந்தன; குதைகால்
தனைஅ ரிந்தன; சரங்களைப் பிளந்தன - சரங்கள்
வினைய வீரியர் விடாமழை விசிகமே பொழிய. 85

கடிகை இரண்டினில் சுளவன்வெங் கணைகனல் சொரிந்து,
சுடிகை தள்ளினன்; ஒருதொடை யால்ஒரு தொடைஇற்று
அடிபி ளந்தன; எண்கணை உரம்துளைத்து அடர
மிடலின் நாலுகோல் மத்தகம் தகர்த்திட விடுத்தான். 86

தடைய றப்பனி ரண்டுகோ லும்தடா ரிக்க,
மிடல்பி ரத்திமன் அயர்ந்தனன் வீழ்ந்தனன் தேர்மேல்;
கடுகு தேரொடு சாத்தகி கார்முகம் வளைத்தே,
அடல்பன் னாறுகோல் விடுத்துஅடர்ந்து ஆர்த்தனன் அதட்டி. 87

சினந்து சாத்தகி சிலைகணைச் சுளவன்வெஞ் சிரத்தில்
புனைந்த மோலியை வீழ்த்தினன்; பிளந்தனன் பொருவில்;
வனைந்த கேதனம்,வல்லதேர், பரி,வல வனையும்
முனிந்து அறுத்திட, மூசி,ஓர் தேர்கொடு முனைந்தான். 88

வரிச ராசன மிசைஎழு வாளிவைத்து ஈழ்த்து,
இரதம் வார்சிலை நீறுஎழப் பிளந்து,இரு நால்கோல்
மரும மீதினில் அழுத்தினன்; குருதிவாய் கக்கித்
தரையின் மீதினில் வீழ்ந்தனன் பொருவில்சாத் தகியே. 89

வீர வீரியன் சாத்தகி விழுந்திட வெகுண்டு,
ஆர வாரமாய்த் தேர்விடுத் தே,அணி ருத்ரன்
வார வாளிமுப் பத்திரண் டினைச்சுள வன்மேல்
கோர மாகவும் விடுக்கமற்று அவன்சிலை குழைத்தே, 90

---

85. நள் - நடுப்பகுதி. விசிகம் - அம்பு, வீரியர் விசிகமே பொழிய,சரங்கள் அரிந்தன; பிளந்தன என்பது முடிபு. 86. சுடிகை - கிரீடம்; மிடலின் - வலிமையோடு.

87. தடாரிக்க - ஊடுருவ; அயர்ந்தனனாகித் தேர்மேல் வீழ்ந்தனன் என்க; கடுகு - வேகமாக, கார்முகம் - வில்.

88. சிலைகணை - வில்லும் அம்பும், உம்மைத்தொகை, சிலைகணைச்சுளவன் - வில்லம்பேந்திய சுளவன்; மோலி - கிரீடம்; கேதனம் - கொடி.; மூசி - மொய்த்து, அருகே நெருங்கி.

89. வரிசராசனம் - கட்டப்பட்டவில், வரி வில், வினைதொகை, ஈழ்த்து - இழுத்து, மருமம் - மார்பு.

90. எண்ணிரண்டு இரட்டி - 8 X 2 X 2 = 32

கடுகி எண்ணிரண்டு இரட்டிவெங் கணையில்அக் கணையைப்
பொடிப டுத்தி,மற்று எண்கணை உரத்தினில் புகுத்தி,
இடறி மோலியைச் சிலையையும் பிளந்துஇரு கணையால்,
முடுகு தேரையும் பிளந்தனன் முனிந்துஎழு கணையால். 91

உரத்தில் எண்கணை அழுந்திட, வாய்கறை ஒழுகும்
வருத்த மானதும் மதித்திடான்; மறுத்துஒரு தேர்மேல்
தரித்து, வில்குழைத்து, ஆறுஇரு கொடும்சுரம் தொடுத்து,
திருத்தும் தேர்சிலை சிதைத்துஎழு கோலைநெஞ்சு இருத்தி, 92

ஐந்து கோலைமத் தகத்தினும் அழுந்திட, அயர்ந்து,
மைந்தி னோடுஅரைக் கடிகையில் தெளிந்து,வில் வாங்கி,
ஐந்து கோல்உரத்து ஐந்துகோல் களத்தும்மத் தகத்தும்
ஐந்து கோல்விடுத்து ஆக்கரித்து, அடர்ந்தனன் உறுக்கி. 93

உரத்தும் மத்தகத்து உற்றகந் தரத்தும்மூ வைந்து
வரச்சி லீமுகம் துளைத்திட அயர்ந்தனன் மயங்கி,
சரத்தி னும்கதி தாவும்மாத் தேர்தனைக் கடவி,
சிரித்து முப்புரம் எரித்தவன் நிகர்த்தனன் திறத்தே. 94

வீர கர்ச்சனை செய்து,வில் குணத்தொனி முழக்கி,
வார விறல்கன வடவைஒத்து அடர்ந்துவந் திடவே,
யாரும் எய்த்துடல் ஒடுங்கினார்; நடுங்கினர்; அதனால்
தேரை விட்டுஎதிர் நெருக்கினன் அங்கர்கோன் சிறுவன். 95

செறுத்து வெஞ்சிலை குழைத்துஅறு வாளிநெஞ்சு இருத்தி,
மறுத்தும் மேல்இரண் டால்சிலை மோலியும் அறுத்தான்;
கறுத்து, மற்றொரு விற்குனித்து ஐஇரு கணையால்
பொறுத்த தேர்,சிலை, பொற்கொடி, பாகையும் பொடித்தான். 96

---

94. மத்தகத்து என்புழி எண்ணும்மை தொகுகது; வரசசிலீமுகம் - உயாந்த அம்பு; சுதி - வேகம்; மா - குதிரை; மாத்தேர் - குதிரைகள் பூட்டப்பெறறதேர்.

95. அங்கர்கோன் - கன்னன், சிறுவன் - அவன் மைந்தன், விடகீதனன்

96. கறுத்து - சினந்து.

97. நாரிவில் - நாண்பூட்டப்பெற்ற வில், பூரி - நாண்.

தேரும் வில்பொடி பட்டிட, மற்றொரு தேர்மேல்
நாரி வில்குனித்து, எண்ணிரு கணையினால் நடுங்க
பூரி வில்,சயந் தனத்தையும் பொடித்தனன்; புகைந்தே
வீரன் மற்றொரு பொற்சயந் தனத்தினில் மேவி, 97

விற்கு ழைத்து,எழு வாளியைச் சுளவனும் விடவே,
பற்க டித்து,எழு வாளியால் பற்பமது ஆக்கி,
முற்கு னித்தவில் அறுத்துமத் தகத்துழு இருகோல்
உற்கை நேர்துளைத்து உருவிட விடுத்தனன் உறுத்தே. 98

(தனனதன தனதான. ....தனனதன தனதானனா)

மருமம்அதில் அறுவாளி புதைய,உணர் வதுமாறி,
மனதுஅயர்வி னொடுவீழும்நேர்
அரசன்மகன் இளையோன்மெய் அதிகசினம் மிகவாகி
அமர்செய்திட, விடகீதன்முன்
பொருவில்வளை வுடன்ஏழு புயலதுஎன மிகுவாளி
பொழிய,இவன் அதிகோபமாய்
வரிவில்வளை நிமிராத படியும்வெகு கணைமாரி
வருஷம்என எதிர்வீசினான். 99

அரசன்மகன் விடும்வாளி அதனில்மிகு கணைஏவி
அவன்இரத துசம்மாவையே
எரிசெய்திடு பொழுதே,சு லொபனும்ஒரு ரதம்ஏறி,
இவன்இரத பரிசாபமே
திரிபொடியை நிகராக விடுசரம்எய் தனன்;வேறு
சிலையினொடு ரதம்ஏறியே.
உரசினுடன் இருவோரும் அமர்செய்தனர் இளையாமல்
உரவயிரம் எதிர்ஏறியே. 100

---

98. உற்கை. - விண்வீழ்கொள்ளி.

99. அரசன் - வீரவாமன்; வளைவுடன் - விலலோடு; வில் வளை - வில்லின் வளைந்த தன்மை; வருஷம - மழை.

100. துசம் - கொடி. சுலோபன் எனற்பாலது சந்தநோக்கிச் சுலொபன் எனக் குறுகியது; சாபம் - வில, திரிபொடி - (காற்றில்)அலைந்து திரியும் தூசு; உர வயிரம் - உள்ளத்து ஊக்கம்.

சுலொபன்விடு கணைமாரி துகள்படவும், இவன்ஏவு
சுடர்பகழி சரகூடமாய்க்
கலகமுடன் விடுகோலை அவன்விலகி, மிகுவாளி
கதழ்வினொடு சரகூடமே
மலைவினுடன் விடகீதன் இரதமது அசையாத
. . . . . விடுபோதிலே
பலதும்அழி படஏவு பயில்இம்முறை முறையோடு
பகையமர்செய் தனர்வீரரே. 101

படி,திசை,விண், விரிமேக படலம்,உயர் கிரி,பாத-
லமும்உருகி அமர்வாளியுள்
கடல்அளற இகலாடு கணைகள்சில இடிநேர
கதறிஅனல் சொரிபோதிலே,
அடரும்இரு தளம்யாவும் நிலைகுலைய, எழுபூவும்
அலைய,நெடு வடமேருமேல்
கொடுமுடியின் அடியோடு கிடுகிடென அலைவான-
குமரர்விடு சரமீதினால். 102

கணையினொடு கணைசீறி அமர்பொருது வதில்தேர்கள்
கருகிஅட லைகளாகவே,
இணையில்வர சரம்மேவி இருவர்விர குடன்ஏவும்
எதிர்எதிர்கள் பொருபோரினைக்
கனிதமுடன் உரைகூற உகம்அறுதி செலும்,வீரர்
கடியஅமர் தனையாவரே
துணையினுடன் உவமானம் உரைசெயவும் அரிதான
சுடுசரம்எய்து, இகல்ஊடி னார். 103

ஒருவர்ஒரு வரைநீடு வெலஅரிது எனவும்வானர்
உரகர்நரர் வொல,வீரமாய்
அரியஇகல் சரிமானம் இருவரும்இவ் விதமாக
அமர்பொருதி னர்கள்ரோசமாய்;

---

102. படி - நிலவுலகம்; அளற - சேறுபட, எழுபூ - ஏழு உலகங்கள்; குமரர்விடுசரம் ஈதினால் - அமர்வாளியுள் கணைகள்சில சொரிபோதிலே, நிலைகுலைய, அலைய, அலைவான என இயையும்.

103. அடலை - சாம்பல், வர - உயர்ந்த, உக அறுதி - யுகமுடிவு.

தரணிதனில் அயர்வான சுளவன்உணர் வுடன்நீடு
தனுவினுடன் ஒருதேரின்மேல்
அருணன்என வருபாகன் அரிநடவ இசையோடும்
அரசன்மகன் வரும்நேரமே, 104

(கலித்துறை)

அந்த நேரினில் பப்பர வாகனன் அமைச்சன்
உந்து தேரினை முடுக்கி,எண் ணிருகணை உடற்றி,
சிந்து பாகுஅரி சிதைத்திட, வேறுஒரு தேரில்
வந்த போதினில், மந்திரி வெகுண்டு,வில் வளைத்தே, 105

ஐயி ரண்டுவெங் கோலினை விடுத்துஅரி பாகும்
செய்ய பொற்கொடி பரிசிலை அறுத்து,மெய்த் தேகம்
நைய நாற்கணை உருவிட, வெகுண்டு,நா லிருகோல்
கையி னால்விசைத்து இழுத்துஉற விடுத்தனன் கடுப்பாய். 106

காலன் சூலம்நேர் இரைந்துவந்து இவன்விடும் கணையைச்
சால வேதுகள்ப் படுத்தி,மத் தகம்உரம் தைக்க,
மேல யர்ந்து,தேர் மீதினில் சுபத்தியும் வீழ,
ஆல காலம்ஒத் துக்கரித் தேகொதித்து அடர்ந்தான். 107

வலிய கோடைவல் இடிஎன வாய்கொடு முழங்கி,
விலின்நெ டும்குணத் தொனிமிக முழங்கிட வெகுண்டு,
புலியின் நேர்வரு வான்தனைக் கண்டு,பொற் சேனை
கிலிபி டித்து,உற நடுங்கின கிடுகிடு கிடென. 108

யாளி ஏறுஎனப் பரிசன்அங்கு அவன்தனை நோக்கி,
வாளி வேகமாய்த் தேர்தனை நெருக்கி,வில் வளைத்து,
தோள ருங்குழை தழுவிடக் கணைமழை சொரிந்தான்;
மீளி யாம்சுள வன்பல ஏவுவிட்டு அறுத்தான். 109

---

104. வானர் - மேல உலகினர், உரகர் - நாகலோக வாசிகள்;நரர் - நிலவுலகத்தினர், அருணன் - சூரியனின் தேர்ப்பாகன், அரிநடவ - தேரோட்ட, குதிரைகளைச் செலுத்த எனினுமாம், இசை - இங்கு பெருமிதம்.

105. அமைச்சன் - சுபத்தி. 106 பொற்கொடி - அழகான துவசம்.

108. புலியின் நேர் - புலியைப போல

109. யாளிஏறு - ஆண்சிங்கம், வாளி வேகம் - அம்பின் துரிதம்.

கங்க பத்திரம் கைமறாது இருவர்கார் முகத்தும்
மங்குல் ஒத்தஉ ரத்துடன் இடைவிடா மழைகள்
பொங்கம் உற்றுஉறச் சொரிதல்போல் இருவரும் பொழிந்தே,
எங்கும் எத்திசை யும்சரப் பந்தர்இட் டனரே. 110

சரம்ச ரங்களைப் பிளந்தும்நே ரிடையிடை தறித்தும்,
இரும்க ரும்சிறகு அரிந்தும்,ஒண் குதைஇடை முறித்தும்,
பொருந்து கூருடன் கூர்அமர் புரிந்தும்,முப் புவியும்
தரம்த ரத்துடன், தான்மறாது, இகல்புரிந் தனவே. 111

அலம லந்தன அதலவி தலசுத லமும், மற்று
உலகும், மேல்உல கங்களும் மூடிய சரத்தால்
நிலைக லங்கினர் அமரர்அ சுரர்நிரு பர்களும்;
குலைகு லைந்தன எண்கிரி கரிஅராக் குலமும் 112

உறுக்கி யேபரி சன்சுள வனைஉதா சனித்து,
முறித்த னன்சிலை; மோலியைக் கழற்றினன்; முரண்தேர்
அறுத்த னன்;பரி பாகையும் கொடியையும் அழித்துத்
துறுத்த னன்;சரம் அவயவம் அடங்கலும் துளைக்க 113

மெய்து ளைந்துள சரத்துடன் வேறுதேர் மேவி,
கைத தும்பிய வில்வினைக் கரத்தினில் பிடித்து,
எய்து கின்றஅப் பரிசனை நோக்கி,ஏறு இடிபோல்
வைது, சிற்சில மாற்றமும் கூறு வான் மதத்தே 114

"கைச்ச ராசன வலிபுய வலியையும் காட்டி,
வச்ச ரம்தொறும் தரும்திரை மறுக்கவோ, மதத்து
நச்சு அராக்கனை தொடுத்தனை? நன்று!நன்று! உலகில்
பிச்சை யும்உனக்கு அருள்கிலன் பெயர்ந்துஅடி நிலமும். 115

---

110. கங்க பத்திரம் - அம்பு. கைமாறாது - தடைபடாமல்;சார்முகம் - வில்; மங்குல் - மேகம்; பொங்கம்உற்று - அழகாகஇங்கு மிகுதியாக.

112. அதல விதல சுதலம் - கீழ் உலகங்கள் ஏழனுள் மூன்று, மற்றுலகு என்றது தராதலம், இரசாதலம், மகாதலம், பாதாலம் ஆகிய நான்கை; அராக்குலம் - அஷ்ட நாகங்கள், மூடிய சரத்தால் அலமலந்தன, நிலைகலங்கினர், குலைகுலைந்தன எனத் தனித்தனி இயையும மத்திம தீபக அணி.

113. உதாசனித்து - இகழ்ந்து, துறுத்தனன் - நெருக்கினான்.

114. மாற்றம் - சொற்கள்.

115. சராசனம் - வில்; வச்சரம் - வருடம், வத்சரம் என்னும் வடமொழியின் திரிபு.

வரைவு தப்பினை; மதர்த்தனை; எதிர்த்தனை; மண்ணில்
ஒருப தத்துஅளவு உனக்குஇனி ஏது?உயிர் அழித்தே
தரர்ப திக்குஉனை அனுப்புவன்; சு முடி தரித்தே
விரவு வீரிய சொர்க்கமேல் வீற்றிரு;''எள்றே, 116

எண்ணி ரண்டுவெம் பகழிமொய்ம்பு உரம்நுதல் குறிப்புப்
பண்ணி வீசினன்; பேர்இடி எனவிரைந்துஅணுக,
திண்ணி யன்சிளம் மிகுந்து,நால் நான்குகோல் செலுத்தி,
ஒண்ணி ரண்டுஎன அறுத்துவாய்க் கோர்கணை உடற்றி, 117

மத்த கத்தும்,கந் தரத்தும்,மார் பகத்தும்,மொய்ம் பகத்தும்
அத்தி ரங்கள்நா லைந்துவிட்டு, அணிமுடி இடறப்
பத்தி ரம்ஒன்றுவிட்டு, இடறினன் ஒருபக ழியில்வில்;
சத்து வங்கள்அற்று இரதமேல் அணையினில் சாய்ந்தான். 118

சாய்ந்து வீழ்ந்தவன் எழும்முனம், சரமழை பனித்து,
மாய்ந்து வீழ்ந்திட. மாசுண யூகம்உற் றவர்கள்
தேய்ந்து,அ ழிந்திட, நால்அக்கு ரோணிசே, னைகளைக்
கூய்ந்தி டும்படி நிரைத்தனன் நிரைநிரை குவடாய் 119

ஒருமு குர்த்தம்அங்கு உணர்வழிந் தவன்எழுந் திருந்து,
வரிவில் ஒன்றினை வளைத்து,வன் தேரினை நடத்தி,
''பரிச னத்துசா! நில்லு;நின் கைபத றாதே;
ஒருச னத்தில்உன் உயிர்கொளத் திரும்பு''கென்று உரைப்பான் 120

''சரம தில்தளம் அழித்தனை திறைதராது இருக்க;
பொருது வா''என, புகைந்துமேல் பரிசனும் புகல்வான்
''இருவர் தம்மையும் யாரையும் திறைகொளும் ஏவுக்கு
ஆரசன் உற்றனன்; அவன்கர வேல்கரம் உனக்காம். 121

---

116. வரைவு - (வரைந்து கொள்ளபபட்ட) ஒப்பந்தம், சுரர்பதி - தேவலோகம்,

117. குறிப்புபபணணி - குறிவைத்து; ஒண்ணிரண்டு என - ஒன்றை இரண்டாக, பேச்சுவழக்கு

118. கந்தரம் - சமுத்து, பததிரம - அம்பு, சத்துவம் - வலிமை.

119. மாசுண யூகம - ஆதிசேஷவ்யூகம், கூயந்திடுமபடி - குவியும்படி

121. கரவேல் - கையிலுள்ள படைக்கலம், வேல என்பது பொதுப்பொருளில் நின்றது; உனக்குக் கரம் ஆம என்க; கரம் - நஞ்சு.

வழுக்கை உன்கர வலுசர வலுசிலை வலுவே;
இழுக்கு நீஉரை பகர்வதுஎன்? கருவம்என்? இடக்கா?
மழுக்கு வான்நினை;அறிகிலாது உபயவாம் பரியைப்
புழுக்க மாய்ப்பிடித் தால்பொருதுஅ ன்றிவெந் போகாய். 122

அதற்குஇ தற்குஎலாம் பரிசனோ அஞ்சுவான்? அதன
மதத்தி னால்உரை எறிகிறாய் வாய்க்குவந் தாற்போல்;
எதுக்க டாஉனக்கு இறைஅளித் தேன்?முறை இகழா
விதத்தில் ஈந்ததோ? அமர்க்கொல்கி ஈந்ததோ? விளம்பாய். 123

பொருத வந்திடில் பொருது;இனி வாய்மதம் புகன்றால்
அரிவன் அம்பினில் சிங்ஙுவை; வாயையும் அகழ்வேன்;
வெருவி லாதுஎதிர் நில்";என விரைந்துதேர் கடவி
ஒருச ராசனம் வளைத்துவெங் கணைமழை உடற்றா, 124

உடற்றும் வெங்கணை மழைகளைச் சுவலனும் முறுக்கி,
திடத்த வெஞ்சர மாரியால் அறுத்தபின், சினந்து
அடற்செய் தார்;வட வாமுகத் துடன்அச வாகன்
சடுத்த மாய்இக லுவதுஎனச் சரமழை சொரிந்தார். 125

(தனன தனதன தனதன தனதன
தனன தனதன தனதன தனதன)

பரிச னொடுசுள வனும்மிகு வெகுளொடு
பகழி மழைமுறை முறைகர விரைசொடு
சொரியும் அளவினில், எழுகடல் எழுபுவி
துரித வெளிகடல் திசையிடை நுழைதர,
அரிதில் அரிதுஎன அமுதரும் உரகரும்
அபயம் அபயமது எனமிக வலறினர்;
கரிகள் அலறின; மகரமது அலறின;
கடல்கள் சுவறின; கமடமும் அலறின. 126

122. வழுக்கை - நன்கு முதிர்ச்சி பெறாதது, இழுக்கு - இழிந்தவனாகிய; மழுக்குவான் - இருக்கும் இடம் தெரியாமல்செய்வான், புழுக்கம் - பொறாமை; பொருது - போர செய்; வெந்போகாய் - புறமுதுகு காட்டி ஓடு

123. அதன - மிகுதியான; உரை எறிதல் - வார்த்தையை வீசுதல்; முறை - பழைய மரபு; ஒல்லி - அஞ்சி. 124. சிங்ஙு - நாக்கு; வெருவிலாது - அஞ்சாமல்.

125. அடலசெய்தார் எனற்பாலது எதுகை நோக்கி வலிந்தது; அசவாகன் - ஆட்டுக்கடாவை ஊர்தியாக உடைய தீக்கடவுள், சடுத்தமாய் - ஆக்ரோஷமாய்.

126. வெகுளொடு - சினத்துடன், சுகன் - சுகனம், மேல்உலகங்கள்; அமுதர் - தேவர்; உரகர் - நாகர்; கரி - திசுகுயானை, கமடம் - ஆமை, உலகத்தைத் தாங்கும் ஆதிகூர்மம்.

கணைகள் கணைமுனை கதுவின; உதைவொடு
கருக ரெனமுனை கறுவின; உருவின;
இணையின் இருசிறகு அறஅலகு அறவிடை
. . . . . .
பிணையி னொடுசம ருறவெளி திசையொடு
பெருகு திரிபுவ னமும்அடல் பிரிவுஅற
அணிகொள் புயபல தயிரியர் முறைமுறை
அரிதி னொடுதொடு சரம்அமர் உடலுமே. 127

இருவர் இரதமும் இடம்அற விரவின;
இருவர் பரிகளும் ஒழிதர முழுகின;
இருவர் வலவரும் அழிதர ஒழுகினர்;
இருவர் கொடிகளும் மரமுடன் இடறின;
இருவர் மவுலியும் அடலையின் அழிதர,
இருவர் கவசமும் வெகுதுகள் உற,வனை
இருவர் சிலைகளும் அணுஎன ஒழிவுற,
இருவர் களும்மறு இரதமொடு எதிர்கொடே 128

இடமும் வலமதொடு இரதமும் இரதமும்
இகலி உலவுற, இருசிலை வளைவுற,
மிடலி னொடுசரம் அனுதினம் முறைமுறை
விட,வ லிமையொடு கணைகணை முனைகவி,
இடறி இகல்செய, எரிபுகை கதுவிட,
எவரும் வெருவுற, உலகுகள் வெருவுற,
மடம டெனஇர ணியமலை அலைவுற,
மதுகை யொடும்அமர் முடுகினர் கடுகியே. 129

உரமது உருவின சிலகணை; இருபுயம்
உகல உருவின சிலகணை; கிரிபமும்
நெரிய உருவின சிலகணை; இருவர்கள்
நிகரில் மருமமது உருவின கணைசில;

---

128. மரமுடன் - கொடிமரத்தோடு, சந்தநோக்கி அதனுச் சாரியை கெட்டது; அடலை - சாம்பல்.

129. கவி - கவ்வி; இரணியமலை - பொன்மலை, மேரு; மதுகை - வலிமை.

130. உகல - கழலுமாறு; கிரிபம் - கழுத்து, கடம் - உடல்.

கரமது உருவின சிலகணை; வலியுறு
கடமது உருவின சிலகணை; பலவின்முள்
பொருவ உருவின; சவுரிய தயிரிய
புயவ லிமையொடு சமஅமர் புரியும்நேர். 130

பரிசன் விடுகணை தனில்அவன் மணிமுடி
படியி னிடைகட கடெனவும் உருள்தர,
விரவு பரிபடி உருள்தர, வலவனும்
விரித லையினொடு சுடிகையும் உருள்தர,
அரிய கொடிமர மதுதுணி பட,விழ,
அதிர தமும்அட லையின்நிகர் பொடிபட,
முரணி னொடுபுவி மிசைகுதி கொளும்அவன்
முடுகி மறுரத மதனொடு முனையவே, 131

பகழி வலியொடு சுளவனை வெகர
பரிசன் உதைசெய்து, கொடிபரி இரதமும்
உகைவ லவனொடு சிலைமுடி அரணமும்
ஒழிய அழிசெய, ஒருதனி அரியொடு
வெகுளி யொடுவர, அதனையும் இடறி,இ-
விதமில் இருபது இரதமவை அழிசெய்து,
நகைசெய் திட,ஒரு கதைகொடு முனிவொடு
நடன இடிநிகர் கடுகினன் முடுகியே. 132

முடுகி வருபவன் அணிகதை முறிபட
முனைகொள் பகழியில் அழிசெய், முறிதுணி
மிடலி னொடுகொடு சடசட சடெனவும்
வெடியை நிகரடி புடைசெய்து, பரிஅரி
உடைய இகலிய சுளவனை மலினொடும்
உரவன் வலியொடும் உயர்அடல் மலையவும்,
நடல முடன்எதிர் இருவரும் மலினொடு
நவில அரியதின் அமரது புரியவே, 133

---

131. படி - நிலம; துணிபட - துண்டாடப்பட, அவன் - சுளவன்.

132. வசிசுர - ஆயுதமேந்திய கைகளை உடைய, இரண்டன் உருபுமபயனும் உடன் தொக்க தொகை, சந்த நோக்கி வல்லினமெய்கெட்டது; அரணம் - கவசம்; ஒரு தனி அரி - ஓர் ஒப்பற்ற தேர்; இவிதமில் - இவ்விதத்தில், அத்துச்சாரியை கெட்டது, நடன இடி - இல்பொருள் உவமை

133. முறிதுணி - உடைந்த துண்டு; புடைசெய்து - அடித்து; பரிஅரி - குதிரைகளால் இழுக்கப்படும் தேர், மூன்றன் உருபும்பயனும் உடன்தொக்க தொகை, பரியரி உடைய சுளவன், இகலிய சுளவன் என்க; நடலம் - செருக்கு.

கிடுகி டெனவுல கமும்அலை தரஉயர்
கிரியி னொடுகிரி அரியொடும் அரிஎன
இடியி னொடும்இடி எனஅமர் இகலினர்
இறுகு கரம்இரு பதம்உறு பினலொடு,
கடக டெனஉல கிடைபுரள் வொடுமிகு
கதழ்வின் உகிர்புதை தர,உடல் அளறுசெய்து,
அடல்செய்து இருவரும் உணர்வுஅழி வொடுபுவி-
யதனில் அயர்வொடு களமிசை கிடையுற, 134

அயர்தி அறுகடி கையில்உடல் தெளிஅவன்
அணுகி எழ,இவன் அயர்வது தெளிவுற.
வெயர்வு குருதிகள் ஒழுகுதல் ஒழிதர,
மெலிய கலைகொடு . . . . செய்து, நெரிஉடல்
இயல்பது உறஉடை புனைசெய்து விரைவில்ஓர்
இரத மதுகொடு சிலைகொடு முனைகொடு
செயமது உறவரு சுளவனை எதிர்தரி-
சனைசெய் தவர்உடல் பதறினர் வெருவியே. 135

(தனன தனதன தனந்த தானன)

மகுட மணிமுடி வயங்கு சேகரன்
வளமை மணிநக ரிமண்ட லாதிபன்
விகட கடகர டதந்தி மேல்வரு
விசய தயிரிய மடங்கல் ஆம்என,
அகில புவனமும் நடுங்க வே,சுள-
வனையும் "நிலுநிலு நில்"என்று தேரினை
உகைசெய்து இடிஎன முழங்க வே,குண
ஒலிசெய் தனன்வளை நெடும்ச ராசனன். 136

உரம தொடுகுணம் முழங்கும் ஓதையில்
உலகு செவிடிட, மயங்க வானவர்,
அரவம் மணிமுடி நசுங்க, மேருவும்
அலைய, நிலைகுலை யஎண்டி சாமுகம்,

---

134. அரி - சிங்கம், பினல் - பின்னல்; உகிர் - நகர்; களமிசை - போர்க் களத்தில்; கிடையுற - வீழ்ந்திருக்க

135. அயர்தி - அயர்ச்சி; கடிதை - நாழிகை; நெரி - நொருங்கிய

136. விகட கட - பெரிய உடலையுடைய; கரட - மதம்பொழிகின்ற, தந்தி - யானை; விசய - வெற்றியையுடைய, மடங்கல்- சிங்கம், தந்திமேல் வரு மடங்கல் என்றது இல்பொருளுவமம்; சராசனன் - வில்லை உடையவன், பரவாகன்.

மருவு கிரிநடு நடுங்க, வாரணம்
அலறி உளற,ம கரங்கள் மோதிய
பரவை சுவற,எ திர்நின்ற சேனைகள்
பலரும் வெருவினர் படிந்து பூமிசை. 137

களவன் இவனொடும் வெகுண்ட ஓர் .ரை
சொலுவன் "தனைஉணர்; முரண்டும் ஓர்நொடி
அளவில் அழிசெய்வன்; அறிந்து பார்;உனில்
அரிய தயிரிய துரந்த ரீகரம்
உளப ரிசன்இவண் உயங்கல் காணுக;
உனையும் உயிர்கொளு வன்;"என்று சீறவும்,
இளந கையினொடு முனிந்து "உன் ஆண்மையை
இனிஅ றியஅமர் செய்;"என்று கூறவே, 138

விழிகள் அழல்சொரி யவைந்து கூர்கணை
விலகு கெனஅவன் வெகுண்டு வீசினன்;
அழிய ஒருகணை யில்வென்ற போதினில்,
அவனும் ஒருபது சரங்கள் ஏவின
பொழுதில், இவன்ஒரு ககம்கொ டேஅவை
பொடிய இடறவும், ஐஐந்து வாளியை
முழுவில் விசையுடன் உதைந்த போதினில்,
முறிய இடறினன் முவம்பி னாலுமே. 139

"இதுஎன புதுமை!"எ னஐம்பது ஆசுகம்
மிடலி னொடுவிட, அழிந்து வீழ்தர
முறிய பதுகணை யில்வென்ற போதினில்,
முனிவி னொடுசத சரங்கள் வீசினன்;
அதிரு பதுகணை யில்வென்ற போதினில்,
அதிகம் அதிகம் அவனும்பல் ஆசுகம்
உதைய உதைய,மி குபுங்க மானதில்
ஒழிய இடறினன் முரண்க ளாகவும். 140

---

137. குணம் - வில் நாண். செவிடிட - செவிடுபட. அரவம - ஆதிசேடன்; வாரணம் - திசை யானைகள். மகரம் - முதலை. பரவை கடல்; சுவற - வற்ற. பூமிசை - நிலத்தில்.

138. உயங்கல் - வருந்துதல.

139. ககம் - அம்பு. ஐஐந்து - இருபத்தைந்து. மூவம்பு எனற்பாலது சந்தநோக்கிக் குறுகியது.

140 .ஆசுகம். கணை, சரம். புங்கம் - அம்பு; சதம் - நூறு.

அரிகொள் சதசத சரங்கள் ஏவினன்;
அடலை படஅழி செய்கின்ற போதுஇவன்,
வரைவு தொகைஅற மிகுந்த கோல்அவன்
மழையை நிகர்எதிர் பொழிந்த போதுஇவன்
எரிகள் சொரிகணை சொரிந்து, நீறுசெய்து
இருவெ ளிகள்கடல் கள்எண்டி சாமுகம்
விரைவில் நிறைதர அமர்ந்தி லாதுஇரு
விலினில் வலர்கணை மிகுந்து வீசினார். 141

முனையி னொடுமுனை முனைந்து சீறின;
முகடு உருவிஎழு விசும்புள் ஓடின;
வினைமன் உலகினை இடந்து சீறின;
விரகி னொடும்அமர் தொடங்கி ஆடின;
உனத கடல்திசை அடங்க ஊடின;
உரகர் நரர்சுரர் ஒடுங்கி வாடினர்;
வனந் ரலைசுவ றுஅஞ்சி யேபுனல்
வருணன் அபயமி ட,அம்பு மூடின. 142

ககுப மலைகிடு கிடென்று சாடின;
கரிகள் மிகமிக வெருண்டு வாடின;
அகரம் அலறின தயங்கி யேமிக;
அருணர் கதிதிசை மயங்கி ஓடினர்;
திகிரி பலதுநெ ரிவுண்டு நீறின;
திரிபு வனம்நடு நடுங்கி மாழ்கின;
இகலி இருவரும் எதிர்ந்த போரினில்
எவரும் வெருவினர் இயங்கு வாளியால். 143

மருவு தயிரிய துரந்த ரீகரன்,
வளமை மணிநக ரிமண்ட லேஸ்வரன்,
உரக மணிமகு டகுண்ட லாதிபன்,
உலகு புகழும்வி சயன்கு மாரகன்,

---

141. அமர்ந்திலாது - நிறுத்திக் கொள்ளாமல்.

142. உனத - உன்னத, உயர்ந்த, வன - அழகிய, நரலை - கடல, புனல்வருணன் - தண்ணீருக்கு அதிதேவதையாகிய வருணதேவன்

143. ககுப மலை - எட்டுத திசைகளிலும் உள்ள மலைகள், அகரம் - ஆற்றங் கரையிலுள்ள பெரிய ஊர்

வரிவில் அரசன்அ பிமன்ச கோதரன்,
மதுர அமிர்தவ சனன்,சு சீகரன்
இருகை விரசொடும் விடும்சி லீமுகம்
எதிரி கரவிர சில்மிஞ்சி ஏறியே, 144

இரதம் இவுளிவ லவன்ப தாகையும்
எரிசெய்து அணிகவ சமும்கி ரீடமும்
வரிவில் முதலிய அழிந்த போதினில்,
மறுகி வெருவியும் மயங்கி வேறுஒரு
அரியில் மருவ,இ ரதங்கள் பாகுவில்
அழிய, அவன்மறு கொடிஞ்சி மீதுற,
வரிவில் இரதமு முதும்புன் நீறுற,
மறுஇ ரதமது உறஅம்பில் நீறின. 145

உலவை மிசைதவு குரங்கு போல்அவன்
உலைய அலையஇ ரதங்கள் பாகுஅரி
அலகில் அறுபதும் அழிந்த தால்எதிர்
அசைவில் வயிரஇ ரதம்பின் ஏறியும்
மலைவி னொடும்அவன் எதிர்ந்த தால்இவன்
வலிய கணைமழை சொரிந்த மேல்அது
பலக ணிகள்நிகர் திறந்த தேர்மிசை
பசைய தறஉயிர் பரந்து வீழவே, 146

இரவில் எழுகடி கைசென்ற வேலையில்
இரத மிசைஅவன் அயர்ந்து வீழ்தர,
உரகம் அலையஇ ரதம்க டாவி,வில்
உதைய, எழுமுகில் பொழிந்த தேர்கணை
சொரிசெய்து அரிபரி கயம்ப தாதிகள்
துணிய மலைமலை கள்என்று கூய்தர
எருவை நதிபிர ளயங்கள் ஓடிட
இகல்ப ரிசனில்எண் மடங்கது ஆகவே, 147

---

144. மதுர - இனிமையான; அமிர்த - நன்மைபயக்கின்ற; வசனன் சொற்களை உடையவன; சுசீகரன் - தூய்மையானவன், இவ்வடைமொழிகள் ஏழும் பப்பரவாகனனைக் குறித்தன; எதிரி - சளவன்.

145. இவுளி - குதிரை, அரி - தேர், கொடிஞ்சி -இரதம்; புன் - இழிந்த; நீறுற - சாம்பலாக.

146. உலவை - மரக்கிளை, தவு - தாவுகின்ற, அரி - குதிரை, அலகில்- கணக்கில், பலகணி - காலதர், சன்னல்.

147. கடிகை - நாழிகை, கடாவி - செலுத்தி; அரி - தேர், கயம் - யானை, எருவை - உதிரம்

சலதி அனையச துரங்க சேனைகள்
சரிய நெரியஇ வன்வென்ற போது,அணி
அலைவி னொடுபினில் ஓடுங்கி, யோசனை
அளவில், வெருவொடு, நகர்ந்து போகிய;
கலக அமரிடை தெளிந்து தான்எழு
கடிகை அளவினில் மடிந்த சேனையை
இலகு விழிகொடும் உணர்ந்து சூரொடு,
"இதென புதுமை"எ னநொந்து வாடியே, 148

இரதம் வலமையி னொடும்க டாவி,முன்
இடியை நிகர்உற முழங்கி யே,ஒரு
தருக விசைகொடு பனைந்து கோலசூழை
தழுவ விட,இர தமும்ப தாகையும்
வரிவில் மகுடமும் உடைந்து நீறுற,
மருமம் உழவுசெய் ததுஐந்து கூர்கணை
கிரிடி தருசுதன் வெகுண்டு வேறுஒரு
கிரண இரதமி சைதங்கி ஏகியே, 149

ஒருகை சிலைஒரு கைஅம்பு மாய்எதிர்
உருமும் வெருவுற முழங்கி யே,மழை
மருவும் வகைஅள வரும்சி லீமுகம்
மதுகை யுடன்இவன் உதைந்து, தேர்சிலை
நெரிய அவயவம் நிரம்ப வே,சடம்
நெகிழ, அளறுப டுகும்பி யேசெய
விரவும் அரிகதி அழிந்து பூமிசை
மெலிவி னுடன்அவன் அயர்ந்து மாழ்கினன். 150

---

148. சலதி - கடல்; பினில் - பின்புறம்; சூரொடு - அச்சத்துடன்.

149. பனைந்து - பன்னைந்து, பதினைந்து; மருமம் - மார்பில்; உழவுசெய் - உழுவதைப்போல் துளைக்கின்ற; கிரிடிதருசுதன் - அருச்சுனன் மகன், பப்பரவாகனன்; கிரண - ஒளிவீசுகின்ற.

150. சிலீமுகம் - அம்பு; சடம் - உடல்; அளறு, கும்பி - சேறு; அரி - தேர்; கதி - செலும் இயக்கம்; பூ - நிலம்.

(அறுசீர் ஆசிரிய விருத்தம்)

இங்குஇவன் அயர்ந்து வீழ, எல்லொடும் இரவும் வெம்போர்
துங்கனாம் சுலோப னோடு சுடர்தரும் குமரன் மைந்தன்
புங்கமாம் மழைகள் வீசி, புரங்கள்கோல் சுமைய தாக்கி
அங்குஅவர் செயும்வில் லான்மை யாவரே செயவல் லாரே, 151

அளவுஅறு தேரும் வில்லும் அழிந்து,மெய் அயர்ந்து சோர்ந்து,
தெளிவுவந்து, எழுந்து, வெம்போர் செய்து, நெட் டுயிர்த்து, மேன்மேல்
இளகுஅனல் மெழுகாய் வெய்ய இரும்பதே முசலம் ஆ:ம்போல்
உளமதில் உரசது ஏறி, உபயரும் கடும்போர் செய்தார். 152

அம்முனை அதனில் தேர்விட்டு, அணிமணி நகரிக் கோமான்
விம்மிய சினத்தி னோடு வீரனை நோக்கிச் சொல்வான்
"எம்மதி யாலே போருக்கு இசைந்தனை சிறுவன் முன்நீ?
வம்மின்நீ என்முன் வீர வர்மனே உந்தை ஆனால். 153

அல்லது வைஸ்யன் ஆகில் அச்சிறு வனுடன் போர்செய்;"
சொல்லிவாய் மூடும் முன்னம் சுலோபனும் தடந்தேர் தூண்டி,
"கொல்லுவேன் உன்னை" என்று, கோளரி மழைகள் சிந்தி,
வில்லது குழைத்து, வெய்ய வெங்கணை மாரி பெய்தான். 154

தொடுகணை அதனால் வில்தேர் துசம்பரி பாகும் அற்று
விட,விறல் விசயன் மைந்தன் வேறுஒரு தேர்மேல் உந்திக்
கடுகுமுன், அ:கனை யும்திண் கணையினால் பொடித்து விட்டான்;
நெடியவில் ஏந்தித் தேர்மேல் நேர்ந்தனன் வில்லி சேயன். 155

கோடைவல் இடிபோல் ஆர்த்து, கொக்கரித்து, அடர்ந்து, கோலால்
நீடிய திசைவான் திக்கும் நிரந்தரம் அடைத்தான் மிக்காய்;
வாடிலான் சுலோபன் மென்மேல் வருங்கணை அதனை வென்று,
மூடிடப் புவனம் மூன்றும் முதுசரம் எய்தான் உற்றே. 156

---

151. எல் - பகல; துங்கன் - உயர்ந்தவன். சுடர தரும் குமரன் - சூரியனை மகனாகிய கன்னன், மைந்தன் - அவன மகன், விடசீதனன்; புரங்கள் - உடம்புகளை

152. முசலம் - உலக்கை; இரும்பு மெழுகுபோல் உருகிப் பின் உறுதிவாய்ந்த பாறையாக ஆவதுபோல் இவன் உள்ளம் முதலில துன்பததில் துவண்டு பிறகு வீரத்தால உறுதி பெற்றது என உவமையை விரித்துக் கொள்க.

153. சிறுவன் என்றது விடசீதனனை.

154. தோ - கண்களால 155. வில்லி சேயன் - பபர வாகனன்

156. வாடிலானாகிய சுலோபன் என்க. உறறே - முனைந்து. ஈற்று ஏகாரம் அசைநிலை.

விட்டவெங் கணைகள் யாவும் வேந்தன்மைந் தனுமே வெட்டி,
மட்டிடாக் கணைகள் ஏவ, மற்றவன் அறுக்க, இந்தத்
திட்டமாய் இருவ ருங்கோல் செலுத்தினர் ஒருமு குர்த்தம்;
கட்டழ கினர்இவ் வாறு கைமறாது உறச்சொ ரிந்தார். 157

கரசர விரசது ஆகக் காவலன் மைந்தன் வெங்கோல்
சொரிதரும் கணையை எல்லாம் தொடைகளால் துகளது ஆக்கி,
ஒருகணை மோலி தள்ள, ஒருகணை உடைக்க வில்லை,
இருசது கணையால் தேரை எரித்து,நின்று உறுக்கி னானே. 158

தேர்சிலை இழந்து வேறு தேர்மிசை ஏறிக் கையில்
வார்சிலை வளைக்கும் முன்னம், வன்கணை ஒருப தாலே
போர்செய்வான் தேரும் வில்லும் பொடித்துஇரு பத்து நாலு
ஏர்சயந் தனமும் சிந்தும் இமைப்பினில் எரித்து நீற்றே. 159

வில்லிதன் குமரன் மென்மேல் விடும்கடும் சரங்கள் எல்லாம்
மல்லல்மன் குமரன் மேனி மயிர்க்குஒரு சரமாய்ப் பாய,
மெல்லணை சரம தாக, வீழ்ந்தனன் அயர்ந்து சோர்ந்தே;
அல்இராப் பொன்ற நீக்கி ஆதவன் உதயம் செய்தான். 160

வெய்யவன் உதயம் செய்முன் வீரியர் உபயர் தங்கள்
கையினால் அழிந்த சேனை கணக்கிட யார்வல்லாரே?
எய்யுறச் சேனை மாய்ந்து இருசுதர் அயர்ந்த சேதி
வையகம் புரக்கும் வீர வர்மனார் செவியில் சார்ந்த. 161

தூதரை நோக்கி, "எந்தன் சுதரையும் சோபம் செய்த
ஆதிபன் யாரோ?" என்ன, அர்ச்சுனன் குமரன் என்றார்;
ஈதுகேட்டு அவன்சு தன்றான் என்சுதன் தனையே வென்றால்,
போதஎன் றனையும் வெல்வன் புரந்தரன் குமரன்;" என்றே. 162

---

157. மட்டிடா - எல்லையற்ற, கணக்கிலாத.

158. தொடை - அம்பு, இருசது - இரண்டு நான்கு, எட்டு.

159. போர்செய்வான் - அமாபுரிகின்றவனுடைய; ஏர் - அழகிய; எரித்து நீற்றுச் சிந்தும் என இயையும். 160. அல் - இருண்ட; பொன்ற - சுழிய; ஆதவன் - சூரியன்.

161. வெய்யவன் - சூரியன்.

162. ஆதிபன் - தலைவன்; புரந்தரன் குமரன் - இந்திரனின் மகனாகிய அருச்சுனன்.

சிந்தையில் எண்ணி, எண்ணாச் சேனையும் புறம்சூ ழத்தேர்
உந்தியே, வீர வர்மன் யுத்தவெங் களத்தில் வந்தான்;
அந்தநேர் பப்ர வாகன் அவனையும் மதித்தி டாமல்,
தந்திமேற் சீயம் என்ன, தாவியே ரதத்தை விட்டான். 163

"ஏதடா! நீயோ என்முன் இகலிமீண்டு உய்ய வல்லாய்?
சீதரன் நடத்தும் தேரோன் செருச்செய வரச்சொல்;" என்றான்;
"ஓதுக! சிறியன் நீஉன் உரம்என? வின்மை என்ன?
வாதுஎனோடு உரையாது உந்தை வந்துபோர் செய்யச் சொல்வாய்." 164

"திங்கள்வெண் குடைக்கீழ் இந்தச் செகம்எலாம் புரக்கும் ராச
துங்கன்நீ; இவன்த னோடே துணிந்துஅமர் புரிந்தால் மெத்தப்
பங்கமோ? சற்றே வெம்போர் பயிலும்முன் வருவன் எந்தை;
இங்குநீ அங்கி தன்னை எளிதுஎன முடிய வேண்டாம். 165

தனஞ்சயன் விந்தில் வந்தோன் தனஞ்சய னாம்என்று எண்ணி
மனஞ்செய்து சமர்செய்" என்றான்; மன்னவன் குலுங்க நக்கு,
"புனைந்ததும் பைத்தார் மார்பா! புங்கம்நீ முன்பு விட்டால்
பினில்சரம் தொடுப்பேன்;" என்ன, பீடினான் உடனே சொல்வான் 166

"ஐயன்!நீ வின்மை யாலும், அரசநல் நீதி யாலும்,
வெய்யதர் மத்தி னாலும், யாவினும் மிக்கோன்; நீமுன்
செய்அமர்; பின்பு பார்த்துச் சிறியனும் செய்ய" என்ன,
கையினில் அம்பு வாங்கி, கார்முகத்து இழுத்து விட்டான். 167

வாதுடன் மங்குல் ஏழும் வாரிகள் வற்ற வாரி,
போதஓர் வரையில் மென்மேல் பொழிந்தபோல், புங்க மாரி
சாதக விஞ்சை யாகத் தனுநிமி ராமல் வீச,
சீதரன் தன்னை உன்னிச் சணத்தில்அங்கு அவற்றை மாற்றி, 168

---

163. எண்ணார - எண்ணப்படாத, எண்ணிக்கையில் அடங்காத. தந்தி - யானை; சீயம் - சிங்கம்.

165. அங்கி - நெருப்பு.

166. மனஞ்செயது - உறுதியுடன்; சமர் - போர்; தும்பைத் தார் - பாண்டவர் தம் ஆற்றலை உலகிற்குக் காட்டவே இப்போர்களில் ஈடுபடுகின்றனர். எனவே "மைந்துபொருளாக வந்த வேந்தனைச்சென்று தலைஅழிக்கும் சிறப்பை"உடைய (தொல் பொருள். 70) தும்பைத்திணை சுட்டப்பட்டது. பீடினான் - சிறப்பை உடையவன்,பப்பரவாகனன்.

167. வாங்கி - (அம்புக்கூட்டிலிருந்து) எடுத்து; கார்முகம் - வில.

168. மங்குல் - மேகம், வாரிகள் - கடல்கள், வாரி - நீரை முகந்து,வரை - மலை, சாதக விஞ்சை - நன்றாகப் பயிலப்பெற்ற கலை,தனு - வில்; உன்னி - தியானித்து; சணம் - கணநேரம்.

வெவ்விய அப்பு மாரி மிகுந்துஇவன் வீச மாற்றி,
இவ்வித மாக வேதான் இடைவிடாது இருவ ரும்போர்
கைவலித் திறமை காட்டி, கணைமழை மாறி வீசி,
ஒவ்விய சமான மாக, ஒருமுகுர்த் தமது நின்றார். 169

"எண்திசை புரக்கும் மன்னா! இனிநினை வாக நில்;"என்று
அண்டர்கள் மதிக்கும் வீரன் ஆசுகம் மாரி யாகக்
கொண்டல்போற் பனித்து, தேரைக் குதிரையைக் கொடியைப் பாகை
மண்டல பதிமெய் ஆசை வன்துக ளாகச் செய்தான். 170

பாரமும் தேரும் பற்பம் ஆனபின் மற்றோர் தேரில்,
வீரவர் மனும்மேற் கொண்டு, வில்சரம் தொடுத்து விட்டு,
நேரிடும் சரங்கள் எல்லாம் நீறுசெய் தே,பல் கோலால்
பூரிகொள் சிலையும் தேரும் பொடிப்பொடி ஆக்கி விட்டான். 171

இரதமும் சிலையும் நீற, இங்குஇவன் மறுதேர் ஏறி,
சரமழை மாரி யாகத் தனுவளைத்து இகலி விட்டு,
வருசரம் அனைத்தும் மாற்றி, வானிபாகு இவுளி தேர்வில்
பொரியரைப் பொடிபோல் நீற்றா, புரவலன் மறுதேர் கொண்டான். 172

இவ்வித மாய்ப்பன் னாறு இரதம்வில் இருவர் கட்கும்
குவ்வினிற் பொடிய, பின்னர் குரிசில்வெங் கோபம் கொண்டு,
தவ்வுவிச் சுளிக்கோல் ஒன்று சரண்அளவு உளது தன்னை
செவ்வியன் வீர வர்மன் செலுத்தினன் இவன்தேர்க் கீழாய். 173

தன்சயந் தனத்தின் கீழ்விச் சுளிச்சரந் தைத்தல் தன்னை
மன்செய விசயன் மைந்தன் மனமது தெரியா வண்ணம்,
மின்சரம் தைத்த போதே, விறுவிறுஎ ன்று இவன்தேர் தன்னைப்
புன்சுழல் கறங்கு வண்டு போல்எழுப் பியபூ விட்டே. 174

---

169. அப்பு - அம்பு; மாறி - மாற்றி மாற்றி; ஒவவிய, சமானமாக - ஒரு பொருட் பன்மொழி.

170. பனிதது - பெய்து; மெய் ஆசை - உடலின் சுவசத்தை.

171. பாரம - சுவசம், பூரிகொள் - நாணியை உடைய, சிலை - வில்.

172. வானி - கொடி.

173. பன்னாறு - பதினாறு, கு - உலகம், குரிசில் - மன்னன்,வீரவர்மன்; விச்சுளி - குருவி வகையில் ஒன்று, மிக வேகமாகப்பாயும் போலும், விச்சுளிப்பாய்ச்சல் என்பது கழைக்கூத்தாடிகளின் வித்தைகளுள் ஒன்று.

174. மின்சரம் - மின்னலைப போல் வேகமாகப் பாயும் அம்பு,உவமைத் தொகை, புன் - துன்பத்தரும சுறங்குவண்டு - சுழல்கின்ற சுரும்பு; பெரிய சுழற்காற்றில் சிக்குண்ட வண்டு விச்சுளிப் பாணத்தால் தூக்கப்பட்ட இரதததிற்கு உவமை.

கிறுகிறு கிறுஎன மேலும் கிளர்விசை அமர்த்தி டாமல்,
நெறுநெறு நெறுஎனத் தேரின் நெடும்தொனி யொடும்வான் ஒன்றி,
விறுவிறு விறுஎன மீண்டு விசையொடு புவியை நோக்கி,
மிறுமிறு மிறுஎன வீரன் விழுந்தனன் தேரி னோடே. 175

மதித்தவில் வீரன் பப்ர வாகனன் மயங்கி வீழ்ந்தான்;
கதித்திடும் வீர வர்மன் கடும்சினத் துடன்கர்ச் சித்தே,
உதித்தஆ தவனை ஒப்ப ஒருபெரும் தடம்தேர் உந்தி,
கொதித்துஅருச் சுனனை நோக்கி, கொடுமரம் குனித்துச் சொல்வான். 176

தனஞ்சயன், விசயன் சவ்ய சாசிபற் குணன்,காண் டீபன்
இனும்பல பேரும் பெற்ற இவுளிரட் சகனும் நீயோ?
மனம்தயி ரியமாய் இந்த மண்ணில்மா மிதிக்க விட்டாய்
புனைந்ததும் பைத்தா ரோடும் போர்செய வாநீ" என்றான். 177

மன்னவன் வீர வர்மன் வழுத்தல்கேட்டு இருகண் ணாலும்
துன்னிய அழலின் மாரி சொரிதர, வில்லை ஏற்று,
முன்னிய குணம்செய் காலை முப்புவி திசைகள் அஞ்ச,
மன்னிய அமரர் நாகர் மயங்கினர் தியங்கி யாரும். 178

எவ்விதத் திறம்கொண் டோன்நீ! எங்கணும் பகட்டி வென்ற
செவ்வியும் வீரம் யாவும் செணத்தினில் கொட்டி வைப்பேன்;
ஒவ்வியான் விடுங்கோல் தன்னை உற்றுநீ விலக்கு" கென்று,
திவ்விய அஸ்த்ரம் நாலைச் சிலையினில் இழுத்து விட்டான். 179

மன்னார்கோன் விட்ட வாளி வான்இடி யதனின் மிக்காய்
துன்னிய வன்னி மாரி சொரிந்துஇரைந்து அருகும் முன்னே
உன்னிஓர் சரத்தி னாலே உறுக்கியே எரித்து விட்டான்;
பின்,அவன் மதித்தே எட்டு பெரும்கணை சினந்து விட்டான். 180

---

175. அமர்ந்திடாமல் - குறையாமல்.

177. சவ்யசாசி - இடது கைகளால அம்பெய்பவன்; மா - குதிரை

179. திவ்விய அஸ்த்ரம் - தெய்வீகமான அம்புகள.

180. வன்னி மாரி - தீ மழை, அருகும் - நெருங்கும், உன்னி - ஆராயந்து.

ஆரவா ரித்து விட்ட அட்டபா ணங்கள் மங்க
வீரவா ரக்கோல் ஒன்று விட்டறுத் ததையும் மெச்சி
ஓரவா ரங்கள் இல்லான் ஒருபது பகழி ஏவ,
வாரவீ ரியன்ஓர் அம்பால் மாற்றினன் மதிக்க மன்னன். 181

இருபது பகழி ஏவ இவன்இரு சரத்தால் வென்றான்;
மருவிநாற் பதுகோல் ஏவ வன்கணை நான்கில் வென்றான்;
நிருபன்எண் பதுகோல் வீச நீறஎண் கணையால் வென்றான்;
ஒருசத வாளி யேவ ஒருபது சரத்தால் வென்றான். 182

இருசத வாளி ஏவ இருபது கணையால் வென்றான்;
சரம்அவன் நானூறு ஏவத் தகனித்தான் நாற்பான் கோலால்;
விரைவின்எண் ணூறு வாளி விடஎண்பான் கணையால் வென்றான்;
கருதிஆ யிரம்கோல் வீசக் கணைசத மதனால் வென்றான். 183

இவ்விதம் வன்மை வின்மை இறையவன் பார்த்து மெச்சி
திவ்வியக் கணைவில் வீரன் தீரவில் விசயன் என்னும்
செவ்வியன் இவனை வெல்லத் தேவர்கள் தமக்கும் முற்றா;
ஒவ்விலா வீரன் தன்னை உற்று,மொய்த்து ஆக்க ரித்தே 184

(வண்ண விருத்தம்)
(தனன தந்தன தனதன தனதன
தனன தந்தன தனதன தனதன)

சினம்மி குந்துஅர சனும்மிகு கதழ்வொடு
சிலைவ ளைந்தது நிமிர்வுஅற விடுகணை
தனில்அ கண்டமண் உலகமும் நிமிர்தரு
சரம்நி ரம்பிய பொழுதினில் அவனும்எய்து,
அனல்ப டும்சருகு எனஅவை பொடிசெய்து,
அவனி லும்சதம் அளவறு சரம்எய,
மனது வெஞ்சின முடன்இவன் விடும்அவை
மனனும் அம்பினில் அழிவுசெய் திடவுமே, 185

181. அட்ட - எட்டு; ஒரவாரங்கள் இல்லான் - வேணடியவர் எனும சலுகையோ, வேண்டாதவர் எனப பகைமையோ இல்லாமல் நடுநிலை உள்ள வீரவர்மன், வாரவீரியன் - பகை கொள்வதில் சிறந்தவனாகிய அருசுனன். இப்பாடலில இருவரின் முரண்பட்ட பண்புநலன் விளங்குகிறது. 183. தகனித்தான் - எரிததான

184. ஒவ்விலா - இணையறற, உற்று, மொய்த்து - நெருங்கி.

185. மண்உலகம் அகண்டமும் என இயையும் - நிலவுலகு முழுவதும், சரம்எய - அம்புகளைஎய்ய.

இவன்வெ குண்டுபின் அளவுஅறு சரமதை
எயவும், அங்குஅவன் விடுகணை இகலொடு
தவிநெ ருங்கியது; இருவர்கள் பகழிகள்
சமர்தொ டங்கின; குதைஇடை கடைஅற
வவிஇ டந்தன; முனையது துகள்செய்து
வருச ரங்களை இடறின தொடைசில;
கவும்இ ரும்சிறகு அலகுஅற முறிசெயக்
கணைகள் வந்துஒரு கணையுடன் இகலவே. 186

கடல்நி ரம்பின; திசைகக னொடுபுவி
கணைநி ரம்பின; வடகிரி கரிவரை
விடம்உ மிழ்ந்திடும் அரவநன் னிலமொடு
மிகநி ரம்பின இருவர்எய் பகழிகள்;
அடல்தொ டங்கினர் அமரர்உ ரகர்நரர்
அபயம் என்றல நியும்வெரு வினர்;திசை
கிடுகிடு என்றுஅலை தர,உல கமும்மதி
கிரண னும்திசை தெரிவுஅற இகலவே. 187

இருவ ரும்சம முடன்இகல் புரிபொழுது,
இவன்வெ குண்டுகை விரசொடு விடுகணை
பொரும்அ வன்சிலை கொடிபரி ரதம்முடி
பொடிபொ டிந்திட, மறுரத மிசைகொடு
வரும்மு னம்,சில கணைஎய்த பொழுதினில்,
வலிச யந்தனம் அழிதர், மனன்ஒரு
இரதம் அங்கதில் மருவி,வில் வளையும்முன்,
இடறி னன்சர மதில்முனி ரதமுமே. 188

அவன்வெ குண்டுஒரு ரதமிசை உறும்முனம்,
அதனை யும்பொடி செய்துஇவிதம் அறுபது
தவர்கொ டிஞ்சியும் உயர்பரிது சம்உருள்
தகர்த்த ரும்பொழுது அரசனும் முனிவொடு,

---

187. ககன் - ககனம், ஆகாயம்; வடகிரி - மேரு, கரி - திசையானைகள்; வரை - எட்டுக் குலமலைகள்; இருவாளெய்பகழிகள் என்னும் எழுவாய் கடைநிலைத் தீபகமாய் நிரம்பின எனும் பயனிலைகள் மூன்றையும் பெற்றது; மதி - சந்திரன்; கிரணன் - சூரியன்.

188. முனி - வில்.

நவமது உந்திடு வயிரமின் மைசெய்த
நனிகொ டிஞ்சியின் மிசை,உர சொடு,பல
திவிய ஒண்கணை சொரிதர, விசயன்எய்
தெரிச ரம்கொடு விலகினன் இவனுமே. 189

அதிக வெஞ்சின முடன்மிகு கணையினை
அவன்வி டும்பொழு தில்இவன்மெய் துளைதர,
முதிய வெஞ்சின மொடுவிச யனைமிகு
முனிவு கொண்டுஉர சுடன்அரி பகர்நல
விதமி கும்சரம் விசையுடன் விடுகணம்,
எதிரி தன்சடம் முழுதினும் நுழைதர,
மதிக லங்கி,மெய் தளர்வொடு சிலையது
வளைவு கொண்டுஅவன் மிகுகணை பொழியவே 190

(அறுசீர் ஆசிரிய விருத்தம்)

விட்டவெங் கணையால் மிக்க விசயன்மெய் முழுதும் மொய்க்க,
கட்டழ கனும்மெய் நொந்து கலங்க,மால் மார்ப கத்தில்
தட்டின பொழுதே, சோப தாபமும் தீர, அந்நேர்
இட்டமாய்ச் சரங்கள் வீசுஎன்று இயம்பினன் இடுக்கண் தீர்ப்போன். 191

உயிர்க்குஉயி ரான நண்பன் உறைத்திடும் உறுதி யாலே,
வியப்புறச் சதம டங்கு வீரமாய்ப் புயங்கள் விம்மி,
இயற்சிலை வளைத்தே, ஆர்த்து(அங்கு) இருங்கணை மாரி யாக
நயத்தமுப் புவியும் திக்கும் நடுநடுங் கிடக்கோல் பெய்தான். 192

வில்லிமல் விசய சேனன் வெங்கணை மாரி பெய்தே
ஒல்லையில் உலகு யாவும் ஒழுங்குற அடைக்க அம்பால்,
செல்என வீர வர்மன் சினத்தினில் கோல்கள் வீசி,
பல்லவம் அனைத்தும் நீறு படுத்தி,மேல் பனித்தான் புங்கம். 193

---

189. தவர் - வில்; கொடிஞ்சி - தேர், உருள் - சக்கரம், தெரிசரம்- ஆராய்ந்தெடுத்த கணைகள், வினைத்தொகை.

191. மால் - கண்ணன், அந்நேர் - அபபோது, இடுக்கண் தீர்ப்போன் - துன்பங்களை நீக்கும் இறைவன், கணனன்.

193. வில்லி அம்பால் அடைக்க, வீரவர்மன் செல் எனக் கோல்கள்வீசி, நீறுபடுத்தி, மேல் புங்கம் பணித்தான் என்பது அந்வயம்

இடைவிடாது இரண்டு யாமம் இகலுற அமர்மென் மேலும்
அடைதரா . . . . . நேராய் அருஞ்சிலை நிமிரா வண்ணம்
படைமழை மாரி யாகப் பனித்தனன் பார்த்தன் ஆங்கே;
கடுமையால் சொரிந்த வெங்கோல் காவலன் உடலை மொய்த்த. 194

ஏவுசா கோப சாகை என்னமென் மேலும் வீச.
காவலன் மகிழ்ச்சி பொங்கிக் கடுமைகை விரசும் நோக்கி,
ஆவலின் விலக்க முற்றாது. அடும்கரம் தடுமாற்றம் கொண்டு,
ஓவியம் நிகர்ப்ப, வில்லை ஊன்றியே, திகைத்து நின்றான். 195

அம்பரம் புறமு மாக அவயவம் முழுதும் மொய்த்த
கும்பலாய்ப் புதைந்த புங்கக் குதைகுதை தோறும் மொய்த்த
அம்புடன் மதித்தே ஆகம் மயங்கியே மனமும் சோர்ந்து
விம்பவாய் திறந்து மாலை விளித்து,"எனைக் கா" என்று ஓதி, 196

வர்மம தாக வீர வர்மன்நூறு ஆசு கத்தைத்
தர்மபூ பதிபின் னோன்மெய் தட்டுறா விட,நூறு அம்பும்
நிர்மல மாயன் மேனி நிறைந்துஉரு விட,நூறு அம்பு
துர்மதக் குரங்கு மேனி துளைத்திட விடுக்கும்! போது, 197

வடிக்கணை நூறும் பற்றி மாருதி முறிச்சு, மேலும்
தொடுத்திடும் அம்பை எல்லாம் துண்டுற நொறுக்கி, தாவி,
மிடுக்குறத் தேரை வாரி, விசும்புஉறச் சுழற்றி வீச,
திடுக்கிட முகடு முட்டத் தேரது எழும்பி மீண்ட. 198

மீண்டுபூ அணுகும் முன்னம் விரைந்துஇருக் காலும் வீச,
நீண்டவான் அகடு முட்டி நிலத்திடை அணுகும் முன்னம்
தாண்டிமுக் காலும் வீச, தான்எழுந்து இறங்கும் போது
பூண்டுநாற் காலும் வீச, புட்கரத்து எழுந்து வீழ்முன், 199

---

194. படை - ஆயுதம், பொதுப்பெயர், சிறப்பாகக் கணையை உணர்த்தியது.

195. சாகோப சாகை - கொம்புகளும், கிளைக்கொம்புகளுமாய்,பறபல தொடர்ந்து. புங்காலுபுங்கம் என்பர்; முற்றாது - (தடுக்க) முடியாமல்.

196. அம்பரம் - ஆடை, புறம் - மதில், கணைகள் உடலை மொய்த்திருந்த தன்மை ஆடை அணிவித்ததைப் போலவும்,மதிற்சுவர் எழுப்பியதைப் போலவும் இருந்தது.

197. பின்னோன் - தம்பி; தட்டுறா - தட்டுருவ, ஊடுருவ.

198. மாருதி - அநுமன், விசும்பு - ஆகாயம்

199. பூ - நிலம்: இருக்கால் - இரண்டாம் முறை: இறங்கும் போது - (தேரிலிருந்து) இறங்குகையில்; பூண்டு - அகப்படுத்தி, கைப்பற்றி; புட்கரம் - ஆகாயம்.

மாருதி தாவித் தாவி, வர்மித்து,எண் நான்கு மட்டாய்க்
கோரமாய் உதைக்க, வேகம் கொண்டு,நே ரிசம்கைக் கொண்டு,
பாரமாய் நுதலில் ஊறு பட்டிட ஒச்சும் போது,
வேரிமா ருதியும் சாய்ந்தான் வெள்ளிமா மலைஒப் பாக. 200

மாருதி சாய்ந்த போது, மண்ணினில் எழும்தே ரோடும்
வீரவர் மனுமே வீழ்ந்து, மெய்அயர்ந்து, ஒருமு குர்த்தம்
நேர,மேல் தெளிந்தான்; வாயு நேயனும் சோபம் தீர்ந்தான்;
வாரமா யவனும் காலால் மத்தகத்து உதைத்தான் அந்நேர். 201

உதைத்ததாள் இரண்டும் மன்னன் உணர்ந்தஞா னத்தால் பற்ற,
"பதத்தநின் பதத்தைத் தந்தாய்! பகவனே! எனைஆட் கொண்டாய்!
கதத்தினில் அநும னோடு, கண்ணனே! நீயும் கூடி
மதித்துஎனைப் பொருது நின்ற வாறுநான் அறியேன்; ஐயா! 202

வென்றிமா தவன்உ தைக்க வீரவர் மன்றன் லாடத்து
ஒன்றிய திகிரி சங்கத்து உருவெளி ரேகை ஓங்கல் 203

(இப்பாடலின் பின்னிரண்டு அடிகள் சுவடியில் எழுதப்படவில்லை)

என்றுஇனிது அனந்த நாமம் இருதய வாய்மை யாக,
அன்றுமென் மேலும் போற்றி அஞ்சியே, துதித்து மிக்காய்,
"என்றனை ஆட்கொ ளத்தாள் ஈந்தனை" என்று சொல்லி
நின்றவன் தன்னை மாயன் நெஞ்சொடு புல்லிச் சொல்வான் 204

"தருமன்நல் தருமம் என்னும் தளையினில் தகைந்து, மேலும்
ஒருமையாம் சிந்தைக் கோவி லுள்சிறை வைத்தே, 'ஏவும்
கருமமது இயற்று' கென்பான் கட்டளைப் படி,எந் நாளும்
அருமையில் செய்வேன்; அன்னான் அடிமையே ஆகை யாலே." 205

---

200. வர்மித்து - சினங்கொண்டு; எண்நான்கு மட்டாய் - முப்பத்திரண்டு முறைகள் வரை; நேரிசம் - ஓர் ஆயுத வகை.

201. நேர - செல்ல; வாயு நேயன் - காற்றுத் தேவனின் மகன்,அநுமன்.

202. பதத்த - மிக உயர்ந்த பதவி எனத்தக்க; கதம் - கோபம்.

203. லாடம் - நெற்றி. 204. புல்லி - அணைத்து.

205. தளைந்து - சுட்டி, ஒருமையாம் - தியானத்தில் ஒருமுகப்பட்ட; தருமனின் அறத்திற்கும், விசயனின் யோகத்திற்கும் எம்பெருமான் கட்டுப்பட்டு நிற்கிறார்.

எனச்சொலும் மாலை நோக்கி, "எவ்வுலகு உயிர்கள் யாவும்
நினக்குஉறும் அடிமை; உண்மை; நினைஅடி மைக்கொள் வார்யார்?
மனக்கவடு அறியேன்;" என்ற மன்னனை மாயன் நோக்கி,
"உனக்குஇனி ருசுச்சொல் வார்யார்? உத்தியாய் உற்று நோக்காய்; 206

பஞ்சவர் தூதன் என்னும், பார்த்தன்தேர்ப் பாகன் என்னும்,
இஞ்சொலே உலகம் எல்லாம் இனன்சசி யுளநாள் மட்டும்
கஞ்சன்வாக் கியமும் எண்ணன் கலைகளும் விளங்கு மானால்
விஞ்சையால் தப்பும் வாறுஎன்? வேண்டுமோ முறியும் வேறே? 207

உலகுஎலாம் சாட்சி சொல்லில், உன்மனது அறிய ஓடி
விலகஓர் இடமும் உண்டோ? விதிவழி இதுகாண்; ஐயா!
பலன்உயர் வன்றன் ஏவற் படிசெய்வது அன்றி என்னால்
திலகயான் நினைத்த வண்ணம் செய்திடத் தகுமோ?" என்றான் 208

பன்னக சயனன் கூறும் பனிமொழி அமிர்த சாரம்
கன்னகம் குளிரக் கொண்டு, கருத்தினுள் விரித்து உணர்ந்து,
'தன்னையே துணையாய் நம்பும் தாசர்க்கே அடிமை' என்றான்,
அன்னவர் கருத்தின் உள்ளே அமர்ந்தருள் புரியும் வாற்றால். 209

ஆகையால் 'திருமா லுக்கே அடிமைசெய்' என்ற வாக்கும்
ஓகையால் அடியார்க்கு இன்பம் உரைத்தலும் ஒன்றாய்க் கண்டு,
'ஏகநா யகன்நீ ஆண்டோன் எனக்கு;உனக்கு ஆண்டோன் தன்னை
மோகமாய்ப் பணிவேன்' என்று, முடுகினான் வீர வர்மன். 210

---

206. கவடு - கபடம், வஞ்சகம்; ருசு - சான்று; அடிமைக்கொள்ருசுச்சொல்வார் ஆகிய ஈரிடங்களிலும் யாப்பும், ஓசையும் நோக்கி வல்லினமெய்மிக்கது.

207. பஞ்சவர் - பாண்டவர், இஞ்சொலே - இச்சொலேஎனற்பாலது எதுகைநோக்கி மெலித்தல் விகாரம் பெற்றது; இனன்- சூரியன்; சசி - சந்திரன்; கஞ்சன் வாக்கியம் - பிரமனின் சொல்;வேதம்; முறி - சாசனம்.

208. பலன் உயர்வன் - வலிமையால் உயர்ந்தவன்; திலக - திலகம்போன்ற வீரவர்மனே.

209. பன்னக சயனன் - அரா அணையோன்; கன்னகம் - செவியினுள்;கன்னவகம் எனற்பாலது தொகுத்தல் விகாரம் பெற்றது. தாசர் - அடியார்.

210. திருமாலுக்கு அடிமைசெய என்பது ஆத்திசூடி (57) அடியாரைப்பணி என்பதே அதற்கு உரை என மிகச் சிறபபாகத் தக்கஇடததில் அருமையாக விளக்கப்பட்டுள்ளது. உனக்கு ஆண்டோன் என்றது பாகவதனான பார்த்தனை.

மாலுடன் வீர வர்மன் வருவதை நோக்கிப் பார்த்தன்
மேல்உறும் இரதம் விட்டு மேதினி மீதில் ஆனான்;
சாலவும் வீர வர்மன் தடக்கரம் குவிக்கும் முன்னே
கோலமன் னவனை மார்பில் குணமுடன் புல்வி னானே. 211

பலபல உபசா ரங்கள் பார்த்தனுக்கு அரசன் கூற,
அலகில உபசா ரங்கள் அர்ச்சுனன் அரசுக்கு ஓத
உலவிய பாலும் தேனும் ஒத்தபோல் ஏகோ பித்துச்
சலசைமார் பகன்பின் மீண்டு தனஞ்சயன் உடனே சொல்வான் 212

"அரசர்கோன் கருத்தின் வண்ணம் அவன்நகர் அடைந்து, செய்யும்
வரிசையாம் பெற்று மீள்வோம்; மன்னனின் மக்கள் தம்மை
அருகினில் அழைத்திடு என்றான்; அந்தநேர் பரிச கேது
உரவனை நமஸ்க ரித்தான்; உவந்துமன் உபச ரித்தான். 213

வீரவர் மன்பா தத்தில் விழுந்தனன் பப்ர வாகன்;
'வாரவல் லவன்நீ' என்று, வாரமொடு உபச ரித்து,
'சீரிய சிறுவ னேனும் திலகநீ தெளிவால் மிக்க
பாரிய புத்தி உள்ளோன்" என்றுமார் பகத்தில் சேர்த்தான். 214

மற்றுள பேர்கள் எல்லாம் வந்துவந்து இறைஞ்ச, வாழ்த்தி,
கொற்றவன் மகிழ்ச்சி பொங்கி, கூடிய பேரை எல்லாம்
நத்திய நகர்க்குக் கொண்டே நடந்தனன்; தொடர்ந்து சேனை
சுற்றியே பரவி மொய்க்கத் தொல்நகர் புரிசை புக்கான். 215

மன்அரண் மனையில் புக்கு, மாலைஆ சனத்தில் ஏற்றி,
பின்ஓர்ஆ சனத்தின் மீதே பீடுஅருச் சுனனை ஏற்றி,
தென்உறும் விரிப்பின் மீதே சேர்ந்துவந் தோரை எல்லாம்
துன்னவே இருக்க வைத்துச் சோடசோ பசாரம் செய்தே, 216

---

211. கோல - அழகிய.

212. ஏகோபித்து - ஒருமனப்பட்டு; சலசை - தாமரையில் தோன்றியவள், திருமகள்.

213. பரிசகேது - பரிசத்துசன்; உரவன் - வீரவாமன்.

214. சீரிய - என்பால் கோபம் கொண்ட; பாரிய - பெரிய.

215. கொற்றவன் - வீரவர்மன்; நத்திய - (தான்) விரும்பும்; புரிசை- மதில்; நத்திய என வந்தது இனஎதுகை, பெரும் சாப்பியங்களில் சிறுபான்மை அருகிக் காணப்படும்.

216. மாலை - கண்ணனை; தென்உறும் - அழகு பொருந்திய; சோடசோபசாரம் - பதினாறு வகையான வழிபாடுகள்.

வாமனுக்கு உபய பாலும் மன்னனும் மந்த்ரி தானும்
சாமரை இரட்ட, பார்த்தன் தனக்கும்இவ் வாற தாகப்
பூமனன் புதல்வர் ஏவல் புரிந்துசா மரைகள் வீச,
நேமமாய் அனந்த நாமம் நினைவுடன் மாலை வாழ்த்த, 217

இந்தவா றாக, நாள்மூன்று இருந்துஅனம் அருந்திக் கூடி
உந்திபூத் தோன்உத் தாரத் துடன்முரசு இனங்கள் ஆர்க்க,
பந்தநால் அங்கச் சேனைப் பாளையம் பயணம் செய்ய,
சந்தமாய் வீர வர்மன் தனஞ்சயன் மாலைக் கண்டே, 218

இரதம்ஓர் இலக்கம், உம்பல் இலக்கம்;ஐம் பதுஇ லக்கம்
புரவி;பொன், இரத்தி னாதி பூஷணம், பொருள்கள், மற்றும்
கரிபதி னாயி ரங்கள்; கனம்உறப் பறித்தது எல்லாம்
தருமனுக்கு என்றே ஈந்தார். தாமன்நண் பனுக்குச் சொல்வான் 219

"இங்குஇதற்கு இயைந்த வீரர் இகழ்தளம் கூட்டு" கென்ன
அங்கதற்கு உரிய சேனை அத்தின புரத்தில் சேர்க்கத்
துங்கனும் அனுப்பு வித்தான்; துரகதம் இரண்டும் சோடித்து,
அங்கம்ரத் தினத்தால் மூடி, அர்ச்சுனன் திருமுன் வீட்டான். 220

கண்களால் உபய மாவைக் கண்டுமேல் களிப்புப் பொங்கி,
பண்கள்சேர் விருதி னோடும் பணிமணிக் கவிகை யோடும்
மண்கொளாச் சிறப்பி னோடும் வாசிமுன் நடக்க விட்டான்;
திண்கவிக் கேத னோடு செம்மலும் பயண மானான். 221

மக்களாம் உபயர் அந்த மாநகர்க்கு அரசு வைத்து
ஒக்கலும் அமைச்சும் தக்கது உற்றவன் தளமும் வைத்து,
தக்கவெம் சேனை யோடும் தானையா திபர்க ளோடும்
நக்கனோடு அடல்செய் வீர நரனுடன் புறப்பட் டானே. 222

---

217. வாமன் - அழகன், கண்ணன், பூமனன் - நிலத்தின் வேந்தன்.

218. உத்தாரம - உத்தரவு, பந்த நால அங்கச் சேனை - தேர்,யானை, குதிரை, காலாள் என்னும் நான்கு உறுப்புகளால் கட்டப்பெற்றுள்ள படை.

219. உம்பல் - யானை, கரி - வைரம்; தாமன் - கண்ணன்.

221. வாசி - குதிரை, கவிக்கேதன் - அநுமக கொடியையுடைய விசயன்; செம்மல் - வீரவர்மன்.

222. ஒக்கல் - உறவினர், வன்தளம் - வலிய படை, தானையாதிபர் - படைத்தலைவர்; நக்கன் - சிவபெருமான்; நரன் - அருச்சுனன்; வீரவர்மன் - தோன்றா எழுவாய்.

சேனைவா ரிதியும் நீண்ட தேசமன் னவர்மற் றோரும்
மோனைவில் வீரன் தன்னை மொய்த்துற, முகுந்தன் தேரின்
தானமாப் பாக னாகத் தார்க்கோல்கை கொண்டே ஊர,
மானசம் பன்ன வில்லி மகிழ்ந்துதேர் மீதில் சென்றான். 223

உபயவெம் பரியும் முன்னே ஓமஎக் கியங்க ளோடும்
சபலமாய் வடக்கு நோக்கித் தடையற நடந்து, வெற்றிச்
சுபம்உறு விருதி னோடும் துங்கவெண் குடைக்கீ ழாக
அபயர்தே சத்தை நேர்குந் தளந்தனை நாடிச் சென்ற. 224

சென்றது பத்து நாளும் தினங்கள்ஓர் எட்டும் ஆக
அன்றுஅதற்கு அப்பால் வீர வர்மன்நாட்டு எல்லை நீங்கி
நன்றுகுந் தளதே சத்தை நாடிமா நடந்தது என்று,
வென்றிமா முனிவன் சொன்னான். வேந்தனே அறிக என்றே. 225

"அற்புத மாய்ஒன் றற்குஒன்று அதிக்மாய் உரைத்தீர் என்றும்,
பொற்பினில் மதியில் வீறில் பூபரில் வீர வர்மன்
விற்பனன் உதார தீரன் மெய்ப்பல, சாலி என்றும்
கற்பகம் அனைய மன்னன் கருத்தொடும் முனியை மெய்த்தான். 226

வீரவர்மன் போர்ச்சருக்கம் முற்றும்.
ஆகச்சருக்கம் 17க்கு விருத்தம் 3339

---

223. மோனை - முதன்மையான; தான - வலிமை மிக்க, மா குதிரை; மான சமபன்ன - பெருமிதத்தால் நிறைவுற்ற.

224. சபலம் - வெற்றி, அபயர் தேசம் - சோழநாடு.

225. முனிவன் - வைசமபாயனன்; வேந்தன் - சனமேசயன்

226. மன்னன் - சனமேசயன்; மெய்த்தான் - மெச்சினான்.

18. சந்திரகாசன் போர்ச் சருக்கம்

(கலி விருத்தம்)

அரிதிரை அரிமிசை அரிபுறம் அரிஎன
அரிவிழி அரிதுயில் புரிஒரு பொருள்முதல்
அரிதமை அரிஉண அரிசுதன் அரிநடவு
அரிஅரி உருவரி; அரிஅரி அரியே. 1

இருடிசொல் அரசுஇரு சுருதியில் அமுதுஎன
விரவின பிரிசமும் விரிவுற (அரிஅடி)
பரவிய உரவனை அருள்கொடு துதிசெய்து
மருவுஇரு பரிகளும் வரும்முறை புகலுவன் 2

மின்என விரவிய உன்னிகள் உபயமும்
அல்நவ விரைபொழி லின்னில மொடுபல
நல்நிலம், உயரிய கல்நிலம் முழுதுஅயல்
பின்னிட, நடைசெய, முன்னியது ஒருநகர். 3

அந்தரம் எனமுகடு உந்திஅ ளாவிய
மந்தரம் நேர்உயர் சுந்தர கோபுர-
முந்திகழ் ஏர்பெறு செந்திரு மேவிய
குந்தள நாடிறை சந்திர காசன். 4

---

1. அரிதிரை அரிமிசை - அழகிய அலைகளை உடைய கடலில்; அரிபுறம் அரி என - பாம்பின் முதுகே படுக்கை எனக்கொண்டு; அரிவிழி - செவ்வரியோடிய கண்களால்; அரிதுயில்புரி - யோகநித்திரைசெய்கின்ற; ஒருபொருள் - ஒப்பற்ற வஸ்துவே; முதல் - பரம்பொருளாகும். (அத்தகைய பரமபொருள்) அரிதமை அரிஉண- பகைவர்களைப் படைக்கலங்கள் அருந்துமாறு; அரிசுதன்அரிநடவு - இந்திரனின் மகனாகிய அருச்சுனனின் தேரைச்செலுத்துகின்றவனும் அரி - வெறறி மிகுவனும. அரிஉருஅரி - சிங்கத்தின் வடிவத்தை ஏற்ற திருமாலே; இது முக்காலும் உண்மை. ஒரு முதற்பொருள் அரி, அரி, அரியே என்பது முடிபு. அவர் நம்மைக காக்க என்பது குறிப்பு.

2. சுருதி - காது, பிரிசம் - அன்பு.

3. அல் - இருணட, நவ - புதுமையான; விரை - மணமிக்க;பொழிலின் நிலம் என்றது முல்லையை; நல்நிலம் - மருதம்; கல்நிலம்- குறிஞ்சி; முன்னியது - முன்னுற்றது.

அவனிபர் சுரர்அசு ரர்கள்அரி கவின்உறு
சிவன்அயன் எழில்மயில் நடமிடு பவன்முதல்
அவன்எதிர் அமர்பொரு துவதுஅரிது; எவர்க்ளும்
இவன்நிகர் இனியொரு வரும்இலை இவணில் 5

(வஞ்சி விருத்தம்)

அந்த மன்பதி நாடியே, குந்தம் ஏகு குறிப்பினை
நந்த கோபன் அறிந்தனன் சிந்தை அஞ்சு திடுக்கொடே 6

"இவுளி அந்நகர் ஏகலால், அவனி பன்பரி யதுகொளில்
எவன்ள திர்த்துஇகல் பொருதுவென்று உவகை ஒண்பரி கொளவலார்? 7

ஒப்பி லன்பல துப்பினால்; துப்பு ளன்அருள் துப்புஉளன்
துப்பில் மிக்குள தந்திரன்; துப்பு அறஞ்செய்மு யற்சியான். 8

வலிய ஓர்கணை பதனில்மூ வுலகும் நீறஒ ருங்குஎரித்து
இலகு தேவரும் மூவரும் மெலிவின் ஓடஇ கல்செய்வான்." 9

என்னும் முன்னம்அ ருச்சுனன் கன்னம் மீதில்உ றைக்க,மீண்டு,
"இந்நி லங்கள் புரந்துவாழ் மன்னன் வல்லமை சொல்"கென, 10

பரிச கேதுஅ மிர்தத்துசன் உரவன் வீரவர் மனதமைக்
கரிய மால்வின வும்பொழுது, அரசர் மூவரும் அருள்செய்வார். 11

"கவட நாடக மாயனே! வேடு தாங்குச காயனே!
நவவி சால உபாயனே! கவின்உ யர்ந்துள காயனே! 12

---

5. அவனிபர் - அரசர்; மயில நடமிடுபவன் - முருகன்; இவணில் - இங்கு.

6. குந்தம் - குதிரை; நந்தகோபன் - கணணன்.

8 துப்பினால் - படைக்கலன்களை உடைமையால, துப்புளன் - அறிஞன்; அருள்துப்பு - திருவருளின் துணை, துப்பில்மிகுள - அனுபவமிக்க, துப்பு அறம் - தூய தருமம்.

11.குவடு தாங்கு - கோவர்தன மலையைச் சுமந்த; சகாயனே - அடியார்களுக்கு உதவிசெய்பவனே: நவ - புதுமையானதும்; விசால- பெரியவையுமாகிய; உபாயனே - தந்திரங்களைச் செய்பவனே;கவின் - அழகு, காயனே - திருமேனியை உடையவனே.

புடவி எங்கும் நிரந்தம் உடன்நி றைந்த துரந்தரா!
அடியர் இன்புறும் அன்பனே! சுடர்இ ரண்டுகொள் தோளனே. 13

நினது அகந்தனில் அறிகொணாப் புனித நல்நவம் உளகொலோ?
வினவு கின்றனை; நன்று;ஐயா! இனிது கேள்;"என நவிலுவார் 14

"ஈது குந்தள தேசம்;மன் ஆதி சந்திர காசன்ஆம்;
மாத வம்பெறும் அரசுஎலா மேதொ ழுங்கழல் வீரன்ஆம்: 15

மண்ட லர்திபர் எங்கள்போல் உண்டுஅ னேகர்இவ் உரவனை
அண்டி யேஅடி தொழுதிறை கொண்டு, போகுவர் குணமதாய். 16

தேச ராசர்கள் திறைதரார் நாச மாகந டுங்கிடப்
பூசல் செய்துபொன் வேல்முனை ஊச லாட்டிய ஒள்ளியோன். 17

தரும தேவதை ஒப்பவே தரும மேசெயும் உத்தமன்;
இரவ லோரைஉ யர்த்துவோன்; மருவ லாரைம டக்குவோன். 18

இசைளம் மன்னார் ..... மசகம் என்னம தித்திடான்;
அசைவில் மூவர்கள் தேவர்முண் பசுமுன் அண்புலிப் பண்பதாம். 19

இணங்கு நம்பரி பற்றினால் வணங்கின் அன்றிவ சம்தரான்;
பிணங்கி வந்துள பேர்களைக் கணங்கள் தம்மில்நொ றுக்குவான். 20

வல்ல வன்ஙகள டுக்கில்யாம் புல்லை மென்றுக டிக்கலில்
பல்ல வங்களில் ஒன்றினால் கொல்லு வன்தலை கொய்துமே." 21

என்று உரைத்துள சொற்குஎதிர் ஒன்றும் அர்ச்சுனன் ஓதிலான்
குன்றுள னத்தலை குவ்வுற நின்று ---------- 22

---

13 புடவி - உலகம், நிரந்தரம் - எபபோதும், உடன் நிறைந்த - எலலாவற்றிலும அநதாயாமிய :ய விளஙகுகினற. தரததரா - பெருவல்லமை படைததவா, ஈரா இரண்டு என்றது சக்கரததையும சஙகையும. அவை முறையே சதிரையும் மதியையும போலுதலின்

16. தொழு நிறை - தொழுது அளிக்கபபடுகின்ற கப்பம. ஈபவனின செயலை பொருள்மேல ஏற்றிய உபசாரவழக்கு

19. மசகம என்ன- கொசு போலக கூட இழிவும்மை தொகைஅ அண்ண - பொருந்துகின்ற

21 பல்லவம - அம்பு.

(கலிவிருத்தம்)

பாரத வீரிய பார்த்தனின் (தேர்க்குஓர்)
சாரதி சேய்மகன் தன்னைநி னைக்க
நாரத மாமுனி நண்பொடு வந்தே
வாரவில் லான்நெடு மால்முன்எ திர்ந்தான். 23

நன்முனி முன்உற நண்பனும் மாலும்
இன்மணி மன்இர தத்தின்இ ழிந்தே
தென்மலர் அங்கிரி கொண்டுஎதிர் சென்றே
பன்மொழி யால்வலம் வந்து பணிந்தார். 24

யாரும் இறைஞ்சிடும் அண்ணலை எய்தி
நாரதன் வாரி நலத்தொடு அணைத்தே,
"ஆரண முன்மொழி ஆக அமர்ந்த
காரண!" என்று கனிந்து புகழ்ந்தே, 25

"மாயவி நோதவ ரோதய! பூவில்
சாயைநி கர்த்துஉல கங்கள்ச மஸ்த
மேஉறை யும்பர னே!எமை ஆள்ஓர்
தூயவ!" என்று துதித்தனன் மென்மேல் 26

அன்றுஅபி தானம் அனந்தமு மேபுகழ்
கின்றவன் மீண்டு கிரீடியை நோக்கி
"மன்றலின் வாகை வாரவ லோய்!"என
நன்றுபு கழ்ந்துஅயன் மைந்தன்உ ரைப்பான் 27

---

23. சேய மகன் - மகனின்மகன், திருமாலுக்குப் பிரமன் மகன், அவன் மகன் நாரதர்

24 இன் மணி மன் - இனிய இரத்தினங்கள் பொருந்திய, தென மலர் - அழகிய தாமரை போன்ற; அங்கிரி - கால்.

25.ஆரண முன்மொழி- வேதத்தின் முதற்சொல், பிரணவம், காரண - உலக நிகழ்ச்சிகளுக்கு எல்லாம் காரணமாக உள்ளவனே,

26. வரோதய - தெய்வ சுகையால தோன்றியவனே , சாயை- நிறம், சமஸ்தமே - அனைத்திலும்.

27. அபிதானம - திருநாமங்கள , புகழ்கின்றவனாகிய நாரதன, வியாலணையும பெயர் ; வார வலோய் - விலலாற்றல் மிக்கவனே,

ஆர்உனை நேர்தரு மேசன்ம னோரதம்
ஏர்உற வேநிறை வேறஇவ் வீரர்முன்
வாரவில் ஆண்மையில் இவ்வகை செல்பவர்;
நாரணன் நண்பநந்த ரேந்திர! விசயனே! 28

ஐவரும் மால்அடி யார்என நின்றீர்;
தெய்வம் உமக்குஅடி மைத்தொழில் செய்யில்,
கைவலி யார்எதிர் காட்டுவர் உம்முன்?
தொய்வது இலாத துரந்தர வீரா! 29

சக்கர பாணிக டாட்சம தாலே,
சக்கரம் ஏழையும் நீந்தினை தான்நீ;
நிற்குஅரி தோசுனை நீந்துதல் சொல்லாய்?
சக்கரி தந்தசு தாதனு வீரா. 30

அலகில் மன்னரை வென்றனை; அந்நேர்
இலகிய இந்நில மன்னனை வெலமால்
விலியா லும்ஒண்ணாது - - - - - - -
நிலையுற அஞ்சி நிறுத்திய தாலே 31

இவ்னிட மின்றி எமக்குஇலை யோ?என்று
உவமையி லாய்!உன் னறக; இம் மன்னன்
நவவர லாறு நவின்றிடு வேன்;நீ
விவித மாகஎ னாவிடில்;" என்றான். 32

நன்று;என மாயவன் நண்பன் வினாவ
மன்றல்கொள் நாரத மாமுனி சொல்வான்
"வென்றிவி சாலவி வேகசை யோகா!
அன்றுஅர னோடு அமர்ஆடும னா!கேள்; 33

---

28. மனோரதம் - விருப்பம், இவ்வகை உனை நேர் செல்பவர் யார் என இயையும்.

29. தொய்வு- சோர்வு.

30. சகசர பாணி - சுதர்ஸனத்தை ஏந்திய கைகளை உடைய திருமால்; கடாடசம் - கடைக்கண் பார்வை; சக்கரம் - கடல்; சுனை - குளம; சக்கரி - இந்திரன். 31. அந்நேர் - அது போல,

32. உள் உன்னற்க - நெஞ்சில் நினைத்து விடாதே, சற்றும் அந்த எண்ணமே கொள்ளக்கூடாது என வலியுறுதத உள் என வேண்டாது கூறினார். நவ- புதுமையான . விவிதமாக - இங்கு விரிவாக என்றபொருளில் ஆளபபட்டுள்ளது.

33. விசாலம் - இடைநிலை விளககாக முன்னும பின்னும இணைநதது;நிறைந்த வெற்றி நிரம்பிய அறிவு என்க, சையோகா - வெறறியும அறிவும ஒன்று சேரப்பெற்றவனே, மனா - மன்னா,

இந்திர சூனு!அ னேகவ ளம்கொள்
குந்தள தேசமது ஆள்குர வோன்பேர்
சந்திர காசன்;அ யல்தரை மன்னர்
வந்திறை தந்து வணங்கிடும் வல்லோன் 34

இங்குஇ வனுக்குஎதிர் இல்எனும் அந்தப்
புங்கமது ஏதுஎனி லேபுகல் வேன்;கேள்;
செங்கழு நீர்அன தேகனை ஈன்றோன்
சங்கைய தாம்கிர ஸீச தயாளன். 35

தரைமுழுது ஓர்குடை தன்நிழல் கொண்டே
முரண்உறு கோன்முறை யுள்சிதை யாமல்
கருணையி னோடுஉலகு ஆளும்அந் நாளில்
உரிமையில் இல்லுடன் ஒத்துற மேவா, 36

(அறுசீர் ஆசிரிய விருத்தம்)

செக்கச் சிவந்த கழுநீரும்,
திகழும் நறைச்செண் பகமலரும்,
கொக்குத் தளிரும் நிகர்திருமெய்க்
கோலம் சிறந்த குசேசயமாது
ஒக்கும் வசிய நாயகிஎன்று
ஒருமான் அரசு மனையாள்;தித்-
திக்கும் அமிர்தக் குமுதஇதழ்ச்
செந்தேன் அருந்திச் சேர்ந்துஉவந்தாள். 37

மருவும் மலரும், மலர்த்தேனும்
வரியும், நறவும் பயமும்,உயர்
கிரியும் முகிலும், கலைஉழையும்
கிளரும் பெடையும், அன்றிலும்போல்

---

34. சூனு - மகனே; அயலதரை - பிறநாடு.

35. புங்கம் -சிறப்பு; சங்கைய்தாம் - மதிப்பிற்குரிய.

36. முரண்உறு - முரண்பாடுகள் தோன்றுவதற்கு வாய்ப்புள்ள, கோன்முறை - அரசநீதி, உரிமையின் - திருமண உரிமை பெற்றவளாகிய, இல் - மனைவி.

37. நறை - மணமிக்க, கொகுத்தளிர் - மாறதுளிர்,மெய்க்கோலம் - மேனியழகு;,குசேசயமாது தாமரைச்செல்வி, திருமகள.

சருவி மருவி மதன்இரதி
தயங்கி இயங்கும் தொழில்புரிந்தே,
ஒருமைப் புளகக் களிமயக்கில்,
உயிரும் உடல்ஒத்து ஒழுகினர்கால். 38

ஒத்துக் கலந்து விளையாடி,
உபயர் அமிர்த சலம்பெருக்கி,
நந்திக் களித்துப் புணர்ந்துவரும்
நல்நாள் அதனில ஒருநாளில்,
வெற்றிக் கிரளீ சன்தரள
விந்து வசிய நாயகிமேடு
உற்றுப் பவழப் புலத்தில்அமைந்து
ஒழுகி முளையுற்று ஓங்கியதே. 39

கருப்ப நிலையின் குறிப்புஉணர்ந்து
கணித சாத்ரர் தமைவிளித்து,
"பொருத்தம் உரையும்" எனவினவும்
பூபன் தனக்கே பூசுரர்கள்
விரித்துக் கணித நூல்வழியே
விண்டார் "கழைசூல் கொண்டதுஒக்கும்
உரித்துஉன் மனைவி கருத்தரித்த
முகுர்த்தம்" எனவும் உரைத்தனரே. 40

"நின்கா தலிசூல் பெறுங்காலம்
நினக்கு மரணம்; நின்மனையும்
நன்கா தலனைப பயந்தஉடன்
நடுங்காது உடன்உன் னுடன் மடிவள்;
பின்கா சினி,இப் புரிசைதனை,
பேணார் துணிந்து கவர்ந்துகொள்வர்;
மின்கூர் பரிதிக் கரன்அருளால்
மெய்யுன் புவிகாத் திடுவன்" என்றார். 41

---

38. மரு - மணம், வரி - வண்டு, நறவு - தேன்; பயம - பால், கலைஉழை - ஆண்மான், சருவி - கொஞ்சி, மருவி - அணைந்து; தொழில என்றது கலவியை, ஆல் அசைநிலை.

39. தரள - முத்துப்போன்ற, மேடு - வயிறு, பவழப்புலம் - கருப்பப் பையாகிய விளைநிலம், பவழவாய - கருப்பப்பை.

40. சாத்ரர் - சாத்திரர், நூலோர், பூபன் - மன்னன்.

41 காதலன் - புதல்வன், பேணார் - பகைவர், காசினி - இங்குநாடு; புரிசை - கோட்டை, மின்கூர் - ஒளி வீசுகின்ற, பரிதி - சுதர்ஸன சக்கரம்.

"நிலைஇயாது? இவணில் உறும்உயிர்மெய்
நீர்மேல் குமிழி" என உணர்ந்து,
மலையாது உலகு தனம்அனம்கோ
வஸ்த்ர தானம் முதலாகத்
தலைவோன் அளித்து, தவம்விரும்பி,
தக்கோர் மதிக்க நாள்கழித்தான்;
சிலைவாள் நுதலாள் பதின்மாதம்
செல்லக் கழித்தே, சேய்ஈன்றாள். 42

தனயன் உதிக்கக் கிரளீசன்
தறுகாது இறந்து கதிஅடைந்தான்;
"இனிஏது எனக்கு இருக்கை?"என
இசைத்துப் பலதா னமும்வழங்கி,
நனிசேர் சுதனைத் தாதிகையில்
நல்கி அழலுள் புக்குஇறந்தாள்;
கனியா தவரும் கனந்துஇரங்கி
கண்ணீர் சொரிந்து கதறினரே. 43

பொருவில் உயர்குந் தளதேசம்
புரந்தோன் மரித்த விதம்கேட்டு
மருஇன் மலர்சூழ் நாடுஅனைத்தும்
மகிழ்ந்து நெடும்தோ ரணம்விசித்தே,
அரணும் பிடித்து(அவ்) அரசன்அரண்-
மனையும் அறையும் அளவில்பல
பொருளும் உறைபொக் கிஷம்அனைத்தும்
பொருந்தார் கவர்ந்து, புரந்தனரே. 44

அய்யன் இழந்து தாயைஇழந்து,
அளவில் பொருள்பூ அரண்இழந்து,
மெய்யில் கவசம் அனஅமைச்சர்
வெள்ளப் படைவெண் குடைஇழந்து,

---

42. இவணில் - இங்கு, இவ்வுலகில்; உலகு - நிலம், தனம் - பொன், அனம் - உணவு, கோ - பசு; வஸ்த்ரம் - ஆடை.

43. புக்கு இறந்தாள் என்பதி அரசி என்பது தோன்றா எழுவாய்; கனியாதவரும் - பிறா துன்பத்தைப் பார்த்து உருகுகின்ற இயல்பறறவர்களும்

44. தோரணம் - பசிய இலைகள், மலர்கொத்துகள், கொடிகள் ஆகியவற்றால் கோக்கப் பெற்று வழியில் குறுகாகக்கடடப்படும் சரம்; விசித்து - கடடி, தோரணம் விசித்துத தாம் கைப்பற்றியதை உணர்த்தினர், அறையும - சொல்லப் படுகின்ற,உறை - இருக்கின்ற, பொருநதார் - பகைவர்.

துய்ய சுகமும் இழந்ததனிச்
சுதனை; தொழும்பி கரத்துஏந்தி,
ஐயம் எடுத்துஉண் பவர்குழுவோடு
அகலக் கருதி, நடந்தனளே. 45

கருதார் வினைக்கும், எயில்வாயில்
காப்போர் விழிக்கும் காணரிதாய்ப்
பரதே சியர்கள் உடன்கூடி,
பற்றார் . . . . . .
அரியே காக்கக் கடவது,என,
அத்தம் முகம்வைத் ததுவாக,
இரவும் பகலும் தரியாமல்,
இரும்பு வனங்கள் தொலைத்துஅகன்றாள். 46

முருகு விரியும் மலர்த்தடமும்
முளரிக் கள்தரு பரல்நிலமும்
விரவும் நாடு பலகடந்து,
விந்தை பயில்குந் தளதேசப்
புறமது அடைந்து, பலதெருவும்
போத நீந்தி, பொதுமாதர்
மருவும் தெருவி னிடம்பொருந்தி,
வதிந்தாள் நடந்தாள் அயர்வகல. 47

தாசி அறியாள் இசைதெய்வ
தாசி யர்கள்வாழ் வீதிஎன;
வேசி யர்கள்கூண்டு அழகியசீர்
வேந்தாம் செம்மல் தனைப்பார்த்தார்;
"தேசின் அருண கிரணவண்ணச்,
சிறுவன் ஆர்?நீ யார்கொல்?" என
மூசி ஞிமிறு குமுறும்மலர்
முருகுஆர் கோதை மார்வினவா, 48

---

45. மெய்யில் சுவசம் - பாதுகாபபுச் சட்டை; தொழும்பி - தாதி.

46. சுருதார் - பகைவர்; எயில் - மதில், பற்றார் - பகைவர்;அத்தம் முகம் வைத்ததுவாக - கைகளால் முகத்தை மறைத்துகொண்டு. தரியாமல் - ஒரிடத்தில் தங்காமல்; இரும் - பெரிய;புவனங்கள் - இங்கு சிறறூர், பேரூர் முதலியன

47. முருகு - மணம்; முளரிக் கள் - தாமரைத்தேன், பரல்நிலம் - விதைகள் விதைக்கப்பட்டுள்ள பூமி, மருதம், தேசபுறம் - நாடடுக்கு வெளியே, பொதுமாதர் - வேசியர்; நடந்தாள் - நடந்தவளாகிய பணிப்பெண, வினையாலணையும் பெயர்,எழுவாய்; நடந்தாள் - அயர்வாலே பொருந்தி வதிந்தாள எனஇயையும்.

48. தாசி - பணிப்பெண், தெய்வதாசியா - வேசியா. கூண்டு- கூடி.; தேசின் - ஒளிமிக்க; அருண - சூரியனுடைய; கிரண - கதிர்போன்ற; வண்ண - அழகிய; ஞிமிறு - வண்டு; குமுறும் - ஒலிக்கும்; கோதைமார் - பூமாலையனைய மகளிர்; வினவா - கேடக.

"எனது சுதன்;ஐ யனைஇழந்தோன்;
இயல்பா தலையற் றோன்"எனவே
வனிதை பகர, விலைமாதர்
மனது விரவாது, ஐயமுடன்;
"கனக உருவம் இவள்அகட்டின்
கருப்பம் அல்"என விருப்புற்று,
பனக சயனன் எனஉவந்து,
பார்ப்பார்; கரத்தில் ஏற்பாரால். 49

பசும்பொற் சிலையோ? அழகியசெம்
பவள மணியோ? பணியோ?பொன்
தசும்பில் பொதிந்த தெள்ளமுதோ?
சசியோ? சிவந்த இளங்கதிரோ?
விசும்பிற் பொலிந்த மினல்திரட்டோ?
வியந்தோர் சீவ ரத்தினமோ?
வசும்பொற் புடைய வேந்தர்சிகா-
மணியோ?" எனக்கண் மணியில்வைப்பார். 50

வேந்தர் மகுடம் பரித்தருளும்
விந்தப் பதமும், மேலாய
சேந்த கரமும், கிரணமுடி
சுமக்கும் சிரமும், அருள்விழியும்,
சாந்த குணமும், அமுதொழுகும்
தரள நகையும், முருக்குஇதழும்,
போந்த அவய வத்துஅழகின்
பொலிவும் நோக்கி மிகமகிழ்வார். 51

"வாடின் முருகுஆர் செழுமலரோ?
வண்டே அருந்தாச் செழுந்தேனோ?
தேடற்கு அரிய திரவியமோ?
சிந்தா மணியோ? சஞ்சீவியோ?

---

49. வனிதை - பெண், இங்கு தாதி, சுனக் உருவம் - (குழந்தையின்) பொள்வாடிவம். அகட்டின் - வயிற்றின்; பனக சயனன் - அரவணை கொணடோன், இங்கு பாலகிருஷ்ணனை நினைந்தது.

50. தசும்பு - குடம், சசி - சந்திரன், விசும்பு - ஆகாயம்; வியந்தோர் - சிறந்த பொருள்கள் யாவை என உணர்ந்து பாராட்டவல்ல பெரியோர், சீவரத்தினம - இலக்கணங்கள் அனைத்தும் அமையப்பெறற அரசயானை, அனைத்தையும் படைக்கவல்ல சிற்பி,கற்பிற் சிறந்த இளம் அழகி, போர்த்துறையில சாத்திர அறிவும் ஆற்றலும் பெறற தளபதி, நோமையும் திறமையுமகொண்ட பொகவிஷ அதிகாரி, எதிர்காலத்தில தோன்றப் போகும தீமைகளை முன்னரே அறிந்துகூறுடி நிமித்திகன, இலக்கணங்களால் நிரமபபபெற்ற நல்வகுதிரை ஆகிய ஏழும் சீவரதனிம எனப்படும் இவை மிகமிக அரியவை. இகழுவியும அததகையதே என்பது கருதது, வசும பொற்பு - தேவர்களுகுரிய அழகு, எதுதை நோக்கி மெலிநதது.

51. விந்த - தாமரை போன்ற, அரவிந்த என்பதன முதற்குறை,சேந்த - சிவநத

ஒடும் கனல்இல் இளம்கதிரோ,
உயரும் களங்கம் அகல்மதியோ,
பீடில் அதிகத் தெள்ளமுதோ?
பிள்ளைப் பெருமா னோ"என்பார். 52

மாற்றி மாற்றி நடக்கணிகை
மார்கள் எடுப்பார் மோந்துகொள்வார்;
மாற்றில் அடங்காப் பசுங்கனக
வரையென் உபய வரையில்வைப்பர்;
பூத்த கமல முகத்தின்முக
பொதிவர்; விழியிற் பொதிவர்அழாது
ஏத்தி யேற்றிக் குயிலிசைத்தால்
இசைப்பர் பகல்முற்று இதுதொழிலாய். 53

அயல்சூழ் முலைத்தா தியரிடத்தில்
அமுதம் ஊட்டி முளையைவளர்த்து,(இவ்)
இயல்பாயத் தாதி அகடும்வளர்த்
திருந்தாள் திங்கள் இருமூன்றாய்;
அயனார் விதித்த வழிதொழும்பி
அயனந் தனில்மாய்ந் தனள்;அதற்பின்
க்யல்மான் விழியார் பொதுமாதர்
களிப்பாய்ப் பொதுவே பினில்வளர்த்தார். 54

பயில்தால் சிறுதேர் முதல்இறுவாய்ப்
பருவம் ஒருபது இயல்புகண்டு,
மயிலே அனைய சாயல்பொது
மாதர் மனைக்குஓர் தினமாக,
எயில்போல் காத்து வளர்த்திடும்நாள்,
இராசர் மதலைக் கிடும்பணிகள்
வெயிலே திகழ்பொன் மணிப்பணியால்
மேனி மறைத்து மிகமகிழ்வார். 55

---

52. வரடின் - பூஞ்சோலையின், வாடியின் ஏன்பதன் கெடுத்தல்விகாரம்; ஒடும் - வளர்கின்ற; கனல் இல - சூடற்ற, களங்கம்அகலும் உயர் மதியோ என மாறுக; பீடில் அதிக - சிறப்பினால்உயாந்த

53. நடக்கணிகை - நாடடியமாடும் வேசிகள்; மாற்றில் அடங்கா - இத்தனை மாற்று என உரைக்க முடியாத, கனகவரை என் - பொன்மலை போன்ற; உபய வரை - இருநகில்கள், உவம ஆகுபெயர்; தால - தாலாட்டு.

54. முளை - குழந்தை, அகடும் வளர்த்திருந்தாள் - பிழைப்பு, நடத்திக் கொண்டு இருந்தாள், அயனம்தனில் - ஆறுமாதத்தில்.

55. தால்முதல் சிறு தேர் இறுவாய் என்க, நீரல், நிறை, இவை பிள்ளைத்தமிழப் பிரபந்தத்திற்குரிய பருவங்கள்; இராசர் மதலை - மன்னர்களின் குழந்தைகள்; வெயில் - ஒளி.

வன்னம் நான்கில் உறுசிறிய
மகாரும், பலவர் ணத்தில்உறும்
தென்னு லாய சிறார்களுடன்
சேர்ந்து களித்து விளையாடி,
பொன்னு லாம்கிண் கிணிசதங்கை
புலம்ப நடைகொண்டு இளம்பிறைபோல்
கன்னல் மொழிவே சியர்முறையே
கனக மனைபுக்கு இனிதுவை 56

இவ்வா றாக நிகழ்நாளில்,
இளஞ்செங் கிரணப் பரிதிஎன்அச்
செவ்வாய்க் குதலை மொழிமழலைச்
சேய்க்கு வயதுஐந் தேபொலிந்த;
அவ்வா னியத்தில் ப்லதெருவுள்
ஆட லோடும் விளையாடும்
பவ்ஆர் கலிச்சங் கின்நாப்பண்
பாஞ்ச சன்யம் நிகர்உறவே 57

நனிதா ரகையின் பெருங்குழுவின்
நள்ளா எழும்வெண் மதியம்என,
கனிவாய் மொழிப்பா லகருடனே
கலந்து களித்து விளையாடி,
மனமே கருதும் படிதொலைபோய்
மகார்கள் தமைவிட் டேபிரிந்து,
தனிஓர் அகரத் திடைஉலவச்
சார்ந்த மறையோர் எதிர்நோக்கா, 58

"கனலா அருணக் கதிர்புவியில்
கழல்கள் சிவப்ப நடப்பதுகொல்?"
எனஆ ரணர்கள் எடுத்துவந்து,
இயல்பாய் ஐயத் தோடுஉணர்ந்து,

---

56. வன்னம் நான்கு - அந்தணர் முதலியன; பல வர்ணத்தில் - இவற்றின் கலப்பால்; தென்னுலாய - அழகிய.

57. ஆனியம - பருவம்; பவ் - கடலில்; ஆர் - பொருந்தியுள்ள; கலி - ஒலிக்கும் தன்மையுள்ள; நாபபண் - நடுவே.

58. தாரகை - விண்மீன்கள், நள்ளா - நடுவே, அகரத்திடை - அந்தணர் குடிமிருப்பில்

முனிவோர் இருக்கும் தருணமதில்
முரண்நன் நகரிக் கரசன்மந்த்ரி
நனிநால் வகைச்சே னைகள்சூழ
நடந்தான் குழவி தனைநோக்கா, 59

"மன்னர் மரபின் இளங்குழவி
மறையோர் உழையில் வைகல்என்கொல்?"
என்ன நினைந்து, "மறையோரே!
இச்சேய் உமக்குஏது?" எனவினவ,
தன்னந் தனியே மழலைஇவண்
தனில்வந் தடையக் கண்டெடுத்தே,
உன்னும் உறுப்பின் இலக்கணம்பார்த்து
உணர்ந்தோம்" என,மற்று அவன்உரைப்பான். 60

"குருளை உறுப்பின் இலக்கணத்தின்
குறிஏது? எனக்குக் கூறும்;" என்ன,
"வருடம் பதின்மூன் றதின்மேல்இவ்
வையம் அனைத்தும் புரப்பன்;" என்றார்;
"திருடர் நீங்கள் பழுதுஉரைக்கத்
திடுக்கம் அகன்றோர்" எனச்சினந்து,
உருமும் திகைக்க வசையுரைத்தான்
உறுதுற் புத்தி யுடையோனே. 61

விழிகள் அழல்கள் சொரிதரவே
வெகுண்டு, நகைத்து, விரைந்துஏகி
பழிசெய் வதற்குஅஞ் சாதகொடும்
பதகர் கோசங் கிகள்மறையோர்
வழுவில் சிவிகைப் புறமாக
வருவோர்க்கு உறுதி மந்தணம்ஆம்
மொழிகள் உரைத்து, "குழவிஉயிர்
முருக்கிக் குறிகொண்டு அணுகும்" என்றான். 62

---

59. கனலா - கூடாத; அருணக்கதிர் - சூரியனின் சிவப்புக்கிரணம்; ஆரணர் - வேதியர்; நோக்கா - நோக்கி.

60. உழை - இடம், வீடு; இவண்தனில் - இவ்விடத்தில, உன்னும் - வல்லுநர்களால் ஆராயபபெறுகின்ற, உறுப்பின் இலக்கணம் - சாமுத்திரிகாலட்சணம்.

61. குருளை - குழந்தை, மரபு வழுவமைதியாகக் கொள்க; பழுது - பொய்; திடுக்கம் - அச்சம்; உருமும் - இடியும் கூட.

62. கோசகுகிகள் - இடையா, பசுவோடு தொடர்புடையவர்; மந்தணம் - இரகசியம; குறி - (கொன்றதற்கான ஓர்) அடையாளம்.

பதகன் அமைச்சன் துட்டபுத்தி
பகர்ந்த படியே பழிபுரியச்
சதிசெய் கோசங் கிகள்கரவில்
தனயற் காணத் தோணநின்றார்
உதயன் அடையும் பருவம்என
உபயப் பிறப்போர் மனைசெல்என
மதலை தனைவிட்டு, அதன்பிறகு ஓர்
மறையோன் தனையும் துணைவிடுத்தார். 63

தனித்த குழந்தை கால்பதறித்
தரியாது ஓடி, அழுதுஅலறி
இனத்தைப் பிரிந்த மான்போல
இரங்கி ஓடும் ஏல்வையினில்
அநித்த மாய்அத் தினமுறைத்தே
வடியாள் சுதனை வர்கா.ணாள்
பனித்த விழியோடு அலறிஉள
பரத்தை யர்கள்இல் பார்த்துஉழன்றாள் 64

இரவி புகுந்தும் காணாம
லேநெஞ்சு இரங்கி யேதேடும்
பொருட்பெண் ணுடனே மற்றுமஉள
பொதுமா தர்களும் உயிர்போன
உருவம் நிகர்த்துத் தனைமறந்து
உணர்வு தெளிந்து, உடலபதறி,
தெருவில் முழுதும் பரந்துஇரைந்து,
தேடிக் கூவித் திரியலுற்றார். 65

---

63. சுரவில் - இரகசியமாக; தோணநின்றார் - தெளிவாக விளங்கவில்லை. சுணக்க 69 ஆம் பாடல்; உதயன் அடையும் பருவம் - சூரியன மறையும் நேரம்; உபயப்பிறப்போர் - இருபிறப்பாளர்.

64. ஏல்வையினில் - நேரத்தில்; அநித்தமாய - எனறுமே இல்லாதபடி, நித்தம என்பதற்கு எதிர்ப்பதமாக அரிய ஆட்சிமுறை - இவனைக் கவனிதது கொள்ளும நாள முறையில் உள்ள

65. இரவி புகுந்தும் - சூரியன் உதித்தும; பொருட்பெண் - விலைமகள.

"மகனே! அமுதே! எமதுஇருகண்
மணியே! பணியே!" எனக்கூவி
"நிகழ்சா கையிலும் பிரியாத
நிதியே! மதியே!" எனப்புலம்பித்
தகையாய் அலைந்து திரிதேவ
தாசி யர்கள்கண் தனில்தோன்றத்
திகழ்சீர் இளவெண் பிறைநிகர்ப்பச்
சிறுவன் தெருவுக்கு எதிர்ஆனான். 66

கண்ணீர்த் தரளச் சரமாரி
கதறிச் சொரிந்து வரும்சேயைத்
தெண்ணீர் இரைச்ச லொடுதேடும்
தேவ தாசி யர்கள்நோக்கிப்
புண்ணே அனைய மனம்தேறிப்
புணர்தேவ தத்தை மிகப்புகழ்ந்து
பண்ஈர் மொழியார் இளமழலைப்
பயம்தீர்த்து உவகை யுடன்நடந்தார். 67

திட்டி கழித்துப் பலதானம்
செய்து, ப்ரார்த்த னைகள்முடித்து,
வட்டில் அமிர்த அனம்கொடுத்து,
மஞ்சந் தனிற்கண் வளரவைத்து,
பொட்டிப் பொருள்ஈ மணவனுடன்
போகம் விரும்பிப் புணர்ந்துஉறங்கா,
துட்ட ந் திரிவிடுத்த
துடுகர் தொழில்மேல் எடுத்துரைப்பாம். 68

கர்ந்து, பதகர் சுதனுடனே
காணத். தோணத் தொடர்ந்துசென்று(அங்கு)
இரங்கி வருநது கணிகைமனை
யிடத்திற் புகுந்த நிலைஅறிந்தே.

---

66. சாகை - சாவு.

67. பண் - இசையைப் போல; ஈர் - சுவருகின்ற.

68. திட்டி கழிதது - சண்ணேறு நீக்கி; பொட்டிபபொருள - பெடடியில் வைப்பதற்குரிய பணம், பேச்சுவழக்கு; மணவன் - மாப்பிள்ளை; உறஙகா - தூங்க. துடுக்கர் - தீயவர்.

அரங்கில் ஒளித்து, நள்ளிருளில்
அயர்தி உறக்கம் தனைஉணர்ந்து,
பொருந்து சுதனைத் துயிலுடனே
பொருக்கென்று எடுத்து மனைநீங்கா, 69

மனைவிட்டு அகன்றுஎண் மரும்விரைந்துஓர்
வனத்தில் அடைந்து மழலையைவைத்து
அனத்தத் துடனே வாள்உருவி,
அட்ட பாலும் நெருங்கிநின்று,
துனிஅத் துடனே அசிகுலுக்கும்
தொனிஅத் தாலே துயில்நீங்கிக்
கனவைத் தணந்து சுதன்விழித்து
கலங்கிப் பதறிக் கதறலுற்றான். 70

வெருண்டு வெருண்டு திகைஅனைத்தும்
விழித்துஓர் உதவி காணாிதாய்
அருண்டு, "மதமா தெருண்டுஅழைத்த
ஆதி மூலம் எனும்முகுந்தா!
மருண்ட, "எனக்கித் தருணம்இதில்
மாலே தஞ்சம் நினைஅலதுஆர்?
இருண்ட புயல்வண் ணா!கண்ணா!
எளியேன் உனது பரம்பரமே; 71

அரி!தே வகிநந் தா!முகுந்தா!
அமலா! விமலா! கமலவிழிக்
கரியோய்! நெடியோய்! திருமார்பா!
கத்தா! சுத்தா! காகுத்தா!
அருள்மா! தவனே! சீதரனே!
அனகா! கனகா சுரன்வென்றோய்!
எருக்கல் காப்பாய்; பரம்பரம்யான்;
எளியேன் எளியேன் ஏதுஇலேன்." 72

---

69. தோண - முன் 63 ஆம் பாடலிலும் இச்சொல் பயின்றது,பொருள் விளங்கவில்லை, அயர்தி - சோர்வு

70. அனத்தம் - தீய நினைவு , அட்ட பாலும் - எட்டுத்திசையிலும்; துனி - சினம்; அசி - வாள்; தொனி - ஒலி.

71. மத மா - யானை, சுசேந்திரன், தெருண்டு - அறிவில் தெளிந்து;

72. சுரியோய - நீலநிறனே; காகுத்தா - இராமபிரானே; சுனகாசுரன் - இரணியன், எருக்கல் - வெட்டப்படுதலை.

"என்றுஓ தியது குழவிஎன
இசைக்க, கிரீடி அதிசயித்து,
"நன்றே! ஐந்து வயதுஇளஞ்சூன்
நனவால் பெருமான் றனையுணர்ந்து(அங்கு)
அன்றுஆ யிரநா மம்பகர
அதற்கு வருமோ? அருளுதிர்நீர்;"
என்றான்; யாழ்நா ரதமுனிவன்,
"இனிக்கேள்; கிரிடி!"என இசைப்பான். 73

இப்பா லகன்அத் தாசியிடம்
இருந்து வளர்ஐந் தாம்மாதம்,
மெய்ப்பா ரிடத்தில் விந்தகிரி
மீதில் தவம்செய் சடபரிதர்
துப்பார் சாளிக் கிராமம்மிகு
தொகையாய் வைத்துப் பூசைசெய்வார்;
குப்பூ வுலகில் உயர்அனந்த
கோபா லகர்ஒன்று அதில் உளதே 74

உளது கனக வரிபொருந்தி,
ஒளிர்சட் கோணச் சக்கரமாய்,
அளவு தூது வளங்காயாய்,
அனந்த கோபா லகர்இருப்பார்;
நளிர்கொள் சாளக் கிராமமதை
நாளும் பூசித்து உவப்பாக
மிளிர்பொற் பேழை யினில்பொதிந்து,
விசித்துப் பேணி வருநாளில், 75

அருள்சேர் சடப ரிதர்கனவில்
அடைவாய் அனந்த கோபாலர்
விரவி, "அருள்வாம் நீஉதவும்
விதமாம் பொருள்கள் விரும்பில்நீ;

---

73. சூன்- சூலு, மகன்.

74. துப்பார்-மேன்மை பொருந்திய, சாளக்கிராமம் - கண்டகி நதியில் கிடைக்கும் ஒரு வகைக்கல்; இது திருமாவின் வடிவாகக் கருதப்படுகிறது, இது பல வகைப்படும், சாளக்கிராம பரீட்சை என்றே ஒரு தனிக்கலை வழக்கில் உள்ளது, வைணவத்தில் இதன்நிலை மிக உயர்ந்தது.

75. கனக வரி - (அனந்த கோபால மூர்த்தமான சாளக்கிராமத்தில்) பொன்னிறக் கோடு, ஸ்வர்ண ரேகை என்பர், சட்கோணம் அறு - கோணம், நளிர் - பெருமை

வருணம் உகுத்து, மலர்தூவி
மருஆர் கந்த மூலம்அளித்து
உரிய பேழை யினில்அடைப்பது
உனக்கே பிரிசம் எனக்குஅதுஏன்? 76

ததிபால் நவநீ தம்கிருதம்
தமிலே எனக்கு மனப்பிரியம்;
பொதுவோர் வசத்தில் இப்போதே
பொருத்தி உதவா திருந்தாயேல்,
முதியோய் அக்கம் கெடுத்திடுவேன்;
முனியே!" என்ன மொழிந்திடவும்,
"இதுஏது?" என்னக் கனவுஒழிந்து,
இடைந்தே, வைக றையிலெழுந்தே, 77

புனிதம் உறும்பெட் டியில்அமைந்த
புகழ்சேர் அனந்த கோபாலர்
தனையே எடுத்துத் தயிர்பால்நெய்
தட்டாது யதேஷ்டம உறுமபொதுவி
மனைசேர்ந்து அளித்து, "இழுதுஅளைபால்
மருவ இவைவைத்து உவப்பாயேல்
நனிசேர் வாழ்வு பெருகிமிக
நன்றாய் இருப்பை;" எனநவின்றார். 78

அந்த மொழியை விசுவாச
மாகத் தொறுவி மனதிருத்தி,
சந்த முனிவன் உரைப்படியே
ததிபால் நவநீ தம்கிருதத்து

---

76. வருணம - தண்ணீர், மருஆர் - வாசனை மிக்க, கந்தமூலம் - கிழங்கு. இது சுனிகள் காயகளுகும உபலடசனம, பிரிசம - விருபபமானது.

77. ததி - தயிர்; நவநீதம - வெணணெய , கிருதம் - நெய், பொதுவோர் - முல்லைநிலததவர், அக்கம் - கணகள, இடைநதே - வருந்தி.

78. தட்டாது - குறைவின்றி , யதேஷடம - எவவளவு விருபபமோ அவவளவு, பொதுவி -ஆயசசி இழுது - நெய, அளை- வெணணெய

உந்த அமைத்து, பால் தசும்பின்
உள்ளிட்டு, ஊரில் பகர்நாளில்
நந்தும் தாதி இச்சேய்க்கு
நயந்து பால்கொண்டு அருத்திவைப்பாள். 79

"ஒருபேர் அனந்த கோபாலர்
உண்டுஇங்கு எமக்கு உதவி"என்றே,
அருள்சேர் ஆய்ச்சி அடிக்கடிசொற்று,
அதன்மேல் விலைப்பால் கூறிவிற்பாள்;
தெரிவாம் சுதனைக் காண்தோறும்
சித்தம் குளிர்ந்து பயசுஅளிப்பாள்;
வருபோது எல்லாம் பால்கொடுத்து
வரும்நா ளதனில் ஓர்நாளில், 80

மாதா முகம்பார்த்து, உரைபகர்ந்து,
வரிக்கண் ஆய்ச்சி முகவையினால்
கோதை சேய்க்கும் கீர்மொண்டு
கொடுக்கும் அளவில், கோபாலர்
சீத முடைய பயசுடனே
சேர்ந்தே வாயுள் புகுந்திடவே,
பேதம் அகலப் பாலன்நுங்க,
இயல்பாய் அகட்டி னிடைஅமைந்தார். 81

அந்நாள் முதலாய் அகட்டினிட
மாக அமைந்த படியாலே
இந்நாள் அனந்த நாமமுமே
இசைந்த வாக்கில் அப்பாலன்

---

80. விசுவாசமாக - நமபிக்கையோடு, தொறுவி - இடைச்சி, பால்தசும்பு - பாற்குடம், பகர்நாளில் - விறகும்போது.

80 ஒரு பேர் - ஒப்பறறவரும் பெரியவரும ஆகிய, பயசு - பால்.

81. முசுவை - மொணடு ஊற்றும அசுப்பை, கீர் - பால், சீதமுடைய - குளிர்ந்த, நுங்க - விழுங்க, அகட்டினிடை - வயிற்றில

பொன்னாம் வாயை விரித்துஅலறும்
போதே பஞ்சா யுதத்துடனே
மன்னா நடனத் தொழில்புரிந்த
மாயோன் தனைக்கண் டார்தொறுவோர் 82

அனந்த கோடி கதிர்ப்பிரபை
யாக விழியால் கண்டவுடன்,
மனங்கள் கலங்கி, திடுக்கமுற்று,
மயக்கம் தெளிந்து, மழலையின்மேல்
சினங்கள் தவிர்ந்து, கிருபையுற்று,
செகுக்கச் சித்தம் பொருந்தாமல்,
கனங்க ளுடனே யோசனையாய்க்
கருதி எண்மர் உளம்கனிந்தே, 83

கொல்லாது ஒழிந்துஅவ் இடம்அகற்றி,
குறித்துஓர் வனத்தி னிடம்,சரியில்,
பொல்லார் அமைத்து, அடையாளம்
பொருந்தக் காணக் கால்புன்விரல்
வில்லார் நகத்தி னுடன்அரிந்து,
மேவி யொருவர் காணாமல்
பல்லார் வெறுக்கும் துட்டபுத்தி
பதகன் விழிக்குக் காட்டினரே. 84

"கரவில் வதைத்தோம்" எனஉரைக்கும்
கட்டு மொழியும், அடையாள
விரலும் நோக்கி மனம்மகிழ்ந்து
வெஞ்சம் தவிழ்த்தான் நஞ்சுஅனையான்;
வரைவின் முளைப்பார் தமைப்புதைக்க
மன்மவைத் தவன்நேர் அவன்இருப்ப,
குரவர் புகழ்குந் தளதேசக்
குறும்பன் புலிந்தன் எனும்உரவோன், 85

---

82. இந்நாள் - (கொலையாளிகளால் சூழப்பெற்ற) இத்தினத்தில், பஞ்சாயுதம - திருமாலின் ஐந்து படைக்கலங்கள்; மன்னா - மன்னிய, வந்து சேர்ந்த 83. கணங்கள் - கூட்டம்;

84. சரியில் - வழியில், புன்விரல் - சிறுவிரல், வில்லார் - ஒளிமிக்க, துட்டபுத்தி என அழைக்கப்பெறும் பதகன் என்க.

85. கட்டு மொழி - பொய்யுரை, வெஞ்சம் - சினம், தவிழ்த்தான் - தவிர்த்தான், பேச்சுமொழி; வரைவின் - தலையெழுத்தின்படி, முளைப்பார்தமை - அரும்பி வளர்ந்து வெளிப்பட இருப்போரை; குறும்பன் - சிற்றரசன். (குந்தள தேசததிற்குக் கடடுப்பட்டவன்.)

அரிய நகர்சந் திரரேகை
ஆளும் புலிந்தன் எனும்அரட்டன்
பொருவில் வேட்டை கொளவனத்தில்
புக்கான்; புதல்வன் தனித்திருக்க
வரிகொள் விழியால் கண்டவுடன்,
மகிழ்ந்து எடுத்து இரதத்துஏற்றி,
இரவன் புதைபொன் எடுத்ததுஎன
இருகண் குருடர்க்கு இசைந்ததுஒத்தான். 86

(அடுத்த பாடல் சுவடியில் எழுதப்பெறவில்லை)

"தனையன் தனக்குஏங் கியவறியேன்
தனக்கே பகவன் அளித்தது"என
மனது மகிழ்ந்து மன்னனவன்
மலர்க்கண் பொதிந்துஉச் சியைமோந்து,
தனது நகர்சேர்ந்து இல்லவளும்
தானும் களிப்புற் றேவளர்த்தார்;
கனக மணிமா டத்துள்வைத்தார்
கதிரும் விதுவும் காணரிதாய். 88

கல்வி நிலையும், படைப்பயிற்பும்,
கரிமா இரதம் ஊர்தொழிலும்,
வல்வில் தொழிலும், பலபடையின்
வயண முறையும், மற்றுளதும்
நல்வித் தைகளால் ஒப்புரைக்க
நாளும் அரிதாய்த் திறம்பொருந்தி
வெல்விற் பனசந்திர காசன்
வீரன் எனும்பேர் விளங்கியதே. 89

---

86. அரட்டன் - சிற்றரசன், இரவன் - பிச்சைக்காரன், புதைபொன்- புதைத்துவைக்கப்பெற்ற பொருள், வினைத்தொகை. 88 விது - சந்திரன்.

89. படைப்பயிற்பு - ஆயுதப்பயிற்சி; கரிமா இரதம் ஊர்தொழில் - யானையேற்றம், குதிரையேற்றம், தேரோட்டுதல்; படைபபயிற்பில் வில்லும் அடங்குமெனினும் சிறப்பும், தலைமையும் பற்றித்தனியேயும் கூறப்பட்டது, முனிவர் வந்தனர் அகத்தியரும் வந்தார்என்புழிப்போல, படையின் வயணம் என்றது சர்ப்பவ்யூகம், கருடவயூகம், சக்ரவ்யூகம் போன்ற படைவகைப்பு முறைகளை;மற்றுளது என்பது போருகாவ சாலம், துணை, களம்முதலியவறறைத் தெளியும் கலை போன்றனவறறை, இனிதிர்வாகத்திற்குரிய கலைகளை எனினுமாம்.

விறல்மே வியசந் திரகாசன்
வேளிர் கிராத குலப்புலிந்தன்
திறல்சேர் குமரன் எனப்பேராய்த்
தேசம் அறியப் புகழ்ஓங்க,
மறவோர் சிங்கம் எனப்பேராய்
வயது பனிரண்டு ஆகியநாள்
அறிவோன் வேட்டை புரியஉனி,
"ஐயா! விடைதந் தருள்தி"என்றான். 90

"அருள்க விடை"என்று அடிபணிந்த
அழகுக்கு அழகா கியமகனைத்
தெருளி னுடனே கரத்துஏந்தி,
"செல்வக் களிறே!" எனவாழ்த்தி,
"பரி,தேர், பதாதி, பகட்டுடனே
பரிந்தே செல்"என்று அவன் அனுப்ப,
விரிவாம் பஞ்ச வாத்தியங்கள்
மிகவும் முழங்கத் தேர்விடுத்தான். 91

சலதித் தளங்கள் புறம்சூழத்
தரணி பேர ரதம்நடத்தி,
அலகில் நெருங்கும் கான்வேட்டை
ஆடி, அரியின் சமராடி,
பலரும் நடுங்க வெற்றிகொண்டு,
பகைத்தோர் பரவித் திறைகொடுக்க,
வலிய வாகைத் தார்புனைந்து,
மன்னர் வணங்க வயம்புரிந்தான். 92

இந்த விதமாய்ப் பலதேசத்து
இறைவர் வணங்கித் திறைஅளிக்கச்
சந்தம் உறுகுந் தளதேசம்
தான்ஒன்று அலதுஎத் தேசமுமே

---

90. வேளிர் - இங்கு கிற்றரசர் என்ற பொருளில நின்றது. கிராதகுலம் - வேடர் இனம். அறிவோன் - அறிஞனாகிய சந்திரகாசன்;உனி - எண்ணி.

91. பகட்டுடனே - பொதி எருதுகளுடன்.

92. சலதி - கடல் போன்ற; தரணி பேர - நிலம் நடுங்க; அரியின் - சிங்கத்தைப் போல. வயம் - வெற்றி.

சொந்தப் படுத்திக் குறும்புஅடக்கித்
தொகுபார் அடங்க ஒருகுடைக்கீழ்
உந்தி மருவ, பேரரசாய்
ஒருகோல் ஒச்சி மகிழ்ந்திருந்தான். 93

கொந்து கமழ்குந் தளதேசக்
கோமா னாகப் புரந்தருளும்
சந்த்ர சேக ரற்கும்அவன்
தலைமந் திரியாம் துட்டபுத்தி,
பிந்தும் அமைச்சர், படைத்தலைவர்,
பிரபு வான பேர்களுக்கும்
சிந்தை மகிழ்ந்துஆ யனம்தோறும்
திறைஈந் திடுவான் புலிந்தனவன். 94

அந்த விதமாய் முறைமுறையாய்
ஆண்டுக்கு ஆண்டு அதிகமதாய்ச்
சிந்தை மகிழ்ந்து நவமான
திறைகள் கொடுத்தே அனுப்புவித்தான்;
பிந்தும் முறையில் பரி,கரி,தேர்,
பெருக நிதிகள், இரத்தினங்கள்,
சந்த முறம்பல் விதப்பணிகள்
தலைவன் தனக்கே அனுப்புவித்தான். 95

"இந்த விதமாய்த் திறைஅளித்தோன்
எவன்"என்று அரசன் வினவுதலும்,
"சந்தப் புலிந்தன் அனுப்புவித்தான்
சகல பொருளும் திறை"எனவே,
"நந்தம் குறும்பன் இவன்றனக்குஇந்
நவமாம் பொருள்ஏ து"எனக்கேட்க,
மந்த்ரி மார்கள் அரசனுக்கே
வகையாய் விவரம் எடுத்துரைப்பார் 96

---

93. குறும்பு - சிற்றரசர்கள்; ஒரு கோல் - ஒப்பற்ற செங்கோல்.

94. கொந்து - மலர்க்கொத்து; பிரபு - சமூகத்தலைவர்கள்; ஆயனம் - வருடம்.

"மன்னா! கேள்;அப் புலிந்தனுக்கு
மகவாம் சந்த்ர காசன்எனும்
பொன்னாம் புதல்வன் தலையெடுத்து,
புவியில் அரசர் பல்தளமும்
சின்னா பின்னம் படப்பொருது,
திறைகள் அளித்துக் கழல்வணங்க,
தன்ஆண் மையினை விளக்குவித்தான்;
சகல வேந்தும் வசமானார். 97

வசமாய்ச் சகல புரவலரும்
வணங்கித் திறைகள் அளிப்பதனால்,
நிசமாய் உயர்நற் பொருள்கள்எலாம்
நிறைதல் உடையான் தனக்கு;எனவே
பிசகாது அளித்தான்" எனஉரைக்கப்
பெருமான் உவந்து பிரியமுற்றான்;
நசமாம் துட்ட புத்தி என்போன்
நாட்டம் சிவந்து மனைக்கேகா, 98

ஏகித் தனக்குக் கொடுத்தபொருள்
எல்லாம் நோக்கி, மிகத்திகைத்து,
மோகித்து, "இவனுக்கு ஏதுஇதுஎலாம்?
முளைஏது இலனுக் கே?சேய்க்குத்
தாகித் திருந்த மலடனுக்குத்
தனையன் வரும்வாறு அறிதும்"என்று
போகி தரணி பன்தாளைப்
புரிந்து, வணங்கி, புகலலுற்றான் 99

மன்னா! கதலி வனந்தனக்கோர்
மதவா ரணம்போல், புலிந்தன்மகன்
துன்னும் ரணபண் டிதவீர
சூர னாகத் தலையெடுத்தான்;

---

98. நசமாம் - பொருள் தெளிவாக விளங்கவில்லை, நாசமாம் என்பதன் திரிபோ அல்லது ஏதாவது வட்டார வழக்கோ; நாட்டம் - கண்கள்.

99. முளை ஏது - வளர்வதற்குரிய திராணி, ஏதுஇலன் - ஏதிலன்,வலியற்றவன்; தாகித்திருந்த - ஏங்கியிருந்த; வரும்வாறு - வந்தவகை, போகி - சென்று, தரணிபன் - மன்னன், சந்தரசேகரன்.

அன்ன சுதனை அனுசரித்தே
அன்பாய் நண்பு கொண்டிலமேல்,
வின்னப் படுத்து வான்நமையும்
வெகுண்டால்;" என்று விரித்துரைத்தான். 100

"வெள்ளம் வரும்முன் அணைபோல
வேண்டில் அவன்பால் அனுப்பிவைத்தால்
உள்ளம் குளிர உபசரிக்கும்
உறுதி மொழியால் நண்புகொள்வேன்;
நள்ளும் நெருப்பைச் சிறிதுஎனவே
நல்தூ சதனில் பொதிவதன்று;
புள்ளுண்டு உறங்கும் மதுமலர்த்தார்
பூண்மார் பகபூ பால!" என்றான். 101

"வாலைப் பருவம் பதினாறு
வயதாம் புலிந்தன் மகவினுக்கே;
வேலைப் புவியாள் அரசர்எலாம்
வேங்கைக்கு எதிர்மான் எனநடுங்கிக்
காலைப் பரவித் திறைஅளிக்கக்
கதிர்வே லவன்நேர் திறத்தினனாம்;
சோலைக்கு அழகாய் ஒருதுவர்க்காய்
துலங்கு வதுஎனத் துலங்குவதால், 102

புத்திக் கதிப்பான்; நன்றியுளான்;
புலிந்தன் புதல்வன் இளந்தை;அதால்
சித்தத் தினில்தான் நினைத்தபடி,
சினத்தைப் பேணா மதத்தாலே,
வித்தைத் திறத்தால் பகைக்காமுன்,
மேவி அவனை நண்புகொண்டு,
சத்திக் குமரன் அனையானைச்
சந்தித்து இளக்கு; செல்"என்றான். 103

---

100. கதலிவனம் - வாழைத் தோட்டம்; மத வாரணம் - மதம்பிடித்த யானை; ரண பண்டித - போர்க்கலைப புலவனாக, வின்னப்படுத்துவான் - சிறுமை செய்வான்; அவன் வெகுண்டால் நமையும் வின்னப்படுத்துவான் என இயையும்.

101. நள்ளும் - வளர்த்து கொண்டிருக்கும், மிகுதிப்பொருள் தரும்இடைச் சொல்லாகிய நள் இங்கு வினையாகப் பயன்படுத்தப்பட்டது; தூசு - சீலை; புள்-வண்டு.

102. வேலைப்புவி - கடலால சூழப்பட்ட உலகம்; துவர்க்காய் - பாக்குக் காய்.

103. புத்திக்கதிப்பான் - அறிவு மிக்கவன்; இளந்தை - இளவயதினன்; சத்திக்குமரன் - சத்திவேல் ஏந்திய முருகப் பெருமான்; இளக்கு - நம்பால் அன்பு உண்டாகச் செய், கனிவி-

இந்த விதம்குந் தளதேசத்து
இறைவன் உரைக்க, மனம்மகிழ்ந்து,
சிந்தை தனில்ஒன்று உரைப்பதுஒன்றாய்ச்
செப்பி, அமைச்சன் அவைநீங்கிக்
குந்தம் இபம்தேர் பாதாதி
கோடி கோடி புறம்சூழச்
சந்த்ர ரேகை நகர்நோக்கித்
தானை யுடனே செல்கின்றான். 104

பஞ்சக் கருவி இனம்முழங்க,
பரவை எனவே தளம்சூழ,
நஞ்சக் கருத்தன் கொடும்பதகன்
நரர்உம் பருக்கும் பொருந்தாதோன்
வஞ்சன் கொலைஞன் துட்டபுத்தி
மந்த்ரி ஈன மதியுடையான்
எஞ்சும் பதங்கம் சுடர்விழுங்க
எய்தும் மதிபோல் வெய்துசென்றான். 105

"பாங்கன் வரல்நன்று;" எனப்புலிந்தன்
பரிவு கூர்ந்து, பலபடைக்கும்
ஆங்கு வரும்மன் னவர்களுக்கும்
அமைச்சன் றனக்கும், சமைஅசனம்
தாங்கும் விடுதி சாலைமற்றுந்
தாழ்ச்சி யறவே விதித்தற்பின்,
ஓவ்கும் இரதம் தனில்ஏறி,
ஒருயோ சனைசென்று, எதிர்கொண்டான். 106

சேயும் தளமும் புறம்சூழச்
சென்றே புலிந்தன் அமைச்சனையே
நேய முடனே பதம்பரவி
நேயன் றனையும் பணிந்திடுஎன்றான்;

---

104. குந்தம் - குதிரை; இபம் - யானை;

105 நரர் உம்பருக்கும் - மனிதர்களுக்கும் தேவர்கட்கும்; எஞ்சும் - அதிகமான, பதங்கம் - விடடி றபூச்சிகள்; சுடர் - தீசுவாலை; மதி- அறிவு, எண்ணம்; வெய்து - தீயநினைவுடன்.

106 பாங்கன் - நண்பன், புலிநதன் தூடடபுத்தியை நணபனாகவே மதிகசிறான், பரிவு கூர்ந்து - அன்புடையவனாய்; சமை அசனம - பசகுவபபடுததப்பட உணவு, வினைதிதொசை, சாலை - காற்றாட ஒய்வெடுப்பதற்கேறற வெளி மண்டபம; தாழ்ச்சியற - குறைவற.

தூய தாதை மகிழ்ந்துஉரைத்த
சொல்லே மந்த்ரம் எனக்குறித்து,
மாயன் அனசந் திரகாசன்
மந்த்ரி சரணம் இறைஞ்சினனே 107

சரணம் பணிந்த சிலதன்அருள்
தனையன் றனையே, "தன்சேய்என்று
அரணம் போல்நின்று உனைநாளும்
ஆதி பகவன் காக்க"வென்று
வருணக் கனகத் திருமேனி
மகனுக்கு அதிக வரிசைசெய்து,
"இரண வீர பண்டிதன்நீ"
என்றே வாழ்த்தி இனிதுரைத்தே, 108

குரவன் புலிந்தன் முகம்பார்த்து,"இக்
குமரன் தனைப்பெற் றிடும்பேற்றால்
தரணி முழுதும் பெற்றனை;ஓர்
தாழ்ச்சி ஏது நினக்கு?"எனவே,
கருணை மொழிகேட்டு உளம்கூர்ந்து,
"கர்த்தா அருளும் நுமைப்போல
உரிய பெரியோர் தயவாலும
உண்டாச்சு எனக்குஇப் புதல்வன்"என்றான். 109

"நலது, நலதுஉன் குணம்போல
நம்மை யுடையான் அளித்தது"என்று
சலதித் தளங்கள் புடைசூழ,
தனது நகருக்கு அழைத்தேகி,
இலகு விடுதி தனில்இருத்தி,
இனிய நளபா கமதாக-
வலிய அமைச்சன் முதலாக
வந்தோர் தமக்கும் விருந்தளித்தே, 110

---

107 சேய் - மகன். நேயன் - புதல்வன்; மாயன் அன - திருமாலைப போன்ற

108. சிலதன் - நண்பன்; ஆதிபகவன தனசேய் என்று காக்க எனவாழ்த்தியதால தீமைவரும் என்பது குறிபபால உணாத்தப படடதுடன் அதன் அளவும இறையருள் கொணடே நிக்ரபப வேணடியஅளவு இருககும என்பதும் பெறப்பட்டது; வருண - நிறமமிக்க.

109. கர்த்தா - இறைவன். 110 நமமையுடையான் - நம்பிரான், இறைவன்

எவர்க்கும் மகிழ்ச்சி தழைத்திடவே
இந்த்ர போச னமதாகத்
தவக்கம் அறவே கொடுத்துஅதற்பின்,
தலைமந் திரிக்கு நடைகூலி
உவப்பின் பதகா ணிக்கைஎன
உபய நிதிகள் நவமணிகள்
குவித்தே, உபசா ரங்கள்எனும்
குளிர்சொல் அமுதம் சொரிந்தனனே. 111

நண்பன் அளித்த பொருள்நோக்கி,
நயனப் பிரியம் கொடுகவர்ந்து,
தண்பன் மொழிப்பா டலின்அமிர்தம்
தனது செவிக்கு விருந்தருத்தித்
தெண்பின் இருந்தான்; அத்திகிரி
சென்றான் கதிரோன்;தி மிரம்உறப்
பண்பின் உயரும் பலதீபம்
பகல்போல் விளங்கப் பாவித்தான். 112

இரவும் பரிவுஉற்று அனம்அருந்தி
ஏமக் கிரண மஞ்சமதில்
விரவி அமைச்சன், "துயில்புரிய
வேணும்; நீயும் நின்சேயும்
கருதி மனையில் ஏகும்"எனக்
கடிதில் அனுப்பி, காத்திருந்த
பரரும் துயில் விடைகொடுத்து,
பனிப்பூ மஞ்சந் தனில்தனித்தான். 113

சந்த்ர காச னுடன்புவிந்தன்
தானும் மனையில் துயில்புரிந்தார்;
இந்த உலகில் உளஉயிர்கள்
எல்லாம் துயிலப் பொல்லாத

---

111. தவக்கம் அற - தடையில்லாமல், உபயம் - கையுறை.

112. தண் - குளிர்ச்சியான; பன் - பல. இவ்அடைகள் இரண்டும்மொழி, பாடல் ஆகிய இரண்டிற்கும் பொருந்துமாறு அமைந்தது ஒரு நயம், திமிரம் - இருள், பாவித்தான் - அளித்தான்.அமைத்திருந்தான்.

113. ஏம - பொன்போல், கிரண - ஒளிவீசுகின்ற, மஞ்சம் - கட்டில், பரர் - பிறர்; பனிப்பூ - குளிர்ந்த மலர்கள் தூவபபெற்ற,தனிததான் - தனியே இருந்தான்.

மந்த்ரி தனித்துத் துயில்ஒழிந்து,
மயங்கித் தயங்கி மதிமறந்து,
"இந்தப் புதல்வன் கிடைத்ததுஇவற்கு
எவ்வாறு" எனவே வாடலுற்றான். 114

"முன்னாள் மறையோர் சொல்மொழியை
முனிந்து படிறுஎன்று இடக்காகச்
சொன்னோம்; வதைக்கக் கொடுபோன
துரவர் கோசங் கிகள்வதைக்காது,
என்னோ செய்து, விரல்அரிந்து,
எமக்குக் குறியைக் காட்டினரால்;
மன்னாங் குமரன் கால்விரலின்
வடுவும் பகலில் கண்டோமால். 115

அந்தக் குமரன் இவன்வசம்வந்-
ததும்எவ் வாறோ? அறிந்திலம்;மேல்
இந்தச் சுதனைப் பகைத்துவெல்ல
என்றால் எமக்கு முடியாது;
முந்தப் பகைநோய் பணிவிடத்தை
முடித்தும்; முடிக்கா சபிடில்கேடாம்;
எந்தப் படியும் இவன்உயிருக்கு
இறுதி வகுத்தேன் எனில்புகழ்ஏன்," 116

(வெண்டளைக் கலிப்பா)

என்றுஉள் அழன்றான்; இடைந்தான்; பரிதவித்தான்
கன்றி உயிர்ப்பெரிந்தான்; கரியுண் கனிபோன்றான்;
இன்று வதைப்பது இவனைஎவ்வாறு என்றுஎழுவான்;
நின்றுஉலவு வான்;தனியே நெட்டுயிர்ப்பிட் டேவிழுவான். 117

---

115. துரவர் - ஒற்றர், இங்கே மந்தணப் பணியாளர்; வடு - தளும்பு.

116. மூடபுத்தி சந்திரகாசனைப் பகையாகவும் நோயாகவும் கொடிய பாம்பின் நஞ்சாகவும் கருதுகிறான்

117. கரிஉண்கனி - யானை உண்ட விளாங்கனி.

நெஞ்சழன்று சோர்ந்து, நினைவற்றுப் பின்தெளிந்து,
கஞ்சமுகன் றன்னுயிரைக் காதுதற்குஓர் புத்திஉன்னி,
வஞ்சன் தனது மகனுக்குஓர் பத்திரத்தை
நஞ்சுஅனையன் தார்பொறித்தான் நந்துகொலைக்கு அஞ்சாதான். 118

"வடித்துஎழுதும் ஓலை வரிவாசித்து அச்சணமே
முடித்தலையைத் தள்ளி முடுக்கு"என்று தான்எழுதித்
தொடுத்துஅதில் முத்திரையும் தொய்விலா ஒப்பகம்இட்டுக்
கடுத்த முடங்கலினைக் கட்டியே வைத்திருந்தான். 119

மையா மினிதொலைத்து வைகறையி லேஎழுந்து
வெய்யோன் தனைவணங்கி வேடப் புலிந்தனையே
எய்யாது அருகில்அழைத்து, "என்சுதனுக்கு உற்றதுஒன்று
ஐயா! உரைக்காது அணுகினோம் உன்னிடத்தில். 120

நின்றனைக் கண்டு நெடுநாள்பின் ஏகியதால்,
நின்ற நிலைக்குவந்தேன் நின்மேல் பட்சம்உற்றே;
மன்ற சிறிய மகன்யோ சனைஅறியான்;
இன்றுஅவனுக்கு ஆம்கருமம் எல்லாம் எழுதிவைத்தேன். 121

அந்நிருபம் நின்மகன்கொண்டு, அன்பாய் எனதுசுதன்
தன்னிடத்தில் ஈந்து,அவன்இல் தான்நான்போய்ச் சேர்அளவும்
பன்னும்மதி யோசனைக்குப் பற்றானோடு ஒத்திருந்து,
நன்னிலமை யோடுஉரித்தாய் நஞ்புகொள்ள நாட்டமுற்றேன், 122

ஈதுஅலது நின்னுடன்யான் எப்படியோ, அப்படியாய்க்
காதலனுங் காதலனும் காதலுற நண்புறுதல்
ஆதரவு; மெத்தநலது; ஆகையினால் உன்மகனை
சாதமுட னேதனியாய்த் தான்ஏக ஏவு"கென, 123

---

118. சஞ்ச முகன் - தாமரை மலரைப போன்ற முகத்தையுடைய பிரமதேவன், காதுதற்கு - கொல்ல; புத்தி - தந்திரம்; பத்திரம்- கடிதம்; பொறித்தான் - எழுதினான், நந்து - நீ உயிரைக்கெடுக்கின்ற.

119. வரி - எழுத்துகள்; முருக்கு - கொல்; ஒப்பம் - கையெழுத்தையும், எண்ணும்மை தொக்கது; கடுத்த முடங்கல் - கோபங்கொண்ட கடிதம், எழுதியவனின் சினம் ஓலையின்மேல் ஏற்றப்பட்டது.

120. மை - சுரிய; யாமினி - இரவு; வெய்யோன் - சூரியன், எய்யாது- தன் சூழ்ச்சியை அவன் அறியாதவாறு.

121. நின்ற நிலைக்கு - இருந்தது இருந்தபடியே; பட்சம் - அன்பு; மன்ற - அசைநிலை.

122. நிருபம் - கடிதம்; பற்றான் - (அறிவும் அநுபவமும்) போதாதவன்; உரித்தாய் - உரிமை உடையவனாக.

123. ஆதரவு - ஒருவருக்கொருவர் துணையாவர்; சாதம் - அடையாளம், தான் இன்னார் என்பதற்கான சான்று.

"நன்று!நன்று! நன்று! நவின்றபடி யாகமகிழ்ந்து
தின்றுஅனுப்பு விப்பேன் எனச்சுதனை யேஅழைத்து
அன்றெழுதும் ஓலைதனை அங்கைதனிலே கொடுத்து,
"சென்று,அணுகி, நண்புகொள்என் சேடன்மகன் தன்னை;"என்றான். 124

வல்லரவை வாங்கி மடியில் பொதிந்ததுஎனப்
புல்லன் விரகில் பொறித்தமுடங் கல்வைத்து,
வெல்லும் மனவேக வெம்பரியின் மீதேறி,
மல்லல் பயன்தனியே மாநடத்தி, ஏகினனே. 125

மிக்க மனவேக வெம்பரியைத் தான்நடத்தி,
தொக்கின் துகட்படலம் சூரியனைத் தான்மறைக்க,
பக்க நகர்நாடு பைங்கான் வரைகடந்து,
புக்கு நகர்அயல்ஓர் பூங்கா வனத்துஇருந்தான். 126

மாவிட்டு இழிந்து,எழில்சேர் வண்பா ளிதம்விரித்து,
மேவித் துயில்புரிந்த வேலையினில், ஆயமுடன்
கோவுக் குரிய குமாரிமந்த்ரி புத்திரியும்
பூவுக்கு அவரவர்கள் பூங்கா வனத்தில்வந்தார். 127

வந்து சுனையாடி, மலர்கொய்து, அகம்மகிழ்ந்து,
சுந்தரவில் வீரன் துயில்செய் குதல்நோக்கி, .
"இந்திரனோ! சந்திரனோ! வெய்துஅழலாச் சூரியனோ
கந்தனோ! சீதரனோ! காமனோ! ஆர்கொல்?"என்றே. 128

நிற்பார்; மயலாய் நெருங்குவார்; நெட்டுயிர்ப்பார்;
"பொற்பால் இவனைநிகர் பூபர்உண்டோ பூவில்"என்பார்;
"எற்பாய்மெய் யான்இருப்பது எந்நகரோ? சொன்னம்ஒரு
நற்பேர் உருவமொடு நண்ணியதோ காவில்?"என்பார். 129

---

124. சேடன் - நண்பன்.

125 புலலன - இழிகுணத்தோன், விரகில் - சூழசியில, முடங்கல் - சுடிதம

127 பாளிதம - படடுத்துணி, ஆயம - தோழியா கூட்டம், கோ - அரசன.

128 வெயது அழலா - வெப்பருசெய்யாத

129 பொறபால - அழகில, எறபாயமெய் - ஒளிவீசுகின்ற உடல், சொன்னம் - பொன்.

"மாலைக் கிசைந்தமண வாளனையாம் நோக்குதற்குச்
சாலத் திருட்டி சகத்திரம்பெற் றோமில்"என்பார்;
"வேலைத் தரித்திடுசெவ் வேள்இவனுக்கு ஒப்புஇல்"என்பார்;
"கோலில் தெரிந்தெழுதிக் கொள்வரோ ஓவர்?"என்பார். 130

மன்னும்மையல் லாகிரியால் மாதர்கள்எல் லாம்மயங்கித்
தன்னுணர்வு அற்றே தடுமாறி நிற்பளவில்,
கன்னி அமைச்சன்மகள் காரிகையா ரைப்பார்த்தே,
"என்னினைவு? கண்டோர்கள் என்னசொல்லார் நம்மையிப்போ? 131

எல்லோரு மேவிலகி ஏகுவீர்; நான்இருந்து
மல்லாரும் மொய்ம்பன்எழில் வாய்வசனம் தான்வினவி,
நல்லான் தனைஇணக்கி, நான்அணுகு வேன்விரைந்து;
நில்லாது அகலும்"என நீங்கினார் நேரிழையார். 132

மாதர் அகன்றதன்பின் மந்த்ரிமகள் தான்நெருங்கி,
தாதுக்மழ் மார்பன் மடிதன்னில் உறுமுடங்க-
லேதவறி வீழ்ந்துஅங்கு இயல்விரிப்பி லேகிடப்பக்
கோதை துணிந்துஎடுத்துக் கொண்டு,முத்ரை நோக்கினளே. 133

"எந்தைகையின் முத்திரைஅது ஏது?"என்று தான்பிரித்து
வந்துதனி வாசகத்தை வாசித்துப் பார்ப்பளவில்
"கொந்தும் முடங்கல் கொடுவந் தவன்தலையைச்
சிந்து; குருதி சிதற" எனஇருந்த 134

வாசகத்தைக் கண்டு மதிமயங்கி மெய்மறந்து,
"பாசம்அற்ற எந்தை பதகன் பழிகார-
னேஇசுகத்தைத் தந்தே இரட்சிக்கும் வல்லவனை-
யோசதிக்க நாடுகின்றான்? ஊதாரி?" என்றுஇகழ்ந்தே, 135

---

130. திருட்டி - கண்; சகத்திரம் - ஆயிரம். ஓவர் - ஓவியர், கோல் - எழுதுகோல; சித்திரகாரர்கள் அவர்களே தமக்குப்பிடித்தமானவாறு எழிலமைந்த மேனியை வரைந்து அதற்குஉயிர்தந்து விடுவாகளோ

131 என்நினைவு - உங்களுடைய எண்ணம் யாது, என்ன சொல்லாளன்றது இழிவாகக் கருதுமாட்டாகளா என்றபடி. 132. இணக்கி - நடபுகொணடு.

133. முடங்கல் - சுடிதம், கோதை - பெண், அமைச்சன்மகள்.

134. கொந்தும் முடங்கல் - சினக்கும சுடிதம், எழுதியவனின் சீற்றமசுடிதத்தின் மேல ஏற்றப்படடது.

135. சதிக்க - வஞசனையாகக் கொல்ல

"தக்க பசும்பொன் றனக்குஇசைந்த மாமணியை
ஒக்கவைத்துக் கண்பிரிய முற்றுநோக் காதபடி,
மக்கில் மணியை மடிக்கமனம் வைத்ததும்ஏன்?
அக்கம் குருடா கினனோ?" எனஇகழ்ந்தாள். 136

"நானம் கிராதர் நகரில் பகர்வாரை
ஊனம் குணியார்கள் ஊடலாய் ஓர்ஆழி,
வானின் கதிரை அகங்கையால் மாற்றுநரை,
சேனம் நிழல்தொடர்ந்த செந்நாயை ஒத்ததுஎந்தை. 137

கருப்பை விருப்புஇருக்கைக் கண்ணில் சுடர்த்திரியின்
நெருப்பைப் பொதிந்து நெய்குஞ்சும் நீறியபோல்
அருள்புத்தி இல்லான்இவ் அண்ணல்தனைக் கோறஎண்ணல்
இருப்புத்தூ ணைச்செல் இளைக்க அரிப்பதுஒப்பாம். 138

எந்தன் தனத்துக்கு இசைந்தமணி மார்பகனை,
கந்தன் தனக்குஅதிக காட்சிதிறம் உள்ளானை,
தந்தை பழிகாரன் தான்சதிக்க வேதுணிந்தான்;
நந்தம் குலத்தணங்குஎன் நாட்டமதில் காட்டியதே. 139

காட்டிய தெய்வக் கருணைக் கடாட்சமதால்
மீட்டிடுவேன்" என்னும் விரகு மதியுடனே,
கோட்டுமுலை புளகங் கொண்டே இதழ்திருத்தித்
தீட்டினாள் தந்தைவரை செங்கைஎழுத் தேநிகராய். 140

"கண்டுஅனசொல் நின்இளைய காரிகையை, இவ்வோலை
கண்டவுடன், ஆவணம்ஈ காளைதனக் கேவேட்டுக்
கொண்டு மறுமுயற்சி கொள்ளக் கடவது"என்று
கொண்டல் குழலாள் குறித்துஎழுதி ஒப்பம்வைத்தே. 141

---

136. மக்கு - பூச்சுப்பூசும் களிமண், மரச்சட்டங்களை ஒடடும் பசையும் ஆம, அக்கம் - கண்.
137. நானம் - சுத்தூரி; கிராதர் - வேடர்; பகர்தல் - விலைகூறிவிற்றல், இது கொல்வத் தெருவில் ஊசி விற்பது போல்என்பதையொத்தது, ஊனம் - உடற்குறையையுடைய; குணியார்கள் - முடவர்கள், சேனம் - பருந்து.
138. சுருப்பை - எலி, இருக்கைகணணில் - இருக்குமிடத்தில்,வளையில்; கோற - கொல்; செல் - கறையான்.
139. நந்தம் - நம்முடைய; குலத்தணங்கு - குலதெய்வம், மிகப்பெரும்பாலான குலதெய்வங்கள் பெண்தெய்வங்களாகவே இருத்தல் இயல்பு; நாட்டம் - கண்.
140. விரகு - சாமர்த்தியமான, கோட்டுமுலை - யானைத் தந்தங்களைப் போன்ற நகில்களை உடையவள், அமைச்சன்மகள்,உவமைத்தொகைப் புறத்துப்பிறந்த அன்மொழித்தொகை, பின்மொழிநிலையல்; இதழ் - ஏடு.
141. கண்டு அன - கற்கண்டைப் போன்ற, கொண்டல் - மேகம,

முத்திரையும் இட்டு முடங்கல் தனைவிசித்துப்
பத்திரமாய் முன்பிருந்த பண்புஉழையில் வைத்துஅகன்று
சித்திரமின் னாள்விரைந்து சேடியரைக் கூடினளே;
பத்தியுட னேஇவளைப் பாங்கியர்வி னாவலுற்றார். 142

"என்சோ பனம்கொண்டு இலகினாய் செப்பு"கென
மன்சீர் மகளுடனே மற்றவரு மேகேட்க,
"பொன்சேர் மணிமார்பன் புக்குதல்நம் ஊர்க்கல்ல;
தென்சேர்எவ் வூர்தனக்கோ செல்குவான்; இங்குவைகான். 143

கண்டுஆசை கொண்ட கணவன்வசம் ஆவதுண்டோ?
பெண்டுஆசை உள்ளவர்க்கே பெண்அன்றி வேறும்உண்டோ,
தண்தா மரைவாழ் சலசையன்னாய்! மால்உதவி.
உண்டாகில் உண்டு;நமக்கு ஊழ்விதிஇல் லாதுஇலையே" 144

என்றுபல சொற்கொண்டு இணக்கியே மாதர்களை
அன்று நகர்கொண்டு அணைந்தார்; அவரவர்இல்
சென்றுஅனம்பால் நஞ்சாய்,பொன் சேக்கைமலர் மற்றுஅனலாய்
வென்றிப் பொறிபரந்த மெய்மால்வெள் ளத்துஆழ்ந்தார். 145

இவ்வாறு மால்கொண்டு இடைந்தார் வனிதையர்கள்;
அவ்வேலை மன்னன் அனந்தல் தணந்துஎழுந்து,
செவ்வேள் சிகியொழிந்து திண்பரிமேற் கொண்டதெனக்
குவ்வான் பரிமீதிற் கொண்டே நடத்தினனே. 146

கிள்ளைதனை ஊர்ந்து கிளரும்நகர் வீதிசென்று
துள்ளும் விடம்அனைய துட்டபுத்தி இல்வாயில்
வள்ளல் பரியுடனே வந்துநிற்க, அங்குள்ளோர்
பொள்ளென்று அமைச்சன் புதல்வனுக்குக் கூறினரே. 147

---

142. விசித்து - கட்டி; முன்பிருந்த பண்பு - முன்னிருந்தபடி; உழையில்- அதனிடத்தில்.

143. சோபனம் - நல்ல செய்தி; இலகினாய் - விளங்கினாய்,வந்தாய் என்றபடி; பொன் - திருமகள்; வைகான் - இருக்கமாட்டான்.

144.சலசை - திருமகள்; ஊழ்விதி இல்லாது இலையே எண்புழி நல்வினைப்பயன் இல்லாவிட்டால்(கணவு ஆசை கொண்ட கணவன்)கிடைப்பதில்லை என்பதோடு நமக்கு ஊழ்வினை இல்லாமல் இல்லை அதாவது அதிருஷ்டம் இருக்கிறது எனவும் குறிப்பாகக் கூறியவாறாயிற்று. 145.சேக்கை - படுக்கை.

146. இடைந்தார் - வருந்தினர்; அனந்தல் தணிந்து - தூக்கமறிந்து; செவ்வேள் - முருகப்பெருமான்; சிகி - மயில். 147. பொள்ளென்று - விரைவாக.

கூறஎதிர் சென்று குரிசில்தனை மந்திரிசேய்
தேறும் உபசாரம் செப்பிஅகத் துள்அழைத்து,
"ஏறரிஅன் னாய்!வரும்வாறு என்"என்று அவன்வினவ,
மாறு பகராது, மன்ஆ வணம்கொடுத்தான். 148

ஆவணத்தி லேபொறித்த அவ்வா சகம்உணர்ந்து,
மாவியப்ப தாக மகிழ்ந்து புளகமுற்று,
ஆவலுற்ற நங்கைதனக்கு ஆளன்இவன் ஆவன்என்று,
மேவகத்தி னுள்மறைவாய் வேதியனைக் கூட்டிவைத்தே 149

மன்னுசந்த்ர சேகரன்பால் மந்த்ரிமகன் சென்றுஇ றைஞ்சி,
"என்னுரிய தங்கைதனக்கு இன்றுமன்றல் செய்வதற்கு
அன்னதரு அன்னாய்! அருள்கவிடை;" என்றுஇரக்க,
பன்னும் அதற்கிசைந்த பல்பொருளும் வண்மைசெய்தே, 150

"காலமே யான்உறுவேன் காட்சியுடன் மன்றல்செய
ஏலவே" என்ன, இதயம் மிகமகிழ்ந்து,
சால அலங்கரித்து, சந்தமனைப் பந்தரிட்டு,
கோலச் சுவர்க்கே கொழுஞ்சித் திரம்வரைந்து, 151

சுந்தரம தாய்மகர தோரணங்கள் தான்விசித்து,
கந்தனுடன் வள்ளிஎழில் காட்டும்இரு வோர்களையும்
சந்தமுறும் பல்பூஷ ணங்கள்தமால் மெய்மறைத்து,
வந்தமறை யோனை,"மணம் செய்தொழில் முற்றும்;"என்றான். 152

வேட்டு, முறைமை விதிவழியே தார்மாலை
சூட்டி, மணஞ்செய்து, தொழில்ஆறுள் ளோன்அகன்றான்;
கோட்டு முலையாளும் கொழுநனும் மஞ்சமதில்
ஈட்டுங் கலவி இரதிமதன் போல்சேர்ந்தார். 153

மருங்குல்மதன் அல்குல் மணித்தேர் தனைநடத்தத்
திருந்துமுலை யானை திண்ணியமார் பில்தாக்கப்
பொருந்தும் சமரில் புருவச் சிலைவணக்கித்
திருந்துஉவரிக் கண்கோல்கள் சேல்போல் சொரிந்தனளே. 154

148.ஏறரி - ஆண்சிங்கம், மாறு பகராது - பதில் சொல்லாமல்,மன் - சந்திரகாசன், ஆவணம் - இலகுஓலை.

150 மன்றல் - திருமணம், வணமை செய்து - வழங்கி 151 காலமே - நாளைக்காலையில்.

153. வேட்டு - வேளவிசெயது; தொழில்ஆறுஉள்ளோன் - அந்தணன்

மதனும் இரதியுமே வன்போர் புரிகுதல்போல்
அதிக இதலீலை ஆண்மைச் சமர்முகத்தில்
விதஅல்குல் தேர்ஞெமுங்கி வெற்றிக் குடைநசுங்கிக்
கதழ்வின் உபயசம காமவெள்ளம் பொங்கியதே. 155

இந்த விதமாய் இடைவிடாது அல்முழுதும்
சந்த மதனன் சமரே விளையாடி,
அந்தமுறச் சேர்ந்துஉவந்தார் அன்றிலுடன் பேடையும்போல்;
சுந்தரமன் னன்புலர்ந்து தோகையைவிட் டுப்பிரிந்தே, 156

காலைக் கடன்முறைமை காட்சியுடன் தான்முடித்து
மால்ஒத்த வெற்றி மதச்சீய மேஅனையான்
கோலக் கதிர்வடிவு கொப்பளிக்கும் மெய்காட்டிச்
சாலைத் தெருவீதி தன்னில்நடை கொண்டனனால். 157

அந்தநக ரத்தில்உள ஆடவரும் நாரியரும்
கந்தன்என்பர்; அல்லன்என்பர்; காமன்என்பர்; மாமன்என்பர்;
சந்தன்என்பர்; இந்த்ரன்என்பர்; தான்அல,பின் ஆர்கொல்?என்பர்;
எந்தநக ரைப்பாழ்வைத்து இங்குவந்த ஏந்தல்?என்பர். 158

அந்நகரோர் இவ்வாறு அதிசயித்து மெய்திகைக்க
மன்னன்மகன் கோமான் வளமனையில் புக்கிருந்தான்
தென்னகரி வேந்தன்சந்த்ர சேகரனும் ரத்னவையந்-
தன்னுடனே மந்த்ரி தகுமனையில் எய்தினனே. 159

---

154. மருங்குல் - இடை; உவரி - கடல் போன்ற; கோல் - அம்பு; பார்வை வீச்சு அம்பாக உருவகிக்கபபட்டுச் சேலுடன் உவமையாக்கப்படுகிறது. அமைச்சன் மகள் தோன்றா எழுவாய்.

155. வித - தொளையினை உடைய; வெற்றிக் குடை - காமனின் வெற்றிகுடை திங்கள; இங்கு முகததை உணர்த்திற்று; கதழ்வின் - வேகமாக, மிகுதியாக எனினும் ஆம்.

156. அல் - இரவு; புலர்ந்து - பொழுது விடிநது.

158 மா மன் - திருமகள் நாயகனாகிய திருமால; சந்தன் - அழகன்,மன்மதன்.

159. ரத்னவையம - மணிகள் பதிக்கபபெற்ற தேர்.

160. ஆளி ஆசனம் - சிங்காதனம், வை - கூர்மை.

எய்துமுன் மந்திரிசுத னேமகிழ்ச்சி யோடுஎதிர்போய்
வெய்துகொடு வந்து விறல்ஆளி ஆசனத்தில்
வைதிகழ்வேல் மன்னவனை வைத்துஇறைஞ்சி யேபுகழ்ந்து
கைதனையே கட்டிஎதிர் காவலன்முன் நின்றனனே. 160

மன்காட்சி கண்ட மணமகனும் மங்கையுமே
முன்கால் பணிய, முறைமையாய் வாழ்த்தி,அதன்
பின்கா வலன்நோக்கா, பேரழகன் தன்வடிவை
நன்காகக் கண்டே நயனம் களிகூர்ந்தான். 161

"இந்த எழில்முருகன் என்சுதைக்கு வாய்க்காமல்
மந்திரிமகள் செய்தவத்தால் வாய்த்தது"என வேநினைந்து,
பிந்த இருவருக்கும் பேணி வரிசைசெய்து,
அந்த மணமகனோடு அன்பாய் அனம்அருந்தி, 162

ஏந்தல் மணிச்சிவிகை ஏறித் தனதுமனை
சார்ந்து கனக சபாமண்ட பத்திருந்து
கூந்தல் வயமாத்தேர்க் கோமான், "அருஞ்சுதைக்குக்
காந்தன்ஆர்?" என்றே கருதியோ சித்திருந்தான். 163

மாராயம் பெற்ற மணமகனும் கன்னிகையும்
தாராள மாகச் சருவிமதன் போராடி,
சீராடி மூன்று தினமாக இங்கிருந்தான்;
ஆராய்வி னான்அங்கு அமைச்சன் மனமகிழ்ந்தே, 164

"நம்மில் அதிகம் நமதுமகன் புத்தியினால்;
செம்மல்தனை வாளினில்கொல் தீய . . . . . .
எம்எழுத்துக் கண்டவுட னேசதித்தது ஆகும்"என்று
தம்மனதில் எண்ணித் தறுகண்ணன் கோபமுற்றே, 165

---

161. நோக்கா - பார்த்து, இது பொதுவாகப் பார்த்ததையும்,அடுத்து நன்காகக் கண்டே என்பது சிறப்பாகக் கவனித்துநோகியதையும் குறித்தன 165. சுதை - மகள், பிதந - பிறகு.

163. கூந்தல் - பிடரி மயிர, வயம் - வலிமை, மா - குதிரை: பிடரிமயிரையும் வலியையுமுடைய குதிரைகளால் இழுக்கப்படும தேரை உடைய மன்னன் எனவிரியும; காந்தன் - கணவன.

164. மாராயம் - பெருமகிழச்சி, அங்கு - புலிந்தனின் ஊரில்; ஆராய்வினான (ஆகிய) அமைச்சன் அங்கு மனமகிழ்நதே எனஇயையும்

166 சலம் - பொய்யாக, சினத்திற்கு ஒரு காரணம கற்பித்துக கொண்டு; புனவர் - மலைகளில் வாழ்பவர், வேடர, புலன் - இரகசியம், புலனறி சிறப்பு என்னும் புறபபொருள் துறையாலும், புலனறிதல் என்னும் இன்றைய வழக்காலும் இதனைத் தெள்ளிதின்உணரலாம்.

புலிந்தன் தனைக்கண் பொறிபறக்கத் தான்நோக்கி,
சலங்கொண்டு, "அடாபுனவா! தாழ்மரபில் உள்ளோனே!
நிலங்கொண்டு அடங்காத நின்சேய் நினக்குவந்த
புலன்கள் உரைத்திலைஉன் புன்மரபின் புத்தியினால். 166

(கலித்துறை)

உற்றது ஓதிலை உறுசினே கிதத்தினுக்கு எனிலும்;
மற்று உனக்குஒரு மானம்என்? பெருமைஎன்? மதம்என்?
கொற்றம் என்?"எனப் புடைத்தனன் தோள்பதங் கொண்டே
சற்றும் நெஞ்சுஇரங் காதுஅவன் மூர்ச்சையாம் அளவும். 167

"புலிந்தன் மூர்ச்சையுற் றனன்"எனப் பொக்கிஷம் புகுந்து,
மலிந்த பொன்நவ மணிபல பொருள்களுங் கவர்ந்து,
கலந்த நால்வகைத் தளங்களும் சூழ்வரக் களிப்பாய்,
மலர்ந்த ஆனனத் தொடும்எழில் மாநகர் சேர்ந்தான். 168

நகரில் சேர்ந்து,தன் அணிமனை நணுகும்அவ் வளவில்,
விகசி தச்சுதை விசையையும் மருகனும் வெய்தில்
புகர்அ மைச்சனைக் கழல்தொழ, திகைத்து,உளம் புழுங்கி,
அகம்அ டக்கியே, ஆசிர்வ தித்து,வாழ்த் தியபின், 169

"ஒன்று நாம்செயத் தெய்வம்ஒன் றாய்முடித் ததும்நன்று"
என்று, தன்மகன் தனைமறை விடத்தினில் இருத்தி,
"நன்று நன்று!நம் ஏவல்ஒன்று உனதுஉள விரகால்
இன்று வேறுசெய் கின்றதுஎம் மதம்?"என இயம்ப, 170

"ஏதும் மாறுநான் இயற்றியது இன்று"என இசைக்க,
"போதும்; நான்தரும் ஓலையைத் தருக"எனப் புகன்றான்;
நீதி ஈதுஎனத் தந்தைபால் நிருபமது அளித்தான்;
சாத வாசகம் உணர்ந்தனன்; தன்நினை வழிந்தான். 171

---

168 மாநகர் - தலைநகரம்.நகரில் சேர்ந்து,தன் அணிமனை நணுகும்அவ் வளவில்,விகசி தச்சுதை விசையையும் மருகனும் வெயதில் 169. விகசித - (உவகையால்) மலர்ந்த,

170. மதம் - அகம்பாவம 171. சாதம் - உணமையான.

172. உன்னி - நினைதது, முன்னலா - நினைக்கவும் கூடாத (அத்தனைகொடிய), நினைத்தவை - (சிறுவனாக இருந்த போதே சந்திரகாசனைக கொல்லக்) கருதியமை, பிழைத்த - (முயற்சி) தவறிவிட்டது.

"என்ன உன்னிநாம் என்எழு தினம்?"எஞ இடைந்து,
தன்னை நொந்து,தன் மதியையும் இகழ்ந்து,மெய் தயங்கி,
"முன்ன லாச்செயல் நினைந்தவை முடிந்தில முயன்றும்;
பின்ன ருங்கொலை விளைத்ததும் பலித்தில; பிழைத்த; 172

தந்தை யாகிய புலிந்தனைத் தடிந்ததும், தனக்கு
இந்த வல்வினை விளைத்ததும் இனிஇவன் அறிந்தால்,
நந்து பல்பருக் கையதுஎன நம்தசை அரிந்தே,
வெந்து நீறுறத் தழலினில் மடுத்துவன் வெகுண்டே. 173

ஏது செய்குவது இனி?"என நெட்டுயிர்ப் பெறிவன்;
"வாது றும்பகை வரவழைத் தனம்கெடு மதியால்;
பேதை நம்சுதை விதவையுற் றுறினுமே பேணாது
ஏதம் ஒன்றுஅறும் வகைஇவற் கொல்வன்"என்று இருந்தான். 174

தனக்கு நாசமது அணுகிடா வாறுஒரு தந்த்ரம்
நினைத்து, அகத்தினில் இருந்து,முன் காதுற நினைந்து
முனைத்த காதகர் தம்மையே முன்வர விளித்து,
சினத்து,"என் உத்தரம் மாறிநீர் என்செயல் செய்தீர்? 175

அன்று கால்விரல் அரிந்துசே யாய்ப்புலிந் தனுக்கே
வென்றி மேவுறச் செய்ததும் நன்று;இனி மேலும்
கொன்றி டீர்எனின் உங்களை அரிந்துஅழல் கொளுத்திப்
பொன்ற உம்,குலக் கருஅறுப் பேன்"எனப் புகன்றான். 176

"ஐய! யாம்செயும் அரும்பிழை பொறுத்தருள்; அவனைக்
கொய்யும் ஆறுஎமக்கு உத்தரவு அருள்"கெஞ்சி கூற,
வெய்ய யாமளைக்கு அர்ச்சனை புரிந்திட விடுப்பேன்;
செய்யும் வாறுஅவண் செய்துஉயிர் தொலைத்திடும்" என்றான். 177

அந்த வாறுஅவன் உரைவழி ஒழுகி,ஆ யுதம்கொண்டு,
உந்து காதகர் காளிகோட் டத்தினுள் ஒளித்தார்;

---

173. பருக்கை - வழியில் கிடக்கும் சிறிய உருண்டைக் கறகள்,சோற்றுப் பருக்கை எனினுமாம், அது - பகுதிப்பொருளவிகுதி;

174. நெட்டுயிர்ப்பு - பெருமூசசு, பேணாது - அதைப்பற்றிக் சுவலைப்படாமல்; இவன் - சந்திரகாசனை;

175. அகதத்தினில்இருந்து - (தான்) வீட்டுக்குள் இருந்துகொணடே, காதுற - கொல்ல, முனைத்த - முன்பு சிறுவனாக இருந்தபோது அனுப்பப்பட்ட, உத்தரம - ஆணை

177 ஆறு - வழியை; யாமளை - காளி, செய்யும்வாறு செய்யவேண்டியபடி, அவண - அங்கு.

178 கோடடம் - கோவில, நன்மதியாய் - நல்லறிவுசொல்பவனைப் போன்று, நந்து சிந்தையன் - கெடுமதியாளன்.

மந்த்ரி தன்மரு மகன்றனை அழைத்து,நன் மதியாய்
நந்து சிந்தையன் நஞ்சுஅன ஒருமொழி நவில்வான் 178

"எமர்க்கு நன்குலத்து இட்டதெய் வதம்எழிற் காளி;
தமக்கு நன்சிறப்பு இயற்றுமுன் தான்செய்யோம் மன்றல்;
செமித்த என்சுதன் சிறுமதி யால்சிறப்பு இயற்றாது
உமக்கு மாமணம் செய்ததுயாம் உணர்ந்ததும் உறுதி. 179

எனது சேய்அர சிடத்தினில் எய்தினன்; எனக்குத்
தனது சேய்நினை அல்லதார்? நீஅவன் றானாய்
மனது கூர்ந்தபி ஷேகமே செய்துமா லினிக்கு
சினவு வேற்கர னேஇவண் அணுகு"எனத் திரித்தான் 180

சொற்ற வாய்மொழி பிற்பட முற்படத்தொழுது,
உற்ற சுக்கிர வாரநாள் இரவில்உத் தாரம்
பெற்று, உடற்சுசி கரஞ்செய்து, பேரறி வுடையான்
பத்தி யால்மடி வஸ்த்திரம் புனைந்து,பண் பாக 181

ஆட கப்பசுந் தட்டினி லேஅபி ஷேகச்
சோட சப்பொருள் நிரப்பியே பரித்துஎழில் துலங்க
நாடி ஏகினன்; அத்தரு ணத்தில்அந் நகர்ஆள்
பீடுஇ ராசனுக்கு உற்றவை உணர்த்துதும் பெட்பாய். 182

சந்த்ர சேகர மன்னவன் சதிர்எதி ராக
நந்தும் அவன்குறைச் சிரப்பிரே தங்களாய் நடிக்க,
"இந்த வாறுகண் காண்குவது என்?"என இறைவன்
பந்த மாம்பெரி யவரிடம் வினவினன் பதறி. 183

"கண்ட துர்க்குணக் குறிஇரு மதியில்நின் காயம்
கொண்ட வாறுஅது பிரியும்"என்று உரைத்திடக் குன்றி,
மண்ட லாதிபன் மாநிலம் புரப்பதை மறுத்து,
தொண்டுஅ ருந்தவம் செய்துஅரன் பதம்கொளத் துணிந்தே, 184

---

179. சிறப்பு - விசேஷவழிபாடு, திருநாள்; செமித்த - பிறந்த.

180. மாலினி - காளி; திரித்தான் - பொய் சொன்னான்

181. உத்தாரம் பெற்று - அநுமதிபெற்று; சுசிசுரம் - தூய்மை; மடிவஸ்த்திரம் - தூயதாகத் தோய்த்துக் காயவைத்த உடை.

182. ஆடகம் - பொன், பசும் ஆடகம் என மாறுக,சோடசப்பொருள் - பதினாறு வகையான உபசாரத்திற்கும்உரியன, அபிஷேகம் என்றதை அனைத்திற்கும் உபலடசணமாகக்கொள்க.

183. சதிர் - நாட்டிய அரங்கம; குறைச்சிரப் பிரேதங்கள் - தலையற்ற பிணங்கள், முண்டங்கள்; இறைவன் - மன்னன்; பந்தமாம்- தெடர்புடைய.

184. மதி - மாதம்; காயம் - உடல்; குன்றி - நிலை குலைந்து.

"கன்னி நன்சுதைக் கோமணம் புரிந்திலம் காக்க;
தன்னு டன்பிறந் தோன்இலை தலம்புரப் பதற்கும்;
என்னி னிச்செய்வது? இதற்கெலாம் பாத்திரம் இயல்சேர்
மன்னு சந்திர காசனே குணம்"என மதித்தே, 185

அருகு இருந்தமந் திரிமகன் தனை,"அரைச் சணத்துஉன்
உரிய மைத்துனன் தனைக்கொடு இல"கென உரைக்க,
பெரும கிழ்ச்சியில் கடுப்புடன் ஏகினன்; பீடார்
முருகு மைத்துனன் எதிர்வரக் கண்டனன் முன்னே. 186

கண்டு, "மன்னவன் அழைத்தனன் வருகஎனக் கவனச்
சண்டி கைக்குஅபி ஷேகமே செய்தொழில் சாற்ற,
"விண்டுஅ னாய்!அது முடிப்பன்;"என்று அவனுடை மகுடம்
குண்ட லங்களும் அழகுறப் புனைந்துகோ டித்து, 187

தன்னு டன்தொடர்ந் தவர்கள்பால் இவன்றனைச் சாட்டி,
அன்ன மன்னவன் பால்அணு கிடாவிரைந்து அனுப்பி,
பொன்னி டைக்குஇயல் பாம்பிடி வஸ்த்திரம் புனைந்து,
உன்னு தட்டமும் தோள்மிசை பரித்துஇவன் ஓடா, 188

ஓடி ஆலயத் துட்புக ஒளித்தகா தகர்வெய்து
ஈடி னோடுஎதிர் செகுத்துவிட்டு, அமைச்சனுக்கு இசைத்தார்;
கேடுஇது என்றுஅறி யான்கிலே சங்களை ஒழிந்து
நாடு கின்றது முடிந்தென மகிழ்ந்தனன் நயமாய். 189

இந்த வாறுஇவண் நிகழ்ந்திடும் ஏல்வையின், இறைவன்
சந்த்ர சேகரன் தன்னிடம் சந்திர காசன்
அந்த மாய்அணு கினன்;அவை யோர்அதி சயித்துச்
சிந்தை கூர்ந்துஉடல் புளகம்உற் றனர்திகைத்து எவரும். 190

---

186. அரைச்சணத்து - அரைக்கணத்தில்; கடுப்புடன் - வேகமாக; முருகு - அழகும் இளமையும் வாய்ந்த.

187. கவனம் - காடு; கவனச் சண்டிகை - வன துர்க்கை; விண்டு அனாய் - திருமாலைப் போன்றவனே; "விண்டனாய் அது முடிப்பன்"எனத்தான் விள்ளப்படப போவதைத் தன் வாயாலேயே கூறுகிறான். இது ஓர் இலக்கிய உத்தி.

189. கிலேசம் - வருத்தம்.

190. ஏல்வையின் - சமயத்தில்; அந்தமாய் - அழகாய், அவையோர்எவரும் திகைத்து அதிசயத்துச் சிந்தை கூர்ந்து உடல்புளகம்உற்றனர் என இயையும்.

அரசர் கோன்வரும் அரசனை எதிர்கொடு தழுவிப்
பிரிச மாய்க்கரம் பிடித்துஅணை யினிற்பெயர்ந்து ஏற்றி,
மரும லர்க்குழல் சண்பக மாலைதன் மகளை
விரைய நன்மணம் முடித்தனன் மெய்மனம் குளிர்ந்தே. 191

அந்த நாழிகை யினில்அரி யாசனத்து ஏற்றி,
சிந்தை கூர்ந்துபட் டாபிஷே கம்செய்து, சிறப்பாய்
மந்த்ரி மார்கள்மற் றுள்ளருங் கைதொழ வகுத்து,
தந்தி மீதுவைத் தேநகர் வலம்செய்தான் தயவாய். 192

இரவை யும்பக லாக்கின தீபங்கள் இலங்கி;
பரவை யில்பல பஞ்சவாச் சியங்களும் கறங்க,
குரவை யின்தொனி அண்டகோ ளகைவெடிக் கொளவே,
அரவின் பொற்பணம் ஞெமிங்கிடப் பிறங்கின அனிகம் 193

தெருப்ப ரப்பினும் மறுகினும் இடம்அறச் செருமி,
விருப்ப முற்றுள வேந்தர்கள் அமைச்சர்வெந் தளங்கள்
உருப்பொ லிந்திட, உம்பலை நடத்தினன் உரவன்
மருப்பொ லிந்துள மாதர்கள் தெருத்தொரும் மயங்க. 194

விருதுஅ னந்தம துஉலவிட, வெண்குடை நிழற்ற,
முரசி னங்களும் பஞ்சவாச் சியங்களும் முழங்க,
தெருவ லங்கொளும் சிறப்பினைத் தேர்ச்சியன் வினவா,
அருகு நின்றவர் வரும்வர லாற்றினை அறைவார். 195

"ஐய! நின்மரு மகன்றனக்கு அரசர்கோன் பயந்த
தைய லைத்திரு மணம்செய்து, தார்முடி சூட்டி,
எய்யி லாதுஅரசு இபத்துஎருத் தத்தினில் ஏற்றி,
உய்ய வீதியின் வலம்வரும் சிறப்புஇது;" என்று உரைத்தார். 196

---

191. பிரிசம் - பிரியம். சணபகமாலையாகிய தன்மகள் என்க;விரைய - துரிதமாக.

192. வகுத்து - ஆவனசெயது; தந்தி - யானை.

193. பரவையில் - கடலொலியைப் போல. அரவின் பொறபணம் (உலகைத் தாங்கி நிற்கும்) ஆதிசேடனின் அழகிய பணாமுடி. அனிகம்- படை.

194. செருமி - நெருங்கி; உம்பல் - யானை. 195. தேர்ச்சியன் - அமைசசன்.

196 எயயிலாது - இடையூறு இன்றி. அரசு இபம் - பட்டதுயானை; எருத்தம் - பிடரி

"மருகன் ஏது?செய் மணம்இதுஏது! அணிமுடி சூட்டும்
அரசன் ஏது?பொய் அகல்"என நடந்தவர் அடங்க
உரைசெய் கின்றது கண்டுஉணர் வழிந்துவெய், துயிர்த்து,
கருகி னான்அனல் படுசரு கெனமனம் கலங்கி. 197

"உயிரி னுக்குஉயிர் மகன்உயிர் ஒழிந்தன னோ?"என்று,
அயலி னுக்குஉரை யாது,நள் ளிருளினில் அமைச்சன்
வயிர முத்தலைக் காளிஆ லயத்திடை வந்து,
இயல்மு டித்தலை இழந்தசூன் தனைஎதிர் நோக்கா, 198

"செய்தி லாவினை செய்தனம்; செய்ததுஎந் தனுக்கே
வெய்து வந்தது; கெடுதிஇல் வேந்துஎழில் முகத்தில்
எய்தி நோக்குதற்கு ஏதுஇடம்? என்செயான்? இமைப்பின்
உய்தி டாதுஉயிர் ஒழிப்பது சிறப்பு"எனத் துணிந்தே, 199

(அடுத்தபாடல் ஏட்டில் எழுதப்பெறவில்லை)

கரத்தின் வாள்எடுத்து இருத்தினான் களத்தில்கம் பிரிய;
சிரத்தை வேறுகொண்டு அவன்உயிர் அழிந்தனன்; தேவி
இரத்த வன்பலி கொண்டஎன், எமபடாள் உயிரைப்
பொருத்து பாசமிட்டு இறுக்கினா உலுக்கினர் புகைந்தே . 201

அன்று சேயுடன் அமைச்சனு மேஉயிர் அவிந்தான்;
நன்றி மேவிய சந்திர காசந ராதி
வென்றி யாய்நகர் வலஞ்செய்து, வேதியர் புகழ,
மன்றல் ஆசனத்து இருந்தனன் உலகெலாம் மகிழ. 202

மரும கன்றனை "மல்லல்அம் புவிபுரந் திடு"கென்று,
அரசன் மெய்மகிழ்ந்து அருந்தவம் முயன்றிட அமைந்தான்;
இரவி னிற்பொழு தொழிந்தது; எழுந்தது இரவி;
பரிதி மன்எனப் பார்த்திபன் வீற்றிருந் தனனே 203

---

197. நடந்தவர் அடங்க - அவையுள்வலத்தில் பங்குகொண்டவர் அனைவரும்.

198 சூன் - மகன். 201 களம - கழுத்து, கம் - தலை, எமபடாள் - இயமனின் தூதுவர்.

202 நராதி - மனிதர்களுள முதன்மையானவன், அரசன்

203. மலல - வளப்பம் மிக்க. அம - அழகிய, இரவி - சூரியன, பரிதி மன் - சுதாசன சக்கரத்தை

உடை ய திருமால

புலர்ந்த காலையில் பயிரவி ஆலயம் பொருந்து
மலர்ந்த தார்கொடு பூசைசெய் வான்பய மாக,
நிலங்கள் சேப்புற, அமைச்சனும் நேயனும் நெய்த்தோர்
நலந்துஇ ழிந்துறச் சிரம்பிரிந்து இறந்துறக் கண்டான். 204

கண்ணில் கண்டுஅகம் கலங்கினன்; நடுங்கினன்; கடுகி
அண்ணல் தன்னுழை அடைந்தனன்; புகன்றனன்; அதுகேட்டு
எண்ண மாய்,"இவர் இறந்தது யாதுகொல்?" என்று,
புண்ணி யன்மனம் புண்கொடு, யோசனை புரிந்தான். 205

"மருக னுக்குஅரசு எய்துதல் வழக்குஅல என்றோ?
அரசு தன்மகள் தனைமணம் புணர்த்தத னாலோ?
பொருவில் தன்சுதை சிறப்பிடம் பொருந்திடாள் என்றோ?
தெருளின் சொல்வழி கேட்கிலன் சிறியன்என் றோதான்? 206

அலது நம்மினில் அதிகரித் தனன்தகாது என்றோ?
தலப திக்குஇவன் தகுவதுஅன்று எனும்முன்னம் தானோ?
விலகி வேறொரு வேந்திடம் பொருந்திடா விரகோ?
வலிய இங்கிவர் மாய்ந்ததுஎன்?" என்றுமன் மயங்கா, 207

"என்னை யேபொருந் தாவிடி லேதமக்கு இசைந்த
மன்னை யேஎழின் மணிமுடி சூட்டிவாழ் வதுஅற,
தன்னில் தாம்உயிர் ஒழிவது தகுவது வோ?"என்று
உன்னி, மாலினி ஆலயம் குறுகினன் உரவோன். 208

தனித்து,ஒ ருத்தரும் அறிந் திடாது, ஆலயம் சார்ந்தே,
அனித்த மாய்மடிந் தவர்இரு வரையுமே நோக்கி,
பனித்த கண்புனல் பாய்தர, பகவதி திருமுன்
நினைத்த காரியம் பகர்ந்துஉயிர் தொலைக்கநே மித்தே, 209

---

204. பொருந்து - வந்தடைந்த. பொருநது பூசைசெயவான பயமாக என்க. சேப்புற - செம்மை நிறம் பொருநத.நெயத்தோர - உதிரம்.

205. எண்ணமாய் - வருத்தமடைந்து.

206.சந்திரகாசன் மநதிரியை விட உயர்ந்து மன்னனானதோ, தலபதி - அரசன், முனனம் - கருத்து: வேடர் குலத்தினனாதலின இவவாறு கருதியிருகலாம். சந்திரசேகரனிடம பணிசெய்த பிறகு வேறொரு மன்னன்பால பணிசெய்ய விருப்பமின்மையாலோ

208 உன்னிக் குறுகினவன் சந்திரகாசன். வாழ்வது அற - வாழாமல. உன்னி - நினைத்து.

"சூரி மாலினி சுந்தரி மால்சகோ தரிசிங்
காரி தாருக சங்கரி பயங்கரி கவுரி
வீரி மாதரி பயிரவி விதுசடா தாரி
நாரி ஆரணி காரணி நாரணி சூலி 210

காளி மீளிகங் காளிவே தாளிமுக் கண்ணி
யாளி வாகனி யோகினி டாகினி அமரி
கூளி ஒண்கொடி யாள்அரன் தேவிநற் குமரி
வாளி சண்டிசா முண்டிசண் டிகைமனோண் மணியே! 211

அம்மை யே!உனது அடிக்குஇதோ முடிகொள்"என்று அசியைச்
சம்ம தித்துஒரு மையினுடன் கந்தரத்து இருத்தா
கொம்மை வெம்முலைக் குமரிஅக் குரிசில்கைப் பிடித்தே
"செம்மை யன்று;ஒழி சிரசுஅறுப் பது"எனச் சிரித்தே, 212

"பதகன் இங்குஇவன் பன்முறை உனைவஞ்சப் பதுவாய்
அதர்ம மேபுரிந் தனன்;அவன் செய்ததீங்கு அவனைச்
சதம தாய்ச்சதித் தது;"என அவன்செயல் சாற்றி,
"புதல்வ! இத்தலம் புரந்தருள்; ஏகு,"எனப் புகன்றாள். 213

"செய்த தீவினை செய்தவர்க்கு எய்துதல் திடம்;நான்
வெய்தில் புக்குமுன் வீந்தஎன் வேந்தனும்; பட்டம்
செய்த தேதலை மந்திரி சிதைந்தது,என்று உலகோர்
வைதி டாதமுன் மரித்திடல் புகழ்"என வடித்தான். 214

"நன்று அவன்றனை எழுப்பினும் நினக்கும்நாள் தோறும்
பொன்ற வஞ்சனை புரிதொழில் முயலுவன் பொல்லான்;
என்ற தால்,"இனும் சகஸ்திரம் இடர்விளைத் திடினும்
என்றும் நின்துணை உண்டு;இவ னால்என செயலாம்? 215

---

209. நேமித்தே - உள்ளத்தில் நியமனம் செயது கொண்டு. சங்கல்பித்துக் கொண்டு.

210. சூரி - வீரம் நிறைந்தவள்; தாருக சங்கரி - தாருகாசுரனை அழித்தவள். விதுசடா தாரி - சந்திரனைச் சடையில் அணிந்தவள்;ஆரணி - வேதப்பொருளாக விளங்குபவள்.

211. மீளி - வலிமை உடையவள்; சங்காளி - எலும்புமாலை அணிந்தவள், அமரி - போருக்கு உரியவள்; கூளி ஒண் கொடியாள் - எருதுக் கொடியை உடையவள்; சக்திக்குப் பின்னா சக்தியாக விளங்கும்போது சிங்கக்கொடியும், அபின்னா சக்தியாக விளங்கும்போது எருதுக் கொடியும் உரியன.

212. அசி - வாள், ஒருமை - மன உறுதி; கந்தரம் - கழுத்து. சிரசு அறுபபது செம்மையன்று, ஒழி என இயையும். 213. சதமதாய் - நிச்சயமாய்.

214. பட்டம் செய்ததே - பட்டம் கட்டிய உடனே. மந்திரி தலைசிதைந்தது என இயையும்.

ஆத லால்இவன் அன்றியான் அரசுசெய் தேனேல்
தீது அலாதுநற் புகழ்கொலோ?" எனத்துதி செய்தான்;
சோதியானமுக் கண்களால் அருள்மழை சொரிந்து
ஓதும வாய்மணி சிந்திட அந்தரி உரைப்பாள் 216

"தரும தேவதை அனையபூ பாலகா! தனயா!
கருணை யாகஉன் புயம்அக லாதுகாத் தருள்வேன்;
இருவர் தம்மையும் உறுப்புகள் பொருத்தியே எழுப்பி,
பருதி மன்னவர் போலவாழ்; ஏகு"எனப் பணித்தாள். 217

விடைய ளித்துள வீரிமா காளியைப் புகழ்ந்து,
வடவ ரைப்புயன் விரவவே உறுப்பினை வைத்தான்;
படியி னிற்பெரும் பள்ளிகொண் டவர்எழு வதுபோல்,
அடகு இளம்பயிர் மழைக்குஎழல் எனஅவர் எழுந்தார். 218

மந்த்ரி தன்சுதன் மைத்துனன் மலரடி பணிந்தான்;
சந்த்ர காசன்மற் றவன்தனை மார்பினில் தழுவா,
சிந்தை குன்றிமெய் நடுங்கியே சிரங்குனிந்து அழன்று
வெந்து நின்றமா துலன்அடி வேந்தர்வேந்து இறைஞ்சா, 219

"ஐய னே!எனது ஆண்டவன் நீஎன அறியேன்;
வெய்ய வெவ்வினை விளைத்தனன் புன்மதி விரகால்;
நைய என்னுடல் முழுதையும் பருக்கைபோன்று உறுக்கிச்
செய்ய தாளினில் தூவுதற்கு அருள்;விடை செய்வாய். 220

தாயும் எந்தையும் சகிக்கரும் வினைசெயும் தறுகண்
நாய்என் மாங்கிஷம் அரிந்துஉனது அடிமிசை நல்கில்
ஆயும் நற்கதி கிடைக்கும்"என்று அக்கம்மீது இருகை
சேய மாமலர் மீதுமா மலர்எனச் சேர்த்தான். 221

---

216. அந்தரி - காளி.

217. பருதி மன்னவர் - சக்கரப்படையையுடைய திருமால்.

218. விரவவே - பொருந்துமாறு. படி - உலகம்; அடகு - இலை.

219. மாதுலன் - மாமனார்.

221. மாங்கிஷம் - மாமிசம், ஊன். அக்கம் - கண். வெடசுத்தால் முகத்தைக் கைகளால் புதைந்துக் கொணடான் என்றபடி. 222. ஏமமாம் - பத்திரமாக உள்ள.

மாமன் நாணமும் நடுக்கமும் திடுக்கமும் வலிய
காம னாகிய சந்திர காசனும் கண்டு,
நீம யங்குதல் என்கொல்?நீ செய்தவை அனைத்தும்
ஏம மாம்எனக்கு உதவியே அலதுஇடர் இலையே! 222

என்று "வாரும்நம் மனைக்குஎன அரசர்கோன் இசைக்க
ஒன்றும் ஓதிலன் ஊமன்ஒத்து அடங்கினன் அமைச்சன்;
அன்றுஅவ் ஆலயத் திருந்துசொல் முழங்கினது "அட!நீ
சென்றி டாய்இறை திருமொழிக் கிணங்கிஇச் சணமே, 223

இன்று ஒழிந்திடும் துர்க்குணம் அனைத்தும், வேறு
அன்று உனக்குறும் அச்சணம் நின்னுயிர்க்கு அனத்தம்"எண்ணில்
என்று இருஞ்செவிக்கு எய்திடக் காளியை இறைஞ்சி,
நின்ற மூவரும் விடைகொடே ஆலயம் நீங்கா, 224

நீங்கி மூவரும் அரண்மனை புகுந்தனர்; நிருபன்
தாங்கு கோல்சறு காதுஉலகு ஆண்டனன் தயவாய்;
ஓங்கு மந்திரி உரவனைப் பரவி, "உத்தாரம்
ஈங்கு தந்தருள் உந்தைபால் எய்திமீண்டு இலக" 225

என்ன வே,விடை மகிழ்ந்துஅளித் தனன்அவன் ஏகி,
பொன்னு லாவிய புலிந்தன்மா நகரினிற் புக்கு,
சென்னி தாழ்ந்துஅவன் சேவடி இறைஞ்சினன்; திடுக்கிட்டு,
"என்ன காரணம்?" எனஅவன் இவன்நயந்து இசைப்பான் 226

"எந்தை ஆண்டவன் சந்திர காசனுக்கு இனிய
தந்தை நீ;உனது அடிஎமக்கு அரியதாம் இறைஞ்ச;
புந்தி அற்றநான் முன்செய்த பிழைஎலாம் பொறுத்து
வந்து காத்தருள்"என்றுதாள் மணிக்கையால் பூண்டான். 227

"ஏது குற்றமும் செய்திலை; செய்தனை எனிலும்
கேதம் நீங்கு;யான் பொறுத்தனன் கழல்விடு;" என்ன,
"நீதி யாதிப! இந்நகர்க்கு ஒருவனை நிறுத்தி,
நாத! நின்மகன் பாலினில் வரு"கென நவின்றான். 228

---

225 நிருபன் தாஙகு கோல - செங்கோல, சறுகாது - வழுவாமல, உத்தாரம - அனை.

226. திடுகிட்டு - முன்பு தன்னை ஏசி, அடித்துவிடுப பொருளகளைக கொளளையடிததுச சென்றுவன் இபபோது வநது வணஙகுவதால திடுகிடுகிறான அவன் - புலிநதன், அவன் "என்ன காரணம்" என இவன இசைபபான

227 உலதுஅபபு இறைஞச எமக்கு அரியதாம என இயையும.

228 கேதம - துன்பம, என்ன - என்று புலிநதன சொலல அமைசசன் நவின்றான் என்க

"நன்று தான்;"என ஞாதியற் கேபதி நல்கி,
அன்று நால்வகைத் தளத்துடன் இருவரும் அன்பாய்,
குன்று கானகம் கடந்துநல் நகரினைக் குறுகா,
அன்று சந்திர காசன்யோ சனைக்குஎதிர் ஆனான். 229

தந்தை மாதுலன் வருவதால் தேரினைத் தணந்து,
நந்தன்அங்கிரி கொண்டுஎதிர் நடந்திட நயந்தே,
உந்து தேரைவிட்டு உபயரும் இறங்கினர்; உரவோன்
முந்து தாதையை வலம்செய்து இறைஞ்சினன் முடியால். 230

இறைஞ்சும் மைந்தனை இருகையி னாலுமே வாரி,
நிறைந்த மெய்ப்புள கம்கொடு நெஞ்சினில் அணைந்து,
கறந்த பால்அன மொழிகொடு களிப்புறப் புகழ்ந்து,
அறந்த ரும்சுதன் திருமுகம் நோக்கியே அருள்வான் 231

"மாநி லந்தனில் மகிழ்ந்துஉனைப் பெற்றநாள் முதலாய்
நான்நி தம்தொழும் உரவர்கள் நம்கழல் பணிந்தார்;
தேன்இ னம்பர வியமலர் மார்ப!சிங் காரா!
யான்ந யம்பெறு பேறுஎவர் நயந்துபெற் றனரே! 232

ஆத லால்இனி இருக்கில்என்? இறக்கில்என்? அடியேன்
மாத வக்கும ரா!மக ராசகெம் பீரா!
பூத லத்தில்நீ டூழிகா லங்களும் பொற்பாய்
நீத ழைத்துற வாழ்"கென வாழ்த்தினன் நெறியாய். 233

பின்பு மாதுலன் பதந்தனைப் பணியும்முன் பேணி,
அன்ப தாய்க்கரம் கண்களில் அணிந்துமார் பணைத்து,
"என்பி தாஅனாய்! நான்உனை இறைஞ்சஎன் எண்ணம்;
நின்ப தந்தரா தேவணங் குவதுஎன நீதம்?" 234

---

229 ஞாதியற்கே - பங்காளிகளுள் ஒருவருக்கு; அனறு - ஈரிடங்களிலும் அப்போது என்ற பொருளில் ஆடசி; யோசனை - சுமார் 18மைல்கள், 2 முழம - தநு, 2 தநு - 1 தண்டம், 2000 தண்டம - 1குரோசம்,4 குரோசம் - 1 யோசனை என்னும் வாயபாடடின்படி இது.வேறுவிதமாக உரைபபாருமஉளர்.

230. தந்தை மாதுலன் - உம்மைதொகை, நந்தன் - மகன். அங்கிரி- கால்.

231. அறந்தரும் - தருமத்தை நலை நிறுத்திய 234. நீதம - நியாயம்.

என்று பல்உப சாரமது இயம்பியே வாழ்த்தி,
வென்றி மன்னவன் மெய்யில்ஈ விரவுறப் பொருந்தாது
என்றும் நல்விழிக்கு இமையென யாவரும் இருப்ப,
நன்றி மன்னவன் நன்னிலம் புரப்பன்எந் நாளும் 235

இந்த வாறுஉள சந்திர காசனாம் இவனுக்கு
அந்த ராதிமன் நின்பிதா கேட்கினும் அருள்வான்;
உந்தி பூத்தவன் உரைவழிக்கு ஒழுகிநல் உரையால்
அந்த வீரனை வசப்படுத் துக"என அறைந்தான். 236

"அவன்வில் லுக்குஎதிர் அரிஅர பிரமனும் வெருவில்
எவன்எ திர்த்துஇகல் பொருதுவ து?"எனமுனி இசைக்க,
விவித வெம்பரி ரத்தினைக் குடைநிழல் மேவிக்
கவின்இ லங்கும்அந் நகர்க்குநேர் நடந்தது கடுப்பாய். 237

தரணி காவலன் சந்திர காச . . . . . .
வருணி சண்பக மாலைசேய் விசயைதன் மகவுஇவ்
இருவ ரும்நகர்ப் புறத்தினில் எய்தினர்; ஆழிப்
பரவை ஓதையில் பலஇயம் குழைக்குஉறப் பார்த்தார். 238

பரிஇ ரண்டையும் பரவைஅம் தளத்தையும் பார்த்து,
"வெருவி லாதுஇவண் விட்டவர் எவர்?"என வெருண்டு,
"சருவி வெம்பரி பற்றுக" எனச்சிலர் தமையே
துரித மாகவிட் டனர்இரு விழிசிவந்து உருத்தே. 239

ஏவல் கண்டஅக் கணத்தினில் சிலர்கள்போய் எதிர்ந்தே
தாவு வேம்பரி இரண்டையும் பிடித்தனர்; தகர்த்தார்
மேவி வந்தவர் தங்களை; விருதையும் பறித்து,
கோஇ ளைஞர்கள் இருவர்முன் விடுத்தனர் கோரம் 240

---

236. இசசருகுகம 34 ஆம் பாடலிலிருந்து இதுவரை சொனனவர் நாரதர், முன்னிலைபபடுத்தியது அருசசுனனை, அந்தராதிபன - தேவராசன், தேவராசனாகிய நினபிதா எனக, உந்திபூததவன் - தொபபூழிலே தாமரையை மலாவிதத திருமால.

237. வெருவில - அஞசுவாா எனில, முலி - நாரதர், சுடுபபாய - வேகமாக

238. சணபக மாலை - சநதிரகாசனின் இரண்டாவது மனைவி,மனைவி மகள, விசயை - முதல மனைவி, மநதிரி குமாரி, இவளிருவருடைய மைநதரும ஊாைக்கு வெளியே வநதிருநதவா குழை - ஆகுபெயராகக செவியை உணாததிறறு.

240 கோ இளைஞா - அரச குமாரா, கோரம் - குதிரை

"இந்த லக்கணம் உள்ளவெம் புரவிஇந் நிலத்தும்
அந்த ரத்தினும் கிடைக்கரி தார்கொல்விட் டனராம்?
கந்த ரத்துமின் னினும்கடுப் புடையது, வேள்விக்கு
உந்தி விட்டது ஒக்கும்"என்று இருவரும் உணர்ந்தே 241

வீர வீரிய வேந்தனை வலம்செய்து மெய்ஆ
சார மாய்உப சாரமோடு அம்சரண் வணங்கிக்
கோர மானது இரண்டையும் குரிசில்முன் விடுக்க,
"பார மாமுகப் படத்தினைத் தருகெ"னப் பகர்ந்தான். 242

உரைக்கும் முன்படம் அவிழ்த்துஉர வன்கரத்து உதவ,
வரித்த வாசகம் உணர்ந்துமெய் புளகெழ மகிழ்ந்து,
பொருத்து புன்னகை கொண்டவைப் பொருநரை நோக்கி,
"விரித்த உத்தர நிலத்தர்மா இது"என இசைப்பான் 243

"அத்தி னாபு,த்து அதிபதி தருமரா சேந்த்ரன்
பத்ர மாமகம் செ·பவிடும் பரிஇது; பார்த்தன்
அத்த னோடுஅமர் செய்தவன் பரிஇரட் சகனாம்;
சத்தி மால்சகா வாகிய சாரதி தானாம். 244

ஆத லால்உல குண்ட வன் கழல்பணி வதற்கே
ஏது வாம்இது; வில்லினால் விலலிவல் லவனாம்;
போதும் ஈம்அவன் ெபார்வலி காண்கூற; பொருந்திச்
சது நா வகைத் தளம்எழு க"என்றுஉரைத் தனனே. 245

மந்த்ரி மார்களும் மகுடவர்த் தனர்களும் தளமும்
தந்த்ரி மார்களும் சகலரும் யுத்தசன் னத்த த்து
உந்தி ெனாகனத் துற்றனர்; உரவனும் தேர்மேல்
முந்தி னான்இரு முளைகளும் மருங்குதேர் முடுகா; 246

---

241. தந்தரத்து - மேகத்தில் தோன்றுகின்ற

242. மெய ஆசாரமாய - தந்தையிடம் ஒழுக வேண்டியஉண்மையான ஒழுக்கத்துடன். பார - பெருமைமிக்க

243. வரித்த - வரிவரியாக எழுதபபெறற, ுவைபபொருநா - சபையில உள்ள படைத்தலைவர். விரிதத - இடமகன்ற, விரிதத எனறபாலது எதுகை நோக்கி வலித்தல் விகாரம் பெற்றது

245. போதும - செலவோம், காணகுறப போதும் எனக,

246. யுத்த சன்னதத்து - போருக்கு ஆயத்தமாக, முளை - மைநதர், இருமுளைகளும் தேர் மருங்கு முடுகா உரவனுமதேர்மேல் முநதினான் என இயையும..

சிங்க ஒண்கொடித் தேருடன் உரவனும் செல,நால்
அங்க வெம்படைக் கடலுடன் அமைச்சர்மந் திரிகள்
திங்கள் வெண்குடை நிருபனைச் செருமியே சென்றார்
மங்குல் வல்லிடி எனத்தொனி முரசுகள் வயங்க. 247

முரச வாச்சிய முழக்கில்மூ உலகமும் நடுங்க
அரசர் கோன்வெளி ஆகினன் அரண்கடை நீங்கி;
பெருகு சாகரம் பொங்கியே பெயர்ந்துஎழு வதுபோல்
பரவு வாயில்கள் தொறும்தொறும் கெழுமின படைகள். 248

திடர்அ மிழ்ந்தன; திகிரிகள் அமிழ்ந்தன; செருமும்
கடறு அமிழ்ந்தன; கவர்அவல் நிவந்தன; கண்கள்
இடம்அ றிந்துஅள விடஅரிது என,உவ ரியினும்
படைபி றங்கின; உலகபா லரும்மனம் (பதைத்தார்). 249

நடுந டுங்கின திக்கயம், திகிரி,நா கங்கள்;
கிடுகி டென்றுஉழன் றனபுவி தமனியக் கிரியும்;
மொடுமொ டென்றன சேடன்மா முடிகள்ஆ யிரமும்;
படையி னம்பல படையொடும் நெருங்கிய படையால் 250

தனஞ்ச யன்தளத் திரளினும் திரண்டன தானை;
முனைந்த தோல்குல முழக்கினும் முழங்கின முரசம்;
இனங்கொள் பல்விதத்து இயல்பினும் வியனுறும் வியப்பால்
அனந்த நாமனைக் கிரிடிஅஞ் சலிசெய்தே அருள்வான். 251

(கலிநிலைத்துறை)

"ஈர்அறு யோசனை மூஅறு காதம தேசூழப்
பேர்இடி நேர்ரண பேரிகை ஒலிடு மே?பேணார்
தூரிய மேநமது ஓகையின் மேலிடல் ஏது?ஓதீர்;
வாரியின் மேல்வரும் வாகினி ஏது?இவை நுவல்வீரே. 252

---

249. திடர் - மணமேடு: திகிரி - மலை, கடறு - கடத்தற்கு அரிய வழி, அருஞ்சுரம், கவர் - (மண்ணை) வாரியதால ஏற்படட, அவல் - பள்ளம், நிவந்தன - உயர்ந்தன, இவகு நிரம்பின என்க.

250. கயமும், திகிரியும், நாகங்களும் நடுங்கின, புவியும தமனியக் கிரியும் உழன்றன என உம்மைகளை விரித்துக் கொள்க, தமனியக் கிரி - பொன்மலை, மேரு; படை - 1. சேனை, 2. ஆயுதம், 3.கூட்டம.

251 தோல் குல முழக்கினும் - யானைக் கூட்டங ளின் பிளிறல்ஓசையினும் அதிகமாக, அனந்தநாமன் - கணக்கற்ற திருநாமங்களை உடைய திருமால்.

252 தூரியம் - மகிழ்ச்சியோடு முழக்கப்படுகின்ற பறை, இதுவே அடுத்து ஓசை எனப்படுகிறது.

என்உயிர் அன்னவ னேபர ராசரி லேவீரம்
மன்னிய பேரிகை வாகினி மூரியும் உளவாறுஎன்?
வின்னிலை யோடுபல் வேல்நிலை ஆண்மையும் விள்வார்ஆர்?
இந்நகர் மாவரல் என்?நவ காரணம் ஏதோதான்? 253

நான்அரன் வேள்பிர மாஅமர் நாடினும் நாணாதேன்;
தான்ஒரு வேலினி லேவெலு வேன்;இகல் தான்ஊடா-
தே,நல வாய்மையி லேபரி யேகொள லேவீறு;
மான! வரோதய! வீரவ சீகர! மாநேயா!" 254

என்றலு மே,"பரி கொண்டுஇக லோடுஎய் தினனோ?" என்று
அன்றுவி னாவுமுன், அம்பரி யோடுபின் அகல்வீரர்,
"நன்றிந ராதிப! ராசவ சீகர! நரநாமா!
இன்றுபி டித்தனர் குந்தம்இ ரண்டும்இவ் விறைசேயர்; 255

சந்திர காசன்எ னும்பெயர் ஒண்குழை சாராமுன்
சந்திர சூரிய ரும்திசை மாறுவர்; தழல்நீராம்;
இந்திரன் வேதன்அ ரன்திரு மாலும்எய்து இகலாடார்;
கந்தர வாரிக ளும்திட லாம்;திடல் கடல்ஆமே. 256

மதியாது இத்தரை பரிதாள் வைத்திட மதமாக
இதமாய் உற்றமன் னவன்ஆர்? பித்து,அக லிடஏவால்
அதம்ஆக் கிடுவன்; எனவீ ரக்கரு விதமான
பதம்ஓ திப்பரி கொடுபோய் உற்றனர் இருபாலர். 257

---

253. பரராசர் - பிற அரசர்கள்; மூரி - வலிமை மிக்கவன்; வின்னிலை - வில்நிலை, வில்லாற்றல்; வேல் என்பது பொதுவாகப் படைக்கலம் என்ற அளவில் நின்றது; நவ - புதுமையான.

254. வேள் - முருகப்பெருமான், இகல் - போர்; ஊடாதே - போரிடாமல்; மான - பெருமைமிக்கவனே, வரோதய - தேவசுகையாக வந்தவனே! மா நேயா - திருமகள் கொழுநனே,என்பால பேரன்பு கொண்டவனே எனினுமாம்.

255. நர நாமா - நரன் என்னும ஒரு பெயரை உடையவனே.

256. வேதன் - பிரமன்; இகலாடார் - போரிடார்; சுந்தரவாரி - மேகங்களால் நீர்முகக்கப்படுகின்ற கடல், மூன்றன் உருபும் பயனும்உடன்தொக்க தொகை; திடல் - மேடு.

257. பித்து அகலிட - (அதிகாரப்) பைத்தியம் தெளிய; பதம் - சொற்கள்.

(தனதன தனந்த தான . . . . தனதன தனந்த தானனா*)

என,விழி சிவந்து தீகள் சிதறின; கைமென்று சோரி
இவனிடை உமிழ்ந்து வாயினால்
தனிபட படென்று மீசை அடிபட வெகுண்டு,'காம
தகனனில் வியர்ந்த கோபியாய்
முனிகுணம் இசைந்த ஓதை விசைஅதனில் அண்ட கோளம்
முகடுந டுவிண்ட; மேகம்ஏழ்
இனம்மலை இடங்கள் தேடி அடைதர வறந்த வாரி;
இமையரும் நடுங்கி னாரரோ. 258

தொடர்பொடும் நரம்பின்ஓதை இடிஒலி தவிர்ந்தி டாது
தொனிசெயும் விதங்கள் காணலால்
அடையலர் திரண்ட சேனை முழுவதும் மருண்டு வீழும்
அசனிமுன் எதிர்ந்த நாகமாய்ப்
புடவியில் மயங்கி, "யாது நவம்?"என ஒடுங்கி வீரர்
புரவலர் கலங்கும் நேரமே
படர்சுடர் விளங்கு தேசின் மணிமகு டகுண்ட லாதி
பதிமனது இரும்பது ஆகினான். 259

விகசித நரம்பின் ஓதை யினில்முகடு அகண்ட மேரு
மெலிவுடன் நடுங்க வீறதாய்,
"இகலுறு தல்நன்று நாமும் இகல்வதில் இரண்டு பேரும்
இமையரும் வியந்து காணவே
மிகும்அமர் தொடங்க வேணும்" எனஅவன் நினைந்த போதில்
விசயன்இ ரதம்க டாவலால்
செகதல மும்அண்ட கூடம் முகடுகி ழிகின்ற வாரி
திரைசுவ றுகின்ற போதவே. 260

நடுநடு நடுங்க மேரு திசைமலை தயங்க நாகம்
நரர்உர கர்உம்பர் வாடவே
மிடல்துவ சகம்ப மேவு கொடியின்அ னுமன்கு லாவி
வெடிகுரல் முழங்கு மோதை யால்

---

* இப்பாடல்களின் சந்தத்தை தனனதன தநத தான எனவும் பிரிக்கலாம். எப்படிப் பிரிததாலும் சில இடங்களில வகையுளி வரும்.

258. என - எனறு கூற, காம தகனன் - மாரனை எரிததவன்,சிவபெருமான்; வியர்ந்த - தினங்கொணட, அரோ - சற்றசை.

259. அசனி - இடி; புடவி - உலகம்; புரவலர் - மன்னர். 260. போத - மிகுதியாக.

கடுகிவ ருசந்த்ர காச னொடுவரு தளங்கள் மேனி
கடுகினர் மயங்கி வாடியே
இடிஎதிர் புயங்கம் மான புலிஎதிர் குரங்கம் மான
எரிஎதிர் வனங்கள் ஆனதே. 261

"எமதுச துரங்க சேனை மதியழி யஇந்த வாறு
இவன்வரு தல்நன்றி தே"எனா,
குமரிய ருள்கொண்டு வீறு கொடுஇவ னிலும்பல் ஓதை
கொளஅவன் நெருங்கு போதிலே
அமரின்வி சயன்ப தாதி மதிகதி அழிந்து சோர்வில்
அவனியில் மயங்கி வீழவே,
விமிதஅ ரி,நண்ப னோடு சொலுவன்"அ மர்எஞ்சி மாவை
விடநினை கிலன்கொல் நாளுமே! 262

இவனுடன் நயந்தி டாது அமரது தொடங்கில் ஊழி
இகலினும் இவன்கொ டான்;அமா!
அவனிப னைநண்ப தேகொ ளுவதுந லது"என்று, "யாழ்வல்
லபமுனி வ!சந்து போ"கெனா,
நவமுறும் இரண்டு பேரும் விடைசெய, மகிழ்ந்து ஏகி,
நரபதி யைவந்து காணவே,
தவர்வலி யசந்த்ர காசன் எதிர்கொடு பணிந்து மேவு
தவமுனி வன்முன்பில் ஒதுவான் 263

(கலித்துறை)

"செருமு கத்திடை தேவரீர் வருவதுஏது?" எனயாழ்க்
கருவி வல்லனை வினவலும் "கஞ்சனைப் பயந்த
திரும னோகரன் சீதரன் தேவகி குமரன்
அருளி னோடும்நின் னிடத்துஅனுப் பினன்,"என அருள்வான். 264

---

261. புயங்கம் - பாம்பு; குரங்கம் - மான்; மான - போல; எரி - தீ, வனம் - காடு.

262. குமரி - காளி.

263. அமா - அமமா, வியப்பிடைச்சொல்; அவனிபன் - அரசன்,சந்திரகாசன், யாழ்வல்லப முனிவ - யாழ் இசைத்தலில் வல்லமைபெற்ற நாரதரே; சந்து - தூது; தவர் வலிய வில்லாற்றலில் மிக்கவனாகிய.

264. கஞ்சன் - பிரமன்; திருமனோகரன் - இலட்சுமியின் உள்ளத்தைக் கவர்ந்தவன்;

"திக்கும் முப்புவ னங்களும் எதிர்இலாத் தீரத்து
அக்க வீரியன் தன்பரி என்றுநீர் அறிந்தும்
மிக்க சாலையில் கட்டுதல் வீறுஅல; சினத்தால்
நக்கில் எப்புவ னங்களும் எரியும்நன் னீறாய். 265

வனம்எ ரித்திடும் நாளினில், கடவுளர் வானர்
சினவுஇ வன்சரத் தினுக்குவெந் அளித்திடார் எவரே?
கனம்எ னக்குஅறச் சரவிர சால்ககு பங்க-
ளினைஅ டக்கிய விசயன்என் பதும்அறிந் திலிரோ? 266

(அறுசீர் ஆசிரிய விருத்தம்)

பஞ்சா யுதன்தன் னுடன்யுத்தம்
பயில்நாள் விசயன் மேனிதன்னை
அஞ்சா யுதமும் உடன்றிலவேல்
அதனில் திறத்த படையும்உண்டோ?
நஞ்சார் பணிப்பூ ணானுடனே
நடுங்கப் பொருது கொடுமரத்தால்
எஞ்சாது அடித்த அடிஉயிர்மற்
றெங்கும் வடுஏற் றதும்இலையோ? 267

முருகன் எனவே அசுரர்குலம்
முழுதும் உறுக்கி, பழுதுஅகலச்
சுரர்கள் உலகம் குடியேற்றி,
சுரர்கோன் அளித்த முடிதரித்து,
பரிவின் மதியக் குருஅயிரா
பதத்தில் ஏறி நகர்வலம்செய்
நரன்என்று அறிந்தும் பிடித்தபரி
நயந்து அனுப்பா திருப்பதுஎன்கொல்? 268

---

265. அக்கம் - தேர், தேரோட்டியாகக் கண்ணன் விளங்குகிறான் என்பதைக் குறிப்பால் உணர்த்த அக்க வீரியன் என்றார்.

266. வனம் - காண்டவ வனம்; வெந் அளித்திடார் - புற முதுகிடாதவர்கள், சுகுபம் - திசை, சிலேடைவகையால் மருதமரங்களையும் கொள்க. குபேரனின் மக்களாகிய நளகூபர மணிக்கிரீவர்ஆயர்பாடியிலே மருதமரங்களாசு நின்றிருந்தனர் கண்ணன்அம்மரங்களை வீழ்த்தினான். எனவே சுகுபங்களை அடக்கியவன்எனபபெயர் பெற்றான். அருச்சுனனும் திசைகளாகிய சுகுபங்களைஅடக்கியதால் கண்ணனின் தனிப்பெருமை நீங்கியதாம்.

267. பஞ்சாயுதன் - திருமால், பணிபபூணான் - அரவாபரணன், கொடுமரம் - வில்.

268. முருகப்பெருமானுக்கும் அருச்சுனனுக்கும் ஒப்புமை.

உருவம் உபயம்; உயிர்ஏகம்,
உலகுஉண்டு அளந்த வனும்நரனும்;
செருவில் சிலைகை எடுக்கில்அப-
செயம்ஏற் பதுஓர் தினமும்இலை;
மருவும் மால்தொண் டாயிருந்து
மாய னுடனே எதிர்ப்பதுஅன்று;
பரியை வலியக் கொடுத்தனுப்பிப்
பகைவிட்டு உறவு பயில்"கென்றான். 269

நரம்புக் கருவிக்கு உரியமுனி
நவிலும் மொழிகேட்டு இளநகைசெய்து,
அரும்பொற் கமல முகம்மலர்ந்தே,
"அரன்தொண்டு அரனோடு எதிர்ந்திலனோ?
விரும்புளம் இதயத்து அமர்ந்துடையான்
வியந்து தாச னுடன்பொருதில்
வரம்பெற் றனன்யான்? யாவர்எதிர்
வரினும் விலகேன்; பரிஅளியேன். 270

பார்த்தன் வலிவும், அவன்இரதப்
பாகன் வலிவும், அயன்வலிவும்,
கூற்றன் வலிவும், அவனைஉதை
கூத்தன் வலிவும் அறிவேன்யான்;
நீற்றன் தூது வரினும்,அரை
நிமிஷம் எனினும் கிரீடியுடன்
போற்றும் யுத்தம் புரியும்முன்னம்
புரவி உதவேன்;" என உரைத்தான். 271

"படைகள் பரிக்கு மின்பாகம்
பயிலாக் குறும்பர் பாரைவென்ற
துடினம் அதுவே எனஉணர்ந்தோ
சுவேத வாகன் றனைமதித்தாய்?

---

269. உருவம் உபயம் - வடிவம்தான் இரண்டு, உயிர் ஏகம் - ஜீவன் ஒன்றேதான்.

270. சிவபெருமானின் அடியானாகிய அருச்சுனன் சிவபிரானுடன் மோதலாம் எனில் விஷ்ணுபக்தனான நானும் கண்ணனுடன் போர்புரியலாம் என்றபடி. தாசன் - அடியவன்.

271. கூற்றன் - இயமன், கூத்தன் - நடராசப்பெருமான்; நீற்றன் - திருநீறு சண்ணித்த திருமேனியையுடைய சிவபெருமான்.

272. சுவேதவாகன் - சுவேதவாகனன், அருச்சுனன், இப்பாடலின் முற்பாதி தெளிவாக விளங்கவில்லை; என - என்று நாரதர் கேட்க; மன்- சந்திரகாசன்.

அடைவின் அவன்வல் லமைமுழுதும்
அறிவேன் என்ற விதம்?மறையோர்
கொடையில் உலகம் முழுதளிக்கும்
கோவே!" என,மன் கூறலுற்றான் 272

"அனிகம் பதினோர் அக்ரோணி
அதனைத் தினமும் வாதில்வென்ற
முனியன் அலது வேறுதிறம்
உண்டோ? பகரும்; ஒருகணையில்
வினவும் உபய திறத்திலுள
வேந்தும் படையும் அழித்திடலாம்;
சொனசொல் வழிஇப் போதுஅமரில்
துணிப்பேன், அடிகள் அறிய;"என்றான். 273

(கலித்துறை)

"நின்னில் வல்லமை உள்ளவர் எண்ணரும் நிருபர்
மன்இ வன்கணை யால்உடல் அழிந்துஉயிர் மாய்ந்தோர்;
கன்னன், வீடுமன், சகுனிசல் லியன்,பக தத்தன்,
உன்னித் தாமன்,து ரோணன்,ச தாயு,சு தாயு. 274

பூரி, சயத்திர தன்,கிரு தன்,கிரு பன்,காந்
தாரி புத்திரர் சதமரை, புதல்வரை, தக்க
வீரர் வீரரை, வேந்தரை, சேர்ந்துள பேரை
பாரி லேஅதம் பண்ணவல் லவர்எவர் பகரில், 275

நின்னை ஒத்தஎண் ஏழுதே சத்துஉறும் நிருபர்,
அன்ன விட்டுணு புத்திரர், மற்றுளோர் அடங்கச்
சின்ன முற்றிட அறுத்தவன் சிலைக்குஎதிர் செயிர்த்து
முன்னில் நிற்கவும் வலர்எவர் மூவுல கதனில், 276

---

273. அனிகம் - படை; முனியன் - வில்லையுடையவன்.

274. உன்னித்தாமன் - அசுவத்தாமா.

275. பூரி - பூரிஸ்ரவசு; கிருதன் - கிருதவர்மன்; கிரு பன் - கிருபாசாரியார்; காந்தாரிபுத்திரர் சதமர் - கௌரவர் நூற்றுவர்; அதம் பண்ணுதல் - அழித்தல்.

276. எண்ஏழு - ஐம்பத்தாறு; நிருபர் - மன்னர்.

சீத ரன்சொலைக் கடப்பதன்று அவன்சினே கிதன்பால்
மோது போர்க்குஎழல் அன்று;மால் முரணினும் முரணும்;
காதும் மூவர்கள் கணைதொடுத் திடுவர்போர் கடுக்கில்;
போத நீறும்முப் புவனமும் உயிர்எலாம் பொடியும். 277

தக்க வெஞ்சினத் தொடுகட வுளர்சபித் திடுவர்;
மிக்க போர்வில குதல்நலது" எனமுனி விளம்ப,
தொக்க மூவர்கள் சுடுசரம் ஒழியமற் றுளதோர்
திக்கு ளோர்சரம் தொடுப்பதுஎன்று உறுதிசெப் பினனே. 278

"இருவ ரும்செயிர்க் காது,பேர்க்கு ஒருசரம் எய்து,
சரம்வ லுத்தவன் தனக்குஇளைத் தோன்இறை தரல்என்று
அரசு உரைத்திட அவ்விதம் நார்அம் பொருந்தி
மறம்அ றைந்திடு"என்று உரைத்தலும் மறைந்தனன் கடிதில் 279

"இருத ளத்துஉர வோர்களே உகைத்திடல் அன்றி
ஒருச ரத்தின்மேல் இருவரும் விடுகுதல் இல்"என
மருவு வஞ்சின உறுதிமா மொழிமனன் வடித்தான்;
கிரிடி பால்முனி சகலமும் உன்ரத்தனன் கிளர்ந்து. 280

அந்த வாசகம் கேட்டலும் இவன்அகம் மலர்ந்து,
சந்த்ர காசன்ஒத்து இவனும்வஞ் சினமொழி சாற்ற,
பிந்தி டாதுஅவண் சயந்தனம் பெயர்ந்துமால் நடத்த,
சுந்த ரக்குணத் தொனியுடன் நடந்தனன் துணிந்தே. 281

"இருவர் சொற்றசொல் அறுதியாம்; உறுதிநன் மொழிக்கு
முரண்உ லாவுஇரு தளத்தரும் முகுந்தனும் முனியும்
கரி"எ னக்கொடும் கார்முகம் இருவரும் குனித்து,
ஒருச ரம்தொடுத் து,உகைத்தனர் தளத்தினில் உரமாய். 282

---

277. அன்று - தக்கதன்று.

278. முனி - நாரதர், மூவர் - பிரமன், திருமால் உருத்திரன்; திக்குளோர் - எண்டிசைப்பாலர்.

279. செயிர்க்காது - போரிடாமல்; நார் - அன்பு, அகம் - உள்ளம், தயவுசெய்து கூறுங்கள் என மன்னன் முனிவரைவேண்டுகிறான், மறம் - வீரம்.

280. வஞ்சினம், உறுதி, மா என்னும் மூன்றொடும் மொழியைத் தனித்தனியே கூட்டுக; மனன் - மன்னன், சந்திரகாசன்.

281. அறுதி - தீர்மானமானது; முனி - நாரதர்; கரி - சாட்சி,கார்முகம் - வில்; குனித்து - வளைத்து.

சோதி ஆசுகம் இறையவன் குமரியைத் துதிசெய்து
ஆத ரத்துடன் விடுத்தனன்; ஒருசரம் அதனில்
வேத அக்கினை உன்னிஅ ருச்சுனன் விடுத்தான்;
காதுஇ ரண்டுவெங் கணைகளும் தளங்களில் கவிந்தே, 283

(வண்ண விருத்தம்)

(தானந் தனன தந்த . . . . தானந் தனன தந்தனா)

மேகம் தனில்எ ழுந்த கோலம் குலவு சம்பை
வீறின் கரம்இ யங்கவே
நாகம் பரிர தங்கள் ஆளும் சிதறு துண்டம்
நாறும் படிகு விந்தவால்;
யூகங் களும்நெ ரிந்த தியாரும் பயமி குந்த
ஊமன் கனவு கண்டபோல்
ஆகந் தளர அஞ்ச ஏவும் கருக ரென்றுஅ-
னீகங் களைஅ ரிந்ததே 284

தேரின் குலம்அ னந்தம் ஊர்உந் திகள்பி ளந்த;
சீர்மஞ் சுகள்பி ளந்த;நீள்
ஆரும் கொடிபி ளந்த; மேலும் குடைபி ளந்த;
ஆடும் துவச கம்பமோடு
ஏரின் பரிபி ளந்த; சூதன் தனுஅ ழிந்த;
ஏறும் மிதிபி ளந்த;வெங்
கூரின் படைபி ளந்த; நீறுஒண் துகள்செ றிந்த
கோரம் செறிர தங்களே. 285

தாலம் துணிதி ரண்ட; தாலும் பலஉ ருண்ட;
தாயம் குதம்அ றுத்த;நீள்
வாலும் எயிறுஅ றுந்த; மேல்மஞ் சுகள்பி ளந்த;
வார்கிம் புரித கர்ந்த;வன்

---

283. ஆசுகம் - அம்பு; அக்கி - தீக்கடவுள்; உன்னி - தியானித்து; காது- போராடுகின்ற;

284. சம்பை - மின்னல்; நாகம் - யானை, குவிந்தவால் என்புழி ஆல்அசை; அனீகம் - படை; அரிந்தது - துண்டாடியது.

285. உந்தி - சக்கரம்; மஞ்சு - தேரில் உட்காரும் கட்டில; ஏரின் - அழகிய, தனு - உடல்; கோரம் செறி - கொடுமைக்குள்ளானகுதிரைகள் பூட்டப்பெற்ற எனினுமாம்.

நீலம் செறிக டங்க ளோடும் குருதி மண்டி,
நேர்செம் பவளம் என்றுநால்
பாலும் பெருகி அண்ட (நாகங் களும்இறந்த)
பாரம் சிதைய மண்டியே. 286

வண்ண விருத்தம்

(தனனந் தனன தந்த ..... தனனந் தனன தந்தனா)

கலினம் செறிது ரங்க முகமும் தலைபி ளந்த;
களமும் குசைபி ளந்த;கால்
இலகுஅங் கமும்அ றுந்த; பலதுண் டுகள்வி ழுந்த;
எழுசெங் குருதி பொங்கலால்
மலியும் திரள்பி ணங்கள் மிகவும் பலமி தந்த;
வருணம் செறிது சங்கள்தார்
சிலையும் குடைமி தந்த; கறைஉந் திகள்ப ரந்து
செலவெந் திரைய டங்கவே 287

கரம்அம் புயம்மு ழங்கை அதரம் குழைமு கங்கள்
கவுள்கந் தரம்ம ருங்குல்வாய்
உரம்உந் திகள்மு ழந்து சரணம் கருது சந்து
உயரும் சிரசுஇ னங்கள் ளோடு
அமர்உந்து அவய வங்கள் பலவும் சிதறு கின்ற
அசிவண்டு இடறு கின்றதால்,
பரிசன் கிரிடி மைந்தன் அமிர்தன் பலர்தி ரண்டு
பகர்வெஞ் சமர்தொ டங்கினார். 288

விசயன் றனைஅ டைந்து விரவும் பலர்தி ரண்டு
விடுவெஞ் சரம்அ டங்கவே
அசிவெங் கணைபி ளந்த; பதினெண் சமரில் நந்தும்
அளவில் தளம்நொ றுங்கவே,

---

286. தாலம் - யானைக்காது; துணி - யானையின் மேல் போர்த்தப்பெற்ற சீலை, தாலு - மத்தகம்; எயிறு - தந்தம், மஞ்சு - யானையின் முதுகு, வார் - பெரிய; கிம்புரி - தந்தத்தில்அணிவிக்கும் பூண்; கடங்கள் - (மூன்று) மதங்கள்; நாகங்கள் - யானைகள்.

287. கலினம் - கடிவாளம்; குசை - பிடரிமயிர்; அங்கம் - எலும்பு; வருணம் செறி - நிறம் மிக்க; கறை - உதிரம், உந்தி - ஆறு.

288. அதரம் - உதடு; கவுள் - கன்னம், கந்தரம் - கழுத்து, மருங்குல்- இடை, உந்தி - கொப்பூழ்; முழந்து - முழங்கால், சந்து - தொடைச்சந்து, இங்கு தொடைகளை உணர்த்துகிறது; அசி - படைக்கலங்கள்; வண்டு - அம்பு, பரிசன் - பரிசத்துவசன்;கிரிடி மைந்தன் - பப்பரவாகனன்.

வசிவெம் படைஇ டந்த வலுவின் திறமை கண்டு
மனம்அஞ் சினர்அ டங்கவே;
சசியின் பிரபை அங்க மகிபன் கரம டைந்த
சரமன் றடல்த விர்ந்துமேல் 289

விசயன் கதழ்வு கொண்டு விசைமொய்ம் புஉரம்மி குந்து
விலின்முன் புதைசெய் கின்றதுஓர்
சுசிவெங் கணைஇ ரைந்து குவடுஎண் திசைவ ளைந்து
தொடவிண் டலம்அ டங்கவே
பசைஒன் றறஉ கந்தம் உறும்அங் கியின்ம டங்கல்
பரவும் படிநெ ருங்கலால்
அசைவின் றியதளங்கள் எரிமுன் சருகுள ரிந்தது
அனவெந்து அடலை கொண்டதே 290

திரையும் தழல்ப ரந்த; கிரியும் தழல்ப ரந்த;
திசையும் தழல்ப ரந்த;நீள்
கரியும் தழல்ப ரந்த; மகியும் தழல்ப ரந்த;
ககனுந் தழல்ப ரந்த;ஏழ்
தரையும் தழல்ப ரந்த; புயலும் தழல்ப ரந்த;
சகலங் களும்எ ரிந்தநால்,
அரவங் களும்ஒ டுங்க அரியும் கொதிஎ ழுந்த
அபயம் பலஎ ழுந்ததே. 291

வருணன் கதற, உந்தி மகரம் கதற, மஞ்சு
மழையும் கதற, உம்பர்பூ
நரரும் தேற, உந்து உரகருங் கதற வும்,தென்
நமனும் கதறி அஞ்ச,எண்
கரியும் கதற, நின்ற கிரியும் கதற, விண்டு
கமடம் கதற வும்,சரா-
சரமும் கதற அண்ட முகடும் தடவு கின்ற
சரவெந் தழல்கள் பொங்கவே. 292

---

289. பதினெண்சமர் என்றது பதினெட்டு நாள்கள் நடைபெற்ற பாரதப் போரை; வசி - கூர்மையான.

290. சுசிவெங்கணை - தீயம்பு, ஆக்னேயாத்திரம்; உகந்தம் - உகம்+ அந்தம், உகாந்தம் எனத் தீர்க்க சந்தி பெற்றுச் சந்தம்நோக்கிக் குறுகியது; அங்கியின் மடங்கல் - நெருப்பிடி.சிறப்பும்மை தொக்கது; அடலை - சாம்பல்.

291. திரை - கடல்; மகி - நிலம், ககன் - வானம்; அரவங்கள் - (எட்டுப்) பாம்புகள்; அரி - காற்று; அபயம் - அபயக்குரல்; இப்பாடலில் சொல்பொருள் பின்வருநிலையணி பயின்றது.

292. கமடம் - ஆமை, ஆதிகூர்மம்; சராசரம் - இயங்குதிணை,நிலைத்திணைப் பொருள்கள்.

சுடரும் திசைம யங்கி வெருவும் படிபி றங்கு
தொகுவெந் தழல்நி மிர்ந்ததால்,
அடரும் கசது ரங்கர் சனமைந் தரும்அ டங்கி
அலறும் தொனிமு ழங்கவே,
முடிதங் குமன ரும்பல் மனரும் சொரிச ரங்கள்
முழுதும் பழுது கொண்டுநீ-
றிடவும் சலத ரங்கள் சொரியும் படிக வர்ந்த
இறைவன் கணைசொ ரிந்தரோ, 293

வருணன் சலச ரங்கள் பலரும் தொடநெ டும்புல்
மரம்என் துளிபி றங்கவே,
சொரியும் பிரள யங்கள் அவியென்று உணவு கொண்டு
சுடர்அண் டமுகடு அண்டவே,
வெருவுண்டு அகம்உ ழன்று, விருதும் சகது ரங்க
இரதங் கள்கலை அங்கமே
கருகுண் டு,மிக வெந்து, உளறும் சொல்அல றும்சொல்
கடலின் தொனியின் மிஞ்சவே, 294

கரடம் கடக யங்கள் கருகுண்டு உலரி நின்று
கரம்மஞ் சொடுசு ருண்டகார்
விரியும் படலம் என்று மிகவெந் த;பரி வெந்த;
இரதங் கள்,மனு வெந்த;மேல்
அரசன் மதிக லங்கி, மிகநொந்து,அலம லந்து,
அனிகங் கள்அழி கின்றதால்
உரமும் பெருமை மங்கி, உடல்எங் கணும்ந டுங்கி,
"உலகு உண்டவனை அன்றியே, 295

முனிவன் சொனவி தங்கள் தனிலும் சதம டங்கு
முரணன் கிரிடி என்றுதான்
மனதின் கணில்நி னைந்து,கரியன் சொலைஇ கழ்ந்த
மதம்இன்று அறிய வந்துளனா,

---

293. சனமைந்தர் - காலாட்படையினராகிய வீரர்; நீறிப - சாம்பலாக; சலதரம் - மேகம்.

294. பலரும் வருணம் (சுணையாகிய) சல சரங்கள் தொட என இயையும்; புல்மரம் - மூங்கில்; வெருவுண்டு - அஞ்சி;

295. சுரடம் கடகயங்கள் - சுவடுகள் ஏற்படுமாறு மதத்தைப் பொழிகின்ற யானைகள், சுரடக்கட எனற்பாலது சந்தம் நோக்கி மெலிந்தது; சுரம் - துதிக்கை; மஞ்சு - யானையின் முதுகு; மனு சாலாட்படை, மேல் - அதற்குப்பிறகு; அனிகம் - சேனை

296. முனிவன் - நாரதர்; முரணன் - வலிமையுடையவன்; மனதின்கணில் - உள்ளத்தில், உருபுமேல் உருபு, கரியன் - சுண்ணன்.

தனிவெஞ் சரமது ஒன்று மிடல்கொண் டிடில்எ திர்ந்து
தனுமுன் பொருவர் எங்குளார்?
கனகம் திகழ்ப டங்கள் தனில்முன்பு எழுது வென்றி
கனமும் தகும்இ வன்கணே;" 296

(கலி விருத்தம்)

என்று உரைத்தனன்; நெட்டுயிர்ப் பிட்டுஎதிர்
நின்ற னன்திகைத் தே;நெடி யோன்துணை-
வன்றன் வெங்கணை அக்ரோணி ஆயிரம்
பொன்ற நீற்றபின் புங்கம் அடைந்ததே. 297

சந்த்ர காசன்ச ரம்பனெட்டு அக்ரோணி
தந்தி ரங்கள்த மைப்பிளந்து ஏகலை
இந்தி ரன்கும ரன்கண்டு "இவன்முன்நாம்
பந்த மாய்இகல் பண்ணில்ப லிக்குமோ?" 298

என்று உனித்துதித்து ஏந்தலைச் சிந்தையால்
அன்று மெய்த்தஅ ருச்சுனன் நின்றனன்;
மன்றல் வீரவர் மன்முதல் மன்னர்கள்
வென்றி வில்லிதன் வெற்றிகொண் டாடினார். 299

தன்னை அன்றித் தளம்உப யத்துஉளோர்
அன்ன பற்குணன் ஆண்மையை மெச்சினர்;
மன்னர் மன்னனை மாயனும் வில்லியும்
உன்னி யேஉரை யாடிம கிழ்ந்து.பின், 300

இருவர் தேர்விட்டு இழிந்துஎதிர் ஏகலும்
நிருபன் வேறு நினைவுஅற நிற்றலால்,
வருதல் நாரத மாமுனி கூறவே,
அரசன் தேர்விட்டு அவனியில் ஆகியே, 301

---

297. நெடியோன் துணைவன் - அருச்சுனன்; புங்கம் - அமபறாத் தூணி.

299. உனி - எண்ணி, அன்று - அப்பொழுது, மெய்த்த - உண்மையானவனாகிய; என்று உனி, மெய்த்த அருச்சுனன் அன்றுஏந்தலைச சிந்தையால் துதித்து நின்றனன் என இயையும்.

301. இருவர் - கண்ணனும், விசயனும், நிருபன் - அரசன், சந்த்ரகாசன்.

எதிர்கொண் டேவலம் செய்துஉயர் மாயனைப்
பதம்உ வந்து, பணிந்து, புகழ்ந்தபின்,
அதிக பற்குணர்க்கு அர்ச்சனை செய்யும்முன்
மதிமன் வில்லிபொன் மார்பினில் புல்லினான். 302

புல்லி வில்லியைப் பூபதி போற்றவும்
வில்லி மெச்சிவில் வேந்தனைப் போற்றவும்,
வல்லன் வேந்தன் மகன்இரு வோருமாய்
அல்லி நாயகன் அங்கிரி வணங்கினார். 303

வீர வர்மனும், மிக்க பரிசனும்,
வார பப்பர வாகன், அமிர்தனும்,
சார மாம்விட கீதனன் மற்றுளோர்
சேர வந்துஇறை செஞ்சரண் போற்றினார். 304

ஒருவ ருக்கொரு வோர்உப சாரமாய்ப்
பரவித் தேனுடன் பால்எனக் கூடினார்;
இருத ளங்களும் எய்திஒன் றானபின்
அரிதன் நாமம் அனந்தமும் கூறிப்பின், 305

"வருக! என்மனைக்கு என்றுவ ணங்கியும்,
இருவர் தம்மையும் யாரையும் கூட்டியே,
அரசன் ரத்னசிங் காசனத்து ஆயனைப்
பரிவின் வைத்துப் பணிந்து புகழ்ந்தபின், 306

வில்லி தன்னையும் வேந்தர்கள் தம்மையும்
மெல்ல மாமணி ஆசனத்து ஏற்றியே,
நல்ல வாய்மை நயந்துஎதிர் கூறியே,
இல்லில் ஐந்து தினம்விருந் திட்டனன். 307

அல்கல் ஐந்துசென்று ஆனியம் ஆறினில்
மல்குஅ லங்க்ருத வாம்பரி இரண்டையும்
புல்கு பல்கலன் பூட்டிக் கிரீடிமுன்
நல்கி, நன்மொழி நண்புடன் ஓதியே, 308

---

303. வல்லன் - வலியவனாகிய சந்த்ரகாசன், வேந்தன் மகன் - இந்திரன் மகன், அருச்சுனன்; அல்லிநாயகன் - மலர்மகள் கொழுநன்; அங்கிரி - திருவடி.

306. யாரையும் - யாவரையும் (அனைவரையும்) என்ற பொருளில் ஆளப்பட்டுள்ளது.

308. அல்கல் - இரவு; ஆனியம் - நாள்.

தாம னுக்கும் தனஞ்சய னுக்கும்நன்
மாம ணித்திரள் மாழை கலன்பல
ஏம முற்ற பொருள்திறை ஈந்தனன்;
காமன் அத்தன் கவல்வன் அவனுடன் 309

"மன்னர் மன்னவ னேமகிழ் வாகநீ
உன்னி யின்பிறகு ஒக்கவந் தே,மகம்
தன்னை முற்றுதல் செய்து,பின் தான்வருக;"
என்ன, வெற்றி இறைமகிழ்ந்து ஓதுவான் 310

"பாரின் நாத!நின் பண்புறு தாளையும்,
வீர வீரியன் வில்லியை, வேள்வியைச்
சாரும் மெய்த்தரு மன்தரி சிப்பும்விட்டு
ஊரில் நான்தனித்து ஒப்பி இருப்பனோ? 311

உனது தாள்தொழுது உன்னியின் பின்புவந்து,
அனகன் அன்ன அறன்சுதன் வேள்விகண்டு,
இனிய வில்லிக்கு இயல்துணை யாகநான்
மனம்ம கிழ்ந்துஎய் துவன்"எனக் கூறியே, 312

தானை நூறுஅக்கு ரோணி தருமர்க் குஈந்து,
ஏனை பொன்மணி இன்கலை நன்கலன்
ஆன பல்பொருள் யாவும் அருச்சுன
மான மன்னன் வசத்தினில் ஈந்து,பின், 313

மக்கள் தம்மையும் மந்திரி தந்திரி
ஒக்கல் அன்ன உரித்துடை யோர்களை
தக்க நன்னகர் தன்னில் இருத்தியே,
மிக்க சேனையும் வேந்தும் எழுந்தனன். 314

நவம ணிக்குடை நல்கிய நீழலில்
கவின்இ லங்குஇரு கல்கியும் செல்லவே,
தவழ்ந றும்புகை தண்முகில் ஒப்பவே,
அவனி திக்குஅந்த ரங்களும் மூடவே, 315

---

309. தாமன் - பரந்தாமன்; மாழை - பொன்; காமன் அத்தன் - மாரன் தந்தை, திருமால்; கவல்வன் - கூறுவான், விரும்பல் என்பது விருப்பத்தைச் சொல்வல் என ஆளப்பட்டுள்ளது. 311. பாரின் நாத - சகுந்நாதனே.

வேத கோஷம்கொள் வேதியர் வாக்குஒலிக்கு
ஓத ஓதையும் ஒப்புஅல என்றிடில்
ஏது வாம்ஐந்து இயங்கள் முழங்கிடும்
நாத ஓதைக்கு நாம்இணை சொல்வதுஎன்? 316

உன்னி யின்பினில் ஓமங்கள் எக்கியம்
துன்னி வேதியர் சுத்தியு டன்செய
மன்னு கிள்ளைகள் வடபச் சிமதிசை
தன்னை நோக்கி விருதுடன் சார்ந்தவே. 317

உபய கல்கியும் உத்தர மேற்கதாய்
உபய வேக முடன்செலச் சேனைகள்
சபல மாய்ப்பின் சலதியிற் செல்லவே
அபயர் அன்ன அரசரும் ஏகினார். 318

(எழுசீர் ஆசிரிய விருத்தம்)

சந்த்ர காசன் வீரவர்மன் தருமன் அன்ன பரிசனும்
அந்தம் மேவும் பப்ர வாகன் அமிர்தன் நீலன் சாளுவன்
நந்தன் மைந்தன் தம்பி பேரன் நம்பு பத்ர கிரியினான்
இந்தி ரன்கு மாரனோடு இயைந்து சூழ்ந்து(அங்கு) ஏகினார். 319

அரிச யந்த னம்செ லுத்த அரசர் சேனை சூழ்தர,
பரித னைத்தொ டர்ந்து வந்து பார்த்தன் அன்பொடு ஏகும்நேர்
துரக தங்கள் உபயம் வேக துரித மோடுஅ நிலதிசை
கருதி நோக்கி மதிஇ ரண்டு காட்சி யோடு சென்றதே. 320

பராச ரேச ரிஷிசு தன்ப கர்ந்த வாறில் அற்பமும்
விரோத மேவ ராத வாறு விவர மோடு முற்றியே,
முராரி தேர்ந டத்த வீர முரசு இனங்கள் குமுறவே,
புராரி பத்தன் விசய நாம பூபன் ஏகி னான்அரோ. 321

---

315. கல்கி - குதிரை. 316. ஓத ஓதை - சுடலொலி; ஐந்து இயங்கள் - பஞ்சவாத்தியங்கள்.
317. கிள்ளை - குதிரை. வடபச்சிம திசை - வட மேற்கு.
318. சபலமாய் - வெற்றியுடன், நல்ல வலிமையுடன் எனினுமாம்; சலதியில் - சுடலைப்போல.
319. நந்தன் - கண்ணன், மைநதன் - பிரத்யும்நன்; தம்பி - சாத்தகி, பேரன் - அநிருத்தன்
320. அநிலதிசை - வாயுமூலை, வடமேற்கு.

இடையி லுள்ள தேச ராசர் இவுளி லக்க ணங்கள்ஏர்
உடைய தான புரவி பற்ற உளம்நி னைந்து முடுகுவார்;
அடைய லார்கள் சிங்கம் என்று அரித்து சம்ப டைத்தவன்
கொடியி னோடு விருது கண்டு குலைகு லைந்து வாடியே, 322

பொன்க லிங்கம் ரத்தி னங்கள் பூஷ ணங்கள் பல்பொருள்
நன்கின் ஈந்து சந்த்ர காசன் நளின பாத மதுதொழும்
முன்," கி ரீடி சரண்இ றைஞ்சும்" என்று ராசன் மொழியவே,
மன்கள் நாய கன்சொல் கண்டு மறுகி வாழ மனர்எலாம் 323

நடுந டுங்கி, உடல்த ளர்ந்து, நாவ றண்டு, பரிகளைக்
கடுகி வந்து பூசை செய்து, கனதி யான திறைகள் வைத்து
அடிப ணிந்து, விசயன் ஏவ லதுசெய்து, ஒத்து விரவவே,
படியில் வேறு பகையது அற்ற; பாரும் வந்தி றைஞ்சலால். 24

(அடுத்தபாடல் ஏட்டில் எழுதப்பெறவில்லை)

இந்த வாறு மன்னர் யாரு மேஇ றைஞ்சி இறைதரச்
சிந்தை கூர, மனம கிழ்ந்து தெய்வ ராச புத்திரன்
"சந்த்ர காசன் கெடிஇது" என்று தனது அகத்தில் எண்ணவே,
தொந்த மாவி னைத்தொ டர்ந்து சுத்த வீரன் ஏகினான். 326

மதிஇ ரண்டுஇவ் விதம தாக மாவி னோடும் ஏகினார்;
இதுஅ றிந்து கொளுநீ என்று இராச னுக்கு இருடிசொல
"அதிச யங்கள் மிக்கது இந்த அரசன் சந்த்ர காசன்நற்
கதைஅ லங்கி ருதமது"என்று காது அகம்கு ளிர்ந்தனன். 327

சந்திரகாசன் போர்ச் சருக்கம் முற்றிற்று
ஆகச் சருக்கம் 18க்கு விருத்தம் 3666

---

323. கலிங்கம் - ஆடை, பூஷணங்கள் - அணிகலன்கள்; மன்கள்நாயகன் - அரசர்களுக்குத் தலைவன். 324 சனதியாவ - நிறைய; படி - உலகம். பாரும் வந்து இறைஞ்சலால் படியில் வேறு பகையது அற்ற என இயையும்.

326. சிந்தைகூர - முடிவு செய்து செயலபட; தெய்வராச புத்திரன்- இந்திரனின் மகன், அருச்சுனன்; கெடி - தலைமையின் விளைவு,ஆதிபத்தியம்; சுதத வீரன் என்றது சந்த்ரகாசனை; மன்னர்யாருமே இறைதரச் சிந்தை கூர, தெய்வராச புத்திரன் மகிழ்ந்து, எணணவே, சுத்தவீரன் ஏகினான் என்பது முடிபு.

327. மதி - மாதம, இராசன - செனமேசெயன்; இருடி - வைசம்பாயனர்; அலங்கிருதம - அழகானது, ஒப்பணைசெய்யப்படடது, காது அகம் - செவியும் உள்ளமும்,உம்மைத்தொகை.

19. சமுத்திரச் சருக்கம்

(எண்சீர் ஆசிரிய விருத்தம்)

மிக்கதவம் புரிந்தபசு மாசு ரற்கு
வேண்டுவரம் கொடுத்தவுடன் வெரிநிட் டோடும்
முக்கணனைப் புரந்தருள அதிக ரூப
மோகினிஆ னவனை,அங்கி மூன்று கண்ணாள்
துர்க்கைஐந்து கரன்ஆறு முகனும் மற்ற
சுரருடன்ஐ முகன்எதிர்ந்து தோல்வி யாகி
மக்கிமெலி வுடன்ஓட வாணன் வாகு
மடியவிடும் நேமியனை வாழ்த்து வோமே.

மானசெய மேசெயபூ பாலன் மென்மேல்
வைசம்பா யனமுனியை மகிழ்ந்து போற்றி,
"ஞானமா தவத்தோனே! அதன்மேல் மாக்கள்
நடந்ததிக்கில் விளைந்தபல நவங்கள் தேன்பால்
பானம்எனச் செவிக்குஅமிர்தம் சொரிவீர்;" என்று
பணிந்தமகி பனைஇருடி பணிந்து நோக்கி,
"ஈனம்அற ஒருதாரைச் சிந்தை யாய்க்கேள்"
எனமுனிவன் புளகிதம்உற்று இயம்ப லுற்றான்.

பவனதிசை யதுநோக்கி உபய மாவும்
பகரும்இரு மதியாக நடந்த போதில்
கவனதுர கங்கள்விழி காண வேஆர்
கலிதோற்றக் கடற்கரையே மார்க்க மாக,
தவனமுற நடந்தளவில் தொடர்ந்து சேனா
சமுத்திரமும் சமுத்திரமும் சார்ந்த வாறாய்க்
கவினுறும்நால் அங்கமெனும் தானை வெள்ளம்
கரைகாணாப் பிரளமாய்க் கலந்தே செல்லும்.

---

1. அங்கி - அக்கினி; மூன்று கண்ணாளாகிய துர்க்கை என்க; ஐந்துகரன் - விநாயகன்; ஐமுகன் - சிவபெருமான், வாகு - தோள், நேமியன் - சக்கரததை உடைய திருமால், இக்காப்புச் செய்யுள் திருவரங்கக கலம்பகததின், "மோடி ஓட அங்கி வெப்பு மங்கி ஓடஐங்கரன் முடுகி ஓட முருகன் ஓட முக்கண ஈசன் மக்களைத தேடி ஓட வாணன் ஆயிரம்புயங்கள் குருதிநீர் சிந்தி ஓட நேமி தொட்டதிருவ ரங்க ராசரே" (39) என்னும் பகுதியை நினைநது பாடியதாகும.

2. நவங்கள் - புதுமைகள, ஒரு தாரை - ஒரே வழியில் செல்லும்.

3. பவனதிசை - வாயுமூலை, வடமேற்கு; ஆர்கலி - கடல், தவனமுற - விருப்பத்தோடு;

கரைகாணாப் பெருவாரிச் சேனை நாப்பண்
கமழும்நறைப் புகைகெழுமி எழும்பும் தோற்றம்
திரைஆழி மையமதில் சலபா னம்செய்து
இருண்டுஎழுந்த குயிற்படலத் திரள்நேர் ஒப்பாம்;
முரண்வீரர் கரவேல்கள் மினலை ஒக்கும்;
முரசுஇனங்கள் இடியேற்றின் முழக்கம் ஒக்கும்;
சுரர்கூடிச் சொரிமலரும், சிவிறி வாயால்
சொரியும்நறும் பன்னீரும் சோனை போலாம். 4

சலசைமார் பகன்ஆன உயர்மால், பஞ்ச
சனியம்வீ ரியபார்த்தன் தானும் நம்பால்
உலவிவரு குவதெனவே மகிழ்ச்சி யோடும்
உபசரித்துப் பாயல்விரித்து உவப்ப போலும்,
இலகுகங்கை யொடும்வருணன் உபய பாலும்
இரட்டியசா மரைபோலும், எமைஆள் என்றே
உலகுஅளந்துஉண் டவன்சரணம் இறைஞ்சல் போலும்
உதகஅலை பிறங்கியது கரைகள் தோறும். 5

மலர்மகள்நா யகன்நம்உழை வந்தான் என்னும்
மகிழ்ச்சியினால் மணியினம்கொண்டு அழகுஆ லத்தி
சலமகள்வீ சியபோலும்; அணிகள் பார்த்தன்
தாளில்இடு திறைபோலும்; சடில மாவைப்
பொலியும்மணி கொடுபூசை புரிதல் போலும்;
போதகம்ஆம் கரும்அலையால் புணரி தூக்க
வலிதுவரு தெனப்பரந்து . . . . . .
வானிதனைக் கண்டுஉத்தி வயங்கும் சத்தம். 6

(கலிவிருத்தம்)

இந்த வாறுஇரு நாழிகை தூரமே
அந்த வேலை அறல்பரந்து ஏகிமீண்டு
உந்தும் ஓய்வுஒழிவு இன்றிஉ றும்திரை
விந்தம் வெள்ளி மலையினும் மிக்கதே 7

---

4. நாப்பண் - நடுவே; சலபானம் - நீர் குடித்தல், சிவிறி - பீச்சும்குழல்.

5. சலசை - திருமகள்; பஞ்சசனியம - குதிரை, உதகம் - நீர்.

6. சலமகள் - நீராகிய நங்கை, சடில மா - குதிரையாகியவிலங்கு, இருபெயரொட்டு, போதகம ஆம் - யானையைப்போன்ற, ஆதல உவமைபபொருட்டு, புணரி - கடல; வானி - படை, உததி - சமுத்திரம்

7. வேலை - கடல்; அறல் - அலை, விந்தம் - விந்தியமலை.

யானை போலும்அ டல்பரி தேர்கள்போல்
சேனை போலும்தி ரைக்குலம் தோற்றுமால்;
தானை நள்ளினில் தந்திகள் ஏகுதல்
மான ராமர்செய் வல்அணை போலுமால். 8

வானி யும்திரை வாரியும் ஒத்திட
வேநி ரந்தரம் ஏகிய காலையில்
மான வில்லி மகப்பரி இரண்டுமே
தான வாரியில் தாவிய அற்புடன். 9

அனுமன் உத்தரி மீதுஅரி தாவிய
கனம தித்துடி காட்டிம றைத்தல்போல்
உனத வெம்பரி உற்றிரு கண்களில்
மனிதர் காண்கிலர் வாடிம யங்கினார். 10

"என்ன காரணம்? இந்திர சாலம்ஒத்து
உன்னி பாய்வது உததியின் மாறையாய்க்
கின்ன ரர்சுரர் கேண்மைப்புத் தேளிர்கொல்?
உன்னி ராக்கத ரோகொல்ஒ ளித்ததே? 11

கனவில் பலபொருள் காட்டி மறைத்தென
புனிதக் கிள்ளை(கள்) புனலில் கரந்த,இவ்
அனிதம் செய்தது யார்கொல்?அந் தோ!"என
மனம்ந டுங்கினர் மாழ்கினர் யாருமே 12

வாசி பின்செலும் மாமறை யோர்களும்
தேசின் பலவிரு தும்கொடு சென்றபேர்
ஆசில் பார்த்தன் அருகில் அரற்றியே
பேசி னார்பரி போனபெ ரும்பிழை. 13

---

8. நள்ளினில் - நடுவினில; தந்திகள் - யானைகள்; மான பெருமைமிக்க;*வல் அணை - வலிமை மிக்க சேது; ஆல - ஈற்றசை

9. வானி - படை, நிரந்தரம - தொடர்ச்சியாக; தான வாரி - இடமகன்ற கடல்.

10. உததரி - குதிரை, முதல இரண்டடி.களில கூறபபட்டுள்ள உவமைவிளங்கவில்லை

11 கேண்மை - (நம்பால்) நடபுள்ள, புத்தேளிர் - தேவா.

12 அனிதம் - தகாத செயல்

13 வாசி - குதிரை, தேசின - பெருமைமிக்க.

கன்ன மீதில் கனல்கதிர் பாய்ந்தென
சொன்ன வாய்மை சுருதியில் கேட்டலும்
வன்னி யின்மெழுகு ஆக மயங்கியே
உன்னு யிர்ப்புஅறும் ஓவியம் ஒத்தனன் 14

தெளிந்த பின்திரு மால்முகம் நோக்க,மண்
அளந்த செல்வன்இவ் அம்புவி நோக்கியே,
"தளர்ந்துஇ டைந்துஅறி யான்"எனத் தான்கசிந்து
உளம்க லங்கின னேஉயர் மாயையான். 15

கலங்க மாயனும்,காவலர் யாவரும்,
மலங்கு வீரரும், மற்றுள சேனையும்
இலங்கை தீய்த்தவன் ஏறுப தாகையான்
துலங்கு உளத்தினில் தூக்கியோ சித்தனன். 16

"தெய்வம் செய்துள தெய்வம்இது ஆகினும்
வெய்துஇ னான்என வேஅறி வேன்எனில்
எய்தி டும்கணை யின்குலத் தால்முடி
கொய்துஅ றுப்பன் குலங்களும்;" என்றனன். 17

"எந்தை மைந்தன் எனும்தயவு உற்றவன்;
இந்த வாறுசெய் யான்;செய்வ னேஎனில்,
முந்த நீறிய முப்புரம் ஒப்பஎய்து
இந்தி ரன்புரம் எங்கும் எரிப்பன்யான். 18

அவன்செய் தான்கொல்?அல் லாதுஎவன் செய்ததோ?
சிவன்செய் தான்எனி னும்செருச் செய்வன்;மற்று
இவன்செய் தான்என்று எனக்குஅறி யப்படில்
அவன்றன் ஆவி அழிப்பன்"என்று உன்னியே, 19

---

14. கன்னம், சுருதி - காது. வன்னி - நெருப்பு, உயிர்ப்பு - மூச்சு.

16. இலங்கை தீயத்தவன - இலங்கையைத் தீயிடடழித்த அனுமன், ஏறுபதாகையான் - (அனுமன்) எழுந்ததருளியுள்ள கொடியை உடையஅருச்சுனன், மாயனும், யாவரும், வீரரும், சேனையும் கலங்க பதாகையான யோசிததனன எனபது முடிபு.

17.தெயவம - 1 கடவுள் 2. ஊழ்வினை, கடவுளின நியமனததால நோந்த ஊழ்வினை என்க.

"மாய்கை ஈது"என, "வல்வினை யோ?"என
"ஈகை ஏழை எடுத்திகழ்ந் தான்"எனச்
சாகை அன்ன தனக்குஉப காரக
வாகை மாலை மனதுஉன்னி உன்னினான். 20

"சகரர் மாவினைச் சக்கரன் பற்றி,முன்
மிகையில் ஓர்முனி வெந்நுழை வீக்கிவிட்டு,
அகலும் வாறு,நம் அத்திரி யார்கொலோ
பகையில் கொண்டு பயோததி புக்கனர்?" 21

தூசி மாப்பின் தொடர்ந்துசென் றோர்களை,
"வாசி எவ்விதம் வாரியில் புக்கது?"என்று
ஈசன் மெச்சும் இராசன் வினாவவே,
ஆசி னோடுஅங்கு அவர்எதிர் கூறுவார் 22

"ஆயி ரம்பெய ரான்உயிர் நண்பனே!
ஆயி ரம்கணி னான்அருள் மைந்தனே!
ஆயி ரம்தலை யான்மகள் அன்பனே!
ஆயி ரம்கதி ரான்சுதன் தம்பி!கேள்; 23

*கசர தம்பரி கால்தளம் போலவே
தசர தன்மகன் தாக்கிய ஆர்கலித்
திரைள ழுந்தது அடிக்கடி தேட்டமாய்த்
துரக தம்தொனித்து ஒத்துஅதில் பாய்ந்ததே. 24

பாய்ந்த பின்பரி பார்வையில் காண்கிலோம்;
காய்ந்த கூர்கணைக் காவல னே"என,
ஆய்ந்த கேள்வி அருச்சுன ராசனும்
வாய்ந்த செந்திரு மாலுடன் கூறுவான் 26

---

20. உபகாரக - உதவிபுரிபவராகிய, உன்னி உனனினான் (திருமாலைச்) சிந்தித்துப் பின்வருமாறு யோசித்தான்.

21. சகரர் - சகரன் என்னும் மன்னனின் மக்களாகிய அறுபதினாயிரவர்; மா - (சகரரின் அசுவமேதமாகக்) குதிரை; சக்கரன் - இந்திரன், முனி - கபிலர், வெந்நுழை - பின்புறத்தில்; வீக்கிவிட்டு - கடடிவிட்டு, அத்திரி - குதிரை; பயோததி - பாற்கடல் என்பது நேர்பொருளாயினும் இங்கு கடல் என்ற அளவில்நின்றது.

*24,25 ஆம் பாடல்கள் சுவடியில் ஒன்றாகவே தொடர்ந்து எழுதப்பட்டு 24 என எண்ணிடப்பட்டுள்ளது. அவை வெவ்வேறு எதுகைத்தாதலின இருவேறு பாடல்களாகக் கொள்ளப்படடு, அதற்குததக எண்கள் அளிகசப் பட்டுள்ளன.)

23. ஆயிரம் கணினான் - இநதிரன், ஆயிர ம தலையான் மகள் - ஆதிசேஷனின் மகளாகிய உருவசி, இவள் அருச்சுனனின் மனைவியருள்ஒருத்தி, கதிரான் சுதன் - கன்னன்.

26 கேள்வி - கறறும் கேட்டும் அறிவு நிரம்பிய, கேள்வி கல்விக்கு உபலட்சணம்.

"ஏதுஜ யா!எம்மி லேஒரு வன்றன்போல்
போத மாம்ஒரு புத்தியும் கூறிலீர்;
ஓதும் மாக்கள் உமைவிட்டுப் போகுமோ?
வாதுஒ ழிந்து வகைசொலும்;" என்றனன். 27

"ஆழம் நீளம் அகலம் கணிப்பிலா
ஆழி யுட்புக, அச்சுவத் தைத்தளி,
'ஆழி ஏந்துஅரி யே!பரி தா'எனில்
ஆழி யோஅங் குலிகொண்டு ஒளிக்கயான்? 28

இன்னல் நின்னது; எனக்குஅல; சரதம்;நீ
சொன்ன வாறுதொண்டு ஊழியம் செய்வன்யான்;
பின்னை வேறுஒரு பெற்றிஉண்டோ எனக்கு
உன்னை யன்றி"என்று ஓதினன் மாயனே. 29

"மாய! உள்ளம் மயக்கல்என்? மாமுகில்
காய! நின்னில் கடல்பெரி தேஎனில்
ஆய அண்டரண் டம்புவி யாவையு
மேஅ டக்கியது எவ்விதம் பண்டியில்? 30

அறிகி லேன்என்று அறைவதும் நன்றுகாண்;
நெறியில் தந்திமுன் நீநினை யாமுதல்
உறும்அ விஞ்சையு ணர்த்துக ஓரயான்
அறிவி னுக்குஅறி வே"என்று இறைஞ்சினான். 31

போற்றி நண்பன் புகன்றிடப் புன்னகை
சாற்றி யே,"சல தம்பன மற்திரம்
தேற்ற மாய்த்தெளிந்து, ஓர்ந்தவர் உண்டுஎனில்
தோற்றுஞ் சிந்துவைச் சோதிக்க" என்றனன். 32

"தெரியும்;" என்றுஇரு பத்தொரு செம்மல்வந்து
அரித னக்குஉரைத் தார்;அவை கேட்டு,மால்
விரவு தானையை வேலையின் சார்பினில்
அரவ பஞ்சணை யான்வதி யச்செய்தே, 33

---

28. ஆழி - 1 கடல் 2. சக்கராயுதம் 3. மோதிரம். தளி - தள்ளி, பரி - குதிரை; அங்குலி - கை விரல்.
29. சரதம் - உண்மை. 30. காய - திருமேனி உடையவரே; பண்டி - வயிறு.
31. தந்தி - யானை, கசேந்திரன்.
32. சலதம்பனம் - நீரைக்கட்டுதல், நீரைத்தன்வசமாக்கும் வித்தை, சிந்து - கடல்.
33. மாவ விரவு - மயங்கியுள்ள; வேலையின் சார்பினில் - கடலுக்குப்பக்கத்தில்; வதியச் செய்தே - இருக்கவைத்து

மேக வர்ணன்அ விர்இரத் தினத்துசன்
யூக ரட்சணைக்கு ஒக்க நிறுத்தியே,
தாக வில்லியும் சந்திர காசனும்
வாகை வீரவர் மன்பரி சத்துசன், 34

வார வில்லி மணிமண்ட லாதிபன்,
சார மாம்இர தத்துசன், சாளுவன்,
நாரின் பத்திர கிரி,எம னாசுரன்,
தார மார்பன் தனயன் அமைச்சனும் 35

அல்லு நீலத் துசன்அக்கு ரூரனும்
ஒல்லும் மால்அநி ருத்திரன், பிரத்திமன்,
வல்ல சாத்தகி, உத்துவா சாரியும்,
வெல்லும் மால்விட கீதன்,சு பத்தியும் 36

பரிசன், வீரவர் மன்,பகர் குந்தள
உரவன், மந்திரி, மூவரும் மூஎழு
நிருப ரும்கிரித் தேரை நெருக்கினார்
அரவ ஆர்கலி மீதுஅழ காகவே. 37

வேலை மீதினும், வேலையுள் ளாகவும்,
ஞால மீதும் நடத்துத லாகவே,
சால வேவிரை வாகச் சயந்தனம்
சீல மன்னர் செலுத்தினர் திக்குஎலாம். 38

உததி ஏழையும் ஒவ்வொன்ற தாகவே
அதிக வீரர்சிந்து ஆறையும் நோக்கியே,
சிதம தாம்திருப் பாற்கடல் தீவிலே
குதிரை சென்ற குளப்படி கண்டதே. 39

அடுத்த பாடல் சுவடியில் எழுதப்படவில்லை

---

34. யூக ரட்சணை - படைபாதுகாப்பு

35. வார - அன்புடையவனாகிய, வில்லி வார என மாறுக; மணிமண்டலாதிபன் - பப்பரவாகனன், நாரின் - அன்புடைய, தார - மாலைகளை அணிந்தவனாகிய; தனயன் - சுகலீலன், அமைச்சன - சுவேதன்

38. சயந்தனம் - தேர்

39. உததி, சிந்து - கடல, சிதம்அது ஆம - வெண்மையான, அதுபகுதிப்பொருள் விகுதி

கண்டு சிந்தை கலக்கம் அகற்றியே
வண்டு லாம்மலர் மார்பகர் யாவரும்
விண்டு வோடும் விரைந்து(அவ்) அடிச்சுவடு
அண்டி யேதொடர்ந் தார்மகிழ் வாகவே . 41

உலகம் மூன்றினும் உள்ள தருக்குலம்
அலகி லாவிதம் யாவும் உறும்பொழில்
நிலவி சாலமது எங்கும்நி ரந்தரம்
பலதி சாமுக மும்பரிந் துற்றதே 42

"அந்த நந்த வனங்கள்வர் ணிப்பினைப்
பந்த ஆயிரம் பையுள சேடனா-
லுந்து லாம்பர முடன்சொல்ஒ ணாது"என
சந்த மன்னவர் சாற்றினர் போற்றியே. 43

"விரவும் இப்பொழில் மீதினில் மிக்கபேர்
இருடி யா(ன)வர் (எவர்)இருந்து அருந்தவம்
புரிவ ரோ?"எனப் போதகம் காத்தமால்
உரைசெய் தேரதம் நீத்துஉல குற்றனா. 44

பாத சாரியில் பாம்பணை யோன்செல,
சாத வில்லியும் சந்திர காசனும்
போத, மற்றுள பூபதி யாவரும்
ஏதம் அற்றிட ஏகினர் கால்கொடே. 45

நடந்த மால்பின் நராதிபர் கூடியே
தொடர்ந்து செல்லமுன் தோற்றிய தொன்மரம்
ஒடுங்கும் ஆதி மரம்இதுஎன் ஒத்துஅறப்
படர்ந்து பன்மரம் பாங்குறும் ஒன்றலால் 46

---

42 தருக்குலம் - மரக்கூட்டங்கள். 43. பை - பாம்பின் படம், துவாம்பரமுடன் - தெளிவாக.
44 போதகம - யானை, சசேந்திரன்
46. தொனமரம - ஆலமரம், ஆதிமரம் - மூலத்தரு, ஒத்து - சொல, விழுதுகள யாவை, அடி மரம்யாது எனக் கூறமுடி யாதவாறு.

எண்ணி லாமரம் யாவும்ஒன் றாகிய
வண்ணக் காமரம் ஒன்றினில் மல்கிய
பண்ணு லாவும் பணறுகள் (நான்கதாம்)
திண்ண மாம்பண நில்சினை செப்புவாம். 47

இலக்கம் நாலுபத்து எழுபத்தீ ராயிரம்
பெலத்தி டும்சினைப் பீடுறு கொம்பினில்
நிலைத்த கொம்பின் நிகரில் சினைத்தொகை
வலிக்க மாசுண வேந்து மயங்குமே. 48

உலவை எண்ணில; உரைக்கரிது அவ்விலை
அலகு கூறுவது யார்கொல்அக் கோளியில்?
இலகு தொன்மரத்து ஒன்றினில் ஈடுதான்
உலவுஐஞ் ஞூறுஅணி யோசனை வட்டமே. 49

ஓர்இ லக்கத்து எழுபத்தை யாயிரம்
சேரும் யோசனை சேண்வ டம்தனை
ஆரும் நோக்கி அரியின்பின் ஏகினார்;
தூரில் ஓர்முனி தோன்ற இருந்தனர். 50

பரிஇ ரண்டும் பரவையில் பாயும்முன்
விரைவின் ஒல்லையில் பற்றி விசித்தனர்;
இருடி பன்னக சாலையில் நிற்கும்அப்
புரவி இரண்டையும் பூபர்கள் கண்டனர். 51

தாரு மூலத் தனித்தவம் செய்முனி
சீரு கண்டு திகைத்திட்டுஎல் லோர்களும்,
"ஆர்ஐ யா!இவர்? ஆனனம் உத்தர
பாரி சம்உற வேபயில் வார்தவம்; 52

---

47. காமரம் - ஆலமரம்; பணறு - சிளை, சினை - சிறு கொம்புகள்.

48. நாலுபத்து எழுபத்தீராயிரம - 40 X 18,000 = 28,80,000 இருபத்தெட்டு லட்சத்து எண்பதினாயிரம், மாசுணவேந்து - அரவரசன்.

49. உலவை - இலை, கோளி - ஆலமரம்.

50. சேண் - உயரம், வடம் - ஆலமரம்; தூரில் - வேரில்.

51. விசித்தனர் - சுட்டினார் (முனி), பன்னசு சாலை - குடில்.

52. தாருமூலம் - மரத்தடி., ஆனனம் - முகம, உத்தர பாரிசம் - வட திசை.

கண்ணை மூடிக் கடல்களின் மத்தியில்,
செண்ண மாய்த்தனிச் சீஷர்கள் இன்றியே,
அண்ணல் மாமுனி அச்சமற்று இங்குறும்
வண்ணம் ஏது?"என மாலைவி னாவினார். 53

"யான்அ றிந்திலன் நான்உங்க ளோடுவந்
தேன்;எல் நேர்அங்கு இருப்பவர் தம்மையே
தான்உ சாவில் சகலமும் செப்புவார்;
போன மாவும் கிடைக்கும்இப் போது"என்றார். 54

தனஞ்ச யன்முதல் சந்திர காசன்பின்
இனம்,த ரம்தர மாக நிறுத்தியே,
"சினந்த விர்ந்தஇச் சீர்முனி தாள்தொழுது
உனும்க ருத்தை உசாவும்என்று ஓதினார் 55

மால்உ ரைப்படி மன்னவர் யாவரும்
ஆல்அ டிக்கீழ் அமர்ந்துள யோகிதன்
பாலின் உற்று, வலம்செய., பத்தியால்
கால்ப ணிந்திட, கைகட்டி நின்றனர். 56

ஒருவர் பின்ஒரு வோர்எதி ராகவே
நரனும் யாவரும் நடுங்கிமுன் நிற்கவே
பரிவின் கண்விழித் தேமுனி பார்த்தனர்;
அரசர் யாவரும் அங்கிரி வணங்கினார். 57

அடிப ணிந்துஎழுந்து அர்ச்சுனன் முன்னுற
நடுந டுங்கி நயந்துமுன் நிற்றலால்
சடையன் அன்னவிர்த் தாப்பியர் ஆசியோடு
அடைவில் அர்ச்சுன நாமனை நோக்கியே, 58

---

53. செண்ணம் - வடிவம், இங்கு செண்ணமாய் எனுஞ்சொல் அழகாக எனும் பொருளில் ஆளப்பட்டுள்ளது.

54. எல் நேர் - சூரியனைப் போல் ஒளிவீசிக்கொண்டு; உசாவில் - கேடடால்.

57. அங்கிரி - கால்.

58. சடையன் - சிவபிரான்; விர்த்தாப்பியர் - முதியவர், முனிவர்; நாமனை - பெயருடையவனை.

வீர வீரரில் மிக்குள வீரனே!
வார வீரிய மாயவன் சகாயனே!
ஈரம் மேவிய இந்த்ர குமாரனே!
சாரம் மேவு தனஞ்சய பூபனே! 59

சீரு லாவுஅத்தி னாபுரி ஆள்மனன்,
ஆர மார்பன், அறன்சுதன் பின்னன்நீ,
கோரம் தேடிக் குரைகடல் நாப்பணில்
சேரு கின்றதுஇத் தேர்த்திறம் அற்புதம்." 60

என்று கூறி,அங் கோர்இடம் எய்தியே
மன்றல் பொங்கு வனம்அணி மார்பகன்
நின்றல் கண்டு, "நிகரிலி! சீதரா!
வென்றி நின்விர கால்வந்த தோ?"எனா, 61

என்று கூறும் இருடியைப் பற்குணன்
அன்றுஇ றைஞ்சி, "உமதுஅருள் நோக்கினால்
மன்றல் மாவும்,என் றன்னொடு மன்னரும்
உன்றன் தாள்தொழ உற்றது"என்று ஓதியே, 62

"தனிமை யாய்இத் தலத்துஅடி ஆலினில்
உனத மாய்இங்கு உறைவதுஎன்? தேவரீர்
புனித நற்றவம் பூசனை செய்யவே
கனக மாமலைக் கான்உளது ஊர்அயல். 63

இங்குஇ ருந்து இருந்தவம் செய்தல்போல்
அங்கு வந்துசெய் வாய்தவம்; மெய்"எனப்
புங்க வீரன் புகல,புன் மூரல்செய்து,
"எங்கு வைகில்என் எம்புற் புதஉடல்? 64

---

60. அறன்சுதன் - இயமனின் மகனாகிய தருமா; பின்னன் - தம்பி; கோரம - குதிரை; நாப்பணில் - நடுவில.

61. மன்றல் - நறுமணம, வனம் - துளசி, நின்றல் - நிற்றல், எதுகை நோக்கிய மெலித்தல் விகாரம், நிகரிலி - உவமையற்றவரே, விரகால் - திறமையால், எனா - என்று கேட்க.

63. அடி ஆல - ஆலடி என மாறுக, உனதம் - உன்னதம், மேன்மை, கான் - காடு; ஊர் அயல் - நகரத்திற்கு அருகே.

64. புற்புத - நீர்குமிழிபோல் விரைந்து அழியும் தன்மையுள்ள.

அனித்தியம் இந்த ஆக்கையைத் தீர்க்கம்என்று
உனிப்பின் பேணி, ஒளிக்கில் நிலைக்குமோ?
குனித்த புன்புழுக் கூடுஎவ் இடத்தினில்
இனிக்கி டக்கில்என்?'' என்னவும் பின்சொல்வான் 65

''பற்றும் அற்றஇப் பாழும் குடம்பைவீழ்ந்து
எத்த லத்தில் கிடக்கில்என்? என்றுஉரை
சொற்ற நீர்இந்தத் தொன்மரக் கீழ்த்தவம்
உற்ற நாள்த்தொகை ஓது''எனக் கேட்டனன். 66

(கலித்துறை)

''ஆயி ரம்சதுர் ஈர்யுகம் ஒருபகல் ஆயு;
மாயும் நாள்செலில் வயதுஒரு சதம்அயன் தனக்கு;
தேயும் நான்முகன் கற்பம்ஆ யிரம்ஒரு தினம்ஆம்
வீயும் எண்முக விதிக்கு;இது போலவிஸ் தரித்தே, 67

ஆயி ரத்துஇரு பத்துநான் முகஅயன் தனக்கு
மாயும் நாள்வரில் இவ்வடம் மகிழ்ந்திட வாரித்
தோயம் மீக்கொளும் தொன்மரத்து ஓர்இலை தோன்றும்;
ஓயும் மால்அகட்டு ஒடுங்கும்எவ் உலகமும் உயிரும். 68

ஒருவ யிற்றினும் பிறந்திடாது உயிர்உலகு ஒடுக்கும்
திருவ யிற்றுஒரு குழவியாய், சேணில்ஆல் இலைமேல்
உருவி யப்பொடு கால்கரம் உதறியே அழுது
பரிவி னால்விளை யாடும்அப் பாசடை மீதே. 69

உனத மாகவான் ஓங்கிஇ றுதியுறும் அடைமேல்
புனித மாவிளை யாடிய குழவிஉன் புறமாய்
மனித ரூபில்நின் மைத்துனன் ஆனகிஷ் டினன்;இவ்
அனகன் அல்லது வேறுஇலை; நீஅறி; ஐயா! 70

---

65 அனித்தியம் - நிலையற்றது. ஆக்கை - உடல். தீர்க்கம் - நிலை பேறுடைமை. குனித்த - (வயோதிகத்தால்) வளைந்துவிட்ட. எனறவர் முனிவர். பின்சொலபவன் அருசுனன்

66. பற்றும் - (உயிருக்குத) துணை ஆகும தனமை. மரகுகீழ - அதுதுச்சாரியை கெட்டது.

68 வாரிதிதோயம - கடலநீர். எவவுலகமும உயிரும ஒடுஙகுமஒயும என இயையும் - ஒயுமமால என்று இயையாது

69 சேணில - ஆகாயத்தில. உயரத்தில எனினும ஆம்; பாசடை - பசியஇலை

70 ரூபில் - வடி வதநில. அனகன் - குற்றமற்றவன்

அன்று கண்டனம் குழவியாய் ஆலிலை நாப்பண்;
இன்று கண்டனம் நின்புறத்து இகல்உர வனைப்போல்;
மன்றல் வெண்ணைநெய் பால்அளை அருந்தியே வளர்ந்தோன்
வென்றி வில்விச யாகாரணம் கேள்"என இசைப்பான் 71

"உயிர்அ னைத்தையும் உலகுகள் சமஸ்தமும் ஒடுக்கும்
இயல்அ கட்டினன் இவன்மயக் கினைக்கடந் திலரே
அயன்வி டைக்கொடி யானும்எக் கடவுளர் யாரும்;
பயன்இ னிச்சொல்வது என்இவன் பெருமையைப் பண்பாய்? 72

ஆடி மீதுஉளுந்து உருள்சிறு பொழுதுஅரி மாயை
ஊடு றாவரம் பெற்றுஒரு நிலைத்தவம் உளற்றி
பீடு பெற்றனர் சுகர்எனும் பெரியவர்; பெம்மான்
ஊடு மாயையே மூடியது உலகுஉயிர் எவையும். 73

தெய்வ நாயகன் மாயையைச் சாதல்அற் றோரும்
உய்வ துற்றிட ஒழிந்தவர் இலர்;உழை யோர்க்கு
மெய்வ ருங்கிறு பங்கள்ஆங் காரமும் மேவும்;
நைவுஅ ருங்கிரு பங்கள்இல் இவர்க்கு"என நவின்றான் 74

"நன்றுஇ யக்குரோ தம்தட விடும்நர லைஎனில்
நின்றுஅ ருந்தவம் முயலுதற்கு உமக்குஎது நிலமே?"
என்று கேட்கவும் நகைத்து,"நான் இவ்விடம் அலது
ஒன்றி வேறிடம் ஒதுங்குவது இலை;"என உரைப்பான் 75

"நாரம் ஓர்இலை யறவடம் தழுவும்அந் நாளும்
தூரில் அல்லது பெயர்வதில்; முகுந்தனைத் துதித்து
ஏரின் மெய்த்தவம் புரிவன்இப் போதுஇருப் பதுபோல்;
வாரி சூழ்வரப் பளிங்குமண் டபம்என மருவும். 76

அடுத்த பாடல் சுவடியில் எழுதப்படவில்லை

---

71. நாப்பண் - நடுவே, இகலஉரவன் - போர்புரியும வீரன்,வினைத்தொகை, அளை - தயிர்.

73. ஆடி - சுணணாடி. சுகர் - வியாசருடைய குமாரர், பிரம்மஞானி; சுகாசாரியார்ா ஒருவரைத் தவிர அனைத்துயிர்களும்திருமாலின் மாயைக்குக் கடடுப்பட்டவையே என்பது பொருள்.

74. சுவடியில் இரு இடங்களிலும் வல்லின றகரம பெற்றுக் கிறுபங்கள்என்றே எழுதபபட்டுள்ளது. முதலில் கிறுபம என்ற சொல்லைக்கிருபணம் - உலோப குணம் என்ற பொருளில் ஆளுகிறார்போலும்; நைவு அரும் - குறையாத, கிருபங்கள் என்றது கிருபைகள்போலும் பின்னிரண்டடிகள் ஐயமிலலாமல் விளஙகுவில்லை.

75. இயக்குரோதம் - ஆலமரம், நரலை - கடல்; கடல்ஆலமரத்தை அழிக்கும் என்க;

76. நாரம் - தண்ணீர்.

நினக்கும், வீரிய! நின்மொழிக்கு ஒழுகும்மன் னவர்கள்
தனக்கும் ஆர்கலிச் சலம்இடம் தரமகிழ்ந் தனையால்;
எனக்கும் மால்அரு ளால்இடம் கொடுத்திடல் வியப்போ?
வனக்கு சேசய முகமக வான்அருள் மைந்தா! ” 78

“நன்று! நற்றவத் தருக்கும்நின் றனக்கும்ஆங் காரம்
என்ற மல்லதுஏன்? உரை;”என, “எமக்கும்மற் றவர்க்கும்
மன்றல் மார்பக! உண்டுமால் மாயைஎம் கிறுபம்
இன்று கேள்;”என முனிவரன் விவரமாய் இசைப்பான் 79

“ஆயி ரத்துஇரு பத்துநால் முகஅயன் ஆவி
மாயும் நாள்,வட ஆல்முழுது அமிழ்ந்தும்ஓர் இலைமே
லாய்உ ருத்தெரிந் திடும்;அதன் மேல்அரி முகுந்தன்
மேய ஓர்குழ வியதுஎன ஆடுவன் விரகாய். 80

கண்கு ளிர்ந்திடும் கால்கரம் உதைந்துமால் ஆடல்;
பண்செ றிந்துஅழு குரல்செவிக்கு அமுதுஎனப் பரக்கும்;
மண்பு ரந்தருள் மன்னவர் எனமனம் இரங்கும்
தண்சு ரந்துஅருள் புரிபவன் விம்முதன் மையினால். 81

கடல்பி றங்கும்அந் நாளில்என் விழிக்குஉறக் காணும்;
வடியும் நாளினில் காண்கிலன்; மாயைஆர் மாலைப்
படிஇவ் வாறுநாற் பத்தெழு தரம்உறப் பார்த்தேன்;
முடியும் அற்பநாள் பின்னுறில் ஆறெட்டு முடியும். 82

இவ்வி தம்தவம் யான்செயும் நாள்இவண் ஒருநாள்
கவ்வை உற்றிட நான்முகன் அடைந்துஎனைக் கண்ணுற்று,
“எவ்வம் அற்றுள தனித்தலைப் பிரமனே! எனக்கு
நவ்வு சீஷனே! முகுந்தனைப் பரவும்நற் றவனே! 83

---

78. ஆர்கலிச்சலம - கடல்நீர்; வன - அழகிய. குசேசய - தாமரைபோன்ற; மகவான் - இந்திரன்.

79. இராணடாவது அடியில் சுவடிப்பாடம், “மல்லிலேலுரையென” என உள்ளது. இப்பாடம் குறிப்புரையாசிரியரால் திருத்திக் கொள்ளப்பட்ட வடிவம் இங்கும் சிறுபம என்றசொல் வந்துள்ளது. தெளிவான பொருள் விளங்கவில்லை.

80. வட ஆல் - ஒருபொருட்பன்மொழி. உருத்தெரிந்திடும் - வடிவம் வெளியே புலனாகும; குழவியது என்பழி அது பகுதிப்பொருள் விகுதி.

81. விம்மு தனமையினால - மனம் இரங்கும் என்க.

82 ஆறெட்டு - நாற்பத்தெட்டாவது முறை. மாயவனைத் தரிசிப்பேன் என்றவாறு.

83. இவண் - இங்கு; நவ்வு - நன்மைபுரியும.

என்னை ஈன்றவன் தன்னையே வணங்கிய இயல்பால்
உன்னி டத்துஇனிது உற்றனம்; உனக்குறும் நாட்டம்
என்ன கேட்கினும் தருகுவன் கேள்;"என இசைக்கத்
துன்னு கோபமது உற்றது கிறுபவேந் துடரால். 84

"எனக்குஇ வன்குரு வோ?வரம் தருகுவது இவனோ?"
எனச்சி னங்கொள, இருவர்க்கு இடைஒரு சுழிக்கால்
கனக்க வேசுழித் துஇயற்சரு காகவும் பரத்தி
வினைக்கொள் எண்முக விதியுறை வானினில் விடுத்த. 85

அட்ட மாமுகத்து அயன்எதிர்த்து, "யார்கொல்நீ?" என்ன,
"சட்ட நான்முக வரன்யான்; சீஷன்என் றனக்கே
ஒட்டும் ஓர்தலை விதிஇவன்;" என,அவன் உறுக்கி,
"எட்டு மாமுகன் எனைஅலது எவன்விதி?" என்றான். 86

என்று உரைத்தலும், அங்குஒரு சுழிவளி எய்தி,
ஒன்று பன்னறு முகஅயன் அண்டமீது உயர்த்த,
அன்றுஅ வன்சினந் திடவிசை அனிலம்ஒன்று எழுந்து,
வென்றி எண்சது முகன்உறை வானினில் விடுத்த. 87

எட்டு நான்முகன் சினந்திடச் சுழித்தஆ சுகம்ஈர்
எட்டு நான்முகன் இடத்தில்ஐ வரையுமே எறிந்த;
மட்டில் அங்குஅவன் சினந்திட மால்அறு வரையும்
எட்டு நூற்றிரு பதுமுகன் புட்கரத்து எறிந்த. 88

இங்குஇ வன்சினத் தால்எழு வரையும்மால் எடுத்து
கொங்குஇ ருஞ்சத எண்ணெழு முகன்குடி லத்தில்
தங்க வீசினது; அவன்சினத் தால்அதன் இரட்டித்
துங்க மாமுகத்து உரன்விதி வானினில் எறிந்த. 89

---

84. கிறுபவேந்துடரால் என்ற தொடர் விளங்கவிலலை. கிறுபம - சுருவம் ஆகுமோ?

87. பன்னறுமுக - பதினாறு முகங்களை உடைய, அனறு - அபபோது, விசைஅனிலம் - வேகமான காற்று, எண்சதுமுகன் - முப்பத்திரணடுமுகஙகளை உடையவன்;

88. எட்டு நான்முகன் - முப்பததிருமுகன், ஐவர் - முனி முதல் முபபத்திருமுகன வரையாகிய ஐந்து போ, ஈர் எடடு நாலு - அறுபத்து நான்கு, ஆசுகம, மால - காற்று, புட்சரம் - வானம்

89. இருஞ்சத எணஎழுமுகன் - இருநூற்று ஐம்பததாறு முகஙகளை உடையவன், குடிலம் - ஆகாயம்

அஞ்சு நூற்றொரு பன்னிரு முகன்சின மதனால்
எஞ்சில் ஆயிரத் திருபது நான்முக விதிபால்
அஞ்ச மாருதம் வீசவும், அவ்வயன் நோக்கித்
தஞ்ச மாகிய நன்மொழி சாற்றியே தயவாய், 90

"நீங்கள் ஒன்பது பேர்களும் நெருங்கியது என்?"என்று
ஆங்கு உசாவவும், முறைமுறை அயன்என அறைந்தார்;
"பாங்கில் உங்களைப் பார்க்கஆர் பாத்திரம்? நீவிர்
ஓங்கும் ..... விதிஎன உரைத்ததுஉண் மையதே. 91

எளிய னைப்பொருட் டாகஎய் தியதுஎன்?" எனவும்,
வளியி னிற்படும் அவதியும், வருவதும் அறைந்தார்;
"அளிஅ றத்தினை மிதித்திடு சினத்தினால் அன்றே
வெளியில் மாருதச் சருகுஎன வெய்தினில் பறந்தீர்? 92

நந்த லுற்றிடும் நாள்உறும் கிறுபமுஞ் செயிரும்
சிந்தை யில்குடி வைத்திடில் அற்பமாத் திகழ்ஆல்
தந்த வித்துவுக்கு இடங்கொடுத்து ஆலயம் தகர்ந்து
சிந்தல் நேர்அழிந் திடுவர்கள் யாவரும் திடனாய். 93

சிகரம் ஏந்திய பதுமையும் அவற்றில்ஓர் சிலைதான்;
"சகல லோகமும் தாங்கினும், தனையுமே தாங்கும்
இகலில் ஓர்பொருள் உண்டு;நாம் தொண்டு"என எண்ணில்
புகழும் புங்கமும் பொற்புறும்; அற்புதம் அதுவே. 94

விதிக்கு அனந்தரை விதித்தவன் திருவடி விரும்பித்
துதிப்பது அன்றியே தனைமதிப் பதுவெகு துன்பம்;
கொதிக்கும் வெஞ்சினக் கிறுபமது ஒழிந்துஉயர் . . . . நும்
பதிக்கு யாவரும் படரும்"என்று உரைத்தனன் பகவன். 95

---

90. அஞ்சு நூற்று ஒரு பன்னிரு முகன் - ஐநூற்றுப பனிரெண்டு முகங்களை உடையவன்.

91 யார பாததிரம - யாரால எளிதில காண முடியும என்பதுகுறிப்பு நீங்கள ஒவ்வொருவரும் உங்களைப பிரமன் எனக் கூறிக்கொள்வது உணமைதான் எவ்கிறார்.

92. அவிஅறம் - கருணையாகிய தருமம்

93. நநதலுறறிடும - அழியும், கிறுபம - கருவம் போலும, செயிர் - சினம். ஆல் தந்த வித்து - ஆலம் விதை, சிநதல் - அழிதல்.

94. சிகரம ஏநதிய பதுமை - கோபுரந்தாஙகிப் பொமமை,சிகரததை ஏநதிய பதுமை எனவும், சிகரத்தால ஏநதபபடடபதுமை எனவும முறையே இரணடு மூன்றன் தொகையாகபபொருள் கொள்ளுமாறு தொடர் அமைக்கபபடடுள்ளது இகலில- இணையற்ற, புங்கம - உயர்சசி

95 விதிக்கு - பிரமன என்னும் பதவிககு, அனந்தரை - பலரை, பதி - ஊர்.

"நிறைந்த பொன்த சும்பு ஆகையால் தளும்பிலீர் நீர்;நீர்
குறைந்த கும்பம்யாம் ஆதலால் அலைந்தனம் கொதித்தே;
பறைந்த எம்பதி செல்வதற்கு எவ்வழி படர்வோம்?
அறைந்திடு" என்றலும், அவன்கரத் தொடுகரம் அறைந்தான். 96

அறைந்த பாணியின் எழும்பும்ஓர் சுகச்சுழ ல(து)தான்
சிறந்து உறைந்திடும் அவரவர் தலத்தினில் சேர்த்த;
துறந்தும் அவண்செயிர் பிறந்தவர்க்கு அருந்தவம் தொக்குஆம்;
பறந்து போம்தவம் சீற்றருக்கு அறம்பயி லாதே. 97

என்று உரைத்துஅடி யார்க்குஉறு கண்உறில், எணும்முன்
மன்றல் வீஎன எங்கணும் பிறங்கும்மால் உதவும்
துன்று மாயையில் பொதிந்ததொல் உலகுஉயிர் அனைத்தும்;
அன்றி அவ்வினை கடந்திலை அடங்கலும் ஐயா! 98

சகத்ர லோசன சக்கிரி தந்தருள் மைந்தா!
இகத்தில் நாரதன் துவரையில் மாலிடம் எய்த,
நகைத்து, மால்எதிர்ந்து, உபசரித்து, உவந்து,நன் மொழியால்
தொகுத்து, இருத்தி,"இங்கு அடைந்ததுஎன்?" என்றனன் தூயன். 99

"நான்அ டைந்ததுஇப் புவியினில் நதிபல ஆடத்
தான்நி னைந்து"என, "நன்று"என மெச்சி"இத் தலத்தில்
நீந யந்துஇல கியதுபாக் கியம்"என நிகழ்த்த,
தேன்ந ரம்புயாழ் முனிகிறு பங்கொடு சிரிப்பான். 100

"அக்குத் தொக்குஅறத் துறந்தவர் யார்என்நேர்? அக்குப்
பிக்குட் சிக்கினை; இல்லறப் பெரும்பயோ ததியில்
புக்குத் திக்குஅற மயங்குவது ஏன்?"எனப் புகல,
நக்குச் சக்கிரி தலைஅசைத் தே,நயந்து உன்னும் 101

---

96. பொன்தசும்பு - பொற்குடம், நீர் - 1. நீஙகள் 2 தண்ணீர்,குபபம் - குடம், பறைந்த - தாங்கள் கூறியவாறு.

97. சுகச்சுழல் - இனிமையான சுழல்காற்று, துன்பம் தராத சுழலகாற்று, பிறிதின் இயைபு நீகுவிசேடணமாகக் கொள்க; அவண் - அந்த (துறவு) நிலையிலும்; தொக்கு ஆம் - மிகக் குறைந்துவிடும்;சீறறருக்கு அறம் பயிலாதே தவம் பறந்துபோம் என்க, இங்குஅறம் என்றது முன்பு கூறிய அளியறத்தை. (பாடல். 92)

98. உறுகண் - துன்பம், மன்றல் வீ - மலரின் நறுமணம், வீ மன்றல் என மாறுக.

99. லோசன - கண்களை உடைய; சக்கிரி - இந்திரன், துவரை - துவாரகை, இகம் - நிலவுலகம்

101. அக்குத்தொக்கு, அக்குப்பிக்கு - குடும்பம் முதலியவற்றில் ஒடடுறவு, நீக்க இயலாத தொடர்பு; சக்கிரி - சுண்ணன்.

"மல்கு கின்றது கிறுபம்;இது அடங்கிடும் வாறாய்
ஒல்கு பங்கமுற் றிடச்செய வேணும்"என்று உன்னும்
எல்வை, "போசனம் உணவம்"என்று ஏவலன் இசைப்ப,
வெல்வி மாயவன் எழுந்தனன் முனியுடன் விரைந்தே. 102

கரத்து டன்கரம் தொடுத்துஇரு வோர்களும் அந்தப்
புரத்தின் ஏகலும் பந்தியிற் பொருந்திய பேரோடு
உரத்த மால்அனம் அங்கிருந் தருந்தினர்; உலவித்
திருத்த மாய்அனம் பகிர்வதும், குழம்புஇடு வதுவும், 103

பாகு தாம்புலம் பருகிநாற் காலியில் பரிந்து
வாகி னோடுஇருந்து ஏவலர்க்கு உரைவழங் குவதும்,
யோக ஒன்கொலு இருப்பதும், இல்லுழை தோறு
மாக நன்மொழி பகர்வதும் மாயனாய் அமர்ந்த. 104

கைப்பி டித்தமால் உத்தியா வனந்தனைக் காண
மெய்ப்பி னோடுஅழைத்து ஏக,அவ் வனத்திலும் மிக்காய்
மெய்ப்பி லாப்பல விகற்பமாம் விருப்பமும் இருப்ப,
ஐப்ப யோததி எனப்பல படுகர்அங்கு இருந்த. 105

ஆம்ப லின்விகற் பங்களும், செங்கழு நீரும்,
தேன்பி றங்குசெங் கமலமும், வெண்குசே சயமும்,
தான்பி றங்குத டாகமும், ஓடையும் தான்கண்டு
ஓம்பும் மாலுடன் நடந்தனன் நாரதன் உவந்தே . 106

பக்கி யின்விகற பங்களும், நரந்தமான் பட்டம்
மிக்க நாவியும் மறுவியும் ம்ருகமதம் அனைத்தும்
தொக்கின் மேவிய வனம்பல தொலைத்துஉயர் தோயம்
நிற்கும் ஓர்பெரும் பொய்கையை இருவரும் நெருங்கா, 107

---

102. மல்குகின்றது - மிக அதிகமாகிறது; உன்னும்எல்வை - நினைக்கும்போது, வம் - வம்மின், வாருங்கள்; வெல்வி - வெற்றியையுடைய.

103. பந்தி - உண்பவர் வரிசை.

104. பாகு - இனிப்புத்திரவம்; தாம்புலம் - வெற்றிலைபாக்கு; இல்லுழை - வீடாகிய இடம்.

105. உத்தியாவனம் - பூஞ்சோலை; மெய்ப்பினோடு - உண்மையாக; மெயப்பிலா - உண்மையென நம்ப இயலாதவாறு;ஐ - அழகிய; படுகர் - குளங்கள்.

106. வெண்குசேசயம் - வெள்ளைத்தாமரை.

107. பக்கி - படசி; நரநதம், பட்டம், நாவி, மறுவி, ம்ருகமதம் என்பன ஐந்தும் கத்தூரிமானின் பெயாகள், இங்கு மான்களின்பல்வேறு வகைகளாக ஆள்கிறார் போலும், ம்ருகமதம் என்பதனை மதம்ருகம் என மாறுக; தோயம் - நீர்.

நெருங்கி நாரத முனிவனை நெடியவன் நோக்கி,
"இரும்கு சேசய மலர்அயன் வகுத்தஇப் புவியின்
ஒருங்கும் இப்பொய்கை இப்புனல் ஒப்பதுஒன்று இலவால்;
பொருந்து புண்ணிய நதிஇதில் படி"எனப் புகன்றான். 108

கமழ்வு றும்கம லக்கம லப்படு கரினில்
விமல நாயகன் உரைப்படி மேனிதோய்ந்து ஆடான்
மமதை யால்,உரு அகன்று,வான் அரம்பையின் வடிவின்
சமம தாய்ப்புவித் தையலாய்க் கரையினில் சார்ந்தான். 109

பொன்பி றங்கிஊற்று ஒழுகிய மேனியும், புயலும்
மின்பி றங்கிய தெனக்குரல் அணிகளும், விளங்கும்
தென்பி றங்குபொன் சிகரகோ புரப்பயோ தரமும்,
இன்ப மிஞ்சுஅவ யவத்துஇலக் கணம்உற இருந்தாள். 110

மாதுஇ ருந்தனள்; அந்தர கதியின்மால் மறைந்தார்;
"ஏதுஇ னிச்செய்வது" என்றுஇவள் தனித்தனள் இடைந்தாள்;
பாத கப்பசி அழல்அகடு உறப்பதை பதைத்தாள்;
"ஆத ரிப்பது யார்நமை?" எனஅல மலந்தாள். 111

விரவும் மாதுஇணை யற்றுஅல மலந்தவே லையினில்
ஒருகி ராதன்அங்கு உற்று,மாது எழிலைநோக் குற்றே,
"அரவ மாதுகொல்? அரம்பைகொல்? அணங்குகொல்?யாதுஎன்று
இரும னத்தொடும் குறிப்பின்இப் புவிமின்என்று இயைந்தே, 112

---

108. இரும் - பெரிய.

109. கமழ்வுறும - மணம்பரப்புகின்ற, கமலம் - 1. தாமரை 2.தண்ணீர்; ஆடான் - குளிக்காதவனாகிய நாரதன்,வினையாலணையும் பெயர்; மமதை - செருக்கு, உரு - (தெய்வ முனிவனாகிய) வடிவம், தெய்வலோகப் பெண்ணைப போல்பேரழகுவாய்ந்த மானிடமங்கையானார் என்றபடி.

110. புயல் - மேகம, மின் - மின்னல் முறையே குரலுக்கும் அணிகட்கும் உவமை, நோதிரனிறை, குரல - மகளிர கூந்தல்;சிகரகோபுரம - கலசதுடன் கூடிய கோபுரம்; பயோதரம் - நகில், அவயவத்து இலக்சணம் - சாமுத்திரிகா லட்சணம்.

111. தனிதனள் இடைநதாள் - தனிதது வருந்தினாள்,முற்றுவாயபாட்டில் வந்த வினையெச்சம், முற்றெச்சம என்பதுஇதுவே. அகடு - வயிறு.

112. இணை - துணை; கிராதன் - வேடன், அரவமாது - நாகலோகமகள்; இருமனம் - இதுவா அதுவா எனத்துணியாமல ஊசலாடும் உள்ளம், குறிப்பின் - கண் இமைத்தல, கால்கள் நிலத்தைத தீண்டுதல், வியர்வை, மலர் வாடுதல் முதலியன,இவற்றின் விரிவை ஐந்திணைக் கோவைகளுள் காண்க.

அயல்அ டுத்தனன் மாகுலா திபன்மய லாலே;
கயல்வி ழிச்சியும் கனல்அழல் பசியினால் கலங்கி,
"இயல்அ கட்டினுக்கு இரைஅருள்" கெனஇடைந்து இறைஞ்ச,
"மயல்த விர்த்தியேல் வழங்குவன் உணவு"என வகுத்தான். 113

"என்ம டிப்பசி அகற்றிடில் புணர்வதற்கு இயைந்து
நின்ம டக்கொடி யாவது நிசம்"என உரைக்க,
நன்ம ணத்தொடும் கொடுபுலவு ஊன்உணா நல்க,
வன்ம னத்தொடும் அருந்தினள் கொடும்பசி மாற. 114

(வண்ணகக் கலிவிருத்தம்)

அகட்டு உறும்பசிஅ மர்ந்தனள்;கு ளிர்ந்தனள்; ஆகம்;
மகிழ்ச்சி யாய்முகம்ம லர்ந்தனள்;க லந்தனள்;மலர்ப்
பொகுட்டு வாழ்அனமும் பெடையும்எனப் புல்கிநித(மு)ம்
செகத்தின் வள்ளியொடு திண்முருகன் ஒத்துசிலநாள் 115

அன்றி லும்பெடையும் என்றுஅகம்வி யந்துமகிழ்வாய்
குன்றுஅ டுத்தமா யப்புனவ னோடுகுறமான்
என்று மாமனவி ருப்புடன்இ யைந்துவாழ்நா
ளென்றுஇ ரண்டுதனை யர்தமைஅம் மாதும்ஈன்றாள். 116

இரண்டு பிள்ளையுடன் அச்சுதநல் வேடனும்,ரிஷி
திரண்ட கன்னிகையு டன்செல்வம் உறச்சிலது நாள்,
புரண்டி டும்சகடம் நேர்பொருவில் சீர்குறைதரக்
குரண்ட மும்குருகும் நித்தம்உணவு உண்பர்குறைவாய் 117

---

113. மாகுலம் - வேடர் மரபு, மாகுலாதிபன் - வேடர் தலைவன்.

114. மடிப்பசி - வயிற்றுப்பசி; கொடு - கொண்டுவந்து; புலவுஊன் ஒருபொருட் பன்மொழி; கொடும்பசிமாற அருந்தினள் எனஇயையும்.

சற்றேறக்குறைய இதே நடையிலமைதத விருததத்தைச் சந்தக் கலிவிருத்தம் என்பார் விருத்தப்பாவியலுடையார். (ஏழாம் படலம்:4)

116 மாய - அழகிய, கரிய எனினுமாம்; புனவன் - குறவன், வாழ்நாளன்று - வாழ்நாளில்.

117. அச்சுதனாகிய வேடனும், நாரத முனி (ரிஷி)யாகிய கன்னியும், திரண்ட - பெண்ணின் எழிலெலாம் ஒன்றுசோந்து சகடம் - சக்கரம், சீர - செல்வம், குரண்டம் - கொக்கு; குருகு - கோழி.

அன்னம் ஆறுசுவை யின்புறுப தார்த்தம்உணுவோர்
பின்ன ரும்கலியின் வாடுதுயர் பீடையின்மெலிந்து
உன்னு கானகம்அலைந்து உணாவது ஒன்றுகிடையாது
இன்னல் முத்தினம்இ டைந்தனர்கொ டும்பசியினால். 118

இந்த வாறொடுபின் னிட்டதினம் மூன்றில்ஒருநாள்,
கந்த மூலம்இலை காய்கனிகள் தேடும்வனமில்
அந்த வேடன்அடி மீதினில்முள் ளேஅறையவே,
புந்தி நொந்துமனை போந்தன்உ டல்சுரமதாய். 119

அன்று தான்உணவது அற்றும்உப வாசமுடனே
மன்றுஇ ருந்தமெய்வ ருத்தம்அத னால்வனமதில்
சென்றி லன்;சதுவ ரும்திகைவு றப்பசியினால்
குன்றி, முத்திவசம் உண்டிலர்;கு லைந்தனர்மெய்யே. 120

முத்தி னம்பசியி னால்அலம லக்கம்உறும்முள்
குத்து காலொடுவ னக்குறவன் அயர்தனைக்கொள,
பற்று அழல்பசியி னால்அரிவை மெய்பதறினாள்;
பெற்ற பிள்ளைஅழு துற்றனர்பெ ரும்பசியினால். 121

(கலித்துறை)

சிலவ மைந்தரில் இளையசேய் அனையிடம் குறுகி,
முலைஉ ணும்படி முடுக,மற்று அவள்முனிவு ஏறி,
கலக மாய்,மிக அரற்றிடப் புடைத்தனள் கரத்தால்;
உலைவின் ஓடவும் துரத்தியும் தகர்த்தனள் உறுக்கி. 122

---

118. கலி - ஏழ்மை: முத்தினம் அலைந்து கிடையாது கொடும்பசியினால் இன்னல் இடைந்தனர் என இயையும்.

119. கந்த மூலம் - கிழங்கும்வேரும், கிழங்காகிய வேர் என இருபெயரொட்டாக்கிலும், ஒரு பொருட் பன்மொழி எனினும் அமையும்; வனமில் என்புழி அத்துச்சாரியை கெட்டது; அறைய - தைக்க.

120. உபவாசம் - படிடினி; மன்று - வெட்ட வெளி; சதுவரும் - நால்வரும், சுணவன், மனைவி, மக்கள் இருவர், முத்திவசம் - மூன்றுநாள்.

121. சிலவ மைந்தர் - வேட்டுவப் பிள்ளைகள்.

அகல வேஇரு சேய்களும் பசிபொறாது அரற்ற
மிகவெ குண்டுள கோதையை வேடனும் முனிந்து,
"பகர ரும்சிசுத் துரோகிசண் டாளிவன் பதகி
இகலின் சேய்களை மொத்துவது என்இரங் கில்லாய்? 123

சற்றுள னக்குஉடல் சுகமிலாது இருந்தசங் கடத்தால்,
உற்ற சேய்தனைப் புடைத்தனை இரக்கமது ஒழிந்தே;
பிற்றை என்பின்னால் எவ்விதம் பயிர்செய்வாய் பேணி?
மற்று உனக்குறும் மதிப்படி நடத்து"என அறைந்தான். 124

எயினன் இவ்விதம் இயம்பிட, எயிற்றியும் நடுங்கி,
வயிறுள ரிந்திடும் பசியினில் சேயும்வா தித்தால்
இயைய என்செய்வன்? அற்றைக்குஅன்று உணவுதந் திருந்தாய்;
அயலில் ஓர்உப காரமும் அறத்தனித்து இருந்தாய்; 125

"பதைப தைக்குது பசியில்மெய்;" எனப்பர தவித்தாள்;
கொதிகொ தித்துள வனசரச் சவரன்வெங் கோப
மதுத விர்ந்தனன்; அழன்றுஉழன் றனன்;உயிர் அவிந்தான்;
சுதரும் தோகையும் சுழன்றுஅழுது அலறினர் சோர்ந்தார். 126

கடம தில்பல காட்டமது அடுக்கியே சவம்வைத்து
அடல்அ ழல்கொளுத் தினள்;பிறங் கியஅழல் கண்ணில்
அடலைச் செய்திட, அகடுஇவள் பசிபொறுக் கிதாய்க்
கடுகி யேநடை கொண்டனள் காதலர் தொடர. 127

மக்கள் பின்வர மறத்திசென் றிடும்வழிக்கு எதிரே
தொக்க பூவொடும் காயொடும் குலுங்கியே தோன்ற
நெக்கு நின்றுள சிந்துர மரந்தனை நெருங்கா,
அக்கம் நோக்கி,"நம் பசிக்குஇது ஆதரம்" எனவே, 128

---

123. கோதை - பெண்; இகலின் - பகைவர்களைப்போன்று.

124. பிற்றை என் பின்னால் - நான் இறந்த பிறகு, பேணிப் பயிர் செய்வாய் என்க, பயிர் செய்தல் வளர்த்தல் என்ற பொருளில்ஆளப்பட்டது; மதிப்படி - அறிவிற்கேற்ப.

126. வனசர - காட்டில் திரியும்; சவரன் - வேடன்; உயிர் அவிந்தான் - இறந்து விட்டான்.

127. கடம் - காடு; காட்டம் - விறகு; சவம் - வேடனின் பிணம்;அடலை - வருத்தத்தை; காதலர் - புதல்வர்.

128. நெக்கு - கனிந்து, சிந்துரமரம் - புளியமரம்; அக்கம் - கண்.

நெருங்கி நீடிய கைக்குஉற நேர்ந்தில காய்பூ;
ஒருங்கு நின்றுள சேய்களை ஒன்றின்மேல் ஒன்றாய்ப்
பொருந்த வைத்துமேல் ஏறியே காயொடு பூவும்
அருந்தி னாள்பசி அகன்றிட, அகடுஉயர்ந் திடவே. 129

ஒழிவு றும்பசி யோடுகாய் பூவுணும் நேரம்
தழலில் வெந்திடும் வனசரச் சவரன்நல் தவத்சீ
கிழவன் மாமுனி உருவொடும் தோன்றினன், ட்டி,
விழியில் நோக்கி,அங்கு அவளுடன் உரைபல வினவி, 130

"தோசி! நீசிசுத் துரோகி;பா தகி,பசி தொலைய
நேச முற்றிடில் வித்துநேர் தவர்க்குநல் நிதிபொன்
தூசு பாளிதம் பெற்றிலை; தீக்கொலை துணிந்தாய்;
பாச மாம்பசிப் பறப்புஎடுத் தனை;பதை பதைத்தாய். 131

இகப ரத்தினும் செல்வமும் கதிகளும் இழந்தாய்;
அகடு உறும்பசி ஒழியஎன் மொழிவழி யொழுகு"என்று
உகமை மாமுனி உரைத்தலும், "பொருத்தம்"என்று உரைக்க,
தகமை ஓர்பெருந் தடத்துஅவள் தனைக்கொடு சார்ந்தார். 132

"தையல்! இப்பெருந் தடத்துஇடை புதைதர ஏகி
எய்இ டைக்குமேல் விரவுசெம் பாதிதோய்ந் திடு"கென்று
ஐயன் ஓதிட, அவ்வழி புனல்படிந்து இளக,
மெய்இ டைக்குமேல் ஆணொடு பெண்என இருந்த. 133

ஒருக ரத்தினில் தொடி,பல பணியொடு தனம்(ஒன்று);
ஒருகு ழைக்குஅணி ஒருவிழிக்கு எழுதும்மை; ஒருபால்
விரவு நாரத உருவொடு வீணையும் கையுமாய்க்
கரையின் எய்தலும் முதுமுனி காலுருக் காட்டார். 134

---

130. கிட்டி - நெருங்கி.

131. தோசி - தோஷி, குற்றவாளி; இரண்டாம அடி சவடியில்பின்வருமாறு உள்ளது. "நேசமுறறிடி லவிதது நெறதவாகுநனனிதிபொற". ஒருவேளை உணவிற்கே இல்லாதவள் எபபடி நிறையவழஙுக முடியும்? பாடற்சுருத்து தெளிவாச விளங்கவில்லை; பறப்புஎடுத்தல் - பேராவலாய் மரியாதைவிடடு அலைதல். 132. உகமை - உயர்ந்த.

133. தையல் - அண்மைவிளி இயல்பாயிறறு, இடைபுதைதர - இடுப்புநீருள் மூழ்குமாறு; தோய்ந்திடு - நீராடு, இளக - (உடலை)நனைத்துக் கொள்ள.

134. தொடி - வளையல், குழை - காது; உருக்காடடார் - தன்வடிவத்தைக் காடடவில்லை, அங்கு காணப்படவிலலை.

முதிய மாமுனி தேவகி சுதன்என முடுகி,
மதியின் ஈர்உரு ஓர்உரு ஏது"என ....
"இதுஅ றிந்திலன் யான்"என நாரதன் இசைப்ப,
கிதம்உ ரைத்துள கிறுபம்ஏது? உரை"எனக் கேட்டார். 135

முன்னம் உன்னிய உன்னமும் மொழியையும் உணர்ந்து,
சென்னி ஆனனம் இறக்கினர் செகத்தினை நோக்கி;
பன்னும் ஆயிரம் நாமமும் பண்புறத் துதித்து,
"சொன்ன வன்பிழை பொறுத்தருள்" என்றுதோத் தரித்தே, 136

(அடுத்த பாடல் சுவடியில் எழுதப்பெறவில்லை)

"அடக்கி னீர்அடங் காதஎன் கருவமது அனைத்தும்;
மடத்தின் யான்பட்ட பாடுசென் மத்துக்கும் போதும்;
திடத்தின் இவ்விதம் நினைத்திடு வதுஇல்"எனச் செப்பி,
படத்தில் ஆடியைப் பணிந்துபின் விடைகொடு படர்ந்தான். 138

"ஆத லால்கிறு பங்கள்யா வருக்கும்ஆ காது;
வேத நாயகன் அன்பனே!" எனமுனி விளம்ப,
மாத வன்விழிச் செய்கை பால் மன்னர்ப் குணனும்
போத மாமுனி பொற்சரன் இறைஞ்சினார் புகழ்ந்தே. 139

அருக்சு னன்தலை யாய்இறைஞ் சியபுர வலரைப்
பரத்தின் மாமுனி ஆசிரு வதித்து,உப சரித்து,
"கருத்தை ஓது"என, "கற்கிமா மகம்தனைக் கரத்தால்
திருத்த மாகநீ செய்தருள்" கென்றுசெப் பினரே. 140

"தனஞ்ச யா!முகுந் தன்குசே சயமினாள் தலைவன்
தினஞ்ச காஉனக்கு இருக்கநா டுவதுஎலாம் சித்தி
நினைந்தி டாமுனம் கிடைக்குமே! என்னைநீ நயந்து
மனஞ்செய் கின்றதுஎன், சதக்கிரி தந்தருள் மதலாய்! 141

---

135. கிதம் - இதற்கு முன்னால்

136. சென்னி ஆனனம் - தலையும் முகமும்; வன்பிழை - பெருந்தவறு.

138 மடத்தின் - அறியாமையால், திடத்தின் - உறுதியாக, படத்தில் ஆடி - (காளிக்கனாகிய பாம்பின்) பணத்தின்மேல நடனம செய்த கண்ணன்.

140. தலையாய் - முதலாக, பரத்தின் - முற்றும் துறந்த, தனிமையில் இருந்த எனினுமாம்; கற்கிமாமகம - அசுவமேதயாகம். 141. சசா - தோழன், சதக்கிரி - இந்திரன்.

என்ன ஒதிய முனியைமீண்டு இறைஞ்சியே புகழ்ந்து,"என்-
றன்னை யாள்முகுந் தன்சகா இருப்பதும் சரதம்;
அன்ன மாயனும் வேண்டும்உன் அருளுமே வேண்டும்;
நின்னை நேர்சது முகப்பிர மனும்நிகர் அலவால். 142

அனைத்தும் மால்அகட் டினில்அடக் கியவடிவு ஆல்மேல்
நினக்கு நேர்எவர் கண்டவர் பன்முறை, நெடியோன்
றனைப்பன் னாளும்அம் தவத்தொடும் துதித்திடும் தக்கோய்!
எனைப்பு ரந்திட வருக"என்று இசைத்துஉப சரித்தான். 143

பஞ்ச ரித்துஉப சரித்துள பார்த்தனை நோக்கி,
"அஞ்ச லித்தனை; ஆயனும் அகத்தில்உற் றிடலால்
குஞ்சி ரிப்புடன் வருவன்"என்று உரைத்துமுன் கொடுத்தான்
சஞ்ச லிப்புஅறச் சடிலங்கள் இரண்டையும் அவிழ்த்தே. 144

மாஇ ரண்டையும் மன்னரும் புரந்தரன் மகனும்
கோஇ ரண்டினால் கண்டு,உடல் புளகிதம் கொண்டார்;
தேவ துந்துமி முழங்கிட, முனிவனைத் தேரில்
ஏவில் வல்லவன் ஏத்தியே உபசரித்து இறைஞ்சி, 145

விசய னும்திரு மகனும்வெண் சாமரை இரட்ட,
அசைவுஇல் நற்சயந் தனம்உலகு அளந்தவன் நடத்த,
நசையில் மூஎழு ரதம்நர பதிகள்பின் நடத்த,
குசைவ யப்பரி முன்செல நடத்தினர் கூர்ந்தே. 146

உததி யின்சலத் துள்வழி தரஇரு பத்தோர்
அதிபர் தேர்முறை முறைஅயல் பின்தொடர்ந்து அணுக,
கதழ்வின் மால்அனல் அளித்திடும் சயந்தனம் கடவி,
~~ஆதிய வாரிதி ஏழையும் கடந்தனர் முரணாய்.~~ 147

142. வேண்டும் - 1. விரும்பத்தக்க 2. மன்றாடிக் கேட்கிறான்; நின்னைநேர் - உன் எதிரில்.

144. பஞ்சரித்து - பணிவுடன் பலகால்கேட்டு; குஞ்சிரிப்பு - புன்முறுவல், இங்கு மகிழ்ச்சியைக் குறித்தது; சடிலங்கள் - குதிரைகள்.

145. கோ - கண்; ஏவில் - அம்பெய்வதில்.

146. திருமகன் - பிரத்யும்நன்; உலகு அளந்தவன் - திருமால்,கண்ணன்; நரபதி - மன்னன்; குசை - பிடரிமயிர்.

147. சதழ்வின் - வேகமாக; அனல் - அக்கினி.

அத்தி ஏழையும் தீவுகள் அனைத்தையும் கடந்து,
மத்த மாமுதல் நால்வகைச் சேனையும் வதிந்த
சத்து வப்பெரும் பாடியில் சேர்ந்தனர்; தளங்கள்
துத்தி யத்துடன் ஆர்த்தன காற்றுஅலைத் தொனியாய். 148

அகம்ம கிழ்ந்தஆ னந்தஆச் சரியம தாக
முகம்ம லர்ந்தனர்; முழங்கினர் அம்பர முழக்காய்;
திகழ்இ ரத்தினத் துவசன்,மா ருதிசுதன் சேயும்
இகலும் நால்வகைத் தளத்தொடும் பயணமுற்று எழுந்தார். 149

நிகரி லாநவ ரத்தினக் கவிகையின் நிழலில்
புகஇ ரண்டுவெம் புரவியும் செல,நறைப் புகைகள்
முகில்ள னத்திசை வெளிமுகடு அகடுகள் மொய்க்க
மிகுதி வேதகோ ஷம்கொடு வேதியர் நடந்தார். 150

நடையில் ஓமம்எக் கியம்குளப் படியினில் நடத்தி,
முடுகி வேதியர் வேதகோ ஷத்தொனி முழங்க,
சடிலம் மின்என உபயமு மேசரா சந்த
னுடைய நன்னகர் நோக்கிசெய நடந்தஉன் னதமாய். 151

முரசி னத்தொனி முழக்கமும், துளைகளாயாழ் கஞ்சத்
திரள்மு ழக்கமும், வாக்கிய முழக்கமும், தேர்மாக்
கரிமு ழக்கமும், குணத்தொனி முழக்கமும், காலாள்
குரல் முழக்கமும் கறங்கின புவிநிலை குலைய. 152

உததி யின்பிர ளயம்மகி மூடியது ஒப்ப,
சதுவ கைத்தளம் தலம்முழுது இடம்அறப் பரந்த;
விதநெ ருக்கின்மூ உலகுகள் யாவுமே நடுங்க,
மதிஇ னன்திசை மாறிட நடந்தது வானி. 153

---

148. அத்தி - அப்தி, கடல்; மத்தமா - மதயானை; பாடி - படைவீடு; காற்றுத் தொனியாய் அலைத்தொனியாய் எனத்தனித்தனி கூட்டுக.

149. மாருதி சுதன்சேய் - வீமனுடைய மகனாகிய கடோத்கஜனின் மைந்தன், விடரீதனன்.

150. வேதகோஷம் - மறையை உரிய முறையில் கூறுவதால் எழும்ஒலி.

151. சடிலம் - குதிரை; சடிலம் உபயமுமே மின் என உன்னதமாய் நடந்த என இயையும்.

152. வாக்கியம் - வேத வாக்கியங்கள்; கறங்கின - ஒலித்தன.

153. உததி - கடல், பிரளயம் - வெள்ளம்; மகி - உலகம், மதி - சந்திரன்; இனன் - சூரியன்; வானி - படை.

ஆர வாரமுற்று அலைகடல் எனஅனி கங்கள்
பாரை மூடுறப் பரவல்நேர் வருவதைப் பார்த்து,
சார ணாளிடம் வினவியே சகலமும் அறிந்து,
தார சந்திர காசனும் தான்வரல் கேட்டு, 154

சொன்னம் நான்கு,இரு நிதி,நவ மணி,பல தூசு,
பொன்உ லாவுபல் பூஷணம், பொருள்,பரி, கரி,தேர்
தன்னை யேதனை நிகரிலி சந்த்ரகா சனுக்கே
மன்ன னாம்சரா சந்தனும் திரைதர வந்தான். 155

"சிரத்தின் மேலும்உண் டோகவுள்? தனஞ்சயன் உபய
பரிக்கு மேபதம் பணிந்துஉயர் பூசனை பண்ணி,
திருச்ச ரோருக மாயனை விசயனைச் சிந்தைப்
பொருத்த மாய்க்கழல் பணிந்து,அருள் திறை"எனப் புகல்வான். 156

என்னை யும்பல மன்னையும் வென்றவன் இருக்கப்
பன்ன கம்துயில் பவன்வல வன்றொழில் பயில்வான்
தன்னை யும்,முனி தன்னையும், முனிவலான் தனையும்,
முன்ன மேதொழுது ஈண்டுவா பின்"என மொழிந்தான். 157

நாதன் இவ்விதம் உரைத்திட நடுநடு நடுங்கி,
"ஏதுஇ னிச்சொல்வது?" எனமுனி வரனைமுன் இறைஞ்சி,
மாத வன்தனைப் பார்த்தனை மலரடி வணங்கி,
ஓது பல்பொரு ளும்திறை கொடுத்துஇனிது உவந்தான். 158

பணிந்த மன்னனைப் பார்த்தன்ஆ சரித்துமார்பு அணைத்து,
"குணம்சி றந்துள சந்திர காசனைக் குறுகி
துணிந்து நீகழல் தொழுதுஇறை அருள்"கெனச் சொல்லக்
கணம்கொள் சந்திர காசனை இறைஞ்சினன் கடிதின். 159

---

154. அனிகம் - படை; சாரணாள் - ஒற்றர்; தார - மாலையை அணிந்த.

155 சொன்னம் நான்கு - ஆடகம், கிளிச்சிறை, சாதரூபம்,சாம்பூநதம் எனப்பொன்வகை நான்கு. இருநிதி - சங்கம, பதுமம்ஆகிய இரணடு பெருநிதிகள்; தன்னையே - பொருள்கள் பலவாகப் பன்மையாக இருப்பினும் திறை எனத் தொகுதி ஒருமையாக்குக.

156. கவுள் - கன்னம்; அருச்சுனனும் கண்ணனும் இருக்கையில் தான்பெரியவன் அல்லன் என்றவாறு.

157. பன்னகம் - பாம்பணை, முனி - (ஆலமரத்து) தவசி, முனிவலான்- வில்விற் சிறந்த விசயன்.

159. ஆசரித்து - உபசரித்து. தொழுதிறை - பணிவதைக் காட்டுகின்ற சுபம், தொழு - முதனிலைத் தொழிற்பெயர்.

மாணிக் கங்களும் மற்றுஇரத் தினங்களும் மலர்க்கால்
காணிக் கைஅளித் துக்கரம் கட்டியே கனிந்து,
வாணிக்கு இங்கித வசனமது உரைத்திடு வானைப்
பேணிப் பண்புடன் மார்பினில் அணைத்தனன் பெருமான் 160

அகல மீதுஅணைத்து "உனதுசா கரதளத் துடனே
சகல மன்னவர் மன்னவன் தர்மரா சேந்த்ரன்
மகமும் காட்சியும் அறிந்துஇனிது இளகவம்" மென்று
பகரு முன்சது ரங்கவெம் படையுடன் தொடர்ந்தான். 161

இந்த வாறுபற் பலபதி மன்னவர் எவரும்
வந்து வந்துஅடி வணங்கியும் திறைபல அளித்தும்
சுந்த ரத்தளத் திரளுடன் முறைமுறை தொடர்ந்தார்
சிந்து பற்பல திரைக்கடல் தனில்உறு வதுஎன. 162

அக்கு ரோணிஅஞ் தீற்றினுக்கு அதிகமே தரும
னுக்கு மன்னவர் உதவிய சேனையும், உரவர்
தக்க சேனையும் சமுத்திரம் பிறங்கியது அன்ன
தொக்க மாமுனி தன்னையே சூழ்ந்துறத் தொடர்ந்தார். 163

விரவு சந்திர காசனும், வீரவர் மனும்,சீர்
பரிச கேதுவும், பப்பர வாகனும், அமிர்தன்,
நிருபன் நீலனும், சாளுவன், நிகரில்சாத் தகியும்,
தெரியும் உத்துவா சாரி,அக் ரூரனும் செல்ல. 164

கன்னன் மெய்யனும், சுபத்தியும், காரிருள் மேக
வன்னன், மால்அணி யுருத்திரன், பிரத்திமன் சுவேதன்,
சொன்ன பத்திர கிரிஎம னாசுரன், சுகலீ
லன்னும் பார்த்தனைச் சூழ்ந்துற நடந்தனர் அன்றே. 165

---

160. வாணிக்கு - நாவால், வேற்றுமை மயக்கம் இங்கித வசனம் - இன்சொல் பெருமான் சந்திரகாசன்.

162. சிந்து - ஆறு; பறபல சிந்து கடலதனில் உறுவதென என இயையும.

165. மெய்யன் - உடலில் தோன்றியவன், மகன். (விடதீதனன்).

பரிக்கு ளப்படிக்கு ஓமம்எக் கியங்கள்பா விக்க,
விரைப்பெ ரும்புகை மேகமண் டலம்எனப் பரவ,
வரித்த மாமணிக் கவிகையும் துவசமும் மல்க,
உரத்த சேனைமுன் சென்றன உபயவெம் பரியும். 166

பதைத்தி டும்கன ருசிஎன உபயவாம் பரியும்
மதத்து வாவிய சயிந்தவ மண்டல மதனை,
இதத்த நோக்கமுற்று ஏகின என்றுமா முனிவன்
துதித்து மன்னவன் செவிக்குஇசை வாம்படி சொன்னான். 167

சமுத்திரச் சருக்கம் முற்றிற்று

ஆகச் சருக்கம் 19க்கு விருத்தம் 3833

---

167. கனருசி - மின்னல்; சயிந்தவ மண்டலம் - சயிந்தவ தேசம்; இதத்த - நன்மையான; முனிவன் - வைசம்பாயனன், மன்னவன் - சனமேசயன்.

20. சயிந்தவ தேசச் சருக்கம்

(அறுசீர் ஆசிரிய விருத்தம்)

கருதரிய பெரும்சலதிச் சலசவனப்
புதுமைசொல்லக் கடவர் யாரே?
அரவில்நடித் ததும்,மருது சகடைஉதைத்
ததும்,சிலைபெண் ஆக்கி, கங்கை
விரவஅரன் முடிதரிக்க உதவுபதத்
தின்பெருமை வினவாப் பொன்னின்
நிருதனைச்செற்று, அருமறையை வெளிக்கொணர்ந்த
பெரும்பொருளை நேசிப் போமே. 1

"நனிவிசயப் பரிஇரண்டும் சயிந்தவதே
சந்தனையே நாடிச் சென்றது
எனஉரைத்தீர்; அதன்மேலும் விளைந்தகதை
பகரும்;"என இறைவன் வெற்றி
முனிவரனை வினவுதலும், "முறைமுறையாய்
விவரமுடன் மொழிவேன்;" என்று
பனகசய னனைத்துதித்தே பாடலங்கள்
செலும்வாறு பகர லுற்றான். 2

மன்னுபட்ட வர்த்தனரும், மாமகுட
வர்த்தனரும், மன்னர் யாரும்
துன்னுசதுர் வகைத்தளமும் திரைகடல்போல்
முனிவரனைச் சூழ்ந்தே செல்ல,
பன்னிருயோ சனைத்தூரம் ரணமுரசம்,
செயமுரசம், பரவை ஓதை
தன்னிலுமே சதமடங்கு தான்முழங்க
வேநடந்த தானைக் கூட்டம். 3

---

1. சலதிச் சலசவனம் - கடலிற்பூத்த தாமரைக்காடு. பாற்கடலில் பையத் துயின்ற பரமன்; சிலை - கல், பெண் - அகலிகை; வினவா - கேட்காத; பொன்னின் நிருதன் - இரணியன்; அருமறையை வெளிக்கொணர்ந்தது மச்சாவதாரத்தில். இப்பாடலில் அவதாரங்கள் பின்னிருந்து முன்னாகக் கூறப்பட்டுள்ளன.

2. பனக சயனன் - அரவணையான்; பாடலங்கள் - குதிரைகள்.

3. பரவை ஓதை - கடலொலி.

மின்அனைய இருபரியும் உரும்அனைய
குரல்முழக்கி விருது சூழத்
துன்னுநவ மணிக்கவிகை நிழல்நடக்க,
நறைப்புகைகள் சுடரை மூட,
எந்நிலமும் நடுநடுங்க, பஞ்சவாச்
சியம்இடிகள் எனவே ஆர்க்க,
கன்னமது வெடித்ததொப்பக் காதுபொத்திச்
சயிந்தவன்சேய் கவல்வ தானான். 4

"பாரவா ரத்துஅயலில் பரவைஅலை
ஒலியினிலும் பஞ்ச வாச்யம்
ஆரவாரிப் பதுஎன்கொல்,அறை மின்கள்;"
எனச்சூழ்நின் றவர்கள் சொல்வார்
"காரைநேர் ஒத்தகரன் தருமன்நந்தன்
மகப்புரவிக் காவ லாளன்
வீரசா ரப்பெருமான் தனஞ்செயன்றன்
செயமுரச வீறுஇது" என்றார். 5

(கலி விருத்தம்)

"தருமன் வேள்விச் சடிலமது ஏது?இவன்
வருவது ஏது?இவ் வல்லமை ஏது?செய்
கருமம் எத்தன காரியம் ஏது?"என
வெருவி யேவின வுற்றனன் விம்மியே. 6

"தன்னை யேநிகர் அற்றத ராதல
மன்னர் செய்குவார் மாமக வேள்விதான்;
என்னி னும்தெய்வ மேதுணை இல்எனில்
உன்னி வேள்விமுற் றாதுஒரு போதுமே. 7

---

4. உரும - இடி, விருது உரும்அனைய குரல் முழக்கிச சூழ என இயையும். கன்னம் - செவி, அது - பகுதிப்பொருள் விகுதி

5. பாரவாரம - கடல், தருமன் நநதன் - அறக்கடவுள்மகன், யதிஷ்டிரன்.

6. எத்தன காரியம் - முயலும தொழில்.

7. தராதலம் - நிலம், இஙகு ஆட்சிகருஉட்படட பகுதி.

முன்அ நாள்சக ராள்மகம் முற்றிடாது
உன்னும் ஓர்முனி ஓதிய வெஞ்சின
வன்னி யார்அழிந் தேஅலல் தீப்புக,
பின்னு மேகதி பெற்றிடல் இன்றியே. 8

தக்க கால்வழி தன்னில் பகிரதன்
மிக்க பேரை வினாவி, அருந்தவம்
தொக்கின் மும்முறை செய்து, சுரநதி
யைக்கொ ணர்ந்துஅட லையில் விட்டனன். 9

அங்கம் நீறும் அடலையில் கங்கைநீர்
தங்க லால்சக ராள்கதி பெற்றனர்;
இங்கு கங்கை பகீரதி என்பதும்
அங்குஅ வன்செய் அருந்தவத்து உற்றதால். 10

பின்இ ராமர் பெரும்மக வேள்விதான்
நன்ன யத்தின் நயந்தவா முற்றினார்;
முன்இவ் வாறுசெய் தாரும்முற் றாரும்மாய்
இன்ன வாறு நிகழ்ந்தது, இராசனே! 11

இவ்வு கத்தினி லேஇவ னேஅலால்
தவ்வு மாமகம் தான்செய்த பேர்இலை;
குவ்வி டத்தில் குரகத நெற்றியில்
வவ்வு பட்டம் வரைந்துவிட் டான்இவன்; 12

தனது வீரமும், தன்பிர தாபமும்,
எனைஅ லால்எதிர் இல்எனும் அல்லலும்,
புனையும் வெற்றி விருதும், புகழையும்
கனப டத்தில் கவினுறத் தீட்டியே, 13

"கரத்தில் வேல்வில் கருவி எடுத்தவர்,
சிரத்துஇ ரத்தினத் திருமுடி வைத்தவர்,
முரட்செய் மன்னவர் விந்தில் முளைத்தவர்
இருப்ப ராகில் இவுளியைப் பற்றியே, 14

---

8. சகராள -சகரர்கள், ஓர்முனி - கபில முனிவர், வன்னி - நெருப்பு, அலல் தீ - அல்லலாகிய அகுகினி. 9 காலவழி - வமிசம், சுரநதி - கங்கை, அடலை - சாமபல்.

10. அங்கம - எலும்பு, நீறும் - நீறாக்கப்பட்ட. 12. குவ்விடத்தில் - நிலவுலகத்தில்.

எந்தன் வில்லுக்கு எதிர்த்துஅமர் செய்குவீர்;
சந்த வல்இகல் சத்துவம் பற்றிலார்
கந்து கத்தையும் காண்டீபன் றன்னையும்
வந்தித் தேதிறை வண்மையும் செய்குவீர்" 15

என்றுள முத்துஇட்டு, எழிற்படம் மாமுகம்
ஒன்ற வைத்துஅணிந்து, உன்னியை விட்டனன்;
மன்றல் மாவலம் வந்தது திக்குஎலாம்;
சென்றது ஆண்டு தினம்இரணடு அன்றியே. 16

இதுவ ரைக்கும்எண் ணற்றவர் கொற்றவர்
கதிவ யப்பரி கட்டிய பேர்வில்லி
மதுகை விற்சமர் வாளியில் எய்த்து,மேல்
பதம லர்க்குஇறை வைத்து,அடி பற்றினோர் 17

காணும் முன்னம்அக் கற்கியைப் பூசைசெய்து,
ஏண வில்லிக்கு இறைஅளித் தே,நெடும்
தாணு வைப்புடைத் தானுடன் கூடினோர்
வேண மன்னர்கள் வீரர்கள் வேந்தனே. 18

எல்லி யின்கரம் வீசுஉலகு எங்கணும்
மல்ல லின்பரி வாவி,இப் பாடிநேர்
ஒல்ல நண்ணியது; உற்றுள சேனையும்
புல்லி யேவரு கின்றது பூபனே." 19

என்றுஉ ரைத்திட ஈரலு டன்குடர்
அன்று தீய அழல்கள் பிறங்கின;
குன்றி மேனி குறைந்து நடுங்கின;
துன்றி மெய்யில் சூர்த்தழல் மொய்த்தன; 20

---

15. வல் சததம என மாறுக, வலிமையாகிய பலமும், இகல்சத்துவம - போரிடுவற்கு வேண்டிய வலிமையும், சந்துகம - குதிரை

17 மதுகை - வலிமை மிக்க, வெற்றியை அளிக்கிறாற எனினுமாம்,இறை - கூப்பம்

18. கற்கி - குதிரை, ஏண - வலிமையுடைய, தாணுவைப் புடைத்தான்- சிவபிரானைக் காண்டீபத்தால் அடித்த அருச்சுனன், வேண - வேண்டிய அளவு.

19. எல்லி - சூரியன், பாடி - ஊர். 20. சூர்த்தழல் - அசசமாகிய தீ.

"நந்த னைக்கதை யால்நறை மாலையால்
எந்தை செற்றதற்கு எந்தையை, எந்தைதன்
தந்தையைச் செற்றது வும்போ தாதுஎன்மேல்
வந்தது இன்னம் மகன்பழி வாங்கவோ?" 21

எனநி னைந்தனன்; ஏங்கினன்; ஏங்கலில்
தனைம றந்தனன்; தன்உயிர் போக்கினன்;
வினவு பொற்புஅணை விட்டுப் பிரேதம்(ஆங்கு)
உனித மாக உருண்டு விழுந்ததே. 22

ஈது கண்டு,இ ருந்தவர் சொற்றசொல்
தாதி அந்தப் புரத்துஉறும் தாயிடம்
ஓத ஓடி, உளறிக் குளறவே,
மாது மைந்தன் மடிந்தது நோக்கியே, 23

அழுது, வீழ்ந்து, அலறி, உருண்டனள்;
புழுதி மேனியில் போர்த்தனள்; தேற்றம்வந்து,
"எழிலின் சேய்க்குஉயிர் இல்லைகொல் லோ?"என
முழுதும் நோக்கி, முசித்து நடுங்கினள். 24

"துணைவர் நூறு பேரும் தொலைந்தனர்;
மணவ ராளு மிழந்தனும் மாய்ந்தனன்;
அணியின் ஓர்சுத னால்எனது ஆவியைத்
தணிவி னோடும் தரித்துஇருந் தேன்யான். 25

---

21. நந்தன் - (அருச்சுனனின்) மகன், அபிமன்யு. எந்தை என்றது சயத்திரதனை. இவன் பாரத யுத்தத்தில பதினமூன்றாம் நாள் பதுமவியூகத்தில சிக்கிய நிராயுதபாணியான அபிமன்னனை அடித்துக் கொன்றான் அதனால் அடுத்த நாள அருச்சுனன் இவன்தலையைக் கொய்து தவஞசெய்து கொண்டிருந்த விருத்தக்ஷத்ரன்என்னும இவன் தந்தையின் கைகளில் சேர்ந்தான. என் மகனினதலையை நிலத்தில் விழச செயகிறவனுடைய தலை பலசுக்கல்களாக வெடிக்கடடும் என்ற தன் சாபத்தால தன் தலையேவெடிக்கப்பெற்று இறந்தான். இவ்வரலாறே இப்பாடலில் இடம்பெறறது

23. தாய - சயதரதனின் மனைவியும் கௌரவாகளின ஒரே தங்கையுமான துசசளை.

24. துணைவா - உடனபிறந்தோர், துரியோதனன் முதலிய நூற்றுவா; மணவர் - கணவன்; சயிந்தன் - சயிந்தவ நாட்டு மன்னனாம் சயத்திரதன்; அணியில் - அழகிலனைப் போன்ற

தாதை தாதைதன் தாதையைக் கொன்றவன்
பாத கன்வரு கின்றப யத்தினால்
சாத மாகத் தனயனும் மாய்ந்ததால்
ஏதுயான் செய்வது?" என்று நடுங்கியே, 26

"வார வீரனு டன்திரு மால்உப
கார மாய்உறு வான்"எனக் காரிகை
சார மாய்மனந் தன்னினில் உன்னியே,
ஈர மாக எதிர்கொடு சென்றனள். 27

திக்கு மீவெளி யும்செக முங். . . .
சக்க ரங்கள் தடம்புரள் கின்றபோல்
சொக்க, மிக்கஅ தோகதி எய்து
அக்க யற்கண்கண் டாள்கடல் தானையை 28

சேனை கண்டு, திடுக்கி, நடுங்கியே
"ஏனை பாந்தள் துசன்படைக் கேசத
மான தானை மலிந்தது இங்கு"என்றுஅழ,
கான ஈரல் குடரும் கருகினாள். 29

கருகி னாள்முகம்; கண்கள் கசிந்தனள்;
உருகி னாள்உடல்; ஓஎன்று அரற்றினாள்;
மருவு நாஅறல் வற்றினள்; கைத்தலம்
அருக லோடுகன் னத்தினில் வைத்தனள். 30

பிந்தித் தேறினள்; சிந்தை பலத்தனள்;
"கந்தன் அன்னஎன் கான்முளைக்கு ஆவிமால்
தந்தி டாவிடில் தான்மடி வேன்"என
புந்தி நாடினள்; போகினள் வாளிபோல். 31

---

26. தாதையையும் தாதைதன் தாதையையும் என ஈரிடங்களிலும் எண்ணும்மை கூட்டுக; சாதமாக - உண்மையாகவே.

28. முதல் மூன்றடிகள் தெளிவாக விளங்கவில்லை. கயற்கண் - துச்சளை, உவமைத்தொகைப்புறத்துப்பிறந்த அன்மொழித்தொகை.

29. பாந்தள்துசன் - பாம்புகொடியோன், துரியோதனன்; சதமான - நூறுமடங்குள்ள.

30. நா அறல - வாய்நீர், எச்சில், அருகலோடு - இணைத்தலோடு, இரண்டையும் என்பது கருத்து.

31. கான்முளை - மகன்; வாளிபோல் - (வில்லிலிருந்து செலுத்தபபட்ட) அம்பைப்போன்று.

விரைந்து சென்று,விண்டு ஊர்தரு தேர்முனே
கரைந்து போய்,சிவி கைவிட்டு இறங்கினள்;
இரைந்து,அ ரற்றி,இ ரங்கிப் புரண்டுஉருண்டு
உருண்டு பூழ்திய ளாய்உடல் சோர்ந்தனள். 32

சோர்ந்து வீழ்ந்துள தோகையை மாயவன்
ஏந்தி னான்புவி யின்கண்இ றங்கியே;
"சார்ந்தது என்கொல்? சலிப்புஉனக்கு என்?"என
வேந்த நங்கையை விண்டுவி னாவினான். 33

"எண்இ றந்த இராசரும், சேட்டரும்
மண்இ றந்தஅன் றேஅவிந் தேன்இலேன்;
புண்நி றைந்தம னத்தொடும் புத்ரனால்
மண்இ ருந்தனன் மங்கிய மெய்கொடே; 34

மங்கு தாதையைக் கொன்றுள மாதுலன்
இங்கு வந்ததுஎன்? (என)இறந் தான்சுதன்;
செங்கை மாயவ னே!"எனத் தேம்பினாள்
அங்கை யால்அணைத் தேதுயர் ஆற்றியே, 35

"அச்சம் நீங்கு"என்று அமுதுஉரை கூறியே,
வச்சி ரன்தரு மைந்தனைக் கூவினான்;
அச்சு தன்சொலுக்கு அன்பன் இழிந்தனன்;
துச்ச ளைதுணை வன்கழல் வீழ்ந்தனள். 36

தாளில் வீழ்ந்துஅழும் தங்கையைத் தாங்கியே
மீளி அஞ்சி வினாவ, நடந்தவாறு
ஆளி அன்னவ னுக்குஅறைந் தாள்;கழைத்
தோளி தன்முகம் சுந்தரன் நோக்கியே, 37

---

32. விண்டு - திருமால்.

33. இறங்கியே ஏந்தினான் என இயையும். வேந்த நங்கை - அரசகுலப்பெண்.

34. சேட்டா - தமையன்மார், கௌரவர்; புத்ரனால் - மகனுக்காக.

35. மாதுலன் - தாயமாமன், துச்சளைக்கு அருச்சுனன் தமையனாதிறான்

36. வச்சிரன் - இந்திரன்.

"இதற்கு நான்என செய்வது?"என்று ஏங்கியே
மதர்த்த வீரியன் மாயனை நோக்கியே
"சுதற்குஇ ரங்கிய தோகைதுக் கம்தவிர்த்து
அதற்கு மேல்செல் வது"என்றனன் அர்ச்சுனன். 38

"நல்ல வாய்மை நவின்றனை, நாம்ஓர்ஆண்டு
எல்லை நீள்உலகு எங்கணும் கோலியே,
மல்லல் மாமகம் செய்ய, மகிழ்ச்சியாய்ச்
செல்லும் நேரம்இத் தீமைநன்று அல்லவால். 39

என்ன வாறும் எழுப்பிவிட்டு, ஏகுதல்
பின்னை" என்றுஉரை பேசிப்பின் மால்சொல்வார்
"இன்ன வாறு வருக;இப் பாளையம்
முன்னம் யாம்செல்வது;" என்றுமொ ழிந்துபின், 40

உந்தி பூத்தவன் உந்திஅம் தேர்தனை
சிந்து தேசத்து இராசன் குமாரகன்
நந்தும் ஊர்க்கு நடத்திச் சபாமண்ட
பம்த னக்குஎதிர் பண்பில் நிறுத்தியே, 41

(அறுசீர் ஆசிரிய விருத்தம்)

வீரனும் மாலும் தேரை விட்டுஇனிது இறங்கி, ஏங்கிப்
பாரினில் அவிந்தோன் றன்னைப் பார்த்துஅதி சயித்த பின்னர்
நாரணன் பிரேதம் தன்னை நன்குறத் தடவி விட்டு
சீர்உறு சிலதன் றன்னைச் செங்கையால் ஏந்துகென்றான். 42

என்றலும் சுரத்தால் பார்த்தன் ஏந்தினன்; ஏந்தும் முன்னம்
பொன்றினோன் ஆவி வந்து புகுந்தது புரத்தின் உள்ளே;
அன்றுஅவன் எழுந்து, பார்த்தன் அம்புய முகம்பார்த்து, ஆவி
நன்றுஉடல் துடிது டிக்க நடுநடு நடுங்கி னானே. 43

---

40. என்னவாறும் - எபபடியாவது; பாளையம் - ஊர.

41. உந்திபூததவன் - பதுமநாபன்; உந்திஅமதேர் - அழகான தடடினை உடைய தேர், அம் உந்தித்தோ என மாறுக.

42. சிலதன் - நணபன், அருசசுனன்.

43. புரம் - உடல.

உதறியே துடிது டித்த உடல்சிறி யோனை மாயன்
கெதியுடன் நோக்கி, "நண்ப! கெடியினால் சிறிய மைந்தன்
பதறுதல் தவிர்த்திடு" என்ன, "பயமதுஏன்? சுத்த வீர!
மதுகையான் மகன்நீ அன்றோ? மருக!அஞ் சுவதுஎன்?" என்றே 44

"அந்தநாள் விதியின் மூட்டத் தால்அவ ரவர்க்கு வந்த
புந்தியால், அளவின் வண்ணம் பொன்றியது அன்றி வேறுஇல்;
ஒன்றும்நீ உன்ன வேண்டாம்; உளத்துஉறும் அச்சம் நீக்கிக்
குன்றினால் மாரி மாற்றும் கோன்அடி பரவு" கென்றான். 45

அமுதுஉகு வசனம் மாமன் அருள்செய, அச்சம் நீங்கி,
விமிதமெய்ப் புளகம் ஏறி, விமலநா யகன்தாள் போற்றி,
மமதைநா மங்கள் எல்லாம் வாயினால் துதித்த பின்பு,
உமிழ்கதிர் மோலி மாமன் உபயதாள் பரவி நின்றான். 46

(அடுத்த பாடல் சுவடியில் எழுதப்படவில்லை)

வணங்கிய மருகன் றன்னை மாதுலன் மார்பில் சேர்த்து,
குணங்கொடு வாழ்த்தி யே,"முக் குற்றமது அற்ற மாயன்
சுணங்குஅணி முலைப்பொன் மார்பன் தூயதாள் பணிந்த தாலே
தணிந்தஎன் றனக்கும் கூடத் தாள்தொழும் வாறுஅது என்கொல்? 48

என்னதான் மற்றோர் பாதம் இடைவிடாது அனந்த காலம்
மன்னிநீ வணங்கி னாலும், மால்அடி நிமிஷ நேரம்
தன்னைநீ சென்னி சூடு தலுக்குநேர் ஒத்தி டாதே;
பொன்அணி மருமன் நாமம் புகழ்ந்துஉனு மறந்தி டாமல்." 49

என்றநண் பனைமால் நோக்கி, "இணையிலா உலகம் எல்லாம்
வென்றனை; நின்பேர் கேட்டு வீழ்ந்தவன் எழும்பச் செய்தாய்;
மன்றல்மா வேள்வி முற்றி வாகையும் பெறநின் றாயே;
பின்றையான் நீவேறு என்று பேசுவது என்கொல்?" என்றான். 50

---

44. கெதியுடன் - ஆதரவாக; கெடி - அச்சம், மதுகையான் - வலிமையுள்ளவன்.

45. அந்த நாள் - பாரதப்போர்காலத்தே, பொன்றியது - இறந்தது; குன்று - கோவர்த்தனமலை.

46. மமதை - பெருமை, மோலி - கிரீடம்.

48. முக்குற்றம - காமம், வெகுளி, மயக்கம், சுணங்கு - தேமல்,பொன் - திருமகள், தணிந்த - சீழ்நிலையில் உள்ள.

49. மன்னி - பொருந்தி; உனு - உன்னு, தியானிப்பாயாக

"அனைத்தும்நீ ஆகை யால்,நான் அல்லன்;நீ தான்என் எண்ணம்
நினைத்தது முடித்தாய்; ஐயா! நினதுஅருள் மழையது எம்பால்
பனித்தருள் புரி;அ றாமல் பரிந்து,உனை அறியும் காட்சி
தனைத்தய வாய்மென் மேலும் தந்துஅருள் சுரந்து காப்பாய். 51

மாயையின் மயக்கை நீக்கி, மனக்கணது எனக்குத் தந்த
தூயன்நீ" என்று தாளைத் தொழுதவன் றன்னைத் தாங்கி,
காயமார் பகத்தில் சேர்த்து, கண்மலர்ச் சலிலம் (என்னும்)
நேயமுத்து உகுத்து நண்பன் நினைவினுக்கு உறுதி சொற்றே, 52

"வரும்தளம் முழுதும் இங்கண் வதிக"என்று உரைக்க, தூதர்
பரிந்துசென்று, எவர்க்கும் சொல்லி, பாளையம் இறக்கு வித்தார்;
"விருந்துயான் கொடுப்பேன்;"என்று வீந்துஉயிர் பெற்றோன் மாலை,
"இருந்துஅனம் நுகரும்" என்று இறைஞ்சிஉத் தாரம் கேட்டான். 53

கொற்றவன் சயிந்தன் என்ற குமரனை இருண்ட மேகம்
ஒத்தமா மாயன் நோக்கி, "உவந்துசே னைகட்கு எல்லாம்
நத்திநல் விருந்துஅன் பாக நல்கு"என, மகிழ்ந்து, நண்பாய்,
பத்தியாய் விருந்துஅ ளித்தான் பல்லரும் மகிழ்ச்சி கூர. 54

சகலரும் மகிழ்ந்த பின்பு, "சயிந்தவன் நகரைக் கோலி
மகிழ்வுற முன்போல் வைகும் வாகினி முழுதும்" என்று
பகரமால் அந்த வாறே பாடிசெய்து உறைந்தார்; பார்த்தன்
முகசரோ ருகத்தை நோக்கி, முராரிபின் மொழிவ தானார் 55

"தவத்தினில் பெரிய தேசத்து அரசர்கள், வீர சூரர்,
மவுத்துவ மான பேர்கள் வருவதால் வரிசை செய்ய,
நவக்கதை வீமன் சேனை நம்பிமா ரோடும் வந்து,
செவித்து,எதிர் கொள்ள, தூது சிறந்துஇனிது அனுப்பு" கென்றான். 56

---

51. அனைத்தும் நீ ஆகையால் என் எண்ணம் நினைத்தது நீதான்முடித்தாய, நான் அல்ல என இயையும்; அறாமல் - இடையீடின்றி;பரிந்து - அன்புகொணடு; காட்சி - ஞானம்.

53. வீந்த - இறந்து.

55. கோலி - குழ்நது. சகலரும மகிழ்ந்த பின்பு மால், " வாகினிமுழுதும் சயிந்தவன் நகரைக் கோலி முன்போல் மகிழவுற வைகும்"என்று பகர அந்தவாறே (வீரா) பாடிசெயது உறைந்தார் என்பதுமுடி.பு.

56. மவுத்துவமான - மகத்துவமான, பெரிய, நம்பி - ஆண்களில் சிறந்தோர்; இங்கு நகுல சகாதேவா; செவித்து - சேவிதது,வணங்கி.

மால்உரை வீர வீர மகபதி குமரன் கேட்டு,
"சாலநன்று;" என்றுஉத் தாரம் சாரணர் தமக்குச் சொன்னான்;
காலினில் விரைந்துஒற்று ஆட்கள் கான்மலை நாடு நீங்கி,
கோல்என யாக சாலை குறுகினர் தறுகி லாமல். 57

வலம்செய்து, தருமன் றன்னை வணங்கி,வாய் பொத்தி நின்று,
"குலம்செய்த தவம்மெஞ் ஞானம் (கூர்)மறம் பொறைசீர் கூண்டு
நலம்செய்துஓர் உருவில் தோன்றி, நற்புவி காக்கும் வேந்தே!
பலம்செய்துஉன் தம்பி செய்த பிரபலம் கேள்நீ; ஐயா! 58

அய்ய!நின் கையால் விட்ட அசுவமே செலும்திக்கு எல்லாம்
உய்யும்நால் சேனை சூழ, உம்பியும் தொடர்ந்து சென்று,
துய்யமா முனிவன் சொன்ன சொல்வழி நடத்திக் கொண்டு,
கொய்யுளைப் பிடித்தோர் தங்கள் நூறும்புஅகற் றியும்மாக் கொண்டே 59

நீலகேது, அமிர்த கேது, நெடும்புவி வர்க்க தேசம்,
மேலுமே சிங்க தேசம், வெகுமுக மிருக தேசம்,
காலன்அஞ்சு இரத்னதேசம், காரிகை மார்கள் தேசம்,
சோலையாய்த் தொடர்ந்த கானம், சுனைநவம் தெரிந்தே சுற்றி, 60

கானகம், பொய்கை மிக்க கனமணி விளையும் தேச
மாரைத் தினதே சம்,சீர் வளர்சர சுவதி தேசம்,
கோன்நெறி சந்த்ர காசன் குந்தள தேசம் ஏழ
தானசக் கரமும் சுற்றி, சராசந்தன் நகர்பின் னிட்டே, 61

சயிந்தவன் சிந்து தேசந் தன்னில்மா லுடனே பார்த்தன்
உயர்ந்தமன் னவர்கள் சேனை உததியின் நாப்பண் உற்றார்;
இயைந்தமன் னவருக்கு அன்பாய் எதிர்கொடு வரிசை செய்யச்
செயம்தரும் வீமன் மாத்ரி சேய்இரு வோர்க ளோடும், 62

---

57. கோல்என - (வில்லிலிருந்து விடுபட்ட) அம்பைப் போல; தறுகிலாமல் - தாமதம் செய்யாமல்.

58. கூர மறம் - சிறந்த வீரம், பொறை - பொறுமை; கூண்டு - திரண்டு.

59. முனிவன் - வியாசர்; கொய்யுளை - குதிரை.

60. இரத்ன தேசம் என்றது பப்பரவாகனின் மணிநகரத்தை.

62. மாதரி - பாண்டுவின் இரண்டாவது மனைவி; நகுல சகதேவரின் தாய்.

தானைக ளுடன்எ திர்ந்து சங்கையாய் வருக என்று
வானவர்க்கு அரசன் சேயும் மாலுமே உரைத்தார்'' என்று
போனதே சத்தில் உற்ற போர்வர லாறும் சொல்ல,
தேன்உகும் குவளைத் தாமன் செய்யமெய் புளகம் உற்றே, 63

(அடுத்த பாடல் சுவடியில் எழுதப்படவில்லை)

சனகமும் மணியு மாகக் கலந்துசா ரணர்கட்கு எல்லாம்
சினமிலி அபிஷே கங்கள் செய்து,பல் வெகுமா னம்கார்
இனம்என உதவி, வீம னுடன்இரு வோர்க ளோடும்
முனைதளம் அக்கு ரோணி மூன்றுடன் அனுப்பி னானே. 65

மாருதிக்கு உபய பாலும் மத்திரை புதல்வர் செல்ல,
சேரும்மூன்று அக்கு ரோணி சேனையும் கெழுமிச் செல்ல,
ஆர்தரும் பஞ்ச வாச்சி யங்களும் முழங்கி ஆர்க்க,
வாரியை நோக்கும் காலாய் வளிமகன் வழிக்கொண் டானே. 66

அத்தின புரத்தைக் கோலி அலைகடல் கவிந்த வாறாய்,
சித்தியின் நகரி யாதிச் சிந்துராச் சியம்ஈ றாக,
அத்தியே முதல தாய்நால் அங்கம்வெம் படையாய் நிற்க,
சத்துவ வீமன் நோக்கிற் தடம்புயம் புளக முற்றான். 67

அளவறு மகிழ்ச்சி யோடும் அனுசரும், வீமன் றானும்,
தளங்களும் புளகம் கொண்டு, சரிதொடர்ந்து ஏகும் நேரம்
உளந்தனில் வீமன் ஐயுற்று, ''உரவர்கள் பெருமை புன்மை
விளங்குபேர் அறிந்தி டாதுஎவ் விதம்தரி சிப்பது?'' என்றே 68

பக்கமாய் இரதம் தூண்டி, பத்திர கிரியான் பால்வந்து,
''இக்குஒழு கியபூ மார்பா! எனக்குஉனை, சாளு வோனை
அக்கிரி அதனில் கண்டே அறிந்ததுஉண்டு; அறியேன் மற்ற
திக்குஇரா சர்களை; கண்டு தெரிசிப்பது எவ்வாறு?'' என்றான். 69

---

63. வானவர்க்கு அரசன் - தேவராஜன், இந்திரன், தாமன் - மாலை அணிந்தவன்.

65 சினமிலி - கோபமில்லாதவனாகிய தருமன்; கார்இனம் - மேகக்கூட்டம்,

66 மாருதி, வளிமகன் - வாயுகுமாரன், வீமன்; மத்திரை - மாத்ரி; கால் - வாய்க்கால்.

67. அத்தி - யானை. 68 அனுசர் - தம்பியர்; சரி - வழி. 69. இக்கு - தேன்.

அந்தநேர் துளப மார்பன் அயல்வர, தேர்விட்டு ஓடி,
முந்தவே வலம்செய்து, அன்பாய் முளரித்தாள் இறைஞ்சி நின்றான்;
வந்தனை செய்தோன் றன்னை மார்பினில் புல்லி மாயன்,
"கந்தவா கனசு தா!வந் தார்களைக் காண்நீ" என்றான். 70

"அறிகுவன் உமையும் முன்னுள் ளவரையும; அல்லால் மிக்க
இறைவரை அறியேன்" என்ன, "இருடியை இறைஞ்சு" கென்று
முறைவிழிச் சைகை செய்ய, முனிவனை வலமாய் வந்து,
"பிறையணி சடையாய்" என்னப் பீடினான் இறைஞ்சி னானே. 71

அடிதொழு தவனை, "வாயு அருள்சுதா! வருக" என்று
சடைமுடி முனிவன் சொல்ல, தனதுஅகத்து அதிச யித்தே,
நடுநடு நடுங்கி மென்மேல் நாவினால் துதித்து நின்றான்;
"இடபவா கனனோ?" என்ன இளையரும் இறைஞ்சி னாரே. 72

அவர்கள்தம் பேரும் கூறி, ஆசிரு வதித்த பின்பு,
கவின்உறு வில்லி வீமன் கழல்இணை தொழவும், வாரித்
துவர்நிறத் தான்தன் மார்பில் தோய்வுற இறுகப் புல்லி,
பவிசில்கண் தரள மாரி பனித்துஅபி ஷேகம் செய்தான். 73

செய்தஅச் சைகை ஓர்ந்து, சீர்கொள்சுற் றிரகா சற்கு
வெய்துஇவன் கரங்கள் கூப்ப, வேந்தனும் கரங்கள் கூப்பி,
வைதிகழ் வேலி னானும் மார்பினில் அணைத்த பின்பு,
மொய்திறல் இளையோர் சென்று முன்சரண் இறைஞ்சி னாரே. 75

(இதனை அடுத்து வேறு ஒருபாடல் இருந்திருக்க வேண்டும்.
அதுபிரதி செய்கையில் ஏட்டிலேயே விடுபட்டுவிட்டது.)

மத்திரை புதல்வர் தம்மை மன்னர்கோன் மார்பில் சேர்த்தே,
உத்தம உபசா ரத்தோடு உவந்துற வாழ்த்தி விட்டான்;
சத்துவ வீர வர்மன், பரிசனன், அமிர்தன், நீலன்,
பத்திர கிரியான் றன்னைப் பண்பின்மார்பு அணைத்தான் வீமன். 76

---

70. கந்தவாகனன் - வாயுதேவன்; சுதா - மைந்தனே.

71 பிறைஅணி சடையாய - பிறைமதியை அணிந்த சிவபிரான்அனையவரே, உவம ஆகுபெயர்.

73. வில்லியானவன் வீமனைத் தொழவும் என்க; பவிசில் - பெருமையால்; கண் தரளம் - கண்(நீராகிய) முத்து.

இந்தமன் னவரை எல்லாம் இளையவர் தொழுதார் பாதம்;
மந்தரம் அனையான் பாதம் மணிநகர் அரசன் பூண்டான்;
சந்தமார் பகத்தில் புல்லி, "தம்பிமார்க்கு இறைஞ்சு" கென்றான்;
அந்தநா ழிகையில் சென்றே, அலர்ச்சரண் இறைஞ்சி னானே. 77

"இறைஞ்சிய வேந்தன் ஆர்கொல்?" என்றுஇவர் திகைத்து நிற்ப,
"பிறங்கொளி மணிப்பூண் மார்பன்; பீடினால் ஒப்பி லாதோன்;
திறம்தரு வில்லி செல்வச் சிறுவன்"என்று இருவ ருக்கும்
கறங்கிய வாயு சேயன் கண்ணினால் சைகை செய்தான். 78

சிறுவனை மகிழ்ந்து வாரி, சீரொடு மார்பில் புல்லி,
உறுதியாய் உச்சி மோந்தே, உறும்இரு கரம்கண் ஒற்றி,
"வறிஞருக்கு அதிக வாழ்வும் மாடையும் கிடைத்தது என்னப்
பெறுவதின் மிகுந்த பேறு பெற்றனம் உனைக்கண்டு" என்றே, 79

"புத்திரர் இன்றி ஐவர் புரந்தனர் பூமி என்று
இத்தலத்து உள்ளோர் நிந்தித் திடல்இன்றி எமக்குத் தந்தான்
அத்தியைக் காத்துக் கிஞ்சு மாரத்தை அறுத்தோன்" என்று
துத்திய மாக வாழ்த்திச் சுதன்றன்மேல் அன்பு கூர்ந்தார். 80

மற்றுள சிறுவர் யாரும் வந்துவந்து இறைஞ்சு வோரை,
கொற்றமார் பகத்தில் மூவர் கொள்கையாய்ப் புல்லி, வாழ்த்தி,
உற்றசாத் தகி,அக் ரூரன், கிருதனே; உத்வ சாரி
முற்றும்நால் வரையும் மூவர் முறைமுறை தழுவி னாரே. 81

தரந்தரம் அறிந்து, மூவர் சங்கைசெய்து உபச ரித்து,
"வரம்தரும் வேள்வி முற்ற வம்மின்கள் யாரும்" என்று
பரிந்துரைத் திடுசொல் கேட்டு, பார்த்திபர் ரிஷியைப் போற்றி,
"இருந்தவ முனியே தேரில் ஏறும்"என்று இறைஞ்சி னாரே. 82

---

77. மந்தரம் அனையான் - வெற்பனைய வீமன்; மணிநகர் அரசன் - பப்பரவாகனன், பெரிய தந்தையையும் சிறிய தந்தையரையும் வணங்கினான்.

78. இவர் என்றது நகுல சகதேவர்களை.

79. பாண்டவர்களின் மக்கள் அனைவரும் பாரதப்பெரும் போரிலமாண்டுவிட்டதால் அவர்கள் மக்கட்செல்வத்தால் வறியராயினர். இப்போது அருச்சுனனின் மைந்தன் ஒருவன் கிடைதததால்அவ்வறுமை நீங்கியது."பெருமவற்றுள் யாமறிவது இல்லை அறிவறிந்தமக்கட்பேறல்ல பிற" ஆதலின் பெறுவதின் மிகுந்த பேறு என்றார்.

80. அத்தி - சுசேந்திரன்; சிஞ்சுமாரம் - முதலை.

81. மூவர் - வீமன், நகுலன், சகதேவன். 82. சங்கை செய்து - மதிப்பளித்து.

அரசர்கள் உரைத்த வாறே அருள்முனி தேரில் ஏறி
விரவிய பின்பு மற்ற வேந்தரும் இரதம் உற்றார்;
தெரிசது ரங்க சேனைத் திரள்எலாம் பயண முற்ற;
புரிதனில் விளங்கும் அத்தி புரந்தனை நோக்கிச் சென்றார். 83

வில்லிதேர் கடவ, பின்னோர் விரவியே கவரி வீச,
நல்லமா முனிதேர் செல்ல, நடைநட சாலை யோடு
செல்லவெம் புரவி ரெண்டும் திரைகடல் சேனை சூழ
எல்லைநீள் நகரி நோக்கிற்று எனத்தவன் இறைக்குச் சொன்னான் 84

சயிந்தவ தேசச் சருக்கம் முற்றிற்று

ஆகச் சருக்கம் 20க்கு 3917

---

84. தவன் - வைசம்பாயனர், இறை - சனமேசயன்.

21. வேள்வி முற்றிய சருக்கம்

(கலிவிருத்தம்)

எல்லாம் அகடுள் கொடுஅளிக் கவலான்
அல்லாது அரன்ஐ யம்அகற் றியகோன்
கல்லால் மழைகாத் தவிபூ திமெயான்
நல்லான் கழல்நம் புகநெஞ் சகமே. 1

"மதுரம் திகழ்வாய் மைசொன்மா முனியே!
கதிர்இந்து உளகா லம்விலா சமதாய்
அதிகம் புகழ்மே வும்இவ்வியா கம்அருள்
உதவும் படிஓ தும்ஐயா! தயவாய்." 2

எனஓ திடவே செயமா முனிவன்,
"செனமே சயகேள்; திருமார் பகனாம்
வனமா லியும்,வீ மனுமாய் விரைவாய்
முனம்ஏ கினரே முகில்ஊ தையதாய். 3

தேரைக் கடுகக் கொடு,சீர் நகரி
ஊருக்கு அயல்உத் தமவேள் விசெயும்
ஏர்உற் றஇடத் தைஅடுத் தபின்,இப்
பார்உற் றனரே பதசா ரியராய். 4

பதசா ரியதா யபரா பரனை
நிதசா ரிவணங் கிடும்நீ திமனும்
மதியா ஏதிரே பதம்வந் துபணிந்து
அதி ... .நா யகன்ஓ துவனால் 5

---

1. அகடு - வயிறு; அளிக்க - பாதுகாக்க; ஐயம் - பிச்சைஏற்றல்;கல் - கோவர்த்தன மலை, விபூதி - இணையற்ற பெருஞ்செல்வம,மெய்விபூதியான் என மாறுக.

2. மதுரம் - இனிமை, கதிர் - சூரியன், இந்து - சந்திரன், முனியே!ஐயா! தயவாய் ஒதும் என இயையும்.

3. முகில் ஊதை - ஊதை முகில் என மாறுக. காற்றால தள்ளபபடும் மேகம், அது பகுதிப்பொருள் விகுதி. 4. ஏர் உற்ற - அழகிய; பதசாரியர் - காலால் நடநதுசெல்பவா

5. பராபரன் - திருமால், சாரி - கூட்டம் கூட்டமானவர்கள், நீதிமன் - தருமன்; மதியா - மதித்து, எதிரே வந்து பதம் பணிந்து என்க.

"இறைவா! இறைவர்க்கு இடியேறு அனையாய்!
பொறையால் உலகில் புரைஆ னவனே!
திறைமூ உலகும் பெறுசீ ரியனே!
நிறைகோல் நெறிசெய் திடும்நீ திபனே! 6

கடல்ஏழு ஒருமித் தகவின் பெறவே
படைகூ டியபற் பலமன் னவர்நின்
அடிகா ணஅடைந் திடுவார் கள்;அவர்க்கு
இடமே செய்குவன் விடைஈ;" எனவே, 7

"நீதாம் பரம்;மால்! நெடியோய்! நிதம்உன்
பாதாம் புயம்நல்கு;" எனும்பார்த் திபன்முன்,
பீதாம் பரம்பெட்பு அணிந்தான் இடையில்
சேதாம் பல்நடுங் கிடுசெவ் விதழான் 8

செய்யாள் உறையும் திருமார் பகமால்
ஐயா யுதன்அன்று இரதம் கடவும்
கையா யுதம்ஒன் றதுகைக் கொடு,"கால்
மெய்யா! வரு"கென் றுவிரைந் தனரே. 9

அரியோடு அரிசே யனுமே விரைவாய்
மருமே வியமா மலர்தங் கும்நதிக்
கரைமே வி,இடங் கள்கணித் து,மனை
புரிவோர் பலர்போ தஅழைத் தனரே. 10

சிட்டித் திடுதெய் வகமா எருடன்
தட்டித் தொழில்செய் து,சமைத் து,மனை
கட்டித் தருகின் றுளகம் மியரும்
திட்டத் தொடுஅழைத்து உரைசெப் புவர்மால் 11

---

6. பொறை - பொறுமை, புரை - உயர்வு.

8. மால் - திருமாலே, அண்மைவிளி, பார்த்திபன் - மன்னன், தருமன்; பெட்பு - விருப்பத்துடன், சேதாம்பல் - செவ்வல்லி;நடுங்கிடு - போன்ற.

9. கால் - காற்று; மெய்யன் - உடலில் தோன்றியவன், மகன், கால்மெய்யன் - வாயுகுமாரன்;

10. அரி - 1.திருமால் 2.வாயுதேவன், மரு மேவிய - வாசனை பொருந்திய, கணித்து - தேர்ந்தெடுத்து.

11. சிட்டித்திடு - (சுவின்கலையாகப) படைப்புக்கலைவலல; முதல்சும்மாளர் - கலைஞர்கள், மற்றவர் தொழிலாளர்கள்.

"விடுதித் தலம்,மே வியமா டம்எலாம்
அடைவித்து உரமாய் அமைசெய் திடு"கென்று,
உடலைப் புளகம் கொளவும் பொன்அளி
மடிமெய்ப் பொடுஅளித் தனர்மால் மகிழ்வாய். 12

மகிழ்மா ருதியும் திருமா லும்,"மின்அம்
திகழ்மா டமதுஒப் பனைசெய்" கெனவே,
வகைகூ றியும்மன் னனிடத்து அணுகித்
தகும்ஆ திபர்தம் திறம்ஓ தினரே. 13

இறையோர் பெருமை பிரதா பம்எலாம்
முறையா கமொழிந்து உபயோ ரும்வைகா,
நறைமா லிகையான் நரன்ஊர் அணுகத்
திறன்மே வியதேர் நடவுற் றதுவே. 14

பலதே சஇரா சருடன் படையும்
தலம்ஏழ் வளையும் கடல்தான் எனவே,
கலியா வருகின் றதுகண்டு, இருவோர்
நலமாய் நதியின் கரைநா டினரே. 15

அனிலன் சுதனும் திருமார் பகனும்
கனகம் திகழ்கங் கைநதிக் கரையில்
புனிதம் கொடுபொற் பில்அமைத் தமனை
இனம்எங் கும்இருப் பதுகண் டனரே. 16

அக்கங் கையின்அக் கரைஇக் கரைசூழ்
திக்குஎங் கும்இயற் றியசீர் மனைகள்
பக்கங் கள்செயித்து அமரர் பதிமேல்
தக்கம் கொடுஇருப் பதுஎனத் தகுமே 17

---

15. உரமாய் - வலிமையாக; அளி - அள்ளி, மடி - மடியில்,மடிநிறைய எனினுமாம்.

13. மின் - ஒளிவீசுகின்ற, அம் - அழகிய; மன்னன் - தருமன்; தகும் ஆதிபர் - (வருகை தந்துள்ள) தகுதி வாய்ந்த அரசர்கள்.

14. உபயோரும் - இருவரும்; வைகா - வைக, இருக்க, நரன் - அருச்சுனன்.

15.கலியா - ஒலித்துக்கொண்டு.

16. கனகம் - பொன், அழகு எனினுமாம், மனை இனம் - வீடுகள்

17. பகைங்கள் - நான்கு (அல்லது எட்டு) திசைகள்; தக்கம் தர்க்கம், போர் என்ற சுருத்தில் ஆட்சி.

நேயக் கொடிஆ டியநீள் மனையின்
சாயைக் குணமா னதுசா னவியின்
தோயத் திடைதோன் றல்துறக் கமதைக்
கூய்யுத் தம்உறப் புடைகொள் வதுவ்வாம். 18

புறையற் றஇரும் புகழா னதுளலாம்
சிறைபெற்று இவணில் செறிவுற் றதுளனப்
பொறைகட்கு இடமே பொறையன் சரண்என்று
அறைசெப் புவதுஒத் ததும்ஆ யதுவே 19

(அடுத்த பாடல் சுவடியில் எழுதப்பெறவில்லை)

சிங்கத் துவசம், தெரியல் துசம்,மா
தங்கத் துசம்,ஆர் அமிர்தத் துவசம்,
புங்கத் துவசம், புரவித் துவசம்,
கங்குல் கதிரின் துசமும் கவினும். 21

கருடத் துவசம், கதிரின் துவசம்,
அரவத் துவசம், அசுணத் துவசம்,
முரசத் துவசம், அநுமத் துவசம்,
இரணித் துவசம், எகினத் துவசம், 22

மகரத் துவசம்,மல் லல்மயில் துவசம்,
திகழ்வில் பூவசம், திறல்புள் துவசம்,
நகுலத் துசம்,நன் கவரித் துவசம்,
பகர்மற் றுளபற் பல்பதா கையுமே. 23

இவ்வாறு அமனைத் திரள்எங் கணுமே
ஒவ்வா தவிகற் பம்உறும் துவசம்
வெவ்வார் கலியில் திரைபோர் விரவ,
நவ்வார் புவிநா யகன்நோக் கினனே. 24

---

18. சாயை - நிழல், சானவி - கங்கை, தோயம் - தண்ணீர், கூய் - அழைத்து, ஆம் - போலும்.

21. தெரியல் - பூமாலை, மாதங்கம் - யானை, கங்குல சுதிர் - சந்திரன்

22. அரவததுவசம் - பாம்புக்கொடி, அசுணம் - ஒரு வகை மான்.

23 மல்லல் - வளபபம் மிக்க, நன்குவளர்ந்த; திறல்புள் - வலிமைமிகக பறவை, சரபம்: நகுலம் - கீரி; கவரி - ஒருவகை மான்;பதாகை - கொடி.

24. அ - அந்த, மனைததிரள் - வீடுகள், ஆர்கலி - கடல்: நவ்வார் - நவ்வு + ஆர், நவமை பொருந்திய.

சேடுற்று ஒளிசிந் தியமா டம்எலாம்
கோடித் தகுணங் கள்அறிந் துமகிழ்ந்து,
ஆடித் திரள்அம் மனைதோ றும்நிறைத்து,
ஈடற் றுவிளங் கலும்நோக் கினரே. 25

சிப்பர்க்கு இனிதுஆம் திரள்மா மணிகள்
மெய்ப்புற்று அருள்செய்து, அரிவீ மனுமே
துப்புற் றருமன் எதிர்சொல் இவைகார்
உப்பொத்து எழுவான் . . . . . றதுவே. 26

மிகுதீ பவிதங் கள்செறிந் திடவும்,
நகுதூ பநறைப் புகைமஞ்சு இடவும்,
திகழ்மா மணிசேர் கவிகைக் கீழே,
முகில்வாம் பரிரெண் டும்முனே றியதே, 27

நடைநா டகசா லைநயம் செலவே,
கொடிகோ டிதுசம் குடைகோ லிடவே,
இடிபோ லஇயங் கள்முழங் கிட,நீள்
திடமா விருதின் திரளும் செலவே, 28

சேமங் கொடுசென் றுகுளப் படியில்
ஓமங் களும்எக் கியமும் தொடர்பாய்
மாமந் திரமா மறையோர் பகர்சொல்
காமன் பறையில் கதழ்வாம் ஒலியே. 29

(கலித்துறை)

படிபி ளந்தன; பொடிந்தன தடம்கிரி பலவும்,
கடல்கு ழம்பின; குழிந்தன அழுங்கின கமடம்;
திடர்சி தைந்தன; நிமிர்ந்தன சிறந்தஅ னிலம்;தூள்
படலம் அம்பர இடங்களும் நிமிர்ந்தன படையால். 30

---

25. சேடுற்று - அழகுபொருந்தி, கோடித்த - ஒப்பனை செய்த,ஆடி - சுணணாடி..

26. சிப்பர் - சிற்பா, மெய்ப்பு உறறு - உண்மையான மகிழவோடு,இச்செய்யுளின் பின்னிரண்டு அடிகள் தெளிவாக விளங்கவில்லை.

27. மஞ்சு இடவும் - மேகம் போல கவியவும்.

28. கொடிகோடி - கோடிகோடி., மிகபபறபல, எதுகைநோக்கிய குறுக்கல, துசம் குடை - கொடியும் கவிகையும்,உமமைத் தொகை, கோலிட - சூழ.

29. காமன் பறை - மனமதனின முரசு, கடல, இல் - உவம உருபாகவந்தது.

30. கமடம் - ஆமை, நிலஉலகைத் தாங்கிக் கொணடுள்ள ஆதிகூர்மம். திடர் - குன்று; அனிலம - காற்று, மேலெழுந்தது.

இடிஅ னந்தமது எனும்படி கறங்கின இயங்கள்;
சுடர்இ னம்திசை மயங்கின; புயங்களண் சுடிகை
முடிந சுங்கின; புரண்டுஅகடு உழன்ற;மூ உலகும்
நடுந டுங்கின நெடும்படை நடந்திடும் படியால். 31

எண்டி சாமுக இபம்கிரி பாலர்மெய் நடுங்க,
அண்ட கோளகை முகடுஅகடு உடைபட, அனந்தன்
முண்டம் மேவிய நெடுமுடி பொடிபட, முதிர்ந்த
கண்டம் கரளம்நஞ்சு உமிழ்ந்தன படைசெலும் கதிப்பால். 32

அண்டர் அஞ்சினர்; உரகரும் நடுங்கினர்; அகில
மண்ட லத்தரும் அசுரரும் நடுங்கினர்; வரையைக்
குண்ட லம்செயும் நிருதரும் நடுங்கினர்; குரவை
மண்ட கர்ந்திட எழுந்ததுஒத்து எழுந்தவா கினிகள். 33

பனிம திக்கதிர் பிறங்கிய பாஞ்சசன் னியத்தைத்
தொனிகள் சங்குஇனம் இப்பிதொல் உததிசூழ் வனபோல்,
கனல்அ ளித்திடு தேரினைக் கசரத துரக
அனிக ராசிகள் சூழ்ந்துற நடந்தன அலைபோல். 34

காரை ஒத்தன கரித்திரள்; கடுப்புறும் கனக
மேரை ஒத்தன விரவிய தேர்க்குலம்; விசைக்கால்
நேரை ஒத்தன நிகர்இல்பா டலங்கள்;நீடு அலையின்
சீரை ஒத்தன ஈர்ப்பதா திகள்செலும் திறனே. 35

---

31. எணபுயஙக என மாறுக, எட்டு திசைப்பாம்புகள், சுடிகைமுடி - படப்பொறியை உடைய தலை, புரண்டு அகடு உழன்றஎன்னும் வாக்கியத்திற்கும் பாம்புகளையே எழுவாயாகக்கொள்க

32 எண்டி.சாமுக இபம், கிரி, பாலர் எனத் தனித்தனியே கூட்டுக, முண்டம் மேவிய நெடுமுடி - மொட்டையான உயர்ந்த தலைகள்,இனி தலையிலுள்ள உயர்ந்த கிரீடம எனினும் ஆம்; கண்டம் - கழுத்து,தொண்டையைக் குறித்தது; காளம - கரிய; முதிர்ந்த, காளம எனும் இரண்டும் நஞ்சிற்கு அடை., கதிப்பு - ஒலி.

33. குணடலம் - காதணி; குரவை - கடல், வாகினிகள் குரவை எழுநதது ஒத்து எழுந்த.

34. கனல அளித்திடு தேர் - அருச்சுனனுக்கு அக்கினி தேவனாலவழங்கப் பெறற இரதம்; அலை - கடல, ஆகுபெயர், உததியின் (கண்) சூழ்வன போல் தேரினை அனிகராசிகள் அலைபோல் சூழநதுற நடந்தன என்பது முடிபு.

35. கார் - மேகம், வேகமாகச் செலலுகினற பொன் மேருவை என்றது இலபொருள் உவமையணி, கால்நேர் - காற்றின் வரிசைஇதுவும் அவ்வணியின் பாற்படும. பாடலம் - குதிரை, பதாதிகள் - காலாட்படை.

புயலி னில்துளித் தொகைபுகர் முகங்கள்;பொற் றேர்கள்
வியன்உ டுத்தொகை; வெம்பரித் தொகைவிருக் கத்தின்
இயல்இ லைக்கணம், கனி,மலர், காய்த்தொகை; ஏர்சிந்து
அயலின் வாலுகத் தொகைபதா திகளினுக்கு அளவே 36

(கலிவிருத்தம்)

சத்த வாரியும் தாம்எழு கின்றபோல்,
சித்தி நால்வகைச் சேனையு மேதிரண்டு,
அத்தி னாபுரத் துக்குஅயல் நண்ணினார்
மத்தி யானம்ம கத்துஅரு காகவே. 37

அருகி லேபகத் தாப்பியர் எய்தலால்,
தெரியும் மால்எதிர் சென்று,கி ரீடியோடு
இருகை லாகுகொ டுத்து,இரு டீதனைத்
தருமன் வேள்வியின் சாலைகொண்டு எய்தினார். 38

வதிட்டர் காசிப ரேமுதல் மற்றுளோர்
எதிர்க்க எய்தி,இ றைஞ்சிஉ பசரித்து,
"அதிட்ட வான்அறன் சேய்"என ஆர்த்திட,
துதித்து,இ றைஞ்சினர் தன்மனும் தோகையும். 39

செம்மல் தேவியும் தீட்சைவிட் டேஎழுந்து,
அம்மு னிக்குவ லம்செய்து, அடிதொழ,
"வம்மின்" என்றும கிழ்ந்து,ஆ சிருவதித்து,
"இம்மை தீட்சைவைகு" என்னஇ ருத்தியே, 40

யாகத் துக்கு (இசை வாகி)யது ஆகவே
சேக ரம்செய்தி டும்தர்ப்பை ஆசனத்து,
ஆக வேமகிழ் வாய்முனி வைகினார்
வாகின் யோகிகள் மங்கலம் ஆர்க்கவே. 41

---

36 புயல் - மழை, புகர் முகம் - யானை; உடு - விண்மீன், விருக்கம்- மரம், ஏர் - அழகிய; சிந்து அயலின் - கடலின் அருகே உள்ள,கரையின்; வாலுகம் - மணல்.

37. சதத வாரி - ஏழு கடல்கள், சித்தி - வெறறியை உடைய, மகம் என்றது யாக சாலையைக் குறித்து நின்றது

38. தெரியும மால - பகத்தாப்பியரின் பெருமையை நனறாக அறிந்துகொண்டுள்ள திருமால, அலலது முனிவரால நன்குஅறியப்படட கண்ணன் எனினும இழுக்கின்று; இருடீ - முனிவர், யாப்புநோக்கிய நீடடல்.

39 எதிர்கக - எதிரில், அறன சேய - அறக்கடவுள் மைநதன், தருமன், தோகை - உவம ஆகுபெயராகத் திரௌபதியைஉணர்த்திறறு.

40. செமமலலும எல எண்ணுமனம கூடடுக.

41 சேகரம செயதிடும - தொகுதது வைக்கப்படட; ஆசனம் - இருக்கை, முனி - பகத்தாப்பியர்.

பஞ்ச வாக்கிய மும்,பல வேதிய
ரின்சொல் வாக்கிய மோடு,இமை யோர்மகி
ழும்சொல் வாக்கிய மும்,துந் துமித்தொனி
யும்செய் தார் வில்லி உற்றுவ ணங்கவே. 42

தரும ராசத யாபதி தன்னையே
வருண வில்லிவ லம்செய்துஇ றைஞ்சவே,
சுரர்ம கிழ்ந்துசொ ரிந்தனர் பூமழை;
கருணை வேந்தன்க ளிட்டனைத் தாங்கியே, 43

வில்லி தன்னைவி ரைந்துஅக லம்தனில்
புல்லி, ஏகுஉயிர் பொந்தியில் வந்தபோல்,
மல்லல் நாடன்ம கிழ்ச்சியில் வாழ்த்தினான்
நல்ல சிந்தைந ராதிபன் தன்மனே. 44

சந்த்ர காசன்மு தல்சக லோரையும்
சிந்தை கூர்ந்து திருமறு மார்பகன்
தந்து மெய்த்தரு மன்சர ணம்தொழ
பந்த மாய்உரைக் கப்பணிந் தார்களே 45

பரவி நின்றுள பார்த்திபர் யாரையும்
அரவ பஞ்சணை யானும்கி ரீடியும்
பிரியம் மேவிய வாய்மைகள் பேசியே,
தெரியும் வீதி விடுதியில் சேர்த்தனர். 46

---

42. வில்லி உற்று வணங்கவே செய்தார் என இயையும்; வேதியரின்சொல் - வேதம்; இமையோர் மகிழும் சொல் - தேவர்களைத்துதித்து அவர்கள் இன்னாரைக் காக்கட்டும் என வரும்ஆசீர்வாதம், புறநிலை வாழ்த்து.

43. கனிட்டன் - தம்பி.

44. கருணை வேந்தனும் (43) மல்லல் நாடனும், நல்ல சிந்தை (யை)உடைய நராதிபனும் ஆகிய தன்மன் எனவும், கனிட்டனாகிய (43) வில்லி எனவும் கொள்க, ஏகு உயிர் பொந்தியில் வந்தபோலஎன்னும் உவமை கவிச்சக்ரவாத்தியின், "தேவரும் தொழுகழலசிறுவன், முன் பிரிவதுஓர் ஆவிவந்தென்ன வந்து அரசன்மாடுஅணுகினான்" (பால. எதிர்கொள் 22) என்னும் அரிய வரிகளைநினைந்து கூறியது. பொந்தி - உடல்.

45. மாபகன் சிந்தை கூர்ந்து சகலோரையும தந்து(வர வழைத்து, வந்தவர்) சரணம் தொழ (கணணன் இவர்இன்னார் எனறு) பந்தமாயஉரைக்க (வந்தவர் மீண்டும்)பணிந்தார்கள் எனபது முடி பு. திருமறு - திருமகளும்ஸ்ரீவதசமாகிய மச்சமும், உமமைத்தொகை.

46. அரவ பஞ்சணையான் - பாம்புப்படுக்கையை உடையதிருமால், பாவோசை நோக்கிப் பகரமெய கெடடது.

தங்கள் தங்கள்ப தாகைகள் ஆடிய
புங்க மாகிய பொன்மனை புக்கியே,
அங்குஅங்கு எங்கும் அமைந்தனர் யாவரும்
சிங்க புங்கத் துசன்முதல் சேரவே. 47

"சிட்டித் தார்கொல் திறல்தெய்வக் கம்மியர்?
கட்டு (வி)த்தான்கொல் கமலம காமுனி?
ஒட்டித் தான்விதித் தான்கொல்?பொன் ஊர்மனை
இட்டத் தால்இழிந் திட்டது வோ?"என்பார் 48

"மாயன் ஏவுதொ ழில்செய்வ தால்ஐயர்
நாயன் இத்திறை நல்கியது" என்பர்; "மால்
சேயன் இம்மனை செய்தது வாம்" என்பர்;
"ஆய தோர்கயி லாசம்"என் பார்சிலர். 49

"கனக மேருவைக் கைவசம் செய்து,பொன்
வினைஞர் இம்மனை வீதிசெய் தார்கொலோ?
அனக னா(கிய) அறன்கும ரன்செய்நல்
வினைகொ லோதிகழ் வீதி?"என்று ஓதுவார் 50

மாடம், மாளிகை, மாமணி மண்டபம்,
கூடம், கோபுரம், கோமளத் தேன்மலர்,
வாடை யின்பட லத்திரள் மல்கிய
நீடு பந்தர் நிரந்தரம் எங்குமே. 51

ஆம்ப லின்விகற் பங்கள்,அம் போருகத்
தேம்பொற் பாம்மலர், செங்கழு நீர்,மகிழ்,
பூம்பொற் குங்குமம், சண்பகம், பூவள
மேம்ப நால்வகை வீசெறி காவணம். 52

---

47. புங்கமாகிய - உயர்ந்த.

48. சும்மியர் - சிற்பியர்; சுமல மகா முனி - பிரமன், பொன் ஊர்மனை - தேவர் உலகிலுள்ள வீடுகள், இட்டத்தால் - தன் சொந்தவிருப்பால.

49. ஐயா நாயன் - தேவர்களுக்கு அரசனாகிய இந்திரன்; மால்சேயன் - மன்மதன்.

50. அனகன் - குற்றமற்றவன்.

51. கோமள - அழகிய, வாடை - நறுமணம், பட்டம் - அடுக்கு; பலவேறு மலாகளின் மணங்களாதலின் படலம் என்றார்.

52. வீ - மலர்; காவணம் - பந்தல்.

முக்க னிக்குல மும்,கமு கங்குடும்பு,
இக்கும், தெங்குஇள நீர்,இளம் பாளைகள்,
தக்க பற்பல தண்கனி வர்க்கமும்
தொக்க பந்தருள் தூக்கிஇ லங்குமே. 53

இரணி யச்சுவர்; வித்துமம் உத்திரம்;
மரக தத்திரள் தூண்;வயி ரத்துலா;
பரும ணிக்கிரண பத்ம ராகம்உத்
தரியம்; ரத்தினப் பலகை அடுக்கியே, 54

மாம ணித்திரள் மண்டபம்; தாமரைப்
பூம ணித்திரள் மண்டபம்; பொற்பரி
கோம ணித்திரள் மண்டபம்: கோ. . .
வாம ணித்திரள் மண்டபம் பற்பல. 55

பச்சை மேடை;ப ளிக்கறை பன்மணி;
நச்சுஅ ராமணி ராசசிங் காசனம்;
வச்சி ரத்தொடர் மஞ்சம், மரகதக்
குச்ச லத்துஇனம் குலுங்கும்எங் கெங்குமே. 56

மருக்கொ ழுந்து,அலர் வாடையின் வேர்க்குலம்
தருக்கி னோடுஎங்கும் தான்நறை பொங்கிடும்;
பெருக்கம் ஆர்(பிற) பிரபலம் கோடிநா
இருக்கி னும்இயம் பித்தொலை யும்கொலோ? 57

"என்ன வாழ்வுஅரசு? என்னரும் பாக்கியம்?
என்ன நம்பல்இ யற்கையும்?" என்றுஎணி
மன்னு சந்திர காசன்மற் றுள்ளரும்
தன்னை யேமறந் தார்துறந் தார்கள்போல். 58

---

53. குடும்பு - கொத்து; தூங்கி - தொங்க விடப்படடு.

54. இரணியம் - பொன்; விதருமம் - பவளம்; துலா - கைமரம்; உத்தரியம் - மேல் விதானம், மேல் வேஷ்டி எனப்பொருள் தரும்சொல் இங்கு இபபொருளில் ஆட்சி.

55. பொற்பரி - அழகிய குதிரைகள்; கோ - பசுக்கள்

56 அராமணி - நாக மாணிக்கம், குச்சலம் - குஞ்சலம் எதுகைநோக்கி வலிந்தது.

57. அலர் வாடை - பரவுகின்ற மணம், வினைத்தொகை; நறை வாசனை; பிரபலம் - சிறப்புகள்; தொலையும் - முற்றும்.

58. வாழ்வு அரசு - உமமைததொகை, குடும்பத்தினரால் அமைநத சிறப்பை வாழ்வு என்றும், அமைச்சர் முதலிய புறச சூழல்களால் விளைநத சிறபபை அரசு எனறும் தனித்தனியே கூறினார்.

"வாகை சேர்தரு மன்திரு மன்கழல்
ஓகை யோடுநி தம்தொழுது, ஊன்உயிர்
போகும் மட்டும்இப் பூமியில் வாழ்வுறில்
ஏகு நாதன்வை குந்தமது எய்துமே." 59

என்ன முன்னி, இயம்பி, இருந்து,அருள்
அன்னம் உண்டனர் ஐயர்கள் ஊண்என;
சொன்ன வன்னபொன் தூவிஅம் பஞ்சணை
தன்னில் பள்ளிசெய் தார்சக லோருமே. 60

பூபர் யா(வ)ரும் புலர்ந்து மகிழ்ந்துஎழுந்
தே,ப ராபரன் ஏர்வலக் கண்ணினை
மாப ராக்ரம வல்லவர் வணங்கியே,
சாப வில்லியைத் தாமனைப் போற்றினார் 61

சந்த்ர காசன் தரணிபர் யாவரும்
இந்த்ர சூனுவை எம்பெரு மானையும்
புந்தி கூரப் புகழ்ந்து துதித்தபின்,
சிந்தை மெய்ப்புள கம்கொடு செப்புவார் 62

"சகல சற்குண சம்பன, சம்ப்ரம,
செகத லாதிபர் சேகர மாம்மணி,
நிகர்இ லாத்தரு மேசனை நேசமாய்
அகம்ம கிழ்ச்சியின், யாங்கள் வணங்கவே 63

---

59. திரு மன் - சுணடோரால் விரும்பப்படும் தன்மையை உடையஅரசன், தருமனாகிய திருமன் என்க. ஊன் - ஆகுபெயராக உடலைஉணர்த்திற்று, ஊண் உயிர்போகும் மட்டும் - உடலை விட்டு உயிர்பிரியும் வரை என இரண்டன் உருபும பொருளும் உடன்தொக்குதொகையாக்குக. உயிர் அழியாததாதலின் உம்மைத்தொகையாகாது.

60 முன்னி - நினைத்து; அருள் - வழஙகுபபெற்ற; ஐயர்கள் ஊண் - தேவாமிருதம். சொன்னவன்ன - பொன் நிறத்த, பொன் - அழகிய, வன்னபபொன் எனற்பாலது யாப்பு நோக்கி மெய்கெடடுநின்றது.

61. ஏர - அழகிய; வலக்கண் என்றது சூரியனை; சாப விலலி - (சுாண்டீபமாகிய) வில்லிற்சிறந்த விசயன், இஙகு விலலி என்றது இயறபெயரளவில நின்றது.

62 தரணிபா - மன்னர். இந்த்ர சூனு - தேவேநதிரனின் மகனாகிய அருசுனன்.

63 சகல சற்குண சம்பன - எல்லா நற்பணபுகளாலும நிறைவுற்ற; சம்ப்ரம - குறைவறற திருபதியை உடைய; செகதல அதிபர் - உலக மன்னாகளுள்.

காத லுற்றனம்; காண்குதற்கு எங்களை
வேத கோஷம் விளங்கிய வேள்வியின்
போதன் புண்ணியன் பொற்பவை யில்திருப்
பாதம் சேர்மின்;" எனப்பகர்ந் தார்களே. 64

பகர்ந்த பேர்களைப் பார்த்தனும் மாயனும்
மகிழ்ந்துஅ ழைத்து,அருள் மன்னைவ லம்செய்து,
புகழ்ந்து, சேவடி பூண்டு,இரு வோர்களும்
தகும்த ராதிபர் தம்வரவு ஓதியே, 65

சந்த்ர காசன் றனைமுன் விடுத்தனர்;
சிந்தை யால்பிர தட்சண மாகவே
வந்து, சென்னிவ ணங்கினன்; மால்செய்கை
யுந்தெ ரிந்து.உப சாரம்உ ரைத்தபின், 66

தன்ன(து) அருகில்இ ருக்கஉத் தாரமும்
மன்னர் மன்னவன் வாய்மை உரைக்கவே,
பன்னு வீரவர் மன்,பரி சுத்துச்ன்
சென்னி தாழ்ந்து, பணிந்;நனர் சேவடி. 67

பணியும் அவ்விரு பார்த்திபர் தம்மையும்
தணிவில் வாழ்த்தி,இ ருக்கவும் சாற்றினான்;
மணிந கர்ப்பதி மன்னன்வ லம்செய்து,
கணிச மாய்ப்பணிந் தே,கரம் கட்டியே, 68

---

64. வேள்வியின் அவை, போதன் புண்ணியன் (உள்ள) அவை, பொற்பு அவை எனத் தனித்தனிக் கூட்டுக; திருப்பாதம் சேர்மின் - எம்மைத்தருமருடைய திருவடியை அடையச் செயயுங்கள்.

65. தகும் - தகுதியையுடைய; தராதிபர் - அரசர்.

66. மால் செய்கையும் தெரிந்து - தருமன் கண்ணனின் உள்ளக்கருத்தை உணர்ந்து.

67. உத்தாரம் - உத்தரவு.

68. பார்த்திபர் - மன்னர், மணிநகர்ப்பதி மன்னன் - பப்ரவா-

நடுந டுங்கிந ரன்சுதன் நின்றிட,
வடம தில்துயில் வான்,"விலி சேய்"எனத்
திடம்உ ரைத்திட, செங்கையில் வாரியே,
மடியின் மீமிசை வைத்தனன் புல்லியே. 69

"ஐவ ருக்கும் அருமருந்து ஆகவே
தெய்வ நாயகன் சேய்எனத் தந்தனன்;
மொய்வி சாலமொய்ம்பு ஆரும்மொய்ம் பாளனே!
மெய்வ சீகர! விற்பன! பொற்பனே!" 70

என்று பற்பல இன்சொல்உ ரைத்து,அயல்
ஒன்ற வைக,உத் தாரம்இ யம்பினான்;
அன்றுஇ ருந்தபின் னே,அமிர் தத்துசன்
மன்ற லானைவ லம்செய்து,இ றைஞ்சினான். 71

நீதி மன்னனை நேயத யாபதி
ஆத ரித்து,உப சாரம்இ யம்பியே,
காத லாக,வ தியக்கண் காட்டிய
போது, மற்றுஉள பூபர்இ றைஞ்சினார். 72

நீலன், சாளுவ னே,எம னாசுரன்,
பாலன், சாத்தகி, மற்றுள பார்த்திபர்
கோல மான குரிசிலைத் தாள்தொழச்
சால வேஉப சாரமும் சாற்றினான். 73

---

69. நரன்சுதன் - அருச்சுனன் மகன்; வடம்அதில் - ஆலிலையில, அதுபகுதிப்பொருள் விகுதி; திடம் - உண்மை

70. தெய்வ நாயகன் - கண்ணன்; அவன் அருளால் கிடைத்தவன்என்பது கருத்து; மொய் - பெருமையையும்; விசால - அகலத்தையும், மொய்ம்பு - வலிமையையும், ஆரும் - பொருந்தியுள்ள, மொய்மபாளனே - தோள்களை உடையவனே, விற்பன - அறிவாற்றல் மிக்கவனே; பொறபனே - ஒப்பனைகளால் எழில்படைததவனே, மெய்வசீகர என்றது இயற்கை அழகையும்,பொற்பனே என்றது செயற்கைப் புனைவுகளையும் குறித்து நின்றன.

71. அன்று - அப்போது, மன்றலான் - விழாநாயகனாகிய தருமன்

72. தயாநிதி - தருமன் , வதிய - அமரும்படி

சஞ்சயன் றன்னைத் தன்முன் வரவிளித்து
அஞ்சன மெய்யி னான்அருள் செய்குவான்
"மிஞ்சு பற்பல வேந்தர்இங்கு உற்றதால்
மஞ்சி னோடுஉப சாரம்வ ழுத்தவே, 74

மன்ன னைக்கொடு வந்துஅவை வேந்தர்கட்கு
உன்ன தத்துஉப சாரம்இ யற்றுக;"
என்ன மால்சொல வே,கண்இ லாதவன்
றன்னை யேகொடு வந்தனர் தாமன்முன். 75

விதுரன் சஞ்சயன் மிக்ககை லாகுவில்
அதிபன்ஆம் திருதராட் டினனே அதிக
கதிகொள் சந்திர காசற்கு உபசரித்து,
அதன்பின், வீரவர் மன்றனைப் போற்றியே, 76

பரிசன் றன்னைப் பரிந்துஉப சரித்து,
வரிகொள் மாமணி மண்டல வேந்துமுன்
குரிசில் தன்னைக் கொடுவரும் போதினில்
பரிவி னோடு,ப ணிந்தனன் பார்த்திபன். 77

பணிந்த வீரியன் "பார்த்தர்கு டாரண்" என்று
எணும்த ராதிப னுக்குஇரு வோர்களும்
துணிந்து கூற;அத் தோன்றலை வாரிமார்பு
அணிந்து வாழ்த்தி உபசரித் தான்;பினே, 78

அமிர்தன், நீலத் துசன்,அநு சாளுவன்,
மமதை சேர்எம னாசுரன், மற்றுள
விமித வேந்தரை, மிக்குள பேர்களை
சமம தாய்உப சாரம்இ யம்பியே, 79

---

74. விளித்து - அழைத்து.

75. கண் இலாதவன் - திருதராஷ்டிரன்

77. மணிமண்டல வேந்து - பரவாசுனன், குரிசில் - திருதராஷ்டிரன்;

78. தராதிபன் - திருதராஷ்டிரன், இருவோர் - சஞ்சயன், விதுரர்.

79. மமதை - இங்குப் பெருந்தன்மை என்ற பொருளில் நின்றது, விமித - வியப்பிற்குரிய, வலிமையாலும் செல்வத்தாலும் மிகுந்துவிம்மிதம் விளைத்தவர் என்பது சுருத்து.

திரித ராட்டிர தீரன்அப் பேர்அவைக்கு
உரிய னாகஉ வந்துவ ரிந்தபின்,
புரவி யாகம் புரியும் இலக்கினம்
மருவி யேஅணித் தாய்வர, ஓகையால், 80

"அய்யனே! ஐவர்க்கு ஆம்துணை ஆகிய
துய்ய னே!உன் துணைவிஇங்கு இல்லையால்;
செய்யும் வேள்வியது என்?தேவ ரீருடன்
வெய்ய ருக்கு மணிஇங்கு வேண்டுமால். 81

நீவியும் நீள்நதி யில்சலம்
வாரி யேகொடு வந்து,அபி ஷேகமே
ஏரி னோடும் இசைந்துறச் செய்திட,
பாரி இங்கு வரப்பணும் பண்பினால்" 82

(அறுசீர் ஆசிரிய விருத்தம்)

எனத்தருமன் உரைத்திட,"முன் னூறுயோ
சனைத்தூரம் இருக்கும் இந்தக்
கனத்தமக முகூர்த்தமதற்கு இலக்குமிஇங்கு
அணுகுவளோ? கவல்வீர்;" என்னும்
வனத்தொடையல் மார்பகனை மன்னர்மன்னன்
முகம்நோக்கி, "மலைதாங்கு ஐயா!
எனக்குஇவைநீர் உரைப்பதுஎன்கொல், இவைதூர
மோ?அறியேன் இயம்பக் கேண்மோ"; 83

வன்மீன்வாய்ப் படும்மதமா, "வாஆதி
மூலம்"என்ற அவதிக்கு எய்தும்
நின்மாயை உலகம்எலாம் அறிந்திலையோ?
தூணில்வந்த நிசரூ பத்தோய்!

---

80. அவைக்குஉரியன் - சபைக்குத்தலைவன், வரிந்தபின் - நியமனம்ஆனபிறகு; இலக்கினம் - குறித்த நேரம், முகூர்த்தம்.

82. ஏரினோடும் - அழகாக, பாரி - மனைவி, உருக்குமணியை.

83. சுவல்வீர் - சொல்லுங்கள், ஒலியெழுப்புதல் என்னும் நேர்ப்பொருள் இங்கு இடபொருள்தந்தது, வனத் தொடையல் - துளசிமாலை; மலைதாங்கு - 1. கோவர்த்தன கிரியைக் குடையாக ஏந்திய, 2. எங்களை மலையைப் போல் நின்று பாதுகாத்துவருகிற.

கன்மாரி தடுத்தமலைக் கையானே!
கடல்காசை கார்மெய் யானே!
என்மாவின் மகம்முடிப்பது இலக்குமியே
அல்லதுஎவ்வாறு? இயம்பு வாயே." 84

என்றதரு மாதிபனை அருட்கடைக்கண்
ணால்நோக்கி, இதயம் கூர்ந்து,
"நன்று!உனது மனம்குளிர நான்அழைப்பிப்
பேன்"எனவே நவின்று நெஞ்சால்
அன்று,உவணன் றனைஅழைக்க, அணுகினான்
இமைப்பளவில்; அக்கம் நோக்கி,
"இன்றுஉருக்கு மணிதனைக்கொண்டு இலகு"கெனத்
துவரையினில் இமைப்பில் சென்றே, 85

மால்உறுதி மொழிசலச மகட்குஉரைத்து,
புயத்துஏந்தி, மாயன் றன்முன்
பால்உததி தனில்பிறந்தாள் தனைவிடுத்தான்
அரைநொடியில்; படிஆள் வேந்தன்
மேல்உடலம் புளகம்எழ, செம்மாந்து
மெய்மகிழும் வேந்தை நோக்கி,
"ஏலும்இரு பத்துஒருபோர்க்கு இனம்கூறு
சலம்கொணர்க இசைந்தோர்" என்றான். 86

"எனைஉடையாய்! நீரும்உமது உந்தைஎந்தை
சத்தரிஷி இறைவர் தம்மில்
நினதுமனது இசைந்தோரைப் பகர்தி"என
நிதிரத்னத் தசும்பு மூவேழ்
தனைநெடியோன் முன்புவைக்க, தாமன்வசு
தேவன்,காந் தாரி கேள்வன்,
முனிவசிஷ்டர், காசிபர்,வால் மீகி,கவு
தமருடனே, முறைமார்க் கண்டர், 87

---

84. வன்மீன் - முதலை; மதமா - யானை. அவதி - 1. நேரம் 2.துன்பம்; காசை - காயாம்பூ; கடல் முதலிய மூனறிடத்தும்இரண்டன் உருபையும் எண்ணுமமையையும் கூட்டுக. மாவின்மகம் - அசுவமேதயாகம்.

85. உவணன்றனை - கருடனை; அக்கம் - சுணலாால; துவரை - துவாரகை.

86. சலசமகள் - தாமரையில் தோன்றிய இலக்குமி. பால உததி - பாறகடல; படி - உலகம், படி ஆள் வேந்தன் என்றது சுணணனை;வேந்தை - தருமனை.

87. ரதவத தசும்பு - மணிகள் இழைக்கப்பெற்ற குடம; காநதாரிகேளவன் - திருதராஷ்டிரன்.

சவுமியர்,சா பாலி,கவு சிகர்,சமதக்
கினி,(கல்) பதஞ் சலி,வி யாசர்,
பவிசுஉறுசந் திரகாசன், வீரவர்மன்,
பரிசன்,அமிர் தன்,பை நீலன்,
நவஅநுமத் துசன்,இரத்னத் துசன்,எம்னா
சுரன்,சாளு வன்எல் லோரும்
கவின்உறுதே வியரோடும், பொற்குடம்கொண்டு,
அலங்கரித்த கரிமேற் கொண்டார். 88

பஞ்சவாச் சியம்முழங்க, வேதகோ
ஷங்களொடும் பகடது ஊர்ந்து,
மஞ்சுஉலவு கங்கைநதி யாடி,மடித்
துகில்புனைந்து, மதமாத் தன்னை
அம்சலத்தால் சுசிகரித்து,அ லங்கரித்து,
தசும்பினில்நல அமிர்தம் கொண்டு,
குஞ்சரப்பொற் கும்பமதில் கும்பமதைப்
பரிந்துவைத்துக் கொண்டே சென்றார். 89

வேதியர்கள் புணரிஎன வேதவாக்
கியம்முழங்க, விளங்கி வெற்றி
ஓதனங்கள் பலவிகற்ப முடன்போத,
உபயசா மரைஇ ரட்ட,
நாதமிகு பஞ்சவாச் சியம்கறங்க,
பரதநாட் டியங்க ளோடும்
மூதுதெய்வ துந்துமிகள் முழங்க,நடந்
தார்பகடு முசிப்புஇ லாதோர். 90

---

88. பதஞ்சலி - யோகசூத்திரமும் பாணினீயத்திறகு மகாபாடி யமும அருளியமை விளங்கச் சலபதஞ்சலி எனப்பட்டார், வினைத்தொகை. சுற்சுபடுகின்ற என்னும் பொருளில் ஆட்சி; பை - அழகிய, கரி - யானை.

89 பகடு - யானை; மதமா - யானை; அம சலத்தால - அழகியதண்ணீரால்; சுசிகரித்து - தூய்மைப்படுத்தி. அமிதம் - தணணீர்,பொற்குமபம் - அழகிய மத்தகம்; கும்பம் - குடம்

90. புணரி - கடல், இஙகு கடலொலி, ஓதனங்கள் - படைகள்,போாக்குரிய சொல் போாாளிகளை உணர்த்திறறு

மாயனுட னேஉருக்கு மணி,வசிட்டர்
அருந்ததியும், வாசு தேவன்
நேயதே வகியும்,உயர் கவுதமரும்
அகலிகையும், நிகர்காந் தாரி
நாயகியும் மாதிருத ராட்டிரன்,வா
லாக்கினியும் நன்மார்க் கண்டர்,
மேயசந்த்ர காசன்விசை, அம்பரிஷன்
குமுர்த்திரகவுந் திகைமன் வீரன், 91

அமிர்ததுசன் கமலாணி, நீலன்நளா
யினி,சாள்வன் சந்த்ர ரேகை,
விமலசந்த்ர கிரணிசம தக்கினி,கா
சிபர்அதிதி, விறல்தர் மத்னி
மமதசவு மியர்,கிருபா சாரிப்ரபை,
வால்மீகர் மாயா வற்றி,
எமனாசூ ரன்வியாளா தேவி(யொடு)
மற்றுளர்இல் லாளும் தொக்காய், 92

சொன்னமணிக் குடங்கள்தமில் சலம்நிரப்பி,
பரிந்து,மதத் தும்பி மேல்வைத்து,
உன்னிமத கரிநடத்தி யே,எழுபத்து
இரண்டுவினை யோகத் தோடும்,
வன்னமணிக் குடைஆல வட்டநிழற்
கீழ்,சிறப்பாய் வருதல் நோக்கிக்
கின்னரநா ரதன்கலகம் கிலுசுநடத்
திடநினைந்தான் கேண்மை யாலே. 93

"உருக்குமணி மாயனுடன் உம்பல்மிசை
பவனிவரும் உல்லா சத்தை
முருக்கிதழ்வாய்ச் சத்தியபா மையிடத்தில்
உரைத்துநண்பு முறிப்பேன்;" என்று,

---

92. இல்லாளும - மனைவியரும் எனப பன்மையில் கொள்க, தொக்காய - ஒனறாகச சேர்ந்து

93. சொனன - பொனனாலாகிய, தும்பி - யானை, எழுபத்திரண்டு வினை யோகம் எனறது வினங்களிலலை, கின்னர - வீணையை ஏந்தியுள்ள, கிலுசு - சுலகம என்பதன் பேசசு வழக்குப் போலும.

திருக்குலவு துவரையினில் சென்று,அரண்ம
னைதனிலே செவ்வி யாக
இருக்கும்மருப் பூங்குழலி பால்எய்தி,
ஆசிர்வதித்து, இரங்கிச் சொல்வான் 94

"உனதுஉயிருக்கு உயிராக உனைப்பிரியாது
அநுதினமும் உவந்த கேள்வன்
கனகமணித் தசும்பினில்கங் காதீர்த்தம்
கொண்டுமத கரியின் மேவித்
தனதுஉருக்கு மணிசகிதம் தானாகப்
பவனிவந்தார்; தனதாம் உன்னைக்
கனவினிலும் மறவாதார் இவ்விதம்வஞ்
சிப்பர்கொலோ? காண்நீ;" என்றான். 95

(கலி விருத்தம்)

"ஏதுஇவை கூறுவது? என்உயிர் மன்னும்
மாதவர் ஆழ்தய வாளர்;கண் ணாளர்;
தீதுஉறு வஞ்சனை செய்துஇக ழார்ஓர்
போதினும்; நீர்சர தம்புகல் வீரே. 96

மன்னிய ருக்கும ணிப்பெய ராள்ஓர்
கன்னலின் முன்னர்க வின்பெற வேநீர்
என்னுடன் ஆடினள்; இல்லினில் ஏகா
மின்னவள் எவ்விதம் வேள்வியில் உற்றாள்? 97

வேள்விவி யப்புஉன்வி ழிப்புலன் நோக்க-
தாழ்வுஇல்என் நாயகர் தானும்"உ னைக்கொண்டு
ஏழ்மைஇ லாதுசெல் வேன்"என ஓதிக்
கேள்வர்பு னற்படு கேணியில் ஏகா, 98

---

94. உம்பல - யானை, முருக்கு இதழ - கிஞ்சுகமலரைப் போன்ற உதடுகளை உடைய; மரு - மணமிக்க; பூங்குழலி - மலர்களை அணிந்த கூந்தலை உடைய சத்தியபாமை.

96. ஆழ் தயவாளர் - ஆழமான கருணையை உடையவர், கண்ணாளர் - கண்ணோட்டம் உடையவர்; சரதம் - உண்மை.

97. கன்னல் - நாழிகை; ஏகா - சென்று, வீட்டிற்குள் சென்றவள் எவ்வாறு வேள்விக்குச் செல்லமுடியும என்றவாறு.

98. என் நாயகர் தானும், "நோகக உனை ஏழமை இலாதுகொண்டு செல்வேன்" என ஓதி, கேளவா கேணியில் ஏகா என்பதுமுடிபு ஏகா என்னும எச்சம் அடுத்த பாடலிலுள்ள இனிது உற்றேன் எனபதைக் கொணடு முடிந்தது.

மாமக வேள்விம கிழ்ந்துகண் காண
ஓர்முக மாகந யந்துஇனிது உற்றேன்;
தாமசம் இல்லை;இ தோ!தம தாக
வாமன னோடுஎய்து வேன்மகிழ்ந்து அங்கண்." 99

என்றலு மேநகை கொண்டுஅவன் ஏகி,
குன்றன மாமத குஞ்சர மீதே
மன்றல்இ லாளொடும் மால்வரல் நோக்கி,
பின்றையும் வந்து,பெ யர்ந்து,உரை செய்வான். 100

"மெய்உரை யான்முன்வி ளம்பியது எல்லாம்;
பொய்என ஓதினை; பூமக ளோடு
மைஅன மேனியன் வண்புனல் கொண்டு
கைஉறும் மாமிசை கட்டுடன் ஏக, 101

கண்டனன் யான்இரு கண்களி னால்"என்று
ஒண்தொடி யாளுடன் ஓத,ந கைத்தே,
"வண்துள பன்திகழ் மஞ்சம்வ திந்தார்;
கண்டுகொள்;" என்றனள் கண்டுஅன சொல்லாள். 102

புன்னகை யுற்றுஉயர் பொற்புறு மஞ்சம்
தன்னினில் வைகிய தாமனை நோக்கி,
மன்னிய நாரத மாமுனி நாணி,
முன்னிய வேள்விமு கத்தினில் உற்றான். 103

உற்றுஇப மேல்உவ ணக்கொடி யோனும்
மற்றும்இல் லாளும்வ திந்திடல் நோக்கி,
பிற்றையும் எண்முறை போந்துதி ரும்பி,
நற்றவம் மேவிய நாரதன் நெஞ்சில் 104

---

99. தாமசம இலலை - புறப்பட இனிக காலதாமதம் ஆகாது, வாமனனோடு அஙசுண் மகிழந்து எய்துவேன் என இயையும். 96ஆம் பாடல முதல் இது முடிய உள்ள நான்கும சத்தியபாமையின் கூற்று, 98ஆம கவியில் கணணனின் சொற்களைக் கொணடு கூறுகிறாள் 100. அவன் - நாரதர், பின்றையும - மறுபடி யும்

101 மை - மேகம, கை உறும் மா - யானை, சுடடுடன் - காவலர்கள் புடை சூழ. ஏசுக கண்டனன் எனக் குளகமாகத் தொடரும

102 ஒண்தொடி யாள - ஒளிவீசும வளையலகளை அணிநத சத்தியபாமை; கணடு - கலகண்டு.

104. இபம் - யானை, உவணக்கொடி யோன - கருடத்வஜன்,திருமால், நெஞசில் - தன் உள்ளததில

"என்கவ டம்கிலு சுக்குஇடம் ஈயான்
புங்கமு ராரி,பு ராதனன்;" என்றே,
அங்கைகு வித்து,அடி யைத்தொழுது ஏத்தி,
பொங்கிய வேள்விபொ ருந்திடம் உற்றான். 105

உன்னம தித்பய முற்று,"உல குண்டோய்!
உன்அரு மைப்பெரு மைத்திறம் ஓராது,
இன்னல்அ ரும்பிழை யேசெய்து,இ ளைத்தேன்;
என்னைஅ ளித்தருள்;" என்றுது தித்தான். 106

சிந்தைத னில்துதி செய்துற வைகா,
அந்தம காமுனி அஞ்சிஒ டுங்க,
மந்தம காசயி லத்துஉறு மாலும்
உந்தும்எல் லோர்களும் ஒத்துற ஏகா, 107

தாமனும் ஈண்டுறு சத்திய பாமை
ஓமம்இ யற்றிட உற்றத லத்தில்
சேமம்உள் ளோர்தரி சிக்கவும் வைகா
மாமுனி வோர்கள்வ ணங்கம கிழ்ந்தே, 108

சத்திய பாமைச மீபரும் ஆகி,
அத்தியில் லக்குமி யாள்அரு காகச்
சித்தியின் மேவிய சீதர மூர்த்தி
உத்தம னாம்உர வோன்முனம் உற்றார். 109

---

105. புங்க - உயர்ந்தவனாகிய; புராதனன் - மிகப்பழையவன்; என்றே - என நினைத்து.

106. உன்னம் - மனம், அளித்தருள் - காபபாற்றியருள்வாயாக.

107. மந்த மகா சயிலம் - மெதுவாகச் செல்கின்ற பெரிய மலைபோன்ற யானை, (இல்பொருள்) உவமஆகுபெயர், இனி மத்தம் என்பது எதுகை நோக்கி மெலிந்ததாகக் கொண்டு மதத்தைஉடைய மலையனைய களிறு எனினுமாம்

108 சத்தியபாமை என்புழி எண்ணும்மை கூட்டுக, சேமம - அடக்கம, இங்கு ஐம்புலனடங்கிய முனிவோர்கள் பொருட்டு.

109 அததி - யானை; சித்தியின் - தனது சித்து வல்லமையால், உரவோன் - தருமன்.

எய்திந திக்குடம் இன்பின்இ றக்கி,
மைதிகழ் மெய்த்திரு மால்மகிழ் வாக
எய்த,உ தும்பரம் என்பல கைப்பால்
செய்துஅரு மனனொடு தேவியை வைத்தே 110

(கலித்துறை)

பல்லி யம்திரை முகில்என முழங்கிட, பார்ப்பார்
சொல்லும் மந்திர மறைமொழி விளங்கிட, துய்ய
வல்ல மாமுனி வரன்கிடா ரச்சலம் வாங்கி,
மெல்லெ னச்சொரிந் தார்இரு வோர்சிரம் மெய்யில். 111

வாசு தேவமால், மற்றுள ரிஷிகள்,மன் னவர்கள்
தேசு றுங்குடச் செலங்களை வாங்கியே சொரிந்து
வீசு பொற்குடம் வெறுந்தசும்பு ஆயிடா விதமாய்ப்
பாச மாய்ச்சலம் கிஞ்சம்வைத் திட,அவண் பார்ப்பார் 112

பரப்பு கும்பமது உறும்சலம் அனைத்தையும் பரிந்து
விருப்ப மாய்ஒரு தசும்பினில் நிரப்பியே, வேந்தன்
தரித்த ஈரவெண் கலிங்கமும் தேவிதன் கலையும்
பொருத்த மாய்க்களைந்து (உடல்)சுசி கரித்தனர் போந்து, 113

தருமன் தேவியும் மரஉரி, கிருட்டினாஞ் சனங்கள்
விரவி யேதரித்து, அதன்பினர் வேள்வியின் அருகாய்,
அரிய தோர்பகத் தாப்பியர் கரத்தினால் ஓமம்
விரவு மவ்வேளும் தேவியும் முடித்தனர் விரும்பி. 114

---

110. நதிக்குடம் - ஆற்றுநீர்க்குடம்; உதும்பரம் - அத்திமரம்; மனன் - மன்னன், தருமன்; தேவி - திரௌபதி.

111. பல்லியம் - பல இசைக்கருவிகள், திரை முகில - சுடலும் மேகமும், உமமைத்தொகை, முனிவரன் - பகத்தாபபியர்,கிடாரம் - நீர் நிரபபும் பாத்திரம், இருவோர் - தருமனும்பாஞ்சாலியும்.

112. வாசுதேவ மால - வசுதேவன் மசுனாசுத் தோன்றியுள்ள விட்டுஞு, வெறுந்தசும்பு - காலிக்குடம்; கிஞ்சம் - கொஞ்சமாக மீதம், அவண் - அப்போது, அவ்வேள்விச்சாலையில எனினுமாம.

113 வேந்தன் - தருமன்; வெண்சுலிங்கம் - வெண்படடு, தேவி தன்சுலை - திரௌபதியின் சீலை, சுசிகரித்தனர் போந்து - தூய்மைப்படுததிக கொள்வதற்காக மறைவிடத்திற்குச சென்று.

114. கிருடடினாஞ்சனம் - மான்தோல; அருசுாய் - அருகாக வநது,ஓமம - வேள்வி

அறன்சு தன்அழல் பிறந்தவள் ஓமம்செய் ததற்பின்,
செறிந்த வில்லுவ பூபகம் பத்தினில் சிறந்த
அறந்த ரும்குசைக் கயற்றினால் அடுத்து,அழகு ஒளிகள்
பிறங்கும் மாஉப யத்தையும் பேணியே நெருங்கி, 115

அருளி னோடுஅபி ஷேகமா னவைஎலாம் செய்து,
உரிய சோடசம் மேவுஉப சாரம துடனே
பொருவில் வாயில்எட்டு எண்திக்கும் பூர்வம்ஆ தியதாய்
அருளிச் செய்தபின் ஆகுதி உம்பருக்கு அருள, 116

சத்த மாமுனி வோர்பகத் தாப்பியர் எழுந்து,
பத்ரி கட்குஅலர் அட்சதைப் பூசைகள் பண்ணி,
தத்தும் மாத்தலை தத்திட உவணிமந் தரித்து,
உத்த மக்கதைக் கரன்கையில் அளித்தனன் உறுவன். 117

அரிய தோர்பகத் தாப்பியர் உதவுவாள் தன்னைக்
கரத லத்தினில் தரித்து,மா ருதிகடுப் பாக
விரவி வீசின னே;தனி வீச்சினில் இரண்டு
பரியின் சென்னியும் எழுந்ததுஅந் தரத்தினில் பந்தாய். 118

கந்து கச்சிரம் உபயமும் உபயகந் துகமாய்
அந்த ரத்திடை வட்டமிட்டு ஆடின; அழகாய்ச்
சுந்த ரச்சுழல் வண்டுஎன, கறங்குஎன, சுழல,
சந்த நல்பரி வேடம்ஒத் தனதனித் தனியே. 119

---

115. அறனசுதன் - தருமபுத்திரன்; அழல்பிறந்தவள் - வேள்வித் தீயில்தோன்றிய திரௌபதி, சரிடத்தும் எண்ணும்மை கூட்டுக, வில்லுவ - வில்வ மரத்தாலாகிய; யூப கம்பம் - வேள்வித்தூண, குசைக்கயறு- தருப்பைப் புல்லால திரிக்கபபெற்ற கயறு; மா உபயம - இருகுதிரைகள்.

116. அபிஷேகம் - புனித நீராட்டு, சோடசம மேவு உபசாரம் - தவிசு, கை கழுவு நீர், கால் கழுவ நீர், முகழுடிநீர், நீராட்டம்,ஆடை, பூண்நூல், சந்தனம், மலர், மஞ்சளரிசி, தூபம், திருவிளக்கு, நிவேதனம், வெற்றிலைபாக்கு, கருப்பூர ஆரததி, மநதிரததுடன் அர்ச்சனை ஆகிய பதினாறுவிதமான உபசாரங்கள; எடடுத்திசைகளிலும திக்குக்கு ஒன்றாய் உள்ள வாயில்கள் என்க, பூர்வம்ஆதியதாய் - கிழக்கு முதலாக, ஆகுதி - இங்கு பூர்ணாகுதியைக்குறிதத்து.

117. சத்தமா முனிவோர் - அதத்திரி, ஆங்கீரசன், கௌதமன், சமதக்கினி, பரதவுவாஜன், வசிஷ்டன், விசுவாமிதத்திரன் என்னும் ஏழுஇருடிகள், முனிவோரும் பகத்தாப்பியரும் என உம்மை கூட்டுக.பத்ரி - பத்திரி, குதிரை, தத்தும் மா - தாவுகின்ற குதிரை, உவணி- உடைவாள்; கதைக்கரன் - தண்டேந்திய கையன், வீமன்; உறுவன்- முனிவன், பலத்தாப்பியன்.

118. கடுப்பாக - வேகமாக, தனி - ஒரே; பந்தாய - பநது போல

119. கந்துகம் - 1 குதிரை 2. பந்து, அந்தரம் - வானம், கறங்கு - காற்றாடி..

விரைசுஅ டிக்கடி மிக்குற, தலைகள்மீச் சுழல,
சிரசுஇ லாதுஇரு பரிகளும் செகத்திலே நிற்க,
கருவி யால்அகடு அகழ்ந்தனர்; நறைக்கருப் பூரம்
சொருசொரு என்றுஉறச் சொரிந்தன துரகதத்து உதரம். 120

அகில மீதுவீ ழாது,கற் பூரமது அனைத்தும்
நகுபொன் தட்டுகள் பலவினும் நிரப்பி,நற் குடரைத்
திகழ வேசலத் தினில்சுசி கரித்து,மேல் செய்ய
தகமைக் காரையின் முள்ளினில் வதக்கினான் தவத்தோன். 121

ஓம சாலையில் வருமுன்முப் பத்துமுக் கோடி
நாம தேவர்நாற் பத்துஎண்ஆ யிரம்இரு டிகளும்,
வாம பாலர்,எண் வசு,நவ பிரமர்,கின் னரர்கள்,
சேம வித்தியா தரர்,நவக் கிரகர்,சித் தர்களும், 122

பண்பு உருத்திரர் பன்னொன்று, பன்னிருஆ தித்தர்,
விண்பு ரந்திடும் புரந்தரன், மிக்கதெய் வதங்கள்,
எண்பு ரந்தஆ யிரவரும் மீமிசை எய்தார்
நண்பு விக்குஉயர்ந்து ஆயிரம் பாகமேல் நன்காய், 123

அரி,அ யன்,சிவன், சிவகண நாதர்,செவ் வேள்,மற்று
உரிய தானபுத் தேளிர்கள் அனைவரும் ஒழுங்காய்
விரிவின் அந்தரம் இடம்அறப் பரவி,விண் தெய்வ
முரச ஆர்ப்பொடு, முசிவுஅற, மொய்த்து,நின் றனரே. 124

ஆல டித்தவ முனிஅவி, சமித்துகள் திரளாய்,
சால வேவிரை சாய்,சொரிந் தேதரு மன்கை
யாலும் பூரணா திகள்மகிழ் வாகவே நல்க,
மேலும் வேதியர் மந்திரம் யாவுமே விளம்ப. 125

---

120. விரைசு - வேகம்; மீ - மேலே; செகம் - இங்கே நிலம்; அகடு- வயிறு; நறைக் கருப்பூரம் - பச்சைக்கற்பூரம், துரகதம் - குதிரை; உதரம் - வயிறு.

121. மேல் - அதற்குப பிறகு.

122. ஓம சாலை - வேள்விக்கூடம், வாம பாலர் - எட்டுத் திக்குப்பாலகர்; எண்வசு - எட்டு வசுக்கள், நவப பிரமர் - பிரமன்,விஷ்ணு, உருத்திரன், மகேஸ்வரன், சதாசிவன், வித்து, நாதம்,சத்தி, சிவம் என்னும ஈஸ்வரபேதங்கள் ஒன்பது

124. புத்தேளிர் - தேவர், விரிவின் - இடவிசாலதை உடைய; தெய்வ முரசம் - தேவதுந்துபி; முசிவு அற - குறைவற. இடையீடின்றி எனினுமாம்.

125 ஆலடித்தவமுனி - ஆலமரத்தடியிலிருந்து வந்த பகத்தாப்பியர்; அவி - வேள்வியில் இடப்படும் உணவுப்பொருள், சமித்து - ஓமக்குச்சி.

வேத சாத்திர மிக்கமந் திரங்களி னால்ஆ
பூதி யாம்அவிப் பிராயமது அளிக்கையில், புலவோர்
ஆதி தேவதை கட்குஎலாம் திருத்தியது ஆகி,
ஆத ரப்பரி யாகவேள் விப்பலன் அளித்தார் 126

(அறுசீர் ஆசிரிய விருத்தம்)

விரவுசாந் தாதி மாவின் வேள்வியின் பலன்இ ரட்டி
துரம்உற அளித்து, தேவ துந்துபி முழக்கி, ஆர்த்து,
வரிமலர்ப் புட்ப மாரி வருஷித்து, மகிழ்ச்சி பொங்கி,
பரிவுற வாழ்த்தி, (சென்றார்) பலன்பெறு தேவர் எல்லாம். 127

கடவுளர் அகன்ற பின்பு, கந்துகத்து அகட்டைத் தைத்து,
வடமதில் தவம்செய் கின்ற மாமுனி மறையி னாலே
திடமுடன் சிரத்தைக் கூவி, சென்னியை உடலில் சேர்க்க,
சடம்தனில் பண்டு போலத் தகைவுறப் பொருந்தி உற்ற. 128

சடுதியில் கமண்ட லத்தின் சலத்தைமந் திரித்து, மாக்கள்
உடலினில் இறைக்கும் முன்னம், உயிர்கள்பெற்று அனுமா னித்த;
படர்இரு பரிக்கும் பூசை பண்ணியே விட்டார் பின்பு;
தடையற முகம்செய் திக்குத் தன்னிலே பரிகள் சென்ற. 129

புரவிகள் அகன்ற பின்பு, பூபதி தரும ராசன்
அரியபூ கோதா னங்கள், அன்னவஸ் திரதா னங்கள்,
விரிநவ ரத்னம் சொன்னம் மிகுகன்னி காதா னங்கள்,
மருவுதா னங்கள் மற்றும் வரைவுஅற வழங்கி னானே. 130

---

126. புலவோர் ஆதி - தேவலோக வாசிகள முதலிய; திருத்தியது - திருப்தி, மனநிறைவு, பரியாக வேள்விப்பயன் - அசுவமேத யாகத்தின் பலன், யாக வேள்வி - ஒரு பொருட்பன்மொழி.

127. துரம்உற - பொறுப்பாக; பலன்பெறு - அவியுணவைப் பெற்ற.

128. அகட்டை - வயிறறை, வடமதில் - ஆலமரத்தின் கீழ், மாமுனி - பகத்தாபபியர்; சடம் - உடல்; பண்டு போல - முன்பிருந்தவாறே.

129. கமண்டலம் - கையில் எடுத்துச் செல்லும் தண்ணீர்ப பாத்திரம், அனுமானித்த - கணைத்தன; விட்டார் - விடுதலை செய்துவிடடார்; பின்பு பூசைபண்ணியே விட்டார் என இயையும்.

130. வரைவு அற - யாருக்கு வழங்குவது எவ்வளவு வழங்குவது என்னும் சுடடுப்பாடு இல்லாமல்.

கற்பக தருவும், காம தேனுவும், கருணைக் காரும்,
பொற்புஉறு நிதியும், சிந்தா மணியும்,பொற் பொருப்பும், பொங்கும்
நற்பயோததியும், தர்ம நாரியும் வெருவ நன்றாய்
அற்புதத் தருமன் அங்கே ஆடகப் புயலை ஒத்தான். 131

சந்ததம் இடைவி டாமல் தமனியப் புயல்மென் மேலும்
சிந்திய வருடம் போலும், திகழ்இரத் தினங்கள் வீசும்
கந்தரம் போலும் தர்மன் கரதலம் சொரிந்த தாலே
வந்துகை ஏற்றோர் எல்லாம் மந்திரிக்கு உயர்வாழ்வு உற்றார். 132

அடுத்த பாடல் சுவடியில் எழுதப்படவில்லை

அறன்சுதன் கரத்தில் ஏற்ற யாசகர் பொருள்கள் எல்லாம்
திறம்பெறக் குவித்து வைத்து, சிரச்சுமை கொடுபல் காலம்
பிறங்கிட மனையில் சேர்த்தும் பெட்புறக் குன்று குன்றாய்
நிறம்தரும் யாக சாலை நிலம்எலாம் கிடக்கும் இன்னும். 134

விரவிய சந்த்ர காசன், மிக்கதோர் வீர வர்மன்
பரிசகே தனன்,வில் வீரப் பட்பர வாகன், நீதி
தரம்உறும் அமிர்தன், நீலன், சாளுவன், எமனா சூரன்,
உரவர்மற்று உளர்எல் லோரும் உதிட்டிரன் கரத்தை மெய்த்தார். 135

நீளிய இபம்,தேர், மா,பொன் நிதி,நவ ரத்ன ராசி,
பாளிதம், பணிகள், மற்றும் பலபொருள் அளவுஇ லாமல்
கோளியில் தவம்செய்து உற்ற குருமுனிக்கு இறைஞ்சி ஈந்தான்
காளமா முகிலே அன்ன கரதலன் தரும ராசன். 136

தன்னுடன் பலகா ரங்கள் தான்புசித்து ஆண்டுஒன் றாக
அன்னமது ஒழிந்த மூஏ ழாயிர மறையோ ருக்கும்
சொன்னமும் சதஎண் பாரம், தும்பிஒன்று, இரதம் ஒன்று,
உன்னிஐந்து, இரத்தி னங்கள் ஒன்பது மரக்கால் ஈந்தான். 137

---

131. தரு - மரம், கார் - மேகம், நிதி - சங்கம், பதுமம முதலியநவநிதிகள், பொற்பொருப்பு - பொன்மலை, பயோததி - பாற்கடல், தர்ம நாரி - அறம்வளர்த்த நாயகியாகிய உமையம்மையார்; வெருவ - கண்டு அஞ்சுமாறு, ஆடகப்புயல பொன்மழை.

132. தமனியப்புயல் - பொன்மேகம்; வருடம் - வருஷம், மழை, சுந்தரம் - மேகம், மந்திரி - குபேரன்.

136. நீளிய - நெரிய; இபம் - யானை, பாளிதம் - பட்டுப புடவை;கோளி - ஆலமரம், குருமுனி - வேள்வியாசானாசப் பணியாற்றியபசுதாப்பியர், தருமராசன் அளவிலாமல் ஈந்தான் என்பதுமுடிபு.

137. சொன்னம் - பொன்; சதஎண - நூற்றெட்டு; பாரம் - இரண்டாயிரம்பலம் கொண்ட நிறை, தும்பி - யானை; உன்னி - குதிரை.

தனித்தனி இவ்வா றாகச் சகலவே தியர்க்கும் நல்கி,
முனிக்குல மான பேர்க்கும் முறைமுறை வரிசை செய்து,
வனித்திடும் மறையோர் ஆசி வாழ்த்துமா மன்னன் பெற்று,
இனித்தவாய் அமிர்தச் சொல்லால் ஏத்தி,மன் புகழ்ந்த தற்பின், 138

உதிட்டிரன் றன்னை மாயன் உதும்பரப் பலகை தன்னில்
மதிப்புற வதிய வைக்க, மலரடி மேக வன்னன்
துதித்துஇரு கரத்தில் தாங்க, சொன்னமா மணிக்கா ளாஞ்சி
சிதத்துடன் கரத்தால் கன்னன் சேய்மகிழ்ந்து ஏந்தி நிற்க, 139

மாருதி குடைநி ழற்ற, வாள்உடை வாளும் பார்த்தன்
நேருற ஏந்தி நிற்க, நிகரில்மற்று இருவர் தாமும்
வாரமாய் உபய வெண்சா மரைஇரு பாலும் வீச,
சீருறும் தரும ராசன் செருக்கொடும் தவிசில் உற்றான். 140

தருமனும் மாலு மாகத் தவிசினில் இருக்க, சூழ்ந்த
நிருபர்சே வித்து நிற்க, நிகர்இலாச் சந்த்ர காசன்
திரள்நிதி பதகா ணிக்கை சேவடி யதனில் வைத்தே
அரசனைப் பணிந்து நிற்க,"அயல்வதி" எனமன் சொன்னான். 141

உரவன்உத் தரவால் மன்னன் உளம்மகிழ்ந்து அருகில் வைக,
"தருமதே வதைகு மாரா! தயிரியச் சந்த்ர காசன்
விரவுசம் பிரதா யத்தை" விரிப்பர்மால்"கேள்நீ; என்றும்
குரவரில் இவன்போ லேநற் குணமுளோர் இல்லை"ஏன்றே. 142

"புரிபொறைக்கு அகிலம் ஒக்கும் புரவலன் இதயப் பூவில்
அரியணைச் செல்வ னான அனந்தகோ பாலர் உற்றார்;
மருவுபஞ் சாய கோடி மண்டலம் அணுக்கத் தொண்டர்;
உரவன்நும் பதத்தில் வந்தான் ஒப்பிலான் ஐயா!" என்றான். 143

---

138. வனித்திடும் - வன்னித்திடும், சிறபபிச்சுப்படுகின்ற, உரியவர்களுக்குக் காணிக்கையளித்து உபசாரவார்த்தைகளைக் கூறிய பிறகுஎன்றவாறு.

139. வதிய வைக்க - உடகார வைக்க, சிதம் - அறிவு

140. மாருதி - வீமன்; வாள் - ஒளிவீசுகின்ற; இருவர் - நகுல சகதேவர், செருக்கு - ஈண்டுப் பெருமிதத்தை உணர்த்தியது,கம்பீரமாக என்க.

141. தவிசு - அரியாசனம; நிருபா - வேந்தர், அயல்வதி - அருகேஅமர்க; மன் - தருமன், சம்பிரதாயம - திறமை, இங்குப் பெருமை என்ற பொருளில் ஆட்சி; மன்னன் (சந்த்ரகாசன்) உரவன்(தருமனின்) உத்தரவால் அருகில் வைக, மால்" குமாராசம்பிரதாயததைக் கேள்நீ, இவன்போலே இல்லை" என்றேவிரிப்பர் என்பது முடி.பு.

143. பஞ்சாய கோடி மண்டலம் - தெளிவாக விளங்கவிலவை, நும்பதத்தில் வந்தானாகிய உரவன் ஒப்பிலான என்றபடி..

அவன்கதை வரலாறு எல்லாம் அரவபஞ் சணையான் சொல்லி,
"சிவன்கைமெய் நடுங்கும் இந்தத் தீரனே இகல்செய் வானேல்;
உவந்தநும் இளவல் போருக்கு ஒல்கிவந்து அடைந்தோன் அல்லன்;
நவம்தரு நீசெய் தர்ம நன்மையால் நயந்தான்;" என்றான் 144

அவ்வுரை தருமன் கேட்டே, "அய்ய!நின் கிருபை;" என்று,
நவ்வுசந் திரகா சன்றன் நன்முகம் தன்னை நோக்கி,
"குவ்வில்என் வேள்வி முற்றக் குணமுடன் அடைந்தீர்; நன்று!
ஒவ்விய பார்த்த னோடுஐ வோர்உமக்கு ஈடோ?" என்றான். 145

"ஈடுஇலை என்பது என்கொல்? இளவல்கைப் பகழி ஒன்றால்
நீடுமூ வுலகும், திக்கும் நீற்றுவன்; இகல்ஓ ராமல்
ஆடல்நும் மாவைப் பற்றும் அரும்பிழை பொறுநீ;" என்று
சோடச உபசா ரங்கள் சொல்லியே துதித்துஇ ருந்தான். 146

மன்இருந் ததற்பின் வீர வர்மன்கா ணிக்கை வைத்துப்
பொன்னடி பரவி நிற்ப, "புரவலாய்! இவன்இ லாடத்
தின்னில்சங்கு ஆழி ரேகை இசைதல்பார், இகலில் வல்லான்;
தன்நிகர் இலாத தர்மன் தான்இவன்;" எனமால் சொன்னார். 147

"நன்று"என உபச ரித்து, நட்டு,அவன் அருகில் வைத்தான்;
பின்றைநற் பதகா ணிக்கை பிரிபறாய்ப் பரிசன் வைத்தே
அன்றடி பரவி நிற்க, "அவன்உடல் பாதி கீறி
வென்றியில் தர்மம் ஈந்த வேந்து"என விண்டு விண்டார். 148

மாதவன் உரைக்க, தர்மன் மதித்து,"அயல் இருக்க;" என்றான்;
பாதகா ணிக்கை வைத்துப் பப்பர வாக வேந்தன்
போதனே அனைய தர்ம பூபனை வலமாய் வந்தே,
ஆதரவு உளத்துஅன் போடும் அணிமணி மகுடம் சாய்த்தே, 149

---

144 கைமெய - கரங்களும் உடலும், உம்மைத்தொகை. நும் இளவலென்று விசயனை, நயந்தான் - தானே விரும்பி நின் பாலவந்தடைந்தான்.

145. நவவு - நல்ல, அழகிய. திசைமொழியாகக கொண்டு புன்முறுவல் விளங்குகின்ற எனினுமாம; குவலில் - உலகத்தில.

146. இகல் - போர்வலிமை; ஆடல் - வெற்றிமிக்க; மா - குதிரை.

147. இலாடத்தின்னில - இலாடத்தினில், நெற்றியில், எதுகை நோக்கிய விரித்தல். தர்மன் - அறவோன்.

148 அவன் - வீரவர்மன், பரிசன் - பரிசத்துசன்; விண்டு - கண்ணன். விண்டார் - கூறினார.

149. போதன் - தாமரை மலரில் இருப்பவன், பிரமன்

பணிந்துஎழுந்து இருகை கட்டி, பயபத்தி யுடன்வாய் பொத்தி,
துணிந்துஎதிர் நின்றான்;"பார்த்தன் சூன்இவன்; சிலையால் வல்லான்;
மணம்செறி அல்லி சேயன்; மணிநகர் அரசன்; சாபக்
குணம்செயின் புவனம் மூன்றும் குலைகுலைந்து அலறும்; ஐயா! 150

சானுவி சாபத் தாலே தனஞ்சயன் சினம்மீக் கொண்டு
சூனுவைப் பகைத்துஅங் குற்ற துயர்நடந் ததுஎலாம் தோன்றத்
தேன்நிமிர் துளப மார்பன் செப்பிட, மெய்ப்ப தாக
மானசம் பன்ன தர்மன் மனம்மகிழ்ந்து உவகை உற்றே, 151

நின்றவன் றன்னைத் தாங்கி, நேயகட் சலங்கள் மாற்றி,
"கன்றுதல் ஒழிநீ; அய்யா! கமலன்முன் விதித்த வண்ணம்
அன்றியும் உன்னால் நம்மால் ஆவதும் அழிவது உண்டோ?"
என்றுநல் வசன மாக இருக்கஉத் தாரம் ஈந்தான். 152

மணிநகர் அதிபன் வைக, மன்னர்கோன் அமிர்த கேதன்
கணிசமாய்த் திறைகள் வைத்து, கழல்பதம் இறைஞ்சி நின்றான்;
"மணிமுடி அரசர் கோவே! மற்றுஇவன் முதியோன் முன்நாள்
குணமொடு ராமன் வேள்விக் குதிரையைத் துணிந்து பற்றி, 153

அனுமன்அங் கதன்சுக் ரீவன் ஆடல்வீ டணனைப் பற்றி,
சினமுடன் தளைகள் பூட்டி, சிறையில்வைத் தே,மால் பின்னோன்
றனையும்வெற் அளிக்கச் சாடித் தளத்தையும் துரத்தி விட்டான்;
உனிஇரா கவன்ந யந்தே, உபசரித் ததன்பின் விட்டான். 154

சிறைப்படு மவரும் மாவும் திறந்துஇவன் விட்ட பின்பு
குறைவற வேள்வி முற்றிக் கொண்டனன் மால்இ ராமன்;
பொறையனே! இவன்அன் பான புதல்வர்கள் இருவர் வீரர்
திறல்வய விசயன் கையால் சிதைந்துஉயிர் ஒழிந்தார்; அய்யா! 155

---

150. சூன் - மகன், மணம் செறி அல்லி - திருமணத்தால் அருச்சுனனுடன் இணைந்த அல்லி, வாசனை நிறைந்த குமுதம் என்பது ஒரு தொனிப்பொருள், சாபக் குணம்செயின் - வில்லில நாணைபபூட்டினால்.

151. சானுவி - கங்கை, மான சம்பன்ன - பெருமை - நிறைந்த.

152. கடசலம் - கண்ணீர், கன்றுதல் - வருந்துதல்; கமலன் - பிரமன்

153. வைக - உடகாந்த பிறகு, கழல் பதம் - வீரக்கழலை அணிந்துள்ள கால், இரணடும் உருபும் பயனும் உடன்றொக்க தொகை, முதியோன் - முன்னோன்.

154. மால்பின்னோன் - இராமானுஜன், இலக்குவன், வெந் அளிக்க - புற முதுகிட, உனி - உன்னி, வேள்விக்குதிரை 155. பொறையனே - பொறுமையில் மிகவனே.

மற்றுஇவன் நெறியான் மிக்க மன்;"என மாயன் கூற,
கொற்றவன் மகிழ்ந்து கண்ணால் குறித்துஇடம் காட்ட, வைகா,
நல்திறை நீலன் வைத்து நமஸ்கரித்து அகல நின்றான்;
உத்திரை அளித்த ரத்ன ஓதனன் பரவி நின்றான். 156

பத்திர கிரியான் வெய்தில் பணிந்துகா ணிக்கை வைத்து,
சத்தியாய் விலகி நின்றான்; சாளுவன் திறைகள் மிக்காய்
வைத்துஅடி பரவிச் சென்றான்; மாலினுக்கு இளவல் ஆன
சத்யசாத் தகியும், மற்றும் தலைவரும் வணங்கி நின்றார். 157

பற்பல வேந்தர் எல்லாம் பணிந்துகா ணிக்கை ஈந்து,
சொற்பல விவர மாகத் துதித்து,அயல் விலகி நின்றார்;
செற்பயில் மெய்யன் வேந்தர் திறம்நலம் பகர அற்பின்
மற்பயில் வீமன் முன்னோன் மகிழ்ந்துவீற் றிருந்தான் மன்னோ. 158

மருமலர்க் குவளை மார்பன் வனசமா மார்ப னோடு
தருவதப் பலகை யாம்நல் தவிசுவிட்டு எழுந்த பின்னர்,
அரிபினில் தொடர்ந்தார்; வீமன், அர்ச்சுனன், நகுலன், பின்னோன்
திருமகிழ் சந்த்ர காசன், தின்மைசேர் வீர வர்மன், 159

பரிசகேது, அமிர்தன், மிக்க பப்பர வாகன், நீலன்,
தருகதிர் ரத்ன கேது, சாளுவன், எமனா சூரன்,
பொருள்சுவே தன்,சு பத்தி, பொருவிட கேதன், மேக
வருணன்,சாத் தகி,பி ரத்தி மன்,அணி ருத்ர னோடு, 160

உரவிய அக்கு ரூரன், உத்துவா சாரி, மிக்க
முரண்உறு கிருத வர்மன், முதல்வரும் மற்று ளோரும்
தருமனைத் தொடர, யாக சாலையை வலமாய் வந்து,
பரிவொடு நமஸ்கா ரங்கள் பண்ணினார் இயங்கள் விம்ம. 161

---

158. செலபமில்மெயயன் - மேசுததைப் போன்ற திருமேனியை உடைய கணணன், திறம நலம் - வலிமைகளையும் பண்பு நலன்களையும், உமமைதிதொகை, அறபின் - அன்போடு

159 குவளைமார்பன் - தருமன், வனச மா - தாமரைச் செலவி; தருவதப்பலகை - அததிப் பலகை போலும; பின்னோன் - சகதேவன்

பஞ்சவாச் சியங்கள் விம்ம, பணிந்துஎழுந்து, இதயம் கூர்ந்து,
அஞ்சன மெய்யான் சொல்ல, அக்கினி பகவா னுக்குத்
தஞ்சமாம் திருத்தி யான தத்தம்செய்து, சவுமி யர்க்கு
மிஞ்சபூ தானம் மற்றும் விரும்புதா னங்கள் செய்தே, 162

அரசர்கள் அமைச்சர் பட்ட வர்த்தனர் மகுட வேந்தர்
விரவுசே னாதி பர்கள் வீரரும் இரதம் ஏறத்
திருமன்உத் தாரம் செய்ய, செயமுர சங்கள் ஆர்க்க
தருமனே முதல தாகச் சகலரும் தேர்மேல் கொண்டார். 163

(எழுசீர் ஆசிரிய விருத்தம்)

முன்ன மேதிரித ராட்டி ரன்,விதுரன்,
முரச கேதனன்,மு ராரிமால்,
மன்னி மையம்நிகர் வீம சேனன்,வய
விசய சேனனொடு நகுலனும்,

பின்ன வன்றனொடு சத்ய சாத்தகி,பி
ரத்தி மன்,அணிஉ ருத்திரன்,
கன்னன் மைந்தன்,அதி மேக வன்னன்,எழில்
காயன் உத்துவா சாரியும், 164

அருள்உ தாரகரன், அக்கு ரூரன்,மதன்
அன்ன தோர்கிருத வர்மனும்,
விருது மன்னர்புகழ் சந்த்ர காசன்,உயர்
வீர வர்மன்,விறல் பரிசனும்,
சருவ வீரர்பணி பப்ர வாகன்,அதி
தந்த்ரி ஆகியசு பத்தியும்,
நரரின் மிக்கமிர்த கேதன், நீலன்,எம
னாசு ரன்,சுதன்,அ மைச்சனும், 165

---

162. சவுமியர் - இவரே குல புரோகிதர்

163. ஏற - ஏறும்படியாக; திருமன் - லட்சுமிபதி; உத்தாரம் செய்ய - ஆணையிட.

165. மதன் - மன்மதன்; சுதன் - எமனாசுரனின மகன், சுகலீலன், அமைச்சன் - அவனுடைய மந்திரி, சுவேதன்.

தயிரி யப்ரபல விசையன் அன்னஅநு
சாளு வன்றனொடு ரத்தின
வயிர கேதனனும், மற்றும் உள்ள்கெடி
மன்னர், தேசர்,மகு டாதிபர்
இயல்பின் இம்முறைசெ லப்ப யோததிகள்
ஏழு மேசெருமி, மொய்த்தலாய்,
பயில்வி சாலசது ரங்க சேனைகளும்
பரந்த தேதிசைவி ழுங்கலாய். 166

மருவு தோல்)துளைந ரம்பு கஞ்சவகை
வாச்சி யங்களின்மு ழக்கமும்,
அரிய நாலுவகை யான சேனைகளின்
ஆர வாரமும்மி குந்ததால்
விரவு முப்புவன மும்தி சாமுகமும்
மேவி யேசெவிடு கொண்ட;ஏழ்
தரையி னம்ககுபம் நடுந டுங்க,இர
தங்கள் சேனைகள்ந டந்தவே. 167

படிநெ ளிந்த;வட வரைஅ லைந்த;பரு
வதம்நெ ரிந்த;முது பணிமணி
முடிநெரிந்த;திசை செறிவி லங்கலொடு
முகடுஉ டைந்த;கரி அலறின;
கடல்வ றந்த;சல பதிம ருண்ட;கம
டமும்ம யங்கிவெரிந் நெரியவே
புடைப ரந்தபடை யதுந டந்தஉயர்
புரிசை தங்கும்நகர் புகுதவே. 168

அத்தி னாபுரித னக்கு நேரில்அனி
கப்ப யோததிகள் உக்ரமாய்த
தத்தும் மாவின்இர தத்துஇ ராசர்கள்த
மைப்ப ராவி,நடை யுற்று,நீள்

---

166. கெடி - கோடைசுளை உடைய, பயோததிகள - பாற்கடலகள், இங்கு வெறுமனே கடல்கள் என்னுமளவில் நின்றது; மொய்ததலாய - மொயபபதைபபோல, விழுங்குலாய் - விழுங்குவதைப் போனறு 167 ஏழ்தரைஇனம் - ஏழு உலகஙகள், சுகுபம் - திசைகள்

168. படி - நிலம, வடவரை - மேருகிரி, பருவதம் - மலைகள, முதுபணி - பழைய பாம்பாகிய ஆதிசேடன்; திசைசெறிவிலங்கல - எணடி.சை மலைகள், கரி - திசையானைகள, சலபதி - வருணன்,கமடம் - உலகைத் தாங்குகின்ற ஆதி கூமம், வெரிந - முதுகு;நெவிந்த முதலிய எட்டையும் எச்சமாதக தொள்க இவை நடந்த என்னும் வினைகொண்டு முடிநதன. நகர புகுதவே நடநத என இயையும்.

நத்துஉ லாவுகுமு தத்த டாகமும்
நறைக்கு சேசயம டுக்கள்சீ-
தத்துஉ லாயபொழி லைக்க ணால்அதிச
யித்தும், ஏகினர்வி யப்பதாய். 169

நகும லர்ச்சலச வாவி யும்,கனிந
றாஉ லாப்பழ னங்களும்,
முகில்த வழ்ந்துஉலவு சோலை யும்,ககன
முகடு மேவிவளர் சாலையும்,
சகல விம்மிதவ ளம்கு லாவியத
லங்கள் ஆகியநி லம்கடந்து,
அகல்வி சாலஅர ணம்த னைக்குறுகி
னார்ம கிழ்ச்சிகொடு யாருமே. 170

சக்ர வாளகிரி யில்பி றந்தபுரி
சைக்குள் ஏழ்உததி யின்புனல்
புக்க வேபுகுத விட்டது ஒப்ப,உயர்
புரிசை வாயில்வழி புகுதளம்
தக்க தானதெரு வீதி வீதிகள்ச
மஸ்த மும்சலதி மொய்த்ததாய்த்
திக்குள லாம்கெழுமி டப்பன் மன்னவர்கள்
தேரை விட்டனர்கள் நேரதாய். 171

சகல வீதிகளு மேதொ லைத்து,அரிய
சபையின் மண்டபம்நெ ருங்கியே,
அகில லோகமும்ஓர் கவிகை யில்குடிய-
மைத்துஅ ருள்செயும்அ றன்சுதன்
மகிமை யானஇர தத்தை விட்டுஇழிய,
மாலும் மற்றபல மன்னரும்
செகத லத்தின்மிசை ஆகி னார்நடவு
தேரை விட்டுஇனிதுஇ றங்கியே. 172

பன்ன கக்கிரண மணிப தித்த,அறு
பத்து நாலுபடி மேவு,பைம்
பொன்னில் வைத்தஅரி யாசனத் தின்மிசை
புனிதன் அன்னதரு மன்னனையே

---

169. அனிகப பயோததிகள - படைக்கடலகள, உருவகம, நததுஉலாவு - சங்குகள் திரிகினற, குமுதம் - அலலி, நறைக் குசேசயம் - வெண்தாமரை, மடு - குளம், சீதம் - குளிர்ச்சி.

170. சலச வாவி - தாமரைக்குளம், கனிநறா - பழத்திலிருந்துவடியும் தேன், முற்றிய சுவையையுடைய தேன் எனினுமாம்.

171 புரிசை - கோடடை மதில், சமஸதமும - அனைத்தும, சலதி - கடல்.

172. அறன்சுதன் இழிய, மாலும் மன்னரும இறங்கி செகதலத்தின் மிசை ஆகினார் என்பது முடிபு.

முன்நி றுத்தி,வசு தேவன் வில்விதுரன்
முன்ன வன்றனையும் வைத்தபின்,
மன்னர் பற்பலர்கள் கைகு வித்தமுறை,
மாலும் நால்வர்களும் வன்மையாய், 173

அரசர் யாவரையும் உபச ரித்து,அவர்அ
வர்க்குஅ தானமுறை வரிசைசெய்து,
உரிய தானதவி சினில்இ ருத்தியபின்,
உந்தி பூத்தவனை நால்வரும்
தரும னோடுதவி சினில்இ ருத்தி,அணை
தன்னில் ஒவ்வொரடி தாழவே
மருவும் வீமன்விச யன்பி னோர்களும்வ
திந்துஉ றைந்தனர்ம கிழ்ச்சியாய். 174

வந்து வந்துகைகு வித்த வர்க்குஉபய
மலர்க்க ணால்இடம்வ ழங்கியே,
இந்த்ரன் நேர்தரும ராசன் நற்கொலுஇ
ருந்த னன்புவிவி ளங்கவே;
சந்த்ர காசன்முத லான மன்னர்கள்ச
மஸ்த மானவர்க ளுக்குஎலாம்
சிந்தை பண்டிகுளிர் தர,இ ருந்து,தினம்,
முறைஉ வந்துஉதவி, மகிழ்செய்தார். 175

இந்த வாறுஅரசர் தினமும் மும்முறைஇ
றைஞ்சி யே,பொறையன் ஏவலில்
வந்து வந்து,அவையில் இவன்அ ளித்ததலம்
அதில்வ திந்து,மகிழ் சேவைசெய்து,
உந்தி ஏகுவர்;இவ் வாற தாம்முறையில்
ஒழுகி நால்இருதி னங்கள்தான்
சந்த மாய்அவ(ண்) த ரித்துஇ ருந்தனர்கள்
தருமன் எண்கழல்கள் தஞ்சமாய். 176

---

173. பன்னகக் கிரணமணி - சுதிர்களை உடைய நாகமாணிக்கம,நால்வர் - வீமன் முதலிய பாண்டவர் நாலவர்.

174. அணை - அரியணை. 175. சிநதை பண்டி - உள்ளமும் வயிறும, உம்மைத்தொகை.

176. பொறையன் - பொறுமையிற் சிறந்த தருமர், சந்தமாய - அழகாக, அவண - அங்கு, அத்தினாபுரத்தில்; தரித்து இருந்தனர் - தங்கியிருந்தார்கள், எண - எணணப்படுகின்ற, மதிப்பளிக்கப் படுகின்ற, எணகழல் - வினைதொகை, அந்தர்பாவிதணிச்.

நால்இ ரண்டுதின மேக ழிந்து,நல
நாளில், மாயன்நர பாலரைத்
தால்இ ரண்டுபக ராத வன்சபைத
னக்கு முன்கொடுவி டுத்தனன்;
கோல்இ ரண்டுசம ரில்தொ டாதஉர
வோனும், மன்னவர்கு ழாங்களும்
கால்இ ரண்டுதொழு வோரை மார்பினொடு
கருணை வண்மையொடு புல்லியே, 177

அரச ரைக்கருணை யங்கண் நோக்குஉடைய
அதிபன் ஓர்வரிசை வெகுமதி
பரமன் னர்க்குஉதவி, அமிர்த சாரமொழி
பண்பி னோடுஉரைசெய்து, அன்பதாய்,
"விரவும் உங்கள்பதி மீதில் ஏகும்"என
விடைசெய் தான்மகிழ்வு மிஞ்சியே;
உரவர் யாரும்அவர் தங்கள் தங்கள்பதி
உற்றுஅ டைந்தனர்கள் பத்தியாய். 178

குந்த ளாதிபதி சந்த்ர காசன்அருள்
கொண்டு தன்பதிஅ டைந்தபின்,
சந்த மானநவ மணிகள், நாலுவகை
தமனி யத்திரள்கள், அணிபணி,
சிந்து ரம்,புரவி, தேர்கள், வாசம்உயர்
சிவிகை, மிக்கபல பொருள்களும்,
"இந்த வற்சரம தற்குஇது என்திறையது"
எனஅ னுப்பினன்வி ருப்பமாய். 179

துங்கம் மேவுசர சுவதி யம்பதிது
ரங்கள் செய்து,அருள்பு ரிந்திடும்
சிங்க ஏறுஅனைய வீர வர்மன்நகர்
சேர்ந்து, ரத்னநிதி தேர்கள்மா

---

177. நரபாலர் - மன்னர், தால - நாக்கு, ஆகுபெயராகச்சொலலை உணர்த்திறறு, பகராதவன - தருமன், கோல் - அம்பு,முதல் கணையிலேயே வெற்றிபெற்று விடும் ஆற்றலுடையவன் என்பதுகருத்து

178. ஓர் வரிசை - ஒப்பற்ற மரியாதை, பரமன்னர - வெளியே இருந்து வந்துள்ள மற்ற அரசாகள், பத்தியாய் - வரிசையாக, அதிபன் வெகுமதி உதவி, அனபதாய் உரைசெயது, மகிழ்வு மிஞ்சியேவிடை செயதான், உரவர்யாரும் பத்தியாய் அடைநதனாகள்என்பது செய்யுண முடி பு.

179 நாலுவகை தமனியம் - ஆடகம, கிளிச்சிறை, சாதரூபம்,சாம்பூநதம் எனபபடும நான்குவகைப பொன்கள், அணிபணி - அணியப்படுகின்ற நகைகள், சிந்துரம் - யானை, வற்சரம - வருடம, திறை - கப்பம.

தங்கம் வெம்புரவி சகல பல்பொருள்கள்
தானும், "இந்தவரு டம்தனக்கு
இங்கி தங்களொடு யான்இ டும்திறைஇது"
என்றுஅ னுப்பினன்வி யன்களாய். 180

தரம்ஒவ் வாதபரி சத்து சன்செறித
ளங்க ளோடுஉளம்ம கிழ்ச்சியாய்
விரவு ரத்னநகர் மீதுஅ டைந்து,பல
இரதம், மாமதஇ னம்,புரி,
கிரண பொற்சிவிகை, நவம ணித்திரள்கள்,
கிளர்அ ணிப்பணிகள் பலதும்,"இவ்
வருடம் எய்ப்பொடுஅருள் திறை"எ னச்சொலிம
கிழ்ச்சி யாய்இனிதுஅ னுப்பினான். 181

மணிந கர்ப்பதியி லேத னஞ்சயன்ம
கன்பு குந்து,பல பொருள்களும்
தணிவுஇ லாதிறைஅ னுப்பி னான்;அதிக
சாம்பி ராச்யமது ஆள்பிரான்
வணித நன்னகர்அ டைந்து மிக்கதிறை
வண்மை யோடுஇனிது அனுப்பினான்;
அணிகொள் நீலன்மயி டாப திக்குஅணுகி
அன்பி னோடுஇறைஅ னுப்பினான். 182

நனிகொள் பதுமிரி நகர்அ டைந்தஎம-
னாசு ரன்திறைஅ னுப்பினான்;
உனித சாளுவனும் நகர்அ டைந்துதிறை
உவந்துஅ னுப்பினன்;மன் னவர்எலாம்
பனக மாமணிகள் கனக மோடுபல
பொருளு மேதிறைஅ னுப்பினார்;
விரவு தேசமதுஎண் ஏழில் உள்ளவரும்
மிக்க வேதிறைஅ னுப்பினார். 183

---

180. துங்கம் - உயர்வு. துரங்கள் செயது - பொறுபபுகளைத்தாங்கி, அரசாண்டு, மாதங்கம் - யானை, வியன்களாய் - வியபபடையும்படி

181. தரம் ஒவ்வாத - இணையற்ற, மாமத இனம் - மதமாவினம்என மாறுக, யானைக் கூடடங்கள்; அணிபபணிகள் - அழகிய அணிகலன்கள்.

183. எணஏழுதேசம் - ஐம்பத்தாறு தேசஙகள்.

வனச நாபிமுகில் வண்ணன், (த)ம்பி,மகன்,
மற்றும் உள்ளபல மன்னரை
அனகன் அன்னதரு மேசன் மெய்மகிழ்வ
தாக வும்பல்வெகு மானம்ஈந்து
இனிய வாய்மையுடன் உபச ரித்துஇரும
திக்கு மேல்,அவர்ந கர்க்குஉறக்
கனக மாமழைசொ ரிந்து, மிக்குறுக
ளிப்பி னோடுஇனிதுஅ னுப்பினான். 184

மாலை, மாயனொடுஅ டைந்த பேர்களைம
கிழ்ச்சி யோடுறஅ னுப்பியே,
வேலை நேர்கசர தம்ப தாதிகளும்
வீர வீரர்,மகு டேசர்,சீர்
சாலை யானபட் டாபி ஷேகரொடு
தம்பி மார்அடிவ ணங்கவே,
வாலை ஆதவனை நிகர தாகமணி
ஆச னத்துஇறைவன் வைகினான். 185

தன்னு யிர்க்குஅதிக மாக நீடுஅரண
தாக மாநிலம தனில்உறும்
மன்னு யிர்க்கு அருள்சொ ரிந்து, மும்மழைகள்
மதிதொ றும்சொரிய, வளர்புவி
தன்னில் ஆறில்ஒரு கடமை கொண்டு,சரண்
அண்டி னோர்கள்குடி தாங்கியே
அன்ன தானம்முத லாக வேஅறம்வ
ளர்த்துஇ ருந்தனன்அ றன்சுதன்.* 186

(இதற்கு மேல் சுவடியில் எழுதப்பெறவில்லை)

வேள்வி முற்றிய சருக்கம் முற்றும்

ஆகச்சருக்கம் 21க்கு விருத்தம் 4103.

---

* இதனை அடுத்துக் குறைந்தபட்சம் ஒரு வாழ்த்துக் கவியாவது இருந்திருக்க வேண்டும். நான்காயிரம் பாடல்களுக்குமேல் நடந்த ஒருகாவியம் இவ்வாறு திடுமென முற்றுப் பெற்றுள்ளது இயற்கையாக இல்லை.

184. வனச நாபி - தாமரைக் கொப்பூழ்; தம்பி - சாத்தனி; மகன்- பிரத்யும்நன்; அனகன் - சுடவுள்; இரு மதி - இரண்டு மாதங்கள்.

185. மாலை, பேர்களை என்னும் ஈரிடத்தும் எண்ணும்மை கூட்டுக;வேலை - கடல்; சாலையான - அரண்மனையில் வசிக்கின்ற; வாலைஆதவன் - உதய சூரியன்; இறைவன் - (தருமனாகிய) மன்னன். 186. அரணதாக - பாதுகாவலாக; கடமை - வரி.

செய்யுள் முதற்குறிப்பு அகராதி

(எண்: பக்க எண்)

அக்கங்கையின்	800	அங்கம் நீறும்	785
அக்கடைச்சனி	314	அங்கம் மெய்ப்	216
அக்கணமே	480	அங்கர் கோன்	344
அக்கணமே மாறும்	518	அங்க வட்கு	200
அக்கணையே	357	அங்கி காட்டம்	214
அக்கத்தொக்கு	770	அங்கு அதை	500
அக்கம்மூடி	197	அங்கு அவன்றனை	339
அக்கமது இறுக	604	அங்கும் அங்கு	592
அக்காலையிலே	272	அங்குளோர்கள்	54
அக்கினி நடுங்கக்	500	அச்சம் நீங்கு	789
அக்கினியும்	151	அச்சுதன் குமாரன்	559
அக்குரோணி	170,543	அச்சுவத்தின்	55
அக்குரோணி அஞ்	781	அச்சுவத்தினைப்	184
அக்குரோணி இரண்	596	அச்சுவம்	407
அக்குரோணிகள்	245	அசலமீதில்	539
அக்குரோணியன்	189	அசனியேற்றினுக்கு	415
அக்ரோணி	37	அசிஇழந்தவன்	589
அக்னி ஈறு	419	அசுவம் எத்திசை	341
அகக்கணால்	499	அசுவமாவது	602
அகட்டுறும் பசி	773	அசுவமானதை	525
அகம் மகிழ்ந்த	779	அசைவு அறப்பகழி	453
அகம் மகிழ் விருது	380	அஞ்சல் அஞ்சல்	516
அகலம் உற்று	74	அஞ்சலி செய்வது	79
அகலமீது அணைத்து	781	அஞ்சி இத்தனை	305
அகலவே இருசேய்களும்	775	அஞ்சி இறைஞ்சிய	97
அகளங்க மனத்தவனே	136	அஞ்சி ஏகிடில்	221
அகிலமீது வீழாது	821	அஞ்சி நால்வகைத்	47
அகில லோகமும்	227	அஞ்சிலள் இளைத்திலள்	367
அகோரர் ஆன	415	அஞ்சினார்	597
அங்கது கண்டு	100	அஞ்சு நூற்றொரு	769

அட்ட நாகமுடன் 260
அட்ட பாலகர் 161
அட்டபாலரில் 646
அட்டமாமுகத்து 768
அட்டவெங்கணையும் 70
அடக்கினீர்அடங்காத 777
அடக்கீடி உன் 460
அடகுல பதகா 469
அடசிசுக்கொலை 110
அடசு புத்தீ 414
அடட உனது 122
அடடா இது 121
அடபதக 410
அடபதக சண்டாளா 482
அடபற்குணன் 271
அடபாதக குண்டக 463
அடர்ந்து மாருதி 335
அடல்மீது மடிந்திடும் 460
அடல்விசால 241
அடலின் பெயர் 397
அடவிதனில் 402
அடிஅடி என்று 95
அடிஅடிமேலே 591
அடிஇறைஞ்ச 408
அடிக்கடி சோபித்து 450
அடிக்கடிதுணுக்கி 439
அடிகள் குத்து 221
அடித்து இழுத்து 219
அடிதொழுதவனை 795
அடிப்பது 22
அடிப்பன்தேன்எனை 637
அடிபணிந்து எழுந்து 763
அடி பணிந்துள 58
அடிமிசை ரத்தினாதிகள் 100
அடிமை என்பது 303
அடியின் மேலடி 75
அடுத்த போதினில் 648
அடைந்து நன்மொழிகள் 627
அண்ட கூட 245
அண்டகூடம் 286
அண்டகூ முகடளவு 539
அண்டகோளகை 43,75,524
அண்டம் எண்டிசையு 239
அண்டம் பகிரண்டங்கள் 277
அண்டம்முட்டிய 320
அண்டமூ தண்டமும் 90
அண்டர் அஞ்சினர் 803
அண்டர் அண்ட 243
அண்டர் மெச்சிய 618
அண்டரண்ட 324
அண்டரண்டம் யாவும் 516
அண்டரும் முனிவரும் 362
அண்ண உன்சரணத்து 183
அணிகுலைந்து 550
அணிக்கொள் வச்சிரக் 619
அணியணிஆகவே 311
அணியின்முனை 268
அணியுருத்திரன் 107,177
அணிவகுத்து 362
அத்தடந் தனில் 353
அத்தம் உற்ற முறி 541
அத்தலந்தனில் 378
அத்திஏழையும் 779
அத்திர வீரன் 384
அத்தினபுரத்தில் 439
அத்தினபுரத்தைக் 794
அத்தினாபுரி தனக்கு 829
அத்தினா புரத்து 736
அத்ரம் வேல்கள் 620
அதவநெடும் 139

அதற்கு இதற்கு 665
அதற்கு நேர்வழி 316
அதற்குமேல் கதை 649
அதன்மேல் நகுலன் 531
அதனிலும் விசையாய் 364
அதனின்மிசை இருந்து 612
அதனையும் வென்றிட 455
அதிக தயிரிய 166
அதிக விசை 613
அதிக வெஞ்சின 680
அதிசயித்து என 58
அதிசாபம் 564
அதிர்ந்து சீறி 71
அதிவீரதுரந்தர 458
அதிவீரன் 583
அதுஇது ஆகிலும் 318
அதுகண்டு 276
அந்த ஏல்வை 72
அந்த ஏல்வையில் 335,340
அந்த ஏல்வையிலே 501
அந்தக் கணத்தில் 520
அந்தக் குமரன் 715
அந்தகோ கெடுத்தான் 636
அந்தணர் செத்து 136
அந்தணர் விருது 346
அந்ததேர் மேகவண்ணன் 115
அந்த நகரத்தில் 722
அந்த நந்த 761
அந்த நாழிகை 728
அந்த நாள் முதல் 354
அந்த நாள் விதியின் 791
அந்த நேர் 81
அந்தநேர் அயர்ந்த 614
அந்த நேர் துளப 795
அந்த நேரம் 634
அந்த நேரில் 637
அந்த நேரினில் 662
அந்தப்படியே 516
அந்தப்பரி 38
அந்தமன் பதி 688
அந்தமாமிருகாதிபன் 633
அந்தமாமுனி 29
அந்தர்த்தியானமாய் 354
அந்தரங்களும் 321
அந்தரம் 5,12
அந்தரம் என 687
அந்தரம் திசைகள் 165,291
அந்தரம்திசை தனை 63
அந்தரம் திசையும் 453
அந்தராக்கதி 316
அந்தவண்ணம் 598
அந்த வாசகம் 650,744
அந்தவாற்றையும் 192
அந்தவாறு அவன் 225,725
அந்தவாறு கேட்டு 648
அந்த விதம் அறிந்து 443
அந்த விதமாய் 709
அந்தவெம் கொடும் 513
அந்த வேட்லக 613
அந்த வேளை 171
அந்தவேளையிலே 263
அந்நகர் 21
அந்நகர் எயில் 77
அந்நகர்க்கு 310
அந்நகர் வீதி 469
அந்நகரம் எந்நகரம் 151
அந்நகரி ஆதிபதி 145
அந்நகரோர் 722
அந்நாள்தலை 269
அந்நாள் முதலாய் 705

அந்நிருபம் 716
அந்நிலந்தனைக் 308
அபயம் என்று 321
அப்புனல் பருகிட 346
அம்பரங்களும் 620
அம்பரம் 681
அம்பரம் புலிகள் 545
அம்பின் தலை 279
அம்பு அம்பரம் 279
அம்பு அம்பும் 279
அம்புஅருஞ்சிறகை 165
அம்பும் அம்புமே 657
அம்மலையின் 194
அம்மலையைச் 195
அம்மறைதனை 358
அம்முனை அதனில் 673
அம்மையே உனது 731
அமரரைக் குடியது 471
அமரரைச் செயித்து 315
அமிர்த கேதன் 261
அமிர்ததுசன் 815
அமிர்தன் நீலத்துசன் 811
அமிர்தன் மால் 356
அமிர்தன் மெய்மொழி 348
அமிர்தன் விடுகணை 431
அமுதுஉகு வசனம் 791
அய்யஉன் பங்கய 100
அய்யஉன் விற்கோல் 115
அய்யநின் கையால் 793
அய்யநின் தாதை 124
அய்யர்இருபத்தோராயிரம் 140
அய்யர்க்கரசன் 36
அய்யர்வேள்வியின் 340
அய்யன் இழந்து 694
அய்யன் ஐயனை 31
அய்யன் காலில் 472
அய்யனே அரிஅரன் 370
அய்யனே அறியேன் 489
அய்யனேஎவனையோ 114
அய்யனே எனது 634
அய்யனே ஐவர்க்கு 812
அய்யனே கந்தமாதன் 206
அய்யனே தருமன் 128
அய்யனே நாங்கள் 511
அய்யனே பகையார் 176
அய்யனே வாயைமூடு 301
அய்யா உரையீர் 35
அய்யா தருமா 78
அய்வர் தம்பலம் 41
அய்வரும் மற்றவரும் 100
அயம்வழி விலகுக 386
அயர்ச்சி தீர்ந்து 80
அயர்தி அறுகடி 668
அயர்ந்த மன்னனுங் 179
அயர்ந்த போது 339
அயர்ந்தவன் 569
அயர்ந்தனன் 614
அயர்ந்துகீழ் வீழ்ந்தோன் 117
அயர்ந்து பின் 262,470
அயர்ந்து மந்திரி 62
அயர்ந்து மெய்நினைவு 472
அயருவர் தெளிவர் 467
அயல் அடுத்தனன் 773
அயல்சூழ் முலைத் 697
அயனம்தனில் 37
அயிராவத 393
அயில்வடிக் 7
அரக்கர் கோன் 326
அரக்கராகினும் 341
அரக்கரைச் 510

அரக்கியின் 314
அரக்கியின் குலம் 319
அரசே நீசொல் 629
அரசர்கள் அமைச்சர் 828
அரசர்கள் உரைத்த 797
அரசர்களின் 141
அரசர்களே 413
அரசர்கேசரி 389
அரசர்கோன் 684
அரசர்கோன் வரும் 728
அரசர் மந்திரிமார் 642
அரசர் யாவரையும் 831
அரசரும் தந்த்ரி 469
அரசரும் முனிவரும் 93
அரசரைக் கருணையங் 832
அரசன் எமனாசூரன் 142
அரசன் மகன் 660
அரசன் மந்திரி 634
அரசன் மனக் 135
அரசன் மாவினைத் 528
அரசனைச் சகலரும் 354
அரசி ஆன 388
அரசின் மிக்கது 524
அரசு அறிந்திட 155
அரசே அறுநான்கு 152
அரண் அடைந்து 359
அரண் உடைத்தன 109
அரண்மனைஅருகிகல் 507
அரண்மனை தனில் 304
அரணமும் 559
அரணிய சேனை 91
அரணிய தன்ட 312
அரவ கன்னிகை 498
அரவ நிலம் நடுங்க 611
அரவினை அழலை 127
அரன் அயன் 356
அரன் இடக்கண் 232
அரன்மால் அயன் 530
அரன்வெஞ்சிலை 396
அரிஅயன்சிவன் 821
அரிஅர பிரமரும் 385
அரி அரன் பிரமனும் 355
அரிஅரன்றனைச் 218
அரிஅரனும் 403
அரிஅரி முகுந்தா 639
அரிஐக்கிரியான் 530
அரிகள் மான்மரை 197
அரிகொள் சத சத 670
அரிச்சந்த்ர 21
அரிசயந்தனம் 752
அரிதம் எங்கும் 66
அரிதாம் இவன் 564
அரிதிரை அரிமிசை 687
அரி தேவகி 702
அரி நிறத்து 16
அரிபாரியம் 464
அரிபொங்கு 397
அரிமுகம் புலிமுகம் 379
அரிய கின்னரர்கள் 54
அரியகுருப் 414
அரியதோர் பகத்தாப்பியர் 820
அரிய நகர் 707
அரிய பத்ரகிரி 343
அரிய பரி 151
அரிய மணிநகர் 432
அரியோடு அரி 561,799
அரிவையர் 12,21
அரிஉறரி 296
அருஒழிந்து 235
அருக்கன் தோற்றி 595

அருகிலே பகத்தாப்பியர்	804	அலையை நேர்	314
அருகு இருந்த	727	அவ்விதம்செயவே	502
அருகு நின்றதொரு	51	அவ்வுரை தருமன்	825
அருகுற மகர	641	அவயவங்கள்	325
அருகுற விசயன்	508	அவர்கள்தம் பேரும்	795
அருச்சுனன் தலையாய்	777	அவர்கள் திரிமூர்த்தி	142
அருச்சுனன் பலத்து	650	அவர் தமக்குரிய	292
அருணன் உந்து	392	அவர் நால்வரும்	272
அருதளத்து	744	அவர்மதம்	391
அருந்தவத்தரும்	647	அவரவர் ஊர்தி	372
அருந்தவம் அறிந்து	357	அவரவர் மனநிலை	89
அரைநொடிக்	242	அவள் பயந்தது	191
அருள் அரிச்சந்த்ர	477	அவன் அகல	411
அருள் உதாரகரன்	828	அவன் அன்பு எனும்	533
அருள்க விடை	708	அவன் இணங்கி	173
அருள்கொடு	25	அவன் உருவும்	444
அருள் சேர்	703	அவன் என நீயும்	482
அருள் சிரசால்	407	அவன்கதை வரலாறு	825
அருளினோடு	820	அவன் செய்தான்	757
அருளுகவிடை	374	அவன் மிகுந்து	108
அருளெல்லாம்	27	அவன் மேதினி	577
அல்லது வில்லி	478	அவன்வில்அழிவதில்	166
அல்லது வைஸ்யன்	673	அவன் வில்லுக்கு	735
அல்விநாயகி	472	அவன்வெகுண்டு	679
அல்லு நீலத்துசன்	760	அவனிபர்சுரர்	688
அல்விலங்கு	309	அவனிமீது	73
அலகில் பற்பல	227	அவனில்எழுமடங்கு	552
அலகில் மன்னரை	691	அவனும் நீயும்	597
அலகில் மிகு	555	அவனும் மற்று	560
அலகு இலாமலை	339	அவனும் வேகம்	657
அலது சீஷன்	629	அவையல்	75
அலது நம்மினில்	730	அழகொழுகிய	13
அலது துர்க்குறி	439	அழுதுசென்றிடும்	635
அலமலந்த விடகீதனன்	164	அழுது வீழ்ந்து	787
அலமலந்தன	663	அள்ளல் வாய்க்	568

அளவதறு 555
அளவறு மகிழ்ச்சி 794
அளவிடல் அரிது 358
அளவு அறுதேரும் 673
அற்பசிக்கு 316
அற்பன்இங்கு இவன் 177
அற்புதமாய் ஒன்றற்கு 686
அறல் குடித்து 347
அறல்புசித்தே 347
அறவே புரம் 581
அறன்சுதன் அழல் 820
அறனன்சுதன் கரத்தில் 823
அறன் மகன் 3
அறன்மகன் அச்சுத 97
அறன் மகன் சுருக்கினில் 305
அறன் மகன் தனக்கே 642
அறன் மகன் திருமுனர் 374
அறன் மகன் மாயனை 142
அறிகிலாயோ 773
அறிகிலேன் என்று 759
அறிகுவன் உமையும் 795
அறிதுயில்உணர்ந்தோன் 470
அறிவகலாத 14
அறிவழிந்தவனே 451
அறுதிசொன்ன 629
அறுபது தேர்வில் 570
அறைந்த பாணியன் 770
அன்பு உரைக்க 407
அன்புடன் உளத்தில் 508
அன்றி அங்கு 626
அன்றிஏவல் 213
அன்றிநீ 29
அன்றிலும் பெடையும் 773
அன்றிவின்மை 603
அன்று அபிதானம் 690
அன்று அரசு 642
அன்று அறைந்த 515
அன்று உலகு 39
அன்று கண்டனம் 766
அன்று கால்விரல் 725
அன்று சேயுடன் 729
அன்று சொன்னது 594
அன்றுதான் உணவது 774
அன்றுதொட்டு 192
அன்றுமே பகல் 230
அன்றுமேற்றிசை 34
அன்று மைந்தன் 228
அன்று வெற்றிவில் 173
அன்னதில் ஏறித் 492
அன்ன போதில் 596
அன்னம் ஆறு 774
அன்னம் சாதகம் 196
அன்னவள் தனை 374
அன்னவன் உமது 490
அன்னனகவுந்தியும் 98
அன்னையார் 494
அனங்கன் நேர் 217
அனந்தகோடி 706
அனந்த சூரியப் 640
அனந்த ஞானி 27
அனந்தர்தன்னிலும் 646
அனபொழுதே 654
அனல் கடை 451
அனல் கடைந்த 444
அனலும்ஒருகணை 167
அனிகங்கள் 437
அனிகம் பதினோர் 743
அனிகம் மூன்று 228
அனிகம்வீரரையும் 534
அனித்தியம் இந்த 765

அனிலன் சுதனும் 800
அனுசாளுவன் 275
அனுசாளுவன்அயர்ந்து 119
அனுசாளுவனும் 119
அனுமன்அங்கதன் 826
அனுமன் உத்தரி 756
அனுமன்றனை 36
அனுமனித்துள 57
அனைத்தும் நீ 792
அனைத்தும்மால் 778
அனைத்துளோர்களும் 171
அனையார்நினைவு 397
அனைவோரும் 144
ஆக்கரித்துள 651
ஆகையால் திருமாலுக்கே 683
ஆகையால் பாக்யசாலி 101
ஆங்கவள் சினம்கொடு 370
ஆங்காரம் உள்ள 175
ஆங்கு அவன் 475
ஆச்சுதோ உன்றனால் 368
ஆசானும் 202
ஆசீர்வாதம் 628
ஆசை மீவெளி 580
ஆடகப்பசுந் 726
ஆடல்மன்னனையும் 467
ஆடல்வெம்பரி 528
ஆடிமீது உளுந்து 766
ஆடைஆபரணங்கள் 186
ஆடைஆபரணம்தரித்து 215
ஆடையாபரணம் 83
ஆணிமுத்து 45
ஆணைஆக்கினை 214
ஆதரித்து எமை 300
ஆதலால் அசுவமகம் 573
ஆதலால் அரசன் 221
ஆதலால் அவன் 176,216
ஆதலால் இவன் 732
ஆதலால் இவனிடத்து 336
ஆதலால் இனி 734
ஆதலால்இனிச் 600
ஆதலால்உலகுண்டவன் 736
ஆதலால்கரிநீ 500
ஆதலால் கிருபங்கள் 777
ஆதலால் தர்மன் 519
ஆதலால் மனம் 66
ஆதலை அற்றோன் 478
ஆதவன் அடைய 623
ஆதவன் கரம் 432
ஆதி தன் செயல் 28
ஆதிநாராயணா 88
ஆதிபன் வைசம் 381
ஆபரணமே பல 399
ஆம் இவன் லோக 349
ஆம்பலின் விகற்பங்கள் 806
ஆம்பலின் விகற்பங்களும் 771
ஆமடா எமனாசுரா 69
ஆமடா நீசொனது 201
ஆய்என இன்மொழி 416
ஆய்ந்துணர்ந்து 39
ஆய்வது 22
ஆயன் மைந்தன் 559
ஆயனை நேயனை 378
ஆயனை நோக்கி 502
ஆயிரத்து இரு 765
ஆயிரத்து இருநூறு 219
ஆயிரத்து இருபத்து 767
ஆயிரத்து எட்டு 228
ஆயிர நாமமும் 354
ஆயிரம் சதுர் 765
ஆயிரம் சிரனினான் 475

ஆயிரம் தினாயிரம்	654	இகல்கின்றனர்	607
ஆயிரம் பதி(ன்)	245	இகல்கொண்டவர்	606
ஆயிரம் பெயரான்	758	இகல்நம்பரியும்	531
ஆயிரம் வாயினாலும்	499	இகல்விசால	539
ஆயிழை உரைக்கக்	493	இகலால்	37
ஆயுதங்கள் எலாம்	64	இகலுறும்	482
ஆயுதம்கரம்	213	இகுளைஆன	389
ஆயுதம் பழுது	542	இங்கு இதற்கு	685
ஆயும் நுண்ணறிவாளர்	603	இங்கு இருந்து	764
ஆர்உனை நேர்தரு	691	இங்குஇவன்அயர்ந்து	673
ஆர்த்திடும்	225	இங்குஇவன் சினத்தால்	768
ஆர்த்து எதிர்	102	இங்குஇவன்றன்னை	112
ஆரடாமடபதி	351	இங்குஇவன்றனை	571
ஆரவாரித்து	429,678	இங்கு இவனுக்கு	692
ஆரவாரித்தே	570	இங்கு நடந்தவைகள்	176
ஆரவாரமுற்று	780	இங்குவந்த	150
ஆருமே செவி	473	இச்சணம் சிலையின்	368
ஆலடித் தவமுனி	821	இசைஎம் மன்னார்	689
ஆலம்போலக்	516	இசையும் முப்	476
ஆலித் தேவரும்	618	இடங்களின்	354
ஆவணத்திலே	721	இடதுகக்கத்தில்	622
ஆவிக்கரு மருந்தே	514	இடது கைகொடு	639
ஆவிபெற்று	501	இடம் வலங்களும்	337
ஆவியான	264	இடமும்வலமதொடு	666
ஆழம் நீளம்	759	இடரில் நொந்து	50
ஆள் உனக்கு	251	இடி அனந்தம்	423
ஆறதாய்ப்புவி	648	இடிஅனந்தமது	803
ஆறுகொண்டது	61	இடிஇடிஊடூடு	590
ஆறுகோல்	69	இடிகள் நடுங்கிடும்	653
ஆறுகோல் நுதலில்	252	இடிகளும் தவிடு	295
ஆறுபத்துடன்	70	இடிகோடி திரண்டு	465
ஆறுமாதம்	188	இடியின்மேல்	74
இக்கயம் மூழ்கிடில்	352	இடியும் கடல்	267
இகபரத்தினும்	776	இடியை நேர்	551
இகல்ஒருத்தரோடே	601	இடுக்கண் வந்துற்ற	494

இடும்பனைப் 39
இடைஉடைசோராது 589
இடைதுடை 590
இடையிலுள்ள 753
இடைவிடாது 288,681
இடைவிடாதுஏழு 498
இண்டமாசுஉன் 185
இணங்குநம்பரி 689
இத்தகவாகவே 86
இத்தகையால் 411
இத்தனைகோபம் 471
இத்தைக்கோர் 188
இதழ்மடித்து 484
இதற்கு என் செய்வது 632
இதற்கு நான் என 790
இதனில் இவன் 123
இதுஎன புதுமை 669
இதுசேதி 36
இதுதேவை 85
இதுவரைக்கும் 203,786
இதுவோசில 38
இந்த்ரசாலம் 334
இந்த்ரன்குபேரன் 196
இந்த எழில் முருகன் 723
இந்த ஊரினில் 222
இந்த நாழிகையில் 218
இந்தநாள்கணவன் 513
இந்தநாள் வரையும் 348
இந்ததேர்எமனாசுரன் 73
இந்த மட்டும் 598
இந்த மன்னவரை 796
இந்தமாநகர் 381
இந்த லக்கணம் 736
இந்த வகையே 401
இந்தவாறாக 685
இந்தவாறில் 524
இந்தவாறுஅயர்ந்தான் 472
இந்தவாறுஅரசன் 263
இந்தவாறுஅரசர் 831
இந்தவாறுஅவண் 222
இந்தவாறுஅனந்த 507
இந்தவாறுஆயன் 516
இந்தவாறு இகலியே 243
இந்தவாறுஇருநாழிகை 755
இந்தவாறுஇவண் 651,727
இந்தவாறுஇவர் 177
இந்தவாறு உள 735
இந்தவாறுஎந்த 214
இந்தவாறு என்னைக் 491
இந்தவாறுஒரு 164
இந்தவாறுகண்டு 593
இந்தவாறுபல 154
இந்தவாறுபற்பல 781
இந்தவாறுமன்னர் 753
இந்தவாறுமுகில் 52
இந்தவாறுமூ 538
இந்தவாறொடு 774
இந்தவிதஞ் 99
இந்தவிதத்தினில் 189
இந்தவிதம் 149,205
இந்தவிதம்கழறிடும் 416
இந்தவிதம் குந்தள 712
இந்தவிதம்நாற்பதுடன் 194
இந்தவிதமாய் 722
இந்தவிதமாய்த் 709
இந்தவிதமாய்ப் 708
இந்தவீரனை 599
இந்தவெம்பெரும் 44
இந்திரசூனு 692
இந்திரன்குமரன் 359,467

இந்திரன்சிவன் 391
இந்திரன்தன் 209
இந்திரன்தெருவலம் 46
இந்திரனைநினைக்கவும் 144
இந்துஇனன் 468
இந்நகர் தனில்மினார் 355
இந்நகர்மணி 373
இந்நகரத்து 631
இப்படிவரும் என்றே 450
இப்பாலகன் 703
இப்பிஞெண்டு 468
இப்பூநகரில் 394
இப்பொழுதுஇகழ்வது 360
இம்மையிற் 33
இம்மையும் 29
இயம்பும் வாசகம் 649
இயல்புறும்எமனா 130
இரசதக்கிரி 5
இரண்டுபிள்ளையுடன் 773
இரணபேரிகை 529
இரணியச்சுவர் 807
இரதங்கள் இடம் 606
இரத்தம்அந்நகரில் 343
இரதம்அழிதலும் 331
இரதம் அற்றன 65
இரதம்இவுளி 671
இரதம்எத்தனைகள் 234
இரதம்ஏறி 544
இரதம் ஓர் இலக்கம் 685
இரதம்நொறுநொறுங்கி 555
இரதம் பின் 281
இரதம் வலமை 672
இரதம் விட்டு 104,372
இரதமது சுழன்றும் 614
இரதமது நொறுங்க 553
இரதமது பிளந்த 553
இரதமீது 253
இரதமுடன் பரியும் 455
இரதமும் சிலை 448
இரதமும் சிலையும் 676
இரதமே சிதறி 537
இரதியும் மதனும் 373
இரவிஒத்து ஒளிரும் 587
இரவி சந்த்ரன் 322
இரவி சேய்சுதன் 321
இரவி புகுந்தும் 700
இரவி மதி அனல் 332
இரவி மைந்தன் 448
இரவில் எழுகடிகை 671
இரவுபகலும் 612
இரவும் பரிவு 714
இரவையும் பகலாக்கின 728
இருகடிகையினிற் 569
இருகண்கள் 277
இருகோல் 564
இருசதவாளி 678
இருசயந்தனம் 445
இருட்பிழம்பு 313
இருடி சீடனை 198
இருடிசொல்அரசு 687
இருந்த பத்திரகிரி 43
இருபத்தோராயிரம் 133
இருபதம் இருகை 497
இருபது கணைகளாலே 104
இருபது சகத்திரம் 79
இருபது பகழி 678
இருபுறம் கதிர்வாள் 68
இருபுறமும் வழி 405
இரும்சகத்திர 17
இருமனத்தோடு 637

இருமிவண் புண்ணிய 86,
இருமை அத்தினபுரிக்கு 86
இருமை இந்நகரி 53
இருமையின் அலக்கண் 640
இருவர் இரதமும் 330,666
இருவர்களும் 444
இருவர்களும் சீர் 608
இருவர் கைகளுமே 76
இருவர் சிரங்கள் 454
இருவர் சிரம் 556
இருவர் சொற்ற 744
இருவர் தேர்விட்டு 749
இருவர் பரி 557
இருவர்முறைமுறை 431
இருவர்மெய் 657
இருவர்வெஞ்சிலை 446
இருவருக்குரிய 389
இருவருஞ்சம 593
இருவரும் கரங்கள் 79
இருவரும் சமமாய் 178
இருவரும்சமமுடன் 679
இருவரும்சமர் 329
இருவரும்சமானமாக 616
இருவரும் சிலையில் 292
இருவரும்செயிர்க்காது 744
இருவரும்சொரிந்த 103
இருவரும்நின்று 454
இருவரும்வீழ்ந்தபின் 104
இருவாளி முடிஇடற 119
இருவிழி இருபதத்து 296
இருவோர்களும் 580
இருள்அம்புவி 461
இருளொழிந்து 52
இரைச்சலும் 107
இரைந்து 8
இரைந்துஅவரவர்க்கு 308
இல்லையெனில் 146
இலக்கம்நாலு 762
இலக்கம் பதி(ன்) 276
இலகும்படமீது 396
இலங்காபுரி 35
இவ்வாறாக 698
இவ்வாறுஅமனைத் 801
இவ்வாறு இவன் 529
இவ்வாறுஉரைசெய்தே 270
இவ்வாறுமால் 720
இவ்விதப்படைகள் 488
இவ்விதம்கோபியர் 92
இவ்விதம்தவம்யான் 767
இவ்விதம்தளங்கள் 346
இவ்விதம் மாயையாய் 348
இவ்விதம்வீமன் 82
இவ்விதம்வெகு 90
இவ்விதமாய்ச் 134
இவ்விதமாய்ப் 676
இவ்விதமேஇவண் 361
இவ்வுகத்தினிலே 785
இவள்அரும் 473
இவள்அலாது 387
இவள்தன்ஆசை 216
இவன்எலும்பு 446
இவன்கணைக்கு 301
இவன்வகுத்த 290
இவன்விட்டுள 274
இவன்விடுங்கணை 538
இவன்வெகுண்டு 679
இவனிடமின்றி 691
இவனுடன்நயந்திடாது 740
இவனைஇப்போது 114
இவனைப்போல் 594

இவனைவிஞ்ச 73
இவனை வெல்பவர் 600
இவனோஎதிர் 267
இவிதம்இருவரும் 612
இவுளிஅந்நகர் 688
இவுளி மாமகம் 525
இவையெலாம் 48
இளையமைந்தனும் 302
இறந்ததுபோக 488
இறுதிஎன்று 284
இறுதிமுறை 557
இறைஒருயுகம் 361
இறைஞ்சியவேந்தன் 796
இறைஞ்சும் மைந்தனை 734
இறையானவன் 393
இறையோர் பெருமை 800
இறைவாஇறைவர்க்கு 799
இன்பவில்லி 501
இன்றுஇழந்தனம் 74
இன்றுஎனக்கு 333
இன்றுஒழிந்தது 174
இன்றுஒழிந்திடும் 733
இன்றுதான்முதல் 600
இன்றேபொழுது 269
இன்னணம் 96
இன்னது இன்னது 138
இன்னம் உன்னால் 426
இன்னம் என்மனமே 629
இன்னம் கலக்கம் 514
இன்னம் தாமதமே 216
இன்னம் நின் 597
இன்னம் போர்செய் 182
இன்னம் மதி 520
இன்னம் நின்னது 759
இன்னவாறு இவன் 528
இன்னவாறு செயல் 255
இனஎருச்சர்க்கரை 416
இனமிழந்து 31
இனன்முன் 66
இனிஉயிர் விரும்பி 473
இனிஎனக்கு 290
இனிக்கலக்கம் 630
இனிப்பிதற்றிடில் 598
இனிமேல் 37
இனிமேல்உரசொடு 277
இனிய (தாம்) என் 392
இனியார் அடல் 276
இனியார் இவன் 586
ஈங்கு இவர் பஞ்சை 623
ஈசன் அன்ன 29
ஈசன் கைச் 23
ஈசன் நற்றிசை 315
ஈடுஇலைஎன்பது 825
ஈடு உனக்கு 227
ஈடு சாளுவன் 421
ஈடுறு சரஸ்வதி 298
ஈது அல்லது 395
ஈது அலது 716
ஈதுஅலால் 491,510
ஈதுஎனபெரும் 194
ஈதுஒருபாரமாக 491
ஈதுகண்ட இரு 259
ஈதுகண்டு 221,787
ஈதுகண்டுஇனிச்சுமா 369
ஈதுகண்டும் 45
ஈதுகுந்தள 689
ஈதுகேட்டு 90
ஈதுசேதி 186
ஈதுசேதியை 646
ஈதுமாமகம் 390

ஈதுவேள்வி 649
ஈதுவேள்விப்பரி 359
ஈயல்இம்மட்டோ 40
ஈயும் நாட்டம் 636
ஈர்அறுயோசனை 737
ஈர்ஐம்பதினாயிரம் 84
ஈரைந்து 3
ஈளை சா 420
ஈறில் இத்தவமே 263
ஈறில் எண் 241
ஈறில் விட்ட 261
ஈறுநம் உயிர்க்கு 223
உகம் இரண்டு 303
உகம் இரண்டும் 262
உகம் ஒரு மூன்றுமே 358
உகமாறுதலோ 272
உகிர்புதைந்திட 337
உங்களுக்குமானிடர்கள் 338
உச்சி மோந்து 226
உச்சியை மோந்து 489
உடல் அசைவு 457
உடல் அடங்க 240
உடலில் விழுங் 608
உடலினங்கள் 323
உடலே பல இடங்கள் 121
உடற்றும்ஈர்கணையும் 575
உடற்றும் வெங்கணை 665
உடைபட்டு 278
உண்மை என்று 638
உத்தரகுரு 35
உத்தியின் சலத்துள் 778
உத்துவாசரி 326,178,196
உத்துவாசரி நெருக்கி 419
உத்துவாசரி பிரத்திமன் 419
உத்துவாசரி 344
உத்துவாசாரிஅக்குரூரன் 438
உத்துவாசாரிஅக்ரூரன் 625
உதகமே பருகிடும் 44
உததி ஏழையும் 760
உததி கம்பளி 317
உததியின் பிரளயம் 779
உதய செங்கதிர்க்கு 18
உதவி சார்பு 78
உதறியே துடிதுடித்த 791
உதட்டிரன்றன்னை 824
உதும்பரத்துசனோடு 633
உதைசரங்கள் 285
உதைத்ததாள் 682
உதைத்துஒன்றினை 531
உதைந்த வச்சிரம் 619
உந்தி பூத்தவன் 790
உந்தி பூத்தவனை 24
உந்தியே அல்லி 499
உந்தை உன் 474
உபய கல்கியும் 752
உபய மின்னல் 527
உபய மேகம் 545
உபயர் நிகர் 431
உபய வெம்பரியும் 686
உபய வெம்புயல்கள் 241
உம்பர் உலகு 519
உம்பர்கள் தம்பிரான் 126
உம்பர் தம்பிரானும் 172
உம்பரும் கலங்கச் 112
உயர் ஏதியில் 562
உயர் நவமணி 643
உயர்யாகசாலை 140
உயிர் அனைத்தையும் 766
உயிர் எலாம் 222
உயிர்க்கு உயிரான 680

உயிர் பேணுக	269	உருவம் உபயம்	742
உயிரினுக்கு உயிர்	729	உருவமாயவன்	591
உரக புவிமிசை	330	உருவினம் எரிந்து	588
உரக வாளிதனில்	237	உருள் உயர நிவந்த	614
உரக வாளிதனை	253	உரைக்கும் முன்	736
உரசு மிகுந்து	455	உலக நாயகன்	366
உரசொடு உக்கிர	109	உலகம் மூன்றிலும்	761
உரத்தில் எண்கணை	659	உலகு அளந்தவன்	615
உரத்தும் மத்தகத்து	659	உலகு உயிர்	353
உரம் அடங்க	445	உலகு எங்கும்	152
உரம் அவயங்கள்	570	உலகு எலாம் சாட்சி	683
உரம் பிளந்து	427	உலகும் வானமும்	336
உரமது உருவின	666	உலகெலா	16
உரமதொடு குணம்	668	உலகெலாம் நடுங்க	113
உரமீது உருவக்கணை	561	உலவை எண்ணில	762
உரமும் களமும்	608	உலவை மிசை	671
உரமுன் கைகடித்து	532	உலவையில்	310
உரவர் சேனைகள்	318	உவர் ஆழியை	584
உரவன் உத்தரவால்	824	உள்ளரூபம்	546
உரவிய அக்குரூரன்	827	உளது கனகவரி	703
உரவோடு	585	உற்ற இடத்தில்	175
உரவோன் வசியன்	463	உற்ற ஓதிலை	724
உரிய எம்பி எனை	447	உற்றநல்துணை	90
உரிய தந்தை	392	உற்றவர் உரைத்தது	199
உரியதான எழுத்தி	524	உற்றவேளை கண்டு	171
உரு அருவாய்	132	உற்று இபமேல்	817
உருக்குமணி	815	உற்றுவில் வளைத்து	105
உருக்கினான்	599	உறுக்கியே	663
உருக்குவான்	27	உறுதியாய்ச்	203
உருத்து உடன்	300	உறைவீர்பொறையொடு	395
உரும் அனந்தம்	618	உன்பதத்து	171
உருமது எனவரு	122	உன்னமதிற்	818
உருமுடன் உருமு	105	உன்னி பற்றி	180
உருமுடித்து	77	உன்னியது என்	493
உருமும் கடலும்	152	உன்னிய பத்தன்	572

உன்னியன் பினில் 752
உன்னியின் 308
உன்னியின் கழுத்து 527
உன்னும் முன் உறும் 601
உன்னுயிர்க்கு 600
உன்னுயிர்க்கும் 28
உன்னைச் சீயமனன் 635
உன்னையான் 440
உனக்கு இது 615
உனதமாக வான் 765
உனது உயிர்க்கு 816
உனது கந்திருவர் 56
உனதுதாள் தொழுது 751
உனதுதாள் தொழும் 59
ஊறுகொண்ட 159
ஊறுசெய்குவதன்றி 320
ஊன்தசை 474
ஊன்புலவு 351
எக்காலையுமே 394
எக்கியன்றனை 191
எங்கும் மூடிய 620
எங்கும்மொய்த்தகணை 538
எட்டியே எதிர் 592
எட்டில் ஒன்று 300
எட்டு நான்முகன் 768
எட்டு மூன்றது 246
எண் இறந்த 789
எண்கிரி சிதற 118
எண்டி சாமுக 803
எண்ணரும் 24
எண்ணிரண்டுவெம்பகழி 664
எண்ணில்ஆயிரவர்கள் 375
எண்ணில் பலசீடர் 195
எண்ணிலாத 18
எண்ணிலாப் 9
எண்ணிலா மரம் 762
எண்ணிலா மாதர்களை 373
எண்ணெய் குன்றின் 214
எண்திசை புரக்கும் 676
எதிர் இல்வில் 438
எதிர் உறு படைஞர்கள் 456
எதிர்கொண்டே 750
எதிர் சேனையின் 582
எதிர்பிரத்திமன் 111
எதிர்வரும் கணைகள் 435
எதிரிதேர் இடம் 243
எது கோபம் 395
எதுவும் இங்கு 77
எந்த நாளில் 28
எந்தப்பரி 37
எந்தவாறு அவனுடன் 333
எந்தவாறும் எனக்கு 600
எந்த வேளை 171
எந்தன் ஆயுசு 283
எந்தன் தனத்துக்கு 719
எந்தன் வல்லமையும் 324
எந்தன் வில்லுக்கு 786
எந்தனது உயிருக்கு 125
எந்தனால் இயலாத 72
எந்தனால் இயலாது 228
எந்தனுக்கு 40,357
எந்தை ஆண்டவன் 733
எந்தை எவ்விதம் 220
எந்தை கை எவர் 67
எந்தை கையின் 718
எந்தைபால் நீவந்து 573
எந்தை மைந்தன் 757
எந்தையாம் 475
எந்தையே இதுவோ 59
எந்தையே இவண் 228

எந்தையே உன்விதி	221	எல்லோருமே	718
எந்தையே எனக்கதாக	170	எவ்விதத்திற்கும்	677
எந்தையே மகனே	511	எவ்விதம் மாதர்கள்	375
எந்நகர் இந்நகர்	355	எவர்க்கும் நீர்	303
எந்நிலத்து	25	எவர்க்கும் மகிழ்ச்சி	714
எப்பொருள்அனைத்தும்	79	எழில் மனித்தேர்	365
எமசூலநிகர்க்	585	எழுகடல் உளபுனல்	456
எமசூலம்	274	எழுதும் வாசகம்	650
எமது சதுரங்க	740	எழுநாள் இரவும்	459
எமர்க்கு நன்	726	எழுபத்திரு	35
எமனாதீர்த்த	97	எளியனைப்பொருட்டாக	769
எய்திய நதிக்குடம்	819	எற்றநூல் இட்டு	632
எய்தினோர்கள்	220	எறிந்ததோமரம்	618
எய்தினோன்	298	எறும்பி வல்லியம்	410
எய்துமுன் மந்த்ரி	723	எறும்பு	8
எயினன் இவ்விதம்	775	என்இனிஇவன்	575
எரிகள் இருவிழி	432	என்உயிர்அன்னவனே	738
எரிகள்புகை	556	என்உயிர் அனையாய்	627
எரிப்பன்	223	என் உயிர்க்கு உயிரே	470,492
எரிப்புறும்	95	என் உயிரே அனாய்	360
எரிபட்டது	275	என்கவடம்	818
எரிமழுப்படை	619	என்கைக்கணையால்	273
எரிமழைவெ	364	என்கொலோ	95
எரியில்இடு	123	என்சிலைநாணையோ	369
எரியில் இடுவிறகு	168	என்செய்து என்று	186
எரியினில்கொடி	338	என்செய்தோம்	26
எருமையை ஆட்சி	95	என்செய்வான்	187
எருவை நெற்றியில்	315	என்செய்வேன்	632
எருவையம்	345	என்செய்வோம்	379,334,339
எல்எழும்ப	132	என்சொல்வேன்	491
எல்லாம்அகடுள்	798	என்சோபனம்	720
எல்லாம்இரு	518	என்தந்தை இசைந்தே	393
எல்லியின் கரம்	786	என்தவம் செய்தது	392
எல்லை காண	66	என்பசிப்படி	631
எல்லையில் படுமளவு	311	என்பார் திகைப்பார்	519

என்பு மாலிகைக்கே 264
என்பொடிந்தவை 78
என்போல்வார் 208
என்மடிப்பசி 773
என்மனம் குளிர்தர 360
என்முன்னோன் 209
என்ற கன்னிகை 366
என்றகால் 34
என்றசொற் 213
என்றடி இறைஞ்சிய 90
என்ற தந்தையை 646
என்ற தருமாதிபனை 813
என்ற நண்பனை 791
என்ற போதில் 172
என்ற மாதினை 155
என்ற மைந்தனைக் 475
என்ற மொழிகேட்டு 442
என்ற மொழிதனைக் 203
என்றலும் அங்கவன் 98
என்றலும் அருச்சுனன் 358
என்றலும் இருகண் 440
என்றலும்எமையுடை 298
என்றலும் கருடன் 499
என்றலும் சயன 360
என்றலும் சுரத்தால் 790
என்றலும் தருமராசன் 79
என்றலும் தளத்திரள் 310
என்றலும் தாம்ரத்துசன் 625
என்றலும் மகிழ்ந்து 358
என்றலும் வீரன் 642
என்றலுமே 738
என்றலுமே நகை 817
என்றவனைப் 517
என்றனர் திகிரி 370
என்றனள் இழிந்தனள் 372
என்றனள் திகைத்து 366
என்றனன் அலறி 512
என்றியம்ப 30
என்றியம்பி 41
என்றிருவோரும் 99
என்று அருமுனி 376
என்று அவன் உற்றோர் 496
என்று இடியேறென 367
என்றுஇரே 92
என்று இவர் இயம்பிய 195
என்றுஇவைஅனைத்தும் 504
என்று இன்புஉரை 534
என்று இனிது 682
என்று உரவர் 415
என்று உருகுவன் 495
என்று உரைக்கவும் 652
என்று உரை செய் 498
என்று உரைத்தலும் 768
என்று உரைத்தனன் 749
என்று உரைத்திட 67,786
என்று உரைத்திடவே 221
என்று உரைத்து 57,156,264,546,770
என்று உரைத்துள 689
என்று உள் அழன்றான் 715
என்று உறுப்புக்கு 473
என்று உனித்து 749
என்று எதிர்த்து 628
என்று எழுத்து 786
என்று ஓதி 278
என்று ஓதியது 703
என்று கூறி அங்கோர் 764
என்று கூறும் இருடியைப் 764
என்று கூறியே 655
என்று கைக்கதைகள் 54
என்று கோபமொடு 236

என்று சத்தம் 220
என்று சொன்ன 648
என்று தன் தலை 629
என்றுதாள் பூட்டும் 497
என்றுதான் வரும் 45
என்று தேறுதல் 475
என்று நன் மதி 302
என்று நாடி 190
என்று நீர் 476
என்று பகர்ந்து 100
என்று பல் 735
என்று பல 720
என்று பற்பல 810
என்று புண்ணிய 352
என்று பெருந்தந்தை 515
என்றும் எந்நாளும் 355
என்றும் கருதார் 394
என்றும் நீர் சொல்கின்ற 175
என்று மந்திரி 392
என்று மன்னன் 191
என்று மன்னிடம் 635
என்று மாமுனி 265
என்று முக்கணை 257
என்று மைந்தன் 263
என்னு மொழிந்தே 520
என்று வஞ்சினம் 229
என்று வாரும் 733
என்று விண்ணவருக்கு 496
என்று வேதியனே 633
என்றோதிய 533
என்ன உன்னி 234,725
என்ன ஒற்றர்களைச் 480
என்ன ஓதிய 778
என்ன காரணம் 380,756
என்ன காரணம் இது 348
என்ன காரியம் 341
என்னடா சாளுவா 111
என்னடாசுதர்மத் 252
என்னடாதாம்பிரத்துசா 617
என்னடா நீ அறியும் 560
என்னடீ உன் 186
என்னதாய் மற்றோர் 791
என்ன நெஞ்சு 311
என்ன பாவம் 188
என்ன பேர் இது 65
என்ன மந்திரிமார் 183
என்ன மாமுனி 381
என்ன மாயை 333
என்னமால் உரைத்திட 305
என்ன முன்னி 808
என்ன வாழ்வு 807
என்னவாறு இவன் 63
என்னவாறும் 790
என்னவில் இது 509
என்ன வில்லி 173
என்னவே 28
என்னவே அமைச்சர் 488
என்னவே கிழ 633
என்னவே சயம் 73
என்ன வேதமுனி 47
என்னவே பயந்து 190
என்னவே மறையோன் 634
என்னவே விடை 733
என்னிடத்தினில் 70
என்னில் வந்து 622
என்னிவன் 39
என்னினநீ மதியாது 69
என்னும் மன்னவன் 307
என்னும் முன்னம் 688
என்னும் வாய்மையைக் 196

என்னுயிர்க்கு 291
என்னுயிராம் 142
என்னை ஈன்றவன் 768
என்னை உன் 296
என்னை ஒரு 208
என்னை நாடில் 601
என்னை நீ பிதுர்த்து 451
என்னை நீர் சுதன் 497
என்னைப்போல் 227,630
என்னையா 474
என்னையும்கடலனைய 60
என்னையும் நிறுத்தி 450
என்னையும் பல 780
என்னையேபொருந்தா 730
என அறைந்து 449
என இடைந்து 171
என இரண்டு பெயர் 258
என இவ்வாறு 231
என உரைத்த 286
என உரைத்தலும் 341
என உரைத்திட 108
என உரைத்து 101,652
என ஓத இராச 395
என ஓத மிகுத்த 585
எனக்கு அருள் செயும் 481
எனக்கு அவன் 304
எனக்கு இவன் 768
எனக்கு உரிய 207
எனக்கு நீர் ஒரு 647
என கடுகடுத்து 453
எனகாரணம் 582,273,395
எனச்சொலும் மாலை 683
எனடா சுரதா 277
எனடாதுர்க்குண 412
எனடாமுரடா 576
எனத் தருமன் 812
எனது உயிர்க்கு 498
எனது சுதன் 696
எனது சேய் 726
எனது தேவி 260
எனது வயம் 415
எனது வல்லாண்மை 616
எனது வெண்கயிலை 256
என நினைந்தனன் 787
எனப்புகழ்ந்து 126
என மனது 476
என மாயைவில் 273
என மொழிந்து சிரம் 450
எனமொழிபோதே 591
எனவரம் கொள் 389
எனவாறு உரை 268
எனவிழி சிவந்து 739
எனவிறல் முருகன் 79
எனவீரன் நினைப்பு 585
எனவும் இருவிழி 430
எனவும் இவன் 552
எனவும் ஒற்றர்கள் 57
எனவே எழுதிய 397
எனவே பதினாயிரம் 84
எனவே மனம் 276
எனவே விசயன் 460
எனை உடையாய் 813
எனை நீ எது செய்க 533
எனை மதிக்கில் 558
எனையன்றியும் 267
எனையும் அயர்வுற 122
எனையும் சிஷனையும் 631
ஏஇரண்டும் 259
ஏகநாயகன் 215
ஏகநேத்திரி 316

ஏகித் தனக்குக் 710
ஏகியது இடைவிடாது 378
ஏகிய நெறியிடை 347
ஏதடாஅட 235
ஏதடா எனது 504
ஏதடா கேட்பது 351
ஏதடா நீயோ 675
ஏதடீ குடிகேடு 317
ஏதி ாந்து 634
ஏதுஇவை கூறுவது 816
ஏது ஐயா எம்மிலே 759
ஏது ஐயா கிரிடீ 508
ஏது குற்றமும் 733
ஏது செய்குவது 725
ஏது செய்வது 638
ஏது நீ வெறுத்து 638
ஏதும் மாறு 724
ஏதையாம் இவளோ 184
ஏதொரு சொற்கும் 39
ஏந்தல் மணிச்சிவிகை 723
ஏந்தி மோந்து 472
ஏவல் கண்ட 735
ஏவுசா கோப 681
ஏழையானவனோடு 61
ஏறுதேர் சிலையும் 621
ஏறுதேரும் வரி 163
ஏறு வாகன 323
ஏன்ஐயா இவனிலே 230
ஏனை ஏழ்பத்திரண்டு 214
ஐந்திரண்டு 62
ஐந்து கோலை 659
ஐந்து நாள் 42
ஐந்து நாள் சென்ற 517
ஐந்து பாண 68
ஐந்து வாச்சியங்களும் 357
ஐயநின் மருமகன் 728
ஐயயாம் செயும் 725
ஐயர் கூட்டமும் 265
ஐயன்சொலவே 534
ஐயன்நீவின்மை 675
ஐயன்போர் 597
ஐயனே எனது 732
ஐயனே சினம் 651
ஐயனே வரம் 24
ஐயிரண்டுவெங்கோலினை 662
ஐவகை இயங்களும் 344
ஐவர்கள் நடுவனே 347
ஐவருக்கும் 810
ஐவரும் மால் 691
ஒக்கும் என்று 197
ஒக்கும் ஒக்கும் 317
ஒத்த கைவிரசு 244
ஒத்தசிந்தையராய் 643
ஒத்த போரினில் 73
ஒத்துக் கலந்து 693
ஒப்பிலன் பல் 688
ஒப்பிலாய் 28
ஒப்பிலாவிசய 494
ஒப்புவமை 212
ஒருக்கால் இருகால் 269
ஒருகடிகைதனில் 428
ஒருகணத்தில் உனது 175
ஒருகரத்தினில் 776
ஒருகை சிலை 554
ஒருகை சிலை ஒருகை 672
ஒருகை நாக 7
ஒருகையில் சிலையுடன் 301
ஒருகோலதும் 120
ஒருகோலின் 583
ஒருகோலும் வழக்க 586

ஒருசரம் கொடு 368
ஒருசெங்கை மீது 281
ஒருதினமாகினும் 408
ஒருநிறமாய் 135
ஒருபகல் முழுதும் 624
ஒருபது அறுசிலை 331
ஒருபேர் அனந்த 705
ஒருமுகுர்த்தம் 664
ஒருவயிற்றினும் 765
ஒருவர் ஒருவரை 330,661
ஒருவர்பின் ஒருவோர் 763
ஒருவரக் கணை 109
ஒருவருக்கு 80
ஒருவருக்கு ஐயைந்து 107
ஒருவருக்கொருவர் 75, 117
ஒருவருக்கொருவோர் 750
ஒருவருக்கொருவோர்கள் 69
ஒருவரும் எனதுடன் 301
ஒல்லைஇப்பொழுதுக்குள் 59
ஒல்லையினில் 425
ஒல்லையினில் உனது 428
ஒழிவுறும் பசியோடு 776
ஒள்ளிய சந்த்ர 81
ஒற்றர்கள் உரைத்தவை 375
ஒற்றொற்று 531
ஒன்றாகி மூன்றாகி 193
ஒன்றுக்குத் 488
ஒன்று நாம் 724
ஒன்றுபட்டிருந்தோம் 638
ஒன்று பத்து 322
ஒன்று பத்து நூறு 604
ஒன்று மாமுடி 547
ஒன்னார் திகிரித் 534
ஓசன் தன்னை 637
ஓடல் 12
ஓடி ஆலயத்துட் 727
ஓடினும் துரத்திக் 485
ஓதல் வேட்டல் 32
ஓதுசொல் கேட்டே 511
ஓதுமுன் 87
ஓதை மிஞ்சியதோர் 217
ஓமம் எக்கியங்கள் 378
ஓமஎக்கியங்களோடு 821
ஓம சாலையில் 312
ஓர் இலக்கத்து 762
ஓர் எழுபான் 483
ஓர் ஐந்து 424
ஓரிமைப்பினில் 656
ககப்பொன் 7
ககபதி அகல 299
ககமுனைகள் 329
ககனம் மூன்று 559
ககன முகடு 554
ககனவட்டமும் 320
ககுபம் மூடின 657
ககுப மலை 670
கங்க பத்திரம் 663
கங்கம் வெம் 469
கங்கை சாபத்தால் 512
கங்கை செய் எனும் 185
கங்கை தன் 511
கங்கையங் கரையில் 131
கசரத துரகத 457
கசரதம்பரி 758
கஞ்சமலரே 2
கட்டழகு எறித்திடக் 93
கட்டியே பிணைந்து 337
கட்டு கின்றுள 181
கடகடென்று 493
கடகடென 407

கடமதில் பல 775
கடல் அடைத்திட 320
கடல் அலறாயே 591
கடல் ஏழு 799
கடல் கிளர்ந்து 644
கடல் நிரம்பின 679
கடல் பிறங்கும் 767
கடல் பெருக்கெடுத் 311
கடலது ஏழ்பறைக் 526
கடலின் உட்புக 285
கடவுளர் அகன்ற 822
கடிகை இரண்டினில் 658
கடிய வனமுலை 319
கடின வடவையை 167
கடுக இக்கணம் 341
கடுகடுத்துக் 408
கடுக வெஞ்சிலை 244
கடுகி இரதம் 612
கடுகி எண்ணிரண்டு 650
கடும் சினம் கொண்டு 425
கடுவமர் 24
கடுவிசைக்ககக் 19
கடைசியர் 10
கண் இடம் கொள்ளாத 521
கண் இருமணி 503
கண் எதிர் தோற்றிய 367
கண்கமலத்து 496
கண்கருணைத் 99
கண்களால் உபய 685
கண்குளிர்ந்திடும் 767
கண்சிவந்து 548
கண்டகண்ட 559
கண்டகண்டமாய் 654
கண்டகண்டமொடு 233,537
கண்டதுண்டங்கள் 103
கண்டதுர்க்குணக் 726
கண்டபேர்கள் கலங்கித் 636
கண்டம் பல துண்டம் 273
கண்டருண்டும் 52
கண்டலும் வீமன் 80
கண்டனன் யான் 817
கண்டு அனசொல் 719
கண்டு ஆசை 720
கண்டு கன்னன் 328
கண்டு சிந்தை 761
கண்டு தாம்பிரன் 528
கண்ட மன்னவன் 727
கண்டு வலஞ் செய்து 99
கண்ணல் செய்கரி 224
கண்ணன் நகர் 150
கண்ணன் நன்று 89
கண்ணன் மால் 507
கண்ணில் கண்டு 730
கண்ணினில் 486
கண்ணை மூடிக் 763
கண்ணீர்த் தளரச் 701
கண்புனல் 494
கணத்தில் அவ்விடம் 340
கணிதம் இன்று 560
கணை அறைந்த 286
கணைகள்கணை 666
கணைசிறகு அந்திட 454
கணைமாரி 581
கணையினொடு 661
கதியினாலும் 526
கதிர் உதயம் 404
கதிர் தேர் என 271
கதையினில் 496
கந்தரக்குறியதாய் 260
கந்தரத்தினிடை 239

கந்து கச்சிரம்	820	கரிகரியோடே	590
கந்துகம் இரண்டு	379	கரிகளும் கதறவும்	390
கந்துகம் விருதுடன்	359	கரிகளோடு	377
சும்மி மொய்த்து	64	கரித்துசன்	525
கமலம்	15	கரிய செல் அரித்த	349
கமலமும் கமடமும்	366	கரிய மகபதி	331
கமலை	3	கரியவன் குமரன்	448
கமழ்வுறும்	772	கரியவன் மகன்	436
கயமதில்	13	கரிவீறிடல்	85
கயல் எனப்பாய்வர்	588	கருகினாள் முகம்	788
கயிலை நேர்	335	கருடத் துவசம்	801
கர ஆழிமன்னரில்	396	கருட யூகமுறை	534
கரங்களை	310	கருடனோ அனந்தம்	487
கரச்சராசனம்	179	கருணையங்கடலாம்	82
கரசரவிர்சது	674	கருணையங்கடலே	640
கரடம் கடகயங்கள்	748	கருதரிய பெரும்	783
கரத்தில் ஓர்	106	கருதார் வினைக்கும்	695
கரத்தில் வேல்	785	கருதியே மனதில்	52
கரத்தின் வாள்	729	கருது கந்திருவர்	56
கரத்துடன் கரம்	771	கருதும் எண்	24
கரந்து எங்கு	491	கருப்ப நிலையின்	693
கரந்து பதகர்	701	கருப்பைதான்	488
கரந்து பாளையத்தை	102	கருப்பை விருப்பு	719
கரம் அம்புயம்	746	கருமுகிற்	10
கரம் அறுந்த	322	கருவித்திரள்	85
கரம் இழந்தவர்	435	கருவியாவையும்	620
கரம் கண்	8	கரைகாணாச்	412
கரம்கண்நாபி	381	கரைகாணாப்	755
கரமிரண்டு	254	கரையினில் ஏறியே	352
கரமிருந்த	235	கல்கரட்டுக்குக்கல்	94
கரமுடன் கரமது	593	கல்வி நிலையும்	707
கரமும் ஏழு	169	கல்வியும்கொடைகளும்	388
கரவிரைசும்சீர்	610	கலங்கமாயனும்	757
கரவில் வதைத்தோம்	706	கலங்கி நொந்து	599
கரிஒலி மணிஒலி	312	கலங்கி மெய்	103

கலினம் செறிது 746
கவட நாடக 688
கவட நாடகனே 637
கவிமரம் சினை 448
கவிழ்ந்து பல 423
கழுத்து மார்பு 319
கழுமுள் ஒன்றினை 618
களவன் இவனொடும் 669
களவன் விட்டிடும் 657
கற்பக தருவும் 823
கற்பம் மாஅது 160
கறுவி அந்தரமதாய் 542
கறைஎனஅறுந்த 437
கடிறகக்கி 276
கறைகள் தனை 422
கறைவாய் 562
கன்றினுக்கு 498
கன்று கலங்கக் 515
கன்ன பாகம் 191
கன்ன மீதில் 757
கன்னல் ஒரு 426
கன்னன் மெய்யனும் 781
கன்னன் மைந்தன் 156
கன்னன்மைந்தனுக்கும் 572
கன்னன் மைந்தனைக் 86
கன்னி,கோ, புவி 648
கன்னி நன் சுதைக் 727
கன்னி நீ அவன் 371
கனகமும் மணியுமாகக் 794
கனக மேருவைக் 806
கனத்த பூதரக் 339
கன நவரத்தினக் 306,376
கனம் ததும்பும் 20
கன மது ஆகு 631
கன மலரணை 361
கனமழை சொரி 382
கனமேவுகிரித் 581
கனலா அருணக் 698
கனவாகனன் 36
கனவில் பலபொருள் 756
கனிமலர் பாளைகள் 345
காசை அம்புரமும் 497
காட்டிய தெய்வக் 719
காட்டு அரண் 312
காடு செடியும் 195
காணும் முன்னம் 786
காதல் மருகோன் 516
காதலுற்றனம் 809
காதுவன் பழிகாரன் 472
காந்தையான 180
காந்தை வீரமும் 364
காயினும் 182
காயும்வெஞ்சினத்தொடு 178
கார்இருட் கடலும் 313
கார்ஒலி, இடிஒலி 307
கார்மண்டலமே 37
கார்முகத்து 248
காருததி 2
காரெனக் 23
காரை ஒத்தன 803
கால் இரண்டையும் 339
கால்களோடி 76
கால்தடுமாறிட 349
காலகாலம் 225
காலகாலனார் 618
காலதூதர் 219
காலம் மூன்று 341
காலம் மூன்றும் 29
காலமே யான் 721
காலன் சூலம் நேர் 662

காலன் சூலன்	54	கீர வாரியை	11
காலன்றனை	35	குக்கில் தாளம்	345
காலனோ	571	குட்டி நாய் குறைத்துப்	575
காலனோ திரிசூலனோ	60	குடத்தின்	22
காலில் சிற்சிலர்	319	குடர்களை	484
காலும் மூன்று எழு	192	குடுக்கை	8
காலைக்கடன்	722	குடைகளோடு	377
காலையே வரச்	218	குண்டலமும்	211
காவதமது	211	குணத்தொனிப்	368
காவியம் புராணம்	487	குணம் உடையோன்	430
காவெலாம்	15	குதலைமொழி	557
காளிமீளி	731	குந்தம் ஒன்று	618
கான்கமழ்	92	குந்தளாதிபதி	832
கானகம் உதவிய	346	குந்திதேவகி	493
கானகம் கடந்து	355	குந்திநன் இருளில்	497
கானகம் பொய்கை	793	குந்திபிடத்து	520
கிடுகிடு கிடெனத்	573	குந்தியும் தாங்கி	499
கிடுகிடென்று	206	கும்பம் என	400
கிடுகிடென	668	கும்ப மத்தகம்	335
கிரணஅம்பு	283	குமரி அமரி	385
கிரணக்கணை	274	குவரைக் குருவைத்	128
கிரணன் ஆதவன்	338	குரவன் புலிந்தன்	713
கிரிகிரி என்றே	610	குருசபதம்	443
கிரிகிளர்ந்து	446	குருதி பொங்கிய	65
கிரிடி பற்குண	241	குருதி குணக்குன்று	105
கிரிடியைச்	477	குருவுடனே	204
கிருடி உன்	371	குருளை உறுப்பின்	699
கிருதவர்மன்	238	குல்லை வில்வமும்	265
கிருபையங்	262	குலத்துளோர்	32
கிள்ளினாற்	40	குலிசம் ஒன்றினை	619
கிள்ளைதனை	720	குவித்தமன்னவனுடன்	304
கிள்ளை பூவையும்	197	குளத்திடு	13
கிள்ளையும்	345	குற்றம் பார்த்திடில்	30
கிறுகிறு கிறு என	677	குறிப்பறிந்திட	303
கின்னரம் தம்பூர்	505	குறிப்பினோடு	46

குறும்புள் 181
கூடினோர்களும் 196
கூர்பளப்பளென 251
கூற எதிர் சென்று 721
கூறுகூறுபடவே 537
கூறும் என்று 629
கூறம் முன் வெய்து 490
கூறுவன் மொழிக்கு 302
கெந்தமாதன 206
கேசவன் அகன்ற 605
கேசவன் தானும் 113
கேசவன் வந்தது 97
கேசவன் றன்னையும் 304
கேடது வரும் 481
கேதனம் புதைந்த 433
கை அயர்ந்து 170,544
கைகள் எத்தனை 63
கைகள் வாய் 485
கைச்சராசன் 663
கைப்பிடித்தமால் 771
கையில் இப்புரவி 55
கையில் உவந்து 519
கையில் சிலை 275
கையினால் இயலாத 67
கையொடு கையும் 117
கைவகுத்தகணை 325
கொடி தேர்பரி 274
கொடியின் வாழ் 318
கொடியின் 7
கொடியினம் 486
கொடுமரம் 558
கொடைகள் கற்று 388
கொண்டலாம் 19
கொந்து கமழ் 709
கொல்லாது ஒழிந்து 706
கொல்லுகென்றொரு 618
கொலுமணிக்கூடம் 467
கொழுநனை 11
கொற்ற நீலன் 420
கொற்றமாம் 645
கொற்றவன் சயிந்தன் 792
கோஎனும் சத்தம் 439
கோடிகோடி 9,578
கோடிசூரியப் 350
கோடிவல் இடிகள் 112
கோடைஇடி 430
கோடைவல்இடி 673
கோதில் எனை 518
கோரமீசைக் 219
கோலமான 153
கோலில 10
கோவலர்பால் 94
கோள் அஞ்சிய 270
சக்கரந்தனையே 107
சக்கரபாணிகடாட்ச 691
சக்கர வியூகமாகத் 101
சக்களத்தி 389
சக்கிரிக் குலங்கள் 486
சக்கிரி சரண்கண் 495
சக்ரவாளகிரியில் 830
சகடஅத்திரம் 484
சகடங்கள் 485
சகடங்கள் அனந்தம் 487
சகத்திரநாமனே 302
சகத்திரலோசன 770
சகமும்விணும் 653
சகரர்மாவினைச் 758
சகலசற்குண 808
சகல தேவருமே 440
சகல பாக்கியச் 227

சகலரும் மகிழ்ந்த 792
சகலவித கலையும் 630
சகல வீதிகளுமே 830
சங்கம் விந்தமோடு 71
சங்கமாகவும் 67
சங்கம்மீதில் 242
சங்கராசிவ 264
சங்கவாரிசதுரங்க 541
சங்கு சக்கரம் 639
சஞ்சயன்றன்னைத் 811
சஞ்சலக் 34
சஞ்சலத்திரை 628
சஞ்சலத்திரையில் 450
சடச்சடென்ற 224
சடசடென்று 595
சடமிலா 32
சடிலத்துடன் 521
சடுதியில்கமண்டலத்தின் 822
சண்டமாருத 49
சண்டமாருதத்து 380
சண்டமாருதமும் 60
சண்டன் உலவு 382
சண்டிகைக்கு 181
சண்டிகையே 201
சத்தமாமுனி 820
சத்தரெட்டியதாம் 40
சத்தரெட்டிலோ 619
சத்த லோகமும் 227
சத்த வாரிதி 17
சத்தவாரியும் 804
சத்தியபாமை 818
சத்தியாம் கதை 387
சத்யகுணவெற்றி 210
சத்யவாக்கினைத் 218
சத்தியவாசகன் 649
சதசகஸ்திரம் 236
சததசச்சரம் 111
சதுசதகோலும் 114
சதுர்ப்பரித்தலை 178
சதுவகைச்சேனையின் 306
சந்த்ரகாசன் 749
சந்த்ரகாசன் தரணிபர் 808
சந்த்ரகாசன் முதல் 805
சந்த்ரகாசன் வீர 752
சந்த்ரகாசன்றனை 809
சந்த்ரகாசனுடன் 714
சந்த்ரகுலதிலகன் 212
சந்த்ரகுலம் 412
சந்த்ரசேகர 726
சந்த்ரிகை ஆதபம் 345
சந்தசுவாகா 192
சந்ததம் இடைவிடாமல் 823
சந்ததமும் 603
சந்ததிபோம் 441
சந்தவேதிகை 139
சந்தனங்கள் 15
சந்தனம்பனீர் 46
சந்திரகாசன் 738
சந்நியாசிகள் 315
சபலரத்தின 645
சமத்தமான 218
சமம்ஒத்து 272
சமயம் ஈது 357
சமரவெம்பறை 57
சமரில் இறந்திடும் 442
சமருக்கு இளையான் 530
சமஸ்தமும் 495
சமஸ்தமும் ஈன்றருள் 352
சயிந்தவன் சிந்து 793
சரகூடமது 560

சரகூடமும்	275	சறுகி மற்றொரு	109
சரணம் பணிந்து	713	சாகரங்கள்	377
சரத்தினால்	222,242	சாகரத்தின்	224
சரதம் ஆகிய	43	சாகரத்தினில்	223
சரபஞ்சரம்	274	சாகரப் பிரளயத்	355
சரம் இது எது	169	சாடுபோரினில்	180
சரம் ஐந்து	281	சாடு வீர	233
சரம் சரங்களைப்	663	சாதுபற்குணன்	598
சரம் நுழைந்து	449	சாந்த நீர்க்கயல்	224
சரமதனைச்	445	சாபமானதை	160
சரமதில்தளம்	664	சாமம் ஒன்று	244
சரமது ஐந்து	545	சாய்ந்து வீழ்ந்தவன்	664
சரமது ஒன்று	543	சாயலில் அநேக	399
சரமாரிகணக்கு	583	சார்ந்து அறன்	41
சரமும்சரமும்	606	சாரணர்கள்	194,402
சரமொன்று	102	சாளுவன் இவன்	114
சரவேகம்	270	சாற்றல் கேட்டு	301
சராசரர்	93	சானுவி சாபத்தாலே	826
சராசனமால்	91	சிக்கமட்	8
சருகில் ஊடிய	342	சிக்குமோபரி	44
சருகு இலை	297	சிகரகம்பமது	285
சல்லிய கரணி	502	சிகரகுண்டலி	317
சலசைமார்பகன்	755	சிகர கோபுரம்	645
சலதி அனைய	672	சிகரம் ஏந்திய	769
சலதித்தளங்கள்	708	சிகரம் மத்தகம்	540
சலப்பிரளயப்	306	சிகரம் முண்டம்	326
சலமடக்கி	13	சிங்கஒண்கொடித்	737
சலமதுற்று	76	சிங்கத்துவசம்	801
சலராசிபடிந்து	459	சிஞ்சினி ஓதையால்	452
சவரட்சணை	267	சிட்டித்தார்கொல்	806
சவுண்டிலீகர்	198	சிட்டித்திடு	799
சவுமியர் சாபாலி	814	சித்தம்மாயன்	226
சவுரிய தயிரிய	385	சித்திரகூடம்	383
சற்று எனக்கு	775	சித்திரவதை செயும்	365
சற்றும் அங்கு	342	சித்ரமாதவன்	387

சிந்தனை பெருகியே 347
சிந்து ஒரு கணையால் 567
சிந்து வேறு எடுத்து 566
சிந்தைக்கு இசைந்த 518
சிந்தைதனில் 818
சிந்தை நொந்து 125
சிந்தையில் எண்ணி 675
சிப்பர்க்கு இனிது 802
சிம்புளாய் இரு 336
சிமிலியன் 558
சிரசுபாதம் 536
சிரசு பாதமிடை 236
சிரத்தின் மேலும் 780
சிரத்தினும் 337
சிரம்குளம் 102
சிரம்மணிமகுட்த்தோடு 492
சிரமாமலையே 577
சிரமீதில் அழுத்தும் 581
சிரமே பலகுவிந்த 120
சிலஅம்பு அகிலம் 607
சிலஅம்பு களங்கள் 279
சில அம்பு சிரங்கள் 279
சிலஅம்பு துசங்கள் 279
சில கணை அந்தரம் 454
சிலகோல்திசைஎங்கும் 459
சிலகோல்துவசங்கள் 458
சிலது சிறகரிந்த 556
சிலைவணக்கும் 547
சிலரை வாலினில் 319
சிலவமைந்தரில் 774
சில வாளி சிரங்கள் 458
சிலைகொடிசேர் 428
சிலைசயந்தனமும் 105
சிலைதேர்பரிபொற் 586
சிலைபதாகை 234,290
சிலை வணக்கிய 67
சிவகணங்களுடன் 265
சிவசங்கரசம்பு 607
சிவன் அம்பிகை 266
சிவன் நான்முகன் 266
சிவை செயும் தவமது 352
சிற்றிடைப் 11
சிறகு அடிகொண்டு 484
சிறியன் என்று 541
சிறுவயதினில் 94
சிறுவனை மகிழ்ந்து 796
சிறைப்படுமவரும் 826
சின்ன பின்ன 287
சின்னபின்னமதாக 72
சினந்து அறுபதினால் 575
சினந்து சாத்தகி 658
சினம் மிகுந்து 559,678
சினமே செயமும் 533
சினைப்படா 376
சீக்கிரம் உதவாது 638
சீதரன் அன்னை 499
சீதரன் கொலைக் 744
சீதரன் சிரசைக் 262
சீதரன் சிலதன் 244
சீதரன் சொல் 594
சீதரன் மாயை 616
சீர் உலாவும் 523
சீர் செய்த செல்வத் 514
சீர்ததும்பும் 20
சீராமர் 35
சீராரும்வில்லி 517
சீராலே 1
சீரிலார் 21
சீருலாவிய 15
சீருலாவு 764

சீரேறு	3	சூதனே ரதம்	420
சீறிமன்னவனே	181	சூரன் ஆவதம்	421
சீறிமீறி	62	சூரனாம் எமனா	81
சீறிமீறிஎதிர்	323	சூரிமாலினி	731
சீறி மீறிய	335	சூழஒருயோசனை	195
சீறிமீறிவருவில்	243	சூழமுன்று	351
சீறிவீசுகழல்	50	செக்கச் சிவந்த	692
சீறு குந்தம்	618	செகதலம் அடங்க	436
சுக்கிரீபனில்	213	செகம் நடுங்கின	376
சுசியினில்	362	செகம்முப்புவனம்	278
சுசியைத் கூளமுரம்	184	செங்கண் பால்	427
சுடர்பொங்கும் வாளி	280	செங்கதிர் மதிநகர்	383
சுடரின விகற்பம்	466	செங்கர விரல்குமிழ்	365
சுடரினை மலர்	350	செங்களமதனில்	466
சுடரும் திசைமயங்கி	748	செங்கனித்	9
சுத்தவீரனோ	175	செங்கை தங்கும்	501
சுதகரன்றிரள்	64	செங்கை வில்	558
சுதர்மன்அப்பொழுது	239	செப்புமாமுலை	388
சுதர்மனானவன்	245	செப்புமொழி	201
சுந்தரமதாய்	721	செம்மல் தேவியும்	804
சுரதத்துசன்	267	செய்த அச் சைகை	795
சுரதன் அம்பு	284	செய்த தீவினை	731
சுரதன் கரவில்லால்	277	செய்தவம் பழுதுறும்	353
சுரதன் கீரிடம்	283	செய்த வேளை	54
சுரதன்கை வாளி	280	செய்திலாவினை	729
சுரதன் வெங்கணை	293	செய்யதான	501
சுரதனும்	299	செய்யாள் உறையும்	799
சுரபி ஓதையும்	12	செயதுந்துபி	266
சுரருடன் நாகர்	506	செயம்படைத்துள	593
சுலொபன்விடுகணை	661	செயமுடன்	86
சுழல் இலக்கு	242	செயரணமுரசம்	483
சுழல் கறங்கு	527	செயிர்நகையொடும்	385
சுழல் நேர் சுழலச்	583	செருமுகத்திடை	740
சூடிய அரனுடன்	299	செருவில் வெரிந்	417
சூதன் வந்து	69	செல்ல வேணும்	183

செவையாக	584	சேனைவாரிதிகள்	81
செற்று இறந்தவர்	323	சேனைவாரியும்	686
செறுத்து வெஞ்சிலை	659	சைவசாரி	254
சென்ற இபம்	137	சொர்க்கம் மத்திய	567
சென்றது பத்து நாளும்	686	சொரிந்த அம்பு	620
சென்ற மேதகன்	315	சொரிந்தகோல்களைத்	655
சென்றவன்	298	சொல்லத்தகும்	38
சென்று அரவு	482	சொல்லிய குமரன்	126
சென்று அருச்சுனன்	189	சொல்லி வெங்கணை	68
சென்று எதிர்	481	சொல்லும் அக்கணமே	500
சேடன் மாமுடிகள்	49	சொல்வல்லாண்மை	242
சேடன் வாய்	512	சொற்றவாய்மொழி	726
சேடனும்உபசர்ரங்கள்	489	சொன்மொழி அமுது	371
சேடுற்று ஒளி	802	சொன்னசொல்	452
சேண் அடைத்த	247	சொன்னம் நான்கு	780
சேணுலாவிய	19	சொன்னமணிக்	815
சேனை நாலுவகை	329	சொன்னவாறு	223
சேமங்கொடு	802	சோதிசுகம்	745
சேயர்பால்	303	சோபதாபமும்	78
சேயன் என்ன	603	சோர்ந்து எழுந்தே	348
சேயும் தளமும்	712	சோர்ந்து மாருதியும்	104
சேயும் நீரும்	174	சோர்ந்து வீழ்ந்துள	789
சேயைவிட்டு எனைத்	632	சோனையாய்ப்	488
சேர்ந்தபின் அஞ்சலான்	479	தக்க கால்வழி	785
சேர்ந்து இருபரியும்	623	தக்கபசும்பொன்	719
சேல்என மறிஎனத்	379	தக்கவர்மிக்கதாய்	354
சேனாதிபதி	212	தக்கவான்புவி	652
சேனை ஆறுபது	230	தக்கவெஞ்சினத்	744
சேனைகள்முழுதும்	103	தகரையொத்தெதிர்	76
சேனைகண்டு	788	தகுமல் குண்டோதரன்	297
சேனை மாள	417	தகுர்தகிந்திமி	527
சேனையம்பெருங்	434	தகைந்தபேர்கள்	185
சேனையாதிபர்	319	தகைப்பொருள்கள்	200
சேனையாதிபனாம்	487	தங்கவெங்கவி	45
சேனையைப்பொருவது	157	தங்கள்தங்கள்	806

தங்கள் நன்னினைவு 76
தங்கைபொற்பாம் 494
தங்கைவாகுவின் 75
தசரதன் மகன் 386
தட்டியேதடவியுங் 255
தடத்தினில் 353
தடமெலாம் 14
தடவரையும் 609
தடையரக்கொடு 351
தடையரப்பனிரண்டு 658
தண்டை கிண்கிணி 527
தண்டைவீர 47
தத்தியே பாய்ந்திட 348
தத்தியேவரை. 60
தத்தியேவலவன் 123
தத்திவாது பிடித்தல் 74
தத்துதேர்கொடி 549
தத்துதேர்முடுக்கி 566
தத்தும்மாவின் 550
தத்துவார் அவயவம் 592
ததிபால் நவநீதம் 704
தந்தைக்கு தாய்க்கும் 469
தந்தைசொல்கொடையைத் 635
தந்தைசொல் மறுத்துப் 115
தந்தைதாய் 216
தந்தைதாய்மொழி 258
தந்தைநொந்து 428,490
தந்தைமாதுலன் 734
தந்தைமூர்ச்சை 601
தந்தையாகிய 725
தந்தையான சலகன் 535
தந்தையைச் 475
தந்தையைமண் 598
தப்பிலாது 283
தம்பனமாக 353
தயிர்கள் வந்தவை 96
தயிரியத்தின் 289
தயிரியத்தைவிடல் 260
தயிரியப்ரபல 829
தயிரியபுயபல 309
தயிரியம் 38
தயிரியவீரத் 468
தரணிகாவலன் 735
தரணிதந்தமகன் 446
தரதரங்களொடும் 161
தரந்தரம் அறிந்து 769
தரம்ஒவ்வாத 833
தரித்தஅவ் 311
தரித்தஇடத்து 150
தரித்தவிடமே 193
தருசநாண் 655
தருசுகலீலையும் 374
தரும் திறை 574
தருமதேவதை 340,732,689
தருமபுரிஎன்னுமோர் 199
தருமபூபதி 139,375,526
தருமமாநகரோ 633
தருமமோஅடைந்த 128
தருமராசதயாபதி 805
தருமன்தேவியும் 819
தருமன்நல்தருமம் 682
தருமன்மால் 137
தருமன்வேள்விச் 784
தருமனும்மாலுமாகத் 824
தருமனென்சு 4
தருமனேபின்யாக 138
தருமனைஅனுப்பிக் 493
தருமனைத்துதிசெய்து 189
தருமனொடுதிரௌபதையும் 141
தருவையோ 480

தரைமுழுதுஓர்குடை	692
தலங்கள்	5
தலத்துஇயல்	309
தலைகவிழ்ந்து	173
தலைகிளம்ப	286
தலையில்வந்தது	240
தலையினிலே	652
தளநாயகன	84
தளபதி சாத்தகி	91
தளர்வுற்றவன்	278
தவத்தினில்	792
தவத்தினிற்	315
தவள	16
தருகாணன்	543
தன்சயந்தனத்தின்	676
தன்பராக்கிரமத்	116
தன்பலம்அறியாது	605
தன்முன்சேய்சுதன்	334
தன்னகர் அடைந்து	129
தன்ன(து)அருகில்	809
தன்னுடன்தொடர்ந்தவர்	727
தன்னுடன்பலகாரங்கள்	823
தன்னுயிர்க்கு அதிகமாக	834
தன்னுயிர்போல்	145
தன்னைஅன்றித்	749
தன்னைப்பேண்அறம்	635
தன்னையேநிகர்	784
தனக்கு நாசமது	725
தனக்குப்பொன்	644
தனஞ்சயன் அசுவ	476
தனஞ்சயன் தளத்	737
தனஞ்சயன் தனக்கு	305
தனஞ்சயன்முதல்	763
தனஞ்சயனமுதலாய்ச்	466
தனஞ்சயன் விசயன்	677
தனஞ்சயன்விடுத்த	604
தனஞ்சயன்விடும்கணை	369
தனஞ்சயன்விந்தில்	675
தனஞ்சயன்றன்	363
தனஞ்சயனுடன்	308
தனஞ்சயாமுகுந்தன்	777
தனத்தினால்	318
தனதன்	25
தனதுஉயிரும்	410
தனதுதோர்துகள்	550
தனது வீரமும்	785
தனயன் உதிக்கக்	694
தனித்த குழந்தை	700
தனித்தனிஇவ்வாறாக	824
தனித்தனியாய்	417
தனித்துஒருத்தரும்	730
தனிநான்முயல்	393
தனிமையாய் இத்தலத்து	764
தனிமையாய்த்	350
தனிவில் நாணில்	544
தனுஅறுத்து	421
தனுஒருசரத்தில்	567
தனுவளைத்து	163
தனுவளைத்தெய்தான்	620
தனுவிசாலக	350
தனுவின்மீது	234
தனுவேதமூர்த்தி	146
தனையன் தனக்கு	707
தனையனும்அயனும்	456
தாக்குவர் உறுக்கி	587
தாகமாக	288
தாங்கியகமண்டல	349
தாசிஅறியாள்	695
தாடடியாகத்	602
தாதிமார்கள்	217

தாதைதாதை 232
தாதைதாதைதன் 788
தாதைதாய் 33
தாதைமாமனும் 580
தாதையோடு 510
தாதை விழுந்திட 425
தாதை விற் 250
தாம்பிரத்துசன்தாங்குவது 639
தாமன்உத்தரவொடு 92
தாமன் மைத்துனன் 249
தாமனுக்கும் 751
தாமனும் ஈண்டுறு 818
தாமனும் உடன்வரும் 97
தாயும் எந்தையும் 732
தாரமோகமும் 216
தாராதரமதில் 271
தாருமூலத் 762
தாலம்துணிதிரண்ட 745
தாவிஏறி 287
தாவுதிண் சயந்தனன் 432
தாவுதேர்இடம் 549
தாவுதேரினைத் 177
தாவுவிசையால் 399
தாளில் விழுந்தவரைத் 93
தாளிர் வீழ்ந்து 789
தானசெனமேசெயன் 210
தானை இங்கு 310
தானைகளுடன் 794
தானைநூறு 751
தானையாதிபருக்குத் 225
திக்கதிர்ந்தன 57
திக்கயங்கள் 376
திக்கயம் பாலரும் 367
திக்கு அதிர்ந்திடச் 619
திக்கு அதிரத் 441
திக்கு எலாம் 184,588
திக்கு எலாம் செயித்தீர் 508
திக்குக் கிரியும் 85
திக்கும் அண்ட 241
திக்கும் முச்சகம் 333
திக்கும் முப்புவனங்களும் 741
திக்கு மீவெளியும் 788
திகமும் மூவெழு 645
திகிரிராஜா 388
திகை அந்தரமும் 461
திகைஎலாம் வென்ற 471
திகைத்து நெடு 429
திகைப்பன் 44
திகைமூடின 271,576
திங்கள்வெண்குடைக் 675
திசை அலைய 444
திசை எங்கணும் 267,277,396
திசைகள் மெச்சிடச் 179
திசைமுகன் எனவே 107
திட்டி கழித்துப் 701
திட்டெனக் குதித்திட்ட 224
திடம் இது 366
திடர் அமிழ்ந்தன 737
திண்கடற் 307
திண்மைப்பெருங் 521
திண்மையாம் 33
திப்பமாகினும் 62
திமிரவெம்படலம் 335
திரண்டு உருண்டு 76
திரிதராட்டிர தீரன் 812
திரிபதகை 406
திரிபுராதிகள் 350
திரிபுவனம் அடங்க 611
திருக்கு தீத்தவழ்ந்திடும் 314
திருநடம் பயிலும் 497

திருமனவன் 609
திரைப்பிரளயம் 356
திரைப்பெருக்கு 378
திரையும் தழல் 747
திவ்விதம் வன்மை 678
திறல்சேர் மகன் 85
திறல்வெம்பரி 270
திறலோடு 272
தின்கவென்று 96
தீக்கொழுந்து 219
தீபதூப 595
தீமை ஒன்று 28
தீயசண்டாளன் 496
தீயின் மாய்ந்தவன் 189
தீர்க்கமான 53
தீர்க்கலோசனி 316
தீர்த்த அருள் 350
தீரமுற்ற சுதர்மன் 248
தீரர் அவ்விடம் 357
தீரவீரவிசய 246
தீரவீரனைத் 596
தீவலம் கோலி 474
துக்கம் ஏன் 471
துங்கம் மேவு 832
துடிகள் துந்துமிகள் 434
துடிதவண்டை 390
துணைவர் நூறு 787
துத்திப்பைத் 485
துப்பதான நீலத்துசன் 176
துப்புவிலாசம் 384
துர்க்குணத்தின் 170
துர்க்குணம் உடையாய் 452
துர்க்குணன் வெகு 487
துர்ச்சனீ 186
துரகதங்கள் 620
துரகதம் ஐந்தார் 609
துரந்தரத் தாம்பரத் 622
துரிதமாய் அரைக் 657
துரிதமாய் நகுலத்து 529
துரிதமாய் விட 65
துருத்தியும் 96
துருபதன் அருள் 144
துய்யனே 32
துய்யனேபயப்படாமல் 481
துவரையின் 130
துன்னி எந்தன் 202
தூ சிபால்நகுலத்து 526
தூ சிமாப்பின் 758
தூ தரும் நீயும் 625
தூதரை நோக்கி 674
தூர்த்தனன் 105
தெய்வக்கன்னிகை 351
தெய்வ சங்கு 299
தெய்வ சம்மதி 478
தெய்வ நாயகன் 766
தெய்வம் செய்துள 757
தெய்வராசன் 51
தெரிசித்தோர் 220
தெரிந்தநிதி 406
தெரிந்திடும் 25
தெரியும் என்று 759
தெரிவுறு மதன 378
தெரிவை நால்வகைச் 363
தெருஎலாம் விளங்கச் 506
தெருப்பரப்பினும் 728
தெளிந்தபின் 757
தெளியாது 563
தெளியும் 33
தென்புலம் தெய்வம் 199
தென்றல் அம்புலி 361

தென்னவன் குமரி 503
தென்னிலங்கையோ 43
தேசராசர்கள் 689
தேட்டமாகிய 649
தேடிநீர்க்கடன் 633
தேயம்யாவு 11
தேயமெண் 25
தேர் அழியத் 423
தேர் இரண்டும் 294
தேர்இழந்து 163
தேர்உகை 104
தேர்ஒழிந்தபின் 620
தேர்கள் நூறு 539
தேர்சிலை இழந்து 674
தேர்பதாகை 418
தேர்பொடிந்திட 68
தேர்விடாதபடி 256
தேர், வில் நீறிடத் 656
தேர்வில் பொடி 274,275
தேரில் ஏறுமுனம் 162
தேரின் குலம் 745
தேரின் மேல் 159
தேரினில் ஏறி 111
தேருடன் கொடி 365
தேரும் வாரம் 579
தேரும் வில்பொடி 660
தேரும் வில்லும் 240
தேரைக் கடுகக் 798
தேரை முப்ர 170
தேவ தத்தத்து 342
தேவர்கள் 297
தேவர் பூமழை 265
தேவரும் மூவர் 480
தேறு மாமதி 30
தேனில் ஈஎனச் 318
தைத்தகோல் 656
தையல் இப்பெருந் 776
தையல் பாகன் 264
தொடர் அறாத 343
தொடர்பு ஒழியாவிதம் 375
தொடர்பொடும் 739
தொடுகணை அதனால் 673
தொடைஒரு 114
தொல்வினைப் 31
தோகைவாகன் 299
தோசி நீசி 776
தோல்துளை 311
நக்கிஆர்ப்பொடு 176
நகர்க்கு அரசு 305
நகரில் சேர்ந்து 724
நகுமலர்ச் சலச 830
நகுலன் எஞ்சிலான் 528
நகைத்தவெள் எயிற்று 365
நகைபுரிந்து 447
நங்கையே நரனோ 184
நஞ்சு உலவு 401
நஞ்சு எரி சிலரைத் 483
நஞ்சேனையையே 532
நடந்த மால்பின் 761
நடந்தனர் பன்னிரு 356
நடனசங்கீதத் 81
நடனவெம்பரி 644
நடுங்கல் என் 655
நடுநடுங்கி 174
நடுநடுங்கி உடல் 753
நடுநடுங்கி நரன் 810
நடுநடுங்கின 737
நடுநடுநடுங்க 739
நடுவன் அங்கு 648
நடைநடன 193

நடைநாடக 802
நடையில் ஓமம் 779
நண்ணியே 374
நண்பகலாயது 346
நண்பநீ செயித்தாலும் 593
நண்பன் அளித்த 714
நதம நாம்கவிந்து 318
நதிநீந்த 429
நந்தலுற்றிடும் 769
நந்தன் வின்மையின் 599
நந்தனைக் கதையால் 787
நந்தனோ அவன் 219
நம்பியர் நால்வர் 129
நம்மில் அதிகம் 723
நமக்கு அபசெய 440
நமது சேனைகள் 66
நமது பத்தர் 295
நயந்து கேட்டதற்கு 480
நரம்புக் கருவிக்கு 742
நரர் இனங்களும் 314
நரர்கள் அலறிட 167
நரர் மதித்துடல் 592
நரலையாம் 44
நரன்பல மனரும் 587
நரைத்தலை நடுக்கிட 349
நல்நவரத்தின 374
நல்ல வாய்மை 790
நல்விசயன் றன்னை 520
நலதடாசுதர்ம 257
நலது அவன் 386
நலது நலது உன் 713
நலது வந்ததுவும் 238
நலம் உலாவும் 645
நவமணிக் கவி 190
நவமணிக்குடை 751
நவிலமோடு 233
நள்ளலார்க்கு 182
நளினநாபியன் 90
நற்குணத்தொடு 220
நறைவிரி அல்லி 468
நன்மதாநதிநீர் 153
நன்முனிமுன் 690
நன்றிதென்று 30
நன்றுஆங்கு அவன் 530
நன்று அது என்று 188
நன்று அவன்றனை 731
நன்று இது செய்வேன் 474
நன்று இயக்குரோதம் 766
நன்று என்று அவன் 269
நன்று எ ன உபசரித்து 825
நன்று என உரைக்க 106
நன்று எனத் தலை 314
நன்று என மாயவன் 691
நன்று என மூவரும் 304
நன்று என வாசகம் 359
நன்று ஒரு புரவிக்காக 80
நன்றுகம் எடுக்கச் 500
நன்று காவற் 144
நன்றுதான் என 734
நன்று நம்படை 58
நன்று நற்றவத் 767
நன்று நன்று 717
நன்றுநன்று அட 246
நன்றுநன்று எமன் 646
நன்று நன்றென 59
நன்றுநீ இயம்பிடின் 302
நன்றுநீ மதியாது 124
நன்று நீர் வந்த 82
நன்று புரோகித 137
நன்று மாயனை 49

நன்று மானவன் 338
நன்று முனிதனை 133
நன்று வா என 352
நன்று வாய் வசனம் 624
நன்றெனவிடகீ 115
நன்னகர்க் 20
நன்னகர்க்கு 214
நன்னாட்டில் 15
நன்னாமம் 515
நன்னிமித்த 200
நன்னெறி மேவிய 78
நனிகொள் பத்ரகிரி 833
நனிதாரகை 698
நனிவிசயப்பரி 783
நாகக்கோடு 6
நாகமும்நாகம் 116
நாட்குநாள் 201,213
நாண்ஆம்அரனுள் 394
நாணிருக்க 263
நாதன் இவ்விதம் 780
நாதனே நரநாரண 190
நாந்தகம் 344
நாம்பின்னிடிலே 268
நார்க்குஉரிய 409
நாரம் ஓர் இலை 766
நால்இரண்டு 547
நால்இரண்டுதினமே 832
நால்வகைச் சேனை 490
நால்வரையும் 520
நாலுகாற்கு 45
நாலுகோல்உரம் 178
நாலுகோலது 158
நாலுதிக்கும் 44
நாலுவகைத் தளத்து 404
நாலுவகைப்பொன் 518
நான்அடைந்தது 770
நான்அரன் 738
நான்உடனே 302
நான்முகன்கணை 370
நானம்கிராதர் 719
நானினைத் 87
நானும் இருக்க 653
நானும்என்கணையில் 292
நநிகரிலாநவரத்தினக் 779
நிசிதங்களோடு 282
நிசிப்போது 403
நிரந்தரம்சது 650
நிரந்தரம் நடந்திட 312
நிரவியே கலந்து 316
நிருதர் கோன் 327
நிருதி மூலையை 381
நிருதியின் மூலையின் 357
நிரைநிரையாக 571
நில்லடாஎமனாசுரா 773
நில்லடிஎன 369
நில்லும்நில்லும் 536
நிலடாஎன 563
நிலம்கலங்கிடத் 364
நிலம்களபச் 466
நிலமும் உரகமும் 169
நிலை அழிந்து 165
நிலைஇயாது 694
நிழல் தளிர்க்கை 12
நிற்பார் மயலாய் 717
நிறுத்தி இங்கு 287
நிறைந்தபொன் 770
நிறையில் 16
நின்காதலி 693
நின்சரத்தில் 172
நின்சார்பொடு 533

நின்செருக்கு 367
நின்திறல் இயம்பிடில் 303
நின்நகர்க்கு 305
நின்பலம்தனையும் 452
நின்மகன் என்ற 452
நின்மகன்புவி 187
நின்மனத்து 354
நின்றபேர்களை 636
நின்றவரைப்பினர் 653
நின்றவன் றன்னைத் 826
நின்றவீரனை 197
நின்றனக்கு எளிது 541
நின்றனைக் கண்டு 716
நின்றிருப்பதத்து 87
நின்னிடத்தும் 263
நின்னில் வல்லமை 743
நின்னை அன்றி 215
நின்னை ஒத்த 743
நின்னை நம்பி 600
நின்னையான் வேண்டி 125
நினக்கும் வீரிய 767
நினது அகந்தனில் 689
நினது சார்பு 169
நினது தேவதை 67
நினது பேர் சொல் 233
நினதுவல்லமை 61
நினது வ்ல்பலனும் 257
நினைக்குமுன் 438
நீஅல குகன் 366
நீ இருக்க எனை 293
நீ எங்கும் நிறைந்தாய் 277
நீ எம்மாத்திரம் 602
நீஎன்னோடடலில் 579
நீங்கரும் தவத்தினாய் 371
நீங்கள் ஒன்பது 769
நீங்கி மூவரும் 733
நீதாம் பரம் 799
நீதிமன்னனை 810
நீதியாதிபதியே 549
நீமதித்துப் 175
நீயாவது 38
நீயிருக்க 40
நீயிவர்கள் தமைப் 145
நீயும் அறிந்திட 443
நீயொரு பொருட்டோ 115
நீயோ மதிகுலன் 270
நீர்பெய் இடம் 148
நீர்மலம் சிதறிய 355
நீரருத்தி ஏகும் 47
நீரும் தேவியும் 812
நீலகேது 793
நீலத்துசனையும் 268
நீலவேல்விழி 156
நீலன் சாளுவனே 810
நீலன் வெஞ்சிலையும் 327
நீலனும் 655
நீளியஇபம்தேர் 823
நீறதான 578
நீறுகல் செங்கல் 134
நுந்தம் வேள்வியில் 340
நூறு மகஞ்செய 17
நூறு வெம்பகழி 288
நெஞ்சம்கருதும் 515
நெஞ்சழன்று 716
நெடியவரை 123
நெய்தல் ஆம்பலின் 196
நெரிநெரிந்து 320,655
நெருங்கி நாரத 772
நெருங்கி நீடிய 776
நெற்றி தைத்துருவ 158

நெறுநெறன்று 159,362
நேர்எனக்கு 249
நேர்சமத்தன் 251
நேயக்கொடி 801
நேரம் தாமத 215
நேருமோ 27
நோக்கலும் பிடித்த 116
நோக்கு கண் 91
பக்கமாய் இரதம் 794
பக்கியின்விகற்பங்களும் 771
பகர்ந்தபேர்களைப் 809
பகலில்வெஞ்சமர் 339
பகலினில் 308
பகழிமொய்த்தன 108
பகழியைப் பகழிகள் 108
பகழி வலியொடு 667
பகற்பொழுதிலே 193
பகிரதன் அன்ன 492
பகைக்கு உயிர் 432
பங்கம் உற்று 198
பங்கயங்கள் 154
பங்கயப் 29
பங்குனன் எனும் 467
பச்சை மேடை 807
பச்சையுரி 147
பசிந்து 9
பசிய தோரண 19
பசும்பொற் சிலையோ 696
பஞ்சக் கருவி 712
பஞ்ச கருவி 373
பஞ்சமாகிய 88
பஞ்சராத்திரியாய் 83
பஞ்சரித்து 778
பஞ்சரித்து உபசரிப்பான 371
பஞ்சவர் தன்னில் 481
பஞ்சவர் தூதன் 683
பஞ்சவாக்கியமும் 805
பஞ்சவாக்கியங்கள் 130,828
பஞ்சவாச்சியம் 814
பஞ்சவாசமும் 7
பஞ்சவாத்திய 149
பஞ்சாயுதன் 741
பஞ்சுவெட்டுவது 453
பட்டபாடு போதும் 174
பட்டம் நெற்றியினில் 138
பட்டு வர்க்கம் 519
படங்களை விரித்தே 483
படமதன் கண் 392
படலமுகில் 122
படி,திசை,விண் 661
படிநெளிந்த 829
படிபிளந்தன 802
படைகள் பரிக்கு 742
பண்டிதம் செய்து 596
பண்டிருபத்து 89
பண்டுயான்செய்த 512
பண்பு உருத்திரர் 821
பணிந்த மன்னனை 780
பணிந்தவன் எழுந்து 640
பணிந்த வீரியன் 811
பணிந்து எழுந்து 826
பணியும் அவ்விரு 809
பத்தக்ருபாகரா 88
பத்திரகி என்று 42
பத்திரகிரியான் 827
பத்திரகிரியும் 482
பத்து நூறு 68
பத்திரகிரி ஆதிபன் 427
பத்ரகிரியான் 521
பதக்கு முக்குறுணி 486

பதகன் அமைச்சன் 700
பதகன் இங்கு 731
பதசாரியதாய 798
பதசாரியன் 561
பதறியே கொடும் 341
பதியடைந்து 391
பதின் மடங்காய்ப் 404
பதினாறு தொளைத்து 565
பதினொரு 40
பதைத்திடும் கனருசி 782
பதைத்துமெய்மறந்து 334
பதைபதைக்குது 775
பந்தர் இடுவார் 398
பப்பரவாகன் வாறும் 4
பப்பரவாகனன் 405
பப்பரவாகனன் பண் 598
பப்பரவாகனன்றன்னையே 652
பயந்து நல் 352
பயப்படாது இரு 292
பயில் தால் சிறுதேர் 697
பரசது ஒன்றினை 619
பரத நாட்டியம் 226
பரதவன் மறுத்தான் 187
பரந்த சேனையை 593
பரப்பிய சரங்கள் 103
பரப்புகும்பமது 819
பரமனுடன் 146
பரராசர்கள் 396
பரவி நின்றுள 805
பரவிய கிரீடியைப் 349
பரவிய பேரை 93
பரவியே புகழ்ந்து 94
பரவுசேனை 218
பரவுசோரி 68
பரவை குழம்பாகின 609
பரவையும் சுவற 243
பராசரன் 39
பராசரேச 752
பரிசுயர்ந்து 51
பரிஇரண்டினையும் 641
பரிஇரண்டும் 762
பரிஇரண்டையும் 735
பரிக்காலில் 207
பரிக்குளப்படிக்கு 782
பரிகரி 372
பரிகரிதேர்பல 100
பரிகொண்டு 84
பரிசகேது 688,827
பரிசன்விடுகணை 667
பரிசன்வீரவர்மன் 760
பரிசன்வெம்பரி 527
பரிசன்றன்னைப் 811
பரிசனத்துசன் 644
பரிசனொடு 665
பரிதனைக்கரத்தால் 615
பரிதனைப் பரிதனில் 334
பரிதான்இருபத்துடன் 152
பரிதிஎனத்தேர்மீதில் 441
பரிதிஒத்து 587
பரிதிக்கு 36
பரிதிபடநிசி 333
பரிதிபற்றி 601
பரிதி பொடிபொடி 332
பரிதிபோல்இரைந்து 619
பரிதி மேவிய 18
பரிதியூகமாய்ப் 529
பரிதிதேர் கரிபாதாதிகள் 273
பரிநடந்திடு 390
பரி நெற்றியில் 270,531
பரிப் பிறகு 305

பரி பதாகை 237
பரிபதாகை சிலை 239
பரிபாகு 561
பரிபாகு இரதத் 582
பரிபாகு பிரிந்தது 464
பரிபிடித்த கள்வன் 231
பரிபிடித்து 155,229
பரிமேல் தவளம் 463
பரிமோந்த 134
பரியின்அடிச் 208
பரியினைப் 321
பரிவுஉறும் 438
பருத்தியில் படர்ந்த 483
பருந்தினம் 485
பல் அடிக்கடி 155
பல்எழில் கண்ட 360
பல்லக்கங்கள் 620
பல்லியம் திரைமுகில் 819
பல்லெலாம் 172
பலதேசஇராசருடன் 800
பலபலஉபசாரங்கள் 684
பலன்தரும் 9
பலித்திடும் எனினும் 478
பவம் உறுவது 412
பவனதிசையது 754
பற்கடித்தனன் 651
பற்கடித்து 114
பற்கடித்து ஆர்த்து 116
பற்கடித்துச் 363
பற்குணன் 5,365
பற்குணன் பார்த்து 380
பற்பம் படவரும் 278
பற்பமாகின 71
பற்பராகமாம் 189
பற்பல் ஆறுஎனப் 654
பற்பலஉபாயமது 194
பற்பல சோகம் 519
பற்பல தருவினம் 345
பற்பலதீபம் 470
பற்பலபூண் 148
பற்பலவேந்தர் 827
பற்றலன் சொரிந்த 113
பற்றிலசிஞ்சு 353
பற்றியுமே அவர்கள் 373
பற்றும் அற்ற 765
பறையின் ஓசை 215
பன்னகக் கிரணமணி 830
பன்னக சயன 621
பன்னகசயனன் 683
பன்னகபதி 489
பன்னகவயிரி 478
பன்னக வைரிமால் 297
பன்னக வைரியான 484
பன்னிரண்டுகணை 238
பன்னிரண்டுவெம்பகழி 656
பன்னிரு கரத்து 298
பனிமதிக்கதிர் 803
பாகன் வேகமொடு 328
பாகுஅறுந்து 160,237
பாகுதாம்புலம் 771
பாகுதேர்இவுளி 289
பாகுதேர்சிலை 548
பாங்கன் வரல்நன்று 712
பாத்திரத்தில் 203
பாதியே வலப்பாகம் 632
பாதைஎங்கணும் 46
பாதகம், கொலை 313
பாதகன் இவனோ 106
பாதகன்முகம் 219
பாதகா உனை 324

பாதகா காருகா 468
பாதகாணிக்கை 189
பாதசாரியில் 761
பாதம் நித்தம் 190
பாதமீதில் 226
பாதலத்து 476
பாய்தருதுணிவொடு 310
பாய்ந்தபின் பரி 758
பாய்ந்து சிலை 426
பாய்ந்து வாய் இரு 336
பாய்ந்துள அதிர்ச்சி 116
பாய்புரவி 522
பாயிரப்படியே 4
பார்த்ததே அரற்றி 470
பார்த்தன் வலிவும் 742
பார்த்தன் வெஞ்சினம் 363
பாரதச்சமர் 602
பாரதவீரிய 690
பாரம் உறும் 522
பாரமும் தேரும் 676
பாரமேரென 60
பாரமோஇவனை 258
பாரவாரத்து 784
பாரிய சிறகினாலும் 485
பாரின் நாத 751
பாரும் இங்கு 294
பாலன் அன்று 438
பாவி அம்பு 594
பிஞ்சு பிஞ்சு 484
பிடிபட்டதுவோ 532
பிண்டப்ரதானம் 205
பித்திகை எலாம் 400
பிந்தித்தேறினள் 788
பிரசவெம்பகழி 486
பிரத்திமன் அநுருத்திரன் 365
பிரமசரம் 554
பிரமன் முன் 290
பிரயாசமுடன் 1 37
பிறங்கல் நேர்க்கதை 337
பின்இராமர் 785
பின் துவாரகனாம் 113
பின்பிரத்திமன் தளங்கள் 178
பின்பு மாதுலன் 734
பின்னவன் ஒருதேர் 569
பின்னிருவோரையும் 99
பின்னுடனே 207
பின்னும் அதில் 423
பின்னும் எண்ணில் 245
பின்னும் வேறு 289
புகழ்குரு அருளால் 439
புட்பதி பரித்திடப் 306
புடவிஎங்கும் 689
புண்ணியப் புருஷ 470
புத்திஒன்று 513
புத்திக் கதிப்பான் 711
புத்திகெட்டனை 183
புத்திரர் அடங்கத் 497
புத்திரர் இன்றி 796
புத்திரன் செய் 409
புயல் மகிழ்ந்து 447
புயலினில் துளித் 804
புரவலா உன் 631
புரவலா உனை 338
புரவி ஒன்று 133
புரவிகள் அகன்ற 822
புரவிகள் வேதமாய் 350
புரவி போனது 53
புரிசை நீங்கிப் 226
புரிபொறைக்கு 824
புல்லி வில்லியைப் 750

புலர்ந்த காலையில் 730
புவிந்தன்தனைக் 724
புலிந்தன் மூர்ச்சை 724
புலியினுக்கிணை 110
புவனம் மூன்றும் 604
புள்ளகலாத 14
புற்குணம் விட்டு 481
புறையற்ற 801
புன்னகையுற்ற 817
புனிதம் உறும் 704
பூகநற் 18
பூசல்கண் காட்டவும் 371
பூசற்றொழிலோடு 36
பூத்தநாள் ஒரு 216
பூதரம் திசைகள் 621
பூதலங்களமிசை 232
பூதலத்திலும் 336
பூதலை யூகம் 348
பூபர் யா(வ)ரும் 808
பூமகன் கொல் 405
பூமாதும் 1
பூமியில் அதிகப் 127
பூரணக் கிருபையாய் 88
பூரிகை தாளம் 505
பூரிசயத்திரதன் 743
பூவணையினில் 187
பூனையினும் 410
பெட்டையதாகவே 346
பெண்ணுடன் 308
பெரியன் நீ 80
பெருகிய நொச்சியுள் 309
பெருகு மாநகர் 222
பெருந்தளத்தொனி 379
பெற்றபிதா 442
பெற்றபெற்ற 187
பேதைசொல் 635
பேரறிவு அற்ற 468
பேரிகை முருடு 505
பேருயிர்ப்புறும் 217
பொய்சொலான் 27
பொருந்தவந்திடில் 665
பொருந்தும் நின் 574
பொருப்பினம் 23
பொருவரும் 101
பொருவில் உயர் 694
பொருளில் தயிரிய 409
பொருவிலாத் 592
பொழிந்த வாளிகள் 328
பொற்குடம் நிறைத்து 466
பொற்புயர் பற்ப 130
பொன்கலிங்கம் 753
பொன்தட்டில் 405
பொன்பயில் 38
பொன்பிறங்கி 772
பொன்மலர், இரசதம் 372
பொன்னகர்க்கு 23
பொன்னும் 20
போசனம் மாருதி 89
போதனை செய்து 358
போர்வை பீதாம்பரம் 95
போரில் அங்கு 433
போற்றி நண்பன் 759
மக்கள் தம்மையும் 751
மக்கள் பின்வர 775
மக்கள்போல் 300
மக்கள் வாஞ்சையின் 301
மக்களாம் உபயர் 685
மக்கி நடுங்கினர் 654
மகம் தனக்கு 347
மகரகுண்டல 262,264,229

மகரகுண்டலம் 255,469,571
மகரகுண்டலம்கிரீடம் 479
மகர குண்டல வயிர 414
மகரத்துசம் 801
மகரதோரணம் 46
மகவாள் அருள் 397
மகவான் மகன் 462
மகவேள்வி 395
மகள் மகன் நினைத்த 499
மகள்மனம்மகிழ் 501
மகன் அடிபணிந்து 498
மகன் ஆசையை 397
மகன் உணர்ச்சியது 110
மகனதான 157
மகனினும்சகஸ்ர 627
மகனும் மன்னனும் 179
மகனே அமுத 701
மகாவாரிதிபோல் 479
மகிபதி அரண் 506
மகிமா திரம் 576
மகிமையுற்று 389
மகிழ்இருப்பை 6
மகிழ்மாருதியும் 800
மகுட பங்கம் 62,244
மகுட மணிமுடி 668
மகுட மந்திரிகள் 435
மகுட முடியொண் 437
மகுடர் மந்திரிகள் 391
மங்கலம் 21
மங்கு தாதையைக் 789
மச்சம் கமடம் 266
மச்சினனைத் 97
மஞ்சின் ஏழ் 597
மஞ்சு உறும் 383
மடங்களோடு 595
மடிமிசை தரித்தபின் 297
மண் அதிர்ந்திட 376
மண் இரங்க 223
மண்டலாதிபர் 689
மண்டு வீரிய 61
மண்ணும் பெண்ணையும் 188
மண்ணையும் 307
மண்தலம் நடுங்க 112
மணிநகர் அதிபதி 456
மணிநகர் அதிபன் 492,826
மணிநகர்ப்பதியிலே 833
மணிமா நகராதிபன் 531,577
மணிநகரான் 406
மணிநகரின் 553
மத்தகங்கள் 546
மத்தகத்திலும் 528
மத்தகத்தும் 664
மத்தகம் தொளைய 244
மத்தகம் புயம் 159
மத்தியானத்தில் 504
மத்திரை புதல்வர் 795
மதகயத்திரளிலே 542
மதத்து உனை 483
மதம் உரைத்த 603
மதலை நீதிறல் 78
மதன மண்டலம் 356,375
மதனும் இரதியுமே 722
மதி அமைச்சர் 551
மதி அழிந்து 545
மதி அழிந்து அயர்ந்து 179
மதிஆசுகம் 462
மதிஇரண்டுஇவ்விதமாக 753
மதிஇலாத மகிபா 552
மதிஉயர்ந்துள 16
மதிசெப்பியபடி 269

மதித்தவில் வீரன் 677
மதிப்புற விருதையும் 362
மதிமந்த்ரிகளொடு 266
மதிமந்திரிவளர் 393
மதிமயங்கிய 261
மதிமயங்கு 255
மதிமேடம் 140
மதியலேன் நினக்கும் 489
மதியாது இத்தரை 738
மதியொடு பார்த்தனும் 98
மதுரசார 523
மதுரம் திகழ்வாய் 798
மந்த்ரி தன்சுதன் 732
மந்த்ரிமார் 526
மந்த்ரிமார்களும் 736
மந்தரக்கிரி 58
மந்திரமாம் 513
மந்திரி அட்ட 478
மந்திரிதந்திரி 300
மந்திரிநகுலத் 623
மந்திரிமார் எண்பேரும் 490
மந்திரிமாாஎண்பேரை 489
மந்திரிமாாகள் 643
மயங்கும் வேளை 182
மயில் அருள் 299
மரவம் 14
மரித்தவர் எல்லாம் 503
மருக்கொழுந்து 807
மருகன் ஏதுசெய் 729
மருகன் விடுகணை 425
மருகனாகநீர் 647
மருகனுக்கு அரசு 730
மருகனே மகள் 388
மருங்குல் மதன் 721
மருத்துவன் 195
மருத்துவெங்கணை 369
மருத்தையும் 23
மரமகன்றனை 729
மரமங்கள் 282
மருமத்தொருபது 276
மருமம் அதில் 660
மருமம் எண் 241
மரும மீதில் 549
மருமமீது 125
மருமலர்க்குவளை 827
மருவலார்கள் 173
மருவியே உடன்வரும் 93
மருவு அலங் 154
மருவு தயிரிய 670
மருவுதோ(ல்) 829
மருவும் மலரும் 692
மல்குகின்றது 771
மலர்மகள் நாயகன் 755
மலரிற்கமழ் 84
மலையே பலகவந்தம் 120
மலைவரினும் 440
மழைமாரி 278
மற்று இவன் 827
மற்றும் இங்கு 502
மற்றும் ஓர் 328
மற்றும் ஓர் இரதம் 106
மற்றும் ஓர் சிலை 656
மற்றும் முகாதிபர் 304
மற்றும்வில் 293
மற்றுள்ள சேனை 521
மற்றுள்ள வீரியரும் 518
மற்றுள சிறுவர் 796
மற்றுள சேனையும் 307
மற்றுளதும் 135
மற்றுள பேர்கள் 684

மற்றுள மிருக 379
மற்றுளோர்களும் 42,162
மற்றெங்கள் 514
மதியெனச் 22
மறுகிநிலமிசை 331
மறுகிமற்றொரு 64
மறுகி மறு 553
மறுசாபம் 563
மறுத்து அனுசாளுவன் 116
மறுத்து ஒரு 566
மறுத்து ஓர் 89
மறுவில் பற்பல 34
மறையன் ஆகில் 632
மன்அரண்மனை 684
மண்இருந்ததற்பின் 825
மன்காட்சி கண்ட 723
மன்சாத்தகி 518
மன்னர்கோமான் 135
மன்னர்கோன் 300,378
மன்னாமரபின் 699
மன்னர்மன்னவன் 77
மன்னர்மன்னவனுடன் 304
மன்னர்மன்னவனே 58,751
மன்னர்மன்னவனை 634
மன்னர்மன்னன்மகன் 153
மன்னர்யாரும் 30
மன்னர்வீரரும் 34
மன்னர்வீரியர் 309
மன்னவர்வீரவர்மன் 677
மன்னவன் அயர்ந்த 492
மன்னவன்சொன்ன 82
மன்னவா அப்பரி 356
மன்னவா எனக்கு 369
மன்னவா நினக்குக் 490
மன்னன்ஆக்கினைக்குள் 217
மன்னன்கோப 636
மன்னன்(றன்)னொடு 182
மன்னனாம்சனமே 644
மன்னனும்மகனுமாக 82
மன்னனை 4
மன்னனைக்கொடு 811
மன்னா கதலி 710
மன்னா கேள் 710
மன்னார்கோன் 677
மன்னிய மதன 380
மன்னியருக்கு 816
மன்னில் மிக்கன் 594
மன்னுகாதிகள் 364
மன்னுசந்த்ர 721
மன்னுசெனமே 193
மன்னுபட்ட 783
மன்னும்மையல் 718
மன்னெமனாசூரன் 105
மனக்கதியாகப் 491
மனகதிதேர் 654
மனகதிப்புரவியை 306
மனம் அஞ்சிய 271
மனம்முனிந்து 164
மனமகிழ்ச்சி 190,342
மனமதுமகிழ்ச்சியாக 83
மனைவிட்டு அகன்று 702
மாஅடியில் 193
மாஇரண்டையும் 778
மாகந்தொடு 529
மாடகூட 19
மாடம் மாளிகை 806
மாடவிற்குணம் 249
மாணிக்கங்களும் 781
மாதர் அகன்றதன் 718
மாதவன் உரைக்க 825

மாதவன் உரையால் 572
மாதவா விமல 296
மாதா இருவரும் 394
மாதாமுகம் 705
மாதுஇருந்தனள் 772
மாதுசொன்ன 176
மாதுலன்கண் 173
மாதுலன்றன் 182
மாதுலர் உனக்கு 174
மாநிலந்தனில் 734
மாபாதகங்கள் 515
மாமக வேள்வி 817
மாமணித்திரள் 807
மாமன் நாணமும் 732
மாய்கை ஈது 758
மாய்கை வித்தைய 51
மாய உள்ளம் 759
மாயநீ உலகநாதன் 535
மாயவன் இருகையால் 297
மாயவன் சாலம் 626
மாயவன் பேரன் 112
மாயவன் முதலாய் 127
மாயவா வைகுந்தா 88
மாயவிநோத 690
மாயன் ஏவு 806
மாயன் மகன் 426
மாயனுடனே 815
மாயனை மணி 641
மாயைக்கிரிடியும் 273
மாயையின் மயக்கை 792
மார்த்தாண்டன் 403
மார்பில் இத்தனை 95
மார்பின் மொய்த்த 248
மார்பு அகழ்ந்து 71
மாராயம் பெற்ற 723
மாருதச்சுழல் 250
மாருதிக்கு உபய 794
மாருதி கிரிசார் 81
மாருதி குடைநிழற்ற 824
மாருதிசரத்தைச் 104
மாருதி சாய்ந்த 682
மாருதி தன்னை 43
மாருதி தாவித் 682
மாருதி தேற்றத் 495
மாருதி நீ கேள் 510
மாருதி வரவினை 88
மால் இவ்வாறு 599
மால் இளவல் 424
மால்இளவல்சுதன் 442
மால் உரைகேட்டு 141
மால் உரைப்படி 763
மால் உரைப்படியே 504
மால் உரைவீர 793
மால் உறுதிமொழி 813
மால்மகன்கணை 647
மாலினுக்கு 250
மாலுடன் வீரவர்மன் 684
மாலுடனே 520
மாலைக்கிசைந்த 718
மாலை புனைவார்கள் 399
மாலைமாயனொடு 834
மாவிட்டு இழிந்து 717
மாற்றி மாற்றி 697
மாறிமாறி எதிர் 418
மானசம் பன்னன் 127
மானசாத்தகி 133
மானசெயமே 754
மானசெனமே 132
மானம் உரசு 413
மானமும் முனையும் 113

மானவர் பயில்தரா 354
மானவியாசரை 150
மானவீரியர் 179
மிக்கசாளுவனும் 419
மிக்கதவம் புரிந்த 754
மிக்க மணிநகரி 517
மிக்கமனவேக 717
மிக்கமேன் மாடம் 467
மிகவளர்ந்து 56
மிகுதங்கள் 281
மிகுதீப 802
மிகுவிடகீதனன் 148
மிச்சம் வைத்திடல் 338
மிஞ்சுகின்ற 148
மின் அனைய 784
மின் என விரவிய 687
மின் விரும்பிய 191
மின்னல் மாமழை 595
மின்னல் மிகு 211
மின்னலின் குழு 359,363
மின்னுருக்மணி 87
மினல் மாறி 458
மினலொடு மினல் 589
மீசையதன் 402
மீண்டஞ்ஞூறுடன் 70
மீண்டு அமிழ்ந்த 294
மீண்டு உன்படை 268
மீண்டுபூ அணுகும் 681
மீளவேறு 579
மீறிமீறி அடிப்பர் 75
முக்கனிக்குலமும் 807
முக்கனி சீனி 380
முகடு தண்டவும் 449
முகடு முட்டிய 313
முகம் விழிகால்கரம் 91
முகில் ஏழும் 584
முகில்திரை ஊழை 467
முச்சங்களும் 336
முசலம்தடி 461
முடிஅழிந்து 547
முடிகளில் அனந்தம் 437
முடிவாய் 562
முடுகிவருபவன் 667
முடுகு படைமிசை 332
முடுகும் ஓய 337
முத்திரையும் இட்டு 720
முத்தினம் பசியினால் 774
முதல்வியே 359
முதியதான வயதில் 630
முதிய மாமுனி 777
முதிய வில்லவரை 115
முதுகுவச்ர 47
முந்தஎந்தந்தை 653
முந்துநரசிங்கம் 210
முப்பிரதட்சனமாக 147
முப்பிரம் தகனிடத்திடச் 71
முரசவர்க்கமொடு 229
முரசவாச்சிய 737
முரசினத்தொனி 779
முரசுடன் பஞ்ச 490
முரசொலி கேட்டு 102
முரசொலி முழக்கினால் 480
முரண் அமைச்சன் 422
முரண்வய வீமன் 495
முருகன் எனவே 741
முருகு விரியும் 695
முளையெனக் 10
முற்கடுங்கணையில் 259
முற்றும் கேட்டிலையோ 638
முறைமுறை திரண்ட 436

முறையாய் இவிதம்	463	மூவரும் முகில்	41
முன்அநாள்	785	மூவரும் வீமனை	98
முன் அயர்ந்த	473	மூவறு மேள	312,344
முன் உள்ள கீர்த்தி	493	மெய் உரையான்	817
முன் எழில் பின் எழில்	360	மெய்உறும்	495
முன்எழுந்து அவன்	334	மெய்கள் எங்கும்	69,163
முன் ஏகினர்	85	மெய் சிவக்க	221
முன்கு முர்த்தி	636	மெய்துளைந்துள	663
முன்கையைக்	170	மெய்நிறைந்த	422
முன்கையைக் கடித்துக்	117	மெய்புதைந்திடு	616
முன்பலம்	41	மெய்ம்மகிழ்ச்சி	517
முன்பின் இடமும்	194	மெய்ம்மையால்	32
முன்முழக்கமதில்	50	மெய்மறந்தனர்	91
முன்னம் உன்னிய	777	மெய்யிடு கலன்களைக்	92
முன்னமே சீவன்	509	மெய்யில் மண்மழை	185
முன்னமேதிரிதராட்டிரன்	828	மெய்யுன் வீரமும்	263
முன்னவன் என்றே	451	மேகம் தனில்	745
முன்னனுக்கு	80	மேகவண்ணன்	41,42,540
முன்னாள் மறையோர்	715	மேகவண்ணனை	43
முன்னிருந்தவலி	256	மேகவர்ணன்	760
முனிஉரைத்த	647	மேருகிரி	143
முனிவன்சொன	748	மேரொத்த	514
முனிவினுடன்	123	மேலும் வெங்களம்	434
முனை அரிந்தன	658	மேவிமைந்தர்கள்	650
முனைந்து	33	மேனிஅலங்கரிக்காதே	204
முனைந்து தர்மனை	340	மைப்புயல்	6
முனைமுகத்து	229	மையாமினி	716
முனைமுகம் உறுபல	457	மொய்த்த சேனைகள்	63
முனையில் நின்ற	536	மொழிந்திடும்	368
முனையினொடுமுனை	670	மோடிஓடிமுனிந்து	181
முனையைமுனை	611	மோதிவீசும்	186
மூடு கண்ணை	77	யாகத்துக்கு	804
மூவர் தேவர்கள்	19	யாதவன் குலத்தில்	112
மூவர் வாளி	599	யாமம் ஒன்றில்	597
மூவரடியோர்	2	யாரும் இறைஞ்சிடும	690

யாவருங்கரையில் 154
யாளி ஏறு எனப் 662
யான் அறிந்திலன் 763
யானை தேர்புவி 161
யானை நூறு இரதங்கள் 74
யானை பத்து 66
யானை போலும் 756
யானை மாபதாகி 172
யூகமானது 579
யூகரட்சனை 228
வகுத்து அமர் 363
வச்சிரக்கதை 72
வச்சிரக் கவச 256
வச்சிரத் தேர்கள் 621
வச்சிரத் தேரை 568
வச்சிரன் குமரன் 182
வச்ரத் தேரில் 596
வச்ரமாசுன 650
வசமாய்ச் சகல 710
வசிகரம் கொள் 391
வஞ்சினம் பகர 329
வடவரை நிகரிய 383
வட்வை அக்கினி 231
வடவைஎன 613
வடவைத் தழல் 272
வடவை நேர் 595
வடவீயாம் 243
வடவையோடு 295
வடிக்கணை நூறும் 681
வடித்து எழுதும் 716
வடிநறைப் 645
வடுத்துசன் விடுத்த 569,617
வண்டியவள் 205
வண்ணலக்கம் 153
வண்ணலட்சம் 224
வணங்கிய மருகன் 791
வணித முத்துஅணி 185
வதனபேதகம் 380
வதிட்டர் காசிபரே 804
வந்த கோல்களை 620
வந்த சிந்தை 628
வந்தடர்ந்துள 63
வந்தடைந்து 254
வந்தது உன்மனையில் 183
வந்ததுஎன் 647
வந்த துன்பம் 630
வந்த தேரின் 246
வந்தராக்கதர் 320
வந்தவர்க்கு 93
வந்தனன் எமனா தீர்த்த 101
வந்தனன் கொலு 217
வந்தனை என்முன் 113
வந்து உறுவசி 479
வந்து கனையாடி 717
வந்து வந்து 831
வந்துள உயர்ந்தோர் 474
வந்துள குந்தியும் 100
வம்பி சானவி 185
வயசெனமே 307
வயதுபுறம் 430
வயப்போத்துக்கு 401
வயவடுத்துசன் 618
வயிரவர்க் 102
வயிரவேலை 619
வர்மமதாக 681
வரகுகவலை 382
வரமனன் சுதன் 77
வரிசராசன 658
வரிசிலை வளைத்துஇரு 567
வரிசிலைவளைத்துதொடர் 568

வரிவில் ஒடிதர 122
வருக்கை முட்புறம் 605
வருக என் மனைக்கு 750
வருணன் கதற 747
வருணன் சலசரங்கள் 748
வருணன் மைந்தன் 188
வருணன் வாளி 174
வருந்தியும் வந்து 204
வருந்து புப்பரவாக 501
வரும்தளம் முழுதும் 792
வரை அங்கம் நீறு 280
வரைக்குலம் பொடிய 452
வரைகானகம் 460
வரைசிதரப் 149
வரைந்துபடந்தனைப் 147
வரைமகள் அரனும் 353
வரையினம் 6
வரைவிலாது 551
வரைவுதப்பினை 664
வல்அனல் 479
வல்எமனாசுரன் 364
வல்லவரை 717
வல்லவன் கை 689
வல்லியம் அனைய 106
வல்லியம் சுரபி 391
வல்லிருட் கணையை 252
வலம் செய்துதருமன் 793
வலமதாய் இரு 649
வலவன் மகனவன் 168
வலவன் மாமுடி 157
வலவன் வாசி 558
வலிதான் அறிவோம் 532
வலிய ஓர்கணை 688
வலிய கோடை 662
வலியதேர் வரிவில் 157
வலிய நான் அமர் 183
வலிய பகையுறில் 166
வலிய ரதம் 613
வலிய வச்ரரத 540
வலியவன் பிரம 253
வலிய வெஞ்சிலை 656
வலியன் துயில் 398
வலுத்தநீலத்துசன் 152
வழிந்த 17
வழுக்கை உன் 665
வளைந்த சேனைகள் 161
வளைந்த வில் 62
வளைந்தவில் நிமிரா 177
வன் சிறப்பாய் 375
வன்கோபம் 274
வன்பலத்துடன் 651
வன்புஇலக்கம் 136
வன்மீன் வாய்ப்படும் 812
வன்னம் நான்கில் 698
வன்னியாதிபனொடு 369
வன்னியும் 26
வன்னியேநின் 172
வன்னிவிட்டிலேன் 198
வன்னிவிரதமும் 202
வனசநாபிமுகில் 834
வனச மாமலர் 18
வனத்தில் இல்லவளைத் 477
வனநீறும் வில்வம் 465
வனம் அணிமோலி 626
வனம் எரித்ததும் 602
வனம்எரித்ததுவும் 246
வனம் எரித்திடும் 741
வாகைசேர் தருமன் 808
வாகை மாநகர் 181
வாசகத்தைக் கண்டு 718

வாசி பின்செலும்	756	வாள்திறத்தன்	390
வாசுதேவமால்	819	வாளிநாலினில்	327
வாடின் முருகு	696	வாளிநான்கையும்	596
வாதுடன் மங்குல்	675	வாளியைக் கணை	247
வாமனுக்கு உபய	685	வான் அசரீரியும்	372
வாய் இரத்தமே	560	வான் அதிர்ந்தன	376
வாய்களங்கள்	433	வான்இடிக்	558
வாய் நிறைந்துள	342	வான்எல்லையது	532
வாய் மதர்ப்புகள்	246	வான்புவி	368
வாயில் ஊதிய	321	வானம் ஏழு	523
வாயில் கறை	275	வானரச் சேனைகள்	209
வாயில் வந்தசொல்	651	வானவர் மாதுரு	370
வாயிலுக்கு	214	வானிடிந்துவிழல்	56
வாயினில் குருதி	248	வானியின் திரள	439
வாயினைப் பிளந்து	308	வானியும் திரை	756
வார்சிகர	400	விக்கிராங்கதன்	340
வாரமானதை	421	விகங்கராசனின்	535
வாரமும் திகிரியும்	237	விகசித நரம்பின்	739
வாரவல்லவன்	198	விகடவீரியர்	592
வார வன்மை	255	விசயன் அதுதனை	208
வார வித்தகனும்	247	விசயன் கதழ்வு	747
வாரவில்லி	760	விசயன்விடு கரங்கள்	610
வார வீரனுடன்	788	விசயன்றனை அடைந்து	746
வாரவீரனை	184	விசயனும்தளமும்	476
வாரவீரியன்	578	விசயனும் திருமகனும்	778
வாரியிற்பெருக	250	விசிகம் ஐந்து	64
வாரியே எடுத்தனன்	87	விசுவ உருவொடு	168
வாரியைக் கிழிதர	61	விசுவன் மைத்துனன்	158
வாரும் என் நிலைமை	373	விசைதவிர்ந்திடுவ	245
வால சூரிய	47	விசைபொருத்திய	65
வாலசூரியன்	223	விசைமறாது	285
வாலிநின்றன்னைப்	477	விசைய மகிபன்	555
வாலைப்பருவம்	711	விசையன் ஈது	254
வாவல் போல்	309	விசையன் தயவது	398
வாழிமன்னவனே	377	விசையன் தொடுகணை	272

விசையன் வின்மையும் 529
விசையா தயிரிய 271
விசையுடன் எழும்பி 124
விசையுறச் சுழன்று 335
விட்ட அக்கணை 369
விட்ட வெங்கணை 63,77,680
விட்டவெங்கணைகள் 674
விட்டவெம்பகழி 294
விட்டனன் பிரம 617
விடகீதன் 565
விடகீதனன் 121,563
விடப்பட அரவர் 486
விடலையராகிய 99
விடவாளிகள் 565
விடியும் முன்பு 45
விடுகுறுந்தடி 619
விடுதித்தலம் 800
விடுவிடென்று 259
விடுவெஞ்சரம் 276
விடைஅடியேற்கு 440
விடை அளித்திடப் 177
விடைநடமிடு 384
விடையது பெற்றபின் 96
விடையளித்துள 732
விடையெனக்கு 48
விண்டுஇனம் 288
விண்ணதிர்ந்திடச் 11
விண்ணிறைந்த 14
விதமிருந்த 153
விதிஎவர் விலக்க 477
விதிக்கு அனந்தரை 769
விதுரன் சஞ்சயன் 811
விந்தர்கள் நம்பு 96
விம்மிதத்து 379
வியனாக 565
விரகதந்திர 284
விரகுமாயை 333
விரசு உயர்ந்த 178
விரல்கள் புல்வனம் 313
விரவார் இடிஏறு 530
விரவிய சக்கரவர்த்தி 370
விரவிய சந்திரகாசன் 823
விரவியவீமசேனன் 81
விரவிய வீமனை 92
விரிவு சந்திரகாசனும் 781
விரிவு சாந்தாதி 822
விரிவுசேனைகள் 74
விரவும் 17
விரவும் இப்பொழில் 761
விரவும் மாது 772
விரிவான 34
விருத்தன் கண் 451
விருதினங்களும் 153
விருது அரக்கர் 325
விருது அனந்த 728
விருது அனந்தமே 526
விருது வாக்கியமே 226
விருதொடும் 390
விரைசு அடிக்கடி 821
விரைந்துகொண்டுவரும் 637
விரைந்து சென்று 789
விரைந்து மனை 205
விரைவில் நால்வகைச் 46
வில் அரிராகவன் 653
வில் இராப்பகல் 625
வில்நிலைமை 413
வில் பிடித்தனன் 594
வில்லால் மிகு 268
வில்லி உந்தனை 180
வில்லி உன் கரத்தால் 496

வில்லி கூர்ந்திட	377	வினயங்களாலும்	282
வில்லி சேனைகள்	320	வினைக்கிடமாய்ப்	90
வில்லிதன் குமரன்	674	வீசியமழைமலர்	361
வில்லி தன்னை	805	வீசுகென்று	258
வில்லி தன்னையும்	750	வீசு சென்னியை	264
வில்லி தேர் கடவ	797	வீசு பீலிகை	486
வில்லிமல் விசய	680	வீசும் ஓர் கணையில்	240
வில்லி மாரி	537	வீசும் வாளி	244
வில்லியும் சேனையும்	362	வீசும் வாளிகளை	327
வில்லியுமே	207	வீதிமேன் மாடம்	506
வில்லினில்	291	வீம சேனன்	42,48
வில்லுமிழ்	20	வீமசேனன் இரு	55
விலங்கினம்	297	வீமன் விட	84
விலங்கினம் வாகனம்	357	வீமனடிதனை	143
விள்ளும் விதம்	411	வீமனை	129
விழி ஆயிரன்	462	வீர கர்ச்சனை	64,217,659
விழிகள் அழல்கள்	699	வீரகிங்கிலி	220
விழிகள் அழல்சொரிய	669	வீரசூரன் அமிர்தன்	548
விழித்திலள்	361	வீரசேகர வீரன்	146
விழிமூடு தனஞ்செய	465	வீர நீ என்சொற்கு	627
விற்கணைதொடு	363	வீரமேகவனன்	624
விற்கரத்து எடுக்கும்	118	வீரர் தங்களை	197
விற்குணத்தொனி	325	வீரர் மொய்க்க	252
விற்குணத்தொனிக்கும்	310	வீரவர்மன் பாதத்தில்	684
விற்குணத்தொனியில்	23	வீரவர்மனும்	750
விற்குவீரிய	419	வீரவீரரில்	764
விற்குழைத்து	660	வீரவீரன்அணி	238
விற்கையெடுத்துள	98	வீரவீரிய	736
விற்பகழிக்கே	118	வீரவீரியர்	65
விற்பிடிப்பது	242	வீரவீரியற்கு	371
விற்பொடிந்து	235	வீரவீரியன்	646
விறல் அமிர்தத்துசன்	403	வீரவீரியன் சாத்தகி	658
விறல்மேவிய	708	வீரவீரியன் நின்று	72
விறலான் அமிர்தன்	530	வீரவேஷ	317
வின்முன்நீ	602	வீரவேஷத்துடன்	301

வீரன்வில் விசையன் 574
வீரனும் மகனும் 453
வீரனும் மாலும் 790
வீராதிபன் 396
வீரியம் உரசு 509
வீழ்ந்தவன் 298
வீழ்ந்தவனும் 424
வீழந்தனன் பாரில் 106
வீழ்ந்து அயர்ந்திடுவன் 451
வீழ்ந்து உருண்டுற 471
வீழ்ந்து வீழ்ந்து 494
வெஞ்சினமுடன் 652
வெட்டுவெட்டெனக் 22
வெதிரன்செவியில் 532
வெந்த பேர்கள் 225
வெய்து தேஞ ர் 601
வெய்யவன் உதயம் 674
வெருக்கொளத் 368
வெருண்டு வெருண்டு 702
வெருவிக் கொடு 269
வெருவியமதியொடு 387
வெல்லும்திறம்உண்டு 533
வெல்லுவேன் 48
வெவ்விய அப்பு 676
வெள்ளம் வரும்முன் 711
வெற்பொத்தனவே 394
வெற்றி அம்பறையும் 466
வெற்றி செறிவெண் 517
வெற்றியான 215
வெற்றிவேத 377
வெறுக்கும் வீரரை 180
வெறுத்து நீதுறந்து 187
வெறுமையாகிய 603
வென்றி மாதவன் 682
வென்றியுறும் 199
வேட்டுமுறைமை 721
வேதகோஷம் 752
வேதசாத்திர 822
வேதவியாசரிஷி 521
வேதவியாசரை 143
வேதியர்கள் 814
வேந்தர் மகுடம் 696
வேந்தர் யாவர்க்கும் 227
வேர்கள் தூர்களற 50
வேரி அல்லிமிசை 387
வேலைமீதினும் 760
வேள்வி செய்வதற்கு 342
வேள்வியாரம்பவாறும் 4
வேள்வி வியப்பு 816
வேறொடுகடையிருந்து 94
வைசம்பாயன 306
வைத்து அரி 346
வைப்புறுத்தியே 162

தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர் - 613 005

அண்மைவெளியீடுகள்

அறிவியல் களஞ்சியம் தொகுதி – 13	700.00
பாரதிதாசனும் பொதுவுடைமைத் தத்துவமும், பாவேந்தரும் மொழிபெயர்ப்பும்	30.00
பழந்தமிழ்த் தொடரியல் வரலாற்று ஆய்வு	70.00
தென்னிந்தியக் குலங்களும் குடிகளும் தொகுதி – 5	150.00
உயிர்வேதியியல்	270.00
குழந்தை நல மருத்துவம் தொகுதி – 1	210. 00
குழந்தை நல மருத்துவம் தொகுதி – 2	170. 00
சங்க இலக்கியப் பொருட்களஞ்சியம் தொகுதி – 2 (மறுபதிப்பு)	400.00
வாழ்வியல் களஞ்சியம் தொகுதிகள் 5 – 9 (மறுபதிப்பு) ஒவ்வொன்றும்	700.00
அருங்கலைச் சொல் அகர முதலி (மீள்பதிப்பு)	600.00
திருமுறைத் திருநெறி தொகுதி – 1	105.00
தஞ்சை மராட்டிய மன்னர் வளர்த்த தமிழ் இலக்கியம் பகுதி–2	85.00
வைத்திய சிந்தாமணி	80.00
அயல்நாட்டவர்க்குத் தமிழ் – கருத்துப் பரிமாற்ற இலக்கணம்	70.00
சுந்தரர் தேவாரப் பாடல்களில் இசை	70.00
தென்னிந்தியக் குலங்களும் குடிகளும் தொகுதி – 1 (மறுபதிப்பு)	200.00
உலகநாடுகளில் தமிழ்ப் பண்பாடு	50.00
108 ஆடலியக்கத் தமிழ்ப் பெயரீடும் அமைவுகளும்	50.00
தமிழக அறிவியல் வரலாறு	60.00
இசைத் தமிழ்ப் பேரறிஞர்கள் தொகுதி – 1	60.00
தன்வந்தரி வைத்தியக் கும்மி	50.00

தொடர்பு முகவரி :

இயக்குநர் (பொறுப்பு), பதிப்புத்துறை

தமிழ்ப் பல்கலைக்கழகம், (அரண்மனை வளாகம்)

தஞ்சாவூர் – 613 001. தொ.பே. 04362 – 239221